D
U211.31 N81
N53 1c
22167

SECRETARIAT LIBRARY

Tamil Nadu Legislative Assembly / ~~Council~~ Debates:

1981 Vol. X . S.No 1.5 No

1981 X 1.5

[illegible] / [illegible] மன்ற மாநிலம்
[illegible] சட்டப்
[illegible]

for LIBRARIAN.

Ф
1
Y211,31 N81
N83-10

122167

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

1981 ஜுலை 28, 29, 30, 31 மற்றும் பிப்ரவரி 2 ஆம் நாட்கள்.
தொகுதி X—எண்கள் 1 முதல் 5 வரை.

உள்ளடக்கம்

	பக்கங்கள்
தமிழ்நாடு அரசின் அமைச்சரவையும்	i-iv
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்	v-vi
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட அகர வரிசைப்படி)	vii-xiii
அரசினர் சட்ட முன்வடிவுகள்—	
ஓய்வூதியங்கள், தகுதி விதிகளில் வழங்கப்படும் ஆயுள்பர வரிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு, 1981	50
கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981	52
கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981	367
கூட்டுறவுச் சங்கங்கள் (நலன் அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981	52
நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981	50—51
பஞ்சாயத்து கிராம அலுவலர் பதவிகள் சட்ட முன்வடிவு, 1981	188
பஞ்சாப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981	187
பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981	51
புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981	51
[illegible]	187
வாழ்க்கைப்படி அழுக்கப் சட்ட முன்வடிவு, 1981	189

பக்கங்கள்

உரிமைப் பிரச்சினைகள்—

பேரவை உறுப்பினரைத் காவல் துறையினர் தாக்கியதாகச் சொல்லப் பெறுவது — 154—159

மீன்துறை அமைச்சர் மீது — 151—153

"சேட் சான்டன்" மீன் குறித்த குற்றச்சாட்டுக்கு தவறான தகவல் கொடுத்ததாக வைத்துறை அமைச்சர் மீது — 159—174

ஒத்திவைப்புத் தீர்மானம்—

அண்ணாமலை பல்கலைக் கழகம் மூடப்பெற்றிருப்பது — 503—517

ஒழுங்குப் பிரச்சினைகள்—

உறுப்பினருக்கு அனுப்பப்பெற்ற கடிதம் — 42—47

தலைமை நீதிபதி நியமனம் குறித்த கவன ஈர்ப்பு அனுமதிக்கப் பெறுவது — 174—175

பேரவையின் விதிகளை நடை முறைப்படுத்தல் — 348—353

கவன ஈர்ப்புகள்—

இராமநாதபுரம் மாவட்ட மீனவர்களுக்கும் வேதாரண்யம் மீனவர்களுக்குமிடையே மோதல் — 517—520

கல்லியாகுளி மாவட்டம் குலசேகரம் வட்டத்தில் ஒரு வர் இறந்தது — 356—363

பாரிமுனை மீன் சேவை நிறுத்தம் — 363—367

மாநில பொது நூலகத்தை ஒருவருக்கு தனியார் நிறுவனமாக நியமித்தல் — 175—186

தகவல் கோரல்—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பல்கலைக் அறிவிக்கை — 268

அமைச்சரின் நேர்முக உதவியாளர் நாளேடுகளுக்கு அனுப்பிய செய்தி — 520—525

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் — 41—42, 147—151, 353—356, 502—503

முதல் வகுப்பு வரியிடுதலின் தணிக்கை அறிக்கை — 268

விதிகளைப் பேரவைத்தலைவரிடமிருந்து நியமனங்களுக்கு பேரவை அழைப்பு, அவை ஒத்திவைப்பு — 267

பக்கங்கள்

அரசினர் தீர்மானம்—

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை விநியோகம் மீது நடவடிக்கை — 106—107

அறிக்கை அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு — 367

அறிவிப்புகள்—

அண்ணாமலை பல்கலைக் கழகப் பேரவை—மூன்று உறுப்பினர்கள் தேர்தல் — 48

உரிமைப் பிரச்சினை — 501

ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வரைவு, 1981 (ஆ.இ.) — 50

கண்டனத் தீர்மானங்கள் — 48—50

சென்னை பல்கலைக் கழகப் பேரவை—மூன்று உறுப்பினர்கள் தேர்தல் — 47—48

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியம்—மூன்று உறுப்பினர்கள் நியமனம் — 347

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை விநியோகம் பெற்றது — 105

பேரவை அலுவல் — 107, 108, 307, 315, 346

போக்குவரத்து மாநாடு — 201

மருத்துவக் குழு—உறுப்பினர் நியமனம் — 347

விடுதலைப் பேரவைத்தலைவரிடமிருந்து நியமனங்களுக்கு பேரவை அழைப்பு — 228—229

சென்னைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியம்—உறுப்பினர் நியமனம் — 347

ஆதிதிராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கை — 54—105, 189—225, 268—307

இரங்கற் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் திரு. பெ. கோபாலகிருஷ்ணன் — 227—228

	பக்கங்கள்
தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள்மீது விவாதம் (தொடர்ச்சி)	367—422
	525—592
போரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—	
	108—109, 226, 307—308, 423, 592
வினாக்கள்-விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1—41, 111—147, 229—267, 309—345, 465—501

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடித்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீப்பாய்ச்சலையும், (க.ச.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (மு.தீ.) என்று போடுவது முக்கியைப் தீப்பாய்ச்சலையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அறிவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப்பெறுகின்றன.

நகரங்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப்பெறுகின்றன.

போரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின்கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப்பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது :—

அ.	:	அறிக்கை.
அறிவி.	:	அறிவிப்பு.
அ.வி.	:	அரை மணி நேர விவாதம்

கு.வி.	: குறுகிய கால விவாதம்.
பொ.வி.	: பொது விவாதம்.
ஆ.உ.	: ஆளுநர் உரை.
உ.பி.	: உரிமைப் பிரச்சினை.
ஒ.பி.	: ஒழுங்குப் பிரச்சினை.
க.ச.	: கவன ஈர்ப்பு.
க.ச.அ.	: கவன ஈர்ப்பு அறிக்கை.
ச.அ.நி.	: சட்ட முன்வரைவின் அறிமுக நிலை.
ச.ஆ.நி.	: சட்ட முன்வரைவின் ஆய்வுநிலை—இந்நிலையில்,
	(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம்.
	(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்.
	(3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்.
	(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்.
	(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.
ச.பிரி.ஆ.	: சட்ட முன்வரைவு பிரிவுவாரியாக ஆய்தல்.
ச.பே.	: சட்டமன்றப் பேரவை.
ச.மே.	: சட்டமன்ற மேலவை.
த.கோ.	: தகவல் கோரல்.
த.வி.	: தன்னிலை விளக்கம்.
தீ.	: தீர்மானம்.
உ.தீ.	: உரிமைத் தீர்மானம்.
ஒ.தீ.	: ஒத்திவைப்புத் தீர்மானம்.
த.தீ.	: தனித் தீர்மானம்.
து.மா.கோ.	: துணை மானியக் கோரிக்கை.
மி.மா.கோ.	: மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.
பே.அ.	: பேரவையின் அலுவல்.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீனவம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள். பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மைப் பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்குதல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்மிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப் பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மை பணி, கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வல்பு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கைத்தறி-கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயராதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், அக்கக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப்பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu

Thiru SADIQ ALI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum-Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town-Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)— Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and wakf.

14 Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S.N. RAJENDRAN (Minister for Handlooms and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and passports.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press. News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

†மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு.
3. திரு. என். எஸ். வி. சித்தன்.
4. திரு. எஸ். சிவசாமி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி. ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி. ஏ.
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஆனர்ஸ்).

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி. காம்.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி. ஏ., பி. எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி. எல்.
திரு. பா. பாலகிருஷ்ணன், பி. காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ.
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

---

* 21-6-1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
† 13-1-1981 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்.

தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கபட்ட பெயர்ப் பட்டியல்.

தொடர் எண்ணும்	உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
	(1)	(2)
1	அங்குசாமி, திரு. ச. ..	.. திருவாடானை
2	அப்துல் ரசாக், திரு. கே. எம்.	.. ஆலந்தூர்
3	அப்பாதுரை, திரு. மு. ..	.. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
4	அம்பிகாபதி, திரு. மு. ..	.. மன்னார்குடி
5	அரங்கநாதன், திரு. எஸ்.	.. தர்மபுரி
6	அரங்கநாதன், திரு. மு.	.. கூனூர் (செ. வ.)
7	அரங்கநாயகம், திரு. செ.	.. கோவை (மேற்கு)
8	அரங்கராசன், திரு. வெ.	.. உப்பிலியாபுரம்
9	அருணாசலம், திரு. இரா.	.. நாமக்கல் (செ. வ.)
10	அழகர்சாமி, திரு. சோ.	.. கோவில்பட்டி
11	அன்பழகன். திரு. க. ..	.. புரசைவாக்கம்
12	அன்பழகன், திரு. தி. ..	.. நாட்ராம்பள்ளி
13	அன்பில் தர்மலிங்கம், திரு.	.. லால்குடி
14	ஆண்டி அம்பலம், திரு. மெ.	.. நத்தம்
15	ஆண்டித்தேவர், திரு. எஸ்.	.. உசிலம்பட்டி
16	ஆறுமுகம், திரு. எம்.	.. அரினாசி (செ. வ.)
17	சேலம் ஆறுமுகம், திரு. மு.	.. சேலம்-2
18	ஆறுமுகம், திரு. த. ..	.. அரியலூர்
19	இரத்தினம், திரு. எம். வி.	.. பொள்ளாச்சி
20	இராசகுமார், திரு. மெ. அ.	.. மருங்காபுரி
21	இராசமாணிக்கம், திரு. இரெ.	.. குத்தாலம்
22	இராசரத்தினம், திரு. து.	.. பூந்தமல்லி
23	இராசாம்பாள், திருமதி. தா.	.. தலைவாசல் (செ. வ.)
24	இராசாராம், திரு. க. ..	.. பனமரத்துப்பட்டி
25	இராசாராமன், திரு. எஸ்.	.. பாபநாசம்
26	இராசு. திரு. ஜே. எஸ்.	.. பெரம்பலூர் (செ.வ.)
27	இராசேந்திரன், திரு. எஸ்.என்.	.. துத்துக்குடி
28	இராமச்சந்திரன், திரு. எம்.ஜி.	.. மதுரை (மேற்கு)
29	இராமச்சந்திரன், திரு. கே.கே.	.. சாத்தூர்
30	இராமச்சந்திரன், திரு. ச.	.. பண்ருட்டி
31	இராமச்சந்திரன், திரு. ந. செஞ்சி.	.. செஞ்சி
32	இராமசாமி, திரு. த.	.. இராமநாதபுரம்

தொடர் எண்ணும்	உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
33	இராமசுப்பிரமணியம், திரு. எஸ்.	ஸ்ரீவைகுண்டம்
34	இராமலிங்கம், திரு. ஏ.	காட்டுமன்னார் (செ. வ.)
35	இராமலிங்கம், டாக்டர் கே. பி.	இராசிபுரம்
36	இராமலிங்கம், திரு. செ.	திருவிடைமருதூர்
37	இராஜசேகரன், திரு. வெ.	இராதாகிருஷ்ணநகர்
38	இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா.	தல்லி
39	இராஜேந்திரன், திரு. எஸ். எஸ்.	ஆண்டிப்பட்டி
40	இளையபெருமாள், திரு. எல்.	எழும்பூர் (செ. வ.)
41	ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்
42	உகம்சந்த், திரு. எஸ். டி.	மதுராந்தகம்
43	உச்சி. திரு. கே.	கூடலூர்
44	உத்திராபதி, திரு. பொ.	திருத்துறைப்பூண்டி (செ. வ.)
45	உமாநாத், திரு. ரா.	நாகை
46	கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ. வ.)
47	கணபதி, திரு. கே. ஆர்.	சிதம்பரம்
48	கணேசன், திரு. இ.	இடப்பாடி
49	கணேசன், திரு. சி.	அச்சரப்பாக்கம் (செ வ.)
50	கந்தசாமி, திரு. கா. வே.	கிணத்துக்கடவு
51	கந்தசாமி, திரு. பி.	பொங்கலூர்
52	கபாலி, திரு. டி. கே.	மைலாப்பூர்
53	கருணாநிதி, டாக்டர், மு	அண்ணாநகர்
54	கருப்பசாமிப் பாண்டியன் திரு. வி.	பாளையங்கோட்டை
55	கருப்பையா, திரு. இரா.	குளித்தலை
56	கருப்பையா, திரு. ஏ. டி.	வால்பாரை (செ. வ.)
57	கவ்லன், திரு. கே.	உதகமண்டலம்
58	கலிதீர்த்தான், திரு. சோ.	சங்கராபுரம்
59	கலியமூர்த்தி, திரு. பெ.	மங்களூர் (செ. வ.)
60	நன்னிலம் கலையரசன், திரு. ஆ.	நன்னிலம் (செ. வ.)
61	காளிமுத்து, திரு. கா.	திருப்பரங்குன்றம்
62	கிட்டப்பா, திரு. என்.	மாயவரம்
63	கிருஷ்ணசாமி, திரு. கா. கோ.	காங்கேயம்
64	கிருஷ்ணசாமி. திரு. கே. ஏ.	ஆயிரம் விளக்கு
65	கிருஷ்ணமூர்த்தி, திரு. சா.	ஆண்டிமடம்

தொடர் எண்ணும்	உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
66	கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.	நெல்லிக்குப்பம்
67	கிருஷ்ணராஜ், திரு. ஜி.	சேலம்-1
68	கிருஷ்ணன், திரு. ரா.	வாசுதேவநல்லூர்
69	குப்புசாமி, திரு. என்.	மொரப்பூர்
70	குப்புசாமி, திரு. கே.	ஒட்டன்சத்திரம்
71	குப்புசாமி, திரு. செ.	வந்தவாசி (செ. வ.
72	குமரிஅனந்தன், திரு.	திருவொற்றியூர்
73	குருசாமி, திரு. ப.	அந்தியூர் (செ. வ.)
74	அண்ணாதாசன், திரு. எம்.	திருவரும்பூர்
75	குலசேகர், திரு. ஏ. டி.	சிங்காநல்லூர்
76	குலசேகரப் பாண்டியன், திரு. ந.	வாணியம்பாடி
77	குழந்தைவேலு, திரு. ப.	உடுமலைப்பேட்டை
78	கேசவ ஆதித்தன், திரு. சி.	திருச்செந்தூர்
79	கோபால், திரு. சி.	சோளிங்கர்
80	கோபாலகிருஷ்ணன், திரு. கா.	பெரியகுளம்
81	கோபாலன், திரு. ஆர். டி.	கம்பம்
82	கோமதி சீனிவாசன், திருமதி.	வலங்கை (செ. வ.)
83	கோவேந்தன் திரு. எம். ஆர்.	பேராவூரணி
84	கோவைத்தம்பி, திரு.	பேரூர்
85	சக்கரபாணி, திரு. ஆர்.	பொன்னேரி
86	சங்கரய்யா, திரு. என்.	மதுரை (கிழக்கு)
87	சட்டநாத கரையாளர் திரு. கி.	தென்காசி.
88	சண்முகம், திரு. இரா.	திருத்தணி
89	சண்முகம், திரு. ஏ. சி.	ஆரணி
90	சத்தியமூர்த்தி, திரு. வ.	கடலாடி
91	சந்திரசேகரன், திரு. ஏ.	சோழவந்தான்
92	சபாபதி, திரு. சி.	அரூர் (செ. வ.)
93	சமரசம், டாக்டர் கே.	காவேரிப்பட்டணம்
94	சாகுல் ஹமீது, திரு. ஏ.	கடையநல்லூர்
95	சாமிக்கண்ணு, திரு. தா.	செங்கம்
96	சித்தன், திரு. என். எஸ். வி.	திருமங்கலம்
97	சிதம்பரம், திரு. சி. த.	காரைக்குடி
98	சிவசாமி, திரு. செ.	இளையான்குடி
99	சிவஞானம், திரு. ந.	திருவோணம்
100	சிவப்பிரகாசம், திரு. சி.	சேந்தமங்கலம் (செ. வ.)
101	சிவபெருமான், திரு. மு	ஓமலூர்
102	சிவராமன், திரு. எஸ்.	சின்னசேலம்
103	சின்னசாமி, திரு. எம்.	கரூர்
104	சின்னதுரை, திரு. ஏ.	மேல்மலையனூர்

தொடர் எண்ணும்	உறுப்பினர் களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
	(1)		(2)
105	சின்னராசு, திரு. க. இரா.	..	கிருஷ்ணகிரி
106	சின்னராஜ், திரு. எம்.	..	தொண்டமுத்தூர்
107	சுந்தரம், திரு. கே. ஆர்.	..	குடியாத்தம்
108	சுந்தரம், திரு. ப.	..	திருப்பத்தூர்
109	சுந்தரம், திரு. மு.	..	ரிஷிவந்தியம்
110	சுந்தரமூர்த்தி, திரு. ஆர்.	..	முகையூர்
111	சுந்தரராஜ், திரு. நா.	..	திருமயம்
112	சுந்தரராஜன், திரு. மு.	..	விருதுநகர்
113	சுப்பிரமணியன், திரு. உ.	..	சிவகங்கை
114	சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ்.	..	போடிநாயக்கனூர்
115	சுப்பிரமணியன், திரு. மா.	..	திருவையாறு
116	சுப்பிரமணியன், திரு. வி.	..	திருநாவலூர்
117	சுப்பிரமணியன், திரு. ஜி. கே.	..	பவானிசாகர்
118	சுவாமிநாதன், திரு. வி. வி.	..	புவனகிரி
119	செங்கோட்டையன், திரு. கு. அ.	..	கோபிச்செட்டிப் பாளையம்
120	செம்மலை, திரு. செ.	..	தாரமங்கலம்
121	செல்லமுத்து, திரு. எம்.	..	திருவாரூர் (செ. வ.)
122	செல்வராசன், திரு. அ.	..	துறைமுகம்
123	சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ.	..	அரவக்குறிச்சி
124	சேதுராமன், திரு. ஏ. எம்.	..	ஆற்காடு
125	சொக்கலிங்கம், திரு. கே.	..	திருப்போரூர்
126	சோமசுந்தரம், திரு. எஸ். டி.	..	பட்டுக்கோட்டை
127	சோமு, திரு. என். வி. என்.	..	பூங்கா நகர்
128	சௌந்திரராசன், திரு. கே.	..	திருச்சி—2
129	டாக்டர் சௌரிராஜன், திரு. கே.	..	தி. நகர்
130	தங்கமணி கவுண்டர், திரு. கே. எம்.	..	திண்டிவனம்
131	தங்கராசு, திரு. ஏ.	..	குறிஞ்சிப்பாடி
132	தங்கவேல்ராஜ், திரு. பி. எம்.	..	கிருஷ்ணராயபுரம் (செ.வ)
133	தங்கவேலு, திரு. பி.	..	செயங்கொண்டான்
134	தவசி, திரு. ஆர்.	..	பரமக்குடி (செ. வ.)
135	தனபால், திரு. ப.	..	சங்கரி (செ. வ.)
136	தனுக்கோடித் தேவர், திரு. கே.	..	முதுகளத்தூர்
137	தாமரைக்கனி, திரு. இரா.	..	ஸ்ரீவில்லிப்புத்தூர்
138	தியாகராசன், திரு. ஆர்.	..	விருத்தாசலம்
139	திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர்.	..	ஸ்ரீரங்கம்

தொடர் எண்ணும்	உறுப்பினர் களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
	(1)		(2)
140	திருநாவுக்கரசு, திரு. எஸ்.	..	அறந்தாங்கி
141	திருமாறன், திரு. பெ.	..	ஆலங்குடி
142	திருமான், திரு.	..	ஏற்காடு (செ. வ.)
143	திருவேங்கடம், திரு. பெ. சு.	..	கலசப்பாக்கம்
144	தீர்த்தராமன், திரு. ப.	..	பென்னகரம்
145	துரைசாமி, திரு. பி. எஸ்.	..	பர்கூர்
146	துரைமுருகன், திரு.	..	ராணிப்பேட்டை
147	துரைராமசாமி, திரு.	..	வெள்ளக்கோவில்
148	துரைராஜ், திரு. பி.	..	சங்கரநாயினார் கோவில் (செ.வ.)
149	தேவராஜ், திரு. வி. எம்.	..	வேலூர்
150	நடராசன், திரு. எஸ்.	..	தஞ்சாவூர்
151	நரசிம்மன், திரு. பூ. மு.	..	பள்ளிப்பட்டு
152	நல்லப்பன், திரு. தி. கா.	..	பெருந்துறை
153	நவநீத கிருஷ்ணபாண்டியன், திரு.	..	ஆலங்குளம்
154	நாச்சிமுத்து, திரு. கே. பி.	..	மேட்டூர்
155	நாராயணசாமி, திரு. கே.	..	திருவண்ணாமலை
156	நாராயணன், திரு. பி. ஜி.	..	பவானி
157	நெடுஞ்செழியன், டாக்டர் இரா.	..	திருநெல்வேலி
158	நெடுமாறன், திரு. ப.	..	மதுரை (மத்திய)
159	பக்கிர் முகம்மது, திரு. இ. எஸ். எம்.	..	கும்பகோணம்
160	பட்டாபிராமன், திரு. செ.	..	திருவள்ளூர்
161	பம்மல் நல்லதம்பி, திரு.	..	தாம்பரம்
162	பரமசிவ கவுண்டர், திரு. பி. என்.	..	பல்லடம்
163	பலராமன், திரு. இல.	..	போளூர்
164	பழனிசாமி, திரு. சு.	..	மேட்டுப்பாளையம்
165	பழனிமுத்து, திரு. சி.	..	ஆத்தூர்
166	பழனியப்பன், திரு. கு.	..	விழுப்புரம்
167	பழனிவேல், திரு. என்.	..	பழனி (செ. வ.)
168	பாண்டியன், திரு. பி. எச்.	..	சேரன்மாதேவி
169	பாபு கோவிந்தராஜன், திரு.	..	கடலூர்
170	பாபு இளார்த்தனன், திரு.	..	செய்யாறு
171	பாரமலை, திரு. க.	..	மானாமதுரை (செ. வ.)
172	பாலகிருஷ்ணன், திரு. ச.	..	மொடக்குறிச்சி
173	பாலகிருஷ்ணன், திரு. வி.	..	சிவகாசி
174	பாலசுப்பிரமணியன், திரு. க.	..	சீர்காழி (செ. வ.)
115	வேடசந்தூர் பாலசுப்பிர	..	வேடசந்தூர்
116	மணியன், திரு. வி. பி.		
117	பாலன், திரு. சு.	..	பெரம்பூர் (செ. வ.)
	பாலுச்சாமி, திரு ஏ.	..	சமயநல்லூர் (செ. வ.)

தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
178	பிச்சை, திரு. எம்.	.. அருப்புக்கோட்டை
179	பிரபாகரன், திரு. ஜே. சி. டி.	.. வில்லிவாக்கம்
180	புருஷோத்தமன், திரு. து.	.. சைதாப்பேட்டை
181	பூங்காவனம், திரு. என். ஏ.	.. காட்பாடி
182	பெரியசாமி, திரு. ஏ.	.. தாராபுரம் (செ. வ.)
183	பெரியசாமி, திரு. ரா.	.. தொட்டியம் (செ.வ)
184	பெருமாள், திரு. என்.	.. வரகூர் (செ.வ.)
185	பெருமாள், திரு. ரா. கு.	.. விளாத்திகுளம்
186	பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ்.	.. நிலக்கோட்டை (செ. வ.)
187	பொன்னுரங்கம், திரு. ப.	.. ராயபுரம்
188	பொன்னையன், திரு. சி.	.. திருச்செங்கோடு
189	மணி, திரு. டி.	.. விளவங்கோடு
190	மணிமாறன், திரு. ஆர்.	.. திருப்பூர்
191	மாணிக்கம், திரு. எம். எஸ்.	.. வேதாரண்யம்
192	மாரிமுத்து, திரு. த.	.. குளத்தூர் (செ. வ.)
193	முகமது இஸ்மாயில், திரு. பி.	.. பத்மநாபபுரம்
194	முசிறிப்புத்தன், திரு. ம.	.. திருச்சி-11
195	முத்துக்கிருஷ்ணன், திரு. சு.	.. கன்னியாகுமரி
196	முத்துசாமி, திரு. சு.	.. ஈரோடு
197	முத்துராமலிங்கம், திரு. இ.	.. ராதாபுரம்
198	முத்துவேல், திரு. என்.	.. வானூர் (செ. வ.)
199	முத்தையா, திரு. இரா.	.. சேடப்பட்டி
200	முனிரத்தினம், திரு. இரா. சா.	.. கும்மிடிபூண்டி
201	முனுசாமி, திரு. மு. ப	.. பாலக்கோடு
202	மூர்த்தி, திரு. ஜி.	.. பேரணாம்பட்டு (செ. வ.)
203	மொக்கையன், திரு. பி.	.. ராஜபாளையம் (செ.வ.)
204	யசோதா, திருமதி டி.	.. ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.)
205	ரகுமான்கான், திரு. அ.	.. சேப்பாக்கம்
206	ரங்கசாமி, திரு. ஆர்.	.. சத்தியமங்கலம்
207	ரங்கசாமி, திரு. க.	.. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
208	ரமணி, திரு. கு.	.. கோயம்புத்தூர் (கிழக்கு)
209	ராமசாமி, திரு. எஸ். என்.	.. சாத்தான்குளம்
210	ராஜமாணிக்கம், திரு. எஸ். கே	.. முசிறி
211	ரெத்தினராஜ், திரு. எஸ்.	.. குளச்சல்
212	வரதராஜன், திரு. என்.	.. திண்டுக்கல்

(வெற்றிடம்)

தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
214	விசயலட்சுமி, செல்வி. வி.	.. வீரபாண்டி
215	வின்சென்ட், திரு. மி.	.. நாகர்கோவில்
216	விஜயசாரதி, திரு. எம்.	.. அரக்கோணம் (செ.வ)
217	விஜயபாலன், திரு. என்.	.. பூம்புகார்
218	விஜயரெகுநாத தொண்ட மான், திரு.	.. புதுக்கோட்டை
219	விஜயராகவன், திரு. பொ.	.. கிள்ளியூர்
220	விஸ்வநாதன், திரு. கோ.	.. அணைக்கட்டு
221	வீராசாமி, திரு. த.	.. ஓரத்தநாடு
222	வீரானம்பலம், திரு. க. வெ.	.. மேலூர்
223	வெங்கடசுப்பிரமணியம், திரு. ப.	.. காஞ்சி
224	வெங்கடரெட்டி, திரு. டி.	.. ஒசூர்
225	வெங்கடேசன், திரு. பி. எம்.	.. பெரணமல்லூர்
226	வெள்ளைச்சாமி, திரு. அ.	.. ஆத்தூர்
227	வேணுகோபால், திரு. த.	.. தண்டராம்பட்டு
228	வேலப்பன், திரு. சி. வி.	.. கபிலர்மலை
229	ஜகத்ரட்சகன், திரு. எஸ்.	.. உத்திரமேரூர்
230	ஜான் வின்சென்ட், திரு. மு.	.. நாங்குனேரி
231	ஜெகதீசன் ஆனூர், திரு. பு. கோ.	.. செங்கல்பட்டு
232	ஜெயராமன், திரு. வே. இரா.	.. தேனி
233	ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி.	.. திருவல்லிக்கேணி
234	ஹேமச்சந்திரன், திரு. ஜே.	.. திருவட்டார்
235	மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி.	.. நியமன உறுப்பினர்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். — அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். — அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. — அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. — அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி — தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

1981 ஜனவரி 28, 29, 30, 31 மற்றும் பிப்ரவரி 1 ஆம் நாட்கள்.

பக்கங்கள்

அ.

அங்காடிகள்—

சைதாப்பேட்டை, அமுதம் அங்காடி திறத்தல் 113—115

அங்குசாமி, திரு. ச.—

காரங்காடு, இரால் வளர்ப்புப் பண்ணை அமைத்தல் 312—315

வைகங்கைப் பகுதி, பெரியாறு பாசன விரிவுபடுத்தும் வேலைகள் 131—133

அப்பாதுரை, திரு. மு.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முடப்பெற்றிருப்பது (ஒ.தீ.) 512—513

அரங்கங்கள்—

சென்னை, நலைவானர் அரங்க மேடை அமைப்பு 119—122

அரங்கநாயகம், திரு. செ.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முடப்பெற்றிருப்பது (ஒ.தீ.) 513—516

அலுவலர்கள்—

கூட்டுறவு நிலவள வங்கி, அலுவலர்க்கு ஊதிய உயர்வு 262—267

மருந்து ஆய்வாளர் பதவிகள், அதிகரித்தல் 123—131

அழகர்சாமி, திரு. சோ.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சம்பந்தமான அறிக்கை (த.கோ.) 503

ஆறுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 84—95

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) 147, 355

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அறநிலையங்கள்—

கீரந்தங்குடி, மாரியம்மன் ஆலய நிலங்களிலுள்ள மரங்கள் வெட்டப்பட்டது 118—119

அன்பழகன், திரு. க.—

அமைச்சரின் நேர்முக உதவியாளர் நாளேடுகளுக்கு அனுப்பிய செய்தி (த.கோ.) 523, 524

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ) 102, 305

அன்பழகன், திரு. தி.—

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1979-80, 1980-81—விவாதம் 405—411

ஆ.

ஆசிரியர்கள்—

பகுதிநேர பதவிகளை முழு நேரப் பதவிகளாக்குதல் 465—467

ஆண்டித் தேவர், திரு. எஸ்.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பெற்றிருப்பது (ஒ.தீ.) 511—512

அமைச்சரவையின் ஒரு கொள்கையைக் கண்டித்தல் (தீ) 49

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 76—84

திருமங்கலத்திலுள்ள மண்வளப் பாதுகாப்பு பிரிவு, தஞ்சைக்கு மாற்றுதல் 123—125

மாநில மொழி தெரியாத ஒருவரைத் தலைமை நீதிபதியாக நியமித்தல் (க.ஈ.) 186, 187

ஆதி திராவிடர் நலன்—

அரிசனங்கள், வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குதல் 34—37

ஆறுமுகம், திரு. எம்.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பெற்றிருப்பது (ஒ.தீ.) 503

அமைச்சரவையின் ஒரு கொள்கையைக் கண்டித்தல் (தீ.) 49

மருந்து ஆய்வாளர் பதவிகள், அதிகரித்தல் 129—131

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1979-80, 1980-81, விவாதம் 391—397

பக்கங்கள்

ஆ—தொடர்ச்சி.

ஆறுமுகம், திரு. த.—

ஒன்றிய ஜீப் வண்டிகள், கூடுதல் பெட்ரோல் வழங்குதல் 127—129

ஆனூர் ஜகதீசன், திரு. பு. கோ.—

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81 விவாதம் 565—568

இ.

இரங்கல் குறிப்பு—

கோட்டி ரெட்டி, திரு. கே., முன்னாள் உறுப்பினர் 227—228

இராகவானந்தம், திரு. எஸ்.—

வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வரவு, 1981 189

இராசமாணிக்கம், திரு. இரெ.—

திருவாவடுதுறையிலும் சேங்காலிபுரத்திலும் உயர்நிலைப் பள்ளிகள் துவங்குதல் 7—10

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1979-80, 1980-81 விவாதம் 561—565

இராசு, திரு. ஜே. எஸ்.—

திருச்சி, தொழில் நுட்பக் தகுதியுடையோர்க்கு வேலை வாய்ப்பு அலுவலகம் 261—262

பொம்மனூர் பேரூராட்சி, குடிநீர் திட்டம் 481—483

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 285, 296, 306

இராமச்சந்திரன், திரு. ச.—

அமைச்சரின் நேர்முக உதவியாளர் நாளேடுகளுக்கு அனுப்பிய செய்தி (த.கோ.) 522—523, 524

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

இராமச்சந்திரன், திரு. ச.—தொடர்ச்சி.

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 60, 292

உறுப்பினருக்கு அனுப்பப்பெற்ற கடிதம் (ஒ.பி.) 48

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) 149, 150, 151

பேரவையின் விதிகளை நடைமுறைப்படுத்துதல் (ஒ.பி.) 350

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81, விவாதம் 367, 543, 555, 574—589, 591—592

மின்துறை அமைச்சரின்மீது (உ.பி.) 152—153

இராமலிங்கம், திரு. செ.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முடப்பெற்றிருப்பது (ஒ.பி.) 503

இளையபெருமாள், திரு. எல்.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 80, 285

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது (க.ஈ.) 356, 358

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1979-80, 1980-81 விவாதம் 368—377, 591

விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு அஞ்சலி, பேரவை குறிப்பேடு (த.கோ.) 267

ஈ

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பெற்றிருப்பது (ஒ.தீ.) 503

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது (க.ஈ.) 356, 362—363

பக்கங்கள்

ஈ—தொடர்ச்சி.

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—தொடர்ச்சி.

தண்ணீர்த் தீர்வை, சீரமைப்பு 239

திருச்சி மாவட்டம், சுகாதாரக் கல்வி பற்றிய முன்னோடித் திட்டம் 338—339

மாநிலமொழி தெரியாத ஒருவரைத் தலைமை நீதிபதியாக நியமித்தல் (ஒ.பி.) 184

வாகனங்களில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள் பொருத்துதல் 135—137

உ

உகம்சந்த், திரு. எஸ். டி.—

செங்கற்பட்டு அரசினர் கல்லூரி மாணவர்கள், பட்ட மேற்படிப்பு 241

பாராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் காகித ஆலை துவங்கல் 33—34

உணவு—

மதிய உணவு, பாலியத்தை அதிகரித்தல் 469—475

உத்திராபதி, திரு. பொ.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பெற்றிருப்பது (ஒ.தீ.) 503

உமாநாத், திரு. ரா.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பெற்றிருப்பது (ஒ.தீ.) 503—507, 510

அமைச்சரவையின் ஒரு கொள்கையைக் கண்டித்தல் (தீ.) 49

உறுப்பினருக்கு அனுப்பப்பெற்ற கடிதம் (ஒ.பி.) 45, 46

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை (த.கோ.) 364

குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை (த.கோ.) 368

பேரவை விதிகளை நடைமுறைப்படுத்தல் (ஒ.பி.) 348—353

பக்கங்கள்

உ—தொடர்ச்சி.

உமாநாத், திரு. ரா.—தொடர்ச்சி.

மாநில மொழி தெரியாத ஒருவரைத் தலைமை நீதிபதியாக நியமித்தல் (க.ஈ.) 175—176, 178, 179. 180, 181, 182, 183, 184

மின்துறை அமைச்சரின் மீது (உ.பி.)

உரிமைப் பிரச்சினைகள்—

பார்க்க தலைவர்

உள்ளாட்சிகள்—

ஒன்றிய ஜீப் வண்டிகள், கூடுதல் பெடரோல் வழங்குதல் 127—129

கன்னியாகுமரி நகரியம், நகராட்சியாக்கல் 145—147

நகராட்சிகளை மாநகராட்சிகளாக்குதல் 143—145

ஏ.

ஏடுகள்—

பேரவை முன் வைக்கப்பெற்றவை 108—109, 226, 307—308, 423, 592—593

ஏற்றுமதி இறக்குமதி—

குமரி மாவட்டத்திலிருந்து தென்னை நார் ஏற்றுமதி 115—117

ஒ.

ஒழுங்குப் பிரச்சினைகள்—

பார்க்க தலைவர் 42—47

க.

கடன்கள்—

இராமநாதபுரம் மாவட்டம், முன்னோடி வங்கித் திட்டத்தின் மூலம் கடன்கள் 21—22

கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன்களுக்கான வட்டி விகிதம் 495—497

க—தொடர்ச்சி.

பக்கங்கள்

கணபதி, திரு. கே. ஆர்.—

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81, விவாதம் 388—390

கணேசன், திரு. இ.—

சென்னை, கலைவாணர் அரங்க மேடை அமைப்பு 119—122

கருணாநிதி, டாக்டர் மு.—

அமைச்சரின் நேர்முக உதவியாளர் நாளேடுகளுக்கு அனுப்பிய செய்தி (த.கோ.) 520—521, 522

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 225, 283, 284, 285

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை (த.கோ.) 41

உறுப்பினருக்கு அனுப்பப்பெற்ற கடிதம் (ஒ.பி.) 42, 44, 45

திரு. ரகுமான்கான் மீது (உ.பி.) 173, 174

மின்துறை அமைச்சரின் மீது (உ.பி.) 155

"ரெட்சால்டர்ஸ்" மரம் குறித்த குற்றச்சாட்டுக்கு நவறான தகவல் கொடுத்ததாக வனத்துறை அமைச்சர்மீது (உ.பி.) 167—168, 171—172

கருப்பையா, திரு. இரா.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பெற்றிருப்பது (ஒ.தீ.) 508

அமைச்சரவையின் ஒரு கொள்கையைக் கண்டித்தல் (தீ.) 49

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கை (த.கோ.) 353, 356

மாநில மொழி தெரியாத ஒருவரைத் தலைமை நீதிபதியாக நியமித்தல் (க.ஈ.) 186

கல்வி—

மேல்நிலைப்பள்ளித் தேர்வு 10—13

கல்விக் கூடங்கள்—

செங்கற்பட்டு அரசினர் கலைக் கல்லூரி மாணவர்கள், பட்ட மேற்படிப்பு 241

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கல்விக் கூடங்கள்—தொடர்ச்சி.

திருவாவடுதுறையிலும், செங்காலிபுரத்திலும் உயர்நிலைப் பள்ளிகள் துவங்கல் 7—10

பாலிடெக்னிக்குகளில் ஷிப்டுமுறை 239—241

போளூர் பகுதி, பொறியியற் தொழிற்கல்விப் பள்ளி துவங்குதல் 467—468

மதுரை சட்டக் கல்லூரி, சட்ட மேற்படிப்பு துவங்குதல் 468—469

கலிதீர்த்தான், திரு. சோ.—

கல்ராயன் மலைப்பகுதி, நீர்வீழ்ச்சியிலிருந்து மின் உற்பத்தி 229—230

கவன ஈர்ப்புகள்—

இராமநாதபுரம் மாவட்டம் மீனவர்களுக்கும் கைவான் நாட்டு மீனவர்களுக்கும் இடையே மோதல் 517—520

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது 356—363

பாம்பன்பாலம் வேலை நிறுத்தம் 363—367

மாநில மொழி தெரியாத ஒருவரைத் தலைமை நீதிபதியாக நியமித்தல் 175—187

காட்டுவளம்—

கிரிப்பாறை பகுதி, மூங்கில் ஏலம் 328—330

கால்நடைகள்—

ஒரூர் கால்நடைப்பண்ணை, புதிய திட்டம் செயல்படுத்துதல் 142—143

மெச்சேரி அருகில் ஆடு ஆராய்ச்சிப் பண்ணை 331—332

காவல்துறை—

கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது (க.ஈ.) 356—363

கிட்டப்பா, திரு. என்.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 61, 62

கிரிக்கெட் பந்தயங்கள், டிக்கட் மீது வரிவிதிப்பு 497—499

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—

பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 187

பேரவை உறுப்பினரை காவல்துறையினர் தாக்கியதாகச் சொல்லப்பெறுவது (உ.பி.) 154—157

கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 59, 60, 61

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) 147, 148, 149, 150, 502—503

உறுப்பினருக்கு அனுப்பப்பெற்ற கடிதம் (ஒ.பி.) 44, 46

பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு, 1981 188

கிருஷ்ணன், திரு. ரா.—

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மூடப்பெற்றிருப்பது (ஒ.தீ.) 503

சிறைச்சாலைகள், கைதிகளுக்கு சிற்றுண்டி சாலை அமைத்தல் 477—480

தூத்துக்குடி அனல் மின் நிலையம், பணியாட்கள் தேர்ந்தெடுத்தல் 38—40

குடிநீர்—

அறிவிருத்திக் திட்டம், விவரங்கள் 249—251

கள்ளக்குறிச்சி-சின்னசேலம், குடிநீர்த் திட்டம் 483—485

தலைஞாயிறு பேரூராட்சி, குடிநீர்த் திட்டம் 23

திசையன்விளைப் பேரூராட்சி, குடிநீர்த் திட்டம் 481

பம்மல் பேரூராட்சி 248—249

பொம்மலூர் பேரூராட்சி, குடிநீர்த் திட்டம் 481—483

மதுரை, வைகையிலிருந்து குடிநீர் வழங்கல் 485—489

விருதுநகர், குடிநீர்த் திட்டம் 25—26

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

குமரி அனந்தன், திரு.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 268—274

தமிழக சுற்றுலா தலங்கள், வெளிநாடுகளில் விளம்பரம் 319—323

பகுதிநேர ஆசிரியர்கள், முழுநேர ஆசிரியர்களாக்குதல் 465—467

குழந்தைவேலு, திரு. ப.—

பாம்பன் பாலம் வேலை நிறுத்தம் (க.ஈ.அ.) 363—367

குழுக்கள்—

பொதுக் கணக்குக் குழு, அறிக்கை அளித்தல் 367

கூட்டுறவு—

கிராம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள், கடன் வசதி 242—246

திருப்பூர் வளர்மதி கூட்டுறவு சிறப்பங்காடி அலுவலர்கள் வேலை நிறுத்தம் 16—20

கேசவ ஆதித்தன், திரு. சி.—

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1979-80, 1980-81 539—543

கைத்தறி—

நெசவாளர்களுக்கு மலிவு விலையில் நூல் வழங்கும் திட்டம் 139—141

கோபால், திரு. சி.—

கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள், கடன் வசதி 242—246

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1979-80, 1980-81 விவாதம் 552—554

கோபாலன், திரு. ஆர். டி.—

கம்பம்-சுருளிப்பட்டி இணைப்புப் பாலம், அகலப்படுத்துதல் 335

கோமதி சீனிவாசன், திருமதி—

கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 367

ச.

சங்கரய்யா, திரு. என்.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 201—225, 304, 308

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சங்கரய்யா, திரு. என்—தொடர்ச்சி.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) 149, 150, 151

உறுப்பினருக்கு அனுப்பப்பெற்ற கடிதம் (ஒ.பி.) 45

சட்ட முன்வடிவுகள்—

ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு, 1981—

ஆ.இ. 50

அ.நி. 50

கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 52

கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 367

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, (அ.நி.) 52

நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 50—51

பகுதிநேரக் கிராம அலுவலர்கள் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 188—189

பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 187

பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 50

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 51

வரி செலுத்தப்படாத பயிர்களை நுகர்வோர் நுகர்விப்போடுமாறு கால்நடைகளைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 187

வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 189

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சண்முகம், திரு. ஏ. சி.—

போளூர் தாலுக்கா, செண்பகத் தோப்பில் அணை கட்டுதல் 251—253

சந்திரசேகரன், திரு. ஏ.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 94

மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் 26—29

சந்திரசேகரன், திரு. ஏ.

சிறுமலைப் பகுதி புறம்போக்கு நிலங்கள், ஏழைகளுக்கு வழங்குதல் 3—7

சமரசம் டாக்டர், கே.—

திரு. அ. ரகுமான்கான் மீது (உ.பி.) 173

சாகுல் ஹமீது, திரு. ஏ.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 52—55

பிற்பட்டோர் நலன், சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் 309—312

மதிய உணவு மானியத்தை அதிகரித்தல் 469—475

சாலைகள்—

திருச்சி-களூர் நெடுஞ்சாலை, அகலப்படுத்துதல் 335—337

போடி தொகுதி, பண்ணைபுரம்-கோவிலா செல்லும் பாதை அமைத்தல் 334—335

வத்தலக்குண்டு ஒன்றியம், சாலைப்பணிகள் 125—126

சித்தன், திரு. என். எஸ். வி.—

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மூடப்பெற்றிருப்பது (ஒ.தீ.) 503

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 285, 301

உறுப்பினருக்கு அனுப்பப்பெற்ற கடிதம் (ஒ.பி.) 43, 47

தலைமை நீதிபதி நியமனம் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் அனுமதிக்கப் பெறுவது (ஒ.பி.) 174—175

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சித்தன், திரு. என். எஸ். வி.—தொடர்ச்சி.

பேரவை உறுப்பினரை காவல்துறையினர் தாக்கியதாகச் சொல்லப்பெறுவது (உ.பி.) 158

பொதுக் கணக்குக் குழு, அறிக்கை அளித்தல் 367

மாநில மொழி தெரியாத ஒருவரைத் தலைமை நீதிபதியாக நியமித்தல் (க.ஈ.) 185

விருதுநகர் குடிநீர்த் திட்டம் 25—26

சிவசாமி, திரு. செ.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப் பெற்றிருப்பது (ஒ.தீ.) 503

ஆர்.எஸ். மங்கலம் கண்மாய், கொள்ளளவை அதிகரித்தல் 29—31

இராமநாதபுரம் மாவட்டம் மீனவர்களுக்கும் தைவான் நாட்டு மீனவர்களுக்கும் இடையே மோதல் (க.ஈ.) 517, 518—519

பாம்பன் பாலம் வேலை நிறுத்தம் (க.ஈ.) 363, 365, 366

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81 விவாதம் 554—558, 564

முகலை மாவட்டம், வைகை கால்வாய்கள் சீரமைப்பு 489—491

முயல்தீவு ஆசு ஏற்றுக்கொள்ளுதல் 234—237

மேட்டுப்பாளையம், உருளைக்கிழங்கு வத்தல் தொழிற்சாலை அமைத்தல் 117—118

சிவஞானம், திரு. ந.—

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81 விவாதம் 411—413

சிவராமன், திரு. எஸ்.—

ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருந்தகங்கள், அதிகரிப்பு 343—344

திண்டி, காமராஜர் மண்டபத்தில் புகைப்படங்கள் அமைத்தல் 122—123

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சிறைச்சாலைகள்—

கைதிகளுக்கு சிற்றுண்டி சாலை அமைத்தல் 477—480

சின்னசாமி, திரு. எம்.—

சூத்தகை உரிமை வழக்குகள், தேக்கம் 237—239

திருச்சி-கரூர் நெடுஞ்சாலை, அகலப்படுத்துதல் 335—337

சுந்தரமூர்த்தி, திரு. ஆர்.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப் பெற்றிருப்பது (ஒ.தீ.) 509—510, 511

சுந்தரராஜ், திரு. நா.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப் பெற்றிருப்பது (ஒ.தீ.) 503

அமைச்சரின் நேர்முக உதவியாளர் நாளேடுகளுக்கு அனுப்பிய செய்தி (த.கோ.) 525

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 103, 105, 275—281, 287—304 306—307

உறுப்பினருக்கு அனுப்பப்பெற்ற கடிதம் (ஒ.பி.) 42, 43

கன்னியாகுமரி மாவட்ட குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது (க.ஈ.) 356, 361—362

பேரவை உறுப்பினரை காவல் துறையினர் தாக்கியதாகச் சொல்லப்பெறுவது (உ.பி.) 154—155

சுப்பிரமணியன், திரு. உ.—

இராமநாதபுரம் மாவட்டம், முன்னோடி வங்கித் திட்டம் மூலம் கடன்கள் 21—32

குடிநீர், அபிவிருத்தித் திட்ட விவரங்கள் 249—252

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுப்பிரமணியன், திரு. கே. எம். எம்.—

போடி தொகுதி, பண்ணைப்புரம்—கேரள பாதை அமைத்தல் 334—335

சுப்பிரமணியன், திரு. ஜி. கே.—

பவானிசாகர் அணை, சுற்றியுள்ள பகுதிகளுக்கு தண்ணீர் விடுதல் 493—494

சுவாமிநாதன், திரு. வி. வி.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல், (தீ.) 95—105

சுற்றுலா—

பனமரத்துப்பட்டி ஏரி, ஆழப்படுத்துதலும் சுற்றுலா தலமாக்குதலும் 323—324

வெளிநாடுகளில் தமிழக சுற்றுலா தலங்கள், விளம்பரம் 319—323

செங்கோட்டையன், திரு. கு. அ.—

கோபி அரசு மருத்துவமனை, விரிவு படுத்தல் 339—340

செம்மலை, திரு. செ.—

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81, விவாதம் 397—402

மேச்சேரி அருகில் ஆடு ஆராய்ச்சி பண்ணை 331—332

மேல்நிலைப்பள்ளி பொதுத் தேர்வு 10—12

வாகனங்களில் வேகக் கட்டுப்பாட்டு கருவிகள் பொருத்துதல் 135—137

சொக்கலிங்கம், திரு. கெ.—

மீனவர் பகுதிகள் மின் விளக்குகள் எரியாமை 37—38

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—

ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்ட முன்வடிவு, 1981 50

நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 50—51

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—தொடர்ச்சி.

பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவு, 1981 — 128

பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 — 51

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 — 51

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்டமுன்வடிவு, 1981 — 187

சௌந்திராசன், திரு. கே.—

கூட்டுறவு நிலவள வங்கி அலுவலர்க்கு ஊதிய உயர்வு — 262—267

சௌரிராஜன், டாக்டர் கே.—

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81, விவாதம் — 416—420

த.

தங்கமணி, திரு. கே. எம்.—

தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, விற்றுரிமை — 32—33

தலைவர்—

அறிவிப்புகள்—

அண்ணாமலை பல்கலைக் கழகப் பேரவை, உறுப்பினர்கள் தேர்தல் — 48

அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவுகள் — 345—346

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

அறிவிப்புகள்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்வது குறித்து — 501

சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை, உறுப்பினர்கள் தேர்தல் — 47—48

தமிழ்நாடு நில மேம்பாடு வாரியம் உறுப்பினர்கள் நியமனம் — 347

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசப் பெற்றது — 105

பேரவை அலுவல் — 107—108, 307

போக்குவரத்து மாற்றம் — 201

மதிப்பீட்டுக் குழு, உறுப்பினர் நியமனம் — 347

விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு மௌன அஞ்சலி — 228—229

வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியம், உறுப்பினர் நியமனம் — 347

தீர்ப்புரைகளும் குறிப்புகளும் :

உரிமைப்பிரச்சனைகள்—

உறுப்பினரை காவல் துறையினர் தாக்கியதாகச் சொல்லப்படுவது குறித்து

உறுப்பினர் ஒருவர் தம் தொகுதியிலுள்ள குறைகளைத் தெரிவிக்க அதிகாரிகளைச் சந்திக்கச் சென்றபோது காவல் துறை அதிகாரிகள் அவரைத் தடுத்து தாக்கியது அவை உரிமையை மீறிய செயலாகும் என்று ஓர் உறுப்பினர் உரிமைப் பிரச்சனை ஒன்றைக் கொண்டு வந்தார். இதுகுறித்து அரசு சார்பாக அமைச்சர் பதிலளித்த பிறகு தலைவர் இப்பிரச்சனை குறித்து பின்னர் தீர்ப்பு* வழங்குவதாகத் தெரிவித்தார் — 154—159

* 5—3—1981 ஆம் நாளன்று தீர்ப்பு வழங்கப்பெற்றது.

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சனைகள்—தொடர்ச்சி.

மின்துறை அமைச்சரின் மீது—

மேலவையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பற்றிய ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முதலமைச்சர் பதில் அளித்துப் பேசியிருக்கிறார் என்பதால் முதலமைச்சர் விவாதத்தில் குறுக்கிட்டுத்தான் தகவல் அளித்திருக்கிறார் என்று மின்துறை அமைச்சர் குறிப்பிட்டது வேண்டும் என்றே திட்டமிட்டு தவறான தகவலைக் கூறி, அவையைத் திசை திருப்புவதாகும் எனக் கூறி ஓர் உறுப்பினர் உரிமைப் பிரச்சனை கொண்டுவந்தபோது தலைவர் பின் வருமாறு தீர்ப்புரைத்தார் :

"கேள்விப்பட்டேன் என்றுதான் மின்துறை அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதாரப் பூர்வமாகச் சொல்லவில்லை. எனவே இதில் ஒன்றும் உரிமைப் பிரச்சனை எழவில்லை." 151—153

வனத்துறை அமைச்சர் மீது—

'ரெட்சான்ஸ்' மாத சுற்றுச்சூழல் சுற்றுச்சாட்டுக்கு 24-1-1981 அன்று அவையில் தவறான தகவல் கொடுத்ததாக வனத் துறை அமைச்சர் மீது ஓர் உறுப்பினர் உரிமைப் பிரச் சினை கொண்டுவந்தார். வனத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் தலைவர் பின்வரும் தீர்ப்பு * வழங்கு வதாகக் குறிப்பிட்டார் 159—173

ஒத்திவைப்புத் தீர்மானம்—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டிருப்பது குறித்தும் ஆசிரியர்கள் வேலை குறித்தும்

கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது 503—517

ஒழுங்கு—

பார்வையாளர் மாடத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து பின் கூண்டுப் பிரதிகளை விரியவர்கள் செய்கை அவை உரிமை மீறிய செயலாகும் 105

* 5—3—1981 ஆம் நாளன்று தீர்ப்பு வழங்கப்பெற்றது.

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

கவன ஈர்ப்புகள்—

கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்வது பற்றி உறுப்பினர்கள் தலைவரின் அறையிலே வந்து கேட்க வேண்டும்,(த.கோ.) 502

குற்றச்சாட்டுகள்—

எரிசாராய கடத்தல் பற்றி தாம் சில புகார்களைக் கூறிய போது, அது சம்பந்தமான கோப்புகளையும் விவரங்களை யும் அவையில் கொடுப்பதாக அமைச்சர் கூறியபடி வைப் பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கோரியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் : "இது குறித்து அமைச்சரின் கவனத்திற்கு சொல் கிறேன்" (த.கோ.) 502—503

மற்றவர்களைப் பற்றிய கருத்துக்களை, ஒபினியனைக் கூற லாம், குற்றச்சாட்டுகளைச் சொல்லக் கூடாது. 61

தகவல் கோரல்—

தாம் கொடுத்திருக்கும் உரிமை மீறல் பிரச்சனை குறித்து பேச முற்படும்போது தலைவர் அளித்த குறிப்புரை யாவது :

"இன்று காலையில்தான் உரிமை மீறல் பிரச்சனை அறிவிப்பு வந்துள்ளது ; அதை அவையில் எடுத்துக் கொள்ளும்போது உறுப்பினருக்கும் பேச வாய்ப்பு அளிக்கப்படும்." 41—43

நடைமுறைகள்—

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகளை நடைமுறைப் படுத்துவது சம்பந்தப்பட்ட பேரவை விதிகளை முழு மையாகக் கடைபிடிக்க வேண்டும் ; மீறுதல் இருக்கக் கூடாது என்று ஓர் உறுப்பினர் கட்டிக் காட்டியபோது, அவற்றை நடைமுறைப்படுத்துவதிலே சிரமம் இல்லை என்றும், நேரத்தை நிச்சயப்படுத்த அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளைத்தான் நாம் நடைமுறைப் படுத்தி வருகிறோம் என்றும் இதில் மாற்றம் வேண்டு மென்று விரும்பினால் அலுவல் ஆய்வுக் குழுவைக் கலந்து முடிவெடுக்கலாம் என்றும் குறிப்புரைத்தார் 348—353

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

ர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்—தொடர்ச்சி.

உறுப்பினர் காவல் துறையினரால் தாக்கப்பட்டார் என்பதுபற்றி கொண்டுவரப்பட்ட உரிமைப் பிரச்சனையின் மீது அமைச்சர் அளித்த பதிலில் மாறான சில விவரங்களைச் சொல்லியிருப்பதால் தாக்கப்பட்ட உறுப்பினர் தம் கருத்தைக் கூற வாய்ப்பளிக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கோரியபோது, உறுப்பினர்கள் பல்வேறு வகைகளில் தங்களுடைய பிரச்சனைகளைப் பேச வாய்ப்பிருக்கிறது என்றும், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு உறுப்பினர் பேசலாம் என்றும் தலைவர் குறிப்புரைத்தார், (உ.பி.) 157—158

ஒருபொருள் குறித்து மேலவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டதால் பேரவையிலும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில்லை. இந்த அவையின் அலுவல் ஆய்வுக் குழு எடுக்கிற முடிவின் அடிப்படையில் நிகழ்ச்சிகள் அமைகின்றன 147—151

ஒருவர் தம் அறிவிப்பில் கொடுத்திருந்த தகவல் அரசுத் துறையிலிருந்து முன்கூட்டி கிடைக்கப்பெற்ற தகவலுக்கு மாறுபட்டு இருந்தால்தான் பேரவைத் தலைவரின் ஆணைப்படி உறுப்பினர் தாம் கொடுத்திருக்கும் தகவலுக்கு பொறுப்பேற்றுக்கொள்கிறார் என துறையிலிருந்து கேட்கப்பெற்றுள்ளது. இப்படிக் கேட்பது ஒரு வழக்கம். உறுப்பினர் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்றால் பிரச்சனை தீர்ந்துவிடுகிறது. துறையிலிருந்து உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறும் கடிதம் குறித்து அவையில் விவாதிப்பதற்கு நான் அனுமதிக்க முடியாது. (ஒ.பி.) 44—47

பலரால் அறிவிப்பு கொடுக்கப்பெற்ற தீர்மானங்கள் ஒரு பொருள் குறித்தே இருந்ததால் வந்த தீர்மானங்களையும் அவற்றைக் கொடுத்தவர்களின் பெயர்களையும்

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்—தொடர்ச்சி.

படித்துவிட்டு முதலில் வரப்பெற்ற தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கொடுத்து, தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"மற்ற தீர்மானங்கள் இதேபோன்று இருப்பதால் அவை நிறுத்தி வைக்கப்பெறும். அனுமதி அளித்த தீர்மானத்தின்மீது மற்ற உறுப்பினர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். இத்தீர்மானத்தின்மீது பேரவை தனது முடிவைத் தெரிவித்த பிறகு மற்ற தீர்மானங்கள் குறித்தும் முடிவு செய்யப்பெறும்." 49—50

தம் கட்சி உறுப்பினர் ஒருவர் மீது கொண்டுவரப்பட்டிருக்கிற உரிமைப் பிரச்சனையை எடுத்து விவாதிப்பதை தாம் ஆதரிப்பதாகத் தெரிவித்து, அதை உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்.

"உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். தீர்ப்பு அளிக்கிற உரிமையை என்னிடம் விட்டுவிடுங்கள்". (உ.பி.) 173—174

தீக்கம்—

மின்வாரிய நிதி நிலை அறிக்கை மீதான அமைச்சரின் அறிக்கையிலேயும் விவாதத்திலேயும் குறிப்பிடாத ஒரு புதிய கருத்தை ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது அதை நீக்கிவிடுமாறு தலைவர் ஆணையிட்டார் (மி.வா.நி.அ.) 5500

பேசும் முறை—

இரண்டு மாநிலங்களுக்கு இடையே உள்ள ஒரு பிரச்சினை குறித்த விவாதத்திலே ஆடும் வாலாம், சுவையும் வாலாம். ஆனால் வம்பு வரக்கூடாது; வம்பு வராமல் இந்தப் பிரச்சனை குறித்துப் பேசவும், (ஆ.உ.) 306

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

பேசும்முறை—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசும்போது உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேச வேண்டும், (ஒ.தீ.) 507, 509

கவன ஈர்ப்பில் அமைச்சரின் அறிக்கைமீது உறுப்பினர்கள் கேள்வி கேட்கும்போது சுருக்கமாகக் கேட்க வேண்டும், (க.ஈ.) 519

மாபுகள்—

எதிர்க்கட்சியினர் குறித்து அமைச்சரின் நேர்முக உதவியாளர் நாளேடுகளுக்கு அனுப்பிய செய்தி குறித்து எதிர்க் கட்சித் தலைவர் எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

சிறிது நேரத்திற்கு முன்னர்தான் என் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. முறையாக முன்னறிவிப்பு கொடுத்த பிறகு எடுத்துக்கொள்ளலாம் (த.கோ.) 520—525

கவன ஈர்ப்பில் அமைச்சர் அறிக்கையின்மீது உறுப்பினர்கள் கேட்கும் கேள்வி வினா வடிவத்தில் அமைய வேண்டும் (க.ஈ.) 181, 182, 183

பின்வாரிய நீதிநிலை அறிக்கை குறித்த அறிக்கையை அமைச்சர் படிக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கோரியபோது, அவ்வுரையை ஆற்றியதாக எற்றுக் கொண்டு அவைக் குறிப்பிலே பதிவு செய்ய வேண்டுமென்று அமைச்சர் கேட்பதுதான் மரபாகும் என்று தலைவர் குறிப்புரைத்தார் (பி.வா.தி.அ.) 368

ாரணையில் இருக்கும் பொருள்—

தலைமை நீதிபதி நியமனம் குறித்த வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் அதுகுறித்து கவன ஈர்ப்பு அவையில் எடுத்துக்கொள்ளப்பெறலாமா என்பதுபற்றி ஓர் ஒழுங்கு பிரச்சனையை ஓர் உறுப்பினர் எழுப்பிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"மாநில மொழி தெரியாத பிரதம நீதிபதிகளை மாநிலங்களில் நியமிப்பதற்கு தமிழக முதல்வரின் ஆட்சேபணையைத் தெரிவிக்கும் வகையில்" தமிழக

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

முதல்வர் அவர்கள் எழுதிய கடிதம் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கிறது. அது எல்லோருக்கும் தெரிந்த சமாச்சாரம். அதை விவாதிப்பதில் பிரச்சனை ஒன்றுமில்லை. வழக்கு மன்றத்திலே இருப்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை (ஒ.பி.) 174—175

விதிகள்—

ஒரு உறுப்பினர் கைது செய்யப்பெற்றது குறித்து பேரவைக்கு தகவல் தெரிவிக்கப்படவில்லை என்று ஓர் உறுப்பினர் சுட்டிக்காட்டிய போது, ஓர் உறுப்பினர் கைது செய்யப்பெற்றது குறித்து பேரவையில் அறிவிப்பதற்கு முன்னரே அவ்வுறுப்பினர் விடுதலை செய்யப்பெற்று விட்டால் அவைக்கு அறிவிக்க வேண்டியதில்லை என பேரவை விதி இருப்பதாகத் தலைவர் குறிப்புரைத்தார், (உ.பி.) 158—159

கவன ஈர்ப்பில் அமைச்சர் அறிக்கை மீது கேட்கப்படும் ஓர் உறுப்பினர் இரண்டு கேள்விகளை மட்டுமே கேட்கலாம் (க.ஈ.) 179, 181

கவன ஈர்ப்பில் அமைச்சர் அறிக்கையின்மீது கேட்கப்படும் கேள்வி சுருக்கமாக இருக்க வேண்டும், (க.ஈ.) 363

விவாதம் :

அவை முன்னுள்ள பிரச்சினையை முடியதாகவே இருத்தல் வேண்டும், (ஆ.உ.) 71

வினாக்கள்-விடைகள் :

ஒரு கேள்விதான் கேட்கலாம்; மூன்று கேள்விகளை சேர்த்துக் கேட்டால் ஒரு கேள்விக்கு பதில் சொன்னால் போதும், (து.வி.) 4

கேள்விக்கு மட்டும் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும் (து.வி.) 256, 257

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.

கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுக்களோ புகார்களோ கூறக் கூடாது. உறுப்பினர்களிடத்திலே பல தகவல்கள் இருக்கலாம். அதை வெளியிடுவதற்கு வெவ்வேறு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. கேள்வி நேரத்தை அதற்குப் பயன்படுத்தக் கூடாது 330

கேள்வி நேரத்தில் பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் எல்லாம் கிடையாது 145

கேள்வி வேண்டுகோளாக இருத்தல் கூடாது (து.வி.) 249

கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் தம் அபிப்பிராயங்களைச் சொல்லிக்கொண்டிருத்தல் கூடாது, (து.வி.) 250

கேள்வி வேண்டுகோளாக இருத்தல் கூடாது. (து.வி.) 249

துணை வினா கேட்கும்போது உறுப்பினர் என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன என்ற விவரங்களை எல்லாம் தெரிவிக்க வேண்டியதில்லை. தேவைப்படுகிற விவரங்களை அறிந்துகொள்கிற வகையில் துணை வினா கேட்டால் போதுமானது (து.வி.) 486

பாராட்டுதலோ வேண்டுகோளோ கூடாது, (து.வி.) 23

மூலக் கேள்வியை ஒட்டி கேட்கப்படாத துணை வினாவுக்கு அனுமதியில்லை (து.வி.) 319

மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்வி போட வேண்டும் (து.வி.) 119, 121, 119, 121, 337, 341

மூலக்கேள்வியை ஒட்டிய துணை வினாக்களுக்கு மட்டும் அமைச்சர்கள் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும் 19—20, 23

மூலக் கேள்வியை ஒட்டி துணை வினா கேட்கிற உறுப்பினர்கள் முன்னால் பேரட்டப்பெற்ற துணை வினாக்கள், அளிக்கப்பெற்ற பதில்கள் ஆகியவற்றை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அப்போதுதான் முன்னால் கேட்கப்பெற்று விட்ட வினாவையே திரும்பவும் கேட்காமல் தவிர்க்க முடியும், (து.வி.) 260

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தாமரைக்கனி, திரு. இரா.—

திருவில்லிபுத்தூர் வட்டம், கூடுதல் தண்ணீர் தீர்வை 1—2

திருவில்லிபுத்தூர் வட்டம், பட்டுவளர்ப்புத் திட்டம் 316—319

நெசவாளர்களுக்கு மலிவு விலையில் நூல் வழங்கும் திட்டம் 139—141

பாம்பன் பாலம் வேலை நிறுத்தம், (க.ஈ.) 363, 366, 367

மாநிலமொழி தெரியாத ஒருவரைத் தலைமை நீதிபதியாக நியமித்தல், (க.ஈ.) 185

வரிநோக்கம், மின்சார நுகர்வு அமைத்தல் 112—113

திட்டங்கள்—

செய்யாறு, அனுக்கூர் ஒன்றியங்கள், ஊரக வளர்ச்சித் திட்டத்தில் சேர்த்தல் 125

திருநாவுக்கரசு. திரு. எஸ்.—

உறுப்பினருக்கு அனுப்பப்பெற்ற கடிதம், (ஒ.பி.) 44

திருவேங்கடம், திரு. பெ. சு.—

அதியாம்பட்டினம், அருகில் கிடைத்த வலம்புரி சங்கு 314—315

அனைத்திந்திய மின்விசை விநியோக இணையம் அமைத்தல் 230—234

போதுநர் பருதி பொறியியற் தொழிற்கல்விப் பள்ளி துவங்குதல் 467—468

தீர்மானங்கள்—

அமைச்சரவையின் ஒரு கொள்கையைக் கண்டித்தல் 48—50

ஆளுநர் உரை, நன்றி நவிலல் 52—105, 189—225, 268—307

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

பார்க்க தலைவர்—

பார்வையாளர்கள் மாடத்திலிருந்து கண்காணிக்கை விதிமுறைகள் மீது நடவடிக்கை 106—107

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

துரைமுருகன், திரு.—

அமைச்சரவையின் ஒரு கொள்கையைக் கண்டித்தல், (தீ.) 49

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை. 1979-80, 1980-81. விவாதம் 590

மின்துறை அமைச்சர் மீது, (உ.பி.) 1651—152, 153

துரைராஜ், திரு. பி.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (நி.) 94

தொழிலாளர்கள்—

கோவை மாவட்டம், தேசிய பஞ்சாலை தொழிலாளர்க்கு போனஸ் 246—247

தொழிற்சாலைகள்—

திருப்பூர், கூட்டுறவு நூற்பாலை அமைத்தல் 257—260

நெல்லைக்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, விஸ்தரித்தல் 32—33

பெரியார் மாவட்டம், சாயத் தொழிற்சாலை துவங்குதல் 141—143

பெரியார் மாவட்டம், நூற்பாலை அமைத்தல் 255—257

பழனி ஆத்தகம், கூட்டுறவு சர்க்கரை ஆலையில் காகித ஆலை துவங்கல் 33—34

பேட்டைப்பாளையம், உருளைக் கிழங்கு வற்றல் தொழிற்சாலை அமைத்தல் 117—118

விளாத்திகுளம் தொகுதி கூட்டுறவு நூற்பாலை அமைத்தல் 260—261

நரசிம்மன், திரு. பூ. மு.—

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81 530—532

விவாதம் 530—532

ந.

பக்கங்கள்

நல்லப்பன், திரு. தி. கா.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப் பெற்றிருப்பது, (ஒ.தீ.) 503

அரிசனங்கள் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குதல் 34—37

பெரியார் மாவட்டம், சாயத் தொழிற்சாலை துவங்குதல் 141—142

பெரியார் மாவட்டம், நூற்பாலை அமைத்தல் 255—257

நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. ஆர்.—

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கைகள், (த.கோ.) 502

நிலங்கள்—

குத்தகை உரிமை வழக்குகள், தேக்கம் 237—239

கூடலூர், மாவடி பகுதியை விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுத்தல் 324—328

கிறுமலைப் பகுதி புறம்போக்கு நிலங்கள், ஏழைகளுக்கு வழங்குதல் 3—7

முயல் தீவு, அரசு எடுத்துக்கொள்ளுதல் 234—237

நினைவுச் சின்னங்கள்—

கிண்டி காமராஜர் மண்டபத்தில் புகைப்படங்கள் அமைத்தல் 122—123

நீக்கம்—

41, 57, 58, 61, 62, 63, 103, 157, 304, 305, 306, 498, 542, 589

நீதிமன்றங்கள்—

ஆத்தூர், முன்சீப் நீதிமன்றம் அமைத்தல் 20—21

பக்கங்கள்

நீதிமன்றங்கள்—தொடர்ச்சி.

காஞ்சிபுரத்தில் கட்டிடங்கள் கட்டுதல் 477

திருவத்திபுரம், உட்கோட்ட குற்றவியல் மாவட்ட நீதிபதி வழக்கு மன்றம் 242

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—

அமைச்சரின் நேர்முக உதவியாளர் நாளேடுகளுக்கு அனுப்பிய செய்தி, (த.கோ.) 524—525

ஆளுநர் உரை, நன்றி நவிலல், (தீ.) 281—284, 286

இராமநாதபுரம் மாவட்டம் மீனவர்களுக்கும் தைவான் நாட்டு மீனவர்களுக்கு இடையே மோதல் (ந.ஈ.) அ 517—518

519, 520

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது (க.ஈ.அ.) 356—363

பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை, (தீ.) 106—107

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81, விவாதம் 589

நெடுமாறன், திரு. ப.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப் பெற்றிருப்பது, (ஒ.தீ.) 507—509

அமைச்சரவையின் ஒரு கொள்கையைக் கண்டித்தல், (தீ.) 49

ஆளுநர் உரை, நன்றி நவிலல், (தீ) 63—76, 286—287

தமிழ் மொழி ஆராய்ச்சி நிலையம் 12—16

தலைமை நீதிபதி நியமனம் குறித்த கவன ஈர்ப்பு அறிவிக்கப் பெறுவது (ஒ.பி.) 175

மதுரை, சட்டக் கல்லூரி சட்ட மேற்படிப்பு நடவடிக்கை 468—469

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81 விவாதம் 532—539

பக்கங்கள்

பட்டுவளர்ப்பு—

திருவில்லிபுத்தூர் வட்டம், பட்டு வளர்ப்புத் திட்டம் 316—319

பம்மல் நல்லதம்பி, திரு.—

பம்மல் பேரூராட்சி, குடிநீர் வழங்குதல் 248—249

பல்கலைக் கழகங்கள்—

காரைக்குடியில் நிறுவுதல் 241

கோவை, விவசாயப் பல்கலைக் கழக ஆசிரியர்கள், குறைகளைப் பரிசீலிக்க குழு 532—533

பலராமன், திரு. இல.—

போளூர் தாலுகா, சென்பகத் தோப்பில் அணைகட்டுதல் 251

மதுரை, மருத்துவ மனை மருந்துகளை, வெளிமார்க்கட்டில் விற்றது 131—135

வட ஆர்க்காடு மாவட்டம், பாலாற்றின் குறுக்கே புல்லூர் அணை கட்டுதல் 253—254

பழனிமுத்து, திரு. சி.—

ஆசிரியர், மேல்சிறப் நீதிமன்றம் அமைத்தல் 20—21

பழனிவேல், திரு. என்—

மதுரை, மருத்துவமனை மருந்துகளை வெளிமார்க்கட்டில் விற்றது 131—135

பாசனம்—

அனைக்கால் காவிரி, சீரமைக்கும் திட்டம் 494—495

ஆர். எஸ். மங்கலம் கண்மாய் கொள்ளளவை அதிகரித்தல் 29—31

திவகங்கைப் பகுதி, பெரியாறு பாசன விரிவுபடுத்தும் வேலைகள் 491—493

பவானிசாகர் அணை, சுற்றியுள்ள பகுதிகளுக்கு தண்ணீர் விடுதல் 493—494

போளூர் தாலுக்கா சென்பகத் தோப்பில் அணை கட்டுதல் 251—253

மஞ்சலாறு அணைக் கட்டுத் திட்டம் 26—29

முக்கூடல் மாவட்டம், வைகை கால்வாய்கள் சீரமைப்பு 489—491

ப—தொடர்ச்சி.

பக்கங்கள்

பாசனம்—தொடர்ச்சி.

வட ஆர்காடு மாவட்டம், பாலாற்றின் குறுக்கே புல்லூர் அணை கட்டுதல் 253—254

வட ஆர்காடு மாவட்டம், மேலரசம்பட்டு அணை கட்டும் திட்டம் 251—253

பாபு ஜனார்த்தனன், திரு—

செய்யாறு, அனுக்காவூர் ஒன்றியங்கள் ஊரக வளர்ச்சித் திட்டத்தில் சேர்த்தல் 125

திருவத்திபுரம் உட்கோட்ட குற்றவியல் மாவட்ட நீதிபதி வழக்கு மன்றம் 242

பாரமலை, திரு. க.—

அமைச்சரவையின் ஒரு கொள்கையைக் கண்டித்தல், (தீ.) 49

மதுரை, வைகையிலிருந்து குடிநீர் வழங்கல் 485—489

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81 விவாதம் 402—405

பால்வளம்—

வேங்கிக்கால் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் பவுடர் தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்தல் 315—316

பாலங்கள்—

கம்பம்—கருவிப்பட்டி இணைப்புப் பாலம் அகலப்படுத்துதல் 335

திருவாரூர் மேம்பாலம், மதிப்பீடு 127

மார்த்தாண்டம்-பேச்சிப்பாறை சாலைப் பாலம் 333—334

பாலசுப்பிரமணியன், வேடசெந்தார், திரு. வி. பி.—

திண்டுக்கல்-பெண்ணை, விரைவுப் பேருந்து விடுதல் 342—343

பாலிடெக்னிக்குகள் விடுதி முறை 239—241

பாலன், திரு. சு.

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1979-80, 1980-81 விவாதம் 528—530

பிற்பட்டோர் நலன்—

சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் 309—312

ப—தொடர்ச்சி.

பக்கங்கள்

புருஷோத்தமன், திரு. து.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல், (தீ.) 189—193

காரைக்குடி, பல்கலைக் கழகம் நிறுவுதல் 241

குடும்பக் கட்டுப்பாடு போன்ற கொள்கையை விளக்கும் திரைப்படங்களுக்கு வரி விலக்கு 499—50

சைதாப்பேட்டை, அமுதம் அங்காடி திறத்தல் 113—11

பெருமாள், திரு. ரா. கு.—

விளாத்திக்குளம், அக்ரோ சர்வீஸ் சென்டர் நிறுவுதல் 31—3

விளாத்திக்குளம் தொகுதி, கூட்டுறவு நூற்பாலை அமைத்தல் 260—26

பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.—

அமைச்சரவையின் ஒரு கொள்கையைக் கண்டித்தல், (தீ.) 4

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1979-80, 1980-81 விவாதம் 420—42

525—5

வத்தலக்குண்டு ஒன்றியம், சாலைப் பணிகள் 125—1

பொன்னுரங்கம், திரு. ப.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல், (தீ.) 1

கன்னியாகுமரி மாவட்ட குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது, (க.ஈ.) 3

கீரந்தங்குடி, மாரியம்மன் ஆலையம், மரங்கள் வெட்டப்பட்டது 118—1

பேரவை உறுப்பினரை காவல் துறையினர் தாக்கியதாகச் சொல்லப்பெறுவது, (உ.பி.)

கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு

மாநில மொழி தெரியாத ஒருவரைத் தலைமை நீதிபதியாக நியமித்தல் (க.ஈ.அ.) 178, 184, 186,

ப—தொடர்ச்சி:

பக்கங்கள்

போக்குவரத்து—

திண்டுக்கல்-சென்னை, விரைவுப் பேருந்து விடுதல் 342—343

திருநெல்வேலி, நகரப் பேருந்துகளை அரசுடமையாக்குதல் 340—342

நாகர்கோவில்-சென்னை, பேருந்து விடுதல் 137—139

வாகனங்களில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள் பொருத்துதல் 135—137

ம.

மக்கள் நல்வாழ்வு—

திருச்சி மாவட்டம், சுகாதாரக் கல்வி பற்றிய முன்னோடித் திட்டம் 338—339

மணி, திரு. டி.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப் பெற்றிருப்பது, (ஒ.நி.) 503

கன்னியாகுமரி மாவட்ட குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது, (க.ஈ.) 356, 360, 361

கீரிப்பாறை பகுதி, மூங்கில் ஏலம் 328—330

குமரி மாவட்டத்திலிருந்து தென்னை நார் ஏற்றுமதி 115—117

மணிமாறன், திரு. ஆர்.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ.) 59, 60

கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன்களுக்கான வட்டி விகிதம் 495—497

திருப்பூர், கூட்டுறவு நூற்பாலை அமைத்தல் 257—260

திருப்பூர் வளர்மதி கூட்டுறவு சிறப்பங்காடி, அலுவலர்கள் வேலை நிறுத்தம் 16—20

மருத்துவமனைகள்—

ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருந்தகங்கள், அதிகரிப்பு 343—344

கோபி அரசு மருத்துவமனை, விரிவு படுத்துதல் 339—340

மதுரை, மருத்துவமனை மருந்துகளை வெளிமார்க்கட்டில் விற்றது 131—135

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

ரிக்கம், திரு. எம். எஸ்.—

தலைஞாயிறு பேரூராட்சி. குடிநீர் திட்டம் 23

திருவாரூர் மேம்பாலம், மதிப்பீடு 127

சாரம்—

அனைத்திந்திய மின்விசை விநியோக இணையம் அமைத்தல் 230—234

கல்ராயன் மலைப் பகுதி, நீர்வீழ்ச்சியிலிருந்து மின் உற்பத்தி 229—230

தூத்துக்குடி அனல் மின் நிலையம், பணியாட்கள் தேர்ந்தெடுத்தல் 38—40

நாங்குனேரி வட்டம், பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு 40

மீனவர் பகுதிகள், மின் விளக்குகள் எரியாமை 37—38

ன்சார வாரியம்—

நிதிநிலை அறிக்கை, 1979-80, 1980-81, விவாதம் 367—422, 525—593

மீனவம்—

அதிராம்பட்டினம் அருகில் கிடைத்த வலம்புரி சங்கு 314—315

காரங்காடு. இரால் வளர்ப்புப் பண்ணை அமைத்தல் 312—315

நாகப்பட்டினம் மீன்பிடிதுறைமுகம், செயல்படாமை 111

வாலிநோக்கம், மீன்பிடி துறைமுகம் அமைத்தல் 112—113

மது இஸ்மாயில், திரு. பி.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல், (தீ.) 193—198

த்துகிருஷ்ணன், திரு. சு.—

கன்னியாகுமரி நகரியம் நகராட்சியாக்கல் 145—147

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1979-80, 1980-81, விவாதம் 377—382

த்துராமலிங்கம், திரு. இ.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல், (தீ.) 198—201

திசையன்விளை பேரூராட்சி, குடிநீர்த் திட்டம் 481

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

முத்துராமலிங்கம், திரு. இ.—தொடர்ச்சி.

திருநெல்வேலி, நகரப் பேருந்துகளை அரசுடமையாக்குதல் 340—342

முத்தையா, திரு. இரா.—

திருமங்கலத்திலுள்ள மண்வளப் பாதுகாப்பு பிரிவு தஞ்சைக்கு மாற்றுதல் 123—125

மூர்த்தி, திரு. ஜி.—

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1979-80, 1980-81, விவாதம் 413—[illegible]

மொழிகள்—

தமிழ் உயர் ஆராய்ச்சி நிலையம் 12—1[illegible]

ய.

யசோதா, திருமதி டி.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல், (தீ.) 84

ர.

ரகுமான்கான். திரு. அ.—

ஆளுநர் உரை நன்றி நவிலல், (தீ.) 59, 60

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (க.கோ.) 41, 148

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81 விவாதம் 589, 5[illegible]

"ரெட் சான்டர்ஸ்" மரம் குறித்த குற்றச்சட்டுக்கு தவறான தகவல் கொடுத்ததாக வனத்துறை அமைச்சர் மீது (உ.பி.) 159—1[illegible]
170—1[illegible]

ரங்கசாமி, திரு. க.—

கள்ளக்குறிச்சி-சின்னசேலம், குடிநீர்த் திட்டம் 483—4[illegible]

ரமணி, திரு. கு.—

அமைச்சரவையின் ஒரு கொள்கையைக் கண்டித்தல், (தீ.) 4[illegible]

கோவை மத்திய சிறைக் காவலர்களுக்குக் குடியிருப்புகள் 475—4[illegible]

கோவை மாவட்டம், தேசிய பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் 246—24[illegible]

பக்கங்கள்

ர—தொடர்ச்சி.

ரமணி, திரு. கு.—தொடர்ச்சி.

கோவை விவசாயப் பல்கலைக் கழக ஆசிரியர்கள், குறைகளைப் பரிசீலிக்க குழு 332—333

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81, விவாதம் 543—551

ரெத்தினராஜ், திரு. எஸ்.—

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது குறித்து, (க.ஈ.) 356

வ.

வடிகால்—

மாயவரம், பாதாள சாக்கடைத் திட்டம் 24

வரதராஜன், திரு. என்.—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப் பெற்றிருப்பது, (ஓ.தீ.) 503

வரிகள்—

கிரிக்கெட் பந்தயங்கள், டிக்கட் மீது வரிவிதிப்பு 497—499

குடும்பக் கட்டுப்பாடு போன்ற கொள்கையை விளக்கும் திரைப்படங்களுக்கு வரி விலக்கு 499—501

தண்ணீர்த் தீர்வை, சீரமைப்பு 239

திருவில்லிபுத்தூர் வட்டம், கூடுதல் தண்ணீர் தீர்வை 1—2

விசயலட்சுமி, செல்வி ப.—

பனமரத்துப்பட்டி ஏரி, ஆழப்படுத்துதலும் சுற்றுலா தலமாக்குதலும் 323—324

விசுவநாதன், திரு. கோ.—

வ. ஆர்காடு மாவட்டம், மேலச்சாம்பட்டு, அணை கட்டும் திட்டம் 251—253

வின்சென்ட், திரு. மி.—

அனந்தாறு கால்வாய், சீரமைக்கும் திட்டம் 494—495

ஆளுநர் உரை, நன்றி நவிலல், (தீ.) 55—62

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வின்சென்ட், திரு. மி.—தொடர்ச்சி.

நகராட்சிகளை மாநகராட்சிகளாக்குதல் 143—145

நாகர்கோவில்-சென்னை, பேருந்து விடுதல் 137—139

விஜயபாலன், திரு. என்.—

மாயவரம், பாதாள சாக்கடைத் திட்டம் 24

வீட்டுவசதி—

கோவை மத்திய சிறைக் காவலர்களுக்குக் குடியிருப்புகள் 475—476

வீரப்பன், திரு. ஆர். எம்.—

"ரெட் சான்டர்ஸ்" மரம் குறித்த குற்றச்சாட்டுக்கு தவறான தகவல் கொடுத்ததாக வனத்துறை அமைச்சர் மீது, (உ.பி.) 163—167, 168—170, 172—173

வெங்கட்ட ரெட்டி, திரு. டி.—

ஒரூர், கால்நடைப் பண்ணை, புதிய திட்டம் செயல் படுத்துதல் 142—143

வெங்கடசுப்பிரமணியம், திரு. ப.—

காஞ்சிபுரம், நீதிமன்றங்களுக்கு கட்டடங்கள் கட்டுதல் 477

வேணுகோபால், திரு. த.—

நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகம், செயல்படாமை வேங்கிக்கால் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் பவுடர் தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்துதல் 315—316

வேலைவாய்ப்பு—

திருச்சி, தொழில் நுட்பத் தகுதியுடையோர்க்கு வேலை வாய்ப்பு அலுவலகம் 261—262

வேளாண்மை—

திருமங்கலம், மண்வளப் பாதுகாப்பு பிரிவு, தஞ்சைக்கு மாற்றுதல் 123—125

விளாத்திகுளம், அக்ரோ சர்வீஸ் சென்டர் நிறுவுதல் 31—32

ஜ.

பக்கங்கள்

ஜான் வின்சென்ட், திரு. மு.—

நாங்குனேரி வட்டம், பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு, 40

ஜெயராமன், திரு. வே. இரா.—

கூடலூர், மாவடி பகுதியை விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுத்தல் 324—328

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81, விவாதம் 559, 561

ஹ.

ஹாஜா ஷெரீப், திரு. கே. எஸ். ஜி.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல், (தீ.) 304

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80- 1980-81 விவாதம் 568—574, 583

ஹேமச்சந்திரன், திரு. ஜே.—

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை, (த.கோ.) 354—355

கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது, (க. ஈ.) 356, 359

மார்த்தாண்டம்-பேச்சுப்பாறை சாலைப் பாலம் 333—334

மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 1979-80, 1980-81, விவாதம் 386—388

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன் கிழமை, 1981 ஜனவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.''

நீதிநெறி, பொருள், இன்பம், உயிருக்காக அஞ்சும் அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராய்ந்த பிறகே, ஒருவரை ஒரு பணிக்கு உரியவராகத் தேர்ந்து எடுக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 61, 62 மற்றும் 63 ஆகியவை பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் கூடுதல் தண்ணீர் தீர்வை விதிப்பு

*வினா எண் 64.— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் அர்சுனா நதித் திட்டத்தின்கீழ் பயனடையும் கண்மாய்கள் யாவை?

(ஆ) 1979ம் ஆண்டு மேற்படி கண்மாய்களுக்கு தண்ணீர் வராமலிருந்தும் கூடுதல் தண்ணீர் தீர்வை கிராம அதிகாரிகளால் வசூல் செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) 1. தாதங்குளம்.
2. சாத்தனேரி
3. நத்தம்பட்டி பெரியகுளம் கண்மாய்
4. கரிசல்குளம்பட்டி கண்மாய்.
5. திருவாங்குளம் கண்மாய்

6. கள்ளிபுத்தூர் கண்மாய்

7. தொண்டைமான்குளம்.

8. கொந்தராயன்குளம்.

(ஆ) 1979-ம் ஆண்டில் மேற்படி கண்மாய்களின் ஆயக்கட்டு நிலங்களுக்கு கூடுதல் தண்ணீர் தீர்வை விதிக்கவும் இல்லை, வசூல் செய்யப்படவும் இல்லை.

மாண்புமிகு திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு அதாவது 1388 ஆவது பசலி ஆண்டில் அர்சுனா நதித்திட்டத்தின்கீழ் உள்ள கண்மாய்களுக்கு தண்ணீர் பாயவும் இல்லை,; மராமத்து வேலையும் நடக்கவில்லை என்று சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டதன் பேரில் தண்ணீர் வரி வஜா செய்யப்பட்டது. அப்படியிருந்தும் அந்தக் கிராம அதிகாரிகள் தாலுக்கா கணக்கில் வசூல் செய்து கணக்கு காட்டாமலும், ஏழை, எளிய உழவர்களுக்கு அந்தக் காசை திருப்பிக் கொடுக்காமலும் இருந்து விட்டனர். ''அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும் பிற்பயக்கும் நற்பாலவை'' என்பது குறள். எனவே, இப்படி முறைகேடாக வசூலித்த அதிகாரிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, தண்ணீர் அந்த ஆண்டில் நிலங்களுக்கு பாயாத காரணத்தினால் தண்ணீர்த் தீர்வை தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல அடிப்படை நிலத் தீர்வையையும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அப்படி யாராவது வசூல் செய்திருந்தால் அது தெரிவிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1963-77 ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் கூடுதல் நஞ்சைத் தீர்வை மற்றும் கூடுதல் தண்ணீர் மேல்வரி ஒரு போகம், இருபோகம் ஆகியவைகளுக்கு எவ்வளவு வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, பாசனத்திற்கு அளிக்கப்படும் தீர்வை விகிதங்கள் பல மாதிரியாக உள்ளதால் அவற்றைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, சீரமைப்பதற்காக ஒரு குழு போடப்பட்டு, அது ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை வந்திருக்கிறது. அதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது: விரைவிலே முடிவெடுக்கும்.

சிறுமலைப் பகுதியிலுள்ள புறம்போக்கு நிலங்கள்.

*வினா எண் 65 — திரு. ஏ. சந்திரசேகரன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சோழவந்தான் தொகுதியைச் சார்ந்த கச்சைக்கட்டி பிர்க்கா சிறுமலை அடிவாரத்திலுள்ள சுமார் 1,235 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை சுமார் 600க்கு மேற்பட்ட ஏழை விவசாயிகள் தண்டத் தீர்வை செலுத்தி 5 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருவது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) மேற்படி நிலங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் விவசாயிகளை அணுகாமல் சர்வோதயத்திற்கு வழங்கியது உண்மையா ?

(இ) ஆம் எனில் மேற்படி நிலங்களை மறுபடியும் ஏழை விவசாயிகளுக்கு வழங்க உத்தரவு வழங்குமா ?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் :—(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், கச்சைக்கட்டி கிராமத்தில் 412.00 ஏக்கரும், தெத்தூர் கிராமத்தில் 842.02 ஏக்கர் பரப்புள்ள இடத்தை நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்வதற்கு, ஒதுக்கு காட்டிலிருந்து விலக்கு அளித்து நில அளவை செய்து ஒப்படை செய்ய ஆணை இடப்பட்டுள்ளது. மொத்தம் 1,204.89 ஏக்கர் அளவை செய்ததில் 808.73 ஏக்கர் நிலம் 577 நபர்கள் ஆக்கிரமிப்பிலும், 340.70 ஏக்கர் நிலம் தரிசாகவும், மீதி 55.46 ஏக்கர் நிலம் விவசாயத்திற்கு லாயக்கற்றதெனவும் வகைப்படுத்தப்பட்டது. ஆக்கிரமிப்புதாரர்கள் மூன்றாண்டுகளுக்கு மேலாக இந்நிலத்தில் புன்செய் பயிர் செய்து வருகிறார்கள். இந்நிலையில் மதுரை சர்வ சேவா சங்கம் மேற்படி நிலங்களை 30 இலட்சம் ரூபாய் செலவில் சீர்திருத்தம் செய்து, 96 கிணறுகள் வெட்டியும், தோட்ட விவசாயத்திற்கு கொண்டு வர ஏழு அல்லது எட்டு ஆண்டு கால குத்தகைக்கு விண்ணப்பித்தது. சங்கத்தின் திட்டத்தின்படி குத்தகை காலத்தில் ஒப்படை பெறத் தகுதியுள்ள ஆக்கிரமிப்புக்காரர்கள் விவசாயக் கூலிகளாக அமர்த்தப்படுவார்கள். குத்தகை காலம் முடிந்தவுடன் சங்கம் சீர்திருத்தம் செய்யப்பட்ட நிலத்தை அரசிடம் திரும்ப ஒப்படைக்கும். பின்பு ஆக்கிரமிப்புகாரர்கள் ஒவ்வொருவருக்கும் 1.50 ஏக்கர் வீதம் ஒப்படை செய்யப்படும்.

திரு. ஏ. சந்திரசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் செய்த விவசாயப் பெருமக்களுக்குத் தண்டம் தீர்வை செலுத்தியவர்களுக்கு பட்டா வழங்கப்படுமா என்பதைத்தான் அறிய விரும்புகிறேன். அதாவது, தன்னுடைய பொருட்களைச் செலவழித்து, அதன்மூலமாக அந்த நிலத்தைப் பயன்படுத்திய விவசாயிகளுக்குப் பட்டா வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 28

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் . பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புக்காரர்களிடத்திலிருந்து அகற்றப்படுவது என்பது ஒன்று. ஆக்கிரமிப்பு செய்தவர்கள் நிலமற்றவர்களாக இருந்தால் அவர்களுக்குப் பட்டா செய்வது என்பது ஒன்று. இதிலே, உபயோகமற்ற, பண்படுத்தப்படாத, விவசாயம் செய்வதற்கு இலாயக்கில்லாத நிலத்தை, சேவா சங்கத்தினர் முதலீடு போட்டு, செப்பனிட்டு, அதற்குப் பிறகு, அரசிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அப்படி ஒப்படைத்த பிறகு, அதிலே யார் முதலிலே ஆக்கிரமிப்பு செய்தார்களோ, அப்படி ஆக்கிரமிப்பு செய்தவர்கள் தகுதி உடையவர்களாக இருந்தால், அவர்கள் சீர்செய்த நிலம் என்பதாலே, ஒவ்வொருவருக்கும் 1½ ஏக்கர் கொடுக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, சிறுமலை பகுதியில் 9,10 ஆண்டுகளுக்கு முன்னாலே பட்டாக்கள் கொடுக்கப் பட்டாலும் இன்று அவர்களிடத்திலேயிருந்து அந்த நிலங்கள் மீண்டும் எடுக்கப்படுகின்றன என்ற நிலை இருக்கிறது. அப்படி ஏழைகளாக, நிலம் அற்றவர்களாக இருந்து, ஏற்கனவே பட்டா வழங்கியிருந்தால், அவர்களுடைய பட்டாவை நீட்டிக்கவும், அவர்கள் வைத்துள்ள நிலத்தை அவர்களிடத்திலே நீட்டிக்கவும், சர்வே செய்த காலத்திலே, பல்வேறு பகுதிகளிலே சரியாக சர்வே செய்யாமல், அங்கு நீண்டகாலம் விவசாயம் செய்து கொண்டிருந்த மலைவாழ் மக்கள் மீண்டும் ரீசர்வே செய்ய வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டே இருக்கிறார்கள். அதை மீண்டும் ரீசர்வே செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? அமைச்சர் இப்பொழுது பதில் சொல்லும்போது 10 ஆண்டுக் காலத்திற்கு சேவா சங்கத்திற்கு அந்த இடத்தைக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஏற்கனவே, காஃபி, டீ, ஏலம் போன்றவைகளை, 99 ஆண்டுக்காலத்திற்கு கொடுத்துவிட்டு, பெரிய, பெரிய, இடத்திலே மீண்டும் எடுப்பதிலே சிக்கல் இருக் கிறது. ஆகவே, மீண்டும் தனியாரிடம் இவ்வளவு அதிகமான நிலத்தைக் கொடுப்பது தவறு அல்லவா? அதே நிலத்தை அரசே பண்படுத்தி, கூட்டுப்பண்ணை மூலமாக உபயோகப் படுத்துவது நன்றாக இருக்காதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மூன்று கேள்விகளை ஒன்றாகக் கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொன்றாக, ஞாபகத்தில் வைத்து, பதில் சொல்ல விரும்புகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விதான் கேட்கலாம். மூன்று கேள்விகளைச் சேர்த்துக் கேட்டால். ஒரு கேள்விக்குப் பதில் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நிலத்தை ஒப்படைத்த பிறகு அதை ஒப்படை பெற்றவர்கள் முறைகேடாக நடக்காத வரையில், அவர்களிடத்திலிருந்து எடுப்பதற்கு எந்தவிதமான அதிகாரமும் யாருக்கும் இல்லை, எடுக்க முடியாது. இது ஒன்று.

1981 ஜனவரி 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அப்படி அங்கே ஒப்படைக்கப்பட்டிருந்த நிலங்கள் எடுக்கப் பட்டிருந்தாலும், யாரிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ, அந்த நிலத்தை அவர் சீர்திருத்தம் செய்ய முடியாதவராக இருந்து அதைத் திருப்பிக் கொடுத்துவிடுவார்களானால், அதைத் தடுக்க அரசு சேவா சங்கத்திடமிருந்து ஒரு ஒப்பந்தம் எழுதி வாங்கப்படும். அதன்படி, அவர்களால் அந்த நிலம் யாரிடம் ஒப்படைக்கப்படுகிறதோ, அவரிடம் இருந்து எடுக்கப்பட்டால், எடுக்கப்பட்டவருக்குப் போதுமான தொழில், ஊதியம் தரப்பட வேண்டும். போடப்படுகிற ஒப்பந்தத்தை சேவா சங்கம் மீறாமல் இருக்க வேண்டும். ஒப்பந்தத்தை மீறினால் திருப்பி சேவா சங்கத்திடமிருந்து எடுக்கப்படும். இது இரண்டாவது கேள்விக் கான பதில்,

காஃபி, தேயிலை, பயிரிட எப்படி 100 வருஷத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். 100 வருஷத்திற்குக் கொடுக்கப்பட்டதையெல்லாம் அரசு ஆராய்ந்து வருகிறது, அது மட்டுமல்ல, தரிசாகக் கிடக்கும் எல்லா நிலங்களையும் அரசே எடுத்து சீர் செய்வது என்பது முடியாது என்ற காரணத்தால்தான், சேவா சங்கம் நல்லமுறையில் செய்யும் என்றுதான் ஏழு ஆண்டுக்குத் தான் கொடுத்திருக்கிறோம். ஏழு ஆண்டுகள் என்று சொல்லும் போது எந்தக் காரணத்திற்காகக் கொடுத்தோமோ, அந்தக் காரியத்தைச் செய்கிறார்களா என்று அரசு பார்த்துக் கொண்டி ருக்கிறது. இப்பொழுது கிணறுகளை வெட்டி, சீர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலும் எனக்கு வந்திருக்கிறது. அடிக்கடி மாவட்ட ஆட்சித்தலைவரிடத்தில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

[முற்பகல் 9-10]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, சிறுமலைப் பகுதியில் சில தனி நபர்கள், அரசியல் செல்வாக்கு பெற்ற ஒரு சில தனி நபர்கள், பல நூற்றுக்கணக்கான ஏழைகளை வைத்து அங்கே இருக்கின்ற மரங்களை வெட்டி, தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிற விவரம் அமைச்சருக்கு மகஜர் மூலமாக வந்திருக்கிறதா ? அப்படி வந்திருந்தால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும். பல நூற்றுக்கணக்கான ஏழைகள் வாழ்வதற்காக இப்பேர் பட்டவர்களை வெளியேற்றி நிவாரணம் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, உபகாரம் செய்வதற்கு அரசு முன் வரும்,

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, அரியம் பாளையம் சிறுமலைப் பகுதியிலே இருக்கக்கூடிய புனல்காடு என்று சொல்லக்கூடிய அந்த மலைப்பகுதியில் உள்ள பாரஸ்ட் நிலங்களை சுமார் 3,000 குடும்பங்கள் 20 ஆண்டுகளாக சாகுபடி

[திரு. என். பழனிவேல்] [1981 ஜனவரி 28

செய்து வருகின்றன. அவர்களை பாரஸ்ட் இலாகாவினர் இப்போது மிகவும் துன்புறுத்துகிறார்கள். மேலும் அதிலே உலர் போன்ற பொருள்கள் தற்போது மகசூல் தரவாயில் இருக்கின்றன. அதைக்கூட அவர்கள் அடைய முடியாமல் விரட்டப்படுகிறார்கள். அந்த 3000 குடும்பங்களும் எந்தவிதமான நிலங்களும் இல்லாதவர்கள். எனவே அவர்களுக்கு அந்த நிலங்களை ஜாரி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அவர்களுக்கு பாரஸ்ட் இலாகாவினரால் தொல்லை இருந்தால் ரெவின்யூ இலாகாவினர் தலையிட்டு அவர்களுக்கு உதவி செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். அதே நேரத்தில் அந்த உலர் போன்ற பொருள்களை அவர்கள் அறுவடை செய்யவும் பாதுகாப்புத் தரப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, காட்டிலாகாவில் என்ன நடக்கிறது என்ற தகவல் என்னிடத்திலே இல்லை. சம்மந்தப்பட்ட அமைச்சரிடத்தில் நானும் தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்தில் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதியைச் சார்ந்த கச்சைக்கட்டி பிர்க்காவில் சிறுமலை அடிவாரத்தில் உள்ள நிலங்களை சர்வோதயத்திற்குத் தருவது சம்பந்தமான கேள்வி, அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார். அதேபோல் தமிழகத்திலே தஞ்சை மாவட்டத்தில் லட்சக்கணக்கான நிலமற்றவர்கள், மேடு பள்ளங்களை எல்லாம் சீர்திருத்தி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மதுரை மாவட்டத்தைப் பற்றிய கேள்வி. தமிழ்நாடு பெரிய பூபாகம்; அதன் அனைத்துப் பகுதியைப் பற்றியும் கேள்வி கேட்க முடியாது.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, இந்த ஏழைகள் செப்பனிட்டு வரக்கூடிய நிலத்திற்குத் தண்டத் தீர்வை போட்டு கட்ட முடியாமல் இருக்கிறார்கள். எனவே அந்தத் தண்டத் தீர்வையை ரத்து செய்து நிலமற்ற விவசாயிகள் சாகுபடி செய்யக்கூடிய வகையில், சர்க்கார் நிலத்தை உடனடியாகப் பட்டா செய்து கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, சேவா சங்கத்திற்கு இந்த நிலங்களைத் தரும்போது அந்த சேவா சங்கத்தினுடைய நிதி நிலைமை, அவர்களுக்கு இருக்கிற ஆற்றல் இவைகளை எல்லாம் பார்க்கிறோம். அவர்களுடைய நிதி நிலைமை சரியாக இருந்து அதில் எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டால்தான் கொடுக்கிறோம்.

தண்டத் தீர்வை எங்கேனும் போடப்பட்டிருந்தால், தகவல் தெரிவித்தால் அது பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

1981 ஜனவரி 28]

திரு. எஸ். ஆண்டித்தேவர்: பேரவைத் தலைவர் அவர்களே, தோப்பின் பெயரால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்து இருப்பவர்கள், அந்தத் தோப்பை அழித்து விட்டால், அது அரசுக்குச் சேரும் என்று முன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அழிக்கப்பட்ட தோப்பு நிலங்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றவே, அதை ஏழை எளியவர்களுக்குப் பிரித்துக்கொடுக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, விதிவிலக்கு கொடுக்கிறபோது தோப்பாகத்தான் இருக்கவேண்டும். தோப்பை மாற்றினால் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விதிவிலக்கு ரத்து செய்யப்படும். அப்படி எங்காவது மாற்றப்பட்டு இருக்கிறது என்று தகவல் இருந்து கூறினால், உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. இரா. முத்தையா: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதியைச் சார்ந்த கச்சைக்கட்டி பிர்க்கா சிறுமலை அடிவாரத்தில் உள்ள நிலங்களை அங்கேயுள்ள ஆற்றல் மிக்க விவசாயிகள் பயன்படுத்தி வைத்து இருந்தார்கள். அப்படி பண்படுத்தி வைத்திருந்த நிலத்தைத் தான் சேவா சங்கத்திற்குக் கொடுத்தார்கள். சேவா சங்கம் அந்த நிலத்தைப் பெற்ற பிறகு, எந்தவிதமான பண்படுத்தும் வேலையையும் செய்யவில்லை. அதையெல்லாம் ஆராய்ந்து, அந்த விவசாயிகளுக்கே அந்த நிலத்தைத் திரும்பக்கொடுக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் முன்பே தெரிவித்து இருக்கிறேன். நிலத்தை யாரிடத்திலாவது ஒப்படை செய்துவிட்டால், அவர்கள் ஒப்பந்தத்தில் கண்டிருக்கிற ஷரத்துக்களை மீறாத வகையில் அதை எடுத்துக் கொள்ள யாருக்கும் அதிகார இல்லை. அப்படி எடுத்து இருந்தால், திருப்பிக் கொடுக்க அரசு ஆவன செய்யும். ஒரு வருக்கு நிலம் ஒப்படை செய்கிறபோதே, இன்னின்ன காரணங்கள் மீறப்பட்டால், திருப்பி எடுத்துக்கொள்ளப்படும் என்று ஷரத்து சேர்க்கப்பட்டுத்தான் ஒப்படை செய்வது வழக்கம். இதிலே எது மீறப்பட்டு இருந்தாலும் அரசு அதற்கான நடவடிக்கை எடுக்கும்.

மாயவரம், நன்னிலம் வட்டங்களில் புதிய உயர்நிலைப் பள்ளிகள்.

***வினா எண் 66—திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தஞ்சை மாவட்டம், மாயவரம் வட்டம் திருவாவடுதுறையிலும், நன்னிலம் வட்டம் சேங்காலிபுரத்திலும் உயர் நிலைப் பள்ளி துவங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

[1981 ஜனவரி 28

(ஆ) அதற்கான பொது மக்கள் பங்குத் தொகை செலுத்தப் பட்டு விட்டதா?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டு துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) மற்றும் (இ)—திருவாவடுதுறை மற்றும் சேங்காலிபுரம் ஆகிய ஊர்களில் அப் பள்ளிக் குழுக்கள் உயர்நிலைப் பள்ளி துவங்க விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் 1980-81 கல்வியாண்டில் புதிய அரசு உயர்நிலைப் பள்ளிகள் துவங்க அனுமதி அளித்து அரசாணை (நிலை) எண். 1267, 1265, கல்வி, நாள் 8-7-80ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) (1) திருவாவடுதுறை பள்ளிக் குழு நிர்வாகப் பங்குத் தொகை ரூ. 10,000 மற்றும் கட்டிடப் பங்குத் தொகை ரூ. 12,500 செலுத்தவில்லை (2) சேங்காலிபுரம் பள்ளிக்குழு நிர்வாகப் பங்குத் தொகை ரூ. 10,000 கட்டியுள்ளது. கட்டிடப் பங்குத் தொகை ரூ. 12,500 கட்டவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் வட்டம் திருவாவடுதுறையிலும், நன்னிலம் வட்டம் சேங்காளிபுரத்திலும் உயர்நிலைப் பள்ளி துவக்கும் திட்டம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, அதிலே உள்ள சில பல விதிமுறைகளை பற்றியும், பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்துவது பற்றியும் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். சிலபல இடங்களில் பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்த முடியாத நிலை இருக்கிற காரணத்தாலும், அதே நேரத்தில் பள்ளிக்கூடங்கள் தேவையாக இருக்கிற காரணத்தாலும், அதற்கான விதிவிலக்கை அளிக்க அரசாங்கம் முன் வருமா? அத்தகைய பங்குத் தொகை செலுத்தாமலேயே அங்கே பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளையும் துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்கள் துவக்குவதில் பொது மக்களுக்கு இருக்கின்ற பங்கு அல்லது ஆர்வம் இவைகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முறையிலே அந்த விதி முறைகள் இருக்கின்றன. தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி எதுவாக இருந்தாலும் இப்படி ஒரு முறையை நாம் வைத்துக்கொண்டு இருக்கிறோம். அப்படி இல்லாமல் அரசே முழுச்செலவையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிற நிலைமை வருமானால், இப்போது பொதுமக்களுக்கு இருக்கும் ஆர்வம் கூட இல்லாமல் போய்விடும். அது கல்வித் துறையில் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சொல்லிக் கொள்கிறேன். பணம் திரட்ட எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அவைகள் மூலம் திரட்டி கட்டலாம். பொதுமக்கள் பணம் திரட்ட எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அவைகள்

1981 ஜனவரி 28]

மூலம் திரட்டி கட்டலாம். பொதுமக்கள் பணம் தருவார்கள். சில இடங்களில் பணம் கட்டாமலேயே கூட பள்ளிகள் தந்து இருக்கிறோம். அவர்கள் இனிமேல் பணம் கட்டுவார்கள் என்கிற நம்பிக்கையில் தந்து இருக்கிறோம்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளி புதிதாகத் துவக்க 25,000 ரூபாய் பொது மக்கள் கட்ட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. பல இடங்களில் அது சாத்தியம் இல்லாமல் இருக்கிற காரணத்தால் 25,000 ரூ. என்பதை 10,000 ரூ. என்று குறைத்துக் கொள்ளமுடியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கேள்வித் தலைவர் அவர்களே, அதைக் குறைக்கின்ற உத்தேசம் இல்லை. அப்போது நாம் அதற்காக எந்தப் பள்ளி திறக்கவேண்டுமோ அதையும் தடுக்கவில்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். மேல்நிலைப் பள்ளிகள் ஏற்படுவது ஓரளவிற்கு வெற்றி பெற்று இருக்கிறது என்றால், அதற்கு இது ஒரு முக்கியமான காரணமாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த 'மெச்சிங் கிரான்ட்' வழங்குவதைப் பொறுத்தவரை எல்லா இடங்களிலும் ஒட்டு மொத்தமாக ஒரே மாதிரியாகப் பார்க்கக் கூடாது. சில இடங்கள் தொழில் வளம் பெற்றவையாக இருக்கும்; வியாபார ஸ்தலமாக இருக்கும்; பல வகைகளில் முன்னேறியப் பகுதியாக இருக்கும். அங்கே சுலபமாகப் பணம் வசூல் செய்து விடலாம். ஆனால் வறட்சியான இடங்களில் வசூல் செய்வது கஷ்டம். ஆகவே, வறட்சியான பகுதிகளுக்கு விதியை சற்றுத் தளர்த்தி, பணம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நமக்கு ஒதுக்கப்படுகிற பணத்தில் இப்படிப்பட்ட 'மெச்சிங் கிரான்ட்' பள்ளிகளுக்குத் தருவதற்கே சரியாக இருக்கிறது. பணம் மிகுதியாக இருந்தால் அது பற்றி யோசிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, மயிலாடுதுறை வட்டத்தில் கொற்கை பகுதியில் ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு அங்குள்ள பொதுமக்கள் திதி திரட்டி அரசாங்கத்திற்கு அளித்ததாகவும் .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி தஞ்சை மாவட்டம், மாயவரம் வட்டம் திருவாவடுதுறை பற்றியது; மயிலாடுதுறை இங்கே வரவில்லை.

[1981 ஜனவரி 28

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, இம்மாதிரியாக உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி தொடங்க 'மேச்சிங் கிரான்ட்' தருவதற்குப் பொது மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து செலவிட வேண்டுமென்ற ஒரு கொள்கை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் உபரியாக உள்ள பொது நிதியிலிருந்து இம்மாதிரி காரியங்களுக்குக் கொடுக்கலாம் என்று ஒரு அரசு ஆணை இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த அடிப்படையில் பள்ளிகள் தொடங்குவதற்கு இந்த நிதியிலிருந்து கொடுக்க திட்ட வட்டமாக அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து பணம் பெறுவது குறித்த விவரம் என்னிடம் இல்லை. மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்குப் பொதுமக்களுடைய ஆர்வத்தைப் பொறுத்து, அவர்களே பணம் கட்டினால்தான் அவர்களுக்கு அதிலே அக்கறை இருக்கும்; இல்லையென்றால் அக்கறை இருக்காது; பள்ளிக்குப் போவதில்லை; குழந்தைகள் படிக்கிறார்களா என்று கவலைப்படுவதில்லை; ஆசிரியர்கள் சொல்லித் தருகிறார்களா என்பது பற்றி கவலைப்படுவதில்லை; ஆக, பொது மக்கள் கவனம் பள்ளிக்கூடத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக இதை நீங்கள் ஆதரிக்க வேண்டும்.

மேல்நிலைப்பள்ளி பொதுத் தேர்வு

* வினா எண் 67— திரு செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

அ) மேல்நிலைப் பள்ளி (+2) பொதுத் தேர்வில் மாணவர்கள் தவறிய பாடங்களை மட்டும் எழுதி தேர்வு பெற, அனுமதியளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

ஆ) ஆம் எனில், அந்த முறை இந்த ஆண்டு முதல் செயல் படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

அ) அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ஆ) மேல்நிலைப்பள்ளி (+2) பொதுத் தேர்வில் தேறாத மாணவர்கள் தவறிய பாடங்களை மட்டும் எழுதி தேர்வு பெற இவ்வாண்டு முதலே வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை : பொதுவாக பிளஸ் 2 பாடத்திட்டம் கடுமையானது. எனவே, மாணவர்கள் ஒட்டுமொத்தமாகக் குழப்பிக்கொள்ளாமல் ஒவ்வொரு கட்டத்திலும் தனிக் கவனம் செலுத்தி முழுமையாக அறிவு பெற கல்லூரிகளில் இருப்பதைப் போல மேல்நிலைப் பள்ளிகளிலும் செமஸ்டர் முறையை எற்படுத்த அரசு ஆலோசிக்குமா?

1981 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, செமஸ்டர் முறையைக் கொண்டுவர வேண்டுமென்ற ஒரு எண்ணம் அரசிடம் இருந்தாலும் அதைப்பற்றி இப்போது பரிசீலனை செய்யவில்லை. பாடங்கள் கொஞ்சம் கடினமாக இருந்தது என்பதால் அவற்றை ஓரளவுக்கு நீக்கி, மாணவர்களின் கஷ்டத்தைப்போக்கி, சரி செய்திருக்கிறோம். இப்போது நல்ல முறையில் படிக்கிறார்கள். பி.யு.சி. மாணவர்கள் படித்ததை விட இந்த ஹையர் செகண்டரி மாணவர்கள் தரம் அதிகமாக இருக்கிறது என்று கல்லூரி ஆசிரியர்கள் சொல்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, பிளஸ் 2 கல்வியில் 35% மார்க்குகள் வாங்கினால் பரீட்சையில் தேர்வு பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. ஆனால் எஸ்.எஸ்.எல்.சி.யில் 35% வாங்கியவர்கள் தேர்வு பெறாதவர்கள் என்று தள்ளப் பட்டிருக்கிறார்கள். புதிய கல்வி முறையில் மேல்நிலைப் பள்ளியில் 35% வாங்கியவர்கள் தேர்வு பெற்றவர்களாகக் கருதப் படும்போது, முன்பே 35% மார்க் வாங்கியவர்களையும் தேர்வு பெற்றவர்களாகக் கருதுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவரவர்களே 35% மார்க் என்று வைத்திருப்பது ஒரு பரீட்சைக்குரிய பெரிய தரம் ஆகாது. ஒரு வருடம் முழுவதும் படித்து, படித்ததில் 50% வாங்கி தேர்ச்சி பெற்றால்தான் தேர்வு பெற்றதாகக் கருத முடியும். 35% என்பது மிக மிகக் குறைவு. எஸ்.எஸ்.எல்.சி-யில் சில பாடங்களில் 40% வைக்கப்பட்டு, 35% வாங்கியவர்கள் தேர்ச்சிப் பெறாதவர்களாகக் கருதப்பட்டது. ஆகவே, அதை திரும்ப பரிசீலனை செய்வது சரியல்ல. இப்போது 'ட்ரெயினிங் ஸ்கூலில்' 50% வைத்திருக்கிறோம். ஆசிரியர் பயிற்சியில் 50% வாங்கினால்தான் தேர்ச்சி பெற முடியும். ஆக, நாம் தரத்தை உயர்த்த எல்லோரும் சேர்ந்து பாடுபட வேண்டும். தேர்ச்சிபெற 50%, 60% என்று வாங்க முயற்சி செய்ய வேண்டும்.

டாக்டர். கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, செமஸ்டர் முறை அமல்படுத்தப்படுவதா இல்லையா என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். அப்படி செமஸ்டர் முறை இல்லாவிட்டாலும் கோர் ஓவர் என்கின்ற முறை அமல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, செமஸ்டர் முறையிலேதான் இந்த கோர் ஓவர் என்ற முறை வருகின்றது. ஆகவே அதுவே இல்லை என்கின்றபோது இதற்கும் இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவரவர்களே, பிளஸ் 2 தேர்வில் தவறிய மாணவர்கள் குறிப்பிட்ட பாடத்தில் மட்டும் மீண்டும் படிக்கக் கூடிய அளவில் அதே பள்ளியில் சேருவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 28

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, தவறியவர்கள் மீண்டும் பள்ளியிலே சேருவது என்பது பல ஒழுக்க பிரச்சினைகளை எழுப்பக்கூடும். மேலும் குறிப்பிட்ட பாடத்தில் தவறியவர்கள் பள்ளிக்கூடத்தில் சேராமலேயே அப்பாடத்தைத் தனித்தேர்வு எழுதலாம். அவர்கள் வீணாக ஒரு ஆண்டுக் காலம் அப்பள்ளியில் அதற்காக படித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, ப்ளஸ் 2 படிக்கின்ற மாணவர்கள் தாங்கள் பயிலுகின்ற பள்ளிகளில் சோதனைச் சாலை வசதி இல்லை என்றால் அருகாமையில் உள்ள கல்லூரிகளில் சோதனைச் சாலையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அவ்வாறு பயன்படுத்திக் கொள்ளாமல் அந்த சோதனைகளுக்கான மார்க்குகளை மட்டும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எழுதிவிடுவதாகச் சொல்லப்படுகின்றதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அது பற்றி தனிக்கேள்வி கேட்டால் விவரமாகப் பதில் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ப்ளஸ் 2 வகுப்பில் படிக்கின்ற மாணவர்களின் பாடத் திட்டங்கள் அதிகமாக இருப்பதாலும், ஆசிரியர்கள் பற்றாக்குறையினாலும் மாணவர்கள் தேர்வு பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து என்று சொல்லப்படுகின்றதே, ஆகவே ஆசிரியர்களைப் போதுமான அளவில் நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் ஆராய்ச்சி நிலையம்.

* வினா எண் 68 **திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் உயர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இல்லை எனில், அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

அ. தமிழ் உயர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

ஆ. இத்தகைய நிலையம் தேவையெனத் தற்போ அரசு கருதவில்லை.

1981 ஜனவரி 28]

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு [illegible] தலைவரவர்களே, அட்வாக்ஸ் [illegible] தமிழ் என்ற தனி உயர் ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க வேண்டியது அவசியம். அமைக்கப்பட்டிருக்கின்றன. கன்னட மொழிக்கு ஒரு உயர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. [illegible] மாநிலமான கேரளத்திலே [illegible] ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவை மத்திய அரசும் யூ.ஜி.சியும் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. ஆகவே தமிழ் மொழிக்கும் இது போன்று ஒரு ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு பரிந்துரைக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மூலக்கேள்வி அந்த நிலையத்தை அரசு ஆரம்பிக்குமா என்பது பற்றித்தான். ஆனால் துணைக்கேள்விகள் கூறுகின்ற விவரங்களைப் பார்க்கின்றபோது அவை பல்கலைக் கழகங்களினுடைய நடவடிக்கைகளாக தெரிகின்றது. ஆகவே பல்கலைக் கழகங்கள் இது பற்றிய முயற்சியினை எடுத்தால் அரசும் நிச்சயமாக ஆதரிக்கும்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, ஏற்கெனவே மதுரை பல்கலைக் கழகத்திலே இருந்து இதுபற்றிய வேண்டுகோள் குறிப்பு யு.ஜி.சி-க்கு அனுப்பப்பட்டு 3 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே அரசு தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இதைப் பெற்றுத் தருவதற்கு உதவுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்கலைக் கழகங்கள் எடுக்கின்ற இதுபோன்ற நல்ல முயற்சிகளுக்கு அரசு தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம் இல்லை என்று அமைச்சரவர்கள் தனது பதிலில் தெரிவித்தார்கள். இந்தி மொழியை நாடு முழுவதும் பரப்புவதற்கு மத்திய அரசு பணம் செலவிடுகின்றதே, அது போன்று தமிழ் மொழியைப் பரப்புவதற்கும் மத்திய அரசு ஏதாவது செலவிட்டு இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 28

[முற்பகல் 9. 30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆராய்ச்சிக்காக தமிழ் பல்கலைக் கழகம் மூலமாக பல செலவுகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. சென்னை பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் மூலமாக ஒவ்வொரு துறையிலும் தமிழ் ஆராய்ச்சிக்காகப் பணம் வழங்கப்பட்டு காரியங்கள் நடைபெற்று வருகின்றன. நவீன கல்வித் துறையிலே ஒவ்வொரு துறையிலும் புத்தக மாதிரி தயாரிக்க என்று சில பணிகள் நடைபெறுகின்றன. அதைப்போலவே உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம் ஒன்று, 2வது உலகத் தமிழ் மாநாட்டிற்காக நுவக்கப்பட்டது. மாநாடு செம்மையாக நடைபெற்று முடிந்த பிறகும், அதுவும் செம்மையாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆக இப்பொழுதே தமிழ் ஆராய்ச்சியில் இப்படி நிறையக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் உயர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது கூறினார்கள். 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கொள்கை கொண்டுள்ள இந்த அரசு, இத் திட்டத்தை திரும்பவும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு திட்டம் இல்லை என்றுதான் சொல்லுகிறேனே தவிர, திட்டம் இருந்து வரவில்லை என்பதோ அல்லது அது கைவிடப்பட்டதாகவோ நிலைமை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் கேட்டது, பல்கலைக் கழகம் ஏற்று நடத்த வேண்டிய ஒரு பிரச்னை. அந்த அடிப்படையில்தான் கேள்வி வந்திருக்கிறது. அதற்குத் தான் நான் திட்டம் இல்லை என்று பதில் கூறினேனே தவிர, 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கொள்கையின்படி இப்பொழுதே எல்லாத் துறைகளிலும் தமிழைப் பயன்படுத்த தீவிரமாகத்தான் நடவடிக்கையை அரசு எடுத்து கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில 5வது பேராவில் 'மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்றினை ஏற்படுத்துவது எனவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த நிறுவனத்தில் தமிழ் மொழி வல்லுநர்கள் பணிபுரிவர். இவர்கள் தமிழ் ஆராய்ச்சிப் பணியினைத் தீவிரமாக மேற்கொள்வார்கள், என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் தமிழ் உயர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை என்று கேள்விக்குப் பதில் அளித்திருக்கிறீர்கள். ஏன் இந்த முரண்பாடு என்று கேட்டு, அதை விளக்கக் கோருகிறேன்.

1981 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் முரண்பாடு எதுவும் இல்லை. பல்கலைக் கழகத்திலே அட்வான்ஸ் ரிசர்ச் சென்டர் என்று ஒவ்வொரு துறையிலும் ஆராய்ச்சி நிறுவனம் ஆரம்பிக்கிறார்கள். அதுபோன்று பாட்டனி, கணக்கு ஆகிய பிரிவுகளுக்குக் கூட, இருக்கிறது. அதற்கு யூ.ஜி.சி. பண உதவி செய்கிறது. இங்கே கூட கணக்கிலே திரு. ராமானுஜம் அவர்கள் பெயரிலே அப்படி ஒரு சென்டர் இருக்கிறது. அதைப்போல தமிழிலும் ஒன்று கொண்டு வரவேண்டும் என்பதுபற்றித்தான் திரு. நெடுமாறன் அவர்களின் கேள்வியே தவிர உலகத் தமிழ்ச் சங்கம் தேவையா இல்லையா என்பது பற்றி அல்ல. அவைல் அதை எப்படி ஏற்படுத்த வேண்டும் என்பதுபற்றியெல்லாம் நடைமுறையில் ஆராய்ந்து பார்த்துத்தான் பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. தமிழ் மொழி உலக நாடுகள் பலவற்றில் இருக்கிறது. சிலோன் போன்ற நாடுகளில் ஆட்சி மொழியாகக் கூட தமிழ் தான் இருக்கிறது. ஆகவே நாம் ஏற்படுத்துவதை அவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆகவே உலகம் முழுவதும் பரவியிருக்கும் தமிழர்களின் கலாச்சாரம், பண்பாடு, இலக்கியம் போன்ற பல்வேறு விஷயங்களைப் பற்றி ஆராய்ந்து, உலகத் தமிழர்களிடையே ஒரு அமைப்பு தேவை என்ற வகையில்தான் உலகத் தமிழ்ச்சங்கம் என்று ஒன்று தேவை என்று கருதி, அதைப் பற்றி வெளியிடப்பட்டிருக்கிறது ஆளுநர் உரையில்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டிற்கு நானும் சென்றிருந்தேன். அது மிகச் சிறப்பாக நடைபெற்றது. அங்கு மாண்புமிகு திரு. ராஜாராம் அவர்களின் சிறப்பான பேச்சைக் கேட்டேன். அவர்கள் விஞ்ஞான வளர்ச்சிக்குத் தக்கவாறு தமிழ் மொழி எப்படி வளர்ந்து கொண்டு வருகிறது என்பது பற்றிப் பேசினார்கள். அப்படி நல்ல கருத்துக்களைக் கொண்டிருக்கிற இந்த அமைச்சரவை, பல்கலைக் கழகம்தான் அந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க வேண்டும் என்று எண்ணாமல், அரசு சார்பாகவே செலவு செய்து, ஆராய்ச்சித் துறையை ஏற்படுத்தினால்—இன்றைக்கு உலகத்தில் பல்வேறு நாடுகளில் உள்ள பல்வேறு மொழிகள் அவ்வாறு ஆராய்ச்சி செய்கின்றன. உடற்கூறு போன்ற பல துறைகளில் ஆராய்கின்றன. எல்லாத் துறைகளிலும் தத்தம் மொழியிலேயே படிக்கவும், பழகவும் ஆரம்பிக்கின்றன. அப்படி இருக்கும்போது மிகத் தொன்மையான மொழியாகிய தமிழ் மொழிக்கு அப்படிச் செலவு செய்யத் தேவையிருக்குமானால் அதைச் செய்ய இந்த அரசு முற்படவேண்டும் என்று கேட்டு அதற்கு அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே பதில் சொல்கிறபோதே சொன்னேன். உலகத் தமிழ்ச் சங்கம் தேவையில்லை என்று சொன்னதாகக் கருதி கேள்விகள் கேட்கப்படுகிறது. தேவை

[1981 ஜனவரி 28

என்று கருதித்தான் அமைத்திருக்கிறோம். அதற்கு அடிப்படையாக பல்வேறு காரியங்கள் ஆராய வேண்டியிருக்கும். உடற்கூறு ஆராய்ச்சி பற்றிக்கூடச் சொன்னார்கள். அவைகள் எல்லாம் நாம் இப்பொழுது ஆராய்ந்து வருகிறோம். அப்படி எல்லாத் துறைகளிலும் தமிழ் பரப்பப்பட வேண்டும் என்று சொல்வதும், அதன் மூலம் அறிவு வளர வேண்டும் என்ற கருத்தினால்தான். கல்வித்துறை நிபுணர்களுடைய கருத்தை வைத்துக் கொண்டுதான் எவ்வளவோ முயற்சிகள் செய்து வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லலாம்.

ஆனால் இங்கே கேட்கப்பட்ட மூலக் கேள்வி பல்கலைக் கழகங்களில் மூலம் யூ.ஜி.சி. உதவியோடு தமிழ் ஆராய்ச்சி நிலையம் அமைப்பது பற்றி. அதற்கு பதில் அளித்தாகிவிட்டது. தவிர தமிழை எல்லாத் துறையிலும் கொண்டுவரத்தான் அரசும் பாடுபடுகிறது. தமிழ் மொழியை பயிற்று மொழியாக எல்லாக் கல்வித் திட்டத்திலும் கொண்டுவர ஆராய்ச்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. பட்டப்படிப்புக்கு முதல் ஆண்டு படிப்பு வரை தமிழிலியே கற்பிப்பதற்கான நிலையில் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் தமிழிலேயே கொண்டு வருவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டுதான் இருக்கிறோம். இப்பொழுதும் மாணவர்கள் நிறையப் பேர் படித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். தமிழ் பல்கலைக் கழகம் கொண்டு வந்து எல்லாத்துறையிலும் தமிழைப் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றியும் தனியாகக் கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'வளர்மதி' சிறப்பங்காடித் தொழிலாளர்கள்

*வினா எண்.69—திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) கோவை மாவட்டம் திருப்பூர் தொகுதியில் உள்ள வளர்மதி கூட்டுறவு சிறப்பு அங்காடியிலுள்ள அலுவலர்கள் சம்பள உயர்வு கேட்டு வேலைநிறுத்தம் செய்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், பொதுமக்களுக்கு அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் முதலிய அத்தியாவசியப்பண்டங்கள் வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) கோவை மாவட்டம் திருப்பூர் தொகுதியில் உள்ள வளர்மதி கூட்டுறவு சிறப்பு அங்காடியில் 23-6-1980 முதல் 9-9-1980 வரை வேலை நிறுத்தம் நடந்தது.

(ஆ) வேலைநிறுத்தக் காலத்தில் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் திருப்பூர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம் விநியோகம் செய்ய மாற்று ஏற்பாடு செய்யப்பட்டது.

[1981 ஜனவரி 28]

திரு. ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, அங்கே வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அவர்கள் கேட்ட ஊதிய உயர்வு எந்தளவிற்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு சி.பொன்னையன்: தலைவர் அவர்களே, இந்த அங்காடி தொடர்ந்து 1978ல் இருந்து நட்ட நிலையில் இயங்கி வந்த காரணத்தினால் 1978-79ல் ரூ. 4.92 லட்சம் நட்டத்திலும் அதை அடுத்து ரூ. 5.98 லட்சம் நட்டத்திலும் இயங்கிய காரணத்தினால் பணியாளர்களுக்கு அவர்கள் கேட்ட ஊதிய உயர்வைத் தரமுடியவில்லை. இருந்தபோதிலும் ஒரு சமரச நடவடிக்கை நடந்து ஒப்பந்தமும் ஏற்பட்டு 9-9-1980ல் இருந்து வேலைநிறுத்தத்தை அவர்கள் நிறுத்தி இருக்கிறார்கள். ஒரு பாத ஊதியத்தை முன்பணமாக தற்போது கொடுப்பது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 'வளர்மதி' கூட்டுறவு சிறப்பங்காடி மட்டுமல்லாது தமிழ்நாட்டில் இதுபோல பல சிறப்பங்காடிகளில் ஊதிய உயர்வு தரவேண்டும் என்ற கோரிக்கையும் கூட்டுறவு சேவா சங்கம் போன்றவற்றில் கூட அந்தக் கோரிக்கை இருப்பதால் இதுகுறித்து அரசு தீவிர ஆலோசனை செய்து வருகிறது.

திரு. ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றுகிற ஊழியர்கள் நாடு தழுவிய முறையில் தங்களுடைய ஊதிய உயர்வு கோரிக்கையையும் பஞ்சப்படி உயர்வு வேண்டுமென்ற கோரிக்கையையும் அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்களா? அதேபோல் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளை அமைப்புகளாகப் பணியாற்றி வருகிற நிலவள வங்கிகளின் பல்வேறு அமைப்புகள் அதேபோல் கூட்டுறவுச் சங்கங்கள் சார்பாக பணியாற்றுகிற ஊழியர்களும் தங்களுக்கு ஊதிய உயர்வு, பஞ்சப்படி அவசியம் தேவை என்ற கோரிக்கையை அரசின் முன்னால் எழுப்பியுள்ளார்களா? அப்படி எழுப்பியிருக்கிறார்கள் என்றால் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? நடவடிக்கை எடுக்காமலிருந்தால் அரசாங்கம் இனிமேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நுகர்வோர் கூட்டுறவு அங்காடிகளைப் பொறுத்தவரையிலும் ஊதியம் ஒரு சமநிலையில் இல்லாமல் நல்ல வருமானம் இருக்கிற கூட்டுறவு அங்காடிகளில் அதிகச் சம்பளமும், வருமானம் குறைந்திருக்கிற கூட்டுறவு அங்காடிகளில் குறைந்த சம்பளமும் கொடுக்க வேண்டிய ஒரு நிலை தற்போதைய நடைமுறை விதிகளின் அடிப்படையில் இருந்து வருகிறது. அதற்குக் காரணம் ஒவ்வொரு கூட்டுறவு நுகர்வோர் அங்காடியும் தனித்த ஒரு அட்டாணமஸ்பாடியாக

[மாண்புமிகு திரு. சி பொன்னையன்] [1981 ஜனவரி 28

இயங்குகிற காரணத்தால் அதன் வருவாய்க்கு உட்பட்டுத்தான் ஊதியத்தை அவர்கள் நிர்ணயிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நுகர்வோர் அங்காடிகள் மட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், எல்.டி, ப்ராஞ்ச், சென்ட்ரல் பாங்க் அண்ட் இட்ஸ் ப்ராஞ்ச் போன்ற பல்வேறு பகுதிகளில் பணியாற்றுகிற பல்லாயிரக்கணக்கான உழியர்கள் கூட கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக அவர்களுக்கு டி.ஏ. போன்ற உயர்வுகள் மற்ற பிரிவினருக்குத் தந்துவிட்டு இவர்களுக்குத் தரவில்லை என்ற கோரிக்கையை எழுப்பியும் அரசுக்கு கோரிக்கையை பல கட்டங்களிலிருந்து அனுப்பியிருக்கிறார்கள். டி.ஏ. போன்ற உயர்வு கூட அத்தகைய பகுதிகளில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு தரமுடியாதிருப்பதற்குக் காரணம் விவசாயச் சங்கங்கள் விவசாயிகளின் போராட்டத்தின் காரணமாக கூட்டுறவுச் சங்கங்கள் கொடுத்த கடன்களைக்கூட வசூல் செய்யமுடியாத நிலையில், அந்தப் பணியாளர்களுக்குச் சம்பளம் கூட சில இடங்களில் கொடுக்க முடியாத ஒரு அவலச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையை மாற்றி கூட்டுறவுக் கடனை வாங்கியிருக்கிற பணக்கார விவசாயிகள் நான் ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருப்பதைப் போல் கிட்டத்தட்ட 60 சதவிகிதம் கூட்டுறவுக் கடன் வாங்கியிருக்கிற பணக்கார விவசாயிகள் வாங்கிய கடன்களைக் குறித்த காலத்தில் திருப்பித் தருவார்களானால் பணியாளர்களுக்குப் போதிய ஊதியம் தரமுடியும், தக்க காலத்தில் தர முடியும் மேற்கொண்டு ஊதிய உயர்வு அவர்களுக்குத் தருவது, பற்றியும் பரிசீலிக்கமுடியும் என்ற அடிப்படையில் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுக்க அரசு பரிசீலித்து வருகிறது. அந்நிலையில் நல்லமுறையில் இந்தப் பிரச்னை தீரும் என்று அரசாங்கம் நம்புகிறது.

[முற்பகல் 9—40]

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, திருப்பூரில் நடந்த வேலை நிறுத்தம் சம்பள உயர்வு அவர்களுக்குப் போதாது என்று கேட்டு வந்த வேலை நிறுத்தம் அல்ல. ஏற்கனவே திருப்பூரில் இருக்கும்படியான அந்த ஸ்தாபனத்தினுடைய உத்தியோகஸ்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் மத்தியில் தொழிலாளர் நல இலாகா அதிகாரிகள் முன்னிலையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அவர்கள் அமுலாக்காமல் மீறினார்கள். அதன்படி அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. அந்தக் காரியத்தைச் செய்வதற்கு குறுக்கே நின்றவர்கள் மேலே இருக்கும் ரிஜிஸ்தாரிருந்து வருகிறது. ஆகவே, தொழிலாளர் நல இலாகா முன் செய்யப்பட்ட ஒப்பந்தம் மதிக்கப்படுமா, நிறைவேற்றப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

1981 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு பேச்சுவார்த்தை நடந்து, அதிலே சில மாற்றங்கள் ஏற்பட்டு, 8-9-1980லே மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை நடந்தது. மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் ஏற்கனவே நேரில் என்னிடம் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்களும் என்னிடம் நேரில் கூறியிருக்கிறார்கள். இதுகுறித்து நாங்கள் சொன்னதற்கு, அதன் அடிப்படையில் இறுதி பேச்சுவார்த்தை நடக்க இருக்கிறது. தேதி இன்னும் நிர்ணயம் செய்யப்படாமல், அடுத்த பேச்சுவார்த்தை நடக்க இருக்கிறது. அப்போது அது முடிவு செய்யப்படும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் சிறுவிசைத்தறியில் ஊதிய உயர்வு கோரிக்கை வந்திருக்கிறது. இதுபற்றி அமைச்சர் வேலைநிறுத்தம் ஏற்பட்டது. இதேமாதிரி பல்வேறு கூட்டுறவு அங்காடியிலே, கூட்டுறவு ஸ்தாபன ஊழியர்களின் ஊதிய உயர்வு பிரச்னை இருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே பணிபுரியக் கூடிய ஊழியர்களுக்கு அரசு குறைந்தபட்சம் 400 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற கோட்பாட்டை அமுல் செய்ய.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது போதுப்படையான கேள்வி. திரு. தாமரைக்கனி.

திரு. இரா. கருப்பையா: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பொதுப்படையான கேள்வி. 5 கேள்விகள்தான் முடிந்திருக்கிறது. 10 மணிக்குப் பிறகு மீதியிருக்கும் கேள்விகளுக்கு பதில் அச்சடித்துத் தரலாம் என்ற முடிவுக்கு வாருங்கள்.

திரு. ரா. உமாநாத்: விஷயம் சொல்வதைக் கேளுங்கள், விளக்கம் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருப்பூரிலே இருந்து எல்லாக் கூட்டுறவுகள் பற்றிப் பேசுவதும், எல்லோருக்கும் 400 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று பேசிக் கொண்டே போனால் எங்கு போய் முடியும்?

திரு. ரா. உமாநாத்: கூடாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அமைச்சர் ரிப்ளை பண்ணுகிறபோது, அவர் ப்ராடாகப் (Broad) போனால் arising out of the supplementary of the Minister we are entitled to ask a broad question; a particular question நாங்களும் சப்ளிமெண்டரீஸ் கேட்க வேண்டி வருகிறது.

[1981 ஜனவரி 28

திரு. உ. சுப்பிரமணியன்: அங்கு மூன்று ஆண்டுகளில் ஏறக்குறைய 80 கோடி ரூபாய் நான்கு சதவிகித வட்டியில் கடன் வழங்க வேண்டுமென்ற திட்டம் வகுக்கப்பட்டது. இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னது அந்த அளவுக்கு இல்லை. அந்த மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டம். அதிகமான அளவில் லீட் பாங்கு மூலம் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் கடன் வழங்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தொழிற்துறையைப் பொறுத்தவரை இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கு போன்றவை தாராளமாக கடன் உதவி தர முன்வருகின்றன. அதில் குறை இருப்பதாகத் தெரியவில்லை. விவசாயத்திற்கு அதிகப்படியாகக் கடன் உதவி தர வேண்டுமென்ற கோரிக்கை எழும்போது பெரிய அளவுக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் தருவதில்லை. தொழிலுக்கு கடன் தருவது போல் விவசாயத்திற்குத் தராத நிலையைக் கடைப்பிடிக்கிறது. இதுபற்றி மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துக் கூறியிருக்கிறது. கிராம விவசாய முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றைக் கருதி கூட்டுறவு வங்கிகளின் மூலம் அதிகப்படியாக கடன் தர வழிவகை செய்யப்படுகிறது. டெவலப்மெண்ட் ஆக்டிவிடிசுக்கு எல். டி. பாங்கு மூலம் அதிகப்படியான கடனைத்தர செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன்: அந்தப் பகுதியில் தொடர்ந்தாற் போல் மூன்று ஆண்டுகள் வறட்சியாக இருந்த காரணத்தால் விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டமுடியவில்லை. விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்ற நிலையில் பார்க்கும்போது வங்கிகள் கடன் கொடுக்க மறுப்பது நியாயம் இல்லையென்று தெரிகிறது. மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு மீண்டும் எழுதவேண்டிய அவசியம் என்ன?

[முற்பகல்-9.50]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற திட்டம் வேறு, நான் சொன்ன பதிலின் கருத்து வேறு. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் தொழிற் துறைக்கும் வியாபாரத் துறைக்கும் கடன் கொடுப்பது போன்று விவசாயத் துறைக்கு கடன் கொடுக்க முன்வருவதில்லை என்பதைச் சுட்டிக் காட்டினேன். அதிகப்படியாக லீட் வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்குக் கடன் உதவிகள் செய்யவேண்டுமென்பது குறித்து மைய அரசு மூலமா நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வலியுறுத்தப்படும் என்பதைத்தான் நான் சொன்னேன்.

1981 ஜனவரி 28]

தலைஞாயிறு பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கு திட்டம்

* வினா எண். 77 திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் தலைஞாயிறு பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் வடிகால் வாரியத்தின் மூலம் துவங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரங்கள் தேவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: ஏற்கனவே கோரிக்கை இருந்தது. அந்தப் பேரூராட்சியிலே நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தினால் திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருப்பது 'தலைஞாயிறு, பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்' பற்றியது. தமிழக அரசு கிராமங்கள், ஊராட்சிகள், ஆகியவற்றுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க முன்னுரிமை கொடுக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம். பாராட்டுதலோ வேண்டுகோளோ கூடாது.

திரு. பொ. உத்திராபதி: வருமானம் இல்லாத பேரூராட்சிகளுக்கு குடிநீர் திட்டத்தை மறுப்பது சரியல்ல....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பொதுப்படையான கேள்வி.

[1981 ஜனவரி 28

மாயவரம் நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்

* வினா எண்-73 திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயவரம் நகரத்தில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. என். விஜயபாலன் : மாயூரம் நகரத்தில், பழங்காவிரி என்ற வாய்க்கால் தூர்ந்துபோயிருக்கிறது. அதை ஆழப்படுத்தி பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைக்கலாம். அது பாசனத்திற்குப் பயன்படாது. ஆகவே மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்றுமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : அந்த நகராட்சி தன் சொந்தச் செலவிலேயே அந்தத் திட்டத்தை ஏற்க முன்வந்தால் குடிநீர் வடிகால் வாரியம் சாக்கடைத் திட்டத்தை அமைக்க இயலும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் மயிலாடுதுறை நகரத்திலே பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் ஆய்வில் இல்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார். சென்ற தடவை 2,3 தடவைகளுக்கு மேலாக நான் இதே கேள்வியை இதே அமைச்சரிடத்திலே கேட்டபோது அதற்கு மதிப்பீட்டுத்தொகை போடப்பட்டு (குறிப்பேட்டிலே இருக்கிறது) ஆய்வில் உள்ளது என்றும், நிதி ஆதாரம் இடம் தருகிறபோது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எப்போது நிதி ஆதாரம் இடம் தர இருக்கிறது என்பதை அறிய விரும்பலாமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : நிதி ஆதாரம் எப்போது இடம் தரும் என்பதை மாயூரம் நகராட்சிதான் சொல்ல வேண்டும்.

1981 ஜனவரி 28]

விருதுநகருக்கு குடிநீர் வழங்கல்.

* வினா எண்-74 திரு.என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா-

விருதுநகரின் குடிதண்ணீர் தட்டுப்பாட்டினைப் போக்க அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : விருதுநகர் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. ஆய்வு வேலை முடிந்த பின் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் பெற்றவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் வணிகத் துறையிலும், தொழில் துறையிலும் வளர்ந்து வருகிற பெரிய நகரமாகும். ஏழை பங்காளனாகவும், கல்விக் கண் கொடுத்த கருணைத் தலைவனாகவும், புனிதனாகவும், புண்ணியனாகவும், புருஷோத்தமனாகவும் இருந்த பெருந்தலைவர் வாழ்ந்த பெரும் நகரமாகும் அது. அங்கே நீண்டநாட்களாகவே குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினாலும், அரசாங்கம் முனைந்து அந்தத் திட்டத்தை விரைவிலே செயல்படுத்த நடவடிக்கைகள் இனியாவது எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அங்கே குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பது உண்மை. விருதுநகர் நகராட்சியின் வேண்டுகோளுக்கிணங்க, வைகை நதியை ஆதாரமாகக்கொண்டு குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு ஆய்வு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு குடிநீர்வடிகால் வாரியத்தால் அங்கீகரிக்கப்படும் நிலையில் உள்ளது. ஆய்வு மதிப்பீடு ஒப்புதல் பெற்றவுடன் விரிவான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, உத்தேச மதிப்பீடுகள் தயாரித்து, அரசுக்கு சமர்ப்பிக்கப்படும். அரசு ஒப்புதலுக்குப் பின் திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் அரசு மருத்துவமனையில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் பற்றியது. மருத்துவமனை பற்றி என்றால் அது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சம்பந்தப்பட்டது.

திரு. வி. பாலகிருஷ்ணன்: அந்த மருத்துவ விடுதியிலும் குடிதண்ணீர் இல்லை; விரைவில் அங்கு குடிதண்ணீர் சப்ளை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 28

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நகரக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படும் பொழுது இதுவும் கவனிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நகரத்திற்கு தற்போது வழங்கப்படும் தண்ணீரின் அளவு எவ்வளவு? இந்த அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கும் மதிப்பீடு எவ்வளவு வரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது? இப்பொழுது போடும் திட்டத்தின் மூலம் தண்ணீர் எப்பாழுது கிடைக்கும்? எந்த ஆண்டு வரவிருக்கிறது? நகரத்தின் வளர்ச்சியையும் கணக்கில் கொண்டு, கொடுக்கப்படும் தண்ணீர் எவ்வளவு ஆண்டுகளுக்கு அந்த நகர மக்களுக்கு போதுமானதாக இருக்கும் என்ற விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் ஆய்வு முடிந்தபிறகு தெரியும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆய்வு முடிந்த பிறகு தெரியும் என்று அமைச்சரவர்கள் சொல்லிவிட்டதற்குப் பிறகு என்ன செய்ய முடியும்? ஆய்வு எப்பொழுது முடியும் என்று ஒற்றையா இரட்டையா பார்க்க முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, நீண்ட நாட்களாக பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொல்லும் பொழுது, அரசாங்கம் சொல்லலாமே, ஆய்வு எப்பொழுது முடியும் என்று, 3 மாதம் அல்லது 6 மாதம், அல்லது ஒரு வருடம் என்று சொல்லட்டும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் கிடைத்து 33 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட பெருந்தலைவர் காமராஜ் போன்றவர்கள் பிறந்த ஊரிலே குடிதண்ணீர் இல்லை என்றால், இதற்காக விரைவில் ஒரு திட்டத்தைத் தீட்ட என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக முனைந்து ஆய்வு விரைவில் செய்யப்படுகிறது.

லட்டாறு அணைக்கட்டுத் திட்டம்

* வினா எண் 75—**திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

1981, ஜனவரி 28]

(அ) கடலாடி தொகுதி மலட்டாறு அணைக்கட்டு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) கடலாடி தொகுதி, மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே' பரிசீலனையில் உள்ளது என்று இந்த மாமன்றத்தில் கடந்த ஏழெட்டு ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது. மலட்டாறு அணைத் திட்டம், நீர்த்தேக்கமாக ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டது. ஆனால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆறே மலட்டாறு. (சிரிப்பு)

திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்பு மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் என்று திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் அங்குள்ள ஒருசிலரின் சுயநலத்திற்காக நீர்த்தேக்கத் திட்டம் அணைத்திட்டமாகப், புதிதாக திட்டமிடப்படுவதாகத் தகவல் தெரிகிறது. ஆகவே, ஒரு ஆண்டில் ஏற்படும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தினால் இரண்டாண்டுகளுக்கு நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்த இயலும். அந்த வகையில் நிலத்தடி நீரையும் அபிவிருத்தி செய்யும் வகையில் இந்தத் திட்டத்தை நீர்த்தேக்கத் திட்டமாகத் திட்டமிடுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதோடு, வரும் நிதி ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள உடனடியாக அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல முதல் கட்டமாக இத்திட்டத்தை ஒரு நீர்த்தேக்கத் திட்டமாகத்தான் நிறைவேற்ற வேண்டுமென்று அரசு பரிசீலனை செய்திருக்கிறது. ஆனால் நீரியல் விவரப்படி 70 சதவிகிதம் நம்பகமாகத் தண்ணீர் கிடைக்காத காரணத்தால் அதை அணைக்கட்டுத் திட்டமாக மாற்றலாம் என்று பிறகு பரிசீலனை செய்திருக்கிறார்கள். வறண்ட பகுதி, பிற்பட்ட மாவட்டம் என்ற அடிப்படையில் 50 சதவிகிதமாவது நம்பகமாகத் தண்ணீர் கிடைத்தால் கூடப் போதும், நீர்த்தேக்கத் திட்டமாக மாற்றலாம் என்று திரும்ப ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சட்டமன்ற உறுப்பினராக வந்ததற்குப் பிறகு அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க இந்தத் திட்டத்தைத் திரும்பவும் மறு ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம். அந்த விவரங்கள் கிடைத்தவுடன் நிச்சயமாகத் திட்டத்தை நிறைவேற்ற அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

[1981, ஜனவரி 28

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, 70 சதவீதம், 50 சதவீதம் என்ற விதிமுறைகளைக் கடலாடி போன்ற வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அமுல்படுத்துவது நியாயம் ஆகாது. ஆகவே, நிதிமுறைகளைத் தளர்த்தி, நீர்த் தேக்கத்தைக் கட்டி, நீரைத் தேக்குவது தான் அந்தப் பகுதிக்குச் செய்கிற உண்மையான சேவையாகும். அந்த வகையில் செய்வதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, அப்பீடிப்பட்ட வறண்ட, பிற்பட்ட பகுதிகளுக்குத் திட்டங்களை நிறைவேற்றும் போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போல், அது பொருளாதார ரீதியாக, கட்டுப்படியாகக் கூடிய திட்டமா என்பதையெல்லாம் பார்ப்பதில்லை. இருந்தாலும், 50 சதவீதம் கூடத் தண்ணீரில்லாத ஒரு பெரிய நீர்த் தேக்கத்தைக் கட்டினால், அங்கே தண்ணீருக்குப் பதிலாக மணலைத் தான் பார்க்க முடியும். எனவே, தண்ணீரின் அளவை பற்றியும் ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. 50 சதவீதம் தண்ணீர் கிடைக்காவிட்டாலும், 40 சதவீதமாவது கிடைத்தாலே பரவாயில்லை என்று நாம் பரிசீலனை செய்யலாம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன், அவர்கள் கவலைப்படுவதைப் போல், நீர் வரவே இல்லையென்று சொல்ல முடியாது. ஆண்டு முழுவதும் பெய்கிற பருவ மழையை வைத்து ஓரளவு நீரைத் தேக்கி வைக்க முடியும் என்றுதான் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இருந்தாலும், அதிகாரப்பூர்வமான ஆய்வுகள் நடத்திய பிறகு, அந்தத் திட்டத்தை எடுத்து நடத்துவதை அரசு கவனத்திலே கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. தனுக்கோடித் தேவர் : தலைவர் அவர்களே, மலட்டாறு திட்டம் நீண்ட நெடுங்காலமாக ஆய்விலே இருக்கிறது என்று இங்கே கூறப்பட்டு வருகின்றது. அதைப் பரிசீலனை செய்து, போன ஆண்டு பெய்த மழையினால் எவ்வளவு வெள்ளம் போயிற்று என்பது அரசுக்குத் தெரியும். ஆகவே, அந்தத் திட்டத்தை உடனே நிறைவேற்ற எந்த முறையைக் கையாள வேண்டுமோ, அந்த முறையைக் கையாண்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அதை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

1981 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இந்த மலட்டாறு திட்டம் கடந்த 3 ஆண்டுகளாகத்தான் தீவிரமாகத் திரும்பவும் நீர்த்தேக்கத் திட்டமாக மாற்றப்பட வேண்டுமென்ற கருத்தை அரசு எடுத்து வந்திருக்கிறது. அதற்கு முன் அதை நீர்த் தேக்கத் திட்டமாக அமைக்காமல் ஒரு சிறிய அணையைக் கட்டி, மலட்டாற்றிலே கிடைக்கக்கூடிய உபரி நீரை, கமுதி நிலங்களுக்கு மட்டும் கொடுத்துவிட்டால் போதும் என்று அன்றைய சூழ்நிலையிலே தவறான முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதை நிறைவேற்ற வேண்டாம் என்று அரசு அதிகாரிகளுக்கு விஷயத்தைத் தெரிவித்து, இப்பொழுது முறையாகக் காரியங்கள் நடக்கின்றன. இனிமேல் காலதாமதம் ஏற்படாது. தாமதம் தவிர்க்கப்படும். நீர்த்தேக்கத் திட்டம் நிச்சயமாக வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆறின் பெயர் மலட்டாறு என்று இருந்தாலும், நீரோட்டம் உள்ள ஆறு தான் என்று மந்திரி அவர்கள் சொல்லிவிட்டார்கள். எனவே, அப்பேர்ப்பட்ட ஆற்று நீரைக் கொண்டு, இராமநாதபுரம் முதுகுளத்தூர் தாலுகாவை மேம்படுத்த அந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டு திட்டத்தை வெகு வேகமாகச் செய்து முடிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பதில்களிலும், அரசு எவ்வளவு அக்கறையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்து இருக்கிறேன். நிச்சயமாக அரசு கால தாமதத்தைத் தவிர்த்து, விரைவாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. மி. வின்செண்ட் : தலைவர் அவர்களே, மலட்டாறு அணைக்கட்டு என்ற பெயர் உள்ளது. அணைக்கட்டு என்ற குழந்தை பெற மலட்டாறு என்ற பெயரை அரசு மாற்றுமா ?

மாண்புமிகு திரு. கே இராஜாமுகமது : தலைவர் அவர்களே, பெயரிலே கோளாறு இருப்பதாகத் தெரியவில்லை. பகுதிதான் கோளாறான பகுதியாக இருக்கிறது. எனவே, அதை நல்ல சிகிச்சையின் மூலமாக மாற்ற அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

ஆர். எஸ். மங்கலம் கண்மாய் கொள்ளளவு

* **வினா எண் 76. திரு. செ. சிவசாமி :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

[1981 ஜனவரி 28

முகவை மாவட்டம் தேவக்கோட்டை டிவிஷன் ஆர். எஸ். மங்கலம் கண்மாயின் தண்ணீர் கொள் அளவை அதிகரிக்கவும் மடை கலுங்குகளை ரிப்பேர் செய்யவும் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : ஆர். எஸ். மங்கலம் கண்மாய் மேம்பாட்டுத் திட்டம் ரூ. 32.58 லட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு கண்மாயின் கொள்ளளவு அதிகப்படுத்தப் பட்டது. கண்மாயின் எல்லா மதகுகளும் நல்ல நிலையில் உள்ளன.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 32 இலட்சம் செலவழித்து அந்த ஆர். எஸ். மங்கலம் கண் மாய் மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வந்திருப்பதாகச் சொல் கிறார்கள். அந்தச் செலவுக்குப் பின்னாடி, 6 அடியாக இருந்த குளம் 5 அடியாக குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, மாநிலத்திலே மிகப் பெரிய கண்மாயாக, 12,142 ஏக்கர் பாசனம் செய்யக் கூடிய மிகப் பெரிய கண்மாயாக உள்ளது. அந்தக் கண்மாயினுடைய கொள்ளளவு 6 அடியிலி ருந்து 5 அடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதை மேலும் 6 அடியாக உயர்த்திக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, 6 அடியை 5 அடியாகக் குறைப்பதற்காக அடிப்படைக் காரணங் கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும். 1961 ஆம் ஆண்டின் நீதிமன்றத் தீர்ப்புப்படி இந்தக் கண்மாயினுடைய முழு நீர் மட்டம் அந்த அளவுக்கு மேல் போகக் கூடாது என்று தீர்ப்பு இருக்கிறது. அதனால் நீர்மட்டத்தின் அளவை உயரத் தினுடைய அளவை நாம் அதிகப்படுத்தாமல் கொள்ளளவை அதிகப்படுத்துவதற்கு இந்தப் பணத்தை செலவழித்திருக்கிறோம். ஒட்டு மொத்தமாக எந்த அளவுக்கு அங்கே நீரைத் தேக்கி வைக்கப்படவேண்டுமோ அந்த அளவுக்கு தேக்கி வைப்பதற் கான நடவடிக்கைகளில் நாங்கள் வெற்றி பெற்றிருக் கிறோம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நீண்ட காலமாக பரம்பரை பரம்பரையாக அந்தக் கண்மாய் உற்பத்தியான காலத்திலே இருந்து 6 அடியாக இருந்தது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் அது 5 அடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான காரணத்தை மீண்டும் பரிசீலனை செய்து அதை 6 அடியாக உயர்த்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

1981 ஜனவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே கேள்வியை இரண்டு முறை கேட்பதில் இருந்து அதனுடைய முக்கியத்துவம் தெரிகின்றது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இது நீதி மன்றத் தீர்ப்பின்படி அந்த உயரம் குறைக்கப்பட்டிருப் பதாக நமக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அதை கவனத்திலே கொண்டு இது நீதி மன்றத் தீர்ப்பாக இருக்கிற காரணத்தினாலே வேறு எந்த வகையில் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை நிச்சயமாக ஆலோசனை செய்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விளாத்திக்குளத்தில் அக்ரோ சர்வீஸ் செண்டர் நிறுவும் திட்டம்

* வினா எண். 77—திரு. ரா. கு. பெருமாள் ; மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விளாத்திக்குளத்தில் அக்ரோ சர்வீஸ் செண்டர் அமைக்க அரசு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) தற்போது இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் 300-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சிறு விவசாயிகள் வாழ்கின்றார்கள். எனவே அங்கே ஒரு சர்வீஸ் செண்டர் ஆரம்பித்தால்தான் அங்கே உள்ள விவசாயிகள் டீசல் பெறுவதற்கும் உழுவதற்குக் கலப்பைகள் பெறுவதற்கும் இலகுவாக இருக்கிற காரணத்தால் மீண்டும் அரசு பரிசீலனை செய்து சர்வீஸ் செண்டர் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கனவே இயங்கி வருகின்ற இந்த வேளாண் பொறியியல் கூட்டுறவு பணி மையங்களிலே சில நட்டத்திலே நடந்து வருகின்றன. எனவே அவைகளை எல்லாம் லாபத்திலே நடப்பதற்கான நடவடிக்கைகளை அரசு தீவிரமாக எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி விளாத்தி குளத்திலே நிறைய கிராமங்கள் இருக்கலாம். 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புதூர் வேளாண் பொறியியல் மையத்திலே எல்லா வசதிகளும் இருக்கின்றன. அதை அவர்கள் பயன் படுத்துவார்களானால் தற்காலிகமாக அங்கே விவசாயிகளுக்கு ஏதாவது சேவை செய்ய முடியும் என்கின்ற பிரச்சினை எனக்கு எழுந்திருக்கிறது. அதையும் மீறி தேவைகள் அதிகமாக இருக்கு மானால் நட்டத்திலே இயங்கிக் கொண்டு இருக்கின்ற அந்த

[1981 ஜனவரி 28

மையங்களை சரி செய்ததற்குப் பிறகு கூடுதலாக ஏதாவது மையங்கள் ஆரம்பிக்கின்ற சூழ்நிலை வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவர் அவர்களே, புதூர் 12 மைல் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் என்னுடைய தொகுதி 70 மைல் நீளமும் 30 மைல் அகலமும் கொண்ட ஒரு தொகுதி. 300-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே நெல்லை மாவட்டம் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அரசு பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் இந்த சலுகையை வைத்து, விவசாயிகளுக்கு இலாப நோக்கம் பார்க்காமல் உடனடியாக இந்த ஆண்டே ஏற்பாடு செய்து நிதி ஒதுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இது 12 மைல் அல்ல. 12 கிலோ மீட்டர் தான். ரொம்பவும் அருகாமையில் இருக்கின்றது. இருக்கிற சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேவைகள் அதிகமாக இருந்தால் ஆரம்பிப்பது பற்றி அரசு யோசிக்கும்.

தென்னாற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை.

*வினா எண். 78—திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை விஸ்தரிப்பு பணி நடைபெறுகிறதா ?

(ஆ) ஆம் எனில் அத் திட்டம் எப்போது முடிந்து உற்பத்தியை துவங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்,

(ஆ) இப்பணி இவ்வாண்டுக்குள் முடிக்கப்பட்டு உற்பத்தி தொடங்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஸ்தரிப்புத் திட்டம் மாநில அரசு நிதியில் கட்டப்படுகிறதா அல்லது மத்திய அரசு நிதி உதவியுடன் கட்டப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான மதிப்பு ஏறக்குறைய 150 லட்சம் ரூபாய். இதிலே விவசாய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் மூலதனக் கடனாக 51.45 லட்சம் அனுமதித்திருக்கிறது. 51.45 லட்சம் மாநில அரசால் முதலீடு செய்யப்படுகிறது. மேலும் 90 இலட்சம் ரூபாய் தொழில் நிதி உதவிக் கழகத்திற்கு கடனாகப் பெற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த 13,760 கதிர்களைக் கொண்டு இயங்குகிற இந்தக் கூட்டுறவு நூற்பாலை 25,000 ஸ்பின்டில்கள்—கதிர்கள் கொள்ளளவாக மாற்றுவதற்கான விரிவாக்க வேலைகள் நடந்து வருகின்றன.

1981 ஜனவரி 28]

[முற்பகல் 10-10]

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலை உற்பத்தியைத் துவக்குகிற போது அதற்கான பணியாட்கள் எடுக்கின்ற நேரத்தில், அந்த ஆலை பின்தங்கிய இடத்தில் இருப்பதால், அந்த ஆலையைச் சுற்றி இருக்கிற பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்தத் தொழிற்சாலை ஆரம்பித்தாலும் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தான் பணியாட்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள கூட்டுறவு நூற்பாலைக்குத் தொழிலாளர்கள் எடுக்கிறபோது, அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு அதிகமாக முன்னுரிமை கொடுக்கப்படும்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் எத்தனைபேர் புதிதாக வேலைக்கு எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கிற நூற்பாலைக்கு ஆட்கள் எடுக்கிற போது 5 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள கிராம மக்களுக்கு மட்டும் தான் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்கிற உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : எந்தக் கூட்டுறவு நூற்பாலை பற்றிக் கேட்கிறீர்கள்?

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : செஞ்சித்தொகுதியில் உள்ள சாரம் கூட்டுறவு நூற்பாலை பற்றிக்கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனிக்கேள்வி போட்டால் அதற்கான விரிவான பதில் தரப்படும்.

மதுராந்தகத்தில் காகிதஆலை

வினா எண் 79— திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் காகித ஆலை துவக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) காகித ஆலை எப்பொழுது முதல் இயங்க ஆரம்பிக்கும்?

[1981 ஜனவரி 28

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: (அ) இத்திட்டத்திறகென தொழில் நுட்ப ஆலோசனைகள் அளிக்க ஒரு நிறுவனத்தை நியமனம் செய்யவும், காகித தொழில் நுட்பர் ஒருவரை நியமனம் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) உத்தேசமாக 1982ஆம் ஆண்டு இவ்வாலை இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த்; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை துவக்குகிற நேரத்தில் அங்கே வாழ்கிற அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா? எவ்வளவு பேருக்கு அந்த ஆலை மூலம் வேலை வாய்ப்பு கிடைக்கும்? ஆலைக்கான மதிப்பீடு தொகை எவ்வளவு? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான மதிப்பீடு ரூ. 200 லட்சமாகும். இந்த ஆலை 1982-ம் ஆண்டு இயங்கத் தொடங்கும். வேலைக்கு ஆட்கள் எடுப்பதைப் பொறுத்தவரையில், நான் ஏற்கனவே தெரிவித்த விதிமுறைகளின் அடிப்படை பின்பற்றப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கெ. சொக்கலிங்கம்: தலைவர் அவர்களே, மதுராந்தகம் சக்கரை ஆலைக்குப் பக்கத்திலே தொடங்க இருக்கும் காகிதத் தொழிற்சாலைக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா? எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குப் பக்கத்திலே இடம் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இன்னும் நில ஆர்ஜிதம் செய்யப்பட வில்லை. விரைவில் ஆர்ஜிதம் செய்யப்படும்.

அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்

வினா எண் 80—திரு தி.கா. நல்லப்பன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) பல இடங்களில் அரிசனங்கள் குடியிருப்பிற்கு பட்டா கொடுக்கும்போது அதிகாரிகள் இடத்தை அளந்து விடாமல் பட்டாவை மட்டும் கொடுத்து விடுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் பட்டா கொடுக்கும் போதே இடமும் அளந்துவிட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசு உத்தர விடுமா?

1981 ஜனவரி 28]

மாண்புமிகு திரு எம். விஜயகாரதி: (அ) பல இடங்களில் ஆதி திராவிடர்கள் குடியிருப்பதற்கு பட்டா கொடுக்கும் போது அதிகாரிகள் இடத்தை அளந்து விடாமல் பட்டாவை மட்டும் கொடுத்து விடுவது போன்ற புகார்கள் பற்றிய விவரங்கள் யாது மில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் வருகின்ற காரணத்தால் வருவாய்த் துறை அலுவலகத்தில் வைத்து அரிசனங் களுக்கு பட்டா கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப் பட்டிருக்கிற இடங்கள் ஒன்றிரண்டை மட்டும் இங்கே சுட்டிக் காட்டுகிறேன். நசியனூர், நம்சாபுரம், கருமாண்டி, செல்ல பாளையம் அரிஜன்காலனி திருவாச்சிகிராமம் வேலுநகர், மேட்டுப் பாளையம் போன்ற இடங்களில் நிலம் அளிக்கப்பட்டு, இன்னும் பட்டா கொடுக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயகாரதி: தலைவரவர்களே, 1961 ஆம் ஆண்டு மாநில ஆதித்திராவிட இயக்குநர் அவர்கள் மாவட்டங்களில் இருக்கிற நல அதிகாரிகளுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதிலே ஆதித்திராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்கும்போது அந்த நேரத்திலேயே கொடுக்கின்ற நிலப் பட்டாக்களில் இரண்டு நகல்கள் எடுக்கப்பட்டு, அதில் ஒன்றினை அடைகின்றவர் இடம், இன்னொன்று வட்டஅலுவலகத்தில் பதிவே டாக வைக்கப்பட வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் பட்டா நிலங்களைச் சுற்றி நிலஅளவை ஏற்படுத்தவேண்டு மென்றும் விதிமுறைகள் இருக்கின்றன. மேற்சொன்ன இரண்டு விதிமுறைகளும் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்று கவனிக்கும் படி எல்லா மாவட்ட ஆதித்திராவிட நல அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அது மட்டு மல்லாமல், 1962-ல் மறுபடியும் அனுப்பியிருக்கிற ஒரு சுற்றறிக் கையில் பட்டா நிலங்களைச் சுற்றிலும் அளவுக்கல் நடும்போது ஏற்படுகின்ற செலவையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டு மென்றும் கூறப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சில பகுதிகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் போன்று தனிப்பட்ட புகார்கள் அரசுக்கு இதுவரை வரவில்லை. உறுப்பினர் அவர்கள் புகார் சொன்னால் நிச்சயமாக தகுந்த நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, சில குறிப்பிட்ட இடங்களை இப்போது நான் குறிப்பிட்டிருக்கிறேன். அந் இடங்களுக்காவது உடனடியாக ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயகாரதி: தலைவரவர்களே, ஆவன செய்யப்படும்.

[1981 ஜனவரி 28

திரு. மு. அரங்கநாதன் : சில பகுதிகளில் அரிசனங்களுக்கு வீட்டுமனை ஒரு சென்ட், ஒன்றரை சென்ட் என்று கொடுக்கிறார்கள். அதை அதிகமாகக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே ஆதித் திராவிடர்களுக்கு தற்போது கொடுக்கின்ற நிலத்தின் அளவு 3 சென்ட். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1½ சென்ட் கொடுக்கப் படுவதாக கூறுகின்றார்கள். அது எந்த அளவுக்கு என்று எனக்குத் தெரியவில்லை. குறிப்பிட்ட இடங்களைச் சொன்னால் தகுந்த நடவடிக்கைகள் அரசு மேற்கொள்ளும்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, கனம் அமைச்சர் கூறியிருக்கிற பல்வேறு சுற்றறிக்கைகளுக்குப் பிறகும், பல்வேறு கிராமங்களில் நிலம் அளக்கப்படாததன் காரணமாக அல்லது அளந்தாலும் மேல் ஜாதிக்காரர்களுடைய ஆதிக்கத்தின் காரணமாக அல்லது நிலப் பிரப்புக்களின் கட்டுப்பாட்டின் காரணமாக 'ஆக்சுவல் பொசெஷன்' இன்னும் அரிசனங்கள் கையில் வராமல் இருக்கிறது. நான் இது குறித்து கலெக்டர் உடன் பேசும்போது அரிசனங்களுக்கு 60 சதவீதம் ஆக்சுவல் பொசஷன் வரமல் இருக்கலாம் என்று சொல்கிறார். இவ்வளவு சீரியசான பிரச்சனை இருக்கும்போது அங்கு இருக்கிற வெல்போர் ஆபீசர் மட்டுமல்லாமல் மேல் மட்டத்தில் 'இன்டிப்பெண்டன்ட்' அதிகாரம் படைத்த அதிகாரியையும் நியமித்து, சர்வே நடத்தி, பொசஷன் இல்லாமல் இருப்பதற்கான காரணம் என்ன? அதை நீக்க என்ன வழி என்று தெரிந்து, தகுந்த நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு தலைவரவர்களே, அதற்கென்று தனியாக அதிகாரியை நியமிக்காமல் தற்போது இருக்கின்ற மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்குநரை வைத்தே அந்த சர்வேயை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, இவ்வாறு வழங்கப்படுகின்ற பட்டா நிலங்களை வேறு ஒருவருக்கு கொடுப்பதைத் தடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா? ஏனென்றால் ல இடங்களிலே இவ்வாறு நிலப் பட்டா வாங்கியவர்களிடமிருந்து ஜாதி இந்துக்கள் கிரயம் கொடுத்து வாங்குகிறார்களே, அதைப்பற்றி அரசுக்கு புகார் வந்ததா? அவ்வாறு ட்ரான்ஸ்ஃபர் செய்யக் கூடாது என்ற ஒரு நிரந்தரத் தடை இருக்கின்றதா? இல்லையென்றால் அவ்வாறு தடை போடப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்ற புகார்கள் அரசுக்கு வரவில்லை. அவ்வாறு புகார்கள் வந்தால் அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 ஜனவரி 28]

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற நிலம் நான்கு புறமும் அளந்து கொடுக்கப்படுகின்றதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்குபுறமும் அளந்துதான் கொடுக்கப்படுகின்றது. உட்காருங்கள்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட எந்தவிதமான புகார்களும் தனக்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்திலே சிதம்பரம் தாலுக்கா, விருத்தாசலம் தாலுக்கா, கடலூர், குறிஞ்சிப்பாடி, காட்டுமன்னார்கோயில் போன்ற இடங்களில் பத்தாண்டுகளுக்கு முன்பே பட்டா கொடுக்கப்பட்டும் அந்த இடங்களை அளந்து கொடுக்காத காரணத்தினால் முன்சீப் கோர்ட்டிலே கேஸ் நடந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு அங்குள்ள மக்கள் எல்லாம் விண்ணப்பம் எழுதி அனுப்பி இருக்கிறார்கள். அதனுடைய நகல் எனக்கு வந்திருக்கின்றது. அதன் மீது அமைச்சரவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபற்றி தனிக்கேள்வி போட்டால் பதிலளிக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலோரப் பகுதி மீனவர் குடியிருப்புப் பகுதிகளுக்கு மின் இணைப்பு.

வினா எண் 6 :— திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீனவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் ஒயர் கம்பிகள் உப்பு காற்றினால் அறுந்து விளக்குகள் சரிவர எரியவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மேலே இருக்கும் ஒயரை பூமிக்கு அடியில் மாற்றி அமைக்கப்படும் உத்தேசம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் கம்பிகள் பாதிக்கப்படுவது உண்மைதான். ஆனால், தகுந்த பராமரிப்பு நடவடிக்கைகள் மூலம் பழுதுகள் அவ்வப்போது சரி செய்யப்படுவதால் விளக்குகள் எரிவதை அதிகமாகப் பாதிப்பதில்லை.

(ஆ) இல்லை.

[1981 ஜனவரி 28

திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவவர்களே, கடற்கரைப் பகுதிகளில் மீனவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் குறிப்பாக திருவான்மியூரிலிருந்து மகாபலிபுரம் வரையில் உள்ள பகுதிகளில் உள்ள மின் விளக்குகள் எப்போதுமே எரியாமல் இருக்கின்றது என்று சொல்கிறார்கள். நான் சென்ற வாரம் கூட அங்கு சென்று சுற்றுப்பயணம் செய்யும்போது அங்குள்ள நிலைமையைப் பார்த்தேன். கடற்காற்றினால் புதிதாகக் கம்பி பொருத்தினால்கூட அது அறுந்து விடுகின்றது. ஒரு மாத காலம் கூட அந்தக் கம்பி இருப்பதில்லை. ஆகவே இந்த நிலைமையைப் போக்குவதற்காக அன்டர் கிரவுன்ட் என்ற முறையில் அதாவது பூமிக்கு அடியிலே கம்பிகளை அமைத்தால் பாதுகாப்பாக இருக்கும். விளக்குகள் எரிவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே அவ்வாறு பூமிக்கடியிலே பதிப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, கடலோரப் பகுதிகளில் உப்புக் காற்றின் ஈரப்பசை இத்தகைய நிலைமையை உருவாக்குகிறது. எனவே வெறும் அலுமினிய கம்பிகளை பொருத்துவதற்குப் பதிலாக இரும்புக் கம்பியோடு சேர்ந்த அலுமினியக் கம்பிகளை பொருத்தவேண்டும் என்ற வகையில் மின் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும் பூமிக்கடியில் கம்பிகளை அமைப்பது என்றால் ஏராளமாக செலவாகும். அதனை மின் வாரியத்தால் ஏற்றுக்கொள்ள இயலாது. எனவே இரும்புக் கம்பிகளோடு சேர்ந்த அலுமினிய கம்பிகள் நிச்சயமாக இந்த குறையைப் போக்கும் என்று நம்புகிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, உப்புக் காற்று படியாத கம்பிகள் பொருத்தப்பட்டிருக்கின்ற நம்முடைய சென்னை மாநகரிலே சைதாப்பேட்டையிலே விளக்குகள் பெரும்பாலும் எரிவது இல்லை என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? ஆகவே அங்கே இரும்பு கலந்த அலுமினியக் கம்பிகளைப் போடுவதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எனக்குத் தெரியாது.

தூத்துக்குடி அனல் மின் நிட்டத்தில் வேலை வாய்ப்புகள்.

*வினா எண். 62—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தூத்துக்குடி அனல் மின்சாரப் பிரிவில் புதியதாக பணிக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்களா? எத்தனை பேர்கள்?

1981 ஜனவரி 28]

ஆ) ஏற்கனவே பல ஆண்டுகள் காண்டிராக்ட் தொழிலாளர்களாக பணியாற்றி தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஐ. டி. ஐ., சான்றிதழும், எஸ். எஸ். எல். சி. கல்வித் தகுதியும் பெற்று, வேலைத்தேடித் தரும் நிறுவனங்களால் அனுப்பப்பட்டவர்கள் தேர்வுக்காக பரிசீலிக்கப்பட்டுள்ளார்கள், இன்னும் நியமிக்கப்படவில்லை.

(ஆ) காண்டிராக்ட் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்க இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் டர்பைன் போன்ற மிகப் பெரிய பிரம்மாண்டமான உறுப்புகள் எல்லாம் நிர்மாணிக்கப்பட்டு அதற்கென தொழிலாளர்கள் தொடர்ச்சியாக வேலை செய்துவந்திருக்கின்றனர். புதிதாக உருவாக்கக் கூடியபணியிலும் இதே தொடர்பான வேலைகளுக்கு அவர்கள் முன் அனுபவம் பெற்றிருக்கிறார்கள்—அந்த பணியினையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு அவர்களைப் பணியில் அமர்த்த அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா? இது சம்பந்மாக தொழிற்சங்கத் தலைவர் கூட மனு கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள் அதில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதையும் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல ஒரு பிரம்மாண்டமான நிறுவனம் தான் அது. ஆனால் நிர்வாகப் பணியிலே ஈடுபட்டவர்களுக்கும், பராமரிப்புப் பணியிலே ஈடுபட்டவர்களுக்கும் வேறுபாடு உண்டு. வேலைக்கு வருகிற போது குறைந்தபட்ச கல்வித் தகுதியும், தொழில் நுட்ப அறிவும் இருக்குமேயானால், அவர்கள் மேலும் தங்கள் பணிக்காலத்தில் படிப்படியாக உயர்வதற்கான வழி முறைகள் இருக்கின்றன. ஒப்பந்தக்காரர்களிடத்திலே பணிபுரிவோர் அதே, கல்வித் தகுதி, தொழில் நுட்பத் தகுதி இருக்குமேயானால், அவர்களும் மற்றவர்களைப் போல தேர்வுக்கு வரலாம்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஏற்கெனவேயே அந்தப் பணியிலே இருந்தவர்கள். அதே பணிதான் புதிதாக மறுபடியும் நிர்மாணிக்கப்பெறுகிறது. அதனால், ஏற்கெனவே இருந்தவர்களுக்கு அந்தப் பணியில் தேர்ச்சி பெற்றவர்கள் என்ற முறையில் முன் உரிமை தர ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்?

[1981 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சக் கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. ஐ.டி.ஐ. இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் படிப்பே இல்லாமல் முன் அனுபவம் இருக்கிறவர்களுக்கு முன் உரிமை தரப்படவேண்டும் என்று சொல்வது நியாயமாகாது. இயற்கையின் நியதிக்கே முரணானது. முன் அனுபவம் என்பது ஏதோ ஒன்றைப்பற்றி மட்டும் தெரிந்திருக்கக்கூடும். ஆனால் தொழில் நுட்பக்கல்வி கற்றவர்கள் அப்படியில்லை. குறிப்பிட்ட துறை சம்பந்தமான எல்லா அனுபவமும் அவர்களுக்கு இருக்கக் கூடும். வெறும் வேலை அனுபவம் பெற்றவர்கள் கன்ஸ்டிரக்ஷனில் வேண்டுமானால் அனுபவம் பெற்றிருக்கலாம், அதன் இயக்கத் திறமையில் இருக்காது. ஆகையினால்தான் சொல்கிறேன், குறைந்த பட்சக்கல்வித் தகுதி, தொழில் நுட்பக் கல்வித் தகுதியினை ஒப்பந்தக்காரர்களிடத்திலே வேலை செய்திருந்தவர்கள் பெற்றிருந்தால் அவர்களும் தேர்வுக்கு வரலாம் என்று.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் எவ்வளவு யூனிட்டுகள் வேலை செய்கின்றன? அதன் உற்பத்தித் திறன் எவ்வளவு? இனி செயல்படவிருக்கும் யூனிட்டுகளின் உற்பத்தித் திறன் எவ்வளவு? அதனால் எத்தனை பேருக்குப் புதிதாக வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பிருக்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த அனல் மின்நிலையத்தில் 3 யூனிட்டுகள் இருக்கின்றன. ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகிறது. இரண்டாவது இந்த மாதம் இயங்க ஆரம்பித்திருக்கிறது. எவ்வளவு பேர்கள் அதிலே பணிபுரிகிறார்கள், எவ்வளவு பேருக்கு மேலும் வேலை வாய்ப்பிருக்கும் என்பது போன்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

நாங்குனேரி வட்டத்தில் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு.

***வினா எண். 63—திரு. மு. ஜான் வின்சென்ட்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி வட்டத்தில் வங்கியில் லோன் வாங்கி 3000 மோட்டார்கள் பொருத்தப்பட்டு மின் இணைப்புக் கிடைக்காதது குறித்து அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சப்ளை எப்போது கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

1981 ஜனவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தின் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, மாயின்ட் ஆப் ஆர்டர். நேற்றையதினம் நான் மன்றத்தில் இல்லாதபோது நமது மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் நான் சொல்லியிருந்த குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சில விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள்..... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் உரிமை மீறல் பிரச்னையைக் கொடுத்திருக்கிறீர்கள். டாக்டர் சமரசம் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். இன்று காலையில்தான் அவைகள் கொடுக்கப்பெற்றிருக்கின்றன. அவற்றை எடுத்துக் கொள்ளும் போது உங்களுக்கும் பேச வாய்ப்பளிக்கப்படும்.

[முற்பகல் 10-30]

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது பேசியவை எல்லாம் அவைக்குறிப்பில் ஏறாது. திரு. ரகுமான்கான் உரிமை மீறல் பிரச்னை கொடுத்திருக்கிறார்கள், டாக்டர் சமரசம் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். இரண்டையும் படித்துவிட்டு முடிவு சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அது சபையில் வராமல் இருக்கப்போவதில்லை. இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. மேலும் இது இன்றே தீர்க்கப்பட வேண்டிய பிரச்னை, விரைவில் எடுப்பேன். எவ்வளவு விரைவில் முடிவு எடுக்கமுடியுமோ அவ்வளவு அல்ல.

டாக்டர் மு. கருணாநிதி: அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு அறிக்கை கொடுக்கிறார் என்றால் அது இந்த அவையில் விளக்க அறிக்கை கொடுக்கிறார் என்றால் அது இந்த அவையில் உள்ள அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடிய, அனைவரும் பொறுப்பேற்கக்கூடிய ஒரு அறிக்கையாகிறது. அதுபற்றி உறுப்பினர்கள் கருத்து அறிவிக்கலாம் அவர்கள் இங்கே அளித்த அறிக்கையில் ஒரு அரசாணை பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அந்த அரசாணையில் குறிப்பிட்ட தகவல் தவறான தகவலாகும், அதுபற்றி அறிய உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1981 ஜனவரி 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்களின் உரிமைகளை மறுக்க நான் இங்கே இல்லை. உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுதான் என் வேலை. அதில் மாறுபட்ட கருத்து இல்லை.

3. ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினருக்கு அனுப்பப்பெற்ற கடிதம்.

திரு. நா. சுந்தரராஜ்: பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் நான் இந்த அவையில் ஒரு பிரச்னை சம்பந்தமாகக் கேட்டேன். இன்னும் பரிசீலிக்கவில்லை என்று சொன்னார்கள். அது சம்பந்தமாக நேற்று மாலை ஒரு தகவல் எனக்கு வந்திருக்கிறது. அதை இந்த அவையில் உங்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு அவை உரிமை மீறல் பிரச்னை பற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். அதை நான் பார்க்கவில்லை.

திரு. நா. சுந்தரராஜ்: பதில் வந்திருக்கிறது.

டாக்டர் மு. கருணாநிதி: காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை கொடுக்கிறார்கள். அவர்களுக்கு வந்திருக்கிற பதில், அவர்களை இதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா என்று கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது. இது எப்படி சரியானமுறை என்று கேட்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, நான் எனக்கு வந்துள்ள கடிதத்தைப் படிக்கிறேன்.

"பொருள் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனை திரு. இராஜசேகரன் அவர்கள் காவல் துறையினரால் தாக்கப் பட்டது குறித்து எழுப்பியுள்ள உரிமை மீறல் குறித்த பிரச்சினை. பார்வை: தங்கள் 21-1-81 ஆம் தேதியிட்ட அறிவிப்பு. பார்வையில் கண்டுள்ள தங்கள் அறிவிப்பில் தெரிவித்துள்ள தகவலுக்கும், காவல் துறையிலிருந்து பெறப்பட்ட தகவலுக்கும் வேறுபாடு அமைந்துள்ளபடியால், அறிவிப்பில் தெரிவித்துள்ள தகவல்களுக்கு தாங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறீர்களா? எனவே, இதுகுறித்து தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தங்கள் அன்புள்ள, கி. மு. அழகர்சாமி" என்று வந்துள்ளது.

நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், வெளியில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி, இந்த அவையில் இருக்கின்ற உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கிறார். ஒரு பொறுப்புள்ள உறுப்பினர்.....

1981 ஜனவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போன சபையிலேகூட இது பற்றி பேசப்பட்டது. அடிக்கடி தாக்கப்படுகிறார் என்று நினைக்கிறேன். அவரைப் பாதுகாக்க எனக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது. (குறுக்கீடு)

திரு. நா. சுந்தரராஜ்: நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், 'பொறுப்பேற்றுக் கொள்ள முடியுமா' என்று இந்த அவையிலே உள்ள உறுப்பினரைக் கேட்பது, அந்த உறுப்பினர் மேற்கொண்டு அவர் பணியைச் செய்வதற்குப் அது தடையாக அமைகின்றது. காரணம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு உறுப்பினர் ஒரு பிரச்னையைக் கொண்டு வரும்போது பொறுப்பேற்றுக் கொள்ளுகிறீர்களா என்று கேட்பது வழக்கம். ஒரு சம்பிரதாயம்.

திரு. நா. சுந்தரராஜ் : நாங்கள் சொல்வதற்கு போலீஸ் தரப்பிலே இருந்து சாதகமான பதில் வரப் போவதில்லை.

திரு. என். எஸ். வி சித்தன்: பொறுப்பேற்றுக் கொண்டு தான் ஒரு உறுப்பினர் கேள்வியைக் கேட்பார். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஒரு பிரச்னை குறித்து தங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்திற்குப் தங்களுடைய அலுவலகத்திலிருந்து ஒரு பதில் வந்திருக்கிறது. அந்தப் பதில் சரியாக இல்லை என்பது மாண்புமிகு சுந்தரராஜ் அவர்களுடைய கருத்து. நான் மாண்புமிகு சுந்தரராஜ் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அதுபற்றி தங்களிடம் நேரிலே பேசிக்கொள்ளலாம். இந்த அவையிலே எழுப்ப அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. நா. சுந்தரராஜ்: எனக்கு வந்த தகவல், இந்தப் பிரச்னையில் இந்த அவையிலே மேற்கொண்டுநடவடிக்கைஎடுக்கத் தடையாக அமைகின்றது. ஒவ்வொரு பிரச்னைக்கும் பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலை இருக்குமானால், இந்த அவையிலே இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களுக்கும், மற்று முள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுதிக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும். போலீஸ் தரப்பிலே இருந்து வரக்கூடிய தகவல் சபாநாயகர் அவர்களுக்கு உதவியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 ஜனவரி 28

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பிரிவிலெஜ் மோஷன் எழுப்புவது ஒரு மெம்பருடைய உரிமை, ஹவுசில் என்ன பிரிவிலேஜ் என்று கேட்டு, ஆளுங்கட்சித் தரப்பிலே இருந்தும். எதிர்க் கட்சித் தரப்பிலே இருந்தும் பதில் கேட்டு, அதற்குப் பிறகு முடிவெடுப்பது இதுவரைக்கும் கடைப்பிடித்து வந்த சம்பிரதாயம். பிரிவிலெஜ் மோஷன் நோட்டீஸ் கொடுத்தவுடனேயே அதை சம்மரியாக டிஸ்மிஸ் செய்வது முறையல்ல. காரணம், அஃபெக்டட் பார்டீஸைக் கேட்டுச் செய்யவேண்டும். இதிலே கான்ட்ராடிக்ஷன் இருக்கிறது. இவ்வாறு டிஸ்போசல் செய்வதால், ஸ்பீக்கர் சேம்பரிலேயே டிஸ்போசல் செய்வதுபோல் ஆகிவிடுகிறது, அது தவறு. அந்தப் பதில் முறையல்ல, சரியல்ல என்பதைத் தங்களுக்கு பணிவன்போடு சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்பமிகு உறுப்பினர் சொல்வது, விதிமுறையில் அவ்வாறு இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. அ. ரகுமான்கான்; நான் விதியை வாசிக்கிறேன். அதிலே தெளிவாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பிரைமா பேசி கேஸ் இருக்கிறதா, இல்லையா என்பதை பேரவைத் தலைவர் தம் அறையிலேயே டிசைட் பண்ணுவார். . . . (குறுக்கீடு)

டாக்டர் மு. கருணாநிதி: '' ரைமா பேசி இல்லை'' என்ற அளவுக்கு கடிதம் வந்திருக்கிறது. அதைவிட 'பொறுப்பேற்றுக் கொள்ளுகிறீர்களா' என்ற ஓர் உறுப்பினருக்கு கடிதம் எழுதுவது, மன்ற உறுப்பினர்களுடைய உரிமையை எதிர்காலத்தில் பாதிக்கும்

Thiru. V. KRISHNAMURTHY: Secretary should not write like this.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ. நோ. நான் லெட்டர் முழுவதையும் படித்து விடுகிறேன். (குறுக்கீடு) நானும் கோபப்பட வேண்டுமென்று சொல்லுகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்வையில் கண்டுள்ள தங்கள் அறிவிப்பில் தெரிவித்துள்ள தகவலுக்கும் காவல் துறையிலிருந்து பெறப்பட்ட தகவலுக்கும் வேறுபாடு அமைந்துள்ள படியால், அறிவிப்பில் தெரிவித்துள்ள தகவல்களுக்கு தாங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறீர்களா

1981 ஜனவரி 28]

என்பதைத் தெரிவிக்கும்படி 'மாண்புமிகு பேரவைத் தலைவரால் பணிக்கப் பெற்றுள்ளேன்' என்று தான் தெரிவித்திருக்கிறார்கள். செகரட்டரி தானாகக் கேட்கவில்லை. பேரவைத் தலைவரின் சார்பில்தான் கேட்கிறார். ஆகவே, செகரட்டரி பேரில் பாயவேண்டாம். அவருக்கு இங்கு பாதுகாப்பு இல்லை.

திரு. என். சங்கரய்யா: தங்களுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையைக் கிளப்பியவர் சட்டப் பேரவை உறுப்பினர். இந்த பிரச்சினைக்கு சம்பந்தப்பட்டவரும் சட்டப்பேரவை உறுப்பினர். தீர்மானத்தை உறுப்பினர் கொடுத்திருக்கிறார் என்றால் அவர் பொறுப்பேற்றுக் கொண்டுதான் கொடுக்கிறார். முதலிலே உறுப்பினர் என்ன சொல்லுகிறார் என்று கேட்டுவிட்டு பிறகு சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு எழுதிக் கேட்டு அதற்குப் பிறகு அது பற்றி முடிவு எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்லுகிற கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் முதலிலேயே தகவல் வந்துவிட்ட காரணத்தால உறுப்பினரிடம் கருத்துக் கேட்கவேண்டிய துர்பாக்கியமான நிலைமை இலாகாவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

திரு. என். சங்கரய்யா: அதற்கான தகவல் எப்படி வந்திருக்க முடியும்? உறுப்பினர் அவையில் அதுபற்றி எழுப்பி குறிப்பிட்ட பிறகுதான் தகவல் என்ன என்று சபாநாயகர் கேட்கவேண்டும். எழுத்து மூலமாகச் சட்டமன்ற உறுப்பினர் எழுதிக் கொடுத்திருக்கிறார். .

டாக்டர் மு. கருணாநிதி: இன்னொரு தரப்பில் இருந்து கருத்துக்களை அறிந்ததாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் என்ன எழுதி அனுப்பினார்கள்? அதை இந்த அவையில் படிக்க முடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது முடியாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு சிக்கலை உருவாக்குகிறார்கள். இப்போது இந்தப் பிரச்சினையை எடுப்பதற்கில்லை. உறுப்பினர் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று கூறிவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுகிறது. .

திரு. ரா. உமாநாத்: ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினர் தாக்கப்பட்ட சம்பவம் பற்றிய பிரச்சினையை எழுப்புகிறார் என்றால் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்வதாகத்தான் அர்த்தம். பேரவைத் தலைவர் இப்படி தனியாகப் பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்பது சரியல்ல.

1981 ஜனவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்றால் பிரச்சினை தீர்ந்துவிடுகிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டு பிரச்சினையை முழுவதுமாக விவாதிக்க ஆரம்பிக்கிறார். அவர் கேட்ட கேள்வி சுலபமானது. ஆனால் ஆழமானது. அந்தத் திறமையைப் பாராட்டுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா என்று பிரிவிலெஜ் மோஷன் கொடுத்த ஒரு அங்கத்தினரைக் கேட்பதையே அவமானமாகக் கருதுகிறேன். இந்த அவையைப் பொறுத்தவரை ஒரு அங்கத்தினர் பிரிவிலெஜ் மோஷன் கொடுத்தால் it must be presumed that it had happered அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறார் என்றுதான் அர்த்தம். போலீஸ் ரிப்போர்ட் வந்தாலும் When it comes between the Police and a Member, the House must respect initially, prima facie, only the Member and not the police.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் மரியாதை எதையும் குறைப்பதற்காகவோ, தவிர்ப்பதற்காகவோ நான் இங்கு இல்லை..

திரு. ரா. உமாநாத் : நான் முடித்துவிடுகிறேன். இதற்கு முன்னால் போலீஸ் இலாகா மானியத்தில் ஸ்டேட் மினிஸ்டர் ஸ்டேட்மெண்ட் இங்கு வந்தபோது அந்த ஃபாக்ட்டைப் பொறுத்தவரை வெளியிலே சொல்லப்பட்டதற்கும் போலீஸ் இலாகா கொடுத்த ரிப்போர்ட்டுக்கும் மாறுபாடு இருக்கிறது. ஸ்டேட் மினிஸ்டர் சொன்னார்—வெளியே சொன்ன கருத்தைத்தான் நம்புகிறேன் இலாகாவில் ரிப்போர்ட் மாறாக இருந்தாலும் நான் கையெழுத்துப் போட வேண்டியிருக்கிறது என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் உணர்வுகளை மதிக்கிறேன். திரு. ராஜசேகரன் உறுப்பினராக இருக்கிறார். அவரைப் பற்றிய பிரச்சினையை சுந்தரராஜன் கொண்டு வருகிறார்..

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அடிபட்டவர் எப்படிக் கொண்டு வர முடியும்? மற்ற உறுப்பினர்கள் தான் கொண்டுவர முடியும். ராஜசேகரனே கொண்டு வரமுடியாது.

திரு. ரா. உமாநாத் : தங்களுக்குத் தெரியும், நாடாளுமன்றத்திலே ஒருமுறை ஒரு சப்—இன்ஸ்பெக்டர் ஒரு எம்.பி.யை தடங்கல் செய்தார். அதைப்பற்றி மன்றத்திலே கிளப்பியபோது, The Sub-inspector was called to the bar of the House and questioned பிறகு தான் அதுபற்றி முடிவு செய்யப்பட்டது. We have got a better status compared to the Police officers.

1981 ஜனவரி 28] [திரு. ரா. உமாநாத்]

ஆகவே "straight away" கேட்காமல், நீங்கள் 'prima facie' இருக்கிறதா என்று பாருங்கள் Refer பண்ணுங்கள். You give the refer decision

திரு. என். எஸ். வி. சித்தன்: உரிமைப் பிரச்சினை என்று வரும்போது அதைப்பற்றி சபையிலே எடுத்துக்கொண்டு பிறகு சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுதுவதுதான் வழக்கமாக இருக்கிறது. ஆனால் இந்தச் சபையிலே அதைப்பற்றிப் படிப்பதற்கு முன்னாலேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதைப்பற்றி எழுதியதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபைக் கூட்டம் இல்லாத போது நடந்த காரணத்தினால் காவல் துறையிலிருந்து எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இந்த விவாதத்திற்கு நான் ஒரு முற்றுப் புள்ளி வைக்க விரும்புகிறேன். நாளைக்கு இதை எடுத்துக் கொள்ளலாம்.

4. அறிவிப்புகள்

அ. சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை ஆறு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை பல்கலைக்கழகத்தின் பேரவையில் (செனட்) இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த திருவாளர்கள் (1) அப்புனு கவுண்டர், (2) செ. சதாசிவம், (3) கே.என்.கே. இராமசாமி, (4) எம்.எ. லத்திப், (5) பாக்கூர் எஸ். சுப்பிரமணியம் (6) கே. வடிவேல் ஆகியோரின் பதவிக்காலம், 1980 பிப்ரவரி மாதம் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டதன் விளைவாக முடிவடைந்துவிட்டதால் அப்பேரவைக்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குத் தங்களிலிருந்து ஆறுவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக்கழகம் கோரி உள்ளது. பல்கலைக்கழகத்தின் சட்டப்படி ஒற்றைமாற்று வாக்குமூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 31-1-1981 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 2-2-1981 திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 3-2-1981 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஆறுக்கு மேற்படுமாயின் 5.2.1981 வியாழக் கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

ஆ. அண்ணாமலை பல்கலைக் கழகப் பேரவை மூன்று உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவையில் (செனட்) இச் சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு என். ராமச்சந்திரன் (2) திரு என். சுப்பிரமணியன் (3) திரு. கே. சௌந்தரராஜன ஆகியோரின் பதவிக்காலம், 1980 பிப்ரவரி மாதம் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டதன் விளைவாக முடிவடைந்துவிட்டதால், அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றை மாற்று வாக்குமூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாட்களை 31.1.1981 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 2-2-1981 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 3.2.1981 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படுமாயின் 5.2.1981 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

[முற்பகல் 10-50]

இ. கண்டனத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவையின் 71-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் வரப்பெற்றுள்ளன !

"மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை இப்பேரவை கண்டிக்கிறது" என்று மாண்புமிகு

உறுப்பினர்கள், திருவாளர்கள் ஆர். உமாநாத், கே. ரமணி, ஆர், கருப்பையா, எம். ஆறுமுகம் ஆகியோரும், "தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை இப்பேரவை கண்டிக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நெடுமாறன், திரு. கே. பாரமலை, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. எஸ். ஆண்டித் தேவர் ஆகியோரும், "மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை இப்பேரவை கண்டிக்கிறது" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களும் கொடுத்துள்ளனர்.

தீர்மானங்கள் முறைப்படி உள்ளன. எனவே, பேரவையின் 71-வது விதி, உள்விதி (2)ன்படி, இத்தீர்மானங்களை மூன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய வேண்டும்.

திரு. உமாநாத் அவர்கள் தீர்மானம்தான் முதலில் வரப் பெற்றது. எனவே அத்தீர்மானத்தை மூன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்களைத் தம் இடங்களில் எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(24 மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்கள் : தேவையான 24 மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நிற்பதால் தீர்மானத்தை முன்மொழிய இப்பேரவை அனுமதி அளிக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இதை கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு முன்னதாகவே எடுத்துக்கொள்ளலாம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்தின் மீது 4-2-1981 அன்று விவாதம் நடைபெற்று அன்றே மாலை 1-30 மணிக்குள் வாக்கெடுப்புக்கு விடப்படும். அக்காலத்திற்குள் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து முடிக்க வேண்டும்.

மற்ற உறுப்பினர்கள் கொடுத்துள்ள தீர்மானங்கள், இதே போன்று இருப்பதால் அவை நிறுத்தி வைக்கப்பெறும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அப்படியென்றால் அவைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்ற கருத்து வந்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் அவர்களின் பெயர்கள் ஆகியவற்றைச் சொல்லியாகிவிட்டது.

திரு. அன்பில் தர்மலிங்கம் : அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும்.

[1981 ஜனவரி 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதில் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் நான் இதைச் சொல்ல விரும்பவில்லையென்றால் திரும்பவும் இன்னொரு நாளைக்கு வைத்துக் கொள்ளலாம் என்ற கருத்து வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் சொல்லுகிறேன்.

அரசாணை வெளியிட்ட தீர்மானத்தின்மீது பேரவை தனது முடிவை தெரிவித்த பிறகு மற்ற தீர்மானங்கள் குறித்து முடிவு செய்யப்படும்.

ஈ. ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்டமுன்வடிவு 1981

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஒர் ஆரிவிப்பு தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்ட முன் வடிவையும் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது ஒப்புதலைத் தெரிவித்துள்ளார்கள்.

அரசினர் சட்டமுன்வடிவுகள்

அ. ஓட்டல்கள் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்ட முன் வடிவைப்" பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. நிலவரி வசூல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

1981 ஜனவரி 28]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

இ. பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்டமுன்வடிவை'ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஈ. புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1981-ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[1981 ஜனவரி 28

உ. கடன் நிவாரண (திருத்த சட்டம் முன்வடிவு

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு "1981ஆம் ஆண்டுக் கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

ஊ. கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1981ஆம் ஆண்டுக்கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—தொடர்ச்சி

*திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின்மீது நடைபெறும் விவாதத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி, இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் சார்பாக என்னுடைய கருத்தை நான் தெரிவிக்கிறேன். புத்தாண்டு விவசாய அறுவடை நாளில், தமிழர் திருநாளில், இன்றைக்கு குண்டு மழை பெய்யப்பட்டு, 10 விவசாயிகள் கண்டு முதல் கண்ட நிலையை விவசாயிகளைப் பொறுத்த வரையில் இந்த அரசு கடைபிடிக்கிறது. இந்த முறை நிச்சயமாக ஒரு நல்ல சூழ்நிலையை மக்கள் மத்தியிலே ஏற்படுத்தவில்லை. ஆளுநர் உரை ஒரு பொய்மாள் தோற்றமாகக் காட்சி அளிக்கிறது.

1981 ஜனவரி 28]]திரு. ஏ. சாகுல்ஹமீது]

பி. அன்ட் சி. மில் தொழிலாளர் பிரச்சினையில் இந்த அரசு நல்லதொரு தீர்வு காணாமல் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிற நிலையை எண்ணிப்பார்க்கும்போது, அந்தத் தொழிலாளர்கள் பிரச்னையில் இந்த அரசு அக்கறை இல்லாதிருப்பது தெளிவாகக் காட்டுகிறது. மேலும் கிராம அலுவலர்கள் பிரச்னையிலும் இந்த அரசு நல்லதொரு நிலையை உருவாக்கவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதே நேரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களை விடுதலை செய்து, அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி, பல்கலைக் கழகத்தில் சுமுகமான நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இன்றைக்கு நாட்டிலே பல மக்களாலும் பேசப்படுகிற எரி சாராயப் பிரச்னையைப் பார்த்தாலும் அது பெரிய பிரச்னையாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்திலே பேசுகின்றபொழுது 10 இலட்சம் லிட்டர் எரி சாராயம் எடுத்துச் செல்வதற்குப் பதிலாக, 15 இலட்சம் லிட்டர் எரி சாராயம் கடத்தப்பட்டிருப்பதாக ஒரு உண்மையை ஒத்துக் கொண்டபொழுது, ஊழல் நடைபெற்றுள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளதாகும். எரி சாராய ஊழல் கொழுந்து விட்டு எரிகிறது.

அதேபோல், சிறைக் காவலர் கைது, வேளாண்மைத் துறையை சார்ந்த அலுவலர்கள், ஆசிரியர்கள் உண்ணாவிரதம் போன்ற எத்தனையோ பிரச்னைகள் இருப்பது நாட்டிலே நல்ல நிலையை உருவாக்கவில்லை.

பொதுவாக, ஊராட்சித் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படுகிற காரணத்தால், ஊராட்சிகளிலே ஊழல்கள் அதிகமாகின்றன. குறிப்பாக, ஊராட்சிகளிலும், நகராட்சிகளிலும் அங்கே ஊழல்கள் பகிரங்கமாக நடைபெற்று நேர்மையான காரியங்கள் நடைபெற வில்லை.

[முற்பகல் 11-00]

எங்கு பார்த்தாலும் அதிகாரிகளுடைய ஆட்சி நடைபெறுவதால் அரசுத் துறையைச் சார்ந்த அலுவலகங்களிலும் ஊழல்கள் மலிந்துள்ளன. ஊழல் நகராட்சியிலும், உள்ளாட்சிப் பகுதியிலும் ஏற்பட்டிருக்கின்றது. சிமெண்ட் விநியோகத்தைப் பொறுத்த வரையில் அதிகமான ஊழல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் இன்றைக்கு லெவி பிரச்னையை எடுத்துச் சொன்னால், வியாபாரிகள் நஷ்டங்களோடு அவர்கள் கொள்முதல் செய்ய முடியாத காரணத்தால், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1981 ஜனவரி 28

வேலைக்கு உணவுத் திட்டம் என்ற பெயரில் அங்கே வேலை செய்கின்றவர்களுக்கு நல்ல அரிசி கிடைக்காத காரணத்தால், [illegible] அந்தத் திட்டத்தை ஏற்று நடத்த மக்கள் முன் வருவதில்லை என்பதாகக் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் அங்கே நடைபெற்ற வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. அதனால் அரசு அங்கே நல்ல அரிசியைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஊனமுற்றோர் பிரச்னையை எடுத்துக் கொண்டாலும் மற்றும் சுமையை மாடு, உழவு மாடுகள் கொடுப்பது போன்ற நிவாரணங்கள் சரியாக இல்லை. தேசியமயமாக்கப்பட்டவங்கிகள் அந்த ஊனமுற்றோர்களுக்கு நிதி கொடுப்பதில்லை. சுமை மாடுகள், உழவு மாடுகள் வாங்குவதற்கு அவர்களுக்கு நிதி கொடுப்பதில்லை. எனவே அந்தத் திட்டம் சரியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்த வரையில், மதுவிலக்கை ரத்து செய்வதை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் எதிர்க்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களின் வழி நடக்கின்றது இந்த அரசு என்று சொல்லுகிற நீங்கள் அண்ணா அவர்கள் கொள்கையை—சொன்னதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். மதுவிலக்கை அமுல்படுத்துவதிலே எவ்வளவு இழப்பு ஏற்பட்டாலும் அதைத் தாங்கிக் கொள்வேனே தவிர, மதுவிலக்கை ரத்து செய்ய மாட்டேன் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால் இங்கே அண்ணா அவர்களின் கொள்கைக்கு எதிராக இந்த அரசைத்திந்திய அண்ணா தி. மு. க. அரசு மதுவிலக்கை ரத்து செய்வதை எண்ணிப் பார்க்கிறபோது, அதனால் தாய்மார்கள் சிந்தும் கண்ணீரை அவர்கள் நிலையை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மதுவிலக்கை ரத்து செய்வதை எங்கள் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் எதிர்க்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையினரைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கே பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலை என்றால், சாதாரண பொது மக்களின் நிலை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் தமிழுக்காக, அதன் உயர்வுக்காக என்ன திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, அந்த மாநாட்டினால் [illegible] தமிழுக்கு, எந்தவிதமான பலனும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாநாட்டில் இலங்கையில் அதிகமான புலவர்கள் [illegible] சுதந்திரத்துக்கும் [illegible] பிரதிநிதிகளுக்கு பிரதிநிதித்துவம் [illegible]

1981 ஜனவரி 28] [திரு. ஏ. சாகுல் ஹமீது]

காவல் துறையைப் பொறுத்தவரையில் சிறுபான்மை முஸ்லீம்களின் பதவி உயர்வு புறக்கணிக்கப்பட்டு, அந்த விகிதாசாரம் இருந்து அவர்கள் பெயர் தேர்ந்தெடுக்கப்படாமல் சிறுபான்மை சமுதாயத்தினர் இடம் பெறாமல் 'ஓவர்லுக்' செய்யப்பட்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். வனத்துறையில் மேலே உள்ளவர்கள் பதவி உயர்வு மறுக்கப்பட்டு, அவர்களுக்குக் கீழே உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு, சிறுபான்மை சமுதாயத்தினருக்கு எதிராக இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகள் பிரச்சினை தொழிலாளர்கள் பிரச்சினை, ஆசிரியர்கள் மாணவர்கள் பிரச்சினை போன்ற பலதரப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டு மக்கள் அமைதியின்றி இருக்கின்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் குடிநீர் வசதி, ரோடு வசதி, பஸ்போக்குவரத்து வசதி போன்ற அத்தியாவசியமான தேவைகள் இல்லை. அவைகளை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் பாசன குளங்களை மராமத்து செய்து, தூர் எடுப்பதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, கடையநல்லூரிலே கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதியாகும். அங்கே நூல் விலை ஏற்றத்தின் காரணமாக அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இந்தப் பகுதியில் ஒரு நெசவு ஆலை அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுத்த தக்காவிக் கடன்களை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள அடைவிரயினார் கோவில் அணைத் திட்டம், வரட்டாறு அணைத்திட்டம் போன்றவைகளை தயவு செய்து நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிலம்பதிகாரத்தைக் காற்சிலம்பாக்கி, வளையாபதியைக் கைவளையாக்கி, மணிமேகலையை இடையணியாக்கி, சிந்தாமணியைத் திருமார்புத் தொங்கலாக்கி, குண்டலகேசியைச் செவிமணியாக்கி, சூடாமணியை நெற்றிச்சுட்டியாக்கி, திருக்குறளைச் செங்கோலாகக் கொண்டு தமிழ் அன்னைக்கு உலகத் தமிழர்கள் அத்தனை பேரையும் ஒன்று கூட்டி மாநாடு நடத்திய பெருமையோடு, தமிழ் தாயின் தவப்புதல்வர் புரட்சித் தலைவர் கம்பீரமாக ஆட்சி நடத்திக்கொண்டு இருக்கிறார். தமிழ் தாய் இன்று பூரிப்புடன் நிற்கிறாள். ஏன் தெரியுமா? நாட்டு மக்கள் கூடினார்கள் கூடலிலே, ஆனால் கொடிய செயல்கள் ஒன்று கூட நடைபெறவில்லை. திருட்டு ஒன்று கூட நடைபெறவில்லை. ஏன், அங்கே திருடன் வரவில்லை?

...ட்கள் கடத்தல் இல்லை. ஏன் அங்கே கடத்தல்காரர் வரவில்லை? வழிப்பறி ஒன்று கூட இல்லை. ஏன் அங்கே வழிப்பறிக்காரன் வரவில்லை? ஆதலால், அந்தத் தமிழ் தாய் தலைநிமிர்ந்து நிற்கிறாள். உலகத் தமிழர்கள் கட்சிக் கண்ணோட்டம் இன்றி அந்த மாநாட்டில் கலந்தனர். உள்ளம் மகிழ்ந்தனர். பாராட்டும் தந்தனர். தமிழர்களை மதிக்கும் பாரதப் பிரதமர் இந்திரா அம்மையார் அவர்களும் கலந்து கொண்டார்கள். ஆனால் பெற்று வைத்த மாநாடு அது என்று திரு. சோமு அவர்களே, இந்திரா அம்மையார் அவர்கள் அரசியல் உணர்வு இல்லாத மாநாட்டில் கலந்து கொள்ள வந்து இருக்கிறேன் என்று சொல்லிச்சென்று இருக்கிறார் என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

ஆனால் அதே நேரத்தில் பாரதப் பிரதமர் வந்து வாழ்த்திய பிறகு, தமிழ் தாய்க்கு எடுத்த விழாவில் கலந்து கொள்ள விருப்பம் இல்லாத சில வயிற்றெரிச்சல்காரர்கள் பீற்றிக்கொள்கிறார்களே என்பதைப் பற்றி தமிழர்களுக்குக் கவலை இல்லை. 13,000 பி. அன்ட் சி. மில் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிற நேரத்தில், உலகத் தமிழர் மாநாடா என்று கூட திரு. சோமு அவர்கள் கேட்டார்கள். அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண புரட்சித் தலைவர் தன்னால் இயன்ற அத்தனையும் செய்து இருக்கிறார், செய்து கொண்டு வருகிறார். மாநில அரசு தன்னால் இயன்ற முயற்சிகளைச் செய்து வருகிறது என்று கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டி மத்திய அரசுக்கு மாநில அரசு அறிக்கை அனுப்பியுள்ளது. தொழிற் சங்க தலைவர்களை அழைத்து புரட்சித் தலைவர் அவர்கள் பேசியுள்ளார்கள். ஆனால் இந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டியது மத்திய அரசு. ஆதலால் கவர்னர் அவர்கள் விரைவில் சுமுகமான தீர்வு காண இந்த அரசு விரும்புகிறது என்று தன்னுடைய உரையில் கூறியுள்ளார்.

ஆனால், பி. அன்ட் சி. மில் வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்தது. அந்த பி. அன்ட் சி. மில் தொழிலாளர்களால் வடசென்னையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. லட்சுமணன் அவர்கள் மத்திய அரசில் நாடாளுமன்ற துணை சபாநாயகராக இருக்கிறார். அவர் தன்னுடைய வாக்காளர்களுக்காக மத்திய அரசை எந்த முறையில் வற்புறுத்தியுள்ளார் என்பதையும், ஏன் அமைதிக் காக்கிறார் என்பதையும் தி.மு.க.வினரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

இந்திய நாட்டிலே எந்த மாநிலமும் செய்யாத ஏதுவையைச் செய்யாத புரட்சித் தலைவர் ஆட்சியைப் பார்த்து, விவசாயி [illegible] எதிர்ப்பு அரசு என்று மாண்புமிகு திருவேங்கடம் அவர்கள் நேற்று குறிப்பிட்டார்கள். விவசாயிகள் அறப்போராட்டம்

செய்கிறார்களாம். விவசாயிகள் எந்தவிதமான வன்முறையிலும் ஈடுபடவில்லையாம். அவர்களை நான் கேட்கிறேன். திருவேங்கடம் அவர்களே, திருவேங்கடம் என்ற ஊரில் சாலையின் குறுக்கே மரங்களை வெட்டிப்போட்டு, பஸ் போக்குவரத்து தடைபட்டதால் கர்ப்பிணிப் பெண் பிரசவத்திற்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதே அது வன்முறையில்லையா? தடைகளை அகற்ற வந்த போலீசாரைத் தாக்கியது வன்முறை இல்லையா? போலீஸ்காரர்களை வேல் கம்பால் குத்திக்கொன்றது வன்முறை இல்லையா? எஸ். ஐ. அவர்களை அரிவாளால் வெட்டியது வன்முறை இல்லையா? போலீஸ் நிலையத்தை சூறையாடியது வன்முறை இல்லையா? விருதுநகரில் குடிநீர் குழாயை உடைத்தது வன்முறை இல்லையா? கோவை மாவட்டத்தில் பல்லடம் அருகே பாலத்தைத் தகர்க்க வெடிவைக்க முயன்றது வன்முறை இல்லையா? அவினாசி அருகே லாரிக்கு தீ வைத்துக் கொளுத்தியது வன்முறை இல்லையா? பால் லாரிகளைத் தடுத்து நிறுத்தி உப்பை அள்ளிக்கொட்டி பச்சிளம் பாலகர்களை பட்டினியால் வாட்டி வதைத்த பாதகச்செயல் வன்முறைச் செயல் இல்லையா? இவைகளெல்லாம் வன்முறைச் செயல்கள் இல்லை என்றால் வன்முறைக்கு தி.மு.க.வின் அளவுகோல் தான் என்ன?

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை)

சிம்சன் பிரதாப்சந்திரன் கொலை தான் உங்கள் அளவு கோலா? கொடுவாளால் வெட்டிக் கிழித்து அங்கங்களைப் பதம் பார்த்து மகிழ்ந்தீர்களே எங்கள் அண்ணன் மாணவச் சிங்கம் பாலசுந்தரத்தை; அது தான் உங்கள் அளவு கோலா? மதுரையில் மாண்புமிகு இந்திரா காந்தி அவர்களின் உயிரைப் பறிக்க ஏவி விடப்பட்ட ஈட்டி முனைகளைக் கூட வன்முறை இல்லை என்று சொல்பவர்கள் நீங்கள். சைக்கிள் செயின் என்ற புதிய ஆயுதத்தை அறிமுகம் செய்த சைக்கிள் செயின் வீரர்களே, விவசாயிகள் வன்முறையாளர்கள் அல்ல, அவர்கள் அறப்போர் தான் செய்கிறார்கள் என்றால், விவசாயிகளை இரும்புக்கரத்தால் அடக்குவேன் என்று சொல்லி, குண்டுமாரிப் பொழிந்து 18 உயிர்களைக் குடித்தீர்களே, எதற்காக? மின்சாரக் கட்டணத்தை பைசா குறைக்கவேண்டும் என்று கேட்டதற்கு 18 உயிர்களைப் பறித்தீர்களே, ஆனால் புரட்சித் தலைவர் சென்ற ஆண்டு 40 கோடி தள்ளுபடி செய்தார்.

[முற்பகல் 11.10]

இப்போது 62 கோடிக்கு அறிவிக்கப்பட்டது. ஆக 102 கோடி ரூபாய்க்கு கடன் நிவாரணம் செய்யப்பட்டுள்ளது. அகில இந்தியாவிலே எந்த மாநிலத்திலாவது, எந்த முதலமைச்சராவது, எந்த காலத்திலாவது இந்த அளவுக்கு செய்தது உண்டா?

** ** ** ** **

** மாண்புமிகு துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. மி. வின்சென்ட்] [1981 ஜனவரி 28

மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள் 7 ஆண்டுக் காலம் இந்த நாட்டை ஆண்டார்கள்.

** ** ** ** **

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வின்சென்ட் அவர்களுடைய பேச்சு தொடர்ந்து வந்துகொண்டிருக்கட்டும், இடையிலே வந்த இன்டரப்ஷன் பேச்சுக்களை எல்லாம் நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : அன்றைய தினம் அவர்களுடைய ஆட்சியில் விவசாயிகளுக்கென்று ஒரு காசு கூட நிவாரணம் தருவதற்கு முன்வராத கலைஞர் அவர்கள், இங்கே குறை கூறவந்திருப்பதைக் கண்டு விவசாய மக்கள் கேலி பேசுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலே மின் கட்டணம் மிகக் குறைவாக வாங்கப்படுவது தமிழகத்திலேதான். 1972—லே மின்சார உற்பத்திக்கு பயன்படுத்துகின்ற நிலக்கரி டன் ஒன்றுக்கு 79 ரூபாய். அப்போது மின்சாரக் கட்டணம் 12 பைசா. இப்போது 1980 ஆம் ஆண்டு ஒரு டன் நிலக்கரியின் விலை 160 ரூபாய். ஆக இன்றையதினம் உற்பத்திச் செலவு இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இந்த நிலையிலும் தமிழக அரசு விவசாயிகளிடமிருந்து வசூலிக்கின்ற மின்சாரக் கட்டணம் 12 பைசா தான். ஆனால் உத்தரப் பிரதேசத்திலே 27 காசும், வெஸ்ட் பெங்காலிலே 28 காசும், பஞ்சாபிலே 23 காசும், ஹரியானாவிலே 22 காசும், கர்நாடகத்திலே 24 காசும் மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. மின்சார உற்பத்தி அதிகமாக செய்கின்ற மாநிலத்திலே கூட நம்மைவிட அதிகமான மின்கட்டணம் வசூல் செய்யப்படுகின்றது. ஆனால் தமிழ் பண்பாட்டின் காரணமாக, தமிழ் மரபின் காரணமாக விவசாயிகள் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு கட்டணம் 12 பைசா தான் இங்கு இப்போது வசூலிக்கப்படுகின்றது. மத்திய விவசாயத்துறை அமைச்சர் திரு. ராம் வீரேந்திர சிங் அவர்கள் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது, விவசாயக் கடன்களை ரத்து செய்வது போன்ற காரியங்களை எந்த சர்க்காராலும், எந்தக் காலத்திலும் செய்ய முடியாது என்று சொன்னார். ஆனால் விவசாயிகளின் கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் நேற்றையதினம் சட்டமன்றத்திலே பேசினார். விவசாய கடனை வசூலிக்கத் தெரியாதவர்களாகவா அரசு என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் நேற்று

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆங்கில இணங்க அகற்றப்பெற்றது.

1981 ஜனவரி 28] [திரு. மி. வின்சென்ட்]

மறுத்துப் பேசினார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து முரண்பாடே நீங்கள் தான் என்று கேட்ட மாண்புமிகு ரகுமான்கான் அவர்களிடம் முரண்பாடு யார் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயச் சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களை, புரட்சித் தலைவர் சந்தித்துப் பேசுகிறேன் என்று சொன்னபோது அவர் வீட்டுக்கு வந்தால் கூட நான் சந்திக்க மாட்டேன் என்று கூறினார். அத்தனை விவசாய சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசவேண்டும் என்று சொன்னால் தன்னை மட்டும் அழைத்துப் பேச வேண்டும் என்று சொல்கிறார். அப்படி அவரை மட்டும் அழைத்துப் பேசினால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இருக்கின்ற விவசாய சங்கத்தின் தலைவர் அண்ணன் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களை அமைத்த தாகாதா? மற்ற விவசாய சங்கத்தினரை எல்லாம் அமைத்த தாகாதா? இப்படிப்பட்ட சர்வாதிகார எண்ணம் படைத்தவர் கருணாநிதி. திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு அளிக்கின்றதே என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது விந்தையிலும் விந்தையாக இருக்கின்றது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். துணைத் தலைவரவர்களே, நீங்கள்தான் சபையை நடத்துகிறீர்கள். அன்றைய தினம் நீங்கள் அவ்வாறு பேசக் கூடாது என்று கூறினீர்கள். ஆனால் இப்போது அவையிலே இல்லாத திரு. நாராயணசாமி அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றபோது அதை எப்படி அனுமதிக்கிறீர்கள்?

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, திரு. நாராயணசாமி நாயுடு பற்றிக் குறிப்பிட்டதை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : துணைத் தலைவரவர்களே, திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் பற்றி மாற்றுக் கருத்து சொன்னதற்காகவா அதை நீக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்?

திரு. அ. ரகுமான்கான் : சபையிலே இல்லாதவரை சர்வாதிகாரி என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார். அவ்வாறு சொல்வதற்கு மறுத்து சொல்வதற்கு ஆணத்தால் தான் அவ்வாறு அவர்கள் இங்கே இல்லாத திரு. நாராயணசாமி நாயுடு சொன்னதை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1981 ஜனவரி 28

[முற்பகல் 11.20]

திரு. ஆர். மணியாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இல்லை. நேற்றுக்கூட திரு. நாராயணசாமி நாயுடு அவர்களை சர்வாதிகாரி என்று குறிப்பிடப்பெற்று பேசப் பட்டிருக்கிறது. அவை பத்திரிகையில் கூட வந்திருக்கின்றன. அதை அனுமதித்த அவர்களை இன்றைக்கு திரு. வின்சென்ட் பேசும்போது மட்டும் ஏன் ஆட்சேபக் குரலை எழுப்புகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: யார் அதை அனுமதித்தது? சபாநாயகர் சேரில் உட்கார்ந்திருப்பவர்கள் தான் அனுமதித் திருப்பார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் சபையிலே இல்லை. சபையிலே இல்லாதவர்களைப் பற்றி ஏன் பேச வேண்டும்? விளக்கம் கொடுக்க அவர்களுக்கு சான்ஸ் இல்லாதபோது எப்படிப் பேசலாம்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஏற்கெனவே இது பற்றியெல்லாம் தீர்ப்பளித்திருக்கிறீர்கள். என்றாலும்கூட தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்ற முறையில் எடுத்துச் சொல்கிறேன். சபையிலே இல்லாதவர்களைப் பற்றி குற்றச்சாட்டுக்களைத்தான் சொல்லக்கூடாது. ஆனால் வெளியிலே இருக்கிறவர்களைப் பற்றி கருத்துக்களைச் சொல்லலாம். ஒருவரைப் பற்றி ஜனநாயகவாதி என்றோ, சர்வாதிகாரி என்றோ குறிப்பிட்டுச் சொல்லலாம். ஆனால் பணம் வாங்கினார், லஞ்சம் வாங்கினார் என்பது போன்ற குற்றச்சாட்டுக்களைத்தான் சொல்லக்கூடாது....

திரு. அ. ரகுமான்கான்: கறை படிந்த கரம் என்று சொல்லலாமா? ஊழல் என்று சொல்லலாமா?..... (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூட டெல்லி சர்க்காரைப் பற்றி எல்லாம் சொல்லி, பிரதமர் அவர்களைப் பற்றிக் கூடச் சொன்னார்கள். பிரதமர் அவர்கள் சபையிலே இல்லை என்பதற்காக சொல்லாமல் விட்டு விட முடியுமா? எனவே அவர்களைப் பற்றிய—அதாவது வெளியிலே இருப்பவர்களைப் பற்றிய கருத்துக்களைச் சொல்லலாம், ஆனால் குற்றச் சாட்டுகளைத்தான் சொல்லக்கூடாது.

1981 ஜனவரி 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுதான் நான் முன்பே அளித்த தீர்ப்பும். மற்றவர்களைப் பற்றிய கருத்துக்களை ஓபினியனைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஆனால் குற்றச்சாட்டுக்களைத் தான் சொல்லக் கூடாது. திரு. வின்சென்ட் தொடர்ந்து பேசுங்கள்..

திரு. மி. வின்சென்ட். அமாவாசை என்றும் இருள் சூழ்ந்து விட்டது என்றும் குறிப்பிட்டார்கள். குருடனுக்கு வெண்ணிலாவும் ஒன்றுதான், அமாவாசையும் ஒன்றுதான்....

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தாங்கள் அதைப் பற்றி தீர்ப்பு அறிவிக்கவில்லையே, அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவு இடுங்கள்.... (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஏற்கெனவே சொல்லியாகிவிட்டது. குற்றச்சாட்டுகள் தான் சொல்லக்கூடாது. கருத்துக்களைச் சொல்லலாம் என்று. சர்வாதிகாரி என்று குறிப்பிடுவது ஒன்றும் குற்றச்சாட்டு கிடையாது. நேற்று உமாநாத் அவர்கள் கூட அப்படி பேசியிருக்கிறார். லஞ்சம் வாங்கினார் என்று குறிப்பிட்டு குற்றச்சாட்டாக சொல்வதுதான் கூடாது....

திரு. துரை முருகன்: * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். நீங்கள் பேசியதெல்லாம் சபை குறிப்பில் இடம் பெறாது. நீக்கும்படி உத்தரவு இடுகிறேன். திரு. வின்சென்ட் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

திரு. துரை முருகன்:***

திரு என். இட்டப்பா: துணைத் தலைவர் அவர்களே, நான் வேறு ஒன்றைத்தான் கேட்கப் போகிறேன். தயவுசெய்து அனுமதி அளிக்க வேண்டும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 10 பேர் பேசவேண்டியிருக்கிறது. இப்போது உங்களுக்கு அனுமதி அளித்தால் அதற்கு பதில் சொல்ல வேறு ஒருவருக்கு அனுமதி அளிக்க வேண்டியிருக்கும். இப்படியே போனால், நாளைக்கு இந்த ஆளுநர் உரைமீது நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை முடிக்க முடியாமல் போய்விடும். இருந்தாலும் அனுமதியளிக்கிறேன். சொல்லுங்கள்.

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[1981 ஜனவரி 28

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த விவாதத்தின்போது சில விரும்பத்தகாத பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருந்தாலும் குறிப்பாக எனது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் தன்னுடைய இடத்தை விட்டு மாறி வந்தது மட்டுமல்லாமல் இங்கே எதிர்க்கட்சியில் வீற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது லூஸ் என்ற அடிப்படையில் தலையை அடிக்கடி ஆட்டிக்கொண்டே இருந்தார்கள். நான் பார்த்துக் கொண்டே இருந்தேன். மற்ற உறுப்பினர்களும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வதுதான் வழக்கம். அவர் இல்லை என்று சொல்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.

திரு. மி. வின்சென்ட்: ஆந்தைக்கு பகல்கூட அமாவாசைதான். அரசியல் ஆந்தைகளைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை.

*** *** * ***

(கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிப்பட்ட முறையில் இங்கே பேச வேண்டாம். தனிப்பட்ட முறையில் விமர்சனம் இங்கே தேவையில்லை.

(கூச்சல்-குழப்பம்)

[முற்பகல் 11.30]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். திரு. ப. நெடுமாறன் அவர்கள் விவாதத்தைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(கூச்சல், குழப்பம்)

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

1981 ஜனவரி 28]

டாக்டர் மு. கருணாநிதி: ஒரு நிமிடம் நான் பேச அனுமதி வேண்டுகிறேன். நானும், பேராசிரியர் அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் அறையில் அமர்ந்திருந்தோம். என்னுடைய அருமை நண்பர், தம்பி நாஞ்சில் வின்சென்ட் பேசும்போது சொன்னார்கள்.

* * *

என்று சொன்னதற்குப் பிறகுதான், இந்த வம்பு ஆரம்பமாகி இருக்கிறது. இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வின்சென்ட் அவர்களைப் பேச அனுமதித்தேன். நேரம் முடிந்து விட்டது. அவர் குறிப்பிட்ட வார்த்தைகளை சபைக் குறிப்பிலே இருந்து--கலைஞர் சொல்லியது உட்பட நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

* திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே ஆளுநர் உரையைப் பற்றிய எங்கள் கட்சியினுடைய கருத்தை வெளியிட வாய்ப்பளித்ததற்காக நான் தங்களுக்கு நன்றி தரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவதாக, சீரும் சிறப்புமாக நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றி ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகமும், தமிழ் கூறும் நல்லுலகும் பெருமைப்படும் வகையில் அந்த மாநாட்டை நடத்தியதற்காக தமிழக அரசுக்கு என்னுடைய இதயபூர்வமான பாராட்டுதலை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, அதையொட்டி மதுரை மாநகரில், குறிப்பாக என்னுடைய தொகுதியில் வளர்ச்சித் திட்டங்களைச் சிறந்த முறையில் நிறைவேற்றித் தந்தமைக்காக இந்த அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி தமிழ் வளர்ச்சிக்கான சில கருத்துக்களையும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

உலகம் பூராவிலும் இருந்தும் ஏராளமான தமிழறிஞர்கள் இந்த மாநாட்டுக்கு வந்தார்கள். அவர்களுடைய அரிய ஆராய்ச்சிக் கருத்துக்களை எல்லாம் அந்த மாநாட்டில் அவர்கள் வெளியிட்டார்கள். மேற்கு ஜெர்மனியில் இருந்து என்னுடன் படித்த டாக்டர் தாமோதரன் என்ற தமிழறிஞர் இங்கே வந்து சொன்ன கருத்தினையும் இந்த அவையின் முன்னால் வைக்க விரும்புகிறேன். ஐரோப்பிய நாடுகளில் எல்லாம் முக்கியமான நகரங்கள் எல்லாவற்றிலும் ஏறத்தாழ இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் ஓலைச் சுவடிகள் இன்ன ஓலைச் சுவடிகள் என்று தெரியாத நிலையில் அந்த நாட்டு மியூசியங்களிலும், நூலகங்களிலும் அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. அந்த ஓலைச் சுவடி

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

களைப் படி எடுத்து அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அச்சிட்டு வழங்கும் பொறுப்பினைத் தமிழக அரசு செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் வற்புறுத்திக் கொள்கிறேன்.

ஓலைச் சுவடிகளின் காலம் என்பது—நானூறு, ஐநூறு ஆண்டுகளுக்குத்தான் அழியாமல் இருக்குமே தவிர, அதற்குப் பின்னால் அவை எல்லாம் அழிந்துபடுகிற நிலைமை இருக்கிறது. ஏற்கனவே, 300 ஆண்டு காலத்திற்கு மேலாக அந்த ஓலைச் சுவடிகள் ஐரோப்பிய நாடுகளிலுள்ள எல்லா நகரங்களிலும் இருக்கின்றன. என்ற உண்மையையும் எந்தெந்த நகரங்களில் அவ்வாறு ஓலைச் சுவடிகள் இருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தையும் அவர்கள் அந்த மாநாட்டில் கொடுத்தார்கள். அந்த ஓலைச் சுவடிகளை எந்தத் தனி மனிதனும் அச்சிட்டு வெளியிட முடியாது. தமிழக அரசு இங்கிருக்கக்கூடிய பல்கலைக் கழகங்கள் ஏதாவது ஒன்றின் மூலம் தகுந்த ஆராய்ச்சி அறிஞர்களை அனுப்பி அவற்றை எல்லாம் அச்சிட்டு வெளியிடுவதன் மூலம் பல அரிய உண்மைகள் வெளிவர வாய்ப்பு ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

இன்றைக்கு தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது. இலங்கையில் தமிழ் ஆட்சிமொழியாக இருக்கிறது. மலேசியாவில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது. அங்கெல்லாம் தமிழர்கள் அமைச்சர்களாக வீற்றிருக்கிற பெருமை நமக்கு இருக்கிறது. ஆனால், இங்கே நாம் ஆட்சிச் சொற்கள், கலைச் சொல்களுக்கு அதற்கான அறிஞர்களைக் வைத்து ஆட்சிச் சொற்களையும் கலைச் சொற்களையும் ஒரு விதமாக உருவாக்கி வருகிறோ. இலங்கையிலும் அவ்வாறு உருவாக்கியிருக்கிறார்கள். மலேசியாவிலும் உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் ஒன்றுக்கொன்று முரண்பாடாக, ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாத வகையில் ஆட்சிச் சொற்களும் கலைச் சொற்களும் ஒவ்வொரு நாட்டிலும் உருவாகிக் கொண்டிருக்கிறது. இதையும் ஒருங்கிணைத்து. தமிழ் ஆட்சி மொழியாக இருக்கக்கூடிய நாடுகளில் எல்லாம் ஒரே மாதிரியான ஆட்சிச் சொற்களும், ஒரே மாதிரியான கலைச் சொற்களும் இருப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்துக் கொள்ளவேண்டும்.

தமிழர்கள் மோரிசஸ் தீவு போன்று உலகம் பூராவும் பதின்மூன்று நாடுகளில் இருக்கிறார்கள், வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இந்தத் தமிழர்களிலே பல பேர் 300 ஆண்டுகளுக்கு முன்னால் 400 ஆண்டுகளுக்கு முன்னால் குடியேறியவர்கள். அவர்களிலே பலர் தங்களுடைய தாய்மொழியை மறந்துவிடக்கூடிய பரிதாப

மான நிலைமை இருப்பதை உலகத் தமிழ் மாநாட்டில் அந்த நாடுகளில் இருந்து வந்தவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நாடுகளுக்கு நாம் நம்முடைய செலவில் தமிழாசிரியர்களை அனுப்பி தமிழ் கற்றுத்தர வழிவகைகளை செய்வதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த நாடுகளைச் சேர்ந்த தமிழ் மாணவர்களை தமிழ்நாட்டுக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்து வரவழைத்து அவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் வற்புறுத்துகிறேன்.

கல்வித் துறையில் இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிற பல சிரிய நடவடிக்கைகளுக்காக என்னுடைய கட்சியின் ஆதரவை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமாக பச்சையப்பன் அறக்கட்டளையை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அவையில் வற்புறுத்தியவர்களில் நானும் ஒருவன்,

[முற்பகல் 11—40]

அதை இந்த அரசு அவசரச் சட்டத்தின் மூலம் எடுத்து ஊழல் மலிந்த டிரஸ்ட் போர்டை கலைத்து ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்தியிருப்பதை நான் உளமாரப் பாராட்டுகிறேன். பல ஆண்டுக்காலமாக பச்சையப்பன் அறக்கட்டளையிலே அலுவலர்களும், ஆசியர்களும், மாணவர்களும் போராடிவந்த கோரிக்கை இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகாலத்திற்கு முன்னாலே டிரஸ்டிகளாக இருந்தவர்கள் செய்த ஊழல்களைக் கண்டுபிடித்து அவர்களை குற்றவாளிக் கூண்டிலே ஏற்றி உரிய தண்டனையை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே வற்புறுத்த விரும்புகிறேன். பச்சையப்பன் டிரஸ்டுக்கு ஏறத்தாழ 30 கோடி ரூபாய் சொத்துக்கள் இருப்பதாக குத்துமதிப்பாகச் சொல்லப்படுகிறது. அதற்கு சொத்துக்கள் எங்கே எங்கே இருக்கின்றன, அவற்றின் மதிப்பு என்ன என்பதை எல்லாம் ஆராயவும் அந்தச் சொத்துக்களின் வருமானத்தை அதிகப்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் என்ன என்ன எடுக்க வேண்டுமோ அதை எடுப்பதற்கும் இந்த அரசு துரித நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

தமிழகத்திலே ஏற்கெனவே 5 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இன்னும் நான்கு அதிகப்படுத்துகின்ற முறையிலே அரசு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. கோவை, திருச்சி, காரைக்குடி அதோடு தமிழ்ப் பல்கலைக்கழகம் என்ற பெயராலே ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட இருப்பதும் ஆக மொத்தம் 9 பல்கலைக்கழகங்கள் வர இருப்பதை நான் வரவேற்கிறேன். அதைப் போல் உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்று மதுரையிலே அமைக்கப்பட இருப்பதையும் நான் வரவேற்கிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] [1981 ஜனவரி 28

அடுத்து, மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தைப் பற்றியும் சில விபரங்களை நான் இந்த அவையின் முன்னாலே வைப்பதற்கு விரும்புறேன்; அந்தப் பல்கலைக் கழகத்திலே நடைபெறுகின்ற தவறுகளை சென்ற கூட்டத்திலேயே நானும் மற்ற உறுப்பினர்களும் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் எடுத்துக்காட்டி யிருக்கிறோம். அங்கே ஆசிரியர்கள் போராடினார்கள். அவர்களுக்கு ஆதரவாக மாணவர்களும் போராடி இருக்கிறார்கள் ஆனால் அதற்குப் பின்னாலே நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் முன்னிலையிலே ஆசிரியகர்ளுக்கும் பல்கலைக் கழக நிர்வாகத்தினருக்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்து, உட்கார்ந்து பேசி ஒரு சமரச உடன்பாடு 14—10—1980 அன்று செய்யப்பட்டது. அதற்கு என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உதவிகரமாக இருந்தோம் அப்படிச் செய்யப்பட்ட உடன்பாட்டினை, கல்வியமைச்சர். முன்னாலே ஒப்புக்கொண்ட துணைவேந்தர், சிண்டிகேட் உறுப்பினர்கள் எல்லாம் இருந்து கையெழுத்திட்ட உடன்பாட்டினை இந்தநிமிடம் வரை அந்தப் பல்கலைக் கழக நிர்வாகம் அமல் நடத்தாமல் இருந்து வருகிறது. ஆசிரியர்கள் போராட்டத்திலே சிறைப்படுத்தப்பட்டார்கள். சிறைப்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் எந்தவித நீபந்தனையும் இல்லாமல் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதும், அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் வாங்கப்பட வேண்டும் என்பதும் அந்த உடன்பாட்டின் முக்கியமான அம்சங்கள் ஆகும். ஆனால் ஆசிரியர்கள் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தால்தான் விடுதலை செய்யப்படுவார்களுள் என்ற நிலையை அரசு எடுத்து அதற்குப் பிறகு அவர்கள் தங்கள் சொந்த ஜாமீனிலே வெளியே வந்திருக்கிறார்கள். அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லை. அந்த வழக்குகளை உடனே வாபஸ் பெறுவதற்கு அவர்கள் வற்புறுத்தப்பட வேண்டும். பல்கலைக்கழக நிர்வாகத்திலே பதிவாளராக இருக்கக்கூடியவர் ஆசிரியர்களுடைய 14 அம்ச கோரிக்கைகளை கையெழுத்திட்டதை ஏற்காமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அவரை தடுப்பதற்கு பலகலைக்கழக துணைவேந்தராலும் மற்றவர்களாலும் முடியவில்லை. அதன் விளைவாக அங்கே அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்களைப் பழிவாங்கும் முயற்சியிலே ரிஜிஸ்தரார் ஈடுபட்டிருக்கிறார். அமைச்சர் முன்னாலே ஏற்றுக்கொண்ட 14 அம்சக் கோரிக்கைகளை அவர்கள் எற்றுக்கொண்டதை அமல் படுத்த வைக்க வேண்டுமென்று இந்த அரசு எடுத்துச்சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இன்றைக்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் போராட்டத்திலே இன்றைக்குப் பலர் சிறைப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்களோ பல்கலைக் கழகத்தை அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எந்தக் கால கட்டத்திலேயும் சொல்லவில்லை. அரசும் அப்படிச் சொல்ல வில்லை. மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கூட சில நாட்களுக்கு முன்னாலே அதைத் தெளிவுப்படுத்தியிருக்கிறார்கள்.

1981 ஜனவரி 28] [திரு. ப. நெடுமாறன்]

ஆனால் சென்ற ஆளுநர் உரையிலே அரசு கொடுத்த வாக்குறுதியை இந்த அரசு நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்துகிற பொறுப்பும், கடமையும் எங்களைப் போன்றவர்களுக்கு உண்டு. 1928 ஆம் ஆண்டிலே போடப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்தை இன்றைய சூழ்நிலைக்கேற்ப, இன்றைய தேவைகளுச்கேற்ப தேவையான திருத்தங்களை அரசு நிச்சயமாகக் கொண்டு வரும் என்ற உறுதி சென்ற ஆளுநர் உரையிலே வழங்கப்பட்டது. அதை இந்த அரசு செய்ய வேண்டுமென்றுதான் ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்களே தவிர, பல்கலைக் கழகத்தை அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நிலை ஆசிரியர்களாலே ஒருபோதும் சொல்லப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அங்கே ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. படிக்கச் செல்லுகின்ற மாணவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. சமூக விரோத சக்திகள் உள்ளே இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதோடு மட்டுமல்லாமல், அந்தப் பல்கலைக் கழகம் அமைதியாக நடைபெறுவதற்கு எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்வதற்கு அரசு முன்வர வேண்டும்.

ஏற்கெனவே சென்ற விவாதத்தின்பொழுது நான் தெளிவாக ஒன்றைச் சொன்னேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 'ரேசிடென்ஷியல் யூனிவர்சிட்டி' என்று சொல்லக்கூடிய ஒரு அமைப்பு. அதைப் பொறுத்தவரையில் மேற்பட்டப்படிப்பு மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை மட்டும் இருந்தால் போதும்; மற்ற வகுப்புகளையெல்லாம் குறைத்தால்தான் அந்தப் பல்கலைக் கழகத்தை அமைதியாக நடத்துகின்ற சூழ்நிலை உருவாகும் என்று சொல்லி அந்தக் கருத்துக்களை மீண்டும் வற்புறுத்துகிறேன்.

விவசாயச் சீர்திருத்தத்தைப் பற்றியும் இந்த உரையிலே அரசு சொல்லியிருக்கிறது. பினாமி நிலங்களை ஒழிப்பதற்காக ஒரு சட்டத்தை அரசு இந்தச் சட்டமன்றத்திலே கொண்டுவந்து எல்லாத் தரப்பினரின் ஆதரவையும் பெற்று அது நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதற்கு இன்னும் குடியரசுத் தலைவரின் அனுமதி கிடைக்காதது வருந்தத்தக்கது. அது என்ன காரணத்தால் என்று எனக்குத் தெரியவில்லை. பினாமி ஒழிப்பு நடவடிக்கைகள் என்பதை அரசு எல்லா தரப்பினரின் ஒத்துழைப்போடு முழுமையாக அமல் நடத்தவேண்டும். இந்தச் சட்டத்திற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்திலே, கண்டிஷன் பட்டா லீஸ் என்ற பெயரால் ஆங்கிலேயர் ஆட்சியிலே சுமார் 30,000 ஏக்கர் நிலம் அங்கேயிருக்கின்ற நிலப் பிரபுக்களுக்குக் கொடுக்கப்பட்டது என்ன காரணத்திற்காக என்றால், அவர்கள் மரங்களை வளர்த்து தோப்புகளாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக 30,000 ஏக்கர் நிலம் ஆங்கிலேயர் காலத்தில் சிரப்புக் கிராமங்கள் என்ற பெயரிலே கொடுக்கப் பட்டன. ஆனால் பிறகு அந்தத் தோப்புகளெல்லாம் அழிக்கப் பட்டு, அவைகள் விளைநிலங்களாக, சட்டவிரோதமான முறையிலே மாற்றப்பட்டிருக்கின்றன. அவைகள் இந்தப் பினামி ஒழிப்புச் சட்டத்திற்கு உட்பட்டு வராத வகையிலே இன்றைக்கு இருக்கின்றன. அத்தகைய நிலங்கள் எத்தகையவை என்பதைப் பார்த்து அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்தபட்சக் கூலி கொடுக்காமல் இருக்கக்கூடிய நிலப் பிரபுக்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன் வந்திருப்பதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இது வெறும் வார்த்தை அளவிலே இல்லாமல் தனியாக என்ஃபோர்ஸ்மெண்ட் பிரிவு அமைக்கப்பட்டு அதன் மூலம் விவசாயிகளுக்கு எந்தெந்த நிலப் பிரபுக்கள் குறைந்த பட்சக் கூலி கொடுக்க மறுக்கிறார்களோ அந்த நிலப் பிரபுக்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடார்க்காடு மாவட்டத்திலேயும், தர்மபுரி மாவட்டத்திலேயும் உள்ள பிரச்னைகளைப்பற்றி முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நான் என்னுடைய கருத்தை ஒரே வரியிலே சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அங்கேயிருக்கின்ற போராட்டம் நிலப் பிரபுக்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையிலே உருவாகியிருக்கின்ற போராட்டம். அதை வெறும் சட்டம்—ஒழுங்கு பிரச்னையாக மட்டும் கருதாமல் சமூக, பொருளாதாரப் பிரச்னையாகக் கருதி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம அதிகாரிகளைப் பற்றிய பிரச்னையிலே அரசு எடுத்த நடவடிக்கைக்கு என்னுடைய கட்சியின் ஆதரவு உண்டு. ஏனென்றால், 1935 ஆம் ஆண்டு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிய ஒரு தீர்மானத்திலே, கிராம அதிகாரிகள் வெள்ளையர்களின் அடிவருடிகளாக, வெள்ளையர்களின் ஏஜெண்டுகளாக இருக்கிறார்கள், ஆகவே கிராம அதிகாரிகளை ஒழிக்க வேண்டுமென்று நிறைவேற்றியிருக்கிறது. அந்த அடிப்படையிலே கிராம அதிகாரிகளின் பதவிகளை ஒழிப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் அந்த கிராம அதிகாரிகளில் யார் யாருக்குத் தகுதியிருக்கிறதோ, யார் யார் இளைஞர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பைக் கொடுக்க அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற் பகல் 11-50]

அதே நேரத்திலே மற்றவர்களுக்கு நியாயமான நஷ்டஈடு வழங்கப்படுவதற்கும் அரசு அனுதாபத்தோடு இந்தப் பிரச்னையைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

அதேபோல் முக்கியமாக மதுவிலக்கு பிரச்னைப்பற்றி இங்கே ஆளுநர் உரையில உறுப்பினர்களின் மனம் திறந்த கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன என்று சொல்லப் பட்டிருக்கிறது. மதுவிலக்குப் பிரச்னையைப்பற்றி எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையிலே அதை நாங்கள் உணர்ச்சி பூர்வமாக அணுகுகிறோம். மகாத்மா காந்தியடிகளினாலே அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டு 1937—38-லே எல்லாம் காங்கிரஸ்காரர்கள் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்து கள்ளுக்கடை மறியல் நடத்தி அதற்காகச் சிறைவாசம் சென்றார்கள். இது மக்கள் மத்தியிலே பிரச்சார இயக்கமாக நடத்தப்பட்டது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னாலே, ஒவ்வொரு மாநிலமாக மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு, தமிழகத்திலே முழுமையான மதுவிலக்கு அமுலுக்கு வந்தது. ஆனால், குடிப்பழக்கம் ஒரு தலை முறைக்கு மட்டுமே இருந்து கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொண்டு போன காரணத்தாலே மதுவிலக்கு ஓரளவுக்கு வெற்றி கரமாக காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே நடத்தப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆட்சியிலே மதுவிலக்கை ஒரு தடவை தளர்த்தினார்கள். அதன் விளைவாக புதிய தலைமுறை இளைய தலைமுறை, குடிக்கப் பழகிற்று.

அந்தத் தலைமுறை, அந்தப் பிரச்னையிலிருந்து விடுபட முடிய வில்லை. ஆகவே, அந்தப் பிரச்னையை ஒரு ஒழுக்க ரீதியாக மட்டுமல்ல, ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையை அழிக்கக் கூடிய பிரச்னையாக இந்த அரசு கருத வேண்டும்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையிலே கடந்த காலத்திலே மிக உறுதியான கருத்தினைச் சொல்லி யிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, நேஷனல் டெவலப்மெண்ட் கவன்சில் மீட்டிங்கிலே, 1980, ஆகஸ்ட் 30, 31-லே, டெல்லியிலே நடைபெற்ற கூட்டத்திலே, நாங்கள் மதுவிலக்கை பரிபூரணமாக அமுல்படுத்துகிறோம். அதற்கு மத்திய அரசு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்ற கருத்தினை அங்கே வலியுறுத்தி இருக்கிறார். அதன் பொருள் நாங்கள் தொடர்ந்து மதுவிலக்கை அமல் படுத்துவோம். மத்திய அரசு போதுமான நஷ்டஈடு அளிக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்திலிருந்து தயவு செய்து நீங்கள் பின் வாங்கக்கூடாது. மது விலக்கைப் பரிபூரணமாக அமுல்படுத்துங்கள். அது ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையை பாதிக்கக்கூடிய ஒரு பிரச்னை. ஆகவே, இந்தப் பிரச்னையிலே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள்

மத்திய அரசிடம் போராடி அதற்குரிய நஷ்டஈட்டைப் பெற்றாவது ஏழை எளிய மக்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்த விரும்புகிறேன். விவசாயிகள் போராட்டத்தைப் பற்றியும், இந்த நேரத்திலே. . . . (பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பெற்றன)

திரு. எல். இளையபெருமாள் : நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொன்னதை நான் முழுமையாக வரவேற்பதோடு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு நஷ்டஈடு கொடுத்தால் அதை அமுல்படுத்துவதாகச் சொல்லப்பட்டது என்று அவர் சொன்னார். மைய அரசு கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் தமிழக அரசினுடைய தலையாய கடமை என்பது அரசியல் சாசனப்படி இருப்பதோடு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் இந்த விஷயத்திலே உறுதியாக நிலை நாட்டுவோம் என்று இரக்கத்தோடு சொன்ன கருத்து அது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, மைய அரசு கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் செய்ய வேண்டுமென்று கருத்து இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இதைச் சொல்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : உறுப்பினர் மாண்புமிகு இளைய பெருமாள் அவர்கள் சொல்லிய கருத்தை வரவேற்கிறேன். ஆனால், மத்திய அரசு ஏற்கெனவே மாநிலங்களுக்கு மதுவிலக்குக் கொள்கையிலே 50 சதவீதம் நஷ்டஈடு கொடுப்பதாகக் கொள்கை அளவிலே ஒத்துக்கொண்டிருக்கிறது. அதை மத்திய அரசும் அறிவித்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, இங்கே சென்னை நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்குக் கட்டளை கால்வாயிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிற ஒரு திட்டமும் அரசினாலே அறிவிக்கப்பட்டது. ஏற்கெனவே காவேரியிலே ஓடிக்கொண்டிருக்கிற அந்த நீரை இங்கே சென்னை நகருக்குக் கொண்டு வந்தால் தங்களுக்குப் பாதகம் ஏற்படும் என்று தஞ்சை, திருச்சி, மாவட்ட விவசாயிகள் இன்றைக்குச் சந்தேகம் எழுப்பியிருக்கிறார்கள். இந்த நேரத்திலே அரசுக்கு, ஏற்கனவே வகுக்கப்பட்ட இன்னொரு திட்டத்தை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்தின் நீர்ப்பாசனத்துறை ஸ்டேட் அமைச்சர் அவர்கள் சென்ற டிசம்பர் 15—ஆம், தேதி ஒன்றை அங்கே நாடாளுமன்றத்திலே அறிவித்தார்.

கிருஷ்ணா நதிநீரை தமிழகத்திற்கு, சென்னை நகரத்திற்கு குடிநீருக்காகக் கொண்டுவரும் பிரச்னை பற்றி முழு ஆய்வு நடத்தும் படி தமிழக அரசுக்கு உத்தரவிட்டிருப்பதாக அவர் பாராளுமன்றத்திலே அறிவித்தார். ஆனால் இந்த கிருஷ்ணா நதி நீரை சென்னை நகருக்குக் கொண்டுவரும் பிரச்சினை 60 ஆண்டுகளுக்கு முன்னாலே 1920-லே மேட்டூர் அணையைக் கட்டிய கர்னல்

எல்லிஸ் என்ற ஒரு ஆங்கிலேய என்ஜினியர் இதற்காக ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுத்திருக்கிறார். 1947-லே கிருஷ்ணா பென்னாறு திட்டத்தை விரிவாக ஆய்வு செய்து அன்றைக்கு இருந்த சென்னை மாநில அரசு உத்தரவிட்டது. 1951-லே விரிவான திட்டம் வகுக்கப்பட்டது. அது அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டது. இந்தக் கிருஷ்ணாவிலிருந்து பெண்ணையாருக்குக் கொண்டுவந்து, பெண்ணையாற்றிலிருந்து தமிழகத்திற்கு 2 கால்வாய்கள் மூலம் பெண்ணையாறு தெற்குக் கால்வாய் சென்னை கால்வாய் மூலம் கொண்டுவர திட்டமிடப்பட்டது. முதல் கால்வாய் 206 மைல் நீளமும், இரண்டாவது கால்வாய் 200 மைல் நீளமும் இருக்கும். அதன் மூலம் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏறத்தாழ 5½ லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறக்கூடிய ஒரு திட்டம் இது. இதன் மூலம் பூண்டி நீர்த்தேக்கமும் செம்பரம்பாக்கம் ஏரிகள் போன்றவைகள் எல்லாம் இந்தக் கால்வாய்களோடு இணைக்கப்படுகின்ற காரணத்தாலே போதுமான குடிநீர் சென்னைக்குக் கிடைக்கும். ஏற்கனவே மத்திய பாசனத்துறை அமைச்சர் 23-3-63-லே மத்திய நீர்ப்பாசனக் கமிஷன் அளித்த அறிக்கையை நாடாளுமன்றத்திலே கொடுத்திருக்கிறார். அதன்படி தமிழகத்திற்கு 15.டி.எம்.சி. தண்ணீர் கிருஷ்ணா நதியிலிருந்து கொடுக்க வேண்டும் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக சர்வே கற்கள் எல்லாம் அன்றைக்கு, 1951-லே நடப்பட்டு, அந்தக் கற்கள் எல்லாம் இன்னும் இருக்கின்றன. அதைப்பற்றிய புகைப்படங்கள் எல்லாம் ஏற்கனவே முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். (மணி அடிக்கப் பட்டது) எனக்கு அரைமணி நேரம் தேவை. முன்பு பேசியவர்களுக்கு ½ மணி கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் : ஆளுநர் உரையை ஒட்டிப் பேசுங்கள். அதை விமர்சனம் செய்யுங்கள். (குறுக்கீடு) அப்போதுதான் குறிப்பிட்ட நேரத்திலே முடிப்பதற்கு வசதியாக இருக்கும். இன்னும் 7, 8 பேர்கள் பேச வேண்டும்.

திரு. ப. நெடுமாறன் : இதிலே முக்கியமான சில கொள்கை அறிவிப்புகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அண்மைக் காலத்திலே சொன்னார்கள். அதிலே ஒன்று ஜனாதிபதி ஆட்சி முறையை வரவேற்பதாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த வரவேற்பை அவர் எந்த அடிப்படையில் அறிவித்தார் என்று எனக்குத் தெரியவில்லை.

ஏற்கனவே இந்த மன்றத்தில் இந்தப் பிரச்சினை எழுப்பப் பட்டு பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆகவே என்னுடைய கருத்தையும் இந்த வாதத்திலே சுருக்கமாக சொல்ல விரும்புகிறேன். நாடாளுமன்ற ஜனநாயக முறை என்பது அன்றைக்கு அரசியல் நிர்ணய சபையிலே நம்முடைய பெரிய தேசியத் தலைவர்கள் எல்லாம் இருந்து

[திரு. ப. நெடுமாறன்] [1981 ஜனவரி 28

ஏற்றுக்கொண்ட ஒரு முறை. இந்த 33 ஆண்டுகளாக அந்த முறை வெற்றிகரமாக நடைபெற்று வந்திருக்கிறது என்பதிலே சந்தேகம் இல்லை. இன்றைக்குத் திடீரென்று இந்த முறையை மாற்ற வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் என்ன காரணத்திற்காக, என்ன நியாயத்திற்காக அந்த முறையை மாற்ற வேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்பதற்கு ஒரு நியாயமான காரணத்தைகூட அவர்களாலே சொல்ல முடியவில்லை. நாடாளுமன்ற ஜனநாயக முறையிலே பிரதம மந்திரியும் அமைச்சரவையும நாடாளு மன்றத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். பொறுப்பு வாய்ந்தவர்கள். ஆனால் ஜனாதிபதி ஆட்சி முறையிலே ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டவர் அல்ல. நாடாளுமன்றம் வெறும் ஆலோசனை சபையாக விளங்கும் என்பது ஒன்று.

[நண்பகல் 12-00]

இரண்டாவதாக, நாடாளுமன்ற ஜனநாயக முறையை மாற்றி, ஜனாதிபதி ஆட்சி முறைக்குக் கொண்டுவருவதானால் இந்தோநேசியாவில் சுகார்டோ கதி என்ன? முஜிபூர் ரகுமான் கதி என்ன என்பதை எல்லாம் சரித்திரம் நமக்கு உணர்த்தும். ஆகவே, அந்த முறை அல்ல இதற்குப் பரிகாரம். ஏற்கெனவே இருக்கிற முறையில் போதுமான அதிகாரம் இந்த அரசுக்கு இருக்கிறது. முறையை மாற்றிவிடுவதால் மக்கள் பிரச்சனையைத் தீர்த்துவிட முடியாது. மாறாக மக்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று உறுதியாக செயல்பட்டால் தான் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியும்.

நாடாளுமன்ற ஜனநாயக முறையை மாற்றி, ஜனாதிபதி ஆட்சி முறைக்கு வந்தால், பின்னால் இந்த மாநிலத்தில் சட்ட மன்றம் இருக்காது; முதலமைச்சர் இருக்க மாட்டார்; அமைச்சர்கள் இருக்கமாட்டார்கள்; ஜனாதிபதியால் நியமிக்கப் பட்ட ஆளுநர்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துவார் ஜனாதிபதி ஆட்சி முறையை நம்முடைய முதலமைச்சர் எதிர்க்க வில்லை; அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

அதைப்போல தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஆதரிப்பதும் தேவையில்லை. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றி அபிப்பிராயம் சொல்லாவிட்டாலும் அவர்கள் இன்னொரு கட்டத்திலே சொன்னார்கள், தேசிய பாதுகாப்புச் சட்டம் இந்த தேசத்திற்குத் தேவையில்லை என்று சொன்னார்கள். இப்போது எந்த அபாயமும் இல்லை; உள்நாட்டு கலவரம் இல்லை; குழப்பம் இல்லை; வெளிநாட்டு அபாயமும் இல்லை. எதுவுமே

1981 ஜனவரி 28] [திரு. ப. நெடுமாறன்]

இல்லாதபோது மத்திய அரசு தேசிய பாதுகாப்புச் சட்டத்தை பிரகடனம் செய்திருக்கிறது. இதை மேற்கு வங்க அரசும், கேரள அரசும் அமுல்நடத்தவில்லை என்பதை நான் பாராட்டு கிறேன். நம்முடைய தமிழக அரசும் அப்படிச் செய்திருக்க வேண்டும். ஆனால் தமிழக அரசு தேசிய பாதுகாப்புச் சட்டத்தை வரவேற்றிருப்பது கண்டு நான் வருந்துகிறேன்.

நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். விவசாயச் சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்ததை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று சொன்னார்கள். நான் அவரைப் பார்த்து ஒன்று கேட்க விரும்புகிறேன். தேசிய பாதுகாப்புச் சட்டத்தை நீங்கள் நாடாளுமன்றத்தில் ஆதரித்து ஓட்டுப்போடுகிறீர்கள். ஆனால் இங்கே அமுல் நடத்தும்போது அதிலும் குறிப்பாக விவசாயச் சங்கத் தலைவரை கைதுசெய்த போது நீங்கள் கண்டிக்கிறீர்கள். அப்படியானால் தேசிய பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டிக்கவில்லை; அது யார் மீது பாய்கிறதோ அதைக் கண்டிப்பதுதான் உங்களுடைய நிலையாய இருக்கிறது. தேசிய பாதுகாப்புச் சட்டம் இங்கே இருக்கிற திரு. உமாநாத், திரு. அழகர்சாமி, என்னைப் போன்றவர்கள் மீது பாயும்போது நாங்கள் கைது செய்யப்பட்டால் ஒருவேளை நீங்கள் வரவேற்பீர்களோ என்று தெரியவில்லை. இப்படிப் பட்ட ஒரு நிலை கூடாது. எந்த நேரத்திலும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை எதிர்க்கும் ஒரு நிலையை எடுக்க வேண்டும்.

அதே நேரத்திலே, தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு பயங்கரமான ஆயுதத்தை மாநில அரசு கையிலே கொடுத்தது யார்? மத்திய அரசு. மாநில அரசு அந்த பயங்கரமான ஆயுதத்தை தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நீங்கள் கண்டிக்கிறீர்கள். அப்படியானால் அந்த ஆயுதத்தைக் கொடுத்த மத்திய அரசை ஏன் கண்டிக்காமல் இருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கிரிமினல் சட்டத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் கையில் ஆயுதத்தைக் கொடுத்து கொலை செய் என்று சொல்வது, கொலை செய்த குற்றத்தை விட பெரிய குற்ற மாகும்; ஆயுதத்தைப் பயன்படுத்தியவனை விட, ஆயுதத்தைக் கொடுத்தவன் மிகப் பெரிய குற்றவாளி என்று சட்டம் இருக்கிறது. ஆக மாநில அரசு கையில் இந்த ஆயுதத்தைக் கொடுத்த மத்திய அரசைக் கண்டிக்க மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

[திரு. ப. நெடுமாறன்] [1981 ஜனவரி 28

அதைப் போல இங்கே மாநில ஆளுநராக இருந்தவர் திடீரென்று நீக்கப்பட்டார். என்ன காரணம் என்பது பற்றி யாருக்கும் ஒன்றும் தெரியாது. ஆனால் நீக்கப்பட்ட முறை சரியல்ல. மாநிலங்களிலே இருக்கிற கவர்னரை நீக்கும்போது அல்லது ஒரு கவர்னரை மாற்றிவிட்டு, அந்த இடத்தில் இன்னொருவரை நியமிக்கும்போது அந்த மாநில அரசை முறையாக கலந்துகொண்டு செய்யவேண்டும் என்பதுதான் இந்திய நாட்டின் மரபாக இருந்துவருகிறது.

மேற்கு வங்கத்தில் தரம்வீரை கவர்னராக நியமித்தபோது அன்று துணை முதலமைச்சராக இருந்த ஜோதிபாசு எங்களைக் கேட்காமல் நியமித்ததை நாங்கள் ஆதரிக்கவில்லை என்று சொன்னார். அதற்கு முதலமைச்சரைக் கேட்டுத்தான் நியமித்தோம் என்றார்கள். மறுநாள், முதலமைச்சராக இருந்த அஜாய்முகர்ஜி அவர்களும் அதை மறுத்தார்கள். அதைப் போல பீகாரில் நித்தியானந்த கனுங்கோ ஆளுநராக நியமிக்கப்பட்ட போது அங்கிருந்த காங்கிரஸ் அரசு அதை எதிர்த்தது; எங்களைக் கேட்காமல் ஏன் நியமித்தீர்கள் என்று கேட்டார்கள். அதைப் போல தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த போது, ஆளுநராக ஷா நியமிக்கப்பட்ட போது இப்போது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற மாண்புமிகு கலைஞர் அவர்கள் அதற்கு முன்னால் வந்த பெயர்களை ஏற்றுக்கொள்ளாமல் ஷா வந்த போது ஏற்றுக்கொண்டார்கள். இன்று நான் கேட்கிறேன் எதிர்க்கட்சித் தலைவரையும் முதலமைச்சரையும் இப்படி எல்லாம் நிலைமைகள் இருக்கும்போது தமிழ்நாட்டில் ஆளுநர் பட்வாரி நீக்கப்பட்டபோது நீங்கள் இரண்டு பேர்களும் எப்படி வாய் மூடி, மௌனமாக இருந்தீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களை வழியனுப்பி விழா நடத்தப்பட்டது. அரசாங்கத்தின் தரப்பிலே நடத்தப்பட்ட அந்த விழாவிலே ஒரு பேச்சுக் கூட பேசவில்லை. பல ஆண்டுகளாகப் பணியாற்றிய ஒருவருக்கு எந்தவிதமான நன்றியும் கூட சொல்லி அனுப்பாமல் அந்த கூட்டத்திலே மௌனம் சாதித்து அவரை வழியனுப்பக் கூடிய நிலை ஏன் வந்தது? மத்திய அரசு என்றால் அவ்வளவு அச்சமா? ஆனால் இங்கே இருக்கின்ற ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் அதுபற்றி எதுவுமே சொல்லவில்லை.

அடுத்து அதே போன்று சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தவர் அவசரம் அவசரமாக வேறு மாநிலத்திற்கு மாற்றப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரைமணி நேரம் ஆகிவிட்டது. முடித்து விடுங்கள்.

1981 ஜனவரி 28]

திரு. ப. நெடுமாறன்: எங்கும் தமிழ், எதிலும் தமிழ், என்று சொல்கின்ற நிலையிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் .....

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்க்கட்சி பற்றி ஒரு கருத்து சொல்லி இருக்கிறார். அதற்கு நான் பதில் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும். பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

திரு. ப. நெடுமாறன்: இந்த மாநிலத்தின் மொழியினை அறியாத ஒருவர் இந்த மாநிலத்திலுள்ள உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக வருகிறார் என்றால் அது மறைமுகமாக இந்தி திணிப்புக்கு ஒரு வழியை ஏற்படுத்தும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வெறும் சட்டங்களை மட்டும் வைத்துக்கொண்டு நீதி வழங்கிவிட முடியாது. ஒரு மாநிலத்து மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், நாகரிகம், கலாசாரம் போன்ற இவைகளை எல்லாம் அனுசரித்து, சட்டத்தையும் ஆராய்ந்துதான் நீதி வழங்க முடியும். அந்த நிலையில் இந்த மாநிலத்தின் பண்பாடு, நாகரிகங்கள், கலாசாரம் ஆகிய ஒன்றுமே அறிந்துகொள்ளாத ஒருவர் இந்த மாநிலத்தின் தலைமை நீதிபதியாக வந்தால் நீதிக்குக் குந்தகம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ட்ரான்ஸ்ஃபர் ஆர்டர் என்ற ஒரு ஆயுதம் தலைக்குமேலே இருக்கும்போது எந்த நீதிபதியும் மத்திய அரசுக்கு விரோதமான தீர்ப்பு வழங்குவதற்கு தைரியமாக முன்வர மாட்டார். அந்த டெரர் இன்றைய தினம் நீதிபதிகள் மத்தியிலே ஏற்பட்டாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 35 நிமிடம் நீங்கள் பேசிவிட்டீர்கள். உங்களுடைய கட்சியிலே உள்ள உறுப்பினர்கள் தினமும் பேசுகிறார்கள். ஆகவே சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. ப. நெடுமாறன்: இறுதியாக இந்திமொழிப் பிரச்சினை பற்றி மட்டும் என்னுடைய கருத்தைச் சொல்லிவிடுகிறேன். மதுரையிலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலே கலந்து கொண்ட பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்ற வாக்குறுதி கொடுத்ததற்கு இந்த அரசு ஆளுநர் உரையிலே மகிழ்ச்சி தெரிவித்திருக்கின்றது. ஆனால் நாங்கள் மகிழ்ச்சி அடையவில்லை. காரணம் இரண்டாவது வாக்கியத்திலே இன்னொன்று சொல்ல இருக்கிறார்.

[திரு. ப. நெடுமாறன்] [1981 ஜனவரி 28

'That centre always thought of Hindi as link language to bring the people closer'

இது ஏற்கெனவே திரு. நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதியிலிருந்து விலகி இருக்கின்ற விஷயமாகும். இந்தி இணைப்பு மொழியாக இருக்கும் என்பது மத்திய அரசின் கொள்கை- என்று மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் திரு. நேருஜி அவர்கள் கொடுத்த உறுதி மொழி என்னவென்றால் இந்தி பேசாத மாநிலத்தினர் இந்தி மொழியை விரும்புகிற வரையில் ஆங்கிலமே இணைப்பு மொழியாக நீடிக்கும் என்று சொல்லி இருக்கிறார். ஆங்கிலம் இணைப்பு மொழி என்ற நிலையிலே இருந்து இந்தி இணைப்பு மொழி என்ற நிலைக்கு மத்திய அரசு மாறி இருக்கிறது. இது ஆபத்தான விஷயம். 1959ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ஆம் தேதி நாடாளுமன்றத்திலே அன்றைய பிரதமர் திரு. நேருஜி அவர்கள் ஒரு வாக்குறும் சொடுத்ததை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

'There would be in fact no time limit and the decision as to when the switchover to Hindi should be made would be taken by the non Hindi areas themselves'

அதாவது இந்தி மொழி என்றைக்கு இணைப்பு மொழியாக மாறும் என்றால் இந்தி பேசாத மக்கள் என்றைக்கு விரும்புகிறார்களோ அதாவது அதை அவர்களே முடிவு செய்கிற காலத்தில்தான் அவ்வாறு மாறும் என்று அவர்கள் திட்டவட்டமாக ஒரு உறுதிமொழி கொடுத்தார்கள். ஆனால் மதிப்பிற்குரிய திருமதி இந்திராகாந்தி அவர்கள் அந்த நிலையிலே இருந்து இன்று விலகி விட்டார். This is a clear shift in the stand of the Central Government. ஆகவே இது மகிழ்ச்சிக்குரிய ஒன்றல்ல. நம்முடைய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று கூறி வாய்ப்பு நல்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12.10]

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரை மீது அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக என் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள சந்தர்ப்பம் அளித்தமைக்காக உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஆளுநர் அவர்கள் உரையிலே பேச ஆரம்பிக்கிறேன்.

அதிலே, முதன் முதலாக 5வது உலகத் தமிழ் மகாநாட்டை தமிழக அரசு மிகச் சிறப்பாக மதுரையிலே நடத்தியதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த மாநாடு மிகச் சிறப்பாக, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று தமிழ் முழக்கம் கேட்கக் கூடிய அளவிற்கு, தமிழக தமிழ் அறிஞர்கள், வெளிநாட்டிலிருந்து வந்திருந்த தமிழ் அறிஞர்கள் ஆகிய அத்தனை பேரும்

1981 ஜனவரி 28] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

கலந்துக் கொண்டு, தமிழை வளர்த்து, மிகப் பெரிய அளவில் அந்த விழாவினை மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். நடந்து முடிந்த அந்த விழாவிற்கு நானும் எனது இயக்கத்தின் சார்பிலே பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாடு நடந்த போது மதுரையிலே பல தமிழ் அறிஞர்களுக்கு சிலைகள் திறக்கப் பட்டது. பல அறிஞர்கள் பாராட்டப்பட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் என் பாராட்டைத் தெரிவிப்பதோடு. உலகத் தமிழ் சங்கம் ஒன்றினை மதுரையிலேயே நிறுவ வேண்டும் என்று இந்த தமிழக அரசு விரும்பியதற்கு, அந்த மதுரை மக்களின் சார்பாகவும் நான் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, உலகத் தமிழ் மாநாடு மலர் வெளியிடப் பட்டு இருக்கிறது. அந்த மலரிலே தமிழக முதல்வர் அவர்கள் சம்பல் பள்ளத்தாக்கிலே இருக்கிற வீர மறவர்களை கொள்ளைக் காரர்கள் என்றும் கொலைகாரர்கள் என்றும் வர்ணித்திருப்பதாகவும், அது குறிப்பாக மறவர்கள் என்று சொன்னால், தேவர்கள் என்று ஒரு பட்டத்தைச் சூட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன அந்த கருத்து, தேவர்கள் இனத்தைத்தான் குறிப்பிடுகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். பொதுவாக மறவர்கள் என்ற அந்த பதம், வீரர்கள் என்பதைக் குறிப்பிடும் என்பதற்குப் பதிலாக, மாண்புமிகு உறுப்பினர், அருமை நண்பர் அன்பில் தர்மலிங்கம் அவர்களை அருகில் வைத்துக் கொண்டு, அவர்களைச் சுட்டிக் காட்டி, இவர்கள் எல்லாம் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்று பேசியிருகிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சம்பல் பள்ளத்தாக்கிலே இருப்பவர்களைப் பற்றிக் கூறியிருப்பதை மறவர்கள் என்று சொன்னால் வீரர்கள் என்று பொருள்படும் என்று சொல்லி தமிழகத்தில் இருக்கக் கூடிய ஒரு குறிப்பிட்ட இனத்தைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற முறை தவறாக இருக்கிறது. அதைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கள்வர்கள் என்று சொன்னால், திருடர்கள் என்று பொருள் பட தமிழகத்தில் அதிகமாக இருக்கக் கூடிய ஒரு வகுப்பினரைப் பார்த்து அவர்களை திருடர்கள் என்று சொல்லியிருப்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அதனால் அந்தப் பதத்தை கள்ளர் என்று சொல்ல வேண்டும். அப்படி இல்லாவிடில், கள்வர்கள்- திருடர்கள் என்று ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்களை குறிப்பிடுவதுபோல் ஆகிவிடும். அதனால் அப்படி எழுதியிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

உலகத் தமிழ் மகாநாட்டிற்கு பாரதப் பிரதமர் அவர்கள் வருகை தந்திருந்தார்கள். வந்த நேரத்திலே, இந்தி மொழியை, அந்த மொழி பேசாத மக்கள் மீது திணிக்க மாட்டோம் என்ற

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1981 ஜனவரி 28

வாக்குறுதியையும் அளித்துச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் வாக்குறுதியை எந்த அளவிற்குக் கொடுப்பார்கள், அதை எப்படிக் காப்பாற்றுவார்கள் என்பதைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பாராளுமன்றம் கலைப்பதற்கு முன்னால் மிசா சட்டம் என்ற ஒன்று இருந்தது. அதை தமிழகத்திலே இருப்பவர்கள் நன்கு அறிவார்கள். அந்தச் சட்டத்தை முதலிலே போட்டு விட்டு, பின்னால் இது போன்ற சட்டங்கள் வராது என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் அந்த மிசாவைப் போன்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் நம்முடைய பாரதப் பிரதமர் அவர்களுடைய தந்தையார் ஜவஹர்லால் நேரு அவர்கள் ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதியை, இவர்களும் அப்படியே கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு இடைப்பட்ட காலத்திலே அந்த வாக்குறுதி மீறப்பட்டிருக்கிறது என்று பொருள். எங்கேயும் இந்தி மொழியின் ஆதிக்கம் நடந்துக் கொண்டு தான் இருக்கிறது. உதாரணமாக ரெயில்வேயை எடுத்துக் கொண்டால், அந்தப் பாரங்களில் இந்தியும் ஆங்கிலமும் தான் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலே இருக்கிற ரயில்வேக்களில் கொடுக்கப்படும் பாரங்களிலாவது ஆங்கிலமும், தமிழும் அச்சடிக்கப் பெற வேண்டும் என்ற ஒரு முறையினை கொண்டுவர இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லக்கூடிய அளவு தமிழ் மொழி வளர்ந்திருக்கிறது என்று சொல்லலாம் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

ஆகவே இந்தி மொழி திணிக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது. அது வெறும் வாக்குறுதியாக இருப்பதை தமிழக அரசு வரவேற்றிருக்கிறது. அதில் நான் கருத்துவேறுபாடு உடையவனாக இருக்கிறேன். தமிழக அரசு, அதைச் சட்டமாக்கும் வரை அவர்கள் சொன்ன வாக்குறுதியை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தி மொழி திணிக்கப்படமாட்டாது என்ற அந்த வாக்குறுதி சட்டமாக்கப்பட வேண்டும் என்பது எங்கள் கருத்து.

அடுத்து, இன்றைய தினம் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. விலைவாசியேற்றத்தைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறார்கள் என்பது பற்றி இந்த ஆளுநர் உரையில் எதுவும் சொல்லப்படவில்லை. இருந்த போதிலும் அதற்கு ஒரு காரணம் காட்டியிருக்கிறார்கள். ஊதிய உயர்வு பணவீக்கம் என்ற தீமையை மேலும் வளர்ப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சாதாரண தொழிலாளர்கள் கேட்கிற ஊதிய உயர்வு பண வீக்கத்தை ஏற்படுத்திவிடும் என்று இந்த அரசு நம்புமானால் முதலாளித்துவத்திற்கு உறுதுணையாக, கள்ள மார்கட்காரர்களுக்கு உறுதுணையாக பணவீக்கத்தை ஏற்படுத்துகிற அந்த சமூகத்திற்கு ஆதரவாகத்தான்

1981 ஜனவரி 28] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

இந்த கொள்கை வெளியிடப்பட்டிருக்கிறது என்று கூறுவதற்கு இடம் இருக்கிறது. ஊதிய உயர்வு கொடுப்பதன் மூலம் எப்படி பணவீக்கத்திற்கு அது உறுதுணையாக இருக்கிறது என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. ஆகவே இது முதலாளித்துவத்திற்கு பாதுகாப்பாக இருக்கிறது என்றுதான் நாங்கள் கருதுகிறோம். அதைக் குறைப்பதற்கு நியாய விலைக் கடைகள் மூலம் பொது விநியோக முறையை வலுப்படுத்த வேண்டும் என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்று கிராமங்களுக்கு, கிராம மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோக முறை நடத்தப்பட்டு வருகிறது. இந்த மன்றத்தில் இதற்கு முன்னமேயே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிப்பதை நாங்கள் உளமாற வரவேற்கிற நேரத்தில் அந்த முறைமூலம் கிராமப்புற மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் சரியாக போய்ச் சேருவதில்லை. கொடுக்கப்படுகிற பொருள்களை நகரங்களில் விற்றுவிட்டு கிராமங்களுக்கு அவை போய்ச் சேருவதில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஆகவே இந்த பொது விநியோக முறையை வலுப்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அத்தியாவசியப் பொருள்கள் கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு, நலிந்த பிரிவினருக்கு போய்ச் சேருவதற்குரிய நல்லதொரு திட்டத்தினை வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை)

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு கட்டுபடியான விலை கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம், ரூ. 200 என்று கேட்டு மத்திய அரசு கரும்புக்கு ரூ. 130 அனுமதித்திருக்கிறது என்று ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். நெல்லுக்கு கட்டுபடியான விலை வேண்டும் என்பதுதான் எங்கள் இயக்கத்தின் கருத்து. கட்டுபடியான விலை வேண்டுமென்று சொல்கிறபோது மத்திய அரசு ரூ. 105 அனுமதித்திருக்கிறது என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. கட்டுபடியான விலை என்று சொன்னால் விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு விலை நிர்ணயிக்கிற உரிமை நமக்கு வேண்டும். இப்போது அறிவித்துள்ள ரூ. 105 என்பது கட்டுபடியான விலை அல்ல. குறைந்தபட்சம் ரூ. 150 ஆவது இருக்க வேண்டும். கரும்புக்கு ரூ. 200 குறைந்தளவு கொடுக்கப்படுமானால் தான் அது விவசாயிகளுக்கு கட்டுபடியான விலையாக இருக்க முடியும்.

விவசாயிகள் அத்தியாவசியப் பொருள்கள் உற்பத்தி செய்கிற போது, இப்போது ஒரு அவசரச்சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள். விவசாயிகள் நிலங்களை தரிசாகப் போடுவார்களானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று. அதில், சில பொருள்களை தடை செய்து சட்டம் கொண்டு வரப்பட்டிருக்

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1981 ஜனவரி 28

கிறது. சவுக்கு பயிரிடுவார்களானால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவிற்கு இந்தச் சட்டம் இருக்கிறது. மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் மழையின்மை காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அதற்கெல்லாம் விதிவிலக்கு கொடுக்க வேண்டும். இயற்கை காரணமாக பயிரிட முடியாத நிலையில் உள்ள விவசாயிகளுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்ற அளவிற்கு திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சவுக்கு நடுவதை தடை செய்வது என்பது நல்லதல்ல. அதுவும் ஒரு அத்தியாவசியப் பொருளாகும். சவுக்கைக் கொண்டுதான் அத்தனை குடும்பங்களும் சமைக்கிறார்கள். சமைப்பதற்கு ஒரு அத்தியாவசியப் பொருளாகும் சவுக்கு. அரிசி இருக்கிறது, ஆனால் சவுக்கு இல்லை என்றால் அடுப்பு எரியாது என்ற அளவிற்கு இருக்கிறது. ஆகவே சவுக்கு நடுவதை சட்டத்தின்மூலம் தடுக்கப்படுகிற அளவிற்கு இருக்கக்கூடாது.

(பிற்பகல் 12.20)

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நஞ்சை நிலம் படைத்தவர்கள், நெல் உற்பத்தி செய்கின்ற நிலத்திலே, கரும்பு உற்பத்தி செய்கின்ற செழிப்பான நிலங்களிலே, விவசாயத் தொழிலாளர்கள் சட்டத்தின்படி அந்தத் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய கூலிகளை மறுப்பதற்காக, அவர்கள் அந்த நஞ்சை நிலங்களிலே சவுக்கைப் போடுவது தவறு, இதிலே தொழிலாளர்கள் பிரச்சினை வருகிறது. இதைத்தான் அரசாங்கமும் சொல்லியிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். இதனால் விவசாயத் தொழிலாளர்கள் பசிக்கப்படுகின்ற அளவுக்கு நஞ்சை நிலங்களில் சவுக்கு போடுவார்களானால், அதைத் தடை செய்வதாகச் சொல்லுகிறார்கள். நான் கூறுகிறேன். இதுபோன்ற சட்டம் இதற்கு முன்னாலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு என்ன தண்டனை? சவுக்குக்கு மட்டுமல்ல. கரும்பு போடுவதற்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக் கொள்ளலாம் என்று விதிவிலக்குச் சட்டம் இருக்கின்ற போது, சவுக்குக்கு மட்டும் ஏன் இந்த தண்டனை என்பதுதான் என் கேள்வி. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை, கரும்புக்கு கொடுக்கப்பட்ட விதிவிலக்குச் சட்டத்தின் பேரால் வைத்துக் கொண்டிருக்கிறார்களே, அது குற்றமில்லையா என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

1981 ஜனவரி 28] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

இந்திய பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு சட்டத்தைப் பற்றி இங்கே அதிகமாகச் சொல்லப்பட்டது. என்னுடைய இயக்கத்தின் கருத்தை நான் இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. இந்திய பாதுகாப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் வந்தபோது, அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி அதை ஆணித்தரமாக எதிர்த்தது. இந்திய பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு சட்டம் கூடாதென்றும், அரசியல் கட்சிகளுடைய தலைவர்களையும், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் பழிவாங்கக்கூடிய சட்டம் இது என்று பாராளுமன்றத்தில் எதிர்த்தோம். ஆனால், அன்றைக்கு பாராளுமன்றத்திலே இருந்தவர்கள் அதை எதிர்க்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு வாக்களித்தது. 1976-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட போது, அந்த நண்பர்களெல்லாம் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, சிறையிலே அடைத்த காலத்திலே இப்படிப்பட்ட சட்டம் கூடாது என்று கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார்கள். அதற்குப் பின்னால் அது மினி மிசாச் சட்டமாக இப்போது வந்திருக்கிறது. இதைப் பாராளுமன்றத்திலே எதிர்க்கவில்லை. அதே நேரத்திலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தச் சட்டத்தை வரவேற்றிருக்கிறது. இந்தச் சட்டத்தை வரவேற்றவர்கள், அதை உபயோகப்படுத்துகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை அது சரி என்று கருதுகிறேன். காரணம், அதை ஏற்றுக்கொண்டவர்கள் அதை உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால், இதைப் பாராளுமன்றத்திலே விட்டுவிட்டு, விவசாயப் போராட்டம் வருகின்றபோது, பால், மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் நகரத்திற்கு போவதைத் தடுக்கின்றபோது, அந்தச் சட்டத்தை உபயோகித்தால் மட்டும் தவறு என்று சொல்லுகிறார்கள். ஆனால், எங்கள் இயக்கத்தினுடைய கருத்து, அந்தச் சட்டமே தவறு என்பதுதான். ஆனால், இந்தச் சட்டத்தை இயற்றிய திருமதி இந்திரா காந்தி அம்மையார், உலகத் தமிழ் மாநாட்டிற்கு மதுரைக்கு வந்தபோது, அங்கே பேசுகின்றபோது சொல்கிறார், 'இந்தச் சட்டத்தை உபயோகித்தது தவறு' என்று. சட்டத்தைப் போட்டவர்களே தவறு என்று சொல்கிறார்கள். ஆனால், அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியைப் பொறுத்த வரை, இந்தச் சட்டமே இருக்கக் கூடாது என்பதுதான். இதை எங்கள் இயக்கம் ஆணித்தரமாக எதிர்க்கின்றது. ஆகவே, இந்தச் சட்டத்தை தமிழக அரசு ஏற்றுக்கொண்டால், அது மிக ஆபத்தான சட்டம். இந்தச் சட்டத்தை இந்த அரசு வரவேற்றிருப்பதற்காக உண்மையிலேயே நாங்கள் எல்லாம் மிகவும் வருத்தப்படுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது; ஏற்றுக் கொண்டிருக்கக் கூடாது. ஏற்றுக்கொண்டால், யார் மீது வேண்டுமானாலும் அதை உபயோகம் செய்யலாம். அது நாராயணசாமி நாயுடு மீது மட்டுமல்ல; மற்றுமுள்ள விவசாய சங்கங்களின் மீது மட்டுமல்ல; வேறு யார் மீது வேண்டுமானாலும், அந்தச் சட்டத்தை உபயோகப்படுத்தலாம். எனவே,

அது தவறு என்கின்ற கருத்தை உடையவர்கள் நாங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. இன்றைக்கு இதை ஆதரிக்கின்றவர்கள், இன்னொரு நேரத்திலே அவர்கள் மீதும் இந்தச் சட்டம் உபயோகப்படுத்தப் படலாம். எனவே, இந்தச் சட்டம் யார் மீது வந்தாலும், அது தவறான சட்டம். இந்தச் சட்டம் பலமுறை பயன்படுத்தப்பட்டு, அந்தச் சட்டத்தின் கீழ் பல தலைவர்கள் அவதிக்கு உட்பட்டிருக்கிறார்கள். எனவே, அப்பேர்ப்பட்ட கடும் சட்டம் இந்த நாட்டிலே வரக் கூடாது என்பதை என்னுடைய இயக்கத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளின் போராட்டத்தை அடக்குவதில் போலீசார் நடந்து கொண்ட முறை, போலீஸ் எந்த அளவுக்கு தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தது என்பது தமிழக அரசுக்கு நன்கு தெரிந்த விஷயம்.

இருந்தாலும் விவசாயப் போராட்டத்தின்போது அத்து மீறல்கள் நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் மீது இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் நாட்டார் மங்கலம் என்ற இடத்தில் உயர்நிலைப் பள்ளியும் ஒரு விடுதியும் இருக்கிறது. அந்த ரோட்டிலிருந்து விடுதிக்கு ஏறத்தாழ இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அங்குள்ள விடுதிக்குள் போலீசார் நுழைந்து அந்த மாணவர்களை நையப் புடைத்து தாக்கி, 23 பேர் மீது வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். இது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் மற்றவர்களிடமும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயப் போராட்டத்திற்கும் அந்த மாணவர்களுக்கும் என்ன சம்பந்தம்? போராடிய விவசாயிகள் மீது வழக்கு வாபஸ் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த தினத்தில் எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளாத மாணவர்கள் மீது போட்ட வழக்கு இன்னும் வாபஸ் பெறப்படாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட நிகழ்ச்சியை நடத்திய போலீஸ் அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

விவசாயிகள் பிரச்சினை சம்பந்தமாக தமிழகத்தில் நிதானமான போக்கை கடைப்பிடிக்க வேண்டும். அவர்களை அழைத்து பேசி என்ன திட்டவட்டமான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்பதை திட்டவட்டமான கொள்கையாக அறிவிக்கவேண்டும்.

ஆளுநர் உரையில் இரண்டு மாவட்டங்களை மட்டும்—புதுக்கோட்டை வட ஆற்காடு மாவட்டங்களை மட்டும் சுட்டிக்காட்டி அவற்றை வறட்சிப் பகுதிகளாக ஏற்றுக்கொண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முகவை மாவட்டம், மதுரை மாவட்டத்தில் தண்ணீர் பாய்கின்ற ஒன்றரை லட்சம் ஏக்கர் பரப்பளவு தவிர மற்றப் பகுதிகளில் மழை இல்லாமல் மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை. ஆடு மாடுகளுக்குத் தீவனம் இல்லை. இதனால் முகவை மாவட்டத்

திலிருந்து லட்சக்கணக்கானவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அந்த மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்து போர்க்கால நடவடிக்கை போன்று வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமாதிகாரிகளை வேலை நீக்கம் செய்வதற்காக ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த அவசரச் சட்டத்தின் மூலம் கிராமாதிகாரிகள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நீக்கப்பட வேண்டுமென்பதிலே அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சிக்கு கொள்கை வேறுபாடு இல்லை. அவர்கள் நீக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் நீண்ட நெடுங்காலமாகத் தொடர்ந்து அந்தப் பணியில் இருக்கும் காரணத்தால் அவர்களிடம் கிராமத்திலுள்ளவர்களின் பட்டா போன்றவைகள் எல்லாம் இருக்கும் நிலையில் யாருக்கு எந்த நிலம் சொந்தம் என்று தெரிய வேண்டுமென்று சொன்னால் அவரைத்தான்கேட்க வேண்டுமென்று சொல்லும் அளவுக்கு நிலைமை இருந்ததை மாற்ற வேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. அப்படி நீக்கப்பட்டவர்களில் தகுதி உடையவர்கள் இருந்தால் அரசு குறிப்பிட்ட தகுதி உடையவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கை பற்றி அங்கத்தினர்கள் மனந்திறந்து கருத்துக்களைக் கூறவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மதுவிலக்குக் வேண்டு என்றும் ஆதரித்து வந்திருக்கிறது அன்று மதுவிலக்கு சுதந்திரப் பின்னணி மென்பதற்காக போராட்டத்தில் ஈடுபட்ட மறியலில் எங்களுடையுள்ள இயக்கம். 1938-லே கள்ளுக்கடை அமல்படுத்த இயக்கம் முன்னணியில் இருந்தது. மதுவிலக்கை என்றாலும் வேண்டுமென்ற கொள்கை உடையவர்கள்தான் அமுல்படுத்த சுதந்திரத்திற்குப் பின்னால் நீண்ட நெடுங்காலமாக அதிகமானவர்கள் அந்தப் பட்ட சட்டம் எடுத்துவிடப்பட்டு எரிசாராயம் போன்ற பழக்கத்திற்கு ஆட்பட்ட காரணத்தால் தி.மு.க ஆழல்கள் ஏற்படக் காரணமாகியிருக்கிறது. அண்ணா கொள்ளலாம் அரசு 25 ரூபாய் கட்டணம் செலுத்தி குடித்துக் நாட்டிலுள்ள என்ற அளவுக்கு அதைத் தளர்த்திய காரணத்தால் காரண அத்தனை பேரும் அந்தப் பழக்கத்திற்கு உள்ளானதன் மாக, அவர்களைத் திருத்த முன்பு இந்த அரசு கடுமையான சட்டங்களைப் போட்டு, நாடு கடத்தும் அளவுக்கு நிலைமைகளை எல்லாம் உருவாக்கியும் அதைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், தவறான பொருள்களைக் குடித்து உயிரிழக்கிற நிலைமைகளையும் காணும்போது, அதே நேரத்தில் அரசுக்கும் பணம் இல்லாத நிலையில் உண்மையில் மனம் திறந்து சொல்ல வேண்டுமென்று சொன்னால் அதை எடுத்துவிடுவதன் மூலம் பல கோடி ரூபாய்

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1981 ஜனவரி 28

இந்தத் தமிழக அரசுக்குக் கிடைக்கும். அண்டை மாநிலங்களிலும் மதுவிலக்கு அமலில் இல்லை. ஆகவே அந்த மதுவிலக்கை ரத்து செய்யவேண்டுமென்ற மனந் திறந்த கருத்தைச் சொல்லி அமருகிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12.30]

[மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை]

திருமதி டி. யசோதா : துணைத் தலைவர் அவர்களே, தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது தவறு என்று பிரதமர் குறிப்பிட்டதாக அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் உறுப்பினர் கூறினார்கள். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது தவறு என்று சொல்லவில்லை. அதை விவசாயிகளிடத்தில் செயல்படுத்தியது வருந்தத் தக்கது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எஸ். ஆண்டித்தேவர்: நான் சொன்ன கருத்தை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்களே விவசாயிகளிடத்தில் அதைப் பயன்படுத்தியது தவறு என்று சொல்லியிருக்கிறார்கள், அப்படி சட்டத்தைக் கொண்டு வந்தவர்களே சொல்லக் கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்து. சட்டம் யாருக்குப் பயன்படுத்தப்படவேண்டுமென்றெல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படி பயன்படுத்தியிருக்கிறார்கள். அதைத்தான் நான் சொன்னேன்.

*திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர்கள் பேசியிருந்தாலுங்கூட விட்டுப்போன சில விஷயங்களை நான் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். ஆளுநர் உரையிலே பிரதானமாகப் படித்துப் பார்க்கிற நேரத்திலே பொருளாதாரக் கொள்கை மட்டுமல்ல, யதேச்சதிகாரத்தை அப்படியே முழுமையாக ஆதரிக்கக்கூடிய உரையாகத்தான் இருக்கிறது. கடந்த தேர்தலிலே யதேச்சதிகாரத்திற்கு எதிராகத்தான் ஒரு அணியிலே கூட்டாக இருந்து மக்களிடத்திலே வாக்குப் பெற்றோம். அந்த நேரத்திலே நாம் என்ன சொல்லி வாக்குகளைப் பெற்றோம், என்ன சொல்லி வாக்குக் கேட்டார்கள் என்பதைப்பற்றியெல்லாம் எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள தலைவர்கள் பல விஷயங்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். யதேச்சதிகாரத்தைத் தகர்ப்பதற்காக, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக வாக்களிக்க வேண்டுமென்று மக்களிடத்திலே கேட்டது மட்டுமல்ல, கடந்த ஆளுநர் உரையிலே அச்சத்தை விட்டு தைரியமாக வாக்களித்து

1981 ஜனவரி 28] [திரு. சோ. அழகர்சாமி]

மக்கள் நம்மை அனுப்பியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய முன்னால் யதேச்சதிகாரக் கொள்கையை எதிர்த்தது மட்டுமல்ல, தேர்தலிலே முறியடித்தோம். ஆனால் இன்றைக்கு அந்தக் கொள்கை மேலும் வேகமாக உருவெடுத்து வருவதை நாம் கண்கூடாகக் கண்ட பிறகு கூட அதை ஆதரிக்கக்கூடிய நிலைமையில் தமிழக அரசு சென்று கொண்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கூட பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தோம். கேரள முதலமைச்சர் ரேடியோவிலே பேசுவதற்கு அனுமதி கேட்டும்கூட அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. மத்திய அரசினுடைய கொள்கை இந்த அளவிற்கு சென்று கொண்டிருக்கிறது என்பதைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். மொழிக் கொள்கையைப்பற்றி இதிலே சொல்லியிருக்கிறார்கள். உலகத் தமிழ் மாநாட்டிலே பாரதப் பிரதமர் அவர்கள் கூறியதை இந்த ஆளுநர் உரையிலே பெருமையோடு போட்டிருக்கிறார்கள். அந்த வாக்குறுதி எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். நேற்றைக்கு முந்தா நாள் கூட ஒரு செய்தி வந்திருக்கிறது. வடநாட்டிலிருந்து வருகின்ற யாத்திரிகர்களுக்கு உதவி கிடைக்கவில்லை, அவர்கள் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் இரயில்வேயில் வேலையில் உள்ளவர்கள் எல்லாம் இந்தி கற்றுக்கொள்ளவேண்டுமென்று செய்தி வந்திருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக ஆங்கிலம் இருக்கிற இடத்திலே இந்தி மத்திய அரசால் திணிக்கப்படுகிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே மக்களிடத்திலே நாம் என்ன சொல்லி வாக்குக் கேட்டோமோ அதையெல்லாம் மறந்துவிட்டு மத்திய அரசின் தவறான கொள்கைகளை ஆதரிப்பதற்கு முன் வந்திருப்பது வருந்தத்தக்கது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன என்பதை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. விலைவாசிகள் இன்றைக்கு ஏறி, மக்கள் துன்ப துயருக்கு ஆளாகியிருக்கிற நேரத்திலே நேற்றைக்கு இருந்த விலையைவிட இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. இட்லியை எடுத்துக் கொண்டால் 30 பைசா, காபி 1 ரூபாய் என்று உயர்ந்து விட்டது. இப்படி ஏறிக்கொண்டிருக்கிற நிலைமையில் அதற்குக் காரணம் இங்கே என்ன என்பதை வரையறுத்துச் சொல்லி இருக்கிறார்கள். "விலைவாசி உயர்வும் ஊதிய உயர்வும் ஒன்றையொன்று தொடர்ந்து வரும் ஒரு நச்சு வட்டமாகவே தோன்றுகிற மேலும், அமைப்பு ரீதியாகச் செயல்படும் சிறு

[திரு. சோ. அழகர்சாமி] [1981 ஜனவரி 28

பான்மையினர் பெறும் ஊதியம் அவர்களுக்கு எதிர்பார்த்த பலனை அளிக்காதது மட்டுமல்ல, அதனால் விலைவாசி ஏறும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, ஊதிய உயர்வு என்பது விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். விலைவாசி உயர்ந்து விட்டது, ஊதியம் கட்டுப்படியாகவில்லை, கிடைக்கின்ற ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியவில்லை. ஆகவே, ஊதிய உயர்வு வேண்டுமென்று கேட்கிறார்களே தவிர ஊதியத்தை உயர்த்திக் கொடுத்ததால் தான் விலைவாசி ஏறுகிறது என்பது சரியல்ல. அப்படியென்றால் இனிமேல் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க வேண்டுமென்றால், 25,000 கோடி ரூபாய் கறுப்புப் பணம் இருக்கிறதே அந்தப் பணத்தை ஒழிப்பதற்குப் பதிலாக, அதை அரசாங்கத்திற்குச் சொந்தமாக்குவதற்குப் பதிலாக, அதை வைத்திருப்பவர்களுக்கு மாலை மரியாதை செய்து, 10,000 ரூபாய் கொடுத்தால் 10 வருடங்கள் கழித்து 12,000 ரூபாயைப் பெற்றுக் கொள்ளலாம். அந்தப் பத்திரங்களை வைத்து பாங்குகளிலே கடனை வாங்கிக் கொள்ளலாம்; தண்டனை கிடையாது, அதற்குப் பாராட்டு என்று சொல்லக்கூடிய இந்திரா காங்கிரஸ் அரசாங்கத்தை ஆதரிக்கிறீர்களா? விலைவாசி உயர்வுக்கு காரணம் கறுப்புப் பணமா அல்லது தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படுவதா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது தவறான கொள்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விலைவாசி உயர்வுக்குக் காரணம் ஊதிய உயர்வு என்று ஆளுநர் உரையில் வந்திருக்கிறதே அது தவறான கொள்கை, உழைக்கின்ற சாதாரண மக்களைத் தாக்குகின்ற கொள்கையாகும் என்பதால் அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இன்றைக்குத் திட்டத்திலே 3,150 கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம் என்று பெருமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முன்னர் நிச்சயிக்கப்பட்ட தொகையாகிய ரூபாய் 2,150 கோடியை விட இது ஆயிரம் கோடி அதிகம் என்றும் சொல்லப்படுகிறது. மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டுள்ள திட்டங்களையும் இப்பொழுது போடும் திட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அந்த வேலைகளைச் செய்து முடிப்பதற்கு இன்னும் ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும்கூடப் போதாது; இருக்கின்ற விலைவாசிகளைப் பார்த்தால் போன ஆண்டு சிமெண்ட் விலை 20 ரூபாய் என்றால் இந்த ஆண்டு 25 ரூபாய் என்று விற்கிறது. இந்தத் திட்டங்களை நிறைவேற்றும் பொழுது அந்த விலை எங்கு போய் நிற்கும் என்பதை யாராலும் சொல்ல முடியாது. எவ்வளவு பணத்தை அதிகமாகப் பெற்றோம் என்று சொன்னாலும் கூட முன்னாலே போடப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியுமா என்று பார்த்தால் விலைவாசி உயர்வின் காரணமாக அப்படி நிறைவேற்றமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1981 ஜனவரி 28] [திரு. சோ. அழகர்சாமி]

இந்தத் திட்டங்களைப் பற்றி இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் இந்தியா பூராவிலும் 52 சதவீதத்தினர் இருக்கிறார்கள் என்றால் இதிலே தமிழகத்திலே மட்டும் சுமார் 62 அல்லது 64 சதவீதத்தினர் இருக்கிறார்கள். இந்தியாவிலே நாம் கடைசியாகப் போய் விட்டோம். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் தமிழகத்திலே அதிகமாகி விட்டிருக்கிறார்கள் என்று இல்லாமல் திட்டத்திற்கான அதிகப் பணத்தைப் பெறாமல், ஏன்தான் கொண்டு வந்து புள்ளி விவரத்தைக் கொடுத்தால் என்ன அர்த்தம்? இவ்வாறு வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களின் வாழ்க்கை நிலைகளை உயர்த்துவதற்காக என்னென்ன திட்டங்கள், என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து உள்ள மிகப்பிரதானமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். மற்ற விஷயங்களைப்பற்றி எங்கள் தோழர்கள் பேசிவிட்டார்கள். விவசாயக் கிளர்ச்சி என்பது தமிழகத்தில் மட்டுமல்லாமல், நாடு பூராவிலும் இருக்கின்ற ஒன்றாக உள்ளது. உத்திரப் பிரதேசம், பீகார், ஆந்திரா, கர்நாடகம், பஞ்சாப், அரியானா போன்ற எல்லா இடங்களிலும் நடக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்று காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்குப் பதிலாக அவர்களைச் சமூக விரோதிகள் என்று சொல்லி, அவர்கள் வரிகொடா இயக்கம் நடத்துவதே தவறு என்று இப்படியெல்லாம் வரையரை செய்வது சரியல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் கிளர்ச்சி ஏன் ஏற்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். பசுமைப்புரட்சி என்ற பெயரில் நவீன விவசாய முறைகளைப் புகுத்திய நேரத்திலேயிருந்து இது தொடர்கிறது. இன்றைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காத நிலைமை இருக்கிறது. வர்த்தக சூதாடிகளும், பெரும் முதலாளிகளும் விவசாயிகள் வாங்கக்கூடிய பொருட்களுக்கு ஒன்றுக்குப் பத்தாக விலையை உயர்த்தியும், விவசாயிகள் விற்கக்கூடிய உற்பத்திப் பொருட்களை குறைந்த விலைக்கு வாங்கியும் மிகப்பெரிய நெருக்கடிக்கு விவசாயிகள் ஆளாகியிருக்கிறார்கள். இது விவசாயத்திலே ஈடுபட்டிருக்கின்ற அத்தனை பேருக்குமே தெரியும். நானும் ஒரு விவசாயிதான். இரண்டு பம்பு செட்டுகள் வைத்திருக்கிறேன். இப்பொழுதுதான், அன்றைக்கு முதலமைச்சரோடு பேச்சுவார்த்தை நடந்ததற்குப் பிறகுதான் நானும் அந்தக் கரண்டுக்கான கட்டணத்தைக் கட்டுகிறேன். வரிகொடா இயக்கத்தில் சேர்ந்துதான் நின்றேன். வரிகொடா இயக்கம் நடத்துவது தவறு என்று நான் சொல்லவில்லை, மகாத்மா காந்தி காலத்திலே நடத்தப்பட்டிருக்கிறது காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே, எங்களுடைய வட்டாரத்திலே நானே தலைமைதாங்கி நடத்தினேன். 1966-இல் ஒராண்டுக்

[திரு. சோ. அழகர்சாமி] [1981 ஜனவரி 28

காலம் நடத்தி வெற்றி பெற்றோம், பக்தவச்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே வரிகொடா இயக்கத்தை நடத்தினோம். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், விவசாயி வேறு என்ன செய்வான்? அவனுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வேறு என்ன வழி இருக்கிறது? விவசாயி ஸ்ட்ரைக் செய்ய முடியுமா? விவசாயி இன்றைக்கு நிலத்தைத் தரிசாகப் போட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காகச் சட்டம் கொண்டு வரப்போவதாகச் சொல்கிறார்கள். தரிசாக நிலத்தை யாரும் போட மாட்டார்கள். எந்தத் தலைவர் சொன்னாலும் சரி, நாராயணசாமி நாயுடு சொன்னாலும் சரி அல்லது அவரை விடப் பெரிய தலைவர் சொன்னாலும் சரி, ஒருவனும் நிலத்தைத் தரிசாகப் போடமாட்டான். எதற்காகத் தரிசாகப் போட வேண்டும்? தரிசாகப் போட வேண்டிய தேவையில்லை; தரிசாகப் போடவும் மாட்டான். கட்டுப்படியாகவில்லை என்றால் கட்டுப்படியாகக் கூடிய இன்னொரு பயிரை மாற்றிப் போடுவான். மதிப்பிற்குரிய ஆண்டித் தேவர் அவர்கள் சொன்னார்கள். பயிரை மாற்றி விவசாயம் செய்வானே தவிர, தரிசாகப் போட மாட்டான். யாரோ சொல்கிறார்கள் என்பதற்காகத் தரிசாகப் போட்டு விடுவார்கள் என்று இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்து பயமுறுத்துவது நியாயமும் அல்ல, சரியும் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயப் போராட்டம் நடக்கின்ற காலத்திலே இன்றைக்கு அதற்கான உண்மையான காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்து அதற்கு வேண்டிய பரிகாரத்தைக் காண்பதற்கு பதிலாக நாடு பூராவும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடிக்குக் காரணம் என்ன, அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றியெல்லாம் நாம் யோசிக்க வேண்டும்; நாம் மட்டுமல்ல, மத்திய அரசும் யோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அதை யோசித்து அதற்குத் தீர்வு காண என்ன வழி என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். அப்படித் தீர்ப்பதற்குப் பதிலாக, நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும்பொழுது, ஜப்தி போன்ற கெடுபிடிகளைச் செய்வதில் அரசாங்கம் இறங்குவதன் காரணமாக கடந்த 78-79-லே இப்படி விவசாயிகள் பூராவும் சேர்ந்து அரசாங்கத்தினுடைய அடக்குமுறை நடவடிக்கைகளை எதிர்ப்பதற்காக வரி கொடுக்க மாட்டோம், சர்க்காரோடு ஒத்துழைக்க மாட்டோம் என்று இப்படிப்பட்ட முறைகளைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்த நெருக்கடிக்கு வேறு வழி இல்லாத காரணத்தால் அவர்கள் இந்தப் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். இது ஏதோ சர்க்காருக்கு எதிராக விவசாயிகள் போராடுவதாக நினைக்கக் கூடாது. அவர்களது நெருக்கடிக்குத் தீர்வு காண வழியில்லை என்ற காரணத்தால் அவர்கள் ஏதோ ஒரு போராட்டத்திலே—யார் தலைமை தாங்கி நடத்தினாலும் அதிலே பங்கு கொள்கிறார்கள் என்பதை நாம் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும்.

1981 ஜனவரி 28] [திரு. சோ. அழகர்சாமி]

[பிற்பகல் 12.40]

ஏதோ போராட்டம் நடத்துகின்றார்கள் என்ற காரணத்தை வைத்து, அடக்குமுறைச் சட்டங்களின் மூலமாக, அவர்களைத் தடுத்து, விவசாயிகளுடைய உரிமைகளை, அவர்கள் நடத்தும் போராட்டங்களைத் தடுத்து விட முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு நாடு பூராவும் நடக்கிற போராட்டங்களுக்குத் தீர்வு காண வேண்டுமென்றால், மத்திய அரசாங்கத்தின் பெரு முதலாளிகளுக்குச் சாதகமான, வர்த்தக சூதாடிகளுக்குச் சாதகமான கொள்கைகள் மாற்றப்பட வேண்டும். விவசாயிகள் போராடும்போது, விவசாயிகளோடு நின்று, அவர்களுக்கு எந்த அளவு உங்களால் முடியுமோ அந்த அளவு உதவி செய்ய முன்வர வேண்டும். அரசு அவர்களோடு சேர்ந்து நிற்க வேண்டும். விவசாயிகளுக்குக் கடன் நிவாரணங்கள் அளித்திருப்பதாகச் சொல்கிறீர்கள். அது உண்மைதான். இதுவரைக்கும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலே கூட்டுறவு வங்கிகளிடமிருந்து வாங்கிய கடனை அரசாங்க கஜானாவிலிருந்து ரூ. 30, 40 கோடிக்குக் கொடுத்து ரத்து செய்திருக்கிறார்கள். அதை நான் ஒத்துக் கொள்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால், அந்த நிவாரணம் சரியாக, சீராக, அடித்தளத்திலே உள்ளவர்களுக்குக் கிடைக்கும் வகையிலே செம்மையாக செய்யப்படவில்லை. விவசாய சங்கத்தை சேர்ந்தவர்களை அழைத்துப் பேசி, அதில் தீர்வு கண்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். 5 ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் புஞ்சை நிர்ணயித்திருக்கிறார்கள். அதில் எந்த விதமான ஒட்டும் இல்லை, உறவும் இல்லை. பல இடங்களில் 5 ஏக்கர் அல்லது 25 மானாவாரி புஞ்சை ஏக்கர் வைத்திருந்தாலும் சரியான வருவாய் இல்லாமல், கடன் வாங்கி கட்ட முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதிலே நிவாரணம் இல்லை. இதை எல்லாம் விவசாய சங்கத் தலைவர்களிடம் உட்கார்ந்து பேசி தீர்வு காண வேண்டும். பெரிய அளவில் புஞ்சை நிலம் வைத்திருப்பவர்களுக்கும், இந்தப் புயல், வறட்சி சமயத்தில் விளைச்சல் இருப்பதில்லை. அதனால் மகசூல் கடன் வாங்கிக் கஷ்டப்படுகிறார்கள். வேறு சிலர் டிராக்டர் கடன்கள் வாங்கி இருந்தால் அதை ரத்து செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் மகசூல் கடன் பெற்றிருப்பவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக, அவர்களால், கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. வட்டி அதியாய வட்டியாக இருக்கிறது. அபராத வட்டியெல்லாம் சேர்ந்து வட்டி அதிகமாகப் போகிறது. ரூ. 5,000 கடனுக்கு ரூ. 5,000-க்கு மேலே வட்டி வருகிறது. ஆகவே, வட்டியையாவது ரத்து செய்து அசலை 10, 15 வருஷங்களில், தவணை முறையிலே கட்ட ரிசர்வ் வங்கியிடம் கேட்டு, அல்லது மத்திய அரசைக் கேட்டு, அனுமதி பெற்றுத்தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1981 ஜனவரி 28

நாடு பூராவும் இந்த விவசாயிகள் போராட்டம் நடக்கிறது. நாடு பூராவும் இடதுசாரி கட்சிகள் மற்ற மாநிலங்களில் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்றன. ஆகவே தான் நான் சொல்கிறேன். இது இந்தியா பூராவும் உள்ள விவசாயிகள் மத்திய சர்க்காரின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து நடத்துகிற போராட்டம் என்று. அதிலே இங்கே உள்ள தமிழக விவசாய சங்கத் தலைவர்கள் தங்களுடைய கசப்பான சில அனுபவங்களின் விளைவாக, பேச்சுவார்த்தை நடத்தி, சுமுகமான தீர்வு காணலாம் என்று பேச்சு வார்த்தை நடத்தத் தயாராக இருக்கிறார்கள்.

தற்போது துப்பாக்கிச் சூடு நடந்த இடம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது. அந்தத் துப்பாக்கிச் சூடு நடந்த இடம் ஒரு கிராமம். அந்தக் கிராமத்திலே நடந்த துப்பாக்கிச் சூடு அநியாயமானது; தேவையற்றது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் துப்பாக்கிச் சூடு நியாயமானது என்று சொன்னார்கள். அந்த இடத்திலே தனியார் பஸ்கள் இரண்டு ஓடிக்கொண்டிருந்தன. அதை அன்று அவர்களாகவே நிறுத்தி விட்டார்கள். அங்கு எந்த விதமான போக்குவரத்தும் கிடையாது அது ஒரு சிறு கிராமம். அங்கு துப்பாக்கிச் சூடுக்கு அவசியமே இல்லை. சாயந்திரம் 4 மணிக்கு 1 போலீஸ்காரர் உட்பட 5 பேர் இறக்க வேண்டிய அவசியமே அங்கு இல்லை. இது அரசாங்கத்தின் அடக்குமுறையை தான் காட்டுகிறது. அடக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக செய்யப்பட்ட ஒரு ஏற்பாடு அது. இன்றைக்குக் கூட அந்த வட்டாரத்திலே உள்ள கிராமங்களிலே விவசாயம் செய்ய முடியவில்லை. விவசாயம் செய்யப் போனால் போலீஸ்காரர் கொலை வழக்கிலே பொய்யாக சேர்க்கப்படுகின்ற நிலை இருக்கிறது. அதனால், விவசாயம் செய்ய முடியாத நிலைமையிருக்கிறது. அது பற்றி, அன்றைக்குப் பேச்சுவார்த்தையின் போது முதலமைச்சரிடம் சொன்னேன். அவர்கள் கவனிப்பதாகச் சொன்னார்கள். ஆனால், ஒன்றும் நடைபெறவில்லை.

அது மட்டுமல்ல, உயிர் இழந்தவர்கள் சாதாரண ஏழைகள். அந்த உயிர் இழந்த குடும்பங்களுக்கு நஷ்டஈடு தரவில்லை. அவர்களுக்கு நஷ்டஈடு இல்லை. ஆகவே, அரசு வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்கிக்கொண்டு, சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்வதோடு, அங்கு நடைபெற்ற துப்பாக்கிச் சூடு கண்டிக்கத்தக்கது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். கோயில்பட்டியிலிருந்து சென்ற போலீசார் வீட்டிலுள்ளவர்களை காட்டிலுள்ளவர்களை எல்லாம் காலையிலே பிடித்துக் கொண்டு போய் வைத்திருந்து விட்டு, மாலையிலே நடந்த குண்டுகள் சம்பந்தமான வழக்கிலே அவர்களைச் சேர்த்துவிட்டார். இன்றைக்கும் அவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கவனித்து, அந்த வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்றும் பிரச்சனைகளை பேசி சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்றும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஜனவரி 28] [திரு. சோ. அழகர்சாமி]

அடுத்து மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் இந்த அவையில் பல பேர்கள் பேசி விட்டார்கள். மதுவிலக்கு சம்பந்தமாக எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், மது குடிப்பது நியாயம் இல்லை என்று சொல்வது மட்டுமல்ல, அதை எதிர்த்து பிரச்சாரத்தையும் நடத்தலாம் ஆனால், மதுவிலக்கை உங்களாலே அமல் நடத்துவும் முடியவில்லை. கள்ளச் சாராயம் எல்லா இடங்களிலும் விற்கப்படுகிறது. நகரத்திலேயும் விற்கப்படுகிறது. கள்ளச் சாராயம் பல பேர்களைக் கொல்லும் அளவுக்கு கெடுதலுள்ளதாகவும் இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், காவல் துறையைச் சீர்கேடடையச் செய்கின்றது. சமூக விரோத சக்திகளை ஆதிக்கத்தை ஓங்கச் செய்து விட்டது. அடுத்ததாக மதுவிலக்குக் கொள்கையைக் கடைபிடிக்க முடியவில்லை. அரசுக்கு இதனாலே ஏதப்பட்ட வருமானம் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே இதை எல்லாம் தவிர்க்க இதைக் கைவிடுவது தான் உடனடியாகச் செய்ய வேண்டிய முதல் கடமையாகும்.

அடுத்து [illegible] நீக்கம். நீங்கள் [illegible] செய்திருக்கலாமே, அதற்கு [illegible] அடுத்தபடி செய்ய வேண்டாமா? கிராமத்திலே ஏதாவது மாதிரி ஏற்பாடு செய்ய வேண்டாமா? கிராமத்திலே ஒரு ரேஷன் கடையை வாங்குவதற்குக் கூட மிகவும் சிரமமாக இருக்கின்றது. ஒரு சாட்டிபிகேட் வாங்க முடியவில்லை. மேலும் இதனால் அப்பாவி மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி [illegible] நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு எந்தவிதமான நஷ்ட ஈடும் கொடுக்கப்படவில்லை. அப்படி விலக்கப்பட்டவர்களில் தகுதி வாய்ந்தவர்களை வேலையில் வைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு பென்ஷன், நஷ்ட ஈடு போன்றவைகளை தொடர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னைக்குக் குடிநீர் திட்டம். கட்டளைக் கால்வாய் கண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. [illegible] கால்வாய் மூலம் கண்ணீர் கொண்டு வரப் போவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்தத் தண்ணீர் வந்து சேருமா என்பதே சந்தேகம். எனவே இதை அரசு மறுபரிசீலனை செய்து கிருஷ்ணா நதியில் இருந்து தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போது அதிகமாகவும் தண்ணீர் கிடைக்கும். [illegible] காவிரி தண்ணீர் இருக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[illegible] ஒரு சில வார்த்தை [illegible] நக்சலைட்டுகளை அடக்கு [illegible] நடத்தி இருக்கிறார்கள். நீங்கள் நக்சலைட்டுகளை அடக்குவது என்ற பேரில் அதற்காக கடைபிடிக்கப்பட்ட முறைகள் சரி

[திரு. சோ. அழகர்சாமி] [1981 ஜனவரி 28

தானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், எங்கள் வட்டாரச் செயலாளர் திருப்பத்தூரில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர், அவரைக் கொடுமைப் படுத்தி இருக்கிறார்கள். அவரை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று நிர்வாணமாக்கி அடித்துக் கொடுமைப்படுத்தி இருக்கிறார்கள். அடுத்து பாலன் என்பவரை போலீசார் கைது செய்து அழைத்துச் சென்றார்கள். பின்னர் அவரை அடித்துக் கொன்றிருக்கிறார்கள். கைது செய்து வழக்குப் போடுங்கள். ஆனால், போலீஸ்காரர்களே அடித்துக் கொல்வது என்றால் அதுசரிதானா? நியாயம்தானா? என்று கேட்க விரும்புகிறேன். எனவே இப்படி போலீஸ்காரர்கள் அராஜகமான முறையில் நடப்பதை ஊக்குவிக்க வேண்டாம் என்று நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து பி. அண்டு சி. மில்ஸ் பற்றி மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும். 13,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே இந்த அரசு மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்தி நடவடிக்கை எடுக்கச் செய்ய வேண்டும். மாருதி கார் தொழிற்சாலையை எடுத்தது போல இந்த பி. அண்டு சி. தொழிற்சாலையையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தைரியமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தைப் பற்றி போன தடவை அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். பச்சையப்பன் அறக்கட்டளையை அரசாங்கம் தலையிட்டு எடுத்துக் கொண்டதைப் போல அண்ணாமலை யுனிவர்சிடியையும் அரசாங்கம் எடுத்து நிர்வாகத்தைச் சீர்படுத்த வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மாநிலம் பூராவிலும் பரவலாக வறட்சி ஏற்பட்டுள்ளது வறட்சி மாவட்டம் என்று இரண்டு மூன்று மாவட்டங்களைத்தான் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நான் சொல்வது எங்கெங்கு வறட்சி ஏற்பட்டுள்ளதோ அங்கெல்லாம் நிவாரணப் பணியைத் தொடங்கவேண்டும்.

[பிற்பகல் 12.50]

அடுத்தபடியாக பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது கூடாது. கட்டணத்தை உயர்த்தினால் ஏழை எளிய மக்களை அது பெரிதும் பாதிக்கும். கட்டணத்தை உயர்த்துவதற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது என்றால், எண்ணெய் விலை ஏறிவிட்டது; டீசல் விலை ஏறிவிட்டது; ஸ்பேர் பார்ட்ஸ் விலை ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட விலையேற்றம் இருந்தாலும் நஷ்டமில்லை. லாபத்தில் கொஞ்சம் குறையும்; அவ்வளவுதான். ஆகவே, பஸ் கட்டணத்தை உயர்த்தக்கூடாது. (மணியடிக்கப் பட்டது.)

1981 ஜனவரி 28] [திரு. சோ. அழகர்சாமி]

சிறை சீர்திருத்தத்தைப்பற்றி நம்முடைய அமைச்சரவர்கள் அடிக்கடிச் சொல்கிறார்கள். அவர்கள் திருச்சி சிறைக்குள் சென்றிருந்தார்கள். அங்கே போய், கைதிகளைப் பார்த்து, உங்களுக்கு என்ன கஷ்டம் இருந்தாலும் சொல்லுங்கள்; உங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்று சொன்னார்கள். அதைக் கேட்டு, தைரியமாக வந்து சாட்சி சொன்னவர்களை இன்றைக்கு பழிவாங்கியிருக்கிறார்கள். வஞ்சம் தீர்க்கும் வகையில் அவர்களை வேறு சிறைகளுக்கு மாற்றியிருக்கிறார்கள். கடலூர் சிறைக்கு பொன்னையன், சாம்பசிவன், நாகப்பன் போன்றவர்கள் மாற்றப் பட்டிருக்கிறார்கள். அமைச்சர் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக அவர்கள், அமைச்சருக்கு முன்னாலேயே மாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி இருந்தால் எப்படி சீர்திருத்தம் வரும்? இதற்கு சரியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு பிரச்சனைகளைப்பற்றி எல்லாம் எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய கருத்தோடு என்னுடைய கருத்தையும் இணைத்துக்கொள்கிறேன். நேரம் இல்லாத காரணத்தால் அதிலே அதிகமாக நான் சொல்லவில்லை.

இன்னும் ஒன்றை மட்டும் சொல்லி விடுகிறேன். விவசாயச் சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி, தகுந்த நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் சொன்னார். சீக்கிரமாக ஒரு கமிட்டி அமைப்பதாகவும் சொன்னார். அன்று பேச்சு வார்த்தையின் போது மின்சார கட்டணப் பிரச்சனைக்கு பிப்ரவரி 14-ந் தேதி வரை தடை வைக்கப்பட்டது. ஆனால் பத்திரிகையில் ஜனவரி 31 என்று வந்திருக்கிறது. விவசாயப் பிரதிநிதிகளோடு பேசி முடிக்கும் வரை ஜப்தி இராது எனக் கூறப்பட்டது. இப்போது ஜப்தி போன்ற நடவடிக்கைக்கு பிப்ரவரி 15-ந்தேதிவரை என்று வரையறை செய்யப்பட்டுள்ளது.

கடன் நிவாரணத்தைப் பொறுத்த வரையில் மாநில சர்க்கார் சீக்கிரமாக முடிவு செய்ய வேண்டும். தன்னுடைய சக்திக்கு உட்பட்டு என்னவளவு செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டும்; மத்திய அரசையும் கேட்கவேண்டும்; மத்திய அரசும் சேர்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. துரைராஜ்: சார், ஒரு கிளாரி பிகேஷன். இப்போது பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் குறிஞ்சாகுளம் துப்பாக்கிச் சூடு நடைபெற்றதற்கு அவசியம் இல்லை என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: கிளாரி பிகேஷன் வேண்டாம்; நீங்கள் பேசும்போது அதுபற்றி சொல்லலாம்.

திரு. பி. துரைராஜ் : என்னைப்பற்றி குறிப்பிட்டதால் சொல்லிவிடுகிறேன். அங்கே போக்குவரத்து இல்லை என்று சொன்னார்கள். போக்குவரத்து இருக்கிறது. டவுன் பஸ் ரூட் பஸ் போகிறது. போக்குவரத்துக்கு தடை ஏற்பட்ட தடையை நீக்கும்போது மோதல் ஏற்பட்டு, போலீசார் சுட்டிருக்கிறார்கள். அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட வருவாய்த்துறை தலைவரை விசாரணை செய்யச் சொல்லியிருக்கிறார். என்னைப் பொறுத்த வரையில் துப்பாக்கிச் சூடு அவசியம் என்றும் சொல்லவில்லை. அவசியம் இல்லை என்றும் சொல்லவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : அதைப்பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திருவேங்கடம் நகர கிளை, குண்டம்பட்டி கிளை செயலர், ஞானம் என்பவர் எனக்கு எழுதிய கடிதத்தை தங்கள் அனுமதியோடு இங்கே படித்து விடுகிறேன்.

உயர் திரு. கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அழகர்சாமி அவர்களுக்கு எழுதும் கடிதம் என்னவெனில்,

குருஞ்சாகுளம் துப்பாக்கிச் சூடு நடந்த அன்று காலை 9 மணியளவில் காட்டில் புல் பிடுங்குவதற்காக கோவில்பட்டி மெயின் ரோட்டில் சங்குபட்டி விலக்கு பாதையில் நின்றுகொண்டிருந்த சங்குபட்டி கிராமத்தைச் சார்ந்த சுப்பன் மகன் வேலு (அரிசன) என்பவரை காவல் துறையினர் பிடித்து கொண்டு போய் உள்ளார்கள். வேலு என்பவருக்கு ஒரு சென்ட் நிலம் கூட கிடையாது. கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர். இவர் போனதிலிருந்து அவருடைய குடும்பம் அன்றாட வாழ்வை கூட நடத்த முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறது. நீங்கள் இங்கு வந்தபோது நாங்கள் பலதடவை மேல்படி விபரத்தை சொன்னோம். அந்த குடும்பத்தை சார்ந்தவர் நேரில் சென்னைக்கு வரவோ, மேல்படி செலவழிக்கவோ எந்த வசதியும் கிடையாது. நீங்கள் எப்படியும் முதல்வரை சென்னையில் சந்தித்து சார்ஜ்சீட் போடும்போது வேலு என்பவரை அந்த வழக்கிலிருந்து (குருஞ்சாகுளம் துப்பாக்கி சூடு) விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்து, ஒரு அரிஜன ஏழைக் குடும்பத்தை காப்பாற்றுங்கள் என்று உங்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறோம் என்று எழுதியுள்ளார்.

இப்படி பலர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவரவர்களே, ஒரு விளக்கம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று பெயரைச் சொல்லி தனக்கு கடிதம் எழுதியிருக்கிறார் என்று சொல்லி, அதை இங்கே படித்தார். அது சரியான தகவல்தானா அந்தக் கடிதத்தை இங்கே படிப்பதற்கு முன் அனுமதி பெற்றிருக்கிறாரா? இது சபை மரபுக்கு உகந்ததுதானா என்பதை தாங்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : அது சரியான தகவலா இல்லையா என்று நீங்கள் வேண்டுமானால் அவரைக் கேளுங்கள். அவர் இல்லை என்றால் அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளக்கத்திற்காக வந்த தகவலைச் சொன்னார்; அதற்கு பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறார். அடுத்து, திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள்.

திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் இந்த நடைமுறை ஆண்டில் குன்றாத செல்வமும் குறையாத வளமும் தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்பட வேண்டுமென்று வாழ்த்தி, அதற்கு உத்தரவாதம் அளிப்பதுபோல் தளராத நடையும், சோராத உள்ளமும் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் சில கொள்கை விளக்கங்களையும் தந்திருப்பதற்காக இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிந்து நான் நன்றி தெரிவிப்பதோடு, இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களும் நன்றி தெரிவிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றி மிகச் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது.

கூடல் மாநகரில் ஆடல் பாடல்களுடன் அறிவார்ந்த சொற்பொழிவும் நடப்பதற்கு ஏற்பாடு செய்தவர் புரட்சித் தலைவர் அவர்கள். நான்காவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்று முடிந்த பிறகு ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு சென்னைக்கல்லிலே நடக்க வேண்டியது நடக்காமல் நாதியற்று இருந்த காலத்தில் அதை நான் நடத்துகிறேன் என்று பொறுப்பேற்று நானிலம் போற்றுகின்ற வகையில் மிகச் சிறப்பாக புரட்சித் தலைவர் அவர்கள் நடத்தி இருக்கின்றார்கள்- முதல் உலகத் தமிழ் மாநாட்டிற்கு வெளிநாட்டிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளின் எண்ணிக்கை 20 பேர். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு அவ்வாறு வந்திருந்த வெளிநாட்டு பிரதிநிதிகளின் எண்ணிக்கை 30 பேர். மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 39 பேர். 4-வது உலகத் தமிழ் மாநாட்டிற்கு வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்களின் எண்ணிக்கை 200 பேர். 5-வது உலகத் தமிழ் மாநாட்டிற்கு வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்களின் எண்ணிக்கை 600 பேர். இதனால்தான் ஈழத்து நாட்டிலே இருந்து வந்திருந்த அமைச்சரவர்கள் தமிழகத்தில் பஞ்சபாண்டவர்களின் பல்லாண்டு வனவாசத்திற்குப் பிறகு பட்டாபிஷேகம் நடப்பது போல் மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடக்கின்றது என்றும் புரட்சித் தலைவரை கலியுக தர்மர் என்றும் சொன்னார்கள். அர்ஸ் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி மதுரை மாநாட்டின் மூலம் உலகத்திற்கு தமிழ்நாட்டின் கலையையும் கலாச்சாரத்தையும் நாகரீகத்தையும் காட்டினார், மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் அவர்கள் என்று சொன்னார்கள்.

[திரு. வி. வி. சுவாமி நாதன்] [1981 ஜனவரி 28

சோவியத் நாட்டிலே இருந்து வந்திருந்த அந்நாட்டின் பிரதிநிதி ஏலவ் அவர்கள் இந்த மாநாடு மகத்தான வெற்றி அடைந்தது என்பதோடு இதுபோன்ற மாநாட்டை மாஸ்கோ நகரில் நடத்த வேண்டும் என்ற தனது ஆசையையும் தெரிவித்தார்கள். அணிக்கு அணி சேர்ப்பது போல அமெரிக்கா நாட்டிலுள்ள அரிசோனா பல்கலைக் கழகம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு டாக்டர் பட்டத்தைக் கொடுத்தது. அதுமட்டுமல்லாமல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தத்துவஞானி ப்ளேட்டோ அவர்களின் கனவை நனவாக்குவதுபோல, தமிழகத்தில் நல்லதொரு ஆட்சி பொற்காலம் நடந்துகொண்டிருக்கின்றது என்று அ.இ. அண்ணா தி. மு. க. ஆட்சியை புகழ்ந்தார். அரிசோனா பல்கலைக் கழகம் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டத்தைக் கொடுக்கின்ற போது டாக்டர் பட்டத்தைக் கொடுக்கிறோம் என்று வாடிக்கையாகச் சொல்லாமல் காணிக்கையாகச் செலுத்துகிறோம் என்று சொல்லி அப்படி டாக்டர் பட்டம் கொடுப்பதால் அரிசோனா பல்கலைக் கழகம் கௌரவம் அடைகிறது என்று சொன்னார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின், உலகத் தமிழ் சங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கனவை இந்த 5—வது உலகத் தமிழ் மாநாட்டில் புரட்சித் தலைவர் அவர்கள் நிலை நாட்டினார்கள். இப்போது "இன்டர்நேஷனல் அசோசியேஷன் அப் தமிழ் ரிசர்ச்" என்றும், (International Acsociation of Tamil Research) இன்டர் நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் தமிழ் ஸ்டடிஸ்" (International Institute of Tamil Sutdies) என்றும் இருக்கின்றது. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் பிரெஞ்ச் அக்காடெமி போல் வேண்டும் என்ற வேட்கையை உலகத் தமிழ்ச் சங்கத்தைப் ஏற்படுத்தி, அதனுடைய கிளைகள் பல்வேறு நாடுகளிலேயும் பரவுவதற்குரிய ஏற்பாட்டைச் செய்த பெருமை புரட்சித் தலைவர் அவர்களையே சாரும். இவ்வளவு வெற்றிகரமாக உலகத் தமிழ் மாநாடு நடந்திருந்தாலும் ஒருசிலர் அதைத் தூற்றியும், உலகத்தமிழ் மாநாட்டின் கணக்கை சட்டசபையில் வைக்க வேண்டும் என்றும் பேசுகிறார்கள். 1968-ம் ஆண்டு இந்த அவையிலே ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர் மானம் வந்தது. அப்போதும் இதேமாதிரி தான் எதிர் கட்சியிலே உள்ளவர்கள் அதாவது பிரதான எதிர் கட்சியின் இடத்தை வகித்தவர்கள் உலகத் தமிழ் மாநாட்டு கணக்கைக் காட்ட வேண்டும் என்று சொன்னார்கள்.

கிரேக்க நாட்டு தத்துவஞானி சாக்ரடீஸ் அவர்கள் இறக்கும் தருவாயில் அவரது உற்ற நண்பர்கள் எல்லாம் அவரிடம் உங்களை ஜெயிலிலிருந்து விடுதலை செய்துவிடுகிறோம் தப்பிவிடுகிறீர்களா என்று கேட்டபோது நான் தப்ப விரும்பவில்லை. சட்டத்தினுடைய கட்டளைக்குக் கட்டுப்படுகிறேன் என்று சொல்லி எனக்கு நீங்கள் ஏதாவது செய்யவேண்டும் என்றால் நான் ஒருவரிடம் கோழியை

1981 ஜனவரி 28] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

கடன் வாங்கி இருக்கிறேன். அந்தக் கோழியைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார்களாம். அதேபோல் பேரறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்கா நாட்டில் வைத்தியம் செய்துகொண்டபோது அதனால் ஏற்பட்ட கடனை தனது கட்சி கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அந்த உத்தமன் நடத்திய உலகத் தமிழ் மாநாட்டுக்கே கணக்கு கேட்டார்கள். அண்ணாவினுடைய அமைச்சரவையை அலங்கரித்தவர்கள் இன்று எதிர் கட்சி வரிசையிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். நான் நினைக்கிறேன், எதிர் கட்சியில் நபர்கள் மாறினாலும் அந்த நாற்காலியினுடைய விசேடகுணம் மாறாது என்று கருதுகிறேன். அதனால்தான் அவர்கள் குறை கூறுகிறார்கள். அந்தக் காலத்தில் காலம் சென்ற திரு. ஆசைதம்பி அவர்கள் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள்.

[பிற்பகல் 1-00]

அப்பொழுதான் சொன்னார்கள் "இப்படிப்பட்ட உலகத் தமிழ் மாநாட்டை விமர்சிக்கிறவர்கள் தமிழைப் பற்றியோ, தமிழர்களைப் பற்றியோ அக்கறை இல்லாதவர்கள். கலக்கம் அடைந்து, குழப்பம் அடைந்து சந்து பொந்துகளில் நின்று வயிற்றெரிச்சலைக் கொட்டுகிறார்கள்." என்று ஆசைத்தம்பி அவர்கள் சொன்னதை அப்படியே திருப்பிச் சொல்வதைத் தவிர வேறு வழி இல்லை.

அது மட்டும் அல்ல, புதிதாக ஒருபிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்கள். உலகத் தமிழ் மாநாட்டை நடத்த பெரியவர் சங்கராச்சாரியார் அவர்களுடைய ஆசீர்வாதம் தான் முக்கியமா, அவர்களுடைய ஆசியைப் பெற்றுத்தான், இந்த மாநாடு நடக்க வேண்டும் என்று சொன்னால், அது தமிழர்களுக்கு பெரிய அவமானம் என்று ஒருவரும், சங்கராச்சாரியருடைய ஆசிகளோடு மாநாடு நடத்துகிறோம் என்று சொல்லி சன்னதிகளை ஏமாற்றுகிறார்கள். என்றும் கூறியிருக்கிறார்கள். நான் மனமுவந்போடு தெரிவித்துக் கொள்கிறேன். சங்கராச்சாரியார் பெரிய முதியோர் இல்லையா? ஆன்றோர் அல்லவா? சான்றோர் அல்லவா நடமாடும் ஆண்டவனாக பாரதப் பிரதமர் அவர்களை மதிக்கிறார் இல்லையா? ஆனால் அவர் ஆசியைப் மட்டும் பெற்றுத்தானாவிழா நடத்தினோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் தாம் என்னுடைய ஆசான் முழுமுதற் காரணம். அவர் என்னை ஊக்குவிக்கிறார். அந்த ஊக்கத்தினால் இந்த மாநாட்டையும் நடத்துகிறேன் என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லவில்லையா? பலபேர் ஊக்கம் அளித்தார்கள் ஆசி தெரிவித்தார்கள். அவர்களிலே ஒருவர் சங்கராச்சாரியாரே தவிர அவர் ஆசியைத் தெரிவித்ததினால்தான் இந்த மாநாடு நடந்தது என்று சொல்வது அவ்வளவு நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1681 ஜனவரி 28

அதுமாத்திரம் அல்ல, அப்படி பெரியவர் சங்கராச்சாரியாருடைய ஆசியில் மகிமை எதுவும் இல்லை என்று சொன்னால், குங்குமம் பத்திரிகையின் முதல் இதழில் அவருடைய திருஉருவப் படத்தைப்போட்டு அவருடைய ஆசியைக் கோருவதின் அவசியம் என்ன என்று கேட்கிறேன்? அது மாத்திரம் அல்ல, கருமாரி அம்மன் கோவிலில் ஒவ்வொரு ஜனவரி மாதமும் 5 ஆம் தேதி அன்று கனிமொழியின் பெயரால் அபிஷேகம் நடத்த வேண்டும் என்று ஆயுள் உறுப்பினராக ஆக்கப் பெற்றிருப்பது ஏன் என்று கேட்கிறேன்? நான் இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், பகுத்தறிவு என்று சொன்னால், அது கடவுள் இல்லை. என்று சொல்வதற்காகவோ அல்லது மதவாதிகளை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காகவோ அல்ல. இப்படிப்பட்ட பேச்சுக்கள் எல்லாம் வருவதற்குக் காரணம், இந்த நேரத்திலே எதிர்க்கட்சியிலே இருக்கிறோமே, நாம் ஆளுங்கட்சியில் இருந்து உலகத் தமிழ் மாநாட்டை நடத்த முடியாமல் போய்விட்டதே என்ற நினைப்பினால்தான்.

1974 ஆம் ஆண்டு இதே ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின், மீதான விவாதத்தின் இறுதியிலே பேசுகிற போது முன்னாள் முதல்வர் அவர்கள் சொன்னார்கள்—1976லும் நாங்கள் தான் வருவோம் என்று. ஆனால் அப்போது ஆட்சியையே எடுத்து விட்டார்கள் அவர்களால் வர முடியவில்லை. பிறகு 77-லேயும் அவர்களால் வர முடியவில்லை. பல்வேறு துறைகளில் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கட்சியின் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். சென்ற தடவை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மாற்றப்படுவதற்கு முன்னும் பிற்பாடும் பெரிய கப்பல் பேர ஊழல் நடை பற்றிருக்கிறது என்று சொன்னார்கள். எரிசாராய ஊழல் இப்போது வினாவாக இருக்கிறது-பின்னால் விஸ்வரூபம் எடுக்கும் என்று சொன்னார்கள். சட்டமன்றதேர்தல் நடந்தக் காலத்திலே கப்பல் பேர ஊழல் விஸ்வரூபமே எடுத்தது. அப்படி விஸ்வரூபம் எடுத்தாலும், தமிழகத்தினுடைய மக்கள் புரட்சித் தலைவர் அவர்களுக்குத் தான் எங்களுடைய ஓட்டு என்று மகத்தான வரலாற்று சிறப்பான வெற்றியைத் தந்தார்கள்.

நாங்கள் தான் தமிழினத் தலைவர்கள். தமிழைக் காப்பாற்றுவதற்காக தண்டவாளத்தில் கூட உலைக் கொடுத்தவர்கள். எங்களுடைய பேச்சை நீங்கள் கேளுங்கள் என்றால் மக்கள் கேட்க வேண்டும் என்பது உங்களுடைய சித்தம். ஆனால் நீங்கள் சொல்லுவதைக் கேட்காமல் புரட்சித் தலைவர் அவர்கள் எதைச் சொன்னாலும் தமிழக மக்கள் கேட்கிறார்கள் என்று சொன்னால் அது எங்களுடைய பாக்கியம்.

நம்முடைய தமிழ்நாட்டில் உலகத் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்துவதோடு புதிதாக எடுக்கும் 3 பல்கலைக் கழகங்களோடு, 4வதாக தமிழ் பல்கலைக் கழகத்தையும் தனியாக ஏற்படுத்தவும் முயற்சி செய்யப் போவதாக ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

1981 ஜனவரி 28] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

அடுத்து, தமிழ்நாட்டிற்காக 3,150 கோடி ரூபாயை 6வது 5 ஆண்டுத் திட்டத்திற்கென, டெல்லிக்குச் சென்று, புரட்சித் தலைவர் அவர்கள் வாங்கி வந்திருக்கிறார்கள். அது பற்றி லேசாகச் சொல்லுகிறார்கள் சிலர். 3,150 கோடி ரூபாய் வராமல் 3,000 கோடிக்கு ஒரு ரூபாய் குறைவாக வாங்கி வந்திருந்தாலும் கூட இந்த முதலமைச்சருக்கு திறமை இல்லை. ராஜதந்திரம் தெரியவில்லை, என்று குற்றம் சாட்டி கூறியிருப்பார்கள். வெய்யிலில் இருந்தால்தான் நிழலின் அருமைத் தெரியும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவர்களுக்கும் என்னைப் பொருத்தவரை நான் ஒன்று கூறிக் கொள்ள விரும்புகிறேன், தமிழகத்திற்கு 6 வது 5 ஆண்டுத் திட்டத்திற்கென 3,150 கோடி ரூபாய் வருகிறது என்றால், அது 'சீசர் சென்றான் வென்றான்' என்ற வரலாற்று நிகழ்ச்சியினைச் சொல்வார்களே, அந்த வரிதான் நினைவுக்கு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் நிலவு இல்லாத அமாவாசை என்றும், பூக்காத அத்திமரம் என்றும் சொன்னார்கள். இதிலே சூற்பனை இருப்பதாகத் தெரியவில்லை. கூந்தல் கருப்பு குங்குமம் சிகப்பு என்று சொல்வதைப்போல்தான் இதுவும் இருக்கிறது. 'பனி இல்லாத மார்கழியா படை இல்லாத மன்னவனா' என்று சொன்னால், அதிலே பொருள் இருக்கிறது. எங்களைப் பொருத்தவரையில் இந்த ஆளுநர் உரை, வருகின்ற பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்னால், இரு சபைகளையும் கூட்டி, இந்த அரசு என்னென்ன காரியங்கள் செய்யவிருக்கிறது. என்னென்ன திட்டங்கள் போடவிருக்கிறது. என்பதை பூராவும்சொல்ல முடியாமல் கூடிய அளவில் தமிழக அரசு என்னென்ன செய்யும் என்பதைப் பற்றி மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள் என்று தான் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகளைப் பற்றிச் சொன்னார்கள். அந்த விவசாயிகளை பற்றி நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் சொல்லுகிறபோது விவசாயிகள் எல்லோருமே சமூக விரோதிகள் என்று சொல்வது தவறு என்று சொன்னார்கள். விவசாயிகள் எல்லோரையும் சமூக விரோதிகள் என்று யாரும் சொல்லவில்லை. விவசாயிகள் என்ற பெயரில் பாலில் உப்பு கலப்பவர்கள், போக்குவரத்தைத் தடை செய்பவர்கள், பஸ்ஸை நிறுத்துபவர்கள், பாலைக் கீழே கொட்டுகிறவர்கள், போலீஸ்காரர்களோடு சண்டையிட்டு போலீஸ்காரர்களைக் கொல்பவர்கள் அவர்களைச் சமூக விரோதிகள் என்று சொல்கிறோமே தவிர, பூரா விவசாயிகளையும் சமூக விரோதிகள் என்று சொல்லவில்லை.

நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். எந்த நாட்டிலே யாவது வரியைக் கொடுக்க வேண்டாம் என்று கிளர்ச்சி நடந்து, அதையே தீவிரமாக ஆக்கி, நாடுபூராவும் கிளர்ச்சி நடத்தினால், அது எந்த நாடாக இருந்தாலும் யார் சகித்துக் கொண்டு இருப்பார்கள்? வரி கொடுக்க வேண்டாம் என்று இயக்கம் நடத்துவதால் சில பேர் மகாத்மா காந்தியாக ஆகிவிடலாம் என்று நினைக்கிறார்கள்.

அந்த காலத்தில் இயேசு சீர்திருத்தப் பிரச்சாரம் செய்து வந்தபோது ஆண்டவன் திருவுருவங்களிலோ, சிலைகளிலோ இல்லை என்று சொன்னபோது, சில பேர் இயேசுவிடம் கேட்டார்கள். சீசருக்குக் கொடுக்க வேண்டிய வரியைக் கொடுக்கலாமா வேண்டாமா? என்று கேட்டார்கள். சீசருக்குக் கொடுக்க வேண்டிய வரியைக் கொடுக்க வேண்டியதுதான். வரியை கட்டிவிடுங்கள் என்று இயேசு சொன்னார். ஆனால் எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், நாங்கள் வரி கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை என்று சொல் கிறார்கள். ஆனால் அடுத்த வாக்கியத்தில், வரி கொடுக்க வேண்டாம் என்று தீவிரமாகப் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறவர்களை போராட்டம் நடத்துபவர்களை ஆதரிக்கிறார்கள். நான் சாதாரண வக்கீல் என்ற முறையில் பலபேர்களிடம் கேட்கிறேன். வரி கொடுக்கமாட்டேன் என்று சொல்வது எந்த வகையில் நியாய மாகும். வரிகொடுக்கமாட்டேன் என்று போராடுகிறவர்களுக்கு ஆதரவு கொடுப்பது மறைமுகமாக வரி கொடுக்க வேண்டாம் என்று சொல்வது தானே தவிர வரி கொடுங்கள், ஆனால் போராட்டம் நடத்துங்கள் என்று சொல்வது போல் ஆகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொன்னார்கள். நம்முடைய பாரதப்பிரதமர் உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்தபோது இந்தி வராது என்று உறுதி அளித்தார்கள். இது ஏற்கனவே பல தடவை அளித்த உறுதிமொழி என்று இருந்தாலும், அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரியாகச் சொல்லாமல் பயப்படுகிறார் என்று சொல்கிறார்கள். எங்களுடைய முதலமைச்சரைப் பொறுத்த வரையில் நெப்போலியன் சரித்திரத்தில் எப்படி தோல்வி என்பதற்கு இடம் இல்லையோ அதைப்போல் புரட்சித் தலைவர் அகராதியில் அச்சம் என்பதற்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்தியில் ஜனதா கட்சி ஆண்டபோது தன்னுடைய சர்க்காரை டிஸ்மிஸ் செய்தாலும் பரவாயில்லை என்று சொல்லி, இன்றுள்ள பாரதப்பிரதமர் அவர்களை அன்றைக்கு பாராளுமன்ற தேர்தலில் நின்றபோது ஆதரித்தவர் நம்முடைய புரட்சி தலைவர் என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். டெல்லியில் நடைபெறுகிற முதலமைச்சர்கள் மாநாட்டில், பிரதம அமைச்சரை வைத்துக்கொண்டு மிகத் தெளிவாக வலியுறுத்தி இருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டில் இந்தி வரக்கூடாது, இந்தி வந்தால் சிக்கல் ஏற்படும் என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். ஆனால், திரு. நெடுமாறன் அவர்கள் சொன்னார்கள், நேரு கொடுத்த உறுதிமொழி போல் இது இல்லை. அதில் இருந்து பிறண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். நேருவின் வாக்குறுதி அப்படியேதான் இருக்கிறது. நேரு கொடுத்த வாக்குறுதியை சட்டமாக்கலாமா வேண்டாமா என்பதில் தான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, நேரு உறுதிமொழியில் இருந்து பிறண்டு விட்டார் என்று சொல்வது சரியல்ல. அதுமட்டுமல்ல,

எதிர்பாராமல் எதிர் காலத்தில் இந்தி தமிழ்நாட்டு மக்கள் மீது திணிக்கப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள்-கிட்டத்தட்ட 600 துறைகளி இந்தி திணிக்கப் பட்டு இருக்கிறது என்று அதனால் தமிழுக்கு பாதகம் ஏற்படுகின்ற நிலையேற்பட்டால், அதற்காக உயிர்தியாகம் செய்வதற்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் கொஞ்சம் கூடத் தயங்காது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சியால் பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டிருப்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். புதுகோட்டை மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் வரிவசூலிப்பதை விலக்கி இருக்கிறார்கள். அந்தச் சலுகை மற்ற மாவட்டங்களுக்கும் வேண்டும் என்று கேட்டார்கள். உண்மையிலேயே நம்முடைய ஆளுநர் உரையிலே அந்த இரண்டு மாவட்டங்களுக்கு கொடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னபோதிலும், அதைப் போன்று வறட்சிப் பகுதிகள் மற்ற மாவட்டங்களில் இருந்த [illegible] மாவட்டங்களில் 50 சதவீதத்திற்கு குறைச்[illegible] விளை[illegible] திருக்கிறதோ அந்த மாவட்டத்திற்கும் [illegible] தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள், [illegible] மல்லாமல் நிச்சயமாக அங்கே நில வரி வசூலிப்பது தள்ளுபடி செய்யப்பட்டு, துயர் துடைப்பு பணி நடைபெறும் என்று மிகத் தெளிவாகக் குறிப் பிட்டு இருக்கிறார்கள்.

122167

புரட்சித் தலைவரின் அரசு தன்னுடைய கொள்கையை [illegible] சென்னைக்குக் காவிரி நீர் கொண்டு வருவதற்கு கட்டளைக் கால்வாய் அணையில் இருந்து வாய்க்கால் வெட்டி கொண்டு வரப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வாய்க்கால் மூலம் கொண்டு வருவதை சிலர் இன்றைக்கு ஆட்சேபிக்கிறார்கள். இந்த அறிவிப்பை மிக ஆழ்ந்து யோசித்து பொறியியல் வல்லுநர்களைக் கலந்து பேசிய பிறகே சொல்லியிருக் கிறார்கள் என்று கருதுகிறேன். லேண்ட் ஆர்மி என்று அமைத்து, ஒரு நாளைக்கு ஒருலட்சம் பேர் அந்த வாய்க்கால் வெட்டுவதற்குப் பயன்படுத்துவது என்று வைத்தால் ஒரு ஆண்டுக்கு 3 கோடியே 60 லட்சம் பேர் வேலை செய்வார்கள். 5 ஆண்டு காலத்தில் கிட்டத்தட்ட 18 கோடி மக்களுக்கு வேலை கிடைக்கும். இது ஒரு முக்கியமான திட்டம். சிலபேர் இதைத் தவறாகக் கருதலாம். அந்த வாய்க்கால் வெட்டி முதலமைச்சர் அவர்கள் வெற்றி பெற்று விட்டால், பழங்காலத்தில் காவிரிக் கரையை எடுத்தானே கரிகால் சோழ மன்னன், அதைப் போன்று புரட்சித் தலைவர் காலத்தில் அந்தக் கால்வாய் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று பெயர் வந்து விடுமே என்ற பொறாமையின் காரணமாக சிலர் அந்த வாய்க்கால் எடுப்பதைத் தடுக்கிறார்கள், அதனால் தான் இந்த எதிர்ப்பையும், பயமுறுத்தலையும் தருகிறார்கள் என்று நினைக்கிறேன்.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1981 ஜனவரி 28

[பிற்பகல் 1.10]

தமிழ்நாட்டுக்கு கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீர் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். மராட்டிய மாநிலமும், கர்நாடக மாநிலமும், ஆந்திரா மாநிலமும் ஒவ்வொன்றும் ஐந்து டி.எம்.சி. வீதம் 15 டி.எம்.சி. தண்ணீர் கிருஷ்ணா நதி மூலம் கர்நாடக சர்க்கார் எடுத்துக் கொண்டு அதற்குப் பதில் காவிரி மூலம் 15 அல்லது 10 டி.எம்.சி. கொடுப்பார்களேயானால் கட்டளைவாய்க்கால் வழி வந்து தென் ஆற்காடு மாவட்டத்திற்கும். என் தொகுதிக்கும் மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் இடத்திற்கும், மாண்புமிகு உறுப்பினர் காட்டுமன்னார்குடி இராமலிங்கம் அவர்கள் பகுதிக்கும் தண்ணீர் கிடைக்கும். ஆகவே அத்திட்டத்திற்கு உறுதுணையாக யோசனைகளைக் கூறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் திட்டம் வெற்றிபெறாது இதுவும் வீராணம்போல் ஆகும் என்று சந்தேகப்படவேண்டியதில்லை. வீராணத்தைக் கண்டித்தவர்கள் மீண்டும் ஒரு வீராணத்தை நடத்த உடந்தையாக இருக்கமாட்டார்கள். வீராணம் திட்டம் மூலம் சென்னைக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்குமோ அதைவிட அதிகப்படியான அளவு தண்ணீர் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் என்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் உரிமையோடு பேசலாம், அதிலே நான் குறுக்கிடுவதற்குவிரும்பவில்லை. ஆனால் ஆந்திராவிலிருந்து ஏற்கனவே ஏற்பட்டிருக்கிற உடன்பாட்டின் அடிப்படையில் 15 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டுக்கு கொண்டு வருவதற்கு இருக்கிற உரிமையை அதையும் கொண்டுபோய் கர்நாடகத்தால் அந்தத் தண்ணீரை எடுத்துக்கொண்டு காவிரி மூலம் அந்தத் தண்ணீரைத் தருவதற்கு ஒப்புக்கொள்வார்களேயானால் நமக்கு பயன் கிடைக்கும் என்று சொல்வது, பேசுவது ஏற்கனவே குடுமியைக் கொடுக்கிறவன் மீசையையும் கர்நாடகத்தாரிடம் கொடுக்க ஒப்புக்கொள்கிற ஒரு காரியத்தைப் போன்றது. உறுப்பினர் அவர்கள் ஆளும்கட்சியில் இருப்பதால் ஆளும் கட்சிக்கு இப்படி ஒரு ஆபத்தை உண்டாக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: அது என்னுடைய பரஸ்பர பண்டமாற்று யோசனை. இது சில பொறியியல் வல்லுனர்கள் சொன்ன யோசனை.

1981 ஜனவரி 28 [திரு. வி. வி. சுவாமிநாதன்]

கிராம மணியக்காரர்கள் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்தான் எல்லாம் சொன்னார்கள். கிராம மணியக்காரர் தலை வேலையிலிருந்து மாற்றியதற்கு எல்லோரும் இந்தியாவிலேயே ஏதோ முதன்முதலாக தமிழ்நாட்டில்தான் இந்த பாவம் நடந்திருப்பதாகக் கூறுகிறார்கள். பக்கத்து மாநிலமான கர்நாடகாவில் 1961-ல் மணியக்காரர்கள் வேலையை ரத்து செய்துவிட்டார்கள். அங்கு கிராம மணியக்காரர்களுக்கு ஏற்கனவே நிலம் கொடுக்கப்பட்டு இருந்தது. மணியக்காரர்கள் பதவியை ரத்து செய்தவுடன் அவர்களுக்கு அவர்கள் நிலங்களுக்காக நஷ்டயீடு கொடுப்பது பற்றிய பிரச்னை வந்தது. எங்களது இதயதெய்வம், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ரெயிலில் செல்கிறபோது மணியாச்சி ரெயில்வே ஸ்டேஷனில் கொலை செய்ய எத்தனித்தவர் ஒரு மணியக்காரர் என்று இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அது மாத்திரம்தானா, என்னுடைய தொகுதியில் சேத்தியாத்தோப்பில் ஒரு மணியக்காரர் மகன் **ஒரு பொதுக் கூட்டத்தில் போலீஸ் ஸ்டேஷன் பக்கத்தில் சொல்கிறான். தெரியாம எம்.ஆர். இராதா சுட்டுவிட்டான், நானாக இருந்தால் நன்றாக சுடுவேன் என்று சொல்கிறான். (குறுக்கீடுகள்) ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் சொல்கிறேன். உதாரணத்திற்காகச் சொன்னேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: அவர், அந்த மணியக்காரர் பிள்ளை இங்கே இல்லை என்ற நிலையில் அவர் பெயரை எப்படிச் சொல்லலாம்?

திரு. நா. சுந்தரராஜ்: மணியக்காரர்கள் பற்றி கொள்கையளவில் ஏதாவது சொல்லலாமே தவிர அந்த மணியக்காரர் மகன் பொதுமேடையில் இவ்வாறு பேசினார் என்று சொல்லி அதன் மூலம் பேசுகிறவருக்கு ஒரு சங்கடமான நிலையை உருவாக்கி இந்த மணியக்காரர் இஷ்யூவை வேறுவிதத்தில் திசை திருப்ப வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த பெயரை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: இந்த மணியக்காரர்களைப் பற்றி நம்முடைய மாண்புமிகு காமராஜ் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில், விழுப்புறத்திலே ஒரு கூட்டத்திலே பேசுகின்ற போது சொல்லியிருக்கின்றார்கள். 'ஆண்டவர் நம்கண்ணுக்கு தெரிவதில்லை; அப்படி கண்ணுக்குத்தெரியாத ஆண்டவனிடத்தில் வரம் பெற்றாலும் பெற்றுவிடலாம், இந்த மணியக்காரர் கிராமங்களிடம் ஒரு சர்டிபிகேட் வாங்குவது என்பது முடியாத காரியம்' என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஒரு வக்கீல் தொழிலைச் செய்கிறேன்; அது பற்றி எனக்கும் நன்றாகத் தெரியும். மணியக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமா

** மாண்புமிகு துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

வேண்டாமா என்பதைப்பற்றியெல்லாம், நேரம் வருகின்ற போது, இந்த அரசு அதைப்பற்றிச் சொல்லும்; முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், சட்டப்படி அவர்களுக்கு, நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்பதுபற்றி 20–6–79–க்குப் பிறகு 'பிராபர்டி ரைட், பண்டமெண்டல் ரைட்' அரசியல் சாசன சட்டப்படி கிடையாது; அதை ஆட்சேபிக்கிறேன். அப்படியே கொடுத்தாலும், காருண்யத்துடன், மனிதாபிமானத்துடன் கொடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இந்த ஆண்டு துவங்குகின்றபோது, துப்பாக்கிச் சூடு சப்தத்துடன் ஆரம்பித்தது என்று சொன்னார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு மாநிலங்களிலும், கிட்டத்தட்ட இந்தியா பூராவும், தலைநகர் உட்பட துப்பாக்கிச் சூடு அபூர்வமாக இல்லாமல் அன்றாட காரியம் நடத்தும் நிலைமையாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் என். வி. என். சோமு அவர்கள் சொன்னார்கள், ரோமாபுரி எரிகின்றபோது வீணை வாசிப்பது போல் என்று வர்ணித்தார்கள். அப்படி சொல்ல வேண்டியதில்லை. தீவிர, தாங்கமுடியாத வலிக்குப் பிறகு, தாய் தங்கக் குழந்தையைப் பெற்றாள் என்பது போல், அதற்குப் பிற்பாடு இந்தப் பெயர்பெற்ற உலகத் தமிழ் மாநாடு நடந்தது என்று வைத்துக்கொள்ளலாம். ஆனால், சில பேர் காட்டு தெய்வங்களுக்கு ஆடு, கோழி போன்றவைகளை பூசாரிகள் பலிகொடுப்பது போல், அரசியலில் ஒரு சில பேர் மக்களைத் தூண்டிவிட்டு. போலீஸ்காரர்களுக்கு பலி கொடுக்க போராட்டங்களை ஊக்குவிக்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தை தொழில் மயமாக்கும் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மத்திய சர்க்கார் இதற்கு உதவவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே பல்வேறு திட்டங்கள் தமிழ் நாட்டிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு இன்னும் அனுமதி வராமல் இருக்கின்றது. அனுமதி வராததால், ஏற்கனவே போடப்பட்ட பல மதிப்பீடுகள் இரண்டு மடங்காக இருக்கிறது.

என்னுடைய தொகுதியில், பரங்கிப்பேட்டைக்குப் பக்கத்தில் தினமும் 240 பேரலுக்குச் சமமான குரூட் ஆயிலுக்குச் சமமான எரிவாய்வு, வீணாகி எரிந்து கொண்டிருக்கிறது. இதிலிருந்து வீட்டு சமையலுக்குத் தேவையான எல். பி. ஜி. காஸ் தயாரிக்கலாம்; பெட்ரோ கெமிகல் காம்பிளக்ஸ் ஒன்றும் ஏற்படுத்தலாம். இதையெல்லாம் செய்வதற்கு அரசு முன் வரலாம். மத்திய அரசு இதற்கு உதவவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பி. அண்டு சி மில் பற்றி இந்த சர்க்கார் எவ்வளவு செய்ய வேண்டுமோ அதைச் செய்திருக்கிறது. அதை புரட்சித் தலைவர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், கோயம்புத்தூரில் பல மில்களில் பணிபுரியும் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்தபோது, அவர்களுக்கு உதவுவதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தொழிலாளிகளுக்கு எல்லோரும் ஒரு நாள் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது மாதிரி ஒரு நாள் சம்பளத்தைக் கொடுத்து, பெயர்பெற்ற அந்த பி அண்டு சி மில்லைத் திறந்து, அந்தத் தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெற இந்த அரசு பாடுபடும், பாடுபட்டுக் கொண்டிருக்கிறது அதற்கு மத்திய அரசு உதவவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இந்த கவர்னர் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு வழிமொழியும் வாய்ப்பை அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ஒரு நாள் சம்பளத்தைக் கொடுத்தால், இந்த அரசு அந்த தொழிற்சாலையை மீண்டும் திறக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்?

[பிற்பகல் 1.20]

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

உ. பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று (28–1–1981) முற்பகல் சுமார் 11–50 மணிக்கு. காவலை மீறி பார்வையாளர் மாடத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசிய சென்னை வேப்பேரி, தானாத் தெருவில் 20 ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு அப்துல் லத்திப்பின் மகன் சிந்தா சாஹுல் அமீது என்று சொல்லிக் கொள்ளும் நபர் தற்போது பேரவைக் காவலரின் (சார்சென்ட்) காவலில் இருக்கிறார். அவர் செய்கை அவை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

7. அரசினர் தீர்மானம்

பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே. கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன்—

"இன்று (28-1-1981) முற்பகல் சுமார் 11-50 மணி அளவில் காவலை மீறி சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திற்குள் வலுவில் நுழைந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை, வேப்பேரி, தாணாத் தெருவில், 20 ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு. அப்துல் லத்தீப்பின் மகன் சிந்தா சாஹுல் அமீது என்று சொல்லிக் கொள்ளும் நபர் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று பேரவை தீர்மானிக்கிறது.

அவர் ஏழு நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

இந்த அவையில் இதற்கு முன்னால் பல தடவை இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து நாம் சலுகைகள் காட்டி, மூன்று நாட்கள், ஒரு நாள் என்று தண்டனையைக் குறைத்திருக்கிறோம், தொடர்ந்து மீண்டும் மீண்டும் இந்த அவையில் இப்படிப்பட்ட குற்ற நிகழ்ச்சிகள் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் ஏழு நாட்கள் என்று போடப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படக்கூடாது என்ற அச்சுறுத்தலை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இதுவரை கொடுத்த சலுகையைக் கொடுக்காமல் ஏழு நாட்கள் என்று தீர்மானிக்க வேண்டுமென்று தீர்மானம் மொழியப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் முடிவு செய்யலாம். (குறுக்கீடு)

துணைத் தலைவர் அவர்களே, நல்லவர்களுக்கு அன்பு காட்டுவது, அருள் காட்டுவது, பற்றுக் காட்டுவது பந்தம் காட்டுவது நல்லது. தீயவர்களுக்கு இப்படிப்பட்ட அன்புள்ளத்தையும், பற்றுள்ளத்தையும் காட்டுதல் கூடாது. என்றாலும் நீங்கள் அத்தனை பேரும் காட்டுவதன் காரணமாக இந்தத் தண்டனையை ஏழு நாட்கள் என்பதற்குப் பதிலாக மூன்று நாட்கள் என்ற திருத்தத்தோடு தீர்மானத்தை நிறைவேற்றலாம்.

மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க முன்பு மொழிந்த தீர்மானத்திற்குப் பதிலாக நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"இன்று (28-1-1981) முற்பகல் 11-50 மணி அளவில் காவலை மீறி சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திற்கு வலுவில் நுழைந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை. வேப்பேரி, தாணாத் தெருவில் 20 ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு. அப்துல் லத்தீப்பின் மகன் சிந்தா சாஹுல் அமீது என்று சொல்லிக் கொள்ளும் நபர் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர் மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

4. அறிவிப்புகள் — தொடர்ச்சி.

ஊ. பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்: 28-1-1981 ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் பற்றிய திருத்திய நிகழ்ச்சி நிரலின் விவரம் பின்வருமாறு:—

29-1-1981 (வியாழக்கிழமை)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்-தொடர்ச்சி
30-1-1981 (வெள்ளிக்கிழமை)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடர்ச்சியும், பதிலுரையும்.
31-1-1981 (சனிக்கிழமை)	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1979-80 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்.
1-2-1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.

2–2–81 (திங்கட் கிழமை)	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது 1979–80 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் விவாதம்-தொடர்ச்சி.
3-2-1981 (செவ்வாய்க்கிழமை)	பேரவைக் கூட்டம் இல்லை.
4–2–1981 (புதன்கிழமை)	அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்.
5–2–1981 (வியாழக்கிழமை)	
6-2-1981 (வெள்ளிக்கிழமை)	1980-81 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும், அதற்கான நிதி ஒதுக்க சட்டமுன் வடிவு அறிமுகம் செய்தலும்.
7-2-1981 (சனிக்கிழமை)	அரசு அலுவல்கள்.
8-2-1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
9-2-1981 (திங்கட்கிழமை)	(1) நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். (2) இதர அரசு அலுவல்கள்.
(10-2-1981) (செவ்வாய்க்கிழமை)	அரசு அலுவல்கள்.
	பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

மாண்புமிகு. பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 29-1-1981 ஆம் தேதி காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

162. தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியத்தின் 1971-72 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. (ஆங்கிலம், தமிழ்) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு-வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 4/1971) 47 ஆவது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

163. ஊராட்சிகள் விதிக்கத்தக்க வீட்டு வரி தொடர்பான விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 22-12-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1974 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

164. தமிழ்நாடு அலுவலகப் பணியாளர் தொகுதியிலுள்ள கிராம நிர்வாக அலுவலர்கள் பதவியினை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக வரம் பெல்லையிலிருந்து நீக்குவதற்கென்று, தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் அமைப்பு—நிர்வாக சீர்திருத்தத் துறையின் (பணியாளர் அமைப்பு—எம்) 25-11-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1162 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

165. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 22-7-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1371 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப் படுத்துதல்) சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் எண், 29/1974) 57 (2) ஆவது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

166. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளின் 16 (ஆ) ஒழுங்குமுறை விதியின்படி, தேர்வாணைக்கழக வரம்பெல்லையிலிருந்து, தமிழ்நாடு அலுவலகப் பணியிலுள்ள கிராம நிர்வாக அலுவலர்கள் பதவிகளை நீக்குவது குறித்து பணியாளர் அமைப்பு—நிர்வாக சீர்திருத்தத் துறையின் (பணியாளர் அமைப்பு—எம்) 25-11-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1161 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

*16. 1980–81 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக்கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

*17. 1980-81 ஆம் ஆண்டில் துணை மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

*18. 1980-81 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய நிதி அமைச்சர், மாண்புமிகு டாக்டர் இராஜ நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்.)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1981 ஜனவரி 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"எண்ணியார் எண்ணம் இழப்பர்; இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்"

தாம் செய்து முடிக்க எண்ணிய செயலைச் செய்வதற்குத் தகுந்த இடத்தை முதலில் அறிந்து கொள்ளவேண்டும். பிறகு, தமக்கு நெருக்கமான அன்பர்களை ஆதரவாகக் கொண்டு அச்செயலைச் செய்து முடிக்கலாம். இவ்வாறு செயல்படுவோரை, 'எளிதில் வென்றுவிடலாம்' என்று எண்ணி இருந்த பகைவர்கள், தங்களுடைய இந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுவர்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம்.

*வினா எண். 81—திரு. ந. வேணுகோபால்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) நாகப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் செயல்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனை இயங்க செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) மதுவையாற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள இச்சிறு துறைமுகத்தில் மணல் தூர்ந்துள்ளதால், மணலை வாரி துறைமுகத்தை இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வாலிநோக்கத்தில் மீன்பிடித் துறைமுகம்.

*வினா எண். 82—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முகவை மாவட்டம் வாலிநோக்கத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வாலிநோக்கத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் செயற்குறிப்பு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப்பகுதியிலே துறைமுகம் கட்டுவதற்காக மத்திய அரசின் ஒப்புதல் வந்தவுடன்—அங்கே அதிகமான மீன் மட்டும் அல்ல, உப்பும் அதிகமாகக் கிடைக்கிறது—தூத்துக்குடிக்கும் வாவி நோக்கத்திற்கும் இடையே உப்பை ஏற்றுமதி செய்யக்கூடிய வகையிலே கப்பல் விட அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சி எடுத்து அதற்கான திருத்த மதிப்பீடுகளுடன் மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதிற்று. 1 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்றும் அதிலே 86.13 இலட்சத்தை மாநில அரசு ஏற்றுக்கொண்டால் மீதியை மத்திய அரசு கொடுத்து அதைச் செய்யலாம் என்று சொல்லியது மத்திய அரசு. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அந்தக் குறிப்பை ஏற்று மாநில அரசு தன் பங்காகிய 86 லட்சத்து 13 ஆயிரத்தை செலுத்த தயாராக இருக்கிறது என்று எழுதப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்தவுடனே அந்தத் துறைமுக வேலைகள் தொடங்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த வாலிநோக்கத்திலே மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்காக ஆரம்ப வேலைகள், ரோடுகள் போன்றவைகள் போடப்படுவதற்காக ஏற்கெனவே திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதாக சென்ற ஆண்டிலே வந்த குறிப்புகளிலே இருந்ததாக எனக்கு நினைவு. அதைத் தொடர்ந்து அந்த வேலைகளை அந்தப் பகுதியிலே செய்ய அரசு விரைவிலே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துறைமுகம் கட்டுவதனைப் பற்றித்தான் இப்போது திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் தரவேண்டுமென்றிருக்கிறது. மாநில அரசு தன்னுடைய பங்கை செலுத்த வேண்டுமென்று சொல்லியது. மாநில அரசு அதைச் செலுத்தத் தயாராக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான ஒப்புதலை மத்திய அரசு கொடுத்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

திரு. செ. சிவசாமி: வாலிநோக்கம் பகுதியிலே இயற்கையிலேயே ஒரு பெரிய குடா இருக்கிறது. அந்தக் குடாவை அபிவிருத்தி செய்தால் நூற்றுக்கணக்கான படகுகளை இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகிற நேரத்திலே கூட நிறுத்தலாம். ஆகவே அதை அபிவிருத்தி செய்கிற வேலையை சீக்கிரமாகச் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது வாலிநோக்கத்திலே அமைக்கப்பட இருக்கிற துறைமுகம் பற்றியதாகும். இந்தத் திட்டம்தான் இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் வந்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

சைதாப்பேட்டையில் அமுதம் அங்காடி

*வினா எண். 83—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சைதாப்பேட்டையில் அமுதம் பல்பொருள் அங்காடி திறப்பதற்கு செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. து. புருஷோத்தமன்: சைதைப் பகுதியில் உள்ள கோட்டூர்புரம், வடுவன்கரை, ஜோன்ஸ் சாலை ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்காக அமுதம் பல்பொருள் அங்காடி திறக்க வேண்டுமென்று பல்வேறு மனுக்கள் தரப்பட்டு இருக்கின்றன. எனவே மீண்டும் பரிசீலனை செய்து அது திறக்கப்படுமா? பொதுவாக பல்பொருள் அங்காடிகளில் "பாம் ஆயில்" இல்லை எனப் புகார் வந்து உள்ளதே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அமுதம் பல்பொருள் அங்காடி, சைதாப்பேட்டைக்கு அருகில் உள்ள தெற்கு உஸ்மான் சாலை, ஆரியக் கவுடர் சாலை, அசோக் நகர் போன்ற இடங்களில் ஏற்கனவே இயங்கி வருகின்றன. ஆனால் ஒரு அமுதம் அங்காடி இயங்க வேண்டுமென்றால் மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்காவது விற்பனை ஆகவேண்டும். சைதாப்பேட்டைக்கு அருகில் இருக்கின்ற இந்த தெற்கு உஸ்மான் சாலை, ஆரியக் கவுடா சாலை, அசோக் நகர் ஆகிய இந்த மூன்று இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்ற அமுதம் பல்பொருள் அங்காடிகளில் இந்த இலக்கையே நிறைவேற்ற முடியாத அளவிற்கு குறைவாகத்தான் அங்கே இருக்கிறது. ஆகவே, பக்கத்திலே இருக்கின்ற சைதாப்பேட்டையிலே மற்றொன்றையும் திறக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற குறிப்பு இருக்கிறது. இப்பொழுது சைதாப்பேட்டையில்

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக 7 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஸ்சதையில் மற்றொரு அமுதம் அங்காடி திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் நேரத்தில் மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்காவது விற்பனையாக வேண்டுமென்று கூறினார்கள். பொதுவாக அங்கே இருக்கின்ற சில ஆங்காடிகளில் பாமாயில், மண்ணெண்ணெய் போன்றவை குறிப்பிட்ட அளவிற்கு, ஒதுக்கப்பட்ட அளவிற்குக் கொடுக்கப்படவில்லை என்ற புகார் இருக்கிறது. நீண்ட கியூ நின்றால் ஐந்தாறு பேர்களுக்கு மட்டும் கொடுத்துவிட்டு ''பாமாயில்'' இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். பொதுவாக, விற்பனைக்கு வருகின்ற மொத்த பாமாயிலும் விற்பனை செய்யப்படுகிறதா, எவ்வளவு விநியோகிக்கப்படுகிறது என்று கண்டறிய அரசு முன்வருமா? இதுபோன்ற அத்தியாவசியப் பண்டங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படவில்லை என்பதை ஆராய சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அங்காடிகளில் ஒரு இலட்சம் ரூபாய்க்காவது மாதத்திற்கு விற்பனை ஆக வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப் போன்று அத்தியாவசியப் பண்டங்கள் மக்கள் விரும்பியும் விற்கப்படாத சூழ்நிலை இருக்கிறது என்ற குறைபாடுகள் இருக்குமேயானால் அப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அமுதம் பல்பொருள் அங்காடிகளைத் திறப்பதற்காக, அதாவது அமைக்கப்படுவதற்காக விதிமுறைகள் ஏதேனும் அரசு வகுத்துள்ளதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமுதம் பல்பொருள் அங்காடிகள் நிறைய நடந்து கொண்டிருக்கின்றன. இனிமேல் விதிமுறைகளைப்பற்றிக் கவலைப்பட்டு என்ன செய்வது?

(பதில் இல்லை)

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ரேஷன் வாங்க ''பேஷன்ஸ்'' வேண்டுமென்ற அளவிற்கு இன்றைக்கு நீளமான கியூவாக ரோட்டைத் தாண்டிக் கூட நின்று கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ரேஷன் கடை அல்லது நியாய விலைக் கடையிலும் இத்தனை கார்டுகள் தான் இருக்க வேண்டுமென்று வரைமுறைகள் வைத்து, அதிகமான கார்டுகளைப் போட்டு அவதிப்படாமல் செய்வதற்கான திட்டத்தை வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு கடைக்கும் இவ்வளவு கார்டுகள் இருக்க வேண்டுமென்று வரைமுறைகள் இருக்கின்றன. ஆகவே, அதிகமான அளவிற்கு இருக்கிறது, நிலைமைகளைச் சமாளிக்க முடியவில்லை என்ற நிலை வருகிறபொழுது மேற்கொண்டு நியாய விலைக்கடைகளைத் திறக்க வேண்டிய அவசியம் ஏற்படுமேயானால் அதைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இப்பொழுதே வரைமுறை இருக்கிறது, இவ்வளவுதான் ஒரு நியாயவிலைக் கடைக்கு என்றால் அந்த அளவிற்குக் கார்டுகள் ஒதுக்கப்படுகின்றன.

தென்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தென்னைநார் ஏற்றுமதி

*வினா எண். 84—திரு. டி. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் தென்னை நார் (மூலப்பொருட்கள்) வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், மூலப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதை தடை செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.
(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் இருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற இந்தத் தேங்காய் நாரை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்பதற்காக குமரி மாவட்டத்திலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு கொண்டுவந்து மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்படுவதாகவும், மேற்கு ஜெர்மனியிலிருந்து அது வேறு பொருட்களாக மாற்றப்பட்டு மீண்டும் நம்முடைய மாநிலத்திற்கும் இதர மாநிலங்களுக்கும் பெறுவதால் அதனால் நாம் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு தேவையான மூலப்பொருள் கிடைக்காமல் ஆகிறது. கயிறு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சங்கடம் ஏற்பட்டு கயிறு தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் பத்தாயிரம் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு வேலையில்லாத நிலைமை உருவாகி இருக்கிறது. ஆகவே, திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டு இருந்தால் அவைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனப்படுத்திய விவரத்தை அரசு கவனத்தோடு கவனிக்கும்.

[1981 ஜனவரி 29

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கயிறு தொழிலாளர்கள் இருப்பதால் கயிறு கூட்டுறவுச் சங்கம் அமைத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தத் தகுந்த ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டுள்ள இத்தகைய சிறு தொழில்களை நடத்துவதற்காக இருக்கின்ற அந்தக் கட்டுப்பாடுகள் நீக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் தனிக்கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே உற்பத்தி செய்கின்ற தென்னை நார்களை குமரி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்ல தடை இருப்பதாக அறிகிறேன். அத்தடை நீக்கப்பட்டு, மீண்டும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நார்களை எடுத்துச் செல்ல அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே இந்தக் கேள்வியை திரு.டி.மணி கேட்டுவிட்டார்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தென்னை நார்களைக் கொண்டு வீடுகளிலே உபயோகப் படுத்துகின்ற ஃபர்னிச்சர் சாமான்களை உற்பத்தி செய்கின்ற புதிய டெக்னிக் வளர்ந்துள்ளது அமைச்சருக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட டெக்னிக்கைக் கற்றுக்கொண்டு, இங்கே குடிசைத் தொழில் மாதிரி பர்னிச்சர் செய்யக்கூடிய ஏற்பாட்டுக்கு, எந்த நாட்டுக்கு அந்த 'நோஹவ்' "Know-how" தெரியுமோ, அந்த நாட்டோடு தொடர்புகொண்டு, நல்ல குடிசைத் தொழில் மாதிரி வளர்க்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை மேற்கொண்டு இந்த அரசு ஆவன செய்யும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தைப் போல், தஞ்சை மாவட்டத்திலும் தென்னை நார் உற்பத்தி அதிகமாக இருக்கிற காரணத்தினால், தஞ்சை மாவட்டத்திலும் அத்தகைய தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

1981 ஜனவரி 29]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணங்களை இந்த அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

மேட்டுப்பாளையத்தில் உருளைக் கிழங்கு வத்தல் தொழிற்சாலை

*வினா எண். 85— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு அரசுத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்தில் உருளைக் கிழங்கு வத்தல் (சிப்ஸ்) தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்திலே உருளைக்கிழங்கு அதிகமாக உற்பத்தியாகிறது. மிகவும் ருசியாக இருக்கிற உருளைக்கிழங்கு சீசன் காலத்திலே அதிகமாக உற்பத்தியாவதால், அதற்குச் சரியான விலை கிடைப்பதில்லை. அதோடு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் முறையிலே உருளைக்கிழங்குகள் அழுகி விடுகின்றன ஆகவே, விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் முறையில் நமது அரசாங்கம் சிப்ஸ் தயாரிக்கும் புதிய தொழிற்சாலையை அங்கு ஆரம்பித்தால், விவசாயிகளுக்கும் ஆதரவாக இருக்கும்; சிறு தொழிலை அபிவிருத்தி செய்கிற முறையிலே தமிழகத்திலே சிறுதொழிலை ஆரம்பிப்பதாகவும் இருக்கும். அந்த முறையிலே அரசாங்கம் சிப்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலையை அங்கு ஆரம்பிக்குமா என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. ஆனால், தனியார் ஆரம்பிக்க முன்வந்தால், கோவை மாவட்ட தொழிற்மையத்தின் வாயிலாக எல்லா உதவிகளையும் அரசு வழங்கும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் தனியார்கள் ஆரம்பிக்கும்போது, அந்தத் தொழிலுக்குத் தேவையான உருளைக்கிழங்கு போன்றவைகளை சப்சிடியாக அல்லது கண்ட்ரோல் ரேட்டுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்து, அந்தத் தொழிலை பின்தங்கிய பகுதியில் ஆரம்பிக்கப்படுகிற தொழிலாகக் கருதுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான உதவிகளை, நியாயமான உதவிகளை இந்த அரசு செய்யும்.

1981 ஜனவரி 29]

திரு. இரெ. இராசமாணிக்கம் ; பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கீரந்தங்குடியில் உள்ள மாரியம்மன் கோவிலுக்குச் சொந்தமான மரங்கள் வெட்டப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே உள்ள திருக்களம்புத்தூர் கோவிலுக்குச் சொந்தமான இலுப்பை மரங்களை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டி துணைக்கேள்வி போடவேண்டும். கீரந்தங்குடி மாரியம்மன் கோவிலைப் பற்றிய கேள்வி. இதில் திருக்களம்புத்தூர் கோவில் பற்றிக் கேட்கப் போனால் விடை இருக்காது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : ஒரே கோவில் நிர்வாகத்தில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கலாம். இந்த அரசாங்கத்தின் நிர்வாகத்திலேதான் எல்லாம் இருக்கின்றன. அதற்காக அனைத்தையும் கேட்டுவிட முடியுமா?

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டம், கீரந்தங்குடியில் உள்ள தென்னை, இலுப்பை போன்ற மரங்கள், அந்த ஆலயத்தினுடைய அறங்காவலர்களால் தவறான முறையில் வெட்டப்பட்டதாக புகார் ஏதும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது சம்பந்தமாக தற்போது புகார் கொடுத்தால் உடனடியாக அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார் தற்போது மாத்திரம் அல்ல, எப்போது கொடுத்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், நன்னிலம் வட்டத்தில் வேறு ஏதாவது ஆலயங்களில் இப்படிப்பட்ட மரங்கள் திருட்டுப் போனதாக புகார்கள் வந்திருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அதற்காக தனியாகக் கேள்வி போட்டால், தகவல் சேகரித்துத் தரப்படும்.

கலைவாணர் அரங்கம், சென்னை.

***விலா எண். 87—திரு. இ. கணேசன்**: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை நகரிலுள்ள கலைவாணர் அரங்கில் பல அரிய நாடகங்களை நடத்தும் வகையில் மேடை வசதியினைத் திருத்தி அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளரின் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரப்புகழ் வாய்ந்த கலைவாணர் அரங்கத்தில் புகழ்மிக்க சரித்திர நாடகங்கள் நடத்தும் வகையில் மேடை வசதி இல்லை என்று நாடகக் காவலர்களால் சொல்லப்படுகிறது. அதைப் போக்கி, அரசுக்கு லாபம் ஈட்டக்கூடிய வகையில் அந்த நாடக அரங்கத்தை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக இரண்டு மூன்று திட்டக்குறிப்புகள் அரசின் பரிசீலனைக்கு வந்துள்ளன. 1977–78 ஆம் ஆண்டிலே பொறியாளர் அவர்கள் 60,000 ரூபாய் செலவாகும் என்று குறிப்பிட்டார்கள். அந்த நாடகத் துறையிலே ஈடுபட்டுள்ள வேறு ஒருவர் இதை 30,000 ரூபாய் செலவில் முடிக்கலாம் என்று சொல்லி இருக்கிறார். அதை அரசாங்கப் பொறியாளர் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது 1981 ஆம் ஆண்டிலே இருக்கிறோம். இன்னும் அதிகமாகச் செலவாகும் என்று கருதப்படுகிறது. மேலும் அந்தக் கலைவாணர் அரங்கத்தில் வேறு பல வேலைகள் நடைபெறவிருக்கின்றன. அந்த வேலைகளைச் செய்கிறபோது, இதையும் எடுத்துக் கொள்ளலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வாரியத்திலே நடக்கின்ற பொருட்காட்சியைக் காண்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக அனுமதிச் சீட்டு கொடுத்திருப்பதைப்போல, இங்கே கலைவாணர் அரங்கத்திலே நடக்கின்ற நாடகங்கள், போடப்படுகின்ற சினிமாப்படங்களைக் காண்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச அனுமதிச்சீட்டு கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகின்ற அரசு நிகழ்ச்சிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போது வேண்டுமானாலும் தாராளமாக வரலாம். ஆனால் வாடகை கொடுத்து தனியார்கள் நடத்துகிற நிகழ்ச்சிகளுக்கு இலவசமாக அனுமதிப்பதற்கு நமக்கு உரிமை இல்லை.

(முற்பகல் 9–20)

டாக்டர் கே. சௌரிராஜன்: அவைத் தலைவர் அவர்களே, நாடகக் கலையைப் பாதுகாப்பதற்கு வகை செய்யும் முறையில், கலைவாணர் அரங்கத்தில் புதிதாக அரங்கேற்றம் செய்யப்படுகிற நாடகங்களுக்கு குறைந்த வாடகையில் அந்த நாடகங்களை [illegible] பொன்றவைகளையும்

அளிக்கவும் இந்த அரசு முன் வருமா? ஏனெனில், புதிதாக ஒரு நாடகத்தை நடத்த வேண்டுமானால் ரூ. 2,000 அல்லது 3,000 ரூபாய் செலவாகிறது. ஆகவே, அந்தக் கலை அழிந்து விடாமல் பாதுகாக்கப்படுகின்ற முறையில் இந்தச் சலுகையை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கத்தின் மேடை விரிவுபடுத்துவது பற்றிய கேள்விக்கு நான் விடையளித்துக்கொண்டு இருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் நாடகக்கலைக்கு உதவி அளிக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். தனிக்கேள்வி போட்டால் அதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள அமைச்சர் பதில் சொல்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—ஒரு உறுப்பினர் ப்ரீ பாஸ் கேட்கிறார். மற்றொரு உறுப்பினர் நாடகக்கலைக்கு சலுகை [illegible] என்று கேட்கிறார். [illegible] வினாக்கள் [illegible] அளிக்கவேண்டும் [illegible] கேள்வியை ஒட்டியதாக இருக்கவேண்டும்.

திரு உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய முயற்சியின் காரணமாக நாங்கள் வெளிநாடு சென்று இருந்தபோது, பாங்காக் நகரத்தில் உள்ள ரோஸ் கார்டனில் அந்த நாட்டுக்கலைகள் என்ற முறையில் பல்வேறு நிகழ்ச்சிகளை அழகாக எடுத்துக்காட்டினார்கள். அதைப்போல், நம்முடைய தமிழகத்திலும் நம்முடைய நாட்டுக் கலாச்சாரம், கலை அம்சம் பொருந்திய நிகழ்ச்சிகளை வெளிநாட்டினர் புரிந்து கொள்கிற வகையில் கலைவாணர் அரங்கத்தில் வாரம் ஒரு நாள் நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:—மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் மறுபடியும் தெரிவித்துக்கொள்கிறேன், கலைவாணர் அரங்கத்தின் மேடையை விரிவுபடுத்துவது பற்றிய கேள்விக்கு நான் பதில் அளித்துக்கொண்டு இருக்கிறேன். சுற்றுலாத் துறை சம்பந்தப்பட்ட ஒரு யோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி தனிக் கேள்வி போடுவார்களானால், அதற்கான ஏற்பாடுகள் செய்வது பற்றியும், இதுவரை எடுத்துக்கொண்டு இருக்கிற முயற்சிகள் பற்றியும் அந்தத் துறையின் சார்பிலே பதில் சொல்ல முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கத்திற்கு தற்போது போட்டி அதிகம் இருக்கிறது. ஆகவே, புதிய அரங்கம் ஒன்று கட்டுவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இயல் இசை நாடகமன்றத்திற்கு ஒரு கட்டிடம் அல்லது அரங்கம் ஒன்று நிரந்தரமாக அமைக்கவேண்டும்

[1981 ஜனவரி 29

என்று இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டு இருக்கிறது. அதைப் பற்றி பரிசீலிப்பதாகவும், முயற்சிப்பதாகவும் மாண்புமிகு 'முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

காமராஜர் மண்டபம், கிண்டி.

*வினா எண் 88—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியிலுள்ள பெருந்தலைவர் காமராஜ் நினைவாலய மண்டபத்தில் அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை விளக்கும் புகைப்படங்கள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) கிண்டியிலுள்ள பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் நினைவாலய மண்டபத்தில் அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை விளக்கும் புகைப்படங்கள் அமைக்கும் உத்தேசம் இல்லை.

(ஆ) எனவே அடுத்த கேள்வி எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிற்காகத் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்ட மறைந்த தலைவர் காமராஜர் அவர்களுக்கு நம்முடைய உரிய மரியாதையைத் தெரிவிக்கிற முறையில், வருங்காலத்தில் அதிகமான மக்கள் அந்த நினைவாலயத்திற்கு வந்து அஞ்சலி செலுத்துகிற முறையில், அந்த நினைவாலயத்தை இன்னும் அழகுறச் செய்யவும் அங்கே வருகின்ற மக்களுக்கு மேலும் பல வசதிகளைச் செய்யவும் அரசு முன் வருமா? ஒரு தேசியத் திருநாளில் கூட அந்த மண்டபம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்று ஆசிரியருக்குக் கடிதம் பகுதியில் கடிதம் வந்து இருக்கிறது. ஆகவே, அந்த மண்டபத்தைப் பராமரிக்க அரசு அதிக கவனம் செலுத்தி, மேலும் பல வசதிகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'ஆசிரியருக்குக் கடிதம்' பகுதியில் வந்த கடிதம், காந்தி மண்டபத்தைப் பற்றியதாகும். 'காமராஜர் நினைவாலயத்தைப் பற்றி அல்ல.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர்களே, காமராஜர் நினைவாலய மண்டபம் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 26,000 செலவில் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கும் ஆலோசனையையும் அரசு கருத்தில் கொண்டு ஆராயும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 ஜனவரி 29]

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவரவர்களே மறைந்த பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவாலயத்தில் புகைப்படங்கள் வைக்கும் உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் வாழ்க்கையிலே நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை ஓவியங்களாகச் சித்தரித்து அங்கே வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, கிண்டியிலே இருப்பது காமராஜ் அவர்கள் அங்கே அடக்கம் செய்யப்பட்டிருக்கிற நினைவு மண்டபமாகும். ஆகவே, அந்த இடத்திலே போகும்போது போகிறவர்கள் அதை ஒரு வணக்கத்திற்குரிய இடமாகக் கருதி, வணங்கிவிட்டுச் செல்கிறார்கள். அந்த இடத்திலே எந்த காட்சிப் பொருட்களையும் வைத்து, விழா போல ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்காது. இதே சென்னை மாநகரில் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் திருமலைப்பிள்ளைச் சாலையில் வாழ்ந்துவந்த இல்லத்தை நினைவு இல்லமாக ஆக்கி, அவர்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை விளக்கும் புகைப்படங்களையும், அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் அங்கே காட்சிக்கு வைத்து, அவைகளை தினசரி மக்கள் கண்டு செல்கிறார்கள். அங்கே மேலும் ஏதாவது அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் ஆலோசனை சொன்னால் அரசு அதை பரிசீலனை செய்யும்.

திருமங்கலத்திலுள்ள மண் வளப்பாதுகாப்பு பிரிவு.

*வினா எண் 89 திரு. இரா. முத்தையா, திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது திருமங்கலத்தில் இயங்கிவரும் மண்வளப் பாதுகாப்புத் துறையின் பிரிவு ஒன்றை (உதவி செயற் பொறியாளர் அலுவலகம்) தஞ்சைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் திருமங்கலத்திலேயே தொடர்ந்து இயங்க ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) 1-8-80 நாளிட்ட அரசு ஆணையில், திருமங்கலத்தில் உள்ள மண்வளப்பாதுகாப்பு துணைக் கோட்டத்தையும், திருவண்ணாமலையிலுள்ள மண்வளப்பாதுகாப்புத் துணைக் கோட்டத்தையும் தஞ்சாவூர் மாவட்டத்துக்கு மாற்றுவதற்கு ஆணையிடப்பட்டது.

(ஆ) திருமங்கலத்திலுள்ள மண்வளப்பாதுகாப்புத் துணைக் கோட்டத்தை தஞ்சைக்கு மாற்றுவதை மறு உத்திரவு பிறப்பிக்கும்வரை நிறுத்திவைக்கும்படி வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவரவர்களே, திருமங்கலத்திலே இருக்கிற மண்வளப் பாதுகாப்புத் துறையின் பிரிவு ஒன்றை தஞ்சைக்கு மாற்றுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான்கு மாவட்டங்கள் தாண்டி, அந்தப் பிரிவை தஞ்சைக்கு எடுத்துச்செல்வதாக இருந்தால் திருமங்கலம் பகுதி மக்களுக்கு பெருந்தக் குறையாக இருக்கும். ஆகவே, அந்தப் பிரிவை அந்தப் பகுதி மக்கள் வசதியைக் கருதி, நிரந்தரமாக அங்கே ஏற்படுத்துவதற்கு அரசு உத்தரவாதம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இந்த நீர் பராமரிப்புப் பணியை ஒட்டி, அந்த வேளாண்மை அலுவலகத்திற்கு இதை மாற்ற வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. இந்த மண்வளப் பாதுகாப்புத் திட்டம் திருமங்கலம் விவசாயப் பெருமக்களுக்கு அதிக அளவில் பயன்படுகிறது என்ற காரணத்தைக்காட்டி, அதை மாற்றக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சித்தன், ஆண்டித் தேவர் போன்றவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஆணையிட்டுள்ளேன். இப்போதுள்ள நிலைமைகளைக் காணும்போது, மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் சொன்னதைப் போல அங்கே நிரந்தரமாக நிறுத்தி வைப்பதுபற்றிய செயற்குறிப்பு பற்றி அரசு ஆராயும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, எங்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தற்காலிகமாக தடை விதித்திருப்பதாகச் சொன்னார்கள். முன்பு அதை மாற்றுவதற்கான காரணத்தைச் சொல்லும்போது அங்கே அதிக விவசாயிகளுக்குப் பயன்படவில்லை என்று முதலிலே சொன்னார்கள். அதனால்தான் தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு இருந்ததாகச் சொன்னார்கள். திருமங்கலம் விவசாயத்துறையிலே பின்தங்கிய பகுதியாகவும், வறட்சியான பகுதியாகவும் இருப்பதால், அந்தப் பகுதி விவசாய மக்களுக்கு இந்த மண்வள பாதுகாப்புப் பணி பிரிவு நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை நானும் கண்டிருக்கிறேன்; திரு. ஆண்டித்தேவர் அவர்களும் கண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பிரிவை மாற்றாமல் நிரந்தரமாக அங்கே நிறுவுவதற்கு ஆணையிடப்படுமா? அதோடு தஞ்சை மாவட்டத்திற்கு தனியாக ஒரு பிரிவை நிறுவ உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, திருமங்கலத்திலுள்ள மண்வளப் பாதுகாப்புப் பிரிவு நல்ல முறையில் செயல்படுகிறது என்று சான்றளித்ததற்காக நன்றி. அந்தப் பிரிவை அங்கே நிரந்தரமாக வைப்பது பற்றி அரசு ஆராயும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தற்போது திருமங்கலத்தில் இருந்துவரும் மண்வள பாதுகாப்புப் பிரிவை தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றியமைக்க [illegible]ப்பதாக அமைச்சரவர்கள்

சொன்னதை அந்த மாவட்ட உறுப்பினர் என்ற முறையில் நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அது எப்போது ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, பக்கத்தில் இருக்கிற திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினருடைய மனக்குறையை சம்பாதித்துக் கொள்ளாமல், திரு. கிட்டப்பா அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க தனியாக ஒரு பிரிவை அமைக்க அரசு யோசனை செய்யும்.

செய்யாறு மற்றும் அனுக்காவூர் ஒன்றியங்களில் வளர்ச்சிப் பணிகள்.

*வினா எண் 90—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடார்காடு மாவட்டம் செய்யாறு மற்றும் அனுக்காவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளை ஏனைய ஊராட்சி ஒன்றியங்கள் போல ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தி திட்டம் அல்லது சிறு-விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தையும் இணைத்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் 2-10-80 முதல் மாநிலத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வத்தலக்குண்டு ஒன்றியத்தில் சாலைப் பணிகள்.

*வினா எண் 91—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி வத்தலக்குண்டு யூனியன் ராமநாயக்கன்பட்டி—ரெங்கப்பநாயக்கன்பட்டியை இணைத்து வைகையின் குறுக்கே பாலம் அமைத்து புள்ளிமான்கோம்பை வழியாக ஆண்டிப்பட்டிக்கு சாலை அமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1981 ஜனவரி 29

(முற்பகல் 9.30)

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த மலைப் பகுதியிலே வாழக்கூடிய மக்களின் விளைபொருட்களை வெளியே எடுத்துச் செல்வதற்காக அங்கே ஒரு பாலம் கட்டவேண்டும் என்ற திட்டம் அரசுக்கு அனுப்பப் பட்டது. அதனுடைய மதிப்பீடு என்ன? இந்தத் திட்டம் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அன் எகனாமிகல் (uneconomical) என்றிருந்தாலும் கூட இந்தத் திட்டத்தை முடித்து விட்ட பிறகு டோல்கேட் மூலமாக அரசு செலவழித்த பணத்தை வசூல் செய்து கொள்ளலாம். ஆகவே அரசாங்கம் இதற்கு வழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதும் புள்ளிமான் கோம்பை வழியாக சாலை அமைப்பதும் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதற்காக ஏற்கெனவே 15 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இப்போது இருக்கின்ற நிதி நிலைக்கேற்ப தான் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டிய சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம். ஆகவே வரும் காலத்தில் வேறு சாலைகள் அமைக்கும் திட்டங்களை செயல்படுத்தும்போது அரசின் நிதிநிலைக்கேற்ப அந்தப் பகுதியின் முக்கியத் துவத்தையும் கருத்தில் கொண்டு கண்டிப்பாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, எங்கள் பகுதியிலே நாங்கள் நிறைய கரும்பு உற்பத்தி செய்து மில்களுக்கு அனுப்புகிறோம். அந்தப் பகுதியிலே இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆகவே அதன் மூலம் கிடைக்கின்ற செஸ் பணம் நிறைய இருக்கின்றது. ஆகவே அந்தப் பணத்தின் மூலமாகவாவது இந்தப் பாலத்தை விரைவிலே கட்டுவதற்கரிய வகையிலே அரசு பரிசீலிக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அது தகுந்த துறையின் மூலமாக பரிசீலிக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, இப்போது பாலங்கள் என்ற தலைப்பில் எங்கு பார்த்தாலும் 15 இலட்சம் 20 இலட்சம் என்ற அளவில் மதிப்பீடு தயார் செய்து அந்த மதிப்பீடுகள் பரிசீலனையில் இருக்கின்றன என்று கடந்த மூன்று ஆண்டுகாலமாக அமைச்சரவர்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாலங்கள் என்ற தலைப்பில் சென்றால் நேரம் அதிகமாகிவிடும். உட்காருங்கள்.

1981 சனவரி 29]

திருவாரூரில் மேம்பாலம்.

*வினா எண் 92—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மேம்பாலத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) இத்திட்ட வேலை எப்பொழுது முடிவுறும்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ) ரூ 55 இலட்சம். (ஆ) இன்னும் 9 மாதங்களில் முடிவடையும்.

திரு. எம் எஸ். மாணிக்கம்: தலைவரவர்களே, இந்த மேம்பாலம் கட்டுவதற்கு இவ்வளவு காலதாமதம் ஆவதற்கான காரணம் என்ன?

(பதில் இல்லை)

ஒன்றிய ஜீப்பு வண்டிகளுக்குப் பெட்ரோல் வழங்கல்.

*வினா எண் 93—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஜீப்பு வண்டிகளுக்கு தற்போது அனுமதிக்கப்படும் மாதம் 100 லிட்டர் பெட்ரோல் அளவினை அதிகரிக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கேள்வியில் குறிப்பிடடுள்ளது போல் தற்போது ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பெட்ரோல் அளவு 100 லிட்டர் அல்ல. 250 லிட்டர் வரை பெட்ரோல் செலவு செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது. மேலும் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு 300 லிட்டர் வரை பெட்ரோல் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. த. ஆறுமுகம்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு 250 லிட்டர் பெட்ரோல் என்றும், தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு 300 லிட்டர் பெட்ரோல் என்றும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். வேலைக்கு உணவுத் திட்டம் நடைபெறக்கூடிய கிராமங்களில் பெட்ரோல் போடுவதற்கு இயலாத காரணத்தால் அதிகாரிகள் ஒப்பந்தக்காரர்களிடம் பெட்ரோல் போடுமாறு ஆணையிடுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

[1981 சனவரி 29

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெட்ரோல் பெறப்படுவது என்பது இந்த அரசுக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது குற்றச்சாட்டுகள் சொல்வதாக இருந்தால் அதனைத் தனியாகக் கொடுத்தால் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் இவ்வாறு ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு 250 லிட்டர் என்றும் 100 லிட்டர் என்றும் பெட்ரோலின் அளவு அதிகரிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 50 லிட்டர் பெட்ரோல் ஒரு நாளைக்கு கொடுக்கவேண்டும் என்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. சு. முத்துகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல ஊராட்சி ஒன்றியங்களில் ஜீப்புகளே இல்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? குமரி மாவட்டத்தில் தோவாளை ஒன்றியத்தில் உள்ள ஜீப் பழுதுபட்டு அது இன்னும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓடுகின்ற ஜீப்புக்கு கொடுக்கப்படும் பெட்ரோலை அதிகப்படுத்துவது பற்றிய கேள்வி. ஆகவே ஓடாத ஜீப் பற்றியெல்லாம் கேட்க முடியாது.

திரு. சி. சிவப்பிரகாசம்: பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே ஓடுகின்ற ஜீப்புகளுக்கும் அதே அளவு பெட்ரோல்தான் வழங்கப்படுகிறது. மேடு பள்ளமாக வளைந்து வளைந்து செல்லக்கூடிய பாதையில் ஏராளமான இடங்களைப் போய் பார்க்க வேண்டியிருக்கிறது. அதனால் அதை அதிகப்படுத்த அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியில் ஓடக்கூடிய ஜீப்புகளுக்கு என்று தனியாக வசதிகள் செய்யப் பெறுவதில்லை. ஆனால் அங்கே இருக்கிற நிதி நிலைமைகளுக்கு ஏற்ப அவர்கள் தாங்களாகவே செய்துகொள்வார்கள்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு 50 லிட்டர் பெட்ரோலுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக கூறினார்கள். பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் இல்லாததால், ஒன்றியங்களை அதிகமாக சுற்றிப் பார்க்க வேண்டிய அவசியம் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அதனால் இரண்டு நாட்களுக்கு சுற்றிப் பார்ப்பதற்குப் போடக்கூடிய பெட்ரோலை விட நான்கு நாட்கள் சுற்றிப் பார்க்கும் அளவிற்கு பெட்ரோல் வழங்க அரசு ஆலோசனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1981 சனவரி 29]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகளை பட்ஜெட் வருகின்ற நேரத்தில் பேசினால் நலமாக இருக்கும்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில ஒன்றியங்களில் இரண்டு மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலும் அப்படி ஒரு ஒன்றியத்தில் 3 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதனால் 50 லிட்டர் பெட்ரோல் வழங்குவது எங்களுக்கு போதவில்லை. இதுபோன்ற பகுதிகளிலாவது அதை அதிகரிப்பதற்கான உத்தேசம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற மாதிரி ஒரு ஒன்றியத்திற்கு 3 சட்டமன்ற உறுப்பினர்கள் வர முடியாது. வேண்டுமானால் ஒரு ஒன்றியத்தில் பாதி பாதியாக இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். இருந்தாலும் கூட இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தான் அந்த ஒன்றியத்தில் வேலை இருக்கக்கூடும். அப்படியே இருந்தாலுங்கூட ஒரு நாளைக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு, மறுநாளைக்கு வேறு ஒருவருக்கு என்கின்ற முறையில் வேலைகளை வைத்துக்கொண்டால் நலமாக இருக்கும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலிருந்து வந்திருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு 50 லிட்டர் பெட்ரோல் அளிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேமாதிரி நகர்ப்புறத்திலே இருந்து வரக்கூடிய உறுப்பினர்களுக்கும், நகராட்சி மன்ற ஜீப்களை வழங்கி அதுமாதிரி பெட்ரோல் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இது ஊராட்சி ஒன்றியம் பற்றிய கேள்வி.

மருந்து ஆய்வாளர் பதவிகள்.

*வினா எண் 94—**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருந்து ஆய்வாளர் பதவிகள் அதிகரிக்கும் ஆலோசனை அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் எத்தனை பதவிகள் அதிகரிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) தற்பொழுது இல்லை.

(ஆ) இக் கேள்வி எழாது.

[1981 சனவரி 29

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து ஆய்வாளர் பதவிகளை அதிகரிக்கும் யோசனை அரசுக்கு தற்பொழுது இல்லை என்று கூறினார்கள். அப்படியானால் எதிர்காலத்தில் இந்தப் பதவிகளை அதிகரிக்கும் வாய்ப்புகள் இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஜாயின்ட் ஸ்டேட் டிரக்ஸ் கண்ட்ரோலர் என்று ஒருவர் இருக்கிறார். இரண்டு ஸ்டேட் டிரக்ஸ் கண்ட்டிரோலர்கள் இருக்கிறார்கள், 59 ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். 10 முதுநிலை (சீனியர்) டிரக்ஸ் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். ஜாயிண்ட் டிரக்ஸ் கண்ட்ரோலர், டெக்னிகலி குவாலிபைடாக இருக்கிறார். அவர்கள் தாம் எல்லாவற்றையும் மேற்பார்வையிட்டு கவனித்துக்கொண்டு வருகிறார்கள். அது மட்டும் அல்ல, இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் அதை விரிவுபடுத்த இருக்கிறோம். இப்பொழுது இருக்கிற ஜாயின்ட் டிரக்ஸ் கண்ட்ரோலர் பதவியை உயர்த்தி, சீப் ஸ்டேட் டிரக்ஸ் கண்ட்ரோலர் என்று ஒருவரைப் போட்டு தனியாக அமைக்க விருக்கிறோம். அது சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்பட்டது. அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கலப்படமான மருந்துகள் இன்றைக்கு ஏராளமாக மார்க்கெட்டிலே வந்திருப்பது மட்டும் அல்லாமல், அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கூட இவ்வகை கலப்பட மருந்துகள் ஏராளமாகக் கொண்டு வந்துக் கொடுக்கப்படுவதாக, பத்திரிகைகளிலே அன்றாடம் செய்தி வந்துகொண்டிருக்கின்றன. இதுப் பத்திரிகையிலே கூட வந்திருக்கிறது அதை அமைச்சர் அவர்கள் கவனித்தாரா? அப்படியானால் இவ்வகையான மோசடி மருந்துகளை தடுப்பதற்கு மருந்து ஆய்வாளர்களின் பதவிகளை அதிகப்படுத்துவதற்கு பதிலாக சீப் டிரக்ஸ் கண்ட்ரோலர் என்கிற பெரிய பதவிகளை ஏற்படுத்துவதால் என்ன பயன்? அதனால் இந்த ஆய்வாளர்களின் பதவிகளை அதிகப்படுத்த மறு ஆலோசனை செய்ய அரசு முன் வருமா என்று கேட்கவிரும்புகிறேன்?

[முற்பகல் 9.40]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இந்து போன்ற பத்திரிகைகளில் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பத்திரிகையில் வருகிற குறிப்புகளை எல்லாம் விளக்கமாகப் படித்துக் கொண்டுதானிருக்கிறேன். அதில் பொதுவாக அகில இந்திய நிலை பற்றித்தான் எழுதியிருக்கிறார்கள். அந்தப் பத்திரிகையில் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பரவாயில்லை என்றுதான் எழுதியிருக்கிறார்கள். அதற்காக நம்மைப் பாராட்டியிருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. நாம் விதிக்கக்கூடிய ஸ்டான்டேர்ட் ஸ்ட்ரிக்ட் ஸ்டான்டேர்ட்டாக இருக்கிறது. இருப்பினும்

1981 சனவரி 29]

எட்டு பத்து ஆண்டுகளுக்குள்ளாக படிப்படியாக உயர்த்தியிருக்கிறோம். 1961-ல் 19 என்றிருந்தது ஒவ்வொரு ஆண்டும் உயர்த்தி இப்போது கிட்டத்தட்ட 60 பேர்கள் கொண்டதொரு அமைப்பாக இருக்கிறது. ஒரு அதிகாரியின் பதவியை உயர்த்துவது என்பது அல்ல. ஹாத்தி கமிட்டி ரிப்போர்ட் அடிப்படையிலும், எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட் அடிப்படையிலும் இந்த இலாகாவைப் பிரித்து அது தனியாக இயங்குமானால் அப்படி இயங்குகிற நேரத்தில் போஸ்ட்களை உயர்த்தி அத்திட்டத்தை வகுக்க வாய்ப்பாக இருக்கும். முதல் கட்டமாக இந்த இலாகாவைப் பிரித்து ஒரு தனி டைரக்டர் போட்டு இப்போது டி.டி.எச். தான் தலைவராக இருக்கிறார். புதிய இலாகா வந்தால் உடனடியாகக் கண்காணிக்க வாய்ப்பிருக்கும். இப்போது நன்றாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை ஆதாரத்தோடு சொல்லத் தயாராயிருக்கிறேன்.

திரு. ந. குலசேகரபாண்டியன்: இந்தத் துறைக்கு என்று தனியாக ஒரு தலைவரை நியமிப்பதாகச் சொன்னார்கள். அந்தத் துறைத் தலைவர் ஒரு பார்மஸிஸ்டாக இருப்பாரா அல்லது ஒரு டாக்டராக இருப்பாரா? ஹாத்தி கமிட்டி சொல்லியிருப்பது போல் இத்துறையைச் சார்ந்தவரை நியமிக்கப்போகிறார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இது கொள்கையளவில் முடிவு செய்ய வேண்டிய விஷயம். அந்த விஷயம் பற்றி இன்னும் எந்தவிதமான முடிவும் எடுத்துக்கொள்ளவில்லை. அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நானும் எண்ணுகிறேன். அதன் அடிப்படையில் வரக்கூடும். ஆனால் திட்டவட்டமாக இப்போது சொல்வதற்கில்லை.

மதுரை மருத்துவமனைக்கு வழங்கப்பட்ட மருந்துகள்

*வினா எண். 95—திரு. என். பழனிவேல் திரு. எல். பலராமன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை அரசு மருத்துவமனைக்குச் சொந்தமான மருந்துகள் மதுரை நகரில் சில மருந்துக் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்து சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டதா?

(ஆ) எவ்வளவு மதிப்புள்ள மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன?

(இ) இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

(அ) ஆம்.

(ஆ) சுமார் ரூ 10,000.

(இ) கடை உரிமையாளர்களின் பேரில் சட்டப்படி நடவடிக்கை எடுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல்: மதுரை அரசு மருத்துவமனைக்குச் சொந்தமான மருந்துகள் மதுரை நகரில் சில மருந்துக் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்தது சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டதாக என்பது வினா. அடுத்து, எவ்வளவு மதிப்புள்ள மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன, இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது வினா. பத்தாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள மருந்துகள் கண்டுப்பிடிக்கப் பட்டன என்றும், மருந்துக் கடைக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மருந்து கடைக்கு யார் மூலம் வந்தது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் முழு விவரங்களும் என்னிடம் இருக்கின்றன. ஆனால் இது ''ஸப் ஜுடிஸ்'' ஆக இருக்கிறது. ஆகவே 'ஷப்பாகப்' போகாமல் மேலோட்டமாகத்தான் சொல்ல முடியும். எப்படி தகவல் வந்தது என்பதை மட்டும் சொல்கிறேன். இந்த விஷயத்தை எப்படிக் கண்டுபிடித்தோம் என்பதைப்பற்றி மட்டும் செல்கிறேன். எம்.ஜி.ஆர். மன்றத்தைச் சேர்ந்த நாச்சியப்பன் என்பவர் நமது இலாகாவிற்கு ஒரு கடிதம் எழுதி இப்படி குற்றம் நடந்திருக்கிறது என்று கடிதம் எழுதி He preferred a complaint which w s received on 26-6-80 at the Directorate நம் இலாகா டைரக்டருக்கு அனுப்பி என் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டு, உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் அதில் தலையிட்டு மேகலா மெடிக்கல்ஸ், மதுரை, மீது வழக்கு தொடர்ந்திருக்கிறோம். வழக்குபற்றி விரிவாகப் பேசும்போது எந்தெந்த மருந்துகள் என்ற பட்டியல், டெரிப்ளின், டிஜாக்ஸின் என்று 25 ஐட்டங்கள் இருக்கின்றன. இதுகுறித்து நான் மேலே சொல்வதற்கில்லை. மூன்று ஸெஷன் ஹியரிங்க் நடந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு விரிவாகச் சொல்லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழக்குக்குள் போகக் கூடாது.

திரு. என். பழனிவேல்: அமைச்சர் அவர்களின் பதில் எனக்கு திருப்தி அளிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு திருப்தியளிக்கிற மாதிரி பதில் சொல்வது மிகவும் கஷ்டம். உங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. என். பழனிவேல்: பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள மருந்து என்று சொன்னார்கள். லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள மருந்துகள் என்று ஜூலை, ஆகஸ்டில்

பத்திரிகைகளில் வந்திருக்கிறது. ஆகவே ரூ. 10,000 என்றிருப்பது, ஏதோ இன்னும் மறைக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. ஆகவே, தீவிரமாக இதைப்பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு பழனி அரசு மருத்துவமனையில் இருபது நாட்களாக நாய்க்கடிக்கு மருந்து இல்லாமல் நாய்களால் கடிக்கப்பட்ட நோயாளிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வியையொட்டி கேட்க மாட்டேன் என்கிறீர்கள். கேள்வி மதுரையில் மருந்து திருட்டு போன சம்பவத்தைப்பற்றி, பழனி ஆஸ்பத்திரியில் நாய்க் கடிக்கு மருந்து இல்லை என்று பேசிக்கொண்டே இருந்தால், பழனிக்குப்போக ரொம்ப நேரமாகும். துணிக்கேள்வி போடுங்கள்.

திரு. என். பழனிவேல்: தயவு செய்து அந்த நாய்கடிக்கு மருந்து கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேண்டுகோள். திரு. இல. பலராமன்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கிலே தனியார் கடைகளில் சுமார் 10,000 ரூபாய் மதிப்புள்ள மருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். திட்டவட்டமாக மதிப்பீடு இட முடிய வில்லையா? அல்லது தனியாரை மட்டும் வழக்கில் ஈடுபடுத்தி யிருப்பதால், யார் இதற்கு மூலகாரணமாக இருந்தார்கள் என் பதை அரசு தெரிவிக்க வேண்டும். இந்தத் திருட்டுக்கு சம்பந்தமாக யார் யார் இருந்தார்கள் அல்லது மருத்துவர்கள் இருந்தார்கள்? கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலை ஏன் வந்தது? கண்டுபிடிப்பதற்கு வேறு மாற்று ஆலோசனை அல்லது திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, எல்லா விவரங்களும் என்னிடம் இருக்கின்றன. 25 ஐடம்கள் என்று நான் ஏற்கனவே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கவனித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த ஐடம்களைப் படிப்பதற்கு கனம் சபாநாயகர் அனுமதிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதுமட்டுமல்ல, வழக்கு தொடரப்படிருக்கிறது. எதற்கு தயவு தாட்சண்யம் காட்ட வேண்டும்? உடனடியாக நடவடிக்கை எடுத்துவருகிறோம் என்று வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். மாவட்ட சுகாதார அதிகாரி தலைமையிலே மேகலா மெடிகல்ஸ் பார்ட்னர்ஸ் திருமதி டி. கே. ராஜரத்தினம், திருமதி வினாட்சி அவர்களுடைய வீடு ரெயிட் செய்து உடனடியாக 122 சின்ன சின்ன ஐடம்கள் கண்டு பிடிக்கப்பட்டன. திட்டவட்டமாக அந்த மதிப்பைச் சொல்ல வில்லை. தோராயமாகத்தான் சொல்லியிருக்கிறோம். 122 ஐடம் கள் கைப்பற்றப்பட்டு, கேஸ் போடப்பட்டிருக்கிறது. அதற்குப் எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படும். கடைசியாக,

[1981 சனவரி 29

உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது மிக நல்ல வகையில் இந்த டிரக் இன்ஸ்பெக்டர்கள் ஒவ்வொரு பார்மசிக்கும் சென்று, எங்கு மருந்துகள் கொடுக்க என்ன என்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது, லேபரேடரி போன்ற மருந்துகள் இருக்கின்றனவா, சாதாரண மருந்துகள் இருக்கிறதா, பிரஸ்கிருப்ஷன் மீது மருந்து கொடுக்கிறார்களா அல்லது இல்லாமல் கொடுக்கிறார்களா என்பதைப் பார்த்து வருகிறார்கள். இன்னும் அதை விரிவுபடுத்தியிருக்கிறோம்.

திரு. எல் இளையபெருமாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலில், அரசு சம்பந்தமாக அதிகாரிகள் எத்தனை பேர்கள் இதிலே ஈடுபட்டுள்ளார்கள்? அரசு சம்பந்தமில்லாத அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் டீப்பாக வரவேண்டுமென்று சொன்னேன். இதிலே அரசு சம்பந்தமாக அதிகாரிகள் ஈடுபட்டிருந்தாலும் சரி, கொஞ்சம் கூட தயவு தாட்சண்யம் இல்லாமல், தயவு தாட்சண்யம் காட்டமாட்டோம். யாராக இருந்தாலும், யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் அத்தனை பேர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இதில் எந்த சங்கோஜமும் இல்லை. அதற்குப் பிறகு கேஸ் முடிந்த பிறகு தனியாக யார் கேட்டாலும் கூட, முழு விவரங்களையும் வழக்கு மூலமாக மன்றத்தில் வைக்கத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதில்லை. வழக்கு மன்றத்தில் அது இருக்கிறது. ஆகவே, வழக்கு முடிந்தவுடன் உடனடியாக தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். உறுப்பினர்கள் திருப்தியாக இருக்க வேண்டும். திரு. ராஜு.

திரு ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால், முழு விவரங்களைத் தர இயலாது என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் மருந்து மருத்துவமனையிலே இருந்து திருடுபோய் மெடிகல் ஸ்டோருக்கு வந்திருக்கின்றது என்று அந்த விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதைச் சொல்லுகின்ற நேரத்தில், திருடியவர்கள் யார் அல்லது அதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்ற விவரத்தைச் சொல்வதில் என்ன தவறு இருக்க முடியும் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 9.50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் மருந்துக் கடைக்காரர் பெயரைச் சொல்லியிருக்கிறார், 122 ஐடம்ஸை எடுத்ததைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். கேள்விக்குத் தொடர்பான பதில்களைச் சொல்லிக் கொண்டுதான் வந்திருக்கிறார்.

1981 சனவரி 29]

திரு. ரா. உமாநாத்: அக்யூஸ்டு பெயர்களைச் சொல்லலாம் அது ஒன்றும் இல்லீகல் அல்ல.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: என்னிடத்தில் இருக்கு தகவல் அடிப்படையில் சொல்லுகிறேன். அந்த மருந்துகள் எந்தக் கடையில் இருந்தன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. யார் மூலமாக அந்த மருந்துகள் எடுத்துச் செல்லப்பட்டன என்பதுதான் முக்கியமானது. இரண்டு மூன்று பேர் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. அந்தப் பெயர்களைச் சொல்ல வேண்டாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதைச் சொல்வதற்கு சங்கோஜப்படவில்லை. சொன்னதற்குப் பிறகு எக்ஸ்பஞ்ச் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அது நிரூபிக்கப்படவில்லை—

We are not able to prove. We have proof where it was found. We are not able to sudstantiate who did it exactly. We have charged. We have complained against some persons but they ar saying 'No'. It is sub-judice.

கனரக ஊர்திகளில் வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகள்.

*வினா எண் 96—திரு. செ. செம்மலை: திரு. ஈஸ்வரமூர்த்தி என்கின்ற பி. சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) சாலை விபத்துக்களைத் தடுக்க லாரி, பேருந்துகள் போன்ற வாகனங்களில் வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த திட்டம் எப்போது அமலாக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) எலெக்ட்ரானிக் முறையில் இயங்கும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவியினை பேருந்துகள், ஒப்பந்த ஊர்திகள் (ஆம்னிபஸ்), சுற்றுலா ஒப்பந்த ஊர்திகள், மற்றும் கனரக சரக்கு வண்டிகளில் கட்டாயமாகப் பொருத்த வேண்டும் என்று தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இத் திட்டம் அமுலில் இருந்து வருகிறது.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அமுலில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட எலெக்ட்ரானிக் கருவிகள் பொருத்தப்பட்ட பிறகு அதனுடைய நோக்கமான சாலை விபத்துக்கள் குறைந்திருக்கிறதா

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்தக் கருவி கிடைப்பது அரிதாக இருக்கும் காரணத்தால் கொஞ்சங் கொஞ்சமாக, படிப்படியாக நிறைவேற்ற வேண்டுமென்ற உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். முதல் முறையாக அமுலாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் 51 பேருந்துகளுக்கு இந்தக் கருவியைப் பொருத்தியிருக்கிறார்கள். அதிலே நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். கடந்த 24 ஆம் தேதி திருப்பதியில் நடந்த தென் மாநில போக்குவரத்து அமைச்சர்கள் கூட்டத்தில் கர்நாடக அமைச்சர் அவர்கள், அவர்கள் மாநிலத்தில் அதை அதிகமாகப் பயன்படுத்தியிருப்பதாகவும் அதனால் நல்ல சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இதை படிப்படியாக அமல் நடத்துவதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். 1979-ல் நடந்த சாலை விபத்துக்களைவிட 1980-ல் விபத்துக்கள் அதிகமாகியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதற்கு சிகரம் வைத்தாற்போல் நேற்றையதினம் ஐஸ்ஹவுஸ் பக்கத்தில் நம்முடைய பல்லவன் பஸ் வேகக் கட்டுப்பாடு இல்லாமல் சென்றதன் காரணமாக பக்கத்தில் இருந்த அம்பாசிடர் காரைப் பாதுகாக்கவேண்டுமென்று திருப்பி அதன் காரணமாக இளம் பெண்ணும் குழந்தையும் இறந்ததும் அதைப் பார்த்த அதிர்ச்சியில் டிரைவர் இறந்ததும் அரசு அறியும். ஆகவே, அரசு உடனடியாக இந்த வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்துவதை எல்லாப் பகுதிகளிலும் அமல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இதையெல்லாம் இந்த அரசாங்கம் ஆழமாகக் கவனித்து தெரிந்துதான் வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகளை பொருத்தவேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறது. வேகக் கட்டுப்பாட்டுக் கருவியை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றுதான் இருக்கும் காரணத்தால் அவர்களுக்கே எல்லா ஆர்டர்களையும் கொடுக்கும்பே து தவறுகள் ஏற்படக் கூடிய நிலை ஏற்படும் என்ற காரணத்தால் படிப்படியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற முடிவுகளை எடுத்திருக்கிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இந்த வேகக் கட்டுப்பாட்டுக் கருவியை உற்பத்தி செய்ய போதிய அவகாசம் இல்லையென்றும் ஒரு தொழிற்சாலைதான் இருக்கிறதென்றும், அதனால் படிப்படியாக இந்தக் கருவி பொருத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி படிப்படியாக அந்தக் கருவிகளைப் பொருத்துவதற்குள்ளாக பல உயிர்கள் பாதுகாக்கப்பட முடியாத நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே அரசாங்கமே அதற்காக ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து அதை உற்பத்தி செய்து பேருந்துகளிலே விரைவிலே பொருத்துவதற்கான நடவடிக்கையை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அரசாங்கமே அதை ஆரம்பிப்பதாக இருந்தாலும் அதைப்பற்றி ஆராய்ந்து பார்த்துத் தான் செய்ய வேண்டும். ஏற்கெனவே ஆரம்பித்தவர்கள் கொடுப்பதிலே சில குறைகள் இருக்கின்றன, அதை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்களும் விரைவிலே தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். விரைவிலே ஆரம்பிக்கிறார்கள். இன்னும் சொல்லவேண்டு

மானால் சேரன் போக்குவரத்துக் கழகத்திலே இதுபோன்ற கருவிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். இந்த அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப்பிறகுதான் இதைக் கண்டுபிடித்து நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: இந்த வேகக்கட்டுப்பாடு அரசு பஸ்களுக்கு மட்டுமா? அல்லது தனியார் பஸ்களுக்கும் லாரிகளுக்கும் செயல்படுத்தப்படுமா? இந்த வேகக்கட்டுப்பாட்டை வேகமாகச் செயல்படுத்துவதற்கு அரசு உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். பேருந்துகள் என்று சொன்னவே தனியார் பேருந்துகளையும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கிறேன். கனரக ஊர்தி ஒன்று சொன்னேன். கனரக ஊர்தி என்றாலே சரக்கு ஊர்திகளையும் அதாவது லாரிகளையும் சேர்த்துத்தான். இதை விரைவாகக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லியிருக்கிறேன். இன்னும் கொஞ்ச நாட்கள் போனால் நீங்கள் வாங்குகிற கார்களுக்குக்கூட இதைப் பொருத்தவேண்டுமென்று சொல்லத் திட்டமிட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகர்கோவில்—சென்னை பேருந்துப்பணி.

*வினா எண் 97—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிதாக நாகர்கோவிலுக்கும்—சென்னைக்கும் இடையே பஸ் ஒன்று விட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: 20-10-1980 முதல் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சென்னை—நாகர்கோவில் தடத்தில் கூடுதலாக இரண்டு பேருந்துகளை விடுகிறது.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, சென்னைக்கும் நாகர்கோவிலுக்கும் இடையே ஏ. சி. பஸ் விடுவதற்கு செயற்குறிப்பு உள்ளதா என்ற கேள்வியை நான் கேட்டிருந்தேன். ஆனால் கேள்வியிலே ஏ. சி. பஸ் சேர்க்கப்படவில்லை, விடையிலாவது ஏ. சி. பஸ் கிடைக்குமா? வெகு தூரம் செல்லும் விரைவுப் பேருந்துகளிலே வயர்லஸ் கருவிகள் பொருத்தும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: கேள்வியில் ஏ. சி. கிடைக்கவில்லை, விடையிலாவது ஏ. சி. கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு. (குறுக்கீடு) ஓகி என்பதற்கு என்ன சொல்வது என்று

எனக்குப் புரியவில்லை. மீண்டும் கேட்ட கேள்வியிலிருந்து அவருக்கு ஏ. சி. பஸ் தேவை என்பதை அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். அதைப்பற்றி அரசு ஆராயும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, வெகுதூர விரைவுப் பேருந்துகளிலே வயர்லஸ் கருவிகள் பொருத்தப்படுமா என்று கேட்டேன். அதற்கு பதில் அளிக்க வேண்டும். அதோடு ரீடிரீட்டிங் டயர்களை மாற்றி மாற்றிப் போடுவதால் அடிக்கடி டயர்கள் பஞ்சர் ஆகிவிடுகின்றன. அதனால் பேருந்துகள் இடையிலேயே நின்றுவிடுகின்றன. அதை மாற்றும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: வயர்லஸ் கருவிகள் மாட்டுவது பற்றி கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து அரசு ஏற்கெனவே முடிவு எடுத்துவிட்டது. ஆங்காங்கே பேருந்துகள் நின்றுவிட்டாலோ அல்லது விபத்துக்கள் ஏற்பட்டாலோ அல்லது உடனே தொடர்பு கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ வயர்லஸ் கருவிகள் மூலமாக தொடர்பு கொள்ளவேண்டுமென்ற முறையிலே விரைவுப் பேருந்துகளிலே அதை அமலாக்கவேண்டுமென்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது. புதுப்பிக்கப்பட்ட டயர்களைப் போடுவதால் அடிக்கடி பேருந்துகள் நின்றுவிடுகின்றன என்று சொன்னார்கள். முதலிலே போட்ட டயரை, தேய்ந்த டயரை 1, 2, 3 முறைகள் புதுப்பிக்கலாம். ஆனால் அரசாங்கப் பேருந்துகளைப் பொறுத்த வரையில் ஒரே முறை புதுப்பிக்கப்பட்ட டயரைத்தான் போடுகிறோம், இரண்டாவது முறை புதுப்பிக்கப்பட்டதைப் போடுவதில்லை. அதன் காரணமாக ஆங்காங்கே இப்போது வண்டிகள் நிற்பது குறைந்து இருக்கிறது. எல்லாவற்றையும் புதிதாகப் போடவேண்டுமென்றால் கட்டணம் அதிகமாகும சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, புதிதாக பஸ்கள் விடுவது ஒருபுறம் இருக்க நீண்டதூர பஸ்களைப் பொறுத்தவரையில் பழைய பஸ்களை விடுவதால் சட்டமன்றக் கூட்டத்திற்கு வருகிறபோதுகூட இடைவழியிலே நின்றுவிடுவதால் நாங்கள் மறுநாள் தான் வரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. பழைய பஸ்களை 100 கிலோ மீட்டர் வரையில் உள்ள தூரத்துக்கு விட்டுவிட்டு அதற்கு மேற்கொண்டு உள்ள நீண்ட தூரம் செல்கின்ற பஸ்களை புதிய புதிய பஸ்களாக விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

[முற்பகல் 10.00]

மாணபுமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற யோசனை நல்ல யோசனையாக இருந்தாலும், இப்பொழுதே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் ஒரு பேருந்தை மூன்றாண்டுகளுக்கு மேல் நாங்கள் பயன்படுத்துவது இல்லை; ஆனால் மற்ற இடங்களில் 15 ஆண்டுகள்கூட பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகிக்கொண்டு இருந்தாலும், இதிலே மூன்று ஆண்டுகளுக்கு

தான் பயன்படுத்துகிறோம். காரணம் என்னவென்றால், ஒரு ஆண்டிலே மட்டும் அதை எடுத்துவிட வேண்டுமென்றால், அதற்கான கூடு வித்தியாசமானது, அதை மீண்டும் உடைத்து வேறுவகையில் பயன்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்ற விருப்பம் கருத்தாலும், நான் ஏற்கனவே சொன்னதைப் போல அதற்கான கட்டணத்தைத் தேவையான அளவிற்கு உயர்த்தலாம் என்பதை ஒத்துக்கொண்டால், ஒரு ஆண்டுக்கு ஒரு முறை என்ன, ஆறு மாதங்களுக்கு ஒருமுறைகூட நாங்கள் மாற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம்.

நெசவாளர்களுக்கு மலிவு விலையில் நூல் வழங்கல்.

வினா எண் 98—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி—கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா,—

(அ) பருத்தி, பட்டு நூல்களை மலிவு விலையில் நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத்துறை அமைப்பின்கீழ் செயல்பட்டு வரும் நெசவாளர்களுக்கு பருத்தி மற்றும் பட்டுநூல்கள் நியாய விலையில் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறைக்கு வெளியே உள்ள நெசவாளர்களுக்கு நியாயவிலையில் பருத்தி நூல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்கு நியாயவிலையில் பட்டுநூல் சப்ளை செய்ய அரசுக்கு செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது; ஆனால் குறிப்பிட்ட அளவிற்கு மட்டும் நெசவாளர் சங்கங்களுக்குக் கூட்டுறவு நூற்பாலைகள் கொடுத்துவிட்டு, தனிப்பட்ட வியாபாரிகளுக்கு மீதியைக் கொடுக்கிறார்கள். அனைதயும் தேக்கிவைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கே குறைந்த விலைக்கு நூலைக் கொடுப்பதற்கான திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல தமிழ்நாட்டிலுள்ள 12 நூற்பு நிலையங்கள், 21 விற்பனை நிலையங்கள் வாயிலாக 1,052 சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல தனியாருக்கு விற்பனை செய்வதாக இதுவரையில் அரசுக்குத் தகவல் இல்லை. அப்படி ஏதாவது குற்றச்சாட்டுகள் இருக்குமேயானால் தனிப்பட்ட முறையில் அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, பெங்களூர் பட்டுநூலைத் தமிழகத்தில் விற்கும்பொழுது அதிக விலைக்கு விற்கிறார்கள். எனவே, குறைந்த விலைக்கு வாங்கி, மானியம் கொடுத்தாவது பட்டு உற்பத்தியைப் பெருக்கத் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பட்டுநூல் நெசவு செய்யும் நெசவாளர்களுக்கு என்றே 14,000 கிலோ கச்சாப்பட்டு தேவைப்படுகிறது. விலையில் மாறுபாடு இருந்தாலும் நெசவாளர் சங்கங்களுக்குத் தரமான கச்சாப்பட்டு இருந்தாலும் நெசவாளர் கொடுத்து வருகிறது. பெங்களூரில் இருந்து இங்குள்ள நெசவாளர்களுக்குத் தேவையான பட்டுநூல் நியாயமான விலைக்குக் கொடுக்கப்படுவது இல்லை என்று சொல்லி அங்கிருந்து இறக்குமதி செய்தால் அவர்களுக்குக் குறைந்த விலைக்குக் கிடைக்கும் என்ற கருத்தைக் கூறினார்கள். அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, சமீபத்தில் நூல் விலையேற்றத்தின் காரணமாக கரூர், மதுரை, குடியாத்தம் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் வேலை கிடைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அவர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவரவர்களே, நியாய விலையில் கொடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கூட்டுறவு இயக்கங்களாகச் செயல்படும் நெசவாளர்களுக்கு நியாய விலையில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தனியார் நெசவாளர்களுக்கு நியாய விலையில் கொடுப்பதற்கு மத்திய அரசு உதவியோடு 1978–79 ஆம் ஆண்டில் செயல்பட்டு வந்தது. அதைப் போல் மீண்டும் மத்திய சர்க்காரின் உதவியோடு நியாய விலையில் தனியார் நெசவாளர்களுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு நெசவாளர் சங்கத்தின் மூலமாக கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல் நெசவாளர்

சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அதை மாற்றி நேரடியாக கூட்டுறவு நூற்பாலையிலிருந்து இந்த நூலை நெசவாளர் சங்கங்களுக்கு அளிப்பதன் மூலம் குறைந்த விலையில் கிடைக்க வழியிருப்பதால், நேரடியாக நூற்பாலைகள் நூலை விநியோகிக்கும் திட்டத்தை அரசு அமல் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலைகள் உற்பத்தி செய்கிற நூல்களை, நேரடியாக நெசவாளர்களுக்குக் கொடுத்து வந்தது சரியான முறை இல்லையென்பதால், தனியார் அவர்களோடு போட்டி போடக்கூடிய சூழ்நிலை இருப்பதால், அதைத் தலைமைச் சங்கமே கொள்முதல் செய்து, 21 சங்கங்கள் வாயிலாக 1,052 பிரதம சங்கங்களுக்கு—அதில் உள்ள நெசவாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மற்ற வெளியிடங்களில் கொடுப்பதைவிட, ரூ 3, ரூ 4 குறைவாகவே பிரதம சங்கங்களில் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோபால் : தலைவர் அவர்களே, சில கிராமங்களிலே கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருந்தும் அங்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. அப்படிப்பட்ட கிராமங்களில் உள்ள நெசவாளர்களுக்கு மலிவு விலையில் நூல் கிடைக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இயங்கி வருகின்ற தனியார் நெசவாளர்களுக்கும் மற்றைய நெசவாளர்களுக்கும் சங்கங்களில் இயங்கி வருகின்ற நெசவாளர்களுக்குக் கிடைக்கின்ற நியாய விலையில் கிடைப்பதைப் போன்ற ஏற்பாட்டை அரசு செய்து வருகிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை.

***வினா எண் 99—திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு கைத்தறி—கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் மத்திய அரசுடன் சேர்ந்து சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றுபுதிதாகஆரம்பிக்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பெரியார் மாவட்டத்தில் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது மஞ்சளின் விலை குறைவாக இருப்பதால் மஞ்சளைப் பயன்படுத்தி சாயத் தொழிற்சாலை வைப்பதற்கு. . . .

[1980 சனவரி 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மஞ்சளுக்கும் சாயத்திற்கும் என்ன சம்பந்தம்? சாயம் பம்பாயிலிருந்து வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: சாயப்பொருள்களின் மூலப்பொருள் மஞ்சள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கல்கத்தாவுக்குப் போகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது இல்லையென்றாலும் வருகிற ஆண்டுகளிலாவது அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட மாவட்டத்தில் இப்பொழுது இல்லையென்றுதான் சொல்லியிருக்கிறோம். தேவைப்பட்டால் கவனிப்போம். ஏனெனில் வெளி மாநிலங்களிலிருந்து நாம் வாங்கி வருகிறபடியால் விலை அதிகமாக இருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலே கடலூரில் 'வானவில்' சாயத் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகள் அதிகமாக இருக்கிற காரணத்தால் உற்பத்தியாகிற நூலை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி சாயம் தயாரிக்கிற சூழ்நிலையிருக்கிற காரணத்தால், கோவை மாவட்டத்தில் சாயத் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு மாவட்டத்திலும் கேட்பார்கள். அடுத்து, திரு. வெள்ளைச்சாமி.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது பெரியார் மாவட்டத்தில் துவங்க உத்தேசம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வேறு எங்காவது துவங்க உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா எண். 100.

ஒகூர் கால்நடைப் பண்ணை.

*வினா எண் 100—திரு. டி. வேங்கட்டரெட்டி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒகூர் கால்நடைப் பண்ணையில் செயல்படுத்தப்படவுள்ள இந்தியா—பிரிட்டன் திட்டத்தின் கீழ் வரும் புதிய திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

1981 சனவரி 29]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே

(அ) இல்லை.

(ஆ) ரூ. 452.11 லட்ச செலவில் முதலில் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசின் யோசனைப்படி திட்டத்தின் செலவினைக் குறைத்து ரூ. 300.16 லட்சத்திற்கான திருத்தப்பட்ட திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. நிதி பற்றாக்குறையின் நிமித்தம் இந்தத் திட்டத்தை ஏற்பதற்கில்லையென மத்திய அரசு தெரிவித்தது. இத்திட்டத்தினால் விவசாயிகளுக்கு ஏற்படும் பல்வேறு நன்மைகளைக் கருத்திற்கொண்டு மீண்டும் பரிசீலனை செய்து இத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமென மத்திய அரசினை வற்புறுத்தியிருக்கிறோம்.

நகராட்சிகளை மாநகராட்சிகளாக்கல்.

குறுகியகால வினா எண். 1 திரு. மீ. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிகளை மாநகராட்சி ஆக்கும் எண்ணம் இந்த ஆண்டில் ஏதாவது உள்ளதா ?

(ஆ) நாகர்கோவில் நகராட்சி மாநகராட்சியாக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (அ) மற்றும் (ஆ) கோடம்புத்தூர் நகராட்சியை மாநகராட்சி ஆக்குவதற்கு ஏற்கெனவே அரசு முடிவு எடுத்துள்ளது. குடியரசு தலைவருடைய முன் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. இதைப்பற்றிய சட்ட வடிவம் பட்ஜெட் தொடரில் கொண்டு வர இருக்கிறது. மற்ற நகராட்சிகளை மாநகராட்சி ஆக்க செயல்குறிப்புகள் ஏதும் இப்பொழுது அரசிடம் இல்லை.

[முற்பகல் 10-10]

திரு. மீ. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகராட்சி, மாநகராட்சியாக என்ன அடிப்படையில் ஆக்கப்படுகின்றது. 95 லட்சம் ரூபாய் ஆண்டு வருமானம் உள்ள நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக்க ஏதாவது தடங்கள் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மற்ற நகராட்சிகளை மாநகராட்சியாக ஆக்குவதற்கோ, எல்லா நகரியங்களையும் நகராட்சிகளாக ஆக்குவதற்கோ, எந்தவிதமான கூடுதலோ அல்லது குறித்தலோ கூடாது என்றும், மக்கள் தொகை கணக்கெடுப்பு முடியும் வரையில் செய்யக்கூடாது என்று மத்திய அரசு ஆணைபிறப்பித்திருக்கிறது. எனவே 10-6-1981க்குப் பிறகுதான் அதைப்பற்றி எல்லாம் செய்யும்நிலையில் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அதற்கு பின்னால் பரிசீலிக்கலாம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை நகராட்சி, மாநகராட்சியாகப் போகிறது என்று பலதரம் இந்த சட்ட மன்றத்திலே அமைச்சர் தெரிவித்திருக்கிறார். பொங்கல் விழாவின் போதே அது பிரகடனப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். என்றிலிருந்து கோவை மாநகராட்சியாகச் செயல் ட ஆரம்பிக்கும். அந்த மாநகராட்சிக்கும், இந்தநகராட்சிகளுக்கும் நடக்கும் தேர்த லோடு சேர்த்து நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு. திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 'Coimbatore Municipal Corporation Act என்று ஒரு சட்டத்தை, பட்ஜட் தொடர் கூட்டத்திலேயே அறிவித்து, அது இந்த மன்றத்தின் அனுமதி பெற்றபின்னால்தான், அதற்கான தேதிகள் எல்லாம் குறிப்பிடப்படும். தேர்தல் பற்றி எல்லாம் அதற்குப் பின்னால் தெரிவிக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, கோவை நகராட்சி, மாநகராட்சியானதற்கு பின்னர், சென்னை மாநக ராட்சியில் இருப்பது போன்று, அரிசனங்கள் மலைவாழ் மக்களுக்கு உரிய இடங்களை சட்டரீதியாக ஒதுக்கித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்லப் படும்.

Thiru K.S.G. HAJA SHAREEF ; On a point of information May I know from the Hon. Minister whether there is any director from the Central Government that elections for the Panchayats and other Municipalities should not be conducted, since he has been telling this ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் இந்த மன்றத்திலே அறிவித்திருக்கிறேன். மைய அரசு வருகின்ற 31–3–1981 வரையிலும், எந்த விதமான உள்ளாட்சித் தேர்தலையும் நடத்தக் கூடாது என்று கேட்டுக் கொண்டிருக்கிறது என்பது ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கோவை மாநக ராட்சியாகப் போவது போல, வேறு எந்தெந்த பெருநகரங்கள் மாநகராட்சியாக்கப்பட இருக்கின்றன என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதுவரையிலும் அரசின் குறிப்பிலே இருப்பதெல்லாம் கோவை நகராட்சியை மாநகராட்சியாக்குவதற்கான நிலைமைகள் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது. குடியரசுத் தலைவ ருடைய ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. அதேபோல இன்று தேர்தலை நடத்துவதைப் பற்றிக் கூட மாண்புமிகு உறுப்பினர் ஹாஜாஷெரிப் அவர்கள் கேட்டார்கள். வருகின்ற 31–3–81

வரையிலும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்கின்ற காரணத் தினால் உள்ளாட்சித் துறைத் தேர்தல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று மைய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

திரு. மீ. வின்சென்ட் : தலைவர் அவர்களே, நிதிநிலை முழு அளவில் இருக்கிற காரணத்தினாலே, 30–6–81க்கு பிறகாவது நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக ஆக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ப, குழந்தைவேலு : அது பரிசீலிக்கப்படும்.

திரு. கு. ப. பழனியப்பன் : தலைவர் அவர்களே, மாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கிளாரிபி கேஷன் எல்லாம் கிடையாது.

கன்னியாகுமரி நகரியம

குறுகியகால வினா எண். 2- திரு. சு. முத்துகிருஷ்ணன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி நகரியத்தை நகராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) இதனால் வருமானம் எவ்வளவு அதிகரிக்கும் ?

(இ) கன்னியாகுமரியில் சோடியம் விளக்குகள் பொருத்தி அழகு படுத்த வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ), (ஆ) மற்றும் (இ) : இதுபற்றிய செயற்குறிப்புகள் ஏதும் அரசிடம் இப்போது இல்லை. அப்படி நகராட்சியாக மாற்ற வேண்டுமானாலும் அதை 30–6–81க்குப் பின்தான் பரிசீலிக்க முடியும்.

திரு. சு. முத்துகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, கன்னியா குமரி நகரியத்தை நகராட்சியாக மாற்றுவது குறித்து 30–6–81க்கு பின்னர்தான் பரிசீலிக்க முடியும் என்று சொன்னார்கள். கன்னியாகுமரி இந்தியாவிலேயே ஒரு முக்கியமான சுற்றுலாப் பிரதேசம். கூடுதலான வருமானத்தை ஈட்டுகின்ற இடம். ஆகவே, அரசு அதில் தனிக்கவனம் செலுத்தி, கன்னியாகுமரி நகரியத்தை இந்த ஆண்டிலேயே நகராட்சியாக உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

அது மட்டுமல்ல, என்னுடைய மூலக்கேள்வியிலேயே கன்னியா குமரியில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தி அழகு படுத்த வழிவகை செய்யப்படுமா என்று கேட்டு இருந்தேன். அதற்கு

அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கவில்லை. சென்னையில் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்து இருப்பதுபோல், நிதிச் செலவைப் பாராமல், கன்னியாகுமரி முக்கிய சுற்றுலா இடமாகவு இருப்பதால், அங்கே சோடியம் விளக்குகளைப் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி தற்போது நகரியமாக இருந்து வருகிறது. நகரியத்தை நகராட்சியாக மாற்றவேண்டுமானால் சில நிபந்தனைகள் உள்ளன. அந்த நிபந்தனைகளின் அடிப்படையில்தான் நகரியத்தை நகராட்சியாக மாற்றுவது, அல்லது நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவது, என்பது தற்போது செய்யப்பட்டு வருகிறது. கன்னியாகுமரியைப் பொருத்தவரையில் இப்போது இருக்கின்ற ஜனத்தொகை கணக்கு 11,124 பேர் என்றாகும். இந்தக் கணக்கு 1971ன் படி இருக்கிறது. இந்த 10 ஆண்டு காலத்தில் ஜனத்தொகை அதிகரித்து இருக்கக்கூடும். ஆகவே, அந்த மக்கள் தொகை கணக்குகள் எடுத்து முடிக்கப்பட்டவுடன், இதைப் பற்றிய யோசனையை 30-6-81க்குப் பின்னால் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்துவது என்பது அந்த நகரியத்தின் நிதி நிலைமையைப் பொருத்து இருக்கிறது. நிதி வசதி இருந்தால் இந்த சோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்துவதற்கான வசதிகளை இந்த அரசு செய்யும்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, கன்னியாகுமரிக்கும் சென்னைக்கும் சோடியம் விளக்குகள் பொருத்தப்படவேண்டும் என்கிற நிலை இருக்கிறபோது, இந்த மாமன்றத்தின் உள்ளேயும் சோடியம் விளக்குகள் பொருத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த அவை மிக அழகான ஒளியோடு தற்போது மின்னிக்கொண்டு இருக்கிறது. ஆகவே, இங்கே சோடியம் ஆவி விளக்குகள் தேவையில்லை.

திரு. சு. முத்துகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிற போது, நகரியத்தின் வருமானத்தில் இருந்து சோடியம் விளக்குகள் போடலாம் என்று சொன்னார்கள். கன்னியாகுமரியைப் பொறுத்த வரையில், அது மிகவும் முக்கியமான சுற்றுலா பகுதி. சென்னையில் நாம் அந்த விளக்குகளைப் போட்டிருக்கிற போது, அதே போல் கன்னியாகுமரியிலும் அரசு தனிக்கவனம்செலுத்தி, அந்தசோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்தி அந்த நகரியத்தை அழகு படுத்த முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டார். நிதி வசதி இருந்தால் சோடியம் ஆவி விளக்குகள் மட்டுமல்ல, எந்த விளக்கு வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்-]

2 தகவல் கோரல்,

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவை உரிமை மீறல் பிரச்சினை....(குறுக்கீடு) இன்றைக்கு மூன்று அவை உரிமை மீறல் பிரச்சனைகள் எடுத்துக்கொள்ளப் பெற இருக்கின்றன. அதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்று சொல்ல முடியாது. எல்லா பிரச்சனைகளும் முக்கியம் தான். ஒவ்வொரு பிரச்சனையாகத் தான் எடுத்துக்கொள்ள முடியும்.

திரு. சோ. அழகர்சாமி : மேலவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்டு, அதற்குப் பதில் கொடுத்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்டதால், நாமும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது அல்ல. இந்த அவையின் அலுவல் ஆய்வுக்குழு எடுக்கிற முடிவின் அடிப்படையில், நம்முடைய நிகழ்ச்சிகள் அமைகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, இந்தச் சபையில் ஒத்திவைப்புத் தீர்மானம் அண்ணாமலை பல்கலைக் கழகம் பற்றி கொடுத்திருக்கிறார்கள். அதை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் மேல்சபையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் இந்தச் சபை முக்கியம் இல்லையா ? இந்த அவைக்கு அதை விவாதிக்க, தெரிந்துகொள்ள 'ரைட்' இல்லையா ? (குறுக்கீடுகள்) இந்த அவையிலும் எடுத்துக் கொள்ள வழிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து எல்லோரும் அவரவர் இருக்கையில் அமருங்கள். நான் எல்லோருக்கும் வழிவிடலாம் என்று நான் நினைக்கிறேன்; முடியவில்லை. இங்கே ஆளுநர் உரையின்மீது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது.

நேற்று, திரு. சுந்தரராஜ் அவர்கள் கொடுத்துள்ள பிரச்சனையை இன்று எடுத்துக்கொள்வதாகச் சொன்னேன். அதைப்போல திரு. ரகுமான்கான் அவர்களுடைய பிரச்சனை ஒன்று நேற்று 9.45 மணிக்கு வந்தது. அப்போது அதைப் படித்துப் பார்க்க நேரம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே நான் 8.30 மணிக்கு இங்கே வந்துவிட்டேன்; 8-45 மணிக்குள் தங்களிடம் கொடுத்துவிட்டேன். 9. 45 மணிக்குத்தான் தந்தேன் என்பது தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் சொல்வது சரிதான். 8.45 மணிக்கு கொடுத்தார்கள்; 9-45 மணிக்கு நான் அவையில் இருந்தேன். அதை அப்போது பார்க்க முடியவில்லை. அதை இன்று எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதைப்போல டாக்டர் சமரசம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். அதையும் இன்று எடுத்துக்கொள்ள இருக்கிறேன். இந்த 3 பிரச்சனைகளுக்கும் சுமார் ஒன்றரை மணி நேரம் ஆகும் என்று கருதுகிறேன்.

அதன்பிறகு ஆளுநர் உரையின்மீது விவாதம் நடைபெறுகிறது. இன்றைக்கு கட்சித் தலைவர்கள் பேச இருக்கிறார்கள். அவர்களுக்கு நேரம் ஒதுக்கித் தரவேண்டியிருக்கிறது. காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவரும் பேசவேண்டும் என்று சொன்னார்கள்; பேச அனுமதிக்கிறேன் என்று சபையில் அறிவித்துவிட்டேன்; அதனால் அவர்களுக்கும் நேரம் ஒதுக்கித் தரவேண்டும். நீங்கள் எல்லோரும் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்களோ அதற்கு முன்னுரிமை கொடுக்க நான் தயார். அவையின் முடிவுபடிதானே அவையை நடத்த வேண்டும்.

மேலவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டது என்றால் அங்கே உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவு; பேசுகின்றவர்களும் குறைவு; ஆனால் அவை நடைபெறுகிற நேரம் அதிகமாக இருக்கிறது. நமக்கு அப்படியல்ல. இங்கே இன்றுதான் கேள்வி நேரம் கொஞ்சம் முன்னால் முடிந்திருக்கிறது. முந்தாம்நாள் மத்தியானம் 15 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் சபையில் நேரம் ஒதுக்கித் தரமுடியுமோ அந்த அளவுக்கு தருகிறேன். இல்லாவிட்டால் உறுப்பினர்கள் உணர்ச்சிவசப்படுவார்கள். ஆகவே, இருக்கிற நேரத்தை கருதி, ஆளுநர் உரை, ஒத்திவைப்புத் தீர்மானம் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். அண்ணாமலை பல்கலைக் கழகம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானமும் வந்திருக்கிறது. அதை இப்போது எடுத்துக் கொண்டால் இன்னும் நேரம் அதிகமாகும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அண்ணாமலை பல்கலைக் கழகத்தைப்பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் முக்கியமானது. அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் பிரச்சனைக்குத்தான் முன்னுரிமை. அவை உரிமை மீறல் பிரச்சனைகள் 3 இருக்கின்றன. அதன் பிறகு ஆளுநர் உரையின் மீது விவாதம். திரு. சங்கரய்யா மற்றும் பல கட்சித் தலைவர்கள் இன்று பேச இருக்கிறார்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் கட்சித் தலைவர்களுடன் கலந்துபேசித்தான் நான் அவையை நடத்துகிறேன்,

*திரு. என். சங்கரய்யா : இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபை. இந்த சபையிலே ஆளுநர் உரை நடக்கிறது, அதனால் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லும்போது மேல்சபையில் இதேமாதிரியான ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறதே. அப்படியானால் ஏன் இங்கே எடுத்துக்கொள்ளக் கூடாது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே சொன்னேன். அங்கே இருக்கிற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவு; அங்கே பிரச்சனைகளும் குறைவாக இருக்கின்றன.

THIRU V. KRISHNAMOORTHI : This House is not inferior to the Legislative Council. Why should the Chief Minister make a statement there disregarding.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் 'சுப்ரீம்' என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதில் பிரச்சனை ஒன்றும் இல்லை,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே நம்முடைய பேரவையைப் பொறுத்தவரையில் பேரவையை எப்படி நடத்துவது என்பதற்கு நமக்கு என்று அலுவல் ஆய்வுக் குழு வைத்திருக்கிறோம். அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசும்போது ஆளுநர் உரையின்மீது விவாதம் முடிந்த பிறகு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்தோம்.

ஆகவே அந்த அடிப்படையிலேதான் இந்த ஆளுநர் உரையின் மீது நடக்கின்ற விவாதத்திலே அதைப்பற்றிப் பேசுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்கின்ற வகையில்தான் அது வேண்டாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. அதை இப்போது மாற்றவேண்டும் என்றால் நீங்கள் மறுபடியும் அவர்களை எல்லாம் அழைத்து வைத்துக்கொண்டு மாற்றுங்கள். அதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதைப் பொறுத்தவரையில் எங்களுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூட சட்டமன்ற மேலவையில் ஒரு விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசுகின்றபோது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பற்றித் தகவல் கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான் எனக்குத் தெரிந்த விவரம்; ஆகவே.... (கூச்சல், குழப்பம்)

[1981 சனவரி 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமக்கு இருக்கின்ற வேலைப் பளுதான் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் படாமைக்குக் காரணமே தவிர உறுப்பினர்களின் உரிமைகள் ஒன்றும் பறிக்கப்படவில்லை.

திரு. என். சங்கரய்யா ; தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலவையிலே ஒரு விவாதத்திலே நமது முதல்வர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசும்போதுதான் அண்ணா மலைப் பல்கலைக் கழகம் பற்றி பதில் சொன்னதாக சொல் கிறார்கள். அப்படி இல்லை. அங்கே கொடுக்கப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளிக்கின்ற போதுதான் அவர் பதில் சொல்லியிருக்கிறார். அதுபற்றி இன்றைக்கு காலையிலே பேப்பரிலே கூட வந்திருக்கின்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மேலவையில் என்ன நடந்தது என்று தங்களுக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது. ஆகவே அதை வைத்துக்கொண்டு பேசுவது என்ன நியாயம் ?

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு நல்லசிவம் அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் அங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்ற தகவல் எங்களுக்கு வந்திருக்கின்றது. ஆகவே அதற்கு பதிலளிக்கின்றபோதுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கே பதிலளித்திருக்கிறார்கள். இன்றைய தினம் 3 உரிமை மீறல் பிரச்சினைகளை எடுத்துக்கொள்ளலாம் என்று தாங்கள் அனுமதித் திருக்கிறீர்கள், அதுபோன்று நாளையதினம் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதாக தாங்கள் உறுதிமொழி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்பு அவை உரிமை மீறல் பிரச்சினையை எடுத்துக்கொள்வது வழக்கம், இப்போது நமக்கு இன்னும் இருக்கின்ற நேரம் 2½ மணி நேரம் தான். இதற்குள் மற்ற அலுவல்களை எல்லாம் முடிக்க வேண்டும்.

திரு. வி. சிருஷ்ணமூர்த்தி : அட்ஜெர்மெண்ட் மோஷன் என்றால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அட்ஜர்ன்மெண்ட் மோஷன் பற்றித் தெரிந்திருப்பதால்தான் அதை இப்போது எடுத்துக்கொள்ள வில்லை,

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, நேற்றையதினம் திரு. சுந்தரராஜன் அவர்கள் உரிமை மீறல் பிரச்சினை கொடுத் திருந்தது பற்றிக் கேட்டபோது அதை இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக தாங்கள் சொன்னீர்கள். அதுபோல இன்றைக்குக் கொடுத்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று ஒரு உறுதி மொழி தாங்கள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஜனவரி 29]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இங்கே எடுத்துக்கொள்வது பற்றி எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் இங்கே அதை வலியுறுத்தி அதற்கான ஒரு உத்தரவாதத்தைப் பெறுவது என்பது முறைதானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசவேண்டி இருக்கின்றது. காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ஹாஜா செரீஃப் அவர்கள் பேசவேண்டி இருக்கின்றது. முதல்வர் அவர்களின் பதிலுரையும் நாளை இருக்கின்றது. இதையெல்லாம் எண்ணித்தான் சபையை நடத்த வேண்டியதிருக்கின்றது. நாளையதினம் ஆளுநர் உரையின் மீதான விவாதத்தை முடித்தாக வேண்டும். ஆகவே நேரம் இருந்தால் நாளையதினம் இதை எடுத்துக்கொள்வது பற்றிய உறுதிமொழியினைத் தர முடியும். இப்போது மூன்று உரிமை மீறல் பிரச்சினைகள் வந்திருக்கின்றன. இவற்றிற்கு 1½ மணி நேரம் எடுக்கப்போகின்றது.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, மூன்று உரிமை மீறல் பிரச்சினையை இன்றைக்கு எடுத்துக் கொள்வதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறீர்களே, அதே மாதிரி இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று ஏன் உத்தர வாதம் தரக்கூடாது ? (கூச்சல், குழப்பம்)

3. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) மின்துறை அமைச்சரின் மீது.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, கொடுத்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்பதற்கு அங்கத்தினர்களுக்கு உரிமை உண்டு. அதற்குத் தாங்கள் பதில் சொல்கிறீர்கள். அரசாங்கத்தின் தரப்பிலே இருந்தும் அவர்கள் விளக்கமாகச் சொல்லலாம். ஆனால் அதற்காக ஒரு தவறான தகவலை இந்த அவைக்குத் தந்து இந்த அவையினுடைய கவனத்தைத் திசை திருப்புகின்ற காரியத்தில் ஒரு அமைச்சர் ஈடுபடக் கூடாது. அது இந்த அவையினுடைய உரிமை மீறல் ஆகும். மேலவையில் முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுத்தான் அண்ணாமலைப் பல்கலைக் கழக பற்றி பதில் அளித்தார் என்று மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அதன்மீதுதான் முதலமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார். ஆனால் அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், 'மேலவையில் என்ன நடந்தது என்று எனக்கும் தெரியாது, உங்களுக்கும் தெரியாது' என்று. மேலவையில் என்ன நடந்தது என்று தெரியாதவர் முதலமைச்சர் மேலவையில் பதில் கூறியது பேச்சின் ஊடே குறுக்கிட்டுத்தான் என்று சொல்கிறாரே அது எப்படித் தெரியும் ? எனவே அமைச்சரவர்கள் வேண்டுமென்றே

திட்டமிட்டு தவறான தகவலைக் கூறி இந்த அவையைத் திசை திருப்புகிறார் என்ற காரணத்தால் உங்களுடைய அனுமதியோடு அவர் மீது பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வருகிறேன். எனவே அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்ததில் நானும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சொன்னதின் உண்மையான உணர்வு இதுதான். ஒரு அவையிலே, மற்றொரு அவையிலே நடைபெற்ற விவாதங்களைப் பற்றி விவாதிக்கிறபோது, அதுபற்றி சரியான தகவல்கள் முழுமையாகக் கிடைக்காமல், விவாதிக்கப்படுமேயானால், அதன் மூலமாக எழுகின்ற பிரச்னைகளுக்கு அந்த மற்றொரு அவை பாதிக்கப்படக் கூடிய ஒன்றாக அமைந்து விடும். அதனால் அந்த அவையிலே என்ன நடந்தது என்கிற முழு விவரமும் நம்முடைய அவைக்கு தெரிந்துக் கொள்ள வாய்ப்பு இல்லாதபோது, அந்த அவையில் நடந்தவைகளைப் பற்றி விவாதப்பது சரியானதாக ஆகாது என்று கருதியதன் அடிப்படையிலே தான் அதைச் சொன்னேன். ஆனால் அதே நேரத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அங்கே பேசியதாக தெரிகிறது என்றுதான் சொன்னேனே தவிர, அதை உறுதிப்படுத்திப் பேசவில்லை. பத்திரிகைகளிலே வந்திருக்கிற செய்திகளை வைத்து அப்படிக் குறிப்பிட்டு, பேசியதாகத் தெரிகிறது என்றுதான் சொன்னேன். உண்மையில் அவர் விவாதத்தில் குறிப்பிட்டுப் பேசினாரா அல்லது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளிக்கையில் பேசினாரா என்கிற விவரங்கள் சரியாகத் தெரியவில்லை என்கிற அடிப்படையில் தான், அடுத்துப் பேசுகிறபோது, என்ன நடந்தது என்று தெரியாமல் நாம் போவோமானால், அது அந்த அவையினுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி விடும் என்று விளக்கம் அளிப்பதற்காகத்தான் அப்படி எடுத்துச் சொன்னேனே தவிர, இந்த அவை உறுப்பினர்களை திசை திருப்ப வேண்டும் என்று அல்ல, அப்படித் திசை திருப்பக் கூடிய திறமையையும், ஆற்றலையும் நான் பெறாதவன் அல்ல. அவர்களும் அந்த அளவிற்கு ஏமாந்தவர்கள் அல்ல என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இவ்வாறு சொல்வது தவறு. அந்த அவையிலே நடைபெற்ற விவரங்களை இந்த அவையிலே உள்ள யாருக்குமே தெரிந்துக் கொள்ள வாய்ப்பு இல்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால், இதே அமைச்சர்கள், ஒரே நிதியமைச்சர், ஒரே முதலமைச்சர், அப்படி இருக்கையில், It is a wrong thing to say that. How can a Government say that they have no opportunity?

[1981 ஜனவரி 29

HON. THIRU. S. RAMACHANDRAN: Mr. Speaker Sir, the Hon. Member is fully aware that there are two Houses as far as our State is concerned, and each House has its own chamber. What has happened in one chamber, cannot be commented upon by another chamber. That must be clear. As far as the accountability on the part of the Government is concerned, we are very clear.

டாக்டர். மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ இன்னொரு அவையிலே நடைபெற்ற விஷயங்களை இந்த அவையிலே விமர்சிக்கக்கூடாது என்பது போல பேசினார்கள். இங்கே யாரும் விமர்சிக்கவில்லை. அங்கே நடைபெற்றதை சுட்டிக்காட்டி, அதுபோல் இங்கே ஏன் அனுமதிக்கவில்லை என்றுதான் கேட்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களும், திரவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அதைத் தான் கேட்டார்கள். கேட்டவுடன் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, அங்கே ஒத்தி வைப்புத் தீர்மானம் வரவில்லை, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகுதான், நண்பர் உமாநாத் அவர்கள், ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்தது என்று குறிப்பிட்டார்கள். எனவே, திரு. துரைமுருகன் எழுப்பியிருக்கக்கூடிய பிரச்னை உரிமை மீறல் பிரச்னைக்கு உட்பட்டது தான், இருந்தாலும் அதை தங்களுடைய முடிவுக்கே விட்டு விடுகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: என் ஸ்டேட்மெண்டைப் பாருங்கள். நான் பேசும் போதே ரொம்ப ஜாக்கிரதையாகப் பேசினேன். அவர்கள் குறுக்கிட்டுப் பேசியதாகக் கேள்விப்பட்டேன் என்று தான் சொல்லியிருக்கிறேன்.

திரு. துரைமுருகன்: அவர்கள் கிளியராகச் சொன்னார்கள் அவர்கள் சொன்னது, குறுக்கிட்டு பேசினார் என்று தான் சொன்னார். எனவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விப்பட்டேன் என்று தான் சொல்லியிருக்கிறார் ஆதாரபூர்வமாகச் சொல்லவில்லை அங்கு. நடந்த சம்பவம் பத்திரிகையில் வந்திருக்கின்றது என்றால் எல்லோரும் காலையில் முழுக்க பேப்பர் பார்த்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. நானே காலையில் எல்லாப் பத்திரிகைகளையும் பார்க்கமுடியவில்லை. காலையில் ஒன்றிரண்டுப் பார்ப்பேன் நேரமாகிவிடும், உடனே இங்கு வந்து விடுவேன். பிற்பகல் இரண்டொன்றையும் பார்ப்பேன். இரவில் சிலவற்றை பார்ப்பேன். மேலவையில் நேற்று நடந்ததெல்லாம் எல்லோருக்கும் தெரியும் என்று நினைப்பதற்கில்லை. எனவே இதில் ஒன்றும் உரிமைப் பிரச்சினை எழவில்லை. ஆகவே இதை இத்துடன் விட்டுவிட்டு திரு. சுந்தரராஜ் அவர்களை அவர்கள் கொடுத்துள்ள உரிமைமீறல் பிரச்சனையை கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[1981 ஜனவரி 29

ஆ. பேரவை உறுப்பினரை காவல் துறையினர் தாக்கிய தாக சொல்லப்படுகிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 245-ன் கீழ் கீழ்க்கண்ட உரிமைப் பிரச்னையை உங்கள் முன்னால் சமர்ப்பிக்கிறேன்.

சென்ற அக்டோபர் மாதம் 14 ஆம்தேதி அன்று தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. வி. இராஜசேகரன் அவர்கள், இராதாகிருஷ்ண நகர் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவர் அந்தப் பகுதியைச் சேர்ந்த பூங்காவனக்குப்பம், ஸ்ரீநிவாச நகர் பகுதியில் கடலரிப்பு ஏற்பட்டு குடிசைகள் அழிந்ததன் காரணமாக அந்தப் பகுதியைச் சேர்ந்த அதிகாரிகளைச் சந்தித்து, தன்னுடைய தொகுதியாகிய இராதாகிருஷ்ணநகர் தொகுதியில் கடலரிப்பு ஏற்பட்டு அதனால் குடிசைகள் அழிந்ததன் காரணமாக ஏற்பட்ட பிரச்சனைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் சந்தித்து நிவாரணம் காணவேண்டுமென்று அவர்கள் நடந்து செல்கையில் காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளால் தாக்கப்பட்டு பலத்த காயத்துடன் மருத்துவமனையில் 18 நாட்கள் சிகிச்சை பெறவேண்டிய நிலை ஏற்பட்டது. சட்டப் பேரவையில் அவர்கள் ஆற்றிய உரையின் எதிரொலி காரணமாக அவர்களைப் பழி வாங்க வேண்டும் என்ற தவறான, கெட்ட எண்ணத்தோடு அந்தப் பகுதி காவல் துறையினர் ஈடுபட்டுள்ளார்கள். ஆக, இன்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய கடமையை ஆற்றுகின்ற நேரத்தில் இந்த அவையில் பல்வேறு கருத்துக்களைப் பேசமுடியும். குறிப்பாக தன்னுடைய தொகுதியில் ஏற்பட்ட கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் வழங்க வேண்டும் என்ற மிக முக்கியமான கோரிக்கையை வலியுறுத்த அவர் அதிகாரிகளைச் சந்திக்கச் செல்கிறார். ஆனால் இங்கே இருக்கக்கூடிய அரசாங்கம் என்ன காரணத்தாலோ தெரியவில்லை, அவர்மீது காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டு அவரைப் பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அவரை காவல்துறைமூலமாக அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏ. ஸி. என்று சொல்லக்கூடிய ஒரு அதிகாரி மூலமாக — அவர் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை — சுமார் 500 காவல் துறையினரை அழைத்துக் கொண்டு சென்று, அவர் தடுக்கப்பட்டு தாக்கப்பட்ட நிலையில்தான மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருக்கிறார்.

ஆகவே நான் தெரிந்து கொள்ள விரும்புவது என்ன வென்றால், ஒரு சட்டமன்ற உறுப்பினர், அதுவும் எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினருக்கு முழுமையான பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அவர் தன் தொகுதி மக்களுக்கு ஆற்றவேண்டிய பணியினை முழுமையாக ஆற்று வதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை என்று சொன்னால் அவர் சமூகவிரோதச் செயலில் ஈடுபடவில்லை, அந்தப் பகுதி மக்களின் பிரச்னையைத்தான் எடுத்துச் செல்கிறார் — என்ன அர்த் தம் மக்கள் பிரச்னையை எடுத்துச் சொல்லும்போது அவர் தாக்கப்

1981 ஜனவரி 29] [திரு. நா. சுந்தரராஜ்]

பட்டார் என்று சொன்னால் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் தமிழகத்தில் உள்ள சாதாரண மக்களுக்குப் பாது காப்பு இல்லை, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

இதைவிட மிகக் கொடுமையானது சென்ற மாதம் 10-ம் தேதி தமிழகத்திற்கு வருகை தந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களைச் சந்திக்க இந்த அவையின் எதிர்க் கட்சித் தலைவர் செல்கிறார். அவர் தடுக்கப்படுகிறார் காவல் துறை அதிகாரியால். நான், ஏற்பட்ட சம்பவத்தைச் சொல்கிறேன், தமிழ்நாட்டிலுள்ள நிலைமையைத்தான் சொல் கிறேன். எதிர்க்கட்சித் தலைவர், கலைஞர் அவர்கள் தடுக்கப் படுகிறார். எதிர்க்கட்சியைச் சார்ந்த காங்கிரஸ் கட்சி உறுப் பினர் திரு. இராஜசேகரன் தாக்கப்படுகிறார் என்று சொன்னால் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்ன வென்றால் எதிர்க்கட்சிகள் செயல்படக்கூடாதா அல்லது அவர்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராஜசேகரன் சம்பவம் பற்றி மட்டும் சொல்லுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பற்றியும் சேர்த்துக்கொண்டு போக வேண்டாம். சப்ஜட்டுக்கு வாருங்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: ஆகவே, இந்த மிக முக்கியமான பிரச்னையை உரிமை மீறலாகக் கருதி உரிமைக் குழுவிற்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினை சம்பந்தமாக அரசு சார்பாக கீழ்க்கண்ட விவரங்களை உங்கள் மூலமாக இந்த மேலான சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

14-10-1980 அன்று மாலை 4-30 மணி அளவில், சட்டமன்ற உறுப்பினர் திரு இராஜசேகரன் மற்றும் சிவாஜி கணேசன் ரசிகர் மன்ற அமைப்பாளர்கள் சிலரும் சேர்ந்துகொண்டு, பூங்காவனக் குப்பம், ஸ்ரீநிவாச நகர் ஆகிய பகுதிகளில் கடல் அரிப்பினால் குடிசை இழந்ததாகக் கூறப்படும் சில குடிசை வாசிகளைத் தூண்டியதன் பேரில், அவர்கள் சென்னை சூரிய நாராயண செட்டித்தெருவின் மத்தியில் வாகனப் போக்கு வரத்து நடைபெறா வண்ணம் தடுக்கும் பொருட்டு, பனை மட்டை, குப்பைத் தொட்டிகள், மரக் கட்டைகள் போன்றவை களைச் சாலையின் குறுக்கே போட்டும், தற்காலிக குடிசைகள் அமைத்தும், சாலையினை வீட்டு மனை போன்ற பகுதிகளாகப் பிரித்து அவற்றில் பெயர்களை எழுதி வைத்தும், தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் வகையில் போராட்டம் நடத்தினார்கள்.

செய்தி அறிந்தவுடனே புது வண்ணாரப்பேட்டை காவல் துறை ஆய்வாளர் அவ்விடத்திற்கு விரைந்து, திரு. இராஜசேகரனிடம் கூட்டத்தினரைக் கலைந்து போகவும் சாலையின் குறுக்கே உள்ள தடைகளை அகற்றுமாறும் கூறும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் திரு. இராஜசேகரன் பிடிவாதமாக ஆய்வாளரின் வேண்டுகோளை நிராகரித்து விட்டார். அவருக்கு, சென்னை நகர காவல் சட்டத்தின் பிரிவு 41-ன்படி பிரகடனப் படுத்தப்பட்டுள்ள தடையுத்தரவு பற்றித் தெரிவித்தும்கூட அவர் இதுபற்றித் தனக்குத் தெரியும் என்றும், முதலமைச்சர், இதர அமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகியோர் அந்த இடத்திற்கு வந்து பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்பதே தன்னுடைய நோக்கம் என்று கூறியுள்ளார். எனவே, கூட்டத்தினரை நோக்கி கலைந்து சென்று' வாகனங்களுக்கு வழி விடுமாறு ஆய்வாளரே எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருந்தபோது, திரு. இராஜசேகரன் கூட்டத்தினரை நோக்கி காவல் துறையின் எச்சரிக்கைக்குச் செவிசாய்க்க வேண்டாமென்றும், காவலரை அங்கிருந்து விரட்டுமாறு தூண்டும் வகையிலும் உரக்கப் பேசினார். இதன் பிறகு அங்கு மேலும் மூன்று ஆய்வாளர்கள் வந்தனர். உடனே, திரு. இராஜசேகரன் சாலையின் குறுக்கே படுத்துக் கொண்டு, அங்கு போடப்பட்டிருந்த தடைகளை நீக்கவிடாமல், முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வரும்வரை தடைகளை நீக்க அனுமதிக்க முடியாது என்று கூறினார்.

திரு. இராஜசேகரனுடன் அவருடைய ஆதரவாளர்கள் 20 பேர் சாலையின் குறுக்கே அவருடன் படுத்துக்கொண்டு, காவலர்கள் தங்கள் கடமையைச் செய்யவிடாமல் தடுத்தனர், போதிய எச்சரிக்கை விடுத்த பின்னர், காவலர்கள் சாலையின் குறுக்கே உள்ள தடைகளை அகற்ற முனைந்தபோது, கூட்டத்தினர் சோடா புட்டிகள், கற்கள், கம்புகள், மரத் துண்டுகள் ஆகியவற்றைக் கொண்டு காவலர்களைத் தாக்க ஆரம்பித்தனர். இந்தச் சம்பவத்தில், 3 ஆய்வாளர்களும், இரண்டு காவலர்களும் திரு. இராஜசேகரன் மற்றும் அவரின் ஆதரவாளர்கள் இரண்டு பேரும் காயமுற்றனர். திரு. இராஜசேகரன் தொடர்ந்து சாலையின் குறுக்கே படுத்திருந்ததால், அவரைக் கைது செய்து எச். 1 காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். இச் சமயம், வன்முறைக் கூட்டத்தினரை காவல்துறையினர் சிறிது தூரம் துரத்திச் சென்றனர். செய்தி அறிந்து, வண்ணாரப்பேட்டை சட்டம் ஒழுங்கு பிரிவு உதவி காவல் துறை ஆணையர் தக்க காவல் படையுடன் சம்பவம் நடக்கும் இடத்திற்கு வருவதற்குள் திரு. இராஜசேகரன் கைது செய்யப்பட்டு, எச்.1 காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் உடனே உதவி காவல் துறை ஆணையர் தன்னுடைய காவல் படையினர் மூலம் அங்கே சாலையின் குறுக்கே இருந்த தடைகளை நீக்கி, போக்குவரத்து சீராகச் செல்ல வழி செய்தார்; மேலும் அசம்பாவிதம் ஏதும் நடக்காவண்ணம் தக்க காவல் பந்தோபஸ்து ஏற்பாடு செய்தார். இது சம்பந்தமாக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. காயமுற்ற 5 காவல் துறையினருடன், திரு. இராஜசேகரன் மற்றும் அவரது இரு

ஆதரவாளர்களும் சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர். மருத்துவ அதிகாரி அனைவருக்கும் 'புறநோயாளிகளாகச்' சிகிச்சை அளித்து அனுப்பினார். ஆனால் திரு. இராஜசேகரன் மட்டும் மருத்துவ அதிகாரியிடம் தன்னைமருத்துவ னையில், அக நோயாளியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் பேரில் அவ்வாறே அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார். பின்னர் திரு. இராஜசேகரனும் மற்ற இருவரும் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்

திரு. இராஜசேகரனைப் பரிசோதனை செய்த அரசு மருத்துவ அதிகாரி, அவரது உடலில் 6 அங்குலம் × 1 அங்குல அளவில் விலாவின் வலது பக்கத்தில் பரவலான வீக்கமும், மற்றும் ½ அங் × ½ அங். அளவில் விலாவின் பக்கம் ஓர் சிராய்ப்பும் இருந்ததென்று குறிப்பிட்டுள்ளார். மேற்கண்டவைகள் சொற்ப காயங்களே என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

திரு. இராஜசேகரன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட செய்தியறிந்து, சிவாஜி கணேசன் ரசிக மன்ற உறுப்பினர்கள். பல இடங்களில் உண்ணாவிரதம் மேற்கொண்டும், பொதுக் கூட்டங்களில் பேசியும், காவல் துறையினரின் நடவடிக்கைகளைத் தாக்கி அறிக்கை விடுத்தும் வண்ணாரப்பேட்டை உதவி காவல் துறை ஆணையர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் இளர்ச்சி செய்தனர்.

இச்சம்பவம் பற்றி, எச்-5 காவல் நிலைய குற்ற எண். 1525/80-ல் (இ.பி.கோ. 147, 148. 332, 337-யுடன் சேர்த்து 188) புலன் விசாரணை முடிவடையும் தருவாயில் உள்ளதென்றும், விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை குறித்து என்னுடைய தீர்ப்பு பின்னால் * வழங்கப்படும்.

திரு வெ இராஜசேகரன்: தலைவர் அவர்களே ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கூறியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ பேசினார்கள். நான் என்னுடைய தீர்ப்பைப் பின்னர் வழங்குவதாகக் கூறியிருக்கிறேன். ஆகவே, மேற்கொண்டு அதிலே எந்த விவாதமும் கூடாது.

திரு. உ. சுப்பிரமணியன்: சம்பந்தப்பட்ட உறுப்பினர் தன்னிலை விளக்கம் கூற அனுமதிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே தன்னிலை விளக்கம் கூற இடம் இல்லை. திரு. சுந்தரராஜ் உரிமை பிரச்சினையை கொண்டு வந்து பேசியதற்குப் பதிலாக திரு. இராஜசேகரன் அவர்களே பேசியிருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்கப் அகற்றப்பட்டது.

* 1981ம் ஆண்டு, மார்ச் மாதம் 5ம் தேதி தீர்ப்பு வழங்கப் பெற்றது.

[1981 ஜனவரி 29

திரு. என். எஸ். வி. சித்தன்: பாயின்ட் ஆப் ஆர்டர் இதிலே தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த பிரச்சினைக்குத் தாங்கள் செல்ல இருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது திரு. இராஜசேகரன் பற்றி மாறான சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதுபற்றி எடுத்துக் கூற மாண்புமிகு உறுப்பினர் ராஜசேகரன் அவர்களுக்கு இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்காவது அந்தப் பிரச்சினையைப் பற்றி எடுத்துக் கூற தாங்கள் வாய்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு உறுப்பினரும் பல்வேறு வகைகளில் தங்களுடைய பிரச்சினைகளைப் பேச வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு உறுப்பினர் பேசலாம்.

திரு. ப. பொன்னுரங்கம்: பாயின்ட் ஆப் ஆர்டர் ஒரு உறுப்பினர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதுபற்றி சபைக்கு ஏன் தகவல் தெரிவிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கைது செய்யப்பட்டு அன்றைக்கே விடுதலை செய்யப்பட்டு விட்டார்.

திரு. ப. பொன்னுரங்கம்: 316-வது விதியின்படி அவைக்கு அது பற்றி அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு உறுப்பினர் கைது செய்யப்பட்டு அன்றைக்கே ரிலீஸ் ஆகிவிட்டால் அதைப் பற்றி அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

(முற்பகல் 10.50)

திரு ரா. உமாநாத்: ஒரு உறுப்பினரை கைதுசெய்து அன்றே விடுதலை செய்தால்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Rule 316. As soon as May be the Speaker shall, after he has received a communication referred to in rule 316 or rule 315 read it out in the House if sitting or if the House is not sitting direct that it may be published in he Information sheet for the information of the members:

Provided that if the intimation of the release of a member, either on bail or by discharge on appeal received before the House has been informed of the original arrest, the fact of his arrest or his subsequent release or discharge may not be intimated to the House by the Speaker.

திரு. ப. பொன்னுரங்கம்: Either on bail or by discharge.....,

1981 ஜனவரி 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: May not be intimated to the House by the Speake
என்றுதான் இருக்கிறது.

இ. 'ரெட் சாண்டல்' மரம் குறித்த குற்றச்சாட்டுக்கு தவறான தகவல் கொடுத்ததாக வனத்துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவையின் 246-வது விதியின்கீழ் உறுப்பினர் திரு, ரகுமான்கான் அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். அதை அவர் பேரவையில் எழுப்ப அனுமதி அளிக்கிறேன்

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24-1-1981 அன்று இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் ரெட் சாண்டல் என்ற சிவப்பு சந்தன மரத்தை ஷெட்யூல் ஆப் டிம்பரிலிருந்து நீக்கி அதாவது ஒமிட் செய்து போட்ட உத்தரவு மூலம் ஊழல் நடைபெற்று இருக்கிறது என்று இந்த அவையில் குற்றம் சுமத்தினேன். அதையே மீண்டும் உறுதி செய்கிறேன். அதாவது சிவப்பு சந்தன மரத்தை ஷெட்யூல் டிம்பரிலிருந்து நீக்கி உத்தரவு போட்டதற்குக் காரணம் மத்திய அரசின் ஆணை கவர்மெண்ட் ஒப்பன் லைசென்ஸ் அடிப்படையில்தான் என்று இந்த மன்றத்தில் 27-1-1981 அன்று தன்னுடைய தன்னிலை விளக்கத்திலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பேரவைக் குறிப்பேட்டில் இருக்கிறது அவ்வளவு ஆத்திரம் என் மீது. என்மீது அவர்களுக்கு அவ்வளவு அக்கறை. ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் எதுவும் இல்லை. என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஷெட்யூல்ட் டிம்பர் என்ற பட்டியலில் இந்த செம்மரத்தைச் சேர்த்ததே இந்த அரசு தான். அதற்குப் பிறகு மத்திய அரசு ஒரு ஆணை பிறப்பிக்கிறது. இந்த செம்மரத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு எந்த அனுமதியும் தேவை இல்லை. ஓப்பன் ஜெனரல் லைசென்ஸின் கீழ் இந்த மூன்றாவது பிரிவில் கொண்டு வந்துவிட்டது. ஆகவே தமிழ்நாட்டில் விளையாத ஒரு மரத்தை தமிழ்நாட்டில் இல்லாத ஒரு மரத்தை, நாம் கட்டுப்பாடு செய்கிறோம். மத்திய அரசு ஏற்றுமதி செய்யலாம் என்று கிளியரன்ஸ் கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே அதற்குப் பிறகு பரிசீலனை செய்து முன்னால் இருக்கிற விதிகளே போதும்; நம்முடைய தமிழ்நாட்டிலே இல்லாத ஒரு மரத்தை ஷெட்யூல்ட் டிம்பரில் சேர்க்க வேண்டாம் என்று அரசாங்கம் அதிலேயிருந்து நீக்கியது. அந்த ஆணையைத்தான் அவர்கள் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் ஒன்றும் ரகசியம் இல்லை. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் நான் சொல்லவிரும்புகிறேன். உண்மைக்குப் புறம்பான தகவலை, சபைக்கு வேண்டுமென்றே தவறான தகவலை அவர்கள் தந்திருக்கிறார்கள். வியாபாரிகள், சங்கம் ரெட் சாண்டல்வுட் எக்ஸ்போர்ட்டர்ஸ் அசோசியேஷன் கொடுத்த ரெப்ரசன்டேஷன் பேரில்தான் ரெட் சாண்டல்லை ஷெட்யூல்ட் டிம்பரிலிருந்து எடுத்திருக்கிறார்கள்.

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஜனவரி 29

இதில் உள்ள ஜி. ஓ. வே. இதைத் தெளிவுபடுத்துகிறது இது அரசாங்கம் வெளியிட்ட ஜி ஓ. இந்த ஜி. ஓ. வில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால். நம்முடைய அமைச்சரவர்கள் 'ரெட் சேண்டர்ஸ்' என்பதை 'ஷெட்யூல்ட் டிம்பர்ஸ்,—இலிருந்து நீக்கியதற்குக் காரணம் மத்திய அரசு வழங்கிய 'ஓபன் ஜெனரல் லைசென்ஸ் என்ற அடிப்படையில்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது: இந்த உத்தரவு போடப்பட்டது, இது துவிர வேறு ஒன்றும் அல்ல என்று தன்னிலை விளக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் சார்பாகப் போடப்பட்ட உத்தரவு. 22-10-80, ஜீ. ஓ. நம்பர் 1374. இதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

The Red Sanders Association நம்முடைய சர்க்காரைச் சந்தித்து ஒரு மனு தருகிறது. அந்த மனுவிலே அவர்கள் கேட்டுக் கொண்டிருப்பதெல்லாம், Red Sanders may be deleted from the Scheduled of Timbers with retrospective effect. என்று அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். அந்த முதல் கோரிக்கை என்னவென்று கேட்டால் இந்த ரெட் சேன்டர்ஸ் என்ற சிகப்புச் சந்தன மரத்தை இந்த ஷெட்யூல் ஆப் டிம்பர் என்று இருக்கக்கூடிய லிஸ்டிலேயிருந்து எடுத்துவிட வேண்டும்: அதுவும் ரெட்ராஸ்பெக்டிவ் எப்பெக்ட் கொடுத்து எடுத்து விட வேண்டும் என்று கேட்கிறார்கள். அது நம்பர் ஒன்று.

அடுத்து அந்தச் சங்கத்தின் கோரிக்கை That the Forest officials be directed to drop further action to prosecute the exporters connected with the Japan export case என்பதாகவும் இந்த ஜி. ஓ. விலே அது சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது இந்த ரெட் சேன்டர்ஸ் மரங்கள் சென்னை ஹார்பருக்குக் கொண்டுவரப்பட்டு ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன; ஆகவே ஜப்பான் எக்ஸ்போர்ட் கேஸ் இருக்கிறது. அந்த ஜப்பான் எக்ஸ்போர்ட் கேஸ் சம்பந்தமாக பிராசிகியூட் எடுக்கவோ மற்ற கிரிமினல் நடவடிக்கை எடுக்கவோ கூடாது என்று ஃபாரஸ் அஃபீஷியல்ஸ்க்கு இந்தச் சர்க்கார் டைரக்ஷன் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோருகிறார்கள். இந்த இரண்டு கோரிக்கைகள் அடங்கிய மனுவை அரசாங்கம் பரிசீலித்திறது. அரசாங்கம் பரிசீலித்துவிட்டு என்ன உத்தரவு போடுகிறது என்று கேட்டால் அதுவும் இந்த ஜி. ஓ.விலே சொல்லப்பட்டிருக்கிறது.

The Government have examined the representation of the Association mentioned in Para 2 above. At present Origin Certificates are not insisted for exporters of Red Sanders as per the G.O. read above.

இப்படிப்பட்ட கோரிக்கைகளை, இந்தச் சங்கத்தார் கொடுத்த மனுவை இந்த அரசாங்கம் பரிசீலித்தது. அப்படிப் பரிசீலித்ததற்குப் பிறகு உத்தரவு. அமைச்சரவர்கள் சொல்லியதைப்போல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பொழுது இந்த ரெட் சேன்டர்ஸ் வெளியிலே போவதற்கு, ஏற்றுமதி

[1981 ஜனவரி 29] [திரு. அ. ரகுமான்கான்]

செய்யப்படுவதற்கு அனுமதி தாராளமாக இருந்தது. அதற்கு முன்பிருந்த ஆட்சியிலே தாராளமாக இருந்தது; அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகுதான் தமிழகத்திலே இல்லாத ரெட் சேன்டர்ஸ் மரம், இங்கே விளையாத ரெட் சேன்டர்ஸ் மரம் வெளியே போகக் கூடாது என்று கருதி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி போட்ட அந்த உத்தரவை மாற்றி, அதை ஷெட்யூல் ஆஃப் டிம்பர் என்ற லிஸ்டிலே இன்குலூட் பண்ணுகிறார்கள், அப்படி இன்குலூட் பண்ணிவிட்டால அதை விற்பனை செய்ய முடியாது: பர்சேஸ் செய்ய முடியாது; எக்ஸ்போர்ட் செய்ய முடியாது. அப்படி செய்தால் அது அந்த விதிகளுக்கு சட்டத்திற்குப் புறம்பானதாகும். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போட்டதை மாற்றி இந்த ஷெட்யூலிலே இன்குலூட் பண்ணியதே அ. தி. மு. க. ஆட்சிதான். இது நம்பர் ஒன்.

நம்பர் 2 என்னவென்றால் இந்த 'ஆர்ஜின் சர்டிபிகேட், இந்த சந்தன மரங்கள், அதாவது சிகப்பு சந்தன மரங்கள் எங்கேயிருந்து கொண்டு வரப்பட்டன. கட்டிங் பர்மிட் வாங்கித்தான் கொண்டு வரப்பட்டதா? கள்ளத்தனமாகக் கொண்டுவரப்பட்டதா என்ற விவரங்களெல்லாம் தெரியாத ஆர்ஜின் சர்டிபிகேட் அவசியமில்லை என்றும் உத்தரவு போடுகிறது. இவ்வளவுக்கும் பிறகுதான் கடைசியாக கவர்னருடைய ஆட்சி வருகிறது.

கவர்னர் ஆட்சியின் பொழுதுதான் நம்முடைய அமைச்சர் கொடுத்து இருக்கக்கூடிய தகவலின்படி அந்த மரங்கள் கப்பலில் ஏற்றப்பட்டு ஜப்பானுக்கு அனுப்பப்படுகிறது, அவர்கள் வழக்குக்குப் போகிறார்கள். ஆந்திர சர்க்காரும், தமிழ்நாடு சர்க்காரும் ரிட் அப்பீல் போடுகிறது. வழக்கு பெண்டிங்கில் இருக்கிறது. கப்பல் ஜப்பானுக்குப் போய்விடுகிறது; சரக்கும் இறங்கிவிடுகிறது. இப்பொழுதும் அந்த வழக்கு இருக்கிறது. அதுவும் இல்லாமல் இப்பொழுது ஒரு கிரிமினல் வழக்குகூட பெண்டிங்காக இருப்பதாக எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சொல்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இந்த ஓபன் ஜெனரல் லைசென்ஸ், மத்திய சர்க்கார் கொடுத்ததே அந்த அடிப்படையிலா என்றால் அந்த அடிப்படையில் அல்ல; இந்த உத்தரவிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

The Government have examined the representation of the Association mentioned in para 2 above. At present Origin Certificates are not insisted for Export of Red Sanders Wood as per the G.O. read above. The Government consider that the inclusion of Red Sanders wood in the Schedule of Valuable timbers is leading to unnecessary difficulties as represented by the Association. The Government have accordingly decided to omit Red Sanders from the Schedule of Timbers.

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஜனவரி 29

[முற்பகல் 11.00]

ஆகையினாலே, இந்த Schedule of Timbers லிருந்து, இந்த 'ரெட் சான்டர்ஸ்' மரத்தை ஏன் எடுக்கிறோம் என்று சொன்னால் வியாபாரிகள் கோரிக்கை வைக்கிறார்கள். வியாபாரிகளின் கோரிக்கைக்கிணங்கத்தான் அதை எடுக்கிறோம் என்று போடப்பட்டிருக்கிறதே தவிர, அதிலே மத்திய சர்க்காரின் ஆணை குறிப்பிடப்படவில்லை.

Open General Licence குறிப்பிடப்படவில்லை. அது குறிப்பிடப்படாமல், வியாபாரிகளுடைய சங்கத்தினுடைய கோரிக்கையை ஏற்றுத்தான் இந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்பதிலேதான் ஊழல் நடந்திருப்பதாக நான் பகிங்கரமாகக் குற்றம் சுமத்துகிறேன். அது சம்பந்தமான பல ரெக்கார்டுகள் தேவைப்படுகிறது. இங்கே உள்ள எல்லாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களை ஒரு குழுவாகப் போட்டு, அந்த ரெக்கார்டுகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கிடையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள், அவருடைய தன்னிலை விளக்கத்திலே. ரெட் சேன்டர்ஸ் மரம் தமிழ்நாட்டிலே விளையாத மரம் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய பேச்சைத் தயவு செய்து மறுபடியும் அவர்கள் படித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்தான் மிக ஜாக்கிரதையாக நான் பேசியிருக்கிறேன். ரெட் சேன்டர்ஸ் மரங்கள் வெட்டப்பட்டு, வனச்சட்டத்திற்கு விரோதமாக கப்பலில் ஏற்றப்படுகிறது. ஜப்பானுக்குக் கப்பல் மூலம் ஏற்றப்படுகிறது.

அது எங்கே வெட்டப்படுகிறது? எப்பொழுது வெட்டப்பட்டது? யாராலே வெட்டப்பட்டது? எப்படி வெட்டப்பட்டது என்ற தகவல்களை நான் தெரிவிக்கவில்லை. எனவே ரெட் சான்டர்ஸ் மரம் வெட்டப்பட்டது ஆந்திராவில் இருக்கலாம், பீகாரில் இருக்கலாம், எங்கே வேண்டுமானாலும் இருக்கலாம், என்னுடைய பிரச்சினை எங்கே இருக்கிறது என்று கேட்டால், ஜப்பானுக்குக் கப்பலில் சரக்கு போய்விட்டது, தமிழ் நாட்டிலிருந்து அது சம்பந்தமாக அந்த Schedule of Timbers லே அந்த ரெட் சேன்டர்ஸ் மரத்தை ஒமிட் பண்ணிய உத்திரவிலேதான் நான் சொன்ன ஊழல் பிரச்னை அடங்கியிருக்கிறதே தவிர ரெட் சேன்டர்ஸ் பற்றி ரிஷி முலம், நதி முலத்திற்கு நான் போகவில்லை. அதை நான் சொல்லவும் இல்லை.

அதைப்போலவே என்னுடைய சட்ட அறிவைப் பற்றி அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சர்க்காரிடத்திலே கட்டிங் பர்மிட் வாங்கித்தான் மரங்கள் வெட்டப்பட முடியும். ஆனால், அதே நேரத்திலே ஒரு ஷெட்யூலிலே அந்த மரம் சேல் பண்ணக் கூடாது, பர்சேஸ் பண்ணக் கூடாது, எக்ஸ்போர்ட் பண்ணக் கூடாது. என்று சொல்லிவிட்டால் அது வெட்டப்படக் கூடாது என்பதுதான் அதன் பொருள். வேண்டுமானால் அது லீகல் லாங்க்

[1981 ஜனவரி 29] [திரு. அ. ரகுமான்கான்]

வாஜாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் common parlance அதுதான் அர்த்தம் ஆகவே, நான் கடைசியாகச் சொல்வது என்னவென்றால், ஏற்கனவே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உத்தரவு போட்டது. அந்த உத்தரவுப்படி ரெட் சேன்டர்ஸ், ஷெட்யூலில் இணைக்கப்பட்டது. அப்படி இணைக்கப்பட்டதால்தான் அந்த வழக்குகள் எல்லாம். அப்படி இணைக்கப்பட்டதால்தான் அதிகாரிகள் நடவடிக்கைகள் எல்லாம். எந்த அகில இந்திய அண்ணா தி. மு. க. சர்க்கார் அப்படி அந்த ரெட் சேன்டர்ஸ் மரத்தை ஷெட்யூலில் இணைத்து உத்தரவு போட்டதோ, அதே சர்க்கார் இப்பொழுது Schedule of Timbers லிருந்து அந்த மரத்தை எடுத்து விட்டதாலே அந்த வழக்குகள் தானாகவே காலாவதியாகிவிடும். அந்த வழக்குகளுக்கு வேலை இல்லை. ஆகையினாலே இதிலே மிகப் பயங்கரமான ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று நான் தெரிவித்திருக்கிறேன். இது உரிமை மீறிய பிரச்னை. நம்முடைய அமைச்சர் குறிப்பாக சொல்லியிருக்கிற ஒரு முக்கியமான பிரச்னை, Open General Licence அடிப்படையில்தான் போடப்பட்டது என்பது. அது தவறான தகவல். இந்த உத்தரவின்படி வியாபாரிகள் சங்கக் கோரிக்கையின் அடிப்படையில்தான் போடப்பட்டிருக்கிறது. எனவே அது வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு சபையைத் திசை திருப்புகிற நோக்கத்தோடு போடப்பட்டது. அதைத் தாங்கள் விசாரித்து உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். மாண்புமிகு செய்தி அரசு நிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது தெரிவிக்க விரும்பினால் தெரிவிக்கலாம்.

* மாண்புமிகு திரு ஆர் எம். வீரப்பன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் 24 ஆம் தேதி அன்று பேரவையில் செம்மர ஏற்றுமதி சம்பந்தமாக 3 குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, பொதுவாகப் பேசி அது பத்திரிகைகளிலே வந்தது. நான் அன்றைக்கு அவையிலே இல்லாத காரணத்தினால் அதைப் பரிசீலனை செய்து, 27 ஆம் தேதி அன்று தன்னிலை விளக்கமாக அந்த 3 குற்றச்சாட்டுகளை மறுத்து நானும் பொதுவாகத்தான் பேசினேன். 3 குற்றச்சாட்டுகள். அதை இப்பொழுது ஜாக்கிரதையாக அளந்து வார்த்தைகளைச் சொல்லி இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறாரே அதைப் போல் தமிழ் நாட்டு காடுகளிலிருந்து என்று நான் சொல்லவில்லை. காடுகளிலிருந்து வெட்டப்பட்டதற்கு அனுமதி வழங்கப்பட்டது, ரூ. 60 இலட்சம் பெறுமானமுள்ள செம்மரம் என்பது குற்றச்சாட்டு. என்றும் சொல்லியிருக்கிறார்.

அதைத்தான் நான் தமிழ்நாட்டிலே பரவலாக இல்லாத ஒரு மரம். அது ஆந்திராவிலேதான் இருக்கிறது, வெட்டுவதற்கு என்று அனுமதி எப்போதும் கொடுக்கப்படவில்லை என்று மறுத்தேன். இரண்டாவது, மார்ச், ஏப்ரல் மாதங்களிலே

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1981 ஜனவரி 29

ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டபோது போடப்பட்ட வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் வழக்குப் போடவும் இல்லை, அது வாபஸ் பெறப்படவும் இல்லை. என்று வலியுறுத்திச் சொல்லி அது எப்படி வழக்குமன்றத்திற்குப் போனது, எப்படி நிலுவையிலே இருக்கிறது என்பதையும் நான் மறுத்து இருக்கிறேன்.

மூன்றாவது, ஏதோ ஒரு அரசு ஆணையைக், குறிப்பிட்டு அதிலே ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு. அதுவும் இல்லை. ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் இல்லை அல்லது முன்தேதியிலே அமலுக்கு வருகிற மாதிரி எந்த ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. ஆகவே எந்த வழக்கையும் அது பாதிக்காது. அதுவும் தவறான தகவல் என்கின்ற மூன்று அடைப்படைக் குற்றச்சாட்டுக்களை அவர் அன்றைக்குப் பொதுவாகச் சொன்னார்கள். நானும் அந்த மூன்று குற்றச்சாட்டுக்களை மறுத்து அன்றைக்கும் நான் பொதுவாகத்தான் பேசினேன். ஆனால் இப்போது நான் தந்த தகவல் சபைக்குத் தவறான தகவல் என்றும், திட்டமிட்டு சபையினுடைய கவனத்தைத் திசை திருப்புவதற்காகத் தரப்பட்டது என்றும், ஆகவே இந்த அவையின் உரிமையை மீறி இருக்கிறேன் என்றும் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை கொண்டு வந்ததன் மூலம், நான் அன்றைக்குப் பொதுவாகப் பேசியதிலே இருந்து, ஏதாவது சில மாற்றங்களை, திருத்தங்கள் இருந்தால் கூட அதைத் தொடர்பு படுத்தி—அவர் எடுத்துக் காட்டினாரே ஆணை—அந்த ஆணையில் இருந்த விவரங்களை எல்லாம் தெளிவாக சொல்லி, ஒரு அரசாங்கம் எடுத்த முடிவு என்பதற்குப் பின்னாலே எந்தவிதமான வேறு நோக்கமும் கிடையாது. இந்த சபைக்குத் தவறான தகவலைத் தரவேண்டும் என்கிற திட்டமிட்ட நோக்கமும் கிடையாது அல்லது எந்தவிதமான ஊழலும் நடைபெறவில்லை என்பதை ஒழுங்குபடுத்திச் சொல்கிற வாய்ப்பை அவர்கள் ஏற்படுத்திக் தந்ததற்காக நான் முதலிலே அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் உங்களிடத்திலே தந்திருக்கிற அந்த உரிமை மீறல் பிரச்சினையில் வரிசையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது பேசுகிற போது அதைக் குறிப்பிடாமல் முன்னேயும், பின்னேயும் பேசி இருக்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக நேற்று அவர்கள் அதை உங்களிடத்திலே கொடுத்துவிட்டு, உடனே அதை சைக்ளோஸ்டைல் செய்து வெளியே தந்துவிட்ட காரணத்தாலே, அந்தக் காப்பி ஒன்று என்னிடத்திலே கிடைத்தது. அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நல்லவேளை என்னிடத்திலே அந்தப் பிரதி கிடைத்ததால் எப்படிக் கொடுக்கலாம் என்ற அந்த நடவடிக்கைக்கு உள்ளே நுழையவில்லை அதை வைத்துக் கொண்டு ரகுமான்கான் அவர்கள் எப்படி நான் தவறாக இந்தச் சபையை திசை திருப்புகிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள் என்கின்ற வகையிலே, துவக்கத்திலே இருந்து நான் வரிசையாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வாய்ப்பைத் தந்ததற்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

[1981 ஜனவரி 29] [திரு. ஆர். எம். வீரப்பன்]

முதலிலே ரெட் சான்டர்ஸ் மரம் ஏற்றுமதி வியாபாரம் அனுமதிக்கப்பட்ட ஒன்றாக இருந்து வந்தது என்றும் அதனைக் கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வருவதற்காக 10—9—1979 அன்று திருத்தச் சட்டம் கொண்டு வந்து, ரெட் சான்டர்ஸ் மரத்தை செட்யூலிலே சேர்க்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் குறிப்பிட்டுள்ளார். அதற்குப் பதில்.

27—3—1979 ஆம் நாள், சட்டமன்றத்திலே அறிமுகப் படுத்தப்பட்டது. அதற்கு முன்னாலே இது அவசரச் சட்டமாக பிறப்பிக்கப்படவேண்டும் என்று ஜனவரியிலேயே இந்த முயற்சியை எடுத்தோம். ஆனால் அதற்குள்ளே சட்டமன்றம் கூடி விட்டகாரணத்தினால் 27—3—1979 ஆம் நாள் சட்டமன்றத்திலே அறிமுகப்படுத்தப்பட்டு, நிறைவேறி 10—9—979 அன்று அமலுக்கு வந்து, தமிழ்நாடு வன திருத்தச் சட்டத்தின்படி முதல் முறையாக 6 விலையுர்ந்த மரங்கள் அடங்கிய ஒரு பட்டியல்-ஷெட்யூல் உருவாக்கப்பட்டது. அதுவும் இந்தியாவிலேயே தமிழகத்திலே மட்டும்தான் இது உருவாக்கப் பட்டது. இந்த செம்மரம் வளர்கிற ஆந்திராவிலே கூட இல்லை, இந்தப் பட்டியல் சேர்க்கப்பட்டதன் முக்கிய நோக்கம் தமிழ் நாட்டின் காடுகளிலே இருக்கிற மரங்கள் பாதுகாக்கப்படவும் தமிழ்நாட்டுக் காடுகளிலே இருந்து மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்படுவதைத் தடுக்கவும் வனச் சட்டத்திற்கு விரோதமாக நடைபெறும் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தப் பட்டியல் இந்த சட்டதிருத்தத்தில் சேர்க்கப்பட்டது. ஏற்கனவே வனச் சட்டம் இருக்கிறது. இதிலே பல சட்ட விதிகள் இருக்கின்றன. தண்டனை முறைகள் இருக்கின்றன. இதிலே குறிப்பிட்ட 6 மரங்கள் விலை உயர்ந்த மரங்கள் என்று குறிப்பிட்டு, அதில் பல நேரங்களிலே சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. களவுகள் நிறுத்தப்படவில்லை என்று நம்முடைய காடுகளுக் குள்ளே இருக்கின்ற மரங்களுக்காக, அந்தச் சட்டம், இந்த மாநிலத்திற்கு உள்ளேயே பயன்படுத்தி கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டம். எந்த மரத்தின் ஏற்றுமதியையும் தடுக்கவோ

[முற்பகல் 11-10]

நிறுத்தவோ இந்தப் பட்டியல் இந்தச் சட்டத்திருத்தத்தில் ஏற்படுத்தப்படவில்லை. காரணம், ஏற்றுமதி செய்வதற்கான சட்டங்களைச் செய்து ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் உள்ளது. எனவே, மாண்புமிகு ரகுமான்கான் கூறுகிற முதல் தகவல் தவறானதாகும்.

அடுத்தபடியாக, மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் 30—[illegible]—1980 அன்று ஆரிஜின் சர்டிபிகேட் தேவையில்லை என்று உத்தரவு போடப்பட்டு இருக்கிறது என்றும், அப்படி உத்தரவு போட்ட அமைச்சர், தான் போட்ட உத்தரவுப்படி—தான் கவர்னர் ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று எப்படி பெருமைப்பட்டுகொள்கிறார் என்று கூறுகிறார். 10—9—979 ஆம் நாள் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த உடனேயே தமிழ் நாடு செம்மரம் ஏற்றுமதியாளர்கள் சங்கம்

இது சம்பந்தமான இடையூறுகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து மத்திய அரசு வெளியிட்ட 10—1—1978-ம் நாள் ஆணையின்படி எந்தக் கட்டுப்பாடும் இன்றி செம்மரத்தை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று பிறப்பித்து இருக்கிற ஆணையைச் சுட்டிக்காட்டியும், சென்னைத் துறைமுகத்தைத் தவிர மற்ற எல்லாத் துறைமுகங்களிலும் ஏற்றுமதி செய்ய எவ்விதத் தடையும் இல்லை என்பதையும், புதிய திருத்தச் சட்ட நடைமுறைகளினால் தமிழ்நாட்டில் தங்களுக்கு ஏற்படுகின்ற பாதகங்களையும், இதனால் வெளிநாட்டுச் செலவாணி வருமான நஷ்டத்தையும் குறிப்பிட்டுக் காட்டியதால் அரசு 30—1—1980-ல் செம்மரம் ஏற்றுமதி செய்யும்போது ஆரிஜின் சர்ட்டிபிகேட் தேவையில்லை என்ற மத்திய அரசின் முடிவைக் கருத்தில் கொண்டு, ஆணையை வெளியிட்டது. ஆனால், அந்த ஆணையில் ஏற்றுமதி செய்ய ஆரிஜின் சர்ட்டிபிகேட் தேவையில்லை என்றாலும் கூட தமிழ்நாடு டிம்பர் டிரான்சிட் ரூல் 1968-ன்படி ஒரு ஏக்கரிலோவிற்கு மேல் செம்மரம் வைத்து இருக்கக்கூடாது. செம்மரம் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல பர்மிட் வேண்டுமென்று விதிகளில் உள்ள ஆணைகள் பின்பற்றப்படவேண்டும் என்றும், செம்மரம் தவறான முறையில் செல்வதைத் தடுப்பதற்காக இந்த விதிகள் போது மானது என்றும் இந்த விதிகளைத் தவறாது பின்பற்ற வேண்டும் என்றும், வனத்துறை தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது. அதே நேரத்தில் திருத்தப்பட்ட வனச் சட்டத்தின்படி பட்டியலில் இந்தச் செம்மரம் சேர்க்கப்பட்டதும் அமலில் இருந்தது.

மூன்றாவதாக, மாண்புமிகு உறுப்பினர் இப்போது நீதி மன்றத்தில் இருக்கிற செம்மரம் ஏற்றுமதி வழக்கைக் குறிப்பிட்டு ஆளுநர் ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு அமைச்சர் எப்படி பொறுமைப்பட்டுக்கொள்ள முடியும் என்று கேட்கிறார். ஆளுநர்ஆட்சியில் புதிதாக எந்தத் தடைச்சட்டமும் வனத் துறை சம்பந்தமாகவோ இந்தச் செம்மரம் சம்பந்தமாகவோ கொண்டு வரவில்லை என்பதால் முன்பு இருந்த சட்டங்களின் படியும், திருத்தப்பட்ட சட்டத்தின் படியும் தான் வனத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான்காவதாக, கவர்னர் ஆட்சியில் ரெட்சேன்டர்ஸ் ஏற்றுமதி தடுக்கப்பட்டது. அந்த ஆணையை எதிர்த்துதான் ஏற்றுமதியாளர்கள் 'ஸ்டே' தடை உத்தரவு பெற்று இருக்கிறார்கள் என்று கூறி இருக்கிறார்கள். இதுவும் ஒரு தவறான தகவலாகும். கவர்னர் ஆட்சியின்போது ரெட் சேன்டர்ஸ் ஏற்றுமதியைத் தடை செய்து எந்த ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை என்பதையும், அதை எதிர்த்து ஏற்று மதியாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடந்த விவரம் இதுதான். 13-3-80-ம் நாளன்று ஆந்திரா வனத்துறை அதிகாரி, நமது தமிழ்நாட்டு வனத்துறை அதிகாரிக்கு ஆந்திராவிலிருந்து கடத்தப்பட்டதாக கருதப்படும் செம்மரங்கள் சென்னையில் கப்பலில் ஏற்றப்பட இருக்கிற விவரத்தைத் தெரிவித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதைத் தொடர்ந்து நமது மாநில வனத் துறை அதிகாரிகள் நடைமுறையில் உள்ள சட்டங்களின்படி ஏற்றுமதியாளர்களுக்கு காரணம் காட்டும் நோட்டீஸ் கொடுத்தார்கள். அதைக் கண்டு, ஏற்றுமதியாளர்கள் அதிகாரிகளின் நடவடிக்கைக்குத் தடை போட வேண்டும் என்றும், ஜப்பானில் செம்மரத்தை இறக்க அனுமதிக்க வேண்டும் என்றும், உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அனுமதி பெற்றார்கள். அதைத் தொடர்ந்து கப்பல் ஏற்றுமதி நிறுவனமும் உயர்நீதி மன்றத்தில் வனத்துறை அதிகாரிகளின் நடவடிக்கைக்கு எதிராக ஒரு ஆணையை பெற்றுவிட்டார்கள். அந்த உத்தரவுகளை எதிர்த்து அரசாங்கம் ரிட் அப்பீல் செய்தது. இதை—எந்த அரசாங்கம் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டு இருக்கிறார். அரசாங்கம் என்றால் அந்த நேரத்தில் அதிகாரத்தில் இருந்த அரசாங்கம் என்றுதான் பொருள். இதற்கிடையில் கப்பல் ஜப்பான் போய்சேர்ந்து விட்டது. ஜப்பானில் உள்ள விலை கொடுத்து மரத்தை வாங்கிய இறக்குமதியாளர்கள் ஜப்பான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து தாங்கள் விலை கொடுத்து வாங்கிய மரங்களை இறக்கிக்கொள்ளும் உரிமை பெற்ற மரங்களை இறக்கிக்கொண்டனர். இதற்குப் பிறகும் உயர்நீதிமன்றத்தில் ஏற்றுமதியாளர்கள் போட்ட ரிட் வழக்கு இன்று வரையில் நிறுவையில் உள்ளது. எனவே 27—1—81-ம் நாள் இந்தப் பேரவையின் நான் தெரிவித்தப்படி, அரசு எந்த வழக்கையும் வாபஸ் வாங்கவில்லை.

ஐந்தாவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசின் உத்தரவு அடிப்படையில்தான் 'ரெட் சான்டல்' ஷெட்யூலிலிருந்து நீக்கப்பட்டதாக இந்த அவையில் அமைச்சர் கூறிய தகவல் உண்மைக்கு மாறான தகவலாகும் என்று குறிப்பிட்டார்கள். 22—10—80-ம் நாளிட்ட அரசாணையில் மத்திய அரசு தெரிவித்துள்ளபடி என்றோ, மத்திய அரசு ஆணைக்கிணங்க என்றோ ரெட் சான்டல் மரத்தை ஷெட்யூலிலிருந்து நீக்கினோம் என்று எந்த இடத்திலேயும் கூறப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அதைத்தான் இப்போது பேசுகிறபோதும் 22—10—80-ந் தேதி செம்மரத்தை பட்டியலிலிருந்து நீக்கிய அரசு ஆணை வெளியிட்டபோது 30—1—80-ம் தேதியில் வெளியிடப்பட்ட அரசு ஆணையும் அதில் குறிப்பிடப் பட்டுக்கிறது.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் எழும் விரும்புவது கேள்வியோ, குற்றச்சாட்டோ அல்ல; விளக்கம்தான் கேட்க விரும்புகிறேன். 10—9—79 அன்று திருத்தச்சட்டம் கொண்டுவந்து ரெட் சான்டல் போன்ற மரங்களை ஷெட்யூலில்

[டாக்டர் மு. கருணாநிதி] [1981 ஜனவரி 29

சேர்ப்பதற்காக சட்டமன்றத்தினுடைய அனுமதி பெற்று, நிறைவேற்றியதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் ஷெட்யூலிலிருந்து ரெட் சான்டல் மரத்தை நீக்குவதற்கு 22—10—80-ல் உத்தரவு போட்டதாக சொல்கிறார். அதற்கு சட்டமன்றத்தினுடைய அனுமதி கோரப்பட்டதா, அது ஆக்டாக ஆக்கப்பட்டதா என்பதற்கு விளக்கம் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படிச் சந்தேகங்களை எழுப்பி, விடைகளைத் தெரிந்து கொண்டால் பிரச்சனையே வராது. ஷெட்யூலிலே எந்த மரங்களைச் சேர்க்கலாம் அல்லது நீக்கலாம் என்பதற்கான அதிகாரத்தை அந்தச் சட்டம் அரசாங்கத்திற்கு அளித்து, விதிருக்கிறது. ஆகவே எப்போது தேவையோ அப்போது சேர்க்கிறோம்; எப்போது தேவையில்லையோ அப்போது நீக்குகிறோம். ஆக அரசாங்கத்திற்கு இந்தச் சட்டமன்றம் அளித்திருக்கிற சட்டத் திருத்தத்தின்படி கிடைத்திருக்கிற உரிமையாகும். இப்படிச் சந்தேகம் கேட்டு, தெரிந்துகொண்டால் பிரச்சனையே இல்லை. குற்றச்சாட்டு என்று வருகிறபோதுதான் அவையினுடைய நேரத்தை நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

22—10—80-ல் செம்மரத்தை பட்டியலிலிருந்து நீக்கி அரசு ஆணை வெளியிடப்பட்டதோடு 30-1-81ஆம் தேதி வெளியிட்ட அரசாணையும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது, மாண்புமிகு தலைவரவர்களே, இரண்டு அரசு ஆணைகளையும் நீங்கள் கூர்ந்து படித்துப் பார்க்க வேண்டும். அந்த 30-1-81ஆம் நாள் வெளியிட்ட ஆணையில் மத்திய அரசு ஆணைபற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் இந்தச் செம்மரம் தமிழ்நாட்டு காடுகளில் பரவலாக விளையாதபொருள் என்ற காரணத்தாலும் தமிழ்நாடு மரங்கள் பாதுகாப்பு விதி 1968-ல் உள்ள விதிகளே போதுமானது என்றாலும் பட்டியலில் இருக்க அவசியம் இல்லை என்று கருதி, பட்டியலிலிருந்து நீக்கிவிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 22-10-80-ல் வெளியிடப்பட்ட ஆணை 30-1-80-ம் தேதிய ஆணையின் தொடர்ச்சியே என்று குறிப்பிட்டு விரும்புகிறேன்.

அரசாணை ஒன்றை வெளியிடுகிறபோது முன்னால் உள்ள ஒரு ஆணையை ரெஃபர் செய்தாலும் அதன் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்றுதான் பொருள். இது சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து எடுக்கப்பட்டு வருகிற தொடர் நடவடிக்கை என்பதைக் குறிக்கும். அதனால்தான் 22—10—80 வெளியிடப்பட்ட ஆணையில் மேலேயும் குறிப்பிடப்பட்டிருக்கிறது; கீழே பாராவிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த ஆணையிலே எப்பொருள் காரணம் சொல்லப்பட்டதோ அந்தக் காரணங்கள் இந்த ஆணைக்கும் பொருந்தும் என்பதுதான் அதனுடைய பொருள்.

நான் 27-1-81—ம் நாள் அவையில் பேசும்போது செம்மரத்தை ஷெட்யூலிலே சேர்த்ததிலிருந்து நடைபெற்ற விவரங்களைக் கூறி, அதன் தொடர்பாக மத்திய அரசு ஆணையை

[1981 ஜனவரி 29] [திரு. ஆர். எம். வீரப்பன்]

யும் கூறி, தமிழநாட்டில் பரவலாக செம்மரம் விளையாத நிலையையும் கூறி, நீண்ட பரிசீலனைக்குப் பிறகு அரசு செம்மரத்தைப் பட்டியலிலிருந்து நீக்கியதற்கான காரணத்தையும் கூறினேன். ஆனால் ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து நீக்கிவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது ஆதாரமற்றது என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான் 22-10-80-ம் நாள் ஆணையைப்பற்றி குறிப்பிட்டேன்.

6-தாக மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஷெட்யூலில் ரெட் சான்டல் சேர்க்கப்பட்டதால் ஏற்றுமதியாளர்களின் நடவடிக்கையும் வழக்கும் இருப்பதாகவும், ஷெட்யூலிலிருந்து நீக்கப்பட்டதால் அந்த வழக்கும் நடவடிக்கையும் தானாக வாபசாகிவிட்டது என்றுதான் அதன் அர்த்தம் என்று இப்போது குறிப்பிட்டிருகிறார். அன்று சொன்ன குற்றச்சாட்டு வழக்கு வாபஸ் ஆகிவிட்டது என்பது. ஆனால் 22-10-80-ம் நாள் அரசாணையில் பட்டியலில் இருந்து செம்மரம் நீக்கப்பட்டிருந்தாலும் இந்த ஏற்றுமதி சம்பவம் நடந்தபோது செம்மரம் பட்டியலில் இருந்ததால் அந்தத் திருத்தச் சட்டத்தின்படி என்ன நடவடிக்கை எடுக்கமுடியுமோ அதுதான் தொடர்ந்து எடுக்கப்படும், அரசியல் அமைப்புச் சட்டம் 20 (1)-ம் பிரிவின்கீழ் குற்றம் நடந்த போது அமலில் இருந்த சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.20]

இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள், அரசாணையைப் பற்றி அவர்கள் பொதுவாகக் குறிப்பிட்டார்கள். நானும் பொதுவாகக் குறிப்பிட்டேன். ஆகவே அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டுக்களுக்கு அவர்கள் போதிய விளக்கம் தரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்கு திடீரென்று வாபஸ் பெறப்பட்டது என்ற தவறான தகவலைத் தெரிவித்தது. எந்த வழக்கும் வாபஸ் பெறப்படவில்லை என்பது நிரூபிக்கப்பட்ட பின்பு செம்மரத்தைப் பட்டியலிலே இருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்டுடன் கொடுத்து நீக்கியதாக தவறான விவரத்தைக் கூறி அதுவும் ஆதாரமற்றது என்று நிரூபிக்கப்பட்டதற்குப் பிறகு செம்மரத்தைப் பட்டியலிலே இருந்து நீக்கியது வாபஸ் பெற்ற மாதிரிதான் என்று இப்போது ஒரு புது கருத்தைக் கூறுகிறார். இது அவருடைய சொந்தக் கருத்து. எனவே இந்த அவைக்கு தவறான தகவலைத் தரவில்லை என்பதையும் அப்படிப்பட்ட எண்ணமே எனக்கு இல்லை என்பதையும் கூறி என்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றது என்பதை பொதுவாக விளக்கினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், இந்த விளக்கத்தை உங்கள் முன்னாலே வைத்து இந்த அவையை மீற வேண்டும் என்ற

என்னமே எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே குற்றச்சாட்டோ, ஊழலோ இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் அந்த ஆணையினுடைய ஒரு பகுதியைப் படித்தார். ஆகவே அதை மாத்திரம் விளக்கிவிடுகிறேன்.

அரசாங்க ஆணையிலே இரண்டு பகுதிகள் உண்டு. அதிலே ஒன்று ரெபர் பண்ணி வருகின்ற பகுதிகள், அதாவது இந்த உத்தரவு எதற்காகப் பிறப்பிக்கப்படுகிறது என்பது. அந்த வகையிலே ஏற்றுமதியாளர்கள் கொடுத்த விண்ணப்பத்தின் ஒரு பகுதியை அதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். எல்லாக் காரணங்களும் அதிலே குறிப்பிடப்படவில்லை. ஆப்பரேட்டிங் போர்ஷன் என்பது தான் ஆணையின் முக்கிய பகுதி அதிலே இருப்பதைத்தான் அரசாங்கம் விதித்த உத்தரவு என்று சொல்ல வேண்டும். அதுதான் கெசட்டிலே பப்ளிகேஷன் ஆகின்றது. நம்முடைய உறுப்பினர் அவர்கள் அந்த ஏற்றுமதியாளர் சங்கம் கொடுத்த பகுதியை, அதாவது அங்கே ரெப்பர் செய்திருக்கின்ற பகுதியைப் படித்துக் காட்டினார். கேட்கிறவர்கள் ஆயிரத்தைக் கேட்பார்கள், ஆனால் அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா என்பது தான் நாம் பரிசீலிக்க வேண்டிய முக்கியமான கடமையாகும். அரசாங்கம் அவைகளை ஏற்றுக்கொள்ளவே இல்லை. இந்த வழக்கும் பாதிக்காது. இந்த வழக்கின் நடவடிக்கைகள் அப்படியே இருக்கின்றன. ஷெட்யூலிலே இருந்து செம்மரத்தை நீக்கியதனாலே அந்த வழக்கு பாதிக்காது என்ற அடிப்படை சட்ட உணர்வுகளை எல்லாம் தெரிந்து கொண்டதற்குப் பிறகுதான் தேவையில்லாத தொந்தரவுகளை முன்னாலே இருந்த அரசாங்கமும் அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றது என்று அவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதாலும் நம்முடைய மாநிலத்திலே அதிகமாகக் கிடைப்பதில்லை இந்த மரங்கள் என்று சொல்லப்பட்டதை எல்லாம் மனதிலே வைத்துத் தான் அவ்வாறு செய்யப்பட்டது. ஏற்றுமதி இறக்குமதியை மத்திய அரசு கவனித்துக் கொள்கிறது. நம்முடைய மாநிலத்திற்குள்ளே இவ்வளவு கடுமையான இந்தச் சட்டம் தேவையில்லை; காரணம் இந்தச் செம்மரம் நம்முடைய நாட்டில் விறகாகத்தான் பயன்படுகிறது, இந்த ஏற்றுமதி செய்தால்தான் ஜப்பான் நாட்டிலே இருந்து டாலர் நமக்கு வருகின்றது, மற்ற மாநிலங்களிலே அனுமதிக்கிறார்களே, நீங்கள் ஏன் எங்களைத் தடுத்து எங்களுக்கு தொந்தரவு செய்கிறீர்கள். நாங்கள் ஏற்றுமதியைத் தடுக்கவில்லை. சில நடைமுறை விதிகள் வந்ததால் வகுக்கப்பட்டார்கள், அந்த விதிகளின்படி நடவடிக்கை வழக்கு மன்றத்திலே இருக்கின்றது ஏன்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள், அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ரிட் அப்பீல் சர்க்கார் சார்பாகப் போடப்பட்டது. வழக்கு இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்கிறேன்; அந்த வழக்கிலே போடப்

பட்ட ப்ரேயர் வழக்கின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அந்த வழக்கிற்கு உயிர் இருக்கின்றதா இல்லையா? இதுதான் என்னுடைய முதல் கேள்வி. அடுத்து தமிழ்நாட்டிலே ரெட்-சேண்டர் மரங்களே இல்லை என்று சால்லிவிட்டு பரவலாக இருக்கின்றது என்கிறார். அப்படித் தமிழ்நாட்டிலே இல்லாத அந்த ரெட் சேண்டர் மரம் ஷெட்யூல் ஆப் டிப்பரிலே இணைக்கப்பட்டு செய்யப்பட்டதற்கான காரணம் என்ன? அப்படி இணைக்கப்பட்டு பண்ணியதற்குப் பிறகு ஓமிட் பண்ணியதற்குக் காரணம் மத்திய சர்க்காரின் ஆணை என்று சொன்னால் வியாபாரிகள் சங்கத்தின் கோரிக்கை என்ற அடிப்படையில் அதாவது

Accordingly this order is passed

என்று போடப்பட்டிருப்பது ஏன்? அது மட்டுமல்லாமல் ஒரு கிரிமினல் வழக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள்.....

டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த உரிமைப்பிரச்சனையைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட இருவர், விவாதித்து இருக்கிறார்கள். தேர்ந்த வழக்கறிஞரே விவாதித்து இருக்கிறார். இதில் உங்களுக்குப் வேறு காரணம் எதுவும் இல்லை.....

டாக்டர் மு. கருணாநிதி: தயவுசெய்து விளக்கம் கேட்க என்னை அனுமதிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அளித்த விளக்கம் ஒன்றிரண்டு நாட்களுக்கு முன், இன்றல்ல ஒன்றிரண்டு நாட்களுக்கு முன் அளித்த விளக்கத்திற்கு மாறுபட்ட கருத்தினை இப்பொழுது கூறியிருக்கிறார்கள், அதில் விளக்கம் வேண்டும் என்றுதான் நான் தங்களிடத்திலே முறையிட்டுக் கொள்வது. அன்றைய தினம் அவர் விளக்கம் அளித்தபோது, முழுக்க முழுக்க மத்திய சர்க்கார் ஏதோ அந்த ஏற்றுமதியைச் செய்வதில் தாராளமாக இருப்பதைப் போலவும், அதை மாநில சர்க்கார் எதிர்ப்பது போலவும், ஒரு அர்த்தம் வரக்கூடிய அளவிற்குதான் அன்றைய தினம் அவருடைய பேச்சு இருந்தது. அது பத்திரிகைகளில் கூட அப்படியே செய்தியாக வெளி வந்திருக்கிறது. அன்றைக்கு அவர் பேசும்போது கூடக்குறிப்பிட்டார். இதில் ஒன்றும் இரகசியமே இல்லை. இந்த மரத்தை ஏற்றுமதி செய்யக் கூடாது, அதைத் தடுக்க வேண்டும் என்று இந்த அரசு முயற்சி எடுத்தது என்று அன்றைக்குக் குறிப்பிட்டார்கள்.

அது மாத்திரம் அல்ல; அந்த ஷெட்யூல்டு டிம்பர் என்ற பட்டியலில் செம்மரத்தைச் சேர்த்ததே இந்த அரசுதான். அதற்குப் பிறகு மத்திய அரசு ஒரு ஆணை பிறப்பிக்கிறது. இந்த செம்மரத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு எந்த அனுமதியும் தேவையில்லை என்று ஓபன் ஜெனரல் லைசன்சி அகை 3—வது இடத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது என்று மத்திய சர்க்கார் மீது குற்றம் சுமத்துவது போலத்தான் அன்றைக்கும் பேசினார். ஆகவே தமிழ்நாட்டில் விளையாத ஒரு மரத்தை தமிழ்நாட்டில் இல்லாத ஒரு மரத்தை நாம்

கட்டுப்பாடு செய்கிறோம் என்று சொன்னார்கள். அப்படித் தமிழ்நாட்டில் இல்லாத, விளையாத மரத்தை ஏன் கட்டுப்பாடு செய்கிறார்கள் என்பது எல்லாம் புரியாத புதிர். இன்னொன்றும் முக்கியமாகச் சொன்னார்கள். அரசு ஆணை பற்றி. ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தக் கூடிய ஜி.ஓ. அல்ல அது என்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு அரசு வெளியிட்ட ஆணையில்,

In order to regulate the purchase, sale and export of saleable timber in the state, Government have enacted the Tamil Nadu Forest Amendment Act 1979 (Tamil Nadu Act 45 of 79) in which certain amendments were made to the principal Act i.e. Tamil Nadu Forest Act, 1882.

என்று இருக்கிறது. ஆகவே இதில் ஏற்றுமதியையும் உள்ளடக்கிய தாகத்தான் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இவைகள் எல்லாம் தவறான முறைல் தரப்பட்ட தகவல்கள் ஆகத்தான் எனக்குத் தோன்றுகிறது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைத்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்குச் சில விஷயங்களை எடுத்துக் கொண்டு பதில் அளித்திருக்கிறார்கள். நான் அன்றைக்குச் சில விவரங்களைப் பொதுவாகச் சொன்னேன். அதிலே இருக்கிற லீகல் ஆஸ்பெக்ட்ஸ் எல்லாம் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கூடஅவர் குறிப்பிட்டார். அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன் என்மீது காட்டப் பட்டிருக்கிற 3 குற்றச்சாட்டுகளுக்கு மட்டும் பதில் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பொதுவாக அன்றைக்குக் குறிப்பிட்டேன். இன்றைக்குக் காரண காரிய விளக்கங்களோடு தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன்.

ஷெட்யூல்ட் ஏரியாவிலே ஏன் சேர்த்தார்கள் என்று கேட்கிற போது தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட மரங்கள் கடத்தப்படுவ தாக எங்களுக்கு வந்த புகார்களின் அடிப்படையில் அப்பொழுது அப்படிச் சேர்க்கப்பட்டன. சேர்த்தற்குப் பிறகுதான் சம்பந்தப் பட்ட வியாபாரிகள் தொடர்ந்து எங்களுக்குத் தகவல் தந்திருக் கிறார்கள். சம்பந்தப்பட்ட தொழிலாளர்களிடமிருந்து ரெப்பரசண்டேஷன் வந்திருக்கிறது. அதற்குப் பிறகுதான் அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்தது எந்த ஒரு விஷயத்தையும் தவறு என்று கருதினால் அதைத் தடுக்க வேண்டும் என்று ஒரு நல்லநோக்கத்தோடுதான் அரசாங்கம் முடிவு எடுக்கிறது. முடிவு செயல்படும்போது சரியாக இல்லாமல் இருந்தால் அதை மறுபடியும் பரிசீலிக்கிறது. அது தான் ஷெட்யூல்ட் ஏரியாவிலே திருத்தம் கொண்டு வந்ததற்குக் காரணம்.

இந்த வகை மரம் தமிழ்நாட்டுக் காடுகளிலேயே இல்லை என்று சொல்லப்பட்டது என்றால், அது பொதுவாகச் சொல்லப் பட்ட கருத்து. இன்றைக்கும் தமிழ்நாட்டுக் காடுகளிலேயே எங்கோ ஒன்றிரண்டு இடங்களிலே, அதுவும் ஆந்திர எல்லையிலே சில இடங்களில்தான் இவ்வகை மரங்கள் இருப்பதாகச் சொல் கிறார்கள். இதுவரை நம்முடைய வனத் துறையிலிருந்து இவ்வகை மரங்கள் வெட்டப்பட்டதாகவோ, விற்கப்பட்டதாகவோ தகவல் இல்லை. ஆகவே அதைப் பரிசீலித்தபோது, நாமே அதைப் புதிதாக இப்போது வளர்க்க முயற்சி செய்திருக்கிறோம். இன்னும் வளர்ந்து வரவில்லை, வளர்ந்து அந்த மரம் விளையா வதற்கு 100 ஆண்டுகள் ஆக வேண்டும் என்று வனத் துறையிலி ருந்து தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வாய்ப்பினைத் தந்ததினால், இதை மிகவும் தெளிவாக விளக்கிச் சொல்ல எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் எப்படித் தெளிவாக தம் எண்ணங்களை விளக்கினாரோ அதேபோன்று மிகத்தெளிவாக என் நிலையையும் விளக்கியிருக்கிறேன். ஆகவே இட்டமிட்டு, தவறான தகவல்களைத் தரவேண்டும் என்பது நோக்கமல்ல. என்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் மூன்றிற்கும் விளக்கம் கூறும் வகையில்தான் என்னுடைய பதிலைத் தந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்னையைக் குறித்து பின்னர் தீர்ப்பு வழங்கப்படும்.

(இ)உறுப்பினர்கள் திரு. ரகுமான்கான் அவர்கள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து டாக்டர் சமரசம் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்னையை திரு. ரகுமான்கான் அவர்கள் மீது கொடுத்திருக்கிறார்கள். திரு. ரகுமான்கான் அவர்களுக்கு இன்னும் இது பற்றிய நோட்டீஸ் அனுப்பப்படாத தால், அது அனுப்பப்பட்ட பின்னர் இந்த அவையிலே எடுத்துக் கொள்ளப்படும்.

[முற்பகல் 11.30]

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆளுங்கட்சி உறுப்பினர் டாக்டர் சமரசம் கொடுத்திருக்கிற உரிமைப் பிரச்னையை எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன், எடுத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் இரண்டையும் சேர்த்து உரிமைக்குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொள் கிறேன். ஏனென்றால் அப்பொழுதுதான் விவரமாக ஆராயமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் என்ன கொடுத் திருக்கிறார்கள் என்பதை நான் பார்க்கவேண்டும். இதுகுறித்து தீர்ப்பு வழங்கும் பொறுப்பை உங்களிடம் விட்டுவிட முடியாது. தீர்ப்பு அளிப்பதை என்னிடம் விட்டுவிடுங்கள். நானாக எடுத்துக் கொள்ளலாம்.

[1981 ஜனவரி 29

டாக்டர் மு. கருணாநிதி: திரு. ரகுமான்கான் மீது டாக்டர் சமசரம் ஒரு உரிமைப் பிரச்னை எழுப்பியிருக்கிறார். அதையும் இப்போது எடுத்து விவாதிப்பதை நாங்களே ஆதரிக்கிறோம். அந்த உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்பு வழங்குகிற உரிமையை என்னிடம் விட்டு விடுங்கள். உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு முன்னால் எப்படி உரிமைக் குழுவிற்கு அனுப்புவது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இதில் தாங்கள் தீர்ப்பு சொல்லிவிட்டீர்கள். நோட்டீஸ் போகவில்லை, நாளை எ[illegible] கொள்கிறேன் என்று சொல்லிவிட்டீர்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நான் ரெடி. நோட்டீஸே எனக்குத் தேவை இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர். 2 ஆம் தேதி (பிப்வரி), திங்கட்கிழமை இது எடுத்துக்கொள்ளப்படும். அடுத்து. . . . . .

4. ஒழுங்குப் பிரச்சினை—தலைமை நீதிபதி நியமனம் குறித்த கவன ஈர்ப்பு அனுமதிக்கப்பெறுவது.

*திரு. என். எஸ். வி. சித்தன்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நீங்கள் 54—வது விதியின்கீழ் ஒரு அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை சபையில் எழுப்ப அனுமதி அளிக்க இருக்கிறீர்கள். சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மாற்றல் சம்பந்தமாக ஒரு வழக்கு உச்சநீதிமன்றத்தில் பேசப்பட்டு அது கான்ஸ்டிட்யூஷன் பெஞ்ச்-க்கு ரெபர் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் சென்னை உயர்நீதிமன்றம் இந்த வழக்கு குறித்து விசாரிப்பதற்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கிறது. எனவே இப்பிரச்னை குறித்து நமது மன்றத்தில் 54-வது விதியின்கீழ் விவாதிப்பது என்பது நீதிமன்றத்தின் விவகாரத்தில் தலையிடுவதாகாத ? இது சப்-ஜுடீஸ் ஆகுமல்லவா? இதே மாதிரி நீங்கள் அனுமதிப்பீர்களேயானால் இது ஒரு தவறான முன்மாதிரியாக இருக்கக் [illegible] என்பதையும் தயவுசெய்து நீங்கள் தீர்ப்பு வழங்கிவிட்டு தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Thiru C. P[illegible]naiyan ; The subjects-matter that is covered by the w.it petition is not figured in this. So the Hon. speaker may take up this issue.

திரு. என் எஸ். வி சித்தன்: நாம் எந்தப் பிரச்னையை எடுத்துக்கொள்கிறோமோ அதே பிரச்னைதான் சென்னை உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. உச்ச நீதி மன்றத்தினால் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதை அனுமதிப்பது என்பது ஒரு

1981 ஜனவரி 29] [திரு. என். எஸ். வி. சித்தன்]

தவறான முன்மாதிரியாகாதா? இது, சப்-ஜுடீஸ் ஆகவே இதைத் தாங்கள் அனுமதிப்பீர்களானால் வழக்குமன்றத்தில் உள்ள எல்லா வழக்குகள் பற்றியும் இனிமேல் 54-வது விதியின்கீழ் சபையில் கொண்டுவருவதற்கு எங்களுக்கு உரிமை வழங்க வேண்டும்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தப் பிரச்னையைப் பற்றி இந்த மன்றத்திலே, ஆளுநர் உரையின்மீது பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னையை அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின்கீழ் இங்கே தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 'மாநில மொழி தெரியாத பிரதம நீதிபதிகளை மாநிலங்களில் நியமிப்பதற்கு தமிழக முதல்வரின் ஆட்சேபணையை தெரிவிக்கும் வகையில்' தமிழக முதல்வர் அவர்கள் எழுதிய கடிதம் எல்லாப பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கிறது. அது எல்லோருக்கும் தெரிந்த சமாச்சாரம். அதை விவாதிப்பதில் பிரச்னை ஒன்றுமில்லை. வழக்கு மன்றத்திலே இருப்பதற்கும், இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, தாங்கள் தயவு செய்து இன்னும் சற்றுக் கூர்மையாகப் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே இந்தப் பிரச்னை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டால், இதுமாதிரி எல்லாப் பிரச்னைகளையும் இனி நாங்கள் பேசவேண்டி வரும். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இன்றைக்கு இதை அனுமதித்தால் ——அதற்கு ஆட்சேபணை இருந்தாலும், ——நாளைக்கு இது மாதிரி பிரச்னைகள் வரும்; அனுமதி தரவேண்டிவரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதல்ல பிரச்னை மாண்புமிகு உறுப்பினர் 54-வது விதியின் கீழ் விளக்கம் கேட்கப் போகிறார், சொற்பொழிவிற்கு இடமில்லை. இதிலே, மொழி தெரியாத தலைமை நீதிபதி வேண்டாம் என்பதுதான் கேள்வி. அதுவும், இதைப்பற்றி பத்திரிகைகளிலே ஏற்கனவே பூராவும் விவாதித்திருக்கிறது. மன்றம் விவாதிப்பதினால் ஒரு விளைவும் புதிதாக ஏற்படப் போவதில்லை. ஆகவே, இதை மன்றம் விவாதிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்; மொழி தெரியாத தலைமை நீதிபதி. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதிக்கலாம் என்று நான் தீர்ப்பு கொடுத்திருக்கிறேன். திரு. உமாநாத்.

5. கவன ஈர்ப்பு.

மாநில மொழி தெரியாத ஒருவரைத் தலைமை நீதிபதியாக நியமித்தல்

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, 54-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. ரா. உமாநாத்]]1981 ஜனவரி 29

''மாநில மொழி தெரியாத தலைமை நீதிபதியை உயர்நீதிமன்றத்திற்கு, தமிழக முதல்வர் ஆட்சேபம் தெரிவித்தும், நியமனம் செய்யப்பட்டதன் விளைவாக, எல்லா நீதிமன்றங்களிலும் தமிழில் நடவடிக்கைகளை நடத்துவது என்ற தமிழக அரசின் முடிவுக்கு ஏற்பட்டுள்ள தடங்கல் காரணமாக தமிழக மக்களிடையே நிலவும் பதட்டநிலை குறித்து''.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் நான் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அரசமைப்புச் சட்டம் பிரிவு 222 (1) கீழ்க்கண்டவாறு உள்ளது:

''222. ஒரு நீதிபதியை ஓர் உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொன்றிற்கு மாற்றுதல்:—(1) குடியரசுத் தலைவர் இந்தியாவின் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்தபிறகு, ஒரு நீதிபதியை ஓர் உயர் நீதிமன்றத்திலிருந்து வேறெந்த உயர்நீதிமன்றத்திற்கும் மாற்றலாம்''.

இந்தப் பிரிவின் கீழ், மைய அரசு 19–1–81 தேதியில் கீழ்க்கண்டவாறு இரண்டு அறிக்கைகளை வெளியிட்டுள்ளது:

1. ''இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 222(1) பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி, குடியரசுத் தலைவர் இந்தியாவின் தலைமை நீதிபதியுடன் கலந்து ஆலோசித்ததற்குப் பிறகு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியான திரு. ஜஸ்டிஸ் முகமது காசிம் முகமது இஸ்மாயில் அவர்களை கேரள உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக, தமது பதவியை அவர் பொறுப்பேற்றுக் கொள்ளுகின்ற தேதியிலிருந்து, மாற்றுகிறார்''.

2. ''இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 222(1) பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி, குடியரசுத் தலைவர் இந்தியாவின் தலைமை நீதிபதியுடன் கலந்து ஆலோசித்ததற்குப் பிறகு, பாட்னா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான திரு. ஜஸ்டிஸ் கிருஷ்ணா பல்லப் நாராயண் சிங் அவர்களை சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக, தமது பதவியை அவர் பொறுப்பேற்றுக் கொள்ளுகின்ற தேதியிலிருந்து, மாற்றுகிறார்''.

இந்திய சட்டக்குழு, தலைமை நீதிபதியை மாற்றம் செய்வதைப் பற்றி இவ்வரசின் கருத்தைக் கோரியபொழுது கீழ்க்கண்டவாறு 1979 ஆம் ஆண்டு மே மாதத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது:

''ஒரு மாநிலத்தில் தலைமை நீதிபதி அந்த மாநிலத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். தவிர்க்கமுடியாத நிலையில் வேறு மாநிலத்தவராகவும் இருக்கலாம். ஆனால் எந்தக் காரணத்தை முன்னிட்டும் மதம், சாதி என்ற காரணத்தின் அடிப்படையில் சொந்த மாநிலத்தில் தலைமை நீதிபதியாகப் பணியாற்ற உரிமை உள்ள ஒருவரை மாற்றக்கூடாது. அதோடு வேறு மாநிலத்தி

1981 ஜனவரி 29] [திரு. சி. பொன்னையன்]

லிருந்து தமிழகத்திற்கு தலைமை நீதிபதியாக வருபவர் தமிழராகவும் நன்கு தமிழ்ப் பாண்டித்தியம் உள்ளவராகவும் இருந்தாக வேண்டும். இனி வழக்குமன்ற நிகழ்ச்சிகள் அனைததும் தமிழிலேயே இருக்கவேண்டுமென்ற நமதரசின் கொள்கை காப்பாற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாயின் மேலே குறிப்பிட்டுள்ள வழியைப் பின்பற்றப்படுவதைத் தவிர வேறு வழியில்லை''. சமீபத்தில் முதல் அமைச்சர் அவர்களை மத்திய சட்ட அமைச்சர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியை மாற்றம் செய்வதைக் குறித்து கலந்த பொழுது மேற்கண்ட கருத்தே முதலமைச்சரின் 15–1–1981 நாளிட்ட கடிதமூலம் வலியுறுத்தப்பட்டது. அந்தக் கடிதத்தில், அந்தந்த மாநிலத்தின் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருக்கவேண்டும் என்பது மாநில அரசின் கருத்து என்பதும் அந்த அடிப்படையில் தமிழ்நாட்டுத் தலைமை நீதிபதியாக வருபவர் தமிழ் தெரிந்தவராக இருக்க வேண்டும் என்பதும் கீழ்க்கண்ட காரணங்களுக்காக வலியுறுத்தப்பட்டது:—

நீதிமன்ற நடவடிக்கைகளைவிட பரிபூர்ணமாக தெரிந்து கொள்ளக்கூடிய நிலைமை, நீதிமன்ற தலைமைக்கு இருந்தால் தான் தீர்ப்புகளும் ஆணைகளும் நிறைவுபெற்றதாக அமையும். இதற்கு ஒரேவழி நீதிமன்றத் தலைவர் அல்லது நீதிபதி அந்தந்த பிராந்திய மொழியில் பழக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும். இல்லையெனில் பிராந்திய மொழிகளில் நடைபெறும் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அதன் அடிப்படையில்தான் முடிவுக்கு வரவேண்டிய நிலைமைதான் ஏற்படுகிறது. இத்தகைய மொழிபெயர்ப்பு வழிமுறைகளை கையாளும்பொழுது தவறுகள் ஏற்படுவதற்கும் வாய்ப்பு இருக்கின்றது, அத்துடன் மொழிபெயர்ப்பு நடைமுறைக்கு ஏற்படும் செலவையும் சாதாரண குடிமகன் ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது.

இந்நிலையில் பொதுமக்களுக்கு நீதியில் நம்பிக்கையும், நிறைவும் ஏற்படுவதற்கு, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, பிற நீதிபதிகள் பிற மொழிகள் தெரிந்தவர்களாக இருந்தால் நீதிமன்றங்களில் பிராந்திய மொழியில் எடுத்து வைக்கப்படும் சாட்சியங்கள், வாதங்கள், ஆணைகள் முதலியவற்றை நன்றாக புரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். இல்லையெனில் பாமர மக்களின் மனதில் குறிப்பாக படிப்பறிவற்ற மக்களின் மனதில் நீதியின் நம்பிக்கையை உருவாக்க இயலாது. பிராந்திய மொழிகள் இல்லாத வேறு மொழிகளில் நீதிமன்ற தீர்ப்புகள் வெளியாகும் நேரத்தில், பாதிக்கப்பட்டவர்கள் நடைமுறைகள் மீது அதிருப்தி உடையவர்களாகவே இருப்பார்கள். போதிய காரணமின்றி தங்கள் மீது குற்றஞ்சாட்டப்படுகிறதோ என்று எண்ணத்தோன்றும். விரைவான நாட்டு வளர்ச்சிக்கு இத்தகைய போக்கு நல்லதல்ல. சாதாரண குடிமகனுக்கும் தன்னுடைய பாதுகாப்பில் நம்பிக்கை இருக்கவேண்டும். நீதிமன்றங்களில் தமிழ்மொழியிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு தீர்ப்புகளும் தமிழில் வெளிவருவதற்கு சட்டங்கள் தமிழில் கொண்டுவரும் முயற்சிகள் மேற்கொள்ளப்

[திரு. சி. பொன்னையன்] [1981 ஜனவரி 29

ட்டுவரும் இவ்வேளையில், தமிழ் தெரிந்த நீதிபதிகள் நியமிக்கப் படுவதே பொது மக்களுக்கு மிகவும் திருப்தி அளிக்கக்கூடியதாக அமையும்.

நாடு விடுதலையடைந்த நாளிலிருந்து சாதாரண குடிமகனும் தன் கடமைகளை சரிவர நிறைவேற்றுவதற்காக எல்லாத் துறைகளிலும் அந்தந்த பிராந்திய மொழிகளில் ஆட்சி நடவடிக் கைகள் நடைபெறவேண்டும் என்று முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலையில் உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக பிராந்திய மொழியில் போதிய பழக்க மில்லாத ஒருவரை நியமிப்பது முன்னேற்றத்திற்கு தடையான நடவடிக்கையாகும்.

சாதாரண குடிமகனும் எளிதில் நீதியை பெறவேண்டும் என்பதற்காக நாம் பல முற்போக்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுவரும் நேரத்தில் பிராந்திய மொழிகளில் பழக்கமில்லாத உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது நல்லதுமல்ல, முறையு மல்ல.....

——இருந்தாலும், மேலும் விரிவாகப் பேசலாம் என்று மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால், மத்திய அரசு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயில் அவர்களைக் கேரள உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும், பாட்னா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. கே.பி. நாராயண் சிங் அவர்களை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி யாகவும் மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பித்துள்ளது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 222(1)—ன் கீழ் இவ்விசயத்தில் மத்திய அரசின் முடிவே இறுதியானது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நான் கான்ஸ்டிடி யூஷனல் ஆஸ்பெக்டுக்கே போகவில்லை.

I am aware of it.

கான்ஸ்டிடியூஷனில் ஏராளமான ஆஸ்பெக்டுகள் இருக்கின்றன. அதற்குள் நான் போகவில்லை. இது ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம். செம் மரத்திற்கே இவ்வளவு நேரம் செலவிடும்போது, தாய்த் தமிழ் மொழிக்கு கொஞ்ச நேரம் செலவு செய்யக் கூடாதா? ஆகவே தான் நான் இந்த உணர்வோடு பேச விரும்புகிறேன். இதிலே மெயின் கேள்விக்கு வரும்போது, மத்திய அரசாங்கம் எடுத்திருக்கக்கூடிய ஒரு முடிவுக்கு, அந்த முடிவின் அடிப்படையில் கொள்கை விஷயத்தில் நான் என்னுடைய கேள்வியை பார்முலேட் பண்ணுகிறேன் என்று சொல்ல விரும்புகிறேன். ஜஸ்டிஸ் இஸ்மாயில் கேரளாவிற்கு தலைமை நீதிபதியாக மாற்றப்படுவதும், பாட்னா ஹைகோர்ட்டிலே இருந்து அந்த தலைமை நீதிபதியை சென்னைக்கு மாற்றுவதும் நம் நாட்டு நீதி மன்றத்தையே ஒரு உலுக்கு உலுக்கியிருக்கின்றது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இருவரும் சம்மதம் மறுத் துள்ளதாகத் தெரிகிறது. பதவியிலிருந்து விலகினாலும் விலகலாம் என்று அன்றாட பத்திரிகையில் செய்திகள் வெளி வருகின்றன. இதனால் நீதித் துறையையே ஸ்தம்பிக்க வைக்கலாம் என்ற அச்சமும், பயமும் தமிழ்நாட்டு மக்களுக்கு

1981 ஜனவரி 29] [திரு. ரா. உமாநாத்]

ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக எனக்கு இந்த விஷயத்தில் பிரத்தியேகமான பொறுப்பு இருக்கின்றது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஜஸ்டிஸ் இஸ்மாயில் அவர்கள் என் தொகுதியிலுள்ள நாகூரிலே சிறு வயதிலே படித்து வந்திருக்கிறார். அவர் நிச்சயமாக, விசேஷமாக.....

திரு. என். எஸ். வி. சித்தன்: நான் ஏற்கனவே சொன்ன மாதிரி இவையெல்லாம் வருகிறது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமாநாத் அவர்களே, இஸ்மாயிலுக்கு சொந்தம் கொண்டாடிக் கொண்டு சொல்ல வரமாட்டீர்கள். சப்ஜெட்டுக்கு வாருங்கள்.

திரு. ரா. உமாநாத்: மத்திய அரசின் இந்த நடவடிக்கை தமிழகத்தின் தமிழ் மயமாக்கும் முயற்சிக்கு ஒரு மரண அடியாக அமைந்துள்ளது என்பதை, இந்த கால் அட்டென்ஷன் மூலமாகத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று முதல்வர் அவர்கள் கோஷத்திலே மைய அரசு ஒரு பாராங்கல்லைப் போட்டுள்ளதாக இது அமைகிறது. உலகத் தமிழ் மாநாட்டை இப்போதுதான் சமீபத்தில் லட்சக்கணக்கான மக்கள் மத்தியிலும் உலகப் புலவர்கள் மத்தியிலும் ஒரு ஸ்பெசிபிக் அஷ்யூரன்ஸாக நீதித் துறையில் எல்லா மட்டங்களிலும் தமிழ் புகுத்தப்படும் என்று கூறிய ஒரு வாரத்திற்குள், இந்த மாற்றம்....

[முற்பகல் 11.40]

மாண்புமிகு பேரவைத் தலைவர்; தாங்கள் இரண்டு கேள்விகளை மட்டுமே கேட்கலாம்.

திரு. ரா. உமாநாத்: வெறும் கேள்வி என்றால் கால் அட்டென்ஷன் தேவையில்லை. குவஸ்டியன் அண்டு ஆன்சர் நேரத்தில் கேள்வி போடுவதற்கும் கால் அட்டென்ஷனில் கேள்வி போடுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழ் மயமாக்குவதற்கு ஏற்பட்டுள்ள தடை பற்றி இந்த ஹவுஸ் கவலைப்படவில்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்து பேர் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவு பேரும் கேள்வி கேட்க அனுமதிக்கப்பட வேண்டும்.

திரு. ரா. உமாநாத்: இரண்டு பிரிவிலேஜ் மோஷன் இன்று காலை இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது தமிழ் மொழிப் பிரச்சினையில் பத்து பேர் கேள்வி கேட்க அனுமதிக்கப்படக்கூடாதா?

[திரு. ரா உமாநாத்] [1981 ஜனவரி 29

தமிழ் மொழியைப் பாதிக்கின்ற நிலை வரும்போது அதைப் பற்றிக் கேட்காமல் எப்படி இருக்க முடியும்? நான் அந்த உணர்வோடு கேட்கிறேன். உலகத் தமிழ் மாநாட்டில் லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் உலகத் தமிழ்ப் புலவர்கள் மத்தியில் நீதித் துறையில் எல்லா மட்டங்களிலும் தமிழ் மொழியைப் புகுத்தலாம் என்று உறுதி கூறிய ஒரு வாரத்திற் குள்ளாக தமிழக நீதித் துறையிலுள்ள தமிழறிஞரை இழந்து விட இருக்கிறோம். இந்த மாற்ற முடிவின் காரணமாகத் தமிழ் தெரியாத தலைமை நீதிபதியை வைத்து எப்படித் தமிழில் வாதாட முடியும்? தமிழ் குடிமகனுக்கு உள்ள உணர்வை நீதித் துறை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? தமிழிலே நீதித் துறையின் எல்லா மட்டங்களிலும் நடவடிக்கைகள் நடைபெறும் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற என்ன ஸ்தூலமான நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது? தமிழ் தெரியாத சீப் ஜஸ்டிஸ் இருக்கும்போது ப்ரொசீடிங்சை தமிழில் எப்படி நடத்துவது என்பதற்கு அரசு என்ன ஸ்தூலமான நடவடிக்கை எடுக்க இருக்கிறது? இந்த மாற்றத்திற்குத் தமிழ கத்தில் ஆட்சேபணையைத் தெரிவிக்க, இந்த முடிவை வாபஸ் பெறச் செய்ய, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சியினரும் கொண்ட டெப்யூடேஷன் முதலமைச்சர் தலைமை யில் மத்திய அரசு பிரதமரைப் பார்க்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழி தெரிந்த ஒருவர் உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக, தலைமை நீதிபதியாக இருக்கவேண்டுமென்பதையும் அதற்கான ஆணித்தரமான காரணங்களையும் வலியுறுத்தி ஏற்கனவே மத்திய அரசுக்குத் தெளிவாக இந்த அரசு எழுதி யிருக்கிறது.

அரசியல் சட்டப்படி 222 (1)ன் கீழ் இறுதி முடிவு எடுக்கக் கூடிய அதிகாரம் மத்திய அரசின் கையில் இருக்கும் காரணத்தால் அந்த முடிவை அவர்கள் எடுத்திருக்கிறார்கள், மாநில அரசைப் பொறுத்தவரை இந்தப் பிரச்சினையில் மொழி தெரிந்த ஒருவர் தான் மாநில தலைமை நீதிபதியாக, நீதிபதியாக இருக்க வேண்டுமென்று கருத்தை மீண்டும் வலியுறுத்தி அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது பற்றி அரசு கண்டிப்பாகப் பரிசீலிக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் தலைமை)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : Sir, I would like to submit that the whole matter is sub-judice.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுபற்றி ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. மொழி சம்பந்தமாகத்தான் பேச்சு நடக்கிறது. வழக்கு சம்பந்தமாகப் பேசவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் ஒரே வரியில் தன்னுடைய அடுத்த கேள்வியைக் கேட்கவேண்டும்.

திரு. ரா. உமாநாத் : என்னைத் தாங்கள் அப்படிக் கட்டுப் படுத்துவதை அனுமதிக்க முடியாது.

I cannot tolerate discrimination against any Member. I have the right to frame my question. I have the right to have preface to my question.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு கேள்விகள் கேட்கத்தான் உரிமை இருக்கிறது. அது 'குவெஸ்டியன் பார்ம்'-ல் இருக்கவேண்டும். விவாதமாகப் பேசக் கூடாது.

திரு. ரா. உமாநாத்: கால் அட்டென்ஷன் நோட்டீசில் கேள்வி கேட்பதற்கும் கேள்வி நேரத்தில் கேள்வி கேட்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

I am having the preface before putting the question. I have the right to do so.

Mr. DEPUTY SPEAKAR: The Hon. Member has the right to put two supplementary questions. He cannot talk.

THIRU. R. UMANATH: The Hon. Deputy Speaker cannot curb my right.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்கள் இரண்டு கேள்விகள்தான் போட முடியும்.

திரு. ரா. உமாநாத் : ஒரு கேள்வி கேட்க சபாநாயகரால் நான் எப்படி அனுமதிக்கப்பட்டேனோ அதைப்போல செகண்ட் குவஸ்டினுக்கும் அனுமதிக்கப்படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை.

திரு. ரா. உமாநாத்: அதை நீங்கள் எப்படி மாற்றுவது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியை மட்டும் போடுங்கள்.

திரு. ரா. உமாநாத்: இந்த நேரத்திற்குள் நான் கேள்வியைப் போட்டு இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இட் வில் பிகம் எ பேட் பிரசிடன்ட். கேள்வியை மட்டும் போடுங்கள்.

திரு. ரா. உமாநாத்: ஏற்கெனவே பிரசிடன்ட் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: கேள்வியைத்தான் கேட்கச் சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேட்கலாம்.

திரு. ரா. உமாநாத் : எனக்குக் கேள்வி கேட்கத் தெரியாதா ? தாங்கள் வருவதற்கு முன்னால் சபாநாயகர் முதல் குவஸ்டினுக்கு எப்படி அனுமதித்தாரோ அதைப்போல அனுமதிக்க வேண்டும்.

இரண்டாவது கேள்விக்கும். யூ கேனாட் ஒவர்ரூல் தி ஸ்பீக்கர். மைய அரசின் நிலைமைக்கு விரோதமாக சில தீர்ப்புகள் கூறுகிறபோது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ரா. உமாநாத் : கேள்விதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இல்லை, இல்லை, இட் இஸ் நாட் எ குவஸ்டின்.

திரு. ரா உமாநாத் : நான் கேள்வியாகத் தான் கேட்கிறேன். என்னுடைய கருத்தைச் சொல்கிறேன், அதை உங்கள் இஷ்டப்படி நான் கேட்கமுடியுமா? நான் டெபுடி ஸ்பீக்கருடைய இஷ்டப்படி கேள்விகளைக் கேட்கமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி பார்மிலே கேளுங்கள்.

திரு. ரா. உமாநாத் : அதற்கு முன்னாலே அரசாங்கத்தினுடைய கருத்துக்கு மாறாக தீர்ப்புகள் வந்தவுடனே டெல்லி ஹைகோர்ட் நீதிபதி, ஆந்திரா ஜஸ்டிஸ் எல்லாம்....

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : அது முறையல்ல. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ரா. உமாநாத்: கேள்வியாகத்தான் கேட்கிறேன். நான் முடிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே இருக்கிற உறுப்பினர்களே சொல்லட்டும், நான் சொல்ல வேண்டாம். தாங்கள் கேள்வியாக கேட்கிறீர்களா என்று அவர்களே சொல்லட்டும், As a senior member the hon. Member should respect the Chair. What I say is, put it in the form of a question.

திரு. ரா. உமாநாத் : கேள்விதான் கேட்கிறேன். There is no question of seniority and juniority. I have my right to put a preface to my question.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இல்லை. இல்லை. கேள்வியாக மட்டும் கேளுங்கள். As a responsible Member please put it in the form of a question.

திரு. ரா. உமாநாத்: நான் ஒரு ரெஸ்பான்சிபிள் மெம்பர் தான் கேள்வியை பார்முலேட் செய்கிறேன். அந்த ரைட்ஸை நான் விட்டுக்கொடுக்க மாட்டேன். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். எனக்கு பயம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் திரு. உமாநாத் அவர்களுக்கு ஒன்று சொல்லவிரும்புகிறேன். நான் நிற்கிற இடம் அப்பேர்ப்பட்ட இடம். நீங்கள் கேட்கிற கேள்விக்கு என்னால் பதில்சொல்ல முடியவில்லை. தமிழ்நாட்டிலே

எல்லோருக்கும் வீரம் இருக்கிறது. நான் உறுதியாகச் சொல்கிறேன். பயம் என்று சொல்கிறீர்கள். யாருக்கும் யாரும் பயப்படவில்லை. உங்களுக்கு மட்டும் தான் தைரியம் இருக்கிறது என்று நினைக்க வேண்டாம். தமிழ் இரத்தம் இருக்கிற எல்லோருக்கும் தைரியம் இருக்கிறது (மேஜையை தட்டும் ஒலி) எங்களைப் போல வீரமானவர்கள் தமிழ்நாட்டிலே யாரும் இல்லை. எங்களைவிட வீரமானவர்கள் யாரும் இல்லை. நாங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

THIRU. R. UMANATH; I cannot put the question as the Hon. Deputy Speaker likes.

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவருக்கு பயம் இல்லை என்று சொன்னதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பத்து வார்த்தைகளில் கேட்கவேண்டுமா 100 வார்த்தைகளில் கேட்க வேண்டுமா என்பதை நீங்கள் தீர்மானிக்கிறீர்களா? நீங்கள் 10 வார்த்தைகள் என்று தீர்மானிக்கலாம். அவர் 100 வார்த்தைகளிலே கேட்கலாம். அதற்கு அவருக்கு உரிமை இல்லையா?

THIRU. K. S. G. HAJA SHEREEF: I would suggest the whole discussion be expunged since it is sub-judice.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். திரு சங்கரய்யா அவர்களுக்கு நன்றி, திரு உமாநாத் முடிக்கட்டும்.

[முற்பகல் 11.56]

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மிக்க நன்றி, தலைவரவர்கள் வந்தமைக்காக. இதிலே ஒரு ஜனநாயகப் பிரச்னையும் அடங்கியிருப்பதால் நம்முடைய தமிழக மக்களைப் பாதிக்கக்கூடிய. இதற்கு முன்னால் அந்த மாதிரி, அரசாங்கத்தினுடைய கருத்துக்களுக்கு மாறான முடிவு சொன்னதற்காக நான் குறிப்பிட்டிருக்கக்கூடிய டெல்லி ஹைகோர்ட், ஆந்திரா ஹைகோர்ட், குஜராத் ஹைகோர்ட் நீதிபதிகளை மாற்றம் செய்து இப்பொழுது நம்முடைய ஹைகோர்ட்டிலே இருக்கக் கூடிய சீஃப் ஜஸ்டிஸையும் மாற்றி விட்டார்கள். கேரளத்தில் இருக்கக்கூடியவரும் ஹைகோர்ட் நீதிபதியாக வர வேண்டியவரும் ராஜன் கேஸிலே கவர்ன்மெண்டுக்கு எதிராக ஜட்ஜ்மெண்ட் கொடுத்தது என்ற இந்த பேக்கிரவுண்டிலே நான் கேட்க விரும்புவது என்னவென்றால் இப்படிப்பட்ட நடவடிக்கையானது அந்த கான்ஸ்டிடியூஷன் கொஸ்டீனுக்குள்ளே நான் வரவில்லை - இந்த நடவடிக்கையானது நம்முடைய தமிழ்நாட்டிலே தமிழ் மாமாக்கு வது என்பதைப் பாதிப்பது என்பது மட்டுமல்லாமல். நீதித் துறையிலே 'டெமாக்கிள்ஸ் ஸ்வோர்ட்' மாதிரி, அந்தக் சத்தி மாதிரி இந்த முடிவுகள் தொங்கிக் கொண்டு இருப்பதாலே நீதித் துறையை அச்சுறுத்தக்கூடிய ஒரு எஃபெக்ட் வருவதால் நான் கேட்க விரும்புகிறேன். இரண்டு தடவைகள் நம்முடைய முதலமைச்

சரவர்கள் ஆட்சேபணை செய்த பிறகும் இந்த மாற்றத்தை மைய அரசாங்கம் செய்தால் அதற்குப்பிறகு ஏதாவது புரொடெஸ்ட் லெட்டரை நம்முடைய முதலமைச்சர் அனுப்பினாரா? அனுப்பினார் என்றாலும், அனுப்பவில்லை என்றாலும் இந்த அவையின் கருத்தை இந்த விஷயத்தில் தெரிவிப்பதற்கு அரசாங்கமே இது சரி அல்ல என்று சொல்லக்கூடிய தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வருவதற்குத் தயாரா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மொழி தெரியாத ஒருவர் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக வருவதை ஆட்சேபித்து அரசு தன்னுடைய ஆணித்தரமான கருத்துக்களை ஏற்கனவே தெரிவித்திருக்கிறது. தெரிவித்த பிறகு அரசியல் சட்டத்தின் 222 பிரிவு (1)இன் கீழ் அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். மீண்டும் இதுகுறித்து தமிழக அரசைப் பொறுத்தவரையில் மைய அரசுடன் எந்தவிதமான பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வது,நடவடிக்கை மேற்கொள்வது என்பது பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சௌரணம் : தலைவரவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்ட பதிலிலே, சாதாரண குடிமகனுப் எளிதில் நீதியைப் பெறவேண்டும் என்பதற்காக நாம் பல முற்போக்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வரும் நேரத்தில் பிராந்திய மொழிகளில் பழக்கமில்லாத உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது நல்லதுமல்ல, முறையுமல்ல என்று அரசுத் தரப்பிலே கொடுத்துவிட்டு, ஆனாலும் அவர்கள் செய்துவிட்டுப் போகட்டும் என்று நழுவுவது சரியா? ஆகவே, எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் தமிழக மக்களைப் பாதிக்காத அளவிற்கு இந்த அரசாங்கம் மேலும் நடவடிக்கை எடுக்க முன்வருமா? அந்த அடிப்படையில் மத்திய அரசை அணுகி மாற்றத்தைக் கொண்டுவர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஏதோ மைய அரசு இஷ்டம் போல நடந்து விட்டுப் போகட்டும் என்று மாநில அரசைப் பொறுத்தவரையில் வாளாவிருக்கவில்லை. மொழி உணர்வு, மொழிக் கொள்கையில் இந்த அரசு மிகக் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துத்தான் வருகிறது. அந்த அடிப்படையில் அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளவாறு என் தமிழ் தெரிந்த ஒருவர் மாநிலத்தினுடைய தலைமை நீதிபதியாக இருக்க வேண்டுமென்று காரணங்களைக் கூடத் தெளிவாக வலியுறுத்தி எழுதியிருக்கிறோம். மீண்டும் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்துக்கூட மாநில அரசு தொடர்ந்து மைய அரசோடு தொடர்பு கொள்ளும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, தமிழக மக்களின் உணர்வை உதாசீனப்படுத்திவிட்டு இந்த அளவிற்கு மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இஸ்மாயில் கமிஷனைப் பற்றித் தெரியும். ஆகவே, பழி வாங்கும் நோக்கத்தோடு செய்வதாகவே தெரிகிறது. இது சம்பந்தமாக அரசாங்கம் ஏற்கனவே மத்திய அரசுக்கு எழுதியிருந்தும் அது சம்பந்தமாக ஏதாவது பதில் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநில அரசு தன்னுடைய உணர்வுகளை மைய அரசுக்கு அறிவித்த பிறகும்கூட அரசியல் சட்டப் பிரிவு 222 (1) இன் கீழ் அவர்களாகவே இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். மாநில அரசை மீண்டும் கலக்கவில்லை; மாநில அரசின் சம்மதத்தையும் பெறவில்லை. இதை ஆட்சேபித்து மீண்டும் மைய அரசோடு தொடர்பு கொள்ள மாநில அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்வியை சபாநாயகரவர்கள் நீக்கம் செய்ய வேண்டும். நீங்கள் கேள்வி கேட்கச் சொன்னீர்களா அல்லது விவாதத்திற்கு அனுமதித்திருக்கிறீர்களா? மத்திய அரசாங்கத்திற்கு எதிராக என்றும், இஸ்மாயில் கமிஷன் என்றும் சொல்லியிருக்கின்ற அத்தனையையும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும். விவாதத்திலே பேசும்பொழுது வேண்டுமானால் பேசட்டும்; கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் எப்படி அதை அனுமதிக்கலாம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதமாக எடுக்கவில்லை.

திரு. இரா. நாமக்கனி : பேரவைத் தலைவரவர்களே உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியை மாற்றியமைக்கின்ற உரிமை மத்திய அரசுக்கு இருந்தாலும் மத்திய சட்ட அமைச்சகம் மாநில முதல்வரின் ஆலோசனையைப் பெறுவதன் முக்கியத்துவம் இங்கு புறக்கணிக்கப்பட்டிருப்பதால், மாநில மொழியில் பாண்டித்யம் பெற்றவர்தான் மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருக்க வேண்டுமென்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரே அனுமதியினைக் கொண்டு கேட்க வேண்டாம்.

திரு. இரா. நாமக்கனி : கேள்வி முடியப் போகிற நேரத்தில் நீங்கள் குறுக்கிட்டு விட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி முடியட்டும், அதற்குள் அவை முடிந்து விடக் கூடாது.

திரு. இரா. நாமக்கனி : மத்தியில் சட்ட மாறுதல் செய்ய இந்த அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் தெளிவாகக் குறிப்பிட்டவாறு அரசியல் சட்டப் பிரிவு 221 (1)இன் கீழ் மைய அரசினுடைய சட்ட அமைச்சரோ, மைய அரசோ மாநில அரசைக் கேட்க வேண்டும் என்ற நியதி இல்லை. ஆனாலும் தமிழ் தெரிந்த ஒருவர் தான் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருக்க வேண்டும், நீதிபதியாக இருக்க வேண்டுமென்றும் மாநில அரசினுடைய கருத்தை மிகத் தெளிவாக வலியுறுத்தி இருக்கிறோம். தொடர்ந்து வலியுறுத்துவோம்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தமிழ் மக்களின் மொழியாகிய தமிழ் மொழியிலும் தமிழகத்தின் ஆட்சி மொழியாகிய தமிழ் மொழியிலும் நீதி மன்றங்களின் தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென்கிற தமிழக அரசின் கொள்கைக்கு எதிரான முறையிலே இன்றைய தினம் மத்திய அரசினுடைய இந்த உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியை மாற்றியிருக்கக் கூடிய உத்தரவு இருக்கிற காரணத்தாலும், அது தமிழக அரசினுடைய உரிமையிலே தலையிடக் கூடிய முறையிலே இருப்பதன் காரணமாகவும் நீதித் துறையினுடைய சுயேச்சையான தன்மைக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய நிலைமையிலேயிருக்கிற காரணத்தாலும் தமிழக மக்களின் ஒருமித்த கருத்தையும் குரலையும் எதிரொலிக்கக்கூடிய முறையிலே, இந்தச் சட்டமன்றத்திலே அந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடிய முறையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்துக்கள், உணர்வுகள் அனைத்தையும் உள்ளடக்கி தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற அளவுக்கு மைய அரசுக்கு மீண்டும் கண்டிப்பாக வலியுறுத்தி எந்தவிதத்தில் தொடர்பு கொள்ள வேண்டுமோ அந்த விதத்தில் தொடர்பு கொண்டு இது குறித்து மாநில அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மக்களுடைய ஏகோபித்த அந்தத் தமிழ் மொழிதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்ற நம்பிக்கை, இப்பொழுது அந்த நம்பிக்கை நட்சத்திரத்திற்குப் புறம்பாக மைய அரசிலேயிருந்து வந்திருக்கிற அந்த உத்தரவு, நீதிபதியை மாற்றுகின்ற உத்தரவாக இருந்தாலும், அது இந்த நாட்டு மக்களுடைய எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று இருக்க வேண்டுமென்ற அந்த நம்பிக்கைக்குப் புறம்பாக இருக்கிற காரணத்தால் இந்த மன்றத்திலே அது தீர்மானமாக வருமா என்று கேட்டபொழுது அமைச்சர் அவர்கள் அதற்குத் தெளிவாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானம் வேண்டுமா என்று கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : அனைத்துக் கட்சிகளுடைய அபிப்பிராயத்தை, மைய அரசுக்கு ஒரு தீர்மான ரூபத்தில் அனுப்பி அதை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிகள் மட்டும் அல்ல, தமிழகத்தின் அனைத்து மக்களுடைய உணர்வாக இதைக் கருதி இந்த உணர்வுகளைக் கண்டிப்பாகப் பிரதிபலிக்க அரசு தக்க நடவடிக்கை ஏற்கனவே எடுத்திருக்கிறது, எடுக்கும்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவை" பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[1981 ஜனவரி 29

[நண்பகல் 12—00]

இ. பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு, 1891,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

Thiu V. KRISHNAMURTHY: I rise to oppose the introduction of the Bill.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, அரசாங்கத்தினால் ஏற்கனவே கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டத்தை முறைப்படுத்துகின்ற இந்த சட்டத்தினை இந்திய அரசியல் சட்டம் 310, 311 ஆகிய விதிகளின் கீழ், அரசாங்கச் சிப்பந்திகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற அடிப்படை உரிமைகளை எடுக்கின்ற விதத்திலே இந்த ஆர்டினன்சை அதை முறைப்படுத்துகின்ற சட்டமாக இருக்கிற காரணத்தினாலே, ஏறக்குறைய 24,000 அரசாங்கச் சிப்பந்திகளை ஒரே ஒரு பென் ஸ்டிரோக் என்று சொல்வார்களே அதுபோன்று — வரியில் அவர்களுடைய உரிமைகளை எல்லாம், அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற உரிமைகளை எல்லாம் எடுத்து, அதுவும் இரவு நேரத்தில் எடுத்து அதிகாரிகள் மூலமாக, அந்த கிராம அதிகாரிகளிடம் இருந்து— ஏறத்தாழ 24,000 அதிகாரிகளுடைய ரெக்கார்டுகளை எல்லாம் கைப்பற்றி இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. இந்த ஆர்டினன்ஸ் செல்லுமா, செல்லாதா என்கின்ற பிரச்சினை உச்ச நீதி மன்றத்திலே அனுமதிக்கப்பட்டு இடைக்காலத் தடையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அந்த 24,000 கிராம அதிகாரிகளும் சம்பளம் கூட வாங்கி வருகிறார்கள். அந்த நிலையில் இந்த சட்டத்தை இங்கே பிரேரேபிப்பது அரசியல் சட்டத்திற்கும், மனிதாபிமானத்திற்கும் பொருந்தாது என்கிற காரணத்தால், இந்தத் துப்பாக்கி நுழறத், தனத்தின் மூலம் இவர்களை எல்லாம் வீட்டுக்கு அனுப்புகின்ற முறையைக் கண்டித்து நான் இதை எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன் உள்ள கேள்வி:—

''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு'' பேரவை முன் அறிமுகம் செய்யப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

1981 ஜனவரி 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுக செய்யப் பெற்றிருக்கிறது.

ஈ. வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். இராமானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு'' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராமானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுக செய்யப்பெற்றிருக்கிறது.

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. நு. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உரையிலே குறிப்பிட்டுள்ளவாறு நம்முடைய ஆளுநர் அவர்கள் நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாட்டை வெகுவாக நல்ல முறையிலே பாராட்டி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மாநாடு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சென்னையிலே நடைபெற்றது. அந்த மாநாடு நடைபெறுவதற்கு முன்னாலே தமிழகத்திலே உள்ள அத்தனை தமிழ் பால் அன்புகொண்ட தொழில் அதிபர்களை அழைத்து, அந்த மாநாடு நடத்துவதற்கு அரசு பணம் முழுமையாக செலவிடக் கூடாது என்ற கருத்தில் தொழில் அதிபர்களைப் பங்குகொள்ளச் செய்து, செலவினை அவர்களையே ஏற்கச் சொன்னார்கள். அந்த மாநாடு உலகத்திலே உள்ள பல நாடுகளில் இருந்து வந்து அத்தனை தமிழ் அறிஞர்களாலும் எல்லா வகையிலும் பாராட்டப்படுகின்ற வகையில் அமைந்து இருந்தது என்பதை நாம் எல்லாம் அறிவோம்.

இன்றைய தினம் நடைபெற்ற மாநாட்டிலே விளம்பரப் பிரியன் தலைவராக நின்று நடத்துகிற மாநாடு போல், பல கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. இந்த மாநாடு நடந்துவதற்கு இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பிருந்தே அந்த மாநாட்டை மதுரையில் நடத்தப் போகிறோம் என்று தெரிவித்தார்கள். ஏறக்குறைய 17 கோடி ரூபாய் செலவு செய்து நடத்தப்பட்டுள்ள அந்த மாநாடு ஒரு திட்டமிடப்பட்ட முறையில் நடத்தப்பட வேண்டாமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த மாநாடு நடத்துவதற்கு அரசு பணம் செலவழிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், இந்த அவையிலே கூட அதற்கான ஒப்புதலை முன்னதாகப் பெற்றுச் செய்து இருக்கலாம். அந்த மாநாடு நடத்துவதற்காக விளம்பரச் செலவு இவ்வளவு ரூபாய் செலவு செய்யப் போகிறோம், வெளிநாட்டில் இருந்து வருகின்ற அறிஞர்களுக்கு உணவுபரிமாறுவதற்காக 65 லட்சம் ரூபாய் செலவு செய்யப் போகிறோம். மதுரையில் ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் செலவில் கழிப்பிடங்கள், கக்கூஸ்கள் கட்டப்போகிறோம் என்று அனுமதி கேட்டு அந்தச் செலவுகளைச் செய்து இருக்கலாம். அது மட்டுமல்லாமல், திட்டமிட்டதற்கு அதிமாகவே செலவழிக்கப்பட்டு இருக்கிறது என்றும் அறிகிறேன்.

அந்த மாநாடு நடந்ததில் நாம் எல்லாம் மகிழ்ச்சி கொள்ளக் கூடிய ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த மாநாட்டிலே நாம் வரவேற்கக்கூடிய அம்சம் ஒன்று உண்டென்றால், அது நம்முடைய செய்தித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியுள்ள ஒரு அரிய கண்டுபிடிப்பாகும். 2000 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து போன கற்புக்கரசி கண்ணகியின் கணவன் கோவலன் எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டதாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்ட ஒருவரின் எலும்புக்கூடு அதே நிலையில், அதுவும் இன்னாருடைய எலும்புக்கூடு அது என்று கண்டுபிடிக்கக்கூடிய முறையில், எந்தவிதமான ரசாயன மாற்றமும் இல்லாமல் எப்படி இருக்கும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எப்படி அது கோவலன் செட்டியார் எலும்புக்கூடு என்று கண்டுபிடித்தார் என்றும் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கைப் பற்றி இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். மது விலக்கைப் பற்றி மனம் திறந்து பேசுமாறு இங்கே ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. கள்ளச் சாராயக் கடைகளைத் தாராளமாகத் திறந்து விட்ட பின்னாலே இன்றைய தினம் மனம் திறந்து கருத்துக்களைக் கூறும்படி கேட்கிறார்கள். இந்த மதுவிலக்குக் கொள்கையில் எத்தனை சட்டங்களை இந்த அரசு கொண்டு வந்து இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். தனி ஐ. ஜி. போட்டு மது விலக்கைக் கடுமையாக, தீவிரமாக அமல்படுத்தப் போகிறோம், தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்கப் போகிறோம், எத்தனை கோடி ரூபாய் செலவானாலும் மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமாக இருப்போம் என்று சொன்னார்கள். ஆனால் இன்று நாடு பூராவும், எங்கே பார்த்தாலும்—போலீஸ் நிலையங்களுக்கு அருகாமையிலே கூட—சாராயக்கடைகள் சந்துபொந்துகளில் எல்லாம் இருக்கின்றன. இதற்கெல்லாம் யார் பொறுப்பானவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் நிச்சயமாகத் தெரிந்து வைத்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

இன்றையதினம் மதுவிலக்கை ரத்து செய்ய இருக்கிறீர்கள். காரணம் என்ன? நிதிநிலை நெருக்கடி இருக்கிறது. அரசு கஜானாவில் பணம் இல்லை என்ற காரணத்தால் இந்த

அவையிலே இருக்கிற எல்லா எதிர்க்கட்சிக்காரர்களும் மதுவிலக்கை கைவிடக்கூடாது என்று சொன்னாலும் நீங்கள் மதுவிலக்கை ரத்து செய்ய இருக்கிறீர்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்ணாவின் ஆட்சி இங்கே நடக்கிறது, அண்ணாவின் கொள்கைப்படி இங்கே ஆட்சி நடக்கிறது என்று சொல்கிறவர்கள் இந்த மதுவிலக்குக் கொள்கையில் அண்ணாவின் கொள்கையை ஏன் கடைபிடிக்கவில்லை என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம். உங்களுடைய இந்த போக்கின் காரணமாக இன்றைய தினம் தாய்மார்கள் உங்கள் நிலையை நன்றாக உணர்வார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எரிசாராயம் பற்றி இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கிற மிகப் பெரிய பத்திரிகைகள் எல்லாம் நாள்தோறு செய்திகள் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள், புதிய புதிதகவல்கள் நாள்தோறும் வந்தவண்ணம் இருக்கின்றன. அதன் உள்ளே சென்று நான் விவாதிக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். கேரள மாநில அதிகாரிகளும் அமைச்சர்களும் தமிழ்நாட்டிலே இருப்பவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று அங்கே சொல்கிறார்கள். எதுவானாலும் ஒன்று நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இந்த அரசு அனுமதி அளித்துள்ள எரிசாராயம்—ரெக்டிபைடு ஸ்பிரிட்—அதிகமாகச் சென்றிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்கு யார் பொறுப்பு? இந்த அரசை தலைமை தாங்கி நடத்திச் செல்கிற மாண்புமிகு முதலமைச்சர்தான் இதற்கு பொறுப்பு ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தன்னை புனிதமானவர் என்றும் தன்னுடைய கை கறைபடாதவர் என்றும் சொல்லிக்கொள்கின்ற முதலமைச்சர் அதை மக்களுக்கு காட்டும் வகையில் ஒரு பகிரங்க விசாரணை வைக்க வேண்டும். மத்திய அரசு சி.பி.ஐ. வைத்து விசாரணை நடத்த வேண்டும். அதுவரையில் விசாரணை நியாயமாக நடைபெற வேண்டும் என்பதற்காக தன்னுடைய பொறுப்பிலிருந்து முதலமைச்சர் சற்று விலகி இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கேரள மாநிலத்திலே அத்தனை கட்சியினரும் ஒன்று சேர்ந்து ஒரே கோஷத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். சுவரொட்டிகளிலும், பேருந்துகளிலும் ரயில் பெட்டிகளிலும் அந்த கோஷத்தை எழுதி ஒட்டியிருக்கிறார்கள். "விலகிக்கோ, விலகிக்கோ, நாயனாரே விலகிக்கோ, விலகிக்கோ, விலகிக்கோ, "நாயனாரே விலகிக்கோ" என்ற கோஷத்தை எங்கு பார்த்தாலும் எல்லாக் கட்சியினரும் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் தமிழ்நாட்டிலே அமைதியாக தமிழ் மக்கள் இருக்கிறார்கள் என்று யாரும் கருத வேண்டாம். இங்கேயும் அந்த கோஷம் விரைவிலே வரும். "விலகிக்கோ, விலகிக்கோ, முக்கிய

(திரு. து. புருஷோத்தமன்) [1981 சனவரி 29

மந்திரி எம்.ஜி.ஆரே விலகிக்கோ; விலகிக்கோ, விலகிக்கோ' முக்கிய மந்திரி எம். ஜி. ஆரே விலகிக்கோ'' என்று தமிழ் நாட்டில் கோஷம் எழுப்பும் நாள் நிச்சயமாக விரைவிலே வரும். அதனால் நம்முடைய மரியாதைக்குரிய முதலமைச்சர் பதவியிலிருந்து விலகி, மத்திய அரசு சி.பி.ஐ. விசாரணையை ஒழுங்காக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே ஒரு பிரச்சினையை குறிப்பிட்டார்கள் திரு. இராஜசேகரன் அவர்களை காவல்துறை அதிகாரிகள் தாக்கியிருக்கிறார்கள். அதன்மீது விசாரணை வைக்க வேண்டும். அதற்குச் சரியான விளக்கம் அளிப்பார்கள் என்று மக்கள் எதிர் பார்த்தார்கள். விளக்கம் அளிக்க வேண்டுமென்று நாடுதழுவிய போராட்டம் நடத்தப்பட்டது. காங்கிரஸ் கட்சியினரும் அருமை நண்பர் நடிகர் திலகம் அவர்களும் நாடு தழுவிய போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அதன் பின்னால் கூட விளக்கமளிக்கவில்லை. இன்றைய தினம் தான் அதற்கு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

இன்னொரு பிரச்சினை. 3–11–80 ஆம் நாள் அன்று தன்னுடைய வீட்டுக் கோழிகளைக் காணவில்லை என்று ஒசக் என்பவரும், எத்திராஜ் என்பவரும் பழவன்தாங்கல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார்கள். 13–11–80 அன்று கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில் இருக்கிற ஆளும் கட்சியைச் சேர்ந்த தங்கராஜ் என்பவரால் நடத்தப்படுகின்ற எம்.ஆர்.எஸ். கோழி மற்றும் கோழி முட்டை விற்பனைக் கடையில் அந்தக் கோழிகளைக் காவல்துறையினர் கண்டுபிடித்தார்கள். உடனே பக்கத்தில் இருக்கிற 'ஆர்-2' காவல் நிலையத்திற்கு அந்த கோழிகள் எடுத்துச் செல்லப்பட்டன. அந்தக் கடையை நடத்துகின்ற தங்கராஜ் என்பவர்மீது திருட்டுக் கோழி வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. அவர் ஆளும்கட்சியைச் சேர்ந்தவர். உடனே அவருடைய நண்பர், நுங்கம்பாக்கம் பகுதி வட்ட அமைப்பாளர்—மோகன்தாஸ் என்பது அவருடைய பெயர்— குறுக்கிட்டிருக்கிறார்.

திரு. ஏ. கி சண்முகம் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது அவையில் இல்லாத ஒருவரைப்பற்றி குற்றச்சாட்டுச் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. புருஷோத்தமன் அவர்கள் சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும். நிறையப் பேர் பேச வேண்டியிருக்கின்றது.

திரு. து. புருஷோத்தமன் : கோடம்பாக்கம் காவல் நிலையத்திலே உள்ள துணை ஆய்வாளர் அவர்கள் தாக்கப்பட்டிருக்கின்றார். அவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளை சேதப்படுத்தி தீ வைத்து இருக்கிறார்கள். இரண்டு மணி நேரம் சண்டை நடந்திருக்கின்றது. அதற்குப் பிறகு உயர் அதிகாரி வந்தார்,

1981 சனவரி 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின் மீது எனது சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அவரது உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற சில விஷயங்கள் பற்றி பேசுவதற்கு முன்னால் எனக்கு அளிக்கப்பட்ட மிகக்குறைவான நேரத்தில் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடருக்கும் இக்கூட்டத்தொடருக்கும் இடையே நடந்துவிட்ட சில நிகழ்ச்சிகளைப் பற்றிச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டி என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

செப்டம்பர் மாதம் 22ஆம் தேதி இந்த நாட்டு மக்களுக்கு இலவசமாக ஒரு சட்டம் தரப்பட்டது. அதன் பெயர் தேசிய பாதுகாப்புச் சட்டம். இலவசமாக தரப்படுவது எதையும் ஏற்றுக் கொள்வது என்ற மனநிலையை இந்த நாட்டு மக்கள் வளர்த்துக் கொள்ளக் கூடாது என்பது என்னுடைய கருத்து. அவ்வாறு தரப்பட்ட சட்டத்தின் நிலைமை என்ன, அதன் தன்மைகள் என்ன என்பதைத் தெரிந்துக்கொள்வதற்கு முன்பே நம்முடைய முதல்வர் அவர்கள் அதற்கு ஆதரவு தந்தார்கள் என்பதை எண்ணி நாங்கள் வேதனைப்படுகிறோம். இந்த சட்டம் அரசியல் காரணங்களுக்காக நிச்சயமாக பயன்படுத்தப்பட மாட்டாது என்ற உறுதிமொழி தரப்படுகிறபடியினால் அவ்வாறு அச்சட்டத்திற்கு ஆதரவு தரப்பட்டதற்கான காரணம் என்று சொல்லப் படுகின்றது. இங்கே நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். இதற்கு முன்பும் இதேபோன்று மிசா என்ற ஒரு சட்டம் இந்த நாட்டிலே புகுத்தப்பட்டபோதும் இதே மாதிரித் தான் வாக்குறுதி தரப்பட்டது என்பது நம் அனைவருக்கும் நினைவிருக்கும். அப்போது தரப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் இந்த நாட்டிலே காராகிரகத்திற்கு அனுப்பப்பட்டார்கள் என்பது நமக்குத் தெரியும். இத்தனையும் தெரிந்த பிறகும் இப்போது வந்திருக்கின்ற இந்த தேசியப் பாதுகாப்புச் சட்டத்திற்கு தமிழக சர்க்கார் ஆதரவு தருவது என்பது எங்களுக்கு மிக்க வேதனையாக இருக்கின்றது. முன்பு மிசா சட்டம் தேசிய விரோதச் சக்திகளுக்கு எதிராகவும், கள்ளமார்க்கட்காரர்களுக்கு எதிராகவும்தான் பயன்படுத்தப்படும் என்று சொல்லி விட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டமன்றஉறுப்பினர்களும் கைது செய்யப்பட்டார்கள். அந்தச் சட்டத்தின் குறைகளை ஆளுகின்றவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்த ஒரே காரணத்திற்காக என்.ஜி.ஓ. சங்கத் தலைவர் கைது செய்யப் பட்டார். எனவே இந்த சட்டமன்றத்திற்கு நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இந்தச் சட்டம் சமூக விரோத சக்திகளுக்கு எதிராக மட்டும்தான் பயன்படுத்தப்படும் என்று சொல்வதை நம்பி இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டால் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டவர்களும் நிச்சயமாக இந்தச் சட்டத்தின் கோரத்திலிருந்து தப்ப முடியாது என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. பி. முகமது இஸ்மாயில்] [1981 சனவரி 29

[பிற்பகல் 12-20]

அது மட்டும் அல்லாமல் என்.ஜி.ஓ. தரப்பிலே தரப்படுகின்ற சில கோரிக்கைகளை மட்டும் வைத்துக் கொண்டு அதுவும் சமூக விரோத செயல் என்ற முடிவுக்கு நாம் வருவதாக இருந்தால் இந்த சட்டமன்றத்தில், இந்த இருக்கைகளில் இருக்கக்கூடிய பலர் அந்தச் சட்டத்தினால் நசுக்கப்படுவார்கள் என்ற எச்சரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன். இந்த மாநில சர்க்காரைப் பொறுத்த அளவிலே திரு. நாராயணசாமிநாயுடு என்ற பிரமுகர் ஒருவரைக் கைது செய்கிற வழியாக இந்த தேசீயப் பாதுகாப்புச்சட்டம் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. ஏதோ சமூக விரோத செயல்களில் சிலர் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று சொல்லி அதைத் தடுக்க இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தியதாகச் சொல்கிறார்களே, அப்படி சமூக விரோதச் செய்கைகளைத் தடை செய்வதுதான் அரசாங்கத்தின் எண்ணமாக இருந்தால், தடை விதிப்பதற்கு வேண்டிய எத்தனையோ வேறு பல சட்டங்கள் நம் சட்டப்புத்தகத்தில் இருக்கின்றனவே அவைகளை பயன்படுத்தியிருக்கலாமே, அவைகளைக் கொண்டு அவரைக் கைது செய்திருக்கலாமே என்று கேட்க விரும்புகிறேன். அதற்கு மாறாக எந்தச் சட்டம் தேச விரோத செயல்களுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்த என்று சொல்லிக் கொண்டு வரப்பட்டதோ அந்த சட்டத்தைக்கொண்டு நாராயணசாமி நாயுடுவைக் கைது செய்திருக்கிறார்களே, அந்தச் செய்கையைக் கண்டு ஜனதா கட்சி வேதனைப்படுகிறது. எனவே இந்த தேசீய பாதுகாப்புச் சட்டம் என்பது சட்டப்புத்தகத்தில் மட்டும் அலங்காரப் பொருளாக இருக்கட்டும். தயவுசெய்து சட்டத்தை அமல் நடத்தப் பொறுப்பேற்றிருக்கிற அரசு இந்தச் சட்டத்தை யாருக்கும் எதிராக பயன்படுத்த வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே அதிகாரப் பொறுப்பில் இருக்கிறவர்கள், இதுநாள் வரையில் ஆட்சிமுறையில் இருந்து வந்த முறைகள் மாற்றப்பட வேண்டும் என்ற விவாதம் எங்கோ எழுந்து கிளம்பி வரும்போதே, ஓடோடிச் சென்று அதற்கு ஆதரவு தருவதைப் பார்க்கும்போது ஜனதாகட்சி வேதனைப்படுகிறது. பாராளுமன்ற ஆட்சிமுறை மாறி ஜனாதிபதி ஆட்சிமுறை வேண்டும் என்ற வாதம் எழுப்பப் பட்டிருக்கிறது. எந்த மாதிரியான ஜனாதிபதி ஆட்சிமுறை வேண்டும். அமெரிக்காவில் நாம் பார்க்கிறோமே அந்த மாதிரியான ஜனாதிபதி ஆட்சி முறையா? அல்லது பிரெஞ்சு நாட்டில் இருக்கிறதே அதைப்போன்ற ஆட்சிமுறையா, அல்லது ஏனைய சர்வாதிகார ஆட்சி முறைகள் நடக்கின்ற சில நாடுகளில் நாம் பார்க்கின்ற ஜனாதிபதி ஆட்சி முறையா, இதில் எது வேண்டும் என்பதை மிகத் தெளிவாகத் தெரிந்துக் கொள்வதற்கு முன்னரே, ஜனாதிபதி ஆட்சி முறை என்று தரப்படுகிற கோரிக்கையின் பின்னாலே ஒளிந்துக் கொண்டிருக்கிற நிலைமைகளைப் புரிந்துக் கொள்வதற்கு முன்னாலே ஓடோடிச் சென்று அதற்கு ஆதரவு தருகிற விந்தையான நிலையை தமிழ்நாட்டில் நாம் பார்க்கையில் ஜனதா கட்சி தன்னுடைய வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறது.

1981 சனவரி 29] (திரு. பி. முகமது இஸ்மாயில்)

அதேபோல நீதிபதிகள் இடம் மாற்றம் பற்றி மிகக் காரசார மான விவாதம் இங்கே நடைபெற்றது. அதை நாம் எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தோம். நீதிபதிகள் இடமாற்றம் செய்யப் படக்கூடாது என்பதற்காக இங்கே வைக்கப்பட்ட வாதங்கள் வலியுயர்ந்தனவாக இருந்தன. தமிழ்மொழி தெரியாத ஒருவர் அல்லது மாநில மொழி தெரியாத ஒருவர் மாநில உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாகக் கொண்டு வருவது அவ்வளவு சிறப்பாக ஆகாது என்ற முறையில் தரப்பட்ட வாதங்கள் இருந்தன. இதற்கெல்லாம் மேலாக, ஏதோ சில நீதிபதிகளை ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு மாற்றுவது பற்றி ஜனதா கட்சியான எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் அப்படி மாற்றுவதற்காக பயன்படுத்துகின்ற அதிகாரங்கள் இருக்கிறதே, அந்த இட மாற்ற அதிகாரம் அதை பிரயோகப் படுத்துகிற போதுதான் அதன் பின்னால் ஒளிந்துக் கொண்டிருக்கிற அரசியல் சதிகளை நீங்கள் அனைவரும் புரிந்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் அரசாங்கம் அதிகாரம் பெற்று ஆட்சி செய்வதற்கு துணையாக இருக்கிற அரசியல் சாசனங்களையே மாற்றுகிற முறையில் சில நிலைமைகள் ஏற்பட்டுவிடுமோ என்று நாம் அச்சப்படுகிறோம், அத்தகைய நிலைமைகள் ஏற்பட்டு ஆளுகிறவர்கள் சட்டத்தை மாற்றுகிறபோது ஜீவாதாரமான அடிப்படை நிலைமைகள் கூட மாற்றப்படுகிறபோது, அதை நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிற நிலைமை ஏற்படலாம். அப்போது அங்கே இருக்கக்கூடிய நீதிபதிகள், அரசாங்கத்திற்கு எதிராக தங்களுடைய தீர்ப்பை வழங்கக்கூடாது என்ற முறையில் நிரந்தரமான அச்ச உணர்ச்சிக்கு அவர்களைத் தள்ளக்கூடாது அந்த வகையில் இந்த இடமாற்றம் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்ய வாய்ப்பு இருக்கிறது என்றுதான் ஜனதா கட்சி அஞ்சுகிறது. ஆக நீதிபதிகளை ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு மாற்றுகிற அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடாது, நாம் அதற்கு ஆதரவாக இருக்கக்கூடாது என்பதைத்தான் இந்த மன்றத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அடுத்து ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிற வேறு சில நிலைமைகள் குறித்து நிச்சயமாக ஜனதா கட்சி தன்னுடைய ஆதரவையும் பாராட்டுதலையும் தரத் தயாராக இருக்கிறது. அதிலே வேலைக்கு உணவு திட்டம் அமுல் நடத்தப்படும் என்று உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது. அதைப் பாராட்டுகிற சில அதே நேரத்தில், அதில் இருக்கிற சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். இந்த வேலைக்கு உணவுத் திட்டத்தை அமுல் நடத்துகிற போது, வேலைக்கு அமர்த்தப்படுகிறவர்களுக்கு 2 கிலோ அரிசியும், ஒரு கிலோ அரிசியின் விலையும் ஊதியமாக தரப்படும் என்று சொல்லுகிறார்கள். இப்படி சொல்கையில் நிச்சயமாக நம்முடைய வேலைக்கு உணவுத் திட்டத்தில் ஆள் கிடைக்காத நிலைமையை நாம் பார்க்கிறோம். அதற்குக் காரணம். இன்றையதினம் வேலையாட்களுக்கு தரப்படுகிற கூலிகளின்

நிர்ணயமும் அதற்கு அவர்கள் உரிமை பெற்றிருப்பதையும் எல்லோரும் அறிவோம். அதன்படி கூலியாட்களுக்கு 10 ரூபாய், 15 ரூபாய் கூலி கிடைக்கிறபோது, 2 கிலோ அரிசிக்காகவும், ஒரு கிலோ அரிசியின் விலையையும் பெற்றுக்கொண்டு வேலைக்கு வருவதற்கு வேலையாட்கள் கிடைக்காத சூழ்நிலை ஏற்படும்.

இன்னும் அதிகப்படியான கவர்ச்சி ஊதியம் அவர்களுக்குத் தரப்பட வேண்டும். அப்போதுதான் இந்த வேலைக்கு உணவுத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும் என்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தரப்படும் என்று உரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இது மிக மிக விரும்பி வரவேற்கத்தக்கதொரு திட்டமாகும். ஆனால் அந்தத் திட்டம் வெறும் திட்டமாக இல்லாமல் அல்லது வெறும் வாக்குறுதியோடு மட்டும் நின்றுவிடாமல் அதை அமுல்படுத்துகிற முறையில் அரசு முயன்று செயல்படவேண்டுமென்பது என் வேண்டுகோள்.

சிறு விவசாயிகள் பெற்றிருந்த கடன்களை, சிலர் தாங்கள் பெற்ற கடன்களை நாணயமாக திருப்பி தந்துவிட்டார்கள், இப்போது கடன் நிவாரணம் அளிக்கின்றபோது ஏற்கனவே பெற்ற கடன்களைத் திருப்பிசெலுத்திவிட்ட சிறு விவசாயிகளுக்கும் பயன் கிடைக்கிற வகையில் ஏற்கனவே அவர்கள் செலுத்திவிட்ட கடன் தொகையை அடுத்து அவர்கள் அரசுக்கு செலுத்தவேண்டிய கடனுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படும் என்ற உறுதிமொழி தரப்பட்டிருப்பதை வரவேற்கிறோம்.

பெட்ரோலியம் பொருள்களின் விலை ஏறிவிட்டதால் அரசாங்கம் நடத்திவருகிற பேருந்துகளுக்கு நாம் இன்றையதினம் நிர்ணயித்திருக்கிற சில நிலைகள் மாற்றப்படும் என்று சொல்கிறார்கள். நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். எந்த அளவிற்கு விலையேற்றம் இருக்கிறதோ அதற்கு உகந்த வகையில் அதற்கு அதிகப்பட்டு விடாமல் டிக்கட் கட்டணங்களை நிர்ணயம் செய்வதில் எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் பெட்ரோல் பெட்ரோலியம் பொருள்கள் விலை ஏறுகிறது என்ற காரணத்தால் பெட்ரோல், டீஸல், மண்ணெண்ணெய் இவற்றின் விலைகள் ஏறிவிட்டதால் அரசாங்கத்திற்கு எந்த அளவிற்கு செலவு அதிகமாக ஏற்படுகிறதோ, அதைவிட அதிகமாக விலையை உயர்த்துகிற சூழ்நிலையை உருவாக்கி வருகிறார்கள்.

மத்திய அரசு பெட்ரோலியம் பொருள்களின் விலைகள் ஏறுகிற காரணத்தால் தங்களுக்கு ரூ. 600 கோடி அதிகமாக செலவுக்கு தேவைப்படுகிறது என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ஏற்படுகிற செலவைச் சரிக்கட்டுவதற்காக விலையேற்றம் செய்வதாகச் சொல்லிக்கொண்டு அவ்வாறு ஏற்படுகிற விலை வாயிலாக ரூ. 1,200 கோடி பெறுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்போது உயர்த்தப்பட்டிருக்கிற [illegible] அடிப்படையில் பார்த்தால் ரூ. 1,200 கோடி அதிகமா[illegible]

வரும். ஆகவே ரூ. 600 கோடி அதிகமாக கிடைக்கும் வகையில் வரி என்று சொல்லிக்கொள்ளாமல் சேமித்துக் கொள்கிற சூழ்நிலையை அங்கு ஏற்படுத்தியதுபோல் நமது மாநில சர்க்காரும் எண்ணெய் விலை ஏறிவிட்டது என்ற காரணத்தைச் சொல்லி அதிகப்படியாக ஏற்படும் செலவுக்கு ஏற்றாற்போல் கட்டணத்தை அதிகப்படியாக ஏற்றிவிடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கு பற்றி பல உறுப்பினர்கள் பலவிதக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மதுவிலக்கு பற்றி அரசாங்கம் திடமான ஒரு முடிவைச் சொல்லாமல் இந்தமன்றத்தின் உணர்வுகளை தெரிந்து கொண்டு செயலாற்றுவதுபோல் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். மதுவிலக்கு பற்றி இங்கே குறிப்பிட்டுள்ள கருத்துக்களைப் பார்க்கும்போது ஜனதா மேற்கொள்கிற நிலைக்கு நிச்சயமாக இந்த அரசின் ஆதரவு கிடைக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் அதை அமல்நடத்த வேண்டும், அதையும் சீராக அமல்நடத்த வேண்டும் என்பது எங்கள் ஜனதாக் கட்சியின் எண்ணம். மதுவிலக்கு ரத்து செய்யப்பட வேண்டும் என்பதற்காகத் தரப்பட்டிருக்கிற காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல. சட்டம் இருந்தும் சட்டம் மீறப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதிலும் மிக அதிகமாக மீறப்படுகிறது, எனவே சட்டம் தேவை இல்லை என்பது ஒரு வாதம். நான் இந்த வாதத்தின் சொந்தக்காரர்களுக்கு மரியாதையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிரிமினல் சட்டப் புத்தகத்தில் பல சட்டங்களை இயற்றி வைத்திருக்கிறார்கள். 500-க்கு அதிகமான ஷரத்துக்கள் உள்ளன. பயங்கரமான சில குற்றங்கள் செய்பவர்களுக்கு பயங்கரமான தண்டனை வழங்கவேண்டும் என்று சட்டம் இயற்றி வைத்திருந்தாலும், சட்டங்கள் படிப்படியாக மீறப்படுகின்றன. தொடர்ச்சியாக மீறப்படுகின்றன. ஏன், கொலை செய்யக்கூடாது என்று நாம் ஏற்படுத்தியிருக்கிற சட்டமும்கூட மீறப்படுகிறது. ஆயுள் தண்டனை நிச்சயமாகக் கிடைக்கும் என்ற பயங்கரமான நிலை இருந்தும் கூட அந்தச் சட்டமும் மீறப்படுகிறது. எனவே அதை வைத்துக்கொண்டு கிரிமினல் குற்றவியல் சட்டத்தை மாற்றிவிடுவது என்ற முடிவிற்கு வந்தால் அது எத்தனை போலித்தனமான வாதம் என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும். இந்தச் சட்டத்தை வேகமாக நல்லமுறையில் திறமையாக செயல்படுத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள். சில குற்றங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய பொறுப்பில் இருக்கிற அதிகாரிகள் தவறிவிடுகிற நிலையில், சில நேரங்களில் சொல்ல முடியாத காரணங்களுக்காகக் கூட சட்டத்தை வேகமாக நடத்துவதற்கு போலீஸார் தயக்கம் காட்டுவதுண்டு.

(பிற்பகல் 12.30)

இந்தக் காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு இந்த கிரிமினல் சட்டத்தை அமுல்படுத்த வேண்டாம் என்று மெத்த பணிவோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் ஒரு கருத்து தெரிவிக்கப் [illegible]பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு ஏறத்தாழ [illegible]00 கோடி ரூபாய் இழப்பு வருகின்றது என்றும் சொல்லப்பட்டது. இந்த இழப்பை ஈடு செய்வதற்கு மத்திய அரசாங்கம் நமக்கு நிதி உதவி

(திரு பி. முகமது இஸ்மாயில்) [1981 சனவரி 29

செய்ய முன்வராத காரணத்தினால், இந்தச் சட்டத்தை மாற்றுங்கள், மாற்ற வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். நான் மரியாதையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு தனி மனிதன் தான் சம்பாதிக்கிற பணத்தில் முழுமையாக அதைச் செலவழித்து விடுவதுண்டு. 10 ரூபாய், 15 ரூபாய் தினமும் சம்பாதிக்கின்ற ஒரு கூலி ஆள், தான் சம்பாதிக்கின்ற பணத்தில் பெரும் பகுதியை சேமித்து வைக்கும் மனப்பக்குவத்தை அடையவில்லை. தான் பெருகின்ற ஊதியத்தை தினமும் செலவழிக்கின்ற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, 10 ரூபாய் வருமானம் வந்தால், அதிலே 5 ரூபாயை தனக்கு வேண்டிய அத்தியாவசிய பண்டங்களை வாங்குவதற்கு செலவழிக்கின்ற போது, எஞ்சியுள்ள 5 ரூபாய்ய மது அருந்துவதற்கு செலவழிக்கிறான். மது அருந்துவதன் மூலம் அவன் அரசாங்கத்திற்கு பணம் தருகிறான். அதே நேரத்தில், ஏனைய பொருள்களை வாங்குவதன் வாயிலாக சேல்ஸ் டாக்ஸ் மூலமாக பணம் தந்து கொண்டிருக்கிறான். இதை நாம் மறந்துவிட முடியாது. ஒட்டு மொத்தமாக வருகின்ற வருவாயை சேமித்து வைக்கின்ற மனப்பக்குவம் இல்லாத காரணத்தினால், மது அருந்தக் கூடாது என்ற ஒரு கொள்கையை அமுல்படுத்துகின்றபோது, முழுமையாக தான் பெற்றிருக்கின்ற, சம்பாதிக்கின்ற 10 ரூபாய்க்கு தனக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களை வாங்க செலவழிக்கின்றபோது, சேல்ஸ் டாக்ஸ் என்ற வகையில் அதிகமான பணத்தை தான் தெரியாமல் இந்த அரசாங்கத்திற்கு தந்து கொண்டிருக்கிறான் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆக, அவன் செலவழிக்கின்ற பணத்திற்கு விற்பனை வரி உண்டு. வேறு இனங்களின் மூலம் செலவழிக்கின்றபோதும், ஒட்டு மொத்தமாக சேல்ஸ்டாக்ஸ் மூலம் அந்தப் பணம் வந்துவிடுகிறது. அந்த நிலையில் இந்த அரசாங்கம் தவறான ஒரு கணக்கைக் கொண்டிருந்தாலும், அரசாங்கம் நிச்சயமாக இதன்மூலம் எதிர்பார்க்கும் 200 கோடி ரூபாய் பெறமுடியாது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

எனக்கு முன் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசிய சில தோழர்கள் மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப்படுவதன் வாயிலாக, ஏழைகள் தான் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்று சுட்டிக் காட்டினார்கள். அதேபோல் இதனால் அதிகமான இடையூறுக்கு உள்ளாக்கப்படுபவர்கள் அருமை சகோதரிகள் என்றும் சுட்டிக் காட்டினார்கள். இது ஒரு சமூக நலத் தொண்டு என்பதை மனதில் கொண்டு, இதை அதிக உறுதியோடு செயல்படுத்த வேண்டுமென்ற நிலையை ஜனதா கட்சி மேற்கொண்டிருப்பதோடு, இந்த அரசாங்கமும் அதை அமுல்படுத்துகின்ற வகையில் தங்களுடைய முழுக்கவனத்தையும் கொண்டு வரவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு, ஆளுநர் உரையின்மீது சில கருத்துக்கள் கூற வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

1981 சனவரி 29] [திரு [illegible] முத்துராமலிங்கம்]

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் செய்திகளை அழகாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. இதில், 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று சொல்லப்பட்டுள்ள இந்தக் கேட்பாட்டைச் செயல்படுத்துவதற்கு இந்த மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்ற காரணத்தினால், இதை நடைமுறையில் செயல்படுத்த வேண்டும்.

குறிப்பாக, தேசிய மயமாக்கப்பட்டுள்ள வங்கிகளிலே காசோலை, மற்றும் பணம் பெற்றுக் கொள்வதற்கான ரசீது போன்றவைகளிலே பாமரமக்களும் அதை உணர்ந்து பயன்படுத்திக் கொள்ளக்கூடிய அளவிலே, அவைகளிலே ஆங்கிலம் மட்டுமல்லாமல் தமிழிலும் அச்சடிக்கப்பட வேண்டும் என்பதற்கு ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும். இதுபோலவே, அரசின் அனைத்து ஆணைகளும் தமிழிலே பிறப்பிக்கப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மாநிலத்திலுள்ள அனைத்து வருவாய் கிராமங்கள் தோறும் நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தி அதன்மூலம் அத்தியாவசியமான பொருள்களை விநியோகம் செய்து வருவதைப் பாராட்டுகிறோம். ஆனால் அதே நேரத்தில் பல கிராமங்களில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அத்தியாவசியமான பொருள்களை விநியோகம் செய்து வருகிறார்கள். இதிலே ஏற்கனவே நிறைய முறைகேடுகள் இருந்து வருவதை அனைவரும் அறிவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் நீண்ட நெடுங் காலமாக இருந்து வருவதால் கூட்டுறவுச் சங்கங்களைத் தன்னிச்சையாக நடத்தி அத்தியாவசியமான பொருள்களை ஏழை எளிய மக்களுக்கு வழங்காமல் எத்தனையோ முறைகேடுகள் நிகழ்ந்து வருகின்றன. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அத்தியாவசியமான பொருள்கள் வழங்கப்படுவதை நிறுத்தி அனைத்துப் பொருள்களையும் ஆங்காங்கு கிராமங்கள்தோறும் நியாய விலைக் கடைகளைத் திறந்து அதன் மூலம் வழங்க வேண்டுமென்றே கோரிக்கையை விடுக்கிறோம்.

இந்த ஆண்டில் தமிழகத்தைப் பொறுத்தவரை போதிய அளவு மழை பெய்யவில்லை என்பதை இந்த அரசு ஒப்புக் கொண்டுள்ளது. குறிப்பாக, நெல்லை மாவட்டத்தில் போதிய அளவு மழை பெய்யவில்லை. இதன் காரணமாக, நெல், வாழை போன்ற பயிர்கள் தீய்ந்து போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏராளமான கிராமங்களில் மக்கள் குடிநீருக்கும் கஷ்டப்படும் நிலை ஏற்பட்டுள்ளதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டுள்ளோம். மற்ற மாவட்டங்களில் நிலவரி போன்றவற்றைத் தள்ளுபடி செய்தது போன்று நெல்லை மாவட்ட மக்களுக்கும் அந்தச் சலுகையை வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்றும், துயர் நுடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கோரிக்கையை வைக்கிறோம்.

(திரு இ. முத்துராமலிங்கம்) [1981 சனவரி 29

ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளது போல் கேரளாவில் மற்கு நோக்கிப் பாயும் உபரி நீரிலிருந்து ஓரளவு நீரைத் தமிழ் நாட்டுக்குத் திருப்பிவிட கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்தும் என்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அந்தக் கருத்து—கொக்கு தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிப்பது போல் இருக்கிறது. இதனால் பயன்பெறும் மாவட்டம் நெல்லை மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் ஆகும்.

நெல்லை மாவட்டத்தில் ஓடுகிற ஆறுகளின் குறுக்கே சிறு சிறு திட்டங்களை நிறைவேற்றினால் ஏராளமான நிலங்கள் பாசன வசதி பெற முடியும். என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் கிட்டத்தட்ட 28 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப் படக்கூடிய நம்பியாற்றுத் திட்டம். ஏற்கனவே நிறைவேற்றப் பட்டு இப்போது இடிபாடு காரணமாக தண்ணீர் வராது நின்றுவிட்ட ஆலந்தையாறு திட்டம். ஏற்கனவே நெருக்கடி நிலைமை அமலில் இருந்தபோது 40 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு, ஒருசிலருக்குப் பிடிக்காததால் நிறுத்தப்பட்ட கொடுமுடியாறு திட்டம் போன்றவற்றை நிறைவேற்றினால் நெல்லை மாவட்டத்தில் நாங்குனேரி தாலுகா நீர்ப்பாசன வசதி பெறும். இந்த மூன்று திட்டங்களையும் நிறைவேற்ற ஆவன செய்யவேண்டும்.

சாலைப் போக்குவரத்தைப் பொறுத்த அளவில் நெல்லை மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. நெல்லை, குமரி மாவட்டங்களை இணைத்து கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் நிறுவப்பட்டு தலைமை இடம் நாகர்கோயிலில் உள்ளதால் நெல்லை மாவட்டம் புறக்கணிக்கப்படக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, நெல்லை மாவட்டத்திற்குத் தனியாக போக்குவரத்துக் கழகத்தை நிறுவி, அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு 'பெருந்தலைவர் காமராஜ் போக்குவரத்துக் கழகம்' என்ற பெயர் சூட்ட வேண்டுமென்ற கோரிக்கையை எங்கள் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கு பற்றிக் குறிப்பிடுகையில்— நடந்து முடிந்த விவசாயப் போராட்டத்தில் விவசாயிகள் அல்லாத ஏராளமான வர்களைக் காவல் துறையினர் தங்கள் சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக பலவித இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதைப் பற்றிய விவரமான அறிக்கையை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் விரும்பினதால் தரத் தயாராக இருக்கிறோம். இது குறிப்பு ஆங்காங்கு வந்த புகார்களை எல்லாம் வரிசைப்படுத்தி தனியாக விசாரணை நடத்த வேண்டு மென்ற கோரிக்கையை முன் வைக்கிறோம்.

மதுவிலக்கைப் பொறுத்தவரை இன்றையதினம் எங்கு பார்த்தாலும் அது தோல்வியடைந்து கள்ளச்சாராயம் ஆங்காங்கு பெருகி வருகிறது. இதைத் தடுக்கும் வகையில் சட்டத்தை அமல்படுத்தவேண்டும். மதுவிலக்கை ரத்து செய்வதை நிறுத்த வேண்டும், எந்தக் காரணத்தைக் கொண்டும் மதுவிலக்கிலிருந்து சற்றேனும் பின்வாங்கக் கூடாது என்ற கோரிக்கையை எங்கள் கட்சியின் சார்பாக விடுக்கக் கொள்கிறேன்.

அறிவுப்பு

1981 சனவரி 29] (திரு இ. முத்துராமலிங்கம்)

[பிற்பகல் 12.40]

பஸ் கட்டண உயர்வு பற்றி பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. அதுபற்றித் தனிப்பட்ட பஸ் முதலாளிகளிடமிருந்து எந்தக் கோரிக்கையும் வந்ததாகத் தெரியவில்லை. அதே நேரத்திலே தனியார் கம்பெனி பஸ்கள் அனைத்தும் லாபத்தில் ஓடக்கூடிய நிலையில் இருக்கிறது, ஆகவே அரசுப் போக்குவரத்துக் கழகம் மட்டும் பஸ் கட்டண உயர்வு பற்றிப் பேசுவது வியப்பாக இருக்கிறது. ஏழை எளிய மக்களின் நலனை முன்னிட்டு பஸ் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று கூறி எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

8. அறிவிப்பு

போக்குவரத்து மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

நாளைய முன்னாள் இராணுவ வீரர்களுடைய நினைவுச் சின்னத்திற்கு அருகில் ஒரு பேரட் நடைபெறுகிற காரணத் தாலேயும் நாளைக்கு அவர்கள் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துகிற வகையிலும் காலை 7 மணி முதல் 9 மணி வரையிலும் அந்தப் பாதையிலே போக்குவரத்து நிறுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து சுற்றுப்புறமாக இருக்கிற ஆடம்ஸ் சாலை வழியாகவும், தீவுத் திடல் வழியாக காயிதே மில்லத் பாலத்தின் வழியாகவும் செயின்ட் ஜார்ஜ் பாலத்தின் வழியாகவும் வந்து சேரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இறுதியாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்பி கிறேன் எனக்கு முன்னாலே பேசிய எங்களுடைய கட்சியினுடைய உறுப்பினர்கள் இந்த உரையிலே இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி கருத்துக்களைத் தெளிவுபடுத்தியிருக் கிறார்கள். இந்த அரசு சமீபத்திலே நடந்த தேர்தலிலே தோழமைக் கட்சிகளுடைய ஆதரவோடு வெற்றி பெற்று அமர்ந்ததைத் தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் பெரிதும் வர வேற்றுப் பாராட்டினார்கள். இந்த அரசு பொது மக்களுக்கு செய்யவேண்டிய நல்ல காரியங்களைச் செய்யக்கூடிய அனைத்தையும் மார்க்சிஸ்ட் கட்சி ஆதரிக்கும் என்றும் அதிலே தவறுகள் ஏற்பட்டால் தவறுகளை நட்பு முறையிலே விமர்சனம் செய்யும் என்றும் எங்களுடைய கட்சியில் நிலை எடுக்கப் பட்டது. அதே நிலையில் தான் நிற்கிறோம். இன்று இந்த

அரசு இந்திய அரசினுடைய பல தவறான கொள்கைகளை பின்பற்றுகிற ஆதரிக்கிற அரசியல் மாற்றத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். அதன் விளைவாக பொருளாதாரக் கொள்கையிலே தவறான வழியிலே இந்த அரசு சென்றுக்கொண்டிருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம்.

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை]

அந்த கொள்கைகள்பற்றி நான் என்னுடைய உரையிலே, பிறகு குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். அது எப்படி இருந்தபோதிலும், இந்த அரசியல் கருத்து வேறுபாடுகளினால் பாதிக்கப்படாமல் அரசாங்கம் செய்யக் கூடிய காரியங்களை நிதானத்தன்மையோடு மக்களுக்கு நன்மைகள் செய்கிறதா என்ற அந்த ஒரே ஒரு உரைக்கல்லில் தேய்த்துத்தான் நாங்கள் பார்க்கிறோம். அந்த அடிப்படையிலே ஆக்கப்பூர்வமான காரியங்களை நாங்கள் வரவேற்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அம்சத்திலே பார்க்கிறபோது உலகத் தமிழ் மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்தியதாகக் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் தங்கள் மொழியை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறார்கள் என்பதை அந்த மாநாட்டிலே திரண்டிருந்த மக்கள் எடுத்துக் காட்டினார்கள். அந்த ஆரம்ப விழாக் கூட்டத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் பங்கெடுத்துக்கொண்டு எங்களுடைய வாழ்த்துக்களை அந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்த இந்த அரசுக்குத் தெரிவித்தேன் என்பதை நான் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அந்த மாநாட்டை ஒட்டி செலவிடப்பட்ட செலவுகளைப் பற்றி சில குறைபாடுகள் சொல்லப்பட்டன. மதுரை நகருக்கும் கூற்றியுள்ள பகுதிகளுக்கும் அந்தச் செலவினுடைய பெரும் பகுதியினால் பலன் ஏற்பட்டு இருக்கிறது என்று கருதுகிறேன். ஏதாவது குறைபாடுகள் இருந்தால் பொது கணக்குக் குழுவிலே அவைகளைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக மதுரை நகருக்காக செலவிடப்பட்டிருக்கிற செலவுகளை பொதுமக்கள் பாராட்டுகிறார்கள்.

அந்த மாநாட்டைப்பற்றி சில விமர்சனங்களும் உண்டு. அதாவது அதனுடைய "அகநிலை ஆராய்ச்சிக் கருத்தாங்கு" என்று நடத்தப்பட்டது. அதிலே நான் கலந்திருந்தேன். மாண்புமிகு முதலமைச்சரவர்களும் வந்திருந்தார்கள். எனக்கு என்னவேதனையாக இருந்தது என்றால், கம்ப ராமாயணத்திலே உள்ள சிறந்த அழகியல் உண்மைகள் என்பதைப்பற்றி ஆங்கிலத்திலே விவாதித்தார்கள். உலகத் தமிழ் மாநாடு என்று வைத்துக் கொண்டு உலகத்திலேயிருந்து வந்து இருக்கக்கூடிய அறிஞர்கள் தமிழைப்பற்றி ஆராய்வதற்காகத்தான் வந்திருந்தார்கள். அவர்களிடத்திலே ஆங்கிலத்திலே அந்த ஆராய்ச்சி உரைகளை நடத்தினால் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அது

எப்படி இட்டுச் செல்லும்? மாண்புமிகு திரு. ம. பொ. சி. அவர்கள், கருத்தரங்கிலே கலந்துக் கொண்டு பேசும்பொழுது குறிப்பிட்டார்கள் "நம்முடைய இராமனைப் பற்றியும், நம்முடைய சீதையைப் பற்றியும் பேசுகிறார்கள் என்கின்ற ஒன்று மட்டும்தான் எனக்குத் தெரிகிறதே தவிர பாக்கி என்ன விஷயத்தைப்பற்றி பேசினார்கள் என்பது எனக்கே தெரியாது" என்று பிறகு பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஆராய்ச்சி முழுவதும் இனிமேல் எந்த இடத்திலே உலகத் தமிழ் மாநாடு நடந்தாலும் தமிழிலே நடைபெற வேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல அராய்ச்சியிலே பழமையினுடைய கருத்துக்களை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு, அதை மட்டும் வற்புறுத்துகின்ற பிரதிநிதிகளை மட்டும் அனுமதித்தால் போதாது. புதுமைக் கருத்துக்களையும், சரித்திர இயல் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு தமிழினுடைய சரித்திரத்தை இன்றைக்கு ஆய்வு செய்யக்கூடிய அறிஞர்களுக்கும் இதிலே இடமளித்திருக்க வேண்டும். கருத்துக்கள் ஒன்றோடொன்று மோதுவதால் தவறு ஏற்படப் போவதில்லை. அதைப்பற்றிய பிரச்சனையும் அங்கே வந்தது. இது பிற்காலத்தில் நல்ல வழி காட்டுவதாக அமையும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அந்த ஆரம்ப விழாக் கூட்டத்தில் நான் சொன்னதைப் போல, [illegible] தமிழ்மொழியை ஆட்சி மொழியாகவும், நீதி மன்ற மொழியாகவும் பயிற்சி மொழியாகவும் ஆக்குகிறோமோ அதுதான் தமிழ் அன்னைக்குச் செய்யக் கூடிய சிறந்த சேவை என்று குறிப்பிட்டேன். குறிப்பாக நான் அங்கே சொன்னது பாலர் வகுப்பு முதல் நர்சரி வகுப்பு முதல் என்று இளம் சிறார்களுக்கு அங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி கொடுக்கும் பள்ளிகள் ஏராளமாக தோன்றியிருக்கின்றன. அவற்றில் அந்தப் பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தை [illegible] சொல்லிக் கொடுக்கப்பட்டாலும் எவ்வளவு தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாக்கி அவர்கள் மேல் நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் படிக்க முடியும் என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். [illegible] மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால் அரசாங்கமும், நகராட்சிகளும், [illegible] களுக்கும் தமிழ் மொழி மூலம் பயிற்றுவிக்கக் கூடிய பள்ளிகளுக்கு ஏற்பாடு செய்தால் [illegible] சரித்திர இயல், கணித இயல் [illegible] முடியும் என்று நான் [illegible] மான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைத் தமிழ் மொழி மூலமாகப் பயிற்றுவிக்கக்கூடிய பள்ளிகளுக்கும் அனுப்புவார்கள். அதுதான் இன்றைக்கு தமிழ்மொழி ஏற்றத்தைப் பெறுவதற்கு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1981 சனவரி 29

இன்றைக்கு மதுரையில் இருக்கும் சட்டக் கல்லூரியில் கூட பெரும்பாலான பாடங்கள் ஆங்கிலத்திலே நடத்தப்படுகின்றன. இலங்கையிலே ஏற்கனவே மருத்துவம் போன்ற விஞ்ஞானத்தைத் தமிழ்மொழியிலே கற்றுக்கொடுக்க பாடத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. தமிழின் மீது ஆழ்ந்த அக்கறை கொண்டு இருக்கின்ற இந்த அரசு அதில் எல்லாக் கட்சிகளும் அக்கறை கொண்டிருப்பதால் எவ்வளவு இடைஞ்சல்கள் இருந்தபோதிலும் பயிற்று மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும், ஆட்சிமொழியாகவும் தமிழைக் கொண்டு வருவதற்குச் சரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பலகீனம் என்னவென்றால் தமிழகத்திலே சட்ட மன்றத்திலே வைக்கப்படும் ஏடுகள்கூட, இங்கே வரையப்படும் சட்ட முன்வடிவுகள்கூட ஆங்கிலத்திலே முதலிலே எழுதப்பட்டு பிறகு தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றன. அது எப்படிச் சரியாகும்? தமிழகத்தினுடைய சட்ட முன்வடிவுகள் தமிழிலேயே வரையப்பட வேண்டும்; மத்திய சர்க்காரின் பயனுக்காக அவைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். ஆகவே அந்த நடைமுறையைக் கொண்டு வரவேண்டும். தமிழ்நாடு அரசிதழில் எல்லாப் பிரச்னைகளையும் உத்தரவுகளையும் தமிழிலே வெளியிட்டு விட்டு, தேவைப்படக் கூடியவைகளுக்கு மட்டும் ஆங்கிலத்திலே மொழி பெயர்ப்பை உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழிலேயே சிந்தித்து, தமிழிலேயே எழுதும் பழக்கத்தை ஏற்படுத்துவது சாத்தியமாகும்.

இன்று காலையிலே பேசிக்கொண்டிருந்தோம், நீதிமன்றத் துறையிலே, உயர்நீதிமன்றம் உள்பட சகல மன்றங்களிலும் தமிழை நீதிமன்ற மொழியாகக் கொண்டு வருவதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும். அதற்கான திட்டங்களை இந்த அரசு தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுடைய ஞாபகத்திற்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் அந்த மாநாட்டைத் திறந்துவைத்த உரையிலே என் ஞாபகத்திற்கு எட்டியபடி, அவர் பாரதியோடு தமிழ் வளர்ச்சியை நிறுத்தி விட்டார். பாரதிதாசன் என்ற கவிஞரைப் பற்றிக்கூட ஆளுநர் அந்தத் துவக்க உரையிலே குறிப்பிடவில்லை. பாரதியைக் குறிப்பிட்டுவிட்டு வரதராஜன் என்ற தமிழ்ப் பேரறிஞரின் அந்தக் காலத்திற்குச் சென்றுவிட்டார். ஆனால், அது அவருடைய சிந்தனை. அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. பாரதி, பாரதிதாசன், அதைத் தொடர்ந்து பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகிய கவிஞர்கள் தமிழுக்காகச் சேவை செய்திருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன். பாரதி, பாரதிதாசன், பாரதிதாசனின் சீடர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்று இந்த மூன்று பரம்பரைகளையும் மதிப்பது வருங்காலத்திலே தமிழிலேகட்டுரைகளும், கவிதைகளும் எழுதுவோர்க்கு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

981 சனவரி 29] [திரு. என். சங்கரய்யா]

பாரதி நூற்றாண்டு விழா வருகிறது. அந்த மாபெரும் தமிழ்க் கவிஞனுக்கு இந்த ஆண்டு பூராவும் விழா செய்ய வேண்டும். தேசிய விடுதலை இயக்கத்திலே சிறந்த சேவை செய்த ஊழியர் என்ற முறையிலே சொல்லுகிறேன், பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் என்று தொடங்கக்கூடிய பாரதியின் அந்தப் பாடலால் தமிழகத்திலே சிறைகளிலே இருந்த தேசபக்தர்கள் அந்தச் சிறைக் கொடுமைகளையும் தாங்கிக்கொண்டார்கள்.

[பிற்பகல் 12-50]

அதைப்போலவே அச்சம் இல்லை, அச்சம் இல்லை, அச்சம் இல்லை' 'உச்சி மீது வான் இடிந்து விழுகின்ற போதிலும் அச்சம் இல்லை' என்று சொன்ன அந்தப் பாடல்கள். என்றும் நினைவு கொள்ளத் தக்கவை. ஆகவே, தமிழக அரசு செய்யக் கூடிய அந்தச் சேவை, பாரதியினுடைய நூல்களைத் தொகுத்து மலிவுப் பதிப்பாக, பாரதியினுடைய இந்த நூற்றாண்டிலே, பல இலட்சக்கணக்கிலே விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இங்கே நான் குறிப்பிட விரும்புவது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒன்று கேட்டார்கள். மருத்துவக் கல்லூரிகளிலே தேர்வு சம்பந்தமாக, எதிர்த்தரப்பிலேயிருந்த மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் குறை கூறும்போது, அவர்கள் கேட்டார்கள், ஒன்று நீங்கள் மார்க்குகளை மட்டும் வைத்து தேர்வு செய்ய வேண்டுமென்று கேளுங்கள். அந்த நேர்முகப் பரிட்சை என்பது வேண்டாமென்று சொல்லுங்கள் என்று அவர்கள் கேட்டார்கள். நான் சொல்ல விரும்புகிறேன், அதைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சொல்லிக்கொண்டே வருகிறது. கேரளா போன்ற மாநிலத்தில் மார்க்குகளுடைய அடிப்படையிலேதான் தேர்வுகள் செய்யப்படுகிறது பிரச்னை இல்லை.

இங்கே என்ன வருகிறது? குறைந்த மார்க்குகள் வாங்கிய மாணவ, மாணவிகள் எப்படி ஒரு நேர்முகத் தேர்வில் சிறந்த மார்க்குகள் பெறமுடியும்? இது முன்னுக்குப் பின் முரணில்லையா. அதிகப்படியான மார்க்குகளை எழுத்து மூலமான தேர்விலே வாங்கிய மாணவர்கள் நேர்முகத் தேர்விலே குறைந்து போய் விடுவார்களாம். எழுத்து மூலமான தேர்விலே குறைந்த மார்க்குகளை வாங்கிய மாணவர்கள் நேர்முகத் தேர்விலே அதிக மார்க்குகள் வாங்குவார்களாம். முன்னுக்குப் பின் முரணாக இல்லையா? ஆகவே, அதிலே எந்தவிதமான குறைபாட்டுக்கும் இடம் இல்லாமல் செய்ய வேண்டுமென்றால் இந்த அரசு தைரியமாக, வரக்கூடிய ஆண்டிலேயிருந்து எந்தத் தேர்வாக இருந்தாலும் அவர்கள் எழுத்து மூலமாக இருக்கக்கூடிய தேர்வை வேண்டுமானாலும், இன்னும் கறாராக நடத்துங்கள்; பல்கலைக் கழகங்களைக் கேட்டுக்கொண்டு எழுத்து மூலமான தேர்வுகளை எந்தவிதமான ஊழலும் இன்றி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்; ஆனால், அந்தக் [illegible]

அதிலே வந்திருக்கக்கூடிய அட்டவணைப்படி, இங்கே தேர்ந்தெடுத்துவிட்டால், எந்த ஒரு மனக்கசப்பும் ஏற்பட்டுவிடாது என்பதை இந்த அரசாங்கத்திற்கு நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல், இந்தக் கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தவரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலை ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் உண்டாகக்கப்பட்ட முறை அது. அதனாலே பல தவறுகள் ஏற்பட்டன. பொதுவாக, நிலச்சீர்த்திருத்தச் சட்டங்கள் தமிழகத்திலே நிறைவேற முடியாமல் போனதற்குக் காரணம், இந்தக் கிராம உத்தியோகஸ்தர்கள், கிராமபுறத்திலே உள்ள ஆதிக்கக்காரர்களுடைய செல்வாக்கிலேயிருந்த காரணத்தால், அந்த பினாமி நிலங்கள் போன்றவற்றைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கடந்த 20 ஆண்டுக்காலமாக, தமிழகத்திலே எத்தனை அரசாங்கங்கள் நிலச்சீர்த்திருத்தச் சட்டங்கள் இயற்றிய போதிலும் 70,000 ஏக்கர் நிலத்தைக்கூட எடுக்க முடியவில்லை, உபரி நிலமாக. காரணம், கிராமபுறத்திலே உள்ள நிலப் பிரபுத்துவச் சுரண்டலுக்கு அடிப்படையாக இருந்தவர்கள் அந்த அமைப்பு—அதிலே தனிப்பட்ட நபர்களைப் பற்றி குறிப்பிடவில்லை—அந்த அமைப்பு, முறை சரியாக இல்லை. ஆகவே, ரெவின்யூ போர்ட் நீக்கப்பட்டதைப் போலவே இந்த அமைப்பு நீக்கப்பட்டது என்பது காலத்தினுடைய மாற்றத்தைக் கருதி, ஒரு நவீனமான கிராம அமைப்பு ஏற்பட்டதைக் கருதி, இன்றைக்குக் கிராமத்திலே செய்ய வேண்டிய பல சிக்கலான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றக்கருதி இந்த அரசு எடுத்தமுடிவை நாங்கள் ஆதரிக்கிறோம். அதை ஏற்கனவே தெரியபடுத்தி இருக்கிறோம். விஷயத்திலே அரசோடு நாங்கள் வித்தியாசப்படுகிறோம். ஆனால், ஒரு திடீரென்று அந்தப் பல்லாயிரக்கணக்கான ஊழியர்களை நாம் வேலையிலிருந்து நீக்கும்போது, அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையிலே நிவாரணம் கொடுக்க வேண்டியது அவசியம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஏதோ பெரிய நிலப்பிரபுக்கள், கோடிக்கணக்கான ரூபாய்க்குச் சொத்துள்ள பெரும் முதலாளிகளுடைய தொழில்களை எடுக்கும்பொழுதுகூட, ஏராளமான நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்திருக்கக் கூடிய நிலப்பிரபுக்களுடைய உடைமைகளை எடுக்கும்போது, நஷ்ட ஈடுகொடுக்கிறோம் அவர்களுக்குத் தேவையில்லாத காலத்தில்கூட. ஆனால், இவர்கள் சாதாரண மக்கள். ஆகவே, அவர்களுக்கு வேலையில்லை என்று அவசியத்தின் காரணமாக நாம் சொல்லும் போது, அதை நஷ்டஈடு என்று நான் சொல்லவில்லை, ஒரு நிவாரணம் என்பதை அரசாங்கம் இந்தச் சட்டம் கொண்டு வருகின்ற காலத்திலே சிந்திக்க வேண்டும். இந்தப் பிரச்சனையை தீர்த்து விட்டால், பொருளாதார ரீதியிலே அவர்கள் பாதிக்கப் படமாட்டார்கள் என்ற நிலைமையை ஏற்படுத்தினால், அந்தப் பிரச்சனையிலே மனக் கசப்பு இருக்காது. அந்த முறையை மாற்றுவதற்கும் இதுபோலக்கு உதவி செய்யுங்கள் என்று நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதில் ஏற்படக்கூடிய செலவு அதிகமாக இருக்கப்போவதில்லை. அப்படி இருந்தாலும் தமிழகம் அ[illegible]த்

தாங்கிக் கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவே, கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தவரைக்கும் பெரிய மனக் குமுறலை ஏற்படுத்தி, அவர்களைத் திடீரென்று அனாதைகள் போல் விடப்பட்ட நிலைமைகள் வேண்டாம். அதிலே சிலபேர் வசதியாக இருக்கலாம். வசதி இல்லாதவர்கள் பெரும்பான்மை மக்கள் இருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்றும், இங்கே இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, அவர்கள் அவசியம் அதைக் கவனிக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்த படியாக, இன்றைக்கு நான் இங்கே குறிப்பிட விரும்புவது, இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நடைபெற்றிருக்கக்கூடிய சம்பவங்கள், அங்குள்ள பிரச்னைகள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏன் இந்த அரசாங்கமே அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உள்ள மாணவர்கள் ஆசிரியர்கள், அதிலே இருக்கக்கூடிய ஆய்வாளர்கள், அனைவருக்கும் சாதகமாகத்தானிருந்தது. 1928 ஆம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று அரசாங்கம்ஏறத்தாழ ஏற்றுக்கொண்டது. இன்றைக்கு அவர்கள் வேறொன்றும் புதிதாகக் கேட்கவில்லை. அங்கே என்ன வருகிறது? ஒன்று, மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்திலே, சென்னையிலே இருக்கக்கூடிய பல்கலைக் கழகத்திலே துணை வேந்தர்களுக்கு அந்தப் பல்கலைக் கழகங்களை நடத்திச் செல்லக் கூடிய அதிகாரங்கள் இருக்கின்றன. ஆனால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் அங்கே இருக்கக்கூடிய துணை வேந்தருக்கு அந்த அதிகாரப் பொறுப்பில்லை. இது எப்படி நியாயம்? அந்தத் துணை வேந்தர் மட்டும் அந்த அதிகாரம் இல்லாமல் எந்தக் காரியத்தைச் செய்ய முடியும்? அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே மாணவர்கள், ஆசிரியர்கள் பிரச்னை வருகிறது என்றால், அவர்கள் என்ன செய்ய முடியும்? ஆகவே, அவர்கள் கேட்கக்கூடியது ஒன்றே ஒன்றுதான். அதை ஏன் அரசாங்கம் உடனடியாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. பச்சையப்பன் ட்ரஸ்டை எடுத்துக் கொண்டீர்கள். பச்சையப்பன் ட்ரஸ்ட்டை எடுக்கும்போது நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய காரண, விளக்க, நோக்கங்களைப் பார்த்தேன். பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இரண்டு ஆண்டுக் காலத்திற்கு அது எடுக்கப்படுகிறது. இங்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை எடுப்பது என்ற பிரச்னை இல்லை. அது தானாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய பல்கலைக் கழகம்.

ஆகவே அவர்களுடைய கூட்டு ஆசிரியர்கள் குழுவின் சார்பாக அதனுடைய செயலாளர் குறிப்பிட்டிருக்கிறார். அந்த அண்ணாமலை பல்கலைக் கழகச் சட்டத்தை, அந்தத் துணைவேந்தருக்கு அந்த அதிகாரத்தை மாற்றுவதற்கு கால தாமதம் ஆகும் என்றாலும்கூட, இடைக்காலத்திலே அந்த புரோ-சான்சலருக்கு இருக்கக்கூடிய விசேஷ அதிகாரத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வையுங்கள். இதுவே இன்றைக்கு

ஆசிரியர் தரப்பினருக்குத் திருப்தி அளிக்கும் என்று ஆசிரியர்களுடைய கூட்டு சங்கத்தினுடைய செயலாளர் இன்றைக்கு காலையிலே கூறியிருக்கிறார். இதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளலாம் அல்லவா? ஆகவே இதில் நியாயம் இருக்கிறது என்பதை கூறவிரும்புகிறேன். இதிலே ஏதாவது நிர்பந்தம் ஏற்பட்டதா. அரசியல் நிர்பந்தம் காரணமாக இந்த அரசாங்கம் சென்ற ஆண்டிலேயே இந்த சட்டத் திருத்தத்தை செய்வோம் என்ற நிலையில் இருந்து இப்போது மாறுவதற்கு என்ன காரணம் என்பதை கேட்க விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, அந்த ஆசிரியர்களுக்கு அங்கே கூட்டம் போட அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இது என்ன நியாயம். இப்போது என்ன ராணுவச் சட்டம் அமலில் இருக்கிறதா? அல்லது கலவரம் நடப்பதை தடுக்கும் சட்டம் இருக்கிறதா? ஆனால் அங்கே அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூட்டம் நடத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அதே நேரத்தில் இந்தக் கூட்டு அமைப்பின் கூட்டம் நடத்த அனுமதி இல்லை. இது எப்படி நியாயமாகும், எனவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், இந்த அரசாங்கமே அந்த ஆசிரியர்களுடைய உணர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு அவர்களில் கைது செய்யப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்யவேண்டும். அவர்கள் எதற்காகக் கிளர்ச்சி பண்ணினார்கள். என்ன பொருளாதார கோரிக்கை இருந்தது. ஆனால் அவர்கள் கேட்பது ஒன்றுதான். இதிலே மாணவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ரிசர்ச் ஸ்காலர்ஸ் என்று சொல்லப்படுகின்ற ஆய்வாளர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் எல்லாம் இந்த அரசாங்கத்தினுடைய விரோதிகள் என்று நாம் ஏன் ஒரு தவறான கணக்குப் போட்டுக்கொண்டு அவர்களை எதிரியாக நிறுத்த வேண்டும். அந்தப் பிரச்சினை பேசித் தீர்க்கக் கூடிய பிரச்சினையாகும். அரசாங்கம் உடனடியாக முன் முயற்சி எடுத்து அவர்களுடைய பிரச்சினையை அவர்கள் கேட்கக் கூடியமையமாக இருக்கும் பிரச்சினை இதுதான். அதைப்பற்றி இந்த அரசாங்கம் ஒரு முடிவு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அவர்கள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும், அந்த ஸ்தாபனத்தோடு பேச்சு நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பி. அண்ட். சி. மில் பிரச்சினை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இதைப்பற்றி பல சமயங்களிலே பேசி இருக்கிறார்கள். டெல்லியிலே போய் பேசினார்கள். 13,000 தொழிலாளர்களுக்கு மேல் உள்ள பிரச்சினை, உலகத்திலேயே தலைசிறந்த பருத்தி ஆலைகளில் ஒன்று இது. அது மூடப்பட்டு 13,000 பேர்கள் தெருவிலே நின்று கொண்டிருக்கிறார்கள். இங்கே அவர்கள் நோட்டீஸ்களை வீசினார்கள். சென்னைக் கோட்டைக்குள்ளே [illegible]து செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால், நிலைமை அவ்வளவு [illegible]ாக ஆகியிருக்கிறது. நான் கேட்பது இந்த அரசாங்கம்

அதை ஏற்று நடத்த முடியும் என்று நான் சொல்லவில்லை. இந்த அரசாங்கத்தினுடைய நிதி நிலைமை அவ்வளவு சாத்தியம் இல்லை என்று தெரியும். ஆனால் இந்த அரசாங்கம் அந்தத் தொழிலாளர் இயக்கத்தோடு சேர்ந்து, மத்திய சர்க்கார் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லவேண்டும். அதை ஏற்றுக் கொண்டு தொழிலாளர்களோடு பேசட்டும். என்னென்ன முறையிலே அவர்களுடைய வேலைகள் மற்ற ஏற்பாடுகள் இருக்கவேண்டும் என்று பேசட்டும். இதற்கு இந்த அரசாங்கம் செய்யக்கூடிய அனைத்தும் செய்கிறதா? மத்திய சர்க்காரை வற்புறுத்துவதற்கு செய்யக்கூடிய அனைத்தையும் செய்கிறதா என்ற கேள்வியைத்தான் நாங்கள் கேட்கிறோமே தவிர, இந்த அரசாங்கம் அந்த ஆலையை ஏற்று நடத்தவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆகவே இந்த பிரச்சினையை பொறுத்தமட்டில் மத்திய சர்க்காரை இன்றைக்கு வற்புறுத்தி அதை ஏற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும். நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் என்ற அமைப்பு கோயம்புத்துரிலே பல மில்களை எடுத்திருக்கிறதே அதைப்போல எடுக்கட்டும். மாருதி தொழிற்சாலையை எடுக்கவில்லையா. மாருதி தொழிற்சாலையில் அசெட்சே இல்லை. போதுமான இருப்பு இல்லை. எந்தவிதமான கருவிகளும் இல்லை என்று இருந்தாலும் அதை எடுக்கவில்லையா. இதிலே அந்த அமைப்பு பூராவும் இருக்கின்றன. ஒரு மாதத்திற்கு முன்னால் கூட வேலை செய்துகொண்டிருந்தது. எனவே மத்திய சர்க்கார் இதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று மாநில சர்க்கார் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 6-ஆம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 3150 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நாம் திருப்தி அடைவது கொஞ்சம் அச்சமாக இருக்கிறது. காரணம் பண வீக்கத்தினாலே அந்த 3150 கோடி ரூபாய் சென்ற ஆண்டிலேயும் அதற்கு முந்தைய ஆண்டிலேயும் இருந்த 2,000 கோடி, 2,500 கோடி ரூபாய்க்குத்தான் சமமாக இருக்கும். ஆகவே பணவீக்கத்தினால் ஏற்பட்டுள்ள மதிப்பை வைத்து நாம் பார்க்கக்கூடாது. பிசிக்கலாக தமிழ்நாட்டில் உருப்படியான காரியங்களை செய்வதற்கு எவ்வளவு பணம் உபயோகிக்கப்படும் என்பதைத் தான் நாம் பார்க்கவேண்டும். இன்றைக்கு அதற்கு ஒரு கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது. அதை அரசாங்கம் இன்றைக்கு தன்னுடைய பதிலிலே சொல்லலாம்.

62 சதவீதம் தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்று மத்திய சர்க்காருடைய நிறுவனம் ஒரு கணக்கைக் கொடுத்திருப்பதாக நான் படித்தேன். அது உண்மையா? அப்படி உண்மையானால் இந்த 30 ஆண்டு காலத்திலே தமிழகத்திலே இந்த அளவிற்கு வறுமை கோட்டிற்குக் கீழே மக்களின் தொகை அதிகரித்ததின் காரணம் என்ன, என்பதைப் பற்றி ஒரு மிக முக்கியமான, அவசரமான ஆய்வு நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்[illegible]

[பிற்பகல் 1.00]

மது விலக்குக் கொள்கையில் எங்கள் கொள்கை தெளிவானது. மாண்புமிகு ஜனதா கட்சியில் உள்ள தலைவர்கள், சொன்ன கருத்துக்களில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. காரணம். சட்டத்தின் மூலம் மது விலக்குக் கொள்கையை அமல் நடத்த முடியாது என்பதை உலகம் பூராவிலும் உள்ள அனுபவம் எடுத்துக்காட்டுகிறது என்பதை முதலாவதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது, ஏற்கனவே தமிழ் நாட்டில் இன்றைக்கு ரூ. 25 கட்டினால் லைசென்சு பெற்று ஒருவர் மது அருந்தலாம் என்று இருக்கிறபோது அந்தப் பணத்தைக் கட்ட முடியாதவர்கள் மட்டும் குடிக்கக்கூடாது என்று பாரபட்சமான அளவுகோலை பின்பற்றுவது பெரும்பான்மையான குடிமக்களை இரண்டாந் தரக் குடிமகனாகக் கருதுவதற்கு ஒப்பாகும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, இப்போது ஏராளமான கள்ளச்சாராயக் கடைகள் நாட்டில் இருக்கின்றன என்றும், அவற்றின் மூலம் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் கள்ளச்சாராயம் விற்பவர்கள் மூலமாக லட்சக்கணக்கான பணம் வசூலாகிறது என்கிற செய்திகள் பல்வேறு பகுதிகளில் இருந்து சொல்லப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட நிலையில் கடுமையான முறையில் அந்தச் சட்டத்தை அமல் நடத்துவேன் என்று சொன்னார்கள். இந்த அரசாங்கத்திடம் நாங்கள் எல்லாம் சொன்னோம். அதைப் புறக்கணித்து விட்டு கடுமையான நடவடிக்கை எடுத்த காரணத்தால் 30,000 பேர் ஒரே ஆண்டில் மது விலக்குக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டனர். இன்றைக்கு அடிப்படையாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கும் மக்கள் பெரும்பாலும் இந்தக் குடிப் பழக்கத்தில் இருக்கிறார்கள். இந்தக் கடுமையான நடவடிக்கை எடுத்ததால் அவர்களையெல்லாம் ஜெயிலில் போடவேண்டிய நிலைமையேற்பட்டது. அப்போது நாங்கள் சொன்னோம், அந்தச் சட்டத்திருத்தம் கடுமையானது என்று, ஆகவே இவை களையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, மதுவிலக்கை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரச்சாரம் செய்யலாம். இப்போது இந்தியா பூராவும் நடைபெறுகிறது கள்ளச்சாராயக் கடைகள், அவற்றில் விற்கப்படுவதை வாங்கிக் குடித்து விட்டு பல மக்கள் இறந்து இருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலைமைகளைத் தவிர்க்க அரசாங்கமே தன்னுடைய அதிகாரத்தின் கீழ் மது விநியோகம் செய்யும் பொறுப்பை எடுத்துக்கொண்டால், அப்படிப்பட்ட சாவுகளைத் தவிர்க்கலாம். அது மட்டுமல்ல, மேற்கொண்டும் தாமதிக் காமல் இந்த அரசாங்கம் மதுவிலக்கைப் பூரணமாக ரத்து செய்யவேண்டும் என்று மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, ஒரு பிரச்னை இங்கே சொல்லப்பட்டு இருக் கிறது; 'சைலன்ட் மெஜாரிட்டியாக' இருக்கக்கூடிய பெரும் பான்மையான மக்களைப் பற்றி நாம் கவலைப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சிளர்ச்சிகள், ஆர்பாட்டங்கள் ஆகியவற்றிற்கு ஆதரவு தரப்படுகிறது, ஆனால் எவ்விதக் கிளர்ச்சியிலும் ஈடுபடாது இருக்கும் பெரும்பான்மையான மக்கள்-குறிப்பாக அமைப்பு ரீதியில் ஒன்று திரள வாய்ப்பில்லாத மக்களை கவனிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆளுநர் உரையில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பாதுகாக்கப் படுகின்ற முறையில் சட்டம் கொண்டு வரப்படும் என்று முன்பே சொல்லப்பட்டது. எத்தனையோ அவசரச் சட்டங்கள் இந்த அரசு கொண்டு வந்து இருக்கிறது. அப்படி இருந்தும் கிட்டத் தட்ட 7 லட்சத்திற்கும் மேற்பட்ட ஸ்தாபன ரீதியாகத் திரள முடியாத கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொ ரில் சட்டம் கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள். அது குறித்து எனக்கு ஒரு கடிதம் கூட வந்தது. போன தடவை வந்ததாக ஞாபகம். அப்படியிருந்தும் ஏன் அந்த கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை இந்த அரசாங்கம் இங்கே இப்போது தாக்கல் செய்யவில்லை என்பதை கேட்க விரும்புகிறேன். அதற்கு ஒரு காரணம் கேள்விப்பட்டேன் பெரிய மாஸ்டர் வீவர்கள் சில முக்கிய நகரங்களில் இந்தச் சட்டம் கொண்டு வருவதை எதிர்க்கிறார்கள். அவர்களின் நிர்ப்பந்தம் அதிகரித்துக்கொண்டு வருகிறது என்று கேள்விப் பட்டேன். அதன் காரணமாகச் சட்டம் வராமல் போய்விடுமோ என்று அஞ்சி மதுரையில் உள்ள கைத்தறி நெசவுத் தொமி லாளர்கள் இன்றைக்குப் போராட்டத்திலும், கிளர்ச்சியிலும் ஈடுபட்டு, சட்டம் கொண்டுவாருங்கள் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் வகையில் சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலோசனைக் குழுக்களைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். ஆலோசனைக் குழுக்கள் என்பது மிகவும் அவசியம். இப்போது கல்விக்குப் போட்டு இருக்கிறார்கள். மின்சாரத்திற்குப் போடப்பட்டு இருக்கிறது. இப்படி ஒன்று இரண்டு இருக்கிறது. ஆனால் பிரச்சினை எங்கே வருகிறது என்றால், அரசாங்கம் எல்லா விஷயத்திலும் ஒரே மாதிரியான அடிப்படையில் நடக்கவேண்டும். காவிரிப் பிரச்னை என்று வருகிறபோது, தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு அந்தப் பிரச்னையில் முடிவு எடுக்க வேண்டும் என்று விரும்புகிறது. அதற்காக சென்ற ஒரு மாதத்தில் நான்கு முறை என்று நினைக்கிறேன், எங்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டு, நாங்களும் ஓரிருநாள் அவசரத்தில் பொறுப்புணர்ச்சி யோடு அந்தக் கூட்டங்களில் வந்து கலந்து கொண்டு ஆலோசனை களைத் தெரிவித்து இருக்கிறோம்.

அதேபோல், இந்தத் தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்னையிலும் அவசரச் சட்டங்கள் கொண்டு வருகிறபோதும், அல்லது இன்றைக்கும் நாம் இங்கே விமர்சிக்கக்கூடிய சட்டங்களைக் கொண்டு வருகிற போதும், சர்வ கட்சிக் கூட்டம் நடத்தி, அரசாங்கம் விரிவான பரிசீலனை செய்து ஏன் முடிவு எடுக்கக் கூடாது என்று கேட்கவிரும்புகிறேன். எல்லாக் கட்சிகளின் ஆதரவு தேவை என்ற விஷயத்தில் வாருங்கள் வாருங்கள் உடனடியாக வந்து ஆலோசனைத் தாருங்கள் என்று சொல்கிற போது, மற்ற பிரச்னைகளைப் பற்றி மட்டும் நீங்களாகவே ஏன் முடிவு செய்யவேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

ஆலோசனைக் குழுக்களின் முன்பு நாங்கள் சொல்கிற கருத்துக்களை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா இல்லையா என்பது வேறு விஷயம். மக்களை பாதிக்கும் சகல பிரச்னைகளிலும் எல்லாக் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்டபின்பு தான் அரசாங்கம் முடிவு செய்யும் என்கிற ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொரு பிரச்னை பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். நக்சலைட்டுகள் பற்றி சொல்ல விரும்புகிறேன். நக்சலைட்டுகளுக்கும், மார்க்சிஸ்டுகளுக்கும் அடிப்படையான கருத்து மாறுபாடு உண்டு. நக்சலைட்டுகள் தனிநபர் பயங்கரவாதிகள் என்கிற கொள்கையில் நம்பிக்கை வைத்து இருப்பவர்கள். நாங்கள் வெகுஜனப் புரட்சி என்கிற கொள்கையில் நம்பிக்கை வைத்து இருப்பவர்கள். இந்த அடிப்படையில் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடந்துவருகின்றன. தருமபுரி, வடார்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர், ஆகிய இடங்களில் விவசாயத் தொழிலாளர்கள் கூலி மிகக் குறைவு என்று போராட்டம் நடத்திய நேரத்தில், அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்த நேரத்தில் அதை மாற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்க விரும்புகிறேன். இம்மாதிரியான தவறான சித்தாந்தங்கள் வேர்பிடிப்பதற்கு பொருளாதார ரீதியில் மக்கள் மத்தியில் இருக்கும் வறுமை ஒரு அடிப்படைக்காரணம் அல்லவா? அதைப் போக்குவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்று கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இந்த நக்சலைட்டுகளை வேட்டையாடுகிறோம் என்ற பெயரால் அங்கே இருக்கிற நிலப்பிரபுக்கள் இது தான் சமயம் என்று கருதி, அரசாங்கத்தின் உதவிகொண்டு விவசாயிகளை அடக்கி ஒடுக்கலாம் என்று திட்டமிடுகிறார்கள். அதனால் தான் சொல்கிறேன், அந்தத் திட்டத்திற்கு நாம் ஆளாகி விட்டோம். நக்சலைட்டுகளுடைய பிரச்சாரத்தை, அவர்களுடைய சித்தாந்தத்தைப் பற்றி பேசுவது என்பது ஒன்று விவசாயிகளுடைய பிரச்சனையைத் தீர்ப்பது என்பது

அதைப்போல இன்றைக்கு இன்னொரு விவரம். இந்த போலீசாரோடு மோதல் என்று வரும். இது புதிது அல்ல. 30 வருஷமாகப் பார்த்து விட்டோம். எத்தனையோ அரசாங்கம் வந்திருக்கும். கம்யூனிஸ்டுகளில் எத்தனையோ பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் 1948-ல் தெலிங்கானா போராட்டத்தில். அவர்களை எல்லாம் யார் கண்டு பிடித்தார், எப்படி கண்டு பிடிப்பது? ஆகவே, இன்றைக்குக் கேட்கிறேன். தனிப்பட்ட நக்சலைட்டு பலம் பொருந்திய போலீசாருடன் சண்டை போட முடியுமா? சண்டை போடுவார்களா? போலீசாரோடு சண்டை போட்டு, தங்களைத் தாங்களே கொலைக்கு ஆளாக்கிக் கொள்வார்களா? அதில் பிரதானமான உண்மை இருக்காது. ஆகவே, சொல்கிறேன், கைது செய்யுங்கள்; வழக்குப் போடுங்கள். ஆனால் எதிர்த்துப் போராடினார்கள், அதனால் கொல்லப்பட்டார்கள் என்று சொல்லும் காரணத்தை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஆகவே, ஏற்கெனவே நடைபெற்ற சம்பவங்களுக்கு நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது மனித உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சனையாக இருக்கிறது. இதைப் பற்றி விசாரிக்க பத்திரிகையாளர்கள் அங்கே போனபோது அவர்களை ஏன் தாக்கவேண்டும்? ஆகவே, ஒவ்வொரு பிரச்னையினுடைய தன்மையையும் பார்க்கும்போது நாம் நிதானமாக இருந்து, நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்ல வேண்டிய அவசியம் வருகிறது.

இன்னொரு விஷயத்தை இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எப்படி போகிறது போலீஸ் இலாகா என்பதற்கு ஒரு உதாரணம். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சேந்தபுரம் என்ற ஊர். அந்த ஊரிலே ஒரு போஸ்டர் எழுதி வைக்கப்பட்டது. அது கீழ்வெண்மணி சம்பவம் பற்றியது. கீழ்வெண்மணி தியாகிகள் தினம் டிசம்பர் 25-ந் தேதி; அது எல்லோருக்கும் தெரியும். 45 பேர்களுக்கு மேல் அங்கே சுட்டெரிக்கப்பட்டார்கள். அதை வருஷா வருஷம் விவசாயிகள் இயக்கமும் கம்யூனிஸ்ட் இயக்கமும் நினைவுபடுத்தி வருகிறது; அதற்காக எழுதி வைக்கப்பட்ட போஸ்டர். அதிலே என்ன எழுதி வைக்கப்பட்டிருக்கிறது என்றால், இதுதான் வாசகம் ''கீழ்வெண்மணி தியாகிகளே, உங்களை நாங்கள் மறவோம். செந்தீயில் கருகியபோதும் செங்கொடியை இறக்கமாட்டோம்; என்று போராடிய உங்களை மறவோம்; நீங்கள் எதிர்த்துப் போராடிய நிலப்பிரபுத்துவத்தை நிர்மூலமாக்குவோம் என்று சூளுரைக்கிறோம்''. இதுதான் வாக்கியம். அதிலே நிலப்பிரபுக்களை நிர்மூலமாக்குவோம் என்று அல்ல; நிலப்பிரபுத்துவத்தை நிர்மூலமாக்குவோம் என்றுதான் இருக்கிறது. அதை எழுதி வைத்தது சோஷலிஸ்ட் வாலிபர் முன்னணி. ஒரு தட்டி போட்டு, சேந்தபுரம் பஜாரில் வைக்கப்பட்டது. 'லான்ட் லார்டிசம், காபிடலிசம், இம்பீரியலிசம்'—இதை எதிர்த்துப் போராடுவது தான் நோக்கம்; வேறு ஒன்றுமல்ல. தட்டி வைத்த உடன் என்ன ஆச்சு? அதனுடைய செயலாளர் குருசாமி கைது செய்யப்பட்டார். அவர்மீது செக்ஷன் 124—ஏ, ஐ.பி.சி.யின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது ராஜத்துரோகம்

சம்பந்தப்பட்ட பிரிவு பகவத்சிங் மீது பிரிட்டீஸ் சர்க்கார் போட்ட வழக்கு; தேசிய வாதிகளை அப்போது ஒடுக்குவதற்காகப் போடப்பட்டது. இது செஷன்ஸ் கோர்ட் விசாரிக்க வேண்டிய கேஸ். ஆக, செஷன்ஸ் நீதிபதி விசாரிக்க வேண்டிய கேசாக போட்டு, குற்ற எண் 217/80 என்று பதிவு செய்திருக்கிறார்கள். சேந்தபுரம் போலீஸ் ஸ்டேஷனில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த போர்டு எழுதி வைத்ததற்கே இந்த 124-ஏ செக்ஷன் பயன்படுத்தப்படுகிறது என்றால் தமிழ்நாட்டில் எப்படி நியாயம் நடக்கும்? இதை செய்த அதிகாரி யார்? அவர் தானாகவே இப்படி செய்தாரா? அல்லது மேலிடத்து உத்தரவா? மேலதிகாரிகள் என்ன உத்தரவு போட்டார்கள்? அவர் தானாக செய்திருந்தால் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டும். இதைக்கூட தாங்கிக் கொள்ள முடியாத அதிகார வர்க்கம் இருந்தால் இந்த நாட்டில் ஜனநாயகத்தை எப்படி பாதுகாக்க முடியும்? இன்றைக்கு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம்; என்ன பதில் தருகிறார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அதைப்போல மதுரையில் பஞ்சாலை வேலைநிறுத்தத்தின்போது ஒரு வழக்கு ஐ.என்.டி.யு.சி தவிர மற்ற எல்லா யூனியனைச் சேர்ந்தவர்கள் மீதும் வழக்கு இருக்கிறது. அதிலே ஜனதா இருக்கிறது, ஏ ஐ.டி.யு.சி. இருக்கிறது, சி.ஐ.டி.யு. இருக்கிறது, டி.எம்.கே, இருக்கிறது. எல்லோர் மீதும் வழக்கு இருக்கிறது. அங்கே ஒன்றுபட்ட வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. மதுரை கோட்ஸ் மில் வாசலில் இந்தத் தலைவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். வேறு எங்கோ ஒரு தகராறில் ஒரு போலீஸ்காரர் கையில் காயம் ஏற்பட்டது என்பதற்காக அவர்கள் மீது கொலை செய்ய முயற்சி செய்ததாக குற்றஞ்சாட்டப் பட்டிருக்கிறது. மற்ற தலைவர்கள் மீது எல்லாம் கொலை செய்ய முயற்சி செய்ததாக செக்ஷன் 307-ன் கீழ் வழக்குப் போட்டிருக் கிறார்கள் இவ்வளவு நாள் ஆகியும் கேஸ் எடுக்க முடியவில்லை. இந்த வழக்குக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று நான் முதலமைச்சருக்கு ஒரு மனு அனுப்பியிருந்தேன். வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்றும் அதிலே குறிப்பிட்டிருந்தேன். கொஞ்ச நாள் கழித்து ஒரு பதில் வந்தது. யாரிடமிருந்து தெரியுமா? அரசுத் துணைச் செயலாளரிடமிருந்து வந்தது. ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு, செக்ஷன் கடுமையானதாக இருப்பதால் அதை வாபஸ் வாங்க முடியாது என்று பதில் வந்தது. இது என்ன கொள்கை!

இதேமாதிரி, திராவிட மூன்னேற்றக் கழகம், திராவிடர் இயக்கத்திலே திருப்பூரில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது உயிரோடு ஒரு சப்-இன்ஸ்பெக்டர், மற்றும் பலர் கொளுத்தப் பட்ட போதிலும்கூட, அவர்கள்மீது கொலை வழக்கு கோர்ட்டிலே இருந்தபோதிலும் கூட 1967-ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் அந்த வழக்கை வாபஸ் பெற்றதை நாங்கள் வரவேற்றோம்.

(பிற்பகல் 1.10)

ஆனால் இவர்களுக்கும் அந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லப்பட்ட பிறகும் அந்த வழக்குகளை வாபஸ் வாங்க முடியாது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. தொழிற்சங்க இயக்கங்கள் வளருவதைக் கண்டு இந்த அரசாங்கம் பயப்பட வேண்டியதில்லை. ஏன் அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்று கேட்டால் அரசாங்கத்தின் உத்தரவு அப்படி கடுமையாக இருக்கிறது என்று சொல்லப்படுகின்றது. ஏதாவது ஒரு தகராறு என்று வந்தால் முன்னெச்சரிக்கையாக 307 செக்ஷன் போடப் படுகின்றது, அப்படிப் போட்டால்தான் கேஸ் வாபஸ் வாங்க முடியாத நிலைமை ஏற்படும் என்ற எண்ணத்தில் அவ்வாறு செய்யப்படுகின்றது. தொழிலாளர்களும், விவசாயிகளும்தான் இந்த அரசினரைத் தேர்ந்தெடுத்து ஆள்வதற்கு அனுப்பி இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது அவர்களுடைய உரிமைகளையே பறிக்கக்கூடிய அளவுக்கு வழக்குகள் போடப் பட்டிருக்கின்றது. அந்த வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அப்பிரச்சினை தீர்ந்த பிறகு பொதுவாக வழக்குகளை வாபஸ் வாங்குவது என்பது வழக்கம். ஆகவே அந்த வகையில் வழக்குகளை வாபஸ் வாங்காமல் இருக்கின்ற இந்த அரசின் நிலை சரியானதல்ல.

அடுத்து இன்னொரு பிரச்சினையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது காடம்பாறை தொழிலாளர்கள் பிரச்சினை. தொழிலாளர்கள் மிகச் சிரமப்பட்டு வேலை செய்கிறார்கள் அந்த மலைப் பகுதியிலே. ஆனால் கான்ட்ராக்டர் சொல்கிறார் அந்தத் தொழிலாளர்கள் 13 மணி நேரம் வேலை செய்யவேண்டும் என்று. ஆனால் தொழிலாளர்கள் 8 மணி நேரம் தான் நாங்கள் வேலை செய்வோம். அதிலே மற்ற வேலைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் கான்ட்ராக்டர்கள் மற்ற வேலைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள மாட்டோம் என்றும் டிரில்லிங் வேலையை மட்டும் 8 மணி நேரம் செய்யவேண்டும் என்று கேட்கிறார்கள் அப்படிப் பார்த்தால் அவர்கள் 13 மணி நேரம் வேலை செய்ய வேண்டி இருக்கின்றது. அந்த நிலையிலே அந்தத் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அப்படி உண்ணாவிரதம் இருந்ததற்காக 103 பேர் கைது செய்யப்பட்டு அவர்கள் ஒரு மாதம் ஜெயில் தண்டனைப் பெற்றிருக்கிறார்கள். தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் தண்டனை அடைந்திருக் கிறார்கள், இதுவரையில் உண்ணாவிரதம் இருந்ததற்காக யாருமே கைது செய்யப்படுவதில்லை தமிழகத்திலே ஆனால் இப்போது தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே அரசாங்கம் இன்றைக்கு தனது கொள்கையை மறுபரிசீலனை செய்யவேண்டும். இதிலே சிக்கலான பிரச்சினைகள் அடங்கி இருக்கின்றன.

நேற்று கூட மதுரை மாநகராட்சி மன்றத்திலே பெரிய குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. அங்கு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் பண்ணினார்கள். அப்படி வேலை நிறுத்தம் செய்யாத தொழிலாளர்களுக்கு விசேஷமான பரிசு அளிக்கப்படுகின்றது. அப்படியானால் கருங்காலித்தனத்திற்கு இந்த அரசு பரிசளிக்கின்றதா? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் கூட முன்பு போராட்டம் நடத்தி இருக்கிறார்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. ராகவானந்தம் அவர்கள் கூட முன்பு தலைமையேற்று போராட்டம் நடத்தி இருக்கிறார்களே; அப்படியானால் அப்போது போராட்டத்திலே பங்கெடுக்காத கருங்காலிகளைப் போற்றுவார்களா? இந்த அரசு இப்போது புதுக் கொள்கையையே உருவாக்குகின்றதே. இந்த மாதிரி போராட்டத்தில் பங்கெடுக்காத கருங்காலிகளுக்கு பரிசு என்று சொல்வது மிக மோசமான நிலைமையை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பு மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்திலே உள்ள ஆசிரியர்கள் போராடியபோது மதுரையிலே இருக்கக்கூடிய மதுரை மாவட்டத்தின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர் அந்த போராட்டத்தை முன்னின்று நடத்தினார்கள். அப்போது போராடாதவர்களுக்கு பரிசளிப்பார்களா? தற்போது உலகத் தமிழ் மாநாட்டின்போது கூட ஆசிரியர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டது. ஆகவே பல்வேறு அபிப்பிராயங்களைக் கொண்டவர்கள் தொழிலாளர்கள் என்ற நிலைமையிலே போராட்டம் நடத்துகின்றபோது போராடாத தொழிலாளர்களுக்கு பரிசு என்பதும், போராடுகின்ற தொழிலாளர்களுக்கு கடுமையான நிலைமைகளைக் கொண்டு வருவதும், அவர்கள் கோர்ட்டுக்குச் செல்ல முடியாது என்று கூறுவதும், அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் இல்லை என்று கூறுவதும் இந்த அரசாங்கத்தினுடைய ஜனநாயகக் கொள்கையாக இருக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத்தலைவர்-தலைமை

மற்றொரு பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்தை நாங்கள் பாராட்டுகிறோம். விவசாயிகள் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் அதாவது 42 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனை ரத்து செய்ததையும், பிறகு 20 கோடி ரூபாய் தக்காவிக் கடனை ரத்து செய்ததையும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பாராட்டுகிறோம். இந்தியாவிலே இருக்கின்ற பல்வேறு மாநிலங்களில் விவசாயிகளுக்கு கூட்டுறவு கடன் பிரச்சினையில் அதிகப்படியான நிவாரணத்தை அளித்த மாநிலங்களில் இதுவும் ஒன்று என்று நாங்கள் வெளிப்படையாகவே கூறுகிறோம். அதேபோல் மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்த வரையில் பழைய பாக்கியில் ஒரு மாதக் கட்டணத்தையும் நடப்பு மாதக் கட்டணத்தையும் சேர்த்து வசூலித்துக் கொள்கின்ற வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும் என்று எங்களுடைய கட்சியைச் சேர்ந்த விவசாய சங்கத்தினர் தான் யோசனை சொன்னார்கள். அதையே இந்த வாக ஏற்றுக்கொள்ளும்படி

செய்தோம். இந்தக் குறைந்தபட்ச நிவாரணத்தை ஏற்றுக் கொள்ளாத திரு. நாராயணசாமி நாயுடு அவர்களின் முடிவு சரியான நிலை அல்ல என்று நாங்கள் பகிரங்கமாகச் சொன்னோம். ஆகவே இந்த அரசாங்கத்தை எப்போதும் எதிலும் எதிர்க்க வேண்டும் என்ற நோக்கம் எங்களுக்கு இல்லை.

*அதைப்போல இன்றைக்கு அரசாங்கத்திலே கொண்டு' வந்திருக்கக்கூடிய, குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் குத்தகையின் 75 சதவீதத்தை, குத்தகை விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய சட்டம், விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த படச கூலி நிர்ணயச் சட்டம் ஆகிய இந்தச் சட்டங்களை எல்லாம் நாங்கள் மனமார வரவேற்கிறோம். ஆனால் இவைகள் எல்லாம் எப்படி அமுல்படுத்தப்படுகின்றன என்பதைக் கண்காணிக்கிறீர்களா? என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயக் கூலிகள் கூலி நிர்ணயச் சட்டத்தின்படி அதை பெறுகிறார்களா என்றால், இல்லை. கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயக் கூலிகளில் கணிசமானவர்கள் பெரும்பாலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தாம், ஆனால் அவர்களே அந்தச் சட்டத்தின் பலனை அனுபவிப்பதில்லை.

தோழர் ராமமூர்த்தி அவர்கள் ரெவின்யூ அமைச்சரிடம் சொன்னார்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோ மட்டும், இவைகளுக்காக முயற்சி பண்ணினால் பிரயோஜனம் இல்லை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், தொண்டர்கள் அனைவரும் முயற்சி எடுக்கவேண்டும் என்று. சட்டத்தை நிறைவேற்ற எங்களோடு சேர்ந்து அவர்களும் பாடுபட வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால் எவ்வளவுதான் நல்ல சட்டமாக இருந்தாலும் என்ன பயன்? விவசாயக் கூலி நிர்ணயச் சட்டப்படி 7 ரூபாய் என்று இருந்தாலும் 3, 4 ரூபாய்கள் தாம் கிராமப்புறங்களிலே இருக்கிற விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகின்றன. 4½ ரூபாய்க்கு மேல் அங்கே எல்லாம் ஏறவே இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன, இந்தச் சட்டங்கள் எல்லாம் என்ன நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேற நடவடிக்கை எடுக்க வேண்டாமா? இந்தச் சட்டங்களை சரிவர அமுல் செய்ய நடவடிக்கை எடுங்கள், கிராமப்புற மக்களுக்கு, ஓரளவிற்காவது நிவாரணம் கிடைக்கும் என்ற முறையில் அதற்கு எங்களின் ஆதரவு பூரணமாகக் கொடுக்கத் தயார் என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை ஆதரிக்கும் வகையில் போய்க்கொண்டிருப்பதை எங்களால் ஆதரிக்க முடியவில்லை. அது ஜனநாயக அரசாங்கம் மக்களுக்கு நன்மை செய்ய விரும்பும் அரசாங்கம் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூறுகிறார்கள். நான் கேட்கிறேன். இந்தச் சட்ட மன்றம் நிறைவேற்றி, அங்கீகாரத்திற்காக அனுப்பப்பெற்ற, பினாமி நிலங்களை

எடுத்து ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க என்று ஏற்படுத்தப் பட்ட சட்டம், ஏன் மத்திய சர்க்காரின் அங்கீகாரத்தை பெற்று வரவில்லை? அவர்கள் ஜனநாயக அரசாங்கம் என்றால், ஏழை விவசாயிகளுக்கு பிலாமி நிலங்களை எடுத்துக் கொடுப்பதில் அவர்களுக்கு என்ன ஆட்சேபம் இருக்க முடியும்? ஏன் அந்த அங்கீகாரம் செய்யவில்லை. அதைப்பற்றி ஆளுநர் உரையில் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் அந்தச் சட்டம் அமுலுக்கு வந்தால், எவ்வளவு நன்மைகள் கிடைக்கும் என்று நன்மைகளை மாத்திரம் போட்டுள்ளார்கள், பலவீனமான முறையில். அங்கீகாரம் அளிக்கப் படாதது வருத்தத்திற்குரியது என்று ஏன் சொல்லியிருக்கக் கூடாது?

இந்தியத் துணை அமைச்சர் ஒருவர் சொல்லியிருப்பதாக அறிகிறேன். அந்தச் சட்டத்தில் நிறைய குறைபாடுகள் இருப்பதாக அப்படி இருந்தால் என்னென்ன குறைபாடுகள் என்று சுட்டிக் காட்டி மாநில அரசாங்கத்தின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்து; அதை திருத்திக் கொடுங்கள் என்று கேட்டிருக்க வேண்டாமா? ஏன் கேட்கவில்லை? தமிழகத்தில் இருக்கக்கூடிய பெரும் நிலச் சொந்தக்காரர்கள் அனைவரும் ஒரு கூட்டம் போட்டு, அதை திட்டவட்டமாக எதிர்த்தார்கள். நான் சொல் கிறேன் அவர்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாகத்தான் மத்திய சர்க்கார், இந்தச் சட்டத்திற்கான அங்கீகாரத்தை கொடுக்க வில்லை என்று. இதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் இருக் கிறார்களே, ஏகப்பட்ட டிரஸ்டுகள், பப்ளிக் டிரஸ்டுகள், தனியார் டிரஸ்டுகள் போன்றவை. அவைகள் எதிர்த்ததினால்தான் இந்தச் சட்டம் அங்கீகரிக்கப்படவில்லை என்று நான் சொல்கிறேன்.

*திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள், ஏதோ நிர்ப்பந்தங்களின் காரணமாகத்தான் மத்திய அரசு, இங்கே தமிழக சட்டமன்றம் இயற்றிய அந்த பினமி சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற, ஆளுநர் உரையிலே அந்தச் சட்டம் வந்தபிறகு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் உண்மைக்கு புறம்பான செய்தியைச் சொல்லுகிறார் என்று கருது கிறேன்.

*திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பேசும்போது, அந்த அடிப்படையான மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக இருக்கிறார்களோ அந்த அடிப்படையான மக்கள் எல்லோரும் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி யிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி என்றால், அ.தி.மு.கவின் அடிப்படைத் தொண்டர்கள் அனைவரும் குடிப் பழக்கம் உள்ளவர்கள் என்ற தவறான கருத்தை பரப்புவதாக அது தோன்றும், ஆகையினால் அந்த வாசகங்களை சபைக் குறிப் பேட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தவறாக புரிந்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். மதுக் குடிப் பதிலே கட்சி வித்தியாசமே கிடையாது. குடிக்காமல் இருப் பதிலும் கட்சி வித்தியாசம் இருக்க முடியாது. ஆகவே மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய ஒரு அடிப்படை உண்மை அது. . .

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சியிலுள்ள அடிப்படையான மக்கள் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி யிருக்கிறார்கள் என்று பொதுவாக சொல்லியிருந்தால் பரவா யில்லை குறிப்பிட்டு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லியிருப்பதைத்தான் குறிப் பேட்டிலிருந்து நீக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவரே பின்னர் பேசும்போது குடிப்பழக்கத்திற்கோ, குடிக்காமல் இருப்பதற்கோ கட்சி வித்தியாமே கிடையாது என்று கூறிவிட்டதினால், அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

(பிற்பகல் 1.20)

திரு. என். சங்கரைய்யா மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இதிலே கட்சி வித்தியாசம் கிடையாது தமிழகத்தில் இருக்கக்கூடிய உழைப்பாளி மக்களில் கணிசமான பேர்கள் மதுப் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். இது உண்மை. நகர்ப்புற மக்களும் கணிசமாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரையில் சட்டம் மூலமாக அவர்களைத் தண்டிப்பதன் மூலம் நிறைவேற்ற முடியாது என்று சொல்கிறோம். இல்லா விட்டால் அவர்களாகவே இது அரசாங்கக் கொள்கையாக இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்கள் மனம் திறந்து அதைப்பற்றிப் பேசுங்கள் என்று ஏன் சொல்லவேண்டும். அப்படி பேசவேண்டுமென்று சொல்வதால் மறுபடியும் சொல்கிறேன். அப்படியானால் எங்கள் அபிப்பிராயம் அது தோற்றுவிட்டது, அதை நேரியமாக ஏற்றுக்கொள்வதே இன்று அரசாங்கம் செய்யக் கூடிய ஒரு சிறந்த நடவடிக்கையாக இருக்கும் என்பதுதான் எங்கள் கருத்து. அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளலாம், ஏற்றுக் கொள்ளாமல் போகலாம். ஆகவே அந்த விஷயத்தை அதோடு விட்டுவிடுகிறேன். (குறுக்கீடு) ஏராளமான குறுக்கீடுகள் வந்தால் என் பேச்சு தடைப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் குறிப் பிட்டார்கள், மத்திய அரசு ஏதோ கொண்டுவரப்போகிறது என்று. கவர்னர் உரையில் சொல்லப்பட்டுயிருப்பது, "இம்மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்ப நிர்ணயித்தல்

[திரு. என். சங்கரையா]

[1981 ஜனவரி 29

இரண்டாவது திருத்தச் சட்டவரைவு), குடியரசுத் தலைவரின் இசைவு பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. நில உச்சவரம்பு குறித்து முன்பு இயற்றிய சட்டத்தை ஏமாற்று பொருட்டு, 1958 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1 ஆம் நாளிலிருந்து, 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் வரையில் செய்யப்பட்ட நில மாற்றங்களை அப்பலப்படுத்தும் இச் சட்டவரைவு சட்டமாகிவிட்டால், உபரியாகக் கிடைக்கும் நிலங்கள், நிலமற்ற உழவுத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படும்." என்பதாகும். ஆகவே, அனுமதி வரவில்லை என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவ்வாறு அனுமதி கொடுக்கப்படாமல் இருப்பது தவறானது என்று இந்த உரையில் குறிப்பிட்டிருக்கவேண்டும். ஆகவே திரு. சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இது சட்டமாவதற்கு ஏதோ திருத்தங்கள் மத்திய அரசாங்கம் அனுப்பி இருப்பதாகவும் அதை பரிசீலனை செய்வதில் காலதாமதம் ஏற்படுவதால் இதற்கு அங்கீகாரம் வரவில்லை என்ற நிலை அல்ல என்பதை நான் தங்கள் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்தபடியாக, இந்தி திணிப்பதுபற்றி ஒன்று கேட்க விரும்பு கிறேன். இந்தி திணிப்பது என்பது பற்றி இன்றைய மத்திய அரசின் நிலையில் நாங்கள் திருப்தியடைகிறோம் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கூறுவது பொறுத்தமாக இருக்குமா? இந்தியாவிலுள்ள தேசியமொழிகள் அனைத்தையும் மத்திய அரசாங்கத்தினுடைய, யூனியன் அரசாங்கத்தினுடைய ஆட்சி மொழிகளாக ஒப்புக்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளதா? அதுதான் நம் அடிப்படை யான கோரிக்கை. தமிழ் உட்பட அனைத்து தேசிய மொழிகளும் மத்திய அரசாங்கத்தின் ஆட்சிமொழிகளாக, அதிகார மொழி களாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்பது நம்முடைய கோரிக்கை, அதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறதா? இல்லை. ஆகவே இருக்கக்கூடிய நிலை, இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலம் நீடிக்கும் என்பதுதான். ஆகவே இந்தி பேசாத மக்கள் வேறுவிதமான அரசியல் சூழ்நிலைகளில் அவர்கள் சட்டமியற்றங்களில் தீர்மானம் போட்டுவிட்டால் இந்தி பேசாத மக்களின் ஆட்சேபணை தீர்ந்துவிட்டது என்று பொருள். ஆகவே நிலைமை மிகச் சிக்கலாக இருக்கிறது. ஆக, மத்திய அரசாங்கத் தைப் பொறுத்தவரையில் அவர்கள் மொழிக் கொள்கையில் தெளிவாகயிருக்கிறார்கள். தமிழ்நாடு, ஆந்திரா அல்லது வேறு இந்தி பேசாத மாநில மக்களின் நலன்களை பாதுகாக்க அது உதவி செய்யாது.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் மிகுந்த சிரமப்பட்டு போராடி வெற்றி பெற்றோம். எல்லா மொழிகளிலும் மாணவர்கள் எழுதலாம் என்று. அப்படி எழுதுவதோடு கூட நீதிமன்றங்களில் அவரவர் தாய்மொழியில் காரியங்கள் நடத்த ஏற்பாடு செய்து விட்டால் நிச்சயமாக ஆங்கிலமோ அல்லது இந்தியோ முற்ற மாநிலங்களில் ஆதிக்கம் செலுத்தமுடியாத நிலை என்பதை வலுக்கட்டாயமாகத்தான் நாங்கள் சொல்கிறோம்.

1981 ஜனவரி 29] [திரு. என். சங்கரையா]

தமிழைக் கொண்டுதான் தமிழைப் பாதுகாக்க முடியும். ஆங்கிலத்தின் துணையோடு தமிழைப் பாதுகாக்க முடியாது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூறியிருக்கிறது. நாங்கள் தேசிய ஒருமைப்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கிறோம். அமைதியில் தவறான முறையில் கிளர்ச்சி நடப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவளிக்கவில்லை. தேசிய ஒருமைப்பாட்டில் அக்கறை கொண்டிருக்கிறோம். ஆனால் மாநில அரசாங்கத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதில் நாம் முன்னணியில் நிற்க வேண்டும் என்று கூறுகிறோம்.

இன்னொரு விஷயம். மத்திய அரசின் முற்போக்கான கொள்கை என்று சொல்கிறார்கள். எப்படி பணம் திரட்டப் பட்டிருந்தாலும் அதை அரசாங்க டெப்பாஸிட் கணக்கில் வைத்து அவர்கள் பின்னால் பெற்றுக் கொள்ளலாம் என்று ஒரு சட்டம் கொண்டுவந்திருக்கிறது. அதை பல்வேறு கட்சிகள் கண்டித்திருக் கிறார்கள். கள்ளத்தனமாகப் பெற்ற பணத்தை வெள்ளையாக மாற்றுவதற்கு மத்திய அரசாங்கம் செய்திருக்கக்கூடிய ஏற்பாடு என்று விமர்சனம் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இந்த அரசு என்ன கூறுகிறது? அது முற்போக்கான கொள்கையா?

இது ஒரு முற்போக்கு நடவடிக்கையா? ஏற்றுமதி செய்யக் கூடிய பெரு முதலாளிகளுக்கு கோடிக்கணக்கான ரூபாய் மானியமாக கொடுக்கிறார்கள். செய்யலாம். அந்தப் பெருந் தொழில்களை நாட்டுடைமையாக்காவிட்டால், அதற்குப் பிறகு இப்படி மானியமாகக் கொடுக்கப்படும் கோடிக்கணக்கான ரூபாய் மக்களுக்கு கிடைக்கும், ஆனால், இன்றைக்கு கிடைக்கக் கூடிய வருமானம் பெரு முதலாளிகளுக்கு கிடைக்கிறது. ஆகவேதான், இங்கே பிரச்னை வருகிறது, பணவீக்கத்தைப் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் நிலையில் மாற்றம் என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

1980-81 ஆம் நிதிநிலை அறிக்கையில் .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கேட்ட 45 நிமிடங்கள் முடிந்தாகி விட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. என். சங்கரையா: சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன். இன்றைத்தான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, 2-ம் பக்கம் 4-வது பாராவிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றதை கூற விரும்புகிறேன். அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். 'இன்றைய நிலையில் இந்தியா முழுவதும் நிலவி வருகின்ற நெருக்கடியான பொருளாதார நிலை தமிழகத்தையும் தாக்கி இருக்கிறது' என்று சொல்லப்பட்டிருக் கிறது. அதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். 'இந்தியா முழுவதும் நிலவி வருகின்ற நெருக்கடியான பொருளாதார நிலை, தமிழகத்தையும் தாக்கியிருக்கிறது' என்று சொல்லும்போது, அனைத்திந்திய பொருளாதாரத்தில் பணவீக்க சக்திகள் வலுவுடன்

தலைத்தூக்கியிருக்கின்றன. அனைத்திந்திய பொருளாதாரத்தில் பணவீக்கம் இருப்பதால், தமிழகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற பொருளாதார நிலையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், ஊதிய உயர்வையும், பண வீக்கத்தையும் ஒன்றாக இணைத்து அவர்கள் பேசியிருக்கிறார்கள், அதைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய தோழர்கள் குறிப்பிட்டிருப்பார்கள்.

விலைவாசி உயர்விற்கு பிற்பாடு தானே, ஊதிய உயர்வு கோரிக்கை வருகிறது. இல்லை. இதற்கு முன்னால் வருகிறதா? பஞ்சப்படி என்ற பாதுகாப்பு இந்தியத் தொழிலாளர் வர்க்கம் போராடிப் பெற்றது. இந்திய சர்க்கார் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால், விலைவாசிக்கு ஏற்ப பஞ்சப்படிப் புள்ளியை அவர்கள் கொடுக்க வேண்டுமென்ற பாதுகாப்பு இருக்கிறது. ஆனால், இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன வென்றால், அப்படி விலைவாசி உயர்ந்தாலும் அதை ஈடுகட்டுவதற்காக பஞ்சப்படி கோருவது தவறு என்ற நிலைமையில் போய்க் கொண்டிருக்கிறது. அது சரியான கொள்கை அல்ல. இன்று நாட்டிலே உள்ள பெரு முதலாளிகள் இதைத் தான் சொல்லுகிறார்கள். அதாவது, விலைவாசியைக் கட்டுப்படுத்த மாட்டோம்; ஆனால், பஞ்சப்படியும் நீங்கள் கேட்கக் கூடாது. இந்தக் கொள்கையினால் என்ன ஏற்படும்? தொழிலாளர்களுடனும், அரசு ஊழியர்களுடனும், ஆசிரியர்களுடனும் மோத வேண்டிவரும் அவர்களுடைய இயக்கத்தை அடக்க வேண்டிய நிலையும் இந்த சர்க்காருக்கு ஏற்படும். இது வரவேற்க தக்கதல்ல.

இன்று அந்த நிலை ஏற்படுவதற்குக் காரணம், தவறான எண்ணம் இருப்பதாகும். ஆர்கனைஸ்ட் ஒர்கர்ஸ், தொழிற் சங்க ரீதியாக அவர்கள் உல்லாச போகத்திலே வாழ்கிறார்கள் என்ற ஒரு தவறான கணக்கு இருக்கிறது. அது தவறு. அவர்களுக்கும், சாதாரண விவசாயத் தொழிலாளர்களுக்கும் இருக்கக் கூடிய நிலையைப் பார்க்கும்போது, விவசாயத் தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியாக திரட்டுவற்கு அரசாங்கம் உதவி செய்வதாக இருக்க வேண்டுமே தவிர, இந்த இரண்டிற்குமிடையே முரண்பாடு இருக்கக் கூடாது. இன்றைக்கு நாட்டிலே பெரு முதலாளிகளும், நிலப் பிரபுகளும்தான் அப்படி இருக்கிறார்களே தவிர, இவர்கள் அப்படி இல்லை. ஆகவே, இன்றைக்குள்ள பண வீக்கம், மத்திய அரசு பின்பற்றும் கொள்கையினால் ஏற்படுகிறது. இந்த விலை வாசி உயர்வினால் தான், ஊதிய உயர்வு கேட்கக்கூடிய போராட்டம் ஏற்படும். அதை ஒடுக்கக் கூடிய நிலைக்கு அரசு போக வேண்டி வரும். அது சரியாக இருக்காது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக இருக்கும்.

அடுத்து பஸ் கட்டண உயர்வு. இரண்டு தினங்களுக்கு முன்பு போக்குவரத்துத் துறை அமைச்சர் கூட்டிய கூட்டத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இனிமேல் பஸ் கட்டண உயர்வை மக்கள் தாங்கமாட்டார்கள் என்று சொல்லப்பட்டது. ஏன் பெட்ரோல் விலை உயர வேண்டும் என்று

கேட்கும்போது, நாங்கள் சொன்னோம். எக்சைஸ் வரி ஒரு லிட்டருக்கு எவ்வளவு இருக்கிறது, அதனால் எவ்வளவு வருமானம் வரும் என்கிற புள்ளி விவரம் அவர்களிடம் இருக்கிறது. இந்தியா பூராவும் மாநில சர்க்கார்களால் நடத்தப்படக் கூடிய பேருந்துகளுக்கும், பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய தனியார் பேருந்துகளுக்கும் எக்சைஸ் வரியை ரத்து செய்து, பெட்ரோல் விலையைக் குறைப்பதற்கு ஏன் இந்திய சர்க்கார் உதவி செய்யக் கூடாது? அந்த ஒரு காரியத்தைச் செய்தால் நல்லது தானே? அப்போது இந்த பஸ் கட்டண உயர்வு ஏற்படாமல் தடுக்க முடியும். இல்லாவிட்டால், இன்றைக்கு ஒரு உயர்வு வரும்; இன்னும் 15 நாட்கள் கழித்து இன்னொரு உயர்வு வரும். மக்கள் அந்த உயர்வைத் தாங்க முடியுமா? தாங்க முடியாது. ஆகவே, மத்திய சர்க்காரிடத்திலே இதை நீங்கள் வற்புறுத்த வேண்டும். மானியம் கொடுத்தாக வேண்டும். எக்சைஸ் வரியை ரத்து செய்யவேண்டும் என்று இந்த சர்க்கார் ஒரு கோரிக்கையை வைக்க வேண்டும். அப்படி வைப்பதற்கு இந்த மாநில சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும், சரியானது தான். இல்லாவிட்டால், என்ன ஏற்படுமென்றால், இந்த சர்க்கார் தான் பஸ் கட்டணத்தை உயர்த்தியது என்ற தவறான முடிவுக்குத் தான் ஜனங்கள் வருவார்கள். ஆகவே, அப்படி ஏற்படுவது நல்லதல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக, அரசியல் விஷயமாக ஒன்றிரண்டு கூறி முடித்துக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், தி.மு.க. வும் சேர்ந்து நாடாளுமன்றத்தில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்தார்கள். ஆனால் இங்கே கடுமையாக சண்டை நடக்கிறது, இந்த இரண்டு கட்சிகளுக்கும் இடையே பாராளுமன்றத்திலே தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஆதரிப்பதில் சண்டை இல்லை.

[பிற்பகல் 1.30]

இந்திரா காந்தி குடும்பத்திற்குச் சொந்தமான மாருதி கம்பெனியை நாட்டுடமையாக்க வேண்டுமென்ற சட்ட வரைவு வந்தபோது இரண்டு கட்சிகளும் ஆதரித்தன. அதிலே எந்தவித மான பிரச்சினையும் இல்லை. ஆனால் இங்கே கடுமையான சண்டை வருகிறது. இன்றைக்குக் காலையில் சத்திய நாராயணா என்ற இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். 'திராவிட முன்னேற்றக் கழகத்தோடு எங்களுடைய அரசியல் உறவு நீடிக்கிறது. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தானாக வந்து எங்களை பார்லிமெண்டில் ஆதரித்தால் நாங்கள் ஆட்சேபணை பண்ணப்போவதில்லை'. இதுதான் அவர்கள் நிலை.

[திரு. என். சங்கரய்யா]

[1981 ஜனவரி 29

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பேரவையின் அனுமதி பேரவை அலுவல் ஐந்து நிமிட நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். சங்கரய்யா: ஜனாதிபதி ஆட்சி முறை பற்றி திருமதி இந்திரா காந்தி அவர்கள் இப்போது சொல்லியிருக்கிறார்கள் நான் விரும்பவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மகாராஷ்டிர முதலமைச்சரும் ஆந்திர முதலமைச்சரும் அது வேண்டுமென்று சொல்ல, நம்முடைய தமிழக முதலமைச்சர் என்ன கருதினாரோ தெரியாது—ஒரு வேளை இந்த ஜனாதிபதி ஆட்சி முறையை ஆதரித்து அறிக்கை வெளியிட்டால் இந்திரா காங்கிரசோடு உறவுகளை இணைக்குச் சீர்படுத்த உதவும் என்று நினைத்து அறிக்கை விட்டார்கள். இப்போது இந்திரா காந்தி அவர்கள் சொல்லிவிட்டார்கள். என்னுடைய கருத்தில் அது கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். நான் ஜனாதிபதி ஆட்சி முறையை விரும்பவில்லை என்று சொல்லிவிட்டார்கள். இந்த அரசுக்கு என்ன நிலைமை ஏற்படுகிறது? அவர்கள் அதிலே உறுதியாக இருக்கிறார்கள் என்று எதிர்பார்த்துச் சொல்ல இப்போது அவர்களே அந்த நிலையிலே உறுதியாக இல்லை என்று நிலை வரும்போது இந்த அரசாங்கத்தின் நிலை என்ன என்ற கேள்விக்கு வருகிறது.

இதிலே உள்ள அரசியல்—திராவிட முன்னேற்றக் கழகமும் இந்திரா காங்கிரசும் இந்த அரசாங்கத்தை நெருக்குகிறது. ஆகவே, நாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தனிமைப்படுத்திவிட்டு இந்திரா காங்கிரசோடு சேர்ந்து கொண்டால் நமக்கு நல்லது என்ற நிலை அ. தி. மு. கவுக்கு வரும்போது, இந்திரா காங்கிரசைப் பொறுத்தவரை எப்படி இரண்டு பேர் ஆதரவையும் எடுத்துக் கொள்வோம், இரண்டு பேரையும் சஸ்பென்சில் வைப்போம். யாருடன் போவோம் என்று இறுதிவரை தெரியாது வைப்போம்; ஆகவே, இரண்டு பேரும் நன்னை ஆதரிப்பார்கள் என்ற நிலைமை ஏற்படும்போது, தமிழ்நாட்டில் மூன்றாவது அணி அல்ல. இரண்டு அணிகள்தான் வருகின்றன.

இந்திரா காங்கிரசின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கிற ஒரு அணி; அதை எங்களைப் போன்ற சிறு கட்சிகள் எதிர்க்கக்கூடிய அணி. நாங்கள் மாண்புமிகு பொன்னையன் அவர்களை மாநிலங்களின் அதிகாரங்களுக்கான மாநாட்டுக்கு அழைத்தோம். ஆனால் அண்ணா தி. மு. கவும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்த பிறகு, நாங்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து ஜனநாயகப் பாதுகாப்பு மாநாட்டை நடத்தும்போது அதற்கு அவர்களை அழைக்க முடியவில்லை. இவர்களையும் அழைக்க முடியவில்லை. இரண்டு பேரும் பார்லிமெண்டில் அந்தச் சட்டத்தை ஆதரித்திருக்கிறார்கள். ஆகவே, நாங்கள் தனித்து தேசிய பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து மாநாடு நடத்தக்கூடிய நிலைமை இருக்கிறது.

[1981 ஜனவரி 29] [திரு. என். சங்கரய்யா]

டாக்டர் மு. கருணாநிதி: இதில் நீங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுத்து எங்களைக் கூட அழைக்கலாம். இந்தி எதிர்ப்பில் நாமெல்லாம் ஒரே கருத்தை உடையவர்களாக இருக்கிறோம். ஆனால் தமிழ்நாட்டில்தான் தி.மு.க., அண்ணா தி.மு.க, ஆட்சிக் காலத்தில் இருமொழித் திட்டம் அமுலில் இருந்து வருகிறது. கேரளாவைப் பொறுத்தவரை முதலமைச்சர் நாயனார் அவர்கள் இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்த்தால் கூட, அங்கே மலையாளம், ஆங்கிலம், இந்தி என்ற மும்மொழித் திட்டம் இருக்கிறது. அதை ஒன்றும் முரண்பாடாக நாங்கள் கருதவில்லை. இந்தி எதிர்ப்புக் கூட்டங்களுக்கு நாங்கள் வரத் தயாராக இருக்கிறோம். அதைப் போலவே நீங்களும் நீங்கள் நடத்தும் ஜனநாயகக் கூட்டங்களுக்கு எங்களை அழைக்கலாம்.

திரு. என். சங்கரய்யா: நாயனார் அவர்கள் கடுமையாகச் சொன்னதைக்கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் மென்மைப்படுத்தினார்கள். நாயானார் அவர்கள் கடுமையாகப் பேசினார்கள் இந்தித் திணிப்பு என்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இப்படி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அப்படிக் கருதவில்லை, இந்திரா அரசு அப்படிக் கொண்டு வரும் என்று கருதவில்லை என்று குறிப்பிட்டார்கள்.

கேரளத்தைப் பற்றி, அரசைப் பற்றி குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் ஆட்சி நீண்டகாலமாக இருந்ததால் அந்த நிலை. அதற்கு நாங்கள் பொறுப்பு இல்லை. எங்களுடைய நிலை அதே இந்திய ரீதியில் ஒன்றுதான். இந்தி எதிர்ப்பில் நிச்சயமாகக் கூப்பிடுவோம். ஆனால் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து நடத்தும் மாநாட்டிற்கு எப்படிக் கூப்பிட முடியும்? அதுதான் பிரச்சினை.

ஆகையால் நான் கடைசியாகக் கேட்டுக் கொள்வது-அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்—தேவையானால் தி.மு.க. அண்ணா தி.மு.க. இரண்டும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் செயல்படுவோம் என்று. தயவு செய்து அப்படிச் செயல்படுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய சர்க்காருடைய அந்த ஒரு கட்சி ஆட்சியை நோக்கி போவதற்கான நிலைமைகளையும், அவர்களுடைய பொருளாதாரக் கொள்கைகளை ஆதரிப்பதற்குப் பதிலாக இரண்டு பேரும் சேர்ந்து, இடதுசாரி ஜனநாயகக் கட்சிகளோடு சேர்ந்து கேரளம், மேற்கு வங்கம், திரிபுரா ஆகிய மாநில காங்கிரஸ் அல்லாத சர்க்கார்களோடு சேர்ந்து இந்தியாவில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முன் வாருங்கள் என்று அழைத்து விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 30-1-1981 ஆம் தேதி, காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.34 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

167. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் கலைக் நிறுவனத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான முதல் ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்). (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

168. தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி வகுப்பு 1.1 நகர்ப்புற அமைப்பு பணி விதிகளை உருவாக்குவது தொடர்பாக ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 9-7-980 ஆம் தேதியிடப் பெற்ற 1039-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 971 ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

169. சென்னையிலுள்ள திருவாளர்கள் ராஜ் லூப்ரிகன்ட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கு இருப்பிலிருந்து மின்மாற்றி எண்ணையினை விற்பனை செய்வதன் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து சென்னை இந்தியன் எண்ணையக் கழகத்திற்கு விலக்களிப்பது மற்றும் ராஜ்லூப்ரிகன்ட்ஸ் நிறுவனம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு விற்பனை செய்யும் 450 கிலோ லிட்டர் மின்மாற்றி எண்ணை மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்தும் வணிகவரிகள்-அறக் கட்டளைகள் துறையின் 2-12-1980 ஆம் தேதியிடப் பெற்ற 1283 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

170. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையிலிருந்து 87 ஆம் குறிப்பினை நீக்குவது மற்றும் அனைத்து ஆயத்த ஆடைகள் மீது பல்முனை வரிவிதிப்பது குறித்தும் வணிகவரிகள்-அறக் கட்டளைகள் துறையின் 24/11-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1243 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)

171. குலசேகரம் அங்காடியின் முகவரியினை மாற்றுவது தொடர்பாக வேளாண்மைத் துறையின் 7-10-1976 ஆம் தேதியிடப் பெற்ற 11 (2)/AG/5768/76 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 1.12.1980 ஆம் தேதியிடப்பெற்ற 104790/AM./11/80-2 ஆம் அரசுக் கடிதத் எண்ணில் வெளியான அறிவிப்பு, (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்விளை பொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/959) 29(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய ஆவணங்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1981 ஜனவரி 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல்"

நீதி நெறிகளை அறிந்து, அனுபவம் கனிந்த பெரியோரின் நட்பைத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு கொள்ளும்போது, அந்தப் பெரியோரின் தகுதிக்கு ஏற்றபடி அவரிடம் நடந்து கொள்ள வேண்டிய முறையை ஆராய்ந்து அறிந்து, அவரைத் துணையாகக் கொள்ளவேண்டும்.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. கே. கோட்டிரெட்டி மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. கோட்டி ரெட்டி அவர்கள், 27-1-1981 ஆம் தேதியன்று மறைந்தமை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1887 வது ஆண்டில் திரு. கே. கோட்டி ரெட்டி அவர்கள் பிறந்தார். 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையிலும், மேலும் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1.10.1953 வரையிலும், கடப்பா பொது கிராமப்புறத் தெ குதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றி உள்ளார். மேலும், 1923 ஆம் ஆண்டிலிருந்து அன்றைய சென்னை சட்ட மன்ற மேலவையின் உறுப்பினராகவும், 1926 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரையிலும் சட்டமன்ற மேலவையில் கய் ராஜ்யக் கட்சியின் துணைத் தலைவராகவும், மற்றும் 1946-47 இல் திரு. பிரகாசம் அவர்களின் அமைச்சரவையில் அமைச்சராகவும் இருந்தார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்)

2. அறிவிப்புகள்.

(அ) விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு மௌன அஞ்சலி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளின் நினைவாக இன்று நாடு முழுவதிலும் இரண்டு நிமிட மவுன அஞ்சலி செலுத்தப்படுகிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

10.58 மணிக்கு, மணி ஒலி ஒலித்தபின் எழுந்து நிற்கவேண்டும். இரண்டு நிமிட மவுன அஞ்சலி முதல் குழல் ஒலியும், நீத்தார் அஞ்சலி குழல் ஒலி வீரவணக்கமும் (last post) முடிந்தபின் பதினொரு மணி முதல் பதினொரு மணி இரண்டு நிமிடம் வரை இரண்டு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நின்றபடியே அஞ்சலி செலுத்தப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, இன்று முக்கியமான தினமாக இருப்பதாலும் தீண்டாமை ஒழிப்பு நாளாக அறிவித்திருப்பதாலும் அவையை 10.30 மணிக்கு ஒத்தி வைத்து மீண்டும் 11 மணிக்குக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே அலுவல் ஆய்வுக் குழுவிலே இதுபற்றி முடிவு எடுத்தோம் இங்கே வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவிலே மாற்றம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு முதல்வர் அவர்களும் மற்றவர்களும் தீண்டாமை ஒழிப்பு நாளானதால் பிரமாணம் எடுக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்வது நல்லது என்றும், தேவைதான் என்றும் என்னிடம் வந்து பேசினார்கள். அப்படியென்றால் 10-45-க்கு ஒத்திவைத்து 11-15-க்கு வந்துவிடலாம்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: அவையிலேயே வைத்துக் கொள்ளலாம் என்று சர்வகட்சித் தலைவர்கள் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே சொன்னார்கள். அவர்களைக் கேட்டாமல் முடிவு எடுப்பதா?

திரு. எல். இளையபெருமாள்: இங்கேயே கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டு முடிவு எடுக்கவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். நான் அரசையும் எதிர்க்கட்சிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நாம் அங்கே போகலாம் என்றுதான் சொன்னோம். ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் இங்கேயே வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்திருப்பதுபற்றிச் சொன்னார்கள்.

திரு. கு. பாலன்: தலைவர்கள் வந்தவுடன் முடிவு செய்யலாம்.

3. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

கல்ராயன் மலைப் பகுதியில் நீர்வீழ்ச்சியிலிருந்து மின் உற்பத்தி

*வினா எண்.101—திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலைப்பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது பணித் துவக்கப்படும்?

(இ) அதற்கு ஆகும் உத்தேசச் செலவுத்தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: (அ), (ஆ) மற்றும் (இ): தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் மின்வாரியத்தால் ஆராயப்படுகின்றன. ஆய்வுக்குப்பின் விரிவான அறிக்கை, திட்ட மதிப்பீடு ஆகியவை தயாரிக்கப்படும்.

திரு. சோ. கலிதீர்த்தான்: பேரவைத் தலைவரவர்களே, மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கின்ற இந்தத் தருணத்திலே இந்தத் திட்டத்தை விரிவாகச் செயல்படுத்தினால் மிகவும் நல்லதொரு திட்டமாக இருக்கும் என்பதைக் கருதி, இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே நம்முடைய பற்றாக்குறையைப் பார்க்கிறபொழுது இதைப்

[1981 ஜனவரி 30

போல இன்னும் பல திட்டங்கள் நமக்குத் தேவை. இந்தத் திட்டத்தின் மூலம் 20 மெகாவாட் கிடைக்கும். இருந்தாலும் இந்தத் திட்டத்தை விரைவு படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மலைப் பகுதியில் நீர்மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தமிழகத்தில் எங்கெங்கு இப்பொழுது ஆய்வில் உள்ளது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நாளையதினம் மின்வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கு வரவிருக்கிறது. அதிலே இவைகளெல்லாம் தெளிவாக விளக்கப்படும்.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு தலைவரவர்களே, கல்வராயன் மலையில் ஆத்தூர் பக்கத்தில் உள்ள நீர்வீழ்ச்சியில், எய்யடிப்பட்ட வற்றல் கலமாக இருந்தாலும் நீர் ஊறிக் கொண்டிருக்கிறது. அங்கே நீர் வற்றாத ஒரு அருவி இருக்கிறது. இது சம்பந்தமாக "தின மலர்" பத்திரிகையில் ஒரு ஆர்டிகிள் எழுதியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக அரசுக்குத் தெரியுமா? அதிலேயிருந்து மின்சார உற்பத்தி செய்வதற்கு நம்மிடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எங்கெங்கு நீர்வீழ்ச்சிகள் இருந்தாலும் அங்கெல்லாம் நிச்சயமாக ஆராய்வோம்.

அனைத்திந்திய மின் விசை விநியோக இணையம்

*வினா எண் 102—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அனைத்திந்திய மின்விசை விநியோக இணையம் ஏற்படுத்துவதுபற்றி மைய அரசு மாநில அரசின் ஆலோசனைக் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) டெல்லியில் நடந்த மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் இது கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

1981 ஜனவரி 30]

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, நமது இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மாநிலங்களில் மின் கட்டணம் வசூலில் பல்வேறு வகையான விகிதாச்சாரத்தில் வசூலிக்கப்படுவதாகத் தெரிகிறது. இதை ஒருங்கிணைப்பதற்காக இந்த அனைத்திந்திய மின் விசை விநியோக இணையத்தை விரைவில் உருவாக்க நமது மாநில அரசு விரைந்து செயல்பட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த அனைத்திந்திய மின் விசை விநியோக இணையம் என்பது ஒரு மாநிலத்திலே மின்சாரம் கூடுதலாக இருக்கிறபொழுது அதை மற்ற மாநிலங்கள் எளிதாகப் பெற்றுக் கொள்வதற்கு வகை செய்யக்கூடிய வகையில் அமையும். ஆனால் ஒவ்வொரு மாநிலத்திலும் மின்சாரத்திற்கு விதிக்கப்படுகின்ற கட்டணத்தைப் பொறுத்தவரையில் அந்தந்த மாநிலங்கள் தங்களுக்கு என்று இருக்கின்ற முழு சுயாட்சியைப் பயன்படுத்துகின்ற காரணத்தால் நாம் அதை ஒன்றாகக் கொண்டுவருவது என்பது இயலாது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, அனைத்திந்திய மின் விசை விநியோக இணையம் ஏற்படுத்துவதைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இப்படி மாநிலக் கட்டுப்பாட்டிலே இருக்கக்கூடிய இந்த பிரச்னைகளெல்லாம் மத்தியக் கட்டுப்பாட்டிற்குள் வருமேயானால் முழுமையாகத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் வழிவகுக்குமா? அதைப்பற்றி மறுசிந்தனை செய்ய இந்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இதைப்பற்றிப் பலதடவை சிந்தித்த பிறகுதான் இந்த அரசு இதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, மறுசிந்தனை நிச்சயமாக இதில் தேவையில்லை. ஏனென்றால், இதனால் பலன் பெறக்கூடிய வாய்ப்பு தமிழகத்திற்கு இருக்கிறது. நமக்கு மின்பாற்றாக்குறை இருக்கிறது. மற்ற மாநிலங்களில் மின் உற்பத்தி சாதனங்களும் அதிகம்; மின் உற்பத்தியும் அதிகம். ஆகவே, தேசிய அளவில் இந்த நேஷனல் கிரிட் அமையுமேயானால், எளிதாக அங்கே இருக்கின்ற மின்சாரத்தை அந்த மாநில அரசுகளோடு பேசிப் பெற்றுக்கொள்ளலாம். மத்திய அரசு, நேஷனல் கிரிட்—அந்த லயனை மட்டும்தான் போடுகிறார்களே தவிர, மற்றபடி மாநிலங்களிலிருந்து பெறும் மின்சாரத்தை மற்ற மாநிலங்களோடு பேசித்தான் பெற்றுக் கொள்ளவேண்டும். மின்சார உற்பத்தியையோ அல்லது விநியோகத்தையோ மத்திய அரசு எடுத்துக்கொள்வதாக இது பொருளாகாது.

[1981 ஜனவரி 30

[முற்பகல் 9-10]

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே மின் உற்பத்தித் துறையை மத்திய அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற உத்தேசத்தை வெளியிட்டிருக்கிறது. அதற்கு முன்னோடியாக இந்தத் திட்டம் அமைந்து விடக்கூடிய அபாயம் இருப்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மின் உற்பத்தி என்பது ஒன்று. மின்சாரத்தை நாம் மற்ற இடங்களுக்கு அனுப்பிப் பயன்படுத்துவது என்பது ஒன்று. திடீரென்று ஒரு நாளைக்கு ஒரு மாநிலத்திலே மின்சாரம் தேவைப்படாமல் இருக்கலாம். அதே தினத்திலே அந்த மின்சாரத்தை வேறொரு மாநிலத்திலே பயன்படுத்துவதற்கு அதாவது 400 கே. வி. டிரான்ஸ்மிஷன் லைன் என்று சொல்வார்கள். இது இந்தியாவிலேயே நேஷனல் கிரிட் என்கிறோம். ஐரோப்பா போன்ற கண்டங்களிலே பல நாடுகளே இணைந்து அத்தகைய கிரிட் ஏற்பாடுகளைச் செய்து கொள்கிறார்கள்; உதாரணத்திற்குக் கிழக்கு ஜெர்மனியிலேயும், அதே போல் ரஷியாவிலேயும் இருக்கக்கூடிய அந்த நிலையங்களுக்குக்கூட அப்படி மாற்றிக் கொள்கிறார்கள். ஆகவே, இதற்கும் மத்திய அரசு உற்பத்தி நிலையங்களை மேற்கொள்ள வேண்டுமென்று எடுக்கின்ற நிலைக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது, மற்ற நாடுகளில் இரண்டு நாடுகளுக்கு மத்தியிலே அப்படிப்பட்ட இணைப்பு—கிரிட்—ஏற்படுத்துவதாகச் சொல்கிறார்கள். மற்ற நாடுகள்—ஐரோப்பிய நாடுகளை எடுத்துக் கொண்டால், அங்குள்ள 15, 20 நாடுகள் ஒன்றாகச் சேர்ந்திருக்கக்கூடிய அளவு பெரிய நாடு நமது நாடு. அதனால், இன்றைக்கு மாநிலங்களிலே உற்பத்தியாகிற மின்சாரம் போதவில்லையென்பது உண்மை. அகில இந்திய கிரிட் ஏற்படுத்துவதன்மூலம் உற்பத்தி அதிகரிக்குமா? அது அதிகரிக்க இடம் இல்லை. அப்படியானால், அகில இந்திய நிர்வாகம் இந்த கிரிட்டை நடத்துவதற்கு ஏற்படுமாகு இல்லையா? ஏற்படப் போகிறது என்று கருதுகிறோம், அது உண்மையா, இல்லையா என்று சொல்லுங்கள். அப்படியானால், அந்த விநியோகத்திற்கு உங்கள் மாநிலங்களுக்கு மத்தியிலே சுதந்திரம் இருக்குமா? அல்லது மத்தியிலிருந்து கட்டுப்படுத்தக் கூடிய அளவுக்கு அவர்கள் சொல்லக்கூடிய அளவுக்குத்தான் அந்த விநியோகம் வருமா, இல்லையா? அப்படிப்பட்ட ஒரு கொள்கையை ஏன் ஆராயாமல், தகுந்த ஆராய்ச்சி இல்லாமல், இந்தஅவையிலிருக்கிற எங்களைப் போன்ற உறுப்பினர்களுக்கும் கொஞ்சம் தெரிவிக்காமல் அப்படிப்பட்ட ஒரு கொள்கை எப்படி முடிவுக்கு வந்தது?

1981 ஜனவரி 30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சாதாரணமாக மாநிலங்களுக்கு இடையில் மின்சாரத்தை விநியோகம் செய்வதற்குப் பெரிய கோபுர லைன்கள் போடப்படுகின்றன. 230 கே. வி. லைன் என்று சொல்வார்கள்—தேசிய அளவிலே போடப்படுவது 400 கே. வி. லைன். அது இன்னும் நம் தென் மாநிலங்களிலே நிர்மாணிக்கப்படவில்லை. 400 கே. வி. லைன்களை நாம் போடுகிறபொழுது, லைன் லாஸஸ், அந்த மின்சாரத்தை அனுப்புவதிலே ஏற்படுகின்ற இழப்பு மிக மிகக் குறைவு. அதோடு மட்டுமல்ல, 400 கே. வி. லைனைப் போடுவதென்றால், ஏராளமான செலவு பிடிக்கும். இது ஒரு மாநில அரசு ஏற்றுக்கொண்டு செய்வது என்பது மிகக் கடினமான காரியம். இது ஒன்று.

இரண்டாவது, மத்திய சர்க்கார் மாநிலங்களிலே உள்ள மின்சார நிலையங்களை எடுத்துத்தான் மின்சார உற்பத்தி செய்யவேண்டுமென்ற நிலையிலே இல்லை. மத்திய சர்க்காரே இன்றைக்கு சூப்பர் தெர்மல் ஸ்டேஷன் என்று கொண்டு வருகிறார்கள். 1,000, 2,000 மெகாவாட் என்று அவர்களே உற்பத்தி செய்கிறார்கள். உதாரணத்திற்கு ராமகுண்டத்தில் மிகப் பெரிய அனல் மின் நிலையத்தை, பிட்ஹெட் சூப்பர் தெர்மல் ஸ்டேஷனைக் கொண்டு வருகிறார்கள். அந்த மின்சாரத்தில் தமிழகத்திற்குப் பங்கு கொடுத்திருக்கிறார்கள். அங்கிருந்து நாம் எப்படி பெறப் போகிறோம்? அவர்கள் அந்த கிரிட்டைப் போட்டு அதன்மூலம் அந்த மின்சாரத்தை நமக்குத் தந்தால்தான் நமக்கு வருமே தவிர, இல்லையென்றால், அந்த மின்சாரம் நமக்கு வராது. ஆகையினாலே, மிகப் பெரிய மின்நிலையங்களை, மத்திய அரசே இன்றைக்கு வைத்திருக்கின்ற காரணத்தாலே, அங்கு உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை அவர்கள் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டி இருக்கிற காரணத்தாலே, நம்முடைய மாநிலத்தில் நிரந்தரப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தாலே, அவர்கள் அதை விரைவுபடுத்துவார்களேயானால், அதனால் நமக்கு நன்மையே தவிர, வேறல்ல. அதிலே மத்திய மாநில உறவு சம்பந்தமாகவோ, அல்லது அதிகார சம்பந்தமான பிரச்னைகளோ இல்லை. சென்ட்ரலில்—அவர்கள் உற்பத்தி செய்கிற மின்சாரத்தை அனுப்புவதற்காக அவர்கள் லைன் போடுகிறார்கள். அதிலே ஒன்றும் பிரச்னையே இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நாள்தோறும் மின்சாரத்தினுடைய தேவை உயர்ந்து வருகிற இந்த நேரத்திலே மத்திய அரசு சரியான நேரத்திலே இந்த அனைத்து மின்விசை விநியோக இணையம் சம்பந்தமாக டெல்லியிலே கூட்டிய அந்த ஒரு மாநாடு நிச்சயமாகப் பயன் உள்ளதாக இருக்கும். அங்கே கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே பேசிய, அந்தக் கொள்கை அளவிலே ஏற்பட்ட அந்த இணக்கத்தைப் பற்றிய விவரங்களைச்

சபைக்குத் தெரிவிப்பார்களா? மேலும், அரியானாவிலே மின் விசை அதிகமாக இருக்கிற காரணத்தாலே, நமக்கத்திலே யிருக்கிற ஆந்திர மாநிலத்தவர் தங்கள் செலவிலே அங்கு ஒரு பவர் ஹவுஸ் கட்டி, அங்கேயிருந்து மின்சாரம் பெறுவதற்கு முயற்சி நடைபெறுவதாக சமீபத்தில் அங்கு சென்ற காலத்திலே எங்களுக்குச் சொன்னார்கள். அது மாதிரி வேறு அதிகமாக இருக்கிற மாநிலங்களிலே, தமிழக அரசு தம்முடைய செலவிலே மின் உற்பத்தி நிலையத்தைத் துவக்கி, தமிழகத்திற்கு மின்சாரம் கொண்டு வர முயற்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ். நான் ஏற்கனவே சொன்னதைப் போல இது கொள்கை அளவிலேதான் ஒப்புக் கொள்ளப்பட்டது. நமக்கு தமிழ்நாட்டைப் பொருத்தவரையில், மெட்ராஸ்—நெய்வேலி. 400 கே. வி. மற்றும் நெய்வேலி—சேலம், சேலம்—உடுமலைப் பேட்டை, சேலம்—பெங்களூர். மெட்ராஸ்—கடப்பா இவைகள் எல்லாம் அந்த 400 கே. வி. லைனிலேதான் வரும். நாமே போய் மின் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்துவது என்பது இப்போது தேவையில்லை. ஏனென்றால். எங்கெங்கு நிலக்கரி கிடைக்கிறதோ அங்கே எல்லாம் மத்திய அரசு தன்னுடைய சொந்த செலவில் மின் உற்பத்தி நிலையங்களை ஆரம்பிக்கிறது. அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை அங்கே இருக்கின்ற சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்குப் பங்கு போட்டு கொடுக்க இருக்கிறார்கள். எனவே நாம் போய் நடத்துவது என்பது தேவை இல்லாத வேலை.

மண்டபம் அருகே உள்ள முயல் தீவு.

*வினா எண் 103 திரு. செ. சிவசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மண்டபத்திற்குத் தெற்கே சுமார் 500 ஏக்கருக்கு மேல் பரப்பளவுள்ள முயல் தீவு யாருக்குச் சொந்தமானது?

(ஆ) தனியாருக்குச் சொந்தமானால் அரசு எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) கிராம செட்டில்மெண்ட் 'ஏ' ரிஜிஸ்தரில், 3 8·85 ஏக்கர் பரப்பளவுள்ள, "முயல் தீவு". மண்டபம், சாலம் சென்ற கான்பகதூர் பி. ஆர். கே. முகமது அப்துல் ரஹ்மான் மரக்கயர் என்பவருக்குச் சொந்தமானது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீவு கிட்டத்தட்ட 500 ஏக்கருக்கு மேல் பரப்பளவு உள்ளது. அப்படிப்பட்ட பெரிய தீவுகள் எல்லாம் தனியாருக்குச் சொந்தமாக இருப்பதன் காரணமாக அந்தப் பகுதியிலே கடத்தல் செய்வதற்கும் நாட்டின் பொருளாதாரத்தை சீர்கேடடையச் செய்வதற்கும் சந்தர்ப்பம் இருக்கிறது. அப்படிப்பட்ட தீவுகளை அரசாங்கமே எடுத்துக்கொண்டு, சுற்றுலா வாரியத்தின் மூலம் அபிவிருத்தி செய்து தரப்படுமா என்று கேட்பதோடு, அந்தத் தீவிலே நல்ல தண்ணீர் கிடைக்கிறது. பக்கத்திலே இருக்கின்ற குரிசைச் தீவில் நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே கடலுக்கு மத்தியிலே இருக்கின்ற இந்தத் தீவிலே நல்ல தண்ணீர் கிடைப்பதன் காரணமாக அதை உபயோகப்படுத்துவதற்காக வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல தண்ணீர் கிடைத்தால், அந்த நல்ல தண்ணீரைக் குடிப்பதற்கு வேண்டிய ஜனங்கள் அங்கே இருந்தால், அரசு பயன்படுத்த என்றைக்கும் தயங்காது. பெரிய தீவுகளை தனிப்பட்ட யாருக்கும் சொந்தமாக விடுவதற்கு இந்த அரசு எப்போதும் தயாராக இல்லை. இப்போது நில உச்சவரம்புச் சட்டம் வந்திருக்கிறது. தொடர்ந்து உச்சவரம்பு சட்டத்தை நடைமுறைப்படுத்த எல்லா விதமான முயற்சிகளையும் அரசு எடுத்துக் கொண்டு வருவது உங்களுக்குத் தெரியும். பெரும்பாலான பகுதி அந்தத் தீவு மேய்ச்சல் தரையாக இருந்தது. 1961 ஆம் ஆண்டு உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் மேய்ச்சல் தரைக்கெல்லாம் விதிவிலக்கு அளிக்கப்பட்டது, உங்களுக்குத் தெரியும், இப்போது 1971 ஆம் ஆண்டு சட்டத்தில்தான் மேய்ச்சல் தரைகளுக்கு இருந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது என்பதும் உங்களுக்குத் தெரியும். அதற்குப் பின்னர், நடவடிக்கை எடுக்கிறபோது, அப்போது அந்தக் குடும்பம் ஒரே குடும்பமாக இருந்தது. இப்போது அது 20, 30 குடும்பங்களாக ஆகிவிட்டிருக்கின்றன, இன்றைக்கு இருக்கிற நிலைகளை ஒட்டி, மேய்ச்சல் தரைக்கு இருந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது. இந்த நில உச்சவரம்பு சட்டத்தை எப்படி பாதிக்கிறது என்பதைத் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம், மூன்று கேள்விகளைக் கேட்டீர்கள். மூன்றாவதாக சுற்றுலா வாரியத்தின் மூலம் இதை சுற்றுலா மையமாக ஆக்கலாமா என்று கேட்டீர்கள். கடல் சூழ்ந்த தீவுப் பகுதிகள் எல்லாம் மின் துறையின் கீழ் இருக்கிறது, மின்துறை இந்த ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த முயல் தீவு மண்டபத்திற்கு மிக அருகாமையில் உள்ளது. அதற்கு அருகில் குருசடைத் தீவு என்று ஒரு தீவு இருக்கின்றது. அந்தத் தீவிலே உலகத்திலேயே கிடைக்காத அரிய கடல்வாழ் இனங்கள் எல்லாம் கிடைக்கின்றன. அதை ஆராய்ச்சி செய்வதற்கு அங்கே ஒரு

[1981 ஜனவரி 30

மரைன் பயாலஜிகல் ஸ்டேஷன் உள்ளது. அங்கே நல்ல தண்ணீர் இல்லாத காரணத்தால், வெளிநாட்டினரும், உள்நாட்டினரும் அங்கே தங்குவதற்கு இயலாமல் இருக்கின்றது. எனவே இந்த முயல் தீவிலே கிடைக்கும் நல்ல தண்ணீரை இந்த குருசடைத் தீவிற்குப் பயன்படுத்த அரசு முயற்சிக்குமா? மேலும் தீவுகள் கேந்திரமான இடங்களாக இருப்பதால், தேசப் பாதுகாப்பை முன்னிட்டு, கடற்கரை ஓரமாக உள்ளத் தனியார் தீவுகளை அரசு கையகப்படுத்துமா?

[முற்பகல் 9—20]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் ஏறக்குறைய 21 தீவுகள் இருக்கின்றன. எந்தெந்தத் தீவுகளை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. சில தீவுகளில் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. சில தீவுகளில் நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. 6 ல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே 1969 ன் நில உச்சவரம்புச் சட்டத்தின், கீழ் விதிவிலக்கு அளிக்கப் பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். முதலில், மரக்காயர் குடும்பத்திற்கு அது சொந்தமாக இருந்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்போது கொடுக்கப்பட்டது? யாரால் கொடுக்கப்பட்டது? தற்போதுள்ள நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அதை எடுத்துக்கொள்ள என்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருக்கிறது? அதற்காக தகுந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, விசாரணைகள் செய்யப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, யாரால் கொடுக்கப்பட்டது என்பது அல்ல, கிராமக் கணக்குகளைப் பொறுத்த வரையில் 'ஏ' ரிஜிஸ்டர் 'பி' ரிஜிஸ்டர் என்று இருக்கிறது. 'ஏ' ரிஜிஸ்டரில் அரசு நிலங்கள் பதிவு செய்யப்படும். 'பி' ரிஜிஸ்டரில் இனாம் நிலங்கள் பதிவு படும். 'ஏ' ரிஜிஸ்டரில் அவருக்குப் பதிவாகியிருக்கிறது. யாரும் கொடுத்தது அல்ல. அது பூர்வ சொத்து என்று அர்த்தம்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் உச்சவரம்பு என்று சட்டம் வந்த காலத்திலும் அந்த நிலங்கள் எடுக்கப்படவில்லை. 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் உச்சவரம்பு என்று கொண்டுவரப்பட்டக் காலத்திலும் அந்த நிலங்கள் எடுக்கப்படவில்லை. 500 ஏக்கருக்கு மேல் உள்ள நிலங்கள் தனிப்பட்ட ஒருவர் வைத்து இருக்கிறார் என்பதை இப்போது உங்கள் பார்வைக்குக் கொண்டு வந்து இருக்கிறேன். இன்றைக் காவது, அதை எடுத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1981 ஜனவரி 30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, 1969-ல் உச்சவரம்புச் சட்டம் வந்தபோது மேய்ச்சல் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. 1971-ல்தான் மேய்ச்சல்நிலங்களுக்கு அளிக்கப்பட்ட விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது. இப்போது கவனத்திற்குக்கொண்டு வந்து இருக்கிறீர்கள். அதற்குத்தீவிரமான நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குத்தகை உரிமை வழக்குகள்.

*வினா எண் 104—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நிலம் சம்பந்தப்பட்ட குத்தகை உரிமை வழக்குகளை தாசில்தார்கள் விசாரிப்பதால் காலதாமதம் ஏற்பட்டு வழக்குகள் பெருமளவில் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைந்து முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை ஆவணப் பதிவு சட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் தற்சமயம் 6,397 மனுக்கள் நிலுவையில் உள்ளன. மேற்கூறிய மனுக்களை மூன்று மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்த வழக்குகளை தாசில்தார்கள் தான் விசாரிக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்குப் பல்வேறு வேலைகள் இருப்பதால், இந்த விசாரணைகள் காலதாமதம் ஆகின்றன. கடன் நிவாரணச் சட்டத்திற்காக தனியாக தாசில்தார் போட்டு இருப்பதுபோல், இந்தக் குத்தகை உரிமை வழங்கும் வழக்குகளையும் விசாரிக்கத் தனித் தாசில்தார் போட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, குத்தகை நிலங்கள் அதிகமாக இருந்தபோது தனியாக தாசில்தார்கள் போடப்பட்டு, பைசல் செய்யப்பட்டன. இன்றைக்கு எல்லா இடங்களிலும் முடியும் தருவாயில் இருக்கிறது. இன்னும் ஏறத்தாழ 6,000 மனுக்கள்தான் மாநிலம் பூராவிலும் உள்ளன. சில தாசில்தார்களுக்கு 100, 200 மனுக்களும் சில தாசில்தார்களுக்கு 10 அல்லது 20 மனுக்களும்தான் பாக்கி இருக்கின்றன. அவைகளை விரைவிலே பைசல் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. எம். சின்னசாமி: தலைவரவர்களே, இந்த வழக்குகளை தாசில்தார்கள் விசாரிப்பதற்குப் பதிலாக, தாசில்தார்கள் தீர்ப்பு

வழங்கிய பிறகும் சம்பந்தப்பட்ட நபர்கள் சிவில் கோர்ட்டுக்கு போகிற காரணத்தால், சிவில் கோர்ட்டே விசாரிக்க அரசு சட்டம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, வேலை முடியும் தருவாயில் இருப்பதால் புதிதாக ஒரு முறையைக் கொண்டுவரத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பு. கோ. ஆலூர் ஜகதீசன் : தலைவரவர்களே, கிராம கர்ணமாக இருந்தவர்கள் நிலத்தை குத்தகைப் பயிர் செய்யும் விவசாயிகள் பெயரில் பதிவு செய்வதற்குப் பதிலாக நிலச் சொந்தக்காரர்கள் பெயரிலேயே உண்மைக்கு மாறாக பதிவேட்டில் பதிவு செய்திருக்கிறார்கள். ஆகையால் குத்தகைதாரர்கள் வழக்கில் நல்ல தீர்ப்பை எதிர்பார்க்க முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, குத்தகை பதிவு ஏட்டில் குத்தகைதாரர்களுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் பதிவு செய்ய வேண்டும் என்றும் குத்தகைதாரர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்றும் அரசு சொல்லியிருக்கிறது. பெரும்பாலும் நிலம் வைத்திருப்பவர்கள் குத்தகைக்கு விட்டுவிட்டு குத்தகைக்கு விடவில்லை என்று சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆனால் குத்தகை செய்கிறவர்கள், நான் குத்தகை செய்கிறேன் என்று சொல்வது மிகமிகக் குறைவு. ஆகவே, மனுதாரர்களுக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, மாநிலம் முழுவதிலும் 6,397 வழக்குகள்தான் இருப்பதாக அமைச்சரவர்கள்சொன்னார்கள். அதனால் மாநிலம் முழுவதுக்கும் தாசில்தார்கள் தனியாக நியமிக்கப்படாவிட்டாலும் அதிகமாக வழக்குகள் தேங்கியுள்ள திருச்சி மாவட்டத்திற்கு தனி தாசில்தாரை நியமித்து, இந்த விசாரணையை விரைவிலே பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இன்று மாநிலம் முழுவதுமாக 6397 வழக்குகள் இருப்பதாகச் சொன்னேன். எந்தெந்த மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது என்பதற்கு கணக்கு இருக்கிறது. அதிகமாக இருக்கிறது விரைவிலே வழக்குகள் முடியாத நிலை ஏற்பட்டால் அரசு அது பற்றி ஆராயும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவரவர்களே, குத்தகைப் பயிர் செய்பவர்களை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட தாசில்தார்கள் நிலப்பிரபுக்கள் பெயரிலேயே பதிவு செய்துவிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு இந்த அரசுக்கு

வந்திருக்கிறதா? அப்படிப்பட்ட அவல நிலையைப் போக்குவதற்கு டொது உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி ஒன்றை ஆங்காங்கே போட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அரசு யோசிக்கும்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இன்னும் 6,000 வழக்குகள் இருப்பதாகச் சொன்னார்கள், மாநிலம் பூராவிலும். அதோடுகூட புதிய சட்டங்கள் இயற்றப்பட்டு, அமுல்படுத்துகிற பொறுப்பும் தாசில்தார்களுக்கு இருக்கிறது. புதிய, புதிய பென்ஷன் ஸ்கிம்களை அமுல்படுத்தும் பொறுப்பும் தாசில்தார்களுக்கு இருக்கிறது. அதற்குமேல் அமைச்சர்கள் 'டூர்' செய்யும் போது அவர்களுக்கு 'வெயிட் ஆன் தி மினிஸ்டர்ஸ்' என்ற முறையில் 'அடிஷனல் ரெஸ்பான்சிபிலிட்டி' இருக்கிறது. ஆகவே, இந்த மாதிரியான பொறுப்புகளைக் குறைத்து, வழக்குகளை துரிதமாக பைசல் செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தாசில்தார்களுக்கு வேலை அதிகமாக இருந்தால், அதற்கு தகுந்தபடி துணை தாசில்தார்களையும் மற்றுமுள்ள அலுவலர்களையும் அரசு நியமிக்கிறது. அவர்கள் எங்களுக்கு வேலை அதிகமாக இருக்கிறது என்று சொல்லவில்லை. அவர்களால் எவ்வளவு செய்ய முடியும் என்று அரசு யோசிக்கிறது. அதுமட்டுமல்ல; இந்த 6000 மனுக்களும் ஒரே இடத்தில் இல்லை; 156 தாலுகாக்களில் இருக்கின்றன. சில தாலுகாக்களில் மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன. ஏதாவது குறிப்பிட்ட ஒன்றிரண்டு தாலுகாக்களில் அதிகமாக இருந்தால், அதுபற்றி அரசு யோசிக்கும்.

தண்ணீர்த் தீர்வை விதிப்பு.

* வினா எண் 105—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்ணீர்த் தீர்வை விகிதங்களை சீரமைப்பது பற்றி வருவாய் வாரிய உறுப்பினரைக் கொண்ட ஒரு நபர் கமிட்டி சிபாரிசு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

பாலிடெக்னிக்குகளில் சீட்டு முறை.

*வினா எண் 106 —திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

[1981 ஜனவரி 30

தமிழகத்திலுள்ள பாலிடெக்னிக்குகளில் "சிப்டு" முறையை அமுல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : இல்லை.

[முற்பகல் 9—30]

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டில் பாலிடெக்னிக்குகளில் உள்ள மொத்த இடங்கள் எத்தனை, கடந்த ஆண்டு வந்த விண்ணப்பங்கள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்டமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இவ்வாண்டு தொழில் நுட்ப பயிலகங்களின் அங்கீகரிக்கப்பட்ட சேர்ப்புத் திறன் 1,608 ஆகும். 9 தொழில் நுட்பப் பயிலகங்களிலும் சேர்க்கும் திறனை 120-லிருந்து 180 ஆக அதிகரித்தும் மற்ற தொழில் நுட்பப் பயிலகங்களில் அனுமதிக்கப் பட்ட இடங்களை விட 10 சதவீதம் அதிகமாக அனுமதிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேல்நிலைக் கல்வியில் தேறியவர்களை இரண்டாம் ஆண்டில் சேர்க்கவும் 10 சதவீத இடம் ஒதுக்கீடு இவ்வாண்டு செய்யப்பட்டுள்ளது. பகுதி நேர தொழில் நுட்பப் பயிலகங்களிலும் சேர்ப்புத் திறன் உயர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சின்னராஜ் : பேரவைத் தலைவரவர்களே, அரசாங்க உத்தியோகம் தேவையில்லை என்ற உத்தரவாதம் கொடுத்து பயிற்சி பெறுவதற்கான கட்டணத்தையும் செலுத்த முன் வருகிறவர்களுக்கு தொழில் கல்வியைக் கற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்கின்ற வகையில் திட்டம் வகுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பாலிடெக்னிக்குகளில் ஷிப்ட் முறை இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் தொழில் நுட்பக் கல்வியைப் பொறுத்தவரையில் தற்போது மாணவர்கள் மத்தியில் அதிக ஆர்வம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் புதிதாக பாலிடெக்னிக்குகளை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன். அப்படி ஏற்படுத்துவதாக இருந்தால் மதுரை மாவட்டத்தில் தேனி பகுதியில் அவ்வாறு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, புதிதாகப் பாலிடெக்னிக் ஆரம்பிக்கவேண்டும் என்ற அடிப்படையிலேதான் இந்த ஆண்டு 5 பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன தனியார் துறையிலே. அரசுத்துறையிலே புதுக்கோட்டை மாவட்டத்திலே ஒன்று ஆரம்பிப்பதற்குரிய

1981 ஜனவரி 30]

கருத்து இருக்கின்றது. நீலகிரி மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்துருவும் இருக்கின்றது. அதற்குப் பின்னால் வேறேதேனும் முயற்சிகள் எடுக்கப்படுமேயானால் அரசு அதை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காரைக்குடியில் பல்கலைக் கழகம்.

*வினா எண் 107—திரு து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) ஆம். இப்பொருள் குறித்து அரசுக்கு தகுந்த பரிந்துரைகளைச் செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்ட உடன் மேல் நடவடிக்கைகள் தொடரும்.

செங்கற்பட்டு அரசினர் கலைக் கல்லூரி.

*வினா எண் 108—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கல்பட்டு அரசினர் கலைக் கல்லூரியில் பி.யு.சி. படித்துத் தேறியமாணவர்களைப் பட்ட மேற்படிப்பிற்குச் சேர்க்க மறுக்கப் படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உண்மையில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, கடந்த ஆண்டு செங்கற்பட்டு அரசினர் கலைக் கல்லூரியில் பி.யு.சி. படித்த மாணவர்களை பி.காம். பட்டப் படிப்புக்கும் மற்ற பட்டப் படிப்புகளுக்கும் சேர்க்க முடியாது என்று கல்லூரியின் முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு மிகுந்த சிரமப் பட்டு ஒருசிலரைச் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டாவது பி.யு.சி.யில் தேறிய மாணவர்களுக்கும் பட்டப் படிப்பிலே குறிப்பிட்ட அளவு இடங்களை ஒதுக்கித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே இந்த ஆண்டு 68 மாணவர்கள் பி.யு.சி. வகுப்பிலே படித்தவர்கள் பட்டப் படிப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் தான் என்னிடத்திலே தரப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சில மாணவர்களைச் சேர்த்திருப்பதாகச் சொல்லி விட்டார்கள், பிறகு ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வெளிப்படையாக அனைவருக்கும் தெரிந்த உண்மை. கூட்டுறவு வங்கிகளின் மூலமாக கடனை அதிகப்படியான சதவீதம் வாங்கியவர்கள் பெரும் விவசாயிகள் தாம். குறைந்த அளவு கடனை வாங்கியவர்கள் சிறு விவசாயிகள் தாம். பெரிய விவசாயிகளுக்குக் கொடுத்த கடன் அதிகப்படியான அளவிற்கு 80 சதவீதம் வரையில் நிலுவையில் இருக்கிற காரணத்தினால்தான், இந்த மாநில மத்திய கூட்டுறவுச் சங்கங்களினாலும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களினாலும், ரிசர்வ் வங்கிக்கு கடனை ஒழுங்காக திருப்பிக் கொடுத்து மேலும் கடன் வசதிகளைப் பெற முடியவில்லை. அதனால் கடனை ஒழுங்காகக் கட்டிய சிறு விவசாயிகள் திரும்பவும் தங்கள் விவசாயத்திற்கு கடன் பெற முடியாமல் போய்விடுகிற சூழ் நிலையும் ஒரு அவல நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு பெரிய விவசாயிகளின் தவறான அணுகுமுறைதான் காரணம் என்பதும் அனைவரும் அறிந்ததே. அரசு அந்த நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கிகளின்கீழ் வருகிற ஏ.சி.எஸ். என்ற கூட்டுறவு ஸ்தாபனங்கள், தங்களுடைய கடன் பெறுகிற தன்மையை இழந்து விட்ட காரணத்தினால், அதற்குக்கீழ் வருகிற கிராமக் கூட்டுறவு வங்கிகள், தங்களுடைய கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தியிருந்தாலும்கூட, மேற்கொண்டு கடனைப் பெறமுடியாமல் இருக்கிறது. ஆகையினால் கடனை ஒழுங்காக கட்டியவர்கள் திரும்பவும் கடனைப் பெறுவதற்கு வழி இல்லாமல் இருக்கிறது. ஆகையினால், கடனை திருப்பிச் செலுத்திய கிராமக் கூட்டுறவு வங்கிகளுக்கு, நேரடியாக கடன் வசதியை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே இதுபோன்ற நிலையிலிருக்கும் சங்கங்களுக்கு தற்போது சில சலுகைகளை அரசு அளித்துவருகிறது. இத்தகைய சங்கங்கள் கடனை ரிசர்வ்வங்கிக்கு ஒழுங்காக திருப்பிச் செலுத்தியிருந்தாலும் இல்லாவிட்டாலும் கூட, கிராமப்புற விவசாயம் பாதிக்கப்படு அதனால் கிராமப்புற வளர்ச்சியும் பொருளாதாரமும் சீர்குலைந்து விடக்கூடாது என்று கருதிதான், தீவிர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய கடனை பெற்றுக் கொள்ளலாம் என்றும், தனியார் கூட்டுறவு வங்கிகளிலிருந்தும் கடன் பெற்றுக் கொள்ளலாம் என்றும், சர்க்கரை ஆலைகளில் பதிவுசெய்து கொண்டுள்ள, கரும்பு விவசாயிகள், அதன் அடிப்படையில் கடனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும், வறட்சிப் பணிகளின் திட்டத்தின் அடிப்படையில் கடனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும், வேறு மாநிலங்களிலிருந்து

குடிபெயர்ந்திருக்கும் அகதிகள் வைத்திருக்கும் நிலங்களுக்கு அகதிகள் நிவாரண முறையாக, அந்நிலங்களுக்கு பயிர்செய்யத் தேவையான கடன்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழும் கடனைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், இன்னும் பலவகைகளிலும் விதிமுறைகளை வகுத்து கடனைக் கொடுத்து வருகிறோம். இவைகளில் ஏதாவது ஒன்றின் கீழோ அல்லது பல வகைகளின் கீழோ, கடனைத் திருப்பிக் கட்டிய வங்கிகள் மேலும் கடனைப் பெற்றுக் கொள்ளலாம். அது தவிர, நான் ஏற்கெனவே சொன்னது போல் ரிசர்வ் வங்கி தன்னுடைய குறியீட்டை 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக குறைத்துள்ளது. இது மட்டும் அல்லாமல் மாநில அரசு கேட்புத் தொகையினை 50 சதவீதத்தில் இருந்து 70 சதவீதமாக உயர்த்தியிருக்கிறது இந்தச் சலுகைகளை வைத்து பலபேர் கடன் வசதிகளை பெறலாம். பெற்றுக் கொண்டும் இருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—40)

திரு. கே. கல்லன்: வாங்கிய கடனை பலர் திருப்பிக் கட்டி யிருந்தும் அவர்கள் கடன் பெற இயலாத நிலையில் இருப்பதால் அவர்கள் கடன்கள் பெறுவதற்கு அரசு ஆவனசெய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஏற்கனவே இதற்கு விடை அளித்திருக்கிறேன். பெரும் விவசாயிகள் அவர்கள் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கட்டுவார்களானால், அவர்கள் வாங்கிய கடன்களை நாணயமாக திருப்பிக் கட்டுவார்களானால் சிறு விவசாயிகள் மேற்கொண்டும் துன்பத்திற்காளாகாமல் அவர்களுக்கு விரைவில் கடன் தரக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ரிசர்வ் வங்கி 40% என்பதை 20% ஆகக் குறைத்திருக்கிறது. அதற்குமேல் குறைக்க வேண்டுமென்றால் மத்திய அரசை உறுப்பினர் அவர்கள் தமது இயக்கத்தின் மூலம் வற்புறுத்தி இந்தச் சலுகையை மாநில அரசுக்குப் பெற்றுத்தருவார்களானால் மாநில விவசாயிகளுக்கு பெரும் நன்மைகிட்டும்.

திரு. உ. சுப்பிரமணியன்: அத்தியாவசியப் பண்டங்களான அரிசி, ஜீனி, மண்ணெண்ணெய் போன்றவற்றின் விநியோகத் திற்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு அவை இது மாதிரி மத்திய வங்கிகளிலிருந்து கடன் பெற தகுதி இழந்துவிட்டதால் அத்தியா வசியப் பண்டங்கள் விநியோகம் செய்வது தடைபட்டிருப்பதை அரசு அறியுமா? அதை நிவர்த்தி செய்ய அப்படியிருக்கும் இடங்களுக்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வந்திருக்கிறதா?

[1981 ஜனவரி 30

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாற்று ஏற்பாடு என்று செய்வது இயலாத காரியம். ஆனால் அத்தகைய சங்கங்கள் எல்லாம் நுகர்பொருள்களை விநியோகம் செய்யக் கூடிய அளவிற்கு நுகர்பொருள் பயன்படுத்துகிற விவசாயிகள் வாங்கிய கடன்களை கண்டிப்பாகத் திருப்பிக்கட்ட வேண்டும். நுகர் பொருள்களுக்கென மைய வங்கிகள் மூலம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக நலிந்த பிரிவினருக்கு நன்மை தருகிற ஒரு பிரிவாகயிருப்பதால் நுகர்பொருள் விநியோகம் தங்குதடையின்றி செயல்பட அரசு நடவடிக்கை எடுக்கும்.

கோவை மாவட்டத்திலுள்ள தேசிய பஞ்சாலை தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம்.

*வினா எண். 111—**திரு. கு. ரமணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கோவை மாவட்டத்தில் உள்ள தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷன் மில்களில் தொழிலாளர்களுக்கு சென்ற தீபாவளிக்கு போனஸ் அட்வான்ஸ் மட்டும் கொடுத்து போனஸ் கணக்கு தீர்த்துக் கொடுக்காமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் மற்ற பஞ்சாலைகளில் கொடுக்கப்பட்ட அளவுக்கு இந்த மில்களிலும் கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷன் மில்களின் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன் 18-10-79-ம் தேதி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 1,300/- போனஸ் பிரச்சினை குறித்து முன் பணமாக வழங்கவும், தொழிலுக்கேற்ற ஊதியம் பெறாத தொழிலாளி ஒவ்வொரு வருக்கும் ரூ. 650/-ம் கொடுக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு 31-10-80 அன்று நடந்த பேச்சு வார்த்தைகளின்படி போனஸ் 1-11-80 நாளன்றும், கூடுதல் பணம் (Ex-gratia) 4-11-80 நாளன்றும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

(ஆ) இந்நிலையில் அரசு இதில் தலையிடும் பிரச்சினைக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: தொழிலாளர்களுடைய இந்த ஆண்டு போனஸ் பிரச்னை மத்திய அமைச்சர்கள் மூலம்பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டு அது ஒரு அறைகுறையான முடிவுக்கு வந்துள்ளது உண்மை. ஆனால் 1964-ல் 10% அதிக போனஸ் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்த தேசிய பஞ்சாலை

1981 ஜனவரி 30]

கார்ப்பரேஷன் கீழ் உள்ள மில்களில் அந்தக் கணக்கை இன்னும் முடிக்காமல் அந்த 10% போனஸ் வாங்கியவர்கள் யாராவது வேலையை விட்டு நின்று விட்டால் அது பிடிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பிரச்னையை சமுகமாகத் தீர்த்து வைக்க அமைச்சர் அவர்கள் தலையிட்டு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1978–79, 1979–80 ஆண்டுகளுக்கான போனஸ் பற்றிய தகவல் என்னிடத்தில் இருக்கிறது. போனஸ் எக்ஸ்—கிரேசியாஸ் ஆனால், 74-ஐப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேள்வி மூலம் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அதற்குத் தனிக் கேள்வி போடட்டும். நான் தலையிட்டுப் பேச்சுவார்த்தை பேச வேண்டுமென்றால், தனி மனு கொடுத்தால் அதை ஆராயலாம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த விஷயம்பற்றி பல தடவைகள் தொழிலாளர் நல இலாகாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது; அதைச் சரியான முறையில் கவனிக்கப் படவில்லை என்று அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷனுக்கு கீழ் தமிழ் நாட்டில் சுமார் 14 மில்களில் ஏற்படும்படியான பிரச்னைகளில் போதிய அளவு துரிதமாக தமிழக அரசு சார்பில் அமைச்சரும் இலாகாவும் தலையிடாத ஒரு குறைபாடு இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுப்பார்களா? சம்பந்தப்பட்ட பிரச்னையில் ஏதாவது தீர்வு காண்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை தலையிட்டு, கஷ்டப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் துரைசாமி, ஐ.ஏ.எஸ். என்ற அதிகாரியோடு பேசியிருக்கிறேன். இதனால் அந்த ஒப்பந்தம் வந்திருக்கிறது என்று கருதிக் கொண்டிருக்கிறேன். 1978–79, 1979–80-க்கான கணக்குகள் என்னிடத்திலே இருக்கிறது. இதற்கு முன் பாக்கி இருக்குமானால் என்னிடத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்து பேசலாம். மனு கொடுக்கலாம், இருவரும் சேர்ந்து அதற்குரிய முயற்சிகளில் ஈடுபடலாம்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய பஞ்சாலைகளைப் பொறுத்த வரையில், எதிர் காலத்தில் இப்படிப்பட்ட பிரச்னைகளில் காலதாமதம் ஆகாமல் இருப்பதற்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது அதிகாரபூர்வமாக ஒரு கமிட்டியை அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை.

[1981 ஜனவரி 30

பம்மல் பேரூராட்சியில் குடிநீர் வழங்கல்

*வினா எண் 112—திரு பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஆம் ஆண்டு ஆலந்தூர்—பல்லாவரம் குடிநீர் திட்டத்தின் கீழ் பம்மல் பேரூராட்சியில் இரண்டு மேல்நிலைத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டும் குடிநீர் வழங்காதது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பம்மல் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) பல்லாவரம் உடனடி குடிநீர் தேவை திட்டத்தின்கீழ் பம்மல் பேரூராட்சிக்கு முன்னோடி திட்டத்தின் கீழ் 3 பொது குடிநீர் விநியோக குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பம்மல் பேரூராட்சி உடனடி குடிநீர் திட்டத்திற்கென ரூ 2 87 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப் பட்டுள்ள திட்டத்தின் கீழ் 20 தெருக்களில் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு அவற்றில் கைப்பம்புகள் பொருத்தப் படும். இத்திட்டம் முன்வைப்பு நிதியின் கீழ், பேரூராட்சி யிடமிருந்து நிதி கிடைத்ததும் தொடங்கப் பெறும்.

திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 20 ஆழ் கிணறுகள் பம்மல் பேரூராட்சி நிதியிலிருந்து செலுத்தினால், துவங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். 20 ஆழ் கிணறுகள் பொறுத்தப் பட்டு விட்டன. நான் கேட்பது, 10 ஆண்டு காலமாக இரண்டு குடிநீர் தொட்டிகள் காய்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அதே சமயத்தில் தாற்காலிக திட்டமாக ஆலந்தூர் நகராட்சிக்கும் பல்லாவரம் நகராட்சிக்கும் என்னுடைய தொகுதியிலுள்ள, முட்டுக்காடு பக்கத்திலிருந்து குடிநீர் ஆலந்தூர் நகராட்சிக்கு மட்டும் என்னுடைய தொகுதி வழியாக சென்று, அந்த தொட்டி களிலே நிரப்பப்பட்டு, தண்ணீர் வழங்கப் படுகிறது. அதே போன்று, குன்னத்தூரிலிருந்து பல்லாவரத்திற்கு, அனகாபுத்தூர், பம்மலைக் கடந்து குழாய்கள் செல்வதால், பம்மல் பேரூராட்சிக்கு இரண்டு குழாய்களில் மட்டும் தண்ணீர் விடுகிறார்கள். இந்தத் தொட்டிகள் 10 ஆண்டுகளாக காய்ந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தொட்டிகளில் தாற்காலிக அடிப்படையிலாவது தண்ணீர் ஏற்றப்படுமா? அதேபோன்று, முட்டுக்காட்டிலே யிருந்து வருகின்ற தண்ணீரை, என்னுடைய தொகுதியிலே உள்ள வேளச்சேரி, துரைப்பாக்கம், லட்சுமிபுரம், பெரியார் நகர், கக்கன் நகர் போன்ற பகுதிகளுக்கு வழங்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஜனவரி 30]

மாண்புமிகுபேரவைத் தலைவர்: இது வேண்டுகோளாக இருக்கிறது. கேள்வியாகக் கேளுங்கள்.

மாண்மிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அதிகமான நேரம் பேசி விட்டதால், எதற்குப் பதில் சொல்வது என்று தெரியவில்லை. என்னால் ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை. ஆனால், அவருடைய கேள்வியில் இரண்டு மேல்நிலை தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு, அதற்கு குடிநீர் வழங்கப்படாமல் இருப்பது உண்மையா என்று கேட்டிருக்கிறார்கள். அது உண்மை தான். காரணம், அதற்காக ரூ. 173.32 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பெரிய திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

எல்லா வேலைகளும் முடிந்த பிறகு துரதிருஷ்டவசமாக நீர் எடுத்துச் செல்லும் மெயினில் ஏற்பட்ட சில கோளாறுகள் காரணமாக அந்தத் திட்டம் முடிவு பெறவில்லை. Water was found oozing out. என்று போடப்பட்டிருக்கிறது. தண்ணீர் கசிய ஆரம்பித்து விட்டது. அவ்வளவு பெரிய மான குழாய்கள் முன்னாலே போடப்பட்டிருக்கின்றன. மீண்டும் ஒரு திட்டம் 708·07 லட்சம் செலவில் திட்டமிடப்பட்டு வேலை தொடங்கப் பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் முடிந்து தண்ணீர் வரும்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நிறைந்து தண்ணீர் கிடைக்கும்.

[முற்பகல் 9-50]

திரு. பம்மல் நல்லதம்பி: அதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: விரைவில் முடிக்க ஏற்பாடு செய்கிறோம்.

குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள்.

*வினா எண் 113—திரு. உ. சுப்பிரமணியம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர் அபிவிருத்திக்காக 1979—ல் ஆறு கோடி ரூபாய் Crash Programme ஒன்று தீட்டியிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் எங்கெங்கு எத்தனை கிணறுகள், குழாய் கிணறுகள் தோண்டப்பட்டன?

(இ) எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : [1981 ஜனவரி 30

(அ) குறைந்த பட்ச அடிப்படைத் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும்பொருட்டு ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டது.

(ஆ) 475 ஆழ்துளைக் கிணறுகள்.

(இ) ரூ. 5.59 கோடி.

திரு. உ. சுப்பிரமணியம் : பல இடங்களில் குடிநீருக்காக அமைக்கப்பட்டுள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு கிடைக்காமலும், அதைப் பற்றி இலாகாவினர் மேலும் கவனம் செலுத்தாத காரணத்தாலும் தண்ணீர் கிடைக்க வில்லை. அடி பம்புகள், பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகள் பம்புகள் இணைக்கப்படாததால் உபயோகமற்ற நிலையில் இருக்கின்றன. அதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து எந்தெந்த இடத்தில் அப்படி இருக்கிறது என்று சொல்வார்களானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : இந்த கிராஷ் புரோகிராம் திட்டத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டமும் எடுத்துக்கொள்ளப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது ஐந்தாறு கிராமங்களுக்குச் சேர்த்து செய்யக் கூடியது. வேறு விசேஷம் இல்லை. அதைப் பற்றிய தகவல் இல்லை. எந்தெந்த மாவட்டங்களுக்கு பிரிவு 1, 2-ன் கீழ் எவ்வளவு திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன என்ற தகவல் தான் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உறுப்பினர் உ. சுப்பிர மணியம் அவர்களுடைய மூலக் கேள்வியில் எங்கெங்கு எத்தனை கிணறுகள், குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டன என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுவரை பதில் சொல்லவில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அமைச்சர் அவர்களுடைய பதிலைக் கேட்டார்களா, இல்லையா? கேள்வி நேரத்திலே அபிப்பிராயம் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

திரு. க. பரமன் : தற்போது மாநகராட்சியோடு பல புறநகர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் குடிநீர் சப்ளை செய்வதற்காக ஏதேனும் நிதி உதவி அளிக்கப்பட்டிருக் கிறதா?

1981 ஜனவரி 30]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அருள்கூர்ந்து தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : இவ்வாறு அதிகப்படியான பணத்தை குடிநீருக்காகச் செலவழிக்கிறபோது மாண்புமிகு உ. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டது போல் செலவழிக்கப்பட்ட பணத்திற்குள்ள தகுதியான வசதிகள் கூடக் கிடைக்காமல் இருக்கிறது. மாவட்ட அளவில் நடைபெறும்படியான கருத்தரங்குகளை தாலுகா மட்டத்தில், தொகுதி மட்டத்தில் கருத்தரங்குகளை நடத்தி கருத்தறிந்து பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டு பம்ப் செட்டுகள் வேலை செய்யாமல் இருப்பதைப் போக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதில் மாண்புமிகு உறுப்பினர்களின் உதவி மிகவும் தேவைப்படுகிறது. எங்கெங்கு அப்படிக் கோளாறுகள் இருக்கின்றன, பழுதுபட்டிருக்கின்றன என்ற தகவலை என்னிடத்தில் கொடுக்கலாம் அல்லது வாரியத் தலைவரிடத்தில் கொடுத்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

Anicut schemes in North Arcot District

*Q. No. 114—Thiru G. VISWANATHAN: Will the Hon. the Minister for Irrigation be pleased to state:

(a) whether there is any proposal under consideration of the Government to construct a dam at Melarasampatta in North Arcot District; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) ஆம். இந்த திட்டம் ஆய்விலுள்ளது.

* வினா எண் 115 திரு. இல. பலராமன்:
திரு. ஏ. சி. சண்முகம்:

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்காடு மாவட்டம் போளூர் தாலூக்கா செண்பகத்தோப்பு என்னும் இடத்தில் அணை கட்ட ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

[1981 ஜனவரி 30

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) மற்றும் (ஆ): பாலாறு மற்றும் செய்யாறு வடிநிலங்களில் கிடைக்கக்கூடிய நீரின் அளவு, ஆயக்கட்டு விவரங்கள் முதலியவற்றை விரிவான ஆய்வு செய்வதற்காக, இத்திட்டத்தை மூன்று ஆண்டுகள் தள்ளி வைக்க 1978-ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டது. ஆய்வுகள் நடந்துவருகின்றன. அவை முடிந்ததும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலிலே ஆய்வு செய்யப்படுகிறது என்று கூறினார்கள். நிதிநிலை அறிக்கையில் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதாக கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதற்கு முன்னாலே ஒரு ஆய்வு செய்யப்பட்டதே அந்த ஆய்வுக்கும் பின்னால் ஏற்படக்கூடிய ஆய்வுக்கும் என்ன வித்தியாசம்? இதனால் எவ்வளவு ஏக்கர் பயிராகும்? புது ஆய்விலே என்ன மதிப்பீடு இடப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: ஏற்கனவே அரசு அறிவித்ததற்குப் பிறகு செய்யாற்றினுடைய உப படுகையில் சமண்டல ஆற்றுக்குக் குறுக்கே இந்த அணையைக் கட்ட வேண்டுமென்று முதலிலே கருத்து தெரிவித்து இருந்தோம். ஆனால் அந்தப் படுகையிலே போதுமான அளவுக்கு நீர் இல்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதைப் பகுதியிலே உள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள் சார்பிலே அப்படிப்பட்ட கருத்து தெரிவிக்கப்பட்டது. அந்த திரும்பவும் ஆய்வு செய்யவேண்டுமென்றால் ஒரு மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அதை நடத்த வேண்டும். அப்படி நடத்தினால்தான் சராசரி 70 சதவீதம் தண்ணீரின் அளவு நமக்கு கிடைக்குமா என்பது நமக்குத் தெரியவரும். நாம் 1978 ஆம் ஆண்டு அந்த முடிவை மேற்கொண்டிருக்கிறோம். இப்போது 1981 ஆம் ஆண்டு நடந்து கொண்டு இருக்கிறது. இன்னும் 7, 8 மாதங்களிலேதான் முழு விவரம் கிடைக்கும். அதற்குப் பிறகு அந்த விவரத்தின் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஏ. கி. சண்முகம்: ஆண்டுகள் செல்லச் செல்ல மதிப்பீட்டுத் தொகையும் இரட்டிப்பாகிறது. 1977 ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுகள் தள்ளி வைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்போது மூன்று ஆண்டுகள் முடிந்திருக்கிறது. அதனுடைய அறிக்கையை வரவழைத்து இந்த ஆண்டு பட்ஜெட்டிலே அது சேர்க்கப்படுமா?

1981 ஜனவரி 30

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: 3 ஆண்டுகளுக்குப் பிறகு உத்தரவு 5-12-1978 ஆம் ஆண்டிலே இடப்பட்டிருக்கிறது. எனவே 198[illegible] ஆம் ஆண்டு டிசம்பர் வரை மூன்றாண்டுக்கால அளவு இருக்கிறது. அதற்குப் பிறகு நீரின் அளவு எவ்வளவு கிடைக்கும் என்று தெரியும். அப்படித் தெரிந்ததற்குப் பிறகு நீரியல் அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

* வினா எண் 116— திரு இல. பலராமன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக்காவில் பாலாற்றின் குறுக்கே புல்லூர் அணை கட்டும் திட்டம் பரிசீலிக்கப்பட்டதா?

(ஆ) அத் திட்டம் தற்போது என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) பாலாற்றின் உபரிநீர் குறைந்து இருப்பதாலும், ஆந்திர மாநிலத்திலுள்ள நிலங்கள் நீர்ப்பிடிப்பில் மூழ்க வாய்ப்பிருப்பதால் அம்மாநிலம் ஆட்சேபணை தெரிவித்ததின்பேரிலும் இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, பாலாறு தமிழ் நாட்டிலே ஒரு முக்கியமான ஆறு என்பதை நாம் அறிவோம். என்றைக்குமே வறட்சியாக இருப்பதைப் போக்குவதற்காக கர்நாடக மாநிலத்திலுள்ள கேத்தமங்கலம் ஏரியிலிருந்து நீர் திறந்து விடுவதற்கு பேச்சுவார்த்தைகள் நடக்கக்கூடிய சூழ்நிலை அரசுக்கு இருக்கிறதா அல்லது திட்டம் இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக் கேள்வி 'வடஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக்காவில் பாலாற்றின் குறுக்கே புல்லூர் அணைகட்டும் திட்டம்' என்பதுபற்றி. அதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இப்போது கேட்ட கேள்வியை தனியாகப் போடும்படிக் கேட்டுக் கொள்கிறேன்

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இந்த புல்லூருக்கு கீழேயும் வாணியம்பாடிக்கு அருகிலும் ஆந்திர மாநிலத்திலே நீர்த்தேக்கம் பிடிக்காமல் இருப்பதால் அணைகட்டுவதற்கு சாத்தியக்கூறு இருப்பதாக பரவலாகப் பேசப்படுகிறது. அதைப் பற்றி பரிசீலிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: நாம் அறிவித்திருக்கிற புல்லூர் அணைக்கட்டு திட்டத்தின்படி ஆந்திர மாநிலத்தில் சித்தூர் தாலூகாவில் பெடவங்கா கிராமத்தில் சுமார் 200 ஏக்கர் இன்னும் அதற்குக் கூடுதலாகவே நீரில் மூழ்கியிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

[1981 ஜனவரி 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உண்டா இல்லையா என்பதை மட்டும் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: அவர்கள் கேள்வியிலே உண்டா இல்லையா என்று கேட்டிருந்தால் கேட்ட மாதிரி சொல்லியிருக்கலாம் எனவேதான் அந்த அதற்குப் பின்னாலே ஏழு வருடங்களுக்கு ஒரு ஆட்சி புதிதாக மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இருந்து, மாவட்டத்திலே அந்த முறையைப் பின்பற்றி அந்த நூற்பாலையை ஆரம்பித்திருக்கலாம். ஆனால் கூட்டுறவு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் பொறுப்பேற்ற இப்பொழுது அதைப்போல மாவட்டந்தோறும் கூட்டுறவு பிற ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு நூற்பாலைகள் இல்லாத மாவட்டங்களாக கூட்டுறவு கோயம்புத்தூர் மாவட்டம், புதுக்கோட்டை இருக்கி தர்மபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்கப்படுவதற்கான ஒவ்வொ அரசினுடைய தீவிரமான பரிசீலனையில் இருக்கின்றன. திட்டங்கள்

திரு. நி. நா. நல்லபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கவில்லை, தனியார் துறைக்குக் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர் சொன்னார்கள். அப்படி தனியார் யாரேனும் மாவட்டத்தில் மில் ஏற்படுத்த விண்ணப்பித்தால் அவர்களுக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல் மாவட்டத்தில் ஏற்கனவே ஒரு கூட்டுறவு நூற்பாலை வருகிறது. புதிதாக 37 நூற்பாலைகள் துவங்குவதற் தனியார்கள் உரிமம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எந்த மாவட்டத்திலே கேட்டிருக்கிறார்கள் என்பது விவரங்கள் எல்லாம் இப்பொழுது என்னிடத்திலே இல்லை தனியாகக் கேட்பாரானால் விவரம் தரப்படும்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாகவே நூற்பாலைகளை, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, தனியார் துறைக்குத் தருவதாக அறிவித்திரு கிறார்கள். இது சோஷலிசக் கொள்கைக்கு முரணானது அல்லவா? இந்த அரசு தனியார் துறையை வளர்க்குவிக்கிறதா? அல்லது பொதுத் துறைக்கு வரப்போகிறதா? இல்லை, இரண்டும் கலந்த ஜாய்ன்ட் செக்டர் கொள்கைக்கு வரப் போகிறதா? எது உங்களது நிரந்தரமான கொள்கை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

[1981 ஜனவரி 31

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: அதற்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே நான் ஒன்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ அல்லது அவர் சார்ந்திருக்கிற கட்சியோ.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு மட்டும் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். உறுப்பினரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவதையெல்லாம் இப்பொழுது கேட்க வேண்டாம், தனியாக வெளியிலே, லாபியிலே வைத்துக்கொள்வது நல்லது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே பலமுறை இந்த மன்றத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அரசின் சார்பிலே எந்த, எந்தத் துறைகளில் எல்லாம், பொதுத் துறையிலோ அல்லது கூட்டுத் துறையிலோ ஆரம்பிக்க முடியுமோ அதிலே எல்லாம் அரசு ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறது. அதைப்போலவே தனியார் களையும் ஊக்குவித்து; தொழில் வளர்ச்சி வேகமாகப் பரவ வேண்டுமென்ற நோக்கத்தோடு, தனியார்களுக்கும் முடிந்த அளவுக்கு ஊக்கம் கொடுத்து, தனியார் துறையிலேயும் அதிகமான தொழில்கள் தமிழகத்திலே வளரவேண்டுமென்றுதான் இந்த அரசு விரும்புகிறது.

திருப்பூர் நகரில் கூட்டுறவு நூற்பாலை

*வினா எண் 118-**திரு. ஆர். மணிமாறன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். மணிமாறன். பேரவைத் தலைவர் அவர்களே, 25,000 ஸ்பிண்டில் இருக்கும்படியாக ரூ.6½ கோடி அளவில் அந்தக் கூட்டுறவு நூற்பாலைக்கான பிராஜக்ட் ரிப்போர்ட் தயாரிக்கப் பட்டு, அரசினுடைய பார்வைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். மிக விரைவாக அந்தக் கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்துவதன்வாயிலாக ஏறத்தாழ 1,000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்படியான நல்ல சூழ்நிலை அங்கே ஏற்படும். ஆகவே, துரிதமாகச் செயல்படுத்த அரசு முனையுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 30

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பூரில் பனியன் தயாரிப்பதற்கான நூல் தயாரிக்க, நூற்பாலை ஒன்றை கூட்டுறவுத் துறையிலே நிறுவுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கிருந்து ஒரு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார். அதுவும் அரசினுடைய பரிசீலனையில் அனுப்பி நான் ஏற்கனவே சொன்னதைப் போல், கூட்டுறவுத் துறையிலே மாவட்டந்தோறும் என்ற அடிப்படையில், கூட்டுறவு நூற்பாலை இன்னொன்றும் அமைப்பது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 2,000 பனியன் தொழிற்கூடங்களுக்கு மேல் அங்கே யிருக்கிற காரணத்தினால் பனியன் நூலுக்கு உண்டான தட்டுப்பாடுகள் அடிக்கடி ஏற்பட்டுவிடுகின்ற காரணத்தினால் அங்கே தொழிலாளர்களுக்கு வேலையின்மை போன்ற பரிதாபமான சூழ்நிலையெல்லாம் அடிக்கடி அங்கே ஏற்பட்டு வருகிறது. எனவே, அரசினுடைய பரிசீலனையிலே இருக்கும் அது பனியன் நூலைத் தயாரிப்பதற்காக மாத்திரம் என்ற முறையிலே, அந்தக் கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்படுமா? அல்லது, அதிலே ஏதாவது மாற்றம் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர், பனியன் தொழிற்சாலை அதிகம் நிறைந்திருக்கிற அந்த திருப்பூர் தொகுதி உறுப்பினராக இருக்கிற காரணத்தினால் அவர் சொல்லுகிற அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, பனியன் தயாரிப்பதற்கு தேவைப்படுகின்ற நூலைத் தயாரிக்கின்ற நூற்பு ஆலையான அந்த ஆலை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஸ்பீக்கர் சார், இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளை அமைக்காமல் தனிப்பட்ட முறையிலே ஆரம்பிக்க தனிப்பட்டவர்களுக்கு அனுமதி வழங்கி இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொன்னார்கள். கூட்டுறவு நூற்பாலையாக இருக்கிற காரணத்தால் என்னுடைய கேள்வியைப் போடுகிறேன். பொதுவாக கைத்தறிகளுக்கு நூல் விலை ஏறுகிறபோது தனிப்பட்ட ஆலைகளில் நூல் கொடுப்பது இல்லை. என்னதான் அரசாங்கத்தினுடைய டெக்ஸ்டைல் கமிஷனர்களும், ஹாண்ட்லூம் கமிஷனரும் சொன்னாலும் தனிப்பட்ட மில் முதலாளிகள் அந்த நூலை விலை ஏறுகிற சமயத்தில் கைத்தறிக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். அந்த சமயத்தில் கூட்டுறவு ஆலைகள்தான் கைத்தறிகளுக்கு உதவ முன்வருகின்றன. ஏனென்றால் நம்முடைய

1981 ஜனவரி 30]

நிர்வாகத்திலே, கட்டுப்பாட்டிலே இருக்கிற காரணத்தினாலே அந்த நூல்களை பெரும்பகுதி, தனிப்பட்ட மில்கள் கொடுக்க வில்லை என்றாலும், கைத்தறிகளுக்குச் சென்று போகின்ற காரணத்தால் ஆரம்பிக்கின்ற புதிய நூற்பாலைகளை ஏன் கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்காமல் தனிப்பட்ட முறையிலே அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும். அதனாலே கைத்தறிகளுக்கு தடைஞ்சல்கள் ஏற்படாதா என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும் என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, நூல்கள் விநியோகத்திலே மட்டுமல்ல அல்லது நூல் உற்பத்தியிலே மட்டுமல்ல, அவை எந்தத் தொழிற்சாலைகளாக இருந்தாலும் அந்தத் தொழிற்சாலைகளிலே உற்பத்தியாகிற எந்தப் பொருளாக இருந்தாலும் விநியோகிப்பதிலே கஷ்டம் இருக்கிற காரணத்தினாலும் இத்தகைய தனியார் துறைகளை முழுமையாக மூடிவிட்டு அத்தனையும் அரசுத் துறையிலே அல்லது பொதுத்துறையிலே அல்லது ஜாயின்ட் செக்டாரிலே ஆரம்பிப்பது என்பது நிச்சயமாக இயலாது. ஏனென்றால் அரசினுடைய நிதி மற்ற வசதிகளைப் பொருத்துத்தான் அரசுத் துறையிலே தொழிற்சாலைகளைத் துவங்க முடியும். எனவேதான் பரவலாக, நான் ஏற்கனவே கூறியதைப் போல, அரசாங்கத் துறையானாலும் சரி, பொதுத்துறையானாலும் சரி, அல்லது ஜாயின்ட் செக்டராக இருந்தாலும் சரி, அதைப்போலவே தனியார் துறையாக இருந்தாலும் சரி விண்ணப்பங்கள் வருகின்ற போது அவைகளுக்கும் பரவலாக அனுமதி வழங்கப்படுகிறது.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் தனியார்களுக்குச் சொந்தமாக பஞ்சாலை ஆலை அதிகமாக இருக்கிற காரணத்தினாலே, பனியன் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே, கூட்டுறவு ஆலைகளை, பனியன்களை உற்பத்தி செய்யக்கூடிய நூல்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலையை திருப்பூரில் நிறுவுவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். திருப்பூருக்கு அண்மையில் உள்ள அவனாசி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிற காரணத்தினாலும், தொழில் வளர்ச்சியே இல்லாத காரணத்தினாலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது திருப்பூரைப் பற்றிய கேள்வி. அவினாசியைப் பற்றி தகவல் தேவையானால் தனிக் கேள்வி போடுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டையும் திருப்பூரில் ஆரம்பிக்கப் போவதாக நான் சொல்லவில்லை. இரண்டும் ஆய்வுக்கு வந்திருக்கின்றன. இதிலே அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல ஆரம்பிக்கின்ற கூட்டுறவு நூற்பாலை பனியன் தயாரிக்கின்ற

நூல்களைத் தயாரிப்பதற்கான நூற்பாலையாக இருக்கும் என்று தான் நான் சொன்னேன். மற்ற இடங்களில் இருந்து ஏதாவ கோரிக்கைகள் வருமானால், பின்னால் அரசின் பரிசீலனையி நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோ மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை உருவாகும் என்று சொன் னார்கள். திருப்பூரில் ஆரம்பிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள் அதை எவ்வளவு ரூபாய் செலவில் ஆரம்பிப்பதாக இருக்கிறார்கள் அப்படி ஆரம்பிப்பதால் திருப்பூர் நகரத்தில் உள்ளவர்களுக்கு எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே திரு. மணிமாறன் அவர்கள் கேள்வி கேட்டபோது, அதுபற்றிய புள்ளிவிவரங்களை தாமே கொடுத்துக் கேட்டார்கள். அவற்றை அமைச்சர் சொல்லட்டும் என்று கூட எதிர்பார்க்கவில்லை. மூலக் கேள்வியையொட்டி துணை வினா கேட்கிற உறுப்பினர்கள் முன்னால் போடப்பெற்ற துணை வினாக்கள், அளிக்கப் பெற்றுள்ள பதில்கள் ஆகியவற்றை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அப்போதுதான் முன்னால் கேட்கப்பெற்றுவிட்ட வினாவையே திரும்பவும் கேட்காமல் தவிர்க்க முடியும்.

விளாத்திகுளம் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை

*வினா எண் 119—திரு. ரா. கு பெருமாள்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, விளாத்தி குளம் பகுதி நெல்லை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி அந்தப் பகுதியில் தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக, தனிக்கவனம் செலுத்தி, அந்த விளாத்திகுளம் பகுதியில் அந்த கூட்டுறவு நூற்பாலையைத் துவங்க மு வருமா? அ மட்டுமல்லாமல், அதற்கு பாரதி கூட்டுறவு நூற்பாலை என் பெயர் வைக்க முன் வருமா?

(விடை இல்லை)

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, விளாத்திகுளம் கவும் பிற்பட்ட பகுதி. ஏற்கனவே பேட்டையில் உள்ள கூட்டுறவு நூற்ப லையின் கிளை ஒன்றை எட்டயபுரத்தில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடத்தப்பட்டு இருக்கிறது என்று அறிகிறேன். ஆகவே, அந்தக் கிளையை எட்டயபுரத்தில் பாரதி நூற்றாண்டான இந்த ஆண்டில் ஏற்படுத்தி, அதற்கு பாரதி கூட்டுறவு நூற் பாலை என்று பெயர் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்கனவே இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. பேட்டையில் இயங்கு கின்ற தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையின் கிளை ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஏதாவது ஒரு பிற்பட்ட பகுதியில் ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு பல இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அது 12,000 கதிர் களுடன் இயங்கும் நிறுவனமாக விரைவில் ஆரம்பிக்கப்படும்.

திருச்சியில் தொழில் நுட்ப வேலை வாய்ப்பு அலுவலகம்

*வினா எண் 120—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தொழில் நுட்பத் தகுதி படைத்தவர்களுக்காகத் தனியாக ஒரு வேலைவாய்ப்பு நிலையம் (எம்ப்ளாயிமெண்ட் எக்சேஞ்) திருச்சியில் தொடங்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்த அலுவலகம் தொடங்கப் படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) திருச்சிராப்பள்ளியில் தொழில் நுட்பத் தகுதி படைத்தவர்களுக்காகத் தனியாக ஒரு வேலைவாய்ப்பு நிலையம் அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

(ஆ) இந்நிலையம் 1-11-80 முதல் தொடங்கப்பெற்று நடை பெற்று வருகிறது.

திரு. ஜே. எஸ். இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் தொடங்கியிருப்பது போல், தொழில் நுட்பத் தகுதி படைத்தவர்களுக்கு என்று தனியாக வேலைவாய்ப்பு நிலையங்கள் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றன? அவ்வாறு இல்லாத மாவட்டங்களிலே தொடங்குவதற்கு அரசு முன்வருமா?

[1981 ஜனவரி 30

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் 1974ஆம் ஆண்டு முதல் தொழில் நுட்பக்கல்வித் தகுதி பெற்றவர்களுக்காக சென்னை நந்தனத்தில் ஒரு வேலைவாய்ப்பு நிறுவனம் இயங்கி வந்தது. நான் இப்போது குறிப்பிட்டுச் சொன்னதுபோல். இப்போது திருச்சியில் ஆரம்பிக்கப் பட்டுள்ள வேலைவாய்ப்பு நிலையம் தமிழகத்தில் இரண்டாவதாகும். மற்ற இடங்களில் அந்தந்த மாவட்டங்களிலே உள்ள மத்திய மாநில அரசுகளைச் சார்ந்த பெரிய தொழில் நிறுவனங்கள் இருப்பதைப் பொறுத்தும், இதர நடுத்தர தொழில் பேட்டைகள் இருப்பதைப் பொறுத்தும் அந்தந்த மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கின்ற வேலைவாய்ப்பு நிலையங்களிலே மதுரை மாவட்டத்தில் இருக்கிற வேலைவாய்ப்பு நிறுவனத்தில் அதிகமான அளவிற்கு 'வொர்க்லோட்' இருப்பதால், அதிகமானபேர் தொழில் நுட்பக் கல்வி பயின்றவர்கள் பதிவு செய்து இருப்பதால், திருச்சியில் இருப்பதைப் போல், மதுரையிலும் ஒரு தொழில் நுட்ப வேலை வாய்ப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.

தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிப் பணியாளர்கள்

*வினா எண் 120—அ. திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிப் பணியாளர்களுக்கு கடந்த ஏழு ஆண்டுக் காலமாக எந்தவிதமான அகவிலைப்படி உயர்வும், ஊதிய உயர்வும் அளிக்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்

(ஆ) மாநில நிலவள வங்கியால் கொடுக்கப்பட்ட நீண்டகாலக் கடன்கள் சில ஆண்டுகளாக பெருமளவில் வசூலாகாமல் இருப்பதால் வங்கியின் நிதிநிலை மிகவும் நெருக்கடியில் உள்ளது. மாநில நிலவள வங்கி தனித்து இயங்கும் உரிமை உடையதால் அவ்வங்கியின் நிதிநிலை சீரானதும் பணியாளர்களின் ஊதிய உயர்வு அகவிலைப்படி பற்றிய கோரிக்கைகளை உயர்வு அவ்வங்கியே ஆவணசெய்யும்.

1981 ஜன்வரி 30]

[முற்பகல் 10–20]

திரு. கே. சௌந்திரராசன்; தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுகிறபோது இந்த வங்கியின் நிதிநிலை சரியாக இல்லாததால் தரமுடியவில்லை என்று சொன்னார்கள். ஆனால் வங்கிக் கணக்கைப் பார்க்கும்போது இலாபகரமாக இருக்கிறது. விவசாயிகள் போராட்டத்தின் காரணமாகவும் அரசின் கனிவு காரணமாகவும் வங்கி வழங்கிய கடனை வசூல் செய்ய முடியவில்லை. கடன் வசூல் ஆகாததற்கும் வங்கிப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பதற்கும் தொடர்பு இல்லை. இந்த வங்கிப் பணியாளர்கள் ஊதிய உயர்வு இல்லாமல், அதனால் வாங்கும் திறன் இல்லாமல் தவிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அரசு தனிப்பட்ட முறையில், போராடிக்கொண்டிருக்கிற பணியாளர்களின் போராட்டத்தை வாபஸ் வாங்குகின்ற வகையில் ஏதாவது நிவாரணம் அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, மாநில கூட்டுறவு நிலவள வங்கி தன்னுடைய கிளைகளுக்கு வழங்கிய கடன் வசூல் பாக்கி 30–6–76–ல் 17.6 சதவீதமாக இருந்தது. ஆனால் 30-6-80-ல் தவணை கடந்த பாக்கி 87.86 சதவீதம் என்ற நிலைக்கு சென்றுவிட்டது. இதன் காரணமாக பல நிலவள வங்கிக் கிளைகள் கடன் தரக்கூடிய தகுதியை இழந்துவிட்டன. குறிப்பாக 184 நிலவள வங்கிகள் கடன் வழங்குத் தகுதியை இழந்துவிட்டன. அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு ஒரு நல்ல நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காக அரசு பங்கு மூலதன உதவி தந்து மேற்கொண்டு 16 வங்கிகள் கடன் வழங்கும் தகுதியை ஏற்படுத்தியது. தற்போது 35 வங்கிகள் கடன் வழங்கும் தகுதி பெற்றிருக்கின்றன. இந்த நிலையை நாம் சீர் செய்ய வேண்டுமானால் கடன் வசூலை தீவிரப்படுத்த வேண்டும். குறிப்பாக நிலவள வங்கிகள் மூலம் கடன் வாங்கியவர்களில் 90% பேர்கள் பெரும் விவசாயிகளாக இருக்கிறார்கள். அந்த பெரும் விவசாயிகள் எவ்வளவோ நடவடிக்கை எடுத்தும் கூட கடனை கட்டாமல் இருக்கிற நிலை இருக்கிறது. அவர்கள் எல்லாம் கடனை கட்டினால் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் அகவிலைப்படி உயர்வு போன்றவை தரமுடியும்; விவசாயிகளுக்கு கூட மீண்டும் 'ப்ரொடக்டிவ் இன்வெஸ்ட்மென்ட்' என்று சொல்லக்கூடிய அளவில் நல்ல பலன் அளிக்க முடியும். அதுமட்டுமல்ல. சிட்டோட்ரா ஆயில் ஃபாக்டரி, லெமன் கிராஸ் ஆயில் ஃபாக்டரி போன்றவைகளுக்கு கூட நிலவள வங்கிகள் மூலம் ஏ.ஆர்.டி.சி கடன் வாங்குவதாகச் சொல்கிறார்கள். ஆனால் அதை நடைமுறைப்படுத்த முடியாமல் இருப்பதற்கு இந்த பணக்கார விவசாயிகள்தான் காரணமாக இருக்கிறார்கள். இதை எல்லாம் கருத்திற்கொண்டு, பெரும் விவசாயிகளிடமிருந்து கடனை உடனடியாக வசூல் செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். இந்த நிலையின் காரணமாக

[1981 ஜனவரி 30

அந்தப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வும் அகவிலைப்படி உயர்வும் கொடுக்க முடியவில்லை. அவர்களுக்கு என்னபரிகாரம் செய்யலாம் என்பது பற்றி அரசுபரிசீலித்து வருகிறது.

திரு. கே. சௌந்திரராஜன்: தலைவரவர்களே, நான் கேட்க விரும்புவது இன்றையதினம் அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய போராட்டத்திற்கு நியாயமான காரணம் உண்டு என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. கடந்த 7 ஆண்டு காலமாக ஊதிய உயர்வு இல்லாமல் அவர்கள் குடும்பம் நடத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இப்போது தற்காலிகமாக ஏதாவது உத்திரவாதம் வழங்கி, போராட்டத்தை வாபஸ் வாங்கும் சூழ்நிலையை அரசு உருவாக்குமா?

மாண்புமிகு திரு .சி. பொன்னையன்: தலைவரவர்களே. இத்தகைய நிலை நிலவள வங்கிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு மட்டுமல்ல; கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற மத்திய வங்கிகள், அதன் கிளைகள், நுகர்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய பலவற்றிலும் பணியாற்றக்கூடிய ஏறத்தாழ 40,000—க்கு மேற்பட்ட பணியாளர்களுக்கு இந்த கஷ்டம் இருக்கிறது. விவசாயிகள், குறிப்பாக பெரும் விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாததுதான் இதற்கு முக்கிய காரணம். கடன் வழங்கும் நிறுவனங்கள் அட்டானமஸ் பாடியாக இருப்பதால் இந்த சிக்கல் கிட்டத்தட்ட 4, 5 ஆண்டுகளாக இருந்து வருகிறது. இந்த பணியாளர்களின் கஷ்டத்தை நீக்குவதற்காக கடன் வசூல் செய்வதில் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக பெரும் விவசாயிகள் கடனை உடனடியாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மத்திய வங்கி நிலவள வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களின் நிலையை அரசு உணர்ந்திருக்கிறது. அதற்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவரவர்களே, கடன் வசூல் பாக்கி அதிகமாக இருப்பதால், நிலவள வங்கிகளின் நிதிநிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு ,அகவிலைப்படி உயர்வு தரமுடியவில்லை என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வங்கிகளிலே பணியாற்றுகின்ற சிறப்பு அதிகாரிகளாக—ஸ்பெஷல் அபீசர்ஸ் இருக்கிறவர்களுக்கும் மேல்மட்ட அதிகாரிகளுக்கும் அகவிலைப்படி, ஊதியஉயர்வு, இன்னும் பல்வேறு சலுகைகள் எல்லாம் அளிக்கப்படுகின்றன.

1981 ஜனவரி 30]

ஒரே நிறுவனத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குள்ளேயே இப்படிப் பாரபட்சம் காட்டுவது நியாயமா தானா? ஒரு கண்ணிலே சுண்ணாம்பும் மறு கண்ணிலே வெண்ணெயும் வைப்பது போல் இது இருக்காதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவு வங்கிகளிலே பணியாற்றுகின்ற ஊழியர்களில் ஒருவருக்கு ஒருவித சலுகை; மற்றொருவருக்கு மற்றவித சலுகை என்ற நிலை இல்லை. அப்படி ஏதேனும் இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு சுட்டிக்காட்டினால் கண்டிப்பாக அரசு பரிசீலனை செய்யும். ஆனால் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுப்பது என்பது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப்பட்ட கடனைத் திரும்ப வசூல் செய்ய முடியாத நிலையில் கொடுப்பதற்கு இயலாது. ஆகவே பொருளாதாரத் துறையில் மிகவும் பின் தங்கிய நிலையிலே இருப்பதால் தான் இந்த நடவடிக்கையை அரசு எடுத்திருக்கின்றது. அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசாங்கத்தினுடைய கொள்கை காரணமாகத்தான் நிலவள வங்கிகளுக்கு வந்து சேரவேண்டிய பணம் வராமல் இருப்பதும், 100, 120 கோடிக்கு மேலே பாக்கி இருப்பதும் எல்லோரும் அறிந்ததே. மற்ற கூட்டுறவுக் கடன் வங்கிகளில் அதாவது கிராமக் கூட்டுறவு வங்கிகளிலேயும் இந்த நிலைமை ஏற்பட்ட போது அரசாங்கமே பணம் கொடுத்த காரணத்தால் தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் நிலவள வங்கியின் சிப்பந்திகளுக்கு மட்டும் அவர்கள் பணத்தை வசூலித்தால்தான் கொடுக்க முடியும். ஏனென்றால் அது அட்டானமஸ் பாடி என்று ஏன் சொல்லவேண்டும்? இந்த சிப்பந்திகளுக்கு நிவாரணம் கொடுப்பதற்கும் வசூலுக்கு என்ன சம்பந்தம்? அப்படியென்றால் அவர்களை நியமனம் செய்தபோதே நீங்கள் வசூலித்தால் தான் சம்பளம், பஞ்சப்படி, ஆகியவை கொடுக்க முடியும் என்று அரசாங்கம் சொல்லி நியமனம் செய்ததா? இல்லையென்றால் மற்ற துறைகளில் அனுசரிக்கக் கூடிய முறைகளை ஏன் இந்த நிலவளவங்கிக்கும் பின்பற்றக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிலவள வங்கிகள் எல்லாம் அரசினுடைய நேரடிப் பிரிவைச் சேர்ந்தவை அல்ல என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன். அவைகள் எல்லாம் செப்பரேட் அட்டானமஸ் பாடீஸ். அதன் காரணமாக அவைகளுக்கென்று தனிப்பட்ட விதிமுறைகள் உண்டு. அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் அவைகள் இயங்கி

வருகின்றன. ஆகவே அரசுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்ற சில மத்திய வங்கிகளுக்கெல்லாம் அரசு அவ்வப்போது உதவி செய்கின்றதே, அது போன்று நில வள வங்கிக்கும் ஏன் செய்யக்கூடாது என்று கேட்டார். நில வள வங்கிக்கும் இதுவரை 35 கோடியே 50 இலட்ச ரூபாய் நிதி தரப்பட்டு இருக்கின்றது. அதன் காரணமாக 16 நிலவள வங்கிகள் விவசாயிகளுக்கு மேலும் கடன் கொடுக்கக்கூடிய நிலையைப் பெற்றிருக்கின்றன. மற்ற நிறுவனங்களிலே இருந்து கடனை வட்டிக்கு வாங்கி விவசாயிகளுக்கு மீண்டும் கொடுக்கின்ற போது விவசாயிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட சதவீதம் வட்டி வசூலிக்கப்படுகின்றது. அந்த வட்டியிலிருந்துதான் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, ஊதியம் போன்றவற்றை எல்லாம் வழங்கவேண்டி இருக்கிறது. எனவே வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாமல் நிலவள வங்கி இயங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் எண்ணுவது நடக்காத காரியம்.

திரு. என். எஸ். வி சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிலவள வங்கிகளிலே பணிபுரிகின்றவர்களுக்கு ஊதிய உயர்வு, அகவிலைப்படி ஆகியவை கொடுக்கவேண்டும் என்பது ஒருபுறம் இருக்க, நிலவள வங்கிகளின் மூலம் வழங்கப்பட்ட கடனை அவர்கள் வசூலித்தால்தான் சம்பளம் கொடுக்கப்படும் என்ற நிலைமை ஒரு புறம் இருக்க, நிலவள வங்கிகளின் மூலம் கிணறுகளை அழப்படுத்துதல் போன்ற நியாயமான காரியங்களுக்கு கூட தற்போது நிலவள வங்கிகள் கடன்கொடுக்காத காரணத்தால் இப்போது சிக்கல் ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே அரசாங்கம் இது சம்பந்தமாக முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கூற்று சிறிதளவும் அடிப்படையற்றது, ஆதாரமற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலவள வங்கிகளின் மூலம் கிணறு தோண்டுதல் போன்ற கன்ஸ்ட்ரக்ட்டிவ் பர்ப்பஸுக்கு கொடுக்கின்ற (குறுக்கீடு) சொல்கிறேன் அதையும் கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்றவற்றிற்கு கடன் கொடுப்பதிலே நிலவள வங்கிகள் எந்தவிதமான தாமதமும் செய்யவில்லை. அதிலே தடங்கல் எதுவுமே இல்லை. ஆனால் 87 சதவீத விவசாயிகள் வாங்கிய கடனைக் கட்டாமல் இருக்கின்ற காரணத்தால் மீண்டும் கடன் கொடுக்கக்கூடிய தகுதியை பல வங்கிகள் இழந்து விடக்கூடாது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற காரணத்தாலும் தமிழ்நாட்டிலே உள்ள விவசாயி நன்னிலை பெறவேண்டும் என்ற காரணத்திற்காகவும் ஏ. ஆர். டி. சி. போன்ற நிறுவனங்கள் கிணறுகளை ஆழப்படுத்துவதற்

காக மட்டும் அல்லாமல் நான் ஏற்கெனவே சொன்னபடி சிட்டோட்ரா லெமன் கிராஸ் போன்ற பொருட்களைப் பயிர் செய்து அவற்றிலிருந்து எண்ணெய் எடுத்தல் போன்றவற்றிற்குக் கூட பல கோடி ரூபாய் தர முன்வந்தும் கூட அந்தப் பலனைப் பெற முடியாத அளவுக்கு பெரிய விவசாயிகள் வாங்கிய கடனை கட்டாமல் இருக்கின்ற காரணத்தால்தான் இந்த அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம், பெரும் விவசாயிகள். நிலவள வங்கிகளிலிருந்து பெற்று நிலுவையாக வைத்திருக்கும் 80, 90 சதவீத கடனை, திருப்பிச் செலுத்தும் வகையில் உறுதுணையாக நிற்பார்களேயானால், நிச்சயமாக கிராமப்புற பொருளாதாரத்தை நாம் செம்மை படுத்தமுடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[முற்பகல் 10—30]

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. தகவல் கோரல்:

(அ) விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு மௌன அஞ்சலி; அவை ஒத்திவைப்பு—

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் நான் இந்தப் பிரச்னையை எழுப்ப முயற்சி போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் வந்து விடட்டும் என்று சொன்னீர்கள். இப்பொழுது அநேகமாக எல்லாக் கட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள். இன்று நாட்டின் பாதுகாப்புக்காக உயிர் நீத்த தியாகிகளின் தினம். தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களின் நினைவு நாள். தீண்டாமை ஒழிப்புக்கு நாம் அனைவரும் உறுதியெடுத்துக் கொள்ளும் நல்ல நாள். இந்த நன்னாளில் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாமும் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் இடத்திற்குச் சென்று தீண்டாமை ஒழிப்புக்கு உறுதி எடுத்துக்கொள்ள வகை செய்யும் முறையில், இப்பேரவையை 10.45லிருந்து 11.15 வரை ஒத்தி வைக்க வேண்டும் என்று தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை இக்கருத்தை ஒரு மனதாக ஏற்றுக் கொள்வதால், பேரவை 10.45—லிருந்து 11.15 வரை ஒத்திவைக்கப் பெறும்.

[திரு. குமரி.அனந்தன்] [1981 ஜனவரி 30

அடுத்த செய்தியாக, இந்தி புகுத்தப்படவில்லை என்று சொல்லிக்கொண்டு இந்தியைப் புகுத்துகிற நிலைகளெல்லாம் பல்வேறு இடங்களில் இருக்கிறது. இவைகளையெல்லாம் எதிர்த்து பெரிய எரிமலை வெடித்துக் கிளம்புவதற்கு முன்னால் அதைத் தடுத்து நிறுத்துவதற்குரிய காரியங்களை நடுவண் அரசு மேற்கொள்ளும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு விவசாயப் பெருங்குடி மக்களைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற கடன் சலுகைகள், தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். பேச்சு வார்த்தைகள் மூலம்தான் விவசாயிகள் பிரச்னைகள் போன்றவற்றைத் தீர்த்துக் கொள்ளமுடியும். அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் அவர்கள் கனத்த நெஞ்சில் தாங்கிக் கொண்டிருக்கிற கனங்களையெல்லாம் போக்க வேண்டுமென்று சொன்னால் பேச்சுவார்த்தைகள் மூலம்தான் சாதிக்கமுடியும். இப்போது நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று முன்வந்திருக்கிற இந்த அரசு பேச்சுவார்த்தைகளுக்கு பலமுறை முயன்று சிலமுறை வெற்றிபெற்றதை நான் பாராட்டுகிறேன். அந்தத் தொடர் தொடர்ந்து போய்கொண்டே இருக்கவேண்டும். பேச்சுவார்த்தைகள் நிச்சயமாக வெற்றியாகக் கனியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அந்தச் செய்தியைச் சொல்லும்போது எந்த நேரமும் அவர்கள் எந்தெந்த வகைகளில் சலுகைகள் கொடுக்கலாம் எந்தெந்த வகையில் குறைகளைக் களையலாம் என்று எண்ணிக்கொண்டு இருக்கும்போது ஒன்றை நாம் மறந்துவிடவேண்டாம். விவசாயிகள் வாழ்வில் இன்று தேக்கமும் ஏக்கமும் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு செய்யப்படுகிற நன்மைகள் எல்லாம் அவர்களுக்குப் போய் சேருகிறதா என்பதுதான். அந்த நன்மைகள் ஏழை எளிய விவசாயிகளுக்கு எட்டுகிறதா, எட்டுகிற தொலைவில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டியது நம் கடமை.

40% லெவி என்று போடப்பட்டிருக்கிறது. லெவி போடப்பட்டவுடன் எவ்வளவோ பேர்களுக்கு எவ்வளவோ தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆந்திராவிலிருந்து வருகிற நெல் வரத்து குறைந்துவிட்டது. வியாபாரிகள் 75 கிலோவிற்கு ரூ. 125 கொடுத்து வாங்கிய நெல்லை 100 கிலோவை ரூ. 125 க்கு கொடுங்கள் என்று சொன்னால் ஏற்படுகிற இழப்பை பொது மக்கள் மீதுதான், அரசின் மீதுதான் சுமத்துகிறார்கள். ஆகவே விலை ஏறுகிற வாய்ப்பு இருக்கிறது.

[முற்பகல் 10–40]

இப்படி லெவி கொடுக்க வேண்டி வருகின்ற காரணத்தினாலே சில வணிகர்கள் என்ன செய்கிறார்கள்? விவசாயிகளிடம் சென்று இவ்வளவு மூட்டை நெல்லை வாங்கிக் கொள்கிறேன், என்னுடையதாகவே வைத்துக் கொள், இதோ பணத்தைப்

1981 ஜனவரி 30] [திரு. குமரி அனந்தன்]

பெற்றுக்கொள், ஆனால் அவற்றை விற்றதாக வெளியே சொல்லாதே என்று சொல்லி, அந்த விவசாயிகளுடைய வீடுகளையே தங்களுடைய கிட்டங்கிகளாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு வகையிலே பொது மக்களையும், இந்தச் சமுதாயத்தையும், அரசாங்கத்தையும் ஏமாற்றுகின்ற முறையிலே அமைகின்றது என்பதை இந்த அரசு கூர்ந்து கவனித்து, இந்த லெவி பிரச்னையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்

இதேபோல், இந்த அரசு மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்லியிருக்கிறது. மேற்கே பாய்ந்து ஓடிக் கொண்டிருக்கின்ற நதி நீரை கிழக்கே திருப்புகின்ற முயற்சி நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்று சொல்வதனை நாங்கள் நம்புகிறோம். ஏனெனில், உலகத் தமிழ் மாநாட்டிலே 'குமரிக் கண்டம்' என்ற அந்தத் திரைப்படத்தினை தொடங்கி வைக்க வந்திருந்த திரு. நாயனார் அவர்கள் முன்னாலேயே, நமது முதலமைச்சர் அவர்கள் மிகவும் சாதுரியமாக, சாமர்த்தியமாகப் பேசினார்கள். பேசுகின்ற போது சொன்னார்கள். உலகத்திலே முதல் மனிதன் தமிழன் என்று சொல்கிறார்கள். அப்போது நாயனார் அவர்களும் தமிழரே. எனவே, அங்கேயிருந்து தமிழகத்திற்கு நீர் கொண்டு வருவதிலே எந்தவிதமான தொல்லையோ, எந்தவிதமான தயக்கமோ இருக்காது என்று சொல்லுகின்ற நிலையைப் பார்க்கும்போது, எந்த நேரத்திலும் அவருடைய கவனம் அதிலே இருக்கின்றது என்பதைத் தெளிவுபட காட்டுகின்றது. ஆனால், அங்குள்ள அமைச்சர்களும் சரி, வேறு பகுதிகளிலே இருக்கின்ற அமைச்சர்களும் சரி, இந்த நதி நீரைக் கொடுப்பதிலே எவ்வளவு தயக்கம் காட்டுகிறார்கள் என்பது மட்டுமல்ல; எவ்வளவு தொல்லைகளும், தடைகளும் கொடுக்க முயற்சிக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது, மனது வேதனையாக இருக்கிறது.

காவிரி நீர்ப் பிரச்னையிலே இதுவரை முதலமைச்சர்கள் 16 முறைகள் சந்தித்ததாகச் சொல்லப்படுகிறது. முதலமைச்சர்களே 16 முறைகள் சந்தித்தார்கள் என்று சொன்னால், மற்ற அமைச்சர்கள் எவ்வளவு தடவைகள் சந்தித்திருப்பார்கள், மற்ற அமைச்சர்கள் எப்படி பலமுறை சந்தித்திருப்பார்கள் என்றால், அதிகாரிகள் எவ்வளவு தடவைகள் சந்தித்திருப்பார்கள் என்பதைப் பார்க்கும்போது, இந்த நதி நீர்ப் பிரச்னையில் நாமே ஒரு வழிகாட்டியாக இருந்தாக வேண்டும். நான் இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய அத்தனை பெருமக்களையும், ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்களையும் இரு கரம் கூப்பி மெத்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அவை ஒருமனதாக இந்த நதி நீர்கள் அத்தனையும் தேசிய மயமாக்கப்பட வேண்டுமென்று சொல்லக் கூடிய ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும். அது தமிழக அரசாங்கத்தின் கரத்தை வலுப்படுத்துவதாக அமையும் என்ற கருத்தினை நான் பணிவோடு கேட்டுக்

அடுத்த செய்தியாக, இந்தி புகுத்தப்படவில்லை என்று சொல்லிக்கொண்டு இந்தியைப் புகுத்துகிற நிலைகளெல்லாம் பல்வேறு இடங்களில் இருக்கிறது. இவைகளையெல்லாம் எதிர்த்து பெரிய எரிமலை வெடித்துக் கிளம்புவதற்கு முன்னால் அதைத் தடுத்து நிறுத்துவதற்குரிய காரியங்களை நடுவண் அரசு [illegible] வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு விவசாயப் பெருங்குடி மக்களைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற கடன் சலுகைகள், தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். பேச்சுவார்த்தைகள் மூலமாகத்தான் விவசாயிகள் பிரச்னைகள் போன்றவற்றைத் தீர்த்துக் கொள்ளமுடியும். அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் அவர்கள் கனத்த நெஞ்சில் தாங்கிக் கொண்டிருக்கிற கனங்களையெல்லாம் போக்க வேண்டுமென்று சொன்னால் பேச்சுவார்த்தைகள் மூலம்தான் சாதிக்கமுடியும். இப்போது நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று முன்வந்திருக்கிற இந்த அரசு பேச்சுவார்த்தைகளுக்கு பலமுறை முயன்று சிலமுறை வெற்றிபெற்றதை நான் பாராட்டுகிறேன். அந்தத் தொடர் தொடர்ந்து போய்கொண்டே இருக்கவேண்டும். பேச்சுவார்த்தைகள் நிச்சயமாக வெற்றியாகக் கனியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அந்தச் செய்தியைச் சொல்லும்போது எந்த நேரமும் அவர்கள் எந்தெந்த வகைகளில் சலுகைகள் கொடுக்கலாம் எந்தெந்த வகையில் குறைகளைக் களையலாம் என்று எண்ணிக்கொண்டு இருக்கும்போது ஒன்றை நாம் மறந்துவிடவேண்டாம். விவசாயிகள் வாழ்வில் இன்று தேக்கமும் ஏக்கமும் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு செய்யப்படுகிற நன்மைகள் எல்லாம் அவர்களுக்குப் போய் சேருகிறதா என்பதுதான். அந்த நன்மைகள் ஏழை எளிய விவசாயிகளுக்கு [illegible]டுகிறதா, எட்டுகிற தொலைவில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டியது நம் கடமை.

40% லெவி என்று போடப்பட்டிருக்கிறது. லெவி போடப்பட்டவுடன் எவ்வளவோ பேர்களுக்கு எவ்வளவோ தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆந்திராவிலிருந்து வருகிற நெல் வரத்து குறைந்துவிட்டது. வியாபாரிகள் 75 கிலோவிற்கு ரூ. 125 கொடுத்து வாங்கிய நெல்லை 100 கிலோவை ரூ. 125 க்கு கொடுங்கள் என்று சொன்னால் ஏற்படுகிற இழப்பை பொது மக்கள் மீதுதான், அரசின் மீதுதான் சுமத்துகிறார்கள். ஆகவே விலை ஏறுகிற வாய்ப்பு இருக்கிறது.

[முற்பகல் 10—40]

இப்படி லெவி கொடுக்க வேண்டி வருகின்ற காரணத்தினாலே சில வணிகர்கள் என்ன செய்கிறார்கள்? விவசாயிகளிடம் சென்று இவ்வளவு மூட்டை நெல்லை வாங்கிக் கொள்கிறேன், என்னுடையதாகவே வைத்துக் கொள், இதோ பணத்தைப்

பெற்றுக்கொள், ஆனால் அவற்றை விற்றதாக வெளியே சொல்லாதே என்று சொல்லி, அந்த விவசாயிகளுடைய வீடுகளையே தங்களுடைய கிட்டங்கிகளாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு வகையிலே பொது மக்களையும், இந்தச் சமுதாயத்தையும், அரசாங்கத்தையும் ஏமாற்றுகின்ற முறையிலே அமைகின்றது என்பதை இந்த அரசு கூர்ந்து கவனித்து, இந்த லெவி பிரச்னையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்

இதேபோல், இந்த அரசு மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்லியிருக்கிறது. மேற்கே பாய்ந்து ஓடிக் கொண்டிருக்கின்ற நதி நீரை கிழக்கே திருப்புகின்ற முயற்சி நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்று சொல்வதனை நாங்கள் நம்புகிறோம். ஏனெனில், உலகத் தமிழ் மாநாட்டிலே 'குமரிக் கண்டம்' என்ற அந்தத் திரைப்படத்தினை தொடங்கி வைக்க வந்திருந்த திரு. நாயனார் அவர்கள் முன்னாலேயே, நமது முதலமைச்சர் அவர்கள் மிகவும் சாதுரியமாக, சாமார்த்தியமாகப் பேசினார்கள். பேசுகின்ற போது சொன்னார்கள். உலகத்திலே முதல் மனிதன் தமிழன் என்று சொல்கிறார்கள். அப்போது நாயனார் அவர்களும் தமிழரே. எனவே, அங்கேயிருந்து தமிழகத்திற்கு நீர் கொண்டு வருவதிலே எந்தவிதமான தொல்லையோ, எந்தவிதமான தயக்கமோ இருக்காது என்று சொல்லுகின்ற நிலையைப் பார்க்கும்போது, எந்த நேரத்திலும் அவருடைய கனவும் அதிலே இருக்கின்றது என்பதைத் தெளிவுபட காட்டுகின்றது. ஆனால், அங்குள்ள அமைச்சர்களும் சரி, வேறு பகுதிகளிலே இருக்கின்ற அமைச்சர்களும் சரி, இந்த நதி நீரைக் கொடுப்பதிலே எவ்வளவு தயக்கம் காட்டுகிறார்கள் என்பது மட்டுமல்ல: எவ்வளவு தொல்லைகளும், தடைகளும் கொடுக்க முயற்சிக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது, மனது வேதனையாக இருக்கிறது.

காவிரி நீர்ப் பிரச்னையிலே இதுவரை முதலமைச்சர்கள் 16 முறைகள் சந்தித்ததாகச் சொல்லப்படுகிறது. முதலமைச்சர்களே 16 முறைகள் சந்தித்தார்கள் என்று சொன்னால், மற்ற அமைச்சர்கள் எவ்வளவு தடவைகள் சந்தித்திருப்பார்கள், மற்ற அதிகாரிகள் எப்படி பலமுறை சந்தித்திருப்பார்கள் என்றால், அதிகாரிகள் எவ்வளவு தடவைகள் சந்தித்திருப்பார்கள் என்பதைப் பார்க்கும்போது, இந்த நதி நீர்ப் பிரச்னையில் நாமே ஒரு வழிகாட்டியாக இருந்தாக வேண்டும். நான் இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய அத்தனை பெருமக்களையும், ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்களையும் இரு கரம் கூப்பி மெத்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அவை ஒருமனதாக இந்த நதி நீர்கள் அத்தனையும் தேசிய மயமாக்கப்பட வேண்டுமென்று சொல்லக் கூடிய ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும். அது தமிழக அரசாங்கத்தின் கரத்தை வலுப்படுத்துவதாக அமையும் என்ற கருத்தினை நான் பணிவோடு கேட்டுக்

கொள்கிறேன். இந்த நாட்டிலே பிறந்த அத்தனை பேர்களுக்கும் எப்படி [illegible] வெளிச்சம் சொந்தமோ, அதைப்போல் [illegible] சொந்தம் என்ற வகையிலே ஒரு தீர்மானம் [illegible] வேண்டுமென்று [illegible] வணிவர்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, [illegible]யாக, 376 வட்டாரங்களில், 69 வட்டாரங்களில் வளர்ச்சித் திட்டங்கள், தன்னிறைவுத் திட்டத்தை கொண்டு வருகின்ற இந்த முயற்சியையும் பாராட்டத்தகுந்தது; போற்றத் தகுந்தது. இந்த போற்றத்தகுந்த முயற்சிக்கு 43 கோடி ரூபாய் செலவில் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த 43 கோடி ரூபாய் என்பது ஒரு கணிசமான தொகையல்ல; தேவையான தொகைதான். இந்த கணிசமான தொகையை ஒராண்டு காலத்திற்குள் செலவிட வேண்டும் [illegible] கொண்டிருக்கின்றபோது, [illegible]யாய், ஒழுங்காய், முறையாய் [illegible] இருந்திருந்தால் [illegible]ச் சேருகின்றதா என்பதைப் பார்க்கின்ற அளவிற்கு உயர்மட்ட அதிகாரிகள் [illegible] கண்காணிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த உயர்மட்ட அதிகாரிகள் குழுவோடு மட்டும் நின்றுவிட்டால் போதாது. மட்டமான உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவும் இடையிடையே கண்காணிக்கும் என்று சொல்லுகின்ற முறையிலே அந்த முயற்சியையும் இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அப்படி வருகின்ற நேரத்திலே, இந்தத் திட்டம் செவ்வையாய் நிறைவேற்ற உதவியாக இருக்கும் என்கிற கருத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கப்பால், இந்த அரசாங்கம் ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டுமென்று [illegible] நேரத்தில், 4,800 ரூபாய் ஆண்டு வருமானம் [illegible]றவர்கள் யாராக இருந்தாலும், [illegible] கடன்களைத் தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்ன நடக்கிறது? நகைகளை ஈடு வைத்திருப்பவர்கள், தங்களுடைய நகைகளையும் மீட்க முடியாமல், [illegible] கம்பெனியுமாக [illegible] உள்ளத்திலே [illegible], [illegible] மகிழ்ச்சி விடலாம் என்ற முடிவிற்கு வந்து, [illegible] பெற்று போது; [illegible] முயற்சிக்கின்ற தொழிலை [illegible]வர்கள், மற்றவர்களை அதிகாரிகளை, சான்றிதழ் கொடுக்க வேண்டியவர்களை சரியான வகையிலே ஈடுகொடுத்து, [illegible] காரணத்தினாலே, ஈடுகொடுத்த நகைகளை [illegible] வந்து சேராத [illegible] நான் வீட்டுக்கு அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்த செய்தியாக, நான் சொல்ல [illegible]வது, கிராம அதிகாரிகள் பரம்பரை பரம்பரையாக வந்து கொண்டிருப்பவர்களைப் பற்றி மட்டும் நான் சொல்லவில்லை. பயிற்சி பெற்று, இந்த அரசாங்கத்தின் விதி [illegible]

[illegible] பணியிலே ஈடுபடுத்திக் கொண்டவர்களைப் பற்றியும் [illegible]னுபடுத்த விரும்புகிறேன். இவர்கள் அத்தனை பேர்களும் [illegible] பேனா முனையினாலே வேலை இழந்தார்கள் என்று சொன்னால், இந்த 4,000 பேர்கள் 1970-க்கு முன்னாலே போடப்பட்ட அரசாங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு, தங்களை இந்த வேலைக்குத் தகுதியுடையவர்களாக ஆக்கிக்கொண்டு, தேர்வுக்கு ஆட்படுத்தி, அந்தத் தேர்வுகளுக்கு உட்பட்டு இந்தப் பணியிலே அமர்ந்திருப்பவர்களும் இந்த உத்தரவினாலே தெருவிலே நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். மீதம் இருப்பவர்களில் தகுதியுள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். அதுவும் இல்லாதவர்களுக்கு, வெளியே போராட வேண்டுமென்று சொல்கிறவர்களுக்கு, ஏதாவது மாற்று [illegible], நிதி உதவி போன்றவை செய்து அவர்கள் மனதிலே ஓரளவுக்கு ஆறுதலை உண்டாக்க வேண்டும். நான் பரம்பரையாக இருந்து வருபவர்களைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. அனைவரையும் பற்றிச் சொல்லுகின்ற நேரத்திலே, அவர்கள் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவர்கள் என்று கருதப்பட்டு, இந்த அரசாங்கம் இப்படி சோர்ந்த நிலையிலே உள்ளவர்களை, மனம் நொந்துப்போய், வெந்துப்போய் இருக்கின்றவர்களுக்கு ஏதாவது கொடுக்கக்கூடிய காரியத்தை இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் எதற்கெடுத்தாலும் போராடித்தான் ஆகவேண்டுமென்று சொல்கிற சூழ்நிலையை இந்த அரசும் எந்த முதலாளியும் உண்டாக்கக்கூடாது. உதாரணமாக, கோயம்புத்தூரை எடுத்துக் கொண்டால் எம்.ஜி.இராமசாமி என்று சொல்லுகிற பெருமகனார் தன்னுடைய வாழ்வில் ஒரு நெறிப் பொழுதையும் தொழிலாளர்களுக்காக அர்ப்பணித்தவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்? 10·45 [illegible]க்கு சபையை ஒத்தி வைக்கவேண்டும்.

திரு. குமரி அனந்தன்: மூன்று நிமிடத்தில் முடித்து விடுகிறேன். உங்களோடு ஒத்துழைக்கவேண்டும். சபைத் தலைவர் கொடுத்த கருவூலமாய் தவறாகச் செயல்கூடாது என்ற புரிந்து கொள்கிறேன். எனது தொழிலாளர்கள் [illegible] வேண்டுமென்று சொல்லி இந்த மாமன்றத்திலும் வீற்றிருந்த பெருமகனார் தன்னுடைய வாழ்[illegible] தொழிலாளர்களுக்கு [illegible] பயனாக அங்கிருக்கக்கூடிய [illegible] மாற்று வேலைவாய்ப்பு [illegible] கூட, போராட்டத்தால், கலகத்தால் [illegible] என்று சொல்லுகிற நிலை இருக்கக்

கூடாது. அவர்களுடைய பெயர்களை எல்லாம், உள்ளத்து உணர்வுகள் எப்படி எழுந்து வருகின்றனவோ அவைகளை நாங்கள் சரியாகப் புரிந்து கொள்கிறோம், தெரிந்து கொள்கிறோம் என்ற வகையில் அவருடைய பெயரிலே மாற்றலாம்.

அதைப் போலவே பி & சி மில். மாநில அரசைக் கேட்டுக் கொள்வேன். மத்திய அரசாங்கம் என்ன சொல்லுகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நிதியமைச்சர் அவர்கள் இங்கே வந்தார்கள்—ஆர். வெங்கட்டராமன் அவர்கள் வந்து சொன்னார்கள்—தொழிலமைச்சகம் இதனைச் சிபாரிசு செய்தால்தான் நிதியமைச்சகம் இதற்கு உதவி செய்யும். ஆனால் தொழிலமைச்சகம் சிபாரிசு செய்யும் என்று எனக்குத் தோன்றவில்லை என்றார்கள். அப்படி என்றால் என்ன பொருள்? மறைமுகமாக, தொழிலமைச்சகமே நீ பரிந்துரை செய்துவிடாதே என்ற நிலை எல்லாம் இருப்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த மாநில அரசும் மத்திய அரசும் அந்த மில்லை ஏற்று நடத்த வேண்டும். மத்திய அரசு மில்லை ஏற்று நடத்த முடியாத நிலையில் செயலற்று இருக்குமானால் 13,000 தொழிலாளர்களைத் தெருவில் விட நாம் அனுமதிக்க முடியாது ஆதலினாலே, நிதி வழங்கும் நிறுவனங்கள் மூலம் மத்திய அரசும் மாநில அரசும் தாங்களே அவர்களுக்கு உறுதி மொழி கொடுக்கிறவர்களாக ஆக்கிக்கொண்டு பெரும் பணத்தைக் கொடுத்து தொழிலாளர்களையே தர்மகர்த்தாக்களாக ஆக்கி, காந்திய தர்மகர்த்தா முறையில் இந்தியாவிலேயே 13,000 தொழிலாளர்களைக் கொண்ட இந்த மில்லை நடத்த முடியும் என்று உலகுக்குக் காட்டுகிற காரியங்களை நாம் செய்யவேண்டும் அதற்கு இந்த மாநில அரசு முன்வந்து காரியம் செய்யவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே இங்கே அருமைக்குரிய பெருமக்கள் எல்லாம், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் பலப்பல சேதிகளை, பலப்பல கருத்துக்களைச் சொல்லிவிட்டார்கள். ஆதலினாலே, நான் மேற்கொண்டு எதையும் சொல்லாமல் ஒன்றைச் சொல்லி முடிப்பேன். காந்தியைப் போற்றி, அவருடைய நினைவைப் போற்றி, அது தீண்டாமை நாளாக இருக்கவேண்டுமென்று கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை அவை நாயகர் முடிவு செய்ததைப் பற்றி நெஞ்சிலே உவகை பொங்க, காந்திக்கு நீங்கள் கொடுத்த மரியாதையை எண்ணி இரு கரமும் கூப்பி வணங்குகிறேன்.

அதே நேரத்தில் கல்விக் கூடங்கள் எப்போதும் திறந்திருக்கட்டும், கள்ளுக்கடைகள் எப்போதும் திறக்காதிருக்கட்டும். போதனை தரும் கூடங்கள் எப்போதும் திறந்திருக்கட்டும், போதை தருகிற கூடங்கள் எப்போதும் திறக்காது இருக்கட்டும் என்று காந்தியின் பெயரைச் சொல்லி, காமராஜரை நினைத்துக் கொண்டு, அண்ணா போன்றவர்கள் செய்தியினை மனதில் கொண்டு இந்தப் பேரவை நடக்குமாக, அரசு நடக்குமாக என்று சொல்லி நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை இப்போது ஒத்தி வைக்கப்பெற்று முற்பகல் 11-15 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 10·48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

முற்பகல் 11·15 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, தியாகிகள் தினமாகிய இன்று அந்த மாபெரும் தலைவர்களுக்கு எல்லாம் அஞ்சலி செலுத்தி என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன். இங்கே சென்ற கூட்டத் தொடரிலேயும் சரி, அதற்கு முன்னாலேயும் சரி, இந்த அவையிலே பல்வேறு நேரங்களிலே பாரதத்தினுடைய முதல், பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய திருவுருவப் படம் அலங்கரிக்காமல் இருப்பது எங்களுக்கு எல்லாம் வேதனையைத் தருகிறது. ஆகவே முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் தலைவர் அவர்களும் இந்த அவையிலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய திருவுருவப்படத்தைத் திறந்து வைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். இங்கே பல்வேறு எதிர்க்கட்சித் தோழர்களும் தலைவர்களும், ஏதோ முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களைப் பாரத மீனாட்சி என்று சொன்னதற்காக, முதல் அமைச்சர் மீது பல்வேறு வகையான கண்டனங்களைத் தெரிவித்தார்கள். எப்படி அழைக்கலாம் என்று கேட்டார்கள். இந்த நாட்டிலே சர்வாதிகாரியாக வந்தவர்கள், அப்படிப்பட்டவரை எப்படி அழைக்கலாம் என்று கேட்டார்கள். அதற்கு மேலே ஒரு படி சென்று எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் இந்திரா காந்தியைப் பாராட்டினார்கள் என்றும் ஆண்டு பேரும் சேர்ந்து கொண்டு இந்திரா காந்தியைப் பாராட்டுகிறது எங்களுக்கு வேதனை தருகிறது என்றும் சொன்னார்கள். இந்த நாட்டிலே 1977 ஆம் ஆண்டிலே இந்திரா காந்தி அவர்கள் தோற்கடிக்கப் பட்டதற்குப் பிறகு பல்வேறு சூழ்நிலைகளில் அன்றாடம் தினம் மத்திய அரசு இந்திரா காந்தி அவர்களை கொடுமைப்படுத்தவும், சிறையிலே வைக்கவும், நாடு கடத்தவும் அரசியலிலிருந்து தள்ளி விடவும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாம் தவிடு பொடியாயின. 1980 ஆம் ஆண்டிலே இந்தியாவிலே எல்லாப் பகுதிகளிலேயும் இந்திரா காந்தியினுடைய கட்சி வெற்றி

[முற்பகல் 11-10]

பெற்று, இன்றைக்குப் பெரும்பான்மை பலத்தோடு நாடாளுமன்றத்திலே பெற்று மீண்டும் இந்திரா காந்தி அவர்கள் இந்தியாவை வழிநடத்திச் செல்வதற்கும், இந்திய நாட்டு மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கும் ஆட்சிப்

பொறுப்பை ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, யார் முற்போக்கான திட்டங்களை ஆதரிக்கிறார்களோ அவர்களைப் பாராட்டுவது ஜனநாயக மரபு என்ற முறையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கக்கூடிய முதலமைச்சரானாலும் சரி, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கலைஞரானாலும் சரி, இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஒன்றைக் குறிப்பிட வேண்டும்.

make no secret of the fact that we have always had a particular liking for Mrs. Indira Gandhi, the outstanding political and State figure of contemporary Asia.

நவீன ஆசியாவினுடைய ஒப்பற்ற, உயர்வு பெற்ற தலைவி அன்னை இந்திராகாந்தி அவர்களை நான் என்றைக்கும் எனக்கு எப்போதும் அன்போடும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவர்களுடைய கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அடிப்படையிலே சாதனையாளர் என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நமக்கு மட்டுமல்ல, பூங்காவினுடைய தலைமையாளர் என்று சொல்லப்படக்கூடிய சோஷியலிஸ்ட் யூனியன் இன்றைக்கு அந்த நாட்டின் ஜனாதிபதி இந்தியாவிற்கு வந்த நேரத்தில் இந்த மண்ணில் ஜனாதிபதி காந்தியைப் புகழ்ந்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்திராகாந்தியிருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியானாலும் சரி அல்லது இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியானாலும் சரி, அங்கே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், உங்களுடைய மாண்புமிகு தலைவர் பிரஷ்னேவ் சொல்லிய கருத்தில் உங்களுக்கு உடன்பாடு இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். சோஷலிசத்தை இந்த நாட்டில் கொண்டு வர வேண்டுமென்று விரும்பிய ஜவஹர்லால் நேரு அவர்களுடைய மகளாகிய இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இந்த நாட்டிலே சோஷலிசத்தைக் கொண்டு வர வேண்டுமென்று சொல்கிறார்களே அதை உங்களால் ஏற்க முடியவில்லையா? தெளிந்த நீரைக் குழப்பக்கூடாது என்று சொல்லுகின்ற அவர்களைப் பார்த்து நான் கேட்டுக்கொள்வது தயவு செய்து இந்திய அரசியலைக் குழப்பாதீர்கள்; உங்களுடைய எஜமானர் என்று சொல்லப்படக்கூடிய லெனினுடைய இருக்கிறார்கள், அங்கு நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பாருங்கள். பீகிங்கில் மாசேதுங்கின் மனைவிக்கு இன்றைக்குத் தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது. ஜனநாயகப் பூங்காவில் இப்படிப்பட்ட நிலைமை விளைகிறது. அந்த அம்மையார் செய்த பாவம்தான் என்ன? அவர் மாசேதுங்கின் மனைவியாக இருந்ததுதானே?

இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இன்றைக்குப் பல்வேறு பெரும் பொறுப்புகளை ஏற்று உலக நாடுகளிலே உள்ள உலகத் தலைவர்கள் போற்றும் வகையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவினுடைய முன்னேற்றத்திற்காக, வறுமையை ஒழிக்க வேண்டுமென்பதற்காக, பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக பாடுபட்டு வேண்டாமா? அதைத் தான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய நம்முடைய மரியாதைக்குரிய காமராஜ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. நெடுமாறன் அவர்கள் பேசும் பொழுது சொன்னார்கள், ஜனாதிபதி ஆட்சி முறை இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொல்கிறார்கள், ஜனாதிபதி ஆட்சி முறை இந்தோனேஷியாவில் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து சுகர்னோவின் கதி என்ன ஆயிற்று, வங்காளத்திலே ஜனாதிபதி ஆட்சி முறை கொண்டு வரப்பட்டு அங்கு முஜிபுர் ரகுமானின் கதி என்னவாயிற்று, இவர்களெல்லாம் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று கூறினார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அந்த வார்த்தைகள் யாரிடத்திலேயிருந்து வருகின்றன என்பதைப் பார்க்கிறேன். வேறு யாரிடத்திலேயிருந்து அந்த வார்த்தைகள் வந்திருந்தாலும் நான் வேறு விதமாக நினைத்திருக்க முடியும். ஆனால் மரியாதைக்குரிய, நான் போற்றுகின்ற வகையில் தலைவராக இருக்கின்ற திரு. நெடுமாறன் அவர்களிடமிருந்து, இந்தத்தரத்திலும் அந்தக் கருத்து ஏற்படுகிறது என்று வருவது எனக்கு வேதனையைத் தருகிறது.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால், அவர் நான் சொல்லியதைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். முஜிபுர் ரகுமானும், இந்தோனேஷிய அதிபர் சுகர்னோவும் ஜனாதிபதி ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டதன் விளைவாக அந்நாடுகளில் இராணுவத்தினரால் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று தான் குறிப்பிட்டேனே தவிர [illegible] சுட்டுக் கொல்லப்பட்டதற்கு [illegible] மரியாதைக்குரிய [illegible] அவர்களுக்கு எதிராக [illegible] இல்லை. [illegible] உயிரைக் காப்பாற்றுகின்ற [illegible] என்னைப் போன்றவர்கள் அன்றைக்கும் தயாராக இருக்கிறோம். இனியும் இந்திராகாந்தி அம்மையார் அவர்களுக்கு ஆபத்து வருமானால் கூட என்னைப் போன்றவர்கள் எங்கள் உயிரைக் கொடுத்தும் காப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். [illegible] நேரத்தில் ஜனநாயகத்தைப் [illegible] யாரையும் அனுமதிக்க மாட்டோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1198] ஜனவரி 30

திரு. நா. சுந்தரராஜ்: நன்றி. இந்த ஆண்டு நம்முடைய பாரதியின் நூற்றாண்டு விழா. அந்த விழாவை இந்த அரசு எந்த அளவிற்குக் கொண்டாடுகிறது என்பதற்கான அறிகுறியே இல்லை அவருடைய நூற்றாண்டு விழா இந்த ஆண்டு நடைபெறுகிறது என்ற குறிப்பும் இந்த உரையில் இல்லை என்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய அரசில் கார்பில் 21 உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமித்து திரிபாதி அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். பம்பாய்த் தமிழர்கள் பாரதிக்கு மண்டபம் கட்டி இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மண்டபம் கட்டி பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் திறந்து வைத்த காட்சியைக் காண்கிறோம். ஆனால், இந்த நாட்டிலே சுதந்திர வேட்கையினை ஊட்டிய மிகப் பெரிய புலவர் என்று சொல்லக்கூடிய வகையிலே உள்ள கவி பாரதியாருடைய நினைவாக என்ன காரியம் செய்யப்பட இருக்கிறது என்பதை இந்த அரசு இந்த அறிக்கையிலே குறிப்பிடாதது எங்களுக்கு வேதனையைத் தருகிறது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உலகத் தமிழ் மாநாட்டைப் பொறுத்த வரையிலே உலகத் தமிழ் மாநாடு நடத்தியது எங்களுக்கு மகிழ்ச்சிதான். ஆனால், அதிலே என்ன சாதகமான நிலைமையை நீங்கள் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தயவுசெய்து சொல்ல வேண்டும். அதனால் ஏற்பட்ட பலன் என்ன? கடந்த கால ஆராய்ச்சியை மட்டும் நாம் செய்து விட்டு நாங்கள் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி விட்டோம் என்று சொன்னால் போதாது. அதற்குப் பதிலாக இன்றைக்கு முற்போக்கான, வளர்ந்து வருகின்ற நாடுகளுக்கு ஏற்ப, நம்முடைய மொழி மாற்றத்திற்கு ஏற்ப நம்முடைய நிலைமையை உயர்த்திக் கொள்வோமானால், நிச்சயமாக நான் உங்களைப் பாராட்டியிருக்க முடியும். அதற்குப் பதிலாக நீங்கள் ரூ. 5 கோடி செலவு செய்தோம். ரூ. 10 கோடி செலவு செய்தோம். ரூ. 15 கோடி செலவு செய்தோம் என்று சொல்லி, இன்றைக்குக் கோடிக்கணக்கிலே ரூபாய்களைச் செலவு செய்தோம் என்று பெருமைப்பட்டுக் கொள்வதால் உலக ஏட்டிலே, தமிழ் வளர்ந்து விடாது என்பதை நான் உங்களுக்குப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குச் சீன நாட்டிலே ஒரு புதிய முறையை அங்கே கையாளுகிறார்கள். சீன மொழி தொன்மையான மொழி. அந்த மொழியைக் கூட ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து நேரடியாக மொழி பெயர்க்கக் கூடிய தன்மையை பார்க்கிறார். இப்பொழுது வாருங்கள் என்று சொன்னால் ஆங்கிலத்திலே வி.ஏ.ஆர்.ஏ. என்று சொல்வதைப் போல் அந்த ஆங்கில முறையிலே மொழி பெயர்த்து அதன் மூலமாக அந்த மொழி உலகம் பூராவும் பரவ வேண்டுமென்பதற்காக நடவடிக்கை எடுத்து ருப்பதாக இன்றைய தினம் செய்தி வெளியாகி நகழ்ச்சியை நாம் பார்க்கிறோம்.

198 ஜனவரி 30] [திரு நா. சுந்தரராஜ்]

அதேபோல், இங்கே ஒரு விஞ்ஞான ரீதியாக தமிழ் மொழியை வளர்ப்பதற்கான அறிவுரைகளோ அதற்கான நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லையென்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

அடுத்து நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு ரூ. 12 கோடி, ரூ. 15 கோடி செலவு என்று சொல்கிறார்கள். அவை நம்முடைய மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்கள் பாராட்டினார்கள். அண்ணன் நெடுமாறன் அவர்கள் கூடப் பாராட்டினார்கள். அவர்கள் எல்லாம் பாராட்டுவதிலே நியாயம் உண்டு. காரணம் அங்கே, தாய்—பிள்ளை வகையில், திட்டத்திலே சேர்க்கப்படாத வகையில், ரூ. 10 அல்லது 12 கோடி அளவுக்கு அங்கே வளர்ச்சித் திட்டங்களிலே செலவிடப் பட்டதாகச் சொன்னார்கள். இதனும் 15 ஆண்டுகளுக்கு எந்த விதமான வளர்ச்சித் திட்டங்களும் மதுரை மாநகரத்திற்குத் தேவையில்லையென்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், திரு. சங்கரய்யா அவர்களுடைய தொகுதியும் அங்கே உள்ளடங்கி இருக்கிறது, அண்ணன் நெடுமாறன் அவர்களுடைய தொகுதியும் உள்ளடங்கி இருக்கிறது, முதலமைச்சருடைய தொகுதியும் அங்கே உள்ளடங்கி இருக்கிறது. ஆகவே, இந்த 3 பேர்களுடைய தொகுதிகளில் இன்றைக்கு ரூ. 12 கோடி செலவழிக்கப்படுகிறது என்று சொன்னால், தமிழ் நாட்டிலே பல்வேறு பகுதிகளில் இருக்கிற மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அதைச் சொல்ல வேண்டாமா? நான் இன்னும் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா: அது எங்களுடைய தொகுதி என்பதற்காக அல்ல உலகத் தமிழ் மாநாடு எந்த இடத்திலே நடந்தாலும் அந்த இடத்திலே, அந்த நகரத்தை வளப்படுத்துவதற்காகச் செய்யக் கூடிய முயற்சிகள் நல்லது என்ற அடிப்படையிலே தான் அது சொல்லப்பட்டது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இன்னும் சற்று வேதனையோடு சொல்கிறேன், ஏதோ ஒரு பெரிய புரட்சி செய்ததாகச் சொன்னார்கள். அங்கே உள்ள கழிப்பறைகளிலே ஒலிபெருக்கி மூலமாக சினிமா இசை இசைக்கப்படுவதாகச் சொன்னார்கள். அது உண்மையாக இருக்குமானால் தயவு செய்து அந்தப் புரட்சி தமிழகத்திற்கு தேவையில்லை. இந்த நாட்டிலே அந்தப் புரட்சியே தேவையில்லை. உலகத்திலே எந்த நாட்டிலும் இல்லாத ஒன்றை, தமிழ் நாட்டிலே, அந்த நிலைமையை தயவு செய்து ஏற்படுத்தி விடாதீர்கள். அன்றைய தினம் பல நேயர்கள் கூட, அங்கே உள்ள ஆணையருக்கு கடிதம் எழுதினார்கள். சாமி பாட்டு போடாதீர்கள், சினிமா பாட்டு போடுங்கள் என்றெல்லாம் எழுதினார்கள். அது போன்ற நிலைமைகள் நாட்டிற்குத் தேவையில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு, அண்மைக்கு உலகத் தமிழ் மாநாட்டில் ஒரு மலர் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த மலரிலே 173—வது பக்கம் முதல் 177—வது பக்கம் வரை 'ஆற்றல்மிகு புதுவைக் கலை, மொழிக்காகவும் தேசத்திற்காகவும் பாடுபட்ட மறவர் குலத்தை இழிவு படுத்துகின்ற வகையிலே அவர்கள் எல்லாம் சம்பல் பள்ளத்தாக்கிலே வாழுகின்ற கொள்ளையர்களைப் போல் உள்ளவர்கள் என்ற நிலையிலே அதிலே சித்தரிக்கப் பட்டிருக்கிறது. இன்றைக்கு உலகம் பூராவும் அந்த நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. உலகத்திலே தமிழர்கள் எல்லாம் அதைப்பெற்றுச் சென்றிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், இங்கே முதலமைச்சரை வெற்றி பெறச் செய்த தற்காக அந்த மக்களுக்கு இந்தப் பரிசா? முதலமைச்சரை வெற்றி பெறச் செய்தார்களே அதற்காக அவர்களுக்கு கொடுத் திருக்கின்ற பரிசா? அவர்களை எல்லாம் சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரர்கள் என்று சித்திரிக்க வேண்டுமா? நான் ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தயவு செய்து ஒரு சமுதாயத்தை, நீங்கள் பாராட்ட வேண்டாம். ஆனால் இழிவு படுத்தாமல் இருங்கள். அதுதான் முக்கியம். இழிவு படுத்துவதன் மூலமாக உங்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்குமானால் அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய ஒரு கணிசமான பகுதியினர் முக்குலத்தோர் என்கிற சொல்லைச் சேர்ந்தவர்கள் அதிலே அவமானப்பட வேண்டுமா? இந்த அரசாங்கத்தின் மூலமாக என்று நான் கேட்க விரும்புகிறேன். அதைத் திருத்த வேண்டாமா? மரியாதைக்குரிய கலைஞர்கள் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் அது போன்ற ஒரு பிரச்னை ஏற்பட்டது. 5—வது பாட நூல் புத்தகத்திலே அது போன்ற ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டு, அது இந்த அவையில் வைப்பிக்கப்பட்டு அன்றைக்குக் கல்வி அமைச்சராக இருந்த திரு. நெடுஞ்செழியன் அதற்காக மன்னிப்பு வகையிலே அல்லது நியாயம் என்று கொல்லி வாதாடி, அதற்குப் பின்னால் முதலமைச்சராக மாண்புமிகு கலைஞர் அவர்கள் அந்த புத்தகத்தை எல்லாம் திரும்பப் பெற்று அவையில்லாம் அழித்து, மீண்டும் வேறு புத்தகம் எழுதி, அதைப் பாடப் புத்தகமாக வெளியிட்டிருக் கிறார்கள் என்று சொல்லக்கூடிய அந்த அளவுக்கு, இன்னமும் அந்தப் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தாலும் சரி, விநியோகிக்கப் பட்டிருந்தாலும் சரி, அதை எல்லாம் திரும்பப் பெறுவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்து அந்தப் பகுதிகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினீர்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய, வாழ்ந்து, இந்த அவையை அலங்கரித்த முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காமராஜ் அவர்கள் திருவுருவப்படம் அந்த ஊர்வலத்திலோ அல்லது எந்த விழாவான

நிகழ்ச்சிகளிலோ, அவருடைய திருவுருவப் படம் காட்டப்பட வில்லை என்பது எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், 1936—வது ஆண்டிலே அங்கே யிருக்கக் கூடிய . . . .

[முற்பகல் 11-30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் எழுப்பிய ஒரு ஐயப்பாட்டிற்கு விடை கொடுத்து விடலாம் என்று கருதுகிறேன். உலகத் தமிழ் மாநாட்டு மலரிலே வந்த ஒரு கட்டுரையைப் பற்றி ஒரு ஐயப் பாடினை எழுப்பி அது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரை இழிவு படுத்தும் முறையில் இருக்கிறது என்று குற்றம் சாட்டி னார்கள். அற்றல் மிகு புதுவை என்ற தலைப்பின் கீழ், புதுவைக்கலை பற்றி கருத்துரைகளை திருமதி ராஜ் கிருஷ்ணன் என்கிற அம்மையார் வரைந்து இருக்கிறார்கள். இதிலே அவர்கள் குறிப்பிட்ட வாசகங்களிலே மதுரை, ராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மற்ற இடங்களில் தமிழகத்திலே வாழுகின்ற மறவர்களை, இழிவு படுத்துகின்ற முறையிலே அவர்களைச் சுட்டிக் காட்டுகின்ற முறையிலே அவர்களுக்குக் களங்கம் ஏற்படுத்துகின்ற முறையிலே எந்த வாக்கியமும் வரவில்லை. அதை இந்த மன்ற உறுப்பினர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் மாநிலத்திற்கப்பால் ஒரு வாழ்க்கைக் களத்தைப் புதுவைக்குக் கேர்ந்து கொள்ளும்போது, அம்மக்களின் பழக்க வழக்கங்கள் தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமில்லாமலிருக்கையில் அவர்களுக்கு கலையின் சிறப்பும் அந்நியக் [illegible] மெரியிராது [illegible] மொத்தமாக [illegible] வழங்குவது ஒரு பிரச்சினை [illegible] 19[illegible] ஆண்டுகளில், பாரத நாட்டில் வரலாற்று சிறப்புடைய நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இதனால் அந்த இடத்தில் வருவோரை, ஒன்றுறைச் செயலிலே ஈடுபடுத்தக் கொடிய குற்றங்களைப் புரிந்த, ஒளி காணா உலகில் ஒழுக்கமறவாக வாழ்ந்த மறவர்களும் மனம் திருந்தி அன்பு வழியில் மாறிடலாம் என்கிற நம்பிக்கையைச் செயல் முறையாக்கத் துணிந்த நிகழ்ச்சி அது. வடமேற்கு மையப் பாரதத்தில் சம்பல் ஆற்றின் கரைகளில் [illegible] மண்ணரிப்பினால் சோன்றிய மிக விந்தையான நிலப் பகுதிகள் பாரவிரிந்திருக்கின்றன. இப்பகுதி பல நூற்றாண்டு காலமாகச் சட்டத்துக்கும், மண்டலனைக்கும் அஞ்சிய குற்றவாளிகளின் மறைவிடமாக இருந்து வந்திருக்கிறது. ஒரு சேதுபதி முயற்சி தான் என்றாலும் 4000க்கும் மேற்பட்ட [illegible] மறவர்கள் தங்கள் [illegible] தவறுகளை நீறேற [illegible] துறை யினரிடம் சரண் அடைந்தார்கள்.

இவ்வரலாற்று நிகழ்ச்சியை மையமாகக் கொண்ட புதினத்தைப் புனைய அந்தப் பிரதேச மக்களின் வாழ்வு, அவர்களுடைய என்முறைச் செயல்களுக்குக் காரணமான [illegible] பட்ட பிரச்சினைகள் [illegible] ஆராய வேண்டியது அவசியமாகிறது. [illegible] காவிய கொள்கை, காலைகளைப் புரிந்து கதாநாயகனின் மனமாற்றத்தைச் சித்தரிக்கும் [illegible] செய்வதற்கு [illegible] திரட்டல் மட்டுமே போதுமானதாகாது. அந்த மண்ணின் மக்களை, அவர்கள் [illegible], கிளர்ச்சிகளைச் தமிழில் கொண்டு வருவதற்குச் சொல்லாகிய கருவி உயிரோட்டல் பெறவேண்டும், என்றுதான் சொல்லி இருக்கிறார்கள்.

ஆகவே, பாரதத்தினுடைய, வடபகுதியிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை செய்கின்றவர்களை குறிப்பிடும்போது மறவர் என்று குறிப்பிடுகிறார்களே விர, தமிழகத்திலே மறவர் மறவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்ற சொற்கள் [illegible] வில்லை. ஆகவே நான் சொல்லியதிலே தமிழகத்தைப் பற்றி வர தமிழகத்திலே இருக்கிற மறவர்களைப் பற்றியோ கருடைய செயல்களைப் பற்றியோ குறிப்பிடவில்லை. அவர் அவர்கள் தெளிவாகவே சொல்லி இருக்கிறார்கள். ஆனால் செயல்களில் சம்பட்டு, [illegible] புரிந்து [illegible] உலகில், பாரதத்தினுடைய வடபகுதிகளில் ஒரு காணா பகுதியிலே இருப்பவர்களைப் பற்றிச் சொல்லுகிறார்களே தவிர, தமிழகத்து மறவர்களைப் பற்றியோ, மறவர்களைப் பற்றியோ அல்ல. மறவர்கள் என்று சொல்லுக்கு என்ன பொருள் என்று பார்க்கிறபோது, சங்க இலக்கியத்திலே அதற்கான [illegible] களை எல்லாம் வைத்திருக்கிறேன். ஒரு 58 ஆதாரங் வருகின்றன. வீரர்கள், போர் வீரர்கள், சிறந்த வீரர்கள் [illegible] [illegible] மறவர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

10—15 இடங்களிலே மறவர்கள் வழியில் [illegible] கொள்ளை [illegible] நடத்துகிறவர்கள், [illegible] நாங்கியவர்கள், [illegible] இருக்கின்றன. ஆகவே, அப்படிச் சொல்கிறபோது [illegible] வருகிறபோது, இங்கே இருக்கிற [illegible] மறவர் என்று மற்றவர்களைவிட குறிப்பிட்டு [illegible] அந்தக் கட்டுரை [illegible] அப்படி [illegible] அந்தக் கட்டுரை இடம் பெற்று இருக்கிறது [illegible] களைப்பற்றி பிரச்சினை இல்லை. ஆகவே, இங்கே இருப்பவர் வந்து விட்டதன் காரணமாக, வீரர் என்ற [illegible] களில் மறவர் என்று சொல்லுவதற்கும் [illegible] மாண்புமிகு [illegible] விடுமோ என்பதற்காக சிலவை [illegible] சொன்னேன். நேரம் இல்லாத காரணத்தால் இருப்பதைச் சுட்டிக்காட்டவில்லை. தேவைப்பட்டால் அந்தப் [illegible]

யெல்லாம் நான் சுட்டிக்காட்டுகிறேன். ஆகவே, எந்த ஒரு தனிப்பட்ட இனத்தையும்-தமிழகத்தைப் பொறுத்தவரையில் உள்ளபடியே இழிவு படுத்துகிற நோக்கமோ, அவர்களைக் குறைபடுத்துகிற நோக்கமோ கொண்டு அந்தக் கட்டுரை எழுதப்படவில்லை என்பதைமட்டும் நான் குறிப்பிட்டுக் கூறவிரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மறவர்கள் என்று எந்த மலரில் வெளிவந்துள்ள வார்த்தை தமிழ்நாட்டில் உள்ளவர்களைக் குறிப்பிடவில்லை என்று அவை [illegible]னவர் அவர்கள் விளக்கம் அளிக்கிறார்கள். [illegible]ப்போலத்தான் தி.மு. கழக ஆட்சி நடைபெற்றபோது வேண்டுமென்றே இழிவுப்படுத்தும் நோக்கத்தோடு மறவர் என்ற வார்த்தை [illegible] நாங்கள் வெளியிட்ட பாடபுத்தகத்தில் வெளியிடவில்லை. இருந்தாலும் அந்தப் பகுதி மக்கள் [illegible] கொண்ட [illegible]ற்கிணங்க, இந்த அவையிலே பிரச்சினை எழுப்பியதற்கிணங்க, அது இழிவுபடுத்துவதாகத் தெரியுமானால், அதை மாற்றிடுகிறோம் என்று அந்தப் பாடபுத்தகத்தில் இருந்து அந்த மறவர் என்ற சொல்லை மாற்றியிருக்கிறோம். அது ஒரு முன் உதாரணம் ஆகும்.

இப்போது நான் சொல்லவருவது, சம்பல் பள்ளத்தாக்குப் பகுதியில் கொள்ளை அடித்தவர்கள், கொலை செய்தவர்கள் என்று குறிப்பிட்டு விட்டு, அவர்களை மறவர்கள் என்ற பெயரால் ஏன் அழைக்க வேண்டும் அவர்களைக் கொள்ளைக்காரர்கள் என்ற பெயரில் அழைத்து இருக்கலாம். ஆனால் அவர்களைக் கொடிய மறவர்கள் என்ற அடைமொழி கொடுத்து அழைக்கப்பட்டு இருக்கிறது. இதுதான் அந்த மறவர் சமுதாயத்தை இழிவுபடுத்துவதாக அந்தச் சமுதாய மக்கள் கருதுவதற்கு இடம் தருகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முன்பு ஒரு பாடபுத்தகத்தில் மறவர் என்ற சொல்லுக்குப் பொருள்கூறுகிற இடத்தில் எயின மறவர்கள் என்ற சொல்லி, வழியில் வந்து கொள்ளை அடிப்பவர்கள் என்று பொருள்பட அதிலே குறிப்பிட்டு இருந்தது. ஆனால் இந்தக் கட்டுரையில் சம்பல் பள்ளத்தாக்கில் உள்ள மறவர்களைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். மறவர்கள் என்பதாக சில இடங்களில் வீரர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி வீரர்கள் என்று சொல்வார்களேயானால், அது தமிழ்நாடு வீரர்களைச் சொல்வது என்று அர்த்தம் இல்லை. [illegible] வீரர்களை அமெரிக்க வீரர்களை, உலகத்திலே [illegible] வீரர்களை எல்லாம் குறிப்பிடுகின்ற வகையில் எடுத்துக்கொள்ளலாமே [illegible] விர தமிழ்நாட்டு வீரர்களைச் சொல்வதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இல்லை.

'மறவர்' என்ற சொல்லுக்கு 'அறவன், அறவர், மறவர், மறவன், மள்ளர், மள்ளன், [illegible] மருகன்-என்று புறநானூற்றில் வருகிறது என்று சொல்லப்பட்டு, எல்லா இடங்களிலும் புது தேவர்களையும், மறவர்களையும் குறிப்பிடுகிறது

என்று பொருள் அல்ல. நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது தமிழகத்தைப் பொறுத்தவரையில் குறிப்பிடுகிறபோது, மறவர்கள் இப்படிப்பட்டவர்கள் என்று சொல்லியிருந்தால் தவறு.

அந்த அம்மையார் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியதுபோல், கொள்ளைக்காரர்கள், என்று போட்டு ஒருக்கலாம். வேறு சொற்களைப் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் சொற்களைப் பயன்படுத்துவது என்பது அந்தந்த ஆசிரியர்கள், கட்டுரை எழுதுகிறவர்களின் அப்பாற்பட்டது. பொறுத்தது. ஆகவே அங்கே மறவர் என்று அவர்கள் பயன்படுத்தியிருப்பது, தமிழகத்தில் உள்ள தேவர் பெருமக்களை இழிவுபடுத்துகின்ற நோக்கத்தோடு அல்ல. நான் முதலிலேயே சொன்னபடி, அந்த மறவர்கள் என்பதற்கு வீரர்கள் என்று பொருள் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

சங்க இலக்கியத்திலே சொல்லியிருப்பதைச் சொல்கிறேன். "கொலைச் செய்து பொருளைக் கொள்ளை கொள்ளும் கொடிய கோட்பாடாகிய தீவினையைச் செய்யும் ஆறலைக் கள்வராய மறவர்" என்று அகநானூறு-363-வது பாடலில் வருகிறது. அதே மாதிரி, "அழகிய விளிம்புகளைக் கொண்டு உருவு நாணேற்றிய விசையுடைய மூங்கிலாலியன்ற வலிய வில்லையும், குருதியைச் சிவந்த வாயினையுடைய அம்புகளை உடைய சினந்த பார்க்கும் மறவர்" என்றும் வருகிறது. ஆகவே, மறவர் என்ற சொல் எங்கே சொல்லப்பட்டாலும், அது நம்மைக் குறிப்பதாக நாம் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. சம்பல் பள்ளத்தாக்கு மறவர் என்று வருகிறபோது-வீரர் என்று வருகிறபோது உலகத்திலே யாரையும் சொல்லலாம். அந்த சொல்லை [illegible] உலகத்திலே எழுதியவர் குறிப்பிட்டு இருப்பது தமிழக மறவரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்ற விளக்கத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : இங்கேயுள்ள பணக்காரர்களை சம்பல் பள்ளத்தாக்கு [illegible] என்று [illegible] சொன்னால் [illegible] கொள்வார்கள்? [illegible]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : [illegible] என்பதற்கு பணக்காரர்களை என்று முதலில் இட்டதை [illegible] முதலியார் என்று [illegible] இருக்கும் முதலையிட்டவர்கள் [illegible] முதலியார் [illegible] சொன்னால் தவறு இல்லை என்பேன். [illegible] முதலியார் என்று

திரு. எஸ். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் விளக்கம் எதுவாக இருந்தாலும் கூட, அந்த மறவர் என்ற சொல்லை அந்தக் கட்டுரையில் பயன்படுத்தி இருப்பது, பொதுவாக அந்தச் சமுதாய மக்கள் மத்தியில் ஒரு பொதுப்பண்பை ஏற்படுத்தியிருப்பதால் [illegible] வருகிற பொருளாவது, ஒவ்வொரு திருடனை விடவிட மறவர் என்பதற்கு பதிலாக வீரர் என்று சொல்லையிட்டு விடவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு படத்தில் நடித்தேன். அதற்குப் பெயர் 'மலைக்கள்ளன்'. ஏன் மலைக்கள்ளன் என்று பெயர் வைத்தீர்கள், மலைக்கள்ளன் என்று பெயர் வைக்கக் கூடாதா என்று கேள்வி எல்லாம் வந்தது. கள்ளன் என்பது கள்ளரைக் குறிப்பிடும் என்று சொன்னதால் அந்தப் பிரச்னை எழுந்தது. ஆனால் அதை மாற்ற வில்லை. ஆகவே, அந்தப் பிரச்னையை எடுத்துக்கொள்கிறவர்கள் சந்தேகப்படாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : நான்தான் அதற்கு விளக்கம் எழுதினேன். (சிரிப்பு) ஆனால் அந்த மலைக்கள்ளன் படத்தில் நல்லவனாக வந்தான். இங்கே குறிப்பிடுகின்ற-இந்த மலரில் வருகின்ற-மறவர்—கொடிய மறவர் என்று சித்தரிக்கப்படுகிறார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, உரையாடல் அதற்கு எழுதியவரைப் பற்றி அவரே சொன்னதற்கு நன்றி. அதில் 'கள்ளன்' என்று பெயர் வந்ததற்குக் காரணமே, அவன் களவு செய்தான் என்பதால் தான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : சம்பல் பகுதியில் கொள்ளை செய்து, கொலை புரிந்த கொடியவர்களை [illegible] அந்த மறவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, வேறு யாரும் தவறாகக் குறிப்பிட்டுச் சொன்னதாக எஞ்சத் [illegible] இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.40]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறவர் என்ற சொல்லை [illegible] பேரவையில் [illegible] வைக்கக்கூடாது. ஆனால் [illegible] என்று அமைச்சரவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகவே, பிரச்னை இல்லை.

திரு. எஸ். எஸ். வி. சித்தன் : இந்த மறவர் என்ற சொல்லை திருத்தி வெளியிடுவதால் அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் இருக்கிறது? ஏன் தயக்கம் காட்டுகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பாடப் புத்தகத்திலே உள்ள பாடலுக்குப் பொருள் சொல்லும் போது இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இது புண்படுத்துகிறது என்ற காரணத்தால் இந்தப் பிரச்சனையில் பாடபுத்தகத்தைத் திருத்தி வெளியிடும்போது திருத்தலாம் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருக்கிறவர்களைக் குறிப்பிடும்போது மறவர் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். அது ஒரு குறிப்பிட்ட பகுதியினரை இழிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு எழுதப்படவில்லை. இதை எடுத்து விடலாம் என்றால் எந்த ஒரு ஆட்சியிலும், எந்த ஒரு சமயத்திலும் மறவர் என்ற சொல்லை பயன்படுத்த முடியாமல் போய்விடும். ஏனென்றால் ஒரே சொல்லுக்கு பல பொருள் உண்டு. உதாரணமாக மதி என்ற சொல்லுக்கு அறிவு என்று ஒரு பொருள், சந்திரன் என்றும் அது பொருள்படும். ஆகவே, மறவர் என்ற சொல்லை எடுத்துவிடுவது என்றால் அநாகரீகம், புறநானூறு போன்றவைகளில் இருக்கின்ற சொல்லை எடுக்க வேண்டிவரும்; அது முடியாது. அவைகளுக்கு அடியார்க்கு நல்லார், உரை இருக்கிறது. நச்சினார்க்கினியர் உரை இருக்கிறது; உ.வே. சாமிநாதையர் உரை இருக்கிறது; அவைகளில் எல்லாம் எடுக்க வேண்டிவரும். பிரச்சனையை இதோடு நிறுத்திவிட வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஜாதியை இழிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் அந்த சொல் எழுதப்படவில்லை. அப்படி இருந்தால் அதை எடுத்துவிடத் தயார். அந்த இடத்திலே அவர்கள் பயன்படுத்த வேண்டுமென்று விரும்பவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சனையைப் பெரிதாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். விளக்கம் தரும்போது, ஜாதியை இழிவுபடுத்தும் வகையில், அதற்கு இடம் தராத வகையில் காரணங்களைச் சொல்ல வேண்டுமே தவிர, இருக்கிற நிலையில் மோசமாக ஆக்கும் வகையில் சொல்ல வேண்டாம். ஆகவே, இந்தப் பிரச்சனையை இதோடு விட்டுவிடுவது நல்லது என்பதாகப் பணிவன்போடு குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, ஒரே ஒரு விளக்கம். அகநானூறு, புறநானூறில் மறவர் என்ற சொல்லுக்கு ஒரு பொருள் இருந்திருக்கலாம். சங்க இலக்கியங்களில் 'நாற்றம் வீசும் மலர்' என்று இருந்தால் இப்போது அந்த நாற்றத்திற்கு வேறு பொருள். அதைப்போல.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் தமிழ் மொழி பற்றி அல்ல. அதற்கு நேரம் இல்லை. உட்காருங்கள்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, திரு. சுந்தரராஜ் அவர்கள் ஒரு பிரச்சனையை எழுப்பினார்கள். அதற்கு முன்னவர் அவர்கள் பதில் சொல்லும்போது அகநானூறு, புறநானூறு, மற்ற சங்க இலக்கியங்களில் மறவர் என்

சொல்லுக்கு என்ன பொருள் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அதைப்போன்ற சங்க இலக்கியங்களையும் வாபஸ் பெற வேண்டுமென சுந்தரராஜ் அவர்கள் விரும்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : இன்றைக்கு தமிழ் மொழி தெரியாத ஒருவர் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டிருப்பதற்கு இந்த அவையிலே எதிர்ப்பு கிளம்பியதை நாம் நேற்று பார்த்தோம். ஒரு காலத்திலே ஆவகர்லால் நேரு அவர்கள் நாடாளுமன்றத்திலே பிரதம மந்திரியாக இருந்தபோது குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பேசும்போது சொல்கிறார். 'எங்களுடைய மாநில செக்ரெட்டேரியேட் முதலிலும் பெரிய பதவிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாராயணனையும் சுப்பிரமணியனையும் தான் பார்க்கிறேன்' என்றார். அதற்குப் பதிலாக பிரதமர் நேரு அவர்கள், நான் உங்கள் மாநிலத்திலே மட்டுமல்ல; டில்லியில் இருக்கிற செக்ரெட்டேரியேட்டில் எல்லாம் அதே நாராயணனையும் சுப்பிரமணியனையும் பார்க்கிறேன் என்றார். அந்த அளவுக்கு தமிழ்நாட்டிலே இருந்து பெரிய அதிகாரிகள், வீரம் மிக்க, தீரம் மிக்க, ஆற்றல் மிக்க அதிகாரிகள் எல்லாம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பணியாற்றும் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

இன்றைக்கு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சென்னையிலே, டில்லியில் இருக்கிற பெரிய பெரிய அதிகாரிகள் எல்லாம் தமிழ்நாட்டு அதிகாரிகள்; தமிழ்நாட்டு அதிகாரிகள் இந்தியாவை ஆளுகின்றார்கள் என்று சொன்னார்கள்.

அந்த அளவுக்கு இன்றையதினம் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் நீதிபதிகளும் இருக்கின்றார்கள். இந்தியாவில் பரவலாக. அப்படிப்பட்ட சூழ்நிலையில் சன் ஆப் தி சாயில் என்றும் மண்ணின் மைந்தர்கள் என்றும் கூறப்படுகின்ற தத்துவத்தை அடிப்படையாக வைத்து பிரச்சினைகளைக் கிளப்பினால் நம்முடைய மாநிலத்திலே இருக்கிற நாராயணனும் சுப்பிரமணியனும் வெளிமாநிலங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படும். இந்தியாவிலே அவர்கள் வேறு எங்குமே செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே தமிழகத்திற்கு வருகின்ற நீதிபதிகள் தமிழ் மொழி தெரிந்தவர்களாகத் தான் இருக்கவேண்டும் என்பது போன்ற வேறுபாடுகளை எல்லாம் காட்டக்கூடாது. நம்முடைய மாநிலத்திலே ஒரு பிரச்சினை வருகின்றது என்றால் நாம் என் வெளி மாநிலங்களிலே உள்ள நீதிபதிகளைக் கொண்டு அதை விசாரிக்கவேண்டும் என்று சொல்கிறோம். நம்முடைய நீதிபதிகளின் மீது நம்பிக்கை இல்லை என்ற காரணத்தால் அல்ல. அவர்கள் அது சம்பந்தமாக நீதிபரிபாலனம் செய்கின்றபோது பாரபட்சமற்ற முறையிலே செய்ய மாட்டார்களோ என்ற அச்சத்திலே காரணமாகத்தான் நாம் அவ்வாறு ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொல்கிறோம்.

ஆகவே இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையிலே தேசிய ஒருமைப்பாடு வளர்க்கப்படவேண்டும் என்றால் நீதிபதிகளாக இருக்கக்கூடியவர்களும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளும் எல்லா மாநிலங்களுக்கும் போகக்கூடிய நிலைமை இருக்கவேண்டும். அப்படி இல்லையென்றால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை தமிழ் நாட்டிற்கு அனுப்ப வேண்டாம் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே தேசிய ஒருமைப்பாடு என்பதை ஏற்றுக்கொண்டிருக்கும் நாம் இதுபோன்று பிரச்சினைகளைக் கிளப்புவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 6ஆவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திட்டத்திற்கு 1350 கோடி ரூபாய் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறீர்கள். ஆனால் இதிலே தமிழ்நாட்டின் பங்கு எவ்வளவு, மத்திய அரசின் உதவி எவ்வளவு என்பதற்காக விளக்கங்கள் எல்லாம் இல்லை. மேலும் இவ்வாறு ஒதுக்கப்பட்டிருக்கின்ற எல்லாம் வெறும் வெடிக்கை போன்றவற்றிற்குச் செலவிடாமல் ஆக்கபூர்வமான நிலையான முறையிலே தமிழக மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கின்ற வகையிலே திட்டங்களைத் தீட்டி செலவழிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் இந்த அவையிலே பேசுகின்றபொழுது தமிழ் நாட்டிற்கு வரவேண்டிய திட்டங்கள் எல்லாம் வராமல் மற்ற மாநிலங்களுக்குச் சென்றுவிட்டது பற்றி குறிப்பிடப்பட்டது. அசோக் லேலண்ட் எக்ஸ்பேன்ஷன் ஸ்கீம் என்பது அதிலே ஒன்று. இன்னொன்று இன்டியன் கோச் பேக்டரி என்று சொல்லக்கூடிய ஐ.சி.எப். அவையெல்லாம் தமிழ்நாட்டிற்கு வராமல் வேறு மாநிலங்களுக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது. இந்த அரசாங்கத்தின் அஜாக்கிரதையாலா, அல்லது அக்கறையில்லாத காரணத்தாலா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். ஆகவே திட்டங்கள் போடப்படுகின்ற போது முழு பொறுப்போடும், ஆக்கபூர்வமான நல்ல உணர்வுகளோடும் அந்தத் திட்டங்களைச் செயலாக்கத்தேவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வறுமையை அடியோடு ஒழிக்கவேண்டும் என்னும் கொள்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதால் ஒரு மாநிலத்தின் பின்தங்கிய நிலையை, நபர்வாரி வருமான அடிப்படையில் தீர்மானிப்பதற்குப் பதிலாக, வறுமைக் கோட்டிற்கும் கீழுள்ள மக்கள் பகுதியும், மாநிலத்தில் நபர் வரித் திட்டச் செலவு ஆகியவற்றையும் அடிப்படையில் தீர்மானிப்பதற்கு இந்திய அரசு உதவி செய்யவேண்டும் என்று ஆளுநர் அவர்களுடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களை எப்படி மேலே கொண்டு வருவது? அதற்கான திட்டம் என்ன? நான் இங்கே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே

நாம் எதை வளர்த்து இருக்கிறோம் என்றால் சினிமா தியேட்டர்களைத்தான். ஆகவே நாம் திரையரங்குகளைத்தான் வளர்த்து வைத்திருக்கிறோம். என்னுடைய தொகுதியாகிய திருமயம் தொகுதியிலே 3 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு சினிமா கொட்டகைகள்தான் இருந்தன. ஆனால் இன்றைக்கு 12 சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. இன்னும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மக்கள் உல்லாசமாக இருக்கவேண்டும் என்பதற்காக சினிமா கொட்டகைகளுக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அவர்களுடைய கையிலே இருக்கின்ற காசு சினிமா கொட்டகைகளுக்குப் போகின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்களே ஒருமுறை சினிமாத் துறையிலே இருப்பவர்கள் கறுப்புப்பணம் வாங்குவது உண்மைதான் என்று சொன்னார்கள் புதிதாக அந்தத் துறைக்கு ஒருவர் வருகிறார் என்றால் வந்த 3 அல்லது நான்கு மாதங்களிலே பெரிய பெரிய பங்களாக்கள் வாங்கிவிடுகிறார்கள், பட்டுக் கார்களை வாங்கிவிடுகிறார்கள். ஏர் கண்டிஷன் அறைகள் கட்டி விடுகிறார்கள். இதற்கெல்லாம் யாருடைய பணம் கிடைக்கின்றது. இம்மக்களிடமே உழைக்கின்றவனே சாதாரண ஏழை அவனுடைய பணம்தானே இதற்கெல்லாம் கிடைக்கின்றது. மாற்று வேட்டி கூட இல்லாத நிலையிலே இருக்கின்றவனே அவனுடைய பணம்தானே இது. ஆகவே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பெரும்பான்மையான மக்களை தயவு செய்து சோம்பேறிகளாக ஆக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். காலை 10 மணி காட்சி, மாலையிலே 3 மணி காட்சி, பிறகு 6 மணி காட்சி, பிறகு இரவு 10 மணி காட்சி என்று நாள் பூராவும் சினிமா பார்ப்பதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. இப்படி சினிமா பார்க்கின்ற வாய்ப்புக்களை வளர்க்கின்ற நாம் ஏன் உழைப்பதற்குரிய வழியை செய்ய கூடாது? எத்தனையோ தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாமே. ஆனால் சினிமா காட்சிகள் தான் ஒரு நாளைக்கு நான்கு காட்டப்படுகின்றன. காலை சினிமா காட்சியை ரத்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிப் பேசுகிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சுமார் 10.74 இலட்சம் பேர்கள் பட்டதாரிகளும், படிக்க இளைஞர்களும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். படிக்காத பாமர மக்கள் எத்தனைபேர்கள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது.

[மூற்பகல் 11—50]

இந்த நிலையில் வாழ்வாதாரத்தில் வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டே போகுமே தவிர, அதற்கு முடிவு காண வேறு வழியே இல்லை. தமிழ்நாட்டில் இருக்கிற இந்த 10.74 லட்சம் படித்த பட்டதாரிகளுக்கு வேலை இல்லாமல் போகுமேயானால், அது பல சக்திகளை ஒன்றாகத் திரட்டி

பெரிய போராட்டத்திற்கான விஸ்வரூபம் எடுக்கும் என்பதை எச்சரிக்கையாக இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். இன்றைய தினம் ஆங்காங்கே நக்ஸலைட்டுகள் பெருகிக் கொண்டே வருகிறதாகச் சொல்கிறார்களே, அது ஏன்? அவர்களுக்கு வாழ வழி இல்லாத நிலையில் இப்படிப்பட்ட போராட்டத்தை, வெடிங்க ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை மேம்பாடு அடைய வழியே இல்லை. அவர்கள் மாட மாளிகைகளும் அடுக்கு கோபுரங்களும் வசதி வாய்ப்புகளும் கேட்கவில்லை. 3 வேளை வயிறார சாப்பிடுவதற்காகவாவது வழி வேண்டும் என்ற நிலையில் தான் போராடுகிறார்கள். இவைகளை எல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே தமிழ்நாட்டு மக்களை சோம்பேறிகளாக ஆக்க முயற்சி செய்யவேண்டாம்; அவர்களை உழைத்து, அந்த உழைப்பால் உயர வழி செய்யுங்கள் என்று கேட்கிறேன்.

அடுத்து இந்தப் பொது விநியோக முறையை எடுத்துக் கொண்டால், அந்த முறையை அமுல் செய்ய வேண்டிய நியாய விலைக் கடைகள் செம்மையாக நடைபெறுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். 1977லே நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களிலும் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தி, அத்தனை சங்கங்களை ஏற்படுத்தி, இப்போது அல்லது நாளையத் தினம் மகிழ்ந்தோம். ஆனால் இன்றையதினம் நீங்கள் ஏற்படுத்தியிருக்கிற நியாய விலைக் கடைகளிலேயே 50 விழுக்காடு 60 சதவீதம் கடைகள் தான் செயல்படுகின்றன. அவைகளும் செம்மையாக செயல்படுகின்றனவா என்றால் இல்லை. காரணம் அங்கே தேவையான அத்தியாவசியப் பொருள்களே கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் அவைகளின் விலைகள் அதிகமாகவே இருக்கின்றன. அதனால் மக்கள் வாங்குவதற்கு பதிலாக, வெளியில் வாங்குவதையே விரும்புகிறார்கள். அதன் காரணமாக அந்தக் கடைகள் மூடப்பட்ட நிலையிலே இருக்கின்றன.

அது மட்டும் அல்ல, பல்வகையான பொருள்கள் மக்கள் மத்தியில் விநியோகம் செய்யப்படுவதே இல்லை. அவைகள் அதிக விலையில் கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுகின்றன. என்னுடைய தொகுதியில் பொது அமைப்பாளர் என்னும் இடத்தில் உள்ள ஒரு நியாய விலைக் கடையில், வேலை செய்யும் ஒரு ஊழியர் முதலில் வந்த வேலைக்கு சேர்ந்த பேர்வழி சாதாரண நிலையில் இருந்தவர், பின்னர் 30,000 ரூபாய் பெறும் அளவிற்கு உயர்ந்து விட்டார். எப்படி அவ்வளவு பணம் வந்தது என்று சொன்னால், இந்த அலுவலகத்திலிருந்து கொடுக்கப்படுகிற பணமாயில் எண்ணெய் பொது மக்களுக்கு விநியோகம் செய்யாமலே, இல்லை. வியாபாரிகளுக்கு விலைக்கு கள்ள மார்க்கெட்டில் விற்றுவிடுகிறார். அதை அவர்கள் கடலை எண்ணெயில் கலந்து விற்கிறார்கள். இப்படி

ஒரு ஊழல் நடைபெற்று வருகிறது. அதுமட்டும் அல்ல, அரசாங்கத்தில் பொது விநியோகத்திற்காக வழங்கப்படுகிற சர்க்கரையோ, அரிசியோ கூட முறையாக பொதுமக்களுக்கு வழங்கப்படுவதில்லை. அவர்மீது யார் ஆக்ஷன் எடுப்பது என்றே தகராறு. மாவட்ட ஆட்சி அதிகாரியா அல்லது சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனின் பிராஞ்சு அதிகாரியா என்று. இப்படி ஒரு குழப்பத்தில், பொது மக்களே ஒரு நாள் பெருண்டு எழுந்து கலவரம் நடந்து, காவல் துறையின் வழக்கு தொடர்ந்து நிலைமையை கட்டுக்கு கொண்டு வரும் நிலைமை எல்லாம் அங்கே ஏற்பட்டது. இப்படிப்பட்ட நிலைமை இங்கு மட்டும் அல்ல பல இடங்களில் இருக்கிறது. அரசாங்கம் வழங்கும் அத்தியாவசியப் பொருள்கள் ஒழுங்காக மக்களுக்குப் போய்ச் சேருவதே இல்லை. சிலர் இப்படித் தாங்கள் நல் வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக இப்படி பொது மக்களை கொள்ளை அடிக்கிறார்கள். இவைகளை அரசாங்கம் கண்காணித்து கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுடைய பிரச்னையைப் பொறுத்த வரையில் எங்களுடைய கட்சியினுடைய சார்பில் நிலைமையை தெளிவாக விளக்கி இருக்கிறோம். விவசாயச் சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களின் கொள்கைகளையோ, போக்குகளையோ நாங்கள் ஆதரிக்கவில்லை. ஆனால் நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தியாவிலேயே பல்வேறு இடங்களிலே இப்படிப்பட்ட விவசாயிகளின் போராட்டம் நடந்துக் கொண்டு தான் இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் மட்டும் அல்ல, பல்வேறு மாநிலங்களிலும் நடந்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு பட்ட காரணங்களுக்காக நடந்துக் கொண்டிருக்கிறது. ஒரு மாநிலத்திலே கரும்புக்கு அதிகமான விலை வேண்டும் என்று போராட்டம் நடக்கிறது. நம்முடைய தமிழகத்தில் 9 அம்ச திட்டம் என்று சொல்லி, உணவுக்காக உற்பத்தி செய்யக் கூடிய விளைப் பொருள்களுக்கு அதிக விலை வேண்டும் என்று கேட்கிறார்கள்.

பிக்சட் பிரைஸ் என்று ஒன்று இருக்க வேண்டும் என்கிற முறையில் தான் மத்திய அரசு சாதாரண ரக நெல்லியின் கொள் முதல் விலையை 105 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த அரசு மேலே 10 ரூபாய் போட்டு 115 ஆக அதை கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் கூட கர்நாடகம் போன்ற மாநிலங்களில் 135 ரூபாய்கூட கொடுக்கிறார்கள். அந்த அளவிற்கு கொடுக்க நம்முடைய அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே விளக்கியாக வேண்டும். விவசாயிகள் என்று குறிப்பிடுகிற அளவிலே, பெரிய பெரிய மிட்டாதாரர்கள், நிலச்சுவான்தார்கள், திருநெல்வேலியில் ஆயிரம் ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு, இங்கே சென்னையில் உட்கார்ந்திருக்கிற

நிலப் பிரபுக்கள், absentee agriculturist என்று சொல்லப்படுகிற. விவசாயமே தெரியாமல் 100 ஏக்கர் 150 ஏக்கர் வைத்திருப்பா நாலேயே, விவசாயிகள் என்று பெயர் வைத்திருக்கிற, அல்லது 10, 15 ஏக்கர்கள் வைத்துக் கொண்டு, போட்டு உட்கார்ந்துக் கொண்டு, வரப்பு மேட்டில் சேர் கொண்டு கூலியாட்களை வேலை வாங்கும் நில உரிமையாளர்கள் ஆகிய எத்தகையவர்கள் சார்பிலும் நாங்கள் போராடவிரும்பவில்லை. போராடவில்லை

அவர்களுக்காக நாங்கள் போராடவில்லை. ஆனால் இரண்டு ஏக்கர்கள், மூன்று ஏக்கர்கள் என்று வைத்துக்கொண்டு வயலே தங்கள் ஜீவநாடி என்று சொல்லி உழைத்துக்கொண்டு கிறார்களே அவர்களுக்காகத்தான் சொல்கிறேன். அவர்கள் நலன்தான் எங்களுக்கு மிக முக்கியம். அவர்கள் தான் எங்களது முக்கியமான குறிக்கோள்.

1 ப்ளஸ் 1 என்பதை நாங்கள் ஆதரிக்கிறோம். அதே நேரத்தில் இன்று ஒரு மாதம் தவறி கட்டிவிட்டால் அது 2 ப்ளஸ் 2 ஆக மாறுகிறது. சிலநேரங்களில் 3 ப்ளஸ் 3 ஆக மாறுகிறது. அப்படி மாறும்போது 3 ப்ளஸ் 3, 6 மாதங்களுக்குக் கட்டினால் தான் கனெக்ஷன் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். இது நியாயமா? அவர்கள் தவறி இருந்தாலும் தயவு செய்து அதைப் பொருட்படுத்த வேண்டாம், 1 ப்ளஸ் 1 திட்டத்தை தொடர்ந்து அமல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரையும், மாவட்டத்தின் காவல் துறை கண்காணிப்பாளரின்கீழ் பணியாற்றுகிற நூற்றுக்கணக்கான அதிகாரிகளை வைத்துக்கொண்டு கிராமங்களுக்குச் சென்று ஒலிப் பெருக்கிமூலம் மக்களை மிரட்டி அந்த மக்களிடமிருந்து தொகையைப் பெறவேண்டும் என்ற நிலைதான் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால்.....

மாண்மிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த மாதத்தில் அதாவது 3 ப்ளஸ் 3 வேண்டியதில்லை, 1 ப்ளஸ் 1 என்றே வாங்குங்கள் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். அதை மாதாமாதம் அவர்கள் தொடர்ந்து கட்டவேண்டும். நடைமுறையில் ஒவ்வொரு மாதமும் அவர்கள் பயன்படுத்துகிற மின்சாரத்திற்குள்ள கட்டணத்தை எப்போதும் கட்டித்தான் ஆக வேண்டும். ஆனால் நிலுவைகளை எளிதாகக் கட்டுவதற்கு ஒவ்வொரு மாதமும் நிலுவைத்தொகைக்கான தொகையை சேர்த்துக் கட்டவேண்டும் என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறோம். சில விவசாய சங்கங்கள் உடன்பாடு வந்து காரணத்தால் முதலிலிருந்தே கட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள். ஒரு குறிப் பிட்ட சங்கம் மட்டும் இந்தக் கருத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அவர்களும் இப்போது முன்வந்திருக்கிறார்கள். இப்போது 3 ப்ளஸ் 3 என்று வந்துவிடுகிறது. இருந்தாலும் பரவாயில்லை என்று சொல்லி அவர்களுக்கும் 1 ப்ளஸ் 1 என்று இந்த மாதத்திலிருந்து கட்டினால் போதுமென்று நாம் முடிவு எடுத்திருக்கிறோம்.

திரு. நா. சுந்தரராஜ்: அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. நான் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு உங்கள் அரசாங்கம் இவ்வளவு வேகமாக, கிராமங்களில் ரூ. 50, ரூ. 100 பாக்கியிருந்தாலும்கூட ஆட்சித் தலைவரைக் கொண்டு இருக்கிற காவல் துறையினரை வைத்துக்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்கிறீர்கள். இதே நடவடிக்கைகளை மால்கோ நிறுவனத்தின்மீது—மால்கோ நிறுவனம் தமிழ்நாடு அரசுக்கு, மின்சாரவாரியத்திற்கு பலகோடி ரூபாய் செலுத்த வேண்டியிருக்கிறது, அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக் கிறீர்கள்? உங்கள் அட்வகேட்—ஜெனரல் அந்த வழக்கில் வழக் காடச் செல்லாமல் இருந்ததுதான் நீங்கள் செய்த சாதனை. இதைச் சொல்லவேண்டாமா? நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த நாட்டின் முது கெலும்பு என்று சொல்லக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அனுசரணையாக இருக்கவேண்டியது உங்கள் கடமையாகும்.

திருச்சியில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. நான் நாயுடு சங்கப் பிரச்னைக்கு வரவில்லை. அந்தச் சங்கம் ஒரு போராட்டம், ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தவேண்டுமென்று அனுமதி கேட்கிறது. அனுமதி கொடுக்கிறார்கள். ஆனால் அனுமதி கொடுத்த பிறகு அந்த குறிப்பிட்ட தினத்தில் திருச்சி நகருக்கு எந்த விவசாயியும் வராமல் ஒவ்வொருபுடத்திலும் தடுக்கப் பட்டார்கள். மணப்பாறையில் தடுக்கப்பட்டார்கள், குளித்தலையில் தடுக்கப்பட்டார்கள், புதுக்கோட்டை கரூரில் தடுக்கப்பட்டார்கள். விவசாயிகள் யாரும் திருச்சி நகருக்கு வராமல் தடுக்கப்பட்டார்கள். பச்சைக்கரை வேட்டி கட்டியவர்கள் போலீஸ்காரர்களால் அடிக்கப்பட்டார்கள். திருச்சி நகரத்திற்குள்ளாக, பஸ் ஸ்டாண்டிற்குள் வேட்டி கட்டியவர்கள் எல்லாம் அடிக்கப் பட்டார்கள். வேட்டி கட்டிய எல்லா விவசாயிகளையும் அடித்தார்கள். இதற்கு நானே சாட்சி. நானும் அன்று அங்கிருந்தேன். எல்லா விவசாயிகளையும் உதைத்தார்கள். வேட்டி கட்டியவர்கள் எல்லோரையும் உதைத்தார்கள். குழாய் போட்ட அந்த மாவட்ட ஆட்சித் தலைவரை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அவர்கள் பாட்டனார் முப்பாட்டனார் குழாயில் இருந்து வந்தவர்கள் அல்ல. எல்லோருமே வேட்டி கட்டியவர்கள் தான். வேட்டி கட்டிய பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள்தான் நாம். ஆகவே வேட்டி கட்டியவர்கள் என்று பாகுபாடு பார்க்கா தீர்கள். விவசாயிகளை அடித்து நொறுக்கவேண்டிய எண்ணம் உங்களுக்கு, உங்கள் மனதில் வரவேண்டாம்.

இன்னொன்றை நான் வேறொன்றையும் சொல்லிக் காள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையே இருக்கக்கூடிய இடைத்தரகர்களை ஒழிப்பதற்கு இந்த அரசு முழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். மாநில

விவசாய அழைப்பு ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையே இருக்கக்கூடிய இடைத்தரகர்களை ஒழித்து அந்த அமைப்பின் மூலம் நேரடியாக பொருட்கள் பொதுமக்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் அதோடு விவசாயிகளுக்கும் கூடிய விலை கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யவேண்டும். அதன் மூலம்தான் விவசாயிகள் பிரச்னையை ஓரளவிற்கு தீர்க்க முடியும்.

[நண்பகல் 12-00]

அடுத்து, இன்றைக்கு திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் என்னுடைய கட்சிக்கு வாருங்கள், எப்போதும் ஆளுங்கட்சி எம். எல். ஏ-க்களாக இருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். எம். ஜி. ஆர் அவர்களைப் பார்த்து, நீங்களும் விவசாய சங்கத்திற்கு வந்து விடுங்கள், அப்படி வந்தால் எப்போதும் முதலமைச்சராக இருக்கலாம் என்றும் சொல்வார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்? இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இதற்கெல்லாம் உங்களுடைய அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும். காரணம், 3 ஆண்டுகளாக இந்தப் போராட்டத்திற்கு மறைமுகமாக இந்த அரசாங்கம், அதிகாரிகள் மூலமாக ஆதரவு கொடுத்தது, எங்கெங்கெல்லாம் விவசாயிகள் பணம் கட்ட வில்லையோ, அங்கே உள்ள அதிகாரிகள் என்ன சொன்னார்கள்? நீங்கள் பச்சைக்கொடி காட்டுங்கள், விவசாய சங்கம் என்று போர்டை எழுதி மாட்டுங்கள், அப்போது நாங்கள் உங்களிடம் வசூலுக்கு வரமாட்டோம், மீண்டும் மீண்டும் நாங்கள் உங்களிடம் வசூலுக்கு வரமாட்டோம் என்று சொன்னார்கள். அதற்குப் பின் இப்போது நீங்கள் போலீசை வைத்து, மிரட்டி பணம் வாங்குகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே, இதற்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டாமா? நீங்கள்தான் பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு பொதுத் துறையிலே பல்வேறு பொதுத் துறை நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ஆனால், அப்படி ஆரம்பிக்கப்பட்ட அந்த நிறுவனங்களின் நிலை என்ன? 1979-80 ஆம் ஆண்டு அதாவது உங்கள் ஆட்சிக் காலத்திலே இயங்கிய 17 நிறுவனங்களிலே 5 கோடியே 48 இலட்சம் ரூபாய் நட்டக் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. இந்த 5 கோடியே 48 இலட்சம் ரூபாய் மக்கள் வரிப் பணம் என்பதை நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எப்படி நஷ்டம் வந்தது? இதற்கெல்லாம்

யார் காரணம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் இதற்கெல்லாம் காரணம், அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளுடைய ஆடம்பரச் செயல் திட்டங்களாகும். இங்கே சீப் செகரட்டரி இருக்கிறார்; அவர் பெரிய அதிகாரி அதைப் போல் முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் மற்றும் அமைச்சர்கள் இருக்கிறார்கள். உங்கள் ரூம்களில் ஏ. சி. உண்டா? உங்கள் ரூம்களில் ஏ சி. இல்லை. ஆனால், உங்களுக்குக் கீழே பல படிகள் கீழே உள்ள டிபுடி கலைக்டர் அந்தஸ்திலுள்ள அந்த மானேஜிங் டைரக்டர்கள் அறைகள், நூற்பாலை மானேஜிங் டைரக்டர்களின் அறைகள் எல்லாம் ஏ. சி. இதெல்லாம் வேண்டுமா? அவர்கள் எல்லாம் இந்தியாவில், தமிழ்நாட்டில் பிறக்காமல், லண்டனிலே இருந்து வந்தவர்களா? இல்லை. எனவே, அந்த அதிகாரிகளின் அறைகளுக்கு ஏ. சி. தேவையில்லை எனவே, அதை ரத்து செய்யுங்கள்.

மேலும் அவர்களுக்கு ஆகின்ற செலவுகள் என்ன? நூற்பாலையிலே உள்ள ஒரு அதிகாரி வருகின்றவர்கள், போகின்றவர்களுக்கு கொடுக்கும் காபி செலவு மட்டும் மாதம் 3,000 ரூபாயாகிறது அதேபோல, அவர்கள் காருக்கு மாதம் 7,000 ரூபாயாகிறது. இவையெல்லாம் யாருடைய பணம்? மக்கள் வரி பணத்திலே இருந்து போகின்றது. புதுக்கோட்டையிலே காவேரி மில்லிலே நஷ்டக் கணக்கு காட்டுகிறார்கள். ஆனால், அவர் வாழ்கின்ற அறை ஏ. சி. அதே போல் அவர் வைத்திருக்கும் கார் புத்தம் புதிய கார். இங்கே, மந்திரிகளுக்குகூட பழைய கார். இவையெல்லாம் பார்க்க வேண்டாமா? இதனால்தான் நட்டம் ஏற்படுகின்றது என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வறட்சிப் பகுதியாக ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அறிவிக்கப்பட்டிருப்பதற்காக நன்றி ஆனால், தமிழ்நாட்டிலே இன்னும் புதுக்கோட்டை மாவட்டம் மாத்திரமல்லாமல், வட ஆற்காடு, கிழக்கு இராமநாதபுரம், சேலம் தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. காரணம், இந்த சீசனிலே மழையே பெய்யவில்லை. நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் தயவுசெய்து மாவட்டங்களை வறட்சிபகுதிகள் என்று அறிவித்த உடனேயே, அதற்கான நிவாரணத் திட்டங்களையும் அறிவிக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம் வறட்சிபகுதி என்று அறிவித்த உடனேயே அதிகாரிகள், கூட்டுறவுத் துறை அதிகாரிகள் எல்லாம் போட்டா போட்டி போட்டுக்கொண்டு வசூலிலே ஈடுபட்டிருக்கின்றார்கள் விவசாயிகளை மிரட்டி நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால், நான் சொல்வது புதுக்கோட்டை மாவட்டத்தை நீங்கள் வறட்சி பகுதியாக அறிவிப்பதற்கு முன்பாகவே வசூல் செய்ய வேண்டுமென்பதற்காக, அங்குள்ள விவசாயிகளை மிரட்டி வசூல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டார்கள். நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்,

புதுக்கோட்டை மாவட்டம் பல ஆண்டுகளாக தொடர்ந்து வறட்சியாக இருக்கிறது. அதன் தனித்தன்மையோ, என்னவோ தெரியவில்லை. அந்த மாவட்டம் தொடர்ந்து பல ஆண்டுகளாக வறட்சியாகவே இருந்து வந்திருக்கிறது. அங்கு குழாய்க் கிணறுகள் மூலம், கம்பிரஷன் பம்புகள் மூலம், போர் வெல்களை குளங்களில் போட்டு, அதன் மூலமாக விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுத்து, அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த ஊராட்சி ஒன்றியத் தேர்தல். ஏதோ மத்திய அரசாங்கம் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி முடிந்தவுடன் நடத்துவது நல்லது என்று ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) நல்லது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அப்படி நல்லது என்று சொல்லுகின்ற நேரத்தில், நீங்கள் எத்தனை ஆண்டு காலமாக, அதாவது 1977லே இருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரத்திலே இருந்து, இன்றுவரை எந்த ஒரு தேர்தலும் நடத்த முடியாத நிலைதான் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் எந்தத் தேர்தலையும் நீங்கள் நடத்தவில்லை. கூட்டுறவுச் சங்கமாக இருந்தாலும், உள்ளாட்சி மன்றத் தேர்தலாக இருந்தாலும், நகராட்சித் தேர்தலாக இருந்தாலும் தேர்தலை நடத்தவில்லை. மதுரையில் மட்டும் நடத்தினீர்கள் உலகத் தமிழ் மாநாட்டை நடத்துவதற்காக நடத்தினீர்கள் போலும். ஒரு தேர்தலை நடத்தினீர்கள்—உங்கள் கட்சித் தேர்தலை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கட்சியைப் பற்றிப் பேசினால் மற்றவர்களும் பேசுவார்கள். அது ரசாபாசமாகி விடும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட்டுறவு நிறுவனங்களின் ஆலோசனைக் குழுக்களில் முறைகேடாக நியமனம் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். மாற்றுக் கட்சிகளுக்கு பிரதிநிதித்துவம் இல்லாத வகையில் நியமனங்கள் நடைபெற்றிருக்கின்றன. அது சம்பந்தமான மனுக்களை சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் கொடுத்திருக்கிறேன். நியாயமான, நேர்மையான முறையில் எல்லாக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கக்கூடிய வகையில் இருப்பதுபோல் அவற்றிலும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்று ஆக்கபூர்வமான முறையில் செயல்பட வழிவகை செய்வது பற்றிப் பரிசீலனை செய்யவேண்டும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை, கிராமாதிகாரிகள் பதவி ஒழிப்பு. சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு இருப்பதால் அதிகமாக உள்ளே செல்ல விரும்பவில்லை. நடைமுறை என்னவ?

சுப்ரீம் கோர்ட்டில் இரண்டு நீதிபதிகள் சென்ஷர் என்ற முறையில், கண்டிக்கக் கூடிய முறையில் சொல்லியிருக்கிறார்கள். அவர்களை அதிரடிக்கக்கூடிய முறையில் ஏன் அப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்? அவர்கள் என்ன உங்களுடைய அரசுக்கு எதிரான மிகப் பெரிய பயங்கரவாதிகளா? இரவு 12 மணிக்கு போலீஸ் துணையோடு சென்று கிராமாதிகாரிகளை விரட்டிப் பிடித்து கணக்குகளை வாங்கி வரவேண்டிய அவசியம் என்ன? அது பற்றி சட்டமன்றத்தில் நிலையான சட்ட வடிவம் கொண்டு வந்து அதற்குப் பின்னால் அமல்படுத்தி இருக்கக்கூடாதா? என்ன அவசரம்? இன்றைக்கு உங்கள் நிலைமை தடுமாற்றத்தில் இருக்கிறது. வழக்கு மன்றத்தில் வழக்கு நடக்கிறது. அதே சமயத்தில் இங்கே பேச்சு வார்த்தை நடத்துகிறார்கள். ஒரு பேச்சு வார்த்தையிலே கூட ஒரு சங்கந்தான் கலந்து கொண்டிருக்கிறது, இன்னொரு சங்கம் கலந்து கொள்ளவில்லை. தயவு செய்து இதிலே முறையான வகையில் எல்லா எதிர்க்கட்சியினரையும் அழைத்துப் பேசி, பரிசீலனை செய்து நல்ல வழி காட்ட வழி செய்ய வேண்டும். அவர்களிலே எவ்வளவு பேர் வயதானவர்கள். எவ்வளவு பேர் இளைஞர்கள் என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். உங்களுக்குத் தனிப்பட்ட கோபங்கள் இருக்கலாம்; வேகங்கள் இருக்கலாம். அவர்கள் உங்களுக்குச் சாதகமாக இல்லாமல் இருக்கலாம். அரசாங்கம் ஏனைய மாநிலங்களைப் போல் அவர்களுக்கு உதவித் தொகை, மாதாந்திர பென்ஷன் கொடுக்க வேண்டும்; அல்லது மொத்தமாக கணிசமான ஒரு தொகையைக் கொடுக்க வேண்டும். 1970 ஆம் வருஷச் சட்டத்தின் மூலமாக எடுத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கவேண்டும். நல்ல வாலிப இளைஞர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இதையெல்லாம் பரிசீலனை செய்து முறையான வகையில் செயல்படுத்தியிருக்க வேண்டும்.

இன்றைக்கு அரசாங்கத்தின் நிர்வாகம் ஸ்தம்பித்த நிலைமையில் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் எந்த அதிகாரியும் இல்லை, அலுவலர்களும் இல்லை. அர். டி. ஓ. அலுவலகத்தில், தாசில்தார் அலுவலகத்தில் யாரும் இல்லை. அவர்கள் எல்லோரும் கிராமங்களுக்குப் போகிறார்கள். கிராமக் கர்ணங்கள் வேலையை அவர்கள் அங்கே போய்ப் பார்க்கிறார்கள். இவர்களுக்கு அந்த வேலை என்ன தெரியும்? கிராமதிகாரி வேலை என்பது வேறு, ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வேலை என்பது வேறு. இப்போது கிராமத்திலும் வேலை நடக்கவில்லை. அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரமும் ஸ்தம்பித்த நிலையில் இருக்கிறது என்ற குற்றச்சாட்டை வைக்க விரும்புகிறேன். இதற்கு மாற்று வழி என்ன என்று தெரியாமல், என்ன ரியாக்ஷன் ஏற்படும் என்று எண்ணிப் பார்க்காமல் அவசரக் கோலமாக எடுத்த முடிவு விசித்திரமாக, வேதனைக்குரியதாய் காட்சி அளிக்கிறது.

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 ஜனவரி 30

மதுவிலக்கு சம்பந்தமாக உங்களுடைய கருத்துக்களை மனம் திறந்து சொல்லுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த திருமதி யசோதா பேசுகிற நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள். சட்டமன்றத்தில் நீங்கள் கடந்த காலத்தில் கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தீர்கள். மது குடித்தால் ஆறு மாதம் தண்டனை, அதிகாரிகள் குடித்தால் ஒரு வருஷம், இரண்டு வருஷம், இரண்டாயிரம் ரூபாய் அபராதம் என்று கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அன்றைக்கே நாங்கள் அதை எதிர்த்தோம். அது சாதாரண மக்கள் வாழ்வைப் பறிக்கும். அவ்வளவு கடுமையான சட்டத்தைக் கொண்டு வரவேண்டாம் என்று சொன்னோம். நீங்கள், எங்களுடைய முடிவை நிறைவேற்றியே தீருவோம் என்றீர்கள். மதுவிலக்கில் இன்றைக்கு ஏன் இந்தத் தடுமாற்றம் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இடையிலே உங்களால் அதை அமல்படுத்த முடிந்ததா?

[பிற்பகல் 12-10]

கிராமங்களிலே இருக்கக்கூடிய சாதாரண போலீஸ்காரர் பிடிக்கக் கூடாது, யார் குடித்தாலும், காய்ச்சினாலும் அவர் பிடிக்கக் கூடாது, ஆனால் குறிப்பிட்ட போலீஸ் வந்துதான் பிடிக்கவேண்டுமென்று உத்திரவு போட்டீர்கள். கூட்டணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் பேசியபோது போலீஸ் ஸ்டேஷனிலே மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் வசூல் செய்யப்படுகிறது லஞ்சமாக என்று சொன்னால் மறுக்கமுடியாது என்று சொன்னார்கள். நீங்கள் பதக்கம் கொடுக்கிறீர்களே, அந்தப் பதக்கத்தை-அதற்காக. தனிப்பிரிவு வைத்துக் கண்டுபிடித்து—எந்த போலீஸ் ஸ்டேஷனிலே மது குற்றத்திற்காக லஞ்சம் வாங்காமல் இருக்கிறார்களோ அதற்கு பரிசை கொடுங்கள், அதன் மூலமாக எந்த போலீஸ் ஸ்டேஷனிலே லஞ்சம் இல்லாமல் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.

மதுவிலக்கைப் பொறுத்தவரையில் எங்களுடைய கொள்கை மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்பது தான் (குறுக்கீடு) உங்களால் முடியாதா? இன்றைக்கு பெற்ற தகப்பனையே சொன்னிருக்கிறான் ஒரு மகன். அந்த வாலிபர் [illegible] செய்து குடும்பத்தை காப்பாற்றி வந்தார் [illegible] வேலை முடிந்து வீட்டுக்கு வந்த அவர் திரவு [illegible] அரிசி காய்கறி வாங்கி வருவதற்காக தகப்பனிடம் பணம் கொடுத்து அனுப்பினார். அந்தப் பணத்தைத் தகப்பனிடம் பணம் தகப்பன் போதை தலைக்கேற குடித்துவிட்டு அவரது எதுவும் வாங்காமல் திரும்பி வந்தார். [illegible] அடைந்த அந்த வாலிபர் தந்தையை அடித்துக் [illegible] (குறுக்கீடு) ஹைதராபாத்திலே நடந்திருக்கிறது, [illegible] கிறுடைய அபாயத்தைச் சொல்கிறேன். அது ஹைதராபாத்தாக

[1981 ஜனவரி 30

[திரு. நா. சுந்தரராஜ்]

திருந்தாலும்சரி, இந்தியாவிலே எந்த இடமாக இருந்தாலும்சரி, மதுவிலக்கை ரத்து செய்தால் அது மக்களை பாழாக்கிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு உங்களுடைய மனத்தை திறந்து கருத்துக்களைச் சொல்லுங்கள் என்று சொல்லி இருக்கிறீர்கள். (குறுக்கீடு).

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : பேசவிடாமல் செய்தால் நாங்களும் அவர்களைப் பேசவிட மாட்டோம்.

மாண்புமுகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி உட்கார வேண்டும். மது என்றாலே எல்லோருக்கும் மயக்கம் வந்தால் என்ன ஆகும் ?

திரு. நா. சுந்தரராஜ் : மதுவிலக்கை தீவிரமாக அமுல் நடத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை, லட்சியம் எல்லாம். உங்களைப் பொறுத்தவரையிலே எங்களுக்கு ஏற்படுகிற சந்தேகம் என்னவென்றால் சில மாதங்களுக்கு முன்புகூட அல்ல, சில வாரங்களுக்கு முன்னாலே தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மதுவிலக்கு சம்பந்தமாக மறுபரிசீலனை செய்ய இருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே தான் அது ஆளுநர் உரையிலே சேர்க்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறோம். மதுவிலக்கு ரத்து செய்வதற்கு முன்னோடியாக என்ன வந்து இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள். மதுவிலக்கை நீக்க வேண்டும் என்றால் உங்களுடைய கட்சியிலே அதற்காக தீர்மானம் போட்டு ரத்து செய்யுங்கள், ஆட்சேபணையில்லை. ஆனால் எங்களை ஏன் கேட்கவேண்டும். நீங்கள் எங்களுடைய கருத்துக்களைக் கேட்டால் தமிழ்நாட்டிலே மதுவிலக்கு அமுல் படுத்தப்பட்டாக வேண்டும். அதுதான் எங்களுடைய கொள்கை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர்ப் பிரச்சினை. இதில் ஏதோ அரசியல் ரீதியாக அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணத்தினால் 459 கோடி ரூபாய் செலவில் கட்டளைக் கால்வாய் மூலமாக தண்ணீரை சென்னைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற திட்டம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசுகிற போதுகூட ஒரு நாளைக் ஒரு லட்சம் பேர்களுக்கு வேலை கொடுத்தால் 5 ஆண்டு காலத்திலே 8 கோடி பேர்களுக்கு இதன் மூலமாக வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள். வேலை கொடுப்பதற்கு வேறு வழிகள் இருக்கின்றன. 459 கோடி ரூபாய் செலவிடவேண்டுமென்று சொன்னால் இந்தத் திட்டத்தை 5 ஆண்டுகளிலே முடிக்கிற நேரத்திலே மொத்தச் செலவு ஆயிரம் கோடி ரூபாய் ஆகு தமிழ்நாட்டிலே [illegible] ஆயிரம் கோடிக்கு வரவில்லை [illegible] இருக்கிறபோது ஒரே ஒரு திட்டத்திற்காக மட்டும் 1000 கோடி ரூபாய் செலவழித்தால் என்ன நிலைமைகள் ஏற்படும் என்பதைப் [illegible] ஏன் வீராணம் திட்டத்திலே என்ன குறை ? 1976 ஆம் ஆண்டிலே எங்கள்

[திரு. நா. சுந்தரராஜ்]

கமிட்டு போடப்பட்டு, அதிலே பொறியாளர்கள் இருந்தார்கள். அவர்கள் இந்த திட்டம் சாத்தியமான திட்டம் சொல்லியிருக்கிறார்களே, ஏன் அதைச் செயல்படுத்தவில்லை. அதை எடுத்துக் கொண்டால் இன்னும் 20, 30 கோடி தானே ஆகும். நான் அங்கே பொறியாளர்களை விசாரித்த நேரத்திலே அவர்கள் சரியாக இருக்கிறது என்று சொன்னார்கள். சரி, உங்களுக்கு அந்தத் திட்டம் தான் வேண்டாம். கிருஷ்ணா நதியிலிருந்து கொண்டு வருவதற்கான திட்டத்தையாவது செயல்படுத்தக் கூடாதா? இங்கே கீழே, காவிரியிலிருந்து, கால்வாயிலிருந்து அந்தத் தண்ணீரைக் கொண்டு வரும்நேரத்தில் அட்டளைக் அது 'ஒப்பன் கேனல்' என்று சொல்லுகிறீர்கள். எத்தனை இலட்சம் டி.எம்.சி. தண்ணீர் வீணாகப் போகும்? எத்தனை இலட்சம் டி.எம்.சி. தண்ணீரை மண உறிஞ்சும்? எத்தனை இலட்சம் டி.எம்.சி. தண்ணீரை விவசாயிகள் கிணறு வெட்டுவதன் மூலமும், பம்புசெட்டுகளின் மூலமாகவும் எடுத்துக் கொள்வார்கள்? உங்களுக்கு எவ்வளவு தண்ணீர் வரும்? இதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாதா? இன்னும் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது காவிரி தண்ணீர் பிரச்னையில் கர்நாடக அரசு இருக்கின்ற தண்ணீரை, இப்பொழுது வருகின்ற தண்ணீரைக் கொடுத்தாலே போதும் என்ற நிலைமைதான் இருக்கிறது. ஆகவே இருக்கின்ற தண்ணீரை நாம் எடுத்துக் கொண்டு அதன்மூலம் இரண்டரை இலட்சம் ஏக்கர்களுக்குப் பாசனம் கிடைக்காமல் வரண்டு போகும் நிலையை ஏன் ஏற்படுத்தவேண்டும்? அதற்காக ஏன் முயற்சி செய்ய வேண்டும் ஆகவேதான் கேட்க விரும்புகிறேன், இந்தத் திட்டத்தை அரசியல்ரீதியாக, காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, ஏதோ ஆத்திரத்தின் காரணமாக நீங்கள் செயல்படுத்த நினைக்கிறீர்கள். இதை நீங்கள் மறுபரிசீலனை செய்யுங்கள் சாத்தியக்கூறான திட்டத்தை உருவாக்குவதற்கான வழிவகை செய்யுங்கள் என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், சென்ற கூட்டத் தொடரிலே இந்த அவையிலேயே சில உரைகள், சில வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்டன அந்த வாக்குறுதியின் அடிப்படையிலே இன்றைக்கு வரையில் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை இந்த இடைப்பட்ட காலத்தில் ஏன் இந்தத் தடுமாற்றம்? உங்கள் கொள்கையிலே ஏற்பட்ட கோளாறு என்ன? ஏன் வேகமாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை? ஆசிரியர்கள் ஆயிரக்கணக்கில் கைதாகியிருக்கிறார்கள்; மாணவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். ஆகவே, இதையெல்லாம் தீர்ப்பதற்கு, முதலமைச்சரவர்கள் மேலவையிலே சொன்னதைப்போல, அங்கே அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்கிறார்கள், இன்னும் சொல்கிறார்கள். அந்த யூனிவர்சிட்டியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் வைக்கிறார்கள், ஆகவே, இவைகளையெல்லாம், சம்பந்தப்பட்ட ஆசிரியர்களையும், மாணவர்களையும் கலந்து கொண்டு, விரிவான, விரைவான நடவடிக்கை எடுத்தால்

[திரு. நா. சுந்தரராஜ்]

மாணவர்களின் படிப்பும் பாழாகாமல் இருக்கும், ஆசிரியர்களும் மீண்டும் பணிக்குச் செல்ல முடியும்; உங்களுக்கும், உங்கள் காவல்துறைக்கும் நிம்மதியாக இருக்கும். ஆகவே, இந்தக் காரியங்களைச் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்றத்திலே, சென்ற கூட்டத் தொடரிலே ஒரு பிரச்னையை எழுப்பினேன். மதுரையிலே இருக்கக்கூடிய துணை இயக்குநர், தென் மண்டலம், தீ அணைப்புத் துறை, அந்தத் தீயணைப்பு நிலையம் சம்பந்தமாக, அங்கே தவறுகள் நடக்கின்றன, ஊழல்கள் நடக்கின்றன என்று நான் சொன்னேன், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? அந்த நபர், அங்கே யார் யார் அவர்களுக்கு எதிராகச் சாட்சி சொன்னார்களோ அவர்களை அடித்திருக்கிறார். அவர் கூட இங்கே இருக்கக்கூடிய டைரக்டருக்கு மனு கொடுத்திருக்கிறார். அதுமட்டுமல்ல, அவர்களுடைய பள்ளியையும் மூடி விட்டார்கள். மோசடியாக, தவறாக நடத்தப்பட்ட அந்தப் பள்ளி இன்றையதினம் மூடப்பட்டது. ஆனால் அந்தப் பள்ளியிலேயிருந்து வெளியே வந்து, அங்கே ஃபயர்மென்னாகப் பணியாற்றிய சுமார் 62 பணியாளர்களிலே 15 பேர் உயரம் குறைவு என்ற காரணத்தினால் இன்றைக்கு இந்த அரசாங்கத்திற்கு ரேட்டிபிகேஷனுக்கு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அங்கே தவறு, மோசடி, பணம் ஊழல் நடந்திருப்பது என்பது உண்மை. ஆனால் அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதைப்போல, புதுக்கோட்டையில் நகர வங்கி ஒன்று செயல்பட்டது: 75 ஆண்டுக்காலமாக செயல்பட்டு வந்தது. ஆனால் திடீரென்று ஒரு மாதத்திற்கு முன்பாக அந்த நகர வங்கியைக் கலைத்திருக்கிறார்கள். என்ன காரணம்? எந்தக் காரணமுமே இல்லை. ஆனால் அந்த வங்கி எந்தவிதமான பணத்தையும் அரசாங்கத்திடம் பெறவில்லை; அல்லது கூட்டுறவு ஸ்தாபனத்திடமிருந்து பெறவில்லை: மக்களிடமிருந்து பெற்று 75 ஆண்டுக் காலமாக ஒழுங்காகச் செயல்பட்டு வந்த ஒரு நகர வங்கியை அத்தாரிட்டேரியன் மூலமாக, உங்கள் அதிகாரத்தின் மூலமாகக் கலைத்திருக்கிறீர்கள். இது போன்ற செயல்களை நீங்கள் செய்யலாமா? அதைத்தான் நான் இங்கே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நெய்வேலி இரண்டாவது சுரங்க வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த இரண்டாவது சுரங்க வேலையை ஆரம்பித்தபொழுது, அதைச் சுற்றியுள்ள பகுதியிலே, அங்கே ஏழை விவசாயிகள் வெளியேற்றப்பட்டு அக்கிரமம் செய்யப்பட்டிருகிறது. ஆனால் ஒரு சட்டம், ஒரு விதி அல்லது உங்களுக்குள்ளே ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலே அங்கே ஒரு

[திரு. நா. சுந்தரராஜ்]

வீட்டிற்கு—ஒரு குடும்பத்திற்கு ஒருவரை அதிலே வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னிலையிலேயும், ஆட்சித் தலைவர் முன்னிலையிலேயும் அங்கே பேச்சு வார்த்தை நடைபெற்று ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் எத்தனைபேர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்? பலபேர் எடுக்கப்படவில்லை. சுமார் 140 பேர்கள்தான் எடுக்கப்பட்டிருக்கிறார்கள், மீதம் உள்ளவர்களுக்கெல்லாம் இன்னும் வேலை கிடைக்கவில்லை. அரசாங்கம் உடனடியாக இந்த நிறுவனத்துடனும், மாவட்ட ஆட்சித் தலைவருடனும் பேசி அங்கேயுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சேலம் மாவட்டத்தில் எங்களுடைய ராஜாம்பாள் வையாபுரி அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்த உலிபுரம் என்ற ஊரில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஒரு நிலம் சம்பந்தமான விவகாரம். அந்த விவகாரத்திலே என்ன நடைபெற்றிருக்கிறது? அங்கே கிட்டத்தட்ட, 25-1-81, சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற உலிபுரம் என்ற கிராமத்தில் தம்பம்பட்டி போலீஸ், அப்பாவி மக்களை, விவசாயம் சம்பந்தமாக, சிவில் மேட்டர் சம்பந்தமாக மக்களை அடித்து சம்பந்தமாக, காவல்துறைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அந்த ஊர் அங்கேயுள்ள சப்-ஜெயிலில் போட்டிருக்கிறார்கள். அவர்களை அடித்தது மட்டுமல்ல, அந்த சப்-ஜெயிலிலே அவர்கள் அவர்களுடைய உறவினர்கள் பார்க்க வந்தால் இருக்கும்நேரத்தில் முன்னாலேயே அந்தப் போலீஸ், சப்-ஜெயிலில் இருப்பவர்களை யாராவது அவர்களைப் அடித்திருக்கிறார்கள். அவர்கள் வெளியே போனாலும்—கழிப்பறைக்குப் போனாலும் அடித்திருக்கிறார்கள். சாப்பிடும்நேரத்திலும் அடித்திருக்கிறார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வது எல்லாம் உடனடியாக அந்த நபர்களை—யார் யார் சிறையிலே இருக்கிறார்களோ— 18 பேர் என்று நினைக்கிறேன், அந்த 18 பேர்களையும் மருத்துவ விசாரணைக்கு அனுப்புங்கள்,

[பிற்பகல் 12-20]

எந்த அளவிற்குக் கொடுமையான செயல்கள் அங்கே போலீஸ் துறையின் மூலமாக நடைபெற்றிருக்கின்றன என்பதற்கு சாட்சி பங்களாக அவர்கள் இருக்கிறார்கள். அந்த அளவிற்கு அங்கே இன்றைக்கு இந்த நிமிடம் வரையில் நடந்து கொண்டிருக்கிறது. போலீசார் அங்கே சப்-ஜெயிலிலே இருக்கிறவர்களை அடித்துக் காண்டிருக்கிறார்கள். ஆக, இதையெல்லாம் நடக்கவிடலாமா

[திரு. நா. சுந்தரராஜ்]

இங்கே பக்கத்திலே திருவான்மையூர். அந்த திருவான்மையூருக்கும் அங்கே பக்கத்திலே இருக்கிற குப்பத்திற்கும் தகராறு. தகராறு இருக்கிறதென்றால் என்ன செய்திருக்க வேண்டும்? அந்தக் காவல் துறை அதிகாரி, சம்பந்தப்பட்ட இரண்டு நபர்களையும்' அல்லது இரண்டு கோஷ்டிகளையும் அழைத்து, அங்கே சமாதானக் குழு அமைத்து, அதற்குப் பிறகு அங்கே அமைதியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் என்ன செய்தார்கள்? இன்றைக்கு வரையிலே அங்கே போலிஸ் துறையைச் சேர்ந்தவர்கள் அந்தக் குப்பத்திற்குப் போய் வீடுகளை உடைத்து, நொறுக்கி, அங்குள்ள பண்ட பாத்திரங்களை உடைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. சாதாரண ரேடியோக்கள் எல்லாம் உடைக்கப்பட்டிருக்கின்றன. அலமாரிகள் உடைக்கப்பட்டிருக்கின்றன, வீடுகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கும் ஆண்மக்கள் அந்தக் குடும்பங்களோடு சேர்ந்திருக்க முடியாத நிலையிலே, வீடுகளுக்குத் திரும்பிப் போக முடியாத அளவிலே, ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு பெண்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். ஆனால், அன்றாடம் போலிசார் அங்கே சென்று அந்தப் பெண்களை மிரட்டுகிறார்கள். இன்றைக்கும் செய்து வருகிறார்கள். ஆக, இதையெல்லாம் காவல் துறையினர் செய்யலாமா? இதையெல்லாம் நீங்கள் பார்க்கக் கூடாதா? என்று நான் கேட்க விரும்புகிறேன்,

கன்னியாகுமரி மாவட்டத்திலே குலசேகரம் என்ற ஊரிலே இருக்கிற காவல் நிலையத்திலே, எங்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அரிசனத் தோழர் ராஜு என்பவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார், போலிஸ் நிலையத்திற்குள்ளே. அதற்காக என்ன விசாரணை? என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது அரசு? அதைத் தெரிவிக்க வேண்டாமா? அதையெல்லாம் தெரிவித்தாக வேண்டும். காரணம், அங்கேயிருக்கக்கூடிய காவல் துறையைச் சேர்ந்தவர் இன்றைக்கு அரசாங்கம் ஏதோ அவர்களுக்குப் புதிய சலுகை அளித்திருப்பதன் காரணமாக, அவர்கள் வேகமாக, நேர்மையாகச் செயல்படுகின்றார்கள் என்று உங்களுடைய ஆளுநர் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆட்களைக் கொல்வதும் அடிப்பதும் தேவையா? ஆட்களைக் கொல்வது, துப்பாக்கியால் சுடுவது தான் உங்களுடைய திறமையா? அது திறமை இல்லை. நீங்கள் ஆக்கபூர்வமான முறையிலே, சட்டம், ஒழுங்கை காவல் துறை மூலம் பாதுகாக்கவேண்டும். ஆனால், அப்படிச் செய்வதற்குப் பதிலாக, நீங்களே தடிகொண்டு அடித்தால், நீங்களே, அந்தக் காரியங்களைச் செய்வீர்களானால், மக்கள் எப்படி நம்புவார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு மிக முக்கியமான இன்னொரு பிரச்னை, எரிசாராயப் பிரச்னை. தமிழ்நாட்டிலே எரிந்து கொண்டிருக்கிற முக்கியமான பிரச்னை. எல்லாத் தரப்பிலிருந்தும் பேசப்பட்டிருக்கிறது. கேரளாவினுடைய முதலமைச்சர் சொல்லியிருக்கின்றார், இங்கே ஏதோ காங்கிரஸ் கட்சியினுடைய எம்.எல்.ஏ.

[திரு. நா. சுந்தரராஜ்]

வும் திராவிட முன்னேற்றக்கழகமும் சேர்ந்துதான் அந்த * * செய்திருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அவர் வீட்டிலே நடைபெற்ற சம்பவங்களுக்கு, அவர் வீட்டிலே, அவருடைய ஆட்சியிலே நடைபெற்றஅ ந்த * * இங்கே அடுத்த மாநிலத்தைச் சேர்ந்த எங்கள் மீது கைகாட்டுவது அவருடைய பொறுப்புக்கு * * இல்லையென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கேரளத்திலே நடைபெறுகிற ஆட்சியைப் பற்றி, முதலமைச்சரைப் பற்றி பேசுவதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். அதுபற்றிய விசாரணை அங்கே நடந்து கொண்டிருக்கிறது. அதற்குத் தமிழ்நாடு அரசு உதவி செய்து கொண்டிருக்கிறது. அந்த விசாரணையிலே இப்பொழுது சிலபேர்கைது செய்யப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அதனுடைய முழு உண்மை தெரிந்ததற்குப் பிறகு, அதிலே நடந்திருக்கக்கூடிய விஷயங்கள் தெரியவரும். ஆகவே அதற்கிடையிலே அங்கே நடைபெறுவது * * என்று அவர் சொல்வது காங்கிரஸ் கட்சி இந்தியா பூராவும் செய்து வரக்கூடிய * * நாடு அறிந்த * * உலகப அறிந்த * *, அதை விட்டுவிட்டு, கேரள மாநிலத்திலே விசாரணை நடத்தி, கைது செய்து கொண்டிருக்கிறார்கள்,

(கூச்சல்—குழப்பம்)

THIRU K.S.G. HAJA SHAREEF: Mr' Speaker, Sir, as a very responsible Chief Minister of Kerala, it is absolutelyy wrong on his part to say that one of the Congress I Member of thif House is also involved. It is highly derogatory and the Chies Minister must withdraw that particular statement. And I am surprised his colleague belonging to that party is making an objectionable reference for the remarks made by my party Member.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே- கேரள முதலமைச்சர் கூறிய கூற்றினாலே காங்கிரஸ் கட்சி கட்சியினுடைய நண்பர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் சட்ட ரீதியாக கேரள முதலமைச்ருக்கு எதிராக கோர்ட்டுகளில் என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதைச் செய்ய வேண்டியது தான் அவர்களுடைய பொறுப்பே தவிர, தமிழ்நாடு சட்ட சபையிலே வந்து கேரள மாநில முதலமைச்சர் வாபஸ் வாங்க வாங்கவேண்டுமென்று சொல்வது எப்படி பொருத்தமாக இருக்கும் என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங் அகற்றப்பெற்றது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்திலே இருக்கிற எந்த ஒரு உறுப்பினரையும் போதுமான ஆதாரம் இல்லாமல் வேறு யாராக இருந்தாலும் குறை சொல்வார்களேயானால் தமிழ்நாடு சட்டமன்றத்தில் அந்த உறுப்பினர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக சொல்லப்படுகிறார்களோ அவர்கள் சார்பா கமறுப்பதற்கு, கண்டிப்பதற்கு, அது பொறுப்பற்ற பேச்சு என்று சொல்வதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு உரிமையுண்டு. அதற்கு மாறாக இந்தச் சட்டமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களைக் குறை சொல்லுகிற போது இந்தச் சட்டமன்றத்திலே எதிர்த்துப் பேசாமல் வேறு எங்கே போய்ப் பேசுவது என்று கேட்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரை தெரிந்தோ, தெரியாமலோ புரிந்தோ, புரியாமலோ யாரையோ பாதுகாப்பதற்காகவோ மாற்றி உரைப்பதற்காகவோ திசை திருப்புவதற்காகவோ கேரள மாநில முதலமைச்சர் சொல்லி இருப்பாரேயானால் அதையும் சேர்த்து இந்த மன்றத்திலே நான் கண்டிக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, இங்கே அவர்கள் தங்களுடைய கட்சியைப் பற்றிச் சொன்னால், அதை மறுப்பதற்குத் தான் அவர்களுக்கு உரிமை இருக்கிறதே தவிர, கேரள முதலமைச்சர் மீது * * என்று குற்றம் சாட்ட அவர்களுக்கு உரிமை இல்லை என்றுதான் நான் கூறினேன். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * என்று சொன்னால் அது தப்பு. * * என்று சொல்லவில்லை என்றால் பிரச்சினையில்லை.

டாக்டர் மு. கருணாநிதி. தலைவர் அவர்களே, திரு. சுந்தரராஜன் அவர்கள் பேசும்போது, கேரள முதலமைச்சர் இப்படி பேச என்ன தகுதி இருக்கிறது என்று தான் சொன்னாரேத் தவிர, கேரள முதலமைச்சர் மீது குற்றச்சாட்டைச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு வார்த்தைகளை நான் நீக்கவேண்டியிருக்கிறது. * * என்று சொன்னதையும், * * என்று சொன்னதையும் நீக்கவேண்டும். என்று சொன்னால், தப்பு. கலைஞர் அதை மாற்றி தகுதி என்று சொன்னார்கள். * * பேசலாமே தவிர என்று பேசக் கூடாது. ஆகவே தகுதி என்ற இரண்டு வார்த்தைகளையும் நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அப்படி என்றால் இந்தியா பூராவிலும் உள்ள இந்திரா காங்கிரஸ்காரர்கள் * * புரிகிறார்கள் என்று அவர் சொன்னது என்ன ஆயிற்று?

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சங்கரய்யா அவர்கள் பதில் சொல்கிறபோது இந்தியா பூராவிலும் உள்ள இந்திரா காங்கிரஸ்காரர்கள் ** புரிகிறார்கள் என்று சொன்னார்கள். அதுவும் நீக்கப்படுகிறது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம் ஏதோ கேரள அரசு எஜமானர்களைப் போலவும், தமிழக அரசு பக்கத்திலே இருக்கின்ற வேலைக்காரர்களைப் போலவும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரராஜ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இது இரண்டு மாநிலங்களுக்கு இடையே உள்ள ஒரு பிரச்னை. விவாதத்திலே சூடும் வரலாம், சுவையும் வரலாம். ஆனால் வம்பு வரக்கூடாது. அப்படி வராமல் இந்தப் பிரச்னை குறித்து பேசுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ். அந்த மாநிலம் எஜமானர்களைப போலவும், தமிழ்நாடு ஏதோ வேலைக்காரர்களைப் போலவும், அவர்கள் இங்கே வந்து இவர்களை மிரட்டி, இவர்கள் பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதைப்போல, இங்கே பத்திரிகை செய்திகள் வந்திருக்கின்றன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன். தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து தவறானது. அதை அவர் சரியான முறையில் வெளியிடவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். எந்த அரசும் குறுக்கிட்டுத் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்கிற அளவிலே தமிழக அரசு இல்லை. எந்த மாநிலமும் இந்த அரசை அச்சுறுத்தியோ, பயமுறுத்தியோ பணிய வைக்க முடியாது. யாருக்கும் பயந்து தமிழக அரசு இல்லை என்பதைத் தெளிவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: இன்றைக்கு எரி சாராயத் தொழிற்சாலைகள் 2, 3 தொழிற்சாலைகள், சீல் வைக்கப்பட்டிருக்கின்றது. அவைகளை சீல் வைத்தால் மட்டும் போதாது. அதற்குப் பின்னாலே கடந்த காலத்திலே என்னென்ன காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன என்பதைப் பற்றி எல்லாம் முழுமையாக விசாரணை செய்யவேண்டும். எத்தனை ஐ.பி.எஸ். அதிகாரிகள் அவர்கள் வீட்டு வாசல்களில் நின்றுக் கொண்டிருந்தனர் எத்தனை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அவர்கள் வீடுகளில் நின்றுக் கொண்டிருந்தனர் என்பதைப் பற்றி எல்லாம் விசாரித்தாக வேண்டும். அவர்கள் மூலமாகக் கொடுக்கப்பட்ட சலுகைகள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

எவ்வளவு, எத்தனை கோடி ரூபாய்கள் என்பதை எல்லாம் விசாரித்தாக வேண்டும். இது இரண்டு மாநிலங்களுக்கு இடையே நடக்கின்ற பிரச்சினையாகையால் சி.பி.ஐ. கொண்டு விசாரணை நடத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை விட வேண்டும். அதன் மூலமாக முழுமையான, வேகமான, விரைவான, நேர்மையான விசாரணையை நடத்தி இந்தக் குற்றவாளிகளை நீதிமன்றத்தின் முன்னே நிறுத்துவதற்கு வழி காண வேண்டும் என்று சொல்லி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

[பிற்பகல் 12-30]

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவையின் அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் விவாதத்தில் பேசி பதில் அளிப்பதற்கு நேரம் இல்லை. எனவே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் 2-2-1981 அன்று தொடரும். அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

நாளை 31-1-1981 அன்று ஏற்கனவே அறிவித்தபடி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது விவாதம் நடைபெறும். 2-2-1981 அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் முடிந்தபின், மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம் தொடர்ந்து, தேவையானால் அன்று பிற்பகலிலும் பேரவை கூடி மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம் தொடரும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

172. மேட்டுபாளையத்திலுள்ள அங்காடியைக் காரமடைக்கு மாற்றவதுப் பற்றிவீ வேளாண்மைத் துறையின் 29-12-1972 ஆம் தேதியிடப் பெற்ற II–1/148 1973 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வதுக் குறித்து, வேளாண்மைத் துறையின் 1-9-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1736 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23 1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப பெற்றது.]

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்

பேரவைமுன் வைக்கப் பெற்ற [illegible]டுகள்

[1981 ஜனவரி 30

173. பச்சை மிளகாயைப் பொறுத்த வரையில், தென் ஆற்க்காடு மாவட்டத்தை அறிக்கையிடப்பெற்ற பகுதியாக அறிவிப்பதுக் குறித்து, வேளாண்மைத் துறையின் 15-10-1980 ஆம் தேதியிடப்பெற்ற 2049 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23-1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

174. நிலக்கடலை, எள், பருத்தி, நெல், உளுந்து, பச்சைப் பருப்பு, கரும்பு, வெல்லம், தனியா ஆகிய இவற்றைப் பொறுத்த வரையில் மரக்காணம் அங்காடிப்பகுதி மற்றும் அங்காடியைச் சுற்றியுள்ள 16 கிலோ மீட்டர் பரப்புள்ள பகுதிகளை, அறிக்கையிடப்பெற்ற அங்காடிப்பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத்துறையின் 2-9-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1744 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

175. வாழைப்பழம், பழுக்காத பழங்கள், வாழைப்பழச் சுருள்கள் மற்றும் வாழைப்பழ மாவு போன்ற வாழை உற்பத்தி பொருள்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தை அறிக்கையிடப் பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 5-11-1980 ஆம் தேதியிடப் பெற்ற 2176 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23-1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

176. கோயம்புத்தூர் 3-ல் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை. (ஆங்கிலத்தில்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

177. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1978–79 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் (ஆங்கிலத்தில்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனையத் தாள்கள் எதுவுமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1981 ஜனவரி 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

நாம் இப்பணியைச் செய்து முடிப்பது மிகவும் கடினமான செயல் என்று எண்ணி மனச் சோர்வு அடைதல் கூடாது. கடுமையாக உழைத்து அச் செயலைச் செய்து முடிக்க முயலுவோமானால் அந்த முயற்சியின் பயனாகப் பெருமை தானே வந்து அடையும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பிற்பட்டோர் நலனுக்கான சிறப்புத் திட்டம்.

* வினா எண் 121 திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பிற்பட்டோர் நலனுக்காகச் சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தீட்டி அரசு செயல்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வரைவு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பிற்பட்டோர் மற்றும் குற்ற மரபினர் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் மேம்பாட்டிற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளது. பின் தங்கிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு வாரியம் ஒன்றினை அண்மையில் அரசு ஏற்படுத்தியுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த பிற்பட்டோர் நலனைச் சீரமைப்பதற்காக ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று தீட்டப்படுவதற்கான திட்டத்தை அமைச்சரவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார்கள். அதனுடைய பணிகளைப்பற்றியும் ஓரளவு எடுத்துச்சொன்னார்கள். அதனுடைய முழுப் பணியாக என்னென்ன அற்ற இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்

பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

[1981 ஜனவரி 30

173. பச்சை மிளகாயைப் பொறுத்த வரையில், தென் ஆற்க்காடு மாவட்டத்தை அறிக்கையிடப்பெற்ற பகுதியாக அறிவிப்பதுக் குறித்து, வேளாண்மைத் துறையின் 15-10-1980 ஆம் தேதியிடப்பெற்ற 2049 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23-1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

174. நிலக்கடலை, எள், பருத்தி, நெல், உளுந்து, பச்சைப் பருப்பு, கரும்பு, வெல்லம், தனியா ஆகிய இவற்றைப் பொறுத்த வரையில் மரக்காணம் அங்காடிப்பகுதி மற்றும் அங்காடியைச் சுற்றியுள்ள 16 கிலோ மீட்டர் பரப்புள்ள பகுதிகளை, அறிக்கையிடப்பெற்ற அங்காடிப்பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத்துறையின் 2-9-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1744 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

175. வாழைப்பழம், பழுக்காத பழங்கள், வாழைப்பழச் சுருள்கள் மற்றும் வாழைப்பழ மாவு போன்ற வாழை உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தை அறிக்கையிடப் பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 5-11-1980 ஆம் தேதியிடப் பெற்ற 2176 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23-1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

176. கோயம்புத்தூர் 3-ல் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை. (ஆங்கிலத்தில்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

177. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் (ஆங்கிலத்தில்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனையத் தாள்கள் எதுவுமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1981 ஜனவரி 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

நாம் இப்பணியைச் செய்து முடிப்பது மிகவும் கடினமான செயல் என்று எண்ணி மனச் சோர்வு அடைதல் கூடாது. கடுமையாக உழைத்து அச் செயலைச் செய்து முடிக்க முயலுவோமானால் அந்த முயற்சியின் பயனாகப் பெருமை தானே வந்து அடையும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பிற்பட்டோர் நலனுக்கான சிறப்புத் திட்டம்.

* வினா எண். 121 திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பிற்பட்டோர் நலனுக்காகச் சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தீட்டி அரசு செயல்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வரைவு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பிற்பட்டோர் மற்றும் குற்ற மரபினர் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் மேம்பாட்டிற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளது. பின் தங்கிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு வாரியம் ஒன்றினை அண்மையில் அரசு ஏற்படுத்தியுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த பிற்பட்டோர் நலனைச் சீரமைப்பதற்காக ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று தீட்டப் படுவதற்கான திட்டத்தை அமைச்சரவர்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தார்கள். அதனுடைய பணிகளைப்பற்றியும் ஓரளவு எடுத்துச்சொன்னார்கள். அதனுடைய முழுப் பணியாக என்னென்ன அற்ற இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

[1981 ஜனவரி 31

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கு ஒப்பிய மூலதனத்துடன் இந்த வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் எந்த எந்தப் பணிகளை எப்படி மேற்கொள்ளலாம் என்பதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது முழுமை பெற்ற பிறகு இறுதி முடிவு அறிவிக்கப்படும்.

திரு செ சிவசாமி: தலைவரவர்களே, பிற்பட்டோர் நலனுக்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு கேட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதில் குற்றமரபினர் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்குத் தனியாக ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இரண்டும் ஒன்றாக இருக்கிறதா அல்லது தனித்தனியாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இருவருக்கும் சேர்த்துத் தான் இருக்கிறது. 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 20 கோடி ரூபாய்க்குத் தனியாகத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது. இந்த வாரியத்திற்கு 10 கோடி ரூபாய் ஒப்பிய மூலதனம் தனியாக ஒதுக்கி, ஆரம்பித்துள்ளது. அது இந்த 20 கோடி ரூபாயில் அடங்காது. குற்ற பரம்பரையினர் அதிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர், பிற்பட்டோர்-இருவருக்கும் சேர்த்து 20 கோடி ரூபாய்க்கான திட்டம் தனியாக வகுக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு அதனுடைய வகைகள் எல்லாம் வகுக்கப்படும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: தலைவரவர்களே, பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு என்னென்ன தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன? அப்படி நிர்ணயிக்கப்பட்ட தகுதியுடையவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முன்பே விடையளிக்கும்போது விளக்கமாகக் கூறியிருக்கிறேன். பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரைத் தலைவராகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. பிற்பட்டோர் என்று சொல்லும்போது வருப்பு அடிப்படையிலேயும், கல்வி அடிப்படையிலேயும், பொருளாதார அடிப்படையிலேயும் பார்க்கும்போது, இதாழில் போன்றவை அடிப்படையிலேயும் பிற்பட்டோராக இருந்து, சலுகைகள் அளித்தாலொழிய மிக மிகப் பிற்பட்டோர் என்ற நிலையில் இருந்தால், அப்படிப்பட்டவர்கள் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள். இப்போது பல சமூகத்தினர் பிற்பட்டோர் பட்டியலில் தங்களைச் சேர்க்க வேண்டுமென்று விண்ணப்பம் தந்திருக்கிறார்கள். அதுபற்றிக் குழுவினர் ஆராய்ந்து வருகின்றனர். 'சென்சஸ் ரிப்போர்ட்' வந்த பிறகுதான் அந்தப் பணி முற்றுப் பெறும் என்ற நிலை இருப்பதால் சென்சஸ் ரிப்போர்ட் எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்த பிறகுதான் யார், யாரை இணைத்துக்கொள்ளலாம், யார், யாரை இணைத்துக் கொள்ளக் கூடாது என்பதுபற்றி முடிவு செய்வார்கள்.

1981 ஜனவரி 31]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, பிற்பட்டோர் நலனுக்காகப் பணியாற்றக்கூடிய வாரியம் அமைக்கப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த வாரியத்தில் அதிகாரிகள் மட்டும் இடம் பெறுவார்களா, அல்லது அதிகாரப் பற்றற்ற இதர உறுப்பினர்களும் இடம் பெறுவார்களா? அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்கள் என்று சொல்லும்போது எல்லாக் கட்சியினரையும் இணைத்து, அந்த வாரியம் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வாரியம் அமைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. மேற்கண்ட வாரியங்கள் செயல்படுவது பற்றியும், அதனுடைய நடவடிக்கைகள் பற்றியும் பிற்பட்டோர் நல இயக்குநர் அவர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட வாரியத்தில் அதிகாரிகளும், அதிகாரச் சார்பற்றவர்களும் இடம் பெறுவார்கள். அதனுடைய முழு விவரமும் வந்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தினையும் உள்ளத்திலே கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு என். எஸ் வி. சித்தன்: தலைவரவர்களே, பிற்பட்டோர் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட இருக்கின்ற வாரியத்திலே டிநோட்டிபைட் கிளாஸஸ் போன்று விடுபட்ட இனத்தையும் சேர்த்து அவர்களுடைய நலனுக்காகவும் அவ்வாரியம் செயல்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி விடுபட்ட இனங்கள் எவை? அவைகளிலே இதுவரை சேர்க்கப்பட்ட இனங்கள் எவை? மேற்கொண்டும் சேர்க்க வேண்டும் என்று ஏதேனும் விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த இனங்களிலுள்ள பட்டியல் தற்போது இல்லை. ஆனால் அப்படி விடப்பட்ட டிநோட்டிபைட் கிளாஸஸ் அதாவது குற்ற பரம்பரையினர் போன்ற மற்றவர்களையும் அதிலே கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் அவர்களை மிகவும் பிற்பட்டோர் என்று கருதி மிகவும் பிற்பட்டோருக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகிறதோ அவைகளை எல்லாம் இவர்களுக்கும் சேர்த்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு ராமணி: தலைவரவர்களே, அரசாங்கம் பிற்பட்டோருக்குப் புதிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக வாரியம் அமைப்பது என்பது வரவேற்கத்தக்கது. ஆனால் இந்த பிற்பட்டவர்களுக்கு எல்லாவிதமான காரியங்களையும் செய்வதற்கு அரசியல் சட்ட பூர்வமான ஒரு கடமை மத்திய அரசுக்கு இருக்கின்றது. ஆகவே இந்த வாரியத்திலே மத்திய சர்க்காரை ஏன் போடுவார்களா? அவர்களுடைய உதவியை எந்த அளவுக்கு இந்த அரசு எதிர்பார்க்கின்றது?

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்

பேரவைமுன் வைக்கப் பெற்ற [illegible]டுகள்

[1981 ஜனவரி 30

173. பச்சை மிளகாயைப் பொறுத்த வரையில், தென் ஆற்க்காடு மாவட்டத்தை அறிக்கையிடப்பெற்ற பகுதியாக அறிவிப்பதுக் குறித்து, வேளாண்மைத் துறையின் 15-10-1980 ஆம் தேதியிடப்பெற்ற 2049 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23-1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

174. நிலக்கடலை, எள், பருத்தி, நெல், உளுந்து, பச்சைப் பருப்பு, கரும்பு, வெல்லம், தனியா ஆகிய இவற்றைப் பொறுத்த வரையில் மரக்காணம் அங்காடிப்பகுதி மற்றும் அங்காடியைச் சுற்றியுள்ள 16 கிலோ மீட்டர் பரப்புள்ள பகுதிகளை, அறிக்கையிடப்பெற்ற அங்காடிப்பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத்துறையின் 2-9-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1744 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

175. வாழைப்பழம், பழுக்காத பழங்கள், வாழைப்பழச் சுருள்கள் மற்றும் வாழைப்பழ மாவு போன்ற வாழை உற்பத்தி பொருள்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தை அறிக்கையிடப் பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 5-11-1980 ஆம் தேதியிடப் பெற்ற 2176 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23-1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

176. கோயம்புத்தூர் 3-ல் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை. (ஆங்கிலத்தில்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

177. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தி[illegible] 1978-79 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் (ஆங்கிலத்[illegible] [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழ[illegible] சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்[illegible] பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனையத் தாள்கள் எதுவுமில்லை.

1981 ஜனவரி 31]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) உண்டு.

(ஆ) திட்டத்திற்கு மாநில அரசு ஒப்புதல் அளித்து, அதற்கான வரைபடங்களும், மதிப்பீடுகளும் தற்போது மீன் துறையின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டத்தை "வறட்சிப் பகுதி மேம்பாடுத் திட்டத்தின் கீழ்" செயற்படுத்த நிதியுதவி அளிக்க மத்திய அரசு கொள்கை அளவில் இசைந்துள்ளது. மத்திய அரசின் முடிவான பதில் கிடைத்ததும் பண்ணை வேலைகள் துவங்கப்படும்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருவாடானை தாலூக்காவில் உள்ள காரங்காடுவில் இறால் வளர்ப்பதற்குரிய வாய்ப்புக்கள் நிறைய உண்டு. பொதுவாக அந்தப் பகுதியில் கடற்கரை ஓரத்தில் உள்ள இடங்களில் இவ்வாறு மீன் வளப்பதற்குரிய வாய்ப்புக்கள் நிறைய உண்டு. ஆகவே, அந்தப் பகுதியிலே மட்டுமல்ல, முள்ளிமுனை, மோர் பண்ணை, திருப்பாலைக்குடி, நம்புதாளை, கண்கொள்ளான் பட்டினம், சுந்தரபாண்டியன்பட்டிணம், புதுப்பட்டினம் போன்ற பகுதிகளிலேயும் மீன் வளப்பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மற்ற இடங்களைப் பற்றிய விவரம் என்னிடத்திலே இப்போது இல்லை. ஆகவே தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இப்போது குறிப்பிடப்படுகின்ற காரங்காடுவில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 3 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் இறால் மீன் வளர்க்க வேண்டுமென்று 1979-லே திட்டமிடப்பட்டு மத்திய அரசாங்கத்தின் உதவியும் கேட்கப்பட்டது. முதலிலே அவர்கள் மறுத்தார்கள், பிறகு மறுபடியும் இதனுடைய அவசியத்தை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு மத்திய அரசு இப்போது இணங்கியுள்ளது. ஆகவே தற்போது இந்தத் திட்டத்தின் விவரம் மத்திர அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய ஒப்புதல் வந்த பிறகு தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.10]

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப்பகுதியிலுள்ள மீனவர்களுக்கு முன் உரிமை அளித்து அதன்படி அந்த இடங்களைக் கொடுத்து, மீன் வளர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளையாவது அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 31

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதுவரையில் பிற்பட்டோர் நலனுக்காக மத்திய அரசினுடைய உதவி எதுவும் கிடைத்ததில்லை. மத்திய அரசினுடைய படி அவர்கள் இரண்டு பிரிவுதான் வைத்திருக்கிறார்கள், முற்பட்டோர் என்பது; மற்றொன்று தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் என்பது. ஆனால் நாம் 3 வகையிலே பிரிவுகளை வைத்திருக்கிறோம். அதாவது முற்பட்டோர், பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர் என்று மூன்று பிரிவுகளை வைத்திருக்கிறோம். ஆகவே இதற்கும் அவர்கள் உதவி செய்ய வேண்டும் என்று நாம் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். பிற்பட்டோர் என்பவர்கள் நம்முடைய மாநிலத்திலே மிகவும் அதிகமானபேர்கள் இருப்பதால், பல்வேறு வகையில் அவர்களுக்குச் சலுகைகள் ஓரளவுக்குக் கிடைக்கின்றது என்றாலும், அவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குரிய வசதி வாய்ப்புகளை மேலும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி மத்திய அரசின் உதவி கேட்டு வற்புறுத்தி வருகிறோம்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு தலைவரவர்களே, பிற்பட்டோர் வகுப்பினர் உள்ளவர்களுக்கு ஜாதி ஜாதியாக வேலை வாய்ப்பிலே பட்டியலில் அளிக்கப்படுமா? அப்படியானால் சிறுபான்மை முன்னுரிமை சேர்ந்த முஸ்லீம்களுக்கு அந்தப் பட்டியலில் எத்தனை வகுப்பைச் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சதவீதம் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தப் பட்டியல் பற்றிய முழு விவரம் என்னிடத்திலே இல்லை. 213 பிற்பட்ட வகுப்பினர் இப்போது பட்டியலிலே இடம் பெற்றிருக்கிறார்கள். பிற்பட்டவர்களுக்கு முன்பு வழங்கப்பட்ட 31 சதவீதம் என்பதை 50 சதவீதமாக அரசு உயர்த்தியுள்ளது. ஆகவே அந்த அடிப்படையிலேதான் தற்போது வேலைவாய்ப்பு, கல்வி ஆகியவற்றில் வாய்ப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காரங்காடுவில் இறால் வளர்ப்புப் பண்ணை

* வினா எண். 122 **திரு. ச. அங்குசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் திருவாடானை வட்டம், காரங்காடுவில் இறால் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

(ஆ) அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

1981 ஜனவரி 31]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) உண்டு.

(ஆ) திட்டத்திற்கு மாநில அரசு ஒப்புதல் அளித்து, அதற்கான வரைபடங்களும், மதிப்பீடுகளும் தற்போது மீன் துறையின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டத்தை "வறட்சிப் பகுதி மேம்பாடுத் திட்டத்தின் கீழ்" செயற்படுத்த நிதியுதவி அளிக்க மத்திய அரசு கொள்கை அளவில் இசைந்துள்ளது. மத்திய அரசின் முடிவான பதில் கிடைத்ததும் பண்ணை வேலைகள் துவங்கப்படும்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருவாடானை தாலூக்காவில் உள்ள காரங்காடுவில் இறால் வளர்ப்பதற்குரிய வாய்ப்புக்கள் நிறைய உண்டு. பொதுவாக அந்தப் பகுதியில் கடற்கரை ஓரத்தில் உள்ள இடங்களில் இவ்வாறு மீன் வளப்பதற்குரிய வாய்ப்புக்கள் நிறைய உண்டு. ஆகவே, அந்தப் பகுதியிலே மட்டுமல்ல, முள்ளிமுனை, மோர் பண்ணை, திருப்பாலைக்குடி, நம்புதாளை, கண்கொள்ளான் பட்டினம், சுந்தரபாண்டியன்பட்டிணம், புதுப்பட்டினம் போன்ற பகுதிகளிலேயும் மீன் வளப்பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மற்ற இடங்களைப் பற்றிய விவரம் என்னிடத்திலே இப்போது இல்லை. ஆகவே தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இப்போது குறிப்பிடப்படுகின்ற காரங்காடுவில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 3 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் இறால் மீன் வளர்க்க வேண்டுமென்று 1979-லே திட்ட மிடப்பட்டு மத்திய அரசாங்கத்தின் உதவியும் கேட்கப்பட்டது. முதலிலே அவர்கள் மறுத்தார்கள், பிறகு மறுபடியும் இதனுடைய அவசியத்தை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு மத்திய அரசு இப்போது இணங்கியுள்ளது. ஆகவே தற்போது இந்தத் திட்டத்தின் விவரம் மத்திர அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய ஒப்புதல் வந்த பிறகு தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.10]

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப்பகுதியிலுள்ள மீனவர்களுக்கு முன் உரிமை அளித்து அதன்படி அந்த இடங்களைக் கொடுத்து, மீன் வளர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளையாவது அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 31

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை என்றாலும் கூட, கூடுமானவரையில் பணி ஏற்றுத்தப்படும் போது, மீனவர் சமுதாயத்தினரைச் சேர்ந்தவர்களுக்கு முன் உரிமைகள் கொடுத்து அவைகள் வழங்கப்படவேண்டும் என்ற நோக்கத்திலேயே அரசு செயல்படுகிறது அல்லது மீனவ சமுதாயத்தினரால் இயக்கப்படுகிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவை போக வேண்டும் என்றும் எண்ணிக்கொண்டிருக்கிறோம். தற்போது அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களில் மீனவர்கள் அல்லாதவர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் நீக்கப்பட வேண்டும் என்றும், மீனவர்கள் மட்டுமே அதில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நடவடிக்கையும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் எடுக்கப்படுகின்றன.

அதிராம்பட்டினம் அருகில் கிடைத்த வலம்புரி சங்கு

*வினா எண். 123 **திரு. பெ. ச. திருவேங்கடம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1980 ஜூலை மாதத்தில் தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்திற்கருகில் மீன் பிடிக்கச் சென்ற போது மீனவரிடத்தில் "பட்டிவலம்புரிச் சங்கு" கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) தற்சமயம் அது எங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினத்திற்கு அருகே, "கழுமண்குடா" என்ற கிராமத்தைச் சேர்ந்த திரு. பாக்கியம் என்ற மீனவர் 15-7-80 அன்று நாட்டுப் படகில் மீன் பிடிக்கையில் "பட்டி" வகையைச் சேர்ந்த சிறிய அளவு வலம்புரிச் சங்கு ஒன்று கழுமண்குடா கிராமத்தின் தென் கிழக்குப் பகுதியில் 2½ பாகம் கடல் ஆழத்தில் சேதுபாவா சத்திரம் அருகில் கிடைத்தது. அந்த வலம்புரிச் சங்கினை அம்மீனவர் மீன்துறையினரிடம் ஒப்படைத்து உள்ளார். அவ்வலம்புரிச் சங்கின் நீளம் 82 மி.மீ., குறுக்களவு 48 மி.மீ., எடை 87 கிராம் (சதையுடன்).

(இ) சங்கு தற்போது சென்னை மீன்துறை இயக்குநர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

திரு. இல. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்கிற்கும், பட்டி வலம்புரிச் சங்கிற்கும் என்னென்ன வேறுபாடு? புனிதத் தன்மையிலா ஏதாவது முறையிலா என்பதை அரசு அறியுமா அல்லது வேறு விரும்புகிறேன்.

1981 ஜனவரி 31]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. ஆனால் இந்தச் சங்கு வழக்கமாகக் கிடைக்கும் வலம்புரிச் சங்கைவிட அளவில் சிறியதாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சாதாரண சங்கு எடுத்தால் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்றிருக்கிறதோ அதைப் போல் ஆயிரம் மடங்கு வலம்புரிச் சங்கிற்கு கொடுக்க வேண்டும் என்கிற விதி இருக்கிறது. இந்தச் சங்கிற்கு எவ்வளவு பணம் கொடுக்கப்படும் என்பது தெரியவில்லை. அதைப்பற்றி ஆராய்ந்து பார்த்து ஏதாவது ஒரு தொகை நிர்ணயிக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கிற்கு விலையாக எப்பொழுதும் கொடுக்கப்படுவதை விட பல மடங்கு அதிகமாகப் பணம் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சங்கிற்கு எவ்வளவு கொடுக்கப்போகிறீர்கள்? இதுபோன்ற சங்கு இதற்கு முன்னால் கிடைத்திருக்கிறதா? அவைகளுக்கு அரசு இதுவரையில் எவ்வளவு செலவு செய்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வலம்புரிச் சங்கிற்கென்று விதிக்கப்பெற்ற அளவில் இல்லாமல், அதைவிடச் சிறியதாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. என்றாலும் எவ்வளவு கொடுக்கலாம் என்பது பற்றி ஆராய்ந்து வருகிறார்கள் விரைவில் முடிவு எடுக்கப்பட்டு அந்த மீனவருக்குத் தரவேண்டிய தொகை தரப்படும். வேறு என்னென்ன வலம்புரிச் சங்குகள் எடுக்கப்பட்டன என்று கேட்டார்கள். விவரங்கள் விளக்கமாக இல்லையாதலால், தனிக்கேள்வி போட்டால், சேகரித்துத் தரப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டி வலம்புரிச் சங்கு என்பது புதிய வகையைச் சார்ந்ததாக இருப்பதினால், இதனை அனைவரும் கண்டு களிக்கும் வகையில் கண்காட்சி சாலையில் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கு தற்போது சென்னை மீன் துறை இயக்குநர் அலுவலகத்தில்தான் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் அங்கு சென்று, மீன் துறை இயக்குநர் அலுவலகத்தில் ஏதாவது பணிகள் இருந்தால் அதையும் முடித்துக்கொண்டு இந்தச் சங்கையும் பார்த்து விட்டு வரலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை அருகே உள்ள பால் குளிரூட்டும் நிலையம்

* வினா எண். 124 **திரு. ந. வேணுகோபால்:** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

[1981 ஜனவரி 31

திருவண்ணாமலைக்கு அருகே வேங்கிக்கால் கிராமத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்திலேயே ஒரு பால் பவுடர் தயாரிக்கும் பிரிவும் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலைக்கு அருகே வேங்கிக்கால் கிராமத்தில் பால் பவுடர் தயாரிக்கும திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வடஆற்காடு மாவட்டத்தில் அதிகப்படியான பால் உற்பத்தியாவதால், வடஆற்காடு மாவட்டத்தில் சத்துவாச்சேரி என்னும் இடத்தில் இத்தகைய பால் பவுடர் தயாரிக்கும் பிரிவை ஏற்படுத்த அரசு ஆலோசனை செய்ய முற்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலும் அதற்கு அருகிலே இருக்கிறசேலத்திலும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டிருப்பதால், இந்த முயற்சியில் இந்த அரசு ஆராயவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் பட்டு வளர்ப்புத் திட்டம்

* வினா எண். 125 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பரா—

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்க்கும் திட்டத்தைத் தீவிரப்படுத்தும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: ஆம். தீவிரப்படுத்தும் திட்டம் உள்ளது திருவில்லிப்புத்தூரில் "பட்டு வளர்ப்பு மாதிரி பண்ணை மற்றும் "பயிற்சி நிலையம் ஒன்றை நான்கு லட்சத்து தொண்ணூறு ஆயிரம் செலவில் இந்த ஆண்டு முடிவிற்குள் நிறுவ முயற்சிகள் எடுக்கப்படுள்ளன. இந்நிலையத்தில் விவசாயிகளுக்கு பட்டு வளர்த்தல் பற்றி பயிற்சி அளிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: வீட்டில் வைத்து வளர்க்கப்படும் புழுக்களுக்குத் தனியாக மின்சாரம் பயன்படுத்தப்படுவதில்லை. வீட்டில் உள்ள மின்விளக்கே போதுமானது. இதில் மின் கட்டணம் வசூலிப்பது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பட்டு வளர்ப்புத் திட்டம் பற்றிய கேள்வி.

1981 ஜனவரி 31]

திரு. இரா. தாமரைக்கனி: இந்த பட்டுவளர்ப்புத் தொழில் என்பது ஒரு குடிசைத்தொழில். சாதாரணமாக வீடுகளில் உபயோகிக்கப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 35 பைசா வசூலிக்கிறார்கள். ஆனால் இதற்கு வியாபார நோக்கோடு யூனிட்டுக்கு 75 பைசா வசூல் செய்கிறார்கள். ஆகவே குடிசைத் தொழில்களுக்கு மின்சாரத்திற்கு எவ்வளவு வசூல் செய்கிறோமோ அதேமாதிரி வசூல்செய்ய அரசு தனி ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்தக் கேள்வியைப் போடுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இந்த பட்டுப்பூச்சி வளர்க்கும் திட்டத்தின்கீழ் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலியை உத்தரவாதப்படுத்த அரசு முன் வருமா? இதுவரை அப்படி உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன்: பட்டுப்பூச்சி வளர்க்கும் திட்டத்தின் கீழ் பட்டுப்பூச்சி வளர்க்கப்பட்டு பட்டு தயாரிக்கப்படுகிறது. ஆனால் அந்தப் பட்டை கொள்முதல் செய்வதற்கு பெங்களூர் செல்லவேண்டிய நிலைதான் இருக்கிறது. தமிழகத்தில் பட்டு கொள்முதல் செய்யும் நிலையங்கள் ஏதாவது இருக்கிறதா? இல்லையென்றால் அப்படி ஒரு நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தனிக்கேள்வி போட்டால் அதற்கான தகவல் கொடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இந்த பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டத்தில் அரசு மிகத் தீவிரமாக நடவடிக்கைகள் எடுத்து வருவதாகச் சொல்கிறார்கள். சில இடங்களில் இந்த முசுக்கொட்டைச்செடி நட்டு ஐந்துமாதங்களாகியும்கூட, ஷெட் போடுவதற்கும் இதர சாமான்கள் வாங்கி வருவதற்கும் இலாகாவினர் கவனம் செலுத்தாமல் இருப்பது தெரியுமா? விரைவில் பட்டு விவசாயம் செய்ய முன் வந்துள்ள விவசாயிகளின் குறைகளைத் தீர்க்க அமைச்சரவர்கள் நடவடிக்கைஎடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக விவரங்கள் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு ஏ. சாகுல்ஹமீது: தென்காசியை அடுத்துள்ள குற்றாலத்தில் பட்டுப்பூச்சி உற்பத்தி நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அந்த நிலையத்தில் ஏறக்குறைய பத்தாண்டுகளாக பணியாற்றுகிற பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் அன்றாடக் கூலிகள் கணக்கில் சேர்த்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களா?

[1981 ஜனவரி 31

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளைக் கவனத்தில் கொண்டு ஆவன செய்யப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: இந்தப் பட்டுப்பூச்சி வளர்க்கும் திட்டத்தின்கீழ் புதிதாக பட்டுப்பூச்சி வளர்ப்பவர்களுக்கு அரசு ஏதாவது மானியம் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பட்டு வளர்ப்பில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு தமிழக அரசு எட்டு சலுகைகள் அளித்து அத்திட்டத்தை இன்று தீவிரப்படுத்தியிருக்கிறது. அந்த எட்டு சலுகைகள்:—

(1) புதிதாக எம். 5 முசுக்கொட்டைச்செடி ஒரு ஏக்கருக்கு பயிரிடும்பொழுது விவசாயிக்கு ரூ. 250 மானியமாக அளிக்கப்படுகிறது.

(2) பட்டுப்புழு வளர்க்க வேண்டிய சாதனங்கள் வாங்கும் பொழுது மானியமாக ரூ. 375 அனுமதிக்கப்படுகிறது.

(3) பட்டுப்புழு வளர்ப்பதற்கு, கட்டடம் கட்டுவதற்கு மானியம் ரூ. 375 அனுமதிக்கப்படுகிறது.

(4) மேலும் விவசாயிகளுக்கு மல்பரி பயிரிடுதல், பட்டுப்புழு வளர்த்தல் இவைகளில் 3 மாத காலம், மாதத்திற்கு ரூ. 150 உதவித்தொகையுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் ரூ. 300 மதிப்புள்ள பட்டு வளர்ப்பு சாதனங்கள் 50% மானியத்தில் கொடுக்கப்படுகிறது.

(5) பட்டுநூல் நூற்க பேசின்கள், நிறுவுபவர்களுக்கு ஒரு பேசினும் அதற்கு வேண்டிய கட்டடம் கட்டுவதற்கும் ரூ. 1100 மானியமாக கொடுக்கப்படுகிறது.

(6) மல்பெரி பயிரிட பட்டுப்புழு சிறந்த முறையில் வளர்க்க போதுமான தொழில்நுட்ப ஆலோசனைகள் பட்டு வளர்ச்சித் துறை கண்காணிப்பாளர்களால் அளிக்கப்படுகிறது.

(7) தரமான பட்டுப்புழு முட்டைகள் தயாரித்து குறித்த காலத்தில் அளிக்கப்படுகிறது.

(8) பட்டுப்புழுக்களை விற்பதற்கும், பட்டுநூல் விற்பனை செய்வதற்கும் விவசாயிகளுக்கு உதவி செய்யப்படுகிறது.

[முற்பகல் 9.20]

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்பூச்சியை எப்படி வளர்ப்பது என்று கிராமப்புற விவசாயிகளுக்கு எவ்வளவு பயிற்சி நிலையங்கள் வைத்தாலும் தெரிவதில்லை. எனவே, தமிழக செய்தித் துறையின் மூலமாகப் படமெடுத்து, கிராம மக்கள் புரிந்துகொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

1981 ஜனவரி 31]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சியிலே பட்டு வளர்ச்சித் துறை ஈடுபட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சி மாநகர் பட்டுத் தொழிலுக்கு மிகவும் பேர் வாய்ந்ததாகும். இந்தப் பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டத்தை அரசே பெருமளவில் செய்து, அந்தத் தொழிலை அங்கே அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காஞ்சி மாநகரத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டு நூல்களை விற்பனை செய்வதற்கு அங்கே மார்கெட்டிங் பெடரேஷன் நிறுவப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்;

வெளிநாடுகளில் சுற்றுலா பற்றிய விளம்பரம்.

* வினா எண் 126 திரு. குமரி அனந்தன் மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வெளிநாடுகளில் தமிழகத்தின் சுற்றுலா இடச் சிறப்புகள் பற்றிய விளம்பரங்கள் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) இலண்டன் ''டைம்ஸ்''—ல் பிப்ரவரி 1978—லும் மற்றும் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் ''பசிபிக் பயணச் செய்தி'' (Pacific Travel News) யின் 1978 சிறப்பு வெளியீட்டிலும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மற்றும் தமிழகத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களைச் சிறப்புற எடுத்துக்காட்டும் கையேடுகள் வெளிநாடுகளில் பரவலாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நடைபெறுகின்ற சுற்றுலாக் கண்காட்சியிலே பேரறிஞர் அண்ணா அவர்களின் சிறப்பைப் பற்றி ஒலி, ஒளிக் காட்சி ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வியை ஒட்டி கேட்கப்படாத துணை வினாவுக்கு அனுமதியில்லை

[1981 ஜனவரி 31

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, வெளி நாடுகளில் ஓரளவுக்கு நான் சுற்றிப்பார்த்த அளவில், தமிழகத் திலே உள்ளது போன்ற கலைச் செல்வங்கள் இயற்கையிலேயே அங்கே இல்லாமல், அவர்கள் செயற்கையிலே உருவாக்கி, அங்கே சுற்றுலாவிற்கு வருகின்றவர்களுக்குக் காட்டிக் கொண்டிருக் கிறார்கள். எனவே, தமிழகத்திலே இருக்கக்கூடிய கலைச் செல்வங்கள் உலகத்திலே உள்ள வெளிநாடுகளுக்குத் தெரியு வகையில், திட்டங்கள் தயாரித்து, வெளிநாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்கள் மூலமாக தமிழகக் கலைச் செல்வங்களைப் பற்றி வெளிநாடுகளில் உள்ளவர்களைக் கவரத்தக்க வகையில் இந்த நடவடிக்கையை விஸ்தரிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்தப் பணியை சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், சுற்றுலாத் துறையும் செய்து கொண்டிருக் கின்றன. வெளிநாடுகளிலுள்ள இந்தியத் தூதராலயங்கள் மூலமாக இந்திய சுற்றுலாத் துறையின் மூலமாகத் தமிழகச் சிறப்பினை வண்ண மலிவு வெளியீடுகளாகவும், வண்ண அஞ்சலட்டைகள் மூலமாகவும் தமிழகத்தினுடைய சிறப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் சுற்றுலா மையங்கள் பற்றி, அதன் வரலாற்றுச் சிறப்பைப் பற்றி, அதன் இயற்கையான தத்துவங்களை விரிவான முறையிலே மலிவுப்புத்தகங்களாக வெளியிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்திலும் தமிழிலும் இப்போது வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். அவசியம் நேருகின்றபோது, மற்ற இந்திய மொழிகளிலும் இது போன்ற வெளியீடுகளை நம் முடைய பொருளாதார சூழ்நிலையையொட்டி வெளியிடுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

திரு. இரா. தாமரைக்கனி: வெளிநாடுகளுக்கு நாம் செல்லும் போது அவர்களுடைய நாட்டின் கலாசாரத்தை நாடகம் மூலம் நடத்திக் காட்டுகிறார்கள். நம் நாட்டுக்கும் வெளிநாட்டு யாத்திரிகர்கள் வரும்போது நம்முடைய நாட்டுக் கலாச்சாரங்களை நாடகம் மூலம் நடத்திக் காட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளிநாடுகளில் தமிழக சுற்றுலா மையச் சிறப்புகள் பற்றி விளம்பரப்படுத்துவது பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் சமீபத்தில் வெளிநாடுகளுக்குப் போய் வந்த காரணத்தால் ஏதாவது சொல்வார்கள் என்று நினைத்தால் அவர்கள் உள்நாட்டைப் பற்றிச் சொல்லிக் கொண் டிருக்கிறார்கள்.

1981 ஜனவரி 31]

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் வெளிநாட்டுப் பயணிகளைக் கவருகின்ற வகையில் அங்கிருக்கக் கூடிய ஹை கமிஷன்கள் மூலமாக விளம்பரங்கள் செய்யப்படுகின்றன என்று சொன்னார்கள். ஹை கமிஷன் மூலமாகக் கொடுக்கப்படுகிற சில விவரங்களை வாங்கி வந்து அது பற்றி வினா மூலம் சிலவற்றை அறிய விரும்புகிறேன். சான்றாக அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் 'ஆர். எம். வீ. என்று சொல்லி, 'ஆர். எம். வீரப்பன், என்றும் அழைப்பார்கள், என்று சொன்னால் எப்படித் தவறுடையதோ அதே போன்று . . . .

Cape Comorin also known as Kanyakumari

என்று இருக்கிறது.—

Kanyakumari also known as Cape Comorin என்று இருந்தால் சரியாக இருந்திருக்கும். ஆனால்——

Cape Comorin also known as Kanyakumari என்று வெளி நாட்டில் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் கன்னியாகுமரியின் பழமைச் சிறப்பும், நாகரிகத் தொன்மையும் குறைக்கப்படுகிறது என்பதை அறிவார்களா?

அமைச்சர் அவர்களுக்கு இன்னும் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆங்கிலத்தில் ஏற்சாட்டைப் பற்றி, "the Jewel of the South" என்று அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக் கிறது. அதிலே ஏராளமான எழுத்துப் பிழைகள். சில செய்தி கள் . . . .

This is one of the major attractions Killiyur Fallsஐப் பற்றி run through a beautiful valley என்று சொல்லப்பட்டிருக்கிறது. Falls run through என்று சொல்லுவதில்லை. அதைப்போல் studentate unovitate என்று சொல்லுகிற சொற்கள் எல்லாம் ஆக்ஸ்போர்டு டிக்ஷனரியில் இருக்கிறதா என்று புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததில் நான் வருவதற்குக் கொஞ்சம் கால தாமதமாகி விட்டது. இந்த இரண்டு சொற்களும் அதிலே இல்லை. அயல்நாட்டார் இந்த ஆங்கிலத்தைப் படித்து விட்டு நம்முடைய நாட்டுக்கு வரவேண்டா மென்ற முடிவுக்கு வந்து விடக் கூடாது. அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இவை எல்லாம் வந்திருக் கின்றனவா? இதற்கு என்ன மாற்று ஏற்பாடு, திருத்த ஏற்பாடு செய்ய அரசு முன்வரும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கையிலே வைத்திருக்கிற அந்த வெளியீடு இந்திய அரசினுடைய சுற்றுலாத் துறை வெளியிட்டிருக்கிற வெளியீடா அல்லது தமிழ்நாடு சுற்றுலாத் துறை வெளியிட்டிருக்கிற வெளியீடா என்ற தகவலைத் தந்தால் அது நம்முடைய கவனக் குறைவால் ஏற்பட்டிருக்கக்கூடிய பிழையா என்று தெரிந்து கொள்ள முடியும். ஒருவேளை 'கேப் காமரின்' என்று சொல்லப்படுகிற வெளியீடு இந்திய சுற்றுலாத்

[1981 ஜனவரி 31

துறையின் வெளியீடாக இருக்குமென்று கருதுகிறேன் அதை அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த ஆங்கிலக்கையேடு தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் வெளியீடு என்றுசொல்லியிருக்கிறார்கள். அந்த ஆங்கிலப் பிழைகளைத் திருத்துகிற முயற்சியில் துறைக்கு தக்க அறிவுரைகள் வழங்கி நல்ல முறையில் ஆங்கிலத்தில் மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் விருப்பத்திற்கேற்ப, உணர்வுக்கு ஏற்ப நிச்சயமாக வெளியிடப்படும். தேவையானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல 'ரைட்-அப்' களை எழுதிக் கொடுத்தால் அவையும் சேர்த்து இந்தத் துறை வெளியிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோபால் : தமிழகத்துள்ள சுற்றுலா இடங்களின் சிறப்புகளைப் பற்றி வெளிநாடுகளில் பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்வதோடு மட்டுமல்லாமல் தொலைக் காட்சிகளின் மூலம் விளம்பரம் செய்யவும் அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: வெளிநாடுகளில் சுற்றுலாத் துறையைப் பற்றி விளம்பரம் செய்கிறபோது இந்திய நாட்டைப் பற்றிப் பொதுவாகத்தான் இந்திய அரசு விளம்பரம் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்திய அரசினுடைய சுற்றுலாத் துறையிடம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம் — இந்தியாவில் மிக முக்கியமான சுற்றுலா வளங்களைக் கொண்ட தமிழகப் பகுதிகளை அதிகமாக விளம்பரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். வெளிநாடுகளில் தொலைக் காட்சிகள் மூலம் காட்சிகளைக் காட்டுவது எல்லாம் மிகப் பெரிய அளவுக்குச் செலவாகிற விவகாரம், அதுவும் அந்நிய நாட்டுச் செலாவணி மூலம் செலவாகிற விவகாரங்கள். அதை இந்திய அரசுதான் மேற்கொண்டு செய்ய இயலும். தமிழகத்தைப் பொறுத்தவரை வருகிற எதிர்காலத்தில் இந்திய அரசின் அனுமதியோடு அப்படிப்பட்ட செலவினங்களை மேற்கொள்ள முடியுமா என்பதைப் பற்றி அரசு முயற்சிக்கும்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : சுற்றுலா அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இருக்கக்கூடிய சுற்றுலா இடங்களில் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளது போல் மாஜிக் லாண்ட்ஸ், ஃபேரி லாண்ட்ஸ் போன்றவற்றை பயணிகளைக் கவரக்கூடிய வகையில் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே இருக்கின்ற அந்த அமைப்புகள் எல்லாம் பல கோடிக்கணக்கான ரூபாய்களை முதலீடுகளாகப் போட்டு அதிலே பெரிய அளவிலே வருமானத்தையும் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாகத் தான் சுற்றுலாத் துறையை வளர்க்கிற முயற்சியிலே நாம் ஆர்வம்

1981 ஜனவரி 31]

காட்டி வருகிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த நாடுகளிலிருக்கிற அந்த அமைப்புகளோடு நாம் போட்டிபோட்டுக் கொண்டு காரியங்கள் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், இராமேஸ்வரம் தீவை 28 கோடி ரூபாய் செலவிலே அற்புதமான இராமேஸ்வரம் தீவாக ஆக்க வேண்டுமென்ற திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் அதற்கான அனுமதி கூட கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே தமிழகத்திலே உள்ள சுற்றுலா இடங்களைப் பற்றி விளம்பரங்கள் செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி விரும்பித் தங்கிய இடமாகிய பிச்சாவரம் பகுதியையும் தரங்கம்பாடியையும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி வெளிநாடுகளிலே தமிழகத்தின் சுற்றுலா இடங்கள் பற்றி விளம்பரம் செய்வது பற்றியது.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தச் செய்தி விளம்பரத் துறை சுற்றுலா இடச் சிறப்புகள் பற்றி படக்காட்சிகளை எடுத்து வெளிநாடுகளிலே காட்டி விளம்பரம் செய்ய முன் வருமா?

மாண்மிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் சார்பிலே தயாரிக்கப்பட்டிருக்கிற செய்தி விளக்கப்படம் இந்திய சுற்றுலாத் துறையின் மூலமாக வெளிநாடுகளிலே திரையிடப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே தமிழகத்தைப்பற்றிச் செய்யப்படுகிற விளம்பரங்களிலே தமிழகத்திலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்றும் ஆகவே வெளிநாடுகளிலிருந்து தாராளமாக இங்கு வரலாம் என்றும் விளம்பரம் செய்யப்பட்டு இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இந்தக் கேள்வியில் வராது.

பனமரத்துப்பட்டி ஏரி.

*வினா எண். 127—செல்வி பி. விசயலட்சுமி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி ஏரியை ஆழப்படுத்தி மேம்படுத்து செய்யவும் சுற்றுலாத் தலமாக மாற்றவும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தற்சமயம் இல்லை.

செல்வி பி. விசயலட்சுமி : தலைவர் அவர்களே, பனமரத்துப் பட்டி ஏரியை ஆழப்படுத்தி மேம்பாடு செய்யவும் சுற்றுலா தலமாக்கவும் ஆக்க வேண்டிய பணிகளை அரசு எப்போது பரிசீலனை செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலே உள்ள சுற்றுலாத் தலங்கள், அதற்கான போக்குவரத்து பாதை வசதிகள், அங்கே இருக்கின்ற சிறப்புகள் இவைகளை அடிப்படையாக வைத்துத் தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அந்த வகையிலே பனமரத்துப் பட்டி ஏரி இப்போது உடனடியாக அந்தப் பட்டியலிலே வருகிற சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே இருக்கிற ஒரே சிறப்பு நான்தான்.

கூடலூர் பகுதியில் உள்ள மாவடியில் நிலப் பட்டாக்கள் வழங்கல்.

***வினா எண். 128 திரு வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

மதுரை மாவட்டம் கூடலூர் பகுதியில் உள்ள "மாவடி" புல்மேடு பகுதியை ஏழை எளிய விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் பகுதியிலே உள்ள மாவடி, புல்மேடு, எண்ணாத்திப்பாறையில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அங்கே உள்ள பெரிய நிலச்சுவான்தார்கள் விவசாயம் செய்வதற்கு குத்தகைக்கு எடுத்துக் கொண்டார்கள். அந்தக் குத்தகை காலம் முடிந்தவுடன் அவற்றை எடுத்து ஏழை எளிய விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ஆர் எம் வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவடி, புல்மேடு போன்ற ஏலக்காய் பயிரிடும் நிலங்கள் குத்தகை சம்பந்தமாக அரசு ஏற்கெனவே ஒரு முடிவை எடுத்து அமல்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறது. அப்படி நீண்டகால குத்தகைக்கு விடப்பட்டு இருக்கிற அந்த நிலங்கள் குத்தகை காலம் முடிந்தவுடன் மீண்டும்

புதுப்பிக்கப்படக்கூடாது என்று தெரிவித்து அந்த நிலங்களை ஏழை எளிய விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் அளவிலே குத்தகைக்கு விடவேண்டுமென்ற கொள்கையை நாம் எடுத்திருக்கிறோம். அப்படிச் சில நடவடிக்கைகளை மேற்கொண்ட பொழுது அதைக் குத்தகைக்கு வைத்துக் கொண்டிருந்தவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று சில தடை ஆணைகளையும் பெற்றிருக்கிறார்கள். அவைகளெல்லாம் பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கின்றன.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு அமைச்சரவர்கள் கூடலூருக்கு வந்திருந்தபொழுது மாவடியில் நிலமற்றவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் நிலம் கொடுக்க ஏற்பாடு செய்வதாகக் கூறினார்கள். அங்குள்ள ஏழைகள் ஏக்கத்தோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அமைச்சரவர்கள் பரிவோடு கவனிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வனப்பகுதி நிலங்களைப் பட்டா செய்வது என்கின்ற சூழ்நிலை இப்பொழுது இல்லை. அதிலும் சமீபத்திலே இந்திய அரசு பிறப்பித்திருக்கின்ற ஒரு சட்டத்தின் மூலம் வனப் பகுதிகளை வேறு உபயோகத்திற்கு மாற்றக் கூடாது. அப்படி மாற்றுவதற்கு முன் மத்திய அரசின் அனுமதி பெற்றாக வேண்டுமென்று சட்டம் நிறைவேற்றப்பட்டு அமல்படுத்தப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் வனப் பகுதியிலே வனத்தை மாற்றாமல் இது போன்று ஏலக்காய் பயிரிடுவதற்கு விவசாயிகளுக்கு, ஏழை மக்களுக்குக் குத்தகைக்கு விடுகின்ற கொள்கைதான் அரசிடத்தில் இருக்கிறது. அவைகள் ஏற்கனவே அனுபவித்துக்கொண்டிருக்கின்ற குத்தகைதாரர்களிடமிருந்து மீட்கப்பட்டவுடனே இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. எம். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டம், அய்யம்பாளையம், பட்டிவீரன்பட்டி ஆகிய இடங்களில் சுமார் 3,000 ஏக்கர் வனப் புறம்போக்கு நிலத்தில், புனல் காடுகளாக இருப்பதில் விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். இதில் இருபதாண்டுக்காலமாக சுமார் மூவாயிரம் விவசாயிகள் ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள். வனத்துறைக்குச் சொந்தமான நிலத்தை விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அது வனம் அல்ல. கடந்த இருபதாண்டுக் காலமாக வெற்றுப் புனல் காடுகளாக இருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் அமைச்சரவர்களுக்குப் பலமுறை மனுக் கொடுத்திருக்கிறார்கள். எம்.எல்.ஏ.விடத்தில் கொடுத்தார்கள்; நாங்களும் அதை அனுப்பி வைத்திருக்கிறோம். பட்டிவீரன்பட்டி அய்யம்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள இந்த மூவாயிரம் குடும்பங்களுக்குப் பட்டா செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

[1981 ஜனவரி 31

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரு கொள்கை முடிவாக எடுக்கப்பட்டிருக்கிறது; இந்தியாவில் மட்டுமல்ல, அது உலகம் முழுவதும் தேவைப்படும் கொள்கையாக உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வனங்களைப் பெருக்குவதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமே தவிர, இருக்கின்ற வனப் பகுதிகளைக் குறைத்து அந்த வனத்தின் விளைவுகளை மாற்றும் முயற்சியிலே எந்த நாடும், எந்த அரசும் ஈடுபடக்கூடாது என்பது உலகத்தின் கொள்கை. ஆகவே, அந்த அடிப்படையில், இருக்கின்ற நாடுகளை மாற்றி விவசாய நிலங்களாக ஆக்குவது என்ற யிரச்னைக்கே இடமில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்ததைப் போன்று நீண்ட காலமாக விவசாயப்பகுதியாக இருந்துக்கொண்டிருக்குமேயானால் வனம் என்கின்ற அந்தச் சட்ட விதிகளுக்குள்ளே இருந்தால் அதைப் பட்டா செய்து தர முடியாது; அதை மாற்றுவதற்கும், முடியாது. வனப் பகுதியாக இல்லாமல், ஃபாரஸ்ட் புறம்போக்கு, வனப்பகுதி புறம்போக்கு என்று இருந்தால் அப்படிப்பட்ட நிலைமைகளை ஆராய்ந்து, நீண்டகாலமாகப் பயிரிடுகின்ற ஏழை விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாமல், அதே நேரத்திலே வனத்தை அழிப்பது என்ற கொள்கைக்கு ஆக்கம் அளிக்காத முறையில் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறைக்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்குக் கொடுக்கும்பொழுது நீண்ட பல ஆண்டுகளுக்குக் கொடுப்பது என்ற முறையை மாற்றிக் குறைந்த ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா? அதன்மூலம் ஒரு சிலர் 80 ஆண்டுகள், 90 ஆண்டுகள் என்று குத்தகைக்கு வைத்திருக்கின்ற நிலைமைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, மதுரை மாவட்டம் கூடலூர் பகுதியில் உள்ள "மாவடி" புல்மேடு பகுதியை ஏழை எளிய விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்பது. ஆனால் உறுப்பினரவர்கள் வனத் துறைக்குப் போய்விட்டார்கள். நீண்டகாலக் குத்தகை, குறைந்த காலக் குத்தகை என்பது இங்கே எப்படி வரும்?

(பதில் இல்லை)

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அந்த இடமானது வனத் துறைச் சட்டத்திற்குட்பட்ட இடமாக இருக்கலாம்; ஆனால் புல்மேடு என்று சொல்லும் பகுதி ஏரி போன்றவைகளைப் பயிரிடும் இடமாகவும் இருக்கலாம். ஆனால் கூடலூர் தாலுக்காவில் ஏராளமான நிலமற்ற ஏழைகள் குளத்திற்குள்ளே போய் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட

1981 ஜனவரி 31]

[முற்பகல் 9-40]

ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகளுக்கு அந்தப் புல்மேடு பகுதியில் ஏலமோ, அல்லது வேறுவிதமானவைகளோ பயிரிவதற்காக அவர்களுக்குப் பட்டா செய்ய முடியாவிட்டாலும் இந்திய சர்க்காரின் சட்டத்தின் காரணமாக, நீண்டகாலக் குத்தகைக்காவது அந்த இடத்தைக் கொடுத்தால், காட்டையும் ஆக்கிரமிக்க மாட்டார்கள், விவசாயமும் செய்வார்கள். அதற்கு முயற்சி எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே குறிப்பிடப்பட்ட 'மதுரை மாவட்டம் கூடலூர் பகுதியில் உள்ள "மாவடி" புல்மேடு பகுதி' புல்மேடு பகுதி என்று அழைக்கப்படுகிறதே தவிர, அது உண்மையாகவே புல் மாத்திரமே வளர்ந்திருக்கிற பகுதி அல்ல என்பதும் அந்தப் பகுதி கண்ணகி கோயிலுக்கு கிழக்கே 4 மைல் தூரத்திலே அமைந்திருக்கிற அந்த இடம் கூடலூர் ஒதுக்கக் காட்டில் உள்ளது என்பதும் அது அடர்ந்த மரங்களை உடைய காடு என்பதும் எனக்கு வனத்துறையாலே தரப்பட்டிருக்கிற குறிப்புகளிலே இருக்கிறது. மேலும் ஏலக்காய் பயிரிட அடர்ந்த காடுகளைக் குத்தகைக்குக் கொடுப்பதிலே தவறில்லை. காரணம் அடர்ந்த காடுகளை வைத்துத்தான் ஏலக்காய் பயிர் செய்யப் படுகிறது. ஆகவே, காடுகளிலே ஏலக்காய் பயிரிட அரசாங்கம் அடிக்கடி ஆலோசனை செய்து ஆணை பிறப்பிக்கின்றது. அது தவிர, மற்ற விவசாயிகளுக்குத் தரும்போதுதான் பிரச்னை வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதி வெறும் புல் மேடு பகுதி அல்ல, அடர்ந்த காடுகள் என்று தகவல் தந்திருக்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள்; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் புல்மேடு என்ற வார்த்தை மட்டும் இருப்பதாகச் சொல்கிறார்கள். என்னுடைய தகவல்படி, சுமார் 70 ஏக்கர் மரமும் இல்லாமல், புல்லும் இல்லாமல், பயிரிடக்கூடிய பகுதியாக இருக்கிறது. அங்கு பின் மக்கள், அரிசன மக்கள், தோட்டத் தொழிலாளர்கள் பல ஆண்டுகளாகக் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க வில்லையென்றால் வன இலாகாவாவது அங்கு மரங்களை வளர்த் திருக்க வேண்டும். அதையும் செய்யவில்லை, அவர்களுக்கும் கொடுக்கவில்லை. பழைய ரெக்கார்டுகளிலே வன இலாகாவைச் சேர்ந்தது புல்மேடு என்று வைத்துக்கொண்டு, அரசாங்க ரெகார்டுகளில் மட்டும் வைத்துக் கொண்டு இப்படித் தகவல் கொடுக்கிறார்கள் வன இலாகாவினர் என்பது அரசுக்குத் தெரியுமா? உண்மையிலே வனத்துறையாவது மரங்களை வளர்க்க வேண்டும், இல்லையென்றால், ஏழைக்கும் விவசாய மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1981 ஜனவரி 31

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற கஷ்டமே அது தான். சாதாரணமாக, நம்முடைய நிலப்பரப்பிலே மூன்றிலே ஒரு பகுதி காடுகளாக இருக்க வேண்டுமென்று உலக விஞ்ஞானிகள் நமக்குக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் குறிப்பாக நம்முடைய மாநிலத்தில் 16 சதவீதம் கூட காட்டுப்பகுதிகள் இல்லை. இருந்த காடுகளும் அழிக்கப்பட்டுக் கொண்டு வந்து விட்டன. மீண்டும் அப்படிப்பட்ட பகுதிகளிலே மரம் வளர்க்கின்ற திட்டங்களைக் கடந்த சில ஆண்டுகளாக வனத்துறையும் அரசும் மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டு மத்திய அரசும் மாநில அரசும் பல்வேறு திட்டங்களின் மூலம் நிறைவேற்றிக் கொண்டு வருகின்றோம். இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் அந்தப் பகுதியிலே நாம் ஏழை, எளிய மக்களுக்கு வாய்ப்பினைத் தந்து, அவர்களை அங்கு அனுப்புகிறபோது, அவர்கள் அந்த மரம் வளர்க்கும் திட்டத்தைப் பாழாக்கும் முயற்சியிலே சில நேரங்களில் ஈடுபட்டு தங்களுடைய பயிர்களுக்குப் பாதகமாக இருக்கிறது என்று நடப்பட்டிருக்கின்ற மரங்களையும் பிடுங்கி எறிந்து விடுகின்றார்கள் என்ற செய்திகளும் வருகின்றன, உண்மையாகவும் சில நேரங்களிலே நடந்து விடுகின்றன. இதையெல்லாம் கருத்திலே வைத்து, காடுகளும் வளர்க்கப்பட்டாக வேண்டும், காடுகளும் பாதுகாக்கப்பட்டாக வேண்டும். ஏழை, எளிய மக்களுக்கும் வாழ்க்கை தரவேண்டுமென்ற இத்தனை அடிப்படை பிரச்னைகளை மனதிலே வைத்து அரசு கவனமாகப் பரிசீலித்து முடிவெடுக்கும்.

கிரிப்பாறை பகுதியில் மூங்கில் ஏலம்

*வினா எண் 129 திரு. டி. மணி. மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் கிரிப்பாறை பள்ளக்குளம் பேச்சுப்பாறைக்கு அருகாமையில் சேப்பலத்தோடு மற்றும் பகுதிகளிலிருந்து மூங்கில்கள் 1979–80ம் ஆண்டில் ஏலம் விடப்பட்டு உள்ளதா?

(ஆ) ஏலம் விடப்பட்டுள்ள தொகை எவ்வளவு

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்

(ஆ) ரூபாய் 3,39,001/—

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கிரிப்பாறை பள்ளக்குளம் பேச்சுப்பாறைக்கு அருகாமையிலுள்ள காடுகளிலிருந்து மூங்கில்களை வெட்ட என்ன விதிமுறைகள் உள்ளன? எந்தக் கால அளவில் எவ்வளவு வெட்டிக்

1981 ஜனவரி 31]

சேர்க்க வேண்டும். அந்தக் கால அளவிற்குள் மூங்கில்களை வெட்டி எடுக்காமல், மூங்கில்களை வெட்ட அந்தக் கால அளவு நீட்டிக்கப்பட்டு உள்ளதா? அப்படி மூங்கில்களை வெட்டிக் கொடுத்திருந்த கால அளவை நீட்டித்துக் கொடுப்பதில், அங்குள்ள வனத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஊழல் புரிந்ததாகப் புகார் வந்துள்ளதா? அதில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, ஏலம் விடப்பட்டதா என்பதும், விடப்பட்டிருந்தால் தொகை எவ்வளவு என்பதும்தான் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கான பதிலை நான் தந்திருக்கிறேன். அப்படி ஏலம் விடுகிறபோது சில விதிகளுக்குட்பட்டுதான் ஏலம் விடுவது வழக்கம். இவ்வளவு காலத்திற்குள்ளாக வெட்டியாக வேண்டும் என்ற நிபந்தனை தருவது உண்டு. அதிலே அவர்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு சங்கடங்கள் காரணமாக கால நீட்டிப்புக் கேட்பார்களேயானால் வனத்துறை அவர்களுக்கு என்று இருக்கிற அதிகாரத்திலே முதலிலே ஒரு கால நீட்டிப்பு வழங்குவார்கள். அதற்கு மேலும் கேட்டால் அது அரசுக்கு வரும். அப்படி அரசுக்கு வருகிறபோது அதற்காக சில பெனால்டி என்றெல்லாம் அவர்களுக்குப் போட்டு கால நீட்டிப்பு கொடுப்பது வழக்கம். அவர்களுக்கு உண்மையிலேயே சங்கடங்கள் நேர்ந்து வெட்டமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதா என்பதை ஆராய்ந்து, கால நீட்டிப்பு கொடுக்கும் வழக்கமும் இருந்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஏலத்தில் அல்லது அந்த ஏலதாரர்களிடம் தவறுகள் நிகழ்ந்திருக்கின்றன என்ற தகவலைத் தருவார்களேயானால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது கால நீட்டிப்பு கொடுக்கப்பட்டதா என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அந்த ஒப்பந்தக்காரர்களுக்குச் சங்கடங்கள் ஏற்பட்டால் அதை மாற்றிக் கொடுப்பார்கள் என்று சொன்னார்கள். ஆனால் நடந்து இருக்கின்ற நிலைமையே வேறு விதமாக இருக்கின்றது. இந்த மூன்று பண்ணைகளில் ஒரு பண்ணையில் பக்குவம் ஆவதற்கு இடையிலேயே மூங்கில்களை வெட்டி இருக்கிறார்கள். பொதுவாக பக்குவமான மூங்கில்களையே வெட்ட வேண்டும் என்றும் 2 அல்லது 3 அடிக்கு மேல் வெட்ட வேண்டும். மேலும் பக்குவம் ஆகாமல் இருக்கின்ற இளம் கன்றுகளை வெட்டக் கூடாது என்றும் விதி இருக்கிறது. அதற்கு மாறாக ஒரு ஆண்டிற்குள்ளாக மூன்று தடவைகள் அந்த இளம் கன்றுகள் வெட்டி எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் நேரிலேயே பார்த்ததனால், இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 31

ஆகவே இப்படிப்பட்ட அந்த இளம் கன்றுகளை வெட்டி எடுப்பதற்கு அந்த பகுதியிலே இருக்கிற வன இலாகாவினருக்கு ஒரு லட்சம் ரூபாய் லஞ்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை விசாரித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் புகார்களோ குற்றச்சாட்டுகளோ சொல்லக் கூடாது என்று விதி இருக்கிறது. நீங்கள் புகார் கொடுப்பதாக இருந்தால் முதலிலே எனக்குத் தெரிவிக்க வேண்டும். அப்படி தெரிவித்த பிறகுதான் இந்த அவையிலே சொல்ல வேண்டும். அப்படி இல்லாமல், கேள்வி நேரத்தில் அவர்கள் லஞ்சம் வாங்கினார்கள் என்றால் எந்த ஆதாரத்தை வைத்து அமைச்சர் பதில் சொல்ல முடியும்? இந்தக் கேள்வியை சம்பந்தப்பட்ட வரையில் கேளுங்கள். உங்களிடத்திலே பல தகவல்கள் இருக்கலாம். அதை வெளியிடுவதற்கு வெவ்வேறு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அந்தச் சந்தர்ப்பங்களில் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் எண்ணங்கள் பூராவையும் சொல்வதற்கு மிகுந்த அவகாசங்கள் இருக்கின்றன. எனவே கேள்வி நேரத்தில் அதைப் பயன்படுத்தக் கூடாது.

திரு டி. மணி: தலைவர் அவர்களே, அந்த மூங்கில் பக்குவம் ஆவதற்கு இடையிலேயே வெட்டி இருக்கிறார்கள். இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல தவறுகள் நிகழ்ந்திருக்குமானால் குற்றங்கள் நிகழ்ந்திருக்குமானால் அரசு உடனடியாக பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அனுமதிக்கப் பட்டதற்கும் அதிகமாக மூங்கில் வெட்டப்பட்டது என்று அரசுக்குப் புகார்கள் வந்திருக்கின்றனவா, அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து புகார்கள் தினசரி வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே எந்தப் புகார், எப்போது, எதைப்பற்றி வந்திருக்கின்றது என்பதை நினைவிலே வைத்துக் கொள்ள முடியாது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் பல்வேறு நேரங்களில் புகார்கள் எழுதித் தந்து அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆணை இடப் பட்டிருக்கிறது. ஒருவேளை இந்தச் சட்டமன்ற உறுப்பினர் இந்தப் புகாரை முன்னாலேயே தெரிவித்து இருப்பார்களேயானால், அதன் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவேளை இப்போது தான் இதைப்பற்றி தெரிவிக்கிறார் என்றால், உடனடியாக இதைப்பற்றி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படும்.

1981 ஜனவரி 31]

மேச்சேரி அருகேயுள்ள ஆடு ஆராய்ச்சிப் பண்ணை.

*வினா எண். 130—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா:

(அ) மேச்சேரி அருகாமையிலுள்ள பொட்டனேரியில் அமைக்கப்பட்டுள்ள ஆடு ஆராய்ச்சி பண்ணை (Sheep Research Staion) யின் பணி துவக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில் செய்த பணியின் விவரமென்ன?

(இ) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே,

(அ) ஆராய்ச்சிப் பணி 5-6-1978 முதல் துவக்கப் பட்டுள்ளது.

(ஆ) பல்வேறு வகைப்பட்ட பராமரிப்பைப் பற்றி மூன்று ஆராய்ச்சித் திட்டங்கள் முன்னேற்றத்தில் உள்ளன.

(இ) ஆராய்ச்சி நிலையத்திற்கான நிலத்தின் கிரயம், கட்டிட வேலை, தொடரும் மற்றும் தொடராச் செலவினங்களுக்காக இதுகாறும் ரூ. 7.85 இலட்சங்கள் செலவிடப் பட்டுள்ளது.

[முற்பகல் 9-50]

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆடு ஆராய்ச்சிப்பணி மூன்று வகையான திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அந்த மூன்று ஆராய்ச்சித் திட்டங்கள் என்னென்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து. தலைவர் அவர்களே, (1) மேச்சேரி பேட்டை ஆடுகளின் இனப்பெருக்கத்தன்மை பற்றிய ஆய்வு; சிறப்பாக குட்டி கருவிலிருக்கும் காலம் பற்றிய ஆராய்ச்சி. (2) மேச்சேரிக்குட்டிகளுக்கு பாலூட்டும் தடவையில் அதிகப் படுத்துவதால் உடல் வளர்ச்சியில் ஏற்படும் பயன்கள். (3) வளரும் மேச்சேரிக்குட்டிகளுக்கு காணாக்கொடிகளை நுறை நிறை உணவாகக் கொடுப்பதன் மூலம் ஏற்படும் பயன்கள்.

[1981 ஜனவரி 31

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, மேச்சேரி செம்மறி ஆடுகள் மைசூர் மாநில மாண்டியா ஆடுகளை விட தரத்திலும், இறைச்சியின் சுவையிலும் சிறந்தது. எனவே அந்த மேச்சேரி செம்மறி ஆடுகள் இனத்தை அபிவிருத்தி செய்யும் அளவிலே ஏதேனும் தனித் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? இல்லையெனில் இனிமேலாவது செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இறைச்சியின் சுவை சிறந்தது என்று குறிப்பிடுகிற காரணத்தால், அபிவிருத்தி குறைந்து இருக்கக்கூடும். இருப்பினும், அதனை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அந்த வேளாண்மை ஆராய்ச்சிக்குழுவிற்கு தகவல் அனுப்பப் படும்.

திரு. சு. முத்துகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஆடு ஆராய்ச்சிப் பண்ணை பற்றி அவர்கள் விளக்கம் அளித்தார்கள். அந்த ஆராய்ச்சிப் பண்ணையில் ஆடுகளின் பெருக்கத்திற்காக, ஆராய்வதற்காக மேல்நாடுகளில் இருந்து ஏதாவது ஆடுகள் நம் மாநிலத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா? அந்த ஆராய்ச்சிப் பணிக்குழுவை தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் நிறுவ அரசுக்குத் திட்டம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, திட்டம் இல்லை.

கோவை விவசாயப் பல்கலைக்கழக ஆசிரியர் குறைகள்.

*வினா எண். 131 திரு. கு. ரமணி:—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை விவசாயப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் குறைகளைப் பரிசீலிக்க ஒரு நபர் விசாரணைக் குழு அமைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குழுவின் விசாரணைக்கு விடப் பட்டுள்ள விஷயங்கள் என்ன?

(இ) விசாரணை முடிவு எப்பொழுது வெளியிடப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களின் ஊதியங்களைப் பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்துள்ள ஊதிய விகிதங்களில் நிர்ணயம் செய்தல். மேலும் இவர்களது இதுபோன்ற மற்ற விவரங்களைப் பரிசீலனை செய்தல்.

1981 ஜனவரி 31]

(இ) குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அந்தக் குழுவின் அறிக்கை அரசாங்கத்திற்கு வந்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவிலே ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் மற்ற சலுகைகள் மட்டுமல்லாமல், அங்கே இருக்கக்கூடிய நான் டீச்சிங் ஸ்டாபாக இருக்கக்கூடிய மற்ற ஊழியர்களின் விஷயங்களும் அதில் அடங்கியிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அடங்கியுள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, எந்தக் கால அளவிற்குள் அரசு அந்தச் சிபார்சுகளை ஏற்றுக்கொள்வது அல்லது திருத்தம் செய்து வெளியிடுவது என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இன்னும் 10 நாட்களுக்குள்

மார்த்தாண்டம்—பேச்சிப்பாறை சாலையிலுள்ள பாலம்.

வினா எண். 132—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: திரு. டி. மணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர். கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுகாவில் மார்த்தாண்டம் பேச்சிப்பாறை சாலையில் 5, 6 இலோ மீட்டரில் உள்ள இரும்புப் பாலமானது சாலை மட்டத்திலிருந்து அதிகமாகத் தாழ்ந்துள்ளதால் அங்கு போக்குவரத்து தடைபட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஒரே நேரத்தில் ஒரு பஸ்ஸுக்கு மேல் போக முடியாத அளவிற்கு அந்தப் பாலம் குறுகியதாக இருக்கிற காரணத்தாலும், 50 ஆண்டுக் காலத்திற்கு முன்பு அது கட்டப்பட்டது என்ற காரணத்தாலும், அந்த மார்த்தாண்டம் பேச்சிப்பாறை ரோடு மிக முக்கிய சாலையாக இருக்கிற காரணத்தாலும், அந்தப் பாலத்தை அகலப் படுத்தி புதுப்பாலம் கட்ட அரசு முன்வருமா?

[1981 ஜனவரி 31

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அது திருவெட்டாறு [illegible] அதைத் திருத்தியமைக்க வேண்டும் என்று [illegible] ரூபாய் செலவாகும். இப்போது இருக்கக்கூடிய நிதிநிலை மக்கு ஏற்றத்தான் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். ஆகவே நிதிநிலை சீரான பின்னால் அது கவனிக்கப்படும்.

போடி தொகுதியில் புதிய பாதை அமைப்பு.

*வினா எண். 133—திரு. [illegible] எம். எஸ். கப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம் போடித் தொகுதியில்பண்ணைப் புரத்தில் இருந்து சாக்[illegible] மெட்டு வழியாக கேரளா செல்ல சாலை ஏதும் புதிதாக அமைப்பது பற்றிய திட்டம் அரசு பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) ஆம் என்றால் அந்தப்பணி எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எம. எஸ். கப்பிரமணியன்: தலைவரவர்களே 1958-ல் 26½ இலட்சம் ரூபாய்க்கும், 1963-ல் 30 இலட்சம் ரூபாய்க்கும், 1979-ல் [illegible] ரூபாய்க்கும் மதிப்பீடு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் [illegible] சாலையை அமைக்க வேண்டுமென்று திட்டம் [illegible] அனுப்பியுள்ளார்கள். இந்த சாலை அமைக்கப்படுவதனால் [illegible]—கொச்சின் தூரம் ஏறத்தாழ 60 மைல் குறைகிறது என்று [illegible] அப்படி இருந்தும் இந்தச் சாலைப் [illegible] எடுத்துக்கொள்ளாததற்கு என்ன காரணம்? அந்தப் [illegible] இருக்கிற விவசாயிகளும், தொழிலாளர்களும் கடந்த 30 [illegible] இந்தச்சாலையை எதிர்பார்த்து, காத்திருக்கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும், [illegible] உறுப்பினர்களும் வாக்குறுதி கொடுத்தும் இந்தப் பணி [illegible] முடியவில்லை. ஆகையால் மக்கள் சேவைக்காகப் [illegible] புரட்சித் தலைவர் அரசு உடனடியாக இந்தச் சாலையை அமைக்க முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்தச் சாலை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் தமிழ்நாடு-கேரள மாநிலங்கள் எல்லையில் அமைந்திருக்கிறது. இதைப் போட வேண்டுமென்றால் ஏறத்தாழ 8 கிலோமீட்டர் தூரத்திற்குப் போட வேண்டும். அப்படிப் போடுவதாக இருந்தால் ஏறத்தாழ

1981 ஜனவரி 31]

60 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. ஆகவே, வருகின்ற ஆண்டுக்கட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை சாலை அபிவிருத்தித் திட்டமாக இது எடுத்துக் கொள்ளப்படும்.

பெரியாற்றின் குறுக்கே உள்ள பாலம்.

*வினா எண். 134—திரு. ஆர். டி. [illegible]பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியாற்றின் குறுக்கே கம்பத்தை சுருளிப்பட்டியுடன் இணைக்கின்ற பாலத்தை அகலப்படுத்தி பஸ் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்யும்பணி எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தற்போது இப் பணியின் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு ஆர். டி. [illegible]பாலன்: தலைவரவர்களே, பிரசித்திபெற்ற சுருளி நீர்வீழ்ச்சியைப் பார்க்க [illegible] பயணிகள் 20 கிலோ மீட்டர் தூரம் அதிகமாக இப்பொழுது செல்ல வேண்டியிருக்கிறது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான [illegible] பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, [illegible] அமைச்சரவர்கள் இதைப் பரிவோடு பரிசீலித்து சீக்கிரமாக [illegible] செய்து முடிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஏற்கெனவே அங்கே ஒரு குறு[illegible] பாலம் இருக்கிறது. அதன் அகலம் 3.85 கிலோமீட்டர் அளவுக்கு இருக்கிறது. இதை ஒரு உயர்மட்ட பாலமாக ஆக்குவதற்கு ஏறத்தாழ 8 இலட்சம் ரூபாய் செலவாகும். இப்போது நிதிநிலை சரியில்லாததால், நிதிவசதியைப் பொறுத்து பின்னர் கவனிக்கப்படும்.

திருச்சி-கரூர் நெடுஞ்சாலை.

*வினா எண். 135—திரு. எம். [illegible]: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி-கரூர் நெடுஞ்சாலையை (நாகப்பட்டிணம்-கடலூர் சாலை) அகலப்படுத்தும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ). இல்லை.

(ஆ). இக் கேள்விக்கு இடமில்லை

[1981 ஜனவரி 31

திரு. எம். சின்னசாமி: தலைவரவர்களே, இந்தச் சாலை திருச்சியிலிருந்து கரூர் வரை 80 கிலோமீட்டர் தூரம் இருக்கும். திருச்சியிலிருந்து கரூர் செல்லும்வரை குறுகிய அகலமுடைய சாலையாக இருக்கிறது; பழுதடைந்தும் இருக்கிறது. அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்தக் கருத்தை மனதிற்கொண்டு அடுத்த ஆண்டிலாவது இதை அகலப்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தச் சாலை ஒரு முக்கியமான சாலையாகும். இது நாகப்பட்டினம்—கடலூர்—மைசூர் சாலை. இது இரண்டு வண்டிகள் போகக்கூடிய அளவுக்கு அகலமுள்ள சாலை. ஒருசில இடங்களில் மட்டும், அதாவது கிலோமீட்டர் 142/2, 4, 6, 8 என்ற அந்தப் பகுதிகளில் மட்டும் குறுகிய சாலையாக இருக்கிறது. இதைக் கவனத்திற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் தான் அந்தமாதிரி குறுகிய இடம் என்று சொல்கிறார்கள். அது சரியல்ல. அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணம் கரூர்—திருச்சி பாதையில் வளைவுகள் அதிகமாக இருப்பது ஒன்று; மற்றொன்று சாலை ஓரத்தில் வாய்க்கால் ஒன்று ஓடுகிறது. கொஞ்சம் தவறினாலும் அந்த வாய்க்காலில் விழும் அபாயம் இருக்கிறது. ஆகவே, மக்களுடைய இன்டரெஸ்டைப் பாதுகாக்கின்ற வகையில், விபத்துக்களைத் தடுப்பதற்காக ஒன்றிரண்டு இடங்கள் அல்லாமல் 'ஹோல் செக்ஷனையும்' அகலப்படுத்தி, செம்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இது ஒரு முக்கியமான சாலை என்பதை ஏற்கெனவே இந்த அரசு கருத்திற்கொண்டிருக்கிறது. வலப்பக்கம் காவேரி ஆறும், இடப்பக்கம் பாசன வாய்க்காலும் ஓடுகின்றன. அதனால்தான் அகலப்படுத்துவதில் சிரமம் இருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும். ஆகவே, ஒருசில இடங்களில் இந்தப் பணியைச் செய்ய ஏறத்தாழ 16.5 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. நிதிநிலை சரியான உடன் இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-00)

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தச் சலையின் ஒரு புறத்திலே காவிரியும் மற்றொரு புறத்திலே வாய்க்காலும் ஓடுகின்றன என்றும் ஆகவே அதை அகலப்படுத்துவதிலே பிரச்சினைகள் இருக்கின்றன என்றும் சொன்னார்கள். ஆனால் அந்தச்

1981 ஜனவரி 31]

சாலையை முன்பு அமைக்கின்றபோதே கான்ட்ராக்டர்கள் சரியான முறையிலே செய்யாத காரணத்தால்தான் அது மேடும் பள்ளமும் உள்ள சாலையாக இருக்கின்றது. மேலும் அதை அகலப்படுத்துவதற்குரிய வாய்ப்பும் இருக்கின்றது. அங்கே தற்போது 5 நிமிடத்தில் 10 பஸ்கள் போகின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டியது மிக அவசியமான ஒரு காரியம். மாண்புமிகு அமைச்சரவர்கள் கோவைக்குச் செல்வதற்கு வேறு பாதை இருப்பதன் காரணத்தால் இந்தப் பாதையை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கு கேள்விதான் கேட்க வேண்டும். அமைச்சரவர்கள் செல்கின்ற பாதை பற்றி எல்லாம் பேசக் கூடாது.

அவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரராஜன் அவர்கள் குறிப்பிடுவது போன்று அது மிக முக்கியமான சாலை என்பதைக் கவனத்தில் கொண்டிருக்கிறோம். ஆகவே எவ்வளவு தூரம் அதைச் சரி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, இந்தச் சாலையின் முக்கியத்துவத்தை தான் அறிந்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த முக்கியத்துவத்தை அறிந்து மாநில அரசின் நிதியிலிருந்து இதைச் செய்யமுடியாத காரணத்தால் தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் இதை ஒப்படைத்து இதனை மத்திய அரசு செய்கின்ற வகையிலே நடவடிக்கைகளை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்தச் சாலை மாநில நெடுஞ்சாலை தான், தேசிய நெடுஞ்சாலை அல்ல. ஆகவே மாநில அரசு தான் இதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சாலையின் ஒரு பக்கத்தில் வாய்க்காலும் அடுத்த பக்கத்தில் காவிரியாறும் ஓடுவதாகவும் அதனால்தான் அதை அகலப்படுத்துவதற்கு முடியாது என்றும் சொன்னார்கள். ஆனால் அந்தச் சாலைக்கு அந்தப் பக்கம் ஏராளமான விவசாய நிலங்கள் இருக்கின்றன. ஆகவே பாதையை அந்தப் பக்கத்திற்கு மாற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற பாதையைச் சரி செய்யவேண்டும் என்பது தான் கேள்வி. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிப் பாதை போட வேண்டும் என்று இப்போது கேட்கிறார்கள். ஆனால் அப்படி தனிப்பாதை போட வேண்டும். என்றால் அதைப் பின்னர்தான் பரிசீலிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 ஜனவரி 31

திருநெல்வேலி மாவட்டத்தில் சுகாதாரக் கல்வி பற்றிய முன்னோடித் திட்டம்.

*வினா எண். 136—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சுகாதாரம் கல்வி பற்றிய முன்னோடித் திட்டம் ஒன்றை திருநெல்வேலி மாவட்டத்தில் செயல் படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) 'யுனிசிப்' நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெற்று ஒரு முன்னோடி சுகாதாரக் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற ஒரு செயலாக்க குறிப்பு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இந்தத் திட்டத்தினுடைய பலன் என்ன? அதற்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்கக்கூடிய வகையிலே நமது அரசு மீண்டும் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் விரிவாக இருக்கின்றது. இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை. ஆனால் மத்திய அரசிலிருந்து ஒரு கடிதம் வந்தது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகுதான் பலனும் கிடைக்கும். ஆகவே இப்போது அவர் கேட்கின்ற கேள்விக்குப் பதில் இருந்தால் சொல்லுங்கள்; இல்லை என்றால் இல்லை என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, திட்டமே கைவிடப்பட்டிருக்கின்றது. யுனிசிப்நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெற்று இத்திட்டத்தை நிறைவேற்றலாம் என்று நாம் எழுதி இருந்தோம். ஆனால் வொர்ல்ட் பேங்க் உதவியின் மூலம் இன்டென்சிவ் நியூட்ரிஷன் ப்ரோக்ராம் என்று இருக்கின்ற திட்டத்தின் மூலமே இதை நிறைவேற்றலாமே என்றும் அதனால் இத்திட்டத்திற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது என்றும் மத்திய அரசு நமக்குத் தாக்கீது அனுப்பி இருக்கின்றது.

1981 ஜனவரி 31]

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தத் திட்டம் அமலுக்கு வந்தால் அதனை தற்போது வளர்ந்து வருகின்ற தூத்துக்குடி நகரத்திலே அமைப்பதற்கு அரசுமுன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலியில் தானே தூத்துக்குடியும் இருக்கிறது. வேண்டுமானால் அதுபற்றித் தனிக் கேள்விபோட்டுக் கொள்ளுங்கள்.

கோபி அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கை.

*வினா எண். 137 திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோபி நகராட்சியில் உள்ள அரசு மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் பணியினை அரசு எப்போது துவங்கும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபியிலே இருக்கிற மருத்துவ மனையும், உடுமலைப் பேட்டையிலே இருக்கிற மருத்துவமனையும், திருப்பூரிலே இருக்கிற மருத்துவ மனையும் ஒரே ஆண்டிலேதான் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் மற்ற இரு மருத்துவமனைகளிலும் 200 படுக்கை வசதிகள் கொண்டவையாக மாற்றப்பட்ட பிறகும், கோபியிலே இருக்கிற மருத்துவ மனை மட்டும் 75 படுக்கைகள் கொண்டதாகவே இருக்கிறது. ஆகவே வருகிற நிதி ஆண்டிலாவது அதை விரிவுபடுத்துவதற்கான ஆலோசனையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதை விஸ்தரிப்பதற்கான எந்த விதமான திட்டமும் இல்லை என்றுதான் சொன்னேன். அடுத்த ஆண்டிற்காக, டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸஸ் அண்டு பேமிலி பிளேனிங் அவர்கள், பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரையில், இப்போது இருக்கக் கூடிய 75 படுக்கைகளை 100 படுக்கைகளாக ஆக்க வேண்டும் என்றும், அவுட் பேஷண்ட் 635 பேர்கள் வருவதற்கான வசதிகள் இருப்பதை அதிகப்படியாக்கி விஸ்தரிக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். அதன்படி அடுத்த ஆண்டு அமுல் படுத்துவது குறித்து, டி.எம்.எஸ். அவர்களின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

[1981 ஜனவரி 31

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோபி நகராட்சி மருத்துவ மனை 3 தாலுக்காக்களின் மத்தியிலே இருக்கக்கூடிய மருத்துவ மனை அதை 100 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனையாக மாற்றுவதற்கான திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். மக்களின் தேவையைக் கருதி, 150 படுக்கை வசதிகளாகவாவது மாற்றுவதற்கு அரசு மீண்டும் பரிசீலனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பொதுவாக தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளுக்கென்று, அவைகளை 100 படுக்கை வசதிகள் கொண்டதாக மாற்றுவது பற்றி பரிந்துரை செய்யப்பெற்றிருக்கிற திட்டம். தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனைகளில் 100 படுக்கைகளும், மாவட்ட மருத்துவ மனைகளில் 300 படுக்கை வசதிகளும் ஏற்படுத்த வேண்டும் என்பது பொதுவாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற திட்டம். இது அடுத்த ஆண்டு அமுலுக்கு வருவது பற்றிதான் அரசு ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது.

திருநெல்வேலி நகரப் பேருந்துப் பணி.

*வினா எண். 138 திரு. இ. முத்துரமலிங்கம்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி நகராட்சியில் இயங்கும் தனியார் நகரப் பேருந்துகளை அரசுடைமை ஆக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிகள் பேருந்துகள் ஒப்படைத்த பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின்மீது டெல்லி உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இ. முத்துரமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் தனியார் பேருந்துகள் எத்தனை வழித் தடங்களில் ஓடுகின்றன? அது போன்று அரசு பேருந்துகள் எத்தனை வழித்தடங்களில் ஓடுகின்றன என்பது பற்றிய தகவல் இருந்தால் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அர்களே, எந்தெந்தப் பேருந்துகள் எவ்வளவு ஓடுகின்றன என்கிற குறிப்பு என்னிடத்தில் இல்லை.

1981 ஜனவரி 31]

தனியார் பேருந்துகள் அரசுடைமை ஆக்கப்படுமா என்று தான் மூலக் கேள்வியில் கேட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடத்துக் கொண்டிருப்பதால், அதன் முடிவுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்திருக்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளை அரசுடைமை ஆக்கும்போது அதிலுள்ள நடத்துனர், ஓட்டுனர் போன்ற பணியாளர்களுக்கு வேலை கிடைக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குச் சம்பந்தமே இல்லை, தனிக் கேள்வி கொடுங்கள்.

திரு. மு. ஜான்வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளை தேசிய உடமையாக்குவது குறித்து வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்தில் நடப்பதாகக் கூறினார்கள். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசாங்க பஸ்கள் விடுவதற்கும் போதிய வண்டிகள் கைவசம் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் மக்களுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தனியார்களுக்கும் சில வழித்தடங்களில் பெர்மிட் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளை தேசிய உடமையாக்குவதற்கு உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நடக்கும் இந்தச் சூழ்நிலையைப் பார்க்கிறபோது, வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், தேசிய மயமாக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் முழுமையான கொள்கையாக இருந்தாலும் கூட எல்லா வழித் தடங்களிலும் வண்டியை விடுவதற்கு வேண்டிய சேஸிஸ்கள் கிடைக்காத நிலைமையைப் பார்க்கிற போது, அரசுடைமை ஆக்குவதை படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்கிற முறையில் தனியார்களுக்கும் பெர்மிட் கொடுக்கலாம் என்று அரசாங்கம் ஆலோசிக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. சே. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் இருக்கிற சில தனியார் பேருந்துகளை அரசுடைமை ஆக்குவது சம்பந்தமாக வழக்கு ஒன்று உச்ச நீதி மன்றத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். இருக்கட்டும். அதற்கு முன்பாக, அங்கே அரசாங்கத்தினுடைய கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் இருக்கிறதே அதின்

அதிகமான பேருந்துகளை ஓட்ட அரசு ஏற்பாடு செய்யுமா? ஏனென்றால், மொத்தமாக 4 மணிக்கு ஒரு முறை எல்லா பஸ்களும் ஒன்றன் பின் ஒன்றாகப் போய்விடுகின்றன. மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகையினால் அதைக் குறைக்கும் வகையில் பரவலாக, சரியான இடைவெளியில் பேருந்துகள் வரும் வகையில், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் அதிகமான பஸ்களை விட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: என்னுடைய கவனத்திற்கு இப்போது அதைத் தெளிவாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்வதோடு நமக்குக் கிடைப்பது மாதம் ஒன்றுக்கு 125 பேருந்துகள்தான். அந்தப் பேருந்துகளை நாம் தமிழகம் பூராவும் இயக்கவேண்டிய நிலையில் புதிதாகக் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப் படும் நிலையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு எவ்வளவு ஒதுக்கீடு கிடைக்கிறதோ அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரேநேரத்தில் நான்கு வண்டிகள் ஓடுகின்றன என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: கட்டபொம்மன் போக்கு வரத்துக்கழகம் அவர்கள் கையில் பேருந்துகளை வைத்துக் கொண்டு இயக்காமல் இல்லை. கிடைத்தவுடன் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திண்டுக்கல்—சென்னை விரைவுப் பேருந்துப் பணி

***வினா எண். 139 திருவேளச்சேரி வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

திண்டுக்கல்—சென்னை வழித்தடத்தில் திருவள்ளூர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஓர் விரைவுப் பேருந்து விடும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: சென்னையிலிருந்து திண்டுக்கல் வரை விரைவுப் பேருந்து விட மைலேஜ் இல்லை. திண்டுக்கல் வழியாகச் சென்னையிலிருந்து பொள்ளாச்சி வரை ஒரு பேருந்து விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பேருந்தில் திண்டுக்கல் பிரயாணிகளுக்கு என இருக்கைகள் ஒதுக்கப்பட உள்ளன.

திரு. வேளச்சேரி வி. பி. பாலசுப்பிரமணியன்: அப்படி ஒதுக்கப்படுகிற சீட்களில் குறைந்தது பாதியாவது ஒதுக்கப் படுமா? சென்னை—பெரியகுளம், சென்னை—கம்பம் வண்டி களில் திண்டுக்கல்லில் ஏறுகிற பயணிகளுக்கு தேவைப்பட்ட அளவில் சீட்கள் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:— திண்டுக்கல் வந்து ஏறுகிற பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அதற்கேற்ப அந்த வழியாகப் போகிற எல்லாப் பேருந்துகளிலும் இருக்கைகள் ஒதுக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராகயிருக்கிறது.

திரு வேளச்சேரி வி. பி. பாலசுப்பிரமணியன்: சென்னை-பொள்ளாச்சிக்கு சொகுசு வண்டிகள் (சூப்பர் டீலக்ஸ்) விடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று பேருந்து இருப்பதைப்பொறுத்து அதற் கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு கே. குப்புசாமி: பொள்ளாச்சியில் இருந்து திண்டுக்கல் வழியாக சென்னை வருகிற இந்த சொகுசு பேருந்தை பழனி வழியாக விட உத்தேசமுண்டா? அப்படியென்றால் பழனியில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு பயணிகள் ஏறுவதற்கான ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நமக்கிருக்கிற பேருந்துகளில் தோராயமாக 42 இருக்கைகள்தான் இருக்கும். ஒவ்வொரு ஊருக்கும் எவ்வளவு ஒதுக்கமுடியும் என்றுபார்த்து பழனிவழியாக பேருந்து வருவதில் அதற்கான ஒதுக்கீடு செய்யப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருந்தகங்கள்

***வினா எண். 140 திரு. எஸ். சிவராமன்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) தற்பொழுது எத்தனை கால்நடை மருந்தகங்கள் ஒரு ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) இரண்டுக்கும் குறைவாக இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களில் அதிக கால்நடை மருந்தகங்கள் திறக்க அரசு நடவடிக்கை ஏதும் மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) ஒன்று முதல் மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) அரசின் கொள்கைப்படி தேவையின் அடிப்படையில் கூடுதல் கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொருத்தும் அருகாமையில் இருக்கும் கால்நடை மருந்தகங்களைப் பொருத்தும் ஒவ்வொரு ஆண்டும் 10 கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். சிவராமன்: அமைச்சர் அவர்கள் ஒன்று முதல் மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் எவ்வளவு ஒன்றியங்களில் கால்நடை மருந்தகங்கள் இயங்கி வருகின்றன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: 184 ஒன்றியங்களில் ஒன்று வீதம் 184 கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 184 மருத்துவமனைகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இந்த மருந்தகங்களிலே பட்டம் படித்த பட்டதாரி டாக்டர்களை நியமிக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகங்கள் எங்கெங்கே இருக்கின்றனவோ, அங்கே கால்நடை மருத்துவர்கள் அமர்த்தப்படுவார்கள். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

டாக்டர் கே.பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கால்நடை மருத்துவர்கள் இல்லை. 10 மாதங்கள் பயிற்சி பெற்ற லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள்தான் பணியாற்றுகிறார்கள். அதனால், பி.வி.எஸ்ஸி., பட்டம் படித்த மருத்துவர்களை நியமிப்பதாக அரசு தெரிவித்ததே, அதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. சே. அழகர்சாமி. பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 2, 3 கால்நடை மருத்துவமனைகள் இருக்கின்றன. இதுபோக, சப் சென்டர்களில் கால்நடை உதவியாளர்கள் இல்லாமல், எந்தவிதமான வைத்திய உதவியும் இன்றி இருக்கிறதே, இந்த இடங்களிலே உதவியாளர்களை நியமனம் செய்ய வேண்டுமென்றால் பயிற்சிப் பள்ளிகள்கூட இல்லையே? ஆகவே, இந்த இடங்களிலே எப்படி, எந்த முறையிலே செயல்படுவதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிவதோடு, இந்த கால்நடை உதவியாளர்கள் இல்லாத மருத்துவமனைகளிலே உடனடியாக அவர்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத காரணத்தால், தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

உ. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

*திரு என். எஸ். வி. சித்தன்: பாயிண்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசின்மீது கொடுக்கப்பட்ட கண்டனத் தீர்மானத்தின்மீது விவாதம் 4, 5 தேதிகளில் தொடரப்படும் என்று தாங்கள் அறிவித்தீர்கள். ஆனால், இன்றைய தினம் காலையிலே. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு நான் ஒரு அறிவிப்பு தரப் போகிறேன். அதற்குப் பிறகு தாங்கள் பேச வேண்டியிருக்காது. எனவே, உட்காருங்கள்.

திரு என். எஸ் வி. சித்தன்; எனக்குத் தாங்கள் பேச அனுமதி கொடுத்தீர்கள். எனவே, பேச அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதற்காக என்பதைப் பற்றித் தெரியாமல் முதலில் அனுமதி கொடுத்தேன். அது என்ன என்று தெரிந்த பிறகு, இப்போது அனுமதியை மறுக்கிறேன்.

திரு என். எஸ். வி சித்தன்: அனுமதி கொடுத்துவிட்டு பாதியிலே நிறுத்துவது சரிதானா? எனவே தயவுசெய்து பேச அனுமதியுங்கள். சட்டமன்றத்தில் அ. தி. மு. க. அரசின்மீது கண்டனத் தீர்மானம் வந்திருக்கிறது. விவாதம் 4, 5 தேதிகளில் என்றிருந்தது. அதைத் தாங்கள் அறிவித்தீர்கள். இப்போது அதிலே மாற்றம் வந்திருக்கிறது. 5, 6 தேதிகளில் என்று இன்று காலை 'தினத் தந்தி' பத்திரிகையிலே வந்திருக்கிறது. இந்தச் செய்தி சரியா? சரி என்றால், இங்கே சபை நடந்து கொண்டிருக்கும்போது, இங்கே அறிவிப்பதற்கு முன்னரே பத்திரிகையில் வந்திருப்பது சரியா என்பதை நான் அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 12.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குத்தான் நான் உங்களைப் பேசவேண்டாம் என்று சொன்னேன். எதிர்க் கட்சித் தலைவர்களை எல்லாம் கலந்துதான் இந்த முடிவெடுக்கப் பட்டது. தலைவர்களுக்குத் தெரியும். உங்களுக்கு அவர்கள் சொல்லவில்லை. இதற்கு நான் பொறுப்பில்லை. உட்காருங்கள்.

(பேரவைத் தலைவர்)

30-1-1981 ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் பற்றிய திருத்திய நிகழ்ச்சிநிரலின் விவரம் வருமாறு

31-1-1981 (சனிக்கிழமை)	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1979-80 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்.
1-2-1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
2-2-1981 (திங்கட்கிழமை)	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1979-80 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்—தொடர்ச்சி.
3-2-1981 (செவ்வாய்க்கிழமை)	பேரவைக் கூட்டம் இல்லை.
4-2-1981 (புதன்கிழமை)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சியும் பதிலுரையும்.
5-2-1981 (வியாழக்கிழமை)	அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்.
6-2-1981 (வெள்ளிக்கிழமை)	
7-2-1981 (சனிகிழமை)	1980-81 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும்; அதற்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தலும்.
8-2-1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
9-2-1981 (திங்கட்கிழமை)	
10-2-1981 (செவ்வாய்க்கிழமை)	அரசு அலுவல்கள்.
11-2-1981 (புதன்கிழமை)	தேவையிருப்பின் அரசு அலுவல்கள்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

(ஆ) தமிழ்நாடு நிலமேம்பாடு வாரியம்—மூன்று உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் (Tamil Nadu Land Improvement Board) தேர்தலுக்காக கீழ்க்கண்ட மூவருடைய பெயர்கள் முறைபாக நியமனம் செய்யப்பட்டுள்ளன:

1. திரு. பி. எம். தங்கவேல்ராஜ்
2. திரு. செ. இராமலிங்கம்
3. திரு. கே. ஆர். கணபதி

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சரியாக இருப்பதால், மேற்கண்ட மூவரும் தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என அறிவிக்கிறேன்.

(இ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியம்—உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தலுக்கு திரு. கே. குப்புசாமி அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளரின் எண்ணிக்கையும், நிரப்பப்படவேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், திரு. கே. குப்புசாமி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கிறேன்.

(ஈ) மதிப்பீட்டுக் குழு—ஒரு உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1980-81 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவில் திரு. வி. வால்மீகி அவர்கள் மறைவினால் ஏற்பட்ட ஒரு வெற்றிடத்தை நிரப்பும்பொருட்டு, திரு. எல். இளையபெருமாள் அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பெற்றுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப் பெறவேண்டிய வேட்பாளரின் எண்ணிக்கையும் நிரப்பப் பெற வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், திரு. எல். இளையபெருமாள் இக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினை.

பேரவையின் விதிகளை நடைமுறைப்படுத்தல்.

திரு .ரா. உமாநாத்: பாயின்ட் ஆப் ஆர்டர். ஒரு குறிப்பிட்ட விதி இந்த அவையில் என் ஃபோர்ஸ் பண்ணாதது சம்பந்தமாக பாயின்ட் ஆப் ஆர்டர். அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவை யொட்டி புரோகிராமைச் செல்லியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக இரண்டு முக்கியமான விதிகள் இருக்கின்றன. அந்த விதிகள் கடைப்பிடிக்கப்படாததால் தான் அடிக்கடி உங்களுக்கும் நமக்கும் கான்ஃப்ளிக்ட் வருகிறது.

விதி 259-ன்கீழ் பேரவைக்கு அந்த ரிப்போர்ட்டை சப்மிட் பண்ண வேண்டுமென்றிருக்கிறது. விதி 259——

''சட்ட முன்வடிவுக்கோ சட்ட முன்வடிவுகளின் கோர்வைக்கோ அல்லது பிற அலுவல்களுக்கோ இக்குழுவினால் வகுத்துக் கொடுக்கப்பெறும் கால அட்டவணை பேரவைத் தலைவரால் பேரவைக்கு அறிவிக்கப்பெற வேண்டும்.''

விதி 260—பின்பற்றப்பெற வேண்டிய நடைமுறை—

'' பேரவைக்கு அவ்வாறு அறிவிக்கப்பெற்ற பின்பு கூடிய விரைவில் ' அலுவல் ஆய்வுக் குழு பின்னர் சட்ட முன்வடிவுக்காக அல்லது சட்ட முன்வடிவுகளுக்காக என்றும் பிற அலுவல்களுக்காக என்றும் முன் மொழிந்துள்ள கால ஒதுக்கீட்டை இப் பேரவை ஏற்றுக் கொள்கிறது ' என்கிற ஒரு தீர்மானம் பேரவைத் தலைவரால் குறிப்பிட பெற்ற அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர் ஒருவரால் மொழியப் பெறலாம். இத்தகைய தீர்மானம் ஒன்று பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பெறின் அதுவே பேரவையின் ஆணையாகச் செயலுக்கு வரும்.''

இந்த விதிகள் இதுவரையில் இந்த அவையில் என்ஃபோர்ஸ் பண்ணாமல் வைக்கப்பட்டிருக்கின்றன. பேரவைத் தலைவர் அவர்களுக்கு பார்லிமென்டின் நடைமுறை தெரியும். வீக் என்டில் பி. ஏ. சி, ரிப்போர்ட்டை வைப்பார்கள். ஹவுஸ் அதை அப்ரூவ் பண்ணும், உறுப்பினர்களும் யோசனைகளைக் கூறுவார்கள். அந்த முறையில் இந்த ஹவுஸிலும் அப்ரூவ் பண்ணியிருந்தால் இந்த கான்ஃபிளிக்ட் வருவதற்கு வழி இல்லை.

விதி 262 என்ன கூறுகிறது?

விதி 262 இல் ''பேரவை முன்னவரின் வேண்டுதல்பேரில், பேரவை அனுமதித்தால் அன்றி அவ்வாணையில் மாறுதல் செய்யக்கூடாது'' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சேஞ்ச் ஏதாவது தேவையாக இருந்தால் பேரவை முன்னர் அதைக் கேட்கலாம். அப்போதும் ஹவுஸ் தான் அதை

பெர்மிட் பண்ணவேண்டும். அப்படிச் செய்கிறபோது ஹோல் புராகிராம் ஹவுஸினுடைய புராகிராமாக மாறுகிறது. ஹவுஸின் புரகிராம் மாறவேண்டுமென்றால் லீடர் ஆப் தி ஹவுஸ் கன்சட் கேட்டு அவையிலே வைக்கலாம். ஆகவே விதிகள் 260,262 இரண்டையும் நாம் ஸ்ட்ரிட்டாக என்ஃபோர்ஸ் பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரைக்கும் நாம் என்ஃபோர்ஸ் பண்ணாததால் தான் தேவையற்ற நிலைமைகள் வந்தன. பிரஸிலேயும் வந்தது.

இரண்டாவதாக நான் சொல்ல விரும்புவது. திரு. சித்தன் அவர்கள் சொன்னார்கள், கடசித் தலைவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றாலும் பிரஸுக்கு சொன்னாலும், ஹவுஸிலேதான் சொல்ல வேண்டும், ரூல்ஸ் ரூல்ஸ்தான். 'The B.A.C. report, the House is entitled to get it first and not the 'Press'. இங்கே சப்மிட் பண்ணாமல் பிரஸுக்கு சொல்லக் கூடாது. We have to go by rules on such things. மற்றது எல்லாம் We can adjust ourselves.

இந்த அவையிலே சொல்லாமல் பிரஸ் கான்பரன்ஸ் ஹோல்டு பண்ணக்கூட கூடாது. எந்தவிதமான சேஞ்ஸ் செய்தாலும் ஹவுஸிலேதான் சொல்ல வேண்டும், அதை ஸ்ட்ரிக்ட்டாக கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகள் 260,262 இரண்டையும் நடைமுறைப்படுத்துவதிலேயே என்னைப் பொறுத்த வரையிலே சிக்கல் இல்லை, இதுவரையிலே நாம் நடைமுறைப் படுத்தாதற்குக் காரணம் ஒரு சுமுகமான சூழ்நிலையிலேயே பி.ஏ.சி.-யிலே தலைவர்களைக் கலந்து பேசி முடிவுகளை எடுக்கிறோம். சில மாறுதல்களையும் அங்கே தலைவர்களைக் கலந்துபேசி முடிவு எடுக்கிறோம். நேற்றைய சம்பவம் சில பேருக்கு அறிவிக்கப்படாமல் விட்டுப்போய்விட்டது. கன்சன்ட் கேட்டிருந்தால் கன்சன்ட் கிடைத்திருக்கும். கன்சன்ட் ஒரு பெரிய பிரச்சினை இல்லை. எனக்கு இருக்கிற சூழ்நிலையில் நான் இறங்கி வந்து உங்களிடம் கன்சன்ட் வாங்குவது கஷ்டம். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கிறபோது நான் இறங்கிவந்து வாங்க முடியாது. இங்கே இருக்கிற அவை முன்னவர் அவர்களோ அல்லது மற்றவர்களோ கன்சன்ட் வாங்கியிருந்தால் பிரச்சினை தீர்ந்துபோய் இருக்கும், இது ஒரு பிரச்சினையாக ஆகியிருக்காது. கன்சன்ட் வாங்கிவிட்டார்கள் என்ற நம்பிக்கையின்பேரில் அறிவித்துவிட்டேன். அவ்வளவு தான் நடந்தது. வேறு ஒன்றும் இல்லை. ஆகவே இதை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று ஆரம்பித்தால் கடைப்பிடிக்கலாம், எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. ஒவ்வொரு முறையும் அவையைக் கேட்டுக் கேட்டு முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலை வரும்.

இதுவரைக்கும் எப்படி இருந்தது என்றால் அலுவல் ஆய்வுக் குழு வந்து, தலைவர்களை கலந்து அலுவல் முன்னவர் அவர்களோ அல்லது அவர்களின் சார்பிலே அமைச்சர்களோ கலந்து பேசி முடிவு எடுத்து இதுவரைக்கும் சபையை ஒழுங்குபடுத்திக் கொண்டே போய்கொண்டு இருக்கிறோம். ஆகவே இதை வலியுறுத்த வேண்டுமா என்பதைப் பற்றி அரசுத் தரப்பிலே என்ன சொல்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: ரூல்ஸை வலியுறுத்துவதற்கு அவர்களை கன்சல்ட் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் இருக்கிறீர்கள், நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு சாராரையும் கேட்பது என்ற மரபு எனக்கு இருக்கிறது. அவர்களையும் கேட்பது முறைதான்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விதி 260 இல் 'As soon as may be after the report has been made to the House, a motion may be moved by a Member of the Committee' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. "May be moved" என்று, தான் இருக்கிறது, Not that shall be moved. தேவைப்பட்டால் வேண்டுமென்றால், அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுக்கப்படுகிற முடிவுகளில் சங்கடங்கள் அல்லது சரச்சைகள் ஏற்பட்டால் அந்த நிலையைப் போக்குவதற்கு நாம் அவையின் மூலமாகக் காரியமாற்ற வேண்டுமென்ற நிலை வருகிறபோது நிச்சயமாக அதைப் பயன்படுத்தலாம். அலுவல் ஆய்வுக் குழுவிலே பல்வேறு கட்சித் தலைவர்களை வைத்துக்கொண்டு பேசி எல்லா நிலைமைகளையும் ஆராய்ந்து முடிவு எடுக்கிறோம். நாம் ஒரு தீர்மானம் கொண்டுவருகிற போது உறுப்பினர்கள் இது சௌகரியம் இல்லை, அது சௌகரியம் இல்லை என்று பேச ஆரம்பித்தால் அவையினுடைய நேரம் போதுமான அளவு கிடைக்காது. விதிகளிலே 'May be moved' என்று தான் போட்டிருக்கிறார்கள். தாங்கள் விரும்பப்பட்டால் சில நேரங்களிலே மாற்றிக்கொள்ளலாம், விரும்பம் இல்லையென்றால் விட்டு விடலாம். இதை அந்த விதி தெளிவாக்குகிறது.

[மு.ப. 10.30]

திரு. ரா. உமாநாத்: விதி சம்பந்தமாக முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். 'மே' என்று போட்டால் லீகல் பார்லன்களிலே நமக்கு எல்லாம் தெரியும். 'We' என்று சொன்னால் it inceludes 'I' also. In Legal parlance, 'may' stands for shall also.

விதிகளில் 259-வது பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கின்ற தலைப்பு, "பேரவைக்கு அறிக்கை அளித்தல்" என்றும், 260—வது பிரிவில் பின்பற்றப்பெற வேண்டிய நடைமுறை என்றும் மிகவும் தெளிவாக இருக்கிறது.

[திரு. ரா. உமாநாத்]

இரண்டாவது விஷயம் என்னவென்றால், நம்முடைய அனுபவத்தில் இப்படி நடந்திருப்பது ஒரு தடவை மட்டுமல்ல; முன்பே ஒரு தடவை இம்மாதிரி நடந்து, எதிர்க்கட்சித் தலைவர்கள் சுமார் ஒரு மணி நேரம் அதுபற்றிப் பேசினார்கள். பி.ஏ.சி. எடுத்த புரோகிராமை மாற்றியமைத்ததால் அது பெரிய இஷ்யூவாக ஆகி வாக்அவுட் கூட நடந்ததாக நினைக்கிறேன்.

அடிக்கடி இப்படி ரூலை என்ஃபோர்ஸ் செய்யாத காரணத்தால் நடைமுறையில் இப்படிப்பட்ட தகராறுகள் வருகின்றன.

மூன்றாவதாக டைம் பற்றிய பிரச்னையைக் சொன்னீர்கள். கன்சல்டேஷன் முறையைப் பின்பற்றிச் செய்து இருக்கலாம். You can leave it to the House. You could have got the consent of the House. நாங்கள் டாஸ் பண்ணுகிறோம், We will say 'Okey' ஆகவே டைம் பேக்டர் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு தீர்மானத்திற்கு ஒரு மணி நேரம் என்று முடிவெடுத்தால் அந்த ஒரு மணி நேரத்திற்குள் முடிவது இல்லை. அம்மாதிரி பல நேரத்திலே சபையின் போக்கை உத்தேசித்துச் சில முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தச் சபையை நடத்திக் கொண்டிருக்கிறோம். அப்படியில்லாமல் ரிஜிட் ஆக நடக்க வேண்டுமென்றால் பெரிய கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தது மாதிரியிருக்கும். அது தேவையா என்பதைக் கேட்க விரும்புகிறேன். இருக்கின்ற சூழ்நிலைகளை ஒட்டி இப்படியே தொடர்ந்து நடத்திக் கொண்டு போவது நல்லது என்று நினைக்கிறேன். ஏனென்றால் மனித எண்ணத்தோடு, மனித சுபாவத்தோடு அந்த விதிகளோடு பழக வேண்டியிருக்கிறது. சில தலைவர்கள் பேசும்பொழுது அதற்கு வழிவிட்டுப் போக வேண்டியதாகத்தான் இருக்கிறது. ஆகவே, அம்மாதிரி நேரங்களில் விதிப்படியே நாம் இந்த முறைகளுக்கு வந்தோம் என்றால் ஒவ்வொன்றுக்கும் கட்டுப்பட்டுப் போக வேண்டியிருக்கும். எனவே, இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் சென்றால் அமைதியாகப் போய்க் கொண்டிருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: அமைதியாகப் போகாததால்தானே பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி ஓரிரு சம்பவங்கள் தானே தவிர வேறொன்றும் இல்லை. நேற்று நடைபெற்றது எதிர்பாராதது. எல்லோருக்கும் அறிவித்து விட்டார்கள் என்று நான் நம்பிவிட்டேன்.

திரு. ரா. உமாநாத்: இந்த ரூலைக் கடைப்பிடித்திருந்தால் பிரச்னை இருக்காது. நேற்று ஒரு மணி நேரம் டயம் இருந்தது. அப்பொழுது கேட்டிருந்தால் நாங்கள் எங்கள் கருத்துகளைச் சொல்லியிருப்போம். எங்களைக் கன்சல்ட் செய்யவில்லை என்று அப்பொழுது சொல்லியிருப்போம்; உடனே அது உங்கள் கவனத்திற்கு வந்திருக்கும். நேற்று நடந்த சில நிகழ்ச்சிகளைத் தவிர்த்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரேயடியாக மெக்கானிக்கலாக டெக்னிக்கலாகக் கடைப்பிடிக்க வேண்டாம் என்று நினைக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: நார்மலாகக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை கடைப்பிடிக்கவில்லை என்பதுதான் எங்கள் கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செய்ய வேண்டிய முறைகளை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. இது எதிர்பாராமல் நடந்துவிட்டது.

திரு. ரா. உமாநாத்: மாற்ற வேண்டுமென்று சொன்னாலும், You could have done it technically and mechanically. Any change can be done only with the consent of the House என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஒவ்வொரு தடவையும் ஹவுசுக்கு வரவேண்டிய சூழ்நிலை இருக்கும்.

திரு. ரா. உமாநாத்: பார்லிமெண்டில் செய்வது இல்லையா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்லிமெண்ட் முறைகள் சம்பிரதாயம் ஆகியவைகளைப் பற்றி நம் இரண்டு பேர்களுக்குமே தெரியும்; ஆகவே, அதைப்பற்றி அதிகமாக விவாதிக்க வேண்டிய அவசியமில்லை.

திரு ரா. உமாநாத்: அரை மணி நேர விவாதம் என்றாலும், 3 மணி நேர விவாதம் என்றாலும், பி. ஏ. சி.-யில் முடிவு எடுக்கப்பட்டிருந்தாலும், அது முடியாத நிலை ஏற்படும் நேரத்தில் பார்லிமெண்டில் ஸ்பீக்கரே, இந்த விவாதத்திற்கு இன்னும் ஒரு மணி நேரம் எடுத்துக்கொள்ளலாமா என்று கேட்கிறார் Consensus of the House is obtained. It is not affecting us. It may cause some inconvenience to the Members, but we can avoid major confrontation with the Chair and this side. We can discuss the issue and solve the problem. If there is any difficulty, we can [illegible] them.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:- அடுத்த அலுவல் ஆய்வுக் குழுவிலே இதே பிரச்னையை வைத்து, எல்லாத் தலைவர்களின் அபிப்பிராயங்களையும் கேட்டு ஒரு முடிவை அறிவிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: அந்த 'பிரஸ்' விஷயத்தையும் தயவு செய்து இனிமேல் கவனிக்க வேண்டும்.

தகவல் கோரல்.

(4) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. இரா. கருப்பையா: நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். நான் ஏற்கனவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது மிகவும் முக்கியமான விஷயம். அரிசி கிடைக்கவில்லை. பத்திரிகைகளிலே தகவல் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது 54-வது விதியின்கீழ் வருகிறது.

திரு. இரா. கருப்பையா: 55-வது விதியிலே கொடுத்ததை அனுமதிக்காமல், 54-வது விதியின்கீழ் அது எடுக்கப்படுகிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, இங்கே பேசி விட்டால், ஒத்தி வைப்பாகவே எடுத்துக் கொள்ளலாம். என்னுடைய அனுமதி தேவையில்லையே.

நீங்கள் நேற்றே சொன்னீர்கள். ஏற்கனவே கொடுத்தவை பெண்டிங்கில் இருக்கின்றன. இன்றைக்கு 54-வது விதியின்கீழ் இரண்டு எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஒவ்வொருவரும் முக்கியமானதைத்தான் கொடுக்கிறார்கள். திரு. கருப்பையா அவர்களுக்கு முக்கியமாகப்படுவது மற்றொருவருக்கு முக்கியமாகப் படாமலிருக்கலாம். (குறுக்கீடு) எல்லோரும் மக்களுக்காகத்தான் பாடுபடுகிறார்கள். தனியாக, அவர்களுக்காகக் கேட்கவில்லை. யாரும் தனிப்பட்ட யாருக்காகவும் கேட்கவில்லை. எல்லோரும் பொதுவாக, நாட்டுக்காக, மக்களுக்காக, உழைக்கத்தான் இங்கு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு மேலும் இரண்டு பிரச்னைகள் வந்திருக்கின்றன. உங்களுடையது பின்னால் தான் வரும். அதுவரையில் பொறுத்திருக்க வேண்டும்.

திரு. இரா. கருப்பையா: அந்தத் தீர்மானத்தை உடனே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு எடுத்துக் கொள்வதற்கில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: நான் ப்ரொசிஜர் சம்பந்தமாக ஒரு பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் ரெய்ஸ் பண்ண வரும்புகிறேன். இதே பிரச்னை சம்பந்தமாக, 21—1—81 அன்று நான் ஒரு அவசர ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்தது, 21—1—81 அன்றைக்குத்தான் வந்தது. திரு. இளையபெருமாள் அவர்கள் 20 ஆம் தேதி கொடுத்துவிட்டார். ஆகவே, அவர் பெயர் முதலில் வந்திருக்கிறது. நீங்கள் 21ஆம் தேதி கொடுத்தீர்கள். ஆகவே, உங்களுடைய பெயர் இரண்டாவது வந்திருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: 21 ஆம் தேதி நான் கொடுத்தது நிராகரிக்கப்பட்டு, 23-ஆம் தேதி எனக்குத் தெரிவிக்கப்பட்டது. 21ஆம் தேதி அவசரப் பொது முக்கியவத்துவம் வாய்ந்த தீர்மானத்தைக் கொடுத்தேன். அலுவலகத்துலே நான் விசாரித்த நேரத்தில் வேறு தீர்மானங்கள் பென்டிங்காக இல்லை. அது மட்டுமல்ல, இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளவில்லை. 54-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்ததைத்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன், எடுத்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: இரண்டும் ஒரே நேரத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆமாம், ஒன்றை ஏற்றுக் கொண்டேன், ஒன்றை மறுத்து விட்டேன்.

திரு. ரா. உமாநாத்: நீங்கள் திரு. இளையபெருமாள் 20 ஆம் தேதியே கொடுத்துவிட்டார் என்று சொல்கிறீர்கள் அவர் பேரில் பெர்சனல் ப்ரஜுடிஸ் கிடையாது. We have got a great respect for him. 20ஆம் தேதி கொடுத்த அந்த மோஷன் மறுக்கப்பட்டது என்று இன்டிமேஷன் போனதற்குப் பிறகு,—நான் இருக்கக்கூடிய தைச் சொல்கிறேன். நீங்கள் கரெக்ட் செய்யுங்கள்—இவர் இரண்டும் கொடுத்த பிறகு, அது கிளப் பண்ணப்பட்டதாகத் தெரிகிறது. If that is the fact 20ஆம் தேதி கொடுக்கப்பட்டது மறுக்கப்பட்டால், நீங்கள் மறுபடியும் வந்ததை வைத்துப் பார்த்தால், அது செக்கன்டாகத்தான் வரும்.

[முற்பகல் 10. 40]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி அல்ல. என்னுடைய அலுவலகத்தைப் பொறுத்தவரையில்....

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 55-வது விதியின் கீழ் ஒரு உறுப்பினர் ஒரு தீர்மானத்தைப் பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் கொடுத்திருந்து, அந்த உறுப்பினர் அனுமதியில்லாமலேயே அது 54-வது விதியின் கீழ் மாற்றப்படுவதால், அந்த உறுப்பினரின் உரிமை பாதிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது திரு கருப்பையாவின் பிரச்சனைக்குள்ளே போகக்கூடாது. திரு கருப்பையாவின் பிரச்சினையில் நான் ஏற்கனவே தீர்ப்பளித்து விட்டேன். திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள் அவர் இரண்டிலுமே கொடுத்திருக்கிறார் நான் 55-வது விதியின்கீழ் அவர்கள் கொடுத்திருந்த தீர்மானத்தைத் தள்ளிவிட்டு, 54-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டதை எடுத்துக் கொண்டேன். 20 ஆம் தேதியன்றே திரு இளையபெருமாள் அவர்கள் 54-வது விதியின்கீழ் கொடுத்திருக்கிறார். ஆகவே இளையபெருமாளையும் அதில் சேர்த்திருக்கிறேன். திரு. ஹேமச்சந்திரனுக்கு தற்போது இருக்கும் பிரச்சினை இது அவர் தொகுதி என்பதுதான் அவர் தொகுதிக்கு அவர் மிக நன்றாகவே வாதாடுகிறார். அதை நான் பாராட்டுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இங்கே மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் என்னுடைய பெயரும், மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுடைய பெயரும் விடப்பட்டு, அதற்குப் பின்னர்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. மற்ற மெம்பர்கள் பெயர்கள் எல்லாம் குறைவில்லாமல் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே இதில் something has happened என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தடைப் செய்வதிலே ஏற்பட்டதவறாகும் அதற்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டு இருக்க முடியாது உங்கள் இருவர் பெயர்களும் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. உங்கள் தொகுதிக்கு நீங்கள் மிக அழகாக வாதாடுகிறீர்கள். நான் அதை ஒத்துக்கொள்கிறேன்.

[1981 ஜனவரி 31

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் 55-வது விதியின் கீழ் சபையினுடைய அலுவலகளை ஒத்திவைக்கவேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருந்தேன். அது 54-வது விதியின் கீழ் மாற்றப்பட்டிருப்பதாக பேரவைத் தலைவர் அறிவித்திருக்கிறார். அது 55-வது விதியின் கீழே இருந்தால் இது சம்பந்தமாக விளக்கங்களைப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கின்றது. 54-வது விதியில் அந்த வாய்ப்பு பறிக்கப்படுகிறது. ஆகவே இப்படி என்னுடைய உரிமை பறிக்கப்படுவதால் அதை 55-வது விதியின் கீழேயே விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி 55-வது விதியின் கீழ் இருப்பதை 54-வது விதியின் கீழ் மாற்றப்படக்கூடாது என்று உறுப்பினர்கள் விரும்பினால் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் இப்போது முக்கியத்துவம் கருதி முடிந்த அளவில் தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. சோ. அழகர்சாமி: இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது தான். இந்து பத்திரிகையிலே வந்திருக்கிறது. பையை எடுத்துக் கொண்டு போனார்கள், வெறும் கையை வீசிக்கொண்டு வந்தார்கள் என்று போட்டிருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: நல்லவேளையாக பையை எடுத்துப் போனவர்கள், பையையும் விட்டுவிட்டு கையை வீசிக்கொண்டு வந்தார்கள் என்று இல்லாமல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்லவேளையாக 'இந்துப் பத்திரிகை'யை ஒத்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

(5). கவன ஈர்ப்புகள்.

(அ) கன்னியாகுமரி மாவட்ட குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. திருவாளர்கள் எல். இளையபெருமாள், ஜே. ஹேமச் சந்திரன், டி. மணி, ப. பொன்னுரங்கம், நா. சுந்தரராஜ், எஸ் ரெத்தினராஜ், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் காவல் நிலையத்தில் 1981 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 18 ஆம் தேதியன்று இரவு ஏ. ஜே. ராஜ் என்பவர் இறந்தது பற்றிய "அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

1981 ஜனவரி 31]

அறிக்கை.

அரசுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி சில மாதங்களுக்கு முன்பு குலசேகரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அலெக்ஸாண்டர்புரத்தில் ஒரு சிறு மாதா கோவில் கட்டப்பட்டது. அதைச் சுற்றி வசித்த சிலருக்கு அம் மாதா கோவிலில் நடைபெறும் இறைவழிபாடு இடஞ்சலாகப்பட்டது. இவ்வழிபாட்டை எதிர்த்தவர்களுள் ஒருவர் இறந்துபோன ஏ. ஜே. ராஜு. இவர் இந்திரா காங்கிரஸ் அரிசனப் பிரிவின் மாவட்ட தலைவர். அம் மாதா கோவிலின் வழிபாடு குறித்து குலசேகரம் காவல் நிலையத்தில் இரு பிரிவினரிடமிருந்தும் மனுக்கள் வரப்பெற்றன. இரு பிரிவினரும் பொது அமைதியைக் காக்கும்படி எச்சரிக்கப்பட்டனர்

2 மேற்சொன்ன விஷயமாக 17-1-1981 அன்று அக் கிராமத்தின் பாது இடத்தில் கலவரம் செய்தனர் குலசேகரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு 7 நபர்களை 18-1-1981 காலை காவல் நிலையத்தில் ஆஜராகும்படி கூறிவிட்டு வந்தார். அவ்வாறு அவர்கள் அன்று காவல் நிலையம் வராததால் அவர்கள் மீது குற்ற எண் 17/81-ல் இந்திய தண்டனைச் சட்டம் 160-வது பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

3. 18-1-1981 இரவு 8.00 மணி அளவில் மறுபடியும் அக் கிராமத்தில் கலவரம் நடந்தது. உதவி ஆய்வாளரும் அவர் பார்த்திபனும் சம்பவம் நடந்த இடம் சென்று ராஜுவையும் மற்றும் 8 பேரையும் இரவு 9.30 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்தனர். காவல் நிலையம் வந்தவுடன் ராஜுவுக்கு வலிப்பு வந்தது. உடனே அவர் டாக்சியில் குலசேகரம் அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் வழியில் இறந்து விட்டார். ராஜு காவல் துறையினரின் பொறுப்பில் இருந்தபோது இறந்துவிட்டதால் காவல் துறை நிலை ஆணை எண் 145-வது பிரிவின்படி மெஜிஸ்டீரியல் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. சவப் பரிசோதனையின் போதும் விசாரணையின்போதும் ராஜுவின் உடம்பில் காயம் எதுவும் காணப்படவில்லை. அவர் ஒரு இதய நோயாளி (Heart patient) மற்றும் விரிவடைந்த இதயம் உடையவர் (enlarged Heart) என்று விசாரணையில் தெரிய வந்தது. வருவாய்த் துறை கோட்ட அலுவலரின் விசாரணை அறிக்கையும் சவப் பரிசோதனை முடிவும் இன்னும் கிடைக்கவில்லை. ஆனாலும் அவருடைய இறப்பு மாரடைப்பால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. ஆனாலும் விசாரணையின்போது இறந்துபோன ராஜுவை தலைமைக் காவலர் 865 பேனுவால் வயிற்றில் குத்தியதாக சாட்சிகள் கூறினர்.

4. ராஜுவின் சவ ஊர்வலமும், அடக்கமும் 19-1-1981 அன்று நடந்தது. இதற்கு முன்னால் வருவாய் துறை கோட்ட அலுவலரின் (P.S.O.) விசாரணைக்குச் சென்றுவிட்டு திரும்பிய குலசேகரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பெருமாளை கூட்டத்தின் ஒரு பிரிவினர் குலசேகரம் மருத்துவமனை அருகில் கூடி விரட்டியும், காவல் துறையினரின் வாகனத்தின் மீது கற்களையும் விட்டெறிந்தனர். இதனால் சில காவலர்களுக்கு காயமும், வாகனத்திற்கு சேதமும் ஏற்பட்டது. காவல் துறை மாவட்டக் கண்காணிப்பாளர் சம்பவ இடம் சென்று நிலைமையைக் கட்டுக்குக் கொண்டு வந்தார். உதவி ஆய்வாளரின் புகாரின் மீது அடையாளம் தெரிந்த நூறு நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. பொது நலம் கருதி உதவி ஆய்வாளர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். தலைமை காவலர் 865 மேனுவல், தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். குலசேகரம் பகுதியில் இப்போது பதட்ட நிலை இல்லை.

5. இதுகுறித்து வருவாய் துறை கோட்ட அலுவலரின் (P. S. O.) விசாரணை அறிக்கை கிடைத்த பின்பு அதனை அரசு பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும். இவ்விசாரணை அறிக்கை கிடைத்த பின்பே முழு விவரங்களும் தெரியவரும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் இறந்துபோன ராஜு என்பவர் பெயரில் புகார் கொடுக்கப்பட்டது யாரால் என்று கொடுக்கப்படவில்லை. எனக்குத் தெரிந்த தகவல்படி ராஜு பேரில் யாரும் புகார் போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கவில்லை. புகார் கொடுத்தது யாரால் என்பது குறித்து அமைச்சரிடமிருந்து விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே இருசாராரிடையேயும் கலவரம் குறித்து விசாரிப்பதற்காக மறுநாள் காவல் நிலையத்தில் ஆஜராகும்படி போலீஸ் நிலையத்தினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வராததால், அவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் 160—வது பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. யார் யார் என்னென்ன வகையில் புகார்கள் கொடுத்தனர் என்ற விவரம் தற்போது இல்லை. தேவையானால் அறிந்து சொல்லப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அந்தக் கலவரத்திற்கும் ராஜுவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ராஜு குமரி மாவட்ட அரிசன மக்களின் தலைவர். வேண்டுமென்றே அவரை காவல் துறையினர் அடித்து கொலைசெய்துள்ளனர் என்ற தகவல் எனக்கு வந்துள்ளது. இதற்குக் காரணம் தீண்டாமைக் குற்றங்கள் குறித்து அவர்கள் காவல்துறையினரிடத்தில் பல புகார்கள் கொடுத்து இருந்தும், நடவடிக்கை எடுக்காததால், ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று காவல்

நிலையத்தினரைக் கேட்டதால், அவரை இரவு 9 மணிக்கு வீட்டிலிருந்து அழைத்து வந்து அடித்து இருக்கிறார்கள். அவர் மீது யாரும் புகார் கொடுக்கவில்லை. ஆகவே இதுகுறித்து தீர விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றி வருவாய்த்துறை அதிகாரி ஒருவர் விசாரணை செய்து வருகிறார். அவர்களுடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. சவப்பரிசோதனை அறிக்கையும் இன்னும் கிடைக்கவில்லை. எத்தகைய நிலைமைகளில் அவருடைய மரணம் ஏற்பட்டு இருந்தாலும், அது குறித்து நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். இது ஒரு விரும்பத்தகாத நிகழ்ச்சியாகும். இந்தச் சம்பவத்தின் விளைவாக பொது நலம் கருதி உதவி ஆய்வாளர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். தலைமைக் காவலர் 865 மேனுவல், தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். யாரையும் காப்பாற்றவேண்டும் என்கிற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. யார் தவறு செய்து இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னது உண்மையாக இருந்தால்— யார் குற்றவாளியாக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். விசாரணை அறிக்கை கிடைத்த பின்பு அதன் மீது முடிவு எடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் குலசேகரம், குழித்துறை போன்ற பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களில் ஏழைகள் துன்புறுத்தப்படுகின்றனர் என்று பல புகார்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டு இருப்பதாலும், டிசம்பர் மாதம் 7 ம் தேதி நாகர்கோவிலில் கலெக்டர் அலுவலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து தாமிரபத்திரம் பெற்ற ராஜு தற்போது கொலை செய்யப்பட்டு இருக்கிறார் என்பதாலும், இப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பற்ற நிலை வந்துள்ளதால், இதுகுறித்து விசாரிக்க ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியை நியமிக்க அரசு முன்வருமா? அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்றதுபோன்று காவல் நிலையத்தைப் பற்றி குற்றச்சாட்டுகள் வந்து இருந்தால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த நடவடிக்கையை எடுத்து, யாருக்கு தண்டனை அளிக்கவேண்டுமோ அவர்களுக்கு தண்டனை அளிக்க அரசு துணிக்கவனம் செலுத்தும். இதைப் பொறுத்தவரையில், எல்லா விவரங்களும் கிடைத்த பிறகு அதன் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இங்கே உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஜனவரி 31
[முற்பகல் 10-50]

இங்கே அறிக்கை மூலம் கொடுக்கப்பட்டிருப்பது, எப்படி நமக்குக் கிடைத்திருக்கிற தகவலே தவிர வேறல்ல. விசாரணையின்போது இந்தத் தகவல் மாறினாலும் மாறலாம்; உண்மை கிடைக்கக்கூடும். ஆகவே, நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வருவாய்த்துறை கோட்ட அலுவலர் விசாரணை செய்து வருகிறார். அவருடைய விசாரணை அறிக்கை வந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல மேலும் நீதிமன்ற விசாரணை தேவைப்பட்டால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுபற்றி ஆராய்வார்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: ஆர். டி. ஓ. அவர்கள் விசாரணை செய்யும்போது, அந்த ராஜு என்பவருடைய பிரேதத்தைப் பார்க்கும்போது, இரவு 'மோஷன்' பேய், அவர் உடுத்தியிருந்த துணியில் மோஷனுடைய அடையாளம் இருந்தது தெரியவந்தது. அங்கே போஸ்ட்மார்ட்டம் நேரத்திலேயும் டாக்டர் அதை சுட்டிக் காட்டினார். ஆனால் இந்த அறிக்கையிலே அந்த விவரம் ஒன்றும் இல்லை. 'ஹார்ட் பேஷன்ட்டாக' துணியில் மோஷன் போகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கலாம். எனவே, அந்தப் பகுதி மக்கள் அவர் தாக்கப்பட்டதினால்தான் இறந்தார் என்று தெரிவிக்கிறார்கள். எனவே அதுகுறித்து ஒரு உயர்மட்ட நீதி விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று இந்த விசாரணையின்போது முழுவதுமாக விவரங்கள் அரசுக்குக் கிடைத்திருக்கிற தகவலைத்தான் இப்போது அவையில் வைத்திருக்கிறேன். விசாரணை நடைபெறும்போது, நான் இந்த யங்கள் பதிவு செய்யப்படும்போது முழு விவரமும் வெளிவரும். இந்த அறிக்கையின் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு அதிலேயிருந்து விட்டுவிடுவதாக இல்லை. இது மிகவும் வருந்தத் தக்க ஒரு நிகழ்ச்சி. இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரம் காவல் நிலையத்தில் ராஜு என்பவர் காவல் நிலையத்தில் தாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார் என்று ஆரம்ப விசாரணையின்போது தெரியவந்த காரணத்தால், குற்றம் நடந்திருக்கிறது என்ற காரணத்தால்தான் அந்த சப்-இன்ஸ்பெக்டர் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்; ஹெட் கான்ஸ்டபிள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அதை ஆதாரமாக வைத்து அந்த காவல் நிலையத்தினர் மீது நீதி மன்றத்தில் வழக்கு பதிவு செய்து, நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அப்படியானால்தான் இதிலே நியாயம் கிடைக்கும் என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

1981 ஜனவரி 31]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று, இருக்கிற விவரங்கள் அடிப்படையிலே அரசுக்கு சந்தேகம் இருந்த காரணத்தினால் முழு உண்மையும் வெளிப்பட வேண்டும், சந்தேகத்திற்கு இடம் இருக்க வேண்டாம் என்று சொல்லி, அந்த குறிப்பிட்ட தலைமை கான்ஸ்டபிள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டார். துணை ஆய்வாளர் மாற்றப்பட்டிருக்கிறார். முழு விவரமும் தெரிந்த பிறகு அந்த அறிக்கை அடிப்படையில் மேற்கொண்டு தேவைப்பட்டால் வழக்கு பதிவு செய்து தக்க நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி: தலைவரவர்களே, சமீபத்தில் கேரளத்தில் இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் 'லாக்கப்பில்' ஒருவர் இறந்து விட்டார். ஆரம்ப விசாரணையின்போது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சம்பந்தமாக என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள். உலகத்திலே என்னென்ன நடந்தது என்பதை எல்லாம் இங்கே சொல்லக் கூடாது.

திரு. டி. மணி: இப்போது ஆரம்ப விசாரணையில் இந்த இரண்டு பேர்கள் மீதும் குற்றம் இருப்பதாகத் தெரிந்திருக்கிற காரணத்தால் அரசு நீதிமன்றத்தில் வழக்கு தொடருமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, வருவாய்த்துறை கோட்ட அலுவலர் அறிக்கையும் போஸ்ட்மார்ட்டம் அறிக்கையும் அரசுக்கு வந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் அவர்கள் குற்றவாளிகள் என்று தெரிய வந்தால் கட்டாயம் வழக்கு தொடரப்படும். ஆகவே அதற்கான முழு விசாரணையும் நடந்து முடிந்து, அறிக்கை வந்த பிறகு தக்க முடிவு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, இன்றைக்கு யார் காவல் நிலையத்திலே அடித்துக் கொல்லப்பட்டாலும் காவல் துறையிலிருந்து கொடுக்கிற ஒரே பதில் வலிப்பால் இறந்து விட்டார் என்பதுதான். தொடர்ந்து வரக்கூடிய ஒரே பதில் இதுதான். ஆகவே, இன்றைய தினம் இப்படி இருக்கக்கூடிய சூழ்நிலையில் ஒரு படி மேலே சென்று, அங்கே இருந்த தலைமை காவலர் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். உதவி சப் இன்ஸ்பெக்டர் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் காவல் நிலையத்திலே திரு. ராஜு அவர்கள் அடிக்கப்பட்டார்கள் என்பது பற்றி சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இதிலே ஆர். டி. ஓ. மட்டத்திலே விசாரணை நடத்தி

அரசுத் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்குப் பதிலாக உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடித்து நடைபெற்ற சம்பவத்தில் உண்மைகளை எல்லாம் கண்டு பிடிப்பதற்காக நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு அரசு முன்வருமா? மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் முதலமைச்சரவர்களைக் கேட்டுவிட்டு அவ்வாறு அமைக்க வேண்டிய அவசியம் இருந்தால் அமைப்பார்கள் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் முன்பு இதுபோன்ற சம்பவங்கள் நடந்தால் நீதிவிசாரணை செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அவ்வாறு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழ்கின்றபோது என்ன முறை கையாளப்பட வேண்டுமோ அந்த முறை இப்போதும் கையாளப்பட்டிருக்கின்றது. தற்போது வருவாய் கோட்ட அலுவலரின் விசாரணையின் முழு அறிக்கையையும் நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அது வந்ததற்குப் பிறகு மீண்டும் அரசுக்கு அதிலே ஐயப்பாடு ஏற்பட்டால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதற்கான தக்க நடவடிக்கை எடுப்பார்கள். அந்த அடிப்படையிலே தேவைப்பட்டால் நீதிவிசாரணைக்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் இதிலே சந்தேகம் இல்லாமல் தெளிவு ஏற்பட்டுவிட்டால் அதனுடைய அடிப்படையிலே வழக்குகள் தொடரலாம். மேலும் போஸ்ட்மார்ட்டத்தினுடைய அறிக்கையையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆக இரண்டு அறிக்கைகளும் வந்ததற்குப் பிறகு இதுபற்றிய முடிவு தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, அவர்கள் இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்காக போராட்டம் நடத்தியவர். அதற்கான தாமிரப்பட்டயத்தை அவர்கள் பெற்றிருந்ததாகச் சொன்னார்கள். அவருடைய குடும்பம் வறுமையிலே வாடுகின்றது. ஆகவே அரசாங்கம் அந்தக் குடும்பத்திற்கு நிதியுதவி செய்ய முன்வருமா

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனையை மனதிலே வைத்து அரசு தனியாக ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவரவர்களே, இந்தச் சம்பவம் 18-1-1981 அன்று நடைபெற்று இருக்கின்றது. ஆனால் 20, 21—லேயே அரசாங்கத்தின் கவனத்திற்கு உறுப்பினர்கள் கொண்டு வந்தார்கள். இன்று தேதி 31. இதுவரை பிரேதப் பரிசோதனையின் அறிக்கை கிடைக்கவில்லையா? ஆர். டி. ஓ. வினுடைய அறிக்கை கிடைக்கவில்லையா? மேலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னமாதிரி திரு. ராஜு அவர்கள் காவல் நிலையத்திற்கு வந்தவுடனே வலிப்பு வந்து இறந்து விட்டார் என்பது சந்தேகத்திற்கு உரிய

தாக இருக்கின்றது. ஆகவே இதிலே குற்றவாளிகள் தப்ப முயற்சிக்கிறார்கள். மேலும் அவரை அடித்ததற்குரிய சாட்சியமும் இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது.. ... .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சொரணம் அவர்கள் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு தொடரப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையிலே வழக்கு தொடரப்படுமா? மேலும் இதுபற்றிய உண்மையான விவரங்களை அறிவதற்காக உயர் நீதி மன்றத்தினுடைய நீதிபதியை வைத்து ஒரு பகிரங்க விசாரணை நடத்துவதற்கு அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றி முதலிலேயே நான் குறிப்பிட்டேன். இந்த அறிக்கை வந்திருக்கக் கூடும். அதுபற்றி உரிய துறை ஆராய்ந்து கொண்டிருக்கக்கூடும். ஆனால் எனக்கு வந்திருக்கின்ற தகவலைத்தான் நான் இங்கே சொன்னேன். இந்த அறிக்கையை அவர்கள் இன்னும் அனுப்பவில்லை என்று சொல்வதற்கில்லை. ஆகவே அது உரிய துறைக்குச் சென்றபின் நமக்கு வரக்கூடும். ஆகவே நான் முதலிலே கூறியபடி அந்த வகையிலே நடவடிக்கை எடுக்கப்படும். இதிலே மேலும் சந்தேகிக்கின்ற நிலைமை ஏற்படுகின்றது என்று மாண்புகு முதல்வர் அவர்கள் கருதுவார்களேயானால் நீதி விசாரணை ஏற்படுத்துவது பற்றி அவர்கள் யோசிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ. பாம்பன் பாலம் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'பாம்பன் பால வேலை, சென்ற ஓராண்டு காலமாக நிறுத்தப்பட்டது' குறித்து திருவாளர்கள் செ. சிவசாமி, இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, பாம்பன் பால வேலை சென்ற ஓராண்டு காலமாக நிறுத்தப்பட்டது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[திரு. ப. குழந்தைவேலு] [1981 ஜனவரி 31

அறிக்கை.

பாம்பன் பால வேலை. ஒப்பந்தக்காரர்கள் திருவாளர்கள் நீலகண்டன் அண்டு பிரதர்ஸ், சென்னை, அவர்களுக்கு ஒப்பந்தத் தொகை ரூபாய் 513.08 இலட்சங்கள் செலவில் கட்டி முடிக்க 10–10–1974 அன்று ஒப்பந்தமாகி 17–11–1974 அன்று பால வேலை துவக்கப்பட்டது. ஒப்பந்தப்படி, பால வேலைகள் அனைத்தும் 16–11–1978 அன்றே முடிவடைந்திருக்க வேண்டும்.

2. வேலையில் முன்னேற்றம் தடைப்பட்டதற்கு ஒப்பந்தக் காரர்கள் திறமையுடன் செயல்பட தொடர்ந்து தவறியதே ஆகும். இதனால் முழு வேலையையும் முடிக்க வேண்டிய காலமான 16–11–1978 அன்று 32 சதவிகித அளவிற்கே வேலையில் முன்னேற்றம் ஏற்பட்டது.

3. வேலையை முடிப்பதற்காக ஒப்பந்தக்காரர்கள் 31–12–1980 வரை கால நீட்டிப்பு அளிக்கும்படி கோரினர். அவர்களுக்கு நான்கு தருணங்களில் 31–10–1979, 31–12–1979, 31–3–1980 மற்றும் 30–6–1980 வரை கால நீட்டிப்பு அளிக்கப் பட்டது. ஆனால் அவர்கள் எந்தவொரு வேலையையும் செய்து முடிக்கவில்லை. கடைசியாக அவர்களுக்கு 30–9–1980 வரை கால நீட்டிப்பு அளிக்கப்பட்டது. இது தவிர அவர்கள் வேலையில் முன்னேற்றத்தை தாமதப்படுத்தி கடைசியில் ஜூலை 1979–ல் 36 சதவித அளவிற்கு வேலைகள் செய்த நிலையில் எல்லா வேலைகளையும் நிறுத்தி விட்டனர். ஒப்பந்தக்காரர்கள் ஜூலை 1979 வரை செய்து முடித்த வேலைகளின் மதிப்பு ரூபாய் 221.33 இலட்சங்களாகும்.

4. பாம்பன் பகுதியில் 24–11–1978 அன்று வீசிய புயலினால் ஒப்பந்தக்காரர்களின் தற்காலிக கட்டுமானங்களாகிய மரப்பாலம், மற்றும் இதர தளவாடங்களும் சேதத்திற்கு உள்ளாகியது. இப்புயலை விதிவிலக்குள்ள இடையூறு (Excepted Risks) என்று கூறி ஒப்பந்தக்காரர்கள் நஷ்ட ஈடாக முதலில் மதிப்பிறக்கத் தொகையாக (Depreciated Cost) ரூ. 20.66 இலட்சங்களும் மற்றும் தொகையாக குறிப்பிடாத புயல் காரணமாக அவர்களுக்கு ஏற்படும் செயலமைப்புச் செலவு, தொழிலாளர்களை மீண்டும் அமைக்கும் வகையில் ஏற்படும் செலவு ஆகியவைகளுக்காகவும் கோரி மனு செய்தார்கள். இது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கும்போது, 8–11–1979 அன்று வானியல் துறையிடமிருந்து ஓர் அறிக்கை கிடைக்கப்பெற்றது எனினும், இதன்படி நவம்பர் 1978-ல் ஏற்பட்ட புயல் டிசம்பர் 1964–ல் ஏற்பட்ட புயலுடன் ஒப்பிட்டு நோக்குங்கால் இதற்கு முன் நேர்ந்திராத வகையில் இல்லை என்பது தெரிய வந்தது என்றும் தலைமைப் பொறியாளர் தெரிவித்தார். இந்த அறிக்கையின்படி விதி விலக்குள்ள இடையூறு (Excepted Risks) ஏற்படாததால் நிலைமை முழுமையாக மாறி விட்டது. அதன்படி ஒப்பந்தக்காரர்களின் நஷ்ட ஈட்டுக் கோரிக்கை ஒத்துக்கொள்ளும் வகையில் இல்லை என்று தலைமைப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டது. இப்பிரச்சனை பல கட்டங்களிலும் பல மட்டங்களிலும் வெவ்வேறு காலங்களிலும் முழுமையாக ஆராயப்பட்டது.

1981 ஜனவரி 31] [திரு. ப. குழந்தைவேலு]

5. அதன் முடிவாக ஒப்பந்தக்காரர்களுக்கும், பாம்பன் பாலத் திட்டத்துறைக்கும் இடையேயுள்ள தகராறு அல்லது கருத்து வேற்றுமை குறித்து ஒப்பந்த விதிகளின்படி நடக்குமாறு ஒப்பந்தக்காரர்களுக்கு அரசால் தெரிவிக்கப்பட்டது.

6. ஒப்பந்த விதிகளை மதிப்பது குறித்து ஒப்பந்தக்காரர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றும்படி நடவடிக்கை எடுக்குமாறும், மீதமுள்ள பணிகளை விரைவில் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் பாம்பன் பாலத் திட்டத் தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

7. ஒப்பந்தக்காரர்கள், பாம்பன் பாலத்திட்ட இரண்டாம் செயற்கோட்டம், கோட்டப் பொறியாளரின் அறிவிப்பில் உள்ள கோரிக்கைக்கு உட்பட்டு நடக்கத் தவறியதால், கோட்டப் பொறியாளர், 29–12–1980 அன்று ஒப்பந்தத்தை முழுமையாக ரத்து செய்துள்ளார்.

8. ஒப்பந்தப்புள்ளி கோரவும் மீதி வேலைகளை செயல் படுத்த ஒப்படைப்பதற்கும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் ஒப்பந்தக்காரர்கள் நடுவினரை மாற்றக் கோரி உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்துள்ளனர். ஆகவே இவ்விஷயம் வழக்காடுமன்றத்தின் முன் உள்ளது.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு போக்குவரத்து தலைவர் அவர்களே, 1978–லே கடல் கொந்தளிப்பு இந்தியாவிலே ஏற்பட்டது. அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டது. மிக முக்கியமான பாலம் இந்தப் பாம்பன் பாலம், ஆயிரம் பேர்களுக்கு மேல் வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடிய பாலம். இந்தப் பாலத்தைக் கட்டுவதில் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது? ஏதாவது ஊழல் நடந்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த வேலை 1974-லே ஆரம்பிக்கப்பட்டது. 1978 நவம்பர் 16ஆம் தேதியன்று முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பின்னர் வேலைகள் முழுவதையுமல் இருந்த காரணத்தினால், மீண்டும் ஒப்பந்தக்காரர்களுக்கு [illegible] அளவு நீட்டித்துக் கொடுக்கப்பட்டது. கடந்த 24–11–1978 லே வீசிய புயல் காரணமாக அவர்களின் தற்காலிக கட்டுமானங்களாகிய மரப்பாலம் மற்றும் இதர தளவாடங்கள் சேதமாகின. அதற்கு தகுந்த நஷ்டயீடு கோரி மனு ஒன்று அரசுக்கு அனுப்பியிருக் கிறார்கள். ஆனால் அப்படி கொடுக்கப்படவேண்டிய நஷ்டயீடு 'எக்ஸப்டட் ரிஸ்க்'— காக (விதிவிலக்குள்ள இடையூறு) இருந்தால்தான் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் வானியல் துறையிடமிருந்து கிடைக்கப்பெற்ற 8–11–1979 அறிக்கையில் இது அவ்வாறு இல்லை என்று தெரிகிறது. அவர்கள் அந்த நஷ்ட ஈட்டை காலத்தில் பெற

[திரு. ப. குழந்தைவேலு] [1981 ஜனவரி 31

வேண்டுமானால் நடுவர் தீர்ப்பளிக்க வேண்டும். ஒப்பந்தக் காரர்கள் நடுவினரை மாற்றக் கோரி உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வகையான காரணங்களால் தான் பணி தடைபட்டிருக்கிறதேதவிர, ஊழலுக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்று தெரிந்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தத்தினுடைய அன்றைய மதிப்பீடு எவ்வளவு? இப்போதைய மதிப்பீடு எவ்வளவு? நஷ்டத்திற்கு யார் பொறுப்பு? மாநில அரசா, மத்திய அரசா என்பன போன்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் பால வேலைத் திட்டம் முழுவதுமாக மத்திய அரசுடையது. அதில் 1974லே கொடுக்கப்பட்ட மதிப்பீடு 513.08 இலட்சங்கள். இப்போது இருக்கக்கூடிய மற்றைய செலவினங்களுக்கேற்ப தற்போதைய மதிப்பீடு மாறுபடும் இன்னும் அதிகமாகும். வேலையை மாற்றி புது ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றுதான், ஒப்பந்தங்கள் கூட தோரப்பட்டன. ஆனால் பழைய ஒப்பந்தக்காரர் உயர்நீதிமன்றத்திற்கு பிரச்சனையைக் கொண்டு சென்றதால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் பாலம் கட்டியதில் அணில் ஒன்று செய்த பணியை ராமச்சந்திரமூர்த்தி பாராட்டியதாக நான் இராமாயணத்தில் படித்திருக்கிறேன். அது போல் இந்தப் பாலம் பாலத்தை இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் கட்டி முடிக்கும் பணியை அணில்போல் விரைந்து செயல்படுத்தி நம்முடைய முதல்வர் இராமச்சந்திர மூர்த்தி அவர்களிடம் பாராட்டுப் பெற அமைச்சர் அவர்கள் முயல்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் இராமேஸ்வரத்திற்கும், மண்டபத்திற்கும் இடையே கடலில் கட்டப்படுகிற பாலம். ஆனால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் கட்டுவதைப் பற்றிக் கேட்கிறார்கள். அதையும் குறிப்பாக அணில்கள் மூலமாகக் கட்டச் சொல்கிறார். அவ்வளவு அணில்கள் கிடைக்குமா என்பதைப் பொறுத்துதான் பார்க்க வேண்டும். (சிரிப்பு) ஆனாலும் இந்த பாம்பன் பால வேலையை விரைவில் முடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 ஜனவரி 31]

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கடலுக்கடியில் டனல் போட்டு பாலம் கட்டப்படுவதாகச் சொல்கிறார்கள். அதே மாதிரி இராமேஸ்வரம் பாலத்தையும் கடலுக்கடியில் டனல் போட்டு விரைவில் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா? சென்னையிலும் கூட அத்தகைய பணியினை மேற்கொள்ளலாம், அதற்கும் முயற்சி எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பால வேலையை நிறுத்தியிருப்பது பற்றித்தான் கவன ஈர்ப்புத் தீர்மானம். நீங்கள் வேறு ஏதோ கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள். அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

(6) அறிக்கை அளித்தல்

3. பொதுக் கணக்குக் குழு.

திரு. என். எஸ். வி சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1974–75 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

(7) அரசினர் சட்டமுன்வடிவுகள்

அ. கால்நடை நோய்கள் (திருத்த) சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு திருமதி சோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திருமதி சோமதி சீனிவாசன் : இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கின்றது.

8. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் விவாதம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப் பெற்றுள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின்

[1981 ஜனவரி 31

1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, 1979-80 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் மொழிகிறேன். இவைபற்றி நான் ஆற்றவேண்டுமென்று எண்ணிய உரையினை நூல் வடிவில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தந்துள்ளேன். அதை அவைக்குறிப்பில் பதிவு செய்து கொண்டு மாண்புமிகு உறுப்பினர்களும் அந்த உரையை நான் ஆற்றியதாக ஏற்றுக்கொண்டு அவர்களுடைய மேலான கருத்துக்களை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. S. G. HAJA SHEREEF: Mr. Speaker Sir, the Hon'ble Minister should read the speech.

MR. SPEAKER: It is the convention that the Hon'ble Minister requests that it may be taken as read.

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் தாம் ஆற்ற வேண்டிய உரையினை படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். இதில் நான் பேசுகிறபோது முதலிலே குறிப்பிட விரும்புவது, கிராமாந்திர மக்களுக்குக் கொடுக்க வேண்டிய மின் வசதிப்புத் திட்டங்கள் அதிலும் குறிப்பாக விவசாயிகளுக்கு அமைச்சர் அவர்கள் 1978-79-ல் கொடுத்த வாக்குறுதிகள் காக்கப்படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இந்தப் பேரவையிலே உறுதியளித்திருக்கிறார்கள். முழுமையாக கொடுக்கப்படும் என்று உறுதியளித்தும் அந்த உறுதி சரியான முறையில் செய்யப்படவில்லை.

தமிழக மக்களுக்கு மின்சாரம் மிக மிக அதிக அளவில் தேவைப்படுகிற காலத்தில் நாம் இருக்கிறோம். ஆனால் நம் தேவையை அறிந்து மின் உற்பத்தி செய்வதற்கு நீண்டகால தூரப்பார்வையாக எந்தளவிலும் அரசால் திட்டங்கள் வகுக்கப்படவில்லை. இந்த அறிக்கையிலே பார்த்தால், இருப்பதை வைத்துச் செய்வது அல்லது நிதிநிலையை பற்றாக்குறை அல்லது போதிய வசதியாய்ப்புகள் இல்லை என்று கூறக்கூடிய அளவில் நான் இருக்கிறது. நம் தொழில் வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் நீண்டகால திட்டமாக புதிய ஒரு திட்டத்தை உருவாக்குகிற அளவிற்கு இந்த அறிக்கையில் எதுவும் காணப்படவில்லை என்பதை நான் இங்கே சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

தர்மல் பவர் மூலமே ஷிர் 400 மெகாவாட்ஸ்-க்கு அதிக அளவில் உற்பத்தி செய்தால்தான் நமது தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் விநியோகம் செய்வதற்கு முடியும். இன்றைய நிலையில் உள்ளதை வைத்து தொழில் வளர்ச்சிக்கு ஏற்றமுறையில் மின் விநியோகம் செய்யமுடியாது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

* 116-157-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1981 ஜனவரி 31] [திரு. எல். இளையபெருமாள்]

நிலக்கரிச் சுரங்கம் நெய்வேலியில் இருக்கிறது. இரண்டாவது நிலக்கரிச் சுரங்க வேலையை எடுத்து நடத்த வேண்டுமென்று பல முறை இந்த அவையில் பல உறுப்பினர்கள் சொல்லி இருக்கிறார்கள். அரசாங்கமும் அதைக் கருணையோடு கவனிப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறது. ஆனால் மத்திய அரசின் பெயரைச் சொல்லி நாம் தப்பித்துக் கொள்ள முடியாது. மத்திய அரசாங்கம் கொடுக்கத் தயாராயிருக்கிறதா இல்லையா? இல்லை என்றால் ஏன் இல்லை, காரணங்கள் என்ன என்ன என்று இந்த அறிக்கையில் விவரமாகக் கொடுக்கப்படவில்லை. அகில இந்திய ரீதியில் காரணம் காட்டப்பட்டாலும் அல்லது வேறு எந்தக் காரணம் காட்டப்பட்டாலும் நமது மாநிலத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு ஏற்ற வகையில் மின்சாரம் கொடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் பின்தங்கிய மாவட்டமாகிய தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்; அதிலும் என்ஜினியராகப் பணியாற்றியவர்; அதிலும் குறிப்பாக நெய்வேலியிலேயே பணியாற்றியவர். ஆகவே அவர்களுக்கு, என்ன என்ன அவல நிலைகள் உள்ளன, தொழில் வளத்தைப் பெருக்குவதில் உள்ள கஷ்டங்கள் என்ன, அதிலும் குறிப்பாக விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய மின்சாரம் கொடுக்க முடியவில்லை என்ற நிலைகளெல்லாம் என்னை விட நன்கு தெரியும் என்று நான் நம்புகிறேன்.

(முற்பகல் 11-10)

கடந்த 66-ஆம் ஆண்டு என்ஜின்கள் வாங்கப்பட்டன; அதுவும் அரசு உதவி மூலம் வாங்கப்பட்டன. ஆனால், இன்று 81-ஆம் ஆண்டு ஆகியும் நூற்றுக்கணக்கான என்ஜின்களுக்கு தென் ஆற்காடு மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் விவசாயிகள் தங்கள் பணிக்குத் தேவையான மின்சாரம் வேண்டுமென்று கேட்டும், அதை நாம் கொடுக்க முடியாத அவல நிலையிலே இருக்கிறோம். இந்த அவல நிலைக்குக் காரணம் அரசு என்பதை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அப்படி இந்த அரசு இதை கவனிக்கவில்லை என்று நான் குற்றம் சாட்ட வேண்டியிருக்கிறது. காரணம், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்; அதேபோல் இன்றைய தினம் தொழில் வளத்தையும் பெருக்க வேண்டும். இவைகள் இரண்டும் மிகமிகத் தேவையான ஒன்றாகும். இரண்டிற்கும் மின்சாரம் வேண்டும். அப்படி இருக்கும்போது, 1974, 75 என்று நான் நினைக்கிறேன்—அந்தச் சமயத்தில் மைசூரிலே இருந்து, கர்நாடக ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்ட மின்சார உற்பத்தி நிலையத்தை என்ன காரணத்தினாலோ, அங்குள்ள என்ஜின்கள், பொருள்கள் விற்கப்பட்டன. ஏன் விற்கப்பட்டன, அதுவும் வாங்கிய விலையை விடக் குறைவான விலைக்கு விற்கப்பட்டது, அது யாருக்கு விற்கப்பட்டது என்பது தெரியவில்லை. இந்த அவல நிலையிலே இருப்பதற்கு காரணம் என்ன என்பது பற்றித் தெளிவாக இந்த அறிக்கையிலே விளக்கப்படவில்லை.

மேலும், பொதுமக்கள் வரிப் பணத்திலே கட்டப்பட்ட கட்டிடங்கள் அத்தனையும் கடந்த சுமார் 10 ஆண்டுக் காலமாக கேட்பாரற்ற நிலையிலே, இடிந்து போகக்கூடிய நிலையிலே இருக்கின்றனவே, ஏன் இந்த அலட்சியப் போக்கோடு இந்த அரசு இருக்கிறது? நமக்கு மெஜாரிடி இருக்கின்ற காரணத்தினாலே, நாம் எதையும் செய்யலாம் என்ற எண்ணத்திற்கு வரக்கூடாது. அப்படி வரவில்லையானாலும், இதற்கு உடந்தையாக இருக்கின்ற அதிகாரிகள் இதிலே ஏன் இவ்வளவு அலட்சியமாக இருக்கின்றார்கள் என்பதைக் கூர்மையாக, ஆழமாக, அனுதாபமாக, மக்கள் வரிப் பணத்திலே இருந்து கட்டப்பட்டவைகள் என்பதைக் கவனிக்க வேண்டும். இதனைக் கவனிக்கவில்லையெனில் நாம் ஸ்டாம்.எல்.ஏக்கள், எம்.பி க்கள், அமைச்சர்களாக இருந்து பயனில்லை. இதனை நிவர்த்திக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை]

நம் அமைச்சர் அவர்கள் இதிலே அனுபவம் உள்ளவர்கள். எனவே அனுபவ ரீதியாக, உடனடியாக இந்த மாமன்றத்திற்கு இதிலுள்ள விரமங்களையும், யார் காலத்திலே இடர்ப்பாடுகள் ஏற்பட்டன, ஏன் கட்டப்பட்ட கட்டிடங்கள் கேட்பாரற்ற நிலையிலே, சீர்குலைகின்ற நிலையிலே இருக்கின்றன என்பதற்கு விரிவான பதிலைச் சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

தமிழகத்திலே மூலப் பொருள்களுக்குப் பஞ்சமில்லை, கனிப் பொருள்களுக்குப் பஞ்சமில்லை. அப்படியிருந்தும், தொழில் துறையிலே நாம் அதிகமான முறையிலே ஊக்கம் கொடுக்கவில்லை. தனியார் துறையிலே இருந்தாலும் சரி, பொதுத் துறையிலே இருந்தாலும் சரி இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து கொண்டே வருகிறது என்பது அரசுக்கு நன்கு தெரியும். ஒவ்வொரு காலத்திலும் அமைச்சர்கள், அந்தந்தத் துறையின் மூலம் அனுதாபமாக, இரக்கமான முறையிலே அறிக்கை கொடுக்கிறார்கள். ஆனால், இப்படி அறிக்கை கொடுத்துக் கொண்டே இருந்தால், இந்த அவல நிலையைப் போக்க முடியுமா என்பதை மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டும். எங்கெல்லாம் மூலப்பொருள்கள் கிடைக்கின்றதோ, அங்கெல்லாம் என்னென்ன மூலப்பொருள்கள் கிடைக்கின்றன என்பதிலே கவனம் செலுத்தி அதற்கான திட்டங்களை மத்திய அரசுக்குத் தெரிவித்து, மத்திய அரசுக்கு கஷ்டமிருக்கின்றது என்று தெரிந்தால், மாநில அரசே அதை எடுத்துக் கொள்ளத் தயார் என்று சொல்லும் நிலை வேண்டும். அப்படிப்பட்ட திட்டங்கள் எதுவும் இந்தக் குறிப்பிலே இல்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இவைகளையெல்லாம் தூரதிருஷ்டிக் கண்ணோடு நாம் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்காமல் அலட்சியப் போக்கோடு அல்லது இன்னும் அறியாத நிலையிலே நம்முடைய அரசு இருக்கின்றதா? அமைச்சரவை தங்களைக் காப்பந்து செய்கின்ற நிலையில் இருக்

கிறார்கள். ஆனால், திட்டமிடவில்லையா? இந்தநிலையிலே உள்ள இந்தக் கட்டிடங்களைப் பற்றித் தீர்க்கமாக, சிந்தனை கண்ணோடு பார்க்கவில்லையா என்று அஞ்சுகிறேன். இதைப் பற்றி இந்த அறிக்கையிலே எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் காடம்பாறை நீர் ஏற்று மின் திட்டம் என்று இருக்கிறது. திட்டத்தட்ட 75 கோடி ரூபாய் செலவிடப்படக்கூடிய ஒரு திட்டம். நமக்குத் தெரிந்த லால்சந்த், ஹீராசந்த் கம்பெனிக்கு கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் தொழிலாளர் அரசாங்கம், ஏழைகளுக்கான அரசாங்கம், ஏழை மக்களுக்கான சட்டங்களை அமல் நடத்தப் பின்வாங்க மாட்டோம் என்று சொல்லக்கூடிய அரசாங்கம் குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தை அமல் நடத்துவோம் என்று சொல்லக்கூடிய அரசாங்கம். அதற்காக அதிகாரியைப் போடாத காரணத்தால் அந்தத் தொழிலாளர்களுக்குப் பரிகாரம் காண முடியாத நிலை. இரண்டு நாட்களுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் பேசும்போது நாசில்தார்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று சொன்னார்கள். நாசில்தார்கள் எல்லாவற்றையும் கவனிக்க முடியுமா? அவர்கள் வருகிற அமைச்சர்களைக் கவனிப்பார்களா? கலெக்டரைப் பார்ப்பார்களா? கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வார்களா? ஊராட்சிகளுக்கு ஏற்பாடு விற்பார்களா? ஊரில் நடக்கும் கலவரங்களை அடக்க நடவடிக்கை எடுப்பார்களா? முதலமைச்சர்கள் வந்தால், லால்சந்த் ஹீராசந்த் போன்ற பெரியவர்கள் வந்து விட்டால் ஃபைலையே தூக்கி எடுத்து வைத்துவிடும்படியான காலத்தில் அவர்கள் மிகுந்து கொண்டிருக்கிறார்கள். குறைந்தபட்சக் கூலி கேட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் சிறைப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் விடுதலை செய்யப்பட்டபின்பும் அரசு விதித்த கூலி தகவலை அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டுக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை மிகக் கவனமாகப் பார்த்துச் செய்யவில்லை என்று சொன்னால் இந்த அரசை எப்படி அரசு என்று சொல்லுகிற எண்ணத்திற்கு மிகக் கேடான பெயர் வாங்கக் கூடிய நிலை ஏற்படும். அந்தப் பாவமான காரியத்தைச் செய்யக் கூடாது; செய்யமாட்டார்கள் என்ற நினைப்பில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாமெல்லாம் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அமைச்சர்களில்கூடப் பலர் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்கள். அவர்கள் வீடுகளுக்கெல்லாம் மின் கட்டணம் கட்டவில்லை என்று சொன்னால் 30 ஆம் தேதி மின்சாரத்தை எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள். ஆனால் பெரிய கம்பெனிக்கு முதல், வட்டி, நஷ்ட வட்டி என்று எந்தப் பெயரோ, இதற்காகவும் சுமார் ஒன்பது கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது. அரசு என்ன செய்தது? 1967 முதல் இன்று வரை இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? எந்தச் சக்தி உங்களைக் கட்டுப்படுத்துகிறது? மக்கள் சக்தி உங்களிடம் அதிகமாக

[திரு. எல். இளையபெருமாள்] [1981 ஜனவரி 31

இருக்கும் நேரத்தில் ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள்? அரசியல் வாதி சீர்திருத்தவாதியாக [illegible] க முடியாது. சீர்திருத்தவாதி அரசியற்வாதியால் [illegible]க்க முடியாது என்பது நம் முன்னோர் மொழி. சீர்திருத்தவாதியை 100க்கு 90 பேர் ஏளனமாகப் பேசுவார்கள். ஆனால் சீர்திருத்தவாதிகள் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் அரசியல்வாதிகள் 100க்கு 90 பேர் ஆமாம் சாமியாகத் [illegible]லையாட்டுவார்கள். அப்போது தான் நல்ல பெயர் வரும், நல்ல அரசு என்பார்கள், நல்ல அமைச்சர் என்பார்கள். ஆனால் நியாயம் கிடைக்காது. நாங்கள் போட்ட சட்டத்திலிருந்து பின்வாங்க மாட்டோம் என்று சொல்லக்கூடிய நல்ல தமிழர்கள், உலகத் தமிழ் மாநாடு நடத்திய உயர்ந்த தமிழர்கள் போட்ட சட்டத்திற்கு அவமானத்தை ஒரு நாளும் உண்டாக்கமாட்டோம் என்று சொல்லக் கூடியவர்கள் ஏன் பயப்பட வேண்டும்? கெட்ட பெயர் எடுக்க கூடாது என்பதற்காக இதனை அமைச்சர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கிட்டத்தட்ட 9 கோடி ரூபாய் நிலுவை இருக்கிறது. ஒரு ஏழைக் குடியானவன், ஒரு ஏக்கர் வைத்திருப்பவன் ஒரு மாதம் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தத் தவறினால் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. அதுவும் விவசாயத்திற்கு அப்படி மின்சாரம் நிறுத்தப்படுகிறது. உண்மையில் அவன் நிரபராதி. இந்த ஆண்டில் வானம் பொய்த்துவிட்டது. கிணற்றில் தண்ணீர் இல்லை. அரசுக்குச் செலுத்தவேண்டிய மின்சட்டணங்களை நியாயமாகச் செலுத்தக் கூடிய விவசாயிகள் விவசாயி என்ற பெயரால் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி கொடுக்காத அவல நிலையை உண்டாக்குபவர்கள் விவசாயி அல்ல. எதற்கெடுத்தாலும் அரசை எதிர்ப்பது என்ற எண்ணத்தில் இருக்கக்கூடியவர்கள் விவசாயிகள் அல்ல. ஆனால் நேர்மையான விவசாயி, ஏழை விவசாயி. இந்த அரசை நம்பியிருக்கும் விவசாயி ஆண்டவனுக்குப் பயந்து வேலை செய்யும் விவசாயி என்ற நிலைமாறி நம் நிலை இப்போது ஆண்டவன்மீதும் பயம் போய்விட்டது. அரசாங்கத்தின்மீதும் பயம் போய்விட்டது. இந்த நிலையை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

[முற்பகல் 11-20]

ஒரு காலம் இருந்தது. எதைச் செய்தாலும் ஆண்டவன் பெயரைச் சொல்லி பயமுறுத்தினார்கள். பயத்தினாலாவது மக்கள் பயந்து கடமையை செய்தார்கள். அதற்குப் பிறகு சீர்திருத்தவாதிகள் வந்தார்கள், அந்த நிலைமை மாறியது. அதற்குப் பிறகு அது போய் சட்டம் என்ற பெயரால் ஒழுக்க நெறியை, நெறி முறையை ஏற்படுத்தக் கூடிய நிலை இருந்தது. இப்போது அரசியல்வாதிகள் ஏற்படுத்திய அவல நிலையினால் இன்றைக்கு சட்டத்திற்கு இருந்த நிலைமையும் குறைந்து கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் ஏழை விவசாயிகளுக்கும், விவசாய தொழிலாளிகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகளை அரசு அவசியம் செய்தாக வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஜனவரி 31] [திரு. எல். இளையபெருமாள்]

இரண்டு தினங்களுக்கு முன்னாலே நம்முடைய அமைச்சர் அவர்களிடம் பேசினேன். நான் வினா கேட்கிற போது அவர்கள் பதில் கூறினார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே சுமார் 4 ஆயிரம் உத்தியோகத்திற்காக—பின்தங்கிய சமுதாயத்துப் பிள்ளைகளையும், மலைவாழ் சமுதாயத்தைச் சேர்ந்த பிள்ளைகளையும், அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த பிள்ளைகளையும் ஜூனியர் அஸிஸ்டென்டாகவும், பியூனாகவும், வாட்ச்மேனாகவும் தேர்வு செய்தார்கள். ஆனால் இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகும் கூட—அரசுத் தேர்வு நடத்திய பிறகும்—அவர்களுக்கு இன்று வரையிலே உத்தியோகமோ உத்தியோக உயர்வோ கிடைக்கவில்லை. நான் ஷெட்யூல்ட் காஸ்ட்டைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. அந்தத் தேர்விலே ஜெனரல் கேன்டிடேட்ஸ் வந்தார்கள், பி.ஏ. படித்தவர்கள், எம்.ஏ. படித்தவர்கள் வந்தார்கள், அவர்களுக்கும் வேலை கிடைக்கவில்லை. வேலை கொடுக்காதது மாத்திரமல்ல. படித்த பட்டதாரிகளுக்கு உதவ வேண்டுமே என்ற நல்ல எண்ணம் இந்த அரசுக்கு வந்திருக்கிறது. ஆனால் உதவித் தொகையும் கொடுக்கவில்லை. ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். சட்டப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபடி வேலை கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை அமைச்சர் அவர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். கடந்த பத்து ஆண்டுக் காலத்திலே மட்டுமல்ல, 1952 ஆம் ஆண்டு முதல் 1980 ஆக் ஆண்டு முடிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, மலைவாழ் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு முறைப்படி கிடைக்கவேண்டிய கோட்டா கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்பட வேண்டிய புரமோஷன் கொடுக்கப்படவில்லை. தேர்வு நடத்தியபோது சொன்னார்கள் ஆட்கள் கிடைக்கவில்லை என்று. வேலை வாய்ப்புத் தருகின்ற அலுவலகத்திலே இருக்கின்ற அதிகாரிகளைக் கேட்டால் Technically qualified candidates are available from Scheduled Caste, Scheduled Tribe Communities என்று அறிக்கை வருகிறது. அரசிலே தேர்வை நடத்துகிறவர்களைக் கேட்டால் குவாலிபைட் கேன்டிடேட்ஸ் கிடைக்கவில்லை எனகிறார்கள் அது மட்டுமல்ல, எத்தனை வருஷம் எக்ஸ்பீரியன்ஸ் என்று கேட்கிறார்கள். அவர்கள் படிக்க ஆரம்பித்ததே 1947க்குப் பிறகுதான். அவர்கள் பட்டதாரிகள் ஆக ஆரம்பித்ததே 15 ஆண்டுகளுக்கு முன்புதான். இம்மக்கள் பட்டதாரிகளாக, டாக்டர்களாக, டெக்னிசியன்களாக, ஐ. ஏ. எஸ்-களாக வந்ததே சமீப காலமாகத் தான். இந்த நிலையில் எக்ஸ்பீரியன்ஸ் கேட்கிறார்கள், இந்து சமுதாயத்தை நாங்கள் நம்பியிருந்த காரணத்தினாலும் இப்படிப்பட்ட கொடுமைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு நம்பியிருந்த காரணத்தினாலும் நாங்கள் இத்துன்பங்களையெல்லாம் அனுபவித்த பாவ காரியத்திற்காக எங்களுக்கு வேலை கிடைக்கவில்லை, மேலும் மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், தீண்டாமையின் பெயரால் நாங்கள் பட்ட துன்பங்களுக்காகவா எங்களை 3 ஆண்டுகள் 5 ஆண்டுகள் அனுபவம் இருக்கிறதா என்று கேட்பது? இதனால் ஒன்று தைரியமாக அரசு

[திரு. எல். இளையபெருமாள்] [1981 ஜனவரி 31

வேலைகள் கொடுக்க முன்வரவேண்டும், இல்லாவிட்டால் உங்களுக்குக் கொடுக்கமாட்டோம், உங்கள் தலைவிதி என்று தைரியமாகச் சொல்ல முன்வரவேண்டும்.

இத்தனை போஸ்ட்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்களுக்கு என்று சொல்கிறீர்கள், இத்தனை போஸ்ட்கள் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு என்று சொல்கிறீர்கள். இத்தனை போஸ்ட்கள் மலைவாழ் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு என்று ஒரு பக்கத்திலே சொல்கிறீர்கள், ஆனால் மறு பக்கத்திலே பார்த்தால் அவைகள் கொடுக்கப்படவில்லை. இன்று நடக்கும் ஜாதிச் சண்டைகளைப் பார்த்தால் படித்தவர்கள் பட்டதாரிகள் இடையே அதிகமாக இருந்து வருகிறது என்று கூடச் சொல்லலாம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் இளையபெருமாளுக்கு ஒரு கிளார்க் வேலை கிடைக்கிறது. அவருக்கு 5 ஆண்டுக்காலத்திற்குள்ளாக கிளார்க் போஸ்ட்டிலிருந்து செக்ஷன் ஆபீசர் போஸ்ட் பதவி உயர்வு கொடுக்கலாம் என்று மத்திய அரசு, மாநில அரசு சட்டங்கள் ஒத்துக்கொள்கின்றன. ஆனால் எனக்குக் கீழே வேலை செய்கிற பிராமண இளைஞர் இளையபெருமாளுக்கு செக்ஷன் ஆபீசர் போஸ்ட் வந்துவிட்டது, ஆனால் நாம் இந்தச் சமுதாயத்திலே பிறந்த காரணத்தினால் நமக்கு அப்படிக் கிடைக்கவில்லையே என்று எண்ணுகிறார். ஆனால் உண்மையிலேயே இளையபெருமாளுக்கு செக்ஷன் ஆபீஸர் பதவி கிடைக்கவில்லை. அந்தப் பிராமண சகோதரனுக்கு அல்லது வேறு ஒரு சகோதரனுக்கு நாமும் அரிசன சமுதாயத்திலே பிறந்திருந்ததால் கிடைத்திருக்குமோ என்ற அங்கலாய்ப்பு ஏற்படுகிறது, கோபம் ஏற்படுகிறது, சாதிச்சண்டைக்கு காரணமாக இருக்கிறது. ஆனால் இளையபெருமாளுக்கும் அப்பதவி கிடைக்கவில்லை. உங்களுடைய அறிவிப்புகள் பத்திரிகைகளிலே, அழகான புத்தகங்களிலே வெளிவருகிறது, அதன் காரணமாகத்தான் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. ஆனால் கடந்த காலங்களில் அவர்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டதனை உணர வேண்டும்; அரசுக்கும் அதிகாரிகளுக்கும் இதனால் அவலநிலை ஏற்படுகிறது. 1952 முதல் 1980 வரை கிடைக்க வேண்டிய பதவிகள் கிடைக்கவில்லை. பின்தங்கிய மக்களுக்குக் கொடுக்கவேண்டியதை உயர்த்தித் தருவோம் என்று சொல்கிறீர்கள்; எங்களுக்கு உயர்த்தப்படவில்லை, பஸ்களைக் கொளுத்தி, ஊர்வலம் நடத்தி, அமைச்சர் வீட்டுமுன்னாலே சத்தம் போட்டால்தான் கவனிப்பீர்களா, அப்படிப்பட்ட கேவலமான நிலைமையை உண்டாக்க வேண்டுமா என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. இல்லாவிட்டால் கவனிக்க மாட்டார்களோ என்ற சந்தேகம்தான் வருகிறதே தவிர, நான் அந்தக் கேவலமான நிலைக்குச் செல்வதற்குத் தயாராக இல்லை, நான் அப்படித் தூண்டிவிடவும் தயாராக இல்லை, அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கவும் விரும்பவில்லை. ஆனால், அப்படிப்பட்ட நிலைமையைத்தான் உண்டாக்க வேண்டுமா என்ற சந்தேகத்திற்கு என்னை ஆளாக்க வேண்டாமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஜனவரி 31] [திரு. எல். இளையபெருமாள்]

1978–79 ஆம் ஆண்டு அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிற பில்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மின்சார பில்களை பொறுத்த வரையிலும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் கீழ்நிலையிலே இருப்பவர்களைப்பற்றித்தான் சொல்கிறேன், உயர்ந்த மட்டத்தில் இருப்பவர்களைப்பற்றிச் சொல்லவில்லை. ஒரு மாதத்திற்கு 3 ரூபாய் போடுகிறார்கள், ஒரு மாதத்திற்கு 37 ரூபாய் போடுகிறார்கள், அடுத்த மாதம் 80 ரூபாய் என்று போடுகிறார்கள், அதற்கடுத்த மாதம் 1 ரூபாய் என்று போடுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? அலட்சிய மனப்போக்கா அல்லது ஆள் இல்லாத குறையா என்று கேட்க விரும்புகிறேன். ஆள் இல்லாத குறை என்பதை அரசாங்கம் தீர்த்துக் கொள்ளுமேயானால் அதற்கு வேண்டிய ஆட்களைப் போட வேண்டும்; அல்லது அவர்கள் ஒழுங்காகப் [illegible] செய்யவில்லை என்றால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த அளவிற்கு பில் போடும் நிலை மிகவும் கேவலமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சேலம், தென்னார்க்காடு பகுதிகளிலே மின் பில்களை பழுதாகாத வியாபாரிகளுக்கு கொடுத்து, அவர்களிடத்திலிருந்து அது பொட்டலம் கட்டுகின்றவர்களிடத்திற்குச் சென்று, அது ஒரு விவசாயியின் கையில் கிடைத்து, அவர் என்னுடைய பில் இங்கே எப்படி வந்தது என்று நினைக்கும்படியான குழப்பங்கள் ஏற்பட்டிருக்கிறது, இதற்கு யாரோ தவறு செய்துவிட்டார்கள் என்று சொல்லுகின்ற கேவலமான நிலைமைதான் இருக்கிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் நம் அமைச்சர் பெருமகன் ஒருவர் சென்று பார்த்தபொழுது பில்கள் சம்பந்தமான பைலே இல்லாத நிலைமையைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். இது ஒன்றும் புதிதாக இல்லையே என்று நினைக்கக்கூடாது. இதன் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, விவசாயிகளுக்கு அந்தந்த மாதத்திலே அந்தந்த மாதத்திற்கு உண்டாகக்கூடிய கரண்டு பில்லை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிக் கொடுக்கத் தவறினால் ஏதோ மோசடி செய்கிறது என்று எண்ணுகின்ற நிலைமைதான் ஏற்படும்.

ஏழை அரிசன மக்களுக்குத் தெருவிளக்குகள் கொடுத்து விட்டோம் என்று சொல்கிறார்கள். உங்களைக் கேட்டால் யூனியனைக் கேளுங்கள் என்று சொல்லப்படுகிறது. யூனியனைக் கேட்டால் பஞ்சாயத்து போர்டைக் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்து போர்டைக் கேட்டால் நாங்கள் என்ன செய்வோம், நாங்கள் எல்லா வார்டுகளுக்கும் கொடுத்து விட்டோம், இந்த வார்டு அரிசன வார்டு, அதற்கு அரிசன டைரக்டரையோ அமைச்சரையோ கேளுங்கள் என்று சொல்கிறார்கள். ஒரு பஞ்சாயத்திலே அல்லது ஒரு கார்ப்பரேஷனிலே அல்லது ஒரு முனிசிபாலிட்டியிலே எல்லா மக்களோடும்

[திரு எல். இளையபெருமாள்] [1981 ஜனவரி 31

நாங்களும் வாழ்கிறோம்; எல்லா வார்டுகளிலும் நாங்கள் இருக்கிறோம். ஆனால் எங்களுக்கு என்று மட்டும் இப்படிச் சொல்லிக் கொண்டு அதற்குத் தகுந்த நிதியைக் கொடுக்காமல், தைரியமான அதிகாரிகளைப் போடாமல், நுட்ப உணர்வுகளைத் தெரிந்த நிலைமைகளை உணர்ந்தவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்காத நிலைமையில் தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. அமைச்சர்கள், கேபினெட்டிலே ஜாயின்ட் ரெஸ்பான்சிபிலிட்டி என்று சொல்லிக்கொண்டு அநீதியைக் கவனிக்காமல் இருந்து விடக்கூடாது.

சுவாமி சகஜானந்தா அவர்கள் இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்து, முப்பதாண்டுக்காலம் சேவை செய்தவர்கள்; பின்தங்கிய அரிஜன மக்களுக்கு உறு துணையாக இருந்தவர்கள். அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பள்ளியின் நிலைமையை காலஞ்சென்ற இராஜாஜி அவர்களும், காலஞ்சென்ற காமராஜ் அவர்களும் கருணையோடு கவனித்தார்கள். ஆனால் இப்பொழுது ஜூன் மாதத்திலிருந்து இன்று வரையில் சரியான முறையில் அங்கே மின் விளக்குகள் இல்லை; அந்த விடுதிக்கு மின் விளக்குகள் இல்லை; படிக்கின்ற பிள்ளைகள் சோதனை செய்கின்ற லெபாரட்டரிக்கு மின்சாரம் சரியாகக் கிடைக்கவில்லை. இதுவரையிலேயும் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய உபகரணங்கள் மின்சார வாரியத்தால் போடப்படவில்லை. மின்சாரமாக இருந்தாலும்கூட நான் என்ன சொல்கிறேன் என்றால் ஜாயின்ட் ரெஸ்பான்சிபிலிட்டி என்று சொல்லிக் கொண்டு இருக்கும் நம் அரசு ஏன் அவர்களுக்குத் தனியாக இருக்கிறது. மேலும் தனிஅமைச்சர் இருக்கிறார் என்று சொல்லிக் கொண்டு போதுமான நிதியையும் கொடுக்காமல் இருக்கின்ற நிலைமையிருக்கிறது. பஞ்சாயத்து போர்டைக் கேட்டால் யூனியனைக் கேட்கச் சொல்வது, யூனியனைக் கேட்டால் அவர்கள் ஒன்றைச் சொல்வது, ஆனால் கடைசியில் இந்த அரசாங்கம் என்ன முடிவுதான் எடுக்கிறது என்பதைத் தெரிந்துக் கொள்வதற்காகத்தான் இந்த வேண்டுகோள்களைக் கொடுத்திருக்கிறேன்.

நம் தமிழகத்திலே விவசாயிகளுக்கு நீண்ட தூரப் பார்வையாக எண்ணிச் செய்யவேண்டுமென்றால் அதிகமாக தொர்மல் ஸ்டேஷன்களை உற்பத்தி செய்ய வேண்டும். மற்றச் செலவுகளையெல்லாம் ஒரளவிற்கு நிறுத்தி வைத்துவிட்டு மின்சாரத்துறைக்கு மின்சார வாரியத்திற்கு அதிக நிதியை ஒதுக்கிச் செய்யவேண்டும். அதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அப்படி வரத் தவறுமேயானால் விவசாய உற்பத்தி குறையும்; தொழில் உற்பத்தி குறையும்; வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும். அந்த அளவிற்கு அவலநிலையை உருவாக்க வேண்டாமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக அமைச்சரவர்களின் குறிப்பிலே நல்லதொரு விளக்கம் இல்லாத காரணத்தினாலேயும், இங்கே ஆற்றிய உரையிலேயும் சொல்லாத காரணத்தினாலேயும் நிச்சயமாக அவர்கள் இதுகுறித்து ஆவன செய்யவேண்டும் என்று கூறி, அவ்வாறு அவர் செய்வார் என்ற நம்பிக்கையும் தெரிவித்து தலைவர் அவர்களே இன்று எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்தமைக்காக நன்றி கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

1981 ஜனவரி 31] [திரு எல். இளையபெருமாள்]

[முற்பகல் 11.30]

திரு. கு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 23-வது நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்ற ஒரு வாய்ப்பினை அளித்தமைக்காக நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்த நிதி அறிக்கையிலே, 1979—80, 1980—81 ஆம் ஆண்டுகளிலே பட்ஜெட் எஸ்டிமேட்டைப் பொறுத்த அளவிலே, ரெவினியூ எக்ஸ்பென்ஸாக ரூ. 363 கோடியும், ரெவினியூ ரிசிட்டாக ரூ. 299 கோடியும் காட்டி, ஷார்ட் பால்லாக ஏறத்தாழ ரூ. 64 கோடியைக் காட்டுகின்றது. அதிலே, நம்முடைய மாநில அரசுக்கு இன்ட்டரஸ்டாகக் கொடுக்கக்கூடிய ஏறத்தாழ ரூ 31.81; ஆக, இதையும் செலவழிக்க வேண்டிய ஒரு நிலைமையும் மின்சார வாரியத்திற்கு இருந்து கொண்டிருக்கிறது. மாநில அரசைப் பொறுத்த வரையிலே, தமிழகத்திலே மின் தட்டுப்பாட்டைத் தீர்க்க வேண்டுமென்ற காரணத்திற்காக பல்வேறு திட்டங்களைப் புரட்சித் தலைவர் தலைமையிலே அமைந்திருக்கிற இந்த அரசு தீட்டி செயலாற்றிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, ஏற்கனவே 2929 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்கான மின் நிலையங்களை நிறுவி, இந்த ஆண்டு 69 மெகாவாட் மின்சாரம் மட்டுமே நாம் தயாரித்திருக்கின்றோம். ஒவ்வோர் ஆண்டும், நம் மின் நிலையங்களின் மூலம் 10 சதவீதம் மட்டுமே கூடுதலாக உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த 2929 மெகாவாட் திறனுள்ள மின் நிலையங்களையும் நல்ல முறையிலே இயக்கி, இன்னும் பெருவாரியாக, அதிலேயிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கு நாம் திட்டமிட்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இந்த அரசைப் பொறுத்த அளவிலே, மின்சாரத்திற்காக 6—வது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏறத்தாழ, ரூ. 1,022 கோடி ஒதுக்கி பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுகின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றார்கள். அதற்காக உளமார, மனமாரப் பாராட்டுகின்றேன்.

அடுத்தபடியாக, நெல்லை மாவட்டத்திலே கூடங்குளம் பகுதியிலே புதிய அணுமின் நிலையம் நிறுவ ஏற்கனவே எஸ்டிமேட்கள் தயாரிக்கப்பட்டு, ப்ரப்போசல்கள் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசினுடைய ஆய்விலே இருப்பதாக அறிகிறேன்.

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1981 ஜனவரி 31

மாநில அரசும் அதற்கான தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து, மத்திய அரசை வற்புறுத்தி, கூடங்குளம் பகுதியிலே, அணு மின் நிலையத்தை ஏற்படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மத்திய மின்சார ஆய்வுக் குழுவிலே, தமிழக மின்சார வாரியத்தின் சார்பாக, மேல தாமிரபரணி நீர் மின் திட்டம், மணிமுத்தாறு நீர் மின் திட்டம், மேல் அமராவதி நீர் மின் திட்டம். இப்படி, ஏராளமான மின் திட்டங்கள் அமுல் படுத்தப்படாமல் இருக்கின்றன. நான் குறிப்பிட்ட இந்த 3 மின் திட்டங்களையும் நிறைவேற்ற, மத்திய அரசிடம் அனுமதி வாங்கி, பணிகளை விரைவில் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் திருட்டும், மின் இணைப்பும் என்ற வகையிலே தமிழகத்தைப் பொறுத்தவரையிலே மின்சார வாரியம் நஷ்டத்திலே ஓடிக் கொண்டிருக்கிற சூழ்நிலையிலே இருக்கும்போது மின் திருட்டும், மின் இழப்பும் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. மின்சாரத்தைத் திருடுகின்றவர்கள் பயப்படுகின்ற வகையிலே, ஒரு கடுமையான சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வேண்டிக்கொள்கிறேன். மின் இழப்பைப் பொறுத்தவரையிலே. 1978—79—ஆம் ஆண்டிலே, அது 18% ஆக இருந்து கொண்டிருக்கிறது. அந்த லைன் லாஸ் இன்னும் நாம் குறைத்தாக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திட்டங்களை நிறைவேற்றும்போது, நமது தமிழக அரசு மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக ஆண்டுதோறும் கேரளாவிலேயிருந்து 600 மில்லியன் யூனிட்டுகளை வாங்கிக் கொண்டிருக்கிறோம். ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 28 காசுகள் கொடுத்து நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், எங்கள் குமரி மாவட்டத்திலே, பெருஞ்சாணி, பர்த் தேக்கத்திலிருந்து பரளியாறு நீர் மின் திட்டத்தை ஏற்படுத்தி, ரூ. 13 கோடி மதிப்பீட்டிலே திட்டமிடப்பட்டு 1971—ஆம் ஆண்டிலே மத்திய அரசு அனுமதிக்காக அனுப்பப்பட்டது. ஆனால், அந்தத் திட்டத்தினுடைய பதில் 1978—ஆம் ஆண்டு என்று கருதுகிறேன், அப்பொழுதுதான் மத்திய அரசிலேயிருந்து அந்தத் திட்டத்தை எடுக்க முடியாது என்ற பதில், மின்சார வாரியத்திற்கு வந்திருப்பதாக அறிகிறேன்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்த அளவிலே, அதற்கான மின்சாரம் உற்பத்தியாகும் செலவு ஒரு யூனிட்டுக்கு 16 காசு அல்லது 17 காசாகும் என்று அறிகிறேன். ஆனால் நாம் அண்டை மாநிலத்தில் இருந்து வாங்கக்கூடிய மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 28 காசுகள் கொடுக்கிறோம். அப்படி இருக்கும்போது ஏன்

1981 ஜனவரி 31] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

இந்த பரளியாறு மின் திட்டத்தை மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது என்று கேட்கவிரும்புகிறேன். இதிலே உள்ள ஒரு முக்கியமான காரணம் குமரி மாவட்டத்தில் இதற்காக 97 ஏக்கர் ஆர்ஜிதம் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியில் உள்ள பண முதலைகள் இந்தத் திட்டம் இந்தப் பகுதியில் வந்தால் தங்களிடத்திலே உள்ள அந்த 97 ஏக்கர் நிலம் போய்விடுமே என்று தங்களுடைய செல்வாக்கை உபயோகப் படுத்தி, அந்தத் திட்டத்தை திருப்பி அனுப்பக் கூடிய முறையிலே ஏற்பாடு செய்து, அதன் மூலம் தான் திருப்பி அனுப்பப் பட்டது என்று மக்கள் மத்தியிலே பரவலாகப் பேசப்படுகிறது. அதற்கான காரணங்களும் வலுவாக இருக்கின்றன. எனவே 13 கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்தத் திட்டத்தை, 35 மெகாவாட் மின்சாரம் கொடுக்கும் அந்தத் திட்டத்தை, உடனடியாக மத்திய அரசுக்கு நமது மாநில அரசு எழுதி அதைத் திட்டத்தைத் தொடங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் ஆண்டுக்கு 84 லட்சம் மிலியன் யூனிட்டு மின்சாரம் கிடைக்கக் கூடிய வாய்ப்பு தமிழக மின்வாரியத்திற்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்த மின் திட்டத்தை ஏற்படுத்த மாநில அரசு மத்திய அரசினை வற்புறுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மின்கட்டணத்தைப் பொறுத்த அளவில், இந்த அரசு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு சிறு விவசாயிகளுக்கு ஒரு யூனிட்டுக்கு 12 காசுகளும் பெரிய விவசாயிகளுக்கு ஒரு யூனிட்டுக்கு 14 காசுகள் என்று மின் கட்டணம் நிர்ணயம் செய்து ஏழை எளிய விவசாயிகளுக்கு உதவுகிறது புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தான் இந்த ஏழை எளிய விவசாயிகளின் வாழ்வுக்கு வழிவகை செய்கிறது. இதற்கு முன்னாலே ஆண்டு கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அப்போதிருந்த 16 காசிலிருந்து ஒரு காசு கூட குறைக்க மாட்டோம் என்று சொன்னதைப்போல, இன்றையதினம் இருக்கின்ற தமிழக அரசு சொல்லவில்லை. இந்த அரசு ஏழை எளிய மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள அரசாகும். ஆகவேதான் மீட்டர் கட்டணத்தை 1.7.1980 முதல், மூன்று பேஸ் மீட்டருக்கு ரூ. 4 ஆக இருந்த மீட்டர் கட்டணத்தை மாதத்திற்கு 2 ரூபாயாக குறைத்தது நமது புரட்சித் தலைவர் அரசாகும்.

அது மட்டுமல்ல, குடிசைவாழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் 2½ ரூபாய் கட்டணம் செலுத்தினால் மட்டும் போதும், அவர்கள் குடிசைகளிலே மின் விளக்கு எரியும் என்ற நிலைமையை இந்த அரசு — — ஏழை எளிய மக்களுக்காக உழைக்கின்ற இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1981 ஜனவரி 31

அடுத்து, குமரிமாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள மின்சாரத் தேவை 1,10,000 வோல்டேஜ் ஆகும். ஆனால் அங்கே கிடைக்கின்ற மின்சாரம் 66,000 வோல்டேஜாக இருக்கிறது. இதனால் அந்தப் பகுதியிலே மின்சாரம் உபயோகப்படுத்துகின்றவர்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். இந்த அரசு அவர்களுடைய துன்பத்தைக் குறைத்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ஐந்து கிராமம் பகுதியில் 33 கே. வி. சக்தியுள்ள டிரான்ஸ்பார்மர் போடவேண்டும் என்று பல வேண்டுகோள்கள் விடப்பட்டிருக்கின்றன. குமரி மாவட்டத்தில் உள்ள மின் துறை அதிகாரிகளிடமும் முறையிடப்பட்டிருக்கின்றது. எனவே அந்த ஐந்து கிராமத்திலே 33 கே. வி. சக்தியுள்ள டிரான்ஸ்பார்மர்களை நிறுவ வேண்டும் என்று பணிவோடு வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, தற்போது மின்வாரிய நிர்வாகத்திலே நிச்சயமாக மாற்றம் தேவை. அந்த நிர்வாகத்தைப் பொறுத்த வரையிலே 11 சீப் இன்ஜினீர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த நிர்வாகத்திலே இப்போது பணிபுரிகின்ற தொழிலாளர்கள் ஏறத்தாழ ஒரு லட்சத்திற்கும் அதிகமாக இருக்கிறார்கள்.

[முற்பகல் 11-40]

வளர்ந்து வருகிற அந்த நிறுவனம் பலவேறு கஷ்டங்களை, நிர்வாகச் சிக்கல்களைச் சந்தித்துக்கொண்டு இருக்கிறது. அந்த நிர்வாகத்தைச் சீர்படுத்த இன்னும் நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு எப்படி போக்குவரத்துக் கழகத்திலே ஒவ்வொரு பகுதியாக கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் என்று பிரிக்கப்பட்டு இருக்கிறதோ அதைப்போல தமிழ்நாடு மின்சார வாரியத்திலும் டிஸ்டிரிபியூஷன் செக்ஷனைப் பொறுத்தவரையில் 4-5 பிரிவுகளாகப் பிரித்து, சென்னையில் குவிந்து இருக்கின்ற 11 சீப் இன்ஜினீர்களை ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் போடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள தெருவிளக்குகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அரசுதான் கவனித்துக்கொண்டு வருகிறது. அதுமட்டுமல்ல, மின்சார வாரியம்தான் தெருவிளக்குகளைப் பொருத்தும் சூழ்நிலை இன்று இருந்து கொண்டு இருக்கிறது. ஆனால் அந்த மின்சார விளக்குகளை—அதற்கான பல்புகளைப் பொறுத்த வரையில் பொருத்திவிட்டுச் சென்ற 3—4 நாட்கள் கழிந்த உடனே அந்த பல்புகள் பியுஸாகிவிடுவதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பல்புகளின் தரம் மிகவும் மோசமாக இருக்கிறது. அதுவும் ப்ரீதிப் கம்பெனியில் இருந்து வாங்கும் பல்புகள் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, மின்சார வாரியம் பணத்தைக்

1981 ஜனவரி 31] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

கொடுத்து தனியாரிடத்திலிருந்து பல்புகளை வாங்குவதற்குப் பதிலாக மின்சாரவாரியமே பல்புகளையும், ட்யூப் லைட்டுகளையும் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவி, தேவைகளை நிறைவு செய்து கொள்ளவேண்டும். அந்த தொழிற்சாலை மூலமாக நல்ல அருமையான தரமான பல்புகளைத் தயார் செய்து உபயோகிக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு அரசு நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு நாம் கூடுதலாக போனஸ் கொடுத்து வருகிறோம். 1980-81 ஆம் ஆண்டிற்காக தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களுக்கு போனஸ் கணக்கிடுகிறபோது, கூடுதலாக போனஸ் இந்த ஆண்டு வழங்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

டி.சி.எல். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் 1971 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆட்கள் எடுக்கப்படவில்லை. தேவையான அளவிற்கு ஆட்கள் இல்லாமல் பல இடங்களில் கஷ்டப்படுகின்றனர். பல இடங்களில் குறைவாக ஆட்கள் பணிபுரிகின்றனர். ஆகவே தயவு செய்து நான் கேட்டுக்கொள்கிறேன், அப்படி குறைவாக பணிபுரிகின்ற இடங்களில் போதிய அளவிற்கு ஆட்களைப்போட்டு, அந்தக் குறையை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1972-ஆம் ஆண்டுஜனவரித் திங்கள் 1-ம் நாளில் இருந்து 1975-ஆம் ஆண்டு மே திங்கள் 31-ம் தேதி வரையில் 3½ ஆண்டு காலத்தில் நடைபெற்ற அத்துமீறல்கள் குறித்து விசாரிக்க திரு. டபிள்யூ. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு, பி.ஏ.பி.எல். தலைமையில் நியமிக்கப்பட்ட கமிஷன் குறிப்பாக மின்சார வாரியத்தில்—அன்றைக்கு இருந்த அரசு—என்னென்ன தவறுகள் அந்தகாலக் கட்டத்தில் நடந்துள்ளன என்பதை விசாரித்து ஒரு இடைக்கால அறிக்கையாக 5-ம்பகுதியில் அளித்துள்ளது, அதிலே வழக்கு எண் 163/சி டபிள்யூ/எஸ்.கே/78 என்ற நெம்பர் 1 வழக்கில் பரம்பிக்குளம் ஆளியாறு புனல் மின் திட்டத்தில் பணியாற்றக்கூடிய தமிழ்நாடு மின்சார வாரிய பணியாளர்கள்—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள்—பாதிக்கப்படுகின்ற முறையில் அன்றைக்கு ஆண்டு கொண்டு இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, திராவிட முன்னேற்றக்கழக சங்கத்தைச் சேர்ந்தவர்களை குறிப்பாக, அந்த அதிகாரியை வற்புறுத்தி, ஏறத்தாழ சுமார் 500 பேர்களை வேலையில் சேர்க்க வைத்து இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக 85 தொழிலாளர்களின் பெயர்களை அவர்களே எழுதி கொடுத்து, அந்த அதிகாரியை வற்புறுத்தி வேலைக்குச் சேர்த்துக்கொள்ளச் சொல்லி இருக்கிறார்கள் என்று தெளிவாக அந்த கமிஷன் அறிக்கையில்

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1981 ஜனவரி 31

சொல்லப்பட்டிருக்கிறது. இந்த கமிஷனுடைய தீர்ப்பிலே க
அருமையாகச் சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்
கழக சங்கமும், ஏனைய சங்கங்களும் மேற்பார்வை பொறியாள
உடைய உரிய அனுமதி இன்றி உள்ளே நுழைந்து, 72 நட
களையும், 85 நபர்களையும் பட்டியலில் சேர்க்குமாறு
கட்டாயப்படுத்திய செய்தியைக் குறித்து நான் கண்டிக்கிறே
என்று நீதிபதி அவர்கள் சொல்லிவிட்டு அடுத்தபடியாகச் சொ
கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கிளர்ச்சியி
பாதிக்கப்பட்டிருக்கிறார் அந்த அதிகாரியைப் பொறுத்த அளவி
அவர் உள்நோக்கத்தோடு தி.மு.க. பால் அனுதாபியாக இ
கிறார் என்று நான் கருதவில்லை. ஆனால் தி.மு.க.வி
தனது அறைக்குள் திடுமென புகுந்து கலவரம் செய்தன
அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை என்று நான் கரு
கிறேன். இந்த நேரத்தில் தி.மு.க. யூனியனைச் சேர்ந்தவர்களை
திருப்திபடுத்தவே 85 பேர்களுக்கு வேலை கொடுக்க அவ
கட்டாயப்படுத்தி இருக்க வேண்டும். கழகத்தவர்களுடைய
செயல் அவரைகட்டுபடுத்தவில்லை என்பதையும் இந்த கமிஷனை
பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய
நிர்வாகத்தை, திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்
தவறினை மின்சார வாரியத்திலே அவர்கள் தலையிட்ட நிலையை
வெகு அழகாக இந்த கமிஷன் நீதிபதி சொல்லியிருக்கிறார்
எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய இ
அரசு அதனால் பாதிக்கப்பட்ட அண்ணா தொழிற்சங்கத்தை
சேர்ந்த 124 பேர்களுக்கும், அவர்களுடைய பிரச்னையை சீர்தூக்கி
பார்த்து, இதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, எதிர்கட்சிகளைப் பொறுத்தவரை, அதிலும்
குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை
அவர்கள் ஊழல், ஊழல் என்று சொல்கிறார்கள். ஆனால் யார்
ஊழல் செய்தார்கள் என்று நிச்சயமாக தமிழக மக்களைப்
பொறுத்த அளவிலே திராவிட முன்னேற்றக் கழகத்தை
அடையாளம் கண்டுகொண்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல
வேண்டுமானால் சமயநல்லூர் ஊழலை கொஞ்சம் தெளிவாகச்
சொல்ல விரும்புகிறேன்.

சமயநல்லூரில் அமைக்கப்பட்டிருந்த ஏறத்தாழ 4 கோடி
ரூபாய் மதிப்புள்ள மின் நிலையத்தை 55 இலட்சம் ரூபாய்க்கு
ஏலம் விட்டு கொள்ளையடித்தவர்கள் திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை இந்த நேரத்திலே
தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, தவறு செய்தவர்களை,
திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பொறுத்தவரையில்,
இந்த நாயுடு கமிஷன் சொல்லியிருக்கின்ற இந்த தீர்ப்பை
ஆராய்ந்து, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இந்
வாய்ப்பினை அளித்தமைக்காக நன்றி தெரிவித்து, விடைபெ
கிறேன். நன்றி. வணக்கம்.

1981 ஜனவரி 31]

* திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்
களே, இந்த மின்சார வாரிய அறிக்கையைப் பார்க்கும்போது
மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அறிக்கையின் இரண்டாவது
பக்கத்தில் 3-வது பாராவில் மின்சாரத்தினுடைய முக்கியத்தைப்
பற்றியெல்லாம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
பாருளாதார வளர்ச்சிக்கு இது மிகவும் அத்தியாவசியம்
என்பதிலே எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லை. ஆனால்
ந விஷயத்தை இது சம்பந்தமாக சுட்டிக் காட்டினால் அது
வறாக இருக்காது என்று எண்ணுகிறேன்.

மின்சாரம் மக்களுக்கு எந்த அளவுக்கு மிக முக்கியமாக
இருக்கிறதோ அதைப்போன்று தொழில் வளர்ச்சிக்கும் முக்கியம்
என்பதைநாம் அறிவோம். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த
வரையில் 'நேச்சுரல் ரீசோர்சஸ்' எல்லாம் எந்த அளவுக்கு உண்டோ
அந்த அளவுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று இந்த
அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஒரு
விஷயத்தை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர
விரும்புகிறேன். பரலியாறு, மேல் தாமிரபரணி, மேல் மணிமுத்தாறு
திட்டங்களைப் பொறுத்த வரையில் மத்திய அரசு அனுமதி
கொடுக்கவில்லை என்று தெரிகிறது. மத்திய அரசு ஒரு
பக்கத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் குந்தகப்பட்டிருக்
கிறது என்று பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். அதே
நேரத்தில் இப்படிப்பட்ட திட்டங்களுக்கு அனுமதி கொடுக்காமல்
இப்படி அவர்கள் பிரச்சாரம் செய்வது சரியாக இருக்குமா?
இதில் அரசியல் நோக்கம் இருக்குமோ என்று சந்தேகப்படக்
கூடிய அளவுக்கு விஷயம் போகிறது. ஆகவே, தமிழக அரசு
மீண்டும் இந்தத் திட்டங்களை அமுல்படுத்த மத்திய அரசை
வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே நிலக்கரியிலே இருந்து
மின்சாரத்தை உற்பத்திச் செய்யக்கூடிய முறையிலே திட்டங்களை
நான் உருவாக்கக் கூடாது என்பது பற்றி அமைச்சரவர்களும்
இந்த அரசும் சிந்திக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்
கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட
வேண்டும். குறிப்பாக கோயம்புத்தூர் போன்ற மிகப் பெரிய
தொழில் கேந்திரங்களில் இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்க
வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஆனால்
மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் இது சம்பந்தமாக
நடந்த நடவடிக்கைகளை எடுக்கின்றதா என்பதில் ஐயம்
இருக்கின்றது. மின்சார வாரியம் எந்த அளவுக்கு முறைகேடான
முறையிலே விஷயங்களைச் செய்து கொண்டிருக்கின்றது என்பது

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1981 ஜனவரி 31

பற்றி 1978-79.ஆம் ஆண்டு கம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இண்டியா அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையின் 149, 150 ஆகிய பக்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து மின்சார வாரியம் போதிய கவனம் செலுத்தவில்லை என்பது நமக்குத் தெரியவருகின்றது.

அடுத்து மின்சார வாரியம் மக்களுக்கு விளக்கு வசதி செய்து கொடுப்பதைப் பொறுத்தவரையில் அது போதுமானதாக இல்லை. எரிகின்ற விளக்குகளிலும் போதுமான வெளிச்சம் இல்லை என்று பரவலாக மக்கள் பேசுகிறார்கள். அதற்குரிய ஒரு சில காரணங்களைச் சொன்னால் தவறாக இருக்காது என்று கருதுகிறேன். அவைகள் சரியான முறையிலே பராமரிப்பு செய்யப்படுவதில்லை. எந்தெந்த நேரத்திலே பழைய வொயர்களை மாற்றிவிட்டு புதிய வொயர்களைப் போட வேண்டுமோ அந்த முறையிலே செய்யப்படுவதில்லை. ட்ரான்ஸ்ஃபார்மரைப் பொறுத்தவரையில் தகுந்த முறையில் பராமரிப்பு செய்யப்படுவதில்லை. ஆகவே மக்களுக்கு போதிய விளக்கு வசதிகளைச்செய்து கொடுக்கின்ற வகையில் மின்சார வாரியம் ஏற்பாடு செய்யவில்லை என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். குறிப்பாக குமரிமாவட்டத்தில் குழித்துறை, விளவங்கோடு, திருவெட்டாறு போன்ற பகுதிகளிலே போதுமான அளவுக்கு வெளிச்சம் இல்லை என்றுமாவட்ட வளர்ச்சி மன்றத்திலே சொன்னபோது கலெக்டர் அவர்கள் கூட ஒத்துக்கொண்டார்கள். ஆனால் அங்கே ஒரு சப்ஸ்டேஷன் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டபோது அதற்கான நடவடிக்கையை எடுப்பதிலே மின்சார வாரியம் தவறிவிட்டது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அடுத்து தொழிற்சங்கங்களுக்கு விதிக்கப்படுகின்ற மின்சாரக் கட்டணம் டோமஸ்டிக் பர்ப்பஸுக்கு விதிக்கப்படுகின்ற கட்டணத்தைவிட அதிகமாக இருக்கின்றதே, இது சரியா? ஆகவே தொழிற் சங்கங்களுக்கு அதே கட்டணம் விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தெரு விளக்குகளுக்கு பல்புகள் போடுவதைப் பொறுத்தவரையில் 250 வாட்ஸ் பல்புகள் பொருத்தப்பட வேண்டியதற்குப் பதிலாக 230 வாட்ஸ் பல்புகள் பொருத்துவது தான் அவை சீக்கிரத்தில் ஃப்யூஸ் ஆவதற்கு முக்கியமான காரணம். மேலும் போதுமான அளவுக்கு அதனால் வெளிச்சம் கிடைக்காத நிலையும் ஏற்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடுவதுபோல் மின்சார வாரியத்தின் மூலம் அல்லது தமிழக அரசின் பொறுப்பிலேயே பல்புகள் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஜனவரி 31] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

(மாண்புமிகு பாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து மின் திட்டங்களைப் பொறுத்தவரையில் அவைகளுக்கு இன்ஸ்ட்டால்ட் கெபாசிட்டி இல்லை என்று ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. கோதையாறு ஹைட்ரோஎலக்ட்ரிக் ஸ்கீமைப் பொறுத்தவரையில் அங்குள்ள இன்ஜின்கள் நல்ல முறையில் பராமரிக்கப்படாததால் அங்கே இன்ஸ்ட்டால்ட் கெப்பாசிட்டி இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே இன்ஸ்ட்டால்ட் கெப்பாசிட்டி கிடைக்கக் கூடிய முறையிலே நடவடிக்கை எடுத்து நமக்கு இருக்கக் கூடிய பற்றாக்குறையைச் சரிக்கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின்சார கனெக்ஷன் கொடுப்பதைப் பொறுத்தவரையில் காலதாமதம் ஏற்படுகின்றது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 8 வருடம், 10 வருடம் என்று கூட கனெக்ஷன் கொடுக்க வேண்டிய நிலையில் பெண்டிங்கிலே இருக்கின்றன. குறிப்பாக காட்பாடி பக்கத்திலே இருக்கக்கூடிய பகுதிகளிலே போஸ்ட்டுகள் அமைக்கப் பணம் செலுத்தி 8 வருடங்கள் ஆகியும் விளக்குகள் பொருத்தப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய குமரி மாவட்டத்திலே ஆதிவாசிகள் தங்கியிருக்கக் கூடிய இடமான ஆறுகாணி அணைமுகம் 'எரிகண்' என்ற இடத்திலே, அவர்கள் மின்வசதி வேண்டும் என்று கேட்டு, மனு எழுதிக் கொடுத்து, அதற்கான அனுமதிக் கிடைத்ததற்குப் பிறகும், 6 வருட காலமாக அந்த பணி அப்படியே நிற்கிறது. அதேபோன்று மங்கோடு என்ற பகுதியிலும் இதே தான் கதை. விவசாயிகளுக்கு மோட்டார் பம்பு செட்டுகள் போன்றவைகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதிலும் இப்படியே சால தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அது மட்டும் அல்ல; சில இடங்களில் முறையாக செலுத்த வேண்டிய பணம் செலுத்தியும், பிறகும் ஆயிரம் ரூபாய் வரை அந்த விவசாயிகளைக் கட்டச் சொல்கிறார்கள். சில இடங்களில் அப்படி அவர்கள் கட்டியதற்குப் பிறகும், கனெக்ஷன் கொடுப்பதற்கான மின் சாதனங்களையும் அவர்களே வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அவல நிலை பல இடங்களில் இருக்கிறது. அவைகளைப் போக்க வேண்டும் என்று இந்த அரசை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இதைப்பற்றிய விபரங்களை நாங்கள் எங்களுடைய மாவட்ட அதிகாரியைச் சந்தித்தும் பேசும் போது அவர்கள் கூறுகிறார்கள். எங்களுக்குத் தேவையான மென் அண்டு மெட்டீரியல்ஸ் இல்லை என்று. மெட்டிரியல்ஸ் என்பதைப் பொறுத்தவரையில் இந்த மின் இணைப்புக் கொடுப்பதற்குத் தேவையான

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1981 ஜனவரி 31

எல்லா வகைகளையும் அரசாங்கம் எந்த வகையில் பெறமுடியுமோ அந்த வகையில் பெற்றுத் தயாராக வைத்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் மென் என்று சொல்கிறார்களே, மேன் பவர்—அதைப் பொறுத்தவரையில் சென்ற பல வருடங்களாக அதே வாரியத்தில் டெம்பரரியாக வேலை செய்து, பிறகு அங்கிருக்கக் கூடிய அதிகாரிகளின் உதவியால் பல காண்டிராக்டர்களிடம் பணிபுரிகின்ற நிறைய தொழிலாளர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். குமரி மாவட்டத்திலும் இருக்கிறார்கள் என்பது எனக்கு நேரிடையாகத் தெரியும். அவர்களை திரும்பவும் காண்டிராக்டர்கள் மூலமாக அழைக்காமல், நேரிடையாக அரசே வேலைக்கு அமர்த்திக் கொண்டு இத்தகைய மின் இணைப்புப் பணிகளை செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம். அதனமூலம் கால தாமதத்தை தவிர்க்கலாம், தவிர்க்க வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் மற்றொரு விஷயம் என்னவென்றால், இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பேட்டிலே கனெக்ஷன்களைப் பற்றியும், மின் கட்டணங்களைப் பற்றியும குறிப்பிடப் பெற்றிருக்கிறது. இதிலே கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய அளவிற்கு முக்கியத்துவம் உண்மையில் நடைமுறையில் கொடுக்கப் பெறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்: ஆயிரக்கணக்கான கேஸ்கள் இந்த சிஸ்டத்திலே பெண்டிங்காக இருக்கின்றன. அவைகளுக்கு கனெக்ஷன் கொடுக்கப்பட வேண்டும். அதே போன்று சில இடங்களில் குடிசைகளுக்கு ஒரு விளக்கு திட்டத்திற்கு 12 ரூபாய் வசூலிக்க வேண்டிய இடத்தில் எல்லாம் 25 ரூபாய் வசூலிக்கிறார்கள். 25 ரூபாய் கொடுத்தால் தான் மின் இணைப்புக் கிடைக்கும் என்கிறார்கள். இந்தக் முறைகள் மாற்றப்பட வேண்டும். இந்த அறிக்கையிலே, 17வது பாராவிலே மின் இணைப்பிற்கு எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவு முக்கியத்துவம் நடைமுறையில் இல்லை. அதைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் மேஜர் பஞ்சாயத்துக்களுக்கும் முனிசிபாலிட்டிகளுக்கும் கூட இந்தத் திட்டம் அதாவது குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கும் திட்டம் விரிவு படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் மற்றொரு மிக முக்கியமான விஷயம் சாபக்கேடாக இருக்கும் விஷயம் என்னவென்றால் பவர் கட். இந்தப் பவர்கட்டைப் பற்றி அரசாங்கம் என்ன அனௌன்ஸ் செய்கிறதோ அதைவிட அதிகமாகவே இந்த பவர்கட் நடைமுறையில் ஏற்படுகிறது. அதை கண்காணிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இத்தகைய பவர்கட்டுகளினால் பாதிக்கப் படுவது

1981 ஜனவரி 31] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

ஸ்மால் இண்டஸ்டிரீஸ் தான். அதனால் அவைகளில் உற்பத்தியாகும் பொருள்களும் பாதிக்கப்படுகின்றன. ஆனால் பெரிய தொழிற்சாலைகள் அந்த அளவிக்கு பாதிக்கப்படுவது இல்லை. அது மட்டும் அல்லாமல், அவர்களுக்கு வேண்டிய மின்சாரம் திருட்டுத்தனமாக அவர்களுக்கு கிடைத்துவிடுகிறது. இந்த திருட்டைப் பொறுத்த அளவிலே இப்பொழுது எல்லாம் அதிக அளவில் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாக நாம் அன்றாடப் பத்திரிகைகளில் பார்க்கிறோம். வேறு பல வழிகளில் இருந்தும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே இந்த மின்சார வாரியத்தில் உள்ள அதிகாரிகள் இதில் எந்த அளவிற்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து ஒரு விசாரணையை நடத்த அரசு முன்வர வேண்டும். அப்போது தான் இப்படிப்பட்ட திருட்டுகள் குறைக்கப்படும் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

மின்சாரத் திருட்டு என்பது மிக முக்கியமான விஷயம். தற்போது இருக்கும் பவர் கட் நிலையில், இப்படி திருடு போவது கண்டுப்பிடிக்கப்பட்டு தடுக்கப்பட்டால், அது பலவகைகளில் மக்களுக்குப் பயன்படும் என்பதைக் கூறி அதற்கு, அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அட்வைசரி கமிட்டி என்று சொல்லக்கூடிய பல கமிட்டிகள் ஒவ்வொரு யூனிட்டிலும் வைக்கப்படுவதாக அறிக்கையிலே இருக்கிறது. ஆனால் நடைமுறையில் பார்க்கிறபோது இந்த அட்வைசரி கமிட்டிகள் கூடுவதே இல்லை. அதிகாரிகள் விரும்பக்கூடிய நேரத்திலே இஷ்டப் பட்டப்படிதான் அதைக் கூட்டுகிறார்கள். அதனால் இவைகளை காலா காலத்தில், அதாவது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டு, அப்படிக் கூட்டுகிற நேரத்திலே, எம்.எல்.ஏ. எம்.பி. களுக்கு வசதி இல்லாத நேரமாக பார்த்துக் கூட்டக் கூடாது என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

அவர்களுக்கு பத்து நாட்கள் அவகாசம் கொடுத்து, முன் நோட்டீஸ் கொடுத்தும், அஜென்டா வழங்கியும், இந்த அட்வைஸரி கமிட்டிகள் செம்மையான முறையில் வேலை செய்யக் கூடிய நிலைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1981 ஜனவரி 31

இந்த அட்வைஸரிக் கமிட்டிகள் கொடுக்கக்கூடிய ரிப்போர்ட்கள் கூட தவறான முறையில் கொடுக்கப்படுகின்றன. மனப்பூர்வமாக அவர்கள் பொய் சொல்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் கொடுக்கப்படுகிற தகவல்கள் சரியாக இருப்பதில்லை. லைட்கள் எல்லாம் கத்திக்கொண்டிருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால் நடைமுறையில் அவர்கள் சொல்வதில் 25% தான் இருக்கிறது. ஆகவே எம்.எல்.ஏ. க்களை ஏமாற்றும் முறையில் உள்ள ரிப்போர்ட்களை இந்த அட்வைஸரி கமிட்டிகளில் வைக்கக்கூடாது, யதார்த்தமான நிலையை எம்.எல்.ஏ. க்களுக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே அதற்குத் தக்கபடியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இந்த அட்வைஸரி கமிட்டிகளில் எம். எல். ஏ. க்கள் எம். பி. க்கள் மட்டுமல்லாமல் மின்சார அரங்கில் ரெஜிஸ்ட்டர் செய்திருக்கக்கூடிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அந்த அட்வைஸரிக் கமிட்டிகளில் இணைத்துக் கொள்ளவேண்டும். அப்போது விஷயங்களை நல்லமுறையில் விவாதிக்கமுடியும். அப்போதுதான் அதிகாரிகள் தொழிலாளர்களைப் பற்றிச் சொல்லக்கூடிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து மக்களிடையே மின்சாரத்துறை பற்றியும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களைப் பற்றியும் நல்லதொரு எண்ணம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். அதற்கேற்றமுறையில் விஷயங்களை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. கே. ஆர் கணபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சார மானியக் கோரிக்கை பற்றிப் பேசிட அனுமதி அளித்துள்ளமைக் குறித்து பெருமைப்படுகின்றேன். மின்துறையிலே பொறியாளராகப் பணியாற்றி இன்று அத்துறைக்கு அமைச்சராக இருந்து கொண்டு சிறப்புற பணிபுரிபவர் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர் என்பதால் அல்ல,

மின் உற்பத்தியைப் பெருக்குவதிலும் அதை வகையாக விநியோகிப்பதிலும் வருவாயைக் கூட்டுவதிலும் அத்துறையில் பணிபுரிபவர்கள் அதிகாரிகளானாலும், தொழிலாளர்களானாலும் திருப்தி அடைய வைப்பதிலும் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயல்படுகின்ற முறைபற்றியும் நம் தமிழகத்திற்கு, புரட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் பணியாற்றுகிறார் என்பதை பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு நாடு முன்னேறுகிறது என்றால் அந்த நாட்டின் மின் சக்தி மிகப் பெரிய அளவில் உற்பத்தி செய்யப்பட்டு உபயோகப்படுத்தப் பட வேண்டும். அந்த நிலையில் நம் தமிழகம் நீர் மின்விசையில் பல திட்டங்களை உருவாக்கி மின் உற்பத்தியைப் பெருக்க வகை செய்கின்றது.

1981 ஜனவரி 31] [திரு. கே. ஆர். கணபதி]

காடம்பாறை நீர் ஏற்றும் மின் அமைப்புத் திட்டம், சுருளி ஆறு திட்டம், மேட்டுப்பாளையம் நீர் மின் திட்டம் ஆகியவைகளை நல்லமுறையில் முடித்துக் கொண்டும் பாண்டியாறு புன்னம் புழா திட்டத்தையும், ஒகனேக்கல் நீர்மின் திட்டத்தையும் அண்டை மாநிலங்களான கேரளாவோடும், கர்நாடகத்தோடும் இணக்கமான முறையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு செயல் திட்டமும் உருவாக்கப்பட இருக்கின்றது என அறிகின்றேன். அவ்வேலைகள் வேகமாக நடைபெற அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

நீர் மின் சக்தியிலே மட்டுமல்ல, அனல்மின் திட்டத்திலேயும் அரசு அக்கறை கொண்டுள்ளது கண்டு பெருமைப்படுகிறேன். தூத்துக்குடி அனல் மின் திட்டம், மேட்டூர் அனல் மின் திட்டம், எண்ணூர் அனல் மின் விரிவாக்கும் திட்டம், பேசின் பிரிட்ஜ் அனல் மின் விரிவாக்கும் திட்டம் இவைகளில் நல்ல முறையில் தனிக் கவனம் செலுத்தி மின் உற்பத்தியில் தட்டுப்பாடு இல்லாத வகையில் அரசு நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டும்.

தற்போது 1-12-1980 முதல் 30% மின்வெட்டு உயர் அழுத்தத்திற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசோடும் அண்டை மாநிலங்களோடும் நல்லமுறையில் பேச்சு வார்த்தைகள் நடத்தி மின் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டு மின்வெட்டினைத் தளர்த்துதல் போன்ற நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் செய்து கொண்டுவருவது பாராட்டத்தக்கது.

தமிழகத்தில் மூன்று மாவட்டங்களுக்கு ஓர் அனல் மின் நிலையம் அமைத்திட ஆவன செய்யவேண்டும்,

மின்சாரம் உபயோகிப்போருக்கு மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்திடப் பிரசாரம் மிகமிக அவசியம். வானொலி தொலைக்காட்சி மூலமாக வேண்டுகோள் விடுக்கலாம்,

தனியார் துறையிலே இருக்கின்றவர்களுக்கு ஜெனரேட்டர்கள் வைத்துக் கொள்ள, மின்வெட்டுக்காலங்களில் வைத்துக் கொள்ள, சிறப்பு அனுமதிகள் வழங்கிட ஆவன செய்ய வேண்டும்,

பெரிய சிறிய விவசாயிகள், பெரிய ஆலைக்குரியவர்கள், மின்சாரம் உபயோகிப்பவர்கள் யாவரும் மின் கட்டணத்தை அந்தந்த மாதங்களிலே தவறாமல் கட்டிவிட வேண்டும். உரிய காலத்தில் பணத்தைக் கட்டினால் அப்படிப்பட்டவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் சிறப்புத்தள்ளுபடி அந்தந்த மாதத்திய பட்டியலிலேயே தந்து ஊக்குவிக்கலாம். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசு உரிய நடவடிக்கைகளை பரிசீலிக்க வேண்டுகின்றேன்,

[திரு. கே. ஆர். கணபதி] [1981 ஜனவரி 31

மின் உற்பத்திக்கு வேண்டிய நிலக்கரியும், எரி எண்ணையும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்திடவும், போக்குவரத்தில் சிக்கலும், கால தாமதமும் ஏற்படாத வகையில் காரியங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் தமிழகத்தில் மிகப் பெரிய பொதுத் துறை நிறுவனமாக மின்சார வாரியம் இருக்கிறது. அதில் பணியாற்றக்கூடிய அதிகாரிகளும், தொழிலாளர்களும் மனம் மகிழும் வண்ணம் 1-12-1979-ம் தேதியிலிருந்து சம்பள மாறுதல் பெறச் செய்து ஓர் வரலாற்றுச் சிறப்பையே இவ்வரசு ஏற்படுத்தித் தந்தது கண்டு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக நமது அருமை திராவிட முன்னேற்றக் கழக சார்புடைய சங்கங்களும், மத்திய அமைப்பு ஏ.ஐ.டி.யூ.சி. தொழிலாளர் சம்மேளன சங்கங்களும் பாராட்டுத் தெரிவித்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு பெருமை தேடித் தந்திருக்கின்றார்கள். வாரிய நிர்வாகத்தோடும் நல்ல முறையிலே ஒத்துழைப்புத் தருகின்றார்கள் என்பதையும், பட்டியல்களை அனுப்புவதிலும், பணத்தை வசூலிப்பதிலும் சுறுசுறுப்பாகவும், கண்ணியமாகவும் ஒத்துழைப்பு நல்கி—மிகப் பெரிய அளவில் பதவி உயர்வுகளும் பெற்று மகிழ்ச்சியோடும் இருக்கிறார்கள் என்பதையும், இந்த அளவிற்கு இது வரையில் எந்த அரசும் செய்ததில்லை என்பதையும் தாராளமாகக் கூறிக்கொள்வதோடு, பாராட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து தருவது போல மின்சார வாரிய ஊழியர்களுக்கும் வீட்டு வசதி அமைத்து தந்திட வீட்டு வசதி வாரியம் போன்றவைகள் முன் வரவேண்டும். அதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போனஸ் அளிப்பதிலும் இந்த அரசு இணக்கமாக முடிவுகளை மேற்கொண்டது என்பதையும் இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

குறிப்பாக, சிதம்பரம் தொகுதியிலே, திருமுட்டம் மின்சார நிலையம் அடிக்கடி பாதிப்புக்கு உள்ளாகிறது. அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அங்கு ஒரு துணை மின் நிலையம் வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அங்கே குறிப்பாக கிராமங்களிலே சாதாரண பல்புகள் எரிகின்றன. அவைகளுக்கு பதிலாக 4 அடி, 2 அடி டியூப் லைட்டுகள் போடவேண்டுமென்றும், 220 வாட்டு பல்புகள் அடிக்கடி பியூஸ் ஆகின்ற காரணத்தினாலே, 250 வாட் பல்புகளை அமைத்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

1981 ஜனவரி 31] [திரு. எம். ஆறுமுகம்]

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்கள் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். கடந்த 1980-ல் 21, 22 தேதிகளில் மாநில மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் மதிப்பிற்குரிய தமிழக மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிருக்கக்கூடிய அந்தப் பேருரை; உண்மையிலே தமிழகத்தின் மின்சார வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்குமென்று கருதுகிறேன். அவர்கள் ஆற்றிய அந்த உரையிலே முதலாவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். 'I am sorry to say that the present deficits in the country are due to lack of realistic planning and planning methods' என்று அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, Tamil nadu, therefore, strongly feels that each State should st ive for self-sufficiency in power generation while inter-State purchase of power may be necessary to meet emergencies and occasional shortages. I, would, therefore, urge that for the purposes of power development, the State and not the region should be taken as the unit.' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், 'I am sorry to state that it is like administering the medicine without identifying the illness.' என்று அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மேலும், அவர்கள் தமிழகத்திலே மின்சார வளர்ச்சிக்காக ஆற்றியிருக்கக் கூடிய அந்த மாநாட்டின் ஒருசில கருத்துக்களை நான் வரவேற்றாலும் கூட, மின்சார வளர்ச்சியில் தமிழக சர்க்கார் அதிக அக்கறை காட்ட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், தமிழகத்திற்கு மட்டுமே இதிலே பொறுப்பிருக்கிறது, மத்திய அரசிற்கு இதிலே எவ்விதப் பொறுப்பும் இல்லை என்று நான் சொல்லத் தயாராக இல்லை. மத்திய அரசாங்கமும், இந்த மாநிலத்தின் வளர்ச்சியில் அதிகமாக பங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், மத்திய அரசு மாநில மின்சார வாரியத்தின் மீது பழியைப் போட்டு, அவர்கள் செயல் திறன்மையைக் குறைக்கக் கூடாது. அதை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் கூட்டாக சேர்ந்த ஒரு ஹை லெவல் கமிட்டியை அமைக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல. நெய்வேலி

தெர்மல் நிலையத்தை தமிழக அரசிடம் மத்திய அரசாங்கம் ஒப்படைக்க வேண்டும். அப்படி ஒப்படைத்தால், தமிழகத்திலே இருக்கக்கூடிய, இங்கே மின்சார வாரியத்திலே இருக்கக்கூடிய வர்களின் தொழில் நுட்பத் திறமையைப் பயன்படுத்தி, நெய்வேலி தெர்மல் நிலையத்தின் மூலம் மேலும் அதிகமான மின்சாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

[பிற்பகல் 12-10.]

ஆகவே, நெய்வேலி தெர்மல் நிலையத்தை மத்திய அரசாங்கம் தமிழக சர்க்காரிடத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சார வாரியம் சம்பந்தமாக, சுதந்திரத்திற்குப் பின்னால் 1948ஆம் ஆண்டில் சென்ட்ரல் எலக்ட்ரிசிடி சப்ளை ஆக்ட், 1948 என்று கொண்டுவரப்பட்ட சட்டத்தில் மாநிலங்களுக்கு எந்தவிதமான அதிகாரங்களும் இல்லை. மத்தியில் இருக்கக் கூடிய மத்திய அரசுக்குத்தான் மின்சாரத்தை விநியோகிக்கக் கூடிய முறையும் பயன்படுத்தக்கூடிய முறையும் மின்சாரத்தை வாங்கக் கூடிய அதிகாரங்களும் இருக்கும் காரணத்தால், மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் காரணத்தால், மத்திய சர்க்காருக்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்வதெல்லாம் 1948ஆம் ஆண்டு சென்ட்ரல் எலக்ட்ரிசிடி சப்ளை ஆக்ட் என்று சொல்லக்கூடிய அந்த சட்டம் இதுவரை திருத்தப்படாமல் இருப்பதை உடனடியாகத் திருத்தம்செய்து மாநில அரசாங்கம் மின்சாரம் விநியோகிக்கவும், வாங்கவும், அதேநேரத்தில் மின்சாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான முழு அதிகாரத்தையும் தமிழக சர்க்காருக்கு மத்திய சர்க்கார் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், மின்சார விநியோகம், வாங்கல், உபயோகம் போன்றவைகளுக்காக பயன்படுத்தக்கூடிய உதிரிப் பொருள்களாக இருக்கக்கூடியவற்றை மின்சார வாரியம் சீரமைக்கும் வகையில் சட்டத் திருத்தம் செய்யப்பட வேண்டும். அதேநேரத்தில் மின்சாரத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்ப்ஸ், உதிரிப் பொருள்களை வெளி மாநிலங்களில் இருந்தோ அல்லது

வேறு இடங்களில் இருந்தோ வாங்குவதற்குப் பதிலாக தமிழகத்தில் உதிரிப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய வகையில் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்த தமிழக அரசாங்கம் முன்வர வேண்டுமென்றும், மத்திய அரசாங்கம் அதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி இரண்டாவது தெர்மல் நிலையத்தை அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஹோக்னேகல் பிராஜக்டை ஆரம்பிக்க மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு அனுமதி கொடுத்து மாநில அரசு நடத்த முன்வர வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு உலக நாடுகளில் மூலமாகவும், உலக வங்கியின் மூலமாகவும் கடன்களைப் பெறக்கூடிய நேரத்தில் அந்த நாடுகளுக்கு 2½ சதவிகித வட்டிதான் மத்திய அரசாங்கம் கொடுக்கிறது. அப்படி மத்திய அரசு 2½ சதவிகிதத்திற்குக் கடன் வாங்கி மாநிலங்களுக்குக் கொடுக்கிற நேரத்தில் 5½ சதவிகிதம் வட்டி வசூலிக்கக்கூடிய நிலையை இந்திய கம்யூனிஸ்டு கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. மத்திய அரசு ஒரு லேவாதேவிக்காரனைப் போல் பிசினஸ் பண்ணுகிறது. மத்திய அரசாங்கம் 2½ சதவிகிதத்திற்கு உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கி மாநிலங்களுக்குக் கொடுக்கக்கூடிய நேரத்தில் 5½ சதவிகிதம் வட்டி வாங்குவதை கம்யூனிஸ்டு கட்சி கண்டிப்பதோடு இந்த சட்டமன்றத்தில் அப்படி கூடுதலாக மத்திய அரசு வட்டி வசூலிக்கக்கூடாது என்று தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், 1959 ஆம் ஆண்டு தற்போது நிதி அமைச்சராக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய திரு. வெங்கட்டராமன் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டது. 'மின்சார வாரியத்திற்கென்று தனி மூலதனம் இல்லை, ஆகவே மின்சார வாரியத்தைப் பலப்படுத்த வேண்டுமென்றால் அதற்கென்று மூலதனம் இருக்கவேண்டும்' என்று 1963-ல் அந்த கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது, தமிழக சர்க்கார் மத்திய அரசு கொடுக்கக்கூடிய பணத்தைப் பெற்று வாரியத்திற்குக் கொடுக்கும் காரணத்தால் வட்டி அதிகரித்து அதிகரித்து இன்று 75 கோடி ரூபாய்க்கு மேல் கடன் இருக்கும் சூழ்நிலையும் வட்டி கொடுக்கும் சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, அந்தத் தொகையில் பாதியையாவது வாரியத்திற்கு என்று தனி மூலதனமாகப் போட்டு செயல்படுத்த முன்வரவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [1981 ஜனவரி 31

வாரியம் என்று சொல்லக்கூடிய நேரத்தில், தமிழக சர்க்காரைப் பொறுத்தமட்டில் வாரியத்திற்கு என்று தலைவரைப் போடுவது ஒரு வருஷத்தில் மூன்று தலைவர்களைப் போடக் கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

வாரியத்திற்குப் போடப்படுகிற தலைவர் அந்தத் துறையைப் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்கு முன்னாலேயே, ஒரு வருடத்திற்குள்ளாகவே 3 தலைவர்களை மாற்றம் செய்தால், அந்தத் துறையிலே நல்ல அனுபவம் ஏற்படமுடியுமா? அல்லது அதைப்பற்றி புரிந்துகொள்ளத்தான் முடியுமா? ஆகவே வாரியத் தலைவர்களாக ஐ. ஏ. எஸ். அதிகாரிகளைப் போடுவதா அல்லது எஞ்சினியர்களைப் போடுவதா என்பதிலே கான்கிரீட்டாக இருக்க வேண்டுமென்பது மட்டுமல்ல, மூன்று ஆண்டுகளுக்கு, போடப் பட்ட தலைவரை மாற்றம் செய்யக்கூடாது, வருடத்திற்கு ஒருவரைப் போடக்கூடிய போக்கு மாற்றப்பட வேண்டும் என்பதையும் நான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்வாரியத்திலே பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்கு ஓய்வு பெறும் வயது நிர்ணயம் 58 என்றும் 56 என்றும் குழப்பமான ஒரு சூழ்நிலை இருப்பதால் தாங்கள் எந்த வயதிலே ரிடையர் ஆகப் போகிறோம் என்பதுகூட அவர்களுக்குத் தெரியாது, அதன் காரணமாக அவர்களுடைய வேலையிலே சுணக்கம் ஏற்பட்டு அதேநேரத்திலே அக்கறையில்லாத தன்மையும் இருந்துகொண் டிருக்கிற சூழ்நிலையை மாற்ற, எந்த வயதில் அவர்கள் ரிடையர் ஆகவேண்டுமென்பதை தெளிவாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்வாரியத்திலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு அரசே ஏற்று நடத்தக்கூடிய பொது நிறுவனங்களிலே, வங்கிகள், ரயில்வே போன்றவற்றிலே, பார்டிசிபேஷன் இன் மேனேஜ்மெண்ட் முறை இருப்பதைப் போல ஏற்படுத்த வேண்டும். இதே சட்ட மன்றத்திலே தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நிர்வாகத்திலே தொழிலாளர்கள் பங்கு எடுத்துக் கொள்ளக்கூடிய முறையிலே கவனம் செலுத்தப்படும் என்று சொன்னார்கள். அந்த முறையிலே மின்வாரியத்திலேயும் தொழிலாளர்களுக்கு பார்டிசி பேஷன் இன் மேனேஜ்மெண்டுக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். தமிழக அரசு ஏற்கெனவே ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கையின் அடிப்படையிலே அந்த மின்வாரியத்திலேயும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைக்கு அருகாமையிலே உள்ள எருக்கஞ்சேரியிலே மின் வாரியத் தொழிலாளர்கள், வீடுகளைக் கட்டிக்கொள்கின்ற முறையிலே 15 ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பாடு இருந்தது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்

1981 ஜனவரி 31] [திரு. எம். ஆறுமுகம்]

கொடுக்கின்ற திட்டம் இருந்தும் 15 ஆண்டுகளாகக் கட்டப்பட வில்லை. அண்ணாதி. மு. க. ஆட்சி அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே மின்வசதி விஸ்தரிப்பு செய்யப்பட்டிருப் பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா தி. மு. க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு கிராமங்களிலே உள்ள குடிசைகளிலே வாழ்கின்ற மக்களுக்கு, இரண்டு லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். பாராட்டினாலும்கூட 8 மாத காலமாக தாற்காலிகமாக அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அந்தக் குடிசை வாழ் மக்களுக்கு மின் இணைப்பு தொடர்ச்சியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவசர கால நிலை இருந்தபோது தொழிலாளர்கள் அதிக மாக இருக்கிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி அரசாங்கமே அவர்களை வேறு பல இடங்களுக்கு மாற்றம் செய்தார்கள். மின் துறை தொழிலாளர்கள் அனைவரும் இன்றைக்கு பர்மனெண்ட்டாக ஆக்கியிருப்பதற்காக தமிழக அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறேன். இருந்தாலும் 12 ஆயிரம் வேலை வாய்ப்புகள் அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்தக் காலி இடங்களைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்கிற நேரத்திலே அந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய வயதாக வேலையிலிருந்து நின்றுவிட்ட மற்றும் பணிக்காலத்திலே இறந்து விட்டவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்களிலே முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலே மின்சாரத்திற்காக பயன்படுத்தப்படக் கூடிய பொருள்கள் குறைவாக இருக்கின்றன. அதனால் மின் விளக்குகள் எரியாத சூழ்நிலை இருக்கிறது.

[பிற்பகல் 12.20]

என்னுடைய அவிநாசி தொகுதியிலே பல கிராமங்களில் பல்புகளை மாட்டவில்லை. தெருவிளக்குகள் எரியவில்லை என்று நாங்கள் அதிகாரிகளிடத்திலேயும், மற்றவர்களிடத்திலேயும் புகார் சொல்லியும்கூட, அவர்கள் பல்புகள் ஸ்டாக் இல்லை என்றோ அல்லது அதற்கு வேண்டிய மெட்டீரியல்ஸ் இல்லை என்றோ சொல்லி இன்னும் எதையும் போடாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கிராமங்களில் தெருவிளக்குகள் போடும் பொழுது குண்டு பல்புகளைப் போடுவதற்குப் பதிலாக டியூப் லைட் போடுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் போடு வதற்கு நடவடிக்கை எடுத்து, தரமான பல்புகளைப் போட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

வீடுகளுக்குக் கொடுக்கும் மின்சாரத்திற்கான கட்டணத்தைக் குறைக்க வேண்டும்.

மின்சாரம் கம்பியின் மூலமாகச் செல்வதால் 18 சதவீதம் கசிவு ஏற்படுகிறது என்று அரசாங்கமே ஒத்துக்கொண்டிருக்கிறது. திருட்டு போய் விடுவதாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கசிவு ஏற்படுவதையும், திருட்டுப் போவதையும் தடுத்து மின்சாரத்தைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

கிராமங்களிலும், நகரங்களிலும் பெரும்பாலான இடங்களில் குண்டு பல்புகள் சரியாக எரியாததற்கான காரணம் குறைவான டென்டருக்குப் பல்புகள் வாங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். மேலும், கிராமங்களில் இருக்கும் அரிசனங்கள் வாழும் தெருக்களில் மின் விளக்குகளைப் பொறுத்த வரையில் சரியாக எரியாமல் பல கிராமங்களில் அரிசனங்கள் இருளில் மூழ்கியிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அவிநாசி தொகுதியிலே பல கிராமங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிறது. குறிப்பாக ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் அரிசனங்கள் வசிக்கின்ற தெருக்களில் தெரு விளக்குகளைப் பொருத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிணறுகளுக்கு, மோட்டார்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 900 மின்னிணைப்பு கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கோவை மாவட்டத்தில் மின்னிணைப்பு கோரி பல மனுக்கள் போட்டிருக்கிறார்கள். ஆனால் இரண்டு மூன்று ஆண்டுக் காலமாகியும்கூட இன்னும் அவர்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு இந்த நிலை நீடித்தால் விண்ணப்பம் செய்து 15 வருடங்கள் ஆனாலும்கூட மின்னிணைப்பு கிடைக்காத சூழ்நிலை ஏற்படும். எனவே, அரசு உடனடியாக அவர்களுக்கு மின்னிணைப்பு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழிற்சாலைகளைப்பற்றிச் சொல்ல வேண்டுமேயானால், குறிப்பாக கோவை மாவட்டத்தில் இருக்கின்ற மத்திய அரசு ஏற்று நடத்தும் கார்ப்பரேஷன் ஆலைகள், மற்றும் மால்கோ, சென்னையில் இருக்கும் பல தொழிற்சாலைகள் ஆகியவற்றில் இன்னும் மின்கட்டணம் நிலுவையில் இருப்பதாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். விவசாயிகளிடம் பாக்கியிருந்தால் எப்படி அரசாங்கம் முயற்சியெடுத்து அவைகளை வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறார்களோ அதைப்போல தொழில் அதிபர்கள் மின்கட்டணம் கட்டாமல் பாக்கி வைத்திருந்தாலும் அவர்களிடமிருந்து வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் மட்டுமல்லாமல், எப்படிச் சட்டத்தைக் கொண்டு வந்து விவசாயிகளை மிரட்டு

கிறார்களோ அதைப்போல மின்கட்டணம் கட்டாத ஆலை அதிபர்களின் மீதும் நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையில் 17—வது பக்கத்தில், "கேரள அரசுடன் ஓர் உடன்பாடு ஏற்பட்டபோதிலும், பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டம் 1965 முதற்கொண்டு செயலாக்கப்படாமலுள்ளது. கோயம்புத்தூர் மாவட்ட உழவர்கள், பாண்டியாறு-புன்னம்புழா நீரை கிழக்காகத் திருப்பிவிடும்படி கோரியபோது, அவ்வாறு திருப்பிவிட கேரள அரசு விரும்பவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கோவை மாவட்டம், பெரியார் மாவட்டம், இன்னும் சேலம் மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்குப் பயன்படும் வகையில் இருக்கக்கூடிய பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தைக் கொண்டு வந்தால், மழையையே நம்பியிருக்கின்ற அவினாசித் தொகுதியில் இருக்கின்ற விவசாயிகள் பயன் பெறுவது மட்டுமல்லாமல், மின்சாரத்திற்கும் பல மாவட்டங்களுக்கும் பயன்படும் சூழ்நிலை இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கேரள அரசு மறுத்திருந்தாலும் தமிழக அரசு முயற்சியெடுத்து மீண்டும் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்து பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பினை நல்கிய மாற்றுத் தலைவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களையும் சொல்ல அனுமதித்த தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மின்சாரத்தை கையால் தொட்டாலே அது ஒரு ஷாக் அடிக்கிற சமாச்சாரம். ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் அதைக் கையாண்டிருக்கிற முறை இருக்கிறதே அந்த முறை, இந்தத் துறைக்கு ஒரு சவாலாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்க்கும்போதுதான் இந்தத் துறை எந்த அளவிற்கு ஒரு சிக்கலான துறை என்பதை நம்மாலே புரிந்து கொள்ள முடிகிறது. எப்போதுமே சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க முற்படும்போது தான் ஒருவருடைய நிர்வாகத் திறமை வெளிப்படும் என்பார்கள். அந்த வகையிலே பல சோதனைகளிலே, இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே சாதனைகள் கண்டிருக்கிற நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதன்முதலாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்திலே நாங்கள் எல்லாம் மாலை அணிவித்தபோது சொன்னார்கள், 'என்னைப் பொறுத்த

வரையிலே மின்சார மந்திரி என்று சொல்வதை விட கம்பி மந்திரி என்று சொன்னால் நன்றாக இருக்கும்' என்றார்கள். அப்பொழுது எங்களுக்கு அந்த அர்த்தம் புரியவில்லை. பிறகுதான் புரிந்தது, அண்ணாதுரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்பதற்கு முன்னாலே இருந்த அரசுகள் மின் உற்பத்தியிலே அக்கறை காட்டாத ஒரு நிலைமையைச் சுட்டிக்காட்டத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தைச் சொன்னார்கள் என்று. தமிழகத்தைப்பொறுத்த வரையில் இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை இருப்பதற்கும் மின் வெட்டு நீடிப்பதற்கும் இதற்கு முன்னாலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசின் தவறான கொள்கையும் திட்டமிடாத நடவடிக்கையும்தான் காரணம் என்றால் அது மிகையாகாது. இப்பொழுது 30% மின்வெட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இன்றைய குழ்நிலையில் அந்த 30 சதவிகிதத்திற்கு மேலே மின் வெட்டை அதிகரிக்காமல், இன்றைக்கு இந்த அரசு கட்டுப்படுத்தியிருப்பது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சருடைய திறமையால்தான் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்னாலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில் மின் உற்பத்தியிலே அதிகக் கவனம் செலுத்தாத ஒரு சூழ்நிலையில் கிராமங்களுக்குக் கம்பிகளை மட்டும் இழுத்தோம் என்று பெருமைப்பட்டுக் கொள்வார்களானால், அன்றைக்கு அப்படி கம்பிகளை அவர்கள் நீட்டியிருந்தாலுங்கூட, அது உண்மையாக இருந்தாலுங்கூட. அவர்கள் செய்யத் தவறிய காரியத்தை இன்றைக்கு மறக்கக் கூடிய சூழ்நிலையிலே இருந்து வருகிறார்கள். வருமுன் விருந்தாளிக்கு இலைபோட்டு உட்கார வைத்தார்களே தவிர, வீட்டிலே சட்டியிலே சாதம் இருக்கிறதா என்று பார்க்கவில்லை. அல்லது சட்டியிலே சோறு சமைக்க முற்படுவதான காரியத்திலே அவர்கள் ஈடுபடவில்லை. சட்டியிலே இருந்தால்தான் அகப்பையிலே வரும் என்ற பழமொழிக்கேற்ப, மின்சார உற்பத்தியைப் பெருக்காமல், விநியோகத்திற்கு முதலிடம் கொடுத்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, எங்களுடைய ஆட்சியிலே மின்சாரக் கம்பிகள் இல்லாத கிராமங்களே இல்லவே இல்லை என்று அவர்கள் பெருமைபட்டுக் கொண்டார்களே தவிர, மின்சார உற்பத்தியிலே அவர்கள் அதிக அக்கறை செலுத்தவில்லையென்பது இன்றைக்கு இந்த மின் வாரிய நிதிநிலை அறிக்கைகளைப் படித்துப் பார்க்கும் போது நமக்கு நன்றாகப் புரிகிறது. எனவே, மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில், முதல் படியாக மின் உற்பத்தி, அதாவது, 'ஜெனரேஷன்', அடுத்து, கிடைக்கின்ற மின்சாரத்தை கொண்டுசெல்லுதல், அதாவது 'டிரான்மிஷன்' மூன்றாவதுகிடைக்கின்றமின்சாரத்தைவழங்குதல், 'டிஸ்ட்ரிப்யூஷன்'. எனவே அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு இந்த அரசு மின்சாரத் துறையைப் பொறுத்தவரையிலே அணுகிக் கொண்டிருக்கிறது என்பது இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்க்கும்போது நமக்கு நன்றாகப் புலனாகிறது. எனவே, அந்த

அடிப்படையில்தான் இன்றைக்கு தூத்துக்குடி மூன்றாம் யூனிட்டு மின் திட்டம், சேர்வலாறு புனல் மின் திட்டம், காடையாறை நீரேற்று சேமிப்புத் திட்டம், கீழ் மேட்டூர் மேட்டூர் அனல் மின் திட்டம், குந்தா மின் நிலையம் ஐந்தில் கூடுதல் யூனிட் போன்ற திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, மின்சாரப் பற்றாக்குறையை நீக்க வேண்டுமானால் மின் உற்பத்தி பெருக்கப்பட வேண்டும். எனவே, அந்த அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ளபடி, 1,490 மெகாவாட் கூடுதலாக மின்சாரம் பெற, 1980–85–ஐந்தாண்டுகளில் அதற்காக ரூ.1,022 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்க ஒன்றாகும். இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் இவ்வளவு அதிகமான தொகை செலவழிக்கப்படுகிற அதே நேரத்தில் குறைந்த விலைக்கு இன்றைக்கு விவசாயிகளுக்கும் குடிசைவாழ் மக்களுக்கும் மின்சாரத் தரக்கூடிய தன்னலமற்ற தியாகத்தை, அல்லது தன்னலமற்ற சேவையை மின்சார வாரியம் செய்து கொண்டிருக்கிறது.

[பிற்பகல் 12.30]

ஆனால் இப்படி சிக்கல்களுக்கு இடையிலேயும், பல கஷ்டங்களுக்கு இடையேயும் மின் வாரியம் மின்சாரத்தை மக்களுக்குக் கொடுத்து வருகிற சூழ்நிலையிலே, அதை மக்கள் முறையாகப் பயன்படுத்துகிறார்களா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். வாய்க்காலில் நிறைய தண்ணீர் விடுகிறோம். அந்தத் தண்ணீர் முழு நிலங்களுக்கும் பாயும் என்ற நம்பிக்கையோடு தண்ணீரை விடுகிறோம். ஆனால் அந்த வாய்க்காலில் பல ஓட்டைகளைப் போட்டு அந்தத் தண்ணீரை திசைதிருப்பிவிட்டால் அது முழுமை பெற்றதாக ஆகிவிடாது. எனவே அந்த அடிப்படையில் இன்றைக்கு நாம் தருகின்ற மின்சாரத்தை பல பேர்கள் இன்றைக்கு திருட்டுத்தனமாகப் பயன்படுத்துகிறார்கள் என்பது உறுதியான உண்மையாகும். பல பேர்கள் அதை கொக்கி போட்டும், மீட்டர்கள் போட்டும், மின்சாரத்தைத் திருடுகிறார்கள். அப்படி நடைபெறுகின்ற திருட்டுக் குற்றத்தைத் தடுப்பதற்காக இன்றைய தினம் அரசு ஒரு சட்டத்தைப் போட்டு இத்தகைய குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னதான் நாம் சட்டத்தைப் போட்டாலும் மக்களில் ஒரு சிலர் அதையும் மீறி இந்தக் குற்றத்தைச் செய்கிறார்கள். இத்தகைய குற்றத்தைத் தடுப்பதற்காகவே இந்த மின் துறையில் Surprise Checking Squad வைத்து, இத்தகைய திருட்டுகள் நடக்காமல், நடக்க விடாமல்

பார்த்துக் கொள்கிறார்கள். எனவே இந்தத் திருட்டைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு கொள்வதோடு இத்தகைய குற்றங்களிலே ஈடுபடுகிறவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்படவேண்டும்.

இன்னொரு குறைபாட்டையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சில பெரிய விவசாயிகள் ஆரம்பத்திலே 3 எச்.பி. 5 எச்.பி, மோட்டாரை வாங்கி வைத்துக் கொண்டு, பின்னர் அவர்களுடைய இணறுகளை ஆழப்படுத்துவதன் மூலம் அந்த 3 எச்.பி. 5 எச்.பி. மோட்டாரை 5 எச்.பி. 7 எச்.பி. என்று அந்த மோட்டாரில் உள்ள பிளேட்டை, மின்சார வாரியத்திற்கு தகவல் கொடுக்காமல், மாற்றி வைத்து திருட்டுத்தனமாக அந்த மின் இணைப்பைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இத்தகைய தவறுகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு ரெகுலரைஸ் செய்யப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். எல்லா விவசாயிகளும் இப்படிச் செய்வதில்லை. ஆனால் ஒரு சிலர் இப்படி வைத்திருந்தால், அவர்களாகவே வந்து மின் வாரியத்திற்கு தகவல் சொடுத்து அதை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களிலே இன்றைக்கு வீதிகளிலே போடப்படுகின்ற தெரு விளக்குகள் எல்லாம் இரவு நேரத்தில் அதிகமான வோல்டேஜ் வருவதன் காரணமாக அடிக்கடி பியூஸ் ஆகிவிடுகின்ற நிலைமை இருக்கின்றது. இந்தத் தெருவிளக்குகள் பராமரிக்கப்படுகின்ற நிலைமை இன்றைக்கு மின்சார வாரியத்தின் பொறுப்பிலே வந்த பிறகு அடிக்கடி பல்புகளை மாற்றிப் போடுகிறார்கள் என்றாலும், அவைகள் அதிக நாட்கள் தாங்குவதில்லை, 2, 3 நாட்களுக்குத்தான் எரிகின்றன. பின்னர் அவைகள் பியூஸ் ஆகிவிடுகின்றன. இரவு நேரங்களில் அதிகமான வோல்டேஜ் வருவதுதான் இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. எனவே தற்போது பயன்படுத்துகின்ற பல்புகளுக்குப் பதிலாக, அதிக வோல்டேஜ் உள்ள பல்புகளைப் போடவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக சேலத்தைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு மின்திட்டம்தான் இருக்கின்றது. ஆனால் வடார்க்காடு, கோவை மாவட்டங்களில் 2, 3 திட்டங்கள் இருக்கின்றன. வடார்க்காடு மாவட்டத்தில், திருவண்ணாமலையிலும், வேலூரிலும் மின் திட்டங்கள் இருக்கின்றன. கோவையில், பரளியாறு மின் திட்டம், உடுமலைப்பேட்டை மின்திட்டம், பெரியார் மின்திட்டம் போன்ற திட்டங்கள் உள்ளன. மின்சாரமும் தட்டுப்பாடு இன்றி வழங்கப்படுகின்றது. ஆனால் சேலத்தைப் பொறுத்தவரையிலும் ஒரே ஒரு மின் திட்டம்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது அங்கே மின் இணைப்பை எளிதாக ஆக்கவேண்டும் என்றால் சேலத்தில் இரண்டு மின் திட்டங்களை அமைக்கவேண்டும் என்று விட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மின்சார வாரியத்தினுடைய தலைமை நிலையம் சென்னையில் இருக்கிறது. அந்த வாரியத்தைப் பொறுத்த வரையில் 11 சி.ஈ.க்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரே இடத்தில் குவிந்து இருக்கிற காரணத்தால், நிர்வாகத்தில் பல சிக்கல்கள் ஏற்பட்டு உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனைக் கருத்தில் கொண்டு நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சேலத்தில் உள்ள ஒருவர் இந்தத் துறை சம்பந்தமாக சில காரியங்களைக் கவனிக்க வேண்டும் என்று வந்தால், ஒவ்வொரு சி.ஈ.ஆகப் பார்க்கவேண்டியிருக்கிறது. டிஸ்ட்ரிபியூஷன் சி.ஈ-ஐ.ப்பார்த்தால், அவர் கன்ஸ்ட்ரக்ஷன் சி.ஈ-ஐ.ப் பாருங்கள் என்று சொல்வார்கள். அவரைப் பார்த்தால் அவர் வேறு ஒரு சி.ஈ-ஐ.ப்பார்க்கச் சொல்வார். இப்படியாக நவக்கிரகங்களைப் பார்ப்பதுப்போல், ஒவ்வொரு சி.ஈ—யாகப் பார்த்துக்கொண்டு, ஒரு காரியத்தை முடிக்க காலதாமதம் ஆகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிர்வாகத்தைச் சீரமைப்பதிலே திறமை பெற்றவர்கள். போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த நேரத்தில், ஒரே போக்குவரத்துக்கழகமாக இருந்ததை, மாவட்டத்திற்கு ஒன்று என்கிற அளவில் திருத்தி அமைத்ததன் காரணமாக, நஷ்டத்தில் இயங்கி வந்த போக்குவரத்துக்கழகம் லாபத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. ஆகவே இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலும், ஒவ்வொரு சி.ஈ.க்கும் ஒவ்வொரு மாவட்டம் என்ற அளவில் கொடுத்து, அவர்களே எல்லாவிதமான பொறுப்புகளையும் கவனிக்கும் அதிகாரம் கொடுத்தால், இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

யோகெனக்கல் திட்டம் பேச்சளவில்தான் இருக்கிறது. அது நிறைவேற்றப்படுகிற சூழ்நிலை இருப்பதாகத் தெரியவில்லை. கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு, நெய்க்கு அலைவது போல், அதனுடைய தண்ணீர் வீணாகச் சென்று கடலில் கலந்து கொண்டு இருக்கிறது. இந்தத் திட்டம் குறித்து தமிழக அரசு மத்திய அரசோடும், கர்நாடக அரசோடும் பேசி நடவடிக்கை எடுத்து வருகின்றபோதிலும், மேலும் அதுகுறித்து வற்புறுத்தி மத்திய அரசோடு தொடர்பு கொண்டும் கர்நாடக அரசோடு பேச்சுவார்த்தை நடத்தியும் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற துரித நடவடிக்கை மேற்கொண்டால் இன்றுள்ள மின்சாரப் பற்றாக்குறை நிச்சயம் அகற்றப்படும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மத்திய அரசை இதற்காக அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், நல்ல படிப்படியான திட்ட அறிவிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இதை நான் மனதார வரவேற்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், மிக நல்லமுறையில்

தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது விவாதம்.

[திரு. செ. செம்மலை] [1981 ஜனவரி 31

மின்சார வாரியத்தை நிர்வகித்து வருகிறார்கள். அதனுடைய சேர்மனாக இருக்கும் முராரி அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளராக இருந்து நல்லமுறையில் சாதனைகளைச் செய்து, டைனமிக் செக்ரட்டரி என்றுபெயர் பெற்றவர்கள். அவர் இந்தத் துறைக்கு மாற்றப்பட்டு, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தத் துறைக்கு பொறுப்பேற்று இருப்பதால், தமிழகத்தில் வேகமாக மின்சாரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, விரைவில் தன்னிறைவு எய்தி வருங்காலத்தில் தமிழகம் நல்ல முன்னேற்றம் அடையும் என்று நம்பிக்கை தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு நல்கியதற்கு உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கின்ற விவரங்களைப் பார்க்கிறபோது, அது உண்மையிலேயே ஒரு உண்மையான நிலவரங்களை எடுத்துச் சொல்லக்கூடிய அறிக்கையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், 1981—பிறந்து விட்டது. இவி வருகிற 10 ஆண்டுகளில் மின்சக்தி நிலைமை நமக்கு மனநிறைவு அளிப்பதாக இல்லை என்று அவர்கள் நிதர்சனமாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஏற்கனவே மின் பற்றாக்குறையால் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுக் கொண்டு இருக்கும் நிலையில், இன்னும் 10 ஆண்டுகளில் நிலைமை சீரடையும் என்று நாம் எதிர்பார்த்ததற்கு விரோதமாக இன்றைக்கு அமைச்சர் அவர்களின் அறிக்கை கவலை தெரிவிக்கும் அறிக்கையாக இருப்பதைப் பார்க்கிறபோது, உண்மையிலேயே அது மேலும் கவலையை அதிகரிக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். காரணம் மின் சக்திதான், மனிதனின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இன்றைக்கு இருக்கிறது. அது மட்டுமல்ல, சமுதாயத்தின் பொது முன்னேற்றத்திற்கும் அது இன்றியமையாததாக இருக்கிறது. இன்று இங்கே சொல்லப்பட்டு இருக்கும் திட்டங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுகின்ற பொறுப்பு மின்சாரத்தைப் பொறுத்த வரையில்—மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிறது என்பது இந்த அறிக்கையில் இருந்து தெளிவாகப் புலனாகிறது

[பிற்பகல் 12—40]

வட்டார மின் வளர்ச்சி வேகத்தைப் பார்க்கும்போது 1983—84 ஆம் ஆண்டில் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வளர்ச்சி விகிதம் 7.9 சதவீதம் ஆக இருக்கும் என்று 10—வது ஆண்டு மின் சக்தி ஆய்வுக்குழு மதிப்பிட்டுள்ளது. ஆனால் 11-வது ஆண்டு மின் சக்தி ஆய்வுக்குழு மதிப்பிட்டுப்படி அது மிகவும் குறைந்து 5.7 சதவீதமாக ஆகியிருக்கிறது. இதை அமைச்சரவர்கள் சொல்லும் போது, இது தமிழ்நாட்டிற்கு இழைக்கப்படும் அநீதி என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்த நிலையை

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது விவாதம்.

1981 ஜனவரி 3.] [திரு, க. பாரமலை

அமைச்சரவர்கள் மேற்கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். இந்த ஓரவஞ்சனையை, இந்த ஏற்றத்தாழ்வை, இந்த வட்டார பாகுபாட்டை, மத்திய அரசின் இந்த அணுகுமுறையை கட்சிக் கண்ணோட்டமின்றி நாம் அத்தனை பேரும் எதிர்த்து போராடினாலொழிய நமக்கு இந்தத் துறையிலே ஒரு விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஆகவே, உண்மையான பிரச்சனையை எடுத்துச் சொல்லியிருக்கிற மாண்புமிகு அமைச்சரவர்களை நான் பாராட்டுகிறேன். இந்தப் பிரச்சனையில் எச்சரிக்கையாக இருந்து, ஒன்றுபட்ட நிலையில் தமிழகத்தின் உரிமையைப் பாதுகாப்பதில் அனைவரும் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்களுடைய குறிப்பைப் பார்க்கும்போது மின் சக்தித் திட்டங்களெல்லாம் வட்டார கண்ணோட்டத்தில் தீட்டப்படுகின்றன; இது தமிழ்நாட்டைப் போன்ற பற்றாக்குறை மாநிலங்களை கடுமையாகப் பாதிக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எவ்வளவு நாள் இந்த நிலை நீடிக்கும் என்று தெரியாது. அவர்கள் சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது ஓரளவுக்குத்தான் இந்த தமிழ்நாட்டு மின்சார வாரியத்தின் மீது தமிழக அரசின் கட்டுப்பாடு இருக்க முடியும் என்றும், அது போடுகின்ற திட்டங்களை எல்லாம் மத்திய அரசின் மின் ஆணைக் குழுதான் அமல்படுத்த முடியும் என்றும் நமக்குத் தெரிகிறது. அந்த நிலையை மாற்றி, தமிழக மின்சார வாரியத்தை தமிழக அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகிற முயற்சியை நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளை அமைச்சரவர்களும் அரசாங்கமும் எடுத்துக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

அதைப்போல இன்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மின் பற்றாக்குறை இருக்கிறது. மேலும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற வறட்சியினால் எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. குடிநீருக்குக் கூட அங்கே மோசமான நிலை இருக்கிறது. கிராமத்தில் இருக்கிற பெண்கள் 4 மைல், 3 மைல் தூரம் சென்று தண்ணீர் எடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதனால் அங்கே பல்வேறு இடங்களில் மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டு, கிட்டத்தட்ட 10 ஆண்டுக்காலம், 8 ஆண்டுக்காலம் ஆகியும் இன்னும் மின்னிணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கின்றன. இதை ஒவ்வொரு தடவையும் மின்சார ஆலோசனைக்குழு நடக்கும் போதெல்லாம் சொல்லியிருக்கிறோம். தண்ணீருக்குக் கடுமையான பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்தில், அங்கே கட்டிவைத்திருக்கிற மேல்நிலை நீர்த் தொட்டிகளுக்கு உடனடியாக மின்னிணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. பாரமலை] [1981 ஜனவரி 31

இந்த அறிக்கையிலே அரிசனக் காலனிகளுக்கு பூரணமாக மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு விட்டது என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அது காலாகாலமாக வந்திருக்கிற அறிக்கையின் அடிப்படையில் அளிக்கப்பட்டது என்று கருதுகிறேன். உண்மையில் இன்னும் நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு மின்னிணைப்பு அளிக்கப்படவில்லை என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அமைச்சரவர்கள் விரும்பினால் அப்படிப்பட்ட கிராமங்களின் பட்டியலை கொடுக்கவும் நான் தயாராக இருக்கிறேன்.

அதைப்போல இந்த அறிக்கையில் ஏற்கெனவே நம்முடைய அமைச்சர் 1980 ஆம் ஆண்டு ஒரு குறிப்பிட்ட தேதியைச் சொல்லி அந்தத் தேதியிலிருந்து விவசாயிகளுடைய பம்புசெட்டுகளுக்கு, அரசுக்கு அதனால் ரூபாய் 2 கோடி இழப்பு ஏற்பட்டாலும், மீட்டர் வாடகையைக் குறைக்க வேண்டுமென்று சொல்லி, மீட்டர் வாடகையை 2 ரூபாயாக குறைத்ததை பாராட்டுகிறேன்.

நம்முடைய அமைச்சரவர்கள் 1980 நவம்பரில் டில்லியில் நடைபெற்ற மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் வெளியிட்ட அறிக்கையிலே மேலும் 10 சதவீதம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை நிறைவேற்ற பெற்றால் தமிழ்நாட்டில் ஒரு புதிய மாற்றத்தைக் காணமுடியும். அது மேலும் விவசாய வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கும் என்பதால் அவர்களுடைய இந்த வேண்டுகோளை மத்திய அரசு ஏற்க வேண்டும்; மத்திய அரசு ஏற்றுக்கொள்ள தமிழக அரசு தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் எங்களுடைய பகுதியை எடுத்துக்கொண்டால், எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல அனைத்து கிராமங்களிலும் மின் கம்பிகள் இழுக்கப்பட்டு விட்டன என்பது உண்மைதான். ஆனால் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கிராமங்களில் உள்ள விளக்குகளில் ஏறக்குறைய 75 சதவீதம் எரியவில்லை. மின் விளக்குகள் எரிவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று ஆலோசனைக் குழுக்கள் மூலம் சொல்லிக் கொண்டிருக்கிறோம், இருந்தாலும் நமக்குத் தேவைப்படுகின்ற குழல் விளக்குகளும், பல்புகளும் கிடைக்கவில்லை என்று அதிகாரிகள் சொல்லுகின்றார்கள். மேலும் அங்கே இருக்கின்ற டிவிஷனல் இன்ஜினியருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரம் என்னவென்றால் உடனடியாக பல்புகள் வாங்குவது என்றால் 500 ரூபாய் அளவுக்கு மேற்படாமல்தான் பல்புகள் வாங்கவேண்டும் என்று விதி இருக்கின்றது. அதற்கு மேல் தேவைப்பட்டால் மொத்தமாக மின்துறையின் மூலம் டென்டர் விட்டு அதன்மூலம் பல்புகளை வரவழைத்து விளக்கு போடுவதற்குள் பல மாதங்கள்

[1981 ஜனவரி 31] [திரு. க. பாரமலை]

ஆகிவிடுகின்றன. ஆகவே ஒவ்வொரு டிவிஷனல் எஞ்ஜினியருக்கும் 5000 ரூபாய் அளவிற்காவது உடனடியாக வெளிமார்க்கெட்டிலே பல்புகள் வாங்குவதற்குரிய அதிகாரத்தை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பல மாதங்களாக கிராமங்களிலே மின் விளக்குகள் எரிவதில்லை. அவைகள் அத்தனையும் ஒரே நேரத்திலே எரியவேண்டும் என்று கூட நான் சொல்லவில்லை. 100 சதவீதம் அவைகளை எரியவைக்க முடியவில்லை என்றாலும் 50 சதவீதம், 60 சதவீதம், 70 சதவீதம் என்ற வகையிலேயாவது தெருவிளக்குகள் கிராமங்களிலே எரிவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான்மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிசனங்களுக்கு, உரிய பிரதிநிதித்துவம் மின்வாரிய நியமனங்களிலே கொடுக்கப்படவில்லை என்ற நீண்ட நாளையக் கோரிக்கையை அடிப்படையாக வைத்து சென்ற ஆண்டு அரிசன, மக்களை அதிலே உள்ள உத்தியோகங்களுக்கு எடுத்துக்கொள்வது என்று சொல்லி ஒரு அறிக்கை வெளியிடப்பட்டு அதன்மூலம் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளுக்கு இன்டர்வியூ நடத்தப்பட்டது. ஆனால் அதனுடைய ஜாபிதா இன்னும் வெளியிடப்படவில்லை. இதுகுறித்து வசாரிக்கின்ற நேரத்திலே அங்கே நிர்வாகத்திலே இருப்பவர்கள் அரிசனங்களை மின்வாரிய உத்தியோகங்களுக்கு வரவிடாமல் செய்வதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவை அத்தனையையும் செய்து விட்டார்கள். ஆகவே இனிமேல் அரிசனங்களை அங்கு உத்தியோகத்திற்கு எடுத்துக் கொள்ள இயலாது என்பதுதெரியவருகின்றது. ஆகவே இன்றையதினம் மின்வாரியத்திலே எல்லா நிலைகளிலும் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 18 சதவீதம் என்ற அடிப்படையிலே சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்றால் அவ்வாறு அந்த விகிதத்தில் முழுமையாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுப்பதற்குரிய ஆணை இடவேண்டும் என்றும் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

ஆக இந்த அளவில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980–81-ஆம் ஆண்டுக்கான....(குறுக்கீடு)....நிதிநிலை அறிக்கையின் மீதும் 1979-80-ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற உரையினை வரவேற்று என்னுடைய கருத்தினை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மின் உற்பத்தியைப் பெருக்குவதிலும், மக்களுடைய தேவைகளை நிறைவு செய்வதிலும் தமிழக அரசு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கிறது என்பது மின் திட்டச் செலவைப் பார்க்கின்ற போது தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது. சென்ற ஆண்டு திட்டச் செலவு 152 கோடி ரூபாய் அளவில் இருந்து 1980-81-ம் ஆண்டில் 176 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1022 கோடி ரூபாய் அளவில் பெரும் முதலீடு செய்ய இருப்பதிலிருந்தும் புதிய திட்டங்களை, செயல்படுத்த இருப்பதிலிருந்தும் அரசினுடைய செயல் திறன் தெரிகிறது. இவ்வாண்டில் 35 புதிய துணை மின் நிலையங்களை அமைக்க இருப்பதும் 1,200 கிலோ மீட்டர் தொலைவிற்குக் கூடுதல் உயரழுத்த மின்கம்பித் தொடர் அமைக்க இருப்பதும் வரவேற்கத் தக்கதாகும்.

[பிற்பகல் 12.50]

மின் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி இருப்பது போல, மின் உற்பத்திக்குத் தேவையான இயற்கை வளம் தமிழகத்தில் இல்லை. புதிய அனல் மின் நிலையங்களை அமைக்க நீர் வளத்திட்டங்கள் இல்லை. அனல்மின் நிலையங்களை அமைப்பதிலும், எரி எண்ணெய் நிலக்கரிப் பற்றாக்குறை, விலை உயர்வு போன்ற பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே அணுமின் நிலையங்களையும், அதன் உற்பத்தியையும் அதிகப்படுத்த முன் வரவேண்டும். அதே நேரத்தில் கல்பாக்கம் அணுமின் நிலையத்தை விரைவாகச் செயல்படுத்த வலியுறுத்த வேண்டும். மேலை நாடுகளில் நடத்தப்பெறும் ஆய்வுகளைப்போல் கடல் நீரிலிருந்து மின்சாரம் பெற ஆய்வு நடத்துவதற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெறவேண்டும். தூத்துக்குடி அனல் மின் திட்டம், சேர்வலாறு புனல் மின் திட்டம், காடம்பாறை நீரேற்றுத் திட்டம், மேட்டூர் அனல் மின் திட்டம் போன்றவைகளையும் விரைவாகச் செயல்படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். 1973-74லேயே முடிவடையும் என்று சொல்லப்பட்ட கல்பாக்கம் அணுமின் நிலையம் இன்னும் முடிக்கப்பெறாமல் இருக்கிறது. அதை விரைவாகச் செயல்படுத்த அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் தமிழக அரசு மகத்தான சாதனையைப் புரிந்திருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும். இங்கே மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. இளைய பெருமாள் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது தொழில் துறைகள் போதிய அளவு ஊக்குவிக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நமது மின் வாரியம் மொத்தம் உற்பத்தியாகிற மின்சார அளவில் 48 சதவிதத்தைத் தொழில் துறைக்கும், 27 சதவிதத்தை வேளாண்மைக்கும் பயன்

படுத்துகிறது என்பதைப் பார்க்கும்போது, அவருடைய கூற்றில் உண்மை இல்லை என்று தெரிகிறது. அது மட்டும் அல்ல, நமது இந்திய நாட்டிலேயே அதிக அளவில் மின் உற்பத்தியைப் பயன்படுத்துவதில் 3-வது இடத்தில் தமிழகம் நிற்கிறது என்பதையும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டும் அல்ல, மின் உற்பத்தியில் தமிழகத்தை விட முன்னணியில் இருக்கிற மாநிலங்களைக் காட்டிலும், குறைந்த மின் கட்டணத்தை விவசாயிகளுக்கு அளித்திருக்கிறது தமிழக அரசு என்பதையும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

நிர்வாகம் ஸ்தம்பிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் வரிகொடா இயக்கம் என்ற பெயரில் சமுதாயச் சீர்கேட்டிற்கு வழிகாட்டுகிறவர்களும், அவர்களுக்கு உறுதுணையாக இருப்பவர்களும் இவைகளையெல்லாம் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். 1975 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில் மின் கட்டணம் 16 பைசாவாக உயர்த்தப்பட்டதைப் புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு 14 பைசாவாகவும், 12 பைசாவாகவும் குறைத்தது. இதனால் ஏற்பட்ட 7 கோடி ரூபாய்க்கும்மேல் இழப்பையும் தாங்கிக் கொண்டு, விவசாயிகளுக்குப் பயன்படுகிற வகையில் செயல்பட வேண்டும் என்கிற ஒரே எண்ணத்தில் செயல்பட்டு வந்திருக்கிறது. இதேபோல மீட்டர் வாடகையை 5 ரூபாயிலிருந்து 2 ரூபாய்க்குக் குறைத்து இதனால் ஏற்பட்ட 2 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட இழப்பையும், விவசாயிகளின் நன்மை கருதி அரசு ஏற்றுக் கொண்டது.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு நல்வாழ்வு தருகின்ற வகையில் ஏழைகளின் இல்லங்களில் ஒளிவிளக்கு ஏற்றிய புரட்சித் தலைவர் அரசு ஓர் ஆண்டில் 2.3 இலட்சம் குடிசைகளுக்கு மின் வசதியை அளித்துள்ளது. அதேபோல தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 189 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு மின் இணைப்புத் தருவதில் முன்னுரிமை வழங்க இருப்பதையும் பாராட்டாமல் இருக்க முடியாது. இவைகளை வரவேற்க நாம் அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலேயே இதுபோன்ற புரட்சிகரமான திட்டங்களை அறிவித்திருப்பது புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஒன்றுதான் என்று சொன்னால் அது மிகையாகாது.

[திரு. தி. அன்பழகன்] [1981 ஜனவரி 31]

அடுத்து மின் இணைப்புத் துறையில் போதிய சாதனங்கள் இல்லை என்கிற குறைபாடு இருக்கிறது. அது எல்லோராலும் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. இந்தக் குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, தமிழகம் முழுவதிலும் உள்ள மின் துறை இலாக்காக்களின் அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அதன் காரணமாகப் பல லட்சம் ரூபாய்களை வாடகையாக இவ்விலாகா தரவேண்டிய நிர்ப்பந்தத்தில் உட்பட்டிருக்கிறது. ஆகவே, அரசின் மற்ற இலாக்காக்களைப் போலவே, மின் துறையின் எல்லா அலுவலகங்களும் அரசின் சொந்தக் கட்டிடங்களில் செயல்படும் வகையில் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இவ்விலாகாவிற்கு ஏற்படும் நஷ்டத்தை ஓரளவிற்காவது குறைக்க இயலும் என்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக லோ-வோல்டேஜ் காரணமாக விவசாயப் பம்பு செட்டுகளில் உள்ள மோட்டார்களின் காயில்கள் தீய்ந்து போய் விடுகின்றன. இந்தக் குறையைப் போக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும். மின் உற்பத்தித் திறன் எவ்வாறு இருக்கிறதோ, அதற்கேற்றவாறு விஸ்தரிப்புச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, ஒரு டிரான்ஸ்பார்மரில் எத்தனை ஹார்ஸ் பவர் அளவிற்கு மின்சாரம் இருக்கிறதோ, அதற்குத் தகுந்தவாறு மின் இணைப்புத் தர வேண்டும்.

அந்தளவிற்குத் தந்தால்தான் குறைந்த மின் ஓட்டம் ஏற்படாமல் ஏழை விவசாயிகள் பாதிக்கப்படாத அளவிற்கு அவர்களுடைய மோட்டார்கள் காக்கப்படும் என்று எடுத்துச் சொல்லி இந்தக் குறைகளைப் போக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டிரான்ஸ்பார்மர்கள், மீட்டர்கள், பல்புகள், மின்னிணைப்புச் சாதனங்கள் போன்றவற்றைத் தனியாரிடம் விலை கொடுத்து வாங்குவதால் இந்தத் துறைக்கு அதிகமான நஷ்டம் ஏற்படுகிறது, பொருட்சேதமும் ஏற்படுகிறது. ஆகவே இந்தத் துறையே இந்தச் சாதனங்களைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி— ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்திற்கு ஏற்படுகிற இழப்புகள், லைன்லாஸ், திருட்டுக்கள் போன்றவற்றைக் களைய அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்கான விஜிலன்ஸ் குழு ஒன்று அமைத்து அந்தக் குழு சிறப்பாகச் செயல்பட அரசு ஆவன செய்யவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன். அதோடு ஏற்படுகிற இழப்புகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும்.

[19.81 ஜனவரி 31] [திரு. தி. அன்பழகன்]

காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் எடுத்துச்சொன்னது போல், சமயநல்லூர் மின் நிலையத்தை, நான்கு கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த நிலையத்தை 55 லட்சம் ரூபாய்க்கு விற்றிருக்கிறார்கள். அதிலேயுள்ள செம்பு, அலுமினியம், இரும்பு போன்றவை பல கோடி ரூபாய் மதிப்புள்ளதாக இருந்தபோதிலும் அதை 5.5 லட்சம் ரூபாய்க்கு விற்றிருக்கிறார்கள் என்றால் அதிலே சம்பந்தப்பட்டவர்கள்மீது அரசு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அப்படிக் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதன் வாயிலாகத்தான் வருங்கால சந்ததியினராவது இது போன்ற குற்றங்களைச் செய்யாமலிருக்க ஏதுவாக அமையும் என்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அதுபோல் தெரு விளக்குகள் அமைத்துத் தருவதில் சற்றுக் காலதாமதம் ஏற்படுகிறது. ஊராட்சி மன்றங்கள் தங்கள் பகுதிகளில் தேவையான விளக்குகள் அமைக்க வேண்டுமென்று கூறுகிற நேரத்தில் அவர்கள் அதற்குத் தேவையான எஸ்டிமேட்கள் அளித்து அதற்குத் தேவையான பணத்தைக் கட்டிய பிறகும் ஆண்டுக்கணக்கில் தாமதம் ஏற்படுகிறது. அந்தக் குறையையும் போக்க அரசு முன் வரவேண்டும்.

இந்த உரையைப் பார்க்கும்போது, கம்பங்கள் இல்லை, கம்பிகள் இல்லை, இன்ஸுலேட்டர்கள் இல்லை என்று கூறுகிறார்கள். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து கிராமப்புறப் பகுதிகளுக்கு மின்சாரம் கிடைக்க அரசு முன் உரிமை அளிக்க வேண்டும். அதேபோல் ஒரு ஊராட்சி ஒன்றியம் சார்பாக மனு மின்சார வாரியத்திற்கு வருகிறபோது அதற்கு முன் உரிமை அளிக்கிறபோது இவ்வளவு ஆண்டுகளுக்குள்ளாக இதை முடிக்க வேண்டுமென்று கால நிர்ணயம் செய்து விடவேண்டும்.

இந்தத் துறையில் ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை ஒரு குறை இருந்து வருகிறது. இந்தத் துறையில் உள்ள ஊழியர்கள் அதிகாரிகளுக்குக் கட்டுப்படுவதில்லை. அதேபோல் அதிகாரிகள் மேல் அதிகாரிகளுக்குக் கட்டுப்படுவதில்லை. இதன் காரணமாக இந்தத்துறை நிர்வாகத்தில் தாமதமும், ஒழுங்கீனமும், கட்டுப்பாடு இல்லாத ஒரு சூழ்நிலையும் ஏற்படுகிறது, இதன் காரணமாகப் பொதுமக்கள் அவதிப்படுகிற ஒரு நிலை இருப்பதால் அதை நீக்குவதற்கு அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே இருக்கிற பேஸின்பிரிட்ஜ் மின்நிலையத்தில் உற்பத்தித்திறன் முன்றில் ஒரு பங்காகக் குறைந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்குக் காரணம் அங்கிருக்கிற அதிகாரி அந்தப் பகுதி தொழிலாளர்களுடன் சரியாக ஒத்துப்போகவில்லை என்ற ஒரு குறை சொல்லப்படுகிறது. ஆகவே இது போன்ற பெரிய பொறுப்புகளில் இருப்பவர்கள் கீழேயுள்ளவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். நிர்வாகப் பொறுப்பேற்றிருக்கிறவர் அனுபவசாலியாக இருக்கவேண்டும், ஆகவே அனுபவசாலிகளை நியமிக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

தொழிலாளர்கள் அதிகாரிகளிடையே உள்ள வேறுபாடுகளைக் களைந்து இரண்டு பேர்களும் ஒன்றாகச் செயல்பட்டு அதன் வாயிலாக நல்லதொரு தன்மையைப் பொதுமக்கள் பெறுகிற அளவிற்கு நடக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் இணைப்பு தருவதில் அரசு மிகவும் நன்றாகச் செயல் பட்டு வந்தாலும், சீனியாரிட்டி முறையைப் பின்பற்றி அரசாங்கம் கொள்கை அடிப்படையில் நடந்துவந்தாலும், வடஆற்காடு மாவட்டத்திற்கு ஒரு முன் உரிமை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று வட ஆற்காடு மாவட்டம் தஞ்சைக்கு அடுத்தபடியாக உணவு உற்பத்தி செய்வதில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. அந்நிலையில் அங்கே நீர்ப்பாசனம் எதுவும் இல்லாததால் கிணற்றுநீரை நம்பித்தான் விவசாயம் செய்யவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே வட ஆற்காடு மாவட்டத்தில் கிணற்று நீரை அடிப்படையாகக் கொண்டு விவசாயம் நடைபெறுவதால் மின் இணைப்பு தரும் போது அந்த மாவட்டத்திற்கு முன் உரிமை அளிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று பில் போடுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. சரியாக பில்கள் நமக்கு வந்து சேருவதில்லை. பில்கள் போடுவதில் காலதாமதம் ஏற்படுகிற காரணத்தால் பணம் செலுத்துவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே மீட்டர் கணக்கு எடுக்கும் போதே பில் போட்டுத் தருவதற்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமா என்பதை அரசு யோசனை செய்து அதுபோன்ற குறை களை நிவர்த்தி செய்கிற வகையில், மக்களுக்குப் பயன்படுகிற வகையில், ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.00]

ஒதுக்கப்பட்டுள்ள திட்டங்களை விரிவுபடுத்துக. ற நேரத் திலே, அதற்கு மத்திய அரசின் உத்தரவும், அனுமதியும் தேவைப் படுகின்ற காரணத்தினால், இது போன்ற திட்டங்களைத் துவக்கு வதற்கு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் நிறைய தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தினால், வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு புது அனல் மின் திட்டத்தை இந்த அரசு அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாக மின் துறையைத் தன் திறமையின் மூலம் செயல்படுத்துகின்ற நேரத்தில் ஒருசில சிக்கல்கள் இருந்தாலும், அந்தச் சிக்கல்களை எல்லாம் களைவதன் வாயிலாக மின்துறை வளர்ந்து வருகிறது. மின்துறை வளர்வது

சமுதாயத்தின் பணி என்பதை மனதிலே கொண்டு, இந்தத் துறையைச் சிறப்பாகச் செய்வதற்குத் தமிழக அரசும், புரட்சித் தலைவர் அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளு கின்ற வகையில் இந்த இலாகா மாற்றப்பட வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, மின் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்குப் பொருளாதாரத் துறையிலும், வளர்ச்சித் துறையிலும் இது அடிப்படையாக அமைகின்ற காரணத்தினாலும், நாட்டு மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவதாலும் மின் உற்பத்தியை அதிகரிப்பதற்குச் சிறப்பாகப் பணியாற்றத் தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தி, இந்தத் துறை சிறப்பாகச் செயல் படுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மின் துறை அமைச்சர் அவர்கள் உரையை வரவேற்று, பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

திரு. ந. சிவஞானம்: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது காங்கிரஸ் (இ) கட்சியின் சார்பாக விவாதத்தைத் துவக்குவதற்கு வாய்ப்பளித்தக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். விடுதலைக்குப் பின் தமிழ்நாட்டிலே காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே தான் நீரியல் மின்சாரத் திட்டங்கள் பல போடப்பட்டன. அன்றையதினம் அப்படிப்பல திட்டங்கள் போடப்பட்டதன் காரண மாகத்தான், இன்றைய தினம் தமிழ் நாட்டில் மின்சாரத் துறை ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, நீரியல் மின்சாரத் திட்டங்கள் பல இடங்களிலும் போடப்பட்டாலும், அதை மேலும் பயன்படுத்திக் கொள்வதற்கான பல்வேறு திட்டங் களைப் போட்டு, அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, குந்தா திட்டம் 1, 2, 3 ஆகிய திட்டங்கள் போடப்பட்டு, அவைகள் முடிந்து விட்டாலும், எஞ்சியுள்ள 4, 5 பிரிவுகள் பாக்கி இருக்கின்றன. அதற்கான திட்டங்களை உடனடியாகப் போட்டு, அவைகளை இந்த அரசு நிறைவேற்ற வேண்டுமென்று நான் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். தூத்துக்குடி, எண்ணூர் போன்ற மின்சார நிலையங்களில் மேலும் அதிக அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். அதிலே, குறிப்பாகத் தொழில்நுட்ப கவனக் குறைவு காரணமாகச் சில தடைகள் ஏற்பட்டிருப்பதாக நான் தகவல் கொடுக்கிறேன். அதிலே, உலகத்திலுள்ள தொழில் நுட்ப நிபுணர்களின் உதவியோடு, மேலும் அதிகப்படியான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு உடனடியாக, குறிந்த காலத்திலே, ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ந. சிவஞானம்] [1981 ஜனவரி 31

அடுத்து, கடல் நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. இந்த நாட்டிலே ஒரு மாற்று ஏற்பாடாக, இந்தியாவிலேயே ஒரு எடுத்துக்காட்டாக இன்றையதினம் தமிழக அரசு அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக, நல்லமுறையிலே நிச்சயமாக எடுக்கவேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தவரையில், மின்சாரப் பற்றாக்குறை உள்ளது. ஆனால் சில அரசியல் தலைவர்கள் வரும்போது, அந்தந்த மாவட்டங்களிலே ஆடம்பரமான வகையிலே சீரியல் பல்புகள் போட்டு, மின்சாரம் பற்றாக் குறையாக இருக்கும்போது, அதிகமான மின்சாரத்தை வீணாக்கு கிறார்கள். அதனை உடனடியாக அரசு ரத்து செய்யவேண்டும்; அதற்குத் தடை விதிக்க வேண்டும். அதிலும், பற்றாக்குறை இருக்கும் காலங்களில் இதனை உடனடியாகச் செய்ய வேண்டு மென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, திருச்சி மாவட்டத்தில், திருவெறும்பூரில், துவாக்குடியில் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களின் மின்சாரத்தைக் கருத்தில் கொண்டு, துவாக் குடியில் ஒரு தெர்மல் ஸ்டேஷனை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களில் தெரு விளக்குகள் போடப்படுகின்றன. இதைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்கூட ஏற்கனவே குறிப்பிட்டார்கள். 250 வாட் பல்புகள் போடவேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட பல்புகளைப் போடவேண்டும். அப்படிச் செய்யும் போது, அங்கே உள்ள 2 அடி டியூப் லைட்டுகள் இப்போது சரிவர எரிவதில்லை. புது பல்புகள் போட்டாலும், 2, 3 நாட்களுக்குப் பிறகு பியூஸ் ஆகிவிடுகின்றது. அதனால் 4 அடி டியூப் லைட்டுகளை, மின்சார வாரியத்திலேயே உற்பத்தி செய்து போட வேண்டும். வெளியிலே இப்போது கம்பெனிகளிடம் ஆர்டர் கொடுப்பதால், அவர்கள் தரக்குறைவான பல்புகளை சப்ளை செய்வதன் காரணமாக, போட்ட 2, 3 நாட்களுக்குள்ளே பியூஸ் ஆகிவிடுகின்றது. எனவே, மின்சாரத் துறையினரே இதை உற்பத்தி செய்து, நல்ல தரமான பல்புகளைப் போட வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்திற்கும் தொழிலுக்கும் கொடுக்கப்படுகிற மூன்று ஃபேஸ் லைனுக்கு மின் பற்றாக்குறை காரணமாகக் குறிப்பிட்ட காலத்தில் மின்சாரம் கொடுக்கப்படுவதில்லை. பத்து மணி நேரம் மின்சாரம் கொடுப்பதாகச் சொல்லி இரண்டு மூன்று மணி நேரத்தில் மின்சாரத்தை நிறுத்திவிடுகிறார்கள்.

1981 ஜனவரி 31] [திரு. ந. சிவஞானம்]

விவசாயிகள் மின் கட்டணப் பாக்கியைச் செலுத்த 1 பிளஸ் 1 என்ற முறை அமல் நடத்தப்படுவதை நான் பாராட்டுகிறேன். ஆனால் நடைமுறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன. நடப்பு மாதக் கணக்கு என்று எடுக்கும்போது மின்வாரியத்தில் இரண்டு மூன்று மாதங்களுக்குச் சேர்த்து கணக்கு எடுப்பதால் விவசாயி களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அதிகாரிகள் கவனக் குறைவு காரணமாக இந்த நிலை ஏற்படுகிறது, அமைச்சர்பெருமான் அவர்கள் இதைப் பற்றிச் சிந்தித்து 1 பிளஸ் 1 என்ற திட்டத்தை நல்ல முறையில் நடத்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்,

மின்சாரத் துறையைப் பொறுத்தவரை நிர்வாகத்தில் மாற்றம் செய்யவேண்டும். ஏறக்குறைய 11 சீஃப் எஞ்சீனியர்கள் இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். ஒவ்வொரு சீஃப் எஞ்சீனியருக்கும் சம்பந்தமோ தொடர்போ இல்லாத காரணத்தால் அந்த வாரியத்தில் ரி-ஆர்கனிசேஷன் செய்ய வேண்டும். மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதனைக் கவனிக்க வேண்டும்.

மின்சார வாரியத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர் களுக்கும் அதிகாரிகளுக்குமிடையே, பொறியாளர்களுக்குமிடையே, பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. எங்களுடைய ஒரத்தநாடு பகுதியில் மின்சாரத் தொழிலாளர்களுக்கும் பொறியாளருக்கும் இடையே சிக்கல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. தொழி லாளர்கள் சரிவர வேலை செய்யாவிட்டால் அதைக் கண்டிக்கிற பொறியாளரை மாற்றக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். துறை அதிகாரிகளுக்குப் பக்கபலமாக இருந்து நல்ல முறையில் செயல்பட வழி செய்யவேண்டும்.

திருவோணம் தொகுதியில் பல இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டிருக்கின்றன. மொத்தம் 18 கிணறுகள் இறக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கிணற்றுக்கும் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவுசெய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவற்றுக்கு மின்சாரம் கொடுக்காத காரணத்தால் கடந்த ஓரிரு ஆண்டுகளாக அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலை இருந்து கொண்டிருக் கிறது. அரசு இதனைக் கவனித்து ஆவன செய்யவேண்டும். அவற்றுக்கு மின்சாரம் கொடுப்பதன் மூலம் திருவோணம் பகுதி மக்கள், பிற்பட்ட மக்கள், அரிசன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்பெற முடியும். உடனடியாக அதனைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டின் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான மின்சாரப் பிரச்சினை பற்றிப் பேசுகிறபோது இங்கே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள்

[திரு. ஜி. மூர்த்தி] [1981 ஜனவரி 31

ஒருவர்கூட சட்ட மன்றத்தில் இல்லை என்பதை எண்ணிப் பார்க்கும்போது அவர்கள் இந்த மின்சாரத் துறையைப் பற்றிக் கொண்டிருக்கிற அக்கறையை இந்தச் சபை உணர்ந்திருக்குமென்று நினைக்கிறேன்.

இன்றைக்கு மின்சாரத் துறையில் அந்தத் துறையை அறிந்த வல்லுநராகப் பட்டம் பெற்ற மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துறை சிறப்பான முறையில் செயல்படும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.

நமக்குக் கொடுக்கப்படுகிற மின்சாரம், வழங்கப்படுகிற பங்குகள் எல்லாம் வட்டார அளவில் வழங்கப்படுகிறது என்ற நிலைமை மாறி விகிதாசார அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரிக்கை விட்டிருக்கிறார்கள், மத்திய அரசிடம் பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை தமிழகத்திற்கு வர வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இன்று மின்சாரத் துறையில் ஏறத்தாழ 33 சதவிகிதம் மின்சாரம் இழப்பாகக் கொண்டிருக்கிறது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். பெரும்பான்மை லைன் லாசில் சென்று கொண்டிருக்கிறது; திருட்டுத்தனமாகவும் சென்று கொண்டிருக்கிறது. இவற்றைக் கணக்கிட்டால் 150 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு நாம் விவசாயிகளுக்குப் பெருமளவில் சலுகைகள் அளிக்கிறோம். ஒரு வீட்டுக்கு யூனிட்டுக்கு 35 காசுகள் வசூலிக்கிறோம். கடைகளுக்கு யூனிட்டுக்கு 75 காசுகள் வசூல் செய்கிறோம்.

[பிற்பகல் 1.10]

அதேபோன்று விவசாயிகளுக்கு—சிறு விவசாயிகளுக்கு 12 காசு என்றும், பெரிய விவசாயிகளுக்கு 14 காசு என்றும்—வசூலித்துக் கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் மீறி நாட்டிலே தொழில் வளம் பெருகவேண்டுமென்பதற்காகப் பெரிய தொழிற்சாலைகளுக்கு 2% முதல் 4% வரை வசூலிக்கிறோம். இந்த நஷ்டம் 9½ கோடி ரூபாய் அளவிற்குப் பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வர வேண்டிய பாக்கி என்ற முறையிலே இருந்து கொண்டிருக்கிறது. நட்டத்திற்கு இது ஒரு காரணம். இந்த நட்டத்தைப் போக்குவதற்கான கருத்துக்களை நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்வதற்கு வகையிலே சில கருத்துக்களைச் சொல்கிறேன்.

1981 ஜனவரி 31] [திரு. ஜி. மூர்த்தி]

அங்கே இருக்கின்ற உயர் அதிகாரிகள், எஞ்சினியர்கள், சீப் எஞ்சினியர் தொழிற்சாலைகளுக்குள்ளே திடீர் என்று நுழைய வேண்டும். அவ்வப்போது திடீர் சோதனைகள் நடத்தவேண்டும். அங்கே இருக்கின்ற நிலைமைகளைப் பரிசோதித்து, எத்தனை யூனிட்டுகள் திருட்டுப் போகின்றன, கள்ளத்தனமாக என்ன முறைகள் கையாளப்படுகின்றன என்பதையெல்லாம் கண்டுபிடித்து அரசுக்குத் தகவல் தெரிவித்தால் நல்லது, அந்த வகையிலே நிர்வாகம் சுறுசுறுப்பாக இயங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே மின்சாரத் தட்டுப்பாடு இருந்துகொண்டு இருக்கிறது. குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதிகளிலே, மெயின் ரோடுக்குப் பக்கத்திலே இல்லாமல் அவர்கள் ஓரங்களிலே ஒதுக்குப்புறமாக வாழ்கிற நிலைமை இருப்பதால் மின்சாரம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆகவே காலனிகளிலே வாழ்கின்ற மக்களுக்குக் கொடுக்கப்படுகிற மின்சாரத்தை அதிகப்படுத்த வேண்டும். இப்போது போடப்படுகிற விளக்குகள், விளக்குக் கம்பங்கள் இவைகள் எல்லாம் அந்தப் பகுதிகளுக்குப் போதாமல் இருக்கிறது, அவைகள் போதுமான அளவுக்கு மூலை முடுக்குகளுக்குப் போய்ச் சேரவேண்டும் இதை அமைச்சர் அவர்கள் கருத்திலே கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மின் துறையில் 1979-80 ஆம் ஆண்டிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 500, 600 வேலைகள் கொடுக்கப்போவதாகத் தெரிவிக்கப்பட்டது. நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றன. இன்னும் வேலைக்கு ஆட்கள் எடுக்கப்படாத நிலைமை இருக்கிறது. ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டது, ஆகவே அமைச்சர் அவர்கள் இதைக் கருத்திலே கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் துறையிலே உள்ள உயர் அதிகாரிகள் பதவிகளுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிசர்வேஷன் இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். அதைப் பார்த்து அவர்களுக்கும் அதுபோன்ற பதவிகளில் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மின் கட்டணத்தை விவசாயிகளுக்குத் தள்ளி விட்டோம். ஒரு பிளஸ் ஒன் என்று வசூலித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாராயணசாமி நாயுடு போன்றவர்கள் வரிகொடா இயக்கம் என்று நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட சமூக விரோதிகளை நாட்டிலே நடமாடவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் கொடுக்க வேண்டிய பாக்கிகளை, கடுமையான சட்டத்தைப் போட்டு வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜி. மூர்த்தி] [1981 ஜனவரி 31

வட ஆற்காடு மாவட்டத்திலே என்னுடைய தொகுதியிலே மிகப் பெரிய டேனரி தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவைகளுக்கு மின்சாரம் பற்றாக்குறை இருக்கிறது. பெரிய தொகுதியாக இருக்கிற பேரணாம்பட்டு தொகுதியிலே பல கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தொழிற்சாலைகள் இருக்கின்றன, அவைகளுக்கு மின்சாரம் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. 6 மணி நேரம் மின்சாரம் தருகிறோம் என்று சொல்கிறார்கள், ஆனால் 3, 4 மணி நேரம் தான் ஓழுங்காக வந்து கொண்டிருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் கருத்திலே கொள்ள வேண்டும். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அந்தத் தொழிலை நம்பி வாழ்கிறார்கள். அவர்களுக்கு அரை நாள் வேலை கொடுத்துவிட்டு 10 ரூபாய் கூலியில் 2 ரூபாய் குறைத்து கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையிலிருந்து அந்த மக்களைக்காப்பாற்ற அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்:— மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பங்கெடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி நவில்கின்றேன். கடந்த பத்தாண்டு காலங்களில், இந்தத் துறையினுடைய வளர்ச்சியை நாம் எடுத்துப் பார்ப்போமேயானால் கிட்டத்தட்ட 1969-70 ஆம் ஆண்டிலிருந்து இன்று 1979-80 ஆம் ஆண்டில் இருக்கிற நிலையைப் பார்த்தால் இரண்டு மடங்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து தமிழ்நாட்டிற்கு வழங்கியிருக்கிறது, நம்முடைய மாநிலத்திலே தான் இந்தத் துறையிலேயே பரந்துபட்ட பெற்று நம்முடையவர் இந்தமின்துறைக்கு அமைச்சராக இருப்பது நம்முடைய அதிகுஷ்டம் என்றுகூறி, அவர்கருவ[illegible] வும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் என்று எடுத்துக்கொண்டாலே பொதுவாக மூன்று பகுதிகளாகப் பிரித்து விடலாம். ஜெனரேஷன், டிரான்ஸ்மிஷன், டிஸ்ட்ரிபியூஷன் என்று, அதாவது உற்பத்தி, அனுப்பிக் கொண்டு செல்லும் வழிமுறைகள், விநியோகம் செய்யும் வழிமுறைகள் என்று மூன்றாகப் பிரித்து விடலாம்.

உற்பத்தி என்று எடுக்கும்போது [illegible] தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், [illegible] ஹைட்ரோ எலெக்ட்ரிக் [illegible] அதிகமாக [illegible] அளவிற்கு [illegible] முடியுமோ அவ்வளவையும் உற்பத்தி செய்து விட்டார்கள், ஒன்றி

1981 ஜனவரி 31] [டாக்டர் கே. சௌரிராஜன்]

ரண்டு தவிர, ஹொகேனக்கல் ப்ராஜக்ட் போன்றவற்றைத் தவிர, அப்பொழுதும் அதற்கான திட்டங்களைத் தீட்டி மத்திய சர்க்காரின் ஒப்புதலுக்கு அளித்திருக்கிறார்கள். ஆனால் அது இன்னும் நிறைவேறாமல் இருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தெர்மல் பவர், அதாவது உஷ்ணத்தினால்தான் நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமே தவிர, வேறு எந்தவிதமான அளவிற்கும் மின்சார உற்பத்தியைப் பெருக்க முடியாது என்ற அளவிற்கு இருக்கிறோம்.

அடுத்தபடியாக, அணு மின் நிலையங்களை உருவாக்குவதற்கான வழி இருக்கிறதே தவிர வேறு வழியில்லாததால் இந்த தெர்மல் பவரை அதிகப்படுத்துவதற்கு எந்தெந்த முயற்சிகளை எடுத்திருக்க வேண்டுமோ அந்த முயற்சிகள் முழுமையாக எடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் ஆகும்.

அணுமின் நிலையத்தைப் பொறுத்தவரையில் காஸ்டலியாக அதாவது விலை உயர்வாக இருப்பதால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அதிகமான அளவிற்கு தெர்மல் பவரை உற்பத்தி செய்ய வேண்டிய முயற்சிகளை, நடவடிக்கைகளை எடுக்காமல் விட்டதால்தான் இன்றைக்கு தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை இருக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, நண்பர்கள் சொன்னார்கள். கடலில் இருந்து மின்சார உற்பத்தியைப் பெறுவதற்காக ஜப்பானிய நிபுணர்களை கலந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு இரண்டாண்டுகளுக்கு முன்பு மத்திய அரசாங்கத்தில் ஒப்புதலுக்காக ஒரு திட்டத்தைக் கொடுத்தார்களே, அந்தத் திட்டம் என்னவாயிற்று? ஏன் அதற்கு மேற்கொண்டு நடவடிக்கைகள் இவர்களால் எடுக்கப்படவில்லை என்பதையும் நான் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, டிரான்ஸ்மிஷன். இந்த மின்சாரத்தைக் கம்பிகள் மூலமாக எடுத்துச் செல்வதால் சுமார் 21.45 சதவிதமாக இருந்த இழப்பு, இப்பொழுது 18.57 சதவிதமாகக் குறைந்திருக்கிறது என்று சொன்னாலும்கூட, இந்த லாஸ் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்றுதான் சொல்லிக்கொள்ளவேண்டுகிறார்கள். தமிழகத்திலேதான் தலைசிறந்த பொறியியல் நிபுணர்கள் உருவாகி வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது இந்த மின்சாரத் துறையில் இதற்காக

ரிசர்ச் செல் என்று தனியாக ஒரு பிரிவை உருவாக்கி அதிலே இந்த டிரான்ஸ்மிஷன் லாசை எப்படித் தடுப்பது என்பதைப் பற்றி ஏன் சிந்தித்துப் பார்க்கக் கூடாது? பிளானிங்கிற்கு வைத்திருக்கிறோம்; ஆபரேஷனுக்கு வைத்திருக்கிறோம். அதைப் போல ரிசர்ச்சிற்கு என்று பொறியல் நிபுணர்களைப் போட்டு இந்த டிரான்ஸ்மிஷன் லாசை ஏன் குறைக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து எப்பொழுது பார்த்தாலும், மின்சாரம் தடைப் பட்டால் சீக்கிரத்தில் ரிப்பேர் செய்யாமல் உள்ள நிலை இருக்கிறது. அதற்கு அதிலே இருக்கின்றவர்கள் சொல்லுகின்ற ஒரே பதில், கேபிள் பால்ட் என்பதாகும். இவ்வாறு சொல்லி அவர்கள் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன் கேபில் பால்ட் வருகிறது என்று கேட்டால் இப்பொழுது அலுமினியத்தில் வருகிறது, ஆகவே தான் இப்படி அடிக்கடி தடை ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இப்படி மின்சார வாரியத்தால் வாங்கப்படும் பொருட்களை தரக் குறைவானதாக வாங்குவதால் இப்படி அடிக்கடி தொல்லைகள் ஏற்படுகின்றன.

(பிற்பகல் 1.20)

அதைக் கண்காணிப்பதற்காக, இந்த மின்சாரத் துறை வாங்குகின்ற பொருள்களெல்லாம், நல்ல தரமான பொருள்களாக வாங்கப்படுகின்றனவா என்பதைப் பரிசோதித்து பார்ப்பதற்கும் நாம் உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்ற என்னுடைய கருத்தை இங்கே தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நஷ்டம் வந்து கொண்டிருக்கிறது மின்சார வாரியத்திற்கு என்பது, அதனுடைய நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபொழுது, தெரிகிறது. தொடர்ந்து, வெகு வேகமாக. நஷ்டம் ரூ. 100 கோடியை எட்டிப் பிடித்திருக்கிறது என்பதை இங்கே அறிவித்திருக்கிறார்கள். நஷ்டம் எப்படி வருகிறது என்பதைப் பற்றிய எந்தவிதமான விளக்கமும் எனக்குச் சரியாகப் படவில்லை. அவர்கள் சொல்கிற விளக்கங்கள் எல்லாம், இங்கே விவசாயிகள் மின்சாரத்தை உபயோகப் படுத்திவிட்டு பணம் கட்டாமல் இருக்கிறார்கள். அதன் விளைவாகத்தான் ரூ. 25 கோடியிலிருந்து ரூ. 100 கோடி வரை எட்டிப் பிடித்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எப்பொழுது பார்த்தாலும், அந்த விவசாயிகளுக்கும் மின்சார வாரியத்திற்கும் போராட்டம் இருந்து கொண்டேதானிருக்கிறது: கடந்த 10, 15 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அவர்களுக்குள்ளே சுமுகமான தீர்வு ஏற்படுவதற்கு வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் 10 பைசாவுக்குக் கொடுக்கிறேன் என்றால், இவர்கள் 8 பைசாவுக்குக் கொடுப்பாயா என்று கேட்பார்கள். அவர்கள் 8

பைசாவுக்குக் கொடுக்கிறேன் என்று சொன்னால் இவர்கள் 6 பைசாவுக்குக் கொடுப்பாயா என்று கேட்பார்களே தவிர, அதற்கு ஒரு நிரந்தரமான தீர்வு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு சிறிய கருத்தை இங்கே சொல்லே விரும்புகிறேன். நதியிலே தண்ணீர் ஓடுகின்றது, நதியிலே ஓடுகின்ற தண்ணீரை வைத்து, அங்கங்கே விவசாயிகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச நாம் ஏற்பாடுகள் செய்து கொடுக்கிறோம். அதற்காக வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து ஏக்கருக்கு இவ்வளவு என்று கிஸ்தி வைத்திருக்கிறார்கள். அதைப் போல், மின்சாரம் உற்பத்தி செய்கிறோம். எல்லா விவசாயிகளும் எடுத்துக் கொள்ளட்டும். எத்தனை ஏக்கர்கள் பயன்படுகிறதோ, அதற்கு ஒரு பிக்சட் ரேட் போடலாம். எத்தனை ஏக்கர்களுக்கு வேண்டுமானாலும், அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளட்டும். அதற்கு ஒரு ஃபிக்சட் ரேட் விவசாயி தீர்வை கட்டவேண்டும். விவசாயத் தீர்வை கட்ட வேண்டும், ஏக்கர் அடிப்படையில். எப்படி நீர்த் தீர்வை இருக்கிறதோ அதைப் போல், விவசாயத் தீர்வை என்ற ஒன்றை வைத்து விட்டு, நாம் அதை வசூல் செய்ய முற்படுவோமானால் நிச்சயமாக விவசாயி திருடப் போவதில்லை. எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவு உபயோகப்படுத்திக்கொள்ளட்டும். ஆனால் தீர்வை is fixed. அதன்மூலமாக ஒரு சுமுகமான தீர்வை விவசாயிகளுக்கும், இங்கே உள்ள மின்வாரியத்திற்கும் இடையில் ஏற்படுத்தலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அந்த கருத்தைச் செயல் முறையிலே உருவாக்க முடியுமா, அமுல்படுத்த முடியுமா என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக இன்னொன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், மின்வாரியத் தொழிலாளர்களை, குறிப்பாக அனல் மின் நிலையத் தொழிலாளர்களை, எண்ணூரில் இருக்கின்றவர்களை, சென்றுப் பார்க்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கே 18 முதல் 25 வயதுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், இளைஞர்கள் இந்த நாட்டினுடைய வருங்கால செல்வங்கள், மிகவும் கடினமான சூழ்நிலையிலே, அதள பாதாளத்திலே வேலை செய்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் கரித் தூள்களும், மண்ணும் பறந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் அங்கே 8 மணி நேரம் ஒரே இடத்திலே வேலை சேய்து கொண்டு தங்களுடைய வாழ்க்கையைப் பாழடித்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்டால் அவர்களுக்கும் இந்த மின்சார வாரியத்தற்கும் சம்பந்தம் இல்லை, அவர்கள் ஒப்பந்தக் கூலிகள் -- கான்ட்ராக்டர்கள் மூலமாக வருபவர்கள் -- அவர்களைப் பற்றி நாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை என்று வெகு கலபமாக அங்கே தட்டிக் கழித்து விடுகிறார்கள். இந்தப் பிரச்சனை மனிதாபிமானத்துடன் அணுக வேண்டிய ஒரு பிரச்சனை. அங்கே, ஆயிரக்

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1981 ஜனவரி 31

கணக்கான, நாட்டினுடைய வருங்காலச் செல்வங்கள், இருட்டறையிலே, பாதாளத்திலே இருந்து கொண்டு, தங்களுடைய வாழ்க்கையைப் பணயமாக வைத்து, உயிர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மருத்துவன் என்ற முறையில் நான் சென்று பார்த்தபொழுது உள்ளபடியே மனம் நெகிழ்ந்தேன், அமைச்சர் அவர்களுக்கும் அதைப் பற்றி நான் சொல்லி இருக்கிறேன். அவர்களுடைய குறையைத் தீர்ப்பதற்காக, அமைச்சர் அவர்கள், எந்த முறையிலாவது, குறைந்தபட்சம் அவர்களுக்கு வைத்திய உதவியாவது, அடிக்கடி, 3 மாதத்திற்கொரு முறை, அப்படி வேலை செய்தவர்களை, எக்ஸ்ரே எடுத்து, அவர்களுக்கு டி, பி. போன்ற வியாதிகள் வராமல் இருப்பதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும், என்று உங்களை இந்த நேரத்தில் தாழ்மையோடு கேட்கிறேன். இந்த அளவிற்கு மின்சாரத் துறை நல்ல முறையிலே தமிழகத்தைப் பொறுத்த மட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் செயல்படுத்தக் கூடியவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில் மென்மேலும் இந்தத் தமிழகத்திலே அதிகமான அளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, தொழில் வளம் பெருக வேண்டுமென்பதற்குத் தேவையான முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய நேரத்தில், தொழிலாளர் நலனைப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்லி, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் :— மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முதலிலே குடிசைகளுக்கு மின்சாரம் இரண்டரை ரூபாய் வாங்கிக் கொண்டு நிலையான லைட்டுகளைப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அது பூரணமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றால் பூரணமாக நிறைவேற்றப்படவில்லை. இன்னும் பல கிராமங்கள் அந்த குடிசை மாற்று வாரியத்தின் கீழ் கட்டப்படுகின்ற கட்டிடங்களிலும் இன்னும் லைட்டுகள் போடப்படாமல் இருக்கின்றன. இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். இதில் உடனடியாக நடவடிக்கை எடுத்து, கவனிக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். தன்னிறைவுத் திட்டமென்று சொல்லுகிறோமே, அதை நிறைவேற்றுகிற விளைக்குகளிலே இதை முழுமையாக அரிசன் என்ற நிலையை மாற்றாமல் — யார் யார் வசிக்கிறார்களோ, அந்தப் பகுதி மக்களுக்கும் இந்த விளைவு படுத்தினால் நன்றாக இருக்குமென்று நான் கூறிக்கொள்கிறேன்.

இன்னொரு பிரதிகளில் விளக்கங்கள் போடப்பட்டிருக்கின்றன. தேர்தலுக்கு முன்பு என் தொகுதியில் முழுமையாக விளக்கங்கள் எரியாமல் இருந்தன. பின்னர் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில்

1981 ஜனவரி 31] [திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்]

சொன்ன பிறகு, தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு பல இடங்களில் விளக்குகளை எரிவித்தார்கள். ஆகையினாலே அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருந்தாலும், அந்த விளக்குகள் போடப்பட்ட இரண்டொரு நாட்களில் பியூஸ் ஆகிவிடுகின்றன என்றால் அதற்கு என்ன காரணம்? அதற்குக் காரணம், குறைந்த டென்டர்களை யார் கொடுக்கிறார்களோ, அவர்களிடத்திலிருந்து பல்புகள் வாங்கப்படுகின்றன. அவைகள் நல்ல பல்புகளாக இல்லை. தரமான பல்புகளாக இல்லை. ஆகையினாலே 6 மாதங்கள் அல்லது குறைந்தது 3 மாதங்களாவது லைட்டுகள் எரியக்கூடிய அளவிற்கு தரமான பல்புகளை வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் தன்னிறைவுத் திட்டத்தில், அண்ணன் திரு. பாரமலை அவர்கள் சொன்னதுபோல, பல இடங்களில் ஓவர்—ஹெட் டாங்க் கட்டி, தண்ணீரை ஏற்றுவதற்கு, தேவையான மின்னிணைப்பு கொடுக்காமல் இருக்கின்றது. அதன் காரணத்தாலே, அந்த மக்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியாமல் இருக்கிறது. நிலக்கோட்டை போன்ற பெரிய நகரங்களில் மேஜர் பஞ்சாயத்துகளில், தாலூகா தலைநகரங்களில் தண்ணீருக்கு மட்டும் 24 மணி நேரமும் கரன்ட் கொடுக்க வேண்டும். தண்ணீருக்கு 24 மணி நேரமும் கரன்ட் இல்லாமல், கரன்ட் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து, 4 மணி நேரம், 6 மணி நேரம், 8 மணி நேரம் என்று இருக்குமானால், அது சரியாக இருக்காது. ஆகையினாலே எங்கெல்லாம் மேஜர் பஞ்சாயத்துக்கள் அல்லது பெரிய நகரங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் 24 மணி நேரமும் தண்ணீருக்கு கரன்ட் சப்ளை கொடுக்க வேண்டுமென்று கனம் அமைச்சரவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மின்னிணைப்பு கொடுக்கின்ற நேரத்தில், பூமிக்கடியில் கேபிள்கள் போடப்படுகின்றது. மின்சாரக் கம்பிகள் போடுகின்றார்கள். டிரான்ஸ்பார்மர்கள் வைக்கப்படுகின்றது. அவைகளெல்லாம் கான்ட்ராக்ட் முறையில் செய்யப்படுகின்றன. அந்த கான்ட்ராக்ட் முறையில் செய்யப்படும்போது, அந்த வேலை ஒழுங்காக சீரான முறையிலே அமைவதாகத் தெரியவில்லை. அதனாலேதான் டிபார்ட்மெண்ட் ஆட்களாக இருந்தால், அது சாலச்சிறந்ததாக இருக்குமென்று நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பல இடங்களிலே, மின் துறையிலே வேலை பார்க்கக்கூடிய கீழ் நிலையிலே இருப்பவர்கள், மின்சாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்துகிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலும் மின்சாரத்தைத் திருடுகிறார்களென்று ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் ஒருவர் பேசினார். அவர்கள் ஊரிலே இம்மாதிரி நிலையை இருக்கிறது. ஆனால் எங்கள் ஊரிலே தெரியவில்லை. கரன்ட் கள்வாடுவது எங்கள் மாவட்டத்திலுள்ளவர்களுக்குத் தெரியவில்லை. கரன்ட் களவாடுகின்றவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும். இதை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

[திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்] [1981 ஜனவரி 31

டிபார்ட்மென்டிலிருந்துகூட குழாய்கள், பெண்டுகள், காப்பர் ஒயர்கள் ஆங்காங்கே திருடப்பட்டு, அவைகள் தனிப்பட்டவர்கள் கடைகளிலே விற்பனை செய்யப்படுவதாக நான் அறிகிறேன். அதையும் நினைவில் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சியில் 1953 ஆம் ஆண்டு காமராஜர் அவர்கள் இருந்தபோது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் சமயநல்லூரிலே ஒரு அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்தி 14 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து, மதுரை நகரத்திற்கு முழுமையாகப் பயன்படும்படி செய்திருந்தார். அதை என்ன செய்தார்கள்? அடுத்து வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் அதை விற்றுவிட்டார்கள். அன்றைக்கு ஒரு கோடி ரூபாய் என்றால் இன்றைக்குப் பத்து கோடி ரூபாய் பெரும். அதை என்ன செய்தார்களென்று தெரியவில்லை. கேவலமான விலைக்கு விற்று, அதை எப்படிப் பங்கு போட்டுக் கொண்டார்களென்றும் தெரியவில்லை.

[பிற்பகல் 1.30]

எந்த அரசாங்கமாக இருந்தாலும், ஒரு முறை ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் மக்கள் பயன்பெற்று வருகின்றனர் என்கிற நிலைமை இருக்கின்றபோது, அதை 'அன்—எகனாமிகல்' அல்லது இலாபகரமானது அல்ல என்று சொல்லி, அழிப்பார்களானால், அவர்களுக்கு மக்களின் தண்டனை மட்டுமல்ல, அடுத்து வருகின்ற அரசாங்கமும் அதற்குப் பொறுப்பானவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் தான் இனிமேல் வருகின்ற அரசாங்கங்கள் — அது எந்த அரசாங்கமாக இருந்தாலும் — ஒரு அரசாங்கம் செய்ததை அழிக்காமல் இருப்பார்கள் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

நான் ஒரு விவசாயி. விவசாயிகளுக்கு பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுகின்றது. 2—3 பம்ப் செட் வைத்து இருப்பவர்களுக்கு வேண்டுமானால் இன்னொரு பம்ப் செட்டுக்கு மின் இணைப்புக் கொடுப்பதை காலதாமதமாக்கலாம். ஆனால் புதிதாகக் கிணறு தோண்டி, மின் இணைப்பு கேட்கிறவர்களுக்கு — குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு — முன்னுரிமை கொடுத்து மின்சாரம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு மின் கட்டணம் 12 பைசா, 14 பைசா என்று வைத்து இருக்கிறார்கள் . . . . அதை ஒரே சீராக 12 பைசா என்று வைப்பது நல்லது (மணியடிக்கப்பட்டது) என்று நினைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 2—2—1981 (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

1981 ஜனவரி 31]

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

178. திருநெல்வேலி மாவட்டத்தில் வெங்காயத்தை விலைக்கு வாங்குதல் மற்றும் விற்பனை செய்தலின் மீது கட்டுப்பாடு அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 22.10.1980 ஆம் தேதியிடப்பெற்ற 2087 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

179. தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு கடன் நிவாரண விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 24—11—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2614-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1980) 13 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

180. கோயமுத்தூர் மற்றும் குன்னூரில் உள்ள ஏல மையங்களில் விற்பனை செய்யப்படுகிற தேயிலையின் மீதான விற்பனை வரி வீதத்தைக் குறைப்பது குறித்து, வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 20—11—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1232 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

181. தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பணியாளர் அமைப்பு (கடைநிலை ஊழியர்களின் தகுதி மற்றும் பணியில் அமர்த்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 22—8—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1247 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

(19) பொதுக் கணக்குக் குழுவின் 1974—75 ஆம் ஆண்டிற்கான வரக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய அறிக்கை (தமிழ்).

[1981 ஜனவரி 31

இணைப்பு I

[60-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவை முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின் 1980–81 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை, 1979–80 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் மொழிகிறேன்.

2. தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு மின் சக்தி ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், இந்த நிதி நிலை அறிக்கைகளை 1948 ஆம் ஆண்டு மின் சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61 ஆம் பிரிவின்படி, அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது. மின் வாரியம் செயல்படுவது பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளை அரசும் வாரியமும் கருத்தில் கொள்ளும். மின் வாரியத்தின் 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளுக்கான நிதி நிலை அறிக்கை பற்றி இந்த அவையில் நடைபெற்ற விவாதத்தின்போது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பப்பட்டுள்ளது.

3. மின் சக்தியே, மக்களுக்கு மிகவும் பயனுள்ள சக்தியாகும். பொருளாதார வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியமானது. சாதாரண மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இது இன்றியமையாதது. இம்மாநிலத்தில் மின்சாரத் தேவை விரைவாகப் பெருகி வரும்போது கூடுதல் மின் உற்பத்தித் திறன் அதற்கு ஏற்பப் பெருகவில்லை. இதனால், பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 1970–80ல் 25 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை மின் வெட்டு விதிக்கப்பட்டுள்ளது.

1970–80ல் மின்வெட்டு விதிக்கப்பட்ட அளவை 1ஆம் விவரம் அறிக்கை கொடுக்கிறது. இந்த மின்வெட்டு காரணமாக, 1960–70ல் 10.1 சதவீதமாக இருந்த உற்பத்தி வளர்ச்சி வீதம், 1971ஆம் ஆண்டிற்கும் 1977 ஆம் ஆண்டிற்கும் இடையே உள்ள கால அளவில் 3.1 சதவீதமாகக் குறைந்துவிட்டது. எனினும், மின்சக்தி அதிக அளவு கிடைத்ததால், 1977-79ல் மின் உற்பத்தி வளர்ச்சி வீதம் 14 சதவீதமாக உயர்ந்துள்ளது.

4. 1981 ஆம் ஆண்டு பிறந்துவிட்டது. இனிவரும் பத்தாண்டுகளின் மின்சக்தி நிலைமை நமக்கு மனநிறைவு அளிப்பதாக இல்லை. மின்சக்தி குறித்துத் திட்டமிடுவதைப் பொறுத்த வரையில், ஆண்டு மின் சக்தி ஆய்வுக்குழுக்கள் தமிழ்நாட்டிற்கு முற்றிலும் ஆதரவாக இல்லை. 1983–84 ஆம் ஆண்டளவில், தென்

வட்டாரத்திற்கான மின் உற்பத்தி வளர்ச்சி வீதம் 9.5 சதவீதமாகவும், நாட்டின் மின் உற்பத்தி வளர்ச்சி 10.8 சதவீதமாகவும் இருக்கும் எனவும், தமிழ் நாட்டில் மின் உற்பத்தி வளர்ச்சி வீதம் 7.9 சதவீதமாக இருக்கும் எனவும் 10 ஆவது ஆண்டு மின் சக்தி ஆய்வுக்குழு மதிப்பிட்டுள்ளது. தென்வட்டாரத்தின் மின் உற்பத்தி வளர்ச்சி வீதம் 8.9 சதவீதமாகவும், தமிழ் நாட்டிற்கான மின் உற்பத்தி வளர்ச்சி வீதம் 5.7 சதவீதமாகவும் இருக்குமென 11வது ஆண்டு மின் சக்தி ஆய்வுக்குழு வளர்ச்சி வீதத்தை மேலும் குறைத்து மதிப்பிட்டுள்ளது. நாட்டிலேயே தமிழ்நாடுதான் குறைந்த அளவு மின் சக்தி வளர்ச்சி வீதம் பெற்றிருக்கும் என மதிப்பிடுவது தமிழ்நாட்டிற்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

1978–79 ஆம் ஆண்டில் மின்வெட்டு விதிக்கப்படாத நிலையில், மின் சக்தி பயன்படுத்துவதில் 17.3 சதவீதம் அதிகரித்தது. இது மின் சக்தி குறித்து திட்டமிடுவதில் ஏற்பட்ட பெரும் குறைபாட்டைக் காட்டும். தமிழ்நாட்டிற்கான மின் சக்தித் திட்டப்பணி மதிப்பீடுகளை அவை நடப்பு நிலையைக் கருத்திற் கொண்டு உருவாக்க படவில்லை. என்றும் நியாமற்றவை என்றும் கூறித் தமிழ்நாடு அரசு தள்ளிவிட்டது. புதுடில்லியில் 1980 நவம்பரி நடைபெற்ற மின்சக்தி அமைச்சர்கள் கூட்டத்தில், தமிழ்நாடு தொடர்ந்து மின் சக்தி பற்றாக்குறையின் பிடியிலிருந்து விடுபடவேண்டுமாயின், நமது தேவைகளுக்கும் மேற்பட்டு 10 சதவீதம் ஒதுக்க வேண்டும் என நான் வலியுறுத்தியுள்ளேன்.

5. தற்போது மின்சக்தி திட்டங்கள் வட்டாரக் கண்ணோட்டத்திலேயே வகுக்கப்படுகின்றன. இதனால், தமிழ்நாடு போன்ற மின்சக்திப் பற்றாக்குறையுள்ள மாநிலங்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன என்று நமது அனுபவத்திலிருந்து தெரியவருகிறது. மின்சக்தி உபரியாக உள்ள மாநிலங்களை மின்சக்திக்காகத் தொடர்ந்து நம்பியிருப்பது, பற்றாக் குறையுள்ள மாநிலங்களின் நீண்ட கால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்காது. ஏனெனில், அது பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும். அவசரத் தேவை, பற்றாக்குறை ஆகியவற்றை ஈடு செய்ய, மாநிலங்களுக்கிடையே மின்சக்தி வாங்குவது அவசியமாக இருக்கலாம். ஆனால் மின் உற்பத்தியில் தன்னிறவு பெறுவதற்கு ஒவ்வொரு மாநிலமும் பாடுபட வேண்டுமென்று தமிழ்நாடு கருத்துக் கொண்டுள்ளது. மின்சக்தி குறித்துத் திட்டமிடுதல், மேம்பாடு தொடர்பாக மாநிலமே—வட்டாரமல்ல—ஓர் அலகாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும், மத்திய அரசு பொறுப்பேற்கும் நிலையங்களிலிருந்து அண்டை மாநிலங்களிலுள்ள மின்சக்திப் பற்றாக்குறையின் வீதாசாரத்தின் அடிப்படையில் மின்சக்தியைப் பகிர்ந்து கொள்வதற்கு ஒப்புக் கொண்டாலன்றி மின்சக்தி உபரியாக உள்ள மாநிலங்கள், அவற்றிற்கு மின்சாரம் தேவைப்படாவிட்டாலும், மேற்கொண்டும் ஒதுக்கீடு பெறும் ஆதலால், வட்டார அடிப்படையில் திட்டமிடும் கோட்பாடு முழுவதும் பகுத்தறிவிற்கு ஒவ்வாதது. மின்சக்தி பற்றாக்குறை மாநிலங்கள் அப்பற்றாக்குறையில் ஓரளவு ஈடு செய்யப்

படாத நிலையிலேயே தொடர்ந்து இருக்கும். பற்றாக்குறை மாநிலம், மின்சக்தி உபரியாக உள்ள அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்க வேண்டிய நிலையில் உள்ளது. பெரும்பகுதி மின்சாரம் அண்டை மாநிலங்களிலிருந்தல்லாமல் மத்திய அரசு பொறுப்பு ஏற்கும் நிலையங்களிலிருந்து வாங்கப்படுமாறு உறுதி செய்வது பொருத்தமாகும்.

6. தற்போதுள்ள மின்சக்தி பற்றாக்குறை நிலைமையில், தற்போதுள்ள அனல் மின்நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி அளவை அதிகரிப்பதே முதல் நடவடிக்கையாகும். எண்ணூர், தூத்துக்குடி, நெய்வேலி அனல் மின்நிலையங்களின் மின்சக்தி உற்பத்தி அளவை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நான் சுருக்கமாகத் தற்போது விளக்குகிறேன்.

7. 1969–70ல் எண்ணூர் அனல் மின்நிலையத்தின் முதல் பிரிவு தொடங்கப்பட்ட நாளிலிருந்து அந்நிலையம் கடுமையான தொழில் நுட்பச் சிக்கல்களை எதிர் நோக்கி வந்துள்ளது. இந்த நிலையத்திலிருந்து சராசரி 5350 KWHR/KW மின்சக்தி கிடைக்குமென்று மத்திய மின்சக்தி மன்றம் எதிர்பார்த்தது. ஆனால், 3600 KWHR/KW மின்சக்திதான் கிடைத்தது. நாடு முழுவதும் 120/110 மெகாவாட் திறனுள்ள மின்நிலையங்களின் உற்பத்தித் திறன் மனநிறைவு அளிப்பதாக இல்லை. மத்திய மின்சக்தி மன்றம் செய்த பகுப்பாய்வின்படி, நாட்டிலுள்ள 120/110 மெகாவாட் திறனுள்ள மின்நிலையங்கள் சுமார் 24; அவை உற்பத்தி செய்த மின்சக்தியின் அளவு 3300 KWHR/KW மட்டுமே.

எண்ணூர் அனல் மின்நிலையத்தில் அடிக்கடி ஏற்பட்ட உற்பத்திக் குறைவுகளைக் குறித்த விரிவான ஆய்விலிருந்து நிலையச் சாதனங்களின் பொறியியல், வடிவமைப்புக் குறைபாடுகளின் காரணத்தாலேயே அங்கு மின் உற்பத்திக் குறைவு ஏற்படுகிறது எனத் தெரிய வந்தது. உண்மையில், 110 மெ. வா. யூனிட் மின் உற்பத்தி திறனை 85 மெ. வா யூனிட் மின் உற்பத்தியாகக் குறைப்பதென ஆலோசனை வழங்கப்பட்டது. ஆனால் 110 மெ. வா. யூனிட் உற்பத்தி செய்யும் இயந்திரங்களை வழங்கிய செக்கோசுலோவாகிய நாட்டைச் சேர்ந்த ஸ்கோடாவிலுள்ள நிறுவனத்தின் வல்லுநர் குழுவை 1980ம் ஆண்டு ஆகஸ்ட்/செப்டம்பர் திங்களில் எண்ணூர் அனல் மின் நிலையத்தைப் பார்வையிட்டு இயந்திரங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தத் தேவையான மாற்றங்களைச் செய்ய ஆலோசனை வழங்குமாறு கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. செக்கோசுலோவாகிய வல்லுநர்குழு அளித்த பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு, இயந்திரங்களை மேம்படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றத் தேவைப்படும் உதிரி, மாற்றுப் பாகங்களை உற்பத்தி செய்து வழங்குமாறு 'பெல்' (BHEL) நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இம்மேம்பாட்டுப் பணிகளைப் படிப்படியாக சுமார் ஐந்தாண்டுக் காலத்தில் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

8. தூத்துக்குடியில் நிறுவப்பட்டுள்ள 210 மெ. வா. உற்பத்தித்திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தின் முதல் பிரிவு 1979 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் மின் உற்பத்தியைத்

தொடங்கியது. இந்நிலையத்திற்குப் பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன. "பெல் (BHEL) நிறுவனம் தயாரித்து வழங்கிய 210 மெ. வா. மின் உற்பத்தித் திறன் கொண்ட 13 பிரிவுகள் நாட்டின் பல்வேறு இடங்களில் இயங்கி வருகின்றன, தற்போது இந்தப் பிரிவுகளில் பலவற்றிலும் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. பிரச்சினைகளில் சில பொதுவானவையாகும். இப்பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியும் அவற்றிற்குத் தீர்வுகாணும் பொருட்டும் மின்சார வாரியம் "பெல்" (BHEL) நிறுவனத்தை அணுகியுள்ளது. முதல் பிரிவு, 1980 ஆம் ஆண்டு சூன் திங்கள் வரை எரி எண்ணெயின் துணை கொண்டு இயங்கி வந்தது. பின்னர், 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதி முதல் நிலக்கரியை எரி பொருளாகக் கொண்டு இயங்கி வருகிறது. நிலக்கரியின் துணையுடன் மீண்டும் இயங்கத் தொடங்கிய இப்பிரிவு, பொதுவாக மனநிறைவளிக்கும் வகையில் இயங்கி வருகிறது. 1980 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் 72 மில்லியன் யூனிட்டுகளையும் 1980 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் 77 மில்லியன் யூனிட்டுகளையும் இப்பிரிவு உற்பத்தி செய்தது. இது இப்பிரிவின் உற்பத்தித் திறனில் 1980 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் உற்பத்தியளவு 47.6 சதவீதமும், 1980 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் உற்பத்தியளவு 49.3 சதவீதமும் ஆகும். இப்பிரிவு வழங்கும் மின்சக்தியின் சராசரியளவு 200 மெ. வாட்டும் தினசரி உற்பத்தியளவு 4 மில்லியன் யூனிட்டுகளும் ஆகும். தூத்துக்குடியில் நிறுவப்பட்டுள்ள 210 மெ. வா. உற்பத்தித்திறன் கொண்ட பிரிவின் இரண்டாவது பிரிவு 1980 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் இயக்கி வைக்கப்படவிருந்தது. சோதனை ஓட்டத்தின்போது, தரை இணைப்பில் தவறு நிகழ்ந்ததன் காரணமாகச் சுழற் பொறியில் பழுது ஏற்பட்டது. எனவே, இச்சுழற் பொறிக்குப் பதிலாக, கைவசம் இருந்த மூன்றாம் பிரிவின் சுழற்பொறி பொருத்தப்பட்டு இப்பிரிவில் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 7 ஆம் நாள் முதல் மின் உற்பத்தி தொடங்கியது. இப்பிரிவு, உச்ச அளவாக 120 மெ. வா. மின் சக்தி உற்பத்தி செய்தது. அதனுடைய கணிப்பீட்டு அளவு உற்பத்தித் திறனை விரைவில் எய்தும். 3 ஆம் பிரிவை 1982 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தொடங்கும் வகையில் அப்பிரிவின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

9. நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தின் சுரங்கப் பணிக் கருவிகளில் அடிக்கடி பழுதேற்பட்டதாலும், வடகிழக்குப் பருவ மழை காரணமாகச் சுரங்கத்தில் வெள்ளப் பெருக்கேற்பட்டதாலும், 1979 ஆம் ஆண்டு நெய்வேலி அனல் மின் திட்டப் பெரு மளவு பாதிக்கப்பட்டு அதன் உற்பத்தியளவு மிகக் குறைந்தது.

[1981 ஜனவரி 31

அங்கு, ஆண்டொன்றுக்கு 6.5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தியாகுமெனக் கணிக்கப்பட்டிருக்க, 1979–80 ஆம் ஆண்டில் கிடைத்த உற்பத்தியளவு 2.89 மில்லியன் மட்டுமே. புதிய சுரங்க பணிக் கருவிகளை நிறுவியதையடுத்து, 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி யிலிருந்து மின்உற்பத்தி நிலைமை சீரடைந்தது. 1973–74 ஆம் ஆண்டில் நெய்வேலி அனல் மின் நிலையத்தில் முழுஅளவு உற்பத் தித்திறனை நிலை நிறுத்துவதற்கு அப்போது கிடைத்து வந்த பழுப்பு நிலக்கரி உற்பத்தியளவு போதுமானதாக இராததால் அங்கு இருந்த 50 மெ. வா. யூனிட் உற்பத்திப் பிரிவுகள் இரண்டு எரி எண்ணெயின் துணையுடன் இயங்கி மின் உற்பத்தி செய்யும் வகையில் தக்கவாறு திருத்தியமைக்கப்பட்டன. தற்போது பழுப்பு நிலக்கரி உற்பத்தி நிலைமை சீரடைந்துள்ளமென்று எதிர் பார்க் கப்படுவதால், அவ்வாறு மாற்றப்பட்ட எண்ணெயால் இயங்கும் மின் உற்பத்திப் பிரிவு ஒன்றை மீண்டும் பழுப்பு நிலக்கரி எரி திறனால் இயங்குகின்ற மின்உற்பத்திப் பிரிவாக மாற்றுவதற்குரிய பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்து, இந்த ஆண்டில் பாச னக் காலத்தின்போது எரியெண்ணெயால் இயங்கும் இன்னொரு மின் உற்பத்திப் பிரிவும் பழுப்பு நிலக்கரி எரிதிறனால் இயங்கும் பிரிவாக மாற்றப்படும்.

10. கல்பாக்கத்தில் நிறுவப் பெற்றுள்ள அணு மின் நிலையம் 1973–74–ம் ஆண்டிலேயே மின் உற்பத்தியைத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் அங்கு இன்னும் மின் உற்பத்தி தொடங்கவில்லை. அண்மையில் நமது முதலமைச்சரி அவர்கள் இந்தியத் தலைமையமைச்சரை நேரில் கண்டு, இந்த நிலையத்தில் மின் உற்பத்தியை விரைவில் தொடங்க வேண்டிய இன்றியமையாமை பற்றி விளக்கியுரைத்துள்ளார். தமிழ் நாட் டில் மின் உற்பத்திக்குரிய இயற்கை வளங்கள் மிகக் குறைவாக உள்ளபடியால் தமிழ்நாட்டில் ஒவ்வொன்றும் 235 மெ. வா. உற்பத்தித் திறனுள்ள மேலும் இரண்டு அணு மின் உற்பத்தி பிரிவுகள், அமைக்கப்பட வேண்டுமெனவும் இவற்றில் ஒன்று கல்பாக்கத்திலும், மற்றொன்று திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளத்திலும் அமைக்கப்பட வேண்டுமென்றும் தமிழக முதல்வர் விளக்கியுள்ளார்.

11. 1979–ம் ஆண்டில் தென்மேற்கு, வடகிழக்குப் பருவ மழை நன்றாகப் பெய்தது. அதன் விளைவாகப் புனல் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் 5,533 மில்லியன் யூனிட்கள் மின் சக்தி உற்பத்தி செய் முடிந்தது. இது முன்னர் கண்டிராத சாதனையாகும். ஆனால், 1980–ம் ஆண்டில் தென் மேற்குப் பருவமழை வழக்கமான அளவு பெய், போதிலும், வடகிழக்குப் பருவமழை பொய்த்தது.

மேட்டூர் நீங்கலாக, எல்லா நீர்த் தேக்கங்களிலும் 1—1—1981 அன்று 862 மில்லியன் யூனிட் தண்ணீர் மட்டுமே இருந்தது. ஆனால் இவற்றின் முழு கொள்ளளவு 2,395 மில்லியன் யூனிட் ஆகும். 23—1—1980 அன்று அவற்றில் 1300

1981 ஜனவரி 31]

மில்லியன் யூனிட் நீர் இருந்தது. மேட்டூர் அணையில் இக் காலத்தில் இருந்த நீரின் அளவை கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இது மிகக் குறைந்த அளவாகும். ஆனால், இதன் முழு கொள்ளளவு 210 மில்லியன் யூனிட் ஆகும். 23—1—1980 அன்று 136 மில்லியன் யூனிட்டும் 23—1—1981 அன்று 22 மில்லி யன் யூனிட்டும் இருந்தது. கேரள மாநிலத்திலிருந்து தமிழ்நாட் டிற்கு வழங்கப்பட்ட மின்சக்தியின் அளவு 1979-80 ஆம் ஆண்டிலிருந்து குறைந்து கொண்டே வந்துள்ளது. ஏனெனில் கேரள மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி மின்சக்தியை கர்நாடகமும் தமிழ்நாடும் பகிர்ந்து வருகின்றன. ஆனால் முந்தைய ஆண்டுகளில் உபரி மின்சக்தி முழுவதையும் தமிழ்நாடே எடுத்துக் கொண்டது. கேரளாவிடமிருந்து பெறப்படும் மின்சக்தி குறைந்ததன் காரணமாக, தமிழ்நாட்டில் பற்றாக்குறை நிலைமை மேலும் மோசமடைந்தது. கிடைக்கும் அளவுக்கும் தேவைப்படும் அளவுக்கும் இடையே உள்ள பற்றாக்குறை அள வைச் சரிக்கட்ட, 75 பரிதிறனுக்கு மேல் மின் இணைப்பு வழங்கப் பட்ட குறைவழுத்த தொழில்கள் அனைத்திற்கும், உயரழுத்த தொழில்களுக்கும் 30 சதவீதத் தேவை குறைப்பும் 30 சதவீத மின் வெட்டும் 1—12—80 முதல் கொண்டு வரப்பட்டுள்ளது. கிராமப் புறங்களில் பகல் நேரத்தில் 6 மணி நேரமும் இரவு நேரத்தில் 8 மணி நேரமும் தற்போது மின் சக்தி வழங்கப்பட்டு வருகிறது உயரழுத்த, குறைவழுத்தத் தொழில்களுக்கு மின் வெட்டினின்று விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவற்றுக்கு வழங்கப்படும் மின் சக்தி குறைக்கப்பட்டதன் காரணமாக அவை ஏற்கனவே ஓரளவு மின்வெட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

12. இம்மாநிலத்தில் சுமார் 9 இலட்சம் விசையேற்றங்கள் உள்ளன. இவற்றுக்கு அளிக்கப்பட்ட மொத்த மின் இணைப்பின் அளவு சுமார் 3,000 மெகாவாட் ஆகும். ஒரே நேரத்தில் அவற் றில் பாதி விசையேற்றங்கள் செயல்பட்டாலும், இவற்றுக்கு மட்டும் தேவைப்படும் மின் சக்தியின் அளவு 1,500 மெகா வாட் ஆகும். இந்த அளவு திறன் கிடைக்காது. எனவே கிராமப் பகுதிகளில் விசையேற்றங்களைத் தொகுதிகளாகப் பிரித்து அவற் றுக்கு மின்சக்தி முறை அடிப்படையில் வழங்கப்படுகிறது. மாநிலத்திலுள்ள 18 புனல் மின் நிலையங்களில் 9 நிலையங்கள் பாசனத்துடன் இணைக்கப்பட்டவை. சோடை நாட்களில் பெரும்பாலான மின் நிலையங்கள் மூடிவிடப் படுகின்றன. இதனால் புனல் மின்சக்தி உற்பத்தியும் குறைந்துவிடுகிறது. வேளாண்மைக்கு மின் சக்தி அதிகமாகத் தேவைப்படும் சோடை காலத்தில் 1,369 மெகாவாட் புனல் மின் சக்தியில் ஏறத்தாழ பாதி அளவு கிடைப்பதில்லை.

13. இன்றைய தமிழ்நாடு மின் இணைப்பு மொத்தம் 1,369 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட 18 புனல் மின் நிலை யங்களையும், 600 மெகா வாட் திறன் கொண்ட நெய்வேலி அனல் மின் நிலையம் உட்பட 1,560 மெகா வாட் திறனுடன்

கூடிய 4 அனல் மின் நிலையங்களையும் தூத்துக்குடியில் உள்ள 210 மெகா வாட் திறன் கொண்ட முதல் இரண்டு பிரிவுகளையும் கொண்டதாகும். மொத்த நிறுவு திறன் 2,929 மெகா வாட் ஆகும். 1978–79–ல் இருந்ததை விட இது 420 மெகாவாட் அதிகமாகும். ஆனால், அதில் 630 மெகா வாட் பருவ மழையின் போது கிடைப்பதாகும். நிலக்கரியின் விலை ஆண்டுக்காண்டு உயர்ந்துக் கொண்டே வருவதால், அனல் மின் நிலையங்களில் ஒரு யூனிட் மின் சக்தி தயாரிப்பதற்குத் தேவைப்படும் நிலக்கரியின் விலையைக் காட்டிலும் புனல் மின் நிலையங்கள் சிலவற்றில் மின் சக்தி தயாரிப்பதற்காகும் செலவு குறைவாக இருப்பதால் மழை காலத்தில் செயல்படும் புனல் மின் திட்டங்களையும் மேம்படுத்துவது அரசின் கொள்கையாக உள்ளது.

14. 1979–80-ல் உயரளவு தேவை 1,710 மெகா வாட் ஆகும். தமிழ்நாட்டில் மின் அமைப்பின் உயரளவுத் தேவை, தென் மண்டலத்தில் மொத்தத் தேவையில் 40 சதவீதமாகும்; அனைத்திந்திய அளவில் அது 11 சதவீதமாகும். 1979–80-ல் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியும், வாங்கிய மின்சக்தியும் 10,114 மில்லியன் யூனிட் ஆகும். இது தென் மண்டல உற்பத்தியில் சுமார் 38 சதவீதமாகும். அனைத்திந்திய அளவில் 9·6 சதவீதமாகும். மின் உற்பத்தியைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு, நாட்டில் மூன்றாவது நிலையில் உள்ளது.

15. 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளவாறு 38·35 இலட்சம் பேர் மின்சக்தி பயன்படுத்தினர். அவர்களில் 20·32 இலட்சம் பேர் வீட்டுக் காரியங்களுக்காகப் பயன்படுத்துவோர், 5·43 இலட்சம் பேர் வணிகக் காரியங்களுக்காகப் பயன்படுத்துவோர், 8.87 இலட்சம்பேர் வேளாண்மைக்காகப் பயன்படுத்துவோர், 1.42 இலட்சம்பேர் தொழில்களுக்குப் பயன்படுத்துவோர், ஏனையோர் பல்வகை காரியங்களுக்குப் பயன்படுத்துவோர் ஆவர். விற்பனை செய்யப்படும் மின் சக்தியில் 48 சதவீதம் தொழில் துறையாலும், 27 சதவீதம் வேளாண்மைத் துறையாலும் 9 சதவீதம் வீட்டுப் பயனீட்டாளர்களாலும் எஞ்சியது, ஏனைய வகையினராலும் பயன்படுத்தப்படுகிறது. மொத்த மின்சக்தி விற்பனையில் சுமார் 39 சதவீதம் உயரழுத்த மின்சக்தி பயன்படுத்தும் தொழிற்சாலைகளாலும் சுமார் 9 சதவீதம் குறைவழுத்த மின் சக்தி பயன்படுத்தும் தொழிற்சாலைகளாலும் பயன்படுத்தப்படுகிறது.

16. தமிழ்நாடு மின் இணைப்பு இந்தியாவிலேயே பரந்த அளவில் அமைந்த 3.2 இலட்சம் கிலோமீட்டர் நீளமுள்ள கூடுதல் உயரழுத்த/உயரழுத்த, குறைவழுத்த மின் கம்பித் தொடர்களையுடைய மிகப் பெரிய அமைப்பாகும். 355 கூடுதல் உயரழுத்த/உயரழுத்த துணை மின் நிலையங்களும், 48,595 மின்பகிர்ந்தளிப்பு மின் அழுத்த மாற்றிகளும் உள்ளன

மொத்தம் 64,012 கிராமங்கள், சிற்றூர்களில் 63,462 கிராமங்கள். சிற்றூர்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. அரிசன குடியிருப்புகள் அனைத்திற்கும் (25,683) மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

17. சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களுக்கு மின் வசதி செய்து கொடுப்பதற்காக, இவ்வரசு, கடந்த ஆண்டு, கிராமப் புறங்களில் குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கும் திட்டத்தைத் தொடங்கியது. ஓராண்டுக் குறுகிய காலத்திற்குள், 2·3 இலட்சம் குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 189 ஊராட்சி ஒன்றிய வட்டாரங்களில் குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கும் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கக் கருதப்பட்டுள்ளது.

உள்ளாட்சி மன்றங்களின் தொடர்ந்த வேண்டுகோளுக்கிணங்க, தெரு விளக்கு பராமரித்தலை மின் வாரியம் ஏற்று பராமரித்து வருகிறது.

18. இவ்வரசு, புதிய திட்டங்களுக்கான அனுமதி குறித்து வலியுறுத்தி வந்துள்ளது. இதன் விளைவாக, மேட்டூர் அணையில் காவிரி ஆற்றின் நீரோட்டத்தில், 120 மெகாவாட் மொத்த கொள்திறனுள்ள கீழ் மேட்டூர் புனல் மின் திட்டத்திற்கும், 420 மெகாவாட் மொத்த கொள்திறனுள்ள மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கும், குந்தா மின் நிலையம் V இல் 20 மெகாவாட் கூடுதல் யூனிட்டுக்கும் இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வனைத்துத் திட்டங்கள் குறித்த பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களையும், தூத்துக்குடி அனல் மின் திட்டமும் (630 மெ. வா.) தவிர, சேர்வலாறு புனல் மின் திட்டம் (20 மெ. வா.), காடம்பாறை நீரேற்று சேமிப்புத் திட்டம் (400 மெ. வா.) ஆகியவை ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத் திட்டங்கள் கீழே குறிப்பிட்ட கால அளவில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. :—

தூத்துக்குடி III ஆம் யூனிட்டு ..	1982 மார்ச்.
சேர்வலாறு புனல் மின் திட்டம் ..	1983–84
காடம்பாறை நீரேற்று சேமிப்புத் திட்டம்.	1983–84
கீழ் மேட்டூர்	1983–84
மேட்டூர் அனல் மின் திட்டம்	1984–85
குந்தா மின் நிலையம் Vஇல் கூடுதல்யூனிட்.	1984–85

தற்போதுள்ள அனல் மின் நிலையங்களின் நிறுவு திறன் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படும் அளவுக்கும், உண்மையில் உற்பத்தி செய்யப்படும் மின் உற்பத்திக்குமிடையே தற்போது பெரும் வேறுபாடு உள்ளது. உள்நாட்டு இயந்திரங்களின் செயல்

திறன் எந்தவொரு நிலையத்திலும் 45 சதவீதத்திற்கு மேல் இல்லை. இச் சூழலில், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய திட்டங்களிலாவது, சிறந்த இயந்திரங்களை அதிக அளவில் நிறுவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தாமலிருக்க இயலாது. மின் சக்திப் பற்றாக்குறையினால் தற்போது சில இன்றியமையாப் பொருட்களின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மின் உற்பத்தி இயந்திரங்கள், போன்ற அடிப்படைச் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலாவணியைப் பயன்படுத்துவதே சிறந்த வழியாகும். இதற்கிணங்க, மேட்டூர் அனல் மின் திட்டத்திற்குத் தேவைப்படும் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கும்படி இந்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

19. மத்திய அரசின் அனுமதி கிடைப்பதை எதிர்பார்த்து (i) சண்முகா நதி புனல் மின் திட்டம் (30 மெ. வா.), (ii) மேல் அமராவதி புனல் மின் திட்டம் (30 மெ. வா.) குறித்த தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழில் நுட்ப பொருளாதார காரணங்களினால் இத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பினும், இத்திட்டங்களுக்கான அனுமதி, காவிரி நீர்ப் பிரச்சினையுடன் தொடர்புபடுத்தப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கான நீர்கோள் பகுதி முழுவதும் தமிழ் நாட்டின் எல்லைக்குள் அமைந்திருப்பதைக் குறிப்பிட்டு, உடனடி அனுமதி வழங்க அரசு வலியுறுத்தியுள்ளது.

20. கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதல் பிரிவு, அடுத்த ஆண்டில் மின் உற்பத்தியை தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணிகளும் 630 மெகா வாட் திறனுள்ள இரண்டாவது அனல் மின் நிலையத்தை நிறுவும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. கல்பாக்கத்தில் 235 மெகா வாட் திறன் கொண்ட இரு பிரிவுகளைக் கூடுதலாக ஏற்படுத்தவேண்டும் எனவும், 210 மெகா வாட் திறன்கொண்ட இரு பிரிவுகளைக் கூடுதலாக ஏற்படுத்துவதன் மூலம் நெய்வேலியில் இரண்டாம் அனல்மின் நிலையத்தின் திறனை 630 மெகா வாட்டிலிருந்து 1,050 மெகா வாட்டுக்கு உயர்த்தவேண்டுமெனவும், திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்தில் இரண்டாம் அணுமின் நிலையம் நிறுவல் வேண்டும் எனவும் மாநில அரசு கருத்து தெரிவித்துள்ளது.

21. 1980-85 ஆம் ஆண்டுக்குரிய ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்குரிய மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்கள் தவிர, மேலும் சில திட்டங்களையும் மின்வாரியம் சேர்க்கக் கருதியுள்ளது. அத்திட்டங்கள் வருமாறு :—

	மெ. வா.
(i) வட சென்னை அனல் மின் நிலையம் ..	630,

	மெ. வா.
(ii) பேசின் பாலத்தில் தற்போதுள்ள மின் உற்பத்தி பிரிவுகளை மாற்றியமைத்தல்.	110
(iii) பார்சன் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம்	[illegible]
(iv) சோழத்தி புழா புனல் மின் திட்டம்	60
(v) பாண்டியாறு—புன்னம் புழா புனல் மின் திட்டம்	150
(vi) நெல்லித்துறை புனல் மின் திட்டம்	50
(vii) ஒகேனக்கல் புனல் மின் திட்டம்	250
(viii) நீராறு நல்லாறு புனல் மின் திட்டம்	155
(ix) நுண் நீர் மின் திட்டம் (பைகாரா, கீழ் பவானி, வைகை அனை)	16

மேற்கூறிய திட்டங்களில், ஒகேனக்கல், பாண்டியாறு, புன்னம்புழா—சோழத்தி புழா ஆகிய திட்டங்கள் மாநிலங்களுக்கிடையிலான திட்டங்களாகும். அவற்றுக்கு கருநாடக அல்லது கேரள மாநிலத்தின் இசைவைப் பெற வேண்டியுள்ளது. ஒகேனக்கல் திட்டம் பற்றி 1963 ஆம் ஆண்டு முதற்கொண்டு ஆய்வு நடைபெற்று வருகின்றது. கேரள அரசுடன் ஓர் உடன்பாடு ஏற்பட்டபோதிலும், பாண்டியாறு புன்னம் புழாத் திட்டம் 1965 முதற்கொண்டு செயலாக்கப்படாமலுள்ளது. கோயம்புத்தூர் மாவட்ட உழவர்கள், பாண்டியாறு—புன்னம் புழா நீரைக் கிழக்காகத் திருப்பி விடும்படிக் கோரிய போது, அவ்வாறு திருப்பிவிட கேரள அரசு விரும்பவில்லை. சோழத்திப்புழா புனல் மின் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கலாமெனில், இது பாண்டியாறு புன்னம்புழா திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, விரைவில் உடன்படிக்கை செய்து கொள்வதில் கண்ணும் கருத்துமாய் உள்ளது. விரைவில் உடன்பாடு ஏற்படின், மேலும் கால விரயமின்றி இத்திட்டங்கள் அனைத்தையும் விரைவில் செயல்படுத்த இயலும். இதுபற்றிக் கேரள மாநில முதலமைச்சருடன் கலந்தாலோசிக்கும் பொருட்டுத் தமிழ்நாடு மாநில முதலமைச்சர் விரைவில் திருவனந்தபுரம் செல்லவிருக்கிறார்,

22. நான் முன்னர் குறிப்பிட்டவாறு, மின் சக்தி உற்பத்திக்குத் தேவைப்படும் இயற்கைவள வாயில்கள் நம் நாட்டில் மிகவும் குறைவாகவே கிடைக்கின்றன. ஆகவே, மின் சக்தியை வேறுவழியில் பெறுவதற்கு உடனடியாக ஆவன செய்,

வேண்டியது அவசியமாகும். கடலில் 3,000 அடி ஆழத்திலுள்ள குளிர்ச்சியான நீருக்கும், மேல்பரப்பிலுள்ள வெப்பமான நீருக்கும், இடையே காணப்படும் வெப்ப வேறுபாட்டைப் பயன் படுத்தி மின்சக்தியை உற்பத்தி செய்ய இயலுமென்று முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன. இம்முறையில் மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் பரந்து பட்டதும், இயற்கைவளம் மிக்கதுமான கடற்பரப்பு தமிழ்நாட்டில் உள்ளது. தமிழ்நாட்டின் கடற்பகுதிகளில், 25 மெகாவாட் திறன்கொண்ட, கடலிலிருந்து அனல் மின்சக்தி உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றை (OTEC) நிறுவும் பொருட்டு நுணுக்க ஆய்வு நடத்துவதற்காக மின் வாரியம், மத்திய அரசுக்கு செயற்குறிப்பு ஒன்றை அனுப்பி யுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு மொத்ததையும் மத்திய அரசின் திட்ட வளர்ச்சி மற்றும் ஆராய்சிக்கான நிதி ஒதுக்கீட்டி லிருந்து மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

23. 1970-80 கால அளவில் தொடக்க ஆண்டுகளில் கிராமப் பகுதிக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டது. ஆயின் மின்சக்தி கொண்டு செல்லும் திட்டத்திற்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மின் கம்பித் தொடரில் ஏற்பட்ட மின் இழப்பு 1970—71 ஆம் ஆண்டில் 17 20 சதவீதமாக இருந்தது. 1974-75 ஆம் ஆண்டில், 21·45 சதவீதமாக அதிகரித்தது. அது முற்றுகொண்டு, இதனைச் சரிப்படுத்தும் பொருட்டு, மின்சக்தியை கொண்டு செல்லுதல்—வழங்குதல் திட்டம் முனைப்பாக மேற்கொள்ளப் பட்டது.

கடந்த ஆண்டு, 16 புதிய துணைமின் நிலையங்களும் 334 கி.மீ. தொலைவிற்குக் கூடுதல் உயரழுத்த மின் கம்பித் தொடர்களும் அமைக்கப்பட்டன. 1980—81 ஆம் ஆண்டில், 35 புதிய துணை மின் நிலையங்களும், 1,200 கி.மீ. தொலைவிற்கு கூடுதல் உயரழுத்த மின்கம்பித் தொடர்களும் அமைக்கக் கருதப் பட்டுள்ளது. மேலும் குறைந்த அளவு வோல்டேஜ் கொண்ட திருவலத்திலும், சேலத்திலும் 25 MVAR திறன் கொண்ட ஒரே காலத்தில் இயங்கத்தக்க இரு கண்டென்சர்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மின்சக்தியைக் கொண்டு செல்வதற்கு 1980 85 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில், 126 புதிய துணை மின் நிலையங் களையும், 4,500 கி.மீ. தொலைவிற்கு கூடுதல் உயரழுத்த மின்கம்பித் தொடர்களையும் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. மின் கம்பித் தொடரில் ஏற்படும் இழப்பு படிப்படியாக 18·57 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

24. புதிய திட்டங்களைச் செயலாக்குவதிலும், மின்சக்தியைக் கொண்டு செல்லுதல், வழங்குதல் திட்டங்களை நிறைவேற்று வதிலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மூலப்பொருள்கள் கிடைக்காததே புதிய திட்டங்களைச் செயலாக்குவதற்கு முக்கியத் தடையாக உள்ளது.

சிமிட்டியும் உருக்கும் நாடு முழுவதிலும் குறைவாகவே கிடைக்கப் பெறுகின்றன. அலுமினியம் குறைவாகக் கிடைப்ப தால், மின் கடத்திகளையும் புதை மின் கம்பிகளையும் வழங்கு வதில் தாமதிப்பு ஏற்படுகிறது. மின் இணைப்புக் கொடுப்பதற்குத் தேவையான குறிப்பிட்ட சில அத்தியாவசிய மின் கம்பித் தொடர் சாதனங்களும் குறைவாகவே கிடைக்கப் பெறுகின்றன. எல்லா மாநிலங்களும் மின்வளர்ச்சித் திட்டங்களைப் பெரும் அளவில் தொடங்கியதால், மின்சாதனங்கள் வழங்குவோரிடம் தேவைக் குறிப்புகள் அதிகமாகக் கொடுக்கப்படுகின்றன. இதன் விளைவாகத் தரமான சாதனங்களைக் குறிப்பிட்ட கால அளவுக்குள் வழங்க இயலவில்லை. நாட்டில் குறைவாக கிடைக்கப்பெறும் அவசிய மான நுணுக்க மிகுந்த பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

25. மின்சக்தி குறித்த திட்டச் செலவு, படிப்படியாக 1974—75 ஆம் ஆண்டில் 36.27 கோடி ரூபாயிலிருந்து 1980—81 ஆம் ஆண்டில் 176 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. அதன் விவரங்கள் வருமாறு:—

(ரூபாய் கோடியில்.)

இனம்.	1974—75 (கணக்குகள்).	1978—79 (கணக்குகள்).	1979—80 (கணக்குகள்)	1980—81 (வரவு செலவு திட்ட மதிப்பீடு).
(1)	(2)	(3)	(4)	(5)
மின் உற்பத்தி	13·61	70·03	79·78	83.75
மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல் —வழங்குதல்.	13·15	32·96	51·01	70·00
கிராமப்பகுதி மின் இணைப்புத் திட்டங்கள்.	9·35	18·00	26·30	21·50
ஏனையவை	0·16	2 53	1·58	0·40
மொத்தம் ..	36·27	123·52	158·67	175·65

[1981 ஜனவரி 31

1980-81 ஆம் ஆண்டில் மூலதனச் செலவு 176 கோடி ரூபாய். அரசிடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 75 கோடி ரூபாய் வெளி அங்காடியிலிருந்து கிடைக்கும் கடன் தொகையான 26·55 கோடி ரூபாய், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 8·47 கோடி ரூபாய், கிராமப்புற மின் இணைப்புக்கழகத்திடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 2·93 கோடி ரூபாய், ஆகியவற்றைக் கொண்டும், எஞ்சியுள்ள தொகையை வாரியத்தின் உள்நிதி வாயில்களிலிருந்தும் வணிக வங்கிகளிடமிருந்தும் பெறுவதன் மூலமும் சரிக்கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

26. மின்சார வாரியத்திற்கு 1970 ஆம் ஆண்டிலிருந்து நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இழப்பு ரூ. 24·56 கோடி ஆகும். 1980-81 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் எதிர்பார்க்கப்படும் இழப்புத் தொகை ரூ 64.77 கோடி ஆகும். இண்மைக்கால மதிப்பீட்டின்படி, எதிர்பார்க்கப்படுகின்ற இழப்பு ரூ. 105.37 கோடி ஆகும். மின் உற்பத்தி, மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல்-வழங்குதல் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிக செலவு, மின்சாரத்தைப் பயன்படுத்தும் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்குச் சலுகை வீதங்களில் மின்சாரம் வழங்குதல், கேரளம், நெய்வேலி ஆகியவற்றிடமிருந்து மின்சாரத்தை வாங்குவதில் ஏற்பட்ட அதிகச் செலவு எண்ணூர் அனல் மின் நிலையத்திடமிருந்து குறைந்தளவே மின்சக்தி கிடைப்பது போன்றவை இந்த இழப்பிற்கு முக்கிய காரணங்களாகும்.

கடந்த மூன்று ஆண்டுகளில், நிலக்கரி விலை டன் ஒன்றுக்கு (சிங்கரேணி) ரூ. 82 லிருந்து ரூ. 114 ஆகவும் (இந்திய நிலக்கரி) ரூ. 128 ஆகவும் எரி எண்ணெய் விலை கிலோ லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1,017லிருந்து ரூ.1,364 ஆகவும் (அண்மையில், இது கி. லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2,430 ஆக மேலும் உயர்ந்துள்ளது) உயர்ந்துள்ளது. கடல் வழியே நிலக்கரியைக் கொண்டு வருவதற்கான கட்டணம், டன் ஒன்றுக்கு ரூ. 99 லிருந்து ரூ. 169 ஆக உயர்ந்துள்ளது. இரயில்வே கட்டணம், 1-4-79லிருந்து 10 சதவீதமும், 15-7-1980 லிருந்து மேலும் 15 சதவீதமும் உயர்ந்துள்ளது. இந்த அதிகரிப்புச் செலவுகளினால் 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 57 கோடி, வருவாய்க் கணக்கில் கூடுதலாகச் செலவாகும்

1979-80 ஆம் ஆண்டில் சலுகை வீதங்களில் மின்சாரம் வழங்குவதால் ஏற்படுகின்ற இழப்பு, ரூ 88·70 கோடி என மதிப்பிடப்படுகிறது. இதில் வேளாண்மைப் பிரிவினருக்குச் சலுகை வீதக் கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுவதால் ஏற்படும் இழப்பு ரூ. 71·22 கோடி ஆகும். 1977-78 ஆம் ஆண்டில் கேரள அரசு வழங்கிய மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 12·5 காசாக இருந்தது. அது இப்போது யூனிட் ஒன்றுக்கு 28 காசாக உள்ளது. நெய்வேலியில் எண்ணெய் மூலம் எரியூட்டப்பட்டு

1981 ஜனவரி 31]

உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியின் விலை யூனிட் ஒன்றுக்கு 42 காசு என இருந்தது: இப்போது யூனிட் ஒன்றுக்கு 77·87 காசாகவும் ஆயத்தீர்வை உட்பட சுமார் 92 காசு/யூனிட்), பழுப்பு நிலக்கரி மூலம் எரியூட்டப்பட்டு உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியின் விலை)யூனிட் ஒன்றுக்கு 14·37 காசு ஆக இருந்து இப்போது யூனிட் ஒன்றுக்கு 19·05 காசாக அதிகரித்துள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் ஏற்படக்கூடிய கூடுதல் செலவு ரூ. 19·00 கோடி என மதிப்பிடப்படுகிறது: இதில் கேரளத்திடமிருந்து வாங்கும் மின்சாரத்திற்கான கூடுதல் செலவு ரூ. 5 கோடி ஆகும்,

27. மின் கட்டணம் 1974 அக்டோபரில் கடைசியாகப் பொதுவாகத் திருத்தியமைக்கப்பட்டது; அப்போதிலிருந்து, மின் கட்டணம் அவ்வப்போது தற்காலிகமாக உயர்த்தப்பட்டு வந்துள்ளது; அதன் விளைவாக ஆண்டொன்றுக்கு ரூ. 50·77 கோடி கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது என்றாலும், வேளாண்மைத் துறைக்குச் சலுகைகள் வழங்கிய காரணத்தால், இக்கால அளவில், வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 11.60 கோடி குறைந்தது. 1977-78 ஆம் ஆண்டில் யூனிட் ஒன்றுக்கு 26·5 காசாக இருந்த ஒட்டு மொத்த வசூல் வீதம் 1979-80-ல் 15 சதவீதம் உயர்ந்து யூனிட் ஒன்றுக்கு 30·5 காசு ஆகியது. அதே கால அளவில், மின்சார உற்பத்தி, அனுப்புகைப், பங்கீடு ஆகியவற்றுக்கான இடு பொருட்கள் செலவும் 28 சதவீதம் உயர்ந்தது மின் கட்டண அமைப்பைச் சீரமைத்து விரிவான முறையில் திருத்தியமைப்பதற்கான பரிவுரைகளைச் செய்ய வேண்டி, அரசு 1980 ஆம் ஆண்டு சூலை திங்களில் மின் கட்டண ஆய்வுக் குழு ஒன்றை அமைத்தது.

28. வருவாய் பாக்கியை வசூலிக்க மின்சார வாரியத்திற்கு மிகவும் கடினமாக உள்ளது. 31-3-1980 ஆம் ஆண்டு நிலவரப்படி ரூ. 44·07 கோடி நிலுவையாக இருந்தது. உயர் அழுத்த மின் பயனீட்டாளர்களிடம் ரூ. 15.41 கோடி நிலுவையாக உள்ளது. இத்தொகையில் 'மால்கோ' நிறுவனம் ரூ. 9.43 கோடியும் பிற மாநிலங்கள் ரூ. 2.98 கோடியும், அரசு நிறுவனங்களும் உள்ளாட்சி மன்றங்களும் ரூ. 0.96 கோடியும், தேசிய துணி ஆலை கழகத்தினால் (என்.டி.சி.) எடுத்துக் கொள்ளப்பட்ட நலிவுற்ற ஆலைகள் ரூ. 0.37 கோடியும், மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் ரூ. 1.00 கோடியும் செலுத்த வேண்டியுள்ளது. 'மால்கோ' நிறுவனத்திடமிருந்து பாக்கித் தொகையை வசூலிக்கும் விவகாரம் உயர்நீதிமன்றத்தில் முடிவடையாமல் உள்ளது. வேளாண்மைக் காரியங்கள் உட்பட, குறைவழுத்த மின் பயனீட்டாளர்களிடமிருந்து 31-3-80 ஆம் நாள் நிலவரப்படி ரூ. 28.66 கோடி வசூலாகாமல் உள்ளது. இவ்வாறு பாக்கித் தொகை சேர்ந்து கொண்டே போவது மின்சார வாரியத்தின் நிதி நிலைமையைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

29. மின்சாரத்தைப் பயன்படுத்தும் விவசாயிகளில் ஒரு பிரிவினர் மின் கட்டணத்தைச் செலுத்தவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதனால் 1977 ஆம்

ஆண்டிலிருந்தே மின் கட்டணப் பாக்கி சேர்ந்து கொண்டே இருக்கிறது. இப்பிரச்னைக்கு முடிவு காண்பதற்காக பல்வேறு விவசாயிகளின் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் 1980 ஆம் ஆண்டு நவம்பர் டிசம்பர் மாதங்களிலும், 1981 ஆம் ஆண்டு ஜனவரியிலும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. அப்பேச்சு வார்த்தைகளின் முடிவில், ஒரு மாத மின் கட்டணத்துடன் ஒரு மாத நிலுவைத் தொகையைச் சேர்த்துக் கட்டுவது என்ற வீதத்தில் விவசாயிகள் தங்களது மின் கட்டணப் பாக்கியைக் செலுத்த அனுமதிப்பது என முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவை அநேகமாக எல்லா விவசாயிகள் சங்கங்களும் வரவேற்றன. நவம்பருக்குப் பிறகு இது வரையில் ரூ. 10.38 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 1980 நவம்பரில் ரூ. 37.60 கோடியாக இருந்த வசூல் பாக்கி ரூ. 27.22 கோடியாகக் குறைந்துள்ளது. மின் கட்டணம் செலுத்தத் தவறிய வேளாண்மைப் பயனீட்டாளர்களின் எண்ணிக்கையும் 5.63 இலட்சத்திலிருந்து 1.66 இலட்சமாக குறைந்துள்ளது.

30. விவசாய மின் இணைப்புகளுக்கான மீட்டர் வாடகை (Meter rent) 1-7-1980 முதல் ரூ. 4 லிருந்து ரூ. 2 ஆகக் குறைக்கப் பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இந்தச் சலுகையின் காரணமாக வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 கோடி வருவாய் இழப்பு ஏற்படும்.

31. வாரியத்திற்கும் அதன் தொழிலாளர்களுக்கும் இடையே யான உறவு மிகவும் இணக்கமானதாய் இருந்து வருகிறது. வாரியமும் பல்வேறு தொழிற்சங்கங்களும் கலந்து பேச்சு வார்த்தைகள் நடத்தி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மனநிறைவு தருகின்ற வகையில் ஊதிய வீதங்களும் பணிச் சுமையும் உரிய காலத்தில் திருத்தியமைக்கப்பட்டன.

32. மின் தொழில் அதிக முதலீடு செய்யவேண்டிய ஒரு தொழிலாகும். மின் உற்பத்தி, அனுப்புகை, பங்கீட்டு அமைப்புகளைப் பராமரித்து சீரமைக்க பெருமளவில் பணம் தேவைப்படுகிறது. சமீபகாலத்தில் பொருள்கள், உதிரி பாகங்கள், துணைப்பாகங்கள் ஆகியவற்றின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது பெரும்பாலான வழங்கு நிறுவனங்களால் குறிப்பிட்ட நேரங்களில் பொருள்களை வழங்க முடியவில்லை இதனால், அனுப்புகைப் பங்கீட்டு அமைப்புகளைத்திறமையாக பராமரிப்பது பாதிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக பல பகுதிகளில் மின் அழுத்த மாற்றிகளின் சுமைகள் அதிகரித்துள்ளன; வோல்ட்டேஜ் குறைந்து மின் வழங்கலில் குறுக்கீடுகள் ஏற்பட்டுள்ளன.

33. மின்சக்தியை அனுப்புவதையும், பங்கீடு செய்வதையும் உரியவாறு பராமரிப்பதற்கு பழைய சாதனங்கள், பழைய மின் கடத்திகள், மின் கம்பிகள் முதலியவற்றிற்குப் பதிலாக புதியன வற்றைப் போட வேண்டியுள்ளது. நிலையான இருப்புகளின் மதிப்பு மீது சுமார் 3 சதவீத அளவில் இப்போது வகை செய்துள்ள தேய்மான சேமநிதி, இச்செலவை ஏற்பதற்குத் தேவையானப் பணி வசதிகளை உருவாக்குவதற்கு போதுமானதாக இல்லை. தேய்மானச் சேமநிதிக்கான விதிமுறை (Formula) 1948ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் 68ஆம் பிரிவில்

வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசினரால் முறைப்படுத்தப்படுகிறது. மாநில அரசுக்கு தேய்மான விதிமுறையை நிர்ணயிக்க அதிகாரம் இல்லை. மாநில அரசு, இவ்விதிமுறையை மாற்றுவதன் அவசியத்தை மத்திய அரசுக்கு தெரிவிக்க உத்தேசித்துள்ளது.

34. 1948ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின்கீழ் மாநில அரசு, வாரியத்துக்கு அவசியமான கட்டளைகளைப் பிறப்பிக்க வேண்டிய துறைகள் வரையறுக்கப்பட்டதாகும். இது ஒரு மத்தியச் சட்டமாகும். இச்சட்டம் நாடாளுமன்றத்தின் மூலமாகத்தான் திருத்த இயலும். மின்சார வாரியம், மாநிலத்தில் முக்கியமான பொது பயன்பாட்டு நிறுவனமாதலால், அது உரிய வாறும், திறம்படவும் செயல்படுவதற்கு மாநில அரசும் சட்ட மன்றமும் பொறுப்பு வகிக்கையில். மக்களுக்குத் திருப்திகரமான முறையில் பணி புரிவதற்கு இயலும் வகையில் வேண்டிய மாற்றங்களைச் செய்வதற்கு நமக்குச் சட்டப்படிக்கான அதிகாரங் கள் இல்லை. கடந்த ஆண்டில் புதுடில்லியில் நடைபெற்ற மின்சக்தி அமைச்சர்கள் மாநாட்டில் இந்நிலைமையை நான் எடுத்துக் கூறினேன். இம்முக்கியமான பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை மத்திய அரசுக்கு இந்த அரசு தெரிவிக்க இயலும்.

35. தமிழ்நாடு மின் வாரியம் 1948ஆம் ஆண்டு, மின்சார (வழங்கல்) சட்டத்தின் 5ஆம் பிரிவின்கீழ் 1957ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. மாநிலத்திற்குத் தேவையான மின்சக்தியை வழங்க ஏற்பாடு செய்வதும், மின் சக்தியைத் திறமையாகவும், சிக்கனமாகவும் அனுப்பி பங்கீடு செய்வதும் இதன் முக்கியப் பணிகளாகும். மின்சக்தியின் தேவையும், பயனும், மின்சக்திப் பிரிவின் முக்கியத்துவமும் தொடர்ந்து அதிகரித்து வருவதால், மின்வாரியம் பல்வேறு பொறுப்புகளும் சிக்கலான பிரச்சினைகளும் கொண்ட ஒரு பெரிய நிறுவனமாக வளர்ந்துள்ளது. உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மின்சக்தி அனுப்பும் முறையை வலுப் படுத்தவும், பங்கீட்டுப் பணியைச் சீரமைத்து நவீனப்படுத்தவும், பயனீட்டாளர்களுக்கு மின்சக்தியை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் வாரியத்தால் தனித்தனியாகப் போதுமான கவனம் செலுத்த இயலவில்லை. இவ்வரசு, அதிக மின் உற்பத்தி செய்வது குறித்து கணிசமான முக்கியத்துவம் அளித்துள்ளது. கூடுதலாக 1400 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் மின்சக்தி உற்பத்திக்காக 1980-85 ஐந்தாண்டுக் காலத்திற்கு ரூ. 1,022 கோடி முதலீடு ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, சமூகத்தில் வறிய விரிபினருக்கும் மின்சக்தியை வழங்க அரசு ஆர்வம் கொண்டுள்ளது. தற்போதுள்ள நிறுவன அமைப்பு முப்பதாண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு தற்போதுள்ள தேவையை ஈடு செய்வதற்குப் போதுமான அளவில் இல்லை. நிர்வாக வகையிலும், பணி வகையிலும் தனித் தனியாகக் கூடிய முறையில் இவ்வமைப்பு மீண்டும் மாற்றி யமைக்கப்பட வேண்டும். மாற்றியமைக்கப்பட வேண்டிய அமைப்பின் நடைமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

36. மின்சார வாரியம் செயல்படுகின்ற விதத்தைச் சீரமைப்பதற்கான கருத்துரைகளைத் தெரிவிக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்

உரை அடக்கம்.

மின்வெட்டு குறித்த விவரங்கள்

நாள்.	வீட்டு உபயோகம்.	உயரழுத்த மின்சாரம் தொழிற்சாலைகள்.	உயரழுத்த மின்சாரம் (வணிகம்).	குறைவழுத்த மின்சாரம் (தொழிற் சாலைகள்).	குறைவழுத்த மின்சாரம் (வணிகம்).	முக்கிய மானவை.	உயரளவு தேவை மீதான மின் வெட்டு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	சதவீதம்.	சதவீதம்.	சதவீதம்.	சதவீதம்.	சதவீதம்.	சதவீதம்.	சதவீதம்.
17–6–1972 முதல் 13–7–1972 வரை.	மின்வெட்டு இல்லை.	தொடர்ச்சி 15 தொடர்ச்சியற்ற 25	25	மின் வெட்டு இல்லை.	மின் வெட்டு இல்லை.	மின் வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.
14–7–1972 ..	மின்வெட்டு நீக்கப் பட்டது.		(மின்வெட்டு நீக்கப்பட்டது)				
1–10–1972 முதல் 31–1–1973 வரை.	25 சதவீதம் (திங்கள் ஒன்றுக்கு 1000 யூனிட்டுகளுக்கு மேல்).	தொடர்ச்சி 15 தொடர்ச்சியற்ற 25	25	25	25	மின் வெட்டு இல்லை.	(1971 செப் டம்பருக்கும் 1972 செப் டம்பருக்கு மிடையே மிக உயர் நிலை
1–2–1973 முதல் 14–2–1973 வரை.	25 சதவீதம் (திங்கள் ஒன்றுக்கு 100 யூனிட்டுகளுக்கு மேல்).	தொடர்ச்சி 25 தொடர்ச்சியற்ற 40	25	25	25	மின்வெட்டு இல்லை.	ஷை
15–2–1973 முதல் 18–6–1973 வரை	25 சதவீதம் (100 யூனிட்டுகளுக்கு மேல்: உச்சவரம்பு 150 யூனிட்டுகள்).	தொடர்ச்சி 25 தொடர்ச்சியற்ற	50	75	25	15	30
19–6–1973 முதல் 7–7–1973 வரை.	25 சதவீதம்	50	50	50	25	10	30
8–7–1973 முதல் 16–7–1973 வரை.	25 சதவீதம்	25	25	25	25	20	20
17–7–1973 ..	மின்வெட்டு நீக்கப் பட்டது.	..	(மின்வெட்டு நீக்கப்பட்டது)				
1–10–1973 முதல் 31–3–1974 வரை.	மின்வெட்டு இல்லை (150 யூனிட்டு களுக்கு மேல் இரு மடங்கு கட்டணம்).	15	15	15	15	10	1—9—1971 இலிருந்துமிக உயர்நிலை.
1–4–1974 முதல் 7–5–1974 வரை.	..	30	30	30	30	30	15
8–5–1974 முதல் 31–5–1974 வரை.	..	60	60	60	60	15	15
1–6–1974 முதல் 4–8–1974 வரை.	..	60	60	60	60	15	40
5–8–1974 முதல் 11–8–1974 வரை.	..	40	40	40	40	15	15
12–8–1974 முதல் 26–8–1974 வரை.	..	40	40	40	40	15	15
27–8–1974 ..	மின்வெட்டு நீக்கப்பட்டது.		(மின்வெட்டு நீக்கப்பட்டது)				

மின்வெட்டு குறித்த விவரங்கள்.

நாள்.		வீட்டு உபயோகம்.	உயரழுத்த மின்சரரம் தொழிற்சாலைகள்	உயரழுத்த மின்சாரம் (வணிகம்).	குறைவழுத்த மின்சாரம் (தொழிற் சாலைகள்).	குறைவழுத்த மின்சாரம் (வணிகம்).	முக்கிய மானவை.	உயரளவு தேவை மீதான மின் வெட்டு.
(1)		(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
		(சதவீதத்தில்.)						
1–12–1974 8–1–1975	முதல் வரை.	மின்வெட்டு இல்லை (250 யூனிட்டுகளுக்கு மேல் அபராதத் தொகை வீதத்தில் கட்டணம் விதிக்கப் பட்டது.)	40	40	40	40	15	முக்கிய மானவை 15 சதவீதம் ஏனையவை. 30
9–1–1975 3–4–1975	முதல் வரை.	ஷை	60	60	60	60	25	முக்கிய மானவை 20 ஏனையவை 40
4–4–1975 16–5–1975	முதல் வரை.	மாதத்திற்கு 200 யூனிட்டுகளுக்கு மேல் 40 சதவீதம் (18–3–1975 லிருந்து)	75	75	75	75	பணி 25 தொழிற் சாலை 40	,,
17–5–1975 31–5–1975	முதல் வரை.	,,	60	60	60 (7–5–1975 இலிருந்து).	60	பணி 20 25தொழிற் சாலை 30	ஷை
1–6–1975 24–6–1975	முதல் வரை.	மாதத்துக்கு 250 யூனிட்டுகளுக்கு மேல் 40.	40	40	40 (15–6–1975 இலிருந்து 25).	40	பணி 15 தொழிற் சாலை பணி.	முக்கியமான பணி 15 முக்கியமான தொழிற் சாலை பணி. 20 ஏனையவை 30
25–6–1975				மின்வெட்டு நீக்கப்பட்டது.				
29–7–1976 3–4–1977	முதல் வரை.	மின்வெட்டு இல்லை.	முன்னுரிமை 25 ஏனையவை 30	30	39 (24–11–1976 இலிருந்து 15).	30	பணி 25 செய்தித் தாள் 25	முக்கிய பணிகள் செய்தித் தாள்கள் 20 முன்னுரிமைத் தொழிற் சாலை. 20 ஏனையவை 40
4–4–1977 30–4–1977	முதல் வரை.	மின்வெட்டு இல்லை.	முன்னுரிமை 40 ஏனையவை 40	40	25	30	பணி 30 செய்தித் தாள் 30	முக்கியமான பணிகள் செய்தித் தாள்கள். 30 முன்னுரிமைத் தொழிற் சாலை 30 ஏனையவை 40

(சதவீதத்தில்)

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1–5–1977 முதல் 24–5–1977 வரை.	மின்வெட்டு இல்லை.	முன்னுரிமை 50 ஏனையவை 50	50	25	30 139	பணி 30 செய்தித் தாள் 25	முக்கிய பணிகள் 30
25–5–1977 முதல் 31–5–1977 வரை.	மின்வெட்டு இல்லை.	முன்னுரிமை 25 ஏனையவை 30	50	25	30	பணி 30 செய்தித் தாள்	முக்கிய பணிகள் 30 முன்னுரிமைத் தொழிற் சாலை 30 25 செய்தித் தாள்கள். 20 ஏனையவை 40
1–6–1977 முதல் 30–6–1977 வரை.	மின்வெட்டு இல்லை.	முன்னுரிமை 25 ஏனையவை 30	35	25	30	பணு 25 செய்தித் தாள் 25	முன்னுரிமைத் தொழிற் சாலை 20 முக்கிய பணிகள். 20 செய்தித் தாள்கள் 20 ஏனையவை 40
1–7–1977			30	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	முன்னுரிமைத் தொழிற் சாலை 20 ஏனையவை 40
27–3–1779	மின்வெட்டு இல்லை.	முன்னுரிமை ஏனையவை	மின்வெட்டு நீக்கப்பட்டது.				
27–6–79 ..			மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	தொடர்ந்து இயங்கும் தொழிற் சாலை 15 தொடர்ச்சியின்றி இயங்கும் தொழிற் சாலை 30
5–12–1979	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு நீக்கப்பட்டது.				
			மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	ஷ

நாள்.	வீட்டு உபயோகம்.	உயிரழுத்த மின்சாரம் தொழிற் சாலைகளு	(4)	(5)	(6)	(7)	(8)
(1)	(2)	(3)					
28–1–1980	மின்வெட்டு இல்லை.	தொடர்ச்சி 15 சதவீதம் தொடர்ச்சியற்ற 25 சதவீதம்.	பொதுக் காரிய மின் கட்டணம்) 15 சதவீதம்	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	உயர் அழுத்த மின்சாரம் தொடர்ந்து இயங்கும் தொழிற் சாலைகள் 30 சதவீதம். உயர் அழுத்த மின்சாரம் தொடர்ச்சி யின்றி இயங்கும் தொழிற் சாலைகள் 40 சதவீதம். உயர் அழுத்த மின்சாரம் பொதுக் காரியம் (மின் கட்டணம்—) 20 சதவீதம்.
1–3–1980	மின்வெட்டு இல்லை.	தொடர்ச்சி 30 சதவீதம் தொடர்ச்சியற்ற 60 சதவீதம்.	பொதுக் காரிய (மின் கட்டணம் 30 சத விகிதம்)				
7–7–1980	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	உயர் அழுத்த மின்சாரம் தொடர்ந்து இயங்கும் தொழிற் சாலைகள் 20 சதவீதம். உயர் அழுத்த மின்சாரம் தொடர்ச்சி யின்றிஇயங்கும் தொழிற் சாலைகள் 20 சதவீதம். உயர் அழுத்த மின்கட்டணம் –5 20 சதவீதம்.

நாள். (1)	வீட்டு உபயோகம் (2)	உயர் அழுத்த மின்சாரம் அதுழிற்சாலைகள். (3)	(4) தேவைப்படும் மின்சார	(5) அளவின் மீதான	(6) வெட்டு	(7)	(8) நீக்கப்பட்டது.
17—7—1980	மின்வெட்டு இல்லை.	தொடர்ச்சி 30 சதவீதம்.	மின்வெட்டு இல்லை.	75 பரித் திறனும் அதற்கு மேலும் சேர்க்கப் பட்ட மின்சக்தி கொண்ட தொழிற் சாலைகளுக்கு 30 சதவீதம்.	மின்வெட்டு இல்லை.	மின்வெட்டு இல்லை.	உயர் அழுத்த மின்சாரம் தொடர்ந்து இயங்கும் தொழிற் சாலைகள் 30 சதவீதம்.
1 12—1980		தொடர்ச்சியற்ற.					உயர் அழுத்த மின்சாரம் தொடர்ச்சியின்றி இயங்கும் தொழிற் சாலைகள் 30 சதவீதம்.

உரை அடக்கம்

விவரங்கள்.	முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31-ம் தேதி).	திட்டக் காலங்களில் முதலாவது திட்டம். 1951-56.	இரண்டாவது திட்டம். 1956-61.	தமிழ்நாட்டின் மின் வளர்ச்சி மூன்றாவது திட்டம். 1961–66.	வருடாந்திர திட்டம். 1966–69 மூன்று ஆண்டுகள்.	நான்காவது திட்டம். (1969–74)	ஐந்தாவது திட்டம். 1974–78.	1979–80 தோராயமாக.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
அ. மின் உற்பத்தி—								
1. நிறுவப்பட்ட திறனளவு (மெகாவாட்டுகளில்).	156	256	571	1,070+	1,070+	1,654+	1,824+	2,119+
2. மின் உச்சத் தேவை (மெகாவாட்டுகளில்).	110	172	381	* 300	*400	*600	*600	*600
3. உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரமும் வாங்கப்பட்ட மின்சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்).	630	1,053	2,214	717	997	1,207	1,641	1,710
இ. மின் அனுப்புதலும் வினியோகித்தலும்—								
1. கூடுதல் உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்).	6,936	11,479	24,194	4,041	5,260	6,948	9,453	10,414
2. குறைவு அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்).	5,728	13,055	35,352	39,806	48,336	68,737	72,689	77,126
3. கூடுதல் உயர் அழுத்தத் துணை நிலையங்கள்.	31	48	70	73,198	1,04,977	1,97,017	2,22,659	2,49,266
4. உயர் அழுத்தத் துணை நிலையங்கள்.	25	41	73	98	119	146	174	192
5. மின் பங்கீட்டு நிலையங்கள்.	1,591	3,773	10,004	103	114	125	150	163
6. மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சத்தில்).	2.5	4.5	[illegible]	17,360	22,842	37,453	43,666	48,595
7. நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு (யூனிட்டுகளில்).	12	[illegible]	[illegible]	13.6	18.22	27.07	34.00	38.35
				92	117	127	157	175

விவரங்கள்	முதலாவது திட்டத்திற்கு முன்பு 1951 மார்ச் திங்கள் 31-ம் தேதி.	உரை அடக்கம் திட்டக்காலங்களில் முதலாவது திட்டம் 1951-56.	இரண்டாவது திட்டம் 1956-61	தமிழ்நாட்டின் மின் வளர்ச்சி மூன்றாவது திட்டம் 1961-66.	வருடாந்திர திட்டம் (1966-69) மூன்று ஆண்டுகள்	நான்காவது திட்டம் 1969-74.	ஐந்தாவது திட்டம் 1974-78	1979–80 தோராயமாக.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
உ. கிராம மின்வசதி—								
1. மின் வசதி அளிக்கப்பட்ட நகரங்கள் கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை.	1,813	3,543	18,760	22,137	31,727	61,072	63,339	63,428
2. மின் வசதி அளிக்கப்பட்ட அரிசன குடியிருப்புகளின் எண்ணிக்கை.	..	..	..	..	6,280	23,768	24,797	25,653
3. மின் வசதி அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை.	14,373	32,440	1,17,695	2,56,594	4,10,119	6,81,205	8,05,616	8,87,227
எ. செலவும் வருவாயும்—								
1. மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்).	23.82	54.02	133.21	293.28	356.07	552.20	799.09	1,048,45
2. மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்).	3.12	5.94	15.82	34.67	50.22	114.28	223.14	245.12

உரை அடக்கம்

திட்டகால செலவு.

(ரூபாய் கோடியில்)

திட்டத்தின் பெயர்.	ஏற்பட்ட செலவு. 1976–77	1977–78	1978–79	1979–80	1980–81-ம் ஆண்டுக்கான மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. உற்பத்தி—					
அ. முடிவுற்ற திட்டங்கள்(8)*	2.69	2.84	0.21	0.18	0·18
இ. தொடர்ந்துவரும் திட்டங்கள்—					
1. மேல்கொடுமணாறு 1-ம் நிலை மேல்கொடுமணாறு 2-ம் நிலை	0.22	0.26	0.22	0.32	0.17
2. கருளியாறு	3.64	5.16	3.24	1.61	0.99
3. சேர்வலாறு	0.13	0.43	1.05	1.41	3.16
4. காதம்பாறை	—0.88	0.42	12.19	14.52	14.72
5. பாண்டியாறு—புன்னம்புழா	1.15	—0.20	—0.13	—0.25	..
6. நெல்லித்துறை . ..	..	—0.03	—0.01	..	..
7. தூத்துக்குடி அனல்மின் திட்டம் 1-ம் நிலை	34.28	42.81	36.34	29.85	15.20
8. தூத்துக்குடி அனல் மின் திட்டம் 2-ம் நிலை	..	4.07	15.44	28.97	24.70
9. கீழ் மேட்டூர்	..	..	0.06	3.17	19.68
10. மேட்டூர் அனல்மின் திட்டம்	..	..	..	..	4,90
உ. மேம்பாடு திட்டங்கள் — ..					
11. எண்ணூர் மேம்பாடு திட்டம்	..	0.69	0.95	..	..
12. பேசின்பிரிட்ஜ் மேம்பாடு திட்டம்	..	0.05	0.47	..	..

எ. புதிய திட்டங்கள்—					
13. மேல் அமராவதி	..	..	..	..	2.50
14. சண்முகா நதி	..	..	..	..	2.50
15. வடசென்னை அனல்மின் திட்டம்	..	..	..	..	0.10
மொத்த உற்பத்தி (அ முதல் எ முடிய)	44.33	55.90	70.03	79.78	83.75

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
II. மின் அனுப்புதல் பங்கீடு செய்தல்.	18.03	19.75	32.96	51.01	70.00
III. கிராம மின்வசதி	17.86	13.74	18.00	26.30	21.50
IV. மின் நிறுவனங்களைக் கையகப்படுத்துதல்.	..	0.01	2.24	1.31	
V. புதிய திட்டங்கள் குறித்து ஆய்வு.	0.19	0.20	0.25	0.23	0.30
VI. மின்சக்தி குறித்து ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி.	0.04	0.04	0.04	0.04	0.10
நிகர மொத்தம்	75.45	89.64	123.52	158.67	175.65

*குந்தா நீர்மின் திட்டம் 3-ம் நிலை, 2. பரம்பிக்குளம் ஆளியாறு, 3. கோதையாறு, 14. சென்னை அனல்மின் திட்டம் விரிவாக்குதல், 5. எண்ணூர் அனல்மின் நிலையம் 6. எண்ணூர் அனல்மின் நிலையம் விஸ்தரிப்பு, 7. குந்தா 4—ம் நிலை, 8. நடுவட்டம் திருப்புதல் திட்டம்.

வரைவு 6-வது திட்டச் (1980-85) செயற் குறிப்புகள் (மின்சாரம்)

மின் திட்டங்கள்.	இடம் (மாவட்டம்)	பயன் மெ.வா. எம்.யூ.	மதிப்பிடப் பட்டுள்ள செலவு (கோடி ரூபாய்)	இலக்கு ஆண்டு	6-வது திட்டத்தில் கிடைக்கும் பயன்கள்	6-வது திட்டத்திற்கு அப்பால் கிடைக்கும் பயன்கள் மெ.வா.எம்.யூ.	6-வது திட்டத்தில் ஒதுக்கீட்டின் மதிப்பீடு (80-85).	கருத்துரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1. உற்பத்தி	..	..	..	..	—	..	4.17	..
அ. முடிவுற்ற திட்டங்கள்	..	..	..				..	
இ. ஒப்புதல் பெற்று மற்றும் நடைபெறும் திட்டங்கள்.								
1. எண்ணூர் அனல் மின் நிலையம் மேம்பாடு திட்டம்.	செங்கல்பட்டு		18.04		..	..	18.04	திருப்திகரமான செயல் திறன் எதிர் பார்க்கப் படுகிறது.
2. பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலைய மேம் பாடு திட்டம்.	சென்னை		0.80		..	..	0.80	திருப்திகரமான செயல்திறன் எதிர் பார்க்கப்படுகிறது.
3. தூத்துக்குடி அனல் மின் நிலையம் 1-ம் நிலை.	திருநெல்வேலி	420/2,200	178.00	80-81	210/1,100	..	17.93	210 மெகாவாட் முதல் பிரிவு 7/79-ல் துவக்கப் பட்டது.
4. 2-ம்நிலை	..	210/1,100	85.00	81-82	210/1,100	..	36.53	....
5. சுருளியாறு (நீ)	மதுரை	35/114	26.62				3.36	8/78-ல் துவக்கப் பட்டது. நிலுவை யிலுள்ள பணி களுக்கு ஒதுக்கீடு.
6. மேல்கொடுமண்டு மற்றும் லோன் பள்ளத்தாக்கு திருப் புதல் 1 மற்றும் 2-ம் நிலைகள் (நீ)	நீலகிரி	27 (11×16)	1.48	80-81	..|16	..	0.39	முதல் நிலை 77-ல் முடிக்கப்பட்டது. 2-ம் நிலை 5/80-ல் முடிக்கப்பட்டது.
7. சேர்வலாறு (நீ)	திருநெல் வேலி	20/75	21.57	83-84	20/75	..	16.43	....
8. காதம்பாறை (நீ)	கோயம் புத்தூர்	400/79	103.39	83-84	400/79	..	71.41	....
9. பாண்டியாறு-புன்னம்புழா (நீ)	நீலகிரி	..150/391	100.00	86-87	..	150/391	69.09	கேரள மாநிலத்தின் ஒப்புதல் எதிர் பார்க்கப் படு கிறது.
10. நெல்லித்துறை (நீ) ..	கோயம் புத்தூர்	50/109	20.77	86-87	..	50/109	19.65	ஷை
11. கீழ்மேட்டூர் (நீ)	சேலம் பெரியார்	130/537	[illegible]	83-84	90/134	30/403	86.02	....

வரைவு 6—வது திட்டச் (1980–85) செயற் குறிப்புகள் (மின்சாரம்).

மின் திட்டங்கள்.	இடம் (மாவட்டம்)	பயன் மெ.வா. எம்.யூ.	மதிப்பிடப் பட்டுள்ள (கோடி ரூபாய்)	இலக்கு ஆண்டு	6-வது திட்டத்தில் கிடைக்கும் பயன்கள்.	6-வது திட்டத்திற்கு அப்பால் கிடைக்கும் பயன்கள் மெ.வா.எம்.யூ.	6-வது திட்டத்தில் ஒதுக்கீட்டின் மதிப்பீடு (80–85)	கருத்துரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
12. குந்தா 5-ம் நிலை கூடுதல் திட்டம் (நீ) ..	நீலகிரி	20/36	5.03	84–85	20/36	..	5.03	....
13. மேட்டூர் அனல் மின் திட்டம்	சேலம்	420/2,247	189.70	84–85	210/1,123	210/1,124	161.30	..
பகுதி மொத்தம் (அ+இ) ..		1,845/6,915	840.11		1,160/3932	440/1,758	510.15	..
உ. ஒப்புதல் எதிர்பார்த்து எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்கள் :								
1. மேல் அமராவதி (நீ) ..	மதுரை	30/104	18.78	85–86	..	30/104	15.36	..
2. சண்முகாநதி (நீ) ..	மதுரை	30/125	20.51	85–86	..	30/125	20.09	..
3. பார்சன் பள்ளத் தாக்கு (நீ) ..	நீலகிரி	30/53	11.56	85–86	..	30/53	10.50	..
பகுதி மொத்தம் (உ) ..		90/282	47.85		..	90/282	45.95	..
எ. புதிய திட்டங்கள்.								
1. வட சென்னை அனல் மின் நிலையம். ..	செங்கல் பட்டு	630/3,370	273.37	89–90	..	630/3,370	..	திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது
2. பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் (மாற்றம்) ..	சென்னை	110/550	53.56	86–87	..	110/510	41·33	மத்திய மின் சக்திக் குழு மற்றும் திட்டக்குழுவின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.
3. சோழாத்திப்புழா (நீ)**	நீலகிரி	60/225	23.40	86–87. ..		60/225	20.00	ஷை
4. சின்னார்—சித்தார் திருப்புதல் திட்டம் (நீ). ..	கோயம் புத்தூர்	../19	1.15	83–84	../19	..	1.15	ஷை
5. பைக்காரா (மிகச் சிறிய நீர் மின் திட்டம்,) ..	நீலகிரி	2/10	1.5	85–86	..	2/10	1.30	ஷை
6. கிழ் பவானி (மிகச் சிறிய நீர் மின் திட்டம்). ..	கோயம் புத்தூர்	8/39	5.78	85–86	..	8/39	5.00	ஷை
7. வைகை அணை (மிகச்சிறிய நீர் மின் திட்டம்). ..	மதுரை	6/24	3.76	85–86	..	6/24	3.20	ஷை
8, ஹொகனேக்கல் (நீ)**	தர்மபுரி	250/864	75.00	85–86 ..	..	250/304	22.50	மத்திய நீர் மின் திட்டக் கழகத்தினால் செயல்படுத்த ஆலோசனை உள்ளது

வரைவு 6-வது திட்டச் (1980-85) மதிப்பிடப் பட்டுள்ள செலவு (கோடி ரூபாய்)

மின் திட்டங்கள்.	இடம் (மாவட்டம்)	பயன் மெ.வா. எம்.யூ.	
(1)	(2)	(3)	(4)
ஐ. முன் நடவடிக்கை— ..			
1. நீரார் நல்லார் (நீ).. மாக்கடல் வெப்ப சக்தி மின்சக்தி மற்றும் இதர திட்டங்கள்.	கோயம் புத்தூர்	155/373	18.33
பகுதி மொத்தம் (எ+ஐ) ..		1221/5474	455.86
மொத்த உற்பத்தி.. (அ முதல் ஐ முடிய).		3156/12671	1,343.82
ஓ. மத்திய அரசு திட்டம்—			
1. கல்பாக்கம் அணு .. மின் திட்டம்	செங்கல் பட்டு	470/2600	..
2. நெய்வேலி 2 ஆவது.. சுரங்கம்	தென் ஆற்கர்டு	630/2700	..
பகுதி மொத்தம் (ஓ)		1100/5300	
மொத்தம் (அ .. முதல் ஓ முடிய)		4256/17971	1,343.82
(II) மின் அனுப்புதல் .. பங்கீடு செய்தல்.	..	..	..
(III) கிராம மின் வசதி..	..	..	..
(IV) மற்றவை			
(அ) புதிய திட்டங் கள் குறித்த ஆய்வு.	..	..	..
(ஆ) மின் சக்தி குறித்து ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகள்	..	..	..
பகுதி மொத்தம் IV			..
நிகர மொத்தம் IV முதல் 5 முடிய).		... 4256/17,971	1343.82

(நீர் மின் திட்டங்கள்.

* தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு.

** செலவும் பயனும், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் பகிர்ந்து கொள்ளும்.

உ-யில் உள்ள வட சென்னை அனல் மின் நிலையத்திற்காக முன் நடவடிக்கை ஐ-யில் உள்ள முதல் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும்.

செயற் இலக்கு ஆண்டு.	குறிப்புகள் 6-வது திட்டத்தில் கிடைக்கும் பயன்கள்,	(மின்சாரம்). 6-வது திட்டத்திற்கு அப்பால் கிடைக்கும் பயன்கள். மெ.வா. எம்.யூ.	6-வது திட்டத்தில் ஒதுக்கீட்டின் மதிப்பீடு (80-85).	கருத்துரை.
(5)	(6)	(7)	(8)	(9)
..	..	155/373	80.00	திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டு வருகிறது.
.. ..	19	1221/5455	174.48	....
..	1160/3951	1751/7495	730.58	....
1981-82	470/2600	..	—	—..
1984-82	630/*2700	..	..	....
..	1100/5300	..	..	....
..	2260/9251	1751/7495	730.58	....
..	..	..	407.00	....
.	..	..	170.00	....
..	..	..	1.56	....
..	..	..	..	....
..	..	..	9.00	....
..	..	..	10.56	....
..	2260/9251	1751/7495	1,318.14	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1981 பிப்ரவரி 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு ந. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு."

பொருத்தமான நல்ல சொற்களைப் பயன்படுத்துவதால் நன்மையும், தவறான சொற்களைப் பயன்படுத்துவதால் தீமையும் உண்டாகும். எனவே நாம் சொல்லுகின்ற சொற்களில் தவறு நேராமல் ஒருவர் காத்துக்கொள்ள வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிடப்பட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 141-ம், 142-ம் அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப் பெறுகின்றன.

பகுதி நேர ஆசிரியர் பதவிகள்

*வினா எண். 143: திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பகுதிநேர ஆசிரியர்கள் பதவிகளை முழு நேர ஆசிரியர் பதவிகளாக மாற்றுவது பற்றி என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: பகுதி நேர ஆசிரியர்கள் பதவிகளை முழு நேர ஆசிரியர் பதவிகளாக மாற்றுவது குறித்து கருத்து ஏதும் தற்போது இல்லை.

திரு. குமரி அனந்தன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்போது முழுநேர ஆசிரியர்களாக்குகின்ற குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் கைத்தொழில் ஆசிரியர்கள், குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற ஒரே ஆசிரியர் மூன்று பள்ளிகளுக்குச் செல்லுகின்ற நிலையும் 400 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கப்படுவார் என்ற நிலையும் இருக்கின்ற காரணத்தினாலே ஆசிரியர் பெருமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகிறார்கள்; ஒரு ஆசிரியர் 12 மைல்களுக்கு மேல் நடக்க வேண்டிய நிலை இருக்கிறது. நிரந்தர ஆசிரியர்கள் என்ற சலுகை இருந்தால் அவர்களுக்கு இந்தக் குறை நீங்கும் என்பதலே அவர்கள் நன்மையைக் கருதி அரசாங்கம் மறுபரிசீலனை செய்து, அவர்களை நிரந்தரமாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பகுதி நேர ஆசிரியர்கள் என்ற கேள்வி பொதுவாக இருப்பதால், இதிலே கல்லூரி ஆசிரியர்கள் கூட இருந்து கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் தேவையாக இருப்பதால் வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது குறிப்பாக கைத்தொழில் ஆசிரியர்களைப் பற்றிக் கேட்கிறார்கள். அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. குமரி அனந்தன்: தலைவரவர்களே, கைத்தொழில் ஆசிரியர்களைப் பற்றி பரிசீலிக்கும் என்று சொன்ன அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்து, 400 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று சொல்லுகின்ற அந்த எல்லைக் கோட்டை அப்புறப்படுத்தினால் எல்லா ஆசிரியர்களும் நிரந்தரமாக்கப்படுவதுடன் மேலும் பல ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்; ஆகையினாலே அந்த எல்லைக்கோட்டை அரசு மாற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்தக் கைத்தொழில் ஆசிரியர்கள் பிரச்சனையை அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

திரு திரா. கருப்பையா: தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் பட்டப்படிப்பு படித்த ஆசிரியர்கள் பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். அவர்கள் தொடர்ந்து பல்லாண்டுகளாகப் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களை முழு நேர ஆசிரியர்களாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் கல்விக்காக பகுதி நேர ஆசிரியர்களை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அது தேவை என்று கருதித் தான் வைத்திருக்கிறோம். முழு நேர ஆசிரியர்களைப்

போடுகின்ற சூழ்நிலையில் பேசுவோம் என்றாலும் பகுதி நேர ஆசிரியர்கள் கண்டிப்பாகத் தேவைப்படுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பாங்கிங் பாடப் பிரிவைப் பொறுத்தவரையில் ஒரு முழு நேர ஆசிரியரை நியமிப்பதை விட அந்தப் பகுதியிலே இருக்கிற பாங்கிலே உத்தியோகம் பார்க்கின்ற அதிகாரி ஒருவர் வந்து சொல்லித் தருகின்ற நிலை இருந்தால் அந்தப் படிப்பு தரமானதாக இருக்கும்: காலத்திற்கு ஏற்றதாக இருக்கும். ஆகவே, அந்தமாதிரி பாடத்திற்கு பகுதி நேர ஆசிரியர் தேவை என்று வைத்திருக்கிறோம்.

திரு. நி. க. நல்லப்பன்: தலைவரவர்களே, இந்தப் பகுதி நேர ஆசிரியர்கள் எந்தெந்த தொழில் படிப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழில் கல்வியைப் பொருத்த மட்டில் இந்தப் பகுதி நேர ஆசிரியர்கள் என்ற ஒரு பிரிவை வைத்து நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். பல இடங்களிலே இது நல்ல பலனைத் தந்துகொண்டிருக்கிறது. ஆகவேதான் அந்தத் தொழில் பாடங்களை நாம் அந்த அடிப்படையில் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற அளவிலே விவரத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

போளூர் பகுதியில் பொறியியல் தொழிற் கல்விப் பள்ளி.

*வினா எண். 144 திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர் பகுதியில் பொறியியல் தொழிற்கல்வி பள்ளி (பாலிடெக்னிக்) ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்காக, எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு செ. அரங்கநாயகம்.— (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பி. கண்ணாம்: பேரவைத் தலைவரவர்களே, போளூர், ஆரணி, கலசப்பாக்கம் போன்ற ஊர்களிலிருந்து ஏறக்குறைய 35 மைல்களுக்கு எந்தவிதமான கல்லூரிகளோ தொழில் பயிற்சி நிலையங்களோ இல்லை. ஆகவே அது பற்றி இந்த அரசு பரிசீலிக்க முன்வருமா?

[1981 பிப்ரவரி 2

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவரவர்களே, இப்போது புதுக்கோட்டை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பாலிடெக்னிக் இல்லை என்ற காரணத்தால் அங்கே பாலிடெக்னிக்கை ஏற்படுத்த வேண்டும் என்று அரசு முடிவு எடுத்திருக்கின்றது. ஆகவே அந்த இரண்டு மாவட்டங்களிலும் பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்பட்ட பிறகு மற்ற இடங்களிலே யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, முந்தைய சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் விளாத்திகுளம் பகுதியில் பாலிடெக்னிக் ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அமைச்சரவர்களும் அதனைப் பரிசீலனை செய்வதாகப் பதில் அளித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போளூரில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்படுமா என்பது பற்றிய கேள்வி இது, ஆகவே ஒவ்வொரு இடமாகக் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, அடுத்த ஆண்டாவது தமிழ்நாட்டிலே எங்கெங்கு பாலிடெக்னிக் தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, முந்திய கேள்விக்குச் சொன்ன பதிலைத்தான் நான் இதற்கும் சொல்ல விரும்புகிறேன். புதுக்கோட்டை; நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்பட்ட பிறகு தான் மற்றவை பற்றி பரிசீலிக்கப்படும்.

மதுரை சட்டக் கல்லூரியில் சட்டமேற்படிப்பு.

*வினா எண் 145: திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை சட்டக்கல்லூரியில் சட்டமேற்படிப்பு (எம். எல்) ஆரம்பிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:- (அ) ஆம். மதுரை சட்டக் கல்லூரியில் சட்டமேற்படிப்பில் (எம். எல்.) தொழிலுறவைச் சட்டம் என்னும் பிரிவு ஆரம்பிக்க திட்டம் உள்ளது.

(ஆ) மேற்கூறிய சட்டமேற்படிப்பு (எம். எல்.) 1980-81 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்படும்.

1981 பிப்ரவரி 2]

திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, மதுரை சட்டக் கல்லூரியில் எம். எல். படிப்பு ஆரம்பிக்க அரசு முடிவு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். அங்கே ஏற்கெனவே இருக்கின்ற சட்டக் கல்லூரியின் ஹாஸ்டலுக்கு சொந்தக் கட்டிடம் இல்லை. ஆகவே அதையும் உடனடியாகச் செய்து தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, எம் எல். படிப்புக்கு எவ்வளவு பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்? மேலும் இவர்கள் படித்து முடித்த பிறகு மற்றவர்களைப் போல வேலை கேட்டு அரசிடம் முறையீடு செய்வதில்லை தாங்கள் கற்ற அறிவைக் கொண்டு தாங்களே முன்னேறுகிறார்கள். ஆதலால் அந்த மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முடிவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது பற்றிய முழு விவரமும் இப்போது என்னிடம் இல்லை. எந்த அளவுக்கு மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்கின்ற பொறுப்பு அரசுக்கு உண்டு. ஆனால் அதிகமான அளவுக்கு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்ற நிலையில் இந்த மாதிரி பட்டமேற்படிப்புகளை நாம் கருதக் கூடாது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அமைச்சரவர்கள் எம். எல். படிப்புக்கு மதுரையைத் தேர்ந்தெடுத்தது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இது வரவேற்கத்தக்கது. ஆனால் இந்த நிலையில் உயர்நீதிமன்றத்தின் பிரிவு ஒன்றும் மதுரையில் இருந்தால் இந்த எம். எல். பட்டப்படிப்புக்கு பல வகையிலே உதவியாக இருக்கும். ஆகவே அதற்குரிய செயற்குறிப்பை அரசு வைத்துக் கொண்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது கல்வித் துறையின் கீழ் வருவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிய உணவுக்குத் தரப்படும் மானியம்.

*வினா எண். 146 திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதிய உணவு திட்டத்தின் கீழ் அரசு செலுத்துகின்ற 15 பைசாவும் நகராட்சிகள் வழங்குகின்ற 5 பைசாவும் ஒரு மாணவனுக்கு அல்லது மாணவிக்கு கொடுக்கப்படுவது அதிகரிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

[1981 பிப்ரவரி 2

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. ஏ. சங்குல் ஹமீது: தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் தென்காசி நகராட்சிப்பகுதியில் ஏறக்குறைய இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மதிய உணவு சீராக வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் பத்து வருடங்களுக்கு முன்பு தற்போதிருக்கின்ற 0-15 பைசா, 0-5 ஆக 20 பைசா என்பதாக நிர்ணயிக்கப்பட்டது. தற்போது இருக்கின்ற மிகுந்த விலையேற்றத்தின் காரணமாக இவ்வாறு கொடுக்கப்படுகின்ற தொகை காணாது. ஆகவே இதனைக் கூடுதலாகத் தருவதற்கு அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, "கேர்" நிறுவனத்தாரின் உதவியோடு இந்த மதிய உணவுத் திட்டம் நடைபெற்று வருகிறது. அதை உணவுப்பண்டங்களாகவே தந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நாம் அதை அதிகரிக்கும் உத்தேசம் இல்லை என்ற விவரங்கள்தான் என்னிடம் இருக்கிறது.

[முற்பகல் 9—10]

திரு. எஸ். எஸ். வி. சித்தன்: இந்த மதிய உணவுத் திட்டம் மறைந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு ஆசிய ஜோதி பண்டிட் நேரு அவர்களால் பல்வேறு சமயங்களில் பாராட்டப்பட்ட நல்லதொரு திட்டம். ஆகவே இப்படி 15 காசு, 5 காசு என்று கொடுப்பதைக் கொண்டு நிச்சயமாக பள்ளிகளில் படிக்கிற நலிவுற்ற குழந்தைகளுக்கு சத்துள்ள உணவு கொடுக்க முடியாது என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஆகவே இதற்கு முன்னால் இல்லாவிட்டாலும் இதை ஒரு மனிதாபிமானப் பிரச்னையாக எடுத்துக்கொண்டு, வளர்கிற சமுதாயத்தின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டில் இருந்தாவது அத்தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்த 15 காசு என்பது கேர் நிறுவனத்தாரிடமிருந்து வருகிற உணவுப் பொருட்களோடு சேருவதில்லை. சேராமல்தான் 15 காசு.

திரு. எஸ். எஸ். வி. சித்தன்: கேர் கொடுத்திருந்தால்கூட இப்போது 15 காசுக்குக் கொடுக்கப்படுகிற உணவைப் பார்க்கும்போது சாதாரணமாக குறைவான அளவில்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே சிறு குழந்தைகளுக்கு வயிறார, மனமார நிறைகிற வகையில் சத்துணவு கொடுக்க இந்த ஆண்டிலிருந்தாவது இந்தத் தொகையை தயவு செய்து அதிகரித்துக் கொடுக்க அரசு முன்வருமா?

1981 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நகராட்சிமன்றங்கள் தங்களுடைய பொது நிதியிலிருந்து ஐந்து காசு அதிகமாக மதிய உணவுத் திட்டப் பங்குத் தொகையை வழங்கிட முன்வருமானால் அதற்கு அரசு எந்தவிதமான தடையும் விதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மதிய உணவு போடுகிறபோது முதலில் அங்குள்ள தனிப்பட்ட நிறுவனங்களில் கடனாக உணவுப் பண்டங்களை வாங்கி பின்னால் இரண்டு மூன்று மாதங்கள் கழிந்து பில் வந்த பிறகு கொடுக்கிறார்கள், அப்படி கடனாக அந்தப் பொருள்களை வாங்கும்போது தரமான பொருட்கள் கிடைக்காமல் ஆசிரியர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்காங்குள்ள சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அல்லது பொது நிறுவனங்கள் மூலம்க அரிசி போன்ற பொருள்களை சப்ளை செய்துவிட்டு பின்னால் அரசின் மூலம் அந்த பில்களை சரிக்கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய விவரங்கள் என்னிடமில்லை. குறிப்பாக எந்த இடத்தில் என்று சொன்னால் விசாரித்து உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. ரா. உமாநாத் : அமைச்சர் அவர்கள் கேர் நிறுவனத்தைக் குறிப்பிட்டு இருந்தாலும்கூட எல்லாம் சேர்ந்துதான் கணக்கு சொல்கிறார்கள். இப்படி 15 காசு ப்ளஸ் 5 காசு என்று மிக்ஸ் செய்து வருடக்கணக்காக ஆகிறது. அதன் விளைவாக கொடுக்கப்படுகிற உணவின் தரம் ரொம்ப மோசமாகப் போகிறது. ஆசிரியர்கள் தங்களுக்கு கெட்ட பெயர் வந்துவிடுமோ என்று பயந்து தங்கள் பேக்கட்டிலிருந்து கொடுக்கக்கூடிய நிலை கூட ஏற்படுகிறது. ஆக இப்படி ஒரு பெரிய நெருக்கடி இந்தக் குறையில் ஏற்பட்டிருப்பதால் தயவுசெய்து இந்த 15 காசு ப்ளஸ் 5 காசு என்றிருப்பதைக் கொஞ்சம் கூடுதலாக்கிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போதுள்ள நிதி நிலைமையில் அதற்கு இடமில்லை.

திரு. கு. ராமனி: கேர் ஸ்தாபனத்திலிருந்து மாவு, எண்ணெய் கொடுக்கப்படுகிறது. பாக்கி இருக்கக்கூடிய சகல செலவுகளையும் உணவு தயாரிக்கும் ஊழியர்கள் சம்பளம் உட்பட, பாத்திரங்கள் உட்பட, ஈயம் பூசுவது உட்பட ஒட்டை அடைப்பது உட்பட இவ்வளவுக்கும் சேர்த்துத்தான் இந்த 15 காசு கொடுக்கப்படுகிறது. இப்படிக் கொடுக்கப்படுகிற முறை நீண்டநாட்களாக இருக்கிறது. போன சட்டமன்றம் இருந்த

[1981 பிப்ரவரி 2

காலத்தில் கூட இதைக் கிளப்பினோம். ஆகவே, தயவுசெய்து அரசாங்கம் முன்வந்து 25 காசுகளாவது இதற்குக் கொடுக்க ஏற்பாடு செய்யாவிட்டால் அந்த ஊழியர்களின் நிலை நடவடிக்கை [illegible] சாப்பாடு நன்றாக இல்லை என்று அவர்கள்தான் இதற்கு இரையாகிறார்கள். ஆகவே, அரசாங்கம் தயவுசெய்து இதை மறுபரிசீலனை செய்து 25 காசாவது கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இரண்டு காசு உயர்த்தினால் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாயாகும் என்று விவரங்கள் இருக்கின்றன. உறுப்பினர் கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்படும், ஒரு கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். ஆகவே இப்போது நான் அதைப்பற்றி கருத்து சொல்வதற்கில்லை.

திரு இரா. தமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிய உணவு குழந்தைகளுக்கு சீரான முறையில் கொடுக்கப் படுகின்றதா என்பதைத் தணிக்கை செய்வதற்கு ஏதாவது விரிவான திட்டம் இருக்கின்றதா? அதோடு, இந்த நகராட்சி, ஊராட்சி குழந்தைகளுக்கு 'மட்டன்' வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மதிய உணவு ஒழுங்காகப் போய்ச் சேருகின்றதா என்பதைப் பற்றி கண்காணிக்க அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் இதைக் கண்காணிக்கச் சொல்லி, அவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே பீல்ட் ஆபீசர்கள் என்று இருவர் தமிழ்நாட்டிலே இருந்தார்கள். இப்போது 9 பேர்கள் என்ற அளவிலே இந்தப் பதவிகளை அதிகமாக்கியிருக்கிறோம். நாம் 20 இலட்சம் குழந்தைகளுக்கு இன்றைய தினம் மதிய உணவு போட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படி மதிய உணவு போடும்போது, வறுமையில் இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் நாம் இன்னும் போடவில்லை. இதிலே இன்னும் அதிகமான நன்மைகளைப் பெறவேண்டியவர்கள் இருக்கிறார்கள், குறிப்பாக, நாம் இன்றைக்கு தொடக்கப்பள்ளிகளிலே இதைப் போடுகின்றோமே தவிர, 7, 8 வகுப்புகள் படிக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளிகளில் போடுவதில்லை. ஆகவே, இந்த வசதிகளை கேட்கும் லட்சக்கணக்கான மாணவர்கள் இருக்கும்போது, 'மட்டன்' பற்றிப் பேசுவது அவ்வளவு சரியாக இருக்காது.

திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள்: மதிப்புக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் 15 பைசா கொடுப்பதாக இருக்கிறது. அரிசன பள்ளிகளுக்கும், கள்ளர் சிறப்புப் பள்ளிகளுக்கும், 15 பைசா கொடுப்பதாக அறிகிறேன். இப்போது பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்கும் 15 பைசா வீதம் கொடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்?

1981 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 10 பைசா வீதம் ஒரு ஆண்டில் 200 நாட்களுக்கு கொடுக்கப்படுகிறது. ஆனால், ஊராட்சி ஒன்றிய மாணவனுக்கு 5 பைசா வீதம் 200 நாட்களுக்கு ஒரு ஆண்டில் கொடுக்கப்படுகிறது. இந்த விவரத்தைத் தான் தந்திருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்கள் இதிலே அதிகமான அளவிலே பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த திட்டம் செயல்பட்டு வருகிறது.

திரு. இ. எஸ். எம். பாகீர் முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனாதைக் குழந்தைகளை வைத்து நடத்தக் கூடிய பள்ளிகளுக்கு இந்த நிதி உதவி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அநாதைக் குழந்தைகளுக்கு நிதி உதவி அளிப்பது சமூக நலத்துறையைச் சாரும்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: பேரவைத் தலைவர் அவர்களே, கோர் ஸ்தாபனம் வாரத்திற்கு இரண்டு நாட்கள் உணவு கொடுப்பதாகவும், பாக்கி நாட்களில் எல்லாம் இந்த மாணவர்களை வைத்துக் கொண்டுதான் செய்ய வேண்டும் என்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே, தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து சிறார்களுக்கு வயிறார உணவு கொடுக்க ஏற்பாடு செய்வார்களா? அதேபோல், பொது மையத்தில் சமையல்கூடம் ஒன்றை அமைத்து இந்த மாணவர்களுக்கு, உணவு எடுத்துச் செல்ல வாகன வசதி செய்து கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு நல்ல வயிறார உணவு கொடுக்க வேண்டுமென்பது இந்த அரசின் விருப்பமாகும். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். பொது சமையல்கூடம் தற்போது தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய 3 மாவட்டங்களிலே இருக்கின்றன. மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று இப்போது இரு மாநாடு புரத்தில் மேற்கொண்டு 5 பஞ்சாயத்துகளிலும், தர்மபுரி மாவட்டத்திலே சில பகுதிகளிலும் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பொதுவான சமையல் கூடம் வருமானால், அங்கிருந்து உணவுப் பண்டங்களை எடுத்துச் செல்ல வாகனங்கள் இதற்கு முன்னாலே பயன்படுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது குதிரை வண்டி, மாட்டு வண்டி, சைக்கிள் போன்றவற்றில் ஒருவர் பொறுப்பில் எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் காரணமாக, வாகனங்கள் பழுதானால் அல்லது பழுது செய்வதற்குப் பல நாட்கள் ஆனால், அதுவரையில் பல பள்ளிகளுக்கு உணவு எடுத்துச் செல்வது தடைபடும். இப்போது இத்தனைய நடவடிக்கை

வழிக்கையின்மூலம் பெட்ரோல், டீசல் பயன்படுத்துகின்ற நிலையைக் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்ற பொதுவான கருத்திற்கும் உதவிகரமாக இருக்கும்; அதே சமயத்தில் நிறைய பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அதற்கான முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிய உணவுத் திட்டத்திற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, ஒரு கோடி ரூபாய் அதிகம் செலவாகும் என்று சொன்னார்கள். ஆனால், நலிந்த குழந்தைகள் வளமாக வளர்ந்தால்தான், தமிழகத்திலே கல்வியின் தரம் உயரும். ஆகவே, இந்த அதிகமான செலவைப் பார்க்காமல், மறு பரிசீலனை செய்து, அந்த அதிகத் தொகை கொடுக்க முன்வருவார்களா என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த மதிய உணவுத் திட்டம் தற்போது தலைமை ஆசிரியர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருப்பதால், தலைமை ஆசிரியர்கள் மற்ற வேலைகளை கவனிக்க முடியாமல், இந்த சமையல் வேலையையே பார்க்க வேண்டியுள்ளதால், கல்வியின் தரம் பாதிக்கப்படுகிறது. ஆகவே அந்த மதிய உணவுத் திட்டத்தை அரசாங்கமே நடத்த நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் இதிலே அதிகமான அளவு பொறுப்பேற்றுக்கொள்ளாமல் அவர்கள் கல்விப்பணியில் ஈடுபட வேண்டுமென்ற அடிப்படையில் பொது மைய சமையல் கூடங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதைப் பற்றி விளக்கமான விவரங்களைத்தான் இதற்கு முன்னால் சொன்னேன்.

திரு. க. பாலகப்பிரமணியன் : பள்ளிகளில் மதிய உணவு கொடுப்பது பெரும்பாலும் 'கேர்' ஸ்தாபனம் கொடுப்பதை வைத்தே ஓட்டிவிடுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட தகவல் அரசுக்குத் தெரியுமா ? அப்படி இல்லையென்றால் அதை மாற்றி அமைக்க அலுவலர் அல்லாத குழுக்களைப் போட்டு மேற்பார்வை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு மாணவனுக்கு 15 காசு கொடுக்கும் மானியத்தோடு கேர் நிறுவனம் ஆண்டுதோறும் கொடுக்கும் சுமார் 20,000 டன் உணவையும் - மதிப்பு ரூ. 2 கோடி - தொடக்கப்பள்ளி நன்பகல் உணவுத் திட்டம் பயன்படுத்தப்படுகிறது. ஓர் ஆண்டுக்கு மதிய உணவு அளிக்கப்படும் 200 நாட்களில் 100 நாட்களுக்குத் தேவைப்படும் தானியமும் 100 நாட்களுக்குமே தேவைப்படும் எண்ணெயும் கேர் இலவச

உணவு மூலம் பெறப்படுகிறது. மீதி 100 நாட்களுக்கான தானியச் செலவுக்கும் 200 நாட்களுக்குமே ஆகும் மசாலா சாமான்கள், விறகுச் செலவு முதலியவற்றிற்கும் அரசு மானியமாகவும் உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகையாகவும் பெறப்படும் ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு 15 காசு என்ற தொகை பயன்படுத்தப்படுகிறது.

திரு. செ. சிவசாமி : தமிழகத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் 60 சதவிகிதம் பேர் இருக்கக்கூடிய காரணத்தால் சாதாரண கிராமாந்திர விவசாயக் குழந்தைகள் மதிய உணவுத் திட்டத்தை அமல் நடத்தும்போது மாதத்திற்கு ஒரு நடவையாவது அந்தக் குழந்தைகளுக்குக் கறி போடப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி இதே கேள்வியை முன்பே கேட்டுவிட்டார்.

கோவை மத்திய சிறைக்காவலர்களுக்குக் குடியிருப்புகள்.

* வினா எண் 147: திரு. கு. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அ) கோவை மத்திய சிறையில் பணிபுரியும் வார்டர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா ?

ஆ) ஆம் எனில், மொத்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

இ) வார்டர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) 118

(இ) 142

முதல் தலைமைக் காவலர்		3
முதல் நிலைக் காவலர்		
(நிரந்தரம்	—11	
தற்காலிகம்	— 1)	12
2—ம் நிலைக் காவலர்கள்		
(நிரந்தரம்	— 113	
தற்காலிகம்	— 14)	127
	மொத்தம்	142

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை சிறையில் மணி புரியும் காவலர்களில் பெரும்பகுதி காவலர்கள் குடியிருக்கின்ற வீடுகள் நீண்ட காலத்திற்கு முன் கட்டப்பட்டதால், அது மிகவும் பழுதடைந்து, சரியான பராமரிப்புக்கூட செய்யப்படாமல், படு மோசமான நிலையில், மாட்டுத்தொழுவத்திற்கு சமமாக, உள்ளது என்று சொன்னால் மிகையாகாது, அப்படிப்பட்ட வீடுகள் இருக்கின்றன. அமைச்சரவர்கள் அந்த வீடுகளைப் பார்வையிட்டு, அதை இடித்து, நல்ல வீடுகளாகக் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவைச் சிறைக்கு மட்டுமல்ல; தமிழகத்தின் முக்கிய சிறைச்சாலைகள் அனைத்திற்கும் இப்படிப்பட்ட வசதி களைச் செய்து தர தீவிர நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவரவர்களே, சிறையி லே பணியாற்றுகின்ற வார்டர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கு எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் சிறையிலே பணியாற்றுகின்ற வார்டர்கள் மற்றும் அலுவ லாளர்கள் 24 மணி நேரமும் அங்கேயிருந்து, ஆயுள் கைதிகளைப் போல வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு குறிப் பிட்ட வேலை நேரம் நிர்ணயிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அவர்களுக்கு 24 மணி நேரம் என்ற நியதி இல்லை, ஆனால் அவர்களிடமிருந்து இவ்வ கோரிக்கைகள் வந்திருக்கின்றன ; ஆனால் பரிசீலனையில் இருக்கின்றன; நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்த பதில் திருப்திகரமான பதிலாக இல்லை என்பதைச் சொல்லி, கோவைச் சிறை சம்பந்தப்பட்டவரையில் அந்த பழைய வீடுகளை மாற்றியமைக்க, கோவை சிறைக்கு என்று ஏதாவது திட்டம் இருக்கின்றதா? இருந்தால் எப்பொழுது அந்த வீடுகள் மாற்றி அமைக்கப்படும். பழைய வீடுகள் முழுவதும் அப்படி மாற்றி யமைக்கப்படுமா அல்லது ரிப்போர்ட் பார்த்து புதுப்பித்துக் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்ன வசதி குறைவு என்று கூட்டிக் காட்டினால் அதைப்பற்றி கவனிக்கலாம். கோவை சிறை உள்ளிட்ட மற்ற முக்கிய சிறைச்சாலைகள் சம்பந்த மாக இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் கூறினேன். அதில் கோவையு உள்ளடங்கியிருக்கிறது ; கண்டிப்பாக அ குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்

காஞ்சிபுரத்தில் நீதிமன்றங்களுக்குக் கட்டிடங்கள்

(*வினா எண். 148 திரு. ப. வெங்கடாசலபிரமணியம் : மாண்பு மிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காஞ்சிபுரத்தில் நீதிமன்றங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டி கொடுக்க வேண்டுமென காஞ்சி வழக்கறிஞர்கள் சங்கமும் பொது மக்களும் கோரி உள்ளனரா ?

(ஆ) இது பற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரத்தில் சார்பு நீதிமன்றத்திற்கு கூடுதல் கட்டி டம் ஒன்று ரூ. 14,00,000 செலவிலும், இரண்டு சார்பு நீதி பதிகளுக்கு குடியிருப்பு கட்டிடம் ரூ. 1,76,000 செலவிலும், இரண்டு மாவட்ட முன்சீப்புகளுக்கு குடியிருப்பு கட்டிடம் ரூ. 1,78,000 செலவிலும் கட்டுவதற்கு தேவையான ஆணைகளை அரசாணை எண் 2291, உள்துறை, தேதி 5-9-1980 இல் பிறப் பிக்கப்பட்டுள்ளன.

[துணை வினா இல்லை.]

இறைச்சாலைகளில் சிற்றுண்டி வசதி

* வினா எண் 149—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:—

சிறைச் சாலைகளுக்குள் கைதிகள் பயன்படுத்தும் வகையில் சிற்றுண்டி சாலைகள் அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம். கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர் மற்றும் சென்னையில் உள்ள மத்திய சிறைகளில், "கைதிகளின் சிற்றுண்டிச்சாலை" அமைக்கப்பட்டிருக் கின்றன.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சில மத்திய சிறைச்சாலைகளில் அவ்வகை சிற்றுண்டிச்சாலை களை அமைத்திருப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். பொதுவாக எல்லா மத்திய சிறைச்சாலைகளிலும் முறைப்படி இல்லாவிட்டா லும் சிற்றுண்டிச் சாலைகள் நடைபெற்று வருவதை சிறைச் சாலைக்குச் சென்றவர்கள் நன்றாக அறிவார்கள். எல்லா மத்திய சிறைச்சாலைகளில் நல்ல முறையில் அத்தகைய சிற்றுண் டிச் சாலைகளை அமைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா ?

[1981 பிப்ரவரி 2

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலைகள், கோவை, மதுரை, வேலூர் மற்றும் சென்னையில் இருக்கின்றன. அடுத்த கட்டமாக பாளையங்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கடலூர் மகளிர் மத்திய சிறைச்சாலை, வேலூர் முதலியவற்றில் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படும்.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, சிறைச் சாலைகளிலே உள்ள சிற்றுண்டிசாலைகளில் மலிவுவிலையில் பொருட்களை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மிகவும் நியாயமான விலையில் கைதிகளுக்குக் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளிலே அதிகாரப்பூர்வமாக பணமோ, பொருளோ வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. அப்படி இருக்குமானால் சிறைச்சாலையிலே உணவுப் பொருட்களை வாங்குவதற்கு கைதிகள் பணம் வைத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அவர்கள் காப்பி, ரொட்டி, பிஸ்கட், சிகரெட், புகையிலை, பற்பசை போன்றவற்றை வாங்குவதற்கு காசு வைத்துக்கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளிலே சிற்றுண்டி சாலைகள் அமைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதைப்போன்று சிறைச்சாலைகளிலே பத்திரிகைகள் வாங்கக்கூடிய வசதியை அரசு அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அந்த வசதி ஏற்கனவே இருக்கிறது. குறிப்பிட்ட சில பத்திரிகைகள் படிப்பதற்கு சிறைச்சாலைகளிலே தரப்படுகின்றன. குறிப்பாக சில பத்திரிகைளை வாங்க விரும்புவார்களானால் அதற்கும் வழிவகை செய்யப்படும்.

திரு. ரா. உமாநாத் : சிற்றுண்டிச்சாலைகளில் கொடுக்கப்படக்கூடிய பொருட்கள் சம்பந்தமாக ஏற்கனவே அவர்களுக்கு கொடுக்கக்கூடிய உணவிலே ஏராளமாக ஊழல் நடைபெறுகிறது என்று சொல்லி பல்வேறு அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி அவர்கள் சிறைகளிலே உண்ணாவிரதம் இருந்து வருவது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். சிறைச்சாலைகளிலே வெல்பேர் மெஷர்ஸ் செய்யப்படுகிறபோது ஊழல்

1981 பிப்ரவரி 2]

கள் நடைபெறாமல் பொருட்கள் ஒழுங்காக சிற்றுண்டிச்சாலைகளிலே கொடுக்கப்படுவதற்கு என்ன உத்தரவாதம் ? அதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பல்வேறு சிறைச்சாலைகளிலே உணவு வழங்குவதிலே முறைகேடுகள், ஊழல்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் உதாரணமாக வேலூர் சிறையிலே குறைபாடுகள் இருப்பதாக சோதனையிடப்பட்டபோது தெரியவந்து,சம்பந்தபட்டவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். சிற்றுண்டிச்சாலைகளிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போன்று கைதிகளுக்கு நல்ல முறையிலே உணவு அளிக்க கூட்டுறவு மூலம் ஏற்பாடு செய்யலாமா என்பதைப்பற்றி அரசு ஆலோசிக்கும் .

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளிலே கைதிகளுக்கு பத்திரிகைகள் வழங்கப்படுகின்றன் என்றாலும் அந்தப் பத்திரிகைகளிலே அரசுக்கு தேவையில்லாத கருத்துக்களோ அல்லது வேறு ஏதாவது கருத்துக்களோ வந்தால் அவைகளை கருப்பு மையிட்டு அடித்து அனுப்புவதால் அவர்கள் உண்மையான செய்தியை முழு செய்தியை புரிந்து கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே பத்திரிகைகளை அப்படியே வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது பற்றி அரசு ஆராயும்.

திரு. சு. பாலன் : கடந்த சில மாதங்களுக்கு முன்னால் சென்னை சிறைச்சாலைகளிலே கொடுக்கப்படுகிற உணவுப் பொருட்களிலே கஞ்சா, மது ஆகிய பொருட்கள் ஏராளமாக விநியோகம் செய்யப்பட்டதாக செய்தி வந்தது. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டுக்கள் இருந்தால் ஆதாரத்தோடு சொல்லுங்கள். கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது.

திரு. ரா. உமாநாத் : சிற்றுண்டி சாலையிலே மது இருந்தது என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிற்றுண்டிச் சாலையே ஆரம்பமாகவில்லை, ஆகவே அது வராது .

திரு. சு. பாலன் : சிற்றுண்டிசாலைகளிலே உணவு வழங்கும் இடங்களிலே மதுபானம் போன்ற போதை தரும் பொருட்கள் ஏராளமாக கொடுக்கப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கஞ்சாபோன்றபொருட்கள் பிடிக்கப்பட்டன என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் மகிழ்ச்சி அடையலாம். அதுபற்றி சில புகார்கள் வந்து ஐ. ஜி. அதற்கான நடவடிக்கை எடுத்து கஞ்சா மற்றும் அதைப்போன்ற பொருட்கள் உள்ளுக்குள்ளே கடத்தப்பட்டது தெரிந்து கண்டு பிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 9.30)

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, கைதிகள் படிப்பதற்காக நாளேடுகள் வழங்கப்படுகின்றன என்ற கருத்தை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். என்னென்ன நாளேடுகள் அவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதை அறிவிப்பதோடு, 1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாளுக்குப் பிறகு திருச்சி மத்திய சிறையில் முரசொலி ஏடு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது. அந்த ஏடு மீண்டும் எல்லாச் சிறைகளுக்கும் அனுப்பப்படுகிறதா என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூல வினாவிற்கும் இதற்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் மாண்புமிகு உறுப்பினரவர்களை தனி வினா எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இராமநாதன் : பேரவைத் தலைவரவர்களே, நான் மத்திய சிறையில் கைதியாக இருந்திருக்கிறேன். பொதுவாக எல்லாச் சிறைகளிலேயும் பார்வையாளர்கள் கைதிகளைப் பார்க்க வருகின்றபொழுது கடலை மிட்டாய், வாழைப்பழம் போன்ற பொருட்களைக் கொண்டு வருகிறார்கள். அவற்றில் முக்கால் பாகத்தை அங்குள்ள வார்டர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே, இம்மாதிரி குறைபாடுகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இது எந்த அளவிற்கு ஆதாரமான ஒன்று என்று தெரியவில்லை. ஆதாரத்தோடு உறுப்பினரவர்கள் சொல்வார்களேயானால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திசையன்விளைப் பேரூராட்சியில் குடிநீர் வழங்குதிட்டம்

*வினா எண். 150:—திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள திசையன்விளை பேரூராட்சி மன்றத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) 1980-81—ம் நிதியாண்டில் அதனை நிறைவேற்றும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) உளளது.

(ஆ) இத்திட்டம் 1981-82 நிதியாண்டு முடிவுக்குள் நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[துணை வினா இல்லை]

பெரம்பலூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்

* வினா எண் 151:— திரு. ஜே. எஸ் இராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் தேவை என்ற கோரிக்கை வந்ததா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) பெரம்பலூர், குரும்பலூர் பேரூராட்சிகள் மற்றும் மூன்று வழியோரக் கிராமங்கள் ஆகியவற்றுக்கென ஒரு கூட்டு குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு ஜே எஸ். இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூருக்குக் குடி நீர் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கோரிக்கை பல ஆண்டுகாலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது என்றாலும் அதற்கான முறையான முன் ஆய்வு செய்யப்பட்டு ஆண்டுகள் பல ஆயிற்று என்றாலும், இத்திட்டம் இன்னும் பரிசீலனையில் தான் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறார்கள். இத்திட்டம் எப்பொழுதுதான் அரசால் அனுமதிக்கப்படும் என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

[1981 பிப்ரவரி 2

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பாழ்நிலையை நிலையைத் தாண்டி கவலையளிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்கள் பேரூராட்சிகளின் நிதிநிலை இத்திட்டத்தைச் செயலாற்றுவதற்கான நிலையில் இல்லையென்பதால், இத்திட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என தெரிவித்து, இத்திட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டார், ஆனால், பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் மக்களின் அடிப்படைத் தேவை என்பதை கருத்தில் கொண்டு, அப்பேரூராட்சிகளின் நிதிநிலைமைகளை உயர்த்தும்படியான சாத்தியக்கூறுகளை ஆராயும்படி திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

திரு ஜே எஸ். இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, 4, 5 மாதங்களுக்கு முன்னால் திருச்சியில் நடைபெற்ற குடிநீர் வடிகால் வாரியக் கருத்தரங்கில் இத்திட்டத்தின் அவசியம் குறித்து மேலும் நான் வலியுறுத்தியபொழுது, உலக வங்கி 'எய்டில்' (aid)ல் ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழாவது இந்தப் பெரம்பலூர் குடிநீர்த் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அதனுடைய தலைவர் மதிப்பிற்குரிய திரு. ஈ. ஆர். கே. அவர்களிடம் நான் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். அதற்குப் பிறகு அரசு அதிலே காட்டிய தீவிரமும் குடிநீர் வடிகால் வாரியம் காட்டிய தீவிரமும் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று கேட்பதோடு, அருள்கூர்ந்து மிக விரைவில் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வாரா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அக்கருத்தரங்கில் விளைவுதானோ என்னவோ, பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் மக்களின் அடிப்படைத் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, அப்பேரூராட்சிகளின் நிதிநிலையை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும்படி திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டார். இது மாண்புமிகு உறுப்பினர் திரு ராசு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக, அந்தக் குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவரால் எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சி என்று கருதுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பெரம்பலூர் குடிதண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அந்தப் பேரூராட்சிகளின் நிதி நிலைகளை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு அம்மாவட்ட ஆட்சித் தலைவர் பணிக்கப்பட்டார் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது மாதிரி பல்வேறு குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்திலே, மதுரை

1981 பிப்ரவரி 2]

மாவட்டத்திலே திருமங்கலம், போடிநாயக்கனூர், பட்டிவீரன்பட்டி ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற கால தாமதம் ஆகிறது. நகராட்சிகளாக இருப்பவைகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டியது அவசியம் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுத்தால், நிச்சயமாக மக்களிடமிருந்து வரிமூலமாக தேவையான பணத்தை வசூலிக்க முடியும். ஆகவே, பேரூராட்சிகளின் நிதிநிலையை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்வதை விட்டுவிட்டு, விரைவாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. ஜே. எஸ். இராசு: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளுடைய வருமானத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் பற்றிய ஆய்வு கடந்த 7, 8 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. அத்தகைய வாய்ப்பு இல்லையென்று பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அமைச்சர் சொல்கிற அந்த ஆய்வின் பிரகாரம் பார்த்தால், இந்த நூற்றாண்டு நிச்சயமாக வராது என்பதை நான் மனப்பூர்வமாக அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்து, ஏதேனும் சிறப்புத் திட்டமாகக்கருதி, அரசின் கருத்துப்படி, 17,000 மக்கள் வாழ்கின்ற ஒரு மேஜர் பஞ்சாயத்துக்கு உதவுகின்ற வகையில், அவர் அந்தத் திட்டத்தைச் சீக்கிரமாக எடுத்துக் கொள்வாரா என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை.

கள்ளக்குறிச்சி—சின்னசேலம் குடிநீர் வழங்கு திட்டம்

*வினா எண். 152—திரு. க. ரங்கசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கள்ளக்குறிச்சி—சின்னசேலம் ஆகிய இரு நகரங்களிலும் குடிநீர் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) கள்ளக்குறிச்சி—சின்னசேலம் ஆகிய இரு நகரங்களுக்கு ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்ட உத்தேச மதிப்பீடு முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒப்புதலுடன் செயற்குறிப்பு வரப்பெற்ற பின் அரசு தக்க நிர்வாக ஒப்புதல் அளிக்கும்.

[1981 பிப்ரவரி 2

[முற்பகல் 9.40]

திரு எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது எப்போது வரப் பெற்றது. அதை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு காலம் ஆகும். சின்னசேலம், கள்ளக்குறிச்சி ஆகிய இரு நகரங்களும் வறட்சியின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்படுகின்றன. எனவே இது எப்போது முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டம் தண்ணீர் பயன்பாடு குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இக்குழு சமீபத்தில் தனது தொழில் நுட்ப துணைக்குழுவிடமிருந்து கருத்துரைகளைக் கேட்டு அறிந்துள்ளது. சாதகமான பரிந்துரைகளை மேற்படி தொழில் நுட்பக் குழு செய்துள்ளதினால் தண்ணீர் பயன்பாடு குழுவின் ஒப்புதல் துரிதமாக எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்த உடன் திட்டத்திற்கான வேலைகள் துரிதமாகச் செய்யப்படும்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே 1978—79 ஆம் ஆண்டிலே இந்தக் குடிநீர் திட்டம் சம்பந்தமாக பரிசீலனை செய்து வேலை தொடங்குவதாகச் சொல்லி அமைச்சர் அவர்களே அந்த சமயத்தில் ஒப்புதலான வார்த்தையைக் கொடுத்தும், இவ்வளவு காலம் தாமதமானதற்குக் காரணம் என்ன? விரைவிலே என்பது எவ்வளவு காலத்திற்குள் வேலை தொடங்கப்படும்? அதிலே என்ன கஷ்டம் என்பதையாவது அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் கோமுகி அணைக்கட்டிலிருந்து சின்ன சேலத்திற்கும், மணிமுத்தார் அணைக்கட்டிலிருந்து கள்ளக் குறிச்சிக்குக் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு இரண்டு திட்டங்கள் தனித்தனியான உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டன. குடிநீர் திட்டத்திற்குத் தேவையான தண்ணீரை மேற் கண்ட அணைக்கட்டுகளில் இருந்து எடுத்துக் கொள்ளப் பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) அவர்கள் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவர் குடிநீர்த் திட்டத்திற்கு வழங்க கோமுகி அணைக்கட்டில் உபரியாக தண்ணீர் இல்லை என்றும், இரண்டு பேரூராட்சிகளுக்கும் சேர்த்து மொத்தமாக தண்ணீரை மணிமுத்தார் அணையில் இருந்து எடுத்துக் கொள்ளஇயலும் எனவும் அறிவித்ததால், இந்த நிலை ஏற்பட்டு மறுபரிசீலனை செய்யப்பட்டு திட்டம் வகுக்கப்பட்டது.

திரு. எஸ். சிவராமன்: தலைவரவர்களே, கள்ளக்குறிச்சிப் போன்ற நகராட்சிகளுக்கு குடிநீர் திட்டத்தை கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் பெரம்பலூர் நகராட்சிக்கு அது மறுக்கப்படுவதற்குக் காரணம் என்ன? இந்த இரண்டு நகராட்சிகளுக்கும் என்ன வித்தியாசம் என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 பிப்ரவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கொடுக்க முடியாது என்று சொல்லவில்லை. தனிக் கேள்வி போடுங்கள்.

திருப்புவனம் அருகே வைகையிலிருந்து மதுரைக்கு குடிநீர் வழங்கல்.

* வினா எண் 153— திரு. க. பாரமலை. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருப்புவனம் அருகே வைகை நதியிலிருந்து ஆழ்கிணறு வெட்டி மதுரை நகருக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

(இ) அந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் அப்பகுதி மக்களின் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படும் எனத் தெரிவித்து ஆட்சேபனை மனுக்கள் பெறப்பட்டுள்ளதா?

(ஈ) ஆம் எனில், விவசாயிகளின் ஆட்சேபணை குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்ட வேலைகளுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு தேவையான பொருட்கள் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(இ) திருப்புவனம் திரு. கே. எஸ். டி. இராஜேந்திரன் என்பவரிடமிருந்து பெரிய கிணறுகள் போடப்பட்டு சக்தி மிக்க இயந்திரங்களால் அதிக நீர் உறிஞ்சப்படுவதால் மடப்புரம், திருப்புவனம், திருப்பாச்சேத்தி ஆகிய இடங்களில் கோடை காலத்தில் கிணறுகள் வறண்டு விவசாயம் பாதிக்கப்படுவதாயும், தன் தென்னந் தோப்பு பாதிக்கப்பட்டு நஷ்டம் ஏற்படும் என்று கூறியும், வேறு இடத்திற்கு திட்டத்தை மாற்றும்படி கோரியும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மனு வந்துள்ளது.

(ஈ) திருப்புவனம் தலைமைப் பணியிடம் அமைப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திற்கு தென்புறம் சுமார் 100 மீ. தொலைவிலும், அருப்புக்கோட்டை குடிநீர் திட்ட தலைமைப் பணியிடத்திற்குச் சுமார் 500 மீ. தூரத்திலும் மேற்கண்ட தென்னந்தோப்பு உள்ளது. அருப்புக்கோட்டை நீர் சேகரிப்பு கிணறு இயங்குவதால் இத்தோப்பு பாதிக்கப்படவில்லை. எனவே மதுரை, குடிநீர் பெருக்குத் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள தலைமைப் பணியிடத்தில் நீர் சேகரிப்புக் கிணறு போடுவதால் இத் தோப்பு பாதிக்கப்பட மாட்டாது என கருதப் படுகிறது. மேற்படி விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது.

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தனிப் பட்ட நபரிடமிருந்து அவருடைய தென்னந்தோப்பு பாதிக்கப் படுகிறது என்று ஆட்சேபணை வந்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் தகவல் சொன்னார்கள். இதைத் தவிர, பொதுக் கூட்டங்கள் வாயிலாகவும், சர்வ கட்சிக் கூட்டங்கள் வாயிலாகவும் மற்ற விவசாயிகளும் பாதிக்கப்படுகிறார்கள் என்று அரசாங்கத் திற்குப் பலமுறை விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டு இருக் கின்றன. ஏற்கனவே திருபுவனத்தில் இருந்து அருப்புக் கோட்டைக்கு குடிநீர் வழங்க நீர் எடுத்துச் செல்லப்படுகிறது. மதுரைக்கு குடிநீர் கொடுத்தவரையில் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. மதுரைக்குக் குடிநீர் கொடுக்க மேற்கு நோக்கிப் பாயும் கள்ளார் தண்ணீர் எடுத்துச் செல்வது என்கிற திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது. பெரியார் அபிவிருத்தித் திட்டத் தின் வாயிலாக மிஞ்சும் (Savings) தண்ணீரை மதுரைக்கு குடிநீர் வழங்கப் பயன்படுத்தலாம் என்ற குறிப்பும் அரசாங்கத்திடம் இருப்பதாக ஏற்கனவே இந்த மன்றத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. வைகை அணைக்கட்டிலிருந்து குழாய் மூலம் மதுரைக்கு நிரந்தரமான வகையில் தண்ணீர் கொடுக்கலாம் என்கிற திட்டமும் இருக்கிறது. இவைகளெல்லாம் நிரந்தரமான திட்டங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன என்கிற விவரங்களை உறுப்பினர் அவர்கள் மாண்பு மிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை. தேவைப்படுகிற விவரங்களை அறிந்து கொள்கிற வகையில் துணைக்கேள்வி கேட்டால் போதுமானது.

திரு. க. பாரமலை : ஏற்கனவே அருப்புக்கோட்டை குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டதால், திருப்புவனம் பகுதியில் உள்ள கிணறுகளில் முன்பு 6 அடிக்குக் கீழ் நீர் கிடைத்து இருந்தது தற்போது 20 அடி ஆழத்திற்குச் சென்று விட்டது. ஆகவே விவசாயிகளின் இந்த நியாயமான ஆட்சேபணைகளைக் கருத்தில் கொண்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, என்னிடத்தில் இருக்கின்ற தகவல்களைத் தந்தேன். மதுரைக்குக் குடிநீர் கொடுப்பதற்காக இது 'ஆக்குமென்டேஷன் ஸ்கீம்'. (ugmentation Scheme) மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த திட்டங்கள் பெரிய திட்டங்கள். உடனடியாக மதுரைக்கு குடிநீர் கொடுப்பதற்காக இந்தத் திட்டம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இதற்குச் செலவு ரூ. 3,02.26 லட்சம் என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது. நிலத்தடி நீரில் இருந்து எடுத்தால் பக்கத்தில் உள்ள விவசாயக் கிணறுகள் பாதிக்கப்படும் என்று சொல்கிறார்கள். அதுகூட அவ்வளவு சரியானதல்ல. பரிசீலனை செய்யப்படவேண்டிய ஒன்று. இந்தத் திட்டத்தில் ஆற்றின் நடுவில் கிணறு வெட்டி, அதிலிருந்துதான் தண்ணீர் எடுக்கப்படுகிறது. இதனால் தோப்பு பாதிக்கப்படு கிறது, விவசாயம் பாதிக்கப்படுகிறது என்று சொன்னால், குடிநீர் திட்டத்தையே கைவிட்டுவிட வேண்டியதுதான். யாருக்கும் குடி நீர் கொடுக்க முடியாது. இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், இந்த இடங்களை நானே நேரில் சென்று பார்த்தேன். வைகை ஆற்றிலிருந்து நடுவில் கிணறு வெட்டி தண்ணீர் எடுப்ப தால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்பது நிபுணர்களின் கருத்து.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நாங்கள் வசிக்கிற காரணத்தால், அருப்புக்கோட்டை திட்டம் நிறைவேற்றுவதற்கு முன்பு அங்கே இருந்த கிணறுகளில் தண்ணீர் நிலைமை என்ன, அந்தத் திட்டம் அமல் செய்யப்பட்டதும் அந்தக் கிணறுகளில் தண்ணீர் நிலைமை என்ன என்பது எங்களுக்குத் தெரியும். நிலவள வங்கிகளில் கிணறு வெட்டு வதற்குக் கடன் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறபோது ஆயிரம் அடி சுற்றளவில் கிணறுகள் இருக்கக்கூடாது என்று வரம்பு வைத்து இருக்கிறார்கள். அதற்குக் காரணம், பக்கத்தில் கிணறு இருந்தால் மற்ற கிணறுகளில் உள்ள நீர் நிலைமை பாதிக்கப்படும் என்பதுதான். ஆகவே, இந்தத் திட்டத்தை நிபுணர்களைக் கொண்டு மறுபடியும் நல்ல முறையில் முழுமை யாகப் பரிசீலித்து, முடிவு எடுக்கிற வரையில், தற்காலிகமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதை அரசு நிறுத்தி வைக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, எல்லா நிபுணர்களும் தீர ஆலோசித்து இதனால் விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். நான் நேரில் சென்று பார்த்தபோது ஒரு சிலர் என்னிடத்தில் சொன்னார்கள், அதனால் அந்த இடத்தை நான் மூன்று முறை சென்று பார்த்தேன். அதிகாரிகளைக் கேட்டேன். எல்லா நிபுணர்களும் இதனால் நிச்சயமாக விவசாயம் பாதிக்காது என்று கருத்து கூறிவிட்டார்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாநகரத்தின் இன்றியமையாத தேவைக்குக் குடிநீர் அளவைப் பெருக்கித் தீர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இடையிலே இப்படி ஒரு

திட்டம்-திருப்புவனம் பகுதியிலிருந்து தண்ணீரை மேற்கு நோக்கிக் கொண்டு வருகிற முயற்சி மேற்கொண்டதன் காரணமாக, — மேற்கே இருந்து கிழக்குப் பகுதிக்கு இயல்பாகச் சென்று கொண்டிருக்கிற நீரை கிழக்கில் இருந்து மேற்குப் பகுதிக்குக் கொண்டு வருவது தவறான முறை — அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளில் முக்கியமாக தண்ணீரின் அளவு பிடிப்பளவு அல்லது ஊறும் அளவு குறைந்து வருகிறது என்கிற பரவலான நிலைமை இருப்பதால், அரசாங்கம் இதனை முழு அளவிற்கு கவனித்து, நிறைவேற்றுவதை நிறுத்தி வைத்து இந்தப் பிரச்னையைப் பரிசீலிக்குமா?

[முற்பகல் 9.50]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்ன எல்லாக் கோணங்களிலிருந்தும் இது பரிசீலனை செய்யப்பட்டது. ஆற்றின் நடுவிலேதான் தோண்டி தண்ணீர் எடுக்கப்படுகிறது. அதனால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்று நிபுணர்கள் குறிப்பிட்ட பிறகு நம்மால் — லே மென் — மறுபடியும் அதில் தலையிடுவது அவ்வளவு சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நிபுணர்கள் பல்வேறு புள்ளி விவரங்களின் அடிப்படையிலேதான் முடிவுகளை எடுக்கிறார்களே தவிர அங்குள்ள நிலைமையை முழுமையாக அவர்கள் ஆராய்ந்து பார்ப்பதில்லை என்பது தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களுக்கு ஏற்கனவே அவர்கள் ஈடுபட்டிருந்த பல்வேறு இயக்கங்கள் மூலம் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். அது மட்டுமல்லாமல், நிபுணர்கள் எடுத்த முடிவுகளை எல்லாம் அப்படியே நிறைவேற்றாமல் நிலைமைகளைப் பொறுத்து மாற்றி, மாற்றி முடிவு எடுப்பது அமைச்சரவைக்குப் பழக்கமாக இருக்கிறது. இந்தத் திட்டத்தினால் அந்த வட்டார மக்களுக்கும் அனைத்துக் கட்சியினருக்கும் - ஆளும் கட்சி உட்பட — மனக்குறை இருக்கின்ற காரணத்தால் ஒரு தண்ணந் தோப்பைக் காட்டி பதில் அளிக்கும் தகவலாக அரசாங்கம் கருதாமல், அங்கே இருக்கிற மொத்த நிலைமைகளையும் பரிசீலிக்க அரசு முன்வருமா? அந்தப் பகுதி மக்களின் விருப்பத்திற்கு மாறாக முடிவு எடுக்காமல், ஏற்கெனவே அதற்குப் பக்கத்தில் இருக்கிற பகுதி மக்களின் விருப்பத்திற்கு மாறாக எடுத்த முடிவினால் நிகழ்ந்த சம்பவம்போன்று நிகழ்ந்திடாமல் செயற்பட இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: தலைவரவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் விரும்பினால், அவர்களுக்கு சௌகரியப்பட்ட தேதியில் அந்த இடத்திற்கு அழைத்துச் சென்று காண்பிக்கத் தயாராக இருக்கிறேன். நானே சென்று

அந்த இடத்தைப் பார்த்திருக்கிறேன். அந்த பகுதியில் விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்படும் சாத்தியக்கூறு ஒன்றும் இல்லை ஒரு தென்னந்தோப்பு இருக்கிறது. அந்த தென்னந்தோப்புக் காரரால்தான் இது சொல்லப்பட்டது. அதுவும் பாதிக்காது என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

வைகை கால்வாய் சீரமைப்பு

*வினா எண். 154 திரு. செ. சிவசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் வைகை கால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அழிந்த நிலையில் உள்ளதைச் சீராக்க என்ன நடவடிக்கை அரசு எடுத்துள்ளது?

(ஆ) வைகை வெள்ளம் கரைபுரண்டு அழிவை உண்டாக்காமல் இரு பக்கமும் பலத்த கவர் எடுக்கத் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜமுகமது: (அ) மற்றும் (ஆ) முகவை மாவட்டம் வைகை கால்வாய்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உள்ளதைச் சீராக்கும் பொருட்டு, நதியையொட்டி செல்லும் கால்வாய்களின் ஒழுங்கை மாற்றவும், கால்வாயைச் செப்பனிடவும், விரகனூர் மதகிற்கு மேல் அச்சம்பத்து (Achamput) கால்வாய்க்காக 370 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச்சுவர் ஒன்றினை வைகை நதியின் வலதுபுறத்தில் கட்டுவதற்காகவும், தலைமை பொறியாளர் (பாசனம்) ஒரு விரிவான குறிப்புரை ஒன்றை அரசிற்கு அனுப்பியுள்ளார். இக்குறிப்புரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, வைகை கால்வாயானது மதுரைக்கு வடிகாலாக இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் வெள்ளக் காலத்தில் வருகின்ற தண்ணீரோடு, வடிநீர் முழுவதும் அந்த வாய்க்காலிலே சென்று கலப்பதினால் வெள்ளம் கரை புரண்டு கரைகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, அந்த கரைகளை ஒழுங்கு படுத்த வேண்டுமென்று பலதடவை சொல்லியும் வெள்ளம் வந்து கிட்டத்தட்ட இரண்டாண்டு ஆகியும், இன்று திட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்று வரையில் வேலை எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்த வேலை உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட்டு ஒழுங்காக எல்லா இடங்களிலும் கரைகள் அமைத்து, அந்த வெள்ளத்தினால் பக்கத்தில் இருக்கிற கிராமங்கள் பாதிக்காமல் இருக்க, உடனடியாக வேலை தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 2

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, வைகை சீரமைப்புத் திட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட திட்டம். ஆனாலும் எதிர்பார்த்ததற்கு மாறாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணத்தினால் சேதம் ஏற்பட்டது. எனவே அந்த நிலை மேலும் வராமல் தடுப்பதற்காக 370 மீட்டர் தூரத்திற்கு தடுப்புச் சுவர் கட்டும் திட்டத்தை அரசு பரிசீலித்து வருகிறது. கிட்டத்தட்ட 287 இலட்சம் ரூபாய் இத்திட்டத்திற்கு செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். பரிசீலனை என்றாலும் கிட்டத்தட்ட நிறைவேற்றப்படும் நிலையில் இருக்கிறது, இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, ஏற்கனவே இந்தத் திட்டத்திற்கு 8 கோடி ரூபாய்க்குமேல் செலவிடப்பட்டிருக்கிறது. மீண்டும் பராமரிப்பதற்கு வேண்டி கிட்டத்தட்ட 287 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படும் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே இந்தத் திட்டத்தைச் சுயல்படுத்தும்போது, திருப்புவனத்திற்கு பக்கத்திலே, வெளியிலே கொண்டு வந்ததனால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று எஞ்சினியர்கள் சொல்கிறார்கள். வைகை ஓரத்திலே கால்வாய் அமைக்கப்பட்டதால்தான் இப்படிப் பட்ட சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு யார் காரணம்? என்ன காரணத்தால் வைகை ஓரத்திலே கால்வாய் அமைக்கப் பட்டது? அதற்கு காரணமானவர் யார் என்று தெரிந்து அவர் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, கேள்வி வைகை கால்வாய் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளைச் சீராக்க என்ன நடவடிக்கை என்பது. நடவடிக்கையை சொல்லியிருக்கிறேன். அதிலே ஏற் பட்ட குறைபாடுகள் என்பதற்கு தனிகேள்வி போட்டால் விவரம் தரமுடியும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, கேள்விக்கு பதிலளிக்கின்றபோது முசுவை மாவட்டத்தில் வைகைநதியினால் பாதிக்கப்படக்கூடிய இடங்களுக்குச் சீர் நடவடிக்கை எடுப்பது பற்றி பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் முசுவை மாவட்டம் மாத்திரமல்லாமல் மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை போன்ற பகுதிகளிலேயும் வெள்ளம் வருகின்றபோது ஊரையே அழித்துக்கொண்டு போய் விடுகின்றது. ஆகவே இந்த இடங்களையும் சேர்த்து பரிசீலனை செய்ய அரசு முன்வருமா? இது சம்மந்தப்பட்ட வகையில் அதிகாரிகள் செயற்குறிப்பு ஏதேனும் அனுப்பி இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, இதுகுறித்து தனி கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1981 பிப்ரவரி 2]

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, வைகை நதியின் வெள்ளத்தின் காரணமாக மதுரையின் ஒரு பகுதியிலே அடிக்கடி சேதம் ஏற்படுகின்றது. ஆகவே மதுரை நகரத்தில் வைகை ஆற்றின் இரு கரைகளிலும் சாலை அமைப்பதன் மூலம் இந்தச் சேதத்தைத் தடுப்பதற்கு அரசு ஒரு திட்டம் வகுத்திருந்ததே அது எப்போது அமல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பரீட்சார்த்தமாக சில பகுதிகளில் இப்போது கூட அவ்வாறு போடப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் தொடர்ந்து நடத்தப் பட வேண்டும் என்றுதான் அரசும் விரும்புகிறது. ஆகவே அதை விரிவுபடுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு வ. சத்தியமூர்த்தி: தலைவரவர்களே, வைகை சீரமைப்பு திட்டதின் கீழ் ஆற்றின் அருகிலே இருக்கின்ற கால்வாய்களின் கரைகளிலே மணலைதான் சரையாகப் போட்டிருக்கிறார்கள். ஆகவே சிறிது வெள்ளம் வந்தாலும் அவை சீக்கிரத்தில் அழிந்து விடும் தன்மையில் உள்ளன. எனவே புதிதாகச் சீரமைப்புத் திட்டம் தீட்டி அதனைச் செப்பனிடுகின்றபோது சிமெண்ட் கால்வாய்களாகப் போட்டால் நிரந்தரமான வகையில் அது மக்களுக்குப் பலன் தரும். ஆகவே அந்த வகையில் அமைக்க அரசு திட்டமிடுமா என்பதை விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை ஏற்கனவே அரசு கவனத்தில் கொண்டு இருக்கின்றது. அந்தக் கால்வாய்கள் நதியை ஒட்டி செல்வதாலோ அல்லது வேறு காரணங்களாலோதான் இவ்வாறு ஏற்படுகின்றது என்பதை அரசு ஆராய்ந்து பார்த்துத்தான் அவைகளை மாற்றியமைக்க வேண்டும் என்ற வகையில் அரசு இப்போது திட்டங்களைத் தயாரித்து வருகின்றது.

சிவகங்கை பகுதியில் பாசன வசதி

*வினா எண். 155 திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு நீர்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை பகுதியில் பெரியாறு பாசன விரிவுப் படுத்தும் வேலைகள் 10 ஆயிரம் ஏக்கருக்கு இன்னும் ஆரம்பிக்க படாமல் தாமதம் ஏற்படுவதற்கு காரணம் என்ன?

(ஆ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) சிவகங்கை வட்டத்தில் பெரியாறுபாசனத்தில் புதிய பகுதிகளைச் சேர்ப்பதற்கான ஆயகட்டு நிர்ணய வேலைகள் நடந்து வருகின்றன.

[1981 பிப்ரவரி 2

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருப்புவனம் வட்டாரத்தைச் சேர்ந்த தேனி, ஏனாதிமேல்பட்டி ஆகிய கிராமங்கள் வைகை பெரியாறு பாசனத்திற்குத் தொடர்பு இல்லாமல் இருக்கின்றன. ஆகவே பெரியாறு பாசனத்தை விரிவு படுத்துகின்றபோது இந்தப் பகுதிகளையும் சேர்த்துக் கொள்ள மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, சிவகங்கைப் பகுதியிலே இப்படி ஆயக்கட்டு, நான்—ஆயக்கட்டு ஆகிய இரண்டு பகுதிகள் அதாவது பெரியாறு பாசனத்தைப் பெறுகின்ற பகுதிகளுக்குப் பக்கத்திலேயே பாசனத்தைப் பெறாத பகுதிகளும் இருக்கின்றன. மானாமதுரையிலே இப்படிப்பட்ட பகுதிகள் இருக்கின்றன. இப்படி அங்கே பல்வேறு பகுதிகள் இருக்கின்றன. இது பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆகவே அவற்றைத் தனித்தனியாக அரசு நிச்சயமாக பரிசீலனை செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த பகுதிகளும் சேர்க்கப்படவில்லை என்பதை அரசு உணர்ந்திருக்கின்றது — அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, பெரியாறு பாசனத்தை விரிவு படுத்துகின்றபோது புதிதாக கிட்டத்தட்ட பத்தாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை பாசனத்தின் கீழ் கொண்டுவர முடியும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இதிலே நீண்ட காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த கால தாமதத்திற்கு என்ன காரணம்? இதனை விரிவுபடுத்துகின்ற போது கிழக்கு முகவை மாவட்டத்திலே உள்ள பரமக்குடி போன்ற பகுதிகளுக்கும் சேர்த்து விரிவுபடுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இந்தத் திட்டம் பற்றிய ஒரு திருத்த மதிப்பீட்டை அனுப்ப வேண்டும் என்று உலக வங்கியின் மத்திய நீர்வழிக்கழகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க விலைவாசி ஏற்றத்தைக் கணக்கிலே கொண்டு 41 கோடி ரூபாய் என்று இருந்த திருத்திய மதிப்பீடு 68 கோடி ரூபாய் என்ற அளவுக்கு வந்தது. மீண்டும் விலைவாசி ஏற்றத்தைக் கணக்கிலே கொள்ளும்போது அது 72 கோடி ரூபாயாக ஆகி இருக்கின்றது. இது ஒரு முக்கியமான காரணம். மேலும் அதிலே சேர்க்கப்படவேண்டிய பகுதிகள் அல்லது விடப்பட வேண்டிய பகுதிகள் என்று வருகின்றபோது உலக வங்கி தெரிவித்திருக்கின்ற கருத்துக்களின் அடிப்படையிலே சில இடங்களை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் நாமே தயாரிக்கின்ற திட்டத்தின் படியும் இன்னும் கூடுதலாக 20 ஆயிரம் ஏக்கர் சேர்க்கவேண்டி இருக்கின்றது. ஆகவே இவை எல்லாவற்றையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக நிறைவேற்றினால்

1981 பிப்ரவரி 2]

தான் இதுவரை பாதிக்கப்பட்ட பகுதிகள் எல்லாம் பயன் பெறும் என்ற அடிப்படையில் அரசு தீவிரமாக முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது. இதன் காலதாமதத்தை மத்திய அரசும் உணர்ந்து இருக்கின்றது. எனவே 1981—ஆம் ஆண்டு முடிக்கப்படவேண்டிய வைகைப் பெரியாறு கால்வாய்த் திட்டம் 1984—ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டிருக்கின்றது. 72 கோடி ரூபாய் செலவிலே இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல்—10 00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பவானிசாகர் அணையைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு பாசன வசதி

*வினா எண். 156—திரு. கே. ஜி. சுப்பிரமணியன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் அணைக்கட்டு சுற்றுப்புறத்தில் சுமார் 7 பஞ்சாயத்துக்கள் அடங்கிய நிலப்பரப்பில் குளத்துப்பாசனம் செய்வதற்குரிய அளவு அணையில் தண்ணீர் விட திட்டம் ஏதும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: பவானிசாகர் வாய்க்காலிலிருந்து பெற்றிக்குட்டையிலிருந்து கிரேன்நகர், விஜயமங்கலம் வழியாக ஊத்துக்குடிக்கு நொய்யாற்றிலிருந்து வருகிற தண்ணீரைக் கொண்டு அங்குள்ள குளம் குட்டைகளுக்கு தண்ணீர் அளிக்கும் வகையில் ஒரு திட்டம் அரசினிடம் இருக்கிறதா? ஏற்கனவே இது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது மனு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக் கேள்வி பவானிசாகர் அணைக்கட்டு சுற்றுப்புறத்தில் சுமார் 7 பஞ்சாயத்துக்கள் அடங்கிய நிலப்பரப்பில் குளத்துப் பாசனம் செய்வதற்குரிய அளவு அணையில் தண்ணீர் விடத் திட்டம் ஏதாவது உண்டா என்பதாகும்.

[1981 பிப்ரவரி 2

அந்தப் பஞ்சாயத்துக்களின் பெயர்களைச் சொல்லாமல் ஏழு பஞ்சாயத்துக்கள் என்று எந்தப் பஞ்சாயத்தின் பெயரையும் சொல்லாமல் கேட்டிருப்பதால் பதில் தெளிவாகச் சொல்லமுடிய வில்லை. ஆனால் இப்போது விளக்கமாக பெயர்களைச் சொல்லிக் கேட்கிறார்கள். தனிக்கேள்வி போட்டால் அது குறித்து விரிவான பதில் தரப்படும்.

அனந்தநாறு கால்வாய் லைனிங் திட்டம்

*வினா எண். 157— திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் ஓடும் அனந்தநாறு (Lining Scheme) திட்டம் என்ன நிலையில் உள்ளது?

(ஆ) ஒதுக்கப்பட்டுள்ள பணம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) மற்றும் (ஆ) : ரூ 246 இலட்சத்தில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனந்தனாறு கால்வாய் மற்றும் அதன் கிளைக் கால்வாய்களை சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளது.

திரு. மி. வின்சென்ட் : இந்தத் திட்டம் மூலம் எவ்வளவு ஏக்கர்கள் அதிகப்படியாக சாகுபடியாகிறது?, எவ்வளவு டன் உற்பத்தி அதிகரிக்கிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் 3,600 ஏக்கர் இருபோக நன்செய் நிலங் களுக்கு பாசனவசதி உறுதிப்படுத்தவும் 2,300 ஏக்கர் இருபோக நன்செய் நிலங்களின் பாசனப் பற்றாக்குறையைப் போக்கவும் வகை செய்யப்படுகிறது.

திரு. மி. வின்சென்ட்: இத்திட்டத்தைத் துவக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டதா? இதன் பெயரே அனந்தநாறுத் திட்டம். நாகர்கோவில் மக்கள் ஆனந்தமாக கொண்டாடு வதற்கு இந்தத் திட்டத்தை இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிந்த வுடனே ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இது ஒரு பயனுள்ள திட்டம் என்று அரசு கருதுகிறது. உணவு உற்பத்தியும் திட்ட ஆண்டு ஒன்றுக்கு 7,000 டன் கூடுதலாகக் கிடைக்கும் என்ற காரணத்தால் நிச்சயமாக ஆனந்தமாகக் கொண்டாடுவது போல் ஆனந்தமாகக் கொண்டாடுவதற்கு அரசுக்கு ஆட்சேபணையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 பிப்ரவரி 2]

திரு. டி. மணி : பாசனத்துறை பிரச்னைபற்றி, அனந்தநாறு திட்டம்பற்றிக் கூறினார்கள். இதேபோல் நெய்யாறு இடது கரைக் கால்வாயிலும், சித்தார்—பட்டணங்கால் கால்வாயிலும் சிமெண்ட் லைனிங் போடப்படாத இடங்களில் சிமெண்ட் லைனிங் போடுவதற்கு இந்த நிதி ஆண்டிலாவது அந்தத்திட்டத்தை விஸ்தரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தனிக்கேள்வி போடு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 158, 159, 160 மாண்புமிகு தொழில் அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன்களுக்கான வட்டிவீதம்

குறுகிய கால வினா எண். 8— திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கூட்டுறவு— சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நலிந்த மக்களின் கடன் சுமையை முன்னிட்டு கூட்டுறவு வங்கிகளில் அவர்கள் அடகு வைத்துள்ள நகைக்கடன்கள் மீதான வட்டி வீதத்தை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:—நலிந்த பிரிவினருக்கு குறிப்பாக கிராமங்களில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் கூட்டுறவு சங்கங்கள் வழங்கும் நகைக்கடன் களுக்கு வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தை 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக குறைக்க அரசு முடிவு செய்துள்ளது.

திரு. ஆர். மணிமாறன்: 15 சதவீதம் என்பது 14சதவீதம் ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறேன். அதேபோல் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் நகைக்கடன்களுக்கு எவ்வளவு வட்டி வசூலிக்கப்படுகிறது? மாநில கூட்டுறவு வங்கிகள் வசூலிப்பதை விட அது அதிகமானதா அல்லது குறைவானதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகள் நலிந்த பிரிவினருக்கு நகைக்கடன்கள் கொடுப் பதில் 16%-ல் இருந்து 18% வரை வட்டி வசூலிக்கிறது. ஆனால் தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகளும் சங்கங்களும் நலிந்த பிரிவினருக்கு இதுகாறும் 15% என நகைக்கடனுக்காக வசூலிக்க பட்டு வந்த வட்டி விகிதத்தை தற்சமயம் 14% ஆகக் குறைத் திருக்கிறது.

[1981 பிப்ரவரி 2

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுடமை ஆக்கப்பட்ட வங்கிகள் கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய நலிந்த, ஏழை மக்களின் வசதிகளை மேம்பாடு அடையச் செய்வதுதான் அதன் குறிக்கோள் என்று சொல்லப் பட்டது. அப்படியிருக்கையில், மாநில கூட்டுறவு வங்கிகளில் வட்டி விகிதம் குறைக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், இந்த நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் வட்டி விகிதம் குறைக்கப் படுமா? என்பதைப்பற்றி மாநில அரசு மத்திய அரசை வற்புறுத் துமா, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் கிராமப்புற பொரு ளாதாரத்தை வளர்ப்பதில் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளை விட சற்று அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், நாட்டு டமையாக்கப்பட்ட வங்கிகள் கிராமப்புற பொருளாதாரத்தை முன்னேற்றமடையச் செய்வதில் இன்னும் அதிகம் கவனம் செலுத்த வேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்தி யிருக்கிறது. அதேநேரத்தில், நகைக் கடன்கள் பேரில்கூட வட்டி விகிதத்தை நலிந்த பிரிவினருக்கு நாட்டுடமையாக்கப் பட்ட வங்கிகள் குறைக்க வேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர் களே, இந்த கிராமக் கூட்டுறவு சங்கங்களில் நகைக் கடன்களுக் காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை குறைவாக இருக்கின்றது என்று பொதுமக்கள் கோரிக்கையிடுவதால், அரசு இதற்கு கூடுதலான தொகையை ஒதுக்க முன்வருவார்களா? என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டுகளாக நகைக் கடன் கள் அதிகமாகி வருவதால், கிராமங்களிலே நலிந்த பிரிவினருக்கு உதவி செய்கின்ற வகையில், இன்னும் கூடுதலான தொகை ஒதுக்கப்படும்.

திரு. பி. எம். தங்கவேல் ராஜ்: மாண்புமிகு பேரவைத்தலை வர் அவர்களே, நாம் கொண்டுவந்த பல்வேறு கடன் நிவாரணச் சட்டங்களால், பிரைவேட் லெண்டிங் கிராமப்புறங்களிலே இல் லாமல் போய்விட்டது. ஆகவே, கூட்டுறவு சங்கங்களை அதிக மாக ஏற்படுத்தி, ஏழை விவசாயிகளுக்கு கடன் உதவி வழங்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு கடன் வழங்குவது வேறு; நகைக் கடன் என்பது வேறு. விவசாயிகள் இதுவரைக்கும் வாங்கிய கடனை திருப்பிக் கொடுத்தால், அவர்களுக்கு கடன் வழங்கப் படும். நகைக் கடனை நலிந்த பிரிவினருக்கு கொடுப்பது விரி வாக்கப்படும்.

1981 பிப்ரவரி 2]

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டேட் பாங்குகளில் 6½% வட்டி நகைக் கடன் களுக்கு வாங்கப்படுகின்றது. கிராமப்புற கூட்டுறவு சங்கங்களில், விவசாயிகள் ஏற்கெனவே கடன்பட்டுள்ள காரணத்தினால், நகை களை வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டிருக் கிறது. ஆகவே, அதற்கு இந்த அளவில் குறைந்த வட்டி கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் தகவல் இல்லை. தகவல் அறிந்து நான் கூறுகிறேன்.

திரு. எஸ். சிவராமன்: பேரவைத் தலைவர் அவர்களே கூட்டுறவு சங்கங்களிலே விவசாயிகளுக்கு கடன் கொடுக்கின்ற போது, இந்த கடன் ரூ. 3,000 என்ற அளவில்தான் கொடுக் கிறார்கள். இந்த ரூ. 3,000 என்பதை அதிகரித்துக் கொடுப்ப தற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் நல்ல ஆலோசனையை அரசு ஏற்றிருக்கிறது. இது குறித்து அரசு தீவிர மாக பரிசீலித்து வருகிறது; நடவடிக்கை எடுக்கப்படும்.

Tax on sale of tickets for Cricket Matches

Q.NO.141.—THIRU N.KITTAPPA: Will the Hon.the Minister for Revenue be pleased to State:

(a) Whether any tax is collected for the sale of tickets by the Cricket Association in Madras for the test matches; and

(b) if so, the details of the tax collected during the last five years on this account?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

[1981 பிப்ரவரி 2

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிரிக்கட் விளையாட்டை '***' விளையாட்டு என்று சொல்வதால், இதிலே பல இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வருவதால், இதற்கு இன்றையதினம் ஒரு நிரந்தரமான ஸ்டேடியம், நிரந்தரமான தலைவர், நிரந்தரமான காரியதரிசி எல்லாம் இருப்பதால், இந்த அரசாங்கத்திற்கு கூடுதல் வருமானம் வருகின்ற வகையிலே, இதற்கு வரி விதிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விளையாட்டை எல்லோரும் விளையாடுகிறார்கள். எனவே, இதை '***' விளையாட்டு என்று சொல்ல வேண்டியதில்லை. நானே விளையாடியிருக்கிறேன். எனவே, அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 1933-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம் கொண்டு வரப்பட்டு நாடகம், இசை நிகழ்ச்சி, திரைப்படங்களுக்கு வரி போடப்பட்டது. பின்பு எல்லாவற்றுக்கும் அவ்வாறு வரி போடவேண்டியதில்லை. கட்டணம் செலுத்துகின்ற நபர்களுக்கு மட்டும் போட்டால் போதுமென்ற நிலையில் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி போடப்படுகிறது. 1958-ல் ஒட்டப்பந்தயம், விளையாட்டு இவைகளுக்கெல்லாம் வரி தேவையில்லையென்று நீக்கப்பட்டது. கிரிக்கட் விளையாட்டு வருமானம் உள்ள விளையாட்டு என்று சொன்னார்கள். அதைப் பற்றிய தகவல் பெறப்பட்டு அரசு ஆராயும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : கிரிக்கெட் விளையாட்டைப் பார்ப்பதற்கு டிக்கட் வாங்குகிற நேரத்தில் 500 ரூபாய், ஆயிரம் ரூபாய் என்று கொடுத்து வாங்குகிறார்கள். இவ்வாறு அதிகமான தொகை வசூலிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு வருகிற காலங்களிலாவது வரி விதிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசு இதைப் பற்றி யோசிக்கும்.

திரு. சு. பாலன் : நகராட்சிக்குச் சொந்தமான நேரு ஸ்டேடியத்தில் முன்பு பல முறை இந்த கிரிக்கெட் விளையாட்டு நடைபெற்றதன் மூலம் மாநகராட்சிக்கு நல்ல வருவாய் வந்தது. இப்போது அங்கு நடக்காமல் எம்.எ.சி. இரவுண்டில் நடக்கிறது. மாநகராட்சி ஸ்டேடியத்திலும் அதை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1981 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதற்கென்று சரியான அமைப்பு ஒன்றை வைத்துக்கொண்டு எந்த ஸ்டேடியத்தில் விளையாட்டை நடத்துவது என்பதை அவர்களே நிர்ணயிக்கிறார்கள். அதற்கும் அரசுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

திரு. மி. வின்சென்ட் : கிரிக்கெட் விளையாட்டில் மிகவும் பார்வமுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு காம்ப்ளிமென்டரி டிக்கட் அல்லது கன்செஷன் டிக்கட் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் இந்த நாட்டு மக்கள் எல்லோரும் சமமாகத்தான் கருதப்படுவார்கள்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : கிரிக்கெட் விளையாட்டுகளில் எல்லோருமே கலந்து கொள்கிற நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதற்கு வரி விதித்தது பற்றி ஆலோசிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். கிரிக்கெட் விளையாட்டை மேலும் அபிவிருத்தி செய்ய, ஊக்கமூட்ட அந்தவரி விதிப்பை விதிக்காமல் இருக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ? அப்படி விதிக்க வேண்டுமென்றாலும் டெஸ்ட் பந்தயங்களுக்கு மட்டுமே அந்த வரியை விதிக்க அரசு கருதுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசு யோசனை செய்யும்.

திரு. ஆர். மணிமாறன் : பாராளுமன்றத்தில் கிரிக்கெட்டுக்கு என்று தனியாக டீம் அமைக்கப்பட்டிருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்களைக்கொண்டு அத்தகைய கிரிக்கெட் டீம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைத்தால் நல்லது.

குடும்பக் கட்டுப்பாடு போன்ற கருத்துத் திரைப்படங்களுக்கு வரி விலக்கு.

*வினா எண். 142. திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

குடும்பக் கட்டுப்பாடு, தீண்டாமை ஒழிப்பு முதலிய கொள்கைகளைப் பிரசாரம் செய்யக் கூடிய திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பொது மக்களுக்கு நல்ல கருத்துக்களை எடுத்துக் காட்டும் படங்களுக்கு வரி விலக்களிக்கக் கோரும் கோரிக்கைகளை அரசு பரிசீலித்து அவைகளின் தகுதியின் அடிப்படையில் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து வருகின்றது.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்பு முதலிய கொள்கைகளை பிரச்சாரம் செய்யக்கூடிய வரைப்படங்களுக்கு வரிவிலக்கு கொடுப்பதற்கு ஆலோசிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு அந்தப் பிரச்சாரத்தை சிறு குழந்தையிலேயே உணர்வை ஊட்டக்கூடிய முறையிலே பள்ளி மாணவர்களுக்கு கட்டாயமாக அந்தத்திரைப் படங்களை போட்டுக் காட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, மக்களுக்கு நல்ல கருத்துக்களை தருகின்ற படங்கள் வியாபார நோக்கத்திலே முதலிலே போய் நட்டம் ஏற்பட்டால் பிறகு அரசுக்கு வருகிறபோது நல்ல கருத்துக்கள் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற முறையிலே அதற்கு வரியிலிருந்து விலக்கு கொடுக்க வேண்டுமென்று அரசு எண்ணம் கொண்டிருக்கிறது. மற்றவைப் பற்றிச் சொல்கிறார்கள், அதுபற்றி எனக்குத் தெரியாது.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, குடும்பக்கட்டுப்பாடு தீண்டாமை ஒழிப்பு, சமூக சீர்திருத்தம் பற்றிப் பிரச்சாரம் செய்யக்கூடிய படங்கள் இதுவரை எத்தனை வெளிவந்திருக்கின்றது. எத்தனை படங்களுக்கு அரசு வரி விலக்கு அளித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அப்படிப்பட்ட படங்கள் வியாபார நோக்கத்தோடு எடுக்கப்பட்டு பிறகு நட்டம் வந்தால் தான் அரசுக்கு வரும். அந்த படங்கள் பற்றி அரசுக்கு வந்த பிறகு அரசு அதுபற்றி நடவடிக்கை எடுக்கிறது; அப்படி வந்த படங்கள் இரண்டு, மிருகங்களின் நடவடிக்கைகள் பற்றி கல்வி புகட்டும் திரைப்படம் ஒன்று. இரண்டாவது, அதிசய மிருகங்களும், அற்புத பறவைகளும், என்பது. உலகத்திலே உள்ள காட்டுமிருகங்கள், பறவைகள் பற்றிய படங்கள். இந்த இரண்டுக்கும் தான் அரசு வரிவிலக்கு செய்திருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, குடும்பக்கட்டுப்பாடு, தீண்டாமை ஒழிப்பு போன்ற கொள்கைகளைப் பிரச்சாரம் படங்கள் என்றால் இனிமேல் ரிலீஸ் ஆகக்கூடிய படங்களா? அல்லது முன்னமேயே எடுக்கப்பட்ட படங்களா? தீண்டாமை ஒழிப்பு பற்றி பிரச்சாரம் செய்யும் தங்க ரத்தினம் படத்திற்கும், குடும்ப கட்டுப்பாடு பற்றி பிரச்சாரம் செய்யும் சர்வர் சுந்தரம் படத்திற்கும் வரிவிலக்கு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : முதலிலேயே நான் சொல்லியிருக்கிறேன். மக்களுக்கு நல்ல கருத்துக்களை புகட்டுகிற எந்தப் படமாக இருந்தாலும் வரியிலிருந்து விலக்கு அளிப்பது பற்றி அரசு யோசனை செய்யும், ஆவன செய்யும்.

திரு. மு. ப. முனுசாமி: குடும்பக்கட்டுப்பாடு, தீண்டாமை ஒழிப்பு பற்றி சொல்கிற காட்சிகள் தவிர மற்ற எந்தக் காட்சிகளும் இல்லாத படங்களை அரசு எடுத்துக்காட்ட முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அரசு இப்போது படங்களை எடுத்துக்காட்டுவதிலே மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய முறையிலே குடும்பக்கட்டுப்பாடு பற்றி எடுக்கும் என்று கருதுகிறேன். மற்றவைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : தீண்டாமை ஒழிப்பு படத்தை வியாபார நோக்கத்திலே எடுத்து பெரிய லாபம் சம்பாதித்தவர்கள் அவர்களே தீண்டாமையை விடுவதில்லை என்பது பற்றி அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அப்படிப்பட்டவைகள் பற்றி எனக்குத் தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்பு

உரிமைப்பிரச்சனை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவை 246- வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் பற்றி டாக்டர் சமரசம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதை இன்று பேரவையில் திரு. ரகுமான்கான் அவர்கள் இல்லாததால் எடுத்துக் கொள்ள முடியவில்லை எனவே இந்தப் பிரச்சனை பிப்ரவரி 4 ஆம் தேதி யன்று எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: 6 அவர் பிப்ரவரி 4 ஆம் தேதி அன்று வரவில்லை என்றால்....

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இன்று வரவில்லை , எடுத்துக் கொலை, அதை 4ஆம் தேதி அன்று ஆலோசிக்கலாம்.

[1981 பிப்ரவரி 2

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி- கன்னியாகுமரி ரயில் பாதையை திருவனந்தபுரம் டிவிஷனிலே சேர்க்கப்படுவது தமிழக மக்களுடைய வேலை வாய்ப்பை ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு என்றால் அதையெல்லாம் அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்கள் வேறு அலுவலுக்கு செல்வதற்கு முன்னதாக தங்களிடத்திலே ஒரு உதவியை நாடுகிறேன். 23 ஆம் தேதி நான் பேசியபோது எரிசாராயம் வெளிமாநிலங்களுக்குக் கடத்தப்பட்டது சம்பந்தமாக சிலப் புகார்களைக் கூறினேன், அப்போது நம்முடைய ரெவின்யூ எக்சைஸ் துறை அமைச்சர் அவர்கள் அவையிலே அது சம்பந்தமான கோப்புகளையும் விவரங்களையும் கொடுப்பதாகக் கூறினார்கள். தமிழ் நாட்டிலிருந்து ஆந்திரத்திற்கும், கர்நாடகத்திற்கும், கேரளாவிற்கும் கோவாவிற்கும் கடந்த 8 மாத காலத்திலே போயிருக்கிறது என்று அறிகிறோம். அமைச்சர் அவர்கள் அந்தக் கோப்புகளை இங்கே வைக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. தங்களுடைய அறையில் வைத்தால் கூட நாங்கள் பார்க்கலாம்.

[முற்பகல் 10.20]

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அதைப்பற்றி அன்றைய தினமே கேட்டிருக்கலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நாளைக்கு முதலமைச்சரின் பதில் வருகிறது. அதற்கு முன் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவரிடம் சொல்லி கேட்கச் சொல்லியிருக்கலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இன்றைக்கு சாயந்தரம் முடிந்தாலும் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுப்பற்றி நேற்று முன் தினமே கொடுத்திருக்கலாம் : அப்படியில்லாமல் இன்றைக்கு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள்.

1981 பிபரவரி 2]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அமைச்சரவர்கள் இண்டர்வீன் செய்து பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். அப்படியில்லாததால் என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுத்து மூலமாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஹவுசில் சொன்னதற்கு ஹவுசில் தான் கொண்டு வர முடியும்; இங்குதான் எங்களுக்கு புரொடெக்ஷன் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுப்பற்றி எனனுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இது குறித்து நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குச் சொல்கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பெற்றிருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். ''அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருப்பது குறித்தும், ஆசிரியர்கள் கைது குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு, திருவாளர்கள் ரா. உமாநாத், ப. நெடுமாறன், ஆர். சுந்தரமூர்த்தி, எஸ். ஆண்டித்தேவர், நா. சுந்தரராஜ், எஸ். இராமலிங்கம், மு. அப்பாதுரை, செ. சிவசாமி, எம். ஆறுமுகம், சே. அழகர்சாமி, ஆர். கருப்பையா, பி. உத்திராபதி, தி கா. நல்லப்பன், என், எஸ், வி. சித்தன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், என். வரதராசன், ரா. கிருஷ்ணன், டி. மணி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன். முதலில் திரு. ரா. உமாநாத் அவர்கள் பேசுவார்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, இது மிகவும் ஒரு முக்கியமான விஷயமாக இருப்பதால்தான் அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று பலதடவைகள் உங்களை வற்புறுத்தினேன். இன்றைக்கு அனுமதித்திருப்பதற்காக மிக்க நன்றி. இன்று இந்தப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் அநேகமாக பல்கலைக்கழகம் பூராவும் மாணவர்கள் அன்றி, புரோ—சான்சலர், வைஸ்—சான்சலர் அன்றி, ஹைட் ஆஃப் டிபார்ட்மெண்ட்ஸ் அன்றி சமையல் அறை உள்பட சிறையில்தான் என்றால் அது மிகையாகாது என்று நான் சொல்வேன். இப்பொழுதுகூட போராட்டம் முடியவில்லை; பிக்கெட்டிங்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது ஆகவே கைது நிறுத்தப்பட்டிருக்கிறது. வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

எனவே, இங்கே விவாதிக்க வேண்டிய அவசியம் என்னவென்றால், அரசாங்கம் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியதன் விளைவாக இப்பொழுது பெரிய சிச்சுவேஷன் வந்திருக்கிறது. 1928 ஆம் ஆண்டுச் சட்டத்திற்குத் திருத்தங்களை அவர்கள் கேட்டாலும்கூட, அதில் பிரதானமான திருத்தமாகக் கேட்பது, மதுரை காமராஜ் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவைகளிலே வைஸ்—சான்சலருக்கு இருக்கின்ற பவர்ஸ் அந்த யூனிவர்சிட்டியிலே மட்டும் புரோ—சான்சலருக்கு இருக்கிறது; அது கூடாது.

It must be brought on a par with Madurai Kamaraj and Madras universities.

இது பிரதானமானது; மற்றத் திருத்தங்களும் வேண்டும்; இதுதான் பிரதானமான திருத்தம் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் சமீபத்தில் கல்வியமைச்சர் அவர்கள் கூறுகிறபொழுது கொடுத்த வாக்குறுதியை ஒத்துக்கொள்கிறார்கள்; ஆனால் வாக்குறுதியின் தன்மையைப்பற்றிச் சற்று மாறிச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த முக்கியமான வாக்குறுதியைப் பற்றிக் குறிப்பிடாமல் வேறு ஆராய்ச்சித் துறையிலே வளர்ப்பதற்காக என்றெல்லாம் அவர் கூறுகிறார். அது சரியல்ல. அன்று வாக்குறுதி கொடுக்கிறபொழுது, கவர்னர் உரையிலேயும், புரோ—சான்சலருக்கு மற்ற யூனிவர்சிட்டிகளில் இல்லாத பவர்ஸ் இருக்கின்றன என்ற கான்ட்ரவர்சி தான், சிளர்ச்சிக்கு நடுவிலேதான் அனைய கவர்னர் உரையிலேயும் சரி, பிறகு வந்திருக்கின்ற பல்வேறு கேள்விகளுக்கும் கல்வியமைச்சரவர்கள் பதில் கொடுத்திருந்தார்கள். ஆகவே, அந்த வாக்குறுதியைப் பொறுத்தவரையில் புரோ-சான்சலருக்கு இல்லாத பவர்ஸ் அவருக்கு இருக்கிறதை வைஸ்-சான்சலருக்கு—மற்றவர்களுக்கு இருக்கிறதைப்போலக் கொடுக்க வேண்டுமென்ற அமென்மெண்டைப்பற்றி அரசாங்கம் இன்னும் அவர்களுடைய கமிட்மெண்டைப்பற்றித் தெளிவாகச் சொல்லவில்லை. சமீபத்திலே சீஃப் மினிஸ்டர் அவர்கள், கொடுத்த வாக்குறுதிகளை மதிப்பேன் என்று சொல்கிறபொழுது இந்தக் குறிப்பிட்ட பிரதான, உயிரான வாக்குறுதியைப் பற்றி ரீ—ஆக்ஷன் கொடுக்கவில்லை என்பதால் பிக்கெட்டிங்கை நிறுத்தினாலும் கூட மறியல் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

அந்த புரோ—சான்சலர் பற்றி உங்களுக்குத் தெரியும், எரடிட்டரி சக்சஷன், அதாவது குடும்பத்தின் பரம்பரையாகவே அங்கே இருந்து கொண்டிருக்கிறது. சென்ட், சிண்டிகேட்டில் எக்ஸ்—அபிஷியோ மெம்பர்களை நியமிப்பதற்கு புரோ சான்சலருக்கு அதிகாரம் இருக்கிறது. இதனால் என்ன விளைவு ஏற்படுகிறது? புதுக்கோட்டை ராஜா பதவி போய் ரொம்ப நாளாயிற்று.

He has got a representative,

ஆனால் புதுக்கோட்டை திவானுக்குக்கூட அங்கே பிரதிநிதித்துவம் இருக்கிறது. டிஸ்டிரிக்ட் போர்ட் போய் எத்தனை வருஷம் ஆயிற்று? டிஸ்டிரிக்ட் போர்ட் உறுப்பினர்களுக்கு பிரதிநிதி என்று அங்கே இருக்கிறது. அதெல்லாம், ப்ரோ சான்சலர் தனக்கொரு மெஜாரிட்டி உண்டாக்குவதற்காக என்னென்ன முறையிலோ நியமனம் செய்ய வேண்டுமோ அந்த முறையெல்லாம் கையாளப்படுகிறது.

போஸ்டல் பேலட் எதற்கு? மனிதர் ஊரிலே இல்லையென்றால் அதற்கு போஸ்டல் பேலட் இருக்கிறது. மனிதர் ஊரிலே இருக்கிறார். அவர் போஸ்டலிலிருந்தான் போட்டு அனுப்ப வேண்டுமாம். அது எதற்கு? இன்ஃப்ளுயன்ஸ் யூஸ் பண்ணி, அவரிடம் சைன் வாங்கிடத்தான் போஸ்டல் பேலட் இருக்கிறது. அந்த முறைகேடுகள் எல்லாம், அப்படிப்பட்ட சர்வாதிகார அதிகாரங்கள் பூராவும் ப்ரோ-சான்சலருக்கு இருப்பதால்தான்—இன்றைக்குக் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

18 ஆண்டுக்காலம் கம்ப்ளீட் பண்ணியிருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு இப்பொழுதுதான் கன்ப்பர்மேஷன் வருகிறது. அப்படி 250 ஆசிரியர்களுக்கு அந்த நிலைமைகள். அதனால்தான் அந்த அமெண்ட் மண்ட் ரொம்ப முக்கியமானது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல், ஊழல்கள் என்று சொல்லும்போது நான் கவர்னர் உரையிலே பேசுகிறபொழுது ஒரு விஷயத்தைச் சொன்னேன், டெப்பாசிட்களை, ப்ரோ-சான்சலர், நேஷனலைட்ஸ் அல்லாத, தேசியமயமாக்கப்படாத பிரைவேட் பாங்கிலே கொண்டுபோய் வைக்கிறார் என்று என்னிடம் பல பாங்குகள் பெயர்கள் இருக்கின்றன. நோக்கம் என்ன?

நான், நான்—நேஷனலைஸ்ட் பாங்கிலே போய் டெப்பாசிட் வைத்தால், எனக்கு இன்டெரெஸ்டிவ் கமிஷன் கிடைக்கும். பணம் சர்க்கார் கொடுக்கிறது. அந்தப் பணத்தை, தேசியமயமாகாத பாங்கிலே, ப்ரோ-சான்சலர், டெப்பாசிட் செய்து வைத்தால், இன்செண்டிவ் கமிஷன் அவருக்குப் போகும், போகிறது.

அதேமாதிரி - இன்னொன்றும் கிடைக்கிறது. அந்த ப்ரைவேட் பாங்கிலே ப்ரோ-சான்சலர் சர்க்கார் பணத்தைக் கொண்டு போய் வைத்தால், அவர் நடத்தக்கூடிய, ப்ரோ-சான்சலர் நடத்தக்கூடிய, ஏராளமான பிரைவேட் கம்பெனிகள் உண்டு, இன்டஸ்ட்ரீஸ் உண்டு. அந்த இன்டஸ்ட்ரீசுக்கு, அவர் அந்த பாங்கிலே டெப்பாசிட் வைத்திருக்கிறாரே என்ற ஒரு காரணத்திற்காக, அவருடைய சொந்த இன்டஸ்ட்ரீசுக்கு லோன்ஸ், மற்றும் என்னென்ன சலுகைகள் வேண்டுமோ, அவ்வளவும் கிடைக்கிறது. அப்படியும் அதிகாரம் துர்பிரயோகப்படுத்தப்படுகிறது.

அதே மாதிரி, வங்கியிலே ஆளைச் சேர்ப்பதற்குக் கோட்டாவும் கிடைக்கிறது. அந்த முறை, இந்த அதிகாரம் அவர் கையிலே வருப்பதாலே, அந்த முறைகேடுகள் நடக்கின்றன.

[திரு. ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 2

ஒரு முக்கியமான விஷயம், எல்லோரும் ஆச்சரியப்படுவீர்கள். கணக்குகளிலே, ரிப்போர்ட்டிலே எல்லாம் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று சொன்னால், Golden Jubilee Hall இருக்கிறது Students Health Centre இருக்கிறது, Social Science Block இருக்கிறது, Teacher Training Building இருக்கிறது, Humanity Block இருக்கிறது, என்று கட்டிடங்கள் இருக்கின்றன என்று அடிக்கடி ரிப்போர்ட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் போய்ப் பார்த்தால் கட்டிடமே, காணோம்.

நான் படித்த எந்தக் கட்டிடமும் அண்ணாமலை யூனிவர்சிட்டி ப்ரெமிஸஸில் காணோம். 5ட் மீன்ஸ் அரசாங்கத்தினுடைய பணத்தை வாங்கி, எப்படியோ செலவு செய்து, கட்டிடங்கள் கட்டப்பட்டதாகப் பொய்யாக, கணக்கிலே எழுதப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லவிரும்புகிறேன். அந்த கட்டிடங்களை நான் தேடிப்பார்த்தேன். புஸ்தகத்திலே இருக்கிறது. ஆனால், கேம்பஸில் இல்லை. அதனாலேதான் இந்த முக்கியமானவிஷயங்களை டிஸ்கஸ் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒரு முக்கியமான விஷயம். இவ்வளவு விவகாரங்கள் வந்து வெடித்திருக்கும்போது, கவர்ன்மெண்ட் ஹாண்டில் பண்ணுவதிலும் தவறிருக்கிறது. அதை டிஸ்கஸ் பண்ண வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அங்கே 144 சமீபத்தில் போடப்பட்டிருக்கிறது. உங்களுக்குத் தெரியும். தலைவர் அவர்களே, 144 போட வேண்டுமா, வேண்டாமா என்பதை, லோக்கல் மாஜிஸ்டிரேட்தான் அசெஸ் பண்ணுவார். சிச்சுவேஷனை அவர்தான் அசெஸ் பண்ணுவார். மாஜிஸ்டிரேட் ஆர்டரில்தான் இருக்க வேண்டும். எக்சிக்யூடிவ் ஆர்டர் போடப்படுவதில்லை. அது, மாஜிஸ்டிரேட் அசெஸ்மெண்ட். மாஜிஸ்டிரேட் அசெஸ்மெண்டில் 144-க்கு இடம் இல்லை. ஏனென்றால், 24ஆம் தேதி, சர்வகட்சி கூட்டத்திற்கு அங்கே இருக்கிற, எஸ். பி.-யும், கலெக்டரும் பர்மிஷன் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, பர்மிஷன் கொடுத்ததிலிருந்து என்ன தெரிகிறது? லோக்கல் அத்தாரிட்டீஸ் பொறுத்த வரையிலும், 144 போடுவதற்கு எந்த சர்கம்ஸ்டான்சும் இல்லையென்பது, 24ஆம் தேதி சர்வகட்சிக் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி கொடுத்ததிலிருந்து தெரிகிறது. ஆனால் திடீரென்று 144. நான் கூறவிரும்புகிறேன். அரசாங்கம் மறுப்பதாக இருந்தால் சொல்லட்டும். 144 ஸ்தலத்திலே அசெஸ் பண்ணி போடப்பட்டது அல்ல. இங்கிருந்து, கோட்டையிலிருந்து 144 போடுவதற்கு உத்தரவு போட்டுதான், 144 போடப்பட்டது என்பதுதான் நான் கூறுவது—எனக்கு வந்த தகவலின் அடிப்படையில்....

1981 பிப்ரவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பேச வேண்டும். கவர்னர் உரைமீது விவாதம் மாதிரி போய்க் கொண்டிருந்தால், அதற்குள் அண்ணாமலை யூனிவர்சிட்டியை கட்டியே முடித்து விடலாம் போல் இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: இந்த பாய்ன்ட்டோடு முடித்துவிடுகிறேன். என்னுடைய லிமிட் தெரியும். ஆகவே, இங்கிருந்து 144 உத்திரவு அனுப்பப்பட்டு, 24ஆம் தேதி கூட்டம் கூட்ட கொடுத்த பர்மிஷன் கான்சல் பண்ணப்பட்டுஇருக்கிறது. ஆனால் நான் கவனத்திற்கு கொண்டு வர விரும்புவது, 25ஆம் தேதிக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சிப் பொதுக்கூட்டம் போடுவதற்கு பர்மிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்களே யோசித்துப் பாருங்கள். இது என்ன நியாயம்? கூட்டம் போட அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது, 144 இருக்கும்போது, அண்ணாமலைப் பல்கலைக் கழக விவகாரம் பற்றிய சர்வ கட்சிக் கூட்டம் கான்சல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அந்த மாதிரி பிரச்னைகள் வந்திருப்பதாலே இவர்கள் அரெஸ்டெட் சஸ்பன்ட் செய்திருக்கிறார்கள். நான் இப்பொழுது விவாதிக்க வேண்டியது அவசியம் என்று சொல்கிறபொழுது, அவர்கள் கைதாவது, மறியல் செய்வது ஆகியவற்றை சஸ்பென்ட் பண்ணியிருப்பதை ஓர் நல்ல வாய்ப்பாக அரசாங்கம் கருதி அவர்கள் அத்தனை பேரையும்விடுதலை செய்து அவர்களுடைய பிரதிநிதியை முதலமைச்சரே அழைத்துப் பேசுவாரேயானால் அந்த அமெண்ட்மெண்ட் உள்பட அவ்வளவும் அன்டர்ஸ்டேன்டிங்கில் வந்து, இந்த விஷயம் அண்ணாமலை யூனிவர்சிட்டியில் மட்டுமல்ல, மாநிலம் பூராவும் பயன்படுத்த ஒரு வாய்ப்பை, கிடைத்த அந்த வாய்ப்பை அரசாங்கம் பயன்படுத்துவதற்காகக் கிடைத்த அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டு இது குறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.30]

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கடந்த 6 மாத காலமாக சரிவர இயங்க முடியாத சூழ்நிலை உருவாகி, அங்கே ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் தொடர்ந்து போராட்டத்திலே ஈடுபட்டு இன்றைக்கு 750க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், ஊழியர்கள், அலுவலர்கள், ஆராய்ச்சியாளர்கள் சிறை பிடிக்கப்பட்டு இருக்கிற பரிதாபகரமான சூழ்நிலை அங்கே உருவாகியிருக்கிறது. அதிலும் சென்ற ஜூலை மாதத்திலே நம்முடைய மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் முன்னாலே ஒரு முத்தரப்பு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை இன்றைக்கு நிர்வாகம் முழுமையாக அமல் நடத்த மறுப்பதனால்தான், மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும் உள்ளவர்களின் போராட்டம் அங்கே வெடித்தது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] [1981 பிப்ரவரி 2

அதிலும் குறிப்பாக 20 ஆண்டுகாலம் வரை அங்கே பணியாற்றியவர்களின் வேலை நிரந்தரமாக்கப் படவில்லை. ஏறத்தாழ 200-க்கும் மேற்பட்டவர்கள் அங்கே நிரந்தரமில்லாமல் இருக்கிறார்கள். ஒரு பல்கலைக் கழகத்தில் 20 வருடகாலமாக ஆசிரியர்கள், பேராசிரியர்கள் பணிகள் நிரந்தரமாக்கப் படாத ஒரு சூழ்நிலை அங்கே ஏற்பட்டதை, கல்வி அமைச்சர் அவர்கள் மிகக் கடுமையாகக் கண்டித்தது எனக்குத் தெரியும். அப்படி இருந்தும் கூட, அந்த நிர்வாகம் இன்னமும் பிடிவாதமான போக்கிலே மறுத்துவருகிறது. அந்த முத்தரப்பு ஒப்பந்தத்தில் செய்யப்பட்டதை ஏற்றுக் கொள்ளத் தவறியதால், இன்னமும் அதை அமல் நடத்தாததன் விளைவாகத்தான் ஆசிரியர்கள் போராட்டம் மீண்டும் வெடித்திருக்கிறது.

நாமெல்லாம் அங்கே பயின்றவர்கள். அமைச்சர்கள் வரிசையிலேயும் விற்றிருக்கிறார்கள். எதிர்கட்சி வரிசையிலேயும் நிறைய நண்பர்கள் விற்றிருக்கிறார்கள். அந்தப் பல்கலைக் கழகங்களில் ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை. அந்தப் பல்கலைக் முறையிலே இயங்கவேண்டும். தமிழ்நாட்டுக்குப் பெருமையும், தமிழின் பெருமையும் உணர்த்துக்கின்ற பல்கலைக் கழகமாக அது தொடர்ந்து இயங்கவேண்டும் என்பது அவையில் உள்ள அனைத்து நண்பர்களின் எண்ணம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அங்கே இருக்ககூடிய சூழ்நிலையை அறிந்துதான் சென்ற ஆளுநர் உரையிலே இந்த அரசின் சார்பிலே, அந்தப் பல்கலைக் கழகத்தின் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டது. 1928 ஆம் ஆண்டிலே வகுக்கப்பட்ட அந்தச் சட்டம், இன்றைய சூழ்நிலைக்கு ஏற்புடைத்தாக இல்லை. ஆகவே அதற்கான சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டு 6 மாத காலம் ஆகிவிட்டது. அந்தச் சட்டத் திருத்தத்தை விரைவிலே கொண்டு வந்து, அந்தப் பல்கலைக் கழகத்தை சீரமைப்பதில் இந்த அரசு ஈடுபட வேண்டும். அதற்கான முயற்சிகளை நீங்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் போராட்டத்தை முடிப்பதற்காக ஆசிரியர்கள் முன் வந்து போராட்டத்தை நிறுத்தியிருக்கிறார்கள். அரசு இந்த சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சிறையிலே இருக்ககூடிய ஆசிரியர்கள், அலுவலர்கள் அத்தனை பேர்களையும் எந்த நிபந்தனையும் இல்லாமல் உடனே விடுதலை செய்ய வேண்டும். அவர்களை விடுதலை செய்தால்தான் ஆசிரியர்கள் வேலைக்குத் திரும்பினால்தான் பல்கலைக் கழகத்தைத் திறக்க முடியும். மாணவர்கள் கல்வி பயில முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆராய்ச்சியாளர்கள் மீது நிர்வாகம் எத்தகைய பழிவாங்கு வரா கைகளில் ஈடுபடாது என்பதற்கு அமைச்சர் அவர்கள்

[1981 பிப்ரவரி 2] [திரு. ப. நெடுமாறன்]

அந்த உறுதிமொழியினை இந்த அவையிலே அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் நிர்வாகத்தின் போக்கு அதற்கு உகந்ததாக இல்லை. அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக இருந்து, நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்த முழு முயற்சி எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்த விரும்புகிறேன். சென்ற ஜூலையிலே செய்யப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தை உடனடியாக அமலுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்கும், இது குறித்து விரிவாக விவாதிக்கவேண்டும் என்பதற்கும் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். சுந்தரமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் காலவரம்பின்றி மூடியிருப்பதைப் பார்க்கிற போது யாரும் கவலைப் படாமல் இருக்க முடியாது. ஆனால் அரசுக்கு அந்தக் கவலை இருக்கிறதா என்றால் இல்லை என்றே நான் கருதுகிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள் மேலவையில் கூட உறுதிமொழி தந்து இருக்கிறார்கள். சட்டம் சீர்திருத்தம் செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த உறுதிமொழியை ஏற்று கல்லூரிக்குத்திரும்ப வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆனால் போராடுகின்ற ஆசிரியர்களும், ஊழியர்களும், ஆராய்ச்சியாளர்களும் சிறையில் இருக்கிறபோது இந்த உறுதிமொழியைக் கொடுப்பார்களானால், அவர்கள் எவ்வாறு கல்லூரிக்குச் சென்று பழையபடி பணியாற்ற முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் போராட்டம் என்ன காரணத்திற்காக அங்கே நடத்தப்பட்டுவருகிறது என்று சொன்னால், அந்தப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகாலமாக நடைபெற்று வரும் ஊழலை ஒழிக்க வேண்டும் என்பதற்காகத்தான் என்று சொல்லக் கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் என்று சொல்லக் கேட்கிறேன். கடந்த சூலை மாதம் தமிழக ஆளுநர் அவர்கள் சட்டமன்றப்பேரவை—மேலவை கூட்டவை கூட்டத்தில் அறிவித்த நாளிலிருந்து போராட்டம் நடைபெற்று வருகிறது. அந்தப் போராட்டம் தவிர்க்கப்பட்ட முறையில் நடத்தப் பெறவில்லை. அங்கேயுள்ள ஆராய்ச்சியாளர்கள் ஆசிரியர்கள், உணவு விடுதி காப்பாளர்கள் என்று அனைவரும் சேர்ந்து 20-1-80 முதல் அந்தப் பல்கலைக் கழகத்தை அரசுடமையாக்க வேண்டும் என்று போராட்டம் நடத்தி வருகிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே திரு. உமாநாத் அவர்கள் விளக்கமாக இதுபற்றி பேசிவிட்டார். ஆகவே, சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. ஆர். சுந்தரமூர்த்தி: அங்கே நடைபெறுகிற போராட்டத்தை விளக்குவதற்காக சிதம்பரம் நகரில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அந்தப் பொதுக்கூட்டத்தில் பேச நானும் அன்றையதினம் சென்று இருந்தேன். ஆனால் அங்கே

144 தடை உத்தரவு போட்டு, அந்தக் கூட்டத்தை தடை செய்து விட்டார்கள். ஆனால் அதற்கு மறுநாள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகப் பொதுக் கூட்டத்திற்கு - 144 தடை உத்தரவு இருந்தபோதிலும்—அனுமதி கொடுக்கப்பட்டு, அதில் மாண்புமிகு அமைச்சர் கூட கலந்து கொண்டு பேசியிருக்கிறார்கள். அப்படியிருக்கிறபோது. எங்களுக்கு மட்டும் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப் படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; பேரவைத் தலைவர் அவர்களே, வீர வணக்க நாள் என்பது தமிழகத்தில் இருக்கிற எல்லா மக்களுக்கும் ஏற்புடைய நாள் என்கிற காரணத்தால், அந்தப் பொதுக்கூட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது ஒரு இடத்தில் 144 தடை உத்தரவு போட்டு இருந்தாலும் முக்கியமான நிகழ்ச்சிகள் என்று எடுத்துத் தெரிவிக்கிற போது அதற்கு சிறப்பாக அனுமதி வழங்கப்படுவது வழக்கம். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கூட அப்படி நடந்து இருக்கிறது. வீர வணக்க நாள் தமிழக மக்கள் எல்லோருக்கும் பொதுவானது என்பதால் அனைத்திந்தியா அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு மட்டுமல்ல, எதிர்க்கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக பொதுக் கூட்டத்தில் குடந்தையைச்சேர்ந்த கோசி. மணியும், என். வி. என் சோமுவும் கலந்து பேசினார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் கனம் அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகப் பொதுக்கூட்டத்திற்கு அனுமதி வழங்கினோம், கட்டாயமாக நாங்களும் கூட்டம் நடத்துவோம் என்று அவர்கள் 'பார்ம்' ஆக இருந்தால், அவர்களுக்கும் அனுமதி கொடுக்கப்பட்டது. அந்தக் கூட்டங்களில் வீர வணக்க நாள் பற்றி மட்டும் பேசவில்லை, அவரவர்கள் கட்சிக்கொள்கைகளையும் அரசியலையும் பற்றி பேசினார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வீர வணக்க நாள் என்கிறபோது, அதுவும் சேர்ந்துதான் வரும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அனுமதி கொடுத்தபிறகு தான், திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டது என்று சொல்வது சரியல்ல. இரண்டு பேருக்கும் ஒரே நேரத்தில் தான் அனுமதி கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சுந்தரமூர்த்தி: இன்றையதினம் அங்கே போராட்டம் நடத்துகின்றவர்கள். 144 தடை உத்தரவை மீறுவது என்ற முடிவுக்கு வந்து இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதியை ஏற்று அவர்கள் வேலைக்கு திரும்ப வேண்டும் என்று சொன்னால், அங்கே சிறையில் வைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களும், ஊழியர்களும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். அவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அப்போதுதான் அந்தப் பல்கலைக்கழகம் மீண்டும் நல்ல முறையில் நடைபெறும் என்பதைத் தெரிவித்து இரண்டு கருத்துக்களை வலியுறுத்த விரும்புகிறேன்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள், ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரை நிர்வாகம் பழிவாங்கக்கூடாது அதற்கு அரசு உத்தரவாதம் தரவேண்டும். ஆசிரியர்கள் வேலைக்குத் திரும்ப, மாணவர்கள் கல்வி பயில ஆவன செய்யும் வகையில், ஆசிரியர்களையும், ஊழியர்களையும் நிபந்தனை இன்றி விடுதலை செய்து வகுப்பு நடத்த அரசு வழி செய்ய வேண்டும்: மேலும், இந்தச் சூழ்நிலையில் தோன்றியுள்ள பிரச்சனைகளைத் தீர்க்க ஆசிரியர்கள், ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள் பிரதிநிதிகளை அழைத்துப் பேச வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, இந்தப் பிரச்சைகளைப் பற்றி விவாதிக்க இந்த பேரவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவரவர்களே, எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக்களுக்கு மேலாக சில கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் இன்னும் 750 பேர்களுக்குமேல் இன்றும் சிறையிலே இருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒரு தனியார் நிர்வாகமாக, தனியார் சொத்தாக ஆக்கப்பட்டிருப்பது இந்த அரசுக்குத் தெரியும். சென்ற ஜூலை மாதத்தில் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி, அதன் விளைவாக எடுக்கப்பட்ட முடிவுகளை அந்த நிர்வாகம் அமல்படுத்தாததினால் ஆசிரியர்களும் ஊழியர்களும் ஆராய்ச்சியாளர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நியாயமான போராட்டத்திற்கு முக்கிய காரணம், 20 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிய ஆசிரியர்களுக்குக் கூட ஊதிய உயர்வு இன்னும் கொடுக்கப்படவில்லை. அரசாங்கத்தால் வழங்கப்படுகிற பஞ்சப்படியைக்கூட அந்த நிர்வாகம் கொடுக்காமல் இருக்கிறது. அரசு கொள்கை அடிப்படையிலே ஆசிரியர்களுக்கு கொடுக்கின்ற பிராவிடன்ட் ஃபண்ட் தொகையை வாங்கிக்கொண்டு, அரசுக்கு வட்டி செலுத்தினால்

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1981 பிப்ரவரி 2

போதும் என்ற வகையில் வட்டியை மட்டும் செலுத்திக் கொண்டிருக்கிற காரணத்தால் இன்றைக்கு அந்த ஆசிரியர்களும் ஊழியர்களும் தனியார் கையிலே இருக்குண்டு, அவர்கள் மிகப்பல மான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக, அந்தப் போராட்டத்தை நசுக்குவதற்காக இன்றைக்கு அந்த நிர்வாகப் பழிவாங்க முனைந்திருக்கிறது. ஆகவே அரசு இதிலே உடனடியாக தலையிட்டு, சிறையில் இருக்கிற ஆசிரியர்களையும் ஊழியர்களையும் எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் விடுதலை செய்து, அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தக் கல்லூரி ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் நன்மையைக் கருதி, பொதுமக்கள் மத்தியில் நிலவுகின்ற பதட்ட நிலையைத் தவிர்க்கின்ற வகையில், அரசு உடனடியாகத் தலையிட்டு அந்த யதாச்சாதிகார சக்திக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்- மற்றும் பல்வேறு விவரங்களைப்பற்றி பேசி முடிவு செய்ய வேண்டியிருப்பதால் அவையின் இன்றைய நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து, இந்தப் பிரச்சினைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: தலைவரவர்களே, தொடர்ந்து 6 மாதமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வருகின்ற சம்பவத்தைப் பற்றியும் அதனால் நடைபெறுகின்ற போராட்டத்தைப் பற்றியும் உறுப்பினர்கள் இங்கே கருத்து கூறியிருக்கிறார்கள். இந்த அவையிலே இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுக்கப்பட்டு அதை இன்றைக்கு எடுத்துக் கொண்டதற்காக நன்றி. பல நாட்களுக்கு முன்னாலே விவாதத்திற்கு வந்திருக்க வேண்டிய இந்தப் பிரச்சினை இன்றைக்கு வந்திருக்கிறது.

சர்வாதிகார முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அந்தப் பல்கலைக் கழக நிர்வாகத்தை எதிர்த்து ஆசிரியர்களும் ஊழியர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் சட்டத்தை திருத்த வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். அங்கே நடக்கக்கூடிய பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகளை எதிர்த்து, மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் சகல தொழிலாளர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஆதரவாக இன்றைக்கு தமிழ்நாடு பூராவும் இருக்கக்கூடிய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் போராடத் திட்டமிட்டிருக்கிறார்கள், இந்த நிலை நீடிக்குமானால் தமிழ்நாட்டில் கல்வி சீர்கேடு அடையும் நிலை இருக்கிறது.

அதைப்போன்று அங்கே இருக்கக்கூடிய பல்வேறு தரப்பிலுள்ள பேராசிரியர்களும் ஆசிரியர்களும், இதர ஊழியர்களும் போராட்டம் நடத்தி, இன்றைக்கு நூற்றுக்கணக்கானவர்கள் சிறையில் இருக்கிறார்கள். இன்னும் ஒரு மாதத்தில் பட்டப் படிப்புத் தேர்தல் நடக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நேரத்தில் ஆசிரியர்கள் சிறையில் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்தப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை அங்கே நடைபெறுகின்ற நிர்வாகச் சீர்கேடுகளை அரசாங்கத்தின்

1981 பிப்ரவரி 2] [திரு. மு. அப்பாதுரை]

கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். கடிய நடவடிக்கை எடுக்க இவ்வளவு காலதாமதம் ஏன் என்றும், என்ன சங்கடம் அதிலே இருக்கிறது என்றும் தெரியவில்லை. மேலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் ஒரு முத்தரப்பு பேச்சுவார்த்தையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே போன்று சென்ற 6 மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற போராட்டத்தில் ஒரு முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்கின்றன. அதிலே சில ஒப்பந்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த ஒப்பந்தங்களை மீறுகின்ற விதத்தில் பழிவாங்குகின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் இந்தப் போராட்டத்திற்கு ஒரு நிலைக்களமாக இருக்கின்றது. தற்போது கைது செய்யப்பட்டிருக்கின்ற பேராசிரியர்களை நிபந்தனையற்ற முறையிலே விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இது மிகவும் ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் இதற்காக இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள் போராட்டம் பற்றி கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேச விரும்பிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர்கள் போராட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு முக்கியமான வேறுபாட்டினை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கு இருக்கின்ற சொந்தப் பிரச்சினைகளாகிய ஊதாவது புணிபாதுகாப்பு, சம்பளம், கன்ஃபர்மேஷன் போன்ற வேறுபல பிரச்சனைகள் பற்றிப் போராடுவது என்பது ஒன்று. அல்லது முழுமையாக ஒரு பல்கலைக் கழகத்தினுடைய பொது நன்மையைக் கருத்தில் கொண்டு தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து அதற்கான ஒரு முயற்சியை மேற்கொள்வதுமான்து இன்னொன்று. முன்பு ஆசிரியர்கள் தங்களுடைய சொந்தப் பிரச்சினைகளுக்காகப் போராடினார்கள். ஆனால் பொது நன்மைக்காக இந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் கவர்னர் உரையிலே கூறி இருக்கிறோம். ஆசிரியர்கள் தங்களுடைய பிரச்சினைகளாக அதாவது கிட்டத்தட்ட 30 ஆண்டுகாலமாக இருந்து வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் பற்றிச் சொன்னார்கள். கன்ஃபர்மேஷன் ஆகாமல் இருந்தது பற்றிக் கூடச்சொன்னார்கள். இந்த மாதிரிப் பிரச்சினைகளை எல்லாம் வைத்து ஆசிரியர்கள் போராடிய போது ஆசிரியப் பெருமக்களோடு பேசி நிறைய பிரச்சினைகளுக்கு உடன்பாடு கண்டு அந்தப் போராட்டத்திற்கு ஒரு முடிவு கொண்டுவரப்பட்டது. அப்போது ஆசிரியர்கள் தங்களுடைய சொந்தப் பிரச்சினைகளுக்காகப் போராடி அதிலே வெற்றி பெற்றார்கள் என்று கூட நாம் ஓரளவுக்குச் சொல்லலாம்.

ஆனால் இன்றைக்கு அவர்கள் நம் முன் வைக்கின்ற பிரச்சினை சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பது. அதாவது சட்டத்தைத் திருத்துவோம் என்று சொன்ன அரசு தனது வாக்குறுதியைக் காப்பாற்றவேண்டும் என்று அவர்கள் பொராடுகிறார்கள். ஆகவே தான் நானும், அன்றையதினம் மேலவையிலே பேசியபோது மாண்புமிகு முதல்வர் அவர்களும் வாக்குறுதியை நிச்சயமாகக் காப்பாற்றுவோம் என்கிற உறுதிமொழியைத் தந்தோம் இங்கேயும் அந்த வாக்குறுதியைத் தர விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் நாம் இப்போது பேசுவது போன்ற அந்த உணர்வோடு அது கொண்டுவரப்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆனால் திட்டம் கொண்டுவருவதன் நோக்கத்தை நாம் தெளிவாகத் தெரிந்துகொண்டால் நல்லது. சட்டத்தைத் திருத்தவேண்டும் என்பது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்ட சட்டங்களை மட்டுமல்ல, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களின் சட்டங்களையும் திருத்துகின்ற வகையிலே சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டி இருக்கின்றது. அந்த நிலையில் அரசு முடிவு எடுக்கும் என்றுதான் கவர்னர் உரையிலே சொல்லி இருக்கிறோம். அதற்கு பிறகு இந்தப் போராட்டம் ஏற்பட்டு பல்வேறு பிரச்சினைகள் பற்றி வருவதால் எல்லாப் பிரச்சினைகளையும் கவனித்துத் திருத்த வேண்டிய நிலையில் அரசு நிச்சயமாக முடிவு எடுக்கும், அதிலே யாரும் சந்தேகப்படத் தேவையில்லை. ஆகவே மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் சேர்த்து திருத்தம் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தைதான் நான் மேல் சபையிலே சொன்னேன். மேலும் இன்றைய தினம் ஒரு பல்கலைக் கழகத்தைப் போல மற்ற பல்கலைக் கழகம் இல்லை. புதிதாக வர இருக்கின்ற கோவை பல்கலைக் கழகம், திருச்சி பல்கலைக் கழகம் ஆகியவற்றின் விதிமுறைகளும் நற்போது இருக்கின்ற பல்கலைக் கழகங்களின் விதிமுறைகளும் மாறாகத்தான் இருக்கும். ஒரு பல்கலைக் கழகத்திலே நாம் செனட்டை வைத்துக்கொண்டிருக்கிறோம். இன்னொரு பல்கலைக் கழகத்திலே செனட் இல்லை, இன்னொரு பல்கலைக் கழகத்திலே அக்கடெமிக் கவுன்சில் தேவையா என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் ஒவ்வொரு பல்கலைக் கழகமும் செயல்பட வேண்டிய முறைகள் பற்றி எல்லாம் ஆராய்ந்து தேவையான விதிமுறைகளோடு உரிய சட்ட பிரிவுகளைக் கொண்டுவர இந்த அரசு விரும்புகிறது. மேலும் நாம் நமக்குத் தேவையான நம்முடைய பல்கலைக் கழகங்கள் என்று பேசுகின்ற போது ஆசிரியர்களை வைத்து மட்டும் பேசுவதில்லை, இந்தச் சமுதாயத்தை வைத்துதான் பேசுகிறோம். மேலும் ஒரு பல்கலைக் கழகம் என்பது ஒரு கல்லூரி போல் செயல்படக்கூடாது. கல்லூரியின் நிலை வேறு

பல்கலைக் கழகத்தின் நிலை வேறு. கல்லூரி என்பது பட்டப் படிப்பு முதுநிலை பட்டப் படிப்பு போன்றவற்றில் மாணவர்களைத் தயார் செய்கின்ற நிலை. ஆனால் பல்கலைக் கழகம் என்பது முதுநிலை பட்டப்படிப்பாக இருந்தாலும் கூட அதனுடைய முக்கியமான பணி ஆராய்ச்சிப் பணிதான்.

[முற்பகல் 10-50]

[மாண்புமிகு பேரவைத் தலைவர்–தலைமை.]

அறிவுத் துறையில் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் நாம் எந்தளவிற்கு முன்னேறுகிறோம், அறிவுத் துறையில் தமிழகம் உலகத்தில் உள்ள மற்றப் பகுதிகளைக் காட்டிலும் எந்தளவிற்கு முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டக்கூடிய ஒரே இடம் பல்கலைக்கழகம் தான். ஆகவே இவண்டன் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்தார்கள், இதைக் கண்டு பிடித்தார்கள் என்பதைக் கேட்டு அதைப் பின்பற்றுகிற ஒரு நிலை தமிழ்நாட்டில் என்றுமே இருக்க முடியாது, என்றுமே இருக்கக்கூடாது என்ற முறையில்தான் இந்த நாட்டிலும் அறிஞர்கள் இருக்கிறார்கள், ஆராய்ச்சி செய்கிறார்கள், புதிதாகக் கண்டுபிடிக்கிறார்கள் என்ற நிலைக்கு பல்கலைக் கழகங்கள் வந்தாக வேண்டும். அதற்குத் தேவையான அதிகாரங்கள் கொண்டுவருகிற போதுதான், மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னதுபோல், பல்வேறு பிரச்சினைகளை நாம் பரிசீலிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அடிப்படையில் ஆசிரியப் பெருமக்கள் எதிர்பார்க்கிற நல்ல திருத்தங்கள் வரலாம். ஆகவே நம்முடைய நோக்கம் பல்கலைக் கழகங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பது தான். அது ரிசர்ச் ஓரியன்டட்டாகத்தான் இருக்க வேண்டும். ஒரு கல்லூரியைப்போல் இது ஒரு பெரியகல்லூரியாக இருக்கிற நிலைமையை நாம் மாற்றி யமைக்க வேண்டும். அல்லது குறிப்பிட்டவர்கள் அதில் தொடர்ந்து பதவியில் வந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு குறைபாட்டையும் எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னது என்று சொல்ல தேவையில்லை என்றாலும் அதற்கு இத்தகைய புதிய பொது நோக்குகள் அல்லது புதிய எண்ணங்கள் வரக்கூடிய ஒரு நிலை இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே இவைகளை யெல்லாம் அடிப்படையாக வைத்து நாம் சட்டத்தைத்திருத்துவது என்பது உறுதி. அதில் யாருக்கும் சந்தேகம் இருக்கத்தேவை இல்லை. அதை நான் இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நான் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது என்னவென்றால் இது ஏப்ரல் மாதம். ஒரு வருடகாலமாக ஒரு பல்கலைக்கழகம் நடைபெறவில்லை என்றால் அதனால் இந்த சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கிற ஈடுசெய்யமுடியாததொரு நஷ்டத்திற்கு, பாதிப்பிற்கு யார் பொறுப்பேற்றுக்கொள்ள இருக்கிறார்கள்? அரசாங்கம் தன்னாலான காரியங்களை எந்தளவிற்குச் செய்யமுடியுமோ, ஒரு

தன்னாட்சி நிறுவனம் நடந்து கொண்டிருக்கிறது. அதில் ஒரு குறைபாடு காரணத்திற்காக ஒரு போராட்டம் நடைபெறுகிறது. அதில் அரசாங்கம் எந்தளவிற்கு பொறுப்பேற்று நடந்த முடியுமோ அந்தளவிற்கு தன் பொறுப்பை நிறைவேற்றியிருக்கிறது என்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். ஆனால் சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கிற சுரண்டல் முடியாத இந்த இழப்பை இந்தப் பாதிப்பை இன்றைக்கு யாரும் ஏற்றுக்கொள்ளுகிற நிலைமையில் இல்லை. இந்தகையதொரு நிலை சமுதாயத்திற்கு ஏற்படுவதை நாம் தவிர்த்தாக வேண்டும். எந்தக் காரணத்தைக்கொண்டும் நாம் இந்தகைய நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருவதற்கு அவ்வளவு சிறந்ததாக இருக்கமுடியாது.

இங்கே ஆறுதல் அவர்கள் உரையில் ஒரு வாக்குறுதி தந்தால், மிக முக்கியமான கடமைகளைக் கொண்டிருக்கிற உறுப்பினர்கள் இதில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே அதற்கு சரியான பதில் சொல்லவில்லையென்றாலும், அதற்காக ஒரு குழு இருக்கிறது. அவர்களை கேட்கிறார்கள். ஆகவே, கொடுத்த வாக்குறுதிகளை நாங்கள் அவ்வளவு சுலபமாக நிறைவேற்றாமல் இருக்கமுடியாது. அதற்கு இந்தப் போராட்டத்தைத் தவிர மாண்புமிகு உறுப்பினர்கள் மூலமாக அவர்கள் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொள்ள பல்வேறு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆகவே அதற்காக ஒரு போராட்டம். அதற்காக மாணவர்கள் படிப்பு பாதிக்கப்படுகிறவிதத்தில் நான் அவ்வளவு மனம் பல்கலைக்கழகத்தை மட்டும் நினைவில் வைத்துச் சொல்லவில்லை. இது மேல்நிலைக்கல்வி மட்டத்திலுள்ள கல்வி நிலையில் மிகச் சாதாரணமான நடவடிக்கையாக கொண்டு வருகிறது. அதை நாம் முளையிலே தடுத்து நிறுத்தியாக வேண்டும். ஆகவே அந்த அடிப்படையில்தான் நான் இந்தப் போராட்டத்தை அறிந்த சேவையாளர்களாக இருக்கிறோம்.

ஆகவே ஆசிரியப் பெருமக்கள் இதற்காக, கட்டத்தைத் திருத்துவதற்காக போராடவேண்டிய அவசியமே இல்லை என்பது தான் அரசாங்கத்தின் கருத்தாகும். ஆகவே அதை முழுமையாக கைவிட்டுவிட்டு அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு பணியாற்ற செல்லவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதை ஒரு சாதாரண நிலையில் நாம் இருந்து பார்க்கிறபோது ஆசிரியப் பெருமக்கள் அவர்களுடைய கடமையை உணர்ந்து அவர்கள் செயல்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போராட்டத்தை முழுமையாக கைவிட்டு, இதற்காக அவர்கள் போராட வேண்டிய அவசியமில்லை என்ற இந்த நிலையை நான் மீண்டும் வலியுறுத்தி இதற்காக இந்த சட்டமன்றத்தி இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

5. கடலோர ரோந்து

இராமநாதபுரம் மாவட்டம் மீனவர்களுக்கும் தைவான் நாட்டு மீனவர்களுக்கும் இடையே மோதல்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்திற்கு அருகில் இராமநாதபுரம் பகுதி மீனவர்களுக்கும், தைவான் நாட்டு மீனவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1979 ஆம் ஆண்டில் சில முறையும், 1980 மார்ச் திங்கள் தொட்டு ஏறத்தாழ தொடர்ந்தும் அயல் நாட்டு மீன்பிடி கப்பல்கள் குறிப்பாக தைவான் நாட்டு மீன்பிடிபெரும் படகுகள் தமிழ் நாட்டுக் கடலோரப் பகுதிகளில் ஊடுருவி மீன் பிடித்தும், தமிழ் நாட்டு மீனவர்களின் வலைகளுக்குச் சேதம் விளைவித்தும் வந்துள்ளன. 1980 ஜூன், ஆகஸ்டு திங்களில் இரண்டு தைவான் நாட்டு மீன்பிடிபடகுகள் இந்திய கப்பற்படையைச் சேர்ந்த கப்பல்களால் பிடிக்கப்பட்டு தூத்துக்குடி துறைமுகத்தில் வைக்கப்பட்டு மீன்னர், இந்திய அரசு அறிவுரையின்படி 3—9—198 அன்று அவை விடுவிக்கப்பட்டன. அப்படகுகளில் பிடித்து வைக்கப்பட்டிருந்த மீன்களைப் பறிமுதல் செய்து சுமார் 2.50 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

2) சுமார் எட்டு அயல் நாட்டு மீன்பிடி படகுகள் வாலி நோக்கம் அருகே வந்து மீன்பிடிப்பதாக முதுகுளத்தூர் வட்டாட்சியர் செய்தியனுப்பியதாக தூத்துக்குடி மீன்துறை உதவி இயக்குநரும், துணை இயக்குநரும் மீன்துறை இயக்குநருக்கு 31-10-1980 அன்று தந்திமூலம் தெரிவித்தனர். இயக்குநரும் இதுகுறித்து உடனே அரசுக்கு விரிவான அறிக்கையொன்று அனுப்பினார். அதில் அயல் நாட்டுப்படகுகள் நமது கடலோரத்தில் வந்து மீன்பிடிப்பதனால் நமதுகடலிலுள்ள மீன்கள் பிடிக்கப்பட்டு மீனவர்களுடைய மீன் பிடி தொழில்கெடுகிறது. ஆதலால், இத்தகைய அயல் நாட்டுப்

படகுகள் நமது கடலோரப் பகுதியில் வருவதை இந்திய அரசுடன் கலந்தாலோசித்து தடுக்கத்தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், கிழக்கு மண்டல கடற்பாதுகாப்பு படைமூலம் கடலோரப் பகுதியில் ரோந்து செய்து அயல் நாட்டுப் படகுகள் வராமல் தடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் இயக்குநரின் 29—11—1980 நாளிட்ட கடிதம் மூலமாகவும் இத்தகைய சம்பங்களை தெரிவித்து மேற்கண்ட கடிதத்தில் கூறிய கருத்தை வலியுறுத்தப்பட்டது.

அரசும் இதுகுறித்து மத்திய அரசுக்கு தந்தி செய்திகள் மூலம் அவ்வப்பொழுது தெரிவித்தது. மத்தியஅரசு இது விஷயமாக கடற்படை பாதுகாப்பு நிறுவனத்திற்கும் (Coast Guard Organisation) கடற்படை தலைமை அலுவலகத்திற்கும் அயல் நாட்டுப் படகுகள் மீன்பிடிப்பது பற்றியும் அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பது பற்றியும் அறிவுரைகள் கொடுத்ததாக மத்திய அரசு தனது 10—12—1980 தேதியிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளது. மேலும் சம்மந்தப்பட்ட மற்ற இலாகாக்களோடு கலந்தாலோசித்து இத்தகைய அயல் நாட்டுப்படகுகள் கிருட்டுதனமாக மீன்பிடிப்பதை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றி தகுந்த விரிவான சட்டம் ஒன்று நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் தற்போது தென்மண்டல கடலோர பாதுகாப்புப் படை ஒன்று தற்காலிகமாக மண்டபத்திலியங்கி வருகிறது. அது நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்டு தக்க வசதிகளுடன் இயங்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் அவ்வாறு நிரந்தரமாக நிறுவப்பட்ட பின் அயல் நாட்டுப் படகுகளின் ஊடுருவலும் மீன்பிடித்தலும் வெகுவாக தடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கம் மிக முக்கியமான மீன்பிடித் தொழில் பகுதியாகும். அந்தப் பகுதியில் அடிக்கடி தெய்வான் நாட்டுப் படகுகள் மீன்பிடித்துக் கொண்டுச் செல்வதால், இதுசம்பந்தமாக இரண்டாண்டு காலமாக இதைப் பற்றி எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன்: அவ்வாறு சொல்லியும் இன்றுவரைக்கும் அதற்காக வேண்டிய நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லை. கடந்த நவம்பர் மாதம் 6ஆம் தேதியிலிருந்து 12ஆம் தேதி வரையில் அந்தப் பகுதியில், 8 கப்பல்கள் தொடர்ச்சியாக அங்கே நங்கூரம் இட்டு, மீன்கள் அத்தனையையும் பிடித்துக்கொண்டு இருந்தார்கள். அதை அறிந்த மீனவர்கள், அதைப் பார்த்தும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. டைரக்டர் ஆப் பிஷரீசும் மாவட்ட கலெக்டர் அவர்களும் நேரில் பார்த்தும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. கடந்த வாரம் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்

மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் கூட்டத்தில் ஒருவர் இறந்து விட்டார் என்றும், 4 பேர்கள் தப்பித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமை அங்கே அடிக்கடி ஏற்பட்டு வருகிறது. அந்தப் பகுதியிலே குறிப்பாக இந்த மீனவர்களைக் காப்பாற்றும் முறையிலே, தெய்வான் நாட்டுப் படகுகள் அங்கே வராத முறையிலே, அங்கே ஒரு கடற்கரைப் பிரிவை இராணுவத்தை விஸ்தரிக்க.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்நேரம் அந்தத் தெய்வான் நாட்டுப் படகுகள் அங்கேயிருந்து போயிருக்கும். சுருக்கமாக, கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி: அந்தப் பகுதிக்கு பந்தோபஸ்து அளிக்கின்ற முறையிலே, அங்கே இராணுவப் பிரிவு, கடற்படைப் பிரிவு ஒன்று அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சங்கடங்கள் அடிக்கடி ஏற்படுவதன் காரணமாக, அதைத் தடுத்தும் நிறுத்தும் முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. ஆனால், அந்த தெய்வான் நாட்டுப் படகுகள் மீன்பிடிக்கின்ற போது, அதைத் தடுக்கின்ற முயற்சியினை மத்தியஅரசின் கடற்படை பாதுகாப்பு நிறுவனம், கோஸ்ட் கார்ட் ஆர்கனைசேஷனைச் சேர்ந்தவர்கள்தான் செய்யவேண்டும் அவ்வப்போது அங்கிருந்து மாவட்ட ஆட்சித் தலைவரும், மீனவர்களும் இந்த அரசுக்கு தெரிவித்தடனே, தந்திமூலம் நாங்கள் மத்திய அரசுக்கு தெரிவிக்கிறோம். இப்போது, தற்காலிகமாக ஒரு ரோந்து படையை வைத்திருக்கிறார்கள். அது போதாது இப்படி தகராறுஅடிக்கடி ஏற்படுவதன் காரணமாக அந்தரோந்துப் படையை நிரந்தரமாக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் மேற்கொண்டு அதற்கான நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கான ஒரு சட்டத்தை கூட அவர்கள் இயற்ற இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்த சட்டம் வந்த பிறகு விரிவான முறையிலே பாதுகாப்பு கொடுக்க வழிவகைகள் ஏற்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வான் நாட்டுப் படகுகள் உயர்ந்த அளவிலே, புதிய கருவிகளைக் கொண்ட படகுகள் ஆகும். நீண்ட நேரம் கடலிலே தங்கி, லைட் மூலம் மீன்களை வரவழைத்து பிடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது தெய்வான் நாட்டுக்காரர்கள் குறிப்பாக தமிழகத்தின் எல்லைக்கு வந்து மீன்பிடித்து வருகிறார்கள் அல்லது வேவு பார்க்க வருகிறார்களா என்கிற சந்தேகம் வருகிறது. அதையெல்லாம் கவனத்தில் கொண்டு, அங்கே கடற்படை பிரிவு ஒன்றை ஆரம்பிப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்வார்களா என்று மீண்டும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி சென்ற ஆண்டு இறுதி ஆகஸ்ட் திங்களில் தெய்வான் நாட்டுப் படகுகள் வந்ததைத் தெரிவித்தபோது, இந்திய கடற்படைப் பிரிவினர் அந்த இரண்டு தெய்வான் நாட்டுப் படகுகளைப் பிடித்தார்கள். அந்தப் படகுகள் தூத்துக்குடியில் கொண்டு வந்து வைக்கப்பட்டன. 3—9—80 அன்று மத்திய அரசு அந்த இரண்டு படகுகளையும் விடுவிக்குமாறு உத்தரவிட்டது. அதிலிருந்த மீன்களை எடுத்துக் கொண்டு கப்பலை விடுவித்தோம். அந்த மீன்கள் மட்டும் 2.50 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போயிற்று. அது இப்போது நம்முடைய அரசின் மீன்துறை சார்பாக இருக்கிறது. இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்றது என்றும், நிலையான காவல் காப்பதற்கு ஒரு ரோந்துப் படை சுற்றிக்கொண்டு வரக்கூடிய நிலையிலே இருக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம்.

அதற்கான நடவடிக்கையை மத்திய அரசு எடுப்பதாகத் தெரிவித்திருக்கிறது. அதற்கான நடவடிக்கையை மத்திய அரசு எடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

(மேற்பகல் 11.00)

5. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) அமைச்சரின் நேர்முக உதவியாளர் நாவலோடுகளுக்கு அனுப்பிய செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, தமிழ்நாடு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீது விவாதம்...

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுப்ப விரும்புகின்ற பிரச்சினையை நாளை மறுநாள் எடுத்துச் சொல்லலாம். சிறிது நேரத்திற்கு முன்னால் தான் என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. முறையாக முன்னறிவிப்பு கொடுத்த பிறகு எடுத்துக் கொள்ளலாம்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது முக்கிய பிரச்சினை; இந்த அவையைப் பொருத்த பிரச்சினையை இதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாக இருக்க முடியாத கடமையாக இருப்பதற்காக நான் கவனத்தை ஈர்க்கிறேன்.

நமது மேஜைகளிலோ அல்லது ஏனைய கட்சி மேஜைகளிலோ அல்லது மற்றக் கட்சி மேஜைகளிலோ பேசப்படுகிற விஷயங்களை அவையில் எடுத்துக் கொண்டு வந்து இவைகளையெல்லாம் பொருத்த மற்றது என்பதை நான் நன்றாக அறிவேன். ஆனால் அமைச்சர்

ஒருவர் மேடையில் தந்த சில குறிப்புகள் அவர்களுடைய அலுவலகத்தின் சார்பிலும், அவருடைய நேர்முக உதவியாளர் கையெழுத்திட்டு செய்தி நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு, இவைகளை நீங்கள் வெளியிட வேண்டும், பிரசுரிக்க வேண்டும் அல்லது ஒலி பரப்பவேண்டும், அல்லது ஒளிபரப்ப வேண்டுமென்ற அளவுக்கு அனுப்பப்பட்டிருக்கும் காரணத்தால் இந்த அவையில் எதிர் கட்சியாகச் செயல்படுகிற எங்கள் உரிமைகள் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைக் காப்பாற்றித் தருகிற பெரும் பொருப்பிலுள்ள தங்கள் கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன். இந்த நீண்ட அறிக்கையை நான் முழுவதும் படிக்க விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கைக்குள் போக வேண்டாம்.

டாக்டர் மு. கருணாநிதி: நான் முழுவதும் படிக்க விரும்பவில்லை ஆனால், அதிலே சென்னை, ஜனவரி 29 என்ற தேதி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கைக்குள் போய்விட்டால் பெரிய விவாதம் வரும். (குறுக்கீடு)

டாக்டர் மு. கருணாநிதி: அதனால்தான் முழுவதும் படிக்க வில்லை மூன்று பக்கம் இருக்கிறது. இது அறிக்கை கூட அல்ல. அமைச்சர் குழந்தைவேலு, மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு பேசிய பேச்சு டைப் செய்யப்பட்டு அவருடைய உள்ளாட்சித் துறை அமைச்சருடைய நேர்முக உதவியாளர் கையெழுத்திட்டு செய்தி நிறுவனங்களுக்கு அனுப்பப்படாவிட்டால் அந்தப் பிரச்சினையை நான் கொண்டு வந்திருக்கவேமாட்டேன் அதனால்தான் அந்த நோக்கம் சரியா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே சொல்லுகிறேன். அதிலே அவர் சொல்லுகிறார்—'கருணாநிதிக்கு நான் எடுத்துச் சொன்னேன். 35—18 ஆகக் குறையப் போகிறது என்றேன். உடனே கருணாநிதி, அமைச்சர் கட்சியைப் பிளக்கப் பார்க்கிறார் எனச் சொல்லி என் மீது சட்டப்பேரவையில் உரிமைப் பிரச்சினை கொண்டுவந்தார்—எப்போது கொண்டு வந்தேன் என்று ஞாபகம் இல்லை. இது தவறான தகவலாகக் கூட இருக்கக்கூடும்.

அடுத்து, இது, சட்டமன்றப் பிரச்சினை, அதனால் சொல்லுகிறேன். கருணாநிதி சட்டமன்றத்திற்குள் நுழைந்தவுடன் ஒரு முறை பின்னால் திரும்பி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் சட்டமன்றத்தைப் பற்றி வெளியே பேசுகிறார்கள். வெளியே பேசியதை நாம் விவாதிக்க முயல்வது தவறு. அதனால்தான் சொன்னேன் ஒரு நோட்டீஸ் அனுப்பிவிட்டு அதற்குப் பிறகு எந்த முறையில் விவாதிக்க வேண்டுமோ அந்த முறையில் விவாதிப்போம் என்று சொன்னேன், எதிர் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்—பிரச்சினைக்குள், விவாதத்திற்குள் போகக் கூடாது. ஒரு செய்தியை நேர்முக உதவியாளர் அனுப்புகிறார் என்பதோடு நின்றுவிட வேண்டும். அந்தச் செய்திக்குள் போனால் அது பிரச்சினையாகிவிடும்.

டாக்டர் மு. கருணாநிதி: நான் முழுக்கப் படிக்கவில்லை என்கிறேன். முழுக்கப் படித்தால் ரொம்ப ஆபாசமாக இருக்கும். ஆகவே முழுக்கப் படிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செய்திகளுக்குள்ளே போவது நல்லதல்ல, தேவையற்றது என்பது என்னுடைய அபிப்பிராயம்

டாக்டர் மு. கருணாநிதி: மூன்றே குறிப்புத்தான் படிக்கப் போகிறேன். ஏதோ பத்திரிகையில் வந்ததைப் படிக்கவில்லை. அமைச்சர் அலுவலகத்திலிருந்து செய்தித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கும் அறிக்கையைத்தான் படிக்கிறேன்—

'கருணாநிதி சட்டமன்றத்திற்குள் நுழைந்தவுடன் பின்னால் திரும்பி தன் கட்சியில் எல்லா எம்.எல்.ஏ.க்களும் இருக்கிறார்களா என்று சரிபார்த்துவிட்டுத்தான் உட்காருகிறார். எவ்வளவுதான் எண்ணினாலும் அவரைச் சேர்த்து 23 பேர்தான் தென்படுகிறார்கள், பன்னிரண்டு பேர்களை.....

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சார், ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு தரவேண்டிய மரியாதையையும் கண்ணியத்தையும் தருவதற்கு நாங்கள் என்றைக்கும் தயார், ஆனால் நான் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, திடீரென்று எழுந்து நம்முடைய பேரவையில் மற்றொரு உறுப்பினர் மீது குற்றச்சாட்டுக்களைச் சொல்வது முறைதானா? நம்முடைய சட்ட விதிகளிலே தெளிவாக இருக்கிறது.

"A Member cannot make allegation against another Member of the House"

என்று இருக்கிறது. பெர்சனல் அல்லிகேஷன், தனிப்பட்ட முறையிலே ஒரு குற்றச்சாட்டு என்று வருகிறபோது விதிமுறைகளுக்குப் பொருந்துமா? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்களை வெளியே இப்படிப் பேசினார்கள் என்று நாங்களும் பேச ஆரம்பித்தால்—அவர்கள் வெளியே பேசியிருக்கக்கூட மாட்டார்கள்—பேசியதாக ஒருவர் இவர்களுக்கு எழுதி, அதை வைத்துக்கொண்டு இப்படிப் பேசினார்கள் இது

என்ன நியாயம் என்று இவர்கள் இங்கே பேச ஆரம்பித்தால் சபை எப்படி நடக்கும் என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

Dr. K. SOURIRAJAN: It is not a Member of the House who has written that. A Government servant has written that.

*திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, எதிர் கட்சித் தலைவர் எடுத்துச் சொல்ல விரும்பி, உரிமைப் பிரச்சினையாக கொண்டுவர விரும்பிய அந்தக் கருத்து குற்றச்சாட்டு என்ற காரணத்தால் இங்கே சொல்லக்கூடாது என்று மாண்புமிகு அமைச்சர் ராமச்சந்திரன் இங்கே குறுக்கிட்டு விளக்கம் சொன்னார்கள். குற்றச்சாட்டு அமைச்சர்மீது சொல்லப்படுவதற்கு முன்னர் எதிர் கட்சித் தலைவர்மீதும், எதிர் கட்சியினுடைய துணைத் தலைவராகஇருக்க நேரிட்டிருக்கிற என்மீதும் சட்டசபைஉறுப்பினராக இருக்கிறஎன்னைக் களங்கப்படுத்துகிற வகையில் ஒரு அமைச்சர் பேசலாமா என்றால் பேசலாம், ஆனால் அமைச்சர் பேசினார் என்றுஅமைச்சருடைய நேர்முக உதவியாளர் மூலமாக பத்திரிகைகளுக்கும், செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்கிறபோது, ஒரு குற்றச்சாட்டை எதிர்கட்சித் தலைவர் மீது மட்டும் அல்ல, எதிர்கட்சித் தலைவருக்கு குறை உண்டாக்கத்தக்க வகையில் எதிர்கட்சித் துணைத் தலைவர்மீது குற்றச்சாட்டு ஆகக்கூடிய வகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நான் அதை விளக்க ஆரம்பித்தால் இதைவிட பெரிய உரிமைப் பிரச்சினை இந்தச் சட்டமன்றத்திலே வேறு எதுவும் இருக்காது. நான் ஒரு உறுப்பினர் ஒரு உறுப்பினருக்கு உள்ள உரிமைதான் மற்ற அத்தனை பேர்களுக்கும், ஆகவே, ஒரு உறுப்பினருடைய உரிமை பாதிக்கப்படுகிற வகையில் நான் அந்தப் பேச்சினைக் குறிப்பிட விரும்புகிறேன் துணைத் தலைவராக இருக்கிற அன்பழகன் அந்தக் கட்சியிலே 10, 12 உறுப்பினர்களைக் கடத்திக்கொண்டு போய் வைத்திருக்கிறார் என்று சொன்னால் இதைவிட வேறு என்ன கூற வேண்டும்.....

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது தவறான முன்மாதிரி என்பதை மட்டும் நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வெளியே பேசப்படுவதை நேர்முக உதவியாளர் கொடுத்தார் என்றால், நேர்முக உதவியாளருடைய கையெழுத்துத்தானா என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு தடவை மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்தபோது முன்னாள் அமைச்சர் சௌந்தரபாண்டியன் பற்றி ஒரு பிரச்னை வந்தது. அதிலே ஒரு கடிதம் வந்தது. அதற்குப் பிறகு அந்தக் கடிதத்தை இன்றைய எதிர்கட்சித் தலைவர் படித்தார் அதற்குப் பிறகு அந்தக் கடிதத்திலிருந்த கையெழுத்து அவருடைய கையெழுத்து இல்லை என்று தெளிவாக்கப்பட்டது. இதைப்போலவெல்லாம் பிரச்சினைகள் இருக்கிற காரணத்தினாலே வெளியே இருக்கிற ஒரு

[திரு. ச. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 2

கடிதத்தைக் கொண்டுவந்து இங்கே படிக்கலாமா என்பதை தாங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

திரு. க. அன்பழகன்: நான் அந்தச் செய்தியை முழுவதும் இங்கு படிக்கவில்லை நான் சட்டமன்ற உறுப்பினர். அனுபவம் உள்ளவன் அமைச்சராக இருக்கவும் நேர்ந்தவன சட்டமன்ற உறுப்பினராகவும் ஒரு கட்சியினுடைய துணைத் தலைவராகவும் இருக்கிற என்னைக் குறித்து ஒரு அமைச்சர் இப்படி எல்லாம் பேசலாமா என்றால் அவர் எண்ணப்படி பேசலாம். ஆனால் பேசியபோது அது எதிர்க்கட்சியிலே உள்ளவர்களைப்பற்றி தவறான எண்ணத்தை, உண்மைக்கு மாறான கருத்தை உருவாக்குமானால்-அது உருவாக்க வில்லை என்றால்கூட கவனிப்பட மாட்டேன் ஆனால் உருவாக்கு மானால் ஒரு கட்சியைக் குறை சொல்லுமானால் அரசாங்கத்தில் அமைச்சருடன் இருந்து பணியாற்றக் கூடிய ஒருவர் ஆதாரப் பூர்வமான செய்தியாக நிதனை வெளியே அனுப்புகிறார்என்றால்-அனுப்பவில்லை என்று சொன்னால் அது வேறு. அவ்வாறு அனுப்பியது ஆதாரத்தோடு கிடைத்து, ஆதாரம் இருக்கிற காரணத்தால் நான் இதை உரிமைப் பிரச்சினையாகக் கருதுகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரத்தோடு எதையும் கொண்டுவந்து விவாதிக்கலாம், அப்படி விவாதிப்பதற்கு மறுப்பு ஒன்றும் இல்லை. கால் மணி நேரத்திற்கு முன்னாலே இப்படி இருக்கிறது என்று என்னிடம் காட்டினார். இந்த நேரத்திலே அது தேவைதானா என்பது ஒன்று. இரண்டாவது முறைப்படி மெதுவாக வரட்டும் என்பது. நோட்டீஸ் கொடுத்து முறைப்படி கொண்டு வாருங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் மீதும் மாண்புமிகு எதிர் கட்சித் துணைத் தலைவர் மீதும் வெளியே ஒரு அமைச்சர் பேசிய பேச்சின் மூலமாக தங்கள் உரிமைகள், இந்த அவையினுடைய உரிமைகள் பாதிக்கப்படுகிற அளவுக்கு இருக்குமானால், அமைச்சர்மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவந்தாலும்சரி, அல்லது பேசப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பிரச்சினையைக் கொண்டு வந்தாலும்சரி, உரிமை இருக்கிறது என்று கூறினார்கள்,

[முற்பகல் 11.10]

ஆகவே, மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்கள் சொல்லியபடியும் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் கூறியிருக்கின்றபடியும் அதை உரிமைப் பிரச்னையாக கொண்டு வந்து விடுவார்களே யானால் அதைப்பற்றி ஆராய்வதற்கும், பதில் சொல்வதற்கும் வாய்ப்புகளை எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களுக்கும் அளித்து தாங்கள் தீர்ப்பு அளிப்ப தற்கான வாய்ப்பு ஏற்படக்கூடும். உரிமை மீறியதாக எதைக் கருதுகிறார்களோ அதைப்பற்றி முறைப்படி, விதிப்படி கொண்டு

1981 பிப்ரவரி 2]

வந்தால் அவையில் விவாதிப்பதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படக் கூடும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஒரு முன்மாதிரி நடைபெற்றிருக்கிறது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்கள் திருச்சியிலே பேசிய பேச்சை வைத்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரவர்கள் பேசியிருக் கிறார்கள். அதற்கு இந்த அரசும் பதில் சொல்லியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி முன்னதாகவே நோட்டீஸ் கொடுக்கப்பட்டு கொண்டு வரப்பட்டது. (குறுக்கீடு) உடனே எடுக்கப்படவில்லை. தவறான தகவலை அவைக்குக் கொடுக்க வேண்டாம். முழுக்க முழுக்க நான் அந்தச் சம்பவத் தின்பொழுது இருந்திருக்கிறேன். எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது

திரு. நா. சுந்தரராஜ்: இங்குள்ள பிரச்னை அமைச்சர் மீது மட்டுமல்ல; அரசாங்க சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கிற அவருடைய உதவியாளர் மீதும் பிரச்னை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறைப்படி வர வேண்டும் உடனடியாகக் கொண்டுவருவது தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்கிறேனே தவிர, முறைப்படி கொண்டுவரும் எந்த உறுப்பினருக்கும் மறுப்பதற்கு நான் தயாராக இல்லை. இந்தப் பிரச்னை இத்துடன் முடிந்து விட்டது. (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் தலைவரவர்களே, இப்பொழுது விவாதம் ஆரம்பிக்கப்படவில்லை. அவர்கள் முறைப்படி, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ, கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ அல்லது உரிமைப் பிரச்னை என்ற முறை யிலேயோ இப்படி ஏதாவது ஒரு முறையில் கொண்டு வருகின்ற பொழுது அப்பொழுது பதில் சொல்லிக்கொள்ளலாமே தவிர, இப்பொழுது அவர்கள் பேசினால் மறுபடியும் பதில் சொல்லி விவாதம் வளர்ந்துக் கொண்டே போகும். ஆகவே, முறைப்படி நடக்கும்பொழுது செய்யலாம்.

6. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது விவாதம்—தொடர்ச்சி

திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள்: மாண்புமிகு தலைவரவர் களே, நேற்றைய தொடர்ச்சியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எனக்கு அனுமதி வழங்கியமைக்காக தலைவரவர்களுக்கு என் னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெரியபெரிய தனியார் தொழிற்சாலைகளிலே ஒரு யூனிட்டிற்கு 2 பைசா, 4 பைசா 7 பைசா என்ற அளவிலே தான் வசூல்

(திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்) [1981 பிப்ரவரி 2

செய்யப்படுகின்றது. அதைக்கூட அவர்கள் சரியாகக் கட்டாமல் இருக்கிறார்கள். உதாரணமாக, மேட்டூர் அலுமினியம் பேக்டரியில் கிட்டத்தட்ட ஒன்பதரை கோடி ரூபாய் பாக்கியிருப்பதாக அறிகிறேன். ஆகவே, இப்படி பாக்கி வைத்திருப்பவர்கள் மீது சற்றுக் கடுமையாக நடவடிக்கை எடுத்து, அபராதக் கட்டணங்களை கழித்து விட்டாவது, அசலை மட்டுமாவது வசூல் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த மன்றத்தில் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டிரான்ஸ்பார்மரிலே 200 யூனிட்டுகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். அதில் 175 யூனிட்டுகள் வரைக்கும் தான் பம்புசெட்டுகளுக்கு சப்ளை கொடுக்க வேண்டும். அவ்வாறில்லாமல், 200 யூனிட்டுகள் என்றால் 199 ½ யூனிட் வரையில் சப்ளை கொடுக்க அனுமதி கொடுக்கப்படுகின்றது. அப்படிக் கொடுப்பதால் 5 ஹார்ஸ் பவர் வைத்திருப்பவர்கள் கூட 7 ஹார்ஸ் பவர் வைத்து மின்சாரத்தை அதிகமாக எடுத்துக் கொள்கிறார்கள். இதனால் மோட்டார்கள் பர்ன் ஆகின்றன. ஒரு மோட்டார் எரிந்து விட்டால் 900 ரூபாய் பணம் கொடுத்து மறுபடியும் காயில் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு வசதியில்லாமல் இருப்பதால் யுனைடெட் கம்பெனிக்காரர்கள்-ஆண்டுக்கு 15 ரூபாய் என்று நினைக்கிறேன். சரியாகத் தெரியவில்லை, வாங்கிக்கொண்டு எரிந்து போன மோட்டார்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியிலிருந்து 300 ரூபாய் வாங்கிக் கொடுக்கிறார்கள். அதை மாற்றி நம்முடைய அரசாங்மே இன்னும் அதிகமான பணத்தை, ஒவ்வொரு மோட்டாருக்கும் இவ்வளவு என்று Insurance க்கு வாங்கிக் கொண்டு, ஆண்டுக்கு ஒருமுறையாகிலும் மோட்டார் எரிந்து விட்டால் அதற்கு உதவி செய்யும் வகையில், முழுமையாக காயில் கட்டும் பணத்தை அரசாங்கமே கொடுத்தால் விவசாயிகளுக்கு சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதுமாத்திரமில்லாமல், அரசு ஷிப்டு வைத்து, இரவிலே 8 மணி நேரம், பகலிலே 6 மணி நேரம் என்று மின்சாரத்தைக் கொடுக்கிறது. அப்படி கொடுப்பதுகூட அந்த விவசாயி பகலெல்லாம், காத்திருந்து மின்சாரம் பெற வேண்டியிருக்கிறது. அந்த 6 மணி நேரத்திற்குள்ளாக திடீரென்று 2 ஃபேஸ், 1 சிங்கிள் ஃபேஸ் என்று 3 ஃபேஸ் வராமல், இரண்டு சிங்கிள் ஃபேஸிலோ, ஒரு சிங்கிள் ஃபேஸிலோ, அந்த மின்சாரம் வரும் போது, அந்த மோட்டார் பர்ன் ஆகி விடுகிறது. அப்பேர்ப்பட்ட குறைபாடுகள் இல்லாமல், அந்த விவசாயிகளுக்கு நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் நன்கு அதாவது நல்ல முறையிலே இதிலே தேர்ச்சி பெற்று, இன்ஜினியராக இதிலே பணியாற்றி இருக்கிறார்கள். அவருக்கு ஒரு பணிவான வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். சென்ற 1979—ஆம் ஆண்டு, இரண்டு

1981 பிப்ரவரி 2] (திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்)

ரிசர்வ் சீட்டுகளை, ஃபில் அப் செய்வதற்காக, இரண்டு ஜூனியர் இன்ஜினியர்களை பதவிகளில் அமர்த்த அரிஜன வகுப்பு இன்ஜினியர்களிடமிருந்து மனுக்கள் பெற்று, அதற்குப் பிறகு நேர்முகத் தேர்வு நடைபெற்று, அதற்கு பிறகு தகுதியில்லையென்று, அவர்களைத் தள்ளி விட்டார்களென்றால், அது எந்த அளவு சாலப் பொருந்தும் என்பதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, யாரை நேர்முகத் தேர்வுக்கு அழைத்தார்களோ, அவர்களை, அந்த உத்தியோகத்தில் அமர்த்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

1979-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் என்று கருதுகிறேன். அப்பொழுது ஆயிரக்கணக்கான அரிஜன மாணவ மாணவிகளிடமிருந்து, அங்கே கிளார்க்குகள் வேலையை பூர்த்தி செய்ய மனுக்கள் பெறப் பட்டன. பிறகு, அவர்களை நேர்முகத் தேர்வுக்கு அழைத்தார்கள். அதன் பிறகு, அவர்களது சான்றிதழ்கள் வெரிஃபை செய்யப்பட்டன. இப்படியெல்லாம் முடிந்தபிறகு இப்போது 1½ வருஷம் ஆகிவிட்டது. அதை அப்படியே மூடி, இதுவரைக்கும் பேசாமல் வைத்திருக்கிறார்கள் என்றால் அதனுடைய காரணம் என்ன? 18% பூர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காகத்தானே அரிஜனக் குழந்தைகளிடமிருந்து மனுக்களை பெற்றார்கள். மனுக்களைப் பெற்ற பிறகு, எல்லா வேலையும் முடிந்த பிறகு, உடனடியாக அவர்களுக்கு வேலை கொடுக்காமல், அப்பாய்ன்ட்மென்டை நிறுத்தி வைப்பது நல்லதல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள், 1984 ஆம் ஆண்டிற்குள்ளாக, மின்சாரமே இல்லையென்ற அளவிற்கு, நிலையை உண்டாக்க வேண்டுமென்று அந்த அளவிலே திட்டமிட்டு வருகிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். என்னுடைய தொகுதியில் மஞ்சளாறு என்று ஒரு அணைக்கட்டு இருக்கிறது. அதிலே, நல்ல உயரமான பகுதியிலிருந்து தண்ணீர் வருகிறது. அங்கேயிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமா என்பதைக் கவனிப்பதோடு, சோழவந்தான் தொகுதியிலே, ஏற்கெனவே சாத்தியாறு திட்டம் என்ற ஒரு திட்டம் தீட்டப்பட்டு அது நடைமுறையில் நடந்து கொண்டு வருகிறது. அங்கேயும் மின்சாரம் உற்பத்தி செய்ய வழிவகை இருக்கிறதா என்பதை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.]

அது மாத்திரம் இல்லாமல், இன்னொரு முக்கியமான பிரச்சனை. இந்த விவசாயிகளுக்கு காலா காலத்திலே, (மணியடிக்கப்பெற்றது) அதாவது, எங்கெங்கெல்லாம் ஏழை

(திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்) [1981 பிப்ரவரி 2

விவசாயிகள், ஏற்கெனவே நான் சொன்னாலும் கூட, ஏழை விவசாயிகள் 1 ஏக்கர் 2 ஏக்கர் வைத்திருப்பவர்கள் சர்வீஸ் கனெக்ஷனுக்கு அப்ளை செய்தால், 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் வரை கூட அவர்களுக்கு சர்வீஸ் கொடுக்கப்படாமல் தாமதம் ஆகிறது. இம்மாதிரி குறைபாடுகள் எல்லாம் தவிர்க்கப்பட்டு, மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய 1980-81 ஆம் ஆண்டு அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை பெற்றமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டறிக்கையின் 12—வது பக்கத்தில் 15—வது பாராவிலே, '1980 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளவாறு 38. 35 இலட்சம் பேர் மின்சக்தி பயன்படுத்தினர் என்று கூறப்பட்டிருக்கிறது. 20. 32 இலட்சம் பேர் வீட்டுக் காரியங்களுக்காக பயன்படுத்துகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் சென்னையிலே பார்க்கிற பொழுது, அடிக்கடி மின்சாரத்தட்டு ஏற்பட்டு வருகிறது என்பதை சென்னையிலே வாழ்கின்றவர்கள் மட்டுமல்ல, சென்னையிலே தங்கியிருக்கிற நம்முடைய உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள். இதை நீண்ட நெடுங்காலமாகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

[முற்பகல் 11.20]

ஏன் இப்படி அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்பதையும் அதை நிவர்த்தி செய்ய இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதற்கு மாறாக, மின்வாரியத்திலே புதிய இணைப்புகள் அதிகமாக கொடுத்துக் கொண்டே வருகிறார்கள். ஒரு பக்கம் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இன்னொரு பக்கம் அதிக மின் இணைப்புகள் கொடுக்கப்படுவதன் நோக்கம் என்ன என்பதை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வீதியிலே 10 வீடுகளில் விளக்குகள் இருந்தால் மாலை 6 மணிக்கு மின்விளக்குகள் எரிகின்ற போது அரை மணி நேரம் கழித்து அவை அணைந்து போகின்றன. இப்படிப்பட்ட கோளாறுகள் நீக்கப்பட வேண்டும். கடந்த ஆண்டு என்னுடைய பெரம்பூர் தொகுதியிலே அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்று சொன்ன நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவன செய்கிறேன் என்று சொன்னார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய்களை அந்தத் தொகுதிக்கு ஒதுக்கி இருக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இன்று வரையிலும் அங்கே அபிவிருத்தியாகி இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சு. பாலன்] 1981 பிப்ரவரி 2

அது மட்டுமல்ல சென்னையிலே பல பகுதிகளில் தினசரி 2 மணி நேரம் மின்சார தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனால் சிறு கைத்தொழில் நடத்துபவர்களும், கடைக்காரர்களும், அதே நேரத்தில் சவரத் தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த 2 மணி நேரத்தில் சவரத் தொழிலாளரிடம் யாரும் சென்று முகச்சவரம் செய்து கொள்ள முடியாது. இதை எல்லாம் பார்க்கிற போது சென்னையிலே எந்த அளவிற்கு இத்தகைய நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் மின்சார வாரியத்தில் புதிய பணியாட்களை எடுத்திருந்தார்கள். அந்த பணியாட்கள் எல்லாம் எடுக்கப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பிறகும் அங்கே காலியாக்கப்பட்ட அந்த இடங்கள் நிரப்பப்படாத காரணத்தால் இன்று மின்வாரியத்தில் பணிகள் தேக்கமாக இருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாதந்தோறும் மின்கட்டண பாக்கிக்காக அனுப்பப்படுகின்ற பில்கள் மிகவும் காலதாமதமாக வருகின்றன என்பதை அந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் அங்கே வேலை செய்யக் கூடியவர்கள் சாக்கு போக்கு சொல்லிக்கொண்டு அதிக வருமானம் பெற வேண்டுமென்பதற்காக 'ஓவர்டைம்' செய்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் மின்வாரியத்தில் நஷ்டம் அதிகமாகி செலவாகின்றது.

பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் 16—வது பக்கத்தில் 21—வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. 1980 முதல் 1985 ஆம் ஆண்டிற்குள்ளாக இந்த பேசின்பிரிட்ஜ் மின் நிலையத்தில் உற்பத்தி பிரிவுகளை மாற்றி அமைத்து 110 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகும்படி செயல்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் அந்த மின் நிலையத்தினுடைய தரம் ஒரு நாளைக்கு ஏறக்குறைய 95. மெகா வாட். தயாரிக்கும் வகையில் நல்ல மெஷின்கள் பொறுத்தப்பட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதனுடைய இன்றைய உற்பத்தித் திறன் 30 முதல் 35 மகா. வாட். ஆகத்தான் இருக்கிறது. எனவே அந்த 90 மெகா. வாட். மின்சாரத்தை யாவது தயாரிக்க வேண்டும் என்று அங்குள்ள அதிகாரிகள் செயல்பட்டால், நிச்சயமாக சென்னையிலே மின்சாரத் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்திலே இருந்து வெளியேறுகின்ற சாம்பல், சென்னை மாநகரத்தைப் பாதிக்கின்ற அளவில் இருக்கின்றது. இந்த நிலை நீடிக்குமானால் இன்னும் 5 ஆண்டு காலத்தில் சென்னையிலே வாழ்கின்ற மக்கள் காச நோயால் பாதிக்கப்படுவார்கள் என்கின்ற சூழ்நிலை இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது.

(திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்) [1981 பிப்ரவரி 2

விவசாயிகள், ஏற்கெனவே நான் சொன்னாலும் கூட, ஏழை விவசாயிகள் 1 ஏக்கர் 2 ஏக்கர் வைத்திருப்பவர்கள் சர்வீஸ் கனெக்ஷனுக்கு அப்ளை செய்தால், 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் வரை கூட அவர்களுக்கு சர்வீஸ் கொடுக்கப்படாமல் தாமதம் ஆகிறது. இம்மாதிரி குறைபாடுகள் எல்லாம் தவிர்க்கப்பட்டு, மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய 1980-81 ஆம் ஆண்டு அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை பெற்றமைக்கு தான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டறிக்கையின் 12—வது பக்கத்தில் 15—வது பாராவிலே, '1980 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளவாறு 38.35 இலட்சம் பேர் மின்சக்தி பயன்படுத்தினர் என்று கூறப்பட்டிருக்கிறது. 20.32 இலட்சம் பேர் வீட்டுக் காரியங்களுக்காக பயன்படுத்துகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் சென்னையிலே பார்க்கிற பொழுது, அடிக்கடி மின்சாரத்தட்டு ஏற்பட்டு வருகிறது என்பதை சென்னையிலே வாழ்கின்றவர்கள் மட்டுமல்ல, சென்னையிலே தங்கியிருக்கிற நம்முடைய உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள். இதை நீண்ட நெடுங்காலமாகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

[முற்பகல் 11.20]

ஏன் இப்படி அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்பதையும் அதை நிவர்த்தி செய்ய இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் அதற்கு மாறாக, மின்வாரியத்திலே புதிய இணைப்புகள் அதிகமாக கொடுத்துக் கொண்டே வருகிறார்கள். ஒரு பக்கம் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இன்னொரு பக்கம் அதிக மின் இணைப்புகள் கொடுக்கப்படுவதன் நோக்கம் என்ன என்பதை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வீதியிலே 10 வீடுகளில் விளக்குகள் இருந்தால் மாலை 6 மணிக்கு மின்விளக்குகள் எரிகின்ற போது அரை மணி நேரம் கழித்து அவை அணைந்து போகின்றன. இப்படிப்பட்ட கோளாறுகள் நீக்கப்பட வேண்டும். கடந்த ஆண்டு என்னுடைய பெரம்பூர் தொகுதியிலே அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்று சொன்ன நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவன செய்கிறேன் என்று சொன்னார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய்களை அந்தத் தொகுதிக்கு ஒதுக்கி இருக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இன்று வரையிலும் அங்கே அபிவிருத்தியாகி இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சு. பாலன்] 1981 பிப்ரவரி 2

அது மட்டுமல்ல சென்னையிலே பல பகுதிகளில் தினசரி 2 மணி நேரம் மின்சார தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனால் சிறு கைத்தொழில் நடத்துபவர்களும், கடைக்காரர்களும், அதே நேரத்தில் சவரத் தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த 2 மணி நேரத்தில் சவரத் தொழிலாளரிடம் யாரும் சென்று முகச்சவரம் செய்து கொள்ள முடியாது. இதை எல்லாம் பார்க்கிற போது சென்னையிலே எந்த அளவிற்கு இத்தகைய நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் மின்சார வாரியத்தில் புதிய பணியாட்களை எடுத்திருந்தார்கள். அந்த பணியாட்கள் எல்லாம் எடுக்கப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பிறகும் அங்கே காலியாக்கப்பட்ட அந்த இடங்கள் நிரப்பப்படாத காரணத்தால் இன்று மின்வாரியத்தில் பணிகள் தேக்கமாக இருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாதந்தோறும் மின்கட்டண பாக்கிக்காக அனுப்பப்படுகின்ற பில்கள் மிகவும் காலதாமதமாக வருகின்றன என்பதை அந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் அங்கே வேலை செய்யக் கூடியவர்கள் சாக்கு போக்கு சொல்லிக்கொண்டு அதிக வருமானம் பெற வேண்டுமென்பதற்காக 'ஓவர்டைம்' செய்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் மின்வாரியத்தில் நஷ்டம் அதிகமாகி செலவாகின்றது.

பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் 16—வது பக்கத்தில் 21—வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. 1980 முதல் 1985 ஆம் ஆண்டிற்குள்ளாக இந்த பேசின்பிரிட்ஜ் மின் நிலையத்தில் உற்பத்தி பிரிவுகளை மாற்றி அமைத்து 110 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகும்படி செயல்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் அந்த மின் நிலையத்தினுடைய தரம் ஒரு நாளைக்கு ஏறக்குறைய 95. மெகா வாட். தயாரிக்கும் வகையில் நல்ல மெஷின்கள் பொறுத்தப்பட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதனுடைய இன்றைய உற்பத்தித் திறன் 30 முதல் 35 மகா. வாட். ஆகத்தான் இருக்கிறது. எனவே அந்த 90 மெகா. வாட். மின்சாரத்தை யாவது தயாரிக்க வேண்டும் என்று அங்குள்ள அதிகாரிகள் செயல்பட்டால், நிச்சயமாக சென்னையிலே மின்சாரத் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்திலே இருந்து வெளியேறுகின்ற சாம்பல், சென்னை மாநகரத்தைப் பாதிக்கின்ற அளவில் இருக்கின்றது. இந்த நிலை நீடிக்குமானால் இன்னும் 5 ஆண்டு காலத்தில் சென்னையிலே வாழ்கின்ற மக்கள் காச நோயால் பாதிக்கப்படுவார்கள் என்கின்ற சூழ்நிலை இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது.

(திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்) [1981 பிப்ரவரி 2

விவசாயிகள், ஏற்கெனவே நான் சொன்னாலும் கூட, ஏழை விவசாயிகள் 1 ஏக்கர் 2 ஏக்கர் வைத்திருப்பவர்கள் சர்வீஸ் கனெக்ஷனுக்கு அப்ளை செய்தால், 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் வரை கூட அவர்களுக்கு சர்வீஸ் கொடுக்கப்படாமல் தாமதம் ஆகிறது. இம்மாதிரி குறைபாடுகள் எல்லாம் தவிர்க்கப்பட்டு, மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய 1980-81 ஆம் ஆண்டு அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை பெற்றமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டறிக்கையின் 12—வது பக்கத்தில் 15—வது பாராவிலே, '1980 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளவாறு 38. 35 இலட்சம் பேர் மின்சக்தி பயன்படுத்தினர் என்று கூறப்பட்டிருக்கிறது. 20. 32 இலட்சம் பேர் வீட்டுக் காரியங்களுக்காக பயன்படுத்துகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் சென்னையிலே பார்க்கிற பொழுது, அடிக்கடி மின்சாரத்தட்டு ஏற்பட்டு வருகிறது என்பதை சென்னையிலே வாழ்கின்றவர்கள் மட்டுமல்ல, சென்னையிலே தங்கியிருக்கிற நம்முடைய உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள். இதை நீண்ட நெடுங்காலமாகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

[முற்பகல் 11.20]

ஏன் இப்படி அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்பதையும் அதை நிவர்த்தி செய்ய இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் அதற்கு மாறாக, மின்வாரியத்திலே புதிய இணைப்புகள் அதிகமாக கொடுத்துக் கொண்டே வருகிறார்கள். ஒரு பக்கம் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இன்னொரு பக்கம் அதிக மின் இணைப்புகள் கொடுக்கப்படுவதன் நோக்கம் என்ன என்பதை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வீதியிலே 10 வீடுகளில் விளக்குகள் இருந்தால் மாலை 6 மணிக்கு மின்விளக்குகள் எரிகின்ற போது அரை மணி நேரம் கழித்து அவை அணைந்து போகின்றன. இப்படிப்பட்ட கோளாறுகள் நீக்கப்பட வேண்டும். கடந்த ஆண்டு என்னுடைய பெரம்பூர் தொகுதியிலே அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்று சொன்ன நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவன செய்கிறேன் என்று சொன்னார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய்களை அந்தத் தொகுதிக்கு ஒதுக்கி இருக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இன்று வரையிலும் அங்கே அபிவிருத்தியாகி இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சு. பாலன்] 1981 பிப்ரவரி 2

அது மட்டுமல்ல சென்னையிலே பல பகுதிகளில் தினசரி 2 மணி நேரம் மின்சார தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனால் சிறு கைத்தொழில் நடத்துபவர்களும், கடைக்காரர்களும், அதே நேரத்தில் சவரத் தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த 2 மணி நேரத்தில் சவரத் தொழிலாளரிடம் யாரும் சென்று முகச்சவரம் செய்து கொள்ள முடியாது. இதை எல்லாம் பார்க்கிற போது சென்னையிலே எந்த அளவிற்கு இத்தகைய நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் மின்சார வாரியத்தில் புதிய பணியாட்களை எடுத்திருந்தார்கள். அந்த பணியாட்கள் எல்லாம் எடுக்கப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பிறகும் அங்கே காலியாக்கப்பட்ட அந்த இடங்கள் நிரப்பப்படாத காரணத்தால் இன்று மின்வாரியத்தில் பணிகள் தேக்கமாக இருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாதந்தோறும் மின்கட்டண பாக்கிக்காக அனுப்பப்படுகின்ற பில்கள் மிகவும் காலதாமதமாக வருகின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் அங்கே வேலை செய்யக் கூடியவர்கள் சாக்கு போக்கு சொல்லிக்கொண்டு அதிக வருமானம் பெற வேண்டுமென்பதற்காக 'ஓவர்டைம்' செய்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் மின்வாரியத்தில் நஷ்டம் அதிகமாகி செலவாகின்றது.

பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் 16—வது பக்கத்தில் 21—வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. 1980 முதல் 1985 ஆம் ஆண்டிற்குள்ளாக இந்த பேசின்பிரிட்ஜ் மின் நிலையத்தில் உற்பத்தி பிரிவுகளை மாற்றி அமைத்து 110 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகும் படி செயல்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் அந்த மின் நிலையத்தினுடைய தரம் ஒரு நாளைக்கு ஏறக்குறைய 95. மெகா வாட். தயாரிக்கும் வகையில் நல்ல மெஷின்கள் பொறுத்தப்பட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதனுடைய இன்றைய உற்பத்தித் திறன் 30 முதல் 35 மகா. வாட். ஆகத்தான் இருக்கிறது. எனவே அந்த 90 மெகா. வாட். மின்சாரத்தை யாவது தயாரிக்க வேண்டும் என்று அங்குள்ள அதிகாரிகள் செயல்பட்டால், நிச்சயமாக சென்னையிலே மின்சாரத் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்திலே இருந்து வெளியேறுகின்ற சாம்பல், சென்னை மாநகரத்தைப் பாதிக்கின்ற அளவில் இருக்கின்றது. இந்த நிலை நீடிக்குமானால் இன்னும் 5 ஆண்டு காலத்தில் சென்னையிலே வாழ்கின்ற மக்கள் காச நோயால் பாதிக்கப்படுவார்கள் என்கின்ற சூழ்நிலை இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது.

அத்தகைய நிலைமையைப் போக்குவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சுகாதாரக் குழுவை அமைத்து, அதனால் ஏற்படுகின்ற தீமைகளைத் தடுப்பதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு அந்த மின்வாரியத்தில் ஏராளமான ஊழல்களை அங்கேயுள்ள அதிகாரிகள் செய்வதாக அங்கே இருக்கும் தொழிலாளர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களும் இன்றையதினம் அதே முறையில் பணியாற்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல அங்கே ஆமர் மற்றும் பல விலையுயர்ந்த பொருள்கள் எல்லாம் ஒரு முறை வருகிறது. கணக்குக் காட்டிய பின்னர், அது மீண்டும் வெளியே வந்து, அடுத்தமுறையும் கணக்கில் காட்டப்படுகிறது. இப்படிப்பட்ட துஷ்பிரயோகங்கள் அங்கே நடைபெற்று வருகின்றன. இதுகுறித்து தொழிலாளர் தலைவர்களும், மற்றவர்களும் எத்தனையோ முறை எடுத்துக் கூறியும் இதுவரையில் அது தடுக்கப்படவில்லை.

அங்கே ஏற்றுமதித் தொழிலாளர்கள் கான்ட்ராக்ட் முறையில் வேலை செய்கிறார்கள். அங்கே போக்குவரத்து வசதிகள் சரியாக இல்லை. அதனால் அங்கே நிலக்கரி ஏற்றுமதி, இறக்குமதி ஆண்டுதோறும் லட்சக்கணக்கான ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெறுவதில் மிகவும் மோசமான நிலைமைகள் தற்போது இருக்கின்றன. ஏற்கனவே அங்கே 150 வாகன்கள் நிலக்கரி காணாமல் போய்விட்டது என்ற குறிப்பு அரசிடம் இருக்கிறது. அந்த 150 வாகன்கள் என்ன ஆயிற்று என்று இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் அந்தத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மின்வாரியமே அந்த நிலக்கரி ஏற்றுமதி, இறக்குமதியை ஏற்றுக்கொண்டு, அந்தத் தொழிலாளர்களைப் பயன்படுத்தினால் பல லட்ச ரூபாய் வாரியத்திற்கு மிச்சமாகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு கிராமங்களில் உள்ள குடிசைகளுக்கு மின்வாரியம் மின் வசதியைச் செய்து கொடுக்கிறது. என்னுடைய தொகுதியில்—பெரம்பூர் தொகுதியில் கருணாநிதி நகர், பெரியார் நகர், சிவசாமி நகர் போன்ற பகுதிகளில் உள்ள மக்களுக்கு இன்றையதினம் பட்டா நிலங்கள் விலைக்கு விற்கப்பட்டு, அவர்கள் தனி வீடுகள் அமைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் மின் இணைப்பு கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு துணைத்தலைவருக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை குறித்தும், 1979-80 ஆம்

ஆண்டுக்கான துணைநிதி நிலை அறிக்கை குறித்தும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளை ஏற்படுத்தித் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் சக்தி மக்களுக்கு மிகவும் அவசியமானது என்பது நாடறிந்த உண்மை. கூடுதல் மின் சக்தியைப் பெருக்க இந்த அரசு முனைந்து இருப்பதைக் கண்டு நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். மின்சக்தி அதிகமாகக் கிடைத்ததால் மின் உற்பத்தி 14 சதவிகிதம் உயர்ந்துள்ளது என்பதை அறிந்து நான் மனமாரப் பாராட்டுகின்றேன். புதுடெல்லியில் 1980ஆம் ஆண்டில் நடைபெற்ற மின்சார அமைச்சர்கள் கூட்டத்தில் தமிழ்நாடு தொடர்ந்து மின்சக்திப் பற்றாக் குறையின் பிடியிலிருந்து விடுபடவேண்டுமாயின், நமது தேவைகளுக்கும் மேற்பட்டு 10 சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என்று நமது மின்துறை அமைச்சர் வலியுறுத்தி இருப்பதைக் கண்டு நான் மிகவும் பெருமிதம் கொள்கிறேன். மின்சாரம் அண்டை மாநிலங்களிலிருந்தல்லாமல் மத்திய அரசு பொறுப்பு ஏற்கும் நிலையங்களிலிருந்து வாங்கப்படுமாறு உறுதி செய்வது பொருத்தமாகும் என்கிற கருத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(முற்பகல் 11-30)

எண்ணூர், தூத்துக்குடி ஆகிய அனல் மின் நிலையங்களில் மின்சார உற்பத்தியை அதிகரிக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்திருப்பதைக் கண்டு நான் பாராட்டுகிறேன்.

மேலும் இரண்டு நிலையங்களைத் தொடங்க வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்திருக்கிற முயற்சியைக் கண்டு தமிழகம் பாராட்டுகிறது.

கிராமப்புறங்களிலே பகல் நேரத்தில் 6 மணி நேரமும், இரவு நேரத்தில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது. இந்த அளவை உயர்த்த வேண்டுமென்றும், பகல் நேரத்தில் 8 மணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின் உற்பத்தியைப் பயன்படுத்துவதில் தமிழகம் மூன்றாவது இடத்தில் இருந்தாலும் வேளாண்மைக்கு அதிகமாக ஒதுக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழகம் வேளாண்மையை மையமாகக் கொண்டிருக்கிறது. பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு அளிக்க வேண்டுமென்று மனுக்கள் அனுப்பி சில ஆண்டுகள் ஆகியும் மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கிறது. இந்த நிலையை மாற்றி, வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்றும், அதேநேரத்தில் முன்னுரிமை வழங்க வேண்டுமென்றும் ஒரு கோரிக்கையாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

விற்பனை செய்யப்படும் மின்சக்தியில் 50% வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

63,000 கிராமங்களுக்கு மேலாக மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளதைக் கண்டு தமிழகம் பாராட்டுகிறது.

அரிசன குடியிருப்புகள் அனைத்துக்கும் மின்வசதி அளிக்கப்பட்டிருப்பதைக் கண்டு நலிந்த சமூகத்தினர் பாராட்டுகின்றனர். இப்படிப்பட்ட அரிசன மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே குழல் விளக்குகளை ஏற்படுத்தித்தர இந்த அரசை வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிசைகளுக்கு மின்வசதி அளிக்கும் திட்டத்தைத் தொடங்குவது குறித்து இந்த நாட்டு மக்கள் பாராட்டுகின்றார்கள். குறைந்த செலவிலே ஏழை எளிய மக்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டிருப்பதைக் கண்டு வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கின்றவர்களும் மனம் குளிர பாராட்டுகிறார்கள்.

உள்ளாட்சி மன்றங்களில் தெருவிளக்குகளை மின்சார வாரியம் ஏற்றுகின்றது. இதிலே சில குறைபாடுகள் இருப்பதைக் காணுகிறோம். பல ஊராட்சிகளில் தெருவிளக்குகள் எரியாமல் இருப்பதைப் பார்க்கிறோம். இந்தக் குறைபாடு நிவர்த்தி செய்ய இந்த அரசு தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களுக்கு மின்சக்தி கொடுப்பதில் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரக் கட்டணம் கட்டுவதைப் பொறுத்தவரையில் 1 என்ற முறையைஎல்லோரும் வரவேற்கின்றார்கள். விவசாயத்திற்கு மின் இணைப்புக் கொடுப்பதிலே முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பம்புசெட்டுகளில் 'ஓயர் தெப்ட்' என்ற நிலையை இன்றைய தினம் காண்கிறோம். ஓயர் தெப்ட் போனவுடனே மின் இணைப்பு கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அந்த நிலையை மாற்றி உடனடியாக மின் இணைப்பு வழங்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பள்ளிப்பட்டுத் தொகுதியைப் பொறுத்தமட்டில் பல கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள், திராவிடர்கள் மக்கள் வாழ்கின்றார்கள். அப்படிப்பட்ட மக்கள் குடிசைகளில் வாழ்கின்றார்கள். கிராமங்களுக்கு, அரிசன மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு மின் இணைப்புத் தருகின்ற பொறுப்பை அரசு, அதிலே கவனம் செலுத்தி, பள்ளிப்பட்டு தொகுதி மக்களுக்கு மின் இணைப்பு விரைவிலே வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்ததற்காக நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். முதலிலே மின்சார பற்றாக்குறை பற்றி சிலவற்றை இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

மின்சார பற்றாக்குறை என்பது இன்று நேற்று அல்ல, 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டுதோறும் தொடர்ந்து இருந்துவருகின்ற ஒன்று. அதுவும் மின்சாரம் எந்தவிதமான தடையும் இல்லாமல் வருகிற மாதம் ஜூலை முதல் அக்டோபர் வரையில் தான். ஆனால் அக்டோபரிலிருந்து ஜூன் வரையில் மின்சார வெட்டு என்றும் 'லோட் ஷெடிங்' என்ற பெயராலும் மின்சாரத் தடை தொடர்ச்சியாக இருந்துவருகிறது. ஆக, இந்த மின்சாரப் பற்றாக்குறை என்பது ஏதோ திடீரென்று வருகிறது. அந்த நேரத்தில் அதைச் சமாளிப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் சுற்றறிக்கை அனுப்புகின்ற நிலை இருக்கிறதே தவிர அது நிரந்தரமான ஒன்று என்ற அடிப்படையில் அரசு அதிகாரிகள், மின்சார வாரியத்திலே இருக்கிற எஞ்சினியர்கள் என்ன செய்ய வேண்டும், தடை ஏற்படுகின்ற நேரத்தில் எந்தெந்த பகுதிகளில் எந்தெந்த நேரத்தில் மின்சாரம் வழங்கப்படும் என்று விவசாயிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் முன்னதாக அறிவிக்கின்ற ஒரு ஏற்பாடு இதுவரை இல்லை. ஆண்டுதோறும் புதிய சர்க்குலர்கள் அனுப்புகிறார்களே தவிர மற்ற ஏற்பாடுகள் ஒன்றும் இல்லை. இதற்கு நிரந்தரமான ஒரு வழிமுறையை அரசாங்கத் தரப்பிலே தயாரித்து அந்த விவசாயிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திடீர் திடீரென்று மின்சாரத்தை நிறுத்துவதனால் பலவித்தமான சங்கடங்கள் தொழிற்சாலைகளுக்கும் விவசாயிகளுக்கும் ஏற்படுகின்றது. இதைத் தடுக்கின்ற வகையில் நிரந்தரமான ஒரு Instruction Book அரசாங்கம் வெளியிட வேண்டும் என்று வற்புறுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு விவசாயக் காரியங்களுக்கென்று மின் இணைப்பு கொடுப்பதைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவிதமான நிலைமைகள் இருக்கின்றன. பல மாவட்டங்களிலே மனுச் செய்து 3 அல்லது 4 மாதங்களுக்கு பிறகுதான் மின் இணைப்பு கிடைக்கின்றது. மதுரை, திருச்சி, நெல்லை போன்ற இடங்களில் 1975–76லே செய்துகொள்ளப்பட்ட மனுக்களுக்கு இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஆகவே விவசாய காரியங்களுக்கு நிலத்தடி நீரை நம்பி இருக்கக்கூடிய பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதிலே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். ஆண்டுக்கு 50 ஆயிரம் மின் இணைப்புக்கள் கொடுப்பது என்ற திட்டம் 1979-80-ல் ஆண்டுக்கு 30 ஆயிரம் மின் இணைப்பு கொடுப்பது என்ற வகையிலே குறைக்கப்பட்டிருக்கின்றது. இது சரியல்ல 50 ஆயிரம் மின் இணைப்பு என்பதே போதாது என்று இருக்கின்ற நிலைமையில் அதை மேலும் உயர்த்துவதற்கு முன்வரவேண்டுமே தவிர குறைக்கக்கூடாது. அவ்வாறு குறைப்பதன் மூலம் விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

நிலத்திலேயே குடியிருக்ககூடிய விவசாயிகளுக்கு விவசாயக் காரியங்களுக்கு என்று மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக் கின்றது. அவ்வாறு கனெக்ஷன் கொடுக்கின்றபோதே அவர்கள் அந்த நிலத்திலேயே குடியிருந்தால் அந்த வீடுகளுக்கு மின் இணைப்புத்தர தனியாக கட்டணத்தைத் அவர்கள் கட்ட வேண்டும் என்றும் அதற்கு விவசாயிகள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகின்றது. இது சரியல்ல. விவசாயிகளுக்கு அவர்கள் நிலத்திலேயே குடியிருந்தால் அவர் களுடைய வீட்டுக்கு மின் இணைப்பு தர ஆகின்ற கட்டணத் தையும் ஏற்றுக்கொள்ள அரசு முன்வரவேண்டும்.

அடுத்து அண்மையிலே கர்நாடக மாநிலத்திலே ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நாமும் பரிசீலனை செய்ய வேணடும் என்று நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கர்நாடக மாநிலத்திலே 10 ஹார்ஸ் பவருக்குக் கீழே உள்ள பம்ப்செட்டு களுக்கு மீட்டர் கிடையாது என்றும் ஆண்டுக்கு ஒரு H.P.க்கு 50 ரூபாய் என்றும் ஃப்ளேட் ரேட்டாக நிர்ணயிக்கப்பட்டி ருக்கின்றது என்றும் அண்மையிலே அறிவித்திருக்கிறார்கள். 10 ஹார்ஸ் பவருக்குக் கீழே உள்ள பம்ப் செட் வைத்திருப்பவர் யாராக இருந்தாலும் அதாவது ஊராட்சி மன்றம், நகராட்சி மன்றம் ஆகியவற்றுக்குக் கூட இந்தச் சலுகை உண்டு என்று கர்நாடக மாநிலத்திலே அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே 10 ஹார்ஸ் பவருக்கும் கீழே உள்ள பம்ப் செட் வைத்திருக்கின்றவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்திற்கும் குறைவாகத்தான் இருக்கும் என்று குத்து மதிப்பாக கணக்கிடப் பட்டிருக்கின்றது. அப்படியானால் இத்திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 8½ லட்சம் விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கும். ஆகவே இந்த வகையில் ஆண்டுக்கு ஒரு H.P.க்கு 50 ரூபாய் என்று ஃப்ளேட் ரேட்டாக நிர்ணயத்துவிட்டால் பல சிரமங் களிலே இருந்து விவசாயிகள் விடுபட முடியும். மேலும் அவர்கள் மீட்டர் வாடகை கொடுக்கவேண்டிய நிலைமை இல்லாமல் போய்விடும். ஏனென்றால் தற்போது மீட்டர் வாடகை என்றால் அது ஒரு பெரும் பிரச்சினையாக ஆகிவிட்டிருக்கின்றது. அண்மையிலே நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்திலே கூட மீட்டர் பிரச்சினை ஒரு முக்கியமான ஒன்றாக இருந்திருக்கின்றது. ஆகவே கர்நாடக மாநிலம் போன்று நாமும் அறிவித்துவிட்டால் நமக்கு நிறைய மீட்டர்கள் திரும்பக் கிடைக்கும். அதன் மூலம் மற்ற நிலைகளிலே இருக்கின்ற மீட்டர் பற்றாக்குறையைச் சமாளித்துக் கொள்ளலாம். இதிலே பலவகையான சிரமங்கள் குறையும்.

அடுத்து தமிழகத்திலே மின்சார வசதி இல்லாத கிராமங்களே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு நம்முடைய மின் வாரியம் சிறப்பாக பணியாற்றிக்கொண்டிருக்கின்றது என்ப தற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் மொத்தம் 555

கிராமங்களுக்கு இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கிராமங்கள் எவை என்று பார்த்தால் அவை ட்ரைபல் வில்லேஜஸ்தான். ஆகவே மலை வாசி கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பதிலே முன்னுரிமை கொடுத்து இந்தக் கிராமங்களில் மின்சார வசதி இருக்கின்றது என்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கு விசேஷமான திட்டத்தை வகுத்து இந்த ஆண்டே அதை அமல்படுத்தவேண்டும் என்று மதிப்பிற்குரிய அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

இன்னொன்று மிக முக்கியமானதாகும். தமிழ்நாட்டிலே நிறைய என்ஜினியர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். நம் மின்சார வாரியத்தில் மின் என்ஜினியர் களுக்கு வேலைவாய்ப்பு அதிகமாக இல்லை. ஆனால் அரபு நாடுகளில் அவர்களுக்கு நிறைய கிராக்கியிருக்கிறது. தமிழ்நாடு மின்வாரியத்தில் பணியாற்றுகிற மின் என்ஜினியர்கள் அரபு நாடுகளுக்கு வேலைக்குச் செல்வார்களானால் அதன்மூலம் தமிழ் நாட்டுக்கு நிறைய அன்னியச்செலாவணி கிடைக்கும். ஏராளமான என்ஜினியர்கள் தங்களுக்கு விடுமுறை வழங்கவேண்டுமென்று விண்ணப்பித்திருக்கிறார்கள். அரசு இதை கொள்கைரீதியாகப் பரிசீலனை செய்து அவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும். அண்டை மாநிலமான கேரளாவில் ஐந்தாண்டுகள் விடுமுறை கொடுத்து அங்குள்ள என்ஜினியர்கள் அரபுநாடுகளுக்கு அனுப்பப் படுகிறார்கள். அதன்மூலம் ரூ. 600 கோடிக்கு மேல் அன்னியச் செலாவணி அண்டை மாநிலமான கேரளாவிற்குக் கிடைக்கிறது. தமிழ்நாட்டுக்கு அதைவிட அதிகமாகக் கிடைக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பிருக்கிறது. தேர்ட் பே கமிஷன் கூட இதை சிபார்சு செய்திருக்கிறது. ஆகவே இதை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அவர் கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால் இங்கே வேலையில்லா திருக்கிற பல மின் என்ஜினியர்களுக்கு வேலையும் கொடுக்க முடியும் என்பதால் இதை அரசு பரிசீலனை செய்யவேண்டு மென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, நமது மதிப்புக்குரிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஜூன் மாதத்தில் டெல்லியில் நடைபெற்ற மின்சார அமைச்சர்கள் கூட்டத்தில் சில நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலையில் அவர்கள் உறுதியாக இருக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அந்த நிலையில் எந்த மாற்றமும் கூடாது.

மாநில மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை நாம் இப்போது விவாதித்துக்கொண்டிருக்கிறோம். இந்த விவாதத்தில் இதற்கான ஆலோசனைகளை வழங்குகிற உரிமைதான் இந்த மன்றத்திற்கு இருக்கிறதேதவிர மாநில மின்சார வாரியத்தின்

நிர்வாகத்தில் குறுக்கிடுவதற்கும் அதைத் திருத்தியமைப்பதற்கு மான உரிமை இந்த மன்றத்திற்குக் கிடையாது என்பது ரொம்ப வருந்தத்தக்கதொரு உண்மையாகும். Electricity Supply Act 1948 என்ற மத்திய அரசின் சட்டம் இருக்கிறது. The State has no power to amend this Act அதைத் திருத்த இந்த மன்றத்திற்கு உரிமை கிடையாது. The State Electricity Board is accountable to this Assembly. இந்த மன்றத்திற்கு மின்வாரியத்தின் நிதிநிலையை அறிய பொறுப்புண்டு, ஆனால் அதைக் கட்டுப்படுத்துகிற சட்டத்தைத் திருத்துவதற்கான அதிகாரம் இந்த மன்றத்திற்கு இல்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது. இந்நிலையை மாற்ற நமது அரசு முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மாநில மின்வாரியத்தின் தலைவர் அவர்கள் நம்முடைய அரசுக்குக் கட்டுப்பட்டவர் அல்ல. அவர், சென்ட்ரல் எலக்ட்ரிசிட்டி அதாரிட்டிக்குக் கட்டுப்பட்டவர். இன்றைக்கு இருக்கக்கூடிய மின்சாரவாரியத் தலைவர் அவர்கள் அரசாங்கத்தோடு ஒத்துப்போகிற ஒரு சூழ்நிலையிருக்கிறது. ஆனால் இந்த நிலை மாறுமானால் மாநில அரசுக்கோ அல்லது மின்சாரத் துறை அமைச்சருக்கோ மின்சார வாரியத் தலைவரை கட்டுபடுத்த முடியாத ஒரு நிலை ஏற்படும், சட்டப்படி அவர்கள் சென்ட்ரல் எலக்ட்ரிசிட்டி அத்தாரிட்டிக்குக் கட்டுப்பட்டவரே தவிர நம் மாநில அரசுக்கோ அல்லது நமது மின்சாரத் துறை அமைச்சருக்கோ கட்டுப்பட்டவர் அல்ல. இந்த நிலையை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

நம் மாநிலத்தில் இருக்கக்கூடிய மின்சார வாரியத்தை திருத்தியமைப்பதற்கும் அதன் சட்டதிட்டங்களை வகுக்கவும் மாநில அரசுக்கு உரிமை இருக்க வேண்டும். இந்த மன்றத்திற்கும் உரிமையிருக்க வேண்டும் அதை நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். அங்கே அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். நெய்வேலி அனல் மின் நிலையத்தில் 1976-77—ல் 2,676 மில்லியன் யூனிட்ஸ் உற்பத்தி செய்யப்பட்டது. 1979-80-ல் அது 1,768 மில்லியன் யூனிட்டாக ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆக 908 மில்லியன் யூனிட் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் தமிழ்நாட்டின் மின் நிலைமை சீர்கேடு அடைந்திருக்கிறது. எனவே நெய்வேலி மின் நிலையத்தை மாநில அரசு எடுத்துக்கொள்வதற்கு மத்திய அரசு அனுமதிக்கவேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தியிருப்பதை நான் ஆதரிக்கிறேன். அதற்கான முயற்சிகளில் மாநில அரசு ஈடுபட வேண்டும்.

மாநில அரசுகளின் மின் உற்பத்தி நிலையங்கள் சரியாக இயங்காவிட்டால், அத்தகைய ஸிக் யூனிட்ஸ் மாநிலங்களில் இருக்குமானால் அவற்றை எடுத்துக்கொள்

வதற்கான ஒரு உரிமையைப் பெறுவதற்கு மத்திய அரசு முயற்சி செய்துவருகிறது, இது ஒரு ஆபத்தான போக்கு. தனியார் துறையில் உள்ள ஸிக் யூனிட்ஸ்களைத்தான் மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. மாநில அரசுகள் நடத்துகிற ஸிக் யூனிட்களை இதுவரை எடுத்துக்கொண்டதில்லை. ஆனால் அதையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முயற்சி மத்திய அரசுக்கு இருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மாநில அரசுகளால் நடத்தப்படுகின்ற அமைப்புகள் சரிவர இயங்க மத்திய அரசு உறுதுணையாக இருக்கவேண்டும். தாமே அவைகளை எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில் இறங்கக் கூடாது. இரண்டாவது, அண்டை மாநிலங்களோடு நாம் மின் சாரம் சம்பந்தமாக ஒப்பந்தம் செய்துகொள்ள பரிபூரணமான உரிமை நமக்கு இருந்தது. அது இப்போது பறிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகக்கூடிய அலுமினியத்தை அண்டை மாநிலமான கேரளாவிற்குக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக மின்சாரம் பெறப்பட்டு வந்த ஒப்பந்தத்தை மத்திய அரசு தடை செய்தது. இதை மத்திய அரசு ஏற்கவில்லை; தடை செய்தது. அதனால் இங்கே இன்றையதினம் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. மாநில அரசுகளுடைய உரிமைகளை மத்திய அரசு பறிப்பது, தலையிடுதல் ஆகியவற்றிற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

இறுதியாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அந்தப் பிரச்னையைப் பற்றி நான் என்னுடைய கருத்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏதனால் மின் வாரியம் சிறப்பாக செயல்படுவதற்கு இதைப் பகுதிகளாகப் பிரிக்க வேண்டும் என்ற உத்தேசம் அரசுக்கு இருப்பதாக நான் அறிகிறேன். அது சரியல்ல. காரணம், அமைச்சர் அவர்கள் சொல்லிய வாக்கியங்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"The Board is unable to pay adequate attention individually to augment the generating capacity, strengthen the transmission system, rationalise and modernise the distribution network and to take steps to provide for effective consumer satisfaction"

என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு அவசியமில்லை. ஏற்கனவே ஜெனரேஷனுக்காக நீங்கள் ஒரு சீ.இ-ஐ வைத்திருக்கிறீர்கள், அதைப்போலவே டிரான்ஸ்மிஷனுக்கு ஒரு சீ.இ-ஐ வைத்திருக்கிறீர்கள். டிஸ்டிரிபியூஷனுக்கு ஒரு சீ.இ-ஐ வைத்திருக்கிறீர்கள்! இதை போல் மொத்தம் 7,8 சீ. இ-ஐக்கள் இருக்கிறார்கள். இப்படி பல பேர்களை நியமித்திருக்கிறீர்கள். எனவே. வாரியத்தை பிரிப்பதன் மூலம் முற்றிலும் நிர்வாகம் சீர்குலையும் என்பதில் சந்தேகமில்லை. அதிலும் குறிப்பாக இவ்வளவு பேர்கள் நியமித்தும்கூட அந்த நிர்வாகம் சரியில்லை என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

இதற்குப் பரிகாரம் அருவல்ல. மின்வாரியத்தை கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரத்தை மாநில அரசு பெறுவதன் மூலம்தான் இதை நாம் செய்ய முடியும். மின்வாரியத்தில் அதிகாரத்தை பரவலாக்குங்கள், ஒரே இடத்தில் பொறுப்புகளைக் குவிக்காதீர்கள், SE-க்களிடமிருந்து DE-க்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்குங்கள்.

மின்சார வாரியத்தில் இருக்கக்கூடிய சிரமத்திற்கு ஒரு உதாரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன். ஒகேனகல் மின் திட்டத்தை நம்முடைய அரசு நிறைவேற்றவேண்டுமென்று விரும்புகிறது. 20 ஆண்டு காலமாக இந்தத் திட்டம் கிடப்பிலே கிடக்கிறது. மத்திய மின்சார அமைப்பு, சென்ட்ரல் எலக்ட்ரிசிடி அதாரிடி இதற்கு அனுமதி வழங்கவேண்டும்; அதை அது மறுத்திருக்கிறது. மறுப்பிற்குச் சொல்லுகின்ற காரணம், ஆந்திராவிலே மின்சாரம் இருக்கிறது, கேரளத்திலே மின்சாரம் இருக்கிறது, பெற்றுக்கொள்ளலாம். எனவே, ஒகனேகல் திட்டம் எதற்காக என்று கேட்கும் அளவிற்கு, சென்ட்ரல் எலக்ட்ரிசிடி அதாரிடிக்கு இருக்கும் அதிகாரத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன், அண்டை மாநிலமான கர்நாடகத்திற்கு, ஹேமாவதி அணைத் திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று நம்முடைய அரசு ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. மத்திய அரசும் திட்டக் குழுவும் அதை நிறைவேற்றக்கூடாது என்று சொல்லியிருக்கின்றன. அப்படியிருந்தும், ஹேமாவதி அணைத் திட்டத்தை கட்டி, ஒரு வாரத்திற்கு முன்பு, அந்த மாநிலத்து முதலமைச்சர் அவர்கள் அந்த அணைக்கட்டைத் திறந்து இதனால் 2½ இலட்சம் ஏக்கர்கள் பாசனம் வசதி செய்யப்பட்டிருக்கின்றது என்று அறிவித்திருக்கிறார்கள். மத்திய அரசு ஆட்சேபணையை மீறி, தமிழ்நாடு அரசின் ஆட்சேபணையை மீறி, தமிழ்நாடு கட்டியிருக்கிறார்கள். இவ்வளவு பேர்களையும் தட்டிக் கழித்து அவர்கள் அந்தத் திட்டத்தை முடிக்கும்போது, நாம் ஏன் இந்த மாநிலத்தின் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க ஒகேனகல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்வரக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன். அண்டை மாநிலமான கர்நாடகம் நமக்கு வழிகாட்டி இருக்கிறது. அவர்கள் நம்முடைய உரிமையை மதிக்கவில்லை, மத்திய அரசு சொன்னதையும் மதிக்கவில்லை. ஹேமாவதி அணையைக் கட்டி விட்டார்கள். ஆனால், இந்த ஒகனேகல் திட்டத்தைக் குப்பைத் தொட்டியிலே போட்டு விட்டார்கள். இன்றைக்கு ஒகேனகல் திட்டத்திற்குப் போட்டியாக 15 மைல் தொலைவில் மேக்காட் என்ற இடத்தில் இன்னொரு மின் உற்பத்தித் திட்டத்தை அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஹேமாவதி திட்டத்தைப் போலவே, இந்தத் திட்டத்தையும் நம்முடைய ஆட்சேபணையை மீறி மத்திய அரசாங்கத்தின் ஆட்சேபணையை மீறி முடித்துவிட்டால், நம்மிடமிருந்து என்ன வாகும் என்பதை நம்முடைய அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே அதிலே உறுதியான ஒரு நிலையை எடுத்து, மாநில அரசின் உரிமையைக் காப்பதற்கும், இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

[முற்பகல் 11.50]

மாநில மின்வாரியத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தி வழி நடத்திச் செல்லுகிற அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கவேண்டும். அது சென்ட்ரல் எலக்ட்ரிசிடி அத்தாரிட்டிக்கு இருக்கக் கூடாது. அதற்கான சட்டத்தை இந்தச் சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு இந்த அரசு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று எங்கள் கட்சி விரும்புகிறது. அப்படிப்பட்ட நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமானால் அதை நாங்கள் ஆதரிப்போம் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையின் மேலான கவனத்திற்கு சில கருத்துக்களைக் கொண்டு வர விரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் எந்த அளவுக்குச் சீரோடும் சிறப்போடும் செயல்படுகிறது என்பதற்கு அதிகமான விளக்கத்தை எதிர்க்கட்சியினர் எதிர்பார்க்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால். இந்தியாவிலேயே அதிக அளவிற்கு மின்சார இணைப்புகள் கொடுத்து விவசாயிகளுக்காக இருந்தாலும் சரி, தொழிலாளிகளுக்காக இருந்தாலும் சரி, நெசவாளர்களுக்காக இருந்தாலும் சரி, தொழிலதிபர்களுக்காக இருந்தாலும் சரி, நல்ல முறையில் மின் இணைப்புகளைக் கொடுத்து இந்தியாவிலேயே தமிழகந்தான் முன்னணியிலுள்ளது என்ற பெரும் புகழை நம் தமிழக மின்சார வாரியம் பெற்றுள்ளது. எனவே, மின்சார வாரிய சரித்திர சாதனை பற்றி அதிகம் விளக்கத் தேவையில்லை. இந்த வாரியத்திலே சில குறைகள் இருப்பதாகவும், சில குற்றச்சாட்டுகள் இருப்பதாகவும், நிறைவு பெறாத நிலை இருப்பதாகவும் எதிர்க்கட்சியினர் அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நான் அவர்களுக்கெல்லாம் அடக்கத்தோடு ஒன்றைக் குறிப்பிட்டுச்சொல்ல விரும்புகிறேன். அண்ணா தி. மு. க. வின் ஆட்சி இந்த மாநிலத்தில் வந்த பிறகுதான் மின்வாரியம் ஏதோ நஷ்டத்தில் இயங்குவது போலவும் அதற்கு முன்னால் லாபத்தில் இயங்கியது போலவும் ஒரு கருத்தைக் கூறுகிறார்கள். அண்ணா தி. மு. க. வின் ஆட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த வாரியம் பொத்தல் இலைக் கலமாகத்தான் ஒப்படைக்கப்பட்டது என்பதைப் பொதுமக்களும் உணர்ந்தாக வேண்டும். இந்த மன்றமும் தெரிந்தாகவேண்டும். இதற்கு நான் பெரிய ஆதாரங்களைத் தர வேண்டுமென்று ஆசைப்படவில்லை.

1975—ல் மின்வாரியத்தின் அறிக்கையை இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்த திராவிட முன்னேற்றக் கழக அரசின் அமைச்சர் உயர்திரு சாதிக்பாட்சா அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்கள். இதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கசப்படைகிற நண்பர்கள் நிறைவு பெருவார்கள் என கருதுகிறேன். 'வாரியத்தின் நிதிநிலைமை தொடர்ந்து நெருக்கடியான நிலையிலேயே உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக தேய்மானச் செலவுகள், வட்டி கட்டுதல் ஆகியவற்றிற்கு மின் வாரியம் நிதி ஒதுக்கீடு செய்ய முடியவில்லை. தன்னுடைய செலவினங்களை முழுமையான அளவிற்கு மின்சார வாரியத்தினால் சமாளிக்க முடிவதில்லை. ஆக நிதிநிலையைப் பொறுத்தவரை திருப்திகரம் இல்லாத நிலையே நீடிக்கிறது', என்று பெருமதிப்பிற்குரிய சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிட்டார்கள், தனது அறிக்கையில்.

நான் இந்த மன்றத்திலே இப்போது சொல்லிக் கொள்ள விரும்புவது, எவ்வளவு மோசமான நிலையில் மின்சார வாரியம் இந்த அரசிடம் ஒப்படைக்கப்பட்டது, அதை அண்ணா தி.மு.க. அரசு எவ்வளவு சிறப்பாக நிர்வகிக்கிறது என்பதை சாதனைப் பட்டியலைத் தெரிந்த பிறகாவது மாற்றுக்கட்சி நண்பர்கள் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். இப்பொழுது பொறுப்பிலே இருக்கும் அண்ணா தி. மு. க. அரசு சாதனையையும் இதற்கு முன் பொறுப்பிலே இருந்த அரசு சாதனையையும் விளக்குவது எனது கடமையாகும்.

1975-ல் மின் உற்பத்தி 7,380 மிலியன் யூனிட். 1980-ல் மின் உற்பத்தி 10,580 மிலியன் யூனிட்; உயர் அழுத்த மின் கம்பிகள் நீளம் 1975-ல் 69,775 கிலோ மீட்டர் ; 1980-ல் 77,126 கிலோ மீட்டர். குறைந்த அழுத்த கம்பிகள் நீளம் 1975-ல் 2,02,645 கிலோ மீட்டர்; 1980-ல் 2,49,268 கிலோ மீட்டர். கூடுதல் உயர் அழுத்த துணை நிலையங்கள் 1975-ல் 150 ; 1980-ல் 192 ; அதாவது 25% கூடுதல். உயர் அழுத்த துணை நிலையம் 1975-ல் 129 ; 1980-ல் 165. மின் பங்கீட்டு நிலையங்கள் 1975-ல் 38,729; 1980-ல் 48,595. தனி நபர் உபயோகிக்கும் மின்சாரம் 1975-ல் 125 யூனிட் ; 1980-ல் 175 யூனிட். பம்ப் செட் உபயோகம் 1975-ல் 7,06,914 ; 1980-ல் 8,87,227. இவற்றை எல்லாம் நான் நினைவூட்டக் காரணம் இந்த அரசாங்கம் நஷ்டத்தில் நடந்து வந்த வாரியத்தை வைத்துக் கொண்டே நல்ல பல காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

பலஹீனமான இந்த நிலையில் மின்சாரவாரியம் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நட்டத்திலே நடந்து வந்த வாரியம் ஒப்படைக்கப்பட்டாலும், எங்கள் திறமையின் காரணமாக சிறப்பான முறையில் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே பலஹீனமான முறையிலும் நட்டத்திலும் செயல்பட்டு வரும் இந்த வாரியத்தை மேலும் ஊனப்படுத்தும் வகையில் மீண்டும் நட்டத்திற்கு உள்ளாக்கும் வகையில்

விவசாய சங்கத்தின் ஒரு பிரிவினர் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதை இந்த மன்றம் அறியும். விவசாய சங்கத் தலைவர்யாரையும் நான் தனிப்பட்ட முறையில் விமர்சிக்க விரும்பவில்லை. அது தேவையில்லையென்றும் கருதுகிறேன். மின்வாரியம் ஏற்கெனவே நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு யூனிட் மின் உற்பத்திக்கு ஏறத்தாழ 44 காசுகள் செலவாகிறது. 44 காசுகள் செலவாகிற மின்சாரத்தைத்தான் தமிழ்நாடு அரசாங்கம் சிறிய விவசாயிகளுக்கு 12 காசுகளுக்குக் கொடுக்கிறது. இந்தக் கட்டணத்தை செலுத்தாமல்தான் என் உயிரே போனாலும்சரி, தூக்குமேடையில் ஏற்றினாலும் சரி என்று போராட்டம் நடத்துகிறார்களே இவர்களெல்லாம் இந்த நாட்டின் மேல் நல்லெண்ணம் கொண்டவர்களா என்பதை இந்த மாமன்றம் ஆழ்ந்த கவலையுடன் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளது இதே மின்சாரக் கட்டணம் இதற்கு முன் ஆட்சியில் இருந்தவர்களால் யூனிட்டிற்கு 16 காசுகளாக வசூலிக்கப்பட்டாலும் 16 காசுகள் அதிகமல்லவா, ஏழை விவசாயிகள் கட்ட முடியுமா என்று வாதங்கள் எழுந்தபோது இப்போது எதிர்வரிசையிலே இருக்கும் கலைஞர் அவர்கள்தான் மற்ற மாநிலங்களில் யூனிட்டுக்கு 25 காசுகள் 26 காசுகள் வசூலிக்கிறார்கள், நாம் அப்படி வசூலிக்காமல் 16 காசுகள் வசூலிக்கிறோம் என்று பெருமையோடு இந்த மன்றத்திலே சொன்னார்கள். அதே கலைஞர் அவர்கள் இன்று அந்த 12 பைசா கட்டமுடியாது என்பவர்களுக்குப் பக்கபலமாக இருக்கிறார்கள் என்றால் அவர்கள் நாட்டின் நலன்கருதி செயல்படுகிறார்களா ? அவர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியில் செயல்படுகிறார்களென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாய சங்கத் தலைவர்கள் மக்கள் மத்தியிலே ஒரு தவறான கருத்தைச் சொல்கிறார்கள். ஏதோ தொழிலதிபர்களுக்குக் குறைந்த விலையில் மின்சாரம் கொடுப்பதாகவும், விவசாயிகளுக்கு சலுகை காட்டாததுபோலவும் தவறான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை அந்தத் தவறு—கொடுமை—கடந்தகாலத்திலே நடந்திருக்கலாம். புரட்சித் தலைவர் ஆட்சியில் அந்தக் கொடுமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு இனத்திற்கும் எவ்வளவு மின் கட்டணம் வசூலிக்கிறோம் என்ற பட்டியலைப் பார்த்தாலே தெரியும். பொது விநியோகத்திற்கு 70 காசுகள் வாங்குகிறோம். வீட்டு விளக்குகளுக்கு 35 காசுகள், தெரு விளக்குகளுக்கு 32.4 காசுகள், சிமின்ட் விநியோகத்திற்கு 24.5 காசுகள், குடிதண்ணீர் விசையேற்றத்திற்கு 25 காசுகள், ரயில்வேக்கு 29 காசுகள், காஸ்டிக் சோடாவுக்கு 21.50 காசுகள், உருக்குத் தொழிலுக்கு 20.50 காசுகள் உரத்தொழிற்சாலைக்கு 23.50 காசுகள், சிறிய விவசாயிகளுக்கு 12 காசுகள். இத்தனை விளக்கங்களும் நான் சொல்லக் காரணம் அண்ணா தி. மு. க. அரசுதான் விவசாயிகளிடம் குறைந்த கட்டணம் வசூலிக்கிறது என்று பெருமையோடு கூறிக் கொள்கிறேன். ஆனால் இந்த உண்மைகளை எல்லாம் உணராமல்

மக்களிடம் தவறான கருத்தைச் சொல்வதை இந்த மாமன்றம் உணரவேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கருத்தினை உங்களிடம் சொன்னேன். இப்போது மின்சார வாரியம் சிறப்பாகச் செயல்படுகிறது, ஏழைகளுக்குப் பயன்படும் முறையில் செயல்படுகிறது. இந்த மின்சார வாரியத்தின் அதிகாரங்களை எல்லாம் பலஹீனப்படுத்தியாக வேண்டும், அதனுடைய உரிமைகளை எல்லாம் பிரித்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் மத்திய அரசில் இருக்கிற அமைச்சர்கள் செயல்படும்போது வேதனையாக இருக்கிறது. இன்று மத்திய அரசிலே இருப்பவர்களுக்கு இராஜ தர்பார் நடத்த வேண்டுமென்ற ஆசை வந்து விட்டது. அது எந்த துறையாக இருந்தாலும் அது மத்திய அரசுக்கு சர்வ உரிமையாகத்தான் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இன்று மத்திய அமைச்சரவையில் பொறுப்பிலிருக்கும் **அமைச்சர்கள் எல்லாம் மின்சார வாரியத்தின் உரிமைகளைப் பறிக்கின்ற வகையில் அதன் அதிகாரங்களை எடுக்கின்ற வகையில் ஏற்கெனவே ஊனமுற்றுள்ளவைகளை முடமாக்குகிற வகையில் பேச்சுகளையும் செயல்களையும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்காக இந்த மாநில மின்வாரியத்தின் மீது குற்றங்களைச் சொல்கிறார்கள். இந்த ஆதிக்க வெறியர்களுக்கெல்லாம் புத்தி புகட்டும் வகையில் சாவுமணி அடிக்கின்ற வகையில் கடந்த நவம்பரிலே நடைபெற்ற மாநில மின்வாரிய அமைச்சர்கள் மாநாட்டில் நமது அமைச்சர் அவர்கள் மத்திய அரசின் கருத்துக்களை கடுமையாக விமர்சித்து அந்த மாநாட்டிலே பேசினார்கள். அதற்காக தமிழ்ச் சமுதாயம் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டு உள்ளது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபொது மத்திய மின்விசை அமைச்சரைக் குறிப்பிட்டு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

[நண்பகல் 12.00]

அவர் நமக்கு ரொம்ப சாதகமாக இருக்கிறார் என்று தெரிவித்துக் கொண்டு அவருடைய பெயரை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கி விடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பெயரை நீக்கிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. கேசவ ஆதித்தன் : ஏனென்றால், 1945ஆம் ஆண்டு மின்சார சட்டத்தின் கீழ் செயல்படுகிறோம். அந்தச் சட்டமே நமக்கு ஒழுங்காக அதிகாரத்தைத் தரவில்லை. நியாயமான உரிமையைத் தரவில்லை என்ற குறைகளை மாநில அரசுகள் மத்திய அரசிடம் சொல்லிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் மத்திய

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

அமைச்சர், இருக்கின்ற அதிகாரத்தைப் பிடுங்குகின்ற முறையில் செயல்படுகிறார் என்றால், எரிகிற விளக்கை அணைக்கிறார் என்று பொருளாகும். எனவே, நான் இந்த மன்றத்திலே தெளிவாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழ்நாடு மின்சார வாரியம் உரிமைகளையும், அதிகாரங்களையும் பறிக்கின்ற வகையில் மத்திய அரசு செயல்படுமானால் அதைத் தடுத்து நிறுத்துகின்ற முறையில் அரசுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டியது சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் கடமையாகும்.

இந்த நேரத்தில் ஒன்றை நினைவுறுத்துவது என் கடமையாகும். இன்றையதினம் விவசாயிகளைக் கிளர்ச்சிகளிலே ஈடுபடுத்தி மின்சார வாரியத்தை அதிகமான நஷ்டத்திலே இயங்கச் செய்கிறார்கள். இதற்காக அவர்கள் கூறும் காரணத்தை விளக்கத் தேவையில்லை. இதற்கான காரணத்தை உங்களிடம் கூறிவிட்டேன். குறைந்த கட்டணத்தை வசூலிக்கிறார்கள் என்று. இதற்கு விவசாயிகள் சார்பில் கூறப்படும் காரணங்கள் எல்லாம் எங்களுக்கு வருமானம் இல்லை, அதனால் கட்டவில்லை என்று விவசாய சங்கத் தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். இவ்வளவு குறைந்த விலையில் நாம் மின்சாரம் கொடுத்தும், அவர்கள் பணம் கட்ட மறுக்கிறார்கள் என்றால் அரசியல் அடிப்படையில் செயல்படுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே அந்த விவசாயிகளிடத்தில் கட்டணத்தை முறையாக வசூலித்தாக வேண்டும். அதற்கு இன்று புரட்சித் தலைவரவர்கள் சில நல்ல நெறிமுறைகளைக் கையாண்டிருக்கிறார்கள். கடந்த கால பாக்கிகளை 1 பிளஸ் 1 என்ற முறையில் நடப்பு மாதப் பணத்துடன் மூன் மாதப் பணப்பாக்கியையும் கட்டினால் மின்னிணைப்பு கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இது நியாயமாகும். இந்த நியாய உத்தரவையும் மறுத்து விவசாயிகள் சார்பாக சில மிராசுதார்கள் பிடிவாதம் செய்கிறார்கள் என்றால் நான் இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்கிறேன். அரசாங்கம் துளியும் நடவடிக்கை எடுக்கத் தயங்கக்கூடாது. ஏனென்றால் விவசாயிகளைப் பயன்படுத்திக் கிளர்ச்சிகள் செய்ய வைத்து, நாட்டின் உற்பத்தியைக் கெடுத்து படியரிசி 10 ரூபாய்க்கு விற்க வைக்க வேண்டுமென்று சில மிராசுதார்கள் விரும்புகிறார்கள். அதற்கு விவசாய சங்கத்தைப் பயன்படுத்துகிறார்கள். அதைத் தடுக்க இந்த அரசு உறுதியோடு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கு. ரமணி : துணைத் தலைவரவர்களே, மின் வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அவைக்கு அளித்ததில் அவர் சில முக்கியமான விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள் அது மிகவும் கவனத்திற்குரியது. இந்த மின்வாரியம் ஒரு கடுமையான நெருக்கடி நடவடிக்கைக்குள்ளாகி இருக்கிறது என்பது அவருடைய உரையிலே தெளிவாக்கப்

பட்டிருக்கிறது. தமிழகத்திலுள்ள இந்தப் பொருளாதார நெருக்கடியில் மின்சார வாரியத்தின் நெருக்கடியும் வந்து மின்வாரியம் ஒரு சிக் யூனிட்டாக இருக்குமோ என்று ஆலோசிக்கும் அளவிற்குப் போயிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. 1970 ஆம் ஆண்டிலிருந்து 1980—ஆம் ஆண்டு வரையில் பத்து வருடக் காலத்திற்குக் கிராமப்பகுதிகளுக்கு மின்னிணைப்பு வழங்குவதற்கு முக்கியத்துவம் அளப்பதாயினும்சரி, மின்சக்தியைக் கொண்டு செல்வதற்காயினும் சரி எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அந்த அளவிற்குக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டுள்ளார். புதிய திட்டங்களைச் செயலாக்குவது, மின் சக்தியைக் கொண்டு செல்வது, வழங்குவது ஆகிய திட்டங்களில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. மூலப் பொருள்கள் கிடைக்காத காரணத்தினாலும், உதிரிபாகங்கள் கிடைக்காத காரணத்தினாலும் இன்னும் மற்றப்பொருட்கள் கிடைக்காத காரணத்தினாலும் மின்சாரம் அனுப்பப்படுவதும், பங்கிடுவதும் பாதிக்கப்பட்டுள்ளது; மின் அழுத்த மாற்றிகளின் சுமைகள் அதிகரித்துள்ளன; வோல்ட்டேஜ் குறைந்து விநியோகத்தில் தடை ஏற்பட்டது; பழைய சாதனங்களுக்குப் பதிலாக புதிய சாதனங்கள் மாற்றப்பட வேண்டியுள்ளது. இவை அனைத்தும் அமைச்சரின் அறிக்கையில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள். இப்படி, உள்ளங்கை நெல்லிக்கனி போல், இருக்கின்ற விஷயத்தைப் பதிரங்கமாக எடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றுவதற்கு எவ்வளவு பெரிய நடவடிக்கைகள் தேவை என்பது மிகவும் முக்கியமான அம்சமாகும். ஆகவேதான் சொல்கிறேன். மின்சார வாரியத்திலே ஏற்பட்டுள்ள நெருக்கடி மிகப்பெரிய நெருக்கடியாகும்; இது நீண்ட காலமாகத் தொடர்ந்து வந்துள்ளது. இப்படிப்பட்ட நெருக்கடியை மாற்றுவதற்கு முடியாத நிலைக்கு மத்திய அரசினுடைய நலையீடும், மாநிலத்திற்குக் கொடுக்க வேண்டிய அதிகாரத்தைப் போதிய அளவிற்குக் கொடுக்காததும்தான் பிரதான காரணங்கள் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

அறிக்கையில் 34-வது பாராவில் சொல்கிறார்கள், "மின்சார வாரியம், மாநிலத்தில் முக்கியமான பொது பயன்பாட்டு நிறுவனமாதலால், அது உரியவாறும், திறம்படவும் செயல்படுவதற்கு மாநில அரசும், சட்டமன்றமும் பொறுப்பு வகிக்கையில், மக்களுக்குத் திருப்திகரமான முறையில் பணி புரிவதற்கு இயலும் வகையில் வேண்டிய மாற்றங்களைச் செய்வதற்கு நமக்கு சட்டப்படிக்கான அதிகாரங்கள் இல்லை" என்று சொல்கிறார்கள். கடந்த ஆண்டில் புது டில்லியில் நடைபெற்ற மின்சக்தி அமைச்சர்கள் மாநாட்டில் இந்நிலையை எடுத்துக் கூறியேதாக நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையான நிலையிது. இந்த மின் வாரியத்திற்கு எந்த அளவிற்கு மாநில அரசும் சட்டமன்றமும் பொறுப்பாக

இருக்கிறதோ அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் இன்றைக்கு இந்த மாநில அரசு கையில் இல்லை. இந்தச் சட்டமன்றம் நினைத்தாலும் செய்ய முடியாது என்கின்ற ஒரு நிலையில் அது நடக்கின்றது. இந்த நிலை நிச்சயமாக மாற்றப்பட்டாக வேண்டும். அப்படிப்பட்ட நிலை வரும்போது தான் ஒரு விஷயத்தை நான் எடுத்துச் செல்ல விரும்புகிறேன். நமது நண்பர் நெடுமாறன் அவர்கள் இந்த விஷயத்தைச் சுட்டிக்காட்டினார். நமது அமைச்சர் அவர்கள் இரண்டு நாளைக்கு முன்னாலே, இங்கே நமக்குப் பதில் அளிக்கும்போது, மத்திய, அதாவது சென்ட்ரல் கிரிட், அத்துடன் நாம் போய் இணையும்போது, அதனால் சில பயன் உண்டு என்று சொன்னார்கள். ஆனால், சென்ட்ரல் எலக்டிரிசிட்டி அத்தாரிட்டி ம நிலங்கள் முழுவதும் சென்ட்ரல் கிரிட்டில் இணைவதற்காக ஒப்புக் கொண்டு விட்டால், அவர்கள் நீண்ட நாளைக்குச் சும்மா இருப்பார்களா? அவர்கள் அதன்மீது ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலைமை ஏற்படாதா? மாநிலத்திற்கு மாநிலம் பேசி, தேவையைப் பெற்றுக்கொள்ள நமக்கு உரிமையிருக்கிறது என்று நீங்கள் சொன்னாலுங்கூட, அந்த விஷயத்தை முழுவதும் மையப்படுத்திவிட்டால், once it is centralised and started controlling by the Central Government என்ன நிலை ஏற்படும் என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, மத்திய சென்ட்ரல் கிரிட்டிலே போய் இணைந்துக்கொள்வது என்பது அவ்வளவு நல்ல காரியம் அல்ல. மாநிலங்கள் பலவும் அதை எதிர்க்கின்றன. அதை அமைச்சர் அவர்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட சிக்கலிலே போய் நாம் மாட்டிக் கொள்ளக் கூடாது. மாநில அரசுகளுக்கு அதிகப்படியான அதிகாரம் தேவை; மாநிலங்களுக்கான ஒரு முக்கியமான அந்த சர்வீசை நடத்துவதற்கும் மாற்றுவதற்கும் அதிகமான நிதி திரட்டுவதற்கும் முழு அதிகாரம் மாநிலங்களுக்கு கிடைக்க வேண்டும். மத்திய சர்க்கார் ஏற்படுத்துகின்ற பெரிய, பெரிய மின் நிலையங்களிலே, அவர்கள் துறிணைத்து, மத்திய கிரிட் வேண்டுமானால் உண்டாக்கட்டும். நமக்கு எப்பொழுது பற்றாக்குறை வருகிறதோ, அப்பொழுது அதைச் சரிப்படுத்தித் தருவதற்கு அவர்கள் உதவி செய்யட்டும். ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குக் கொடுக்கவேண்டிய மின் உதவியைப் பெற அவர்கள் உதவி செய்யட்டும். அதுதான் சரியாக இருக்கும் என்று நான் சொல்லவிரும்புகிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான விஷயம். மின் வாரியத்திலே, ரிசர்ச் அண்ட் டெவலப்மெண்ட், ஆராய்ச்சியும், வளர்ச்சியும் மிகமிகக் குறைவானதாகவும், சக்தியற்றதாகவும், திறமையற்றதாகவும் இருக்கிறது என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இன்றைக்கு அதற்கு அவர்கள் ரூ. 15 இலட்சம் வரை

அதையொட்டி நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யலாம். அப்படி எடுத்த பிறகும் தண்ணீர் பிரச்னையை ஒட்டு மொத்தமாக கேரளாவுக்கும் நமக்கும் இடையில் அதிகத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று நாம் வாதாடிக் கொண்டு இருக்கிறோம். அதற்கு சுமுகமான தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கலாம். இந்த மின் திட்டங்கள் நிறுத்தி வைக்கக் கூடாது. இது துரிதமாக வேலை செய்ய வேண்டும்.

அதேபோல எண்ணூர் மின் நிலையம். இதிலே தொடர்ந்து அங்கே இயந்திரக் கோளாறு. எப்போது பார்த்தாலும் இயந்திரத் கோளாறு. கோளாறான இயந்திரத்தையே வாங்கி வைத்திருக்கிறார்களோ என்று நமக்குப் புரியவில்லை. அதே போல, தூத்துக்குடியிலே இயந்திரம் ஓட்ட ஆரம்பிக்கிறபோதே கோளாறு. ஆரம்பமே கோளாறாக இருக்கின்றது. அப்படியானால் இந்த பி. எச். ஈ. எல். நிறுவனம் உருவாக்கித் தருகின்ற இயந்திரங்கள் எல்லாம் பயன்படுமா பயன்படாதா என்பது மிக கவனத்திற்குரிய விஷயம். இப்படிப் பட்ட கோளாறுகள் இருக்குமானால் தொடர்ந்து நிலையங்கள் எல்லாம் செயல்பட முடியாமல் கஷ்டம் ஏற்படும். இதனால் எரிகின்ற விளக்குகள் திடீரென்று மங்கலாகப் போகிறது. ஓடுகின்ற மோட்டார்கள் ஓடிக்கொண்டிருக்கின்றபோதே திடீரென்று ஸ்லோவாக, அப்புறம்கரண்ட் வந்த உடனேயே எரிந்து போகின்றது.

விவசாயிகளால் பல ஆண்டுகளாக போடப்பட்ட விண்ணப்பங்கள் லட்சக்கணக்கான விண்ணப்பங்கள், பத்தாயிரக்கணக்கான விண்ணப்பங்கள் இன்றைக்கும் பரிசீலித்து மின் இணைப்புக் கிடைக்காமல் இருக்கின்றது. இதெல்லாம் இந்தக் கோளாறில் இருந்துதான் ஏற்படுகிறது. ஆகவே மின்சார உற்பத்தியை அதிகரித்து அனுப்புவதில் அதை மக்களுக்குப் பரிந்து வழங்குவதில் வந்திருக்கும்படியான தெருக்கடி, இந்த மின் வாரியத்தை ஒரு சிக் யூனிட்டாக ஆக்கிவிட்டிருக்கிறது. இது மிகவும் வேதனையான விஷயமாகும். ஆயிரம் கோடி ரூபாய் மூலதனத்தையும், சொத்தையும் கொண்ட இந்த நிறுவனம் இப்படி ஆகி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது தொழிலாளர்கள் நிலையைப் பற்றிச் சொன்னார்கள். இது மிகவும் முக்கியமான அம்சம். எவ்வளவு இருந்தாலும் நல்ல மனத் திருப்தியோடு வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் இருந்தால் தான் காரியம் நடக்கும். ஒரு இலட்சம் தொழிலாளர்கள் இருந்தது, இன்றைக்கு 85 ஆயிரம் தொழிலாளர்கள் குறைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையைப் பற்றி சொல்லும்போது சம்பந்தப்பட்ட அனைவருக்கும், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே மிகவும் இணக்கமான நிலை உள்ளது. சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மன

நிறைவு தருகின்ற வகையில் ஊதிய விகிதமும், பணிச்சுமைகளும் உரிய காலத்தில் திருத்தி அமைக்கப்பட்டுவிட்டன, என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஓரளவுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய ஒரு ஊதிய ஒப்பந்தத்தை நாம் செய்தோம் அனைத்து சங்கங்களும் சேர்ந்து செய்தோம். இது வரவேற்க வேண்டிய ஒரு நல்ல அம்சம். ஆனால் வேலை பளு சம்பந்தப்பட்ட வரையில் ஆட்கள் எண்ணிக்கை சம்பந்தப்பட்ட வரையில் இப்படிப்பட்ட நிலை இல்லை. இன்றைக்கு அவர்களிடையே மிகப் பெரிய மனக் குமுறல்கள் இருக்கின்றன. அதை அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்குக் காலாகாலத்தில் தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக, காடம்பாரை தொழிலாளிகளைப் பற்றி ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். அங்கே மோசமான நிலைமை உருவாக்கப்பட்டு இருக்கிறது. இந்த அரசுக்கு அதனால் ஏற்படக்கூடிய கெட்ட பெயர் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். என்ன ஆதாயம் அரசுக்கு அதனால் கிடைக்கப்போகிறது? 110 ஆண்களும், 33 பெண்களும், 36 குழந்தைகளும் கடந்த இரண்டு மாதகாலமாக—கடந்த நவம்பர் 11—ம் தேதி—கைது செய்யப்பெற்று, சிறையில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் என்ன அந்தத் திட்டம் நடைபெறாமல் இருப்பதற்காகப் போராடினார்களா? இல்லை. அங்கே மின்வாரியத்திடமிருந்து கான்ட்ராக்ட் எடுத்து இருக்கக்கூடிய ஒரு ஏகபோக முதலாளி கம்பெனி வால் சந்த்—ஹிராசந்த்-அந்தத் தொழிலாளிக்குப் பொறுப்பாக இருக்க வேண்டியவர், தன்னுடைய பொறுப்பை தட்டிக்கழித்துக்கொள்வதற்காக உள்கான்ட்ராக்ட் விட்டு விட்டார்கள். அந்த உள் கான்ட்ராக்ட் எடுத்தவர்கள் எல்லாம் சேர்ந்து அங்கே நடைபெறக்கூடிய ஊழல்கள் மறைக்கப்படுவதற்காகவும், அங்கே ஒரு தொழிற்சங்கம் வளரவிடக்கூடாது என்கிற எண்ணத்திலும் இந்தக் காரியங்களைச் செய்து இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யவில்லை. நான் நிரூபிக்கத் தயார். அமைச்சர் அவர்களிடத்தில் நான் பல முறை சொல்லியிருக்கிறேன். நீங்கள் தொழிலாளியைப் பற்றி தவறாக எண்ணக் கூடாது. ஒரு விசாரணை வைத்தால் நான் தொழிலாளி வேலை நிறுத்தம் செய்யவில்லை என்பதை நிரூபிக்கத் தயார். அங்கே யிருக்கக்கூடிய கண்டிராக்டர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வேலையைக் குளோஸ் செய்து, அந்தத் தொழிலாளியை தொலைத்துக் கட்டப் பார்க்கிறார்கள். அதற்காக அரசாங்கத்திற்குத் தப்பாக ரிப்போர்ட் கொடுத்து அவர்கள் அத்தனை பேரையும் சிறையில் பிடித்துப்போட்டார்கள். கருங்காலி தொழிலாளர்களைக் கொண்டுவந்து வேலையிலமர்த்தி அங்கே தொழிற்சங்கம் இல்லாமல் செய்யும் நிலைமை அங்கே உருவாக்கப்பட்டது. அந்தத் தகராறை லேபர் கமிஷனர் முன்னாலே வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினோம். ஜாயின்ட் லேபர்

[1981 பிப்ரவரி 2

*திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழக மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது, அதை வரவேற்று பேசுகின்ற நல்லதொரு வாய்ப்பை தந்ததற்காக முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே கிழக்கே உதிக்கின்ற சூரியன் தினந்தோறும் உதிக்கவில்லை என்று சொன்னாலும்கூட இந்த நாட்டிலே கவலைப்பட யாரும் இல்லை. ஆனால் மின்சாரம் இல்லை என்று சொன்னால் உலகமே இருண்டு விடுகிறது. வாழ்க்கை தரம் இருண்டு விடுகிறது; பொருளாதாரம் இருண்டு விடுகிறது என்ற நிலை இங்கே இருந்துவருகிறது என்றால் அந்த அளவுக்கு இன்றைக்கு மின்சக்தி மக்களுக்கு மிகவும் பயன்படுகிற ஒரு சக்தியாக இருந்துக் கொண்டிருக்கிறது. பொருளாதார வளர்ச்சிக்கு மின்சக்தி மிகவும் அத்தியாவசியமான நிலையில் இருக்கிறது. நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு மிக மிக அத்தியாவசியமான இந்த மின்சக்தித் திறன் இப்போது எந்த அளவுக்கு நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை வளர்ந்துகொண்டு வருகிறது என்பதைப் பார்த்தால், அந்த விவரங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே தெளிவாக கொடுத்திருக்கிற அமைச்சரவர்களுக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

1960—1970 ஆண்டுகளில் நம்முடைய தமிழகத்தில் மின் சக்தியின் வளர்ச்சி வேகம் 10.1 சதவீதமாகக் இருந்திருக்கிறது. 1971—77 ஆண்டுகளில் இந்த நாட்டிலே மின் உற்பத்தி வளர்ச்சி 3.1 சதவீதமாக குறைந்திருக்கிறது என்ற ஒரு நிலையை இங்கே தெரிவிக்கும்போது நான் வெட்கப்படுகிறேன்; வேதனைப்படுகிறேன். அதேநேரத்தில் 1977-79-ல் மின்சக்தி உற்பத்தி வளர்ச்சி 14 சதவீதமாக உயர்ந்து, பெருமைப்படத் தக்க அளவுக்கு அப்போது ஆட்சி செய்துவந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சாதனையாக இருந்திருக்கிறது என்ற விவரத்தைத் தெரிவிப்பதிலே பெருமைப்படுகிறேன்; பூரிப்படைகிறேன். ஆனால் 1971-லே இருந்து 1977 வரையிலே இந்த நாட்டை ஆண்டது யார்? அந்த மின்சக்தி வளர்ச்சி 3.1 சதவீதமாக குறைந்திருப்பதற்கு என்ன காரணம்?

இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக இருப்பது விவசாயிகள். இன்று அந்த விவசாயிகளை இந்த நாட்டிலே தாண்டிவிட்டு, அவர்கள் சிந்துகின்ற ரத்தத்திலே தங்களை வாழ்விக்க வந்து கொண்டிருப்பவர்கள் இந்த நாட்டிலே யார் என்பதை இந்த மாமன்றத்தில் இருக்கிற நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். 1971—1977 ஆண்டுகளிலே மின்சார உற்பத்தியினுடைய வளர்ச்சி பாதிக்கப்பட்டதும், அதன் விளைவு என்ன என்பதும் இன்று நல்ல எண்ணத்தினாலே நம்மால் உணரப்பட்டாலும் கூட புரட்சித்

[திரு. சி. கோபால்] [1981 பிப்ரவரி 2

தலைவர் அவர்கள் விவசாயிகளுக்கும் மற்ற துறையினர்களுக்கும் பல்வேறு நன்மைகளையும் சலுகைகளையும் செய்து தரவேண்டுமென்ற நிலை இருந்தாலும்கூட மின்சாரத்தைப் பொறுத்த வரையில் அது நமக்கு பாதகமாக இருந்த வருகிறது,

1971-1977 ஆண்டுகளில் ஏற்பட்ட மின்சார வளர்ச்சியின் குறைவினால் ஏற்பட்ட விளைவுகளை இன்று நாம் அனுபவித்து கொண்டு வருகிறோம். அன்று தொட்டிலிலே குழந்தையை வைத்து தாலாட்டியவர்கள் இன்று விவசாயிகள் என்ற அந்த குழந்தையை கிள்ளிவிட்டு விளையாடுகிறார்கள் என்ற நிலையை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1971—லே இருந்து 1977 வரை இந்த நாட்டை ஆண்டவர்கள் மின் விளக்கு இல்லாத கிராமங்களே இல்லை. மின்சார விளக்குகளை அமைப்பதிலே நாங்கள் மாபெரும் சாதனை செய்துவிட்டோம் என்று விளம்பரம் செய்து கொண்டார்கள். அப்படி இந்தநாட்டை அவதிக்குள்ளாக்கியவர்கள் விட்டுச்சென்ற பிறகு நாம் இந்த அளவுக்கு இந்த நாட்டை உருவாக்கி இருக்கிறோம் என்பதை விளம்பரத்தின் மூலம் தமிழகத்திற்கு எடுத்துரைக்க வேண்டும் என்று நாம் இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்,

1983—84 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மின் உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 7.9 சதவீதமாக இருக்கும் என்று 10—வது ஆண்டு மின்சக்தி ஆய்வுக்குழுவின் மதிப்பீடு நமக்கு மாபெரும் சோதனைக் காலத்தை உருவாக்குகிறது. தமிழ்நாடு மின்சக்தி பற்றாக்குறையிலிருந்து விடுபடவேண்டும், அதற்கு ஏற்ற முயற்சியில் இந்த அரசு இறங்க வேண்டும், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்,

அடுத்து அவசரத் தேவைகளுக்கு மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்றபோது நாம் மற்றவர்களை நம்பி இருக்காமல், மின் சக்தி உற்பத்தியில் தன்னிறைவு பெற்று நாம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும். இந்த நிலைமையை மாண்புமிகு திறமைமிக்க நம்முடைய அமைச்சரவர்களின் காலத்திலேயே ஏற்படுத்தி அந்தப் பெருமை தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். [மணியடிக்கப் பெற்றது].

1981 பிப்ரவரி 2] [திரு. சி. கோபால்]

அடுத்து இந்தியாவிலேயே மின் சக்தியை பயன்படுத்து வகில் மூன்றாவது நிலைமையை எய்திருக்கின்றது தமிழகம் என்று சொல்கின்ற அளவுக்கு நாம் பல வகைகளிலும் முன்னேறி இருக்கிறோம் என்பதை எண்ணிப் பெருமை படுகிறோம். ஆனால் அதேநேரத்திலே நான் ஒரு வேண்டுகோளை வைக்க ஆசைப் படுகிறேன். மின்வாரியத்தினுடைய வருமானத்திலே ஒரு பகுதியை புதிய திட்டங்களை உருவாக்குவதற்குரிய வகையிலே நாம் ஒதுக்கவேண்டும். அனல் மின்நிலையம் போன்றவற்றின் மூலம் மின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். அனல் மின் நிலையங்களுக்கு அதிகமாக நிலக்கரி கிடைக்கும் வகையில் நல்ல வசதிகளை மத்திய அரசு மாநில அரசிற்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அனல் மின் உற்பத்திக்கென்றும் உற்பத்திக்கென்றும் தனித்தனியாக பொறியியல் வல்லுநர்களை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அனல் மின் நிலையங்களின் மூலம் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற செலவினைக் காட்டிலும் புனல் மின் நிலையங்களின் மூலம் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய் வதற்கான செலவு மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தால் மழைக் காலங்களில் செயல்படும் புனல் மின் திட்டங்களை மேம் படுத்த தனி பொறியாளர்களுக்கு ஊக்கமளித்து மின் உற்பத்தித் திறனை அதிக அளவில் பெருக்க ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து புதிய திட்டங்களைச் செயலாக்குவதற்கும், மின் சக்தியை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கும் தேவையான மூலப் பொருட்கள் கிடைப்பதில்லை. (மணியடிக்கப்பெற்றது)

அவ்வாறு கிடைத்தாலும் காலதாமதம் ஏற்படுகின்றது ஆகவே கடல் நீரிலிருந்து மின்சாரம் தயார் செய்ய வேண்டிய நடவடிக் கைகளை உடனடியாக எடுக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும். சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு மின் வசதி செய்து கொடுப்பதற்காக இவ்வரசால் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட கிராமப்புறங்களில் உள்ள குடிசைகளுக்கு மின்வசதி அளிக்கும் திட்டம் எனும் திட்டம் புரட்சிகரமானதாக நடத்திக் காட்டப்பட்டிருக்கின்றது. அதை மீண்டும் அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, மின் வாரியத்தினுடைய வரவு—செலவுக் கணக்கு கடந்த நவம்பர் மாதத்திலேயே வந்திருக்க வேண்டும். அது என்ன காரணத் தால் பிப்ரவரி மாதத்தில் வந்திருக்கின்றது? இருந்தாலும்கூட

[திரு. செ. சிவசாமி] [1981 பிப்ரவரி 2

கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்களுடைய ஆலோசனைகள் சிலவற்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1,022 கோடி ரூபாய் செலவு செய்து 1,400 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்ற மிகப்பெரிய கணக்கு நமக்கு முன்பு வைக்கப் பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தைப் பார்க்கின்றபோது மிகவும் அட்டூகாசமாக இருக்கின்றது. ஆனால் பயன் எதுவும் இருக்காது என்று நினைக்கிறேன். மாண்புமிகு அமைச்சவர்கள் பல புள்ளிவிவரங்களை கொடுத்திருக்கிறார்கள். புள்ளிவிவரங்களிலே மின்சாரத்தை எந்த அளவுக்கு 1971—லேயிலிருந்து கட் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறார்களோ அந்தப் புள்ளி விவரங்களைத்தான் சொல்லி கோண்டிருக்கிறார்கள். வேறு ஒன்றும் இதிலே காணப்பட வில்லை. அந்த அளவுக்கு தமிழ்நாட்டிலே தொடர்ச்சியாக 1971-லே இருந்து மின்சாரத்தை கட்பண்ணிக்கொண்டு வந்தது பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது. 1971-ல் இருந்து மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இந்த மின்சாரத் துறையில் இருந்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க விஷயம் என்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன்: நான் 1977-ல் இருந்து பொறுப்பேற்றிருக்கிறேன்.

திரு. செ. சிவசாமி: இன்று தமிழகத்தில் மின் பற்றாக்குறை இருக்கிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழே கிட்டதட்ட 60 சதவீதம் மக்கள் உழன்றுகொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டின் பொருளா தார நிலை உயரவேண்டுமென்றால் ஏழை எளிய மக்களின் பொருளாதார நிலை உயர வேண்டும். திட்டங்கள் இடும்போது அமைச்சர் அவர்கள் வேதனைப்படுகிறார்கள், வெதும்புகிறார்கள், வரும் பத்தாண்டுகளுக்கு மின்சார நிலை நிறைவு அளிப்பதாக இல்லை என்று, மின்சார உற்பத்தித் திட்டங்களைப் பொறுத்த வரையில், மின்சக்தி ஆய்வுக்குழு தமிழகத்திற்கு ஆதரவாக இல்லை என்று சொல்கிறார்கள். ஏன் ஆதரவாக இல்லை? மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறதா? 11 ஆண்டுகள் மின் சக்தி ஆய்வுக் குழு வளர்ச்சி விகிதத்தை குறைத்து மதிப்பிட் டுள்ளது. தமிழ்நாடுதான் குறைந்தளவு மின்சக்தியின் வளர்ச்சியில் இடம் பெற்றிருப்பது தமிழ்நாட்டுக்கு இழைக்கும் பெரும் அநீதியாகும். அநீதி ஏன் ஏற்படுகிறது? என்ன காரணத் தினால் ஏற்படுகிறது. உண்மையில் மத்தியஅரசு நமக்கு ஆதரவாக இருக்கிறதா அல்லது தமிழ்நாட்டுக்கு எதிராக இருக்கிறதா என்பதை இந்தச் சபையில் மட்டுமல்ல வெளியில் உள்ள ஆறு கோடி மக்களும் உணரக்கூடிய வகையில் வெளியில் எடுத்துச் சொல்லவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

1981 பிப்ரவரி 2] (திரு. செ. சிவசாமி]

மின்சாரம் இல்லாவிடில் இந்த நாட்டில் எதுவும் இயங்க முடியாது. தமிழ்நாடு மட்டுமல்ல, உலகமே மின்சாரத்தினால் தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. மின்சாரத்தின் மூலம்தான் சந்திரனுக்குச் சென்று கொடி கட்ட முடிந்தது. ஆகவே தமிழ் நாட்டுக்கு அதிகப்படியாக மின்சாரம் கொடுப்பதைவிட்டு, மின்சார அளவை உயர்த்துவதை விட்டு எந்தளவிற்கு பாதகம் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு நமக்கு பாதகம் செய்துகொண்டிருக் கிறது மத்திய அரசு என்றால் இதைப் பார்த்துக்கொண்டே யிருக்கமுடியாது.

புதுடெல்லியில் 1980 நவம்பரில் நடைபெற்ற மின்சாரத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் தமிழ்நாடு மின்சாரப் பற்றாக் குறையில் இருந்து விடுபட வேண்டும், நமக்கு மேற்கொண்டு 10% அதிகப்படியாக ஒதுக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள் தற்போது மின்சாரத் திட்டங்கள் வட்டார நோக்கோடு செய்யப் படுகின்றன. இந்த நிலையில் மத்திய ஒருங்கிணைப்பு வரவேண்டு மென்று பரவலாகப் பேசப்படுகிறது. இந்தநிலையில் இப்படிப் பட்ட ஆபத்துக்கள் இருக்கக்கூடிய நிலையில் ஒருங்கிணைப்பு செய்துவிட்டால் தமிழ்நாடு மட்டுமல்ல, தென்னாடு மட்டுமல்ல, இந்தியா முழுவதையும் ஒரே கிரிட்டில் கொண்டுவந்தால் எப்படிப் பட்ட ஆபத்துவரும் என்பதை இந்தச் சபையில் எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, எண்ணூர் அனல் மின்நிலையத்தில் கிட்டத் தட்ட 5,350 மெகாவாட்ஸ்க்கு திட்டமிடப்பட்டது. ஆனால் கிட்டத்தட்ட 3,600 மெகாவாட்ஸ்தான் கிடைக்கிறது என்றால் என்ன காரணத்தால் இப்படிப்பட்ட திட்டங்கள் தோல்வியடை கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். செக்கொஸ் லேவேக்கியா நாட்டு நிபுணர்களைக் கூட்டிவந்து நான்கைந்தாண்டு களில் நிறைவேற்றலாம் என்று சொல்கிறார்கள். உண்மையில் ஐந்தாண்டுகள் காத்திருக்கவேண்டியதில்லை. அங்குள்ள உண்மை நிலை என்னவெனில், அங்கே தொழில் தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கொடுக்கக்கூடிய காண்ட்ராக்டர்கள் அவ் வளவும் பெரிய என்ஜினியர்களை உள் காண்ட்ராக்டாகக் கொண்டு காண்ட்ராக்ட் விட்டு அவர்களுக்கு ஆதரவு கொடுக்கும் நிலை இருப்பதால் எந்தளவிற்கு தொகை ஒதுக்கப்படுகிறதோ அந்தத் தொகை முழுவதையும் வைத்து எந்தப் பகுதியில் எந்தப் வேலைசெய்யவேண்டுமோ அதைச்செய்யாது இரண்டு பேர்களும் பங்கு போட்டுக்கொள்கிறார்கள். அந்தளவிற்கு இன்று நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட போக்குகாரணமாகத்தான் பெரிய அளவில் உள்ள இந்த மின் நிலையம் சரியாக இயங்கவில்லை, உற்பத்தி பெருகவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறேன்.

தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் 1974-ல் 210 மெகா வாட்ஸ் திறன் கொண்டு உற்பத்தி துவங்கும் என்று சொல்லப் பட்டது. அங்குள்ள புள்ளிவிவரங்களை பார்க்கிறபோது அது சரியாக இயங்கவில்லை என்று சொல்லப்படுகிறது. நிலக்கரி

[திரு. செ. சிவசாமி] [1981 பிப்ரவரி 2

கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். 1980-ல் இரண்டாவது பிரிவு தொடங்கப்படும், சிக்கல் ஏற்பட்டால் 1981-ல் தொடங்கப் படும் என்று சொன்னார்கள்.

அங்கே சரியானபடி நிலக்கரி கிடைக்காததன் காரணமாக, எரி எண்ணெயைக் கொண்டு அது இயங்கிக் கொண்டு வருகிறது. அப்படி எரிகின்ற நிலையிலே முதல் திட்டம், இரண்டாவது திட்டம் சரிவர இயங்கவில்லை என்ற நிலையில், மூன்றாவது திட்டத்தைப் பற்றியும் பேசப்படுகிறது. முன் அனுபவங்களைக் கொண்டு, இந்தத் திட்டங்களை எவ்வளவு சீக்கிரத்திலே முடியுமோ அவ்வளவு சீக்கிரம் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலியைப் பொறுத்த வரையில், அது சரியான திட்டம். அங்கேயும்கூட நாம் எதிர்பார்த்த அளவிற்கு திட்டம் நிறை வேற்றப்படாமல், நாம் எதிர்பார்த்த அளவிற்கு பலன் கிடைக்க வில்லை. 6.5 மில்லியன் டன் நிலக்கரி கிடைக்கக் கூடிய ஒரு மிகப் பெரிய திட்டம். இன்றைக்கு அது சரியானபடி வேலை செய்யவில்லை. அதற்காகச் சொல்லப்படுகின்ற காரணம், அதிகமாக மழை பெய்துவிட்டது, அதனால் ஏராளமான தண்ணீர் உள்ளே சென்றுவிட்டது, உறுப்புகள் சரியாக வேலை செய்ய முடியவில்லை என்றெல்லாம் சொல்வது சரியான வாதமல்ல. 6.5 மில்லியன் டன் நிலக்கரி கிடைக்கக்கூடிய இந்தத் திட்டத்தை உடனடியாக இயக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். 7 ஆண்டுகளாக உற்பத்தி அங்கே தணிந்து கொண்டு வருகிறது. இது ஆபத்தானது. கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு, நெய்க்கு அலைவது போல், எல்லாவிதமான சாதனங்களும், பழுப்பு நிலக்கரி இருந்தும், எரி எண்ணெய் இருந்தும், அவைகளை சரியான முறையிலே உபயோகப்படுத்தப்படாமல் இருந்ததற்குக் காரணம், அந்த நெய்வேலித் திட்டத்திலே ஒரு சுணக்க நிலை ஏற்பட்டிருக்கிறது.

கல்பாக்கத்தைப் பொறுத்தவரையில், 1973-74-லேயே உற்பத்தி துவங்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. 235 மெகா வாட் அணு மின் உற்பத்தி செய்யக்கூடிய திட்டம். அதை மேலும் விரிவுபடுத்தி, கல்பாக்கத்திலும், திருநெல்வேலி மாவட் டத்தில் கூடங்குளத்திலும் அமைக்கவேண்டுமென்று மதிப் பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் மாநாட்டிலே வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நிலைமை என்ன? காலதாமதம் ஆகிறது. ஆனால், ஒரு முக்கியமான மூலப்பொருளான கன நீர் உற்பத்தி செய்வதில் மிகப்பெரிய தாமதம் ஏற்படுகிறதோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. தூத்துக்குடி கன நீர் உற்பத்தி நிலையத்திலும் கல்பாக்கம் கனநீர் உற்பத்தி நிலையத் திலும் சதி வேலையின் காரணமாக அந்த உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று நினைக்கிறேன். நீண்ட நாட் களாக இரண்டு திட்டங்களிலும் கன நீர் உற்பத்தியாகாமல் செய்துகொண்டிருக்கிறார்கள். என்ன காரணத்திற்காக மிக முக்கியமான கன நீர் உற்பத்தி செய்வதில் பாதிப்பு ஏற்பட்டி ருக்கின்றது என்பது தெரியவில்லை. கடந்த பட்ஜெட்

கூட்டத்திலே இந்த நிலைமை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும், இன்றுவரை அது சரி செய்யப்படவில்லை. இது ஆபத்தானது. இந்த நிலையை கணக்கில் எடுத்துக் கொண்டு, கன நீர் உற்பத்தி செய்வதற்கு பிரதானமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கையிலே 1979 ஆண்டு முடிய மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் 5,532 மில்லியன் யூனிட்டுகள் மின்சக்தி உற்பத்தி செய்ய முடிந்தது. அப்படியிருந்தும், தமிழ்நாடு பற்றாக் குறையால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். மொத்தமாக உற்பத்தியை ஏடுத்துக் கொண்டால், 38.80 இலட்சம் பேர்கள் வீட்டுக் காரியத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள். 8.87 இலட்சம் பேர்கள் வேளாண்மைக் காகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், 1,42 இலட்சம் பேர்கள் விவசாயத்திற்காக உபயோகப்படுத்தக்கூடிய நிலையில் கிட்டத் தட்ட 28 கோடி ரூபாய் பாக்கியிருக்கின்றன என்று சொல்லப்பட்டி ருக்கிறது. ஏற்கனவேயே 10 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டு விட்டது. 18 கோடிதான் பாக்கியிருக்கிறது. எனவே, 8.87 இலட்சம் விவசாயிகளிடம் சுமார் 18 கோடி ரூபாய் பாக்கி யிருக்கிறது. ஆனால், 1.42 இலட்சம் பேர்கள் தொழில்களுக்காக பயன்படுத்துபவர்களிடமிருந்து 15.41 கோடி ரூபாய் பாக்கி யிருக்கிறது. இதைத்தான் மால்கோ போன்ற நிறுவனங்கள் பதுக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு தொழில் துறையிலே இருப்பவர்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்கள் பல ஆண்டுகளாக வசூலிக்கப்படாமல் இருக்கின்றன. ஆனால் விவசாயிகளிடமிருந்து மட்டும் கெடுபிடி செய்து வசூலிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆனால், அந்த நிலை விவசாயிகளுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில் தமிழகத்தில் 63,428 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன் அதற்கு வாழ்த்துகிறேன்.

[பிற்பகல் 12.40]

அந்த அளவுக்கு, தமிழகத்தில் மின்சாரத்தை உபயோகப் படுத்தக்கூடிய அளவுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, 45,653 அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டதற்காக மீண்டும் வரவேற்று, வாழ்த்துகிறேன். ஆனால் தெரு விளக்குகள் சரியாக எரிவதில்லை. அவை எரிவதற் கான ஏற்பாடுகளை செய்யவேண்டும். விவசாயத்திற்கு ஆறு மணி நேரம், எட்டு மணி நேரம் என்று கணக்கிட்டு கொடுக்கப் படுகிறது. அதனால் வாய்க்காலில் தண்ணீர் பாதி ஓடி, பாதி காய்ந்து விடுகிறது. கொடுக்கும்படியான மின்சாரத்தைப் பகலில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மீட்டர் வாடகை நான்கு ரூபாயிலிருந்து இரண்டு ரூபாயாகக் குறைத்தது வரவேற்கதக்கது.

(மணியடிக்கப்பட்டது)

* திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். இயற்றல், ஈட்டல், வகுத்தல் ஆகிய சீரிய பணியினை இன்றைய தினம் தமிழக மின்சார வாரியம் சிறப்பாகச் செய்து கொண்டு வருகிறது.

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மின்சக்தி இன்றி யமையாத ஒன்று. மின் தேவை வளர்ந்து வரும் இந்நாட்களில் மின் உற்பத்தி (ஜெனரேஷன்), மின்சாரத்தை அனுப்புதலும், பகிர்தலும் (டிரான்ஸ்மிஷன், டிஸ்ட்ரிப்யூஷன்), கிராம மின் இணைப்புத் திட்டங்கள் (ரூரல் எலக்ட்ரிபிகேஷன்) இவைகளில் அதிகக் கவனம் செலுத்தி, ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீடான 3,150 கோடியில், 1,022 கோடி ரூபாய் மின்சாரத் துறைக்கு ஒதுக்கி 1,400 மெகா வாட் உற்பத்திக்கு தமிழக மின் வாரியம் எதிர்காலத் தேவைகளுக்காக முன் நோக்கோடு செயல்பட்டு வருவதைப் பார்க்கும்போது உண்மையிலேயே சிறப்பான பணியினை தனது எதிர்கால திட்டத்தில் சேர்த்து நன்கு நடைபெற்று வருவதற்குச் சான்றாக அமைந்திருக்கிறது.

மின்சக்திக்கு உபரி மாநிலங்களின் தயவை நாடியிருப்பது தமிழகப் பொருளாதாரத்தைப் பாதிக்கின்ற வகையில் இருப்பதால், மின் சக்தி குறித்து திட்டமிடுதல், மாநிலமே ஒரு அலகாகக் கருத்தில் கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசு பொறுப்பேற்கும் நிலையங்களில் இருந்து மாநிலங்களின் பற்றாக்குறை விகிதாசாரத்தின் அடிப்படையில் பகிர்ந்து கொள் வதற்கு ஒப்புக்கொண்டாலன்றி, உபரி மாநிலங்கள், மின்சக்தி தேவைப்படாவிட்டாலும் ஒதுக்கீடு பெறுமாதலால், வட்டார அடிப்படையில் திட்டமிடும் கோட்பாடு தவறானதொன்றாகுமென எடுத்துக் கூறியிருப்பது சாலச் சிறந்ததாகும். வரும் ஆண்டுகளில் நமது மின்சக்தி திட்டமிடுதல் பற்றிய கொள்கையாகும். இதனை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியிருப்பது நல்லதொரு எடுத்துக்காட்டாக மற்ற மாநிலங்களுக்கு அமையும் என்று நம்புகிறேன்.

புனல் நீர் மின்நிலையங்கள் சாத்தியமான இடங்களில் எல்லாம் கட்டப்பட்ட நிலையில், அனல் மின் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, எண்ணூர், தூத்துக்குடி, நெய்வேலி ஆகிய இடங்களில் உற்பத்தி அளவை மேம்படுத்த எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் மன நிறைவளிக்கும் வகைகளில் உள்ளது. அணு மின் நிலையங்களைப் பொறுத்த அளவில்,

1981 பிப்ரவரி 2] [திரு. வே. இரா. ஜெயராமன்]

குறித்த காலத்தில் தொடங்கியிருக்க வேண்டிய கல்பாக்கம் தாமதமாகி வருவதற்கான காரணங்கள், இந்தியத் தலைமை யமைச்சருக்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அடுத்து, இரண்டு அணு மின் நிலையங்கள் கல்பாக்கத்தில் ஒன்றும், கூடங்குளத்தில் ஒன்றும் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் தமிழக முதல்வர் விளக்கியுள்ளார். இது தொடர்பாக மத்திய அரசு துரித நடவடிக்கை எடுக்குமென எதிர்பார்க்கிறேன்.

அண்டை மாநிலங்களின் இசைவைப் பெறுகின்ற நிலையில் முடிவெடுக்கப்படாமலிருக்கின்ற, ஒகேனக்கல், பாண்டியாறு புன்னம்புழா, சோலத்திபுழா ஆகிய திட்டங்கள் குறித்து தமிழக முதல்வர் மற்ற மாநில முதல்வர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தவிருப்பது பாராட்டுவதற்கொன்றாகும்.

கடலில் இருந்து அனல் மின்சக்தி பெறுகின்ற திட்டத்தை மத்திய அரசு விரைவில் செயல்படுத்த அனுமதி அளிக்க வேண்டும். அதற்கு 100 கோடி ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தகைய திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து 100 கோடி ரூபாய் நிதியை மிக விரைவாக ஒதுக்கித் தரவேண்டும்.

1980—81-ல் 35 துணை மின் நிலையங்கள், 1,200 கிலோ மீட்டர் தொலைவிற்கு கூடுதல் உயர் அழுத்த கம்பித் தொடர் அமைத்தல், 1980-85 ஆம் ஆண்டுத் திட்டத்தில் 126 துணை மின் நிலையங்களும் 4500 கிலோ மீட்டர் தொலைவிற்கு கூடுதல் உயர் அழுத்தக் கம்பித் தொடர்கள் அமைக்கவிருப்பதும் பாராட்டுவதற்கொன்றாகும்.

புதிய திட்டங்களைச் செயலாக்குவதில் மூலப் பொருட்கள் பற்றாக்குறை காரணமாக இருப்பதால், நாட்டில் குறைவாகக் கிடைக்கும் அவசியமான, துணுக்கம் மிகுந்த பொருள்களை இறக்குமதி செய்ய மத்திய அரசு விரைவில் முடிவெடுத்து அதற்கான ஆணைகளை வழங்க வேண்டுமென்று வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சக்தி குறித்த திட்டச் செலவு 1974—75-ல் 36.27 கோடி ரூபாயாக இருந்தது 1980—81-ல் ரூ. 176 கோடியாக உயர்ந்துள்ளது. அண்மைக்கால மதிப்பீட்டின்படி நிதி இழப்பு 105.37 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

1981 பிப்ரவரி 2] [திரு. வே. இரா. ஜெயராமன்]

வருவாய் பாக்கி வசூலிப்பதிலுள்ள சிரமங்கள், வேளாண்மைத் துறைக்கு அளித்துள்ள சலுகைகள், நிலக்கரி விலையேற்றம், பிற மாநிலங்களிலிருந்து வாங்கப்படும் மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு அதிகப்படியான விலை ஆகிய காரணங்களே மின் நிதி இழப்பிற்கு காரணங்களாக உள்ளன.

விவசாயிகளுக்கு 1 பிளஸ் 1 ஏற்பாட்டின்படி 1980 ஆம் ஆண்டு நவம்பர் வரையிலும் 37.60 கோடி ரூபாய் பாக்கி இருந்தது, இப்போது 27.22 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது. வேளாண்மைப் பயனீட்டாளர்கள் 5.63 லட்சத்திலிருந்து 1.66 லட்சம் குறைந்துள்ளனர். மீட்டர் வாடகை 4 ரூபாயிலிருந்து 2 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. வாரியத்திற்கும் அதன் தொழிலாளர்களுக்கும் சுமுக உறவு இருக்கின்றது.

1948 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தை மாறிவரும் இன்றைய சூழ்நிலைமைகளுக்கு ஒப்ப நாடாளுமன்றத்தின் மூலமாக மாற்றி, புதிய மின்சாரச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். நிர்வாக வசதிக்கு ஏற்பவும், வளர்ந்து வரும் இன்றைய தேவைகளுக்கு ஏற்பவும், நிர்வாக வகையிலும், பணி வகையிலும் மாற்றி அமைக்கப்பட உள்ளது பாராட்டுதற்குரியது என்று கூறி "இதனை இதனால் இவன் முடிக்கு மென்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு ஒப்ப செயல்பட்டு வரும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவரையும், மின் துறை அமைச்சரையும் பாராட்டி, இந்த மின் நிதிநிலை அறிக்கையினை வரவேற்று அமைகிறேன்.

*திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்வாரியத்தினுடைய 1980—81 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். மின்வாரியத்தினுடைய அறிக்கையில் மின் வாரியத்திற்கு இழப்புகள் ஆண்டுக்காண்டு அதிகமாகிக்கொண்டே இருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மின்வாரியத்திற்கு 1977 ஆம் ஆண்டில் இருந்து இழப்புகள் ஏற்பட ஆரம்பித்திருக்கின்றன. 1979—80 இல் ஏற்பட்ட இழப்பு 24.56 கோடி என்றும், 1980—81 ஆம் ஆண்டிலே எதிர்பார்க்கப்பட்ட இழப்பு 64.77 கோடி என்றும், ஆனால் பல்வேறு காரணங்களினால் எதிர்பார்க்கப்பட்ட இழப்பு அதிகமாகி 105.37 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி அதிகப்படியாக ஏற்படும் இழப்புகள் தடுக்கப்பட்டவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1981 பிப்ரவரி 2

1980 மார்ச்சு 31 ஆம் நாளன்று உள்ள நிலவரப்படி மின் கட்டண பாக்கி சுமார் 44 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே மால்கோ நிறுவனத்திற்கு மட்டும் 9.43 கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது என்று அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன். சாதாரண ஏழை விவசாயிகளைப் போலீசாரை வைத்துக்கொண்டு மிரட்டி மின்இணைப்பைத் துண்டித்து வசூலிக்கிற நேரத்திலே இவ்வளவு பெரிய தொகையை 9 கோடி ரூபாயைக் கொடுக்கவேண்டிய மால்கோ நிறுவனத்திடமிருந்து கண்டிப்பாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கவில்லையே ஏன் என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே அதற்குக் குறிப்பிடப்பட்டிருக்கிற காரணம் வழக்கு மன்றத்திலே அது இருக்கிறது என்பதாகும். வழக்கு மன்றத்திலே இருந்தாலும்கூட அந்த வழக்குகளை எல்லாம் உடனடியாக முடிப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை விவசாயிகள், பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகள் கொடுக்கவேண்டிய தொகையை காவல் துறையை வைத்துக் கொண்டு மிரட்டி மின் இணைப்பைத் துண்டித்து, நியாயமாகப் போராடிக்கொண்டு இருக்கிற விவசாயிகளைச் கூட்டுப் பொசுக்குவது பரிதாபத்திற்குரிய செய்தியாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுத்ததை யாராலும் மறுக்கவோ மறக்கவோ முடியாது. தீவிரமான திட்டங்களைத் தீட்டி எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு எல்லா கிராமங்களிலேயும் மின்சாரம் வழங்கப்படுகிறதா என்றால் இல்லை. தெருவிளக்குகள் எல்லாம் பழுது பார்க்கப் படாமல், திருப்பிப் பார்க்கக்கூட நாதியில்லாத நிலையிலே இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். பல்வேறு இடங்களிலே தெருவிளக்குகளை மாற்றியமைக்க முடியாமல், நடப்பட்ட கம்பங்கள் சாய்ந்து கிடக்கின்றன. அவற்றை நிமிர்த்திவைக்கக்கூட ஆள் இல்லை. அதிகாரிகளைக் கேட்டால் பணியாளர்கள் போதுமானவர்கள் இல்லை என்றும், அலுவலர்கள் போதுமானவர்கள் இல்லையென்றும் சொல்லித் தட்டிக்கழிக்கிறார்கள். இப்படிச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்களே தவிர அந்தப் பணிகள் செய்யப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12.50]

அதே நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்வது என்னுடைய கடமையாகும். கிராமப்புறங்கள் புறக்கணிக்கப் படுகின்றன. கிராமங்களிலே உள்ள விளக்குகள் பராமரிக்கப்பட

1981 பிப்ரவரி 2[[திரு. இரெ. இராசமாணிக்கம்]

வில்லை. ஆனால் மதுரை மாநகரத்தை அழகுபடுத்துவதற்காக கோடியம் விளக்குகள் 12·25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 12 இலட்சம் ரூபாய், 13 இலட்சம் ரூபாய்களைச் செலவு செய்து சோடியம் விளக்குகளைப் பொருத்தி அழகுப்படுத்தப் பார்க்கின்ற நேரத்தில், கிராமப்புறங்களில் வாழக்கூடிய ஏழைகள், அரிசனங்கள் ஆகியோர் இருக்கின்ற பகுதிகளையும் பார்க்க வேண்டாமா? அங்குள்ள விளக்குகளைப் புதுப்பிக்க வேண்டாமா என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு பகுதிகளில் இன்னும் தெருவிளக்குகள் போடப் படாமல் இருக்கிறது. எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி என்று செயல்பட்ட நேரத்தில் சில பகுதிகள் விடுபட்டிருக்கின்றன. அந்தச் சில பகுதிகளுக்குக் கூட இந்த ஆட்சி வந்த பிறகு இந்தத் திட்டத்தை நிறைவேற்றி விளக்கு போட்டு கொடுக்கப்படவில்லை. இன்னும் பாக்கியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரிசனச் காலனிகளில் இனாமாகக் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்ற வீடுகளுக்கு மின்சார விளக்குகளையும் இனாமாகக் கொடுப்பதுதான் நம்முடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இல்லாதவர்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு' வசதியற்றவர்களுக்கு அரசின் சார்பாக இனாமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கும் பொழுது அரசின் சார்பில் அந்த விளக்குகளையும் இனாமாக அமைக்க வேண்டியது நம் முடைய கடமை. அவ்வாறு இனாமாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இது முக்கியமான பிரச்னையாகும்.

அடுத்து விவசாயிகள் பல ஆண்டுகளாக மின்சார மோட்டார்களை வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இன்னமும் மின்னிணைப்பு கொடுக்கப்படவில்லை. மின்சார மோட்டார்களை வாங்கி வைத்துக் கொண்டு கட்டிடங்களைக் கட்டி வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக மின்னிணைப்பு கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சார இலாக்காவைப் பொறுத்தவரையில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. எந்த இடத்திலே கேட்டாலும் எந்த நேரத்திலே எதைச் சொன்னாலும் அதைச் செய்வதற்கு அதிகாரிகள் தயாராக இல்லை. காரணம், நான் ஆரம்பத்திலே சுட்டிக்காட்டியதைப் போலப் பணியாளர்கள் போதுமான அளவிற்கு இல்லை என்ற ஒரே காரணத்தைக் கூறுகிறார்கள்.

திரு. செ. சிவசாமி:— பேரவை உதவித் தலைவரவர்களே, மதுரைக்கு சோடியம் விளக்கு போடக்கூடாதா என்பதை நண்பர் அவர்களிடம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்:— மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதுரைக்கு சோடியம் விளக்குகள் போடக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அழகுப்படுத்தச் செய்கின்ற அதேநேரத்தில் கிராமப் பகுதிகள் புறக்கணிக்கப் படக்கூடாது. அங்கேயும் இப்படிப்பட்டத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று எடுத்துக்காட்டத்தான் குறிப்பிட்டேனே தவிர, மதுரைக்குப் போடக் கூடாது என்று சொல்லவில்லை.

டாக்டர் கே. சமரசம்:— பேரவைத் துணைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் பேசுகின்ற பொழுது இன்னும் கிராமங்களுக்கு—சில கிராமங்களுக்கு வெளிச்சம் போடவில்லை. மின்சார மோட்டார்களுக்கு மின்னிணைப்புக் கொடுக்கவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். அதேநேரத்தில், இப்படி கிராமங்களுக்கு மின்னிணைப்புக் கொடுக்காமல், பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்புக் கொடுக்காமல், மின்சார பூர்த்தி விழா என்று நடத்தியது போலித்தனமானது என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜோ. எஸ். இராசு:— மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளி வழங்கப்பட்டதா இல்லையா என்பதைப் பிறகு கவனிக்கலாம். போட்டு முடிந்த விளக்குகளேகூட கடந்த ஏழெட்டு மாதங்களாக எரியாமல் இருப்பதையும், அதை திருப்பிப் பொருத்தக்கூட நல்லதொரு மாற்று ஏற்பாடு இல்லாமல் இருப்பதையும் நிச்சயமாக நண்பர் சமரசம் அவர்களின் உள்ளுணர்வு கொண்டிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்:— பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார இணைப்புக் கொடுக்காமல் நிறைவு விழாக் கொண்டாடியதாகச் சொன்னார்கள். எல்லா ஊராட்சிகளுக்கும் மின்னிணைப்புக் கொடுத்திருக்கிறோம் என்பதை மறுக்க முடியாது. எல்லா கிராமங்களுக்கும் மின்னிணைப்புக் கொடுத்திருக்கிறோம். ஆனால் ஊராட்சிகள் சில பகுதிகள் விடுப்பட்டிருக்கின்றன. அந்தச் சில பகுதிகளுக்குக்கூட இந்த ஆட்சி வந்தபிறகு மின்னிணைப்புக் கொடுக்கவில்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைக் கூடச் செய்யாமல் பெரிய சாதனையாக எதையெதையோ செய்திருக்கிறோம் என்று சாதனைப்பட்டியல் போட்டுக்

காட்டுவது அவ்வளவு நல்லதல்ல. ஆகவே நான் சுட்டிக்காட்டியதைப் போல மின்சாரவாரியம் நல்லமுறையில் செயல்படாமல் ஊழல் இல்லாமல் செயல்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்து என்னுடைய கருத்தை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்:— பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டு மின்துணை நிதிநிலை அறிக்கையின்மீதும் 1979—80 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கையின்மீதும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே குடிசை வீடுகளுக்கு ஒருவிளக்கு திட்டம் கொண்டு வரப்பட்டது. அது ஒரு பெரிய புரட்சிகரமானத் திட்டம். அதன்மூலமாக, ஏறக்குறைய, இதுவரையில், 2.3 இலட்சம் குடிசைகள் பயன்படைந்திருக்கின்றன. ஆனால் மேதகு ஆளுநர் ஆட்சியின்பொழுது, அது நிறுத்தப்பட்டு விட்டது. தற்பொழுதும் அந்தத் திட்டம் தொய்வு நிலையிலேயே கொண்டிருக்கிறது. அதை விரிவுப்படுத்தி, விரைவுப்படுத்த அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ரூ. 10 பிளஸ், ரூ. 2½ ஆக, ரூ. 12½-ஐ ஒரு குடிசைக்கு வழங்கிவிட்டால், இணைப்புக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அது சம்பந்தமான மின்சாரப் பொருள்களுடைய விலையோ, ஏறக்குறைய ரூ. 20க்கு மேலாகிறது. ஆகவே, கொஞ்சம் கூடுதலான தொகையாக இருந்தாலும் கூட, ரூ. 20 பிளஸ் ரூ. 2½ என்று வசூலித்து, உடனடியாக இணைப்புக்களைக் கொடுக்க அரசு முன் வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, விவசாயிகளுக்கு பாசன பம்பு செட்டுகளுக்கு இணைப்புத் தருவதில் மிகக் காலதாமதம் ஏற்படுகிறது. 1974-75ல் அக்ரிமெண்ட் செய்ததற்குத் தற்பொழுதுதான் மின் இணைப்பு கொடுக்கப்படுகிறது. மூன்றுமாத நோட்டிஸ்கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில் வங்கிக் கடன் கிடைக்காத சிலபேர் கொஞ்சம் தாமதம் செய்வதால், 3 மாத நோட்டிஸ்களுக்குப் பிறகு, அவர்களுடைய அக்ரிமென்டே ரத்து செய்யப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அடுத்து எங்களுடைய தென்னாற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், பாலாற்றுக்கு ஓரமுள்ள கிராமப் பகுதிகளுக்குப் பாலாறுப் படுகைச் சான்றிதழ் வாங்கினால் தான் மின் இணைப்பு கொடுக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. சர்டிபிகேட் கேட்கிற அத்தனை பேருக்கும் கொடுக்கப்பட்டாலும்கூட, அது 3 ஆண்டுகள் 4 ஆண்டுகள் என்று இழுத்தடிக்கப்படுகிறது. அதனாலே, பல விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கிடைக்காமல் இருக்கிற சூழ்நிலையை இந்த அரசு போக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1981 பிப்ரவரி 2] (திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்)

அரிசனக் காலனிகள், மீனவர் குப்பங்கள், புதுக் குடியிருப்புகள் ஆகியவைகள் பலவற்றிற்கு இன்றைக்கு தெருவிளக்குகள் போடப்படாமல் பழைய நிலைமையிலே இருந்து வருவதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். தற்பொழுதுள்ள தெரு விளக்குகள், பல்புகள் ஃபியூஸ் ஆகி பயனற்று இருக்கின்றன என்பது அத்தனை பேருக்கும் தெரியும். ஆனால், பல்புகளும், டியூப்களும் ஃபியூஸ் ஆவதால் மட்டும் தான் விளக்குகள் எரியாமல் இல்லை. அங்கே இணைக்கப்பட்டுள்ள இணைப்புகள் சரியாக இல்லாததாலும், அவைகள் சரியாகப் பராமரிக்கப்படாததாலும், புதுப்பிக்கப்படாததாலும் தான் இப்படிப்பட்ட துர்பாக்கியமான நிலைமைகள் ஏற்படுகின்றன. அது மட்டுமல்ல, தற்போதுள்ள மின்சாரம் லைன்கள் எல்லாம் 30, 40 ஆண்டுகளுக்கு முன்னால் போட்டவைகள். அவைகள் ஒவ்வொரு நகரங்களிலும் நார் நாராக பிய்ந்துக் கொண்டிருக்கின்றன என்ற அவல நிலையைப் பார்க்கிறோம். மழைக்காலத்தில், அவைகள் எல்லாம் வாணவேடிக்கைகள் போன்று வெடித்துக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட துர்பாக்கிய நிலைமைகளையெல்லாம் மாற்ற வேண்டும். எந்த, எந்த இடத்திலே, காலாவதியாகிவிட்டதோ, அந்த இடங்களிலே மின் கம்பிகள் புதிதாகப் போட்டு இவைகளை எல்லாம் புதுப்பித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, சில கிராமங்களில் மின் கம்பிகள் மழை நேரங்களில் அறுந்து விழுவதாலே மாடுகள், ஆடுகள், மனிதர்கள் அத்தனைப்பேரும் இறந்து விடுகிற துர்பாக்கிய நிலையிருக்கிறது. இறந்தவர்கள் குடும்பத்திற்கு ஏறத்தாழ ரூ. 3,000 தரப்படுகிறது என்றாலுங்கூட, பல ஆண்டுகள் அதற்காக அவர்கள் அலைய வேண்டியிருக்கிறது. அதை மாற்றி, விரைவாக அவர்கள் பயன் அடைகின்ற விதத்தில் செய்து தரவேண்டும் மென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், செங்கல்பட்டு, திருவள்ளூர், தாம்பரம், காஞ்சிபுரம் போன்ற பல நகரங்களுக்கு புதிய மின் கம்பிகளை இழுப்பதற்கு பதிலாக, மேலே போடப்பட்டிருக்கிற மின் கம்பிகளை மாற்றி, பூமிக்கு அடியிலே கேபிள் மூலம் இணைப்பு வழங்கி, அதன்மூலம் ஆபத்தைத் தவிர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனக் காலனிகளில் எல்லா வீடுகளும் குடிசை வீடுகள் தான். இங்கே இருக்கிற கோயில்கள் போன்றவைகள்தான் பொதுவான இடங்கள். அந்தக் கோயில்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படுகிறது. அந்த ஏழ்மையிலேயிருக்கிற, வறுமையினாலே இருக்கிற அரிசனப் பெருமக்கள், திருமண நேரங்களிலே, அந்தக் கோயில்களிலிருந்து தங்களுடைய வீடுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்படிக் கேட்டால் தங்கு தடையின்றி மின்சாரம் கொடுக்க இந்த அரசாங்கம் முன் வர வேண்டும். அதன் மூலமாக அவர்கள் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்] [1981 பிப்ரவரி 2

அடுத்து விவசாயிகளால் மட்டுமல்லாமல், தொழிற்சாலைகளிலே மின்சாரம் அதிகமாகத் திருடப்படுகிறது. அதைக் கண்டு பிடிப்பதற்குச் சாதாரண அலுவலர்களை நியமிப்பதாக நமக்குத் தெரிய வருகிறது. அதை விடுத்து, உயர் அதிகாரிகளை நியமித்து, அவ்வப்போது பரிசோதனை செய்து, அவ்வப்போது கண்காணிக்கின்ற வகையில் முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1.00]

எண்ணூர் அனல் மின் திட்டம் இருக்கிறது, தூத்துக்குடி அனல் மின்திட்டம் இருக்கின்றது. ஆனால் அவைகளிலே இருக்கின்ற சில குறைபாடுகளின் காரணமாக அவைகள் எதிர்பார்த்த பலனை அளிக்கமுடியாத நிலையில் இருப்பதைக் காண்கிறோம். பேசின் பிரிட்ஜ் அனல் மின்திட்டம் தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது முன்னாலே இருந்ததை விட 3-ல் 1 பங்குதான் உற்பத்தியைக் கொடுக்கிறது. ஆனால் ஏற்படுகின்ற சிலவோ அதிகமாக இருக்கின்றது. அங்கு எரிபொருளாக எண்ணையை உபயோகப்படுத்தி மின்சாரத்தை எடுக்கின்ற காரணத்தால், இன்றைக்குப் பத்து மடங்கு செலவிட நேருகிறது, எரிபொருளாக எண்ணையை மாற்றுவதன் மூலம் அந்தச் செலவு ஏற்படுவதில்லை. அங்கே இருக்கின்ற அதிகாரிகளை எல்லாம், அனுபவம் வாய்ந்த பழம்பெரும் அதிகாரிகளை எல்லாம் மாற்றிவிட்டார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளை மீண்டும் கொண்டு வந்து அந்த இடங்களை நிரப்ப வேண்டும். அப்போதுதான் இப்படிப்பட்ட குறைகளை போக்கவேண்டும்.

அடுத்து, கல்பாக்கம் மின் நிலையம் திட்டமிட்டவாறு 1973-74லேயே உற்பத்தியைத் தொடங்கி இருக்க வேண்டும். ஆனால் இதுவரையில் அது தொடங்கவில்லை. சமீபத்தில் நமது புரட்சித் தலைவர் அவர்கள் இந்திராகாந்தி அம்மையாரைச் சந்தித்த போது இதை விரிவு படுத்தவேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறார்கள். மேலும் 2 அணு மின் திட்டங்களை அமைக்க வற்புறுத்தியிருக்கிறார்கள். அதற்கு உறுதுணையாக நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அடுத்த ஆண்டிலேயாவது இந்தக் கல்பாக்கம் அணு மின்நிலையம் உற்பத்தியைத் துவக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1980—85ல், 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூடுதலாக 1,400 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் மின்சக்தி உற்பத்திக்காக 1,022 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது மிக மிகத் தேவையான ஒன்றாகும். அதை நான் வரவேற்கிறேன். இதன் மூலம் அதிக மின்சாரம் கிடைக்க கூடிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 பிப்ரவரி 2] (திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்)

நம்முடைய கிராமப் பகுதியிலேயே மின்வாரியத்தின் சார்பில் பணிபுரிகின்ற ஹெல்ப்பர்கள், லைன்மென்கள் இந்த இலாகாவினுடைய வேலையில் அக்கறை எடுத்துக்கொள்வதில்லை மிகவும் அசட்டையாக இருக்கிறார்கள். இது குறித்து அவர்களுடைய மேலதிகாரிகளிடத்தில் புகார்கள் சொன்னால், அதை அந்த அதிகாரிகள் காது கொடுத்துக் கேட்பதில்லை. மேலும் அந்த ஹெல்ப்பர்களும் லைன்மென்களும் அந்தக் கிராமங்களிலே குடியிருப்பதில்லை. பக்கத்தில் உள்ள நகரங்களில் தான் குடியிருக்கிறார்கள். எனவே அவர்கள் பணியாற்றும் அந்தக் கிராமங்களிலே குடியிருப்பதற்காக அவர்களுக்குக் குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை]

அடுத்து மின்சாரக் கட்டணத்தைக் கட்டாமல் இருப்பவர்களின் மின் இணைப்புகளைத் துண்டிக்கச் செல்லுகின்ற ஊழியர்கள் அதிகாரிகள் பாதிக்கப்படுகிறார்கள், அடிக்கப்படுகிறார்கள், துன்புறுத்தப்படுகிறார்கள். எனவே அவர்கள் தங்கள் பணிகளைச் செய்கின்ற நேரத்தில் அவர்களுக்கு உரிய பாதுகாப்புச் செய்து தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1980 ஆண்டு நடந்த மின்சக்தி அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்ற போது தமிழ்நாடு தொடர்ந்து மின்சக்தி பற்றாக் குறையில் இருக்கிறது. அதிலிருந்து விடுபட, நம் தேவைகளுக்கு கூடுதலாக 10 சதவீதம் ஒதுக்கித் தரவேண்டும் என்று மின்துறை அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதை பெற வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எரித் தொல்லை காரணமாக நிலங்களில், வேலிகளில் மின் இணைப்புக் கொடுப்பதால் ஆடுமாடுகள், மனிதர்கள் இறக்க நேரிடுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : இந்த விவாதத்தில் பங்கு கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சபையின் முன் வைத்த குறிப்பின் மீது என்னுடைய கருத்துகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். சார், முதலிலேயே நான் ஒரு திடுக்கிடும்படியான பாராவைப் படித்தேன். அதாவது "இனிவரும் பத்தாண்டுகளில் மின்சக்தி நிலைமை நமக்கு மன நிறைவு அளிப்பதாக இல்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

(திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்) [1981 பிப்ரவரி 2

This is a very progressive Government as they say and if the Hon. Minister for Electricity Shri. Ramachandran, and particularly one of the ablest Ministers in the Electricity says that for another 0 years there is going to be no improvement in the electricity, I can assure you Sir, that this will give the greatest shock in the development of industries in this State.

அதற்கு பதிலாக கனம் அமைச்சர் அவர்கள் பற்றாக்குறை இருக்கிறது. அதற்கு நாங்கள் முடிந்த வரையில் ஏற்பாடு செய்கிறோம். எல்லோரும் இங்கே வந்து பெரிய இன்டஸ்ட்ரீஸ், சிறிய சிறிய இன்டஸ்ட்ரீஸ் கொண்டு வர வேண்டும் என்று சொல்லியிருந்தால், அது மிகவும் உசிதமாக இருக்கும், எனகரேஜ்மென்டாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, இந்த ஒரு அபிப்பிராயத்தை அவர்கள் கூடிய சீக்கிரம் மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால், நிறைய ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ், ஆயிரக்கணக்கான சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் வரவேண்டும்; பெரிய தொழில்கள் வர வேண்டும் என்று நாம் கூறுகிறோம். அந்த மாதிரி வந்தால் தான் 'அன் எம்ப்ளாயின்மென்ட் சிட்சுவேஷன் சால்வாகும்' என்று கூறுகிறோம். ப்ரொடக்ஷன் ஜாஸ்தி வந்தால்தான் பணப்புழக்கம் இருக்கும். சராசரி வருமானம் ஜாஸ்தியாக இருக்கும் என்று கூறுகிறோம். இவற்றிற்கெல்லாம் மின்சார சக்தி எவ்வளவு முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரியும். இதிலே முக்கிய கவனம் செலுத்தினால் தான் அது வளர்ச்சிக்கும், உற்பத்திக்கும் வழிவகுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையில் 43 கோடி ரூபாய் மின் கட்டண பாக்கி இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதில் 9 கோடி ரூபாய் மால்கோ நிறுவனத்திடமிருந்து வரவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. 3 வருஷ காலமாக சரியான முறையில் மின் கட்டணத்தை நீங்கள் வசூல் செய்யவில்லை என்று நான் அறிகிறேன். எந்தக் காரணத்தால் அப்படி வசூல் செய்யப் படாமல் இருந்தது என்பதை என்னால் தெரிந்துகொள்ள முடிய வில்லை. யாராவது பிரைவேட் தொழில் செய்பவர்கள் இப்படி இருந்திருப்பார்களானால் அவர்களுடைய நிலைமை இந்த நேரத்தில் வேறு விதமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

when you are supplying electricity, the party is bound to pay the chirges. If they don't pay you have every opportunity to cut the electricity. I do not know under what circumstances you allowed this and showed leniency. Please avoid this. No more leniency should be shown to such people.

1981 பிப்ரவரி 2] (திரு.கே.எஸ்.ஜி.ஹாஜாஷெரீப்)

சென்னையில் உள்ள மக்களிடையே ஒரு பெரிய குறை ஏற்பட்டு இருக்கிறது. மாதாமாதம் அவர்களுக்கு மீட்டர் ரீடிங் எடுக்கப்படுவது இல்லை. அதற்கு பதிலாக 2 மாதம், 3 மாதம் ரீடிங் ஒன்றாக எடுக்கப்பட்டு—அல்லது சில நேரங்களில் மீட்டர் ரீடிங் எடுக்கப்படாமலேயே மொத்தமாக அவர்கள் பில் அனுப்புவதால், அது மக்களுக்கு மிகவும் பாதகமான விளைவுகளையும், நிலைமைகளையும் ஏற்படுத்துகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன், அப்படி அவர்கள் 3 மாதம் அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை பில் அனுப்பினால், அவர்கள் அந்தப் பணத்தை ஒட்டுமொத்தமாகக் கட்டமுடியாது, மாதாமாதம் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுகிறேன் என்று கூறுவார்களானால். அதற்கும், அரசு அனுமதி அளிக்குமானால், வசூல் செய்ய வேண்டிய பாக்கித் தொகை இன்னும் அதிகரிக்கும். ஆகவே, மாதா மாதம் மீட்டர் ரீடிங் எடுத்து பில் அனுப்பி. அந்த பில் பணத்தை வங்கியிலோ அல்லது மின் வாரிய அலுவலகத்திலோ கட்டுவதற்கு வழிவகை செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது மின்வெட்டு 30% இருக்கிறது. இது சிறு தொழில் நிறுவனங்களை மிகவும் கணிசமான அளவிற்கு பாதித்து இருக்கிறது. அவர்கள் ப்ரொடக்ஷன் இதனால் பாதிக்கப்படுகிறது. அதனால் அங்கே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களையும் குறைத்து விடுகிறார்கள். மேலும், உற்பத்தி அதிகரித்தால் தான் இந்தப் பொருள்களை அவர்கள் விற்று, வாங்கிய கடனுக்கான பணத்தை வட்டியும், முதலுமாகத் திருப்பிச் செலுத்த முடியும். ஆகவே, ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரிஸ் பொறுத்த வரையில், இந்த மின்வெட்டில் இருந்து எக்சம்ஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறுதொழில்கள் அதிகரித்தால் தான் வேலைவாய்ப்புகள் பெருகும். வேலையில்லாப் பிரச்னை குறையும் என்ற காரணத்தால், இந்த எக்சம்ஷன் நிச்சயமாக அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு இருக்கக்கூடிய மொத்த மின் உற்பத்தி திறன் 3000 மெகாவாட். ஆனால் 1500 மெகாவாட்தான் நாம் தற்போது உற்பத்தி செய்கிறோம். மீதமுள்ள 1500 மெகாவாட் ஏன் சரிவர கிடைக்கவில்லை என்பது ஆராயப்படவேண்டும். இது ஒரு முக்கியமான பிரச்னை. சென்ற சில மாதங்களுக்கு முன்பு நான் பேசுகிறபோது சொன்னேன். நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய தெர்மல் ஸ்டேஷன் சரியாக ப்ரொடக்ஷன் வரவில்லை என்று சொல்வதால், அதற்காக ஒரு ஸ்பெஷல் குழுஅமைத்து நம்முடைய மாநிலத்தவர்களாக இருந்தாலும் சரி, பிற மாநிலத்தில் இருந்து வந்தாலும் சரி, அல்லது வெளிநாட்டில் இருந்து வந்தாலும் சரி, அவர்களைக் கொண்டு சரியாக ஆராய்ந்து, அந்த நிலையங்கள் மேக்சிமம் அவுட்-புட் கொடுக்கிற வகையில் சீரமைக்க வேண்டும் என்று யோசனை கூறினேன்.

(திரு.கே.எஸ்.ஜி.ஹாஜாஷெரீப்) [1981 பிப்ரவரி 2

[பிற்பகல் 1.10]

அதற்கு அமைச்சரவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அந்தமாதிரி செய்யலாம் என்று சொன்னார்கள். அதைச் செய்தார்களா இல்லையா, தெரியவில்லை. ஆனால் இந்த குறிப்பில் செக்கஸ்லோவோச்கியாவிலிருந்து வந்து பார்வையிட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பார்வையிட்டால் மட்டும் போதாது; அதனால் எந்த அளவுக்கு நமக்கு பலன் கிடைக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

'ட்ரான்ஸ்மிஷன் லைன் லாஸ்' பற்றி எல்லாம் இங்கே குறிப்பிட்டு, இருக்கிற சங்கடத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மின்சாரத்தை 'கட்' என்பதைப் பொறுத்தவரையில், முழு உற்பத்திக்கு நாம் ஏற்பாடு செய்தால், நீங்கள் எந்தவிதமான 'கட்'டும் கொண்டு வர வேண்டி இருக்காது என்று நான் கருதுகிறேன்.

இப்போது நம்முடைய மாநிலத்தில் பல சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. கல்பாக்கம் சீக்கிரம் வரும் என்று சொல்கிறார்கள். அதைப்போல நெய்வேலி உற்பத்தி முழுவதும் இப்போது நமக்கே கிடைக்கிறது; நெய்வேலி செகன்ட் ஸ்டேஜ் விரைவிலே வரும் என்று சொல்கிறார்கள். அதிலிருந்து கிடைக்கும் முன் மின்சாரமும் முழுவதும் நமக்கே கிடைக்க வேண்டும். அதற்கு வாதாட வேண்டும். அதில் நாங்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தெந்த மாநிலத்தில் இப்படிப்பட்ட யூனிட் இருக்கிறதோ அந்தந்த மாநிலத்தில் அவர்களுடைய தேவைக்குப் போக மிஞ்சியதைத்தான் மற்ற மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற ஒரு முறையை நீங்கள் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பக்கத்து ஸ்டேட்டிலிருந்து மிகுதியாக நமக்கு மின்சாரம் வரவில்லை என்று சொல்கிறார்கள். இதற்கு உங்கள் பி. ஆர். ஓ. அமைப்பு முறை சரியாக இல்லை என்று நான் கருதுகிறேன். பப்ளிக் ரிலேஷன் சரியாக இருந்தால் அதிகமான பலன் நிச்சயமாக கிடைக்கும். இந்த பி. ஆர். ஓ. அமைப்பு என்பது ஒரு திறமையான ஆசாமியைக் கொண்டதாக இருக்க வேண்டும். அப்படியானால்தான் பலன் கிடைக்கும். அப்படி ஏற்படுத்திக் கொண்டால் எந்தெந்த ஸ்டேட்டிலிருந்து உங்களுக்கு உதவ முடியுமோ அந்தந்த ஸ்டேட்டுக்கு நீங்கள் அவர்களை அனுப்பி, நமக்கு பலன் கிடைக்க ஏற்பாடு செய்தால் அதைவிட நமக்கு சாதகமான நிலை இருக்காது என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது இந்த 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிலக்கரியைப் பயன்படுத்தி பெரிய ஜைஜாண்டிக் தெர்மல் ஸ்டேஷன்களை ஏற்படுத்த மத்திய அரசு அறிவித்திருக்கிறது. பீகார், கல்கத்தா

போன்ற பகுதிகளில் அப்படி அமைக்கப் போவதாகத் தெரிகிறது. அப்படி அங்கே அமைக்கப்பட்டால் அங்கேயிருந்து பின்னர் பற்றாக்குறை மாநிலங்களுக்குக் கொண்டுவர முடியுமா என்பதைத் தெரிந்து, இப்போது நீங்கள் மத்திய அரசிடம் ஆலோசனைப் பெற வேண்டும். எனக்குத் தெரிந்தமட்டில் அப்படிக் கொண்டு வருவது கஷ்டம் என்று கருதுகிறேன். பெரிய முற்போக்கான தேசங்களில். ஆஸ்திரேலியா தேசத்தில் 'லிஃப்ட் இரிகேஷன்' செய்கிறார்கள். நூற்றுக்கணக்கான 'வாட்டர் சோர்ஸஸிலிருந்து, லிப்ட் இரிகேஷன் மூலம் மழை பற்றாக்குறை பகுதிகளில் தண்ணீரைக் கொண்டு வந்து, பயிர் செய்கிறார்கள். அதேமாதிரி இங்கே ஸ்டோரேஜ் செய்து பற்றாக்குறை மாநிலங்களுக்கு எவ்வளவு தூரம் இருந்தாலும் கொண்டுவர முடியுமா என்று பார்க்க வேண்டும். முடியும் என்ற நோக்கம் எனக்கு இருக்கிறது. அதை நீங்கள் நம்முடைய நிபுணர்கள் மூலம் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த 'எலக்ட்ரிசிட்டி'யைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் ஒவ்வொரு ஸ்டேஜிலும் அதிகமாகப் பேசலாம். ஜெனரேஷன் ஸ்டேஜ் ஆக இருந்தாலும் சரி, அல்லது டிஸ்டிரிபியூஷன் ஸ்டேஜ் ஆக இருந்தாலும் சரி, ஒவ்வொன்றிலும் அதிகமாகப் பேசலாம். ஆனால் இப்போதுள்ள நிலைமையில் ஒரு கஷ்டமான நிலை இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிகிறது. ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்பதை அரசாங்கம் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும். ஆலோசணை செய்வதோடு, இதற்கு என்ன என்ன ஸ்டெப்புகளை எடுக்க வேண்டுமோ அந்த ஸ்டெப்புகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சில மாதங்களுக்கு முன்பு இங்கே நான் பேசுகின்ற போது ஒரு யோசனை சொன்னேன். எங்கெங்கே நிலக்கரி போன்ற வசதி வாய்ப்புகள் இருக்கின்றதோ அங்கேயெல்லாம் ஒரு 100 மெகாவாட் அளவுள்ள ஒரு தெர்மல் ஸ்டேஷன் அமைக்க முன்வரவேண்டும் என்று நான் சொன்னேன். ஏனென்றால் அந்தப் பகுதிகளிலே நிலக்கரி கொண்டுவருவது மிகவும் கஷ்டமாக இருக்கலாம். இப்போது கப்பலில் நிலக்கரி கொண்டுவரப்படுவதில்லை என்று அறிகிறேன். அவ்வாறு கொண்டு வருவதற்குரிய முறைகளை இப்பிரஸ் செய்யவேண்டும். க்வாலியரிலே இருந்து கல்கத்தா போர்ட்டுக்கோ அல்லது வேறு போர்ட்டுக்கோ கொண்டு வந்து அங்கிருந்து தூத்துக்குடி, மெட்ராஸ், கடலூர், பாண்டிச்சேரி நாகப்பட்டிணம் ஆகிய இந்த மாதிரி இடங்களுக்குக் கொண்டு வந்து சுமார் 100 மெகாவாட் திறன் உள்ள மின் நிலையங்களை ஏற்படுத்தினால் மிக நன்றாக இருக்கும். அதிலே இருந்து அந்தந்த டிஸ்ட்ரிக்ட்களுக்கு வேண்டிய பவரை எடுத்துக்கொண்டு விட்டு மீதியுள்ளதை காமன் கிரிடிலே போட்டுவைத்துக்கொண்டு இருக்கும். இந்த வகையிலே நீங்கள் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி இன்னும் என்னென்ன வகைகளிலே பவர் உற்பத்தி செய்ய முடியுமோ

அந்தந்த வகைகளில் பவர் உற்பத்தி செய்யவேண்டும். சீ வேவ் ஸிலிருந்து பவர் உற்பத்தி செய்யலாம் என்ற ஒரு கருத்து பரவலாக வந்து கொண்டிருக்கின்றது. அதையும் நீங்கள் ஆராய்ந்து அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆவலாகிறேன். இவ்வாறு சீ வேவ்ஸிலே இருந்து பவர் தயாரிக்கவேண்டும் என்பது பற்றி பத்து, பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பே கேட்கப்பட்டது. இப்போது மத்திய நிதித்துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அப்போது தமிழகத்தின் அமைச்சராக இருக்கின்றபோது சொன்னார். இவ்வாறு சீ வேவ்ஸிலே இருந்து பவர் எடுக்கின்ற முறை பிற தேசங்களில் பின்பற்றப்படுகின்றது, அது போன்று நாமும் ஒரு ஸ்கீம் தயாரிக்கவேண்டும் என்று சொன்னார். அந்த வகையிலே இங்கேயும் ஏற்படுத்துவதற்குரிய வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கல்பாக்கம் ஸ்கீம் ஏன் தடைப்பட்டிருக்கின்றது என்பது தெரியவில்லை. ஹெவி வாட்டர் போதிய அளவு இல்லாததால்தான் அது தடைப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. நம்முடைய தேசத்திலேயே ஹெவி வாட்டர் உற்பத்தி செய்யப்படுகின்றது என்ற ஒரு அறிக்கையினை சில வாரங்களுக்கு முன் நான் படித்ததாக ஞாபகம் இருக்கின்றது. அப்படி இருந்தால் அவசியம் இந்த கல்பாக்கம் மின் உற்பத்தி நிலையம் வெகு சீக்கிரத்திலே வரும் என்று நினைக்கிறேன். அதற்கு முன்பாகவே சென்ட்ரல் கவர்ன்மெண்ட் இடத்திலே பேசி முழு உற்பத்தியும் நமக்கு வேண்டும் என்றும் அல்லது நமக்கு எவ்வளவு பற்றாக்குறை இருக்கிறதோ அந்த அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்கின்ற வகையிலே ஒரு அணுகுமுறையை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே அணுகுமுறை இருக்கின்றது, செயல்படுகின்ற முறை இருக்கின்றது, அந்த வகையிலே சரியான அணுகுமுறையினைக் கடைப்பிடித்து நல்ல முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது நமது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மின் நிலையங்களிலே 50 சதவீதம் உற்பத்தி இல்லை என்று சொல்லப்படுகின்றது என்றால் ஒருவேளை எஃபிஷியன்ட் அமைப்பாக இல்லையோ என்ற எண்ணம் ஏற்படுகின்றது. அல்லது அவைகளிலே பல சிக்கல்கள் இருந்தாலும் கூட அந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கு என்னென்ன ஸ்டெப்ஸ் எடுக்க வேண்டுமோ அந்த வகையிலே ஸ்டெப்ஸ் எடுக்கவில்லை என்ற ஒரு கருத்து நிலவுகிறது. அந்த நிலையில் இல்லாமல் யார், எவ்வளவு பவர் கேட்டாலும் கொடுக்கும்படியான ஒரு நிலைமையை நீங்கள் உருவாக்கிக் கொள்ளவேண்டும். அப்படி உருவாக்கினால்தான் எல்லா வகையிலும் நம்மால் ஸ்டேட் முன்னேறும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிக்ஸ்த் பைவ் இயர் ப்ளானிலே கிட்டத்தட்ட 3,500 கோடி ரூபாய் செலவு செய்ய இருக்கிறோம். இதில் எல்லாவித உற்பத்தியினையும் பெருக்கவேண்டும். மேலும் எல்லாவிதமான வேலைகளுக்கும் பவர்தான் இன்றியமையாததாக இருக்கின்றது. ஆகவே நம்முடைய ஸ்டேட்டிலே பற்றாக்குறை என்ற சொல்லே இல்லாமல் நம்முடைய ஸ்டேட்டிலே நிறைய பவர் கிடைக்கிற்றது என்றும் தொழில், பிளைன்ஸ் போன்ற எல்லா வகையான தேவைகளுக்கும் போதிய பவர் கிடைக்கின்றது என்றும் நிலையினை உருவாக்கவேண்டும். அதற்காக என்னென்ன செய்ய முடியுமோ அவ்வ அத்தனையையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அப்படிச் செய்தால் நாங்கள் அவசியம் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக மின் வாரிய நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் பல நல்ல கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள். இறுதியாகப் பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரவர்களும் நல்ல ஆலோசனைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய ..... குறுக்கீடு)..... நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையில் ஒவ்வொன்றாக நான் பதில் சொல்லவேண்டும் என்கின்ற நிலையை நான் மேற்கொள்ளவேயானால் நேரம் அதிகமாக ஆகிக்கொண்டிருக்கும்.

[பிற்பகல் 1·20]

நான் பேசி முடித்த பிறகு வேண்டுமானால் உறுப்பினர் அவர்கள் கேட்கட்டும், பதில் சொல்கிறேன்.

இங்கே பேசுகிறபோது குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் அமல் நடத்துவது பற்றிக் குறிப்பிட்டு கடந்த எட்டு மாத காலமாக அதில் தயக்கம் ஏற்பட்டிருக்கிறது, நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மற்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். ஒருவேளை இடையிலே ஏற்பட்ட ஆளுநர் ஆட்சிக்காலத்ில் என்ன நேரிட்டதோ எனக்குத் தெரியாது ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தை தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்ற கொள்கையைச் செயல்படுத்தி வருகிறது. எங்கள் தேர்தல் அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த ஐந்தாண்டுக் காலத்தில் குறிப்பிட்டிருக்கிற எல்லாக் குடிசைகளுக்கும் இந்த ஒரு விளக்குத் திட்டத்தை அமல் படுத்வது என்று நாங்கள் தெளிவாக்கி இருக்கிறோம். அது தீவிரமாக நிறைவேற்றப்படும்.

இப்போது மின்சார வாரியத்தினிடத்தில் 5,21,000 மனுக்கள் வந்திருக்கின்றன. அவற்றில் 2,52,000 மனுக்களுக்கு ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. மீதி மனுக்கள் 2,69,000 இருக்கின்றன. இன்னும் மனுக்கள் வரும் என்று எதிர்பார்க்கிறோம். இந்தத் திட்டம் விரைவுபடுத்தப்படும். எல்லாக் குடிசைகளுக்கும் மின்வசதி இருக்கிறது என்ற உணர்வினை இந்த ஆட்சி நிச்சயமாக உருவாக்கும் என்பதை நான் முதன்முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், சிறுதொழில்கள் "ஏராளமான வேலைவாய்ப்பு தருகின்றவை, அவர்கள் உற்பத்திக் குறைவு ஏற்படுமானால் வருகிற நஷ்டத்தை அவர்களால் தாங்கிக் கொள்ளமுடியாது. ஆகவே மின்சாரவெட்டிலிருந்து நீங்கள் விலக்கு அளிக்கமுடியாதா?" என்று கேட்டார்கள். அவர் மட்டுமல்ல. நமது மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கூட என்னிடத்தில் அடிக்கடி வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள். உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த ஆசைப் பொறுத்தவரையில் சிறுதொழில்கள் வளர வேண்டும், அதன்மூலம் வேலைவாய்ப்பு பெருக வேண்டும், பெருகி வருகிற வேலைவாய்ப்பின்மை சிறுகச்சிறுக குறைய வேண்டும் என்பது எங்கள் தெளிவான அபிப்பிராயமாகும். ஆகவே குறைவழுத்த மின்சக்தி பெற்றுக்கொண்டிருக்கிற 75 குதிரை சக்திக்கு மேலாக உள்ள சிறு தொழில்களுக்கு இப்போது 30% மின்வெட்டு இருப்பதை நீங்கள் எல்லாம் எடுத்துச் சொன்னதை வைத்து அவர்களுக்கு முதல் கட்டமாக ஒரு குதிரை சக்திக்கு 30 யூனிட்கள் மாதம் ஒன்றுக்கு என்ற அளவில் நரப்பட இருக்கின்றது. இது அவர்கள் பாரத்தை ஓரளவுக்கு குறைக்கும் என்று நம்புகிறேன். இன்னும் கொஞ்சம் நிலைமை சீராகுமானால் மின்வெட்டிலிருந்து முழுவிலக்கு அளிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்றதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். மின்சார வாரியத்தில் வேலைவாய்ப்பு ஏற்பட்டபோது தாழ்த்தப்பட்டவர்கள் அதில் நிறைய வேலைவாய்ப்பு பெறவேண்டும் என்ற அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன, என்ன காரணத்தாலோ தெரியவில்லை யாருக்கும் வேலை கிடைக்கவில்லை என்று குறைபட்டுக்கொண்டார்கள். அதில் வேறு யாராவது சதி செய்துவிட்டார்களோ என்று சஞ்சலப்பட்டார்கள். நான் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மின்சார வாரியத்தில் வேலைக்கு காலியிடங்கள் என்று நிர்ணயிக்கப்பட்ட அளவு 370. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நாங்கள் கேட்டபோது அவர்கள் அனுப்பி வைத்த பட்டியலின் எண்ணிக்கை 4,000. அதற்குப் பிறகு அது தீவிரமாக பரிசீலனை செய்யப்பட்டபோது வேலைவாய்ப்புக்கால இடங்கள் 370 கூட அல்ல என்ற முடிவு தான் ஏற்பட்டது.

இருந்தாலும், நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட மக்கள் படித்துவிட்டு வேலையில்லாது இருப்பார்களானால் அவர்கள் அத்தனை பேர்களுக்கும், அனைவருக்குமே வேலை கொடுக்க வேண்டுமென்பதுதான் நோக்கமாகும். குறிப்பாக, நான் போக்குவரத்துத் துறைக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருந்தபோதுகூட, பல போக்குவரத்துக் கழகங்களுக்கு உத்தரவிட்டேன். இதில் 18% என்பதல்ல. யார் யார் படித்துவிட்டு தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பார்களானால், அவர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று நான் ஏற்கனவே அறிவிப்பு கொடுத்திருப்பவன். அந்த வகையிலேதான் இந்த 4,000 பேர்களிடம் மனுக்களைப் பெற்று, பரிசீலிக்கப்பட்டு, யார் யார் தகுதியுள்ளவர்கள் என்ற பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மின் வாரியத்தில் எவ்வெப்போதெல்லாம் காலி இடங்கள் ஏற்படுகின்றதோ, அவ்வப்போதெல்லாம் அந்தப் பட்டியலிலே இருப்பவர்கள் நியமிக்கப்படுவார்கள். முதற் கட்டமாக, 140 பேர்களுக்கு இப்போது வேலை வாய்ப்பு கிடைக்குமென்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட பகுதிகளுக்கு மின் வசதி சரியாக வழங்கப்படவில்லை, இன்னும் பல பகுதிகள் அப்படியே இருக்கின்றன என்று சருத்து தெரிவிக்கப்பட்டது. அதைக் கேட்டு, நான் உண்மையிலேயே திடுக்கிட்டேன். நம் மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் வேறொரு பிரச்சனையிலே திடுக்கிட்டார்; நான் இந்தப் பிரச்சனையிலே திடுக்கிட்டேன். இலாகா பூர்வமாக தாழ்த்தப்பட்டோர் பகுதிகள் என்று சொல்வது 2ச,526. நாம் மின் வசதி வழங்கியுள்ளது 25,526. அதற்குப் பிறகு இன்னும் சில புதிய பகுதிகள் தோன்றியிருக்கின்றன. அவைகள் 174; அவற்றிற்கும் நாம் மின்சாரம் வழங்கியிருக்கிறோம். அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பது கிடைக்கப் பெற்றுள்ள தகவல். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருசிலர் இன்னும் சில பகுதிகளுக்கு வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். அது உண்மையாக இருக்குமானால், தயவுசெய்து அந்தப் பட்டியலைத் தருவார்களானால், அரசு அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதோடு மட்டுமல்ல, தவறுக்கு என்ன காரணம் என்பதிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் சுவைபட ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அது என்னவென்றால், பில்கள் சரியாக வருவதில்லை என்று சொல்லுகிறபோது, அவர் பகோடாவை வாங்கிச் சாப்பிட்டுப் பிரிக்கின்றபோது, அதுவே பில்லாக இருக்கின்றது என்று மிகுந்த சுவைபடச் சொன்னார்கள். ஆனால், அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் பேசுகின்றபோது, அந்தந்த பயனீட்டார்களிடம்,

சென்று, ரீடிங் எடுத்து, பில் போடுவதைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது; தொழிற் சங்கங்களுக்கு வேலைப் பளு அதிகமாகும் என்று சொன்னார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மன்றத்திலே இருக்கின்றவர்களுடைய பொறுப்பு, மக்களுக்கு மன நிறைவு ஏற்படுத்துவதுதான். ஒரு சில தொழிற் சங்கங்களின் குறைகளை மட்டும் எடுத்துச் சொல்வதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். குறைகள் நியாயமாக இருக்குமானால், அவைகளைத் தீர்த்து வைக்கத் தயார். ஆனால், அதே சமயத்தில் மக்கள் நன்மையையொட்டி, நிர்வாகத்திலே சீர்திருத்தம் கொண்டு வரும்போது, நிச்சயமாக மாண்புமிகு ரமணி அவர்கள் இதை வரவேற்பார்கள். அவரே வந்து சந்திக்கும் தொழிலாளர்களிடத்திலே இதை நல்ல முறையிலே எடுத்துச் சொல்லியனுப்ப வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பில் போடுவதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். பில்லிங் முறையையே மாற்றியமைப்பதாக இருக்கிறோம். ஒவ்வொரு பயனீட்டாளரைப் பொறுத்தவரை ஒரு கார்டு கொடுக்கப் போகிறோம். அந்த கார்டிலே இத்தனை யூனிட்டுகள் என்று எழுதப் போகிறோம். ஒரு யூனிட்டுக்கு இத்தனை சா என்றும், இவ்வளவு ரூபாய் என்றும் அந்தக் கார்டிலே எழுதப்போகிறோம். ஒரு கார்டு பயனீட்டாளரிடத்தில், இன்னொரு கார்டு மின்சார வாரியத்தினிடத்திலே இருக்கும். அப்போது பில்லிங் என்கிற முறையே தேவை இல்லை. உதாரணமாக, கார்டு கொடுக்கிறோம், மீட்டர் ரீடிங் எடுக்கிறோம். 100 யூனிட் இந்த மாதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். யூனிட் ஒன்றுக்கு 10 பைசா வீதம், 10 ரூபாய் என்று அதிலே எழுதிவிட வேண்டியது. ஆகவே, மின் காரத்தைப் பயன்படுத்துகின்றவர்கள் இந்த மாதம் நமக்கு 100 யூனிட்டுகள் ஆகியிருக்கிறதென்றும், அதற்கு யூனிட்டுக்கு 10 பைசா வீதம் ரூ. 10 கட்டினால் போதும் என்கிற அளவிலே தகவல்கள் எல்லாம் அந்தக் கார்டிலே கொடுக்கப் போகிறோம். இன்னொரு கார்டு நம்முடைய அலுவலகத்தில் பதிவேடுகளுக்காக வைத்துக் கொள்ளப்படும். அது அலுவலகத்திற்குப் போய்ச் சேரும். ஆகவே பில்லுக்காக அலுவலகத்துக்குப் போகவேண்டாம். அதை அனுமதிக்கவும் முடியாது. இந்த முறை இந்த ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும். தொழிற் சங்கங்களுடன் கலந்து பேச இருக்கிறோம். அவர்களும் இதற்கு ஒப்புக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது என்பதைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1.30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் பேரவை அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அடுத்து, குடித் தண்ணீர்ப் பிரச்சனை பற்றி குறிப்பிட்டு ஏராளமான பம்பு செட்டுகளுக்கு இன்னும் மின்சாரம் தர வேண்டுமென்று குறிப் பிட்டார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குடி தண்ணீர் பிரச்சினையைப் பொறுத்த வரை இந்த அரசு தனி அக்கறை கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கள் நன்கு அறிவார்கள். ஏனென்றால், ஏற்கனவே குடி தண்ணீருக்கு மின் கட்டணம் யூனிட்டுக்கு 34 பைசா என்று இருந்ததை நம்முடைய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு 1-4-1979-ல் இருந்து 28 பைசாவாகக் குறைத்திருக்கிறோம். ஆகவே, மக்களுக்குக் குடிதண்ணீர் எளிதாகக் கிடைக்க வேண்டு மென்று அக்கறை கொண்டிருக்கிற இந்த அரசு எங்கெங்கு எல் லாம் குடிதண்ணீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு மின் வசதி இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கிறதோ, அங்கெல்லாம் கூடிய சீக்கிரத்தில், விரைவில் மின்சாரம் கொடுக்க தீவிர திட்டத்தை மின்வாரியம் மேற்கொள்ளும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சமயநல்லூரைப் பற்றி குறிப் பிட்டார்கள். சமயத்திற்கு உதவக்கூடிய நல்லூர் சமயநல்லூர். எந்த சமயநல்லூரைப் பற்றி விசாரணை நடத்த வேண்டு மென்றெல்லாம் கேட்டார்கள். ஏற்கனவே விசாரணை நடத்தப் பட்டிருக்கிறது. சர்க்காரியா கமிஷனால் சமயநல்லூர் ஏலம் போவது குறித்து தீவிரமாக விசாரிக்கப்பட்டு அந்த அறிக்கை யும் அரசாங்கத்திடம் தரப்பட்டிருக்கிறது அது அமைச்சரவை யின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகையால் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட ஒன்றை மறுபடியும் நாம் விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ப தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேலை நிர்ணயம் பற்றிக் குறிப்பிட்டார்கள். வேலை நிர் ணயம் என்பது தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி எடுக்கிற முடிவு அதிலே குறைபாடுகள் இருக்குமானால் நிச்சயமாக அதைப் பற்றி பேசி அவர்களே தீர்த்துக் கொள்ளலாம். காடம்பாறை மின் திட்டப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் இங்கே பேசுகையில், மாண்புமிகு அமைச்சருக்கே அதிகாரம் இல்லாமல் போய்விட்டதா, அல்லது எல்லாத் துறைகளிலும் நல்ல பெயர் எடுத்த மின்வாரிய தலைவருக்கே அதிகாரம் இல்லாமல் போய் விட்டதா என்று அங்கலாய்த்தார்கள். எங்களுக்கு போதிய அதிகாரம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்வது - அவருடைய அதிகாரத்தையும், நல்லெண் ணத்தையும் பயன்படுத்தி அங்கு வேலை தொடர்ந்து நடக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

காடம்பாறை நீர் ஏற்று மின்திட்டம் என்று சொல்லுகிற போது இந்தியாவிலேயே முதன் முதலாக நாம் ஒரு புதுவகை யான திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம் அந்தத் திட்டத் திலே 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து 'கோ ஸ்லோ டாக்டிக்ஸ்' என்ற அடிப்படையில் தர்மசங்கடமான நிலைமையை ஏற்படுத்திவிட்டது. ஒரு குறிப்பிட்ட சங்கத்தைச் சேர்ந்தவர் களின் நடவடிக்கை. அவர்கள் ஒப்பந்தகாரர்களிடம் வேலை செய்கிறவர்கள். வேலை நிர்ணயம் வேண்டும். கூலி உயர்வு வேண்டுமென்றபோது தொழிலாளர் நலத்துறை அவ்வப்போது பேசி ஒரு ரூபாய், எட்டணா என்ற வகையில் வாங்கிக் கொடுத் திருக்கிறது. ஆனால், திட்டம் விரைவாக முன்னேறவேண்டும். விரைவாக நடத்தினால் செலவும் குறையும். வேலை நிறுத் தத்தை விட்டு, மெதுவாகத்தான் செய்வோம், சம்பளத்தைக் கொடுங்கள் என்று போராடுவதை கைவிட்டு மாண்புமிகு ரமணி அவர்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் மின்சார வாரியத்தைப் பொறுத்த வரை இருக்கும் கட்டண நிலுவைகளைப் பற்றி எல்லாம் குறிப் பிட்டு, அதிலே மின்சார வாரியம் காலம் தாழ்த்தி நடவடிக்கை எடுக்கிறது என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதிலும் பெரும் தொழிலதிபர்களுக்கெல்லாம் லேசாக விட்டு விடுகிறார் கள், விவசாயிகளுக்கு மட்டும் இதைப் போல் நடவடிக்கை எடுக் கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். அதிலே நம்முடைய மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் இன்னும் ஒரு படி மேலே போய் 'அரசு என்ன செய்தது? எந்தச் சக்தி உங்களைக் கட்டுப்படுத்தியது? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?' என்று கேட்டார்கள். எந்தச் சக்தி கட்டுப்படுத்தியது என்பது எங்க ளுக்குத் தெரியாது. ஏனென்றால் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தொழிலதிபர்கள் செலுத்த வெண்டிய மின் கட் டணத்தைப் பொறுத்தவரை 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மிகத் தெளிவான ஒரு உத்தரவை போட்டிருக்கிறோம். அந்த உத்தரவின்படி அந்த மாதத்திற்குரிய காலம் முடிந்ததும் மூன்று நாட்களில் பில் தரப்படும். தொழிலதிபர்கள் 15 நாட்களுக் குள் மின் கட்டணத்தைச் செலுத்த வேண்டும், இல்லையென் றால் டிஸ்-கனெக்ஷன்--மின் துண்டிப்பு நடைபெறுகிறது. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இதுவரை கட்டாதவர் கள் என்றோ, காலம் கடத்தியவர்கள் என்றோ யாரும் கிடை யாது. இதுதான் இன்றுள்ள நிலைமை.

பி.அன்ட்.சி. மில்லிலே மட்டும் ஒரு மாத கட்டணம் பாக்கியிருக்கிறது. அதிலே நாங்கள் போய் பியூஸை எடுப்போ மானால் அதை வைத்துக் கொண்டு மில்லையே அவர்கள் மூடி விடுவார்கள் என்ற காரணத்தினாலே வேண்டுமானால் அவர் களே அதை செய்துகொள்ளட்டும் நாம் ஏன் செய்யவேண்டும் என்ற அளவிற்குத்தான் அதை மட்டும் விட்டு வைத்திருக்கி

றோம். ஆகவே தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலே பாரபட்சமான வகையிலே இந்த அரசு நடந்துகொள்ளவில்லை என்பதை நான் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படியானால் என்னதான் காரணம், என்று நீங்கள் கேட்டீர்களானால் 10 கோடி ரூபாய்க்கு மேல் பாக்கி இருக்கிறது என்றால் அவைகள் பழைய கணக்குகள். நாங்கள் என்ன செய்யு முடியும்? இங்கே மால்கோ நிறுவனத்தைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். சுமார் 9½ கோடி ரூபாய் பாக்கி இருக்கிறதென்றால் இதிலே இன்னொன்றையும் தெரிந்து கொள்ள வேண்டும், சுமார் 7 கோடி ரூபாய் அபராதம் பவர் கட் இருந்த காலத்திலே மிகு அதிகமாக அவர்கள் மின்சாரம் பயன்படுத்திய காரணத்தினாலே போடப்பட்ட அபராதத் தொகையும் சேர்ந்து அந்தத் தொகை தரவேண்டியுள்ளது. பஞ்சாலைகளிடமிருந்து வரவேண்டிய பாக்கி 36.81 இலட்சம் ரூபாய் வரையில் இருக்கிறது. ஆக பத்து கோடி ரூபாய் அளவுக்கு தொழிற்சாலைகளிலிருந்து பாக்கி வைத்திருக்கிறார்கள் என்றால் இந்த அரசு காரணமல்ல. ஆனால் அந்த நேரத்திலே அந்தக் கட்டணத்தை வசூலிக்க வேண்டாமா என்று நீங்கள் கேட்பீர்களானால் நிச்சயமாக இந்த அரசுக்கு பொறுப்பு உண்டு. அந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்திக்கொண்டிருக்கிறோம்

சில பேர்கள் வழக்குமன்றத்திற்குப் போகிறார்கள். சில பேர்கள் தெருவிலே நின்று பாலைக் கொட்டுகிறார்கள். சிலரும் சில பேர்கள் உப்பை அள்ளிப்போடுகிறார்கள். இன்னும் சிலபேர்கள் ஒழுங்காக மின் கட்டணத்தைக் கட்டுகிறவர்களுடைய இடத்திற்குப் போய் அங்கே இருக்கிற பியூஸை—கட்டாத விவசாயி-பிடுங்கிப் போடுகிறார்கள். ஆனால் விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில விவசாயிகளுக்கு என்று இந்த அரசு என்று உதயமானதோ அன்றிலிருந்து என்னமைகளை புரட்சித் தலைவரவர்கள் செய்துகொண்டே வருகிறார்கள். எனக்கே கூட ஒரு அச்சம். எப்போதுமே சலுகைகளைச் செய்து கொண்டு வருகிறவர்களிடத்திலே தான் ரொம்ப கேட்கிறவர்கள் போராட்டத்தை நடத்துவார்கள், சாதாரணமாக ஒரு பழமொழி சொல்லுவார்கள். என்றைக்கும் போடாத மகராசி மகராசிதான், ஆனால் தினமும் போட்டுக் கொண்டிருக்கிறவர் ஒரு நாளைக்குப் போடவில்லை என்றால் (குறுக்கீடு) அவர் ஏளனத்திற்கு ஆளாவார். நான் அந்த வார்த்தையை சொல்ல மாட்டேன்.

30-6-1977-ல் நாம் ஆட்சிக்கு வந்தோம். 1-7-1977-ல் சிறு விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்த வரையில் யூனிட்டுக்கு 2 பைசாவைக் குறைத்தோம்; 1-6-78-ல் மேலும் 2 பைசாவைக் குறைத்தோம். 5 ரூபாயாக இருந்த மீட்டர் வாடகை 4 ரூபாய் ஆயிற்று. மின்சாரம் வேண்டுமென்று பவர்கள் நிலத்தடி நீர் பாசனம் பெறவேண்டுமென்ற நிலைமை இருந்தது. அந்த நிலைமை மாற்றப்பட்டு நிலத்தடி நீர் பாசன

றிதழ் தேவையில்லை என்று ஆக்கப்பட்டது இந்த அரசின் மூல மாகத்தான். மேலும் மீட்டர் வாடகை 1-7-80 முதல் 4 ரூபாயிலிருந்து 2 ரூபாய் என்று குறைக்கப்பட்டது. நான் இன்னும் சொல்கிறேன், இப்படியெல்லாம் நாம் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக விவசாயிகள் நம்மோடு இருக்கிறார்களா என்று நீங்கள் கேட்பீர்களானால் இந்த அரசு தருகின்ற சலுகைகளைப் புரிந்துகொண்ட விவசாயிகள் நிறைய இருக்கிறார்கள்.

சுமார் 9 லட்சத்து 5 ஆயிரம் பம்புசெட்டுகள் நம்முடைய தமிழ்நாட்டிலே இயங்குகின்றன. ஆனால் ஒரு குறிப்பிட்ட சங்கத்தினர் எவ்வளவோ போராடினாலும் எத்தகைய கிளர்ச்சியை மூட்டினாலும் மின் கட்டணத்தைக் கட்டினால் உங்கள் வீட்டுத் திருமணத்திற்கே வரமாட்டோம் என்று மிரட்டினாலும் கூட சுமார் 4 இலட்சம் பேர்கள் ஒழுங்காகக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே கட்டாதவர்கள் 5 இலட்சம் பேர்கள். அதற்குப் பிறகு தான் நாம் நடவடிக்கை எடுத்தோம். இப்போது சொல்கிறார்கள், ஏதோ போலீஸ் ரோடு பேர்முனைக்குப் போவது போலப்போய் அதை எல்லாம் எடுத்தார்கள் என்றும், அதனால் பயிர் எல்லாம் காய்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். மின் வாரியமும் அரசும் சேர்ந்து மின் துண்டிப்புச் செய்த பம்புசெட்டுகளின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 804 தான். மொத்தம் இருக்கிற பம்புசெட்டுகள் 9 லட்சம். மின் துண்டிப்புச் செய்த பிறகு மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் 32,548.

[பிற்பகல் 1.40]

ஆகவே, இன்றைக்கு மின் துண்டிப்பிலே இருக்கக்கூடிய பம்பு செட்டுகள் 21,256. என்பது இலட்சத்தில் 21,000 பேர்கள்தான் நாங்கள் மின் கட்டணத்தைக் கட்டமாட்டோம், மின்கட்டணையை நீங்கள் எடுத்துக்கொண்டு போய்விடுங்கள். பயிரிட மாட்டோம் என்றுசொல்கின்றவர்கள். அதை வைத்துத்தான் சொல்கிறார்கள், உணவு நெருக்கடி வந்து விடும்; நாடோற்றிகள், பம்பு செட்டுகள் ஓட வில்லையென்றால் தண்ணீர் வராது; தண்ணீர் வரவில்லை என்றால் பசுவிற்குத் தண்ணீர் இல்லாமல் போகாது; பசு தண்ணீர் குடிக்காவிட்டால் பால் வராது என்று புதிய ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளெல்லாம் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் 100க்கு 2.35 பேர் தான் இந்த நிலைமையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நியாயமாக, ஒழுங்காகக் கட்டணத்தைச் செலுத்தக்கூடிய தன்மையத்தான் தமிழ்நாட்டு விவசாயிகள் பெற்றிருக்கிறார்கள். அவர்களை வேண்டுமென்று தடுத்து நிறுத்தி, வன்முறையிலே ஈடுபட்டு, கட்டவிடாமல் செய்கின்றவர்களை அகற்றுவதைத்தான் அரசு செய்ததே தவிர, நியாயமாக, கட்டப்படி, ஒழுங்காகக் கட்டணத்தான் செலுத்துகின்றவர்களுக்கு வழிவிட வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நிலைகளை அகற்றினோமே தவிர வேறல்ல என்பதை நான் இங்கே தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

றோம். ஆகவே தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலே பாரபட்சமான வகையிலே இந்த அரசு நடந்துகொள்ளவில்லை என்பதை நான் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படியானால் என்னதான் காரணம், என்று நீங்கள் கேட்டீர்களானால் 10 கோடி ரூபாய்க்கு மேல் பாக்கி இருக்கிறது என்றால் அவைகள் பழைய கணக்குகள். நாங்கள் என்ன செய்ய முடியும்? இங்கே மாக்கோ நிறுவனத்தைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். சுமார் 9½ கோடி ரூபாய் பாக்கி இருக்கிறதென்றால் இதிலே இன்னொன்றையும் தெரிந்துகொள்ள வேண்டும். சுமார் 7 கோடி ரூபாய் அபராதப் பவர் கட் இருந்த காலத்திலே மிகு அதிகமாக அவர்கள் மின்சாரம் பயன்படுத்திய காரணத்தினாலே போடப்பட்ட அபராதத் தொகையும் சேர்ந்து அந்தத் தொகை தரவேண்டியுள்ளது. பஞ்சாலைகளிடமிருந்து வரவேண்டிய பாக்கி 36.81 இலட்சம் ரூபாய் வரையில் இருக்கிறது. ஆக பத்து கோடி ரூபாய் அளவுக்கு தொழிற்சாலைகளிலிருந்து பாக்கி வைத்திருக்கிறார்கள் என்றால் இந்த அரசு காரணமல்ல. ஆனால் அந்த நேரத்திலே அந்தக் கட்டணத்தை வசூலிக்க வேண்டாமா என்று நீங்கள் கேட்பீர்களானால் நிச்சயமாக இந்த அரசுக்கு பொறுப்பு உண்டு. அந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்திக்கொண்டிருக்கிறோம்

சில பேர்கள் வழக்குமன்றத்திற்குப் போகிறார்கள். சில பேர்கள் தெருவிலே நின்று பாலைக் கொட்டுகிறார்கள். இன்னும் சில பேர்கள் உப்பை அள்ளிப்போடுகிறார்கள். இன்னும் சில பேர்கள் ஒழுங்காக மின் கட்டணத்தைக் கட்டுகிறவர்களுடைய இடத்திற்குப் போய் அங்கே இருக்கிற பியூஸை—கட்டாத விவசாயி-பிடுங்கிப் போடுகிறார்கள். ஆனால் விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு என்று இந்த அரசு என்று உதயமானதோ அன்றிலிருந்து இன்னமும் புரட்சித் தலைவரவர்கள் செய்துகொண்டே வருகிறார்கள். எனக்கே கூட ஒரு அச்சம். எப்போதுமே சலுகைகளைச் செய்துகொண்டு வருகிறவர்களிடத்திலே தான் பொறாமை கேட்கிறவர்கள் போராட்டத்தை நடத்துவார்கள், சாதாரணமாக ஒரு பழமொழி சொல்லுவார்கள். என்றைக்கும் போடாத மகராசி மகராசிதான், ஆனால் தினமும் போட்டுக் கொண்டிருக்கிறவர் ஒரு நாளைக்குப் போடவில்லை என்றால் (குறுக்கீடு) அவர் ஏளனத்திற்கு ஆளாவார். நான் அந்த வார்த்தையை சொல்லமாட்டேன்.

30-6-1977—ல் நாம் ஆட்சிக்கு வந்தோம். 1-7-1977—ல் சிறு விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்த வரையில் யூனிட்டுக்கு 2 பைசாவைக் குறைத்தோம்; 1-6-78-ல் மேலும் 2 பைசாவைக் குறைத்தோம். 5 ரூபாயாக இருந்த மீட்டர் வாடகை 4 ரூபாய் ஆயிற்று. மின்சாரம் வேண்டுமென்றவர்கள் நிலத்தடி நீர் வான்றிநீர் பெறவேண்டுமென்ற நிலைமை இருந்தது. அந்த நிலைமை மாற்றப்பட்டு நிலத்தடி நீர் வான்

றிதழ் தேவையில்லை என்று ஆக்கப்பட்டது இந்த அரசின் மூல மாகத்தான். மேலும் மீட்டர் வாடகை 1-7-81 முதல் 4 ரூபாயிலிருந்து 2 ரூபாய் என்று குறைக்கப்பட்டது. நான் இன்னும் சொல்கிறேன், இப்படியெல்லாம் நாம் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக விவசாயிகள் நம்மோடு இருக்கிறார்களா என்று நீங்கள் கேட்பீர்களானால் இந்த அரசு தருகின்ற சலுகைகளைப் புரிந்துக் கொண்ட விவசாயிகள் நிறைய இருக்கிறார்கள்.

சுமார் 9 லட்சத்து 5 ஆயிரம் பம்புசெட்டுகள் நம்முடைய தமிழ்நாட்டிலே இயங்குகின்றன. ஆனால் ஒரு குறிப்பிட்ட சங்கத்தினர் எவ்வளவோ போராடினாலும் எத்தகைய கிளர்ச்சியை மூட்டினாலும் மின் கட்டணத்தைக் கட்டினால் உங்கள் வீட்டுத் திருமணத்திற்கே வரமாட்டோம் என்று மிரட்டினாலும் கூட சுமார் 4 இலட்சம் பேர்கள் ஒழுங்காகக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே கட்டாதவர்கள் 5 இலட்சம் பேர்கள். அதற்குப் பிறகு தான் நாம் நடவடிக்கை எடுத்தோம். இப்போது சொல்கிறார்கள், ஏதோ போலீஸ் ரோடு போர்முனைக்குப் போவது போலப்போய் அதை எல்லாம் எடுத்தார்கள் என்றும், அதனால் பயிர் எல்லாம் காய்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். மின் வாரியமும் அரசும் சேர்ந்து மின் துண்டிப்புச் செய்த பம்புசெட்டுகளின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 804 தான். மொத்தம் இருக்கிற பம்புசெட்டுகள் 9 லட்சம். மின் துண்டிப்புச் செய்த பிறகு மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் 32,548.

[பிற்பகல் 1.40]

ஆகவே, இன்றைக்கு மின் துண்டிப்பிலே இருக்கக்கூடிய பம்புசெட்டுகள் 21,256. ஒன்பது இலட்சத்தில் 21,000 பேர்கள்தான் நாங்கள் மின் கட்டணத்தைக் கட்டமாட்டோம், மின்கட்டணையை நீங்கள் எடுத்துக்கொண்டு போய்விடுங்கள். பயிரிட மாட்டோம் என்றுசொல்கின்றவர்கள். அதை வைத்துக்தான் சொல்கிறார்கள், உணவு நெருக்கடி வந்து விடும்: நீரேற்றிகள், பம்பு செட்டுகள் ஓடவில்லையென்றால் தண்ணீர் வராது; தண்ணீர் வரவில்லை என்றால் பசுவிற்குத் தண்ணீர் கிடைக்காது; பசு தண்ணீர் குடிக்காவிட்டால் பால் வராது என்று புதிய ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளெல்லாம் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் 100க்கு 2.35 பேர் தான் இந்த நிலைமையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நியாயமாக, ஒழுங்காகக் கட்டணத்தைச் செலுத்தக்கூடிய தன்மையத்தான் தமிழ்நாட்டு விவசாயிகள் பெற்றிருக்கிறார்கள். அவர்களை வேண்டுமென்று தடுத்து நிறுத்தி, பயமுறுத்தி, வன்முறையிலே ஈடுபட்டு, கட்டவிடாமல் செய்கின்றவர்களை அகற்றுவதைத்தான் அரசு செய்ததே தவிர, நியாயமாக, சட்டப்படி, ஒழுங்காகக் கட்டணத்தைச் செலுத்துகின்றவர்களுக்கு வழிவிட வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நடவடிக்கைகளை அகற்றினோமே தவிர வேறல்ல என்பதை நான் இந்தச் சேதியை தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசுகின்றபொழுது மின்வாரியத்தினுடைய நஷ்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் திடுக்கிட்டேன் என்று சொல்வதற்கு இரண்டு காரணங்கள் கூறினார்கள். ஒன்று, இந்த டீகேட் — 80 தொடங்கிய இந்த பத்தாண்டுக் காலத்தில் மின் வாரிய, மின் நிலைமைகளின் எதிர்காலத்தைப் பற்றி நான் சொல்லியிருக்கின்ற அச்சத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். இன்னொன்று நஷ்டத்தைப்பற்றிச் சொன்னார்கள்.

நான் நஷ்டத்தைப்பற்றி மட்டும் ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். நம்முடைய நஷ்டத்திற்கு என்ன காரணம்? அப்படையான காரணங்கள் என்ன? "உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால், மத்தளத்திற்கு இரு பக்கத்திலும் இடி" என்பார்கள். ஆனால் இப்பொழுது அதை மாற்றி, உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால் மாநில அரசுகளுக்கு இரண்டு பக்கத்திலும் இடி என்று சொல்லுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மின்வாரியம் நிலக்கரி முதலியவைகளைப் பெறுவது மத்திய அரசாங்கத்தினிடத்திலேயிருந்து. நாம் 26 கோடி ரூபாய் அளவுக்கு 1977-78-ல் நிலக்கரிவாங்கிக்கொண்டிருந்தோம்; நிலக்கரியாக இருந்தாலும், டெட்ரோலிய எண்ணெய்ப் பொருட்களாக இருந்தாலும். ஆனால் இன்றைக்கு 65 கோடி ரூபாய். 26 கோடி எங்கே? 65 கோடி எங்கே?

அதைப்போல, வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை நாம் வாங்குகிறோம். கேட்டால் ரீஜினல் பிளானிங் மத்திய சர்க்கார் சொல்கிறது. நாம் சொல்கிறோம் மாநிலத்திற்கு உள்ள சக்தியிலே தன்னிறைவு தேவை என்று. அவர்கள் வட்டாரத்திற்குத் தன்னிறைவு இருந்தால் போதும் என்கிறார்கள். அதனுடைய விளைவு, கேரளத்திலிருந்து நாம் கெஞ்சி வாங்க வேண்டியிருக்கிறது; கர்நாடகத்திலே சில நேரத்திலே அவர்கள் கொடுக்க முடிந்தால் பெற வேண்டியிருக்கிறது: ஆந்திரத்திலேயிருந்து பெற வேண்டியிருக்கிறது.

ஆனால் ஆந்திரம் நமக்கும் தரலாம், அதே நேரத்திலே மத்திய பிரதேசத்திற்கும் தரலாம் கர்நாடகம் நமக்கும் தரலாம், அதேநேரத்திலே மராட்டியத்திற்கும் தரலாம் நமக்கும் தரலாம், கர்நாடகத்திற்கும் தரலாம். கேரளம் எங்கே? ஆகவே, வட்டாரம் என்று பேசுகிறார்கள். இதில் வட்டாரம் விளைவு நாம் வெளி மாநிலங்களிலிருந்து பெறுகின்ற மின்சாரத்தின் விலை கூடுகிறது. உதாரணத்திற்கு, 77—78 ஆம் ஆண்டில் வெளிமாநிலத்திலிருந்து நாம் மின்சாரம் வாங்கியது 68 கோடி ரூபாய்க்குத்தான். ஆனால் இப்பொழுது 187 கோடி ரூபாய். ஆக, இவைகளிலெல்லாம் எப்படி நாம் விலைகளைக் குறைக்கப் போகிறோம்?

அதைப்போல, பணியாளர் செலவு பணியாளர்கள் செலவை எவ்வளவோ கட்டுப்படுத்தித்தான் வந்திருக்கிறோம். 60 கோடி என்று இருந்தது, 80 கோடி ரூபாய் என்று ஆகியிருக்கிறது. இவைகள்தான் பெரும்பான்மையான செலவுகள். இப்படிப்பட்ட செலவுகளை நம்முடைய கையிலே கட்டுப்படுத்தும் அளவிற்கு அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆகவே, நஷ்டம் வருகிறது. ஆனால் நாம் கட்டணத்தை உயர்த்துகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்— துணைத் தலைவரவர்களே அதனால்தான் நான் முதலில் சொன்னேன். புல் மேக்சிமம் கெபாசிட்டி, 8,000 மெகாவாட். இன்றைக்கு நீங்கள் 1,450 மெகா வாட் தான் செய்கிறீர்கள். அந்த புல் மேக்சிமம் கெபாசிட்டியை நீங்கள் பண்ணுவீர்களேயானால் அவசியம் தங்களுடைய செலவு கட்டுப்படியாகும். The highest is the production, the lowest is the cost. The lowest is the production, highest is thecost. That is a fundamental thing. You must have a P.R.O. who can go there and solve the difficulties and constraints in gettin gmore coal and other facilities.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:— துணைவரவர்களே, நல்ல அறிவுரை. ஆனால் சொல்லவேண்டிய இடம்தான் வேறு. அதேபோல் இந்தச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்காக நாம் கட்டணத்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் வருமேயானால், கட்டணத்தை உயர்த்துவதற்கு எதிராகக் கிளர்ச்சியாகக் கிளம்பு மேயானால் அந்தக் கிளர்ச்சியை ஆதரிக்கவும் அதைத் தூண்டி விடவும், அதிலே ஈடுபடவும், முடிந்தால் இந்த ஆட்சியைக் கவிழ்க்க அதை எந்த அளவிற்குப் பயன்படுத்தலாம் என்று டெல்லிக்குப் பல நேரங்களில் ஓடவும் சூழ்நிலையும் இருக்கின்றது. ஆகையினாலே, இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபொழுது மாநிலத்தினுடைய நிலைமை மிகவும் இக்கட்டான நிலைமையில் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் அழகாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். 3000 மெகாவாட் எங்கே நீங்கள் மின் நிலையங்களை உருவாக்குகிறீர்கள். ஆனால், 1500 மெகாவாட்தானே அதன்மூலம் உண்டாக்குகிறீர்கள் என்று கேட்டார்கள். நானே அடுத்து அந்த சப்ஜெக்ட்டுக்குத் தான் வருவதாக இருந்தேன். நீங்களே என்னை இன்னைவட் பண்ணியதால் எனக்கு ரொம்பவும் மகிழ்ச்சி. ஆனால், முதலில் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மின் வாரியத்தைப் பெறுத்தவரையிலே நாம் அதை அளவு கோலாக

வைத்துக் கொள்ள வேண்டுமென்றால், ஓராண்டுக்கு எவ்வளவு யூனிட்டுகள் மின்சார வாரியத்தின் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன என்பதுதான் கணக்கு. நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், மாணபுமிகு எதிர்க்கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே பேசுகிறபொழுது குறிப்பிட்டார்கள். எங்கு பார்த்தாலும், நாங்கள், கிராமங்களிலே லைன்கள் போட்டோம். நாங்கள் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்தோம். நீங்கள் வந்து இன்றைக்குக் கெடுத்து விட்டீர்கள் என்று சொன்னார்கள் நான் அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் என்ற திட்டம் அறிவிக்கப்பட்ட பொழுது, இதே சட்டமன்றத்தில் நான், சாதாரண சட்டமன்ற உறுப்பினர். அப்பொழுதே சொன்னேன், இந்தத் திட்டத்தின்மூலம் மின் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய பணத்தை, ஊர், ஊராக கம்பிகள் இழுப்பதற்கு நீங்கள் செலவு செய்வீர்களேயானால், கம்பிகளும், கம்பங்களும்தான் நிற்குமே தவிர, மின்சாரம் இருக்காது என்று. அதாவது, 1971 ஆம் ஆண்டுக்கு முன்பு சட்டப் பேரவையிலே நான் தெளிவாக எடுத்துச் சொன்னேன். அதுதான் நடந்தது. ஆனால் அன்றைக்குத் தெரியாது, அந்தக் கஷ்டத்தை நான்தான் அனுபவிப்பேன், என்று. இன்றைக்கு அந்தக் கஷ்டத்தை நானே அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன், 1970—71-ல் மின் வாரியம் மக்களுக்கு என்று தந்த யூனிட்டுகளின் அளவு 505 கோடி. 1971—72-ல் 545 கோடி. 1972—73-ல் 536 கோடி—குறைந்து விட்டது. 1973—74-ல் 535 கோடி—மேலும் குறைந்து 1974—75-ல் 564 கோடி. அதாவது, 505 கோடியிலேயிருந்து 535 கோடி, 540 கோடி என்கிற அளவிலே அந்த 5 ஆண்டுகள் போய் விட்டன. ஆனால், 1977—78-ல் 749 கோடி மின்சாரத்தை நாம் அதாவது, லைன் லாசை எல்லாம் கழித்துச் சொல்கிறோம். மின்சாரம் நாம் உற்பத்தி செய்தது. அதிலே போன வருஷம்—மீதி நாம் மக்களுக்கு விற்றது, 749 கோடி, 1977—78-ல் 1978—79-ல் 831 கோடி, 1979—80-ல் 823 கோடி. அதாவது, 831 கோடியிலேயிருந்து, 1979—80-ல் 823 கோடிக்கு வந்திருக்கிறோம். கொஞ்சம் குறைந்ததற்குக் காரணம், எங்களைக் கொஞ்சகாலம் முன்னதாகவே அனுப்பிவிட்டீர்கள் எப்பொழும் அதற்குக் காரணமே தவிர, வேறல்ல. ஆக 540 கோடி என்கிற அளவிலேயிருந்து, இன்றைக்கு 823 கோடி என்கிற அளவிற்கு மின்சாரம் விநியோகிக்கின்ற நிலைமை இருக்கிறது. இருந்தும் நான் ஏன் சொல்கிறேன் என்றால், 1980 ஆம் ஆண்டில், 1980—லேயிருந்து 1990 ஆம் ஆண்டு வரை The outlook for the 83s does not give us cause for satisfaction.

அதனாலே தான் பாரா 4-ஐயும் பாரா 5-ஐயும் நாம் படித்துப் பார்த்தால், அதற்கான காரணங்களை நான் சொல்லியிருக்கிறேன். மின் உற்பத்தியை அதிகப்படுத்தக் கூடாதா என்று இங்கே அவர்கள் கேட்டார்கள். நான் ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, எல்லாமே அனல் மின் உற்பத்தியை நம்பித்தான் இருக்கிறோம். அனல் மின் நிலையம் என்றால் என்ன? நீர் மின் நிலையத்தை நாம் எந்த அளவுக்கு உருவாக்க முடியுமோ அந்த அளவுக்கு உருவாக்கி விட்டோம். அனல் மின் நிலையம் என்றால், அதற்கு நிலக்கரி கொடுக்க வேண்டியது மத்திய சர்க்கார். அனல் மின் நிலையத்தை நிறைவேற்றுவதற்கு இயந்திரங்களை உற்பத்தி செய்து கொடுக்க வேண்டியது பாரத் மிகுமி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் அதுவும் மத்திய சர்க்காரால் நடத்தப்படுகிறது.

[பிற்பகல் 1.50]

அதிலே ஏதாவது துணைப் பொருள்கள் வேண்டும் என்றால் உரிய நேரத்தில் தரக்கூடிய பொறுப்பில் இருப்பதும் அந்த மத்திய சர்க்கார்தான். இவ்வளவு பொறுப்புகளையும் அவர்கள் வைத்துக் கொண்டு உன்னுடைய அனல் மின் உற்பத்தி சரியாக இல்லை என்று சொல்லுகிற அதிகாரத்தை வைத்திருப்பவர்களும் அவர்கள் தான் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதைத் தான் திரும்பத் திரும்பச் சொன்னேன். அதாவது தமிழ்நாடு மட்டிலும்தான் இந்த நிலைமை, எண்ணூர் அனல் மின் திட்டம் சரியாக இயங்கவில்லை அதேபோல் தூத்துக்குடி இப்போது ஆரம்பித்திருக்கிறோம். அதுவும் சரியாக இயங்கவில்லை. நீங்கள் சரியாக இயங்கவைக்கவும் Efficiency in operation வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஒரு வேளை தமிழ்நாட்டின் நிலைமை இப்படி. மற்ற மாநிலங்களின் நிலைமை? இரண்டு தினங்களுக்கு முன்னால் ஆந்திராவில் ஒரு அனல் மின் நிலையத்தை திறப்பு விழா இணைக்கின்ற விளம்பரம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதிலே ஆந்திரப் பிரதேச மின் வாரியத் தலைவர் அவர்கள் மிக அழகாக சொல்லுகிறார்கள். 110 மெகாவாட், 100 மெகாவாட் மின் உற்பத்தி நிலையங்கள் நாடு முழுவதும் இருக்கின்றன. ஆனால் அவை சரியாக இயங்கவில்லை என்று. 100 மெகாவாட் என்றால் 40 மெகாவாட் தான் கிடைக்கிறது. இங்கே எல்லா இடங்களிலேயும் அந்த இயந்திரங்களைக் கொடுத்த நிறுவனம் நம்முடைய நிறுவனம் தான். மத்திய சர்க்கார் நிறுவனம் என்று சொல்லி குறை சொல்வதாகக் எந்த வேண்டியதில்லை. அவர்களுக்கு சங்கடங்கள் இருக்கலாம். கஷ்டங்கள் இருக்கலாம். ஆனால் நாம் 1000 மெகாவாட் திட்டம் போட்டு 400 மெகாவாட் தான் கிடைக்கும் என்றால், ஆயிரம் மெகாவாட் திட்டம்போட்டு தான் கிடைக்க வேண்டும். பயன். ஆயிரத்தில் குறைந்தது 600வது கிடைக்க வேண்டும். நம்முடைய அச்சாணியைப் பொறுத்தவரையிலும் பெரும்

பகுதியை பாரத் நாம் ஹெவி எலக்டிரிக்கல் நிறுவனத்தில் இருந்து வாங்குகிறோம். ஆனால் இதிலே ஒரு சிறிய பகுதியையாவது நாம் வெளிநாடுகளிலேஇருந்து ஓரளவுக்கு ஒழுங்காக ஒடுகூடிய இயந்திரங்களை வாங்கவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். அதை மத்திய சர்க்காரிலே ஒரு சிலர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு இந்திரா காந்தி அவர்களை இது சம்பந்தமாகச் சந்தித்து இந்த பிரதமர் நியாயத்தை எடுத்துச் சொல்ல அவர்கள் ஏற்றுக்கொள்ளச் செய்யலாம் என்ற நம்பிக்கை எனக்கு இன்னமும் இருக்கிறது. காரணம் அந்த அளவுக்கு இன்றைக்கு இந்தியா முழுவதும் அந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதுஎன்றால் அதற்குக் காரணம்இதுதான். மத்திய மின் குழு Central Electricity authority அவர்கள் திட்டத்தை அங்கீகரிக்கிறபோது ஒரு கிலோவாட்டுக்கு 5353 யூனிட்டுகள் சாதாரணமாக கிடைக்கும் என்று போடுகிறார்கள். ஆனால் இந்தியா முழுவதும் இன்றைக்கு நமக்குக் கிடைப்பது ஒரு கிலோ வாட்டுக்கு 4000 தான். ஆகவே 5353 கிடைப்பதில்லை. சரி, திட்டத்தையாவது மாற்றி 400 யூனிட்டுகள் என்று போட்டு இன்னும்கூட அனல் மின் திட்டங்களை தருவார்களா என்று கேட்டால் அதையும் தரமாட்டார்கள். ஒரு கிலோவாட்டுக்கு 5353 யூனிட்டுகள் உற்பத்தி செய்யாதது உன்னுடைய குற்றம். ஆகையினாலே புதுத் திட்டம் கிடையாது என்கிறார்கள். அது சரியாகாது.

இந்தியா முழுவதும் அதுஸ்டேட்எலக்டிரிசிடி போர்டாக இருந்தாலும், பாரத் ஹெவி எலக்டிரிக் நிறுவனமாக இருந்தாலும் சரி, பெறுவது இன்றைக்கு 4000 யூனிட்டுகள். அதேபோல, 110 மெகாவாட்டிலே 'அவுட்டேஜ்' என்று எடுத்துக் கொண்டால் 56, 230 மெகாவாட்டுக்கு 62. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், எண்ணூர் மின்நிலையத்தில் இருப்பது 450மெகாவாட். தூத்துக்குடியில் 2 இயந்திரங்கள் இயங்க வைத்திருக்கிறோம். 420 மெகாவாட்டு. மொத்தம் 870 மெகாவாட்டுகள் இன்றைக்குக் கிடைக்கவேண்டியது. ஆனால் கிடைப்பது 450 மெகாவாட். இதில் மின்சார இலாகாவை பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ் குறை சொல்லலாம். அல்லது பாரத் ஹெவி எலக்டிரக்கல்சை மின்சார இலாகா குறை சொல்லலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லை. எல்லோரும் நம்முடைய பொறியாளர்கள்தான். ஆனால் அதே நேரத்தில் நாம் நிறைவேற்ற வேண்டிய அளவுக்கும் பயன் கிடைக்கத் தக்க அளவுக்கு நிலைமை இல்லை என்றால் அதற்கு என்ன பரிகாரம் என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு 30% மின்வெட்டை அமல் நடத்துகிறோம். அலுமினியம் உற்பத்தியாகாது. சிமெண்ட் உற்பத்தியாகாது. இவைகள் எல்லாம் நம் நாட்டிலேயே இருக்கக்கூடிய தொழில்கள். பொர்ட்டிலைசர்ஸ் உருவாகாது. ஆனால் இதே பொருள்களை அதிக விலையிலே வெளிநாடுகளிலே இருந்து வாங்குகிறோம்.

அப்படி வாங்குவதனால் 2000த்திலிருந்து 2500 கோடி ரூபாய்கள் பெறுமானமுள்ள பொருள்களை வெளிநாடுகளிலே உற்பத்தியாகக் கூடியவற்றை வாங்குகிறோம். அதனாலே அன்னிய செலாவணி விலாகிறது என்பது மாத்திரம் அல்ல அந்த நாட்டிலே இருக்கிற விலை உயர்வு பணவீக்கம் நம்முடைய நாட்டுக்கு வருகிறது. இவைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது குறைந்தது மேட்டூர் அனல் மின்திட்டத்தையாவது நிறுவுவதற்கு அந்த இயந்திரங்கள் வாங்கினால் அது நன்றாக இயங்கும். அந்த இயந்திரங்களை வாங்குவதற்கு மாநில மின்சார வாரியத்திற்கு அனுமதி தரவேண்டும் என்பதுதான் நம்முடைய கோரிக்கையாகும்.

இங்கே இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். 1980 ஆம் ஆண்டில் இருந்து 10 ஆண்டுகளுக்கு மின்சக்தி நிலைமை மனதிறைவாக இல்லை என்று குறிப்பிட்டு இருப்பது, மிகப் பெரிய அதிர்ச்சியாக இருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். அது குறித்து நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாமெல்லாம் நினைத்துக் கொண்டு இருக்கிறோம். நெய்வேலியில் இரண்டாவது சுரங்க வெட்டு வருகிறது என்று நம்பிக்கை மின்சாரத்தை உற்பத்தி செய்யப் போகிறது என்று நம்பப்பட்டு யோடு இருக்கிறோம். 630 மெகாவாட் திட்டம் போடப்பட்டு இருக்கிறது. அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்தை எடுத்து கேரளாவுக்குக் கொடுக்கப் போகிறோம். ஆந்திரா மாநிலத்திற்குக் கொடுக்கப்போகிறோம். நான் கர்நாடக மாநிலத்திற்குக் கொடுக்கப்போகிறோம். அதுகூட சொன்ன கருத்தை உண்மையிலேயே காங்கிரஸ் கட்சித் தலைவர் சொன்ன இடத்திலே அப்படியே எடுத்துக் கொள்கிறேன். பவானி இருக்கிற இடத்திலே தான் நீர் பாயும். கேரளாவிலிருந்து நாம் வாங்கிக் கொண்டு இருக்கிறோம். அதற்குக் காரணம் என்ன சொல்கிறபோது என்றால்—சென்டிரல் செக்டார் ஸ்கீம் என்று கொடுக்கிறோம். அவர்கள் எல்லோருக்கும் பங்கு கொடுப்பார்கள். அதற்கும் அதிகாரிகளை பங்கு போட்டுக் கொடுப்பார்கள். நாம் நல்லெண்ணம் அதிக விலை மாநிலங்களுக்குப் போய் மறுபடியும் வருகிறது—இது வைத்துக்கொண்டு அவர்களிடமிருந்து அவசியம் தொர்மல் ஸ்டேஷன் கொடுத்து மின்சாரம் பெறவேண்டிய அவசியம் சரிதானா? மத்திய சர்க்கார் ஒப்பா சொல்கிறார்களே ராட்சத அனல் மின்நிலையங்கள் என்று. ஆனால் நெய்வேலியில் இருக்க அதிலே அதைச் செய்வது வரி. ஆனால் நெய்வேலியில் இருக்கிற சுரங்கத்திலிருந்து உற்பத்தி ஆகக்கூடிய மின்சார திட்டத்தின் இன்றை சுரங்கத்திலிருந்து ஏற்கனவே இருக்கிற திட்டத்தின் தொடர்ச்சி இருக்கிறதே அது ஏற்கனவே 'இட்' என்ன 'ஆன் எக்ஸ்பான்ஷன்' இதையும் அல்லது விரிவாக்கம். 'இட்' என்ன 'ஆன் எக்ஸ்பான்ஷன்' நடத்துகிற ஒப்பர் பவர் நேஷனல் தொர்மல் பவர் கார்ப்பரேஷன் சரியாகாது. ஸ்டேஷனையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியாகாது.

இதே இரண்டாவது சுரங்க வெட்டு வேலை ஆரம்பிப்பதற்கு முன்னால் நம்முடைய சர்க்காரிடத்தில் கேட்டார்கள். அந்த மின்சாரம் முழுவதையும் எடுத்துக் கொள்வீர்களா? அப்படி யானால். எடுத்துக் கொடுங்கள் என்று கேட்டார்கள். எழுதிக்

பகுதியை பாரத் நாம் ஹெவி எலக்டிரிக்கல் நிறுவனத்தில் இருந்து வாங்குகிறோம். ஆனால் இதிலே ஒரு சிறிய பகுதியையாவது நாம் வெளிநாடுகளிலேஇருந்து ஓரளவுக்கு ஒழுங்காக ஓடக்கூடிய இயந்திரங்களை வாங்கவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். அதை மத்திய சர்க்காரிலே ஒரு சிலர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களை இது சம்பந்தமாகச் சந்தித்து இந்த நியாயத்தை எடுத்துச் சொல்ல அவர்கள் ஏற்றுக்கொள்ளச் செய்யலாம் என்ற நம்பிக்கை எனக்கு இன்னமும் இருக்கிறது. காரணம் அந்த அளவுக்கு இன்றைக்கு இந்தியா முழுவதும் அந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் இதுதான். மத்திய மின் குழு Central Electricity authority அவர்கள் திட்டத்தை அங்கீகரிக்கிறபோது ஒரு கிலோவாட்டுக்கு 5353 யூனிட்டுகள் சாதாரணமாக கிடைக்கும் என்று போடுகிறார்கள். ஆனால் இந்தியா முழுவதும் இன்றைக்கு நமக்குக் கிடைப்பது ஒரு கிலோவாட்டுக்கு 1000 தான். ஆகவே 5353 கிடைப்பதில்லை. சரி, திட்டத்தை வரு மாற்றி 400 யூனிட்டுகள் என்று போட்டு இன்னும்கூட அனல் மின் திட்டங்களை தருவார்களா என்று கேட்டால் [illegible]யும் தரமாட்டார்கள். ஒரு கிலோவாட்டுக்கு 5353 யூனிட்டுகள் உற்பத்தி செய்யாதது உன்னுடைய குற்றம். ஆகையினாலே புதுத் திட்டம் கிடையாது என்கிறார்கள். அது சரியாகாது.

இந்தியா முழுவதும் அதுஸ்டேட்எலக்டிரிசிடி போர்டாக இருந்தாலும், பாரத் ஹெவி எலக்டிரிக் நிறுவனமாக இருந்தாலும் சரி, பெறுவது இன்றைக்கு 4000 யூனிட்டுகள். அதேபோல, 110 மெகாவாட்டிலே 'அவுட்டேஜ்' என்று எடுத்துக் கொண்டால் 56, 230 மெகாவாட்டுக்கு 62. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், எண்ணூர் மின்நிலையத்தில் இருப்பது 450மெகாவாட். தூத்துக்குடியில் 2 இயந்திரங்கள் இயங்க வைத்திருக்கிறோம். 420 மெகாவாட்டு. மொத்தம் 870 மெகாவாட்டுகள் இன்றைக்குக் கிடைக்கவேண்டியது. ஆனால் கிடைப்பது 450 மெகாவாட். இதில் மின்சார இலாகாவை பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ் குறை சொல்லலாம். அல்லது பாரத் ஹெவி எலக்டிரக்கல்சை மின்சார இலாகா குறை சொல்லலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லை. எல்லோரும் நம்முடைய பொறியாளர்கள்தான். ஆனால் அதே நேரத்தில் நாம் நிறைவேற்ற வேண்டிய அளவுக்குப் பயன் கிடைக்கத் தக்க அளவுக்கு நிலைமை இல்லை என்றால் அதற்கு என்ன பரிகாரம் என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு 30% மின்வெட்டை அமல் நடத்துகிறோம். அலுமினியம் உற்பத்தியாகாது. சிமெண்ட் உற்பத்தியாகாது. இவைகள் எல்லாம் நம் நாட்டிலேயே இருக்கக்கூடிய தொழில்கள். பெர்ட்டிலைசர்ஸ் உருவாகாது. ஆனால் இதே பொருள்களை அதிக விலையிலே வெளிநாடுகளிலே இருந்து வாங்குகிறோம்.

அப்படி வாங்குவதனால் 2000த்திலிருந்து 2500 கோடி ரூபாய்கள் பெறுமானமுள்ள பொருள்களை வெளிநாடுகளிலே உற்பத்தியாகக் கூடியவற்றை வாங்குகிறோம். அதனாலே அன்னிய செலாவணி வீணாகிறது என்பது மாத்திரம் அல்ல அந்த நாட்டிலே இருக்கிற விலை உயர்வு பணவீக்கம் நம்முடைய நாட்டுக்கு வருகிறது. இவைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது குறைந்தது மேட்டூர் அனல் மின்திட்டத்தையாவது நிறுவுவதற்கு அந்த இயந்திரங்கள் வாங்கினால் அது நன்றாக இயங்கும். அந்த இயந்திரங்களை வாங்குவதற்கு மாநில மின்சார வாரியத்திற்கு அனுமதி தரவேண்டும் என்பதுதான் நம்முடைய கோரிக்கையாகும்.

இங்கே இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். 1980 ஆம் ஆண்டில் இருந்து 10 ஆண்டுகளுக்கு மின்சக்தி நிலைமை மனநிறைவாக இல்லை என்று குறிப்பிட்டு இருப்பது, மிகப் பெரிய அதிர்ச்சியாக இருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். அது குறித்து நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாமெல்லாம் நினைத்துக் கொண்டு இருக்கிறோம். நெய்வேலியில் இரண்டாவது சுரங்க வெட்டு வருகிறது. மகிழ்ச்சி. அது மின்சாரத்தை உற்பத்தி செய்யப் போகிறது என்று நம்பிக்கையோடு இருக்கிறோம். 630 மெகாவாட் திட்டம் போடப்பட்டு இருக்கிறது. அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்தை எடுத்து கேரளாவுக்குக் கொடுக்கப் போகிறோம். ஆந்திரா மாநிலத்திற்குக் கொடுக்கப்போகிறோம். நான் கர்நாடக மாநிலத்திற்குக் கொடுக்கப்போகிறோம். தலைவர் சொன்ன கருத்தை உண்மையிலேயே காங்கிரஸ் கட்சித் தலைவர் இருக்கிற இடத்திலே அப்படியே எடுத்துக் கொள்கிறேன். பள்ளத்தில் இருக்கிற இடத்திலே தான் நீர் பாயும். கேரளாவிலிருந்து நாம் வாங்கிக் கொண்டு இருக்கிறோம். அதற்குக் காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால்—சென்ட்ரல் செக்டார் ஸ்கீம் என்று சொல்கிறபோது எல்லோருக்கும் பங்கு போட்டுக் கொடுக்கிறோம். அவர்கள் பங்கு போட்டுக் கொடுப்பார்கள். அதற்குப் பிறகு, அந்த மாநிலங்களுக்குப் போய் நாம் நல்லெண்ண அதிகாரிகளை வைத்துக்கொண்டு அவர்களிடமிருந்து மறுபடியும் அதிக விலை கொடுத்து மின்சாரம் பெறவேண்டிய அவசியம் வருகிறது—இது சரிதானா? மத்திய சர்க்கார்—சூப்பர் தெர்மல் ஸ்டேஷன்—ராட்சத அனல் மின்நிலையங்கள் என்று சொல்லியில் இருக்க அதிலே அதைச் செய்வது சரி. ஆனால் நெய்வேலியில் இருக்கின்ற சுரங்கத்திலிருந்து உற்பத்தி ஆகக்கூடிய மின்சார திட்டம் இருக்கிறதே அது ஏற்கனவே இருக்கிற திட்டத்தின் தொடர்ச்சி அல்லது விரிவாக்கம். 'இட் ஈஸ் ஆன் எக்ஸ்பான்ஸன்' இதையும் நேஷனல் தெர்மல் பவர் காரபரேஷன் நடத்துகிற சூப்பர் பவர் ஸ்டேஷனையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியாகாது.

இதே இரண்டாவது சுரங்க வெட்டு வேலை துரம்பிப்பதற்கு முன்னால் நம்முடைய சர்க்காரிடத்தில் கேட்டார்கள். அந்த மின்சாரம் முழுவதையும் எடுத்துக் கொள்வீர்களா? அப்படியானால், எழுதிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். எழுதிக்

கொடுத்தோம். நிலம் கொடுப்பீர்களா என்று கேட்டார்கள். நிலம் கொடுத்து இருக்கிறோம். முழுவதையும் எடுத்துக்கொள்கிறோம் என்று எழுத்து மூலம் எழுதிக் கொடுத்து இருக்கிறோம். நமக்குப் பற்றாக்குறை இல்லையென்றால், மற்றவர்களுக்குப் போகட்டுமே, நாம் ஏன் அதன் பாதையில் நிற்க வேண்டும் என்ணம் தோன்றும். ஆனால் அந்த 4 மாநிலங்களை எண்ணிப் பார்க்கிறபோது, தமிழ்நாடு தான் நிரந்தரமான பற்றாக்குறையில் இருக்கிறது. 630 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய நெய்வேலி சுரங்கத்திலே அதிகாரிகள் மட்ட அளவிலே பேசியபோது சொல்லியது 170 அல்லது 176 மெகாவாட் வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால் அந்த முறையை நாம் எதிர்த்தோம். மின்சாரத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மத்திய அரசு உருவாக்குகின்ற மின் உற்பத்தியைப் பகிர்ந்து கொள்கிறபோது அந்தந்த மாநிலங்களின் பற்றாக்குறையைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது நம்முடைய கருத்து. ஆனால் மத்திய அரசின் சார்பில் என்ன கருத்து சொல்லப்பட்டது என்றால், திட்டக்கமிஷனில் நிதி உதவி கொடுக்கிறார்களே—சென்டிரல் அசிஸ்டென்ஸ்—காட்கில் பார்முலாவின் அடிப்படையில்—அந்த அடிப்படையில் பிரித்துக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்தப் பார்முலாவே சரியில்லை என்று நாம் நேஷனல் டெவலெப்மென்ட் கவுன்சிலில் வாதிட்டுக் கொண்டு இருக்கிறோம். ஏதோ குதிரை கீழேயும் தள்ளி குழியையும் பறித்தது என்று சொல்வார்களே அதைப்போல் நமக்கு வரவேண்டிய மத்திய நிதி உதவியும் வரவில்லை என்பது மட்டுமல்ல, நமக்கு வரவேண்டிய மின்சாரமும் வரவில்லை.

இன்னொன்று என்ன எடுத்துச் சொல்கிறார்கள் என்றால், ஒரு மாநிலம் எவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்தியது—கன்சம்ஷன் இன் தி ஸ்டேட்—பவர் கட் இருக்கிற நம் மாநிலத்தில் எந்த அளவிற்கு கன்சம்ஷன் இருக்கும் என்பது தெரியும். நான் முன்பே சொன்னேன் அல்லவா? மின்வெட்டு உள்ள மாநிலத்தில் எப்படி கன்சம்ஷன் அதிகமாக இருக்கும்? ஆகவே, இரண்டு விதத்திலும் நமக்கு இழப்பு இருக்கிறது. ஒரு விதத்தில் கன்சம்ஷன் எடுத்துக் கொள்கிறார்கள். அதனால் பங்கு போடுகிறபோது குறைகிறது. சென்டிரல் அசிஸ்டென்ஸ் என்று சொல்கிறபோது பார்காபிடா இன்கம் எடுத்துக்கொள்கிறார்கள். தமிழ்நாடு 3–4 ரூபாய் நேஷனல் ஆவரேஜை விட கூடுதலாக இருக்கிறது. அதனால் நமக்கு அடி விழுகிறது கிடைக்க வேண்டிய பணத்திலும் நமக்கு பாதகம், பிரித்துக்கொடுக்கிற மின்சாரத்திலும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.

ஆகவே, அரசின் சார்பில் நாம் தெளிவாகச் சொன்னோம் நீங்கள் மின்சாரம் உற்பத்தி செய்கிறீர்கள். எங்கே பற்றாக்குறை இருக்கிறதோ அவர்களுக்குக் கொடுங்கள், அதுதான் முறை. (இட் மஸ்ட் பி இன் தி ப்ரபோர்ஷன் டு டெபிசிட் இன் தி ஸ்டேட்) இதையெல்லாம் நினைவில் வைத்துத்தான்

சொன்னேன். நல்லவேளை மாண்புமிகு காங்கிரஸ்கட்சித் தலைவர் எங்கள் கரத்தை வலுவூட்டுகின்ற வகையில் இங்கே எடுத்துப் பேசினார்கள், நிச்சயமாக அங்கேயும் எடுத்துச் சொல்வார்கள் என்று நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால் இது நியாயத்தின்

(பிற்கல் 2–00]

பால் கேட்பது. நம்முடைய நாட்டின் மக்களுடைய எதிர்காலத்தைப் பற்றி கேட்பது. நாம் இங்கே பொருளாதாரம் வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக விடுக்கின்ற வேண்டுகோள் இது. நிச்சயமாக இதில் இருக்கிற நியாயத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். நியாயம் என்று தெரிந்தால் நிச்சயமாகப் புறக்கணிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு. அதனால் நாங்கள் திரும்ப, திரும்ப வலியுறுத்துகிறோம். ஏதோ ஒரு அரசு வலியுறுத்துகிறது என்று இல்லாமல் இந்த மாமன்றம் வலியுறுத்துகிறது என்ற அடிப்படையிலேயும், டெல்லியிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே வலியுறுத்துகிறார்கள் என்ற அடிப்படையிலேயும் எண்ணிப் பார்க்கும்போது இந்த நியாயத்திற்கு நிச்சியமாக வலிவு கிடைக்கும் என்று நம்புகிறேன். இவைகள் எல்லாம் நிறைவு பெறுமானால் நமக்கு greatest shock ஆக இல்லாமல் It will be a pleasent surprise ஆக இருக்கும் என்று கூறி முடிக்கிறேன்.

* * *

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இதை ஒரு ஒழுங்குப் பிரச்சனையாக எழுப்ப விரும்புகிறேன். நம்முடைய மன்றத்திலே இருக்கிறமுறை, அமைச்சர்கள் பதிலுரை ஆற்றியபின், அவரது பேச்சில் ஏதாவது விளக்கம்பெற வேண்டியிருந்தால் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்புவது நியாயம். அதுதான் இதுவரை கடைபிடிக்கப்பட்ட ஒன்று. திடீரென்று ஒரு புது தகவலை மாண்புமிகு உறுப்பினர் சொல்வது எந்த வகையிலே நியாயம்? இது அனுமதிக்கப்படுமா? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கொண்டுவருகிற விஷயத்தைப் பற்றி ஒன்றும் இல்லை; ஆக, யாராவது பேசும் போது இந்தப் பிரச்சனையை கிளப்பி இருந்தால் அமைச்சர் இறுதி உரையிலே பதில் சொல்ல வாய்ப்பு இருக்கும். அவர்கள் பேசும்போது சொல்லியிருக்க வேண்டும். ஆனால் சொல்ல வில்லை. இந்தப் பிரச்சினையைப் பொருத்தவரையில் அவர்கள் கொண்டுவர சிலபல வசதிகள் இருக்கின்றன. குறுகிய வினா மற்றும் வேறு பல வகைகளிலே கொண்டுவரலாம். ஒரு அமைச்சர் பேசி, விவாதம் முடிந்த பிறகு புதிய புதிய விவாதங்களை எழுப்புவது சரியல்ல. ஆகவே அவர்கள் வேறு வழிகளிலே இதைக் கொண்டுவரலாம்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க கற்றப்பெற்றது.

[1981 பிப்ரவரி 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றிய விவாதத்திலேயும் அமைச்சருடைய உரையிலேயும் குறிப்பிடாத ஒரு புதிய கருத்தை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் எழுப்பியுள்ளதால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, நம்முடைய முன்னவர் அவர்கள் சொல்வது போல் இதிலே ஊழல் நடந்திருக்கின்றது என்றோ குற்றச்சாட்டுகளோ நாங்கள் சொல்லவில்லை. அவர் அமைச்சரவைச்சார்பிலே ஒரு விளக்கம் கேட்டார். திரு ரகுமான்கான் அவர்கள் திடீரென்று எழுந்து கேட்டிருக்கிறார், ஆகவே பேரவை உறுப்பினர்கள் சேகரித்துத்தான் பதில் சொல்ல முடியும் என்றோ அல்லது திரு. ரகுமான்கான் கேட்ட கேள்விக்கு போதிய ஆதாரம் இல்லை என்றோ வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அமைச்சரவைக்கு என்ன சொன்னார்? அப்படி அமைச்சரவைக்கு சொன்னதில் கூட நான் தவறு கண்டு பிடிக்கவில்லை. இப்படித் திடீரென்று எழுந்து உறுப்பினர் அவர்கள் கேட்கும்பொழுது எப்படிப் பதில் சொல்ல முடியும் என்று அவருடைய நிலையை அவர் குறிப்பிட்டிருக்கிறார். இத்தோடு விவாதம் முடிகிறது. அரசாங்கத்தின் மீது திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு பெரிய குற்றச்சாட்டை சுமத்தி அவர்கள் பதில் சொல்ல முடியாமல் திணறிவிட்டார்கள் என்ற நிலை இப்போது இல்லை. முன்பே அவர் குறிப்பிட்டார்கள் என்ற குறிப்பிலே இருந்து நீக்குவது எப்படிச் சரியானதாக இருக்கும். தலைவருடைய தீர்ப்பை நான் குறைத்துச் சொல்லவில்லை. ஆனால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேட்டது அமைச்சரின் பேச்சை ஒட்டியதில்லை. அது ஒரு புதிய பிரச்சினை

திரு. அ. ரகுமான்கான்: அவருடைய இலாக்கா சம்பந்தப்பட்டதுதானே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவருடைய இலாக்கா சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் திரு. ரகுமான்கான் அவர்கள் கேள்வி கேட்ட விதத்திலேதான் தவறு இருக்கின்றது. குற்றச்சாட்டு என்ற வடிவத்திலே அவருடைய கேள்வி அமைந்திருந்தது. அதனால்தான் அவர் குறிப்பிட்டதை நான் நீக்கினேன். குற்றச்சாட்டுக்கள் கொண்டுவருவதற்கென்று ஒரு முறை இருக்கிறது. அதை எப்போது கொண்டு வர வேண்டும் என்கின்ற முறையும் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு தெரிந்திருக்கும் அவ்வாறு வேறு வகைகளிலே இவற்றைக் கொண்டுவருவதற்குரிய உரிமைகளும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு இருக்கின்றது.

1981 பிப்ரவரி 2]

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்கள் பேசியதில் தெளிவாகத் தெரியாத விவகாரம் ஏதாவது இருந்தால் மட்டும் விளக்கம் கேட்கலாம். ஏனென்றால் நேரம் இல்லை.

* திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு திருமுட்டத்திலே எலக்ட்ரிக் சிஸ்டம் உள்ள இடத்திலே நந்தனார் கல்விக் கழகத்திற்குச் சொந்தமான இடங்களுக்குரியபில் என்னிடத்திலே கொடுக்கப்படாமல் அது அங்கேயே கிடந்து என்னுடைய காரியதரிசியான திரு. பக்கிரிசாமி அவர்கள் கண்டுபிடித்துக் கொண்டுவந்து என்னிடத்திலே கொடுத்தார் என்று சொன்னேனே தவிர பக்கோடா வாங்கியதாகவோ நான் தின்றதாகவோ சொல்லவில்லை. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து உத்யோகம் சம்பந்தப்பட்ட வகையிலே 4,000 மனுக்கள் வாங்கப்பட்டு அதிலே 300 பேர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காக அரசியல் சட்டப்படி உத்தரவு போடப்பட்ட பிறகும் 130 பேருக்குதான் இனி கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே, அந்த 300-ன் கதி என்ன? அந்த 300 பேர்களுக்குக் கொடுக்காமல் இருப்பதற்கான விளக்கத்தை அமைச்சரவர்கள் சொல்லவேண்டும். 1952-லே இருந்து அங்கே உத்தியோகம் கொடுக்கப்படவில்லை என்றாலும் கூட நமது அமைச்சரவர்கள் பொறுப்பேற்ற 1977-லே இருந்து இதுவரை ஏன் கொடுக்கப்படவில்லை. மிகுந்த அக்கறை உள்ள அமைச்சரவர்கள் வந்த பிறகும் ஏன் கொடுக்கப்படவில்லை என்பதற்கு விளக்கம் கேட்கிறேன்.

[பிற்பகல் 2-10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விவாதம் முடிந்த பிறகு எப்படி விளக்கம் கேட்க வேண்டும் என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் நல்ல கேள்வியாகக் கேட்டார்கள். நான் சொல்கிறபோது அதில் சந்தேகங்கள் ஏற்பட்டால் அவற்றைப் பற்றி விளக்கங்கள் கேட்கலாம்.

(கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி சரியான கேள்வி. 370 வேலைகள் காலியாயிருக்கின்றன என்று முதலில் நிர்மானித்தார்கள். தொழிற் சங்கங்களோடு ஒப்பந்தம் போடுகிறபோது வேலை நிர்ணய ஒப்பந்தம் ஒன்று போட்டார்கள். அதன்படி எந்த வேகன்சியும் இல்லை என்றாகிவிட்டது. அதற்குப் பிறகு இப்போது நான் நேற்று முன்தினம் அதிகாரிகளை

பகுதியை பாரத் ஹெவி எலக்டிரிக்கல் நிறுவனத்தில் இருந்து வாங்குகிறோம். ஆனால் இதிலே ஒரு சிறிய பகுதியையாவது நாம் வெளிநாடுகளிலேஇருந்து ஓரளவுக்கு ஒழுங்காக ஓடக்கூடிய இயந்திரங்களை வாங்கவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். அதை மத்திய சர்க்காரிலே ஒரு சிலர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களை இது சம்பந்தமாகச் சந்தித்து இந்த நியாயத்தை எடுத்துச் சொல்ல அவர்கள் ஏற்றுக்கொள்ளச் செய்யலாம் என்ற நம்பிக்கை எனக்கு இன்னமும் இருக்கிறது. காரணம் அந்த அளவுக்கு இன்றைக்கு இந்தியா முழுவதும் அந்த நெருக்கடிஏற்பட்டிருக்கிறதுஎன்றால் அதற்குக் காரணம்இதுதான். மத்திய மின் குழு Central Electricity authority அவர்கள் அங்கீகரிக்கிறபோது ஒரு கிலோவாட்டுக்கு 5353 யூனிட்டுகள் சாதாரணமாக கிடைக்கும் என்று போடுகிறார்கள். ஆனால் இந்தியா முழுவதும் இன்றைக்கு நமக்குக் கிடைப்பது ஒரு கிலோ வாட்டுக்கு 4000 தான். ஆகவே 5353 கிடைப்பதில்லை. சரி, திட்டத்தையாவது மாற்றி 400 யூனிட்டுகள் என்று போட்டு இன்னும்கூட அனல் மின் திட்டங்களை தருவார்களா என்று கேட்டால் [illegible] தரமாட்டார்கள். ஒரு கிலோவாட்டுக்கு 5353 யூனிட்டுகள் உற்பத்தி செய்யாதது உன்னுடைய குற்றம், ஆகையினாலே புதுத் திட்டம் கிடையாது என்கிறார்கள். அது சரியாகாது.

இந்தியா முழுவதும் அதுஸ்டேட்எலக்டிரிசிடி போர்டாக இருந்தாலும், பாரத் ஹெவி எலக்டிரிக் நிறுவனமாக இருந்தாலும் சரி, பெறுவது இன்றைக்கு 4000 யூனிட்டுகள். அதேபோல, 110 மெகாவாட்டிலே 'அவுட்டேஜ்' என்று எடுத்துக் கொண்டால் 56, 230 மெகாவாட்டுக்கு 62. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், எண்ணூர் மின்நிலையத்தில் இருப்பது 450மெகாவாட். தூத்துக்குடியில் 2 இயந்திரங்கள் இயங்க வைத்திருக்கிறோம். 420 மெகாவாட்டு. மொத்தம் 870 மெகாவாட்டுகள் இன்றைக்குக் கிடைக்கவேண்டியது. ஆனால் கிடைப்பது 450 மெகாவாட். இதில் மின்சார இலாகாவை பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ் குறை சொல்லலாம். அல்லது பாரத் ஹெவி எலக்டிரக்கல்சை மின்சார இலாகா குறை சொல்லலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லை. எல்லோரும் நம்முடைய பொறியாளர்கள்தான். ஆனால் அதே நேரத்தில் நாம் நிறைவேற்ற வேண்டிய அளவுக்குப் பயன் கிடைக்கத் தக்க அளவுக்கு நிலைமை இல்லை என்றால் அதற்கு என்ன பரிகாரம் என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு 30% மின்வெட்டை அமல் நடத்துகிறோம். அலுமினியம் உற்பத்தியாகாது. சிமெண்ட் உற்பத்தியாகாது. இவைகள் எல்லாம் நம் நாட்டிலேயே இருக்கக்கூடிய தொழில்கள். பெர்ட்டிலைசர்ஸ் உருவாகாது. ஆனால் இதே பொருள்களை அதிக விலையிலே வெளிநாடுகளிலே இருந்து வாங்குகிறோம்.

அப்படி வாங்குவதனால் 2000த்திலிருந்து 2500 கோடி ரூபாய்கள் பெறுமானமுள்ள பொருள்களை வெளிநாடுகளிலே உற்பத்தியாகக் கூடியவற்றை வாங்குகிறோம். அதனாலே அன்னிய செலாவணி வீணாகிறது என்பது மாத்திரம் அல்ல அந்த நாட்டிலே இருக்கிற விலை உயர்வு பணவீக்கம் நம்முடைய நாட்டுக்கு வருகிறது. இவைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது குறைந்தது மேட்டூர் அனல் மின்திட்டத்தையாவது நிறுவுவதற்கு அந்த இயந்திரங்கள் வாங்கினால் அது நன்றாக இயங்கும். அந்த இயந்திரங்களை வாங்குவதற்கு மாநில மின்சார வாரியத்திற்கு அனுமதி தரவேண்டும் என்பதுதான் நம்முடைய கோரிக்கையாகும்.

இங்கே இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். 1980 ஆம் ஆண்டில் இருந்து 10 ஆண்டுகளுக்கு மின்சக்தி நிலைமை மனநிறைவாக இல்லை என்று குறிப்பிட்டு இருப்பது, மிகப் பெரிய அதிர்ச்சியாக இருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். அது குறித்து நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாமெல்லாம் நினைத்துக் கொண்டு இருக்கிறோம். நெய்வேலியில் இரண்டாவது சுரங்க வெட்டு வருகிறது. மகிழ்ச்சி. அது மின்சாரத்தை உற்பத்தி செய்யப் போகிறது என்று நம்பிக்கையோடு இருக்கிறோம். 630 மெகாவாட் திட்டம் போடப்பட்டு இருக்கிறது. அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்தை எடுத்து கோளாவுக்குக் கொடுக்கப் போகிறோம், ஆந்திரா மாநிலத்திற்குக் கொடுக்கப் போகிறோம், நான் கர்நாடக மாநிலத்திற்குக் கொடுக்கப் போகிறோம். நான் உண்மையிலேயே காங்கிரஸ் கட்சித் தலைவர் சொன்ன கருத்தை அப்படியே எடுத்துக் கொள்கிறேன். பள்ளத்தில் இருக்கிற இடத்திலே தான் நீர் பாயும். கேரளாவிலிருந்து நாம் வாங்கிக் கொண்டு இருக்கிறோம். அதற்குக் காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால்—சென்டிரல் செக்டார் ஸ்கீம் என்று சொல்கிறபோது எல்லோருக்கும் பங்கு போட்டுக் கொடுக்கிறோம். அவர்கள் பங்கு போட்டுக் கொடுப்பார்கள். அதற்குப் பிறகு, அந்த மாநிலங்களுக்குப் போய் நாம் நல்ல விலை அதிகாரிகளை வைத்துக்கொண்டு அவர்களிடமிருந்து மறுபடியும் அதிக விலை கொடுத்து மின்சாரம் பெறவேண்டிய அவசியம் வருகிறது—இது சரிதானா? மத்திய சர்க்கார்—சூப்பர் தெர்மல் ஸ்டேஷன்—ராட்சத அனல் மின்நிலையங்கள் என்று சொல்கிறார்களே அதிலே அதைச் செய்வது சரி. ஆனால் நெய்வேலியில் இருக்கின்ற சுரங்கத்திலிருந்து உற்பத்தி ஆகக்கூடிய மின்சார திட்டம் இருக்கிறதே அது ஏற்கனவே இருக்கிற திட்டத்தின் தொடர்ச்சி அல்லது விரிவாக்கம். 'இட் ஈஸ் ஆன் எக்ஸ்பான்ஷன்' இதையும் நேஷனல் தெர்மல் பவர் காரப்பரேஷன் நடத்துகிற சூப்பர் பவர் ஸ்டேஷனையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியாகாது.

இதே இரண்டாவது சுரங்க வெட்டு வேலை துரம்பிப்பதற்கு முன்னால் நம்முடைய சர்க்காரிடத்தில் கேட்டார்கள். அந்த மின்சாரம் முழுவதையும் எடுத்துக் கொள்வீர்களா? அப்படியானால். எழுதிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். எழுதிக்

[மாண்புமிகு திரு. ச. ராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 2

அழைத்து நேரில் பேசியபோது 140 இடங்கள் இருக்கின்றன என அறிந்தேன் அதிலாவது அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். அதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. 4-2-1981-ம் தேதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.12 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

182. சென்னை-600004 லுள்ள இராமகிருஷ்ணா மிஷன் ஆணவர் இல்லத்துடன் இணைக்கப்பெற்றுள்ள கல்வி நிறுவனங்களுக்கு விற்பனை செய்யக்கூடிய குறிப்பிட்ட சில இனங்களுக்கு (இயந்திரங்கள்) வரி செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் அறக்கட்டளைகள் துறையின் 25. 0.1980 ஆம் தேதியிடப்பெற்ற 1113 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

183. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 3. 11.1980 ஆம் தேதியிடப்பெற்ற 2909 ஆம் எண் அறிவிப்பில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)).

184. தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் 1977-78 ஆம் ஆண்டிற்கான 12-ஆவது அறிக்கையும் (தமிழ். ஆங்கிலம்) அதன்மீதான அரசின் மறு ஆய்வும் (தமிழ்). (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)).

185. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1978-79ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கையும் 31.8.1979 ஆம் தேதிவரையிலான ஐந்தொகைக் குறிப்பும் (ஆங்கிலம்) (1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)

1981 பிப்ரவரி 2]

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

20. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை குறித்தும், 1979-80 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கை குறித்தும், விவாதத்தை தொடங்கி வைத்து மின்சாரத்துறை அமைச்சர். மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை. (தமிழ், ஆங்கிலம்)

* 21. தமிழநாடு மின்சார வாரியத்தின் 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளும் அக்கருத்துரைகள் மீதான குறிப்புரைகளும் அடங்கிய விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்)

* 22. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 1/1981).

* 23, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 2/1981).

* 24. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரையறையை நீட்டித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 3/1981)

129167
V211,31.N81
N83:10